தத்துவவிவேசினி

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

V—No 2.] MADRAS:—SUNDAY JANUARY 10, 286. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.—குறள்.

அருத்த சாஸ்திரம்.

அருத்த சாஸ்திரமாவது பொருளைச் சம்பாதிக்கும் விதத்தை விளக்கும் ஓர்வகை தத்துவசாஸ்திரமாம். தத்துவஞானிகளுடைய காலத்தையுங் கவனத்தையுங் கௌகிக நின்ற சங்கைகளைப்பற்றித் தங்களுக்கு நிமித்தமில்லை யென்று தத்துவ சாஸ்திரப்போக்கெல்லாம் விவகார ஒழுங்கே யளமல் வ... உதவாதென்றும், யானுவஹ ஒழுக்க த்திற்கும் உயிர் வாழ்க்கை ... தத்துவக் கியானிகள் மனுஷ ரதிற்கும் ஒரு சிறிதுஞ்சம்பந்த மில்லையென்றும், இன்னும் பலவிதமாகவும் தத்துவ சாஸ்திரங்களின்மீதும் தத்துவஞானிகளின்மீதும் சாதாரண ஜனங்கள் தோஷாரோபணஞ் செய்கின்றார்கள்.

"எண்ணித்துணிக கருமந் துணிந்தபின்
னெண்ணுவமென்ப திழுக்கு"

என்று ஆன்றோர் அனுபவ வாக்கிய மிருக்கின்றபடியால் யாதொரு காரியத்தையும் ஆழ்ந்து யோசித்தே செய்தல்வேண்டும். சூழ்ந்து செய்தகாரியம் ஆழ்ந்துநின்று ஓங்குமே. என்கின்றமையால் யோசனை புருஷத்துவத்தை விர்த்திசெய்யும்படிக்கும் தத்துவ நூல்களையும் தத்துவக்கியானிகளையும் குற்றங்கூறுவது உபகாரிக்கு அபகாரஞ் செய்வதுபோலாம். தத்துவ சாஸ்திரங்களுந் தத்துவக்கியானிகளு மில்லையேல் புகைவண்டியேது மின்தபாலேது கப்பல்யாத்திரையேது, ஓர் தீவில்விளைபண்டம் மற்றோர்தீவுக்கு வருத்துப்போக்கேது? நவநவமான உடையேது? விதம் விதமான ஊணேது?

வயிறு நிறைந்தால் பானை மூடாத நமது இந்து ஜனங்கள் மேலே சொல்லியபடி தத்துவ தோஷம் செய்து அருத்த சாஸ்திரத்தை அசட்டை பண்ணினமையால் அதனால் உற்பயன் சித்தியாகாமல் உள்ளதெல்லாந்தோற்று ஓட்டாண்டிகளானார்கள். இனியேனும் அதைக்கையாள்வார்களேல் உள்ளதேனுந்தங்கும். ஐசுவரியத்தை யடையவேண்டுமென்கிற அவா உலகத்திலே யாவருக்குமேயுண்டு. அதனால் ஓர்தேசத்திலுள்ள ஐஸ்வரியத்தை மற்றோர் தேசத்திற்குக் கொள்ளை கொண்டுபோகு மவர்கள் அரசர்களென்றும் குடியானவர்களென்றுந் தரம்பிரித்துக் கூறுவது கடினம்.—ஓர் சிறிய வர்த்தகன் மிளகைப் பரிகொண்டுபோனால் அரசன் பொன்னைக் கொண்டுபோகிறான். நரியானது தன் பிடியைத் தணிக்கவல்ல முயலைப்பிடிக்காமல் அதன் நிழலைப் பாய்ந்துபாய்ந்து கவ்விக்கவ்வி பிடிப்பதுபோல பேராசைக்காரர்கள் ஐஸ்வரியம் இன்னதெனத் தெரிந்துகொள்ளாமல் வீண் பிரயாசைப்படுகிறார்கள். சீர்திருத்தமுடைய நாடுகளிலொன்றாகிய ஐரோப்பா முதலிய தேசத்தார்களே கொஞ்சகாலத்திற்குமுன்னம் வி...லுக்கு முத்துலைபோட்டு வீணுக்கிறைத்துவந்தார்கள்.

பூர்வத்திலே விலையுயர்ந்த உலோகங்களைத்திருத்தி நாணயங்களாக்குவித்து அந்நாணயங்களையே சகலபொருள்களுக்கும் பண்டமாற்றமாகவும் கூலியாகவுஞ்சம்பளமாகவும் உபயோகித்துவந்தமையால் அந்நாணயங்களைச்செய்யப்பட்ட பொன் அல்லது வெள்ளிமுதலியனவே உண்மை ஐசுவரியமென்று ஜனங்கள் நம்பக்காரணமாயிற்று. ஒவ்வொருவருடைய ஆஸ்தியையும் ஒவ்வொருவருடையவீடுவாசல் மாடு மனை சரக்கு சம்பளசெலவுமுதலியசகலவிவகாரங்களும் பணத்தினாலேயேயிவ்வளவென்றுஅளவிடப்பட்டிருக்கின்றமையால் நம்முன்னோர்களெல்லாம் சர்வவல்லமையுடையது பணமே என நம்பிவிட்டார்கள். இந்தஎண்ணம் மனிதர்களுடைய மனதில் ஒருகால் வேரூன்றிவிடவேஅதுவேநாளாவர்த்தியில்பழக்கத்திற்குவந்துவிட்டது. பொன்வெள்ளிமுதலியஉலோகங்கள் உள்ளநாடுகளே ஐஸ்வரிய மாநகரமாயின் அவையில்லாதநாடு சௌபாக்கிய நாடல்லவோ! இங்ஙனமாயின்பொன்வெள்ளியில்லாதநாட்டிற்குப் பொன்வெள்ளியுள்ளநாடானது ஏற்றுமதிசெய்யுந்தோறும் பொன்வெள்ளி அந்நாட்டிற்குறைவெய்தியே வருமன்றோ? அதனை இறக்குமதி செய்துகொள்ளும்நாட்டில் அதுநாளுக்குநாள் அதிகரித்தே வருமன்றோ? அப்போது ஐஸ்வரியமுடையநாடெது? அவையில்லாதநாடெது? ஏற்றுமதிசெய்யாதிருந்தால் அதனால்குறைவென்னெனின், பொன்னும் வெள்ளியும் பசியைப்போக்காதே: அம்மணத்தை யொழிக்காதே: நோயைத்தீர்க்காதே: பொன்னைவைத்துக்கொண்டு என்னசெய்யலாம் ஜீவாதாரப்பொருள்கள் இல்லையேல் பொன் வேறொன்றிற்கு மாறாதிருந்தால் ஜீவாதாரத்தை விளைக்குமா?

ஜுபேடிகை.

பிரமக்கியான போதினி யென்னும் பத்திரிகையின் அதிபர்செய்த அதிஷ்டமே அதிர்ஷ்டம்! எட்டுவிரற்கடை அத்தனை அகலங்கூடப் பெருத்திராத ஒரு சிறியபத்திரிகையை அதிலும் மாதத்திற்கு இரண்டு விசையாக பிரசுரித்துக்கொண்டு, வரவுந் தேடிக்கொள்ளுகிறார் அந்தப் பத்திரிகையைக்கொண்டு வருஷத்திற்கு 50 ரூபாய் செலவுசெய்தாலும் வாங்குவதற்கு சாத்தியப்படாத அத்தனைப் பத்திரிகைகளையும் இலவசமாக வரவழைத்துப் பார்வையிடுகிறார் அல்லாமலும் பத்து தமிழ் பத்திரிகைகளி லிருந்தும் ஒவ்வொரு சங்கதியாய்ப்பொறுக்கி அதில் போட்டிருக்கிறதே தவிர தன்சொந்தத்திற்கு ஒருசங்கதியும் போடக்காணோம். என்னமோ ஓம்பிரமமே! என்று ஒன்றை எழுதிவிடுகிறார். அதைக்கொண்டு அனேக பத்திரிகைகளை வரவழைத்து வாசித்து ஆசைதீருகிறார். இவரெடுத்துக்கொண்ட தந்திரம் நல்லதந்திரம்!

என்று இந்து சுமித்திரனில் ஓர் பெங்களூர்வாசி எழுதுகிறார்.—அது உருவிற்சிறிய பத்திரிகையாகவும் மாதம் இருமுறையாகவும் பிரசரிப்பதாகவும் இருப்பதனாலேயே அதனது விசிட்டத்துவங் குறைந்து விடுமோ? உருவுகண்டெள்ளா ருணர்வுடையார் என்பதைப்பெங்களூர்வாசி கவனிக்கக்கடவர். பத்திரிகாதிகாரிகள் பத்திரிகையை மாற்றிவருவது மரியாதைக்கே யல்லாமல், பெங்களூர்வாசி சொல்லியதுபோல உலோபத்துவங் காரணமாகவல்ல. ஓர்பத்திரிகையைநடத்த எவ்வளவு பணஞ்செல்லும்? அவ்வளவுபணத்திற்கு எத்தனைபத்திரிகை வாங்கலாம். இதனைப்பெங்களூர்வாசி கவனிக்க.

குறள்.

யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

மெய்யறிவு.

நம்மவர்களுடைய சித்தாந்தங்கள் வெகுவாய்ப் பரிசோதனைப் பிரமாணமற்றவைகளாகவே யிருக்கின்றனவென்பதற்கு ஓர் திருஷ்டாந்தம்;—குளவி புழுவைத் தன்னுருவாக்கிக்கொள்ளுகிறதென்பது அநேக சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் எழுதியிருக்கிறது அதுசுத்த அபத்தம். நான் பரிசோதித்தறிந்தமட்டில், குளவியானது ஒரு கூடுகட்டியானவுடனே அது கூட்டினுள் மேற்புறத்திலேஒடும்படி தன்வாலைத்துறுத்து முறுக்கிற்று. இந்த அவஸ்தையினாலே அது முட்டையிட்டதாகத்தோன்றியது. அந்தக்குளவி ௬-எ புழுக்களைக் கொண்டுவந்து அடைத்துக் கூட்டின் வாயை மண்ணினால் மூடிப்போட்டது. அந்தக்கூண்டைப் பரிசோதிக்கையிலே, வெண்மையாக சீரகமளவு ஒருமுட்டை அந்தக் கூட்டினுள் மேற்புறத்தில் ஒட்டிக்கொண்டு தொங்கிற்று. பின்பு அந்தக் குளவி முந்தி கட்டியிருந்த எ-அ கூண்டுகளும் பரிசோதிக்கப்பட்டன. அவற்றுள் இரண்டொரு முட்டை மஞ்சள் நிறமடைந்தும், அந்த நிறத்தோடு சில முட்டைகள் ஒன்றுக்[கொன்று] கொஞ்சங் கொஞ்சமதிகமாய்ப் பருத்து மிருந்தன. [இ]தைக் கண்டறிந்தவன்நான்மாத்திரமல்ல. இதைத்தெரிவிக்க, பரித்திப்பட்டு ராமாநுஜலு நாயகரும், பட்டிக்கோட்டை டிஸ்ட்ரிக்ட் முனிசீப் சை. அருணகிரி முதலியாரும் பரிசோதித்தார்கள். குளவி முட்டையிடுகிறதென்றும், அந்த முட்டை பழுப்பு நிறமுள்ள புழுரூபமாகி, குளவி கொட்டி சோர்வுள்ளதாக்கிக் கொண்டுவந்து அடைத்த புழுக்களைத்தின்று பருத்து, முழுதுந்தோல்போர்வையினால் மூடப்பட்ட வேறு உருவமாக்கி அதற்குளிருந்து குளவிக்குஞ்சு தன்முழு ஸ்வரூபத்துடன் வெளிப்படுகிறதென்றும், சில இங்கிலீஷ் கிறந்தங்களில் சொல்லியிருக்கிறது. இந்தக்குளவி விஷயத்தில் நமது முன்னோர்கள் மோசம்போயிருக்கலாம். எப்படிக்கென்றால், குளவிகூடுகட்டி புழுக்களைஅடைத்து மூடிப்போட்டதையும் கடைசியில் கூட்டிலிருந்து சிறுகுளவி வெளிப்பட்டுவந்ததையுங் கண்டதினால், அவர்கள் புழுகுளவியாயிற்றென்று சொல்லியிருக்கலாம். கூட்டையுடைப்பது பாவமென்பதும், கூட்டைக் கலைத்தால் கர்ப்பிணிக்குகர்ப்பம் கலைந்து [போ]மென்பதும் இக்காலத்திலுஞ்சாதாரணமாய் வழங்கிவரு[ம்] வதந்தியாகையால், அது அவர்கள் பரிசோதித்தறியத்தடையாயிருக்கலாம். நம்மவர்கள் பெரும்பாலார் முன்னோர்கள் சொன்னதையும் செய்த ஏற்பாடுகளையும் சரியானவைகளென்று சிலா சாசனமாக நம்புகின்ற தன்மையுடையவர்களாதலால், இவர்களும் பரிசோதனைசெய்ய அவசியமில்லாமற்போயிற்று. அப்படிக்கிருக்க, முன்னோர்கள் சொன்னது வேறுகுளவியாயிருக்கலாம், அது இக்காலத்திலிருக்கிறதோ இல்லையோவென்று தங்கள் கட்சியைச் சாதிப்பாருஞ் சிலர் உண்டு.

முன்னோர்களுடையசில ஏற்பாடுகளினால்சங்கடமுண்டாகிறதென்பதற்கு உண்மையாய் நடந்த ஓர் திருஷ்டாந்தம்:— இரண்டு சகோதரர்கள் வேறுபிரிந்த பிறகு இளையவன் தனக்குக்கிடைத்த சொற்பஆஸ்தியை செலவழித்துத், தன்மனைவியையும் ஏகபுத்திரனையும்விட்டு இறந்துபோனான். இவர்கள் நிராதரவாயிருந்தபடியினாலே தமையன் இவர்களைத் தன்குடும்பத்திற் சேர்த்துக்கொள்ள மனங்கொண்டவனாய் சிலபுத்திமான்களோடு யோசிக்கையில், "இந்து தருமசாஸ்திரம் நமக்குக் கழுத்தறுப்பாயிருக்கிறதே, பிரிந்துபோனவர்களை மறுபடிசேர்த்துக்கொண்டால், அந்தப்பிள்ளை அயோக்கியனாகிற பட்சத்தில், மூத்தவனுக்கிருக்கிற நான்கு பிள்ளைகளோடுகூட ஐந்தாவது பிள்ளையாக பாகங்கேட்டு ஐந்திலொருபாகம் பெற்றுக்கொண்டாலும் நிமித்தமில்லை, தம்பி பிள்ளையென்கிற சுதந்தரத்தினால் சரிபாகங்கேட்டால், யாருக்குத்தான் அப்படிகொடுக்க மனம் ஒப்பும், குடும்பத்தில் மறுபடிசேர்த்துக் கொள்வதுசரியில்லை" என்று தீர்மான மானபிறகு, மூத்தவன் தன்னாலியன்றமட்டில் தன்னுடைய ஆஸ்தியில் அவர்கள் ஜீவனத்துக்கு ஒரு ஏற்பாடு செய்து, அவர்களைப் பிரத்தியேகமாய் வைத்து, அந்தப் பிள்ளைக்கும் பாடசாலை சம்பளங் கொடுத்துவந்தான். அந்தப் பிள்ளையின்மேல் அவனுடைய நேரான விசாரணை இடைவிடாதிருக்கக் கூடாமற்போனதினாலே அந்தப்பிள்ளை விளையாட்டுச்சிறுவர்களோடு சேர்ந்து கல்வியில் பூஜ்ஜியமாகி இப்போது உபாயஸ்தனாயிருக்கிறான். இத்துன்பத்திற்கேல்லாங் காரணம் நமது சாஸ்திரபயமல்லவா?

இதனா[illegible]ன்னோர்கள்பேரில் தோஷஞ்சொல்ல வந்ததா[illegible]. அவர்க ளக்காலத்திற்குத் தக்கபடி அவர்[illegible]மட்டில் சொல்லவேண்டியவைகளைச்சொல்லியும் ஏற்படுத்தவேண்டியவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கபடமற்ற மவுடீகமானகாலத்தில் ஒவ்வொரு புத்திமான் தோன்றி, எத்தனையோ ஏற்பாடுகள் செய்திருப்பது மகாவிசேஷம். அவையில்லாவிட்டால் இப்போது [யா]தாவதொன்றை முதலிலிருந்து ஆராய்ந்துசெய்வது வெகு கஷ்டமாக முடியும். முன்னோர்கள் செய்தனவற்றுள் இக்காலத்திற்கு உதவியானவைகளும் உதவாதவைகளுமுண்டு. [ஆ]தலால் ஏற்றவைகளை ஏற்றும், ஏலாதவைகளை நீக்கியும், மாறவேண்டியவைகளை மாற்றியும், சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்தும், சீராய் ஒழுகுவதே நமது கடமை.

அ. மு. மு.,

அத்வைதோபந்நியாஸம்.

முன் தொடர்ச்சி.

ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார், பித்தம் ரத்தம் [மூ]ளை யிம்மூன்றையும்பற்றி நின்றதேமனம் என்று உபந்நியசித்தனரோ அஃது நம் இந்துவேதாகம புராணோக்தமமா? [அல்]லது எச்சாத்திரவாதாரம் பற்றியோ தெரியவில்லை, எச்சா[த்]திரமாயினும் ஆகுக. ஆனால் ஷை மூன்றையும் பற்றி நி[ன்ற]து மனமென்றால், சித்தத்தில் ஓர்பாகமும், ரத்தத்திலோ[ர்] பாகமும், மூளையிலோர் பாகமுமன்றோ விருக்கவேண்டும் [அ]ந்தமனம்? அங்ஙனமாயின் பித்தத்திலென்ன பிரமாண[ம்]? ரத்தத்திலெவ்வளவு? மூளையிலெம்மட்டு? இவ்வளவி[ன]டையதாயிருக்கின்றதென சாஸ்திரியார் சொல்லுகிறாரோ? அல்லது யாது காரணமோ? தத்துவ விவேசினி கேட்டுவந்து கூறுதி.

மேற்கூறிய பித்தமாதி மூன்றினும் சாத்திரியார்ம[னம்] சமரசமாக விருக்கின்றதோ அல்ல தெவ்வாறோ! அம்[illegible]பேதிக்கு வாங்கிக்கொள்ளுமன்று எவ்வளவோ பித்தம் கு[றை]கின்றது அப்போது பித்தத்தை யநுசரித்திருந்த பாகமா[ன] மனமும் குறைவுபடவேண்டுமே. அன்றியும் வெட்டுமுத[லிய] காயங்களால் ரக்தம் பீறிட்டுக் குறைந்திருக்கும்போது ரக்தத்தை யனுசரித்திருக்கும் மனசின்பாகமும் குறைய[வே]ண்டுமே. வேண்டின் மனோவியாபாரமும் க்ஷீணித்துப்போக நேருமே. ஷை இரண்டனுபவமும் நாமனுபவித்திருக்[கி]றமையால் மறுத்துக் கூறலடுக்காதே. ஒருகால் சாஸ்திரியார் [ம]னம் ஷை மூன்றும் சமரஸமா யிருக்கின்றதெனினும் பிரமா[ண]முண்டெனவாகும். ஆயின் மனமென்பதோர் பதார்த்தமாய் முடியும். முடியவே அஃதின்ன பதார்த்தமென மொழிதல் சாஸ்திரியார் கடனாகும். ஆகவே மனம் பதார்த்த[மா]யினமையின் கட்புலனுக்கும் தோன்றற் பாலதாகவேண்டும் வேண்டின் அம்மனம் அணுப் பிரமாணத்ததா? குன்றி[illegible]ல் பிரமாணத்ததா? சுண்டைப் பிரமாணத்ததா? பாக்குப் பிரமாணத்ததா? சம்பளப் பிரமாணத்ததா? நாரத்தைப் பிரமாணத்ததா? நாரிகேளப் பிரமாணத்ததா? என்றிதுபோன்ற பிரிசினைகளால் கடாவ நிகழும். நகழின் சாஸ்திரியார் கூறியமனம் அதிர்ஸிய பதார்த்தமாகவேனும் இன்மை பதார்த்தமாகவேனும் சித்தாந்தமாதல் திண்ணமாம். ஆயின் சாஸ்திரியார் மேற்கூறிய உபயமார்க்கங்களுள் எதை யனுசரிப்பாரோ, தத்துவ விவேசினியே! வழுத்தல் வேண்டும்.

ஆனால் ஜீவகோடிகளுள் சிரேஷ்ட ஜென்மமாகிய மானிடவகுப்புள் எவரும் ஒருமனதையேனும் எக்காலத்தும் கண்டதாகச் சாதித்தாருமில்லை. சாதிக்கின்றாருமில்லை. ஆயினமையின் தற்காலம் சாஸ்திரியார் புகன்றது அங்கீகரிக்கற்பாலதன்றாயும், ஆபாஸவசனத்ததாயு முடிந்தது. முடியவே நண்பர்காள்! சாத்திரியார் வழுத்திய மானததத்துவம் என்னவானதெனக் காண்கின்றது.

தத்துவாதீதமா[illegible] — [illegible] பிரமமென வேதங்கள்நான்கும் பிரதிபாதிக்கும் வேதாந்தமாகிய அத்வைதோபந்நியாஸத்தின் முடிவைச் சித்தாந்திக்கவந்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரோ! விவேகிகள் சமுதாயத்தின் நீர்வழுத்திய மானததத்துவ க்ஞானவன்மையும் வண்மையும் இருந்தவா றென்னைகொலோ!

ஐயா சாஸ்திரியரோ! நீவிர் நவின்றமனம், பித்தமாதி மூத்தானங்களுக்கும் அபின்னமா? பின்னமா? அபின்னமென்ன, நாபிமுதல் புருவமத்ய பரியந்தம் சற்றேறக்குறைய இரண்டறைஜாண் நீளமிருக்குமே. மனமும் இரண்டறைஜாணீளந்தானோ! நீண்டவுருவத்திற்கு வர்நமுமிருக்கவேண்டிய தத்தியாவஸியக மாயினமையின் பஞ்சவர்னத்துள் எந்தவர்ன

! அல்லது மிஸ்ரமா ? அன்றியும் அம்மனம் நீண்டு திர
டவடிவுடையதா ? அல்லது தட்டையாய் நீண்டதா ? அ
ன்மாயின் வைத்தியசாலைகளில் சரீரங்களை யறுத்துப்பா
ர்க்கச்சே அதனைக்கண்டு தெளியலாமா ? கூடாதெனின் சி
ந்தியின் நூலினும் அம்மனம் மிகச்சிறியதா ? யாதெனக் கூ
றதொழிந்த தன் காரணம்யாதோ ? ஓ, விவேசினியே ! வி
வேகிகளுணர்ந்து கொள்ளும்படி சாஸ்திரியாரை விடைவிடு
க்கச்செய்து சீக்கிரம்வந்து புகலுதி.

அந்தோ ! ஐ மனம் பின்னமெனினோ, நாபியாதிமூன்
று ஸ்தானங்களிலும் சம்மந்தப்படா திருக்கற்பாற்றும். ஆ
னால் சாஸ்திரியார்வாக்கிய மவ்வாறன்று. சம்பந்தமுடையதா
கவே பேசியுள்ளமையால் க்ஷேத்திரதானங்களிலும் மனம்பி
ன்னமா யிருந்ததென்பது சந்தேகமாய் முடிந்தது. அன்றி
யும் ஐ நாபியாதி மூன்றுதானங்களிலும் மனம் தனித்தனி
யே யிருக்குமாயின். நாபிஸ்தானத்தி விருப்பதற்கு நாபிம
னமென்றும் அல்லது பித்தமனமென்றும், இருதய ஸ்தான
த்திலிருப்பதற்கு இருதயமனம் அல்லது ரத்தமனமென்று
ம், தலையிலுள்ளதற்குத் தலைமனம் அல்லது மூளைமனமென்
றுங் கூறலன்றோ வொழுங்குடைத்தாம். என்னவே, ரத்த
மனம், பித்தமனம், மூளைமனம் என மும்மனமுதித்தது "பிள்
ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தகதைபோலும்.

சாஸ்திரியார்மான தத்துவ சித்தாந்தஞ் செய்யப்புகுந்த
து அதற் காதாரமாகச் சில தத்துவங்களைத் துணிந்தெடுக்க
வ "கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டாற்போல" ஏகத்வ
த்திற்குத் திரித்வமாக முடிந்தது. இஃதும் ஆதியந்தமின்றிய
[illegible] தத்வ சித்தாந்தக்ஞானம் போலும்.

இ. உண்மைவிரும்பி [illegible]

சிறுபிள்ளைகளை வளர்ப்பது.

தலைப்பிற்கண்ட விஷயத்தைக்குறித்து பிரான்சின் இரா
தானியாகிய பாரிசு நகரத்திலே பிரசுரமாகும் ஒரு பத்திரி
கையிலே ஒருடாக்டர் கூறியிருப்பவைகளை நமதிஷ்டர்களு
டையவும் நமது நாட்டுஸ்திரீகளுடையவும் உபயோக நிமித்
திங்கு கூறுவோம்.

க. சிறு குழந்தைகள் முதல் வருஷத்தில் தாயின்பாலை
[illegible] ஒருவருஷத்துக்குள் பிரசவித்திருக்கும் தாதிகளின்
பாலைய[illegible]து குடிக்கும்படிச் செய்தல்வேண்டும். இரண்டும
ணிநேரத்துக்கொருமுறை சாப்பிடும்படி திட்டம் செய்யவே
ண்டும் ஆனால் இராத்திரிக்கு அப்படிக்குச் செய்யவேண்டிய
விதித்தமில்லை.

உ. தாயின் பாலாவது தாதியின்பாலாவது கிடைப்பது
அருமையாகுங்கால் பசும்பாலிலாவது அல்லது வெள்ளா
டின் பாலிலாவது கொஞ்சம் (அரைப்பங்கு) தண்ணீர் கல
ந்[illegible]ஞ்சூடாக்கி தித்திப்புச் சேர்த்துக் கொடுக்கலாம்.
[illegible]காலஞ்சென்றபிறகு காற்பங்கு தண்ணீர் கலந்துகொ
[illegible]ம்.

[illegible] குழந்தைகளுக்கு பாலூட்டும்போது கண்ணாடிக்கிண்
ண[illegible]ளாவது மண்பாத்திரங்களாவது உபயோகப் படுத்தவே
ண்[illegible] உலோகப்பாத்திரங்களை உபயோகித்தல் கூடாது.
பா[illegible]டியவுடனே பாத்திரங்களைக் கழுவிச் சுத்தஞ்செய்ய
வே[illegible]டியதுமல்லாமல் பாலில் கல்மிஷங்கள்சேராமல் பாது
கா[illegible]ப்படவும் வேண்டும்.

[illegible] சாதாரணபோஜன பதார்த்தங்களைக்காட்டிலும் வே
று [illegible]தார்த்தங்களை உபயோகித்தல் கூடாது.

[illegible] ஸ்தனங்களால் பாலூட்ட சாத்தியப்படாவிட்டால்
[illegible]ச[illegible] முதலியவைகளில் பால்விட்டு குடிப்பிப்பதினால் அனே
க [illegible]வியாதிகளுண்டாகும். சிலசமயம் மரணத்துக்குங்காரண
மா[illegible]ாதையால் இதையடியோடு விட்டுவிடவேண்டும் என்
ப[illegible] கவனிக்கவேண்டியது.

[illegible]பிறந்தமுத லிரண்டு மாதங்களில் ரொட்டி, மாம்சம்,
அன்[illegible]ட்டிபதார்த்தங்களைக் கு
ழந்தைகளுக்[illegible]திகமாகத் தாயாவது பா
ல் கொடுக்குந் தாதியாவது அருந்தும்படி செய்வதும் மிகுந்த
தொந்திரவைக் கட்டாயம் உண்டுபண்ணுமென் றெண்ண
வேண்டும்.

எ. குழந்தைக்கு எழுமாதங்கள் நிறைந்து விட்டபின்
தாய்க்காவது தாதிக்காவது விசேஷமாய்ப் பாலில்லாவிட்டா
ல் பாலில் ஊரவைத்த ரொட்டித் துண்டுகளாவது அன்ன
மாவது கொஞ்சம் ஊட்டலாம். ஒரு வருஷமாகி கo - கஉ
முன் பற்கள் முளைத்தபின் பாலைநீக்கி மரப்பதார்த்தங்களைக்
கொடுக்கலாம்.

அ. குழந்தைகளுக்குப்பால் அல்லது ஆகாரம் ஊட்டுவ
தற்குமுன் பிராதக்காலத்தில் ஸ்நானஞ்செய்விக்கவும், இதற்
குக்காலத்தின் சீதோஷ்ணங்களை யனுசரித்துநீரைச்சூடாகவு
ம்மிதமாகவுஞ்சேர்த்துக்கொள்ளவும் சரீராதியந்தம் சுத்தமாய்
அழுக்குத்தேய்த்து (முக்கியமாய் மார்பில்) தலையிலுள்ள அழு
க்கும் மாறும்படி தினந்தோறும் ஸ்நானஞ்செயவிக்கவும் வே
ண்டியது. இதில் முக்கியமான கவனஞ்செலுத்தவும்.

கூ. குழந்தைகளின்உடுப்புகள் சுத்தமாகவும் கால்கைகளை
யாட்டுவதற்குப் போதுமானவிடமுள்ளதாயும் வைத்திருக்க
வேண்டியது.

கo. காலானுகுணமாய் (சீதஉஷ்ண காலங்களுக்கியன்ற
படி) உடுப்புகள் வேண்டும். உடுப்புகள் போடாமலிருப்பது
பிசகு. குழந்தைக ளிருக்குமிடம் செவ்வையான காற்றோ
ட்ட முள்ளதாகவிருக்கவேண்டும்.

கக. குழந்தை பிறந்த பதினைந்து தினங்களுக்குள் வெளி
யில் கொண்டுவரவே கூடாது. அதின்பிறகும் அதிகக்காற்
றில்லாமலும் சட சீத உஷ்ணமாகவும் இருக்குங்காலங்களில்
கொண்டுவரவேண்டியது.

கஉ. தாயாவது தாதியாவது குழந்தையுடன் ஒரேபடுக்
கையில் படுக்கலாகாது. இது எப்பொழுதும் கவனிக்கப்பட
வேண்டும்.

கங. குழந்தை சீக்கிரமாய் நடக்கவேண்டுமென்னும் எண்
ணத்துடன் அதற்கடுத்த காரியங்களைத் தாய்தந்தையர் ஒரு
போதுஞ்செய்யக்கூடாது. நடைவண்டிமுதலியவை செய்
வித்துக்கொடுத்து அதன் பற்றுதலினால் எழுந்து நடக்கக்கற்
றுக்கொள்ளும்படியான பிரயத்தனங்களைச் செய்யக்கூடாது.
தவழக்கற்றுக்கொண்டு அப்பால் கையை[illegible]
ள வஸ்துக்களையாவது பிடித்துக்கொண்டு அந்த நிதானத்தின்
பேரில் நடக்கும்படி யேற்பாடு செய்ய வேண்டியது.

கச. குழந்தைகளுக்குப் பேதி, இருமல், வாந்தி முதலிய
நோய்கள் கண்டதாகவாவது கண்டிருப்பதாகவாவது தெரிய
ப்பட்டவுடனே வைத்தியர்களுக்குக் காண்பித்து தகுந்த சிகி
ச்சை செய்விக்க வேண்டியது. [illegible] கொஞ்சம் ஆலசியங்
கூடாது.

கரு. தாயாவது தாதியாவது கருப்பமானதாகத் தெரிய
வந்தவுடனே பால்கொடுப்பதை நிறுத்திவிடவேண்டியது.

கசு. குழந்தை பிறந்து ஐந்துமாதங்களானதும் கோவை
சூரி பிரயோகிக்கவேண்டியது. ஊரில் வைசூரி மும்முரமாக
இருக்குஞ்சமயமானால் இன்னமுந்துரிதமாகவே செய்விக்க
வேண்டும்.

மேற்கூறிய பதினாறு ஆரோக்கிய சூத்திரங்களையும் செவ்
வையாக நமது நாட்டு ஸ்திரீகள் கவனித்துச் செய்வார்களெ
ன்று நம்புகிறோம் —இ-சு-மின்.

ஆகாய வாகனம். 3.

கரி, பரி, தேர், தண்டிகை, பல்லக்கு முதலிய வாகன
ங்கள் உண்டு என்பது யாருக்கும் தெரிந்த விஷயமே. ஆனா
ல் ஆகாயவாகனம் என்னும் ஒரு வாகனம் உண்டா ? இது
கலியுகத்துபுதுமையோ ? என்று அநேகர் பிரமிப்பார்கள். ஆ
ம், புதுமை தான் ! புத்திமான் பெலவான் என்பது கேட்க
வில்லையோ ? நிலம் நீரில் யாத்திரை பண்ணுகிறதுபோல, ஆ
காய சவாரிக்கும் வித்தியாவிநோதர் வழி உண்டுபண்ணியிரு
க்கிறார்கள்.

178[illegible]-ம் வருஷம் மொன்றகொல்பியர் என்பவர் ஒரு
நாள் மேகத்தைநோக்கி அண்ணாந்து பார்த்து சிந்தனைபண்
ணியிருக்கையில், நொய்யமேகங்கள் உயர்ந்தோங்கி இயங்குகி
ன்றதைக் கண்டு ஒரு யோசனை அவர் மனதில் ஓடிற்று. எ
ன்னவெனில், இம்மேகங்கள் சுற்றிலும் வியாபிக்கின்ற ஆகா
யத்திலும் நொய்மையாய் இருக்கிறதினால் அல்லவோ எழு
ம்பி உலாவுகிறது ! ஆகாயத்திலும் லேசான ஒரு பொருளை
ஓர் கூட்டில் அடைக்கிறதானால், அந்த கூடும் ஆகாயத்தில்
எழும்புமே என்பதே.

தீயிலிருந்து எழுகிற வாயுவானது அனலுற்றதும் நொ
ய்யதுமாமே. இலேசானபொருளெல்லாம் மேல்நோக்குமே
அன்றிக் கீழ்நோக்காது என்பதும் நமக்குத் தெரிந்தகாரியமா
ச்சே. ஆதலால், உஷ்ண நொய்யவாயு சூழ இருக்கிற ஆ
காயத்தில் எழும்பி மிதக்குமே. இது மொன்றகொல்பியர் எ
ன்பவருக்கு நன்றாய்த்தெரியும்.

இந்த யோசனையை அவர் பாரிஸ் நகரியில் தம்மோடு கூட வேலை செய்யவந்த தமது சகோதரனுக்கு அறிவிக்க, அவரும் அதைநன்குமதித்து, அவ்விருவரும் பட்டினால் விருத்தவடிவான ஓர் கூடு சமைத்து, உட்பக்கம் கடுதாசியும் ஒட்டி, அடியின் ஓர் துவாரம் வழியாய் அனல்வாயு செலுத்தி நிரப்பி விட்டுப்பார்த்தார்கள். விடவும், அக்கூடு ஒரு மைல் உயரத்துககு எழும்பினதுக்குமேல் கீழ்நோக்கி தரைமட்டம் பிடித்தது ; அப்பால் அவர்கள் ஓர் ஆடும் ஒரு சேவலும் ஒரு தாராக்கோழியும் பிரப்பம்பெட்டி ஒன்றில் அடைத்து, வாகனத்தில் ஏற்றிவிட்டார்கள். கூடு எழும்பி உயிர்ப்பிராணிகளுக்கு ஒருசேதமும் இன்றி, பதனமாய் தரைவந்து சேர்ந்தது. அப்பால் அதில் ஆள் ஏற்றிப் பார்த்தார்கள். ஆகாயவாகனத்தில் முதல்முதல் சவாரிசெய்தவர் ரோசியர் என்னும் பேருள்ள ஓர்பிரான்ஸியனே.

இப்படி அனல் ஆகாயம் நிறைத்து எழும்புகின்ற ஆகாயவாகனம் ஒருவேளை தீப்பிடித்துக் கொள்ளுகிறதும் உண்டு. இதைத் தவிர்க்கவேண்டி, ருப்பர்ட் என்றொருவர் உஷ்ணாகாயத்திற்குபதில், ஆகாயத்திலும் லேசான ஓர் நுண்ணியவஸ்துவாகிய ஜலோர்பன வாயுகொண்டு நிறைத்து அந்த வாகனத்தில் ஏறி பாரிஸ் நகரியிலிருந்து சவாரிசெய்து, ஒரு மணிநேரம் அந்தரத்தில் உலாவி, அந்நகரிக்கு 27 மைல் தூரத்தில் வந்து இறங்கினர். ஆகாயவாகனத்தில் ஏறி முதல்முதல் சமுத்திரத்தைக் கடந்தவர் பிளான்கார்டு என்பவரேயாம். இவர் பிரான்சுக்கும் இங்கிலாந்துக்கும் இடையே உள்ள சமுத்திரத்தைத் தாண்டினர்.

[illegible] ஆகாயவாகனம் ஓவ்வத [illegible] ள்ளே அடைத்த வாயு பறிந்துபோகாதிருக்க பத்திரமாய் கீல்பூசி அழுத்தி பின்னல்வேலையால் பொதிந்திருக்கும். தலைப்பக்கம் ஒரு திறப்பும் உண்டு. சவாரியாய் வாகனம் எழும்புகையில், அதுதாழவேண்டில், அடைப்படைத்துததிருப்பிவாயுவில் கொஞ்சம் வெளிவிடுவார்கள். வாகனத்தில் வாயு புகட்டுதற்காய் அதின் [illegible] குழல் ஏற்றியிருக்கும். வாயு நிறைத்தபின் வாகனத்தை நேர்த்தியும் அடர்த்தியுமான ஓர் பின்னல் வேலையினால் பொதிந்து, பின்னல் முடிவில் தொங்கும் கயிறுகளை வாகனத்தின் வால்த்தூக்கோ இழுத்துவிட்டு ஒரு பிரப்பம் வளையத்தில் தொடுப்பார்கள். இந்த வளையத்தில் [illegible]ரும் பூட்டி ஒரு சிறுவள்ளம் கட்டியிருக்கும். இவ்வள்ளம் பிரப்பம் வேலைபோன்ற லேசான வஸ்துவால் சமைத்து கீல் பூசி அழுத்தமான தோலால் பொதிந்து நாலைந்து ஆளும் ஓரடிப்பாரமும் கொள்ளத்தக்க விஸ்தாரமாயிருக்கும். இந்த அடிப்பாரம் என்னவென்றால் சில மணற்பைகளேயாம். இவை என்னத்திற்கு என்றால் ஆகாயவாகனம் அதிக உன்னதத்தில் எழும்பவேண்டுமாகில், மணற்பைகளை ஒவ்வொன்றாய் களைந்துவிடுவார்கள். வாகனம் தாழவேண்டல் அடைப்பைத்திறந்து வாயுவைக் குறைப்பார்கள்.

1804 ம் ஆண்டு, கே, லுஸாக் என்னும் பிரான்சிய கலைக்கியானி ஆகாய வாகனத்தில் ஏறி, 4 மைல் உயரத்துக்கு சவாரி போய் வந்தார். அந்த உயரத்தில் குளிர் எவ்வளவாய் இருக்குமோ, வாகனத்தில் வைத்திருந்த ஒரு குப்பி மை முதலாய் உறைந்துபோயிற்று. அவ்வேளையில் அவர்கள் வாகனத்திலிருந்து ஒரு பறவையை திறந்துவிட்டார்கள். பறவை, ஆகாயத்தின் நொய்மையினாலே கற்பாரம்போலேமொத்தென்று தரையிலே விழுந்தது.

வாகனங்களை ஆகாயத்திலே நடத்துகிறது இன்னம் வெகு பிரயாசமாய்த்தான் இருக்கிறது. அல்லவென்றால் அதின் பிரயோசனம் இவ்வளவென்று மட்டிடக்கூடாது. காற்றானது இன்னவிடம் என்றறியாமல் அவைகளைத்துறத்திக்கொண்டுபோய் விடுகிறது. அவை காற்றை ஊடறுத்து தடையின்றி ஆகாயத்தில் ஏற்றுகிறதற்கான வழி எல்லாம்பார்த்தும் ஒன்றும் சித்திக்கவில்லை. இதற்கும் புத்திமான்கள் ஓர் வழி உண்டுபண்ணுமலா இருப்பார்கள்?

சிறிது நாளைக்கு முன் பிரான்ஸியருக்கும் ஔஸ்திரியருக்கும் உண்டான யுத்தத்தில் பிரான்ஸிய சக்கரவர்த்தி ஆகாய வாகனத்தைக் கொண்டு ஓர் நூதன உபயோகம் பண்ணுவித்தார் முன் ஒருக்காலும் அது காரியத்திற்கு என்று ஆகாயவாகனத்தை ஒருவரும் கையாடினதில்லை. அது எப்படி எனில். ஔஸ்திரயசேனையில் யுத்தத்துக்கு ஆஜரானவர்கள் இவ்வளவுபேர் என்றும் அவர்களின் நிலை இன்னது என்றும் அறிய விரும்பி பிரான்ஸிய சக்கரவர்த்தி சிலரை ஆகாய வாகனத்தில் ஏற்றி அனுப்பினர். அவர்கள் வாகனத்தில் ஏறி அந்தரமார்க்கமாய்சென்று ஔஸ்திரிய சேனை பட்டாளம் இறங்கியிருந்த பல இடங்களையும் அவர்கள் தொகையையும் பார்த்துவந்து அசரனுக்கு அறிவித்தார்கள். ஜெயமடைகிறதற்கு இந்தச்செய்தி அவருக்கு மிகவும் அநுகூலமாய் இருந்தது.

சாஸ்திரி.

சில்லுரை.

பம்பாய் பட்டணத்தின் பெரிய கோரட்டிலே கனம் சர் உல்லியம் வெட்டர் பரன் என்னப்பட்ட நியாதிபதி முன்னே, ஒருவன் தன்மனைவி விபசாரம் செய்தாளென்றும் ஆதலால் அவள் தன்னைவிட்டு நீங்கிவிடவேண்டுமென்றும் பிரியாது தொடுத்தான். விசாரணையானபின் தீர்ப்பு வாதிபக்கம் கொடுக்கப்பட்டது. இதேமாதிரியாக ஓர் ஸ்திரி தன்புருஷன் விபசாரம் செய்தானென்று வழக்கெடுத்தால் அவனை பரித்தியாகம் செய்யத் தீர்ப்பு பிறக்குமா ? அப்படித் தீர்ப்பளிக்கச் சட்டத்தில் யாதேனும் ஆதாரம் உண்டா ? ஓர் செய்கையை ஸ்திரிசெய்தால் மாத்திரம் குற்றம்பாராட்டியவளைத் தெண்டிப்பதும், அதேசெய்கையைப் புருஷன் செய்யின் அவனைத் தெண்டிக்காமல் பராமுகமாய் விடுவது [illegible]ன்னநீதி ? என்னமானுஷீகம் ; என்னநாகரிகம்;; அதற்குச் சட்டமுண்டு இதற்குச் சட்டமில்லையென்றால், சட்டம் தானாய்முளைத்ததோ யாராலேனும் செய்யப்படாதோ ? செய்யப்பட்டதேல் ஏன் இதற்கும் அத்தகையசட்டம் செய்துக்கொள்ளப்படாது ? இத்தகையசட்டமும் இருக்குமேல், வேசைக்கூட்டமும் விபசாரிகள் நாட்டமும் வெகுவாய் ஒழிந்துபோகுமே; மேகவியாதிகளும் வறுமையும் அகால மரணமும் வெகுவாய் ஒழியுமே;

விளம்பரம்.

நமது வெளிநாட்டுக் கையொப்பக் காரர்களில் அநேகர் தாங்கள் கொடுக்கவேண்டிய பாக்கித்தொகையை 18[illegible] ஆம் வருஷவரையில் கொடுக்காமையால் பத்திரிகைச் [illegible]வு கட்டிவராமல் வெகுவாய்த் தடைபட்டது. சுமார் 375 ரூபாய் வரவேண்டியிருக்கிறது. இப்படியும் இருக்கலாமா [illegible] செய்து அனுப்பிவிடும்படிப் பிரார்த்திக்கின்றோம்.

E. D.

தத்துவவிவேசினி சந்தாவிபரம்.

உள்ளூரார்க்கு	Rs.	As.	வெளியூரார்க்குள	Rs.	As.
ஒருமீக்கு	0	4	மூன்றுமீக்கு	0	14
மூன்றுமீக்கு	0	10	ஆறுமீக்கு	1	10
ஆறுமீக்கு	1	2	வருஷத்துக்கு	2	[illegible]
வருஷத்துக்கு	2	,,			

இலங்கை, சிங்கப்பூர்.	Rs.	As.
வருஷத்துக்கு	7	4
ஆறுமீக்கு	3	10
மூன்றுமீக்கு	1	[illegible]

விளம்பரங்கள், சோம[illegible] ஜனன மரண அறிக்கைகள் [illegible] ஒருவரிக்கு [illegible]

☞ இப்பத்திரிகைக்குக் கையொப்பஞ் [illegible] முதலியவற்றை மிகவும் விபரமாயெழுதிச் சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கிசெட்டிவீதி (307) வது நம்பர் வீட்டில் இருக்கும் தத்துவவிவேசினி மானேஜர் பு. முனிசுவாமிநாயகருக்கு அனுப்பவும்.

☞ ALL COMMUNICATIONS MUST BE ADDRESSED TO *P. Munisawmy Naiker*, MANAGER, 307 LINGHI CHETTY STREET.

Filmed as bound. Best copy available.

திராவிடபாண்டியன்

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V—No.3] MADRAS:—SUNDAY JANUARY 17, 286. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.—குறள்.

அருத்தசாஸ்திரம்.

மேற்சொன்ன எண்ணம் ஜனங்களுக்குள்ளே உண்டாகிப் [illegible]ஸ்திரண மாகிவந்தது. ஆனால் இந்த எண்ணம் [illegible] யுக்தமல்லாததோ என்று அவர்கள் உய்த்து நோக்[illegible] யிருப்பின் அதனது ஆபாசத்தினை யுணர்ந்தேனும் அல்லது அது நித்திய இயற்கைச் சுயானுபவத்திற்கு மாறுபட்டிருப்பதைக் கண்டேனும் ஒழிப்பர். இந்த எண்ணம் சுய்சாரிய துரந்தரராளாகிய போலியனுபவிகள் சிலராலேயே பரிபாலிக்கப்பட்டு "கொலைக்குப் பல்லியுங் குடிக்கு சகுனியு" மென்னும் பழமொழிக்கணித்தாய்த் தேசாதேசங்களையெல்லாம்நாசமோசம் செய்துவந்தது.

விலையுயர்ந்த உலோகங்கள்மட்டுமே ஐஸ்வரியமாமென்னும் சித்தாந்தம் உண்மையேல், அவற்றினைத் தமது சுயநாட்டில் உற்பவிக்கப் பெறும் பரிசினையடையப் பெறாத [illegible]யார்களெல்லாம் அவற்றினைப் பிறநாட்டினின்றும் தமது சுயநாட்டிற்குக் கொண்டுவந்தாலொழிய ஐஸ்வரிய வான்களாத[illegible] கொண்டு வருந்தோறும் அப்பிறநாடுக[illegible] பொன் வெள்ளிகளுக்குப் பிரதியாக சுதேசிகளுக்கு உபயோகப்படத்தக்க பிற பொருள்களை யெவ்வளவுக்குப் பெற்றபோதினும் நாளுக்குநாள் வறுமையையே யடைந்துவரும். இந்த அசாத்தியமான யோசனை தற்கால அருத்தசாஸ்திரக் கியானத்தையும் அருத்தசாஸ்திர வழுக்கத்தையும் எழுப்பிவிட இக்கியானத்தைக்கொண்டு புராதன சனங்கள் அபிப்பிராயத்தை நோக்குமிடத்து அவை சுத்த ஆபாசமாகவும் அத்தகைய எண்ணம் பகுத்தறிவுடைய மனிதர்களுக்கு எப்படி யுதித்ததென்று ஆச்சரியப்படத் தக்கதாகவும் இருக்கின்றது. இதுவிஷயத்தைப் பற்றி 1581ஷூ இலண்டன் பட்டணத்தில் பிரசரித்த ஓர் சிறிய புத்தகத்தில் அக்காலத்திருந்த கைத்தொழிலாளிகள் ஐஸ்வரியமென்பது என்னவெனக் கருதி யிருந்தார்களென்பதைத் தரம் பிரித்துக்கூறப்பட்டிருக்கிறது. அதனை இங்கு மொழிபெயர்த்துக் காட்டுவாம் "நான் இப்போது கைத்தொழிளாளிகளைப் பற்றிக் கூறவேண்டி யிருப்பதால் அவர்களின் தாரதம்மியத்தை அடியிற் காட்டுகிறேன்.

சில கைத்தொழிலாளிகள் பணத்தை உள்ளூரிலிருந்து வெளிகொண்டுபோகிறார்கள்; சிலர் உள்ளூரில் சம்பாதித்த பணத்தை உள்ளூரிலேயே செலவழித்துவிடுவார்கள்.

(இன்னும்வரும்.)

தீட்டு.

தீட்டு தீட்டு என்று நம்மவருள் ஓர் வழக்கம் வழங்கி வருகின்றது. தீட்டென்பது இன்னதென வெமக்குப்பாவப்படவில்லை. அசுத்தவஸ்துக்களைத்தொடுதலே தீட்டெனின் அது சியக்காய் சோப்பு முதலிய மாசொழிக்கும்பொருள்களைத் தேகாதியந்தமும் தேய்த்துக்குளிப்பதனால் நீங்கும். அசுத்தக் கலப்பொழிந்து சுத்தமாயிருக்கவேண்டியது தேகாரோக்கியத்திற்கு ஒத்த அனுபவமே. சனனசௌசம் மரண சௌசம் மாதவிடாய் முதலியவுடையார்களைத் தீண்டுதலுந் தீட்டென்கிறார்களே. இவர்கள் மேற்சொன்ன அசுத்தப் பரித்தியாகப் பொருள்களைத் தேய்த்துக் குளித்தபின்னரும் தீட்டென்று நீத்தகஞ்செய்வதென்னே? ஜனனசௌச முடையார்களுக்கும் அவனைத்தீண்டிய அவர்பந்துக்களுக்கும் 10 நாள் மட்டுந் தீட்டு[illegible] மரணசௌச முடையார்களுக்காளிகளுக்கும் 16 நாள் மட்[illegible] இருக்கும் அவர்பந்[illegible]டாயுற்ற ஸ்திரிகளுக்கு 3 நாள்மட்டுந் தீட்டுண்டென்றும் நம்மவருக்குள் ஓர் ஏற்பாடிருக்கின்றமையால், இத்தகைய தீட்டுகள் இங்கே அவ்வவற்றிற்குக்குறித்த நாளளவைக்குள் குளித்தாலும் மற்றுயாதுசெய்தாலும் தீட்டு நீங்காதுபோலும். இப்படி குளித்தும் மற்றுயாதுசெய்தும் நீங்காததீட்டு மேற்சொன்ன அசுத்தவஸ்துக்களைத் தொடுதல்போன்றதல்ல. ஆதலால் அதுயாது? அதனால் என்ன துன்பம் நேரிடும்? எல்லாதேசத்தாருக்கும் சாதியாருக்கும் சமயத்தாருக்கும் ஒத்ததா? அல்லது இந்துதேசத்தாருக்கு மட்டும் ஒத்ததா? அல்லது மேற்சொன்ன மூவித அசௌச முடையார்கள் யாதொரு விவகாரத்திலும் இத்தனைநாள் வரையில் பிரவேசிக்கப்படாதென ஓர் உத்தேசங்கொண்டு நம்முன்னோர் கட்டுப்பாடு செய்யும் நிமித்தம் இப்படித்தீட்டென்று ஓர் ஏற்பாடு செய்தார்களா? இதுவாயின் ஒன்றைநினைத்து மற்றொன்றை [illegible] அது கற்பனையேயல்லாமல் நிசமல்லவென்றும் அங்கைநெல்லிக [illegible]மா? விளங்கவில்லையா. இது பெரியோர் செய்தற்கடுக[illegible] யோசியுங்கள் யோசியுங்கள்.

இந்துப்பெண்களும்சாஸ்திரமும்.

இந்துப்பெண்களுக்குக் கற்பாவது விவாகஞ்செய்யுமுன் மாதா பிதாக்களாலும் விகாகஞ்செய்தபின் கணவனாலும் கற்பிக்கப் பட்டபடியே நீதி வழுவாமல் ஒழுகுதலாம். மேற்கூறப்பட்ட வாக்கியத்தால் முன்னர் பிதா மாதாக்களாலும் பின்னர் கணவனாலும் முறையே கற்பிக்கப்படும் விஷயங்கள் நீதியாகவிருப்பினும் அநீதியாகவிருப்பினும் அவையனைத்தையும் நீதியாகவேகொண்டு ஒழுகவேண்டு மென்பதும் அவ்வாறு ஒழுகுதல்தான் கற்பு என்பதுமெனப்பெறப்படுகின்றது. ஆகவே பெண்கள் சுவாதீனத்திலே நன்மை தீமைகளையறிந்து நீதியை வகித்து அநீதியையொழித்து ஒழுகசக்தியற்றவர்களாய் இருக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். இந்நிர்ப்பாக்கிய ஸ்திதியை நோக்குங்கால் அன்னோர்க்கு கல்விபயிற்றுவிப்பதும் பயனில் செய்கையாகவேண்டும். பெண்கள் இளமைப்பருவத்திலே பிதாவினாலும் யௌவனத்திலே கணவனாலும் மூப்பிலே புத்திரனாலும் காக்கத்தக்கவர் ஆகையால் ஒருபோதும்பெண் சுவாதீனரல்லராம். மேலைய வாக்கியத்தால் இளமைப் பருவமுள்ள பெண்கள் கணவனாலும் புத்திரனாலும் காக்கத்தக்கவர் அல்லர் எனப் பெறப்படுகின்றமையால் அன்னோர் இளமைப் பருவத்திலே விவாகஞ் செய்துக்கொள்வதும் சாத்திரோத்தம மென்று

விளங்கவில்லையாயினும் தற்காலம் நமது இந்துப்பெண்கள் ஓர் ஐந்துப்பிராயத்திலேயே விவாகம்புரிவதும் மற்ற வீரைந்து பிராயத்திலேயே புத்திரனைப்பெற்றும் வருகின்றார்களே இஃதென்ன விபரீதம்! பிதாமாதாக்கள் பெண்ணுக்குச் சிறுபிராயத்திலே கடவுளுடைய குணமகிமைகளையும் புண்ணியபாவங்களையும் சுவர்க்க நரக பலன்களையும் கடவுளுடைய வழிபடு முறைமைகளையும் கணவனுக்குத் தொண்டுசெய்யும் முறைமையும் கற்பித்து வீட்டுவேலைகளைப் பழக்கவேண்மொம். மேலேயவாக்கியத்தால் பெண்களுக்குள்ள கடவுட்கியானமும் புண்ணியபாவங்கள் சுவர்க்க நரகங்கள் முதலியவைகளில் உள்ள நம்பிக்கையும் அந்நோர்பாலியந்தொட்டு பழகிவந்த வீட்டுவேலைகளோடு ஊட்டப்பட்டு வந்தனவெனவெளிப்படையாகின்றதன்றோ? இவ்வாறு பெண்களுமவைதிகவிஷயங்களை விருத்திசெய்ய வேண்டுமென்பது ஆதியிற் சாஸ்திரங்களை ஏற்படுத்தின ஆரியர்கருத்துபோலும்! மேலும் "குலமகட்கழகுதன் கொழுநனைப்பேணுதல்" என்னும் வாக்கியத்தை நோக்குங்கால் பெண்கள் தத்தம் புருஷர்களை யாதரித்துவருதலே அன்னோர்க்குத் தலைமையாங்கடமையாகின்றது. இக்கடமையை நோக்குங்கால் பிராமணருக்கு ஊழியஞ்செய்யும்பொருட்டு சூத்திரர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்னும் சொல்லுக்கு நிகராகின்றது; பெண்ணானவள் நாடோறும் தன்னாயகன் உண்டபின் தான் உண்ணுதலும், சயனித்தபின் தான்சயநித்தலும் அவன் நித்திரைவிட்டெழுவதற்குமுன்னே தான் நித்திரைவிட்டெழுதலும்வேண்டுமாம். மேலேயவாக்கியத்தால் பெண்ணானவள் தன்னுடைய புருஷனுக்கு சமானமானவளல்லவென்றும் ஊழியக்காரியேயென்றும்விளங்குகின்றது. கணவன்கொடுத்தபொருளை வீணாகச்செலவழியாமையும் அவ[illegible] அவனேவப்படி நடத்தி [illegible] இன்மையும் இன்சொல் சொல்லலும் பெண்ணின் கடமையாம். மேலே கூறப்பட்ட எவ்விஷயத்தையும் ஆண் பெண் இருவரும் கையாண்டுவரவேண்டுவது. இன்றியமையாத கடமையாகவிருக்க அவைகளைப் பெண்களுக்குமாத்திரம் வர்ப்புறுத்திக் கூறுவதெங்ஙனே! மேலும் "தூற்றும்பெண்டிர் கூற்றெனத்தகும்" எனும் வாக்கியத்தை நோக்குங்கால் மனைவியானவள் தன்கணவனுடைய குற்றங்களைப் பிறருக்குச் சொல்லலாகாது எனப் பெறப்படுகின்றது. இஃதென்னவனியாயம்! பெண்ணானவள் சோரம் முதலிய குற்றங்களைப் புரியின் அவளைப்பயிரங்கமாகக் குற்றஞ்சாட்டி வெளிப்படுத்தும் புருஷர்கள் விபசாரமுதலிய குற்றங்களைப் புரிந்து பற்பல ரோகங்களைப் பெற்று தத்தம் மனைவியர்களைப் புணர்ந்து தத்தம் சந்ததியாருக்கும் அக்கொடியநோய்களை பிதுரார்ச்சிதமாக வைப்பாராயின் அக்கணவர்களை குற்றவாளியாகப்பாவித்து வெளியிடும் மனைவியர்களைக் [illegible]

D.

துன்மார்க்க பிச்சைக்காரர்.

சென்னையில் வருஷா வருஷம் பொங்கல் பண்டிகையிலும் அடுத்த மயிலார் பண்டிகையிலும் சில பிச்சைக்காரர் அக்கிரமமாய் வர்த்தகரைப் பலாத்காரப்படுத்தி துர்மொழிகளால் திட்டிப் பிச்சை வாங்குவதைப்பற்றிச் சிறிது கூறுவாம்.

லண்டர் கஞ்சியை வாயில் வார்த்து உடம்பில் துப்பி உதிரம்வரச் சரீரத்தைக்கீறி அநுசிதஞ்செய்து காசு வாங்குகின்றனர்.

மற்றொருவர் ஏதேதோ துர்க்கந்த வஸ்துக்களைக் கையிலேந்திக் கண்டோர் தூர ஓடும்வண்ணம் சென்று காசுகேட்கின்றனர்.

துலுக்க கோஜாக்கள் வெட்கமின்றிப் பாவாடையை எடுத்துக் காண்பித்து ஈனவார்த்தைகளால் வர்த்தகரை வைது பணங்கொண்டவாறு காசு பறிக்கின்றனர்.

பஞ்சம மாதர் சிலர் ஒருங்குசேர்ந்து கொப்பியடித்து நியாயமான பாட்டுகள் பாடித் துட்டுகேட்பர். கொடாவிடினும் அல்லது கொடுக்கச் சிறிது தாமதப்படினும் நிந்தாஸ்துதியான பாட்டுகள் பாடுவர்; அதற்கும் கொடாவிடில் பண்டைப்பாட்டுகளைச் சோனாமாரியாய் விடுவார்; அதற்கும் தராவிடில் வசனமாய் ஒடைக்கால் வேசிகள் கூடப்பேச நாணும் அவ்வளவு ஈனச்சொற்களை ஒவ்வொரு மாதரும் பச்சையாய்ப் பேசுவர்; ஒரு காசு தந்தால் சிலர் வங்குவரா? வாங்கார். அரை அணா வரையில் கேட்டபிரகாரம் தரல்வேண்டும். சில கடைகளில் காலணா வாங்கிக்கொண்டுபோய் வேறொருவர் அரை அணா வாங்குவதைக்காணின் தாமும் அவ்வாறே மற்றக் கடைக்காரரிடம் அரை அணாவாங்குவர். எவர் எவ்வாறு கேட்கினும் இல்லையெனப்படாது. மான ஈனம் கெட்டுப் புருஷர்க்கு அடங்காது வெளியில் புறப்பட்ட இக்கர்த்தபங்களின் அழகைப்பார்க்கும் பேதை மக்களும் காசு கொடுக்கும்படி சிபாரிசு செய்வர். இல்லதை யுள்ளதாகவும் உள்ளதையில்லதாகவும் மாற்றி, ஜனங்களை ஹிம்சித்துப் பரிதானம்வாங்கிப் பிழைக்கும் கான்ஸ்டேபில்களும், பல்லையிளித்து வேடிக்கை பார்த்துச் சிபாரிசு செய்வர். அண்டை அயலிலுள்ள பொறுமை வர்த்தகரும் கண்டிக்காமல் காசு கொடுக்கும்படி சொல்வர். தினம் 1-க்கு எத்தனையோ பேர்க்கு 8-நாள் வரையில் கொடுக்கவேண்டும். சில மாதர் வெறிக்கக்குடித்து தலை விரிகோலமாய் ஆரவாரம் செய்து வஸ்திரத்தைத் தூக்கிக்காட்டுவர். இவ்விபசார ஸ்திரீகளுக்குக் காசுதருவதில் பயன் யாது? பாவந்தான். தினேதினே மாலைவரையில் சம்பாதிக்கும் காசைப் பங்கிட்டுகள், சாராயம் பூர்த்தியாய்க்குடித்து மாமிசம் தின்று போவதொழிய வேறொன்றும் செய்வதில்லை. கடைக்கார் இப்படிப்பட்ட துன்மார்க்க ஸ்திரீகளுக்குக் கொடுக்கத் தலைவிதி ஏனோ. நல்ல விஷயத்திற்குப் பலாத்காரஞ் செய்து வாங்கினலும் பாதகமில்லையே. கொடுக்காமலிருக்கச் சரிப்படுகிறதா? கான்ஸ்டேபில்கள் கூடவல்லவா அப்பதிவிரதா ஸ்திரீகளுக்குத் துணையாய் நிற்கின்றனர். வெற்றிலை விற்கும் சிறு கடைக்காரனும் தினம் 1-க்கு நாலு அணா கொடுக்கவேண்டுமென்றால், இவ்வி[illegible] அரசை எமமட்டும் புகழவேண்டும் பாருங்கள். '[illegible] வரங்கொடுத்தாலும் பூசாரி வரங்கொடா[illegible] போலீசு மா[illegible] உத்திரவு செய்தாலும், மாதா பிதாக்களுக்குக் கஞ்சிவார்க்காத சேவகர் அவ்வுத்திரவை மீறி அப்பாதகிகளுக்குத் துணை புரிகின்றனரோ. மாஜஸ்திரேட்டுகள் இதைக்கவனிக்காவிடில் அவர்களுக்கல்லவோ அபகீர்த்தி வருகிறது.

கடைக்காரர்களே! நீங்கள் பொறுமையை இவ்விஷயத்தில் நீக்கி ஒருங்கு சேர்ந்து அங்கங்குள்ளவர் தனித்தனியே போலீசுக்கு மனு எழுதி அனுப்புவீர்களேயானால், மேற்படி அக்கிரமஸ்தர் உங்கள் கடைகளில் கால்வைக்காதபடிப் போலீசார் பாது காப்பார்கள். அவ்வாறு இயற்றாவிடில் காசையும் இழந்து அற்பநாய்களால் வையப்பட்டு மானத்தையு மிழப்பீர்கள். ஒரு முறை யன்று பலமுறையும் புகன்றதாய் வைத்துக் கொள்ளுங்கள்.

சென்ற வருஷம் குசிலி வர்த்தகர் முத்தியாலுபேட்டை இந்து நேஷனல் சபையார் மூலமாய்ப் போலீசுக்குத் தெரிவிக்கப் போலீஸாரும் எல்லா டிவிஷன்களுக்கும் உத்தரவு செய்தனர். [illegible] கடைகளில் கார்த்துபோல் மற்ற இடங்களில் காக்கவில்லை. ஆனாலும் பரவாயில்லை. சென்ற வருஷமே பறைச்சிகளுக்குப் பாதிகொழுப்படங்கிவிட்டது; வர்த்தகர் இவ்வருஷமும் போலீசுக்குத் தெரிவிப்பார்களானால் மற்ற பாதிகொழுப்பும் அடங்கிவிடும். பறைச்சிகள் கஞ்சியைக்குடித்துக் காலம்தள்ளினாலும் விபசார மின்றி மானம்முதலிய சற்குணங்களோடு வாழ்வார்கள்.

போலீசு அதிகாரிகளே அக்கிரமமான பிச்சைக்காரரால் வர்த்தகர் படும்துன்பம் அளவில்லை. ஆதலாலும் வர்த்தகர் அடிக்கடி உங்களுக்குத் தெரிவிப்பதாலும் பத்திரிகை பேசிப்பேசிச் சலித்து விட்டமையாலும் நாள் சமீபித்தமையாலும் உடனே பறையறை விப்பதுடன் அந்த டிவிஷன் இன்ஸ்பெக்டர்களுக்குச் சோர்வின்றிப் பாதுகாக்கும் வண்ணம் தகுந்த பிரகாரம் உத்திரவு செய்யவேண்டும்.

ஓர் வர்த்தகர்.

பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதல் கற்றுக்கொடுக்குமுறை.

அவசியம் இல்லாததைக் கற்பியாதே, கற்பித்தால் கற்பனை மிஞ்சவிடாதே,

பெற்றோரே! உங்கள் பிள்ளைகள் கீழ்ப்படிந்து வருகிறதும் வராததும் மேலே காட்டிய சூத்திரத்தை நீங்கள் கையாடுகிறதற்கு தக்கதாய் இருக்கும். பிள்ளைகள் செய்யவேண்டியதை அல்லாமல் நேரப்போக்காய் அல்லது மிரட்டுதலாய் என்றும் அவர்களுக்கு கற்பிக்கப்படாது. அப்படி செய்கிற துபிள்ளைகளுக்கு கீழ்ப்படியாமை கற்றுக்கொடுக்கிறதாய் இ

...ம். எப்படியெனில் நீங்கள்சொல்வது விளையாட்டுக்கு ...றும் மெய்க்கு என்றும் அவர்களுக்கு எப்படி தெரியும்? நீங்கள் விளையாட்டுக்கு அவர்களை ஒன்றுசெய்ய சொன்னால், அவர்கள் செய்தாலும் செய்யாவிட்டாலும் அதை ஒரு காரியமாய் எண்ணமாட்டார்கள். அவர்கள் செய்கிறது உங்களுக்கு ஒருகாரியம் அல்லவானால், நீங்கள் சொல்லுகிறதும் அவர்களுக்கு வகை அல்ல. அப்புறம் மெய்க்கு நீங்கள் ஒன்றை கற்பித்தாலும், அவர்கள் ஒரு பொருட்டாய் எண்ணார்கள். இப்படியே உங்கள்சொல்லை எல்லாம் எடுத்தெறிவது அவர்களுக்கு வாடிக்கையாய்ப் போம். அப்பால் நீங்கள் நயமும் பயமுமாய் எதைசொன்னாலும் உங்கள்சொல் ஆடாது. உதாரணமாக;

ஒருநாள் ஞானசுந்தரி என்பவள் வீட்டிலே தைத்துக்கொண்டிருக்கையில், அவளுடைய மகள் பரமாயி அவள் இருந்த முறியிலே ஓடி சாடி விளையாடிக்கொண் டிருந்தாள். விளையாடவே, பரமாயி மேசையிலிருந்த ஒரு பெரிய புஸ்தகத்தைப் பிடித்து இழுத்தாள். ஞானசுந்தரி அதைகண்டு பரமாயி! புஸ்தகத்தை சும்மாயிரு என்று சாடையாய் சொல்லி குனிந்து தன்பாட்டுக்கு இருந்து தைத்தாள். பரமாயி கொஞ்சநேரம் சும்மா நின்று பின்னும் புஸ்தகத்தைப்பிடித்து விளையாடினாள். சற்றுசென்று ஞானசுந்தரி நிமிர்ந்துபார்த்து, பரமாயி! இன்னும் புஸ்தகத்தைப்பிடித்துவிளையாடுகிறதைக் கண்டு பரமாயி புஸ்தகத்தைத் தொடாதே என்று நான் சொன்னது கேட்க இல்லையா! என் கீழ்ப்படிகிறாய் இல்லை? என்று சத்தப்போட்டாள். உடனே பரமாயி புஸ்தகத்திலிருந்து கையை எடுத்துவிட்டாள். ஆகிலும் கொஞ்சநேரம்சென்று அவள் திரும்பவும் அப்படியே புஸ்தகத்தைப் பிடித்து விளையாடவே, புஸ்தகம் கீழேவிழுந்துவிட்டது. உடனே தாய் திடீர் என்று எழுந்து, மகளைக்கோபத்தோடே ஒரு அடி அடித்து, முரண்டுக்காரகுட்டீ! பத்திரமாய் இரு, இனி சொன்னது கேளாவிட்டால், நன்றாய் அடிக்கிறேன் பார்! என்றாள். பரமாயி அழுதுகொண்டு நின்றாள். ஆகிலும் அவள்புஸ்தகத்தை எடுத்து மேசையிலே வைக்கவில்லை. இதுகண்டு தாய் ஐயோ! என் பிள்ளைகள் சொன்னது கேட்குதில்லையே என்றுசொல்லி, புஸ்தகத்தை எடுத்து அதின் ஸ்தானத்திலே வைத்தாள்.

தாய்மாருடைய சீர் இப்படியானால், பிள்ளைகள் எப்படி கீழ்ப்பணியும். இப்படிப்பட்ட தாய்மார் தங்கள் பிள்ளைகளுக்கு கீழ்ப்பணியாமையே கற்றுக்கொடுக்கிறார்கள். பரமாயி கீழ்ப்படியாததற்கு காரணம் ஆர்? தாய் அல்லவா? பிள்ளைகள் குற்றம் செய்கிறவேளை தாய் தகப்பன்மார் தண்டிக்கிறது உண்டே. தண்டிக்கிறது நல்லதுதான். ஆனால் குற்றத்[தி]லும் மிஞ்சின சிட்சை ஆகாது. ஆகிலும் சிலர் தண்டிக்கிற[து] குற்றத்திற்காக அல்ல, கைமோசமான சில காரியங்க[ளைத்] தொட்டே தண்டிக்கிறார்கள். ஞானசுந்தரி மகளை அடி[த்தா]ளே! என்? கீழ்ப்படியாததினாலா? புஸ்தகம் விழுந்துவிட்[ட]தினாலா அல்லவா? புஸ்தகம் விழவில்லையானால், அவளை அடிக்கவே மாட்டாள்.

பெற்றாரே! இதை செய், அதை செய் என்று கட்டளைக்குமேல் கட்டளையாக அவசரம் இல்லாமல் பிள்ளைகளை நெருக்கப்படுத்தா திருங்கள். அவசரமான காரியத்துக்கு மாத்திரம் அவர்களை சட்டம் கட்டுங்கள். நீங்கள் ஒன்றுசொன்னால் அவர்கள் அதை மீறிநடக்க ஒட்டாதிருங்கள். தாய் நேரான ஒரு காரியத்தை பிள்ளை செய்யசொன்னால், தகப்பன் அதை விலக்கக் கூடாது; தகப்பன்சொன்னால் தாய் விலக்கக்கூடாது. தாயும் தகப்பனுமாய் கூடி இணக்கமாய் இளமையிலே அவர்களை கீழ்ப்படிய சிலிக்க வேண்டும். அப்படியானால், பிள்ளைகள் உங்களைநேசித்து கனம்செய்வார்கள்.

தே-ரி.

வித்தை.

வித்தையென்பது ஒரு பொருளையல்லதுதொழிலைக் குறித்தமொழி யன்று இஃது அப்பியாசத்தாலாய பலதொழிற்கும் அமையும். எவ்வாறெனின். "கெரடிபழகினவன் இரடிவிழுந்தால் அதுவுமோர்வித்தை" என்ற லோகவசன மொன்றுமே நாம் கூறியதற்குச் சான்றாகும் அந்தோ! இரடிவிழுமஃதேவித்தையாகுங்கால்மற்றியாதுதான்வித்தையாகாது.

அறிவிற் சிறந்த பெரியோர்களே! நாம் பொதுவாகப் புகன்ற வித்தையெனும் பதத்தை யினிசற்றே சிறப்பிக்கத் துணிவுறின், கல்வி என்பதுமோர் வித்தையன்றா? இஃதோ ஓர் யௌவந பருவமுடைய ரமணீயமானஸ்திரிநகரும் சுகத்தைநிகர்க்கும் எங்ஙனமெனின்மாது என்பது இலக்கியம் அவளதலலங்காரரூபலாவண்யமே இலக்கணம். அன்னவளைக்கூடி யனுபவிக்கும் இன்பமே கல்வி. இத்தகைய கல்வியோ .. எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்றதையும்' "எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும் கண்ணென்ப வாழுமுயிர்க்கு" என்றதையும் ஒத்து, "கல்வியே கற்புடைப் பெண்டீர்" என்றகவியையுந் துணைகொடு நிற்கும், மேற்படி வாக்கியங்களனைத்தும் இக்காலத் தவர தன்றே என்னவே முக்காலத்தவரதன்றே அருத்தாபத்திப் பிரமாணத்தாற் கொள்க,

நாம்கூறிய இக்கல்வியுள்ளும் அந்தமுள அவையாவன ககோளசாஸ்திரம், பூகோளசாஸ்திரம், நாடிசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம், பரதசாஸ்திரம். ஞானசாஸ்திரம் முதலியன இலௌகீகமென்பதும் வைதீகமென்பதும் வித்தையின் முக்கியமான பாகங்கள். அவற்றுள் இலௌகீகமென்பது இகத்துக் கடுத்த விஷயங்களை நவின்று சிற்றின்பத்தைப் பயக்கும். வைதீகமோ பரத்துக்கடுத்த விஷயங்களை விளக்கிப் பேரின்பத்தை நல்கும். அன்றியும் மேற்படி யொவ்வொன்றும் சாதநசாத்திய தரமுடைத்து. சாதந மென்பது பழக்கம் சாத்தியமென்பது பழக்கத்தின் முடிவு.

"சாதநமின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை" உபநிஷத் வாக்கியம்போல மேற்கூறிய ஒவ்வொன்றிற்கும், பிற்கூறு மொவ்வொன்றிற்கும் சாதநமே முக்கிய கருவியாகும். நிற்க.

அஸ்தலாகவம் உருமாற்றம் முதலிய ஜால வித்தைகளும், வஸ்யமோஹந தம்பன உச்சாடன முதலிய கருமவித்தைகளும், அணிமாமகிமா இலகிமா முதலிய சித்துவித்தைகளும், நம்மகுடமாகிய வித்தையிற்சார்ந்த சிற்றின்பத்திற்குரிய இலௌகீகமென்பர் பெரியோர். ஆயினும்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக"

என்ற திருக்குறட் பாவான் நாம் தெரிந்துகொள்வதற்கு அத்தியா வசியகமான தெதுவோ அல்லது ஆனவை எவையோ அவற்றைச் சந்தேக விபரீதமின்றி கற்பதன்றா மாநுஷீகம்? கற்பதுமாத்திரம் சாலுமாவெனின்? அங்ஙனமன்று. நாமெதைக்கருதி எங்ஙனம்போதிக்கப் பட்டோமோ அந்நெறி நில்லாது மானிட உருவத்தைமாத்திரம் வகித்து, செய்கையிலோ மிருகாதிகளை யொத்திருக்கத்தானா கசடறக்கற்பது? இத்தொழிலோடுங் கூடியிருந்தால் நம்மை மானிடமிருக மென்றாரா மூதோர் அல்லது விவேகிகள்? ஆகையால் அப்பெயரை நாமெடுக்க முயலாது மானிட வொழுக்கத்திற் குரியனவென்னென்னவோ அவைகளைப் பழுதறக்கேட்டு,சிந்தித்து தெளிந்து நிற்பதொன்றுமே நம்மை மானிடவகுப்பினும் மிக்க மேன்மைப்படுத்திப் பிரகாசிக்கச் செய்யும்.

அதைவிடுத்து நமக்காவசியக மல்லாதனவற்றில் தலையிட்டு உழன்று காலத்தை வீணிற்போக்கல் நரரினும் ஹீனத்வமுள்ள வகைக ளொன்றிற் கொன்றிற்கு ளொன்றும் என்பது நம் எல்லோருக்கு மநுபோகந்தானே இதனால முற்காலத்தில் எந்தெந்த விஷயங்கள் எவ்வெத்தன்மையா யிருந்தனவோ, யார் யார் எவ்வெந்நிலைமையி லிருந்தனரோ அவ்வத்தன்மை யோடுங் கூடித் தானிருக்கவேண்டுமென்ற தாற்பரியமன்று. கல்விவிருத்தியாகவாக நாகரீகமுந் தொடர்ந்தே வருகின்றமைபற்றி பூர்வம்போலத் தானிருக்க வேண்டுமெனவற்புறுத்தல் கூடா வொழுக்கமாய் முடியும். ஆனால் எல்லா விஷயத்திலுமே இவ்விதி பொருந்தாது. ஏனென்றால் விதியொவ்வொன்றிற்கும் நிஷேதமு மொவ்வொன்றுண்டு.

தி-ணி.

எச்சரிக்கை.

எனது ஜனனதேசத் தவர்களே! பிரம்ம, க்ஷத்திரிய, வைசியர்கள் மட்டும் கலியாணம் கருமாந்தம் சிரார்த்த முதலியவற்றை அந்தணரால் செய்வித்துக் கொள்ளவேண்டுமெனவும், சூத்திரர்கள் அவ்வாறு செய்வித்துக்கொள்ளக் கூடாதெனவும், ஒருக்கால் செய்வித்துக் கொள்வராயின் அத்தகைய சூத்திரருக்கும் அவற்றை இயற்றுவிக்கும் அந்தணருக்கும் சம்பவிக்கும் பாவம் அகாதபருவதம்போல அவர்களது சிரசின்மேல் தொங்கிக்கொண் டிருக்குமெனவும், பொருள்வாஞ்சையினாலே பிராமணர் அவற்றை இயற்றிடினும் அததற்குரிய மந்திரங்களை முறையே உச்சரியாது சாமக்கிரியாதி தக்ஷணைகளைமட்டும் பெற்றுக்கொள்ளலா மெனவும், வேதசாத்தி

ரங்கள் முறையிடுவதாக மனுகூறியுள்ளார். இவ்வாறிருக்க அந்தந்தக் கிரியைகளுக்குரிய மந்திரங்களை முறையே பகராது புரியும் கிரியைகளனைத்தும் பயனற்றவையெனக் கூறுமவர்களே பயனுள்ளனவென அபத்த அசப்பிய ஆசை வார்த்தைகளைப் புகட்டிச் செய்விக்கும் அக் கிரியைகளின் மீது சிறிதேனும் மனதைச் செலுத்தி அதற் குரிய மந்திரங்களை மொழியாது சூத்திரரின் பேதைமையை அறிந்து, ஏதேதோ வாயில்வந்ததை மொழிந்து தமது வஞ்சகப் பொறியில் அகப்படுத்தித் தங்கள் பாதம் பணிவித்துக்கொள்வதை, வெற்றிபெற்ற வேந்தர்கள் தங்கள் வீர பராக்கிரமத்தைக் குறிப்பிக்க ஜெயபேரிகைகளை அடிப்பித்து உங்கள் பேதைமையை பிரசித்தப் படுத்துகின்றனரோ. ஐயோ! இவர்கள் வாக்கை அஞ்சாப்பட்டய மெனக் கருதி அடங்கி, ஒடுங்கி, நடுங்கி, பிராமணவாக்குக்கு எதிர்வாக் கில்லையென எண்ணி இருக்கின்றீர்களே! இதென்ன விபரீதம்! ஆகையால், பிராமணர் ஏற்படுத்தியவற்றில் உங்களுக்குப் பிரதிகூலமா யிருப்பவை ஏதேதாயிருப்பினும் அவற்றை உங்கள் சாமர்த்தியத்திற்கும் திறமைக்குந் தக்கபடி நிவர்த்திக்குந் தொழிலில் சுதந்திர முடையவர்களாக இருக்கிறீர்கள். அச்சுதந்திரத்திற்கு அஸ்திவாரம் பேராண்மையும், பெருந்தகைமையுமே. இச்சுதந்திரம் உள்ளதென்று சிறந்த பல அறிவுடையோரால் ஒரு முறை யல்ல அடுத்தடுத்துப் பலமுறை வாக்குறுதி பிறந்திருக்கின்றது.

துரைத்தனவைத்திய கல்விச்சாலையில் கற்றுத்தேர்ந்த பிராமண வைத்தியர்கள் சூத்திரரைத் தீண்டுகிற பிராமணர் தீட்டாவார்களென மனுகூறிய வாக்கியங்களை இலட்சியஞ் செய்யாது, பெரு ஆவலுக்குட்பட்டு பொருளைநாடி, மூலவெளத்திராதிகளில் வருந்தும் (சண்டாளர்களெனப் பிராமணர்கூறும்) பறையர்களின் வியாதிகளையுங் குணப்படுத்தப் பரிசோதித்து வைத்தியஞ்செய்து வருகின்றனரோ! நீங்கள் மட்டும் யாதொருபயனுமின்றி உங்களையே இழிவுபடுத்தியிருக்கும் அம்மனுநூலைக் கடைப்பிடியாகக் கொண்டு அப் பிராமணரைப் பின்பற்றி யொழுகுகின்றீர்களே! அந்நூலால் நீங்களடைந்த பயன்தான் என்னையோ! அவர்கள் எப்படி பொருளைநாடிப் பறையரொன்றும், சூத்திரரொன்றும் பகுத்துப்பாராது தீண்டி வருகின்றனரோ அவ்வாறே நீங்களும் உங்கள் கஷ்டார்ஜிதத்தை பயனற்ற விஷயங்களில் அழிக்காமலும், அவர்களால் உங்களை இழிவுபடுத்திக் கொள்ளாமலும் மேம்பாட்டுடன் வாழக்கடவீர்கள்.

பிராமண விசுவாசகர்களே! மனு கூறுவதைக் கேளுங்கள்: மனுநூல் ஸ்திரி சங்கிரகணம் 413-வது சுலோகம். "பிராமணன் சம்பளங் கொடுத்தேனுங் கொடாமலேனுஞ் சூத்திரனிடத்தில் வேலைவாங்கலாம். ஏனெனின், அவன் பிராமணனது வேலைக்காகவே பிரம்மாவினால் படைக்கப்பட்டிருக்கின்றான்." 414 "சூத்திரன் எஜமானனால் வேலையினின்று நீக்கப்பட்டிருந்தாலும், அந்த வேலையானது அவனைவிட்டு நீங்காது. இம்மைக்கு மறுமைக்கும் உபயோகமாக அவனுடன் பிறந்த அந்த வேலையை அவனே செய்து தீரவேண்டும். ஆதலால், அவன் மறுமையில் செய்யவேண்டிய வேலையுடன் இம்மையின் வேலையையும் சுமக்காதிருக்க இறக்குமளவும் பிராமணனுக்கு உழைக்கக்கடவன்." சூத்திரனுபத் தருமம். 99-சூத்திரன் பிராமணனுக்குப் பணிவிடை செய்வதினால் தன்மனையாள் மைந்தர் முதலானவர்களின் பசியைத்தீர்க்கக் கூடாவிடில் அவர்கள் பலகாரமுதலியவற்றைச் செய்து விற்றுப்பிழைக்கலாம், அல்லது கூலிவேலைசெய்து பிழைக்கலாம்" 374-சூத்திரன் பிராமணவிதவை ஸ்திரிகளைப்புணர்ந்தால் அச்சூத்திரனில் பீஜம் சிசினம் இவைகளை அடியோடறுக்கவேண்டியது. புருஷனது சுவாதீனத்திலிருக்கும் பிராமணஸ்திரீயை சூத்திரன்புணர்ந்தால் அவனது தேகமுழுவதையும் வெட்டி அவனுடைய எல்லாப்பொருளையும் கவரவேண்டியது" 380 "பிராமணன் எத்தகைய பாவஞ்செய்யினும் அவனைக்கொல்லாமல் காயமின்றி அவன் பொருளுடன் அவனது ஊரைவிட்டு அப்புறப்படுத்த வேண்டியது ஏனெனின், பிரம்மஹத்தியைவிட அதிகமானபாவம் உலகத்தில்கிடையாது. ஆதலால், பிராமணனைக்கொல்லவேண்டுமென அரசன் மனதினாலும் நினைக்கவேகூடாது" எனக் கூறியுள்ளார், இத்தகைய துன்மார்க்க நூல்களை எழுதிவைத்துக்கொண்டு நடத்தும் இச்சந்ததியாரைப் பின்பற்றியொழுக உங்கள்மனம் துணிந்தது பரிதாபம்! பரிதாபம்!

M. MASILAMANY.

வர்த்தமானம்.

ராஜமகேந்திரத்தில் நாளதுமாசம் 20 தேதி இரவு ஒருவித விவாகம் நடந்தேறியதாம் மணமகளுக்கு வயது 29 மணமகனுக்கு வயது 12 மணமகன் உபாத்தியாயனும் வெகுசந்தோஷம். இவர்கள் பிராமணர்களுக்கு எதிரிடையான வழக்கத்தை உள்ளவர்போலும்.

பர்மா அரசனை தீபாவை சென்னையிலேயே வைக்காமல் ராணிப்பேட்டையில் சிறைபடுத்துவது அயுக்த மென்றும் நம் கவர்ன்மெண்டிற்கு இகழ்ச்சியேயன்றி புகழ்ச்சி யல்லவென்றும் மதிராஸ் மெயில் பத்திரிகை கூறுகிறது.

மகத்தானதானம்....காலிபோர்னியா என்னு மூரிலேயுள்ளவரும் உலகத்திலே பெயர்படைத்த தனவந்தர்களுளொருவருமாகிய ஸ்டான் போர்ட் என்பவர் தமதூரிலேயுள்ள சர்வகலா சாலைக்காக (5300000) ஐம்பது மூன்றிலக்ஷம் டாலர் பெறுமானமுள்ள தாவரப்பொருளும் ஒருகோடியே நாற்பத்தேழுலக்ஷம் டாலர் பணமும் தானஞ்செய்தார் ரூபாயாகக் கணக்கிடில் நாலரைகோடி ரூபாயாகும் வித்தியாதானமே சகல தானங்களிலும் மேலானதானமென்பதை யுணராதநமது நாட்டுத்தனவந்தர்கள், டம்பத்திலும் துன்மார்க்கத்திலும் தமது பணத்தை யிறைக்கினு மிறைப்பரன்றி அவ்வித்தியாதானத்தைச் சிந்திப்பதில்லை. பிறருடைய தடுத்தற்கரிய வேண்டுகோளுக்கு வித்தியாசாலை ஸ்தாபித்து நடத்தினும் அதனைக் கவனித்து நடாத்தாமையால் செய்தும் செய்தபுண்ணியத்தை யடைதற்கு அருகராகாதவர்களாகின்றார்கள் மேற்சுட்டிய தனவந்தர்செய்த வித்தியாதானமானது நாலரைக்கோடி யுகங்கள் தான்கழியினும் அழியாதவோர் புகழுடம்பை அவர்க்குக் கொடுத்து விட்டதென்று சொல்வேமாக.

சூரியனில் தோன்றும் புள்ளி :... இப்போது சூரிய விம்பத்தில் ஒருபாகத்தில் அற்புதமுள்ள நீல நிறப்புள்ளிகள் காணப்படுகின்றன வென்றும் அவற்றுள் ஓர் பெரும்புள்ளி இரண்டாயிரம் யோசனை நீளமும் அறுநூறு யோசனை அகலமுமுள்ளதென்றும் சாஸ்திரிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

வீனிஸ் நகரிலே யுள்ள ஆயுத சாலையிலே விசித்திரமான தங்கத் திறவுகோல் ஒன்று உளது என்றும் அது ஏறக்குறைய நானூறு வருஷங்களுக்கு முன் திபால்தோ என்னு மொருவனாற் செய்யப்பட்டது என்றும் அதன் கைப்பிடி எப்படி திருப்பப்படினும் திரும்புமாறு இயக்கப்பட்டிருக்கிறதென்றும் அப்படிச் சற்றுநேரம் திருப்பிக்கொண்டிருக்க அதனுள்ளிருந்து ஒருநுண்ணியதும்மிருதுவுமான ஊசி அம்புபோற்பாய்ந்து தேகத்திற் சென்று சதையினுள் மறைந்து விடுமென்றும் அப்படி மறைந்து சற்று நேரத்திற்குள் அது பாயப் பெற்றவன் உயிர் துறந்து விடுவானென்றும் அது இதுவரையில் அனேகரைக் கொன்று விட்டதென்றும் இன்னும் அனேக ஊசிகள் அதற்குளிருக்கின்றன போலு மென்றும் ஓர்பத்திரிகை கூறுகின்றது. இவ்வூசிகள் பாஷாணம் ஊட்டப்பட்டவைகள்போலும் இதற்கு சம்மாரத் திறவுகோலெனினுமொக்கும்.

தத்துவவிவேசினி சந்தாவிபரம்.

உள்ளூரார்க்கு

	Rs.	As.
ஒருமீக்கு	0	4
மூன்றுமீக்கு	0	10
ஆறுமீக்கு	1	2
வருஷத்துக்கு	2	2

வெளியூரார்க்கு

	Rs.	As.
ஒரு மீ	0	5
மூன்றுமீக்கு	0	13
ஆறுமீக்கு	1	8
வருஷத்துக்கு	2	14

இலங்கை, சிங்கப்பூர்.

	Rs.	As.
வருஷத்துக்கு	7	4
ஆறுமீக்கு	3	10
மூன்றுமீக்கு	1	13

விளம்பரங்கள், நோட்டீசுகள், ஜனன மரண அறிக்கைகளச்சிட, முதல்முறையில் வரி-க-க்கு அணா — 4
அடுத்தமுறையில் ,, 2

☞ இப்பத்திரிகைக்குக் கையொப்பஞ் செய்பவர்கள், தங்களிருப்பிட முதலியவற்றை மிகவும் விபரமாயெழுதிச் சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி (307) வது நம்பர் வீட்டில் இருக்கும் தத்துவவிவேசினி மானேஜர் பு. முனிசுவாமிநாயகருக்கு அனுப்பவும்.

☞ ALL COMMUNICATIONS MUST BE ADDRESSED TO
P. Munisawmy Naiker, MANAGER
307 LINGHI CHETTY STREET

தத்துவவிவேசினி

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

[Vol V—No. 4.] MADRAS:—SUNDAY JANUARY 24, 286. [Monthly, 4 Annas

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.—குறள்.

CHARLES BRADLAUGH, M. P.

இம்மகான் இம்மாதிபதின்மூன்றாந்திகதி மாலையிலே பார்லிமெண்டிற்குச் சென்று சத்தியம்செய்தலாகிய சடங்கினை யியற்றினதாகத் தந்திசமாச்சாரம் வந்ததைக்கண்டு சந்தோஷமெனும் சாகரத்தில் மூழ்கினவர்களானோம். இம்மகான் ஆறுவருஷகாலமாய் பார்லிமெண்டாருடன் புரிந்துவந்த போரின் பிரயோஜனமாகிய ஜெயசத்தமானது சுயக்கியானிகள் பலருக்கும் சுவிசேஷமாகியும் கிறீஸ்தவர் முதலிய மதவாதிகளுக்கு நாகத்தின் தலையில் இடியிடித்ததுபோலு மிருக்கின்றது. இதற்குத் திருட்டாந்தமாகத் திட்டுவரியாதெனின் நமது டைம்ஸ் பத்திராதிபர் மதக்காய்ச்சல்கொண்டவராய் பிரலாபிக்கின்றார்: லிபரல் கெவர்ன்மென்டிலேயே கிளாட்ஸ்டன் முதலியவர்களது பிரயத்தனமிருந்து பார்லி மெண்டில் சத்தியமென்னும் சடங்கினை யியற்றி நாலுபேரைப்போல் சம வல்லபம் பெற்று காரியத்தைநடத்த முடியாத பிரபல்லிய நிரீசுரவாதியாகிய பிராட்லாவானவர் கன்சேர்வெடிவ் கவர்ன்மெண்டில் வந்து சத்தியம்செய்தலாகிய சடங்கினைச் செய்து யாவத்திராளோடும் சமமாயிருக்கும்படி செய்ததற்காககன்சேர்வெடிவ்கட்சியார்களைப் பலவாறு நொந்துக்கொண்டு இனி வைதிக விஷயங்கள் பார்லியமெண்டில் பலப்பட்டு வராவென்கிற துணிவுகொண்டு பலவாறு பரிதபிக்கின்றனர். இட்டைம்ஸ் பத்திராதிபர் நொந்துப் பரிதபிக்கின்றமை முன்னர் நாம் ஓர்கால் ஓர் வேதாந்தியின் பிரசங்கத்திற்குப் போயிருந்தபோது நிகழ்ந்த விருத்தாந்தத்தை யொத்திருக்கின்றது. அவ்விருத்தாந்தமாவது: வேதாந்தியார் உலகம் மித்தையெனப் பிரசங்கித்து வந்தார். அவ்வமையத்து யாம் சில கடாக்களை விட்டோம். அவைகளுக்கவர் பிறகு விடையளிப்பதாகச் சொல்லிப் பிரசங்கத்தை நடத்தினர். சொன்மாரி சொரிந்துவந்த வவ்வமையத்து விண்மாரியும் துளித்தது. விண்மாரி துளிக்கலும் மெய்மறந்து முற்றத்தில் சிரவணஞ்செய்துக்கொண்டிருந்த சிடர்க ளனைவரும் மெய்நனைந்து சரேலென்று எழுந்துவிட்டார்கள். அவர்கள் எழுந்ததற்குக் காரணமறியாத பிரசங்கியார் எம்மைநோக்கி அவர்கள் ஏன் எழுந்தார்களென்று கேட்க, பிரபஞ்சம் மெய்யென்று காட்டுமாறென்று சமையோசிதமாகக் கூறினேம். அவ்வமையத்து அங்கிருந்தவர்களும் மழை மழை யென்று கூச்சலிட்டார்கள் அவ்வமையத்து வேதாந்தியார்அழமாட்டாததுக்கத்துடனும் கோபத்துடனும் பிரசங்கத்தைக் கலக்கிவிட்ட தஞ் சிரவணிகளை நோக்கி இவர்கள் (எம்மைநோக்கி) சொல்லுவதற்குச் சரியாய் நீங்களும் நடந்துகொள்ளுகிறீர்களே! சீச்சீ! உங்கள்தேகம்கற்கண்டினாலும்,சருக்கரையினாலும்,உப்பினாலுமாசெய்திருக்கிறதுஎன்று கோபித்து பிரசங்கத்தைநிறுத்திவிட்டார்.

இதுநிற்க புத்திசாலிகள் அறியவேண்டிய தியாதெனின் பிராட்லா அவர்கள் பார்லிமெண்டிற்குத் தெரிந்தெடுக்கப்பட்டவிஷயம் அவர் பார்லிமெண்டில் ஜனங்களினுடைய சுகாசுகங்களை யெடுத்துக்காட்டி அன்னோர்க்கு அனுகூலமானவைகளை வகிப்பதற்கும் பிரதிகூலமானவைகளை யொழிப்பதற்குமே அல்லாமல் நிரீசுரவாதத்தின் உண்மையைப் பார்லிமெண்டில் நிலைநாட்டவல்லவென்பதே. நிரீசுரவாதமானது நிலைப்பதற்கு பார்லிமெண்டு வேண்டியதில்லையே. பிராட்லாவாலும் இன்னும் பிறராலும் வரைந்துள்ள கிரந்தங்களே போதுமானவை. இக்கிரந்தங்களைக் கண்டிப்பதே நிரீசுரவாதகண்டனையாம். பதிசாத்திரங்களின் உண்மையை ஸ்தாபிப்பதே மேலைய நிரீசுரவாதக் கிரந்தங்களைக் கண்டிப்பதாம். இதுசெய்யாமல் நிரீசுரவாதத்தைக் கண்டிக்கும் பொருட்டு நிரீசுரவாதிகளை பாதிக்கப் புகுதல் செருப்பைத் துணியான்றுவே தொக்கும்.

D.

மனத்தின்நிலைமை.

அறியாமைக்குத் தொண்டு பூண்டொழுகுதலினு மிக்க வீனத்துவமான தொன்றில்லை யாதலாலும், சுயாதீனத்தினு மிக்கது அறிவினிடத்துதிப்பதில்லை யாதலாலும் நன்மையை விரும்பித்தீமையை வெறுக்கும் ஒவ்வொருவரும் பெற்றுய்யவேண்டுவது சுயாதீனமாகும். ஆயினும் மனிதனுடைய சரித்திரத்தைப் பூர்வந்தொட்டுத் திட்டப்புகின் அஃது முழுவதும் அறியாமைக்குத் தொண்டுபூண்ட சரித்திரமாகவே முடியும். மனிதர் அறியாமைக்குத் தொண்டுபூண்டு வருகையில் அரசன் குரு இவ்விருதிறத்தாரும் கூடிக்கொண்டு அவர்களைத் தந்தம் மனம்போனபடி யெல்லாம் ஆட்டுவித்து அவர்கள் ஊழியத்தாலும் ஊதியத்தாலும் வயிறு வளர்த்துவந்தனர். இவ்வாறு இலவசத்தில் வயிறு வளர்க்கும் வியாபாரமானது இடையில் ஓர்கால் ஊனமடையாவண்ணம் அன்னோர் மண்டையில் மூடபக்தியெனும் கூர்சடித்து அக்கூச்சிலிடமாக அபிமானம், பிடிவாதம், வைராக்கியம், கோபம், கொடூரம் முதலிய மதகஜங்களைக் கட்டிக் காவல்வைத்து விட்டனர். இக்காவலினிடத்துக் கட்டுப்பட்டுள்ள மனமானது பிரபஞ்சத்தின் கண்ணேயுள்ள விஷயாதிகளைத் தானே சுதாவிலேகண்டறிய முடியாததாய் குருக்கள்மார்களால் சொல்லப்பட்டவைகளைச் சொல்லப்பட்டவாறே யறிந்தும் அரசர்களால் செய்யச் சொன்னவைகளைச் சொன்னபடி செய்தும் வருகின்றது.

இவ்வாறு மனமானது குருவின் சிட்சைக்கும் இராசாவின் ஆக்கினைக்கும் உட்பட்டு, அரசனைநம்பி புருஷனைக்கைவிட்டதுபோல், அறிவின் புத்திரனாகிய சுயாதீனனைக் கைவிட்டு அறியாமையின் புத்திரனாகிய அடிமையனை நம்பி அவனுக்குத் தொண்டுபூண்டு அந்தகாரமெனும் அடவியுள் சிறைப்பட்டிருக்கின்றது. மனமானது இத்தகைய நிற்பாக்கிய ஸ்திதியிலிருக்கையில் சுயக்கியான சூரியனுதயமாதலும் அந்தகாரமென்னும் அடவியில் பதுங்கிக்கிடந்த நியாயமென்னும் சிங்கமானது கர்ச்சனை செய்தெழுந்து மனதைச் சூழ்ந்து காவல்செய்து நிற்கும் அபிமானம், பிடிவாதம், வைராக்கியம், கோபம், கொடூரம் முதலிய மதகஜங்களை அ

தமாக்குகின்றது. அதமாகிவரும் இம்மத கஜங்கள்
மண்டையில் நாட்டப்பட்டுள்ள மூட விசுவாசத்தினி
டமாகப் பிணைக்கப்பட்ட வாக்காக கொத்துயிருந்தா
முமாகத் தொங்கியவாறே யெங்கும் துயரமென்னும்
துர்நாற்றத்தை வீசாநிற்கின்றன. இத்துயரமென்னும்
துர்நாற்றமானது மனிதர் இன்றியமையாமல் சுவாசிக்
கவேண்டிய நீதியாகிய காற்றினைக்கெடுத்து விடாவண்
ணம் மூட விசுவாசமுனையையும் அதனைப்பற்றித் தொ
ங்கிக்கிடக்கும் பிரேதங்களாகிய அபிமானம், பிடிவா
தம், வைராக்கியம், கோபம், கொடூரம் முதலியவைக
ளையும் மனதினின்று நீக்கி யப்புறப்படுத்தி விடுவோ
மாக. விட்ட வப்பொழுதே சுயாதினம் பெற்று சுகி
ர்தமடைவது திண்ணமாம். D.

செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்.

செல்வனெனினும், பொருளாளனெனினும், திரவியவந்தனெ
னினும், பணக்காரனெனினு மொக்கும். ஆனால் தம்மைப் பி
றர்பொருளாளனென்று மதிக்கும்படிடிஸ்கவுண்டுமுதலியவை
செய்து வீண் டம்பவேடங்கள் தரித்து ஆடம்பரத்துடன்
செல்வர்போல் நடித்து வருபவர்களும், கையிலோர் காசுக்
கும் வழியில்லாவிடினும் கனத்த வியாபாரத்திற் றலையிட்
டுக்கொண்டு கடன்வாங்க அஞ்சாது கடையிற் காலைக்கிள
ப்பிக்கொள்ளுபவர்களும் செல்வவந்தராகார். இவ்விந்துநாட்
டின் கண் வாஸ்தவத்திற் பணக்காரர்களாக உள்ளார் தாங்கி
வரும் செழுங்கிளையாதென வாராயுமிடத்து நமது இந்துத
னவான்களால் ஆதரிக்கப்பட்டு வருபவர்கள் பிராமணரும்
தாசிவேசி மார்களும், சாராயக் கடைக்காரரு மாக விருக்
கின்றனர். மேலைய மூன்று பகுப்பினராலும் செல்வவந்தர்
களது செல்வமானது நாளாவர்த்தியில் முதுமதிபோல் தே
ய்ந்து விடுகின்றது. ஆனால் செல்வர்களால் ஆதரிக்கப்பட்
டு வரவேண்டியவர்கள் யாவரோவெனின் விளம்புவேம். ந
மது நாட்டில் பிறந்து வளர்ந்துள்ள நம்மவர்களில் ஜீவன
மற் றுள்ளவர்களே நமது நாட்டு சீமான்களால் ஆதரிக்கப்
படத்தக்கவராவர். அவர்களை யெவ்வாறு ஆதரிப்பதெனின்
நமது நாட்டார்க்குக் கைத்தொழிலால் செய்து முடிக்கவே
ண்டிய பொருள்களனைத்தையும் பிறதேசத்தாரால் செய்து
கொடுக்கப்பெறாமல் நமது நாட்டில் ஜீவனமற்றுள்ள நம்ம
வர்களைக்கொண்டு செய்துகொள்ளுதலாம். இவ்வாறு செ
ய்வதினால் நமது தேசத்தவர்களுக்கு வேண்டிய வனைத்தை
யும் நாமேசெய்துகொள்ளுகிறவர்களாகிறோம். பிறதேசத்
தவர்களிடத்தில் எதிர்பார்க்க வேண்டாதவர்களாகிறோம்.
ஆகவே நமது தேசத்துத் திரவியம் பிறதேசத்திற்குச் செ
ல்லாது. அஃதன்றியும் நமது நாட்டிலுள்ளவர்களுக்குச் சதா
ஜீவனத்திற்குக் குறைவில்லாமலிருக்கும். இவ்வாறு நமது
நாட்டார் ஜீவனக்குறைவெய்தாம லிருக்கும்படியாக நமது
நாட்டுச்செல்வர்கள் தக்க முயற்சிசெய்து ரெயில்வேகம்பெ
னி, சின்கோனு, காபிமுதலிய பிலான்டேஷன் கம்பனி
களைப் போல் சுதேசத்தவர்களுள் கம்பனிகள் ஏற்படுத்தி
நமக்கு வேண்டியவைகளை எல்லாம் நாம் செய்துகொள்ளும்
படி இயற்றலே 'செல்வர்க்கழகு செழுங்கிளைதாங்குதல்' எ
ன்னும் வாக்கியத்தி னற்கருத்தாம். இவ்வாறு செய்யத்தக்க
சீமான்களில்லாமலே நமது நாடு நாளாவர்த்தியில் க்ஷீணதி
சையை நாடிச் செல்லாநிற்கின்றது. செல்வர்காள்! நமது
நாடு இவ்வாறு நாளுக்கு நாள் பீடடைந்து வருதலை நீங்க
ள் ஏறெடுத்துப்பார்க்காமலும் ஏனென்று கேட்காமலு மிரு
த்தற்றானே வழகு? பளா! பளா!! நன்று! நன்று!!

D.

ஒற்றுமை.

ஒற்றுமையென்பது ஐக்கியம். இவ்வொற்றுமையால் வ
ரும் பயன் மிகப்பெரிது. ஒற்றுமை ஒருவர்க்குண்டாவது மு
தலிலே தந்தை தாயருடன். அப்பால் சகோதரருடன். அப்
பால் சுற்றத்தாருடன். அப்பால் சிநேக ருடன். அப்பால் சு
ஜாதியாருடன். அப்பால் சுயவூராருடன். அப்பால் சுயமத
ஸ்தருடன். அப்பால் சுயபாஷையாளருடன். இவ்வாறுபெரு
கிவிரியும் ஒற்றுமைக்குத்துணையா யுள்ள —முயற்சியும் அறி
வும் இவைமூன்றுங் கூடுங்கால் எவன் பகைவன்? எவனைவெ
ல்லுதலரிது எக்காடு கழனியாகாது? எம்மலை பள்ளமாகாது
எது அசையாது? எது பெயராது? எக்கிராமம் பெரியநகர
மாகாது? எக்கடல் தூராது? எவர்பசியிருப்பர்? எவர் துயரு
றுவர்? எவன்உதவிபுரியான்? எவன் இரந்துண்பான்? எது
முடித்தற்கரியகருமம்? எதுகிட்டாதபொருள்? நம்மவர்களுக்
குள்ளே இஃதில்லா திருப்பதினால் எவ்வளவுகேடுகள் உண்
டாயிருக்கின்றன? நம்மவர்கள் யாதாயினும் ஓர்கருமத்தை
நடத்துதற்குஒருங்கு கூடுதல்அரிது ஒரோவழிக்கூடுகினும் ஐ
க்கியத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல்
மிக அரிது; அவர்கள் ஐக்கியமே யின்றிப் பெரும்பான்மை
யும் தங்கள் உள்ளத்தில் விளையும் பகையையும் அழுக்காற்
றையுமே பாராட்டிக் கலகம்விளைத்து எடுத்த கருமத்தை [illegible]
நெகிழவிடுதலே வழக்கம். இதுபற்றியே நம்மவர்கள் லௌ
கிக நெறிவைதிகநெறி என்னுமிரண்டினும் மேன்மையடை
யாது, அன்னிய தேசத்தார்களும் அன்னிய பாஷையாள
ர்களும் அன்னிய சமயத்தார்களுமா யுள்ளவர்களாலே அ
வமதிக்கப்பட்டுத் தலைகவிழ்கிறார்கள். ஒற்றுமையுடையவர்க
ள் தமது சுற்றத்தார் சுயவூரார் சுயபாஷையாளர் என்னுமி
வர்களுக்கு வருந் துன்பங்களை தமக்கு வந்தவைகளாகப் பா
வித்து விலக்க முயல்வர் கூடாதாயின் அவர்களோடு தாமு
ம் அத்துன்பத்தை யநுபவிப்பார்கள். இப்படியிருந்தால் எ
வ்வளவுபெருமை எவ்வளவுசந்தோஷம்! எவ்வளவுசகாயம்!
எவ்வளவு புண்ணியம்! எவ்வளவு நன்மை! நம்மவர்கள் ஐக்
கியமாயிருக்கின் அரசினர் அஞ்சாது ஒன்றை வழக்கத்துக்
கு மாறாகச் செய்வாரா? செய்ய நினைப்பாரா! இவ்வூரிலே
வர்த்தகம் இறங்கியது எதனால்! முன்னில்லாதகேடான வ
ழக்கங்களுண்டாயினது எதனால்! தரித்திரமிகுந்தது எதனா
ல்! எல்லாம் நம்மவர்களிடத்தில் ஒற்றுமையில்லாத காரண
த்தாலன்றோ! ஒற்றுமையிருக்குமாயின் எத்தனை தொழிற்
சாலைகள் இங்கே உண்டாகா? எத்தனைபெரிய வர்த்தகக்கூ
ட்டங்களுண்டாகா! எத்தனை ஏழைச்சனங்கள் இவ்வூரில் ஜீ
வனம்பெற்றார்கள்ஐயோ?ஐக்கியமென்பதுஉண்டாக்கிக்கொ
ள்ளக் கூடாததோர் அரியகுணமா? அதனை யுண்டாக்குங்
கால் பத்து எட்டுச் செலவாகுமா? யோக்கியதை குறைந்து
விடுமா? ஜாதிக்கடாததொழிலா? நம்மவர்களே! ஐக்கிய மில்
லாமையினாலே முன்னரே நாட்டைப் பறிகொடுத்து விட்டீர்
கள். அன்னியர்கையில் அகப்பட்டுக்கொண்டீர்கள். இனிஅ
வர் கையினின்று மீள்வது அறிதானாலும் அவர்கள் உங்களை
அடிமைகளென்றெண்ணித் தலையில் கால்வைக்க விடாதீர்
கள். இப்போதுள்ள ஓரற்ப ஐக்கியத்தினாலுமன்றோ பிறர்
மயங்கி அஞ்சி நம்மிடம்வந்து வணங்குகின்றார்கள் பூரணஐ
க்கிய முண்டாயிருப்பின் அவர்களென்ன செய்யார் என்ப
தை யுணரக்கடவீர்கள். ச. னி.

"பருவத்தேபயிர்செய்"

நண்பர்காள்! மேற்கூறிய "பருவத்தேபயிர்செய்" என்ற
வாக்கியார்த்தம் பக்குவ காலத்திலேயே பயிரிடு என்பதே.
இஃது ஒன்றையே குறிக்காமல் பொதுவாக-பொறதம்பியா
னது எவ்விதவேலைக்குந் தளர்ந்து வருமாறு இச்சிறுவாக்கி
யமும் எத்தனை விஷயங்களுக்கு அந்வய மாகின்றதென பின்
வருவனவற்றாற் காண்க. அவையாவன.

குழந்தைகள் வித்தியாப்பியாசம் செய்யப்படும் பருவத்தி
ல் மாத்திரம் கல்வி யாரம்பஞ்செய்தால் பலன் தருமேயொ
ழிய அதற்கு முன்னேனும் பின்னேனும் தொடங்குதலா
ல்சாதாரணமாய்ப் பிரயோசனமின்றே. அந்தோ! விளையா
ட்டுப்பருவத்தை நீக்கிவித்தைபயிலுபருவத்தைநோக்கிக் கல்
கற்பியாமற் போக்கினால் எங்ஙனம் நிஷ்பிரயோசனமாமோ
அதுபோலும் நெல், கம்பு, கேழ்வரகு, சோளம், சாமைமு
தலிய தானியங்களும்; திராட்சை முதலிய கனிவர்க்கங்க
ளும்; அவரை, பீர்க்கு, புடல், சுரை முதலிய காய்களும்; ம
ல்லிகை முல்லிகை சாமந்தி புஷ்ப தினுசுகள் முதலிய தா
வரங்களையும் அதனதன் காலத்தில் பயிர் செய்தாலன்றி அ
பலமாவதுபோலும்; கோழி, வாத்து, புறா, ஊர்க்குருவி, கா
கம் முதலிய புள்ளினங்களும் அந்தது இயல்பாகவே தன் த
ன் பக்குவகாலத்திற் கூடாவிடின் விருத்தியின்மைபோலு
ம்: ஆடு மாடு, யானை பூனை, எலி புலி, முதலியவிலங்கினங்க
ளும் தத்தம் பருவகாலத்திற் சேராதொழியின் பெருக்கின்
மையாம்; கௌளி, விருச்சிகம், கரப்பான்பூச்சி முதலிய பூச்
சியினங்களும் கூட்டுறவின்றி யிருந்தால் பிரயோசன மின்

மைபோலும்; பாம்பு முதலிய ஊர்வன தினுசுகளும், ஆமை மச்சம், மகரம், மண்டூகம் முதலிய நீர்வாழ்வனவும் மேற்கூறியவாறின்றேல் விருத்தி நாசமும்; மானிட வகுப்பாகிய நாமும் பெண்பாலர்க்குக் கருவுதிக்குங் காலங்களை யோர்ந்து ஆண்பாலர் சேர்ந்தாலொழிய புத்திரப் பேறின்றி யிருப்பதுபோலும்; ஒவ்வொன்றும் தத்தம் பக்குவகாலத்தில் பயிர்செய்து பல்கிப்பெருகி யிருக்கின்றதைத் திருஷ்டாந்தானுபோகமாய் நாம் கண்டுவருவதுடன் வைதிக மார்க்கத்திலும் குருவானவன் சிஷ்யனுடைய பக்குவா பக்குவத்தைக் கண்டு பாத்திரா பாத்திரமறிந்து சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் சதுர்பாகத்திற் குரியவனோ அவற்றின் அங்கங்கட் குரியவனோ வென்று பரீட்சித்து அபக்குவனாகக் காணின் அவனைச் சாதுசங்கப் பழக்கத்தில் வைத்து அன்னோர்க்கடிபணியும் விருத்தியிலிருத்தி பக்குவனாகக் காணின் மேற்சொல்லிய நான்கிலெதற் குரியவனெனத் தெரிந்து இல்லற தர்ம பாத்திரனாயின் சமுசார சகிதமாயும், துறவறத்திற் சுபாத்திர னல்லனாயின் துறவற சகிதமாயும் போதித்து அதனாலவனைக் கிருதகிருத்திய னாக்குவன் போலும்; நோய்கள் அபாயங்கள் முதலிய நேரிடுவனபோற் காணின் அப்பக்குவத்தையும் தெரிந்து அக்கெடுதிகளினின்றும் நீக்கிக்கொள்ள முயற்சிப்பதுபோலும்; இன்னன பலவற்றிற்கும் அதனதன் பக்குவத்தை முன்னிட்டும் அபக்குவத்தைப் பின்னிட்டும் ஒவ்வொன்றையு மாரம்பிக்கவேண்டுமே யல்லது வேறல்லவென்பதே ஷை வாக்கியத்தின் தாற்பரியம் நிற்க—

சிற்சில லோகபாத்திரங்களும் மட்பாண்டங்களும் கண்ணாடி பாத்திரங்களும் செய்யுங்காலும் 'பருவத்தேபயிர்செய்'' என்றவாக்கியத்தை அநுசரிக்காத பட்சத்தில் நாஸனமேயன்றோ? அன்றியும் பொன் வெள்ளி முதலிய லோகங்களால் ஆபரணங்கள் செய்யும்போதும் ஷை வாக்கியத்தை அநுசரிக்காதுவிடின் நிஷ் பிரயோசனமே யல்லவா? ஆகையால் மேற்படி வாக்கியம் பல விஷயங்களுக்கு மமைந்த ஒரு சிறு வாக்கியமென்பதில் சந்தேகமென்ன?

மேற்கூறிய வாக்கியத்திற்குத் துணையாக "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்ற லோகவசனமு முண்டு இவ்வசனத்தையும் சற்றேறக்குறைய யாவரும் அறிந்தேயிருப்பர் ஆயினும் "பருவத்தேபயிர்செய்'' என்பதும் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' என்பதும் ஒன்றுடனொன்று சம்பந்தாசம்பந்தமுடைய வாக்கியங்களென்னலாம் மேலும் சமயம் நேர்ந்தபோது முடிவுபெறச் செய்துகொள்ளாதகாரியங்கள் "தருணந் தப்பினால் மரணம்'' என்ற லோகவசனம் போலாவதற் கியாதொரு ஆட்சேபனையுமில்லை.

தி. னி.

தமிழ் பேசும்போழுது இங்லீஷ் வார்த்தைகளை உபயோகித்தல்.

பூமியில் பாஷைகள் பல. அவைகளைச்சிலர் அநேகமாயும் சொற்பமாயும் கற்றுத் தேறியிருக்கிறார்கள். இதைக்குறித்து அதிகம் விஸ்தரிப்பது என்னுடைய நோக்கமல்ல. குறித்த விஷயத்தைக்குறித்துக் கொஞ்சஞ்சொல்ல இடங்கொடுங்கள். நம் நாட்டவரில் அநேகர் இங்லிஷ் பாஷையும், தமிழர்கள் சுயபாஷையாகிய தமிழ்ப் பாஷையையும் கற்றவர்களா யிருக்கிறார்கள் அவர்களிற் சிலருடைய பிசகையே இங்ஙனம் எடுத்துக்காக்க வந்தேன். தமிழ்ப்பாஷையானது தன்னிலே பத்தரை மாற்றுத் தங்கம்போல் ஜோதியாய் விளங்க, இங்லிஷ்பாஷையோ தற்கால அரசாட்சியாரின் ஆஞைகைசெல்லும் சகல இடங்களிலும் அதேமயமாய் இலங்குகிறது. பின்னே, இவை யிரண்டும் குறைவற்ற பாஷைகளென்பதற் கையமில்லை. இவைகளைப் பிசகறப்பேசுவதே உத்தமம்.

இதன்றி, மேற்சொன்ன இரண்டு பாஷைகளிலும் அதிகஅறிவுடையோரும், சாதாரண அறிவுடையோருமான தமிழர், தமிழ்பேசும்பொழுதே அதைவிட்டுச்சில இடங்களில் வேணுமென்றோ, அல்லது தடுமாறியோ, தமிழுக்குப்பதில் இங்லிஷ் வார்த்தைகளை ஊடும்பாவுமாய்ச் சேர்த்து ஒரு நிமிஷத்துக்குப் 10 தரமாவது உபயோகித்துப் பேசிக்கொள்கிறார்கள். அப்படி பேசுவது இங்கிலிஷா? தமிஷா? அல்லது இங்கிலிஷ்தமிழா? தமிழ்பேசும்போது இங்லிஷ்வார்த்தைகளையே உபயோகித்துப்பேச விரும்புகிற ஒருவர், தான் இங்லிஷ்பேசும்போது தமிழ் வார்த்தைகளையும் சேர்த்துப் பேசினால்நன்றாயிருக்குமா? அப்படிப்பேசினால்அதைஇங்கிலிஷ் [illegible]யார்சொல்லுவார்? இப்படிப்பேசுதல் கேவலம் என்[illegible] தமிழுடன் இங்லிஷ் பதஞ் சேர்ப்பதும் மஹாகேவலமே. இப்படியே அதிகம்படித்த மஹான்களும் பேசிக்கொள்ளுகிறார்கள். ஆனால் தமிழில் தெரியப்படுத்தக்கூடாததும் தமிழிலே சஹஜமாய் வழங்கிப்போய் நாட்டுப்புறத்து ஜனங்கள்கூட நாடோடியாய் உபயோகிக்கிறதுமான இங்கிலிஷ் சொற்களை தமிழில் உபயோகிப்பதைக் குறித்து நான் ஆக்ஷேபிக்கிறதில்லை. அநாவசியமான அநேகஞ்சொற்களைச் சேர்ப்பதுதான் தகாது உதாரணமாக:—

ஒருநாள் இருவர் தமிழில் சம்பாஷித்துக்கொண்டு போகையில் ஒருவர் மற்றொருவரைப்பார்த்து, உம்முடைய மகன் எங்கே வாசிக்கிறானென்றுகேட்க, மற்றவர் மறுமொழியாக, என்னுடைய எல்டெஸ்ட் ஸன் (Eldest son) டாஞ்ஜூர் (Tanjore) கல்லீஜில் (College) வாசிக்கிறான், அவன் அறிவில் நாளுக்குநாள் இன்கிரீஸ் (increase) அடைய சகல மீன்சுகளும் (means) இருக்கிறது; அவனுக்கு இப்போது மெடிக்கல் டிபார்ட்மென்டில் (Medical Department) இன்டெரஸ்ட் (interest) இருக்கிறபடியால் என்னுடைய லைவ்டைமிலே (life-time) அவனை பெட்டர் ஸ்டெப்புக்குக் (better step) கொண்டுவர வேணுமென்பது என்னுடைய புல் (full) ஒப்பீனியன் (opinion) என்று முடித்தார்.

பாருங்கள்! இதில் எத்தனை இங்கிலிஷ் வார்த்தைகளைக் கட்டாயமாய்ச் சொருகிவிட்டார். ஷை வாக்கியத்தில் கண்டிருக்கும் இங்கிலிஷ் சொற்களுக்குத்தக்க தமிழ்ப்பதம் தமிழ்ப் பாஷையில்இல்லையென்றோ இவரிப்படிப்பேசினார். இந்தவசனத்திலேயே இங்கிலீஷ் தெரியாத ஒருவரிடஞ் சொன்னால் அவருக்கு அதின்கருத்து முக்கால்வாசி பிடிபடாதே. இப்படி அநேக உத்தியோகஸ்தர், தொழிலாளிகள் ஆபீசுகளிலும், மாணாக்கர், உபாத்திமார், பள்ளிக்கூடங்களிலும் சதாரணமாய்ப்பேசுவது, தமிழ்ப்பாஷையை அசட்டைசெய்வதா யிருக்கிறது. சுதேசபாஷையை வெறுத்து அங்கிலேய பாஷையில் அதிகக் கருத்துகொண்டு திரிகிற அநேக இந்துமாணாக்கர் பரீட்சைகளில் தங்கள் சுயபாஷையாகிய தமிழில் அநேகமாய்த் தவறுகிறார்கள்.

பேசினால் தமிழில் பேசு; தப்பினால் இங்லீஷில்பேசு; இரண்டையும் போட்டுப் பிசையாதே: இதின் மேன்மையும் அதின்சாரமும் கெடும். மேலும் தமிழர்தான் இங்லீஷ்த் தற்பனைக் குட்படுகிறார்கள். தமிழ்கற்ற இங்லீஷா தமிழ்பேசுகையில் இங்கிலிஷ் வார்த்தைகளை உபயோகித்துப் பேசுகிறார்களா? இல்லையே. பின்னே தமிழர், தமிழ்பேசும்போது இங்கிலிஷ் பதங்களை உபயோகப்படுத்த இவாள் வெள்ளைமனுஷரைப் பார்க்கிலும் இங்கிலிஷில் அதிகப் புளக்கம் உள்ளவர்களா? அப்படியுமில்லையே. அநாவசியமான இப்பழக்கம் எடுபடுதல் தமிழ்ப்பாஷைக்கு மேன்மை.

ஆகையால், தமிழோடு, இங்கிலிஷ் தமாஷாய்பேசும் தமிழரே! உங்கள் சொந்தபாஷையை நீங்கள் வரவர மறந்துபோகாதபடி தமிழ்ப்பாஷையை அவமதியாதேயுங்கள், அதைப் பிழையறப் பேசுங்கள்; இங்லீஷையும் கற்று இங்கிதமாய்ப் பேசுங்கள்; இதன்றி, இரண்டையும் சொருகுதல் சுயபாஷை குறுகுதலாம்.

ச. னி.

காலஞ்சென்ற சச்சிதாநந்தப் பிள்ளையவர்கள்.

இவர் சென்ற குருவாரம் இரவில்-10½ மணிக்குத் தேகவியோகமடைந்து விட்டதாகவறிந்தோம். நிராத் துயரமுமடைந்தோம். இவர் சுமார் இருபதுவருடகாலமாய் வேதாந்தபிரசங்கம் செய்துவந்தார். இவருக்கும் எமக்கும் சுமார் பத்துவருடகாலமாய் இதரமதங்களை யெதிர்க்கும் விஷயத்தில் மிகுந்த வொற்றுமை இருந்தது. ஆனால் எமது சுயக்கியானமதத்தினுக்கும் இவர் போதித்து வந்த வேதாந்தக் கொள்கையினுக்கு முள்ள சிற்சில வித்தியாசத்தின் பொருட்டு எமக்கு மவர்க்கும் பெரும்போர்விளைந்துகொண்டிருந்ததை இப்பத்திரிகையை யாதிதொட்டு வாசித்துவருபவர்கள் அறியாதிரார். இவர் இலக்கண விலக்கியங்களைப் பூரணமாகக் கற்றறிந்தவர் வேதாந்த சாஸ்திரங்களில் அதிவற்பன்னராக விளங்கியிருந்தனர் வாக்குவல்லபத்திலோ இவர்பகைவரும் இவர் முன்னின்று வார்த்தையாட அஞ்சுவர்.

D

முனசிபல் எலக்ஷன்.

சென்னை முனிசிபல் எலாக்காவைச்சார்ந்த ?-வது டிவிஷனில் தற்காலம் கமிஷ்னர் வேலையொன்று காலியாக விருக்கிறபடியால், வருகிற சனிவாரதினம் கமிஷன ரொருவனை அந்த டிவிஷனிலுள்ளவர்கள் தெரிந் தெடுத்துக்கொள்ளுவார்கள் அவ்வாறு தெரிந்தெடுத்துக் கொள்ளப்படுவர் உலோகோபகாரியாக விருப்பது மிக வவசியகமாம்.

வர்த்தமானம்,

பம்பாய் யூனிவர்சிடி மெட்ரிகுலேஷன் பரீட்சையில் 3 பார்சிகப் பெண்கள் தேறினார்களாம்.

பூனா சுதேச கல்விச்சாலையில் வாசித்தவோர் அந்தகன் பம்பாயில் நடந்த மெட்ரிகுலேஷன்பரீட்சையிற் றேறினனும்.

மைசூர் மஹாராஜா அவர்கள் உத்தாரப்படி தம் சிங்கார அரண்மனை சிகரமுடியில் கடிகாரமொன்று வைக்கப்பட்டதாம்.

இந்தியாவின் ஜனத்தொகை.—இந்தியாவின் அலுவல்களைத் தெரிவிக்கும் கமிஷனர் ரிபோர்ட்டில் குறிக்கப்பட்டிருக்கிற ஐக்கிய தேசங்களிலே 26 லட்சம் இந்தியர்களடங்கி இருக்கிறதாகவும் அவர்களில் 72 ஆயிரம் பேர் நாகரீகமுள்ள பயிரிடும் தொழிலாளிகளெனவும் தெரியவருகிறது.

தீபா அரசன்.—சென்னையிலிருக்கும் தீபா அரசனுக்காக ராணிப்பேட்டையை விட்டு வேறுதக்க இடம்பார்க்க உத்தேசித் திருப்பதாய்த் தெரியவருகின்றது மெர்க்காராவில் ஒரரண்மனை யிருப்பதாகவும் அது தீபாவரசனுக்குத் தக்க ஸ்தானமாகவும் மெயில் பத்திரிகைக்கு ஒரு நிருபநேசர் அறிவித்திருக்கிறார்.

சென்ற சனிக்கிழமை ஜப்பல்பூர் மேயில்டிரேன், டியோலாலிக்கும் இகட்புராவிற்கும் இடையிலுள்ள பாட்லி வாராவதி மேற்போம்போது யாரோஒருவன் துப்பாக்கியினால் முதல்வண்டியைச் சுட்டானும் இருட்டா யிருந்தமையாலும் வண்டியின் வேகத்தினாலும் சுட்டவன் யின்னனென்று தெரியவில்லை டிரேன் பாலிகேயன ஸ்டேஷனில் நிறுத்தப்பட்டு ஆண்டுள்ள ஸ்டேஷனில் ரிபோர்ட்டு செய்யப்பட்டு போலீஸ்காரர் சுட்டவனைத் தேடிப்பார்த்தும் அகப்படவில்லையாம்.

தீபாவின் புகைப்படம்...தீபாவின் புகைப்படத்தை பர்மாவிலுள்ள ஜனங்களெல்லாரும் வாங்கி தங்கள் வீடுகளில் தொங்கவிட்டு வைத்துக் கொள்ளுகிறார்களென்றும், அவை மிகவும் ஏராளமாய் விலையாகின்றமையால் புகைப்படக்காரர்களிடத்திலுள்ள அவருடைய படங்கள் சீக்கிரத்தில் அற்றுப்போய் வேண்டியவர்களுக்கெல்லாம் அவர்களால் கொடுக்கப்படக் கூடவில்லையென்றும், அவருடைய படத்தை எடுத்துவிற்க ஆரம்பிக்கிறவர்கள் அதனால் மிகுந்த லாபம்பெறுவார்களென்றும் ஒரு ரங்கூன்பத்திரிகை கூறுகின்றது.

புகைக்கூடுகள்...இப்போது அனுபவத்திலுள்ள புகைக்கூடுகள் மனிதர்கள் எறிநினைத்த இடத்துக்குச்செலுத்த வல்லமையில்லாமையினால் ஆகாசத்தில் காற்று எத்திக்கில் வீசுமோ அத்திக்குக்கு நேரே செல்கின்றன இப்போது அமெரிகாவில் நூதன புகைக்கூடுகள் செய்யப்படுகின்றன அவை 367 அடி நீளமும் 100 அடி அகலமும் உள்ளவையாய் 55 டன் நிறையுள்ள பாரத்தையேற்றிக் கொண்டு ஆகாசமார்க்கத்தில் ஒருமணிநேரத்திற்குள் 20 மைல் தூரம் செல்லத்தக்கவையாக இருக்கின்றன இப்புகைக்கூடுகளின் மீதே யுத்தகாலங்களி லேறிக்கொண்டு துப்பாக்கிமருந்துகள் தினமைட் குண்டுகள் வைத்துக்கொண்டு மேலெழும்பி எந்தப்பட்டணத்தின்மீதாவது தினமைட் குண்டுகளை யுருட்டினால் பெருத்த தீமை விளையுமென்பதிற் சந்தேகம் சிறிதுமில்லை அமெரிக்கர் மஹாபுத்திசாலிகளா யிருக்கிறார்கள்.

ஐக்கியமாகாணத்தில் ஓமாகா என்ற விடத்தில் ஒரு விநோதமான ஜெயில்கூடம் கட்டிமுடிவா யிருக்கிறது. அது இரும்பினால் ஸ்தம்பக்குழாய் வடிவாய்ச் செய்யப்பட்டிருக்கிறது ஜெயில் அறைகள் அதைச்சுற்றிக் கட்டப்பட் டிருக்கின்றன இது தரையில் கட்டப்படாமல் ஆகாசத்துக்கும், பூமிக்குமிடையில் தொங்கவிடப்பட்டு தரையிலூன்றப்பட்ட உருவாணியில் அது சுழலுகிறது அப்படிச் சுழலுகையில் ஓரேயொரு அறைமாத்திரம் வெளிக்குத் தென்படுகிறது அந்த ஜெயில்கூடம் 3 அடுக்கு உயரமுள்ளது ஒவ்வொரு அடுக்கைச்சுற்றியும் 10 அறைகளிலிருக்கின்றனஅதின் நிறை 45 டன் இந்த பிரமாண்டமான பாரத்தை ஒரு மனிதன் ஒரு சிறு கைப்பிடியைக்கொண்டு லேசாய்ச்சுற்றலாம். இருப்புச் சலாகைகளால் ஒரு கூடு அறைகளிருக்கிற ஸ்தம்பத்தைச்சுற்றிலு மிருக்கிறது ஒவ்வொரு அடுக்கின் அடித்தரையின் வாசற்படியில் இரண்டு கதவுகளிருக்கின்றன எந்தக்கைதியாவது வேண்டியதா யிருக்கும்பொழுது ஜெயில்கூட ஆபீசர் அந்தக்கைதியிருக்கும் அறைதனக்கெதிரில் வரும்பரியந்தம் அதைச்சுழற்றுவான் அந்த அறைவந்தவுடனே ஒரு சிறிய அசைப்பினால் உட்கதவு திறக்க வெளியேறுகிறான் அப்புறம் ஆபீசர் வெளிக்கதவைத் திறக்க கைதி கீழேவருகிறான். இஃதுகல்வியின் அபிவிர்த்தி யல்லவா.

இங்கிலாந்திலிருந்து மிஸ்டர் கப்பர்லாண்ட் என்னும் ஒரு அங்கிலேயகனவான் இத்தேசத்துக்கு வந்திருக்கிறார் இவர் பிறருடைய எண்ணங்களை எல்லாம் சொல்லக்கூடிய மகாவல்லமைபெற்ற சமர்த்தரா யிருக்கிறார் எவர் எதைப்பற்றி மனதில் எண்ணிக்கொண்ட போதிலும் அதை அப்படியேயெழுதிவிடுகிறார் இவருக்கு தெரியாத பாஷைகளில் எதாவது ஒரு வார்த்தையை நினைத்துக் கொண்டபோதிலும் நினைத்துக் கொள்ளப்பட்ட வார்த்தையை அதே பாஷை எழுத்துகளில் எழுதி விடுகிறார் இவர் இங்கிலாந்திலிருந்து வருகையில் எகிப்துதேசத்து அரசனைக்கண்டு வந்தார் அவர் அநேகவிதங்களில் இவருடைய வல்லமையைப் பரீட்சை பார்த்தும் ஒன்றிலும் தவறாமல் எண்ணிக்கொண்ட விஷயங்களை யெல்லாம் அணுவளவும் பிசகாமற் சொல்லிவிட்டார் இவர் கொஞ்சகாலத்துக்குமுன் பம்பாயில் வந்திறங்கி அங்கிருந்து நிஜாமவர்களைக் கண்டுபோக வந்திருந்தார் அங்கும் இம்மாதிரியாகவே நிஜாமவர்களும் அவர்களுடைய மந்திரிகளும் இவருடைய வல்லமையைப் பலவிதத்திற் பரிசோதித்தும் ஒன்றிலும் தோல்வியடையாமல் எல்லாவற்றிலும் ஜெயம்பெற்றார் இவர் ஒருஅறையில் நிஜாமவர்களோடும் பேசிக்கொண்டிருக்கையில் நிஜாமவர்களுடைய மந்திரிகளிலொருவர் அடுத்த அறையில் ஒருமுடுக்கிற் கிடந்த ஏதோ ஒரு அப்பவம்பதுவைய நினைத்துக்கொண்டு மிஸ்டர் கப்பர்லாண்ட் அவர்களை அதைக்காட்டும்படி கேட்க உடனே அவர் எழுந்து தன் கண்களைக் கட்டச்சொல்லி நினைத்துக்கொண்டவருடைய கையைப் பிடித்து அழைத்துக்கொண்டுபோய் நினைத்துக் கொள்ளப்பட்ட வஸ்து இருந்தவிடத்திற் சென்று அதைத்தொட்டுக் காண்பித்தாராம் இம்மாதிரியாக இன்னுமநேக அற்புதமான செய்கைகளையெல்லாஞ் செய்துவருகிறார் இவர் சில தினங்களுக்குமுன் தம்முடைய மனைவியரோடு ஐதராபாத்தை விட்டுப் புறப்பட்டு பம்பாய்கவர்னரின் தேவியராகிய ரேபெருமாட்டியைக் காணும்பொருட்டுப் பூனாவுக்குச் சமீபத்திலுள்ள குனிஷ்கண்ட் என்னுமிடத்திற்குச் சென்றிருக்கிறாரென்று அறிகிறோம். இஃதும் ஓர் விந்தையேவிந்தை ! விந்தை !!

சென்னைஇலௌகிக சங்கத்தவர்களிற் சிலரால் இயற்றப்பட்ட சுயக்கியான சிறு புத்தகங்கள்.

	A. P
திருவிழா	1—0
விவாகம்	1—0
மெய்யறிவு:	
புலான்மறுத்தல் கொலைமறுத்தல் ...	0—3
ஆத்துமா அழிவில்லாததா ?	0—6
வேதாந்தசிரவணம்	0—2
தசரதருக்குப் புத்திரருண்டா ? ...	0—2
ஏசுவென்பவர் யாவர்	0—2

மேலைய சிறு புத்தகங்களை வேண்டுவோர்தபாற்கூலியுடன் பணமனுப்பி சென்னை இலிங்கசெட்டி தெருவில் 291-வது கதவிலக்கமுள்ள வீட்டில் வசிக்கும் ப. அப்பாதுரை செட்டியாரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

☞ ALL COMMUNICATIONS MUST BE ADDRESSED TO
P. Munisawmy Naiker, MANAGER
307 LINGHI CHETTY STREET
Madras.

தத்துவ விவேசினி

கத்தாரால் பரிபாலிக்கப்படுவருகின்ற

இந்து சுயக்கியா விட சுயக்கியான பத்திரிகை.

வாராந்த

MADRAS:—SUNDAY JANUARY 31, 286. [MONTHLY, 4 ANNAS

[VOL V—No. 5.]

ார்சொ லச்சொல்லை
சொல்லுக சொல்லைப் பிறிந்து.—குறள்.
வெல்லுஞ்சொ லின்மை

வேசிகாந்தர்.

கிற.——

—ல்விபசாரம் புரிந்தால் அவள்
புருஷர்களே—! ஒருஸ்திரி ாதியை இழந்தாளென்றும்
பசார குற்றஞ் ஒருஸ்திரி அவளை அவள் மனையினின்று
லமுயற்சிகள்செய்து அவளை அவள் மனையினின்று
அகற்றி விடுகின்றீர்களே! விபசாரகுற்றஞ் சாற்றப்பட்
தம்மனையினின்று நீக்கப்பட்டமாதர், ஒதுக்கப்பட்ட
பின் அன்னவஸ்திராதிகளுக்கு வருவழியற்றிருப்பதால்
பெரும் பசியினிமித்தம் சாற்றப்பட்ட விபசார குற்றத்
தையே மேலுமேலும் புரிந்து பலகொடிய வியாதிகளை
படைந்து வருந்தி இறக்கின்றனரோ. நீங்கள் மட்டும்து
ன்மார்க்கமாகப் பலஸ்திரி கமனஞ்செய்வது குற்றமல்ல
வென்று ஏற்படுத்திக் கொண்டு பொருள்கொடுத்து விப
சாரஞ்செய்து நீங்கள் விலைக்குவாங்கிய பல கொடியவி
யாதிகளை உங்களைத்தவிர வேறொருபுருஷனையுமறியாத
குற்றமற்ற உங்கள் மனைவியருக்கும் பாகித்துக்கொடுத்து
உங்களுடன் அவர்களையும் வருந்தும்படி செய்கிறீர்க
ளே! இது எவ்வாறிருக்கிறதெனின்.—புலி ஆட்டையு
ம், பூனை எலியையும் பிடிப்பதுபோலவும், பலிஷ்டன்
அரசனாவது போலவும், தேகபலாபலத்தின் மீது ஆதா
ரப்பட்டிருக்கிறது. நீங்கள் தேகவலி வுடையவர்களா
னதினால்நீங்கள் விரும்பும் எதையும் புரியலா மெனவும்
தேகவலியும், கல்வி அறிவுமற்றிருக்கும் மாதர் அவ்வா
று புரியலாகாதெனவும், அவர்கள்உங்களுக்கே அதீனப்
பட்டிருக்கவேண்டுமெனவும், நீங்கள் புரியும் குற்றங்க
ளனைத்தையும் அவர்கள் சகித்திருக்கவேண்டுமெனவும்
ஏற்படுத்திக்கொண்டீர்களே! அவர்களும் உங்களைப்போ
லவே வாசித்து சட்ட நிரூபண சபையில் சேர்ந்திருந்தா
ல் உங்களுக்கு அவ்வளவு சுதந்திரமும், தங்களுக்கு சு
தந்திரமின்மையுமான ஏற்பாடுகளைவிதிக்கவிடுவார்களா
விடார்களே! பகுத்தறிவற்ற மிருகாதிகள் தங்களிலும்
பலவீன முள்ளனவற்றை தம்தேகபலத்தால் வெல்லு
வதுநியாயமே, நீங்களோ அவ்வாறன்று, எதனிலும்
சிறந்த பகுத்தறிவை யுடையவர்களானதினால் இருபா
லாருக்கும் ஓரேவிதமான ஒழுக்கவிதியை விதி யுங்கள்.
இதுவே நியாயம்.

M. MASILAMONI.

பழமை பாராட்டல்.

எனது ஜனனதேசத்தவர்களே! எத்தேசத்தவருக்குள்
ளடையுடை முதலிய யாவும் அடிக்கடி மாறிவருகின்றதோ
அத்தேசத்தவர்கள்மட்டும் மற்றெல்லாத்தேசத்தாரிலும் சிறப்
புஞ் செல்வமும் பெற்று, நாகரீகமடைந்து புகழ்பெற்றுவரு
வர்கள். பூர்வ வழக்கமே சிறப்புடைய தெனவும், அதனை
க்கைவிடலாகாதெனவு மெண்ணி பூருவவழக்கத்தையேபின்ப
ற்றுபவர்கள் சமஸ்த சுகாதாரங்களையு மிழந்து, அடிக்கடி மா
றுதலை யுடையவர்களுக்குக் கீழமைய வேண்டியது கிரமமே.
அவ்வாறே மாறுதலையுடையவர்களுக்கு பூர்வவழக்கத்தைப்
பின்பற்றும் நாமே அதற்கு சாட்சியாக இருக்கிறோம். ஆகை
யால் பிரியமானவர்களே! நீங்கள் இதரதேசத்தாரால் இகழ
ப்படாமல் சிறப்புஞ் செல்வமும் பெற்று நாகரிகமடைந்து
புகழ்பெறவேண்டுமானால் உங்கள் குலாசார மதாசாரங்கள்
ஏதேதாயிருப்பினும் அவற்றையும் நாசி செவிகளில் இரந்தி
ரஞ்செய்து அவற்றில் ஆபரணங்களை தொடுக்கும் வழக்கத்
தையும், மாதர் தங்கள் தேகத்தின் மீது மஞ்சளை சுவரிக்கொ
ள்ளும் வழக்கத்தையும், தேகத்தின் மீது சித்திரங்களையும்,
எழுத்துகளையும் பதிந்து (பச்சைகுத்தி) கொள்ளும் கொடிய
வழக்கத்தையும், புருஷர் தாங்கள் சிரசில் ஒற்றைக்குடுமை
முக்குடுமைகளை வைத்து மற்றபாகத்தை சௌளஞ்செய்யும்
ஆபாசவழக்கத்தையும், ஸ்திரிபுருஷர்கள் பலவித வருணங்
களால் நானாவித அடையாளங்களைத் தங்கள்நெற்றியில் பதிந்
துகொள்ளும் துர்வழக்கத்தையும்; நீங்கள் முதன்மையாகநிவ
ர்த்திக்கவேண்டும். சமஸ்த சுகானுபவ விருத்திக்கும் இடை
யூறாக நமக்கெதிரில் பெரியபருவதம்போல் நிற்பது குலா
சாரமே. இக்குலாசார ஆபாசத்தை உங்கள் விவேக சம்மட்
டியினாற் பிளந்து அதன்பெயரே இல்லாதொழிக்க வேண்டும்
அதன்பின் நாகரிகமடைந்துவரும்தேசத்தார் தங்கள் கல்வித்
திறத்தால் அனுஷ்டித்து வரும் அனுஷ்டானங்களனைத்தை
யும் பின்பற்றி சிறப்படைய வேண்டும். அதுவரையில் நீங்
கள் இதரதேசத்தாருக்குக் கீழமைந்து அடிமைப்பட்டே யிரு
ப்பீர்கள். ஆகையால், பிரிய மானவர்களே! நீங்கள் பின்பற்
றும் பூருவ ஆசாரங்களனைத்தையும் அதி துரிதத்தில் நிவர்த்தி
க்கக்கடவீர்கள்.

பிராமணருக்குள்ஒருஸ்திரி விதந்துவானால் அவள் தன்நாய
கன் இறந்தஉடனே தன்தாய் மனையைவந்து சேருகிறாள்.
அவள் தன் தாய்மனைக்கு வந்தவுடனே, அவள் தாய்வீட்டார்
அவள் தலையைச் சிரைத்து அவள் வஸ்திராபரணங்க ளனைத்
தையும் உரிந்து வெள்ளை ஆடை ஒன்று கொடுத்து உடுத்தச்
செய்துதங்கள்வீட்டுவேலைகள் அனைத்தையும்அவளைச்செய்யு
ம்படி பலவந்தஞ் செய்கிறார்கள். அவ்விதந்து தன் தமயன்
தம்பிமார் அவர்கள் மனைவியருடன் நித்திரையினின்று எழுந்
திருப்பதற்கு முன்னமே எழுந்து மண்செப்புப் பித்தளை பாத்
திரங்க ளனைத்தையும் தேய்த்து அலம்பிவைத்து, மனையை
சாணத்தால் மெழுகி மெக்கிட்டு, அவர்கள் மனைவிமக்களு
டைய வஸ்திரங்களனைத்தையும் தோய்த்து சமயல்செய்து அ
வ்வனைவருக்கும் பரிமாரி அவர்களனைவரும் உண்டபின் பக
ல் இரண்டு மூன்று மணிக்கு அவ்விதந்துவை உண்ணச்செய்
கிறார்கள். இதோடே மறுதினம் இரண்டு மூன்று மணிக்கு
தான் அவளுக்குப்போஜனம். விதந்துகளை இவ்வாறு வருத்த
லாமா வெனக் கேட்கில் அதற்கு அவர்கள்புருஷனுடன் சய
னிப்பது நீட்டெனவும், விதந்துகள் அத்திட்டை யொழித்
து ஆசாரமாக இருப்பதால் வீட்டுவேலைகள் அனைத்தையும்
ஆசார ஸ்திரிகளே செய்யவேணுமென்று சாஸ்திரஞ்சொல்
லுவதாக அதற்கு சாக்கு சொல்லுகிறார்கள். பிராமண ஸ்தி
ரிகளில் அநேகர் தங்கள் வீட்டுவேலையைச்செய்யதங்கள்கண
வரின் சகோதரிகளில் எவளாகிலும் ஒருத்தி தாலியறுத்து தம்
வீடுவாராளாவென்று எதிர்பார்த்து வருகிறார்கள் (பிராமணர்
வீட்டில் இவ்வதந்தியை நான் கேட்டிருக்கிறேன்) வியாதியி
னாலாகிலும், பசியின் இளப்பினாலாகிலும் விதந்துகள் வேலை
செய்யாது படுத்திருந்தால் தமயன் தம்பிமாரும் " அந்த அறு

த்தமுண்டை எங்கே வேலைசெய்ய என்ன பாசாங்கு போ டு படுத்திருக்கிறாள்" என்டி வேலைசெய்யாமல் படுத்திருக்கி றாய் ஆம்பிடையான் ஞாபகம் வந்து விட்டதோ"? என்று திட்டி கிஞ்சித்தும் இரக்கமின்றி வேலைசெய்யச் செய்கிறார்க ள். இளம்பிராயமுடைய விதந்துகளின் மைத்துனச்சிகள் ஸ்னானஞ்செய்து உயர்ந்த வஸ்திராபரணங்களைத் தரித்து பூ சூட்டி தத்தமது கணவருடன் சம்பாஷித்துக் களித்திருப்ப தை அவ்விதந்துகள் கண்டு மனம் வெந்து நொந்து தூக்கசாக ரத்தில் முழுகுகின்றனர். விதந்துகளை இவ்வாறு வருடிம்படி கற்பிக்கும் பிராமண மதமிலேச்சக் கொள்கையை நீங்கள் பின்பற்றலாமா ?

யதார்த்தவாதி வெகுஜனவிரோதி.

ஜீவகோடிகளுளெல்லாம் சிறந்தது மனிதஜாதி. மனி தர்களுளெல்லாம் சிறந்தவர்கள் யதார்த்தத்தையே யு ணர்ந்து யதார்த்தத்தையே பிறர்க்கும்போதித்து வரு பவர்களாவர். இவர்களுக்குத் தான் யதார்த்தவாதியெ னும் பெயர்பொருந்தும். இவர்கள் எழுதியநூல்களு க்குத்தான் யதார்த்தநூலெனப் பெயர்வழங்கலாம். ஆனால்யதார்த்தவாதிகள்,காலாகாலங்களில்வானத்தின் கண்தூமகேதுக்கள் தோன்றிமறைவதுபோல்ஒவ்வோர் காலத்தில் ஒவ்வோரிடத்தில் உதித்து அவ்வக்காலங்க ளில் பிரபல்லியமாகவுள்ள பிழைபடுகொள்கைகளையும் பேமானிக்கிருத்தியங்களையும் கண்டித்துவந்ததையும்வ ருகின்றதையும் உலகசரித்திரத்தை யோதிவரும் உத் தமரறியாதிரார். மேலும் யதார்த்தவாதிகள் வெகுஜ னங்களாலும் விரோதிக்கப்பட்டு விபரீதமானவேதனை களுக் குட்பட்டதையும் தற்காலம் பட்டுவருவதையு ம் சொல்லவேண்டுமாயின் கன்மனமுங்கலங்குமே. க லிலியோ, புரூனோ, இப்பேஷியா, பிராட்லா, பிசாண் ட்முதலிய யதார்த்தவாதிகளே போதுமான சாட்சியா கின்றனர். இதுநிற்க சென்ற ஆதிவாரமாலை ஆறும ணிக்குமேல் தொண்டமண்டல வித்தியாசாலையின் க ண்கர்னல் ஆல்காட்டென்பவர் அக்கிராசனாதிபதியாக வீற்றிருக்கையில் பி. ஏ. பட்டம்பெற்றுள்ள அ. இ ரத்தினசாமி முதலியாரவர்கள் இந்துக்களின் தற்கால நிலைமையைப்பற்றி யோர் உபந்நியாசஞ் செய்தார். அவ் வுபந்நியாசத்தின் கண் இந்துக்களால் கொள்ளப்படும் ஆ பாசக்கொள்கைகளையும், அறியாவனுடன் அநுசரித்து வரப்பட்ட அனுசாரங்களையும் அங்கை நெல்லிக்கனி போல் வரைந்திருந்தார். அவ்விடம் அவ்வுபந்நியாசத் தைக் கேட்ட வொவ்வொரு சமையாபிமானியும் சாதியபிமானியும் சித்தங்கலங்கி மெத்தவும் நொந்த னர். உபந்நியாசத்தைக் கேட்டிருந்தவர்கள் செய்தி யிதுவாக அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்த கர்னலோ வெனில் உபந்நியாசம் நடந்த காலையில் சுமார் 20-வது நிமிஷம் வரையில் தாமிருந்தவாசனத்தின்மீது சாய்ந்த வாக்காய் வானத்தைப் பார்த்தவண்ணமாய் இருகண் களையும்மூடிக்கொண்டு யோசனா சாகரத்திலாழ்ந்திருந் தார். அதனைக்கண்ட யாமும் எமதுநண்பரும் கர்னல் அவர்கள் மகாத்துமாக்களை நோக்கி தியானம் பண்ணுகிற தாகவும் உபந்நியாசத்தில் போதிந்துள்ள ஆட்சேபங் களுக்குத்தக்க விடையையும் மகாத்துமாக்களினிடத் துக்கேட்டுச் சொல்லப்போகிறாரென்றும் நினைத்திருந் தோம். அதற்குத்தக்கபடியே அவர் பிறகு கண்ணை விழித்துபக்கத்தில் வீற்றிருந்த தியாசபித்தலைவர்களைய ணுகியென்னமோ முணமுணத்துப் பேசினர். ஆனால் கடையில் கர்னல் அவர்கள் கையை விரித்து விட்டதை க்கண்டு கனமோசம் போனோமே யென்று கவலையுற்றே ம். உபந்நியாசம் முடிவெய்தியவுடன் கர்னல் அவர்க ள் எழுந்து எல்லா விதக்கோட்பாட்டினுக்கும் நாம் செவிகொடுக்க வேண்டியதுதானென்றும் ஆனால் இவ் வுபந்நியாசத்தின் தன்மையைத் தான் முன்னர் அறிந் திருந்தால் அவர் அவ்விடம் வந்திருக்கமாட்டா ரென்றும் சொல்லினர்.

உபந்நியாசத்தின் மெய்யு கர்னல் வாக்கியத்தால் மேலய தனென்கின மெவ்வகைக்கோட்பாட்டினும் சேரா இவ்வுபந்நியாதன் வகைக்கோட்பாட்டினும் ம் அவ்வுபந்நியாசமானது எவ்வகைக் கோட்பாட்டினும் சேராதாயின், அவர் என் மீண்டு ரணமாகத் தன் ...தத் தான் இச்சியாததற்குக் கா ற்றஞ்சாட்டிப் பேசு...தைப்பற்றி இவ்வாறு ஒருவர்கு ன்று கூறினர். தன் ...ன்று தான் நினைக்கவில்லையெ துக்காட்டிச் சனங்களை ...யத்தின்குற்றங்களை யெடுத் தேசாபிமானிக்கழகு? விஷேர் திருத்தா திருத்தல்தானே வர்கள் தேசாபிமானமென்கிறார்கள்! கூறுமின்! கர்னல் அ ண்டபோருளிதுதானோ? பளஞ் சொல்லிற்குக் கொ கர்னல் அவர்கள் கொண்டபொருள்! பளா ! நன்று ! நன்று! அவர்கள் தேசாபிமானியா ...ரு ளிதுவாயின் கர்னல் நேரிடவே தினேதினே நூதனநூன விசாரிக்கநேரிடும், தங்களைக் கண்டுபிடித்து அநுஷ்டானமாக விஷயவரப்பு ண்டுவரும் அமெரிக்கர்களில் தாமொ...னத்திற்குக் கொ தம்மூராருடைய அபிவிருத்தியை ...ருவராகவிருந்தும் த்தவராய் உமிக்குத்தி கை...யெல்லாம் அவமதி இவ்விந்து தேசத்தில் இ...ருந்துபவர்களைப் போல் கிருதபாஷையில் தமக்கத்...ந்தபாஷை ...யாகிய சமஸ் ...வரந் தெரி யாதிருந்தும் எல்லாவற்புத...ல்ரேய உள்ளதென்றும்முற் காலத்துப் பிராமணரையும் அன்னோர்நாடாகிய இவ் விந்து நாட்டையும் புகழ்ந்து கொண்டாடுவதேன் ? இந் துதேச மென்னகர்னல்நாடா ? அல்லவே. இவர்பிறர்க் குச் சொல்லுவது எட்டுச் சுரைக்காயும் தாம்தின்னு வது மேட்டுச்சுரைக்காயுமா ?

D.

முத்துசாமி முனிவருக்கும் பெரியகுளந்தாலூகா கோம்பை வேதாந்த ராமலிங்க பரதேசிக்கும் நடந்த சம்பாஷணை.

பரதேசி கேள்வி:—இந்த உலகத்தை யுண்டுபண்ணின வஸ் து ஒன்று உண்டாஇல்லையா.

முனிவர்விடை:—ஆம் ஒன்றுண்டு. அஃது நமக்கு அன்னி யமானபொருளல்ல.

பரதேசி:—நமக்கன்னியமான பொருளொன் றில்லாவிடில் அறுபத்துமூவராகிய அடியார்களுக்காக கடவு ளடி யார்க்கெளிவந்து அங்கங்கு பிரசன்னமாகிச்சிற்சில அ ற்புதங்களை விளைவித்துக் காட்டினதாக ஆகமிகள் ந ம்புவதற்குக் காரணமென்ன.

முனிவர்:—உலகின் கண்ணுள்ள மனுக்கள் அடங்கிநடக்கும் பொருட்டாய் தேவனுண்டென்றும் அவனை விசு வாசித்தால் மோக்ஷமுண்டென்றும் தவறினால் கட வுள் தண்டிப்பாரென்றும் கட்டுப்பாடான ஆகம பு ராணங்கள்இக்காலத்து சட்டநிரூபணங்களைப்போல் செய்யப்பட்டிருக்கின்றன வேயன்றி வேறல்ல.

பரதேசி:—புராணங் கட்டுப்பாடென்றால் சாஸ்திரங்களில் தேர்ந்தபண்டிதர்கள் அந்த புராணங்களைத்தாங்களும் விசுவசித்துப் பிறருக்கும்போதிக்கின்றார்களே அப்ப டி போதிக்கின்றவர்களும் அவர்கள்மாணுக்கரும் வி வேகமில்லாதவர்களா.

முனிவர்:—ஆம். விவேகமில்லாத பேதைஜனங்களானபேர்க ள் வாசகா லங்காரமாய்ப் பேசப்பட்ட வர்களையும் பு ராணங்களையும் நம்புவதுவழக்கமாகவிருக்கின்றது அ து எப்படியென்றால் இப்பூமியின்கண்கேவலம் ஒவ் வொரு தொழிலாளி களுக்கும் மேஸ்திரியென்றுஒ ர்தலைவ னிருப்பதுபோல் விவேகசூன்யர்களுக்குஞா

னமென்பதைப் போதிக்கிருமென்று தாம்கற்ற மூ
டத்துவத்தைப்புகட்டி அதினுல் சீவனம்செய்வதற்கு
வேடம்பூண்டு வெளிப்பட்டவனுடையகருத்து எப்ப
டிஇருக்கிறதெனில் தான் வேருகவும் தனக்கன்னிய
மானபொருளொன்றிருப்பதாகவும் தானருகிலிருந்து
பார்த்தவன்போல சில புராணங்களைச்செய்துகொண்
டு அதைப்பிறருக்குபோதிக்க வேடம்பூண்டு திரிகின்
ற ஒவ்வொருமதங்களுக்கும் ஒவ்வொருதலைவனுண்டு
அவனைப் பகுத்தறிவில்லாதவர்கள் தான் வணங்கு
வார்கள்.

பரதேசி:—அனேகசாஸ்திரபுராணங்களை வாசித்துத்தேர்ந்த
பண்டிதாள் தமக்குத்தெரிந்தவைகளைச் சொன்னுல்
யாரும் மெய்யென்று நம்பவேண்டியதாய்த் தானே
யிருக்கிறது அவர்களை மூடரென்று எப்படிச் சொல்
லலாம்.

முனிவர்:—ஏதேனுமொரு தொழில்முதலிய வித்தையை
ஒருவனுக்கு ஒருவன் போதிக்க வேணுமானுல் அவ்
வித்தையை அவன் பூரணமாகத் தெரிந்திருக்க வே
ணுமல்லவா? அப்படிக்கில்லாமல் பொய் மெய் இர
ண்டையும் பகுத்தறியத் தெரியாத ஆசானை விவே
கசூன்யராயிருக்கிற மாணுக்கர்கள் கூடிக்கொண்டு
குறும்பாடு ஒன்றின் பின் ஞென்று போவதுபோல்
பண்டுதொட்டு இன்றளவுந் தொண்டுபூண்டு ஓர்பல
னையுமடையாமல் அவன் சொல்லுகின்ற பொய்யி
லகப்பட்டு நாளளவாய் மனந்தழும்பேறிப் போயிரு
க்கிறபடியால் அவனை விவேகமில்லாதவனென்று
சொல்வதற்கு சந்தேகம் வேண்டுவதில்லை.

பரதேசி:—சொன்னவனும் பொய்சொன்னுன் கேட்டவர்க
ளுந்தெரியாமற் கேட்டார்களென்றீர்களே ஆனுல்இ
தைஅண்டமுதலான பலவுருவங்களையும் ஒருவன்
படைக்காமல் எப்படிவந்தது.

முனிவர்.—இவ்வுலகம் ஒருவனுல் படைக்கப் பட்டதல்ல
இது அனுதியாய் நானுனென்று தோற்றமுமொடுக்க
முமாய் நிற்கின்ற நான்குசுத்தைக்கவர்ந்து நிற்கின்ற
இப்பரவெளியால் திருசிய வஸ்துக்களு முண்டா
யிருகின்றது.

பரதேசி.—பரவெளியில் நிற்கின்ற சத்துக்குஅறிவுண்டா.

முனிவர்.—பஞ்சபூதியங்களுக்கு உயிர்மெய்மேயல்லது அறி
வில்லை.

பரதேசி.—அறிவில்லாப்பொருளானுல் இந்த உலகமுதலிய
யாவற்றையும் எப்படி படைத்தது.

முனிவர்.—திருசியவஸ்துக்கள் யாவும் யெப்படி அமைந்த
தென்றுல் ஓர் தடாகத்தில் பூரணமாக சலம்நிறை
ந்து நின்றுலெப்படியோ அப்படிக்கு மணல், தண்
ணீர், அக்கினி, வாயு, இந்நான்கும் இரண்டுபொரு
ளாய் ஒன்றைவிட்டு ஒன்று நீங்காததாய் உடலுமுயி
ருமாய் ஆண்பெண்ணுய் உள்ளே அக்கினியும் மே
லே ஜலமுமாய் பரம அணுவாய் பரவெளியெலா
ம்நிறைந்து நிற்கின்ற ஸ்திரிபாகம் புருஷபாகமா
கிய அணுக்கூட்டங்கள் திரண்டு ஒன்றேடொன்று
கலந்தபோது இவைகளிலிருக்கிற அக்கினியானவெ
ப்பத்தால் இவ்வணுக்கூட்டங்கள் எப்படி திரண்
டதானுல், ஓர் பித்தளைப்பாத்திரத்தை வாயில்லா
ம லுருண்டையாய்ச்செய்துகொண்டு அதில் ஊசிபு
குப்படி ஓர் துவாரமிட்டு அதில் சலத்தை ரொப்
பவேணுமானுல் ஓர் வருஷமானுலும் ரொம்பாது அ
ந்தப் பாத்திரத்தை வெதுப்பி சலத்தில் தூக்கிப்
போட்டால் ஒரு இமைப்போதில் அந்தபாத்திரம்
நிறைந்துபோம் அதுபோலிந்தப்பரவெளியில் நிறை
ந்திருக்கிற அணுக்கூட்டங்கள் சேடித்து ஒன்றே
டொன்று கலந்தபோது அதில் நின்று வெப்பந்தோ
ன்றி அவ்வெப்பத்தால் அணுக்கள்திரண்டு சலக்கோ
ளபிண்டமாக வுருப்பட்டு எழுந்த இந்தக் கடலி
னிடத்து உப்பென்னு மக்கினி யிருப்பதால் அந்த
உப்புத்திரண்டு பூமியாகிக்கொண்டு வருகின்றது.
சலத்திலிருந்து பிரிதிவும் அக்கினியிலிருந்து வாயு
வும் இந்நான்கும் ஆகாயத்தைக் கலந்து நின்றமை
யால் பஞ்சபூதமென்ற பேர்வந்தது.

பரதேசி.—பரவெளியிலிருந்து கடலும் கடலிலிருந்து பூமி
யும் உண்டாயிற்றென்றீர்களே இதை பூமியிலுங்
கடலிலும் இப்போது காணப்பட்ட தாபரம் ஊர்
வன மனுமுதலிய மிருகம் பறவைகளும் எப்படி
உண்டாயின.

முனிவர்.—சீவர்கள் எப்படி வந்தனவென்றுல் பின்னுமந்தக்க
டல் சலத்தில் சீவசத்துவாய் நிறைந்திருக்கிற உப்
பினுடைய வெப்பத்தால் அந்த சத்து அங்கங்கு நி
ன்றபடி திரண்டு பிரிதிவியினுல் தசை முதலிய
குலை குடல் ஈரல்களும் சலத்தினுல் வழும்புமுதலி
ய ரத்தமும் அக்கினியால் எலும்பு முதலியவைக
ளும் வாயுவால் நரம்புமுதலிய உரோமங்களும் இ
ந்நான்கும் வெளியை இழுத்துக்கொண்டு சலத்தி
ல்நின்றுசனித்து வெளிப்பட்டகாலத்தில் பூமியின்
கண்ணே யாதொரு சீவர்களுமில்லாமல் அநாதியாய்
நிற்கின்றகாலமானபடியால் பல சீவாத்துமாக்களும்
வெளிவந்து விர்த்தியடைந்து நின்றதுகள் இப்ப
டியிருக்க யாவனே ஒருவன் கருதிச்செய்த பொரு
ளாகப்பாவித்து கட்டுப்பாடான புராணங்களைச்செ
ய்து மனுக்களை மயங்கச்செய்து விட்டார்கள்.

பரதேசி:—திரண்டு ஓர்மொத்தமாக நிற்கின்றசலமானது அ
ங்கங்குதிரண்டு சீவர்கள் உற்பத்தியாயிற்றென்றீர்க
ளேஓர்குவையலாகநிற்கின்றசலம் அங்கங்குதிரளக்கா
ரணமென்ன அதின்விபரமெனக்கு நன்றுய் விளங்க
ச்சொல்லவேண்டும்.

முனிவர்:—ஓர் பாத்திரத்தில் சலத்தைநிறப்பி அடுப்பேற்றி
யெரித்தால் சலத்தில் சூடுதாக்கினவுடனேசலம் ஒன்
றே யானுலும் குமிழிகள்பலவாக வெழுந்திருக்கும்
இன்னும் ஏதேனுமோர் மரத்தின் வித்தை யெடுத்து
பயிர் செய்தால் அது மரமானபின் அந்தமரத்தில் எ
த்தனையோ லக்ஷம் வித்துகளுண்டாகின்றதுகள். அ
ப்படி யுண்டாகிய ஒவ்வொருவித்திலும் பஞ்சபூதங்க
ளிருக்கின்ற படியால் எவ்வித உருவங்களானுலும்
அதை அணுவணுவாகப்பிரித்தால் ஒவ்வோரணுக்க
ளும் பஞ்சபூதங்களேயன்றி வேறில்லை. ஆதலால் ஒ
ன்றில னந்தமுண்டாவதற்குச்சந்தேகம் வேண்டுவதி
ல்லை. அதெப்படியென்றுல் அனேகமணுக்கள்கூடி
ஓருருவமாயின அந்தஅணுக்கள் ஒவ்வொன்றும் பஞ்
சபூதமாதலால் ஒன்றுய்நின்று பலவாறுய்சனிப்பதற்
குச்சந்[illegible]ல்லை அதுபோல இப்பூமியின்[illegible]
[illegible]
ள எரி[illegible]டை[illegible] இவைமுதலிய இடங்களி
ல்நிற்கின்ற சலத்தின் சீவனுகிய அக்கினியானது
பலவித பேதங்களாக அங்கங்குசுழித்து அங்கங்கு
சலம் திரண்டு முட்டையினுடைய வெள்ளைக்கரு
வைப்போல் அங்கு சலத்தில் நிற்கின்ற கோரைமுத
லிய செடிகளிலும் புல் பாசிகளிலும் கலந்து மித
ந்து வெடித்து பலவிதமான சீவர்களாய் விர்த்தி
யடைகின்றதுகள். அதுபோல பெருங்கடலாகிய ச
முத்திரத்தில் உப்பாகிய சீவசத்திருப்பதால் அக்க
டலில் நின்று சிறிய சீவர்கள்முதல் பெருஞ்சீவர்க
ள்வரையில்மேற்சொன்னபடியே ஆதிசர்வ சீவர்களு
ம் கனாவந்து விர்த்தியடைந்ததுகளேயன்றி யாரா
கிலு மொருவரால் செய்யப்பட்ட பொருள்களன்று.

பரதேசி.—இந்தக் கடல்முதலாயுள்ள பூமிகள்வரையில் காண
ப்பட்ட பொருள்களா யுள்ளவைகளெல்லாம் அழியு
மோஅழியாதோ சொல்லவேண்டும்.

முனிவர்.—இந்தப் பரவெளியிலிருந்து இப்படி நாட்களெத்
தனையோ இப்படி பூமியெத்தனையோ இப்படி சூ
ரிய நட்சத்திரங்களெத்தனையோ இப்படி மரம் புல்
பூண்டு கிருமி மிருகம் பறவைமுதலிய சீவர்கள் எ
த்தனையோ இப்படிக்கு அனந்த பேதாபேதங்களா
கஉண்டாய் நின்று அழிந்துகொண்டே நிற்கின்றது
கள். எப்பொருள் உண்டாகுமோ அப்பொருள் அழி
யுமென்று நன்றுய்த்தோன்றுகின்றது.

பரதேசி.—சரீரத்தில் சீவாத்துமாவென்றும் பரமாத்துமா
வென்றும் இரண்டு பொருளிருப்பதாகச் சொல்லு
கிறீர்களே அப்படி உண்டா யில்லையா.

முனிவர்.—ஆம் இரண்டு பொருளாகத் தோன்றுகின்றது
உண்மைதான்.

பரதேசி.—கடவுளில்லையென்னும் பட்சத்தில் ஓர் சரீரத்தி
ல் இரண்டு பொருளிருக்கக் காரணமென்ன மற்
றெரு பொருள் யாது.

முனிவர்.—ஒவ்வொரு உருவத்திற்கும் உடல் ஒருபாகமாயும் அதில் நின்றுடுகின்ற ஜீவனொரு பாகமாயும் நிற்கின்ற இரண்டு பொருளும் விரகும் நெருப்பும் போல ஒன்றே தவிர வேறில்லை விரகில்லாவிடில் நெருப்பில்லை நெருப்பில்லாவிடில் விரகுமில்லை ஆகையால் இரண்டுமொன்றேதவிர வேறல்ல.

பரதேசி.—இரண்டுபொருளும் ஒன்றேயானால் உடலிருக்க உயிர்போகக் காரணமென்ன?

முனிவர்.—விரகைப்பற்றி யெரியுஞ் சுடர் போய்விட்டால் பிரகாசம்போம் நெருப்புநின்று மற்றதுகளையு முடைத்து உண்டுபோட்டுப் போவதுபோல மனுச்சரீரத்தில் சிவனாக நின்றுடுஞ் சுடர்போனபின் அக்கினியிலிருந்து உடலை உடைத்து வெளிக்கி யூட்டித் தானும் வெளியில் கலந்து போம். அல்லவென்று அந்தஉடலைப் பத்திரப்படுத்தினால் அக்கினியுமுள்ளே நின்று சமயம்வந்தபோது அதை யுடைத்து வெளிக்கு ஊட்டிவிட்டு தானும் வெளியில் கலந்து போய் இப்படிக்கு சகலமுந் தானாய் நான் நானென்று எங்கும் நிறைந்து நிற்கின்ற பஞ்சபூதப்பொருளி லொன்றாகிய பிரிதிவை பிர்ம்மாவென்றும் அப்புவை விஷ்ணுவென்றும் அக்கினியை ருத்திரனென்றும் வாயுவை மகேஸ்வரனென்றும் இந்நான்கு பூதமுமொடுங்கி நிற்கின்ற ஆகாயத்தைச்சதாசிவமென்றும் பேரிட்டு இவைகளையே தெய்வமென்று வணங்கும்படி செய்திருக்கிறார்களே யன்றி வேறில்லை ஆனால் ஒவ்வொன்றிலும் மற்ற நான்குங் கலந்தே நிற்கின்றதுகள்.

இங்ஙனம்

கோம்பை வேதாந்த ராமலிங்கப்பரதேசி.

முத்துசாமிமுனிவர்.

வர்த்தமானம்.

அமேரிக்காவில் ஓர்பத்தினியும் புருஷனும் அதிபக்திவான்களாகவிருந்து பானுவாரங்களில் கடவுளைநோக்கி ஜபதபங்கள் செய்வதொழிய வேறொன்றும் செய்யாது வருவதுவழக்கமாம். இவ்வாறு செய்துவந்த இவர்கள் ஓர் பானுவாரதினம் அதிக்ட்சணியத்துடன் ஜபம்புரிந்துக் கொண்டிருக்கையில் அப்பொழுதவ்விடம் எரிந்துக்கொண்டிருந்த விளக்கானது படீலென்றுவெடித்து அவர்கள் தலைமீது விழவும் அவர்கள் பானுவாரத்தில் வேறு ஒன்றும் செய்யக்கூடாதென் கிற விரதங்கொண் டிருந்தவர்களாதலால் ஜபம் செய்தவாக்காகவே யிருந்து தீயினால் எரிக்கப்பட்டு இறந்து விட்டதாகத் தெரியவருகிறது. இதனைப் பக்தர்கள் பக்திவைராக்கிய மென்பர்போலும்!

உலகத்தில் ஒப்பற்ற ஐசுவரியத்தைப்படைத்த ஒருஸ்திரீயைக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்திரீயானவள் சில்லி என்னுமிடத்தி லிருக்கும் டானா இஸிடோ ரோ கவுஸிஞே என்பவள். இவளுக்கு நிலங்களினாலும், ஆடுமாடுகளாலும் வீடுகளாலும், சுரங்கங்களாலும்வரும்படியான வருமானம் இவ்வளவென்று இவளுக்கேதெரியாது. இதுவல்லாமல் தென் அமெரிக்காவில் ஒன்றேயாகிய நிலக்கரி சுரங்கமும் இவளுடையது, இதனால்இவளுக்குமாதம்ஒன்றுக்கு 160,000 ரூபாய் வருமானமாம். மேலும் இவளுக்கு சுரங்கத்திலிருந்து நிலக்கரியைத் தோண்ட டன்ஒன்றுக்கு இரண்டேமுக்கால் ரூபா செல்லுகிறது ஆனால் டன் ஒன்றுக்கு 15 ரூபாயாக விற்கிறாள். இவள் விதவைஸ்திரீ வயது சுமார் நாற்பத்தைந்து இருக்கும். மறுபடியும் விவாகம் செய்துக்கொள்ளமாட்டேனென்கிறாளாம். இவ்வளவு திரண்ட ஐசுவரிம் இவளுக்குப்பிறகு யாருக்குச் சேருமோ தெரியவில்லை.

பொன்விளைவு.—உலகத்திலே தோண்டி யெடுக்கப்படும் பொன்னில் ¼-ல் ஒருபாகம் ருஷியாவில் விளைகிறது. 1814-ம் ஆண்டுதொடங்கி, 1880-ம் ஆண்டுவரையிலும்ருஷியாவில் பொன்விளைந்தது 3 கோடி 27 லட்சத்து 18 ஆயிரம் அவுன்சாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

பர்மாவின் இரத்தினங்கள்—உலகத்திலேசிரேஷ்டப்பட்ட ரத்தினங்களெல்லாம் அனேக காலமாய் பர்மாவிலே விளைகின்றன. சொற்பவிலையுடையனவாய்க் கண்டெடுக்கப்படும் இரத்தினங்களை மாத்திரம் குடிகள் சுதந்தரித்துக்கொள்ளலாம், உயர்ந்த மதிப்புள்ள ரத்தினங்கள் அரசனுக்கேயுரியன. அதனால், விலைமதிப்புப் பெரிதாயுள்ள ரத்தினங்களைக் குடிகள் கண்டெடுத்தால் சிறியன பலரத்தினங்களாங்கித்தாம் சுதந்தரிக்க நேர்ந்தது.பர்மா அரசனான தீபாவினிடத்தில் உயர்ந்தவிலைமதிப்புள்ள வயிரங்களும், கெம்புகளும், மரகதங்களுமிருக்கின்றன. இரத்னங்களை விட்டுப்பிரிய அரசனுக்குஞ் சம்மதியில்லை. அதுபற்றியே. தான் சிறைப்பட்டபோது, தன் உயிருக்கும் தான் அணிந்தமோதிரத்திற்கும் அபாயம் உண்டாகாமற் காப்பாற்றவேண்டுமென்று மன்றாடினான். தீபாவாவது தன் குடிகள் இரத்தினங்களைச் சுதந்தரித்து அனுபவிக்க இடங்கொடுத்திருந்தான். அந்நாட்டை நியாயமாய்க் கவர்ந்துகொண்ட அங்கிலேயர் குடிகளுக்கு அந்தச்சுதந்திரத்தைக் கொடுப்பார்களோ?

அமேரிக்காவில் ஓர் நாவி தன் ஆதிவாரதினத்தில் சவளம் செய்ததற்காக குற்றஞ்சாட்டப்பட்டு விசாரணைமுடிவில் ஜூரிகளால் நிரபராதியாக விடுதலிக்கப்பட்டானாம்.

அமேரிக்காவில் ஆர்சன்என்னுமிடத்தில் ஸ்திரிகளும் கோர்ட்டுகளிற் சென்று வியாஜ்ஜியங்களை வக்கீல்களாக விருந்து நடத்தும்படி சட்டமொன்று இயற்றினார்களாம் இந்துப்பெண்கள் அடுப்பங்கரையைவிட்டு வப்புறப்படுவதெப்போது? தற்காலம் அமேரிக்காவில் சுயவர சுதுரந்தர சபையில் குருவாகவுள்ளவர் அந்தகனாம்.

சென்னைஇலௌகிக சங்கத்தவர்களிற் சிலரால் இயற்றப்பட்ட சுயக்கியான சிறு புத்தகங்கள்.

	A. P
திருவிழா	1—0
விவாகம்	1—0
மெய்யறிவு:	
புலான்மறுத்தல் கொலைமறுத்தல் ...	0—3
ஆத்துமா அழிவில்லாததா?	0—6
வேதாந்தசிரவணம்	0—2
தசரதருக்குப் புத்திரருண்டா? ...	0—2
ஏசுவென்பவர் யாவர்	0—2

மேலைய சிறு புத்தகங்களை வேண்டுவோர்தபாற்கூலியுடன் பணமனுப்பி சென்னை இலிங்கசெட்டி தெருவில் 291-வது கதவிலக்கமுள்ள வீட்டில் வசிக்கும் ப. அப்பாதுரை செட்டியாரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தத்துவவிவேசினி சந்தாவிபரம்.

உள்ளூரார்க்கு

	Rs.	As.
ஒருமீக்கு	0	4
மூன்றுமீக்கு	0	10
ஆறுமீக்கு	1	2
வருஷத்துக்கு	2	2

வெளியூரார்க்கு

	Rs.	As.
ஒரு மீ	0	5
மூன்றுமீக்கு	0	13
ஆறுமீக்கு	1	8
வருஷத்துக்கு	2	14

இலங்கை, சிங்கப்பூர்.

	Rs.	As.
வருஷத்துக்கு	7	4
ஆறுமீக்கு	3	10
மூன்றுமீக்கு	1	13

விளம்பரங்கள், நோட்டீசுகள், ஜனன மரண அறிக்கைகளச்சிட, முதல்முறையில் வரி-க்கு அணா — 4
அடுத்தமுறையில் ,, 2

இப்பத்திரிகைக்குக் கையொப்பஞ் செய்பவர்கள், தங்களிருப்பிட முதலியவற்றை மிகவும் விபரமாயெழுதிச் சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி (307) வது நம்பர் வீட்டில் இருக்கும் தத்துவவிவேசினி மானேஜர்

பு. முனிசுவாமிநாயகருக்கு அனுப்பவும்.

ALL COMMUNICATIONS MUST BE ADDRESSED TO

P. Munisawmy Naiker, MANAGER

307 LINGHI CHETTY STREET

Madras.

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

[Vol V—No. 6.] MADRAS:—SUNDAY FEBRUARY 7, 286. [Monthly, 5 annas

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.—குறள்.

உலகத்தோடொத்துவாழ்.

இவ்வாக்கியம் இத்தென் இந்தியாவிலே அவ்வையென்று வழக்கப்பட்ட ஓர் பண்டிதையினலே சொல்லப்பட்ட தேயாம். இஃது சாதாரணக் கியானமுடைய மாந்தர்க்கு நிர்விவாதமாய் அங்கீகரிக்கத்தக்க நீதிமொழிபோற் காணப்படினும் தார்க்கிக கியானசித்தமுடைய யோசனு புருஷர்களுக்கு அவ்வளவாய் விசிஷ்ட முடையதாய்த் தோன்ருது. ஏனெனில் பிறர்க்குந் தமக்கும் அதாவது செய்வார்க்கும் செய்யப்பட்டார்க்கும் நன்மை பயப்பனயாவோ அவையே நீதியாதலாலும், ஒத்து வாழ்பவர் உலகத்தோடு விவாதப்படுதற்குச் சந்தற்பமில்லை யாதலாலும், விவாத சந்தற்ப மில்லாதபோது விவகாரவிசிஷ்டம் தோன்ரு தாதலாலும், விவகாரவிசிஷ்டம் தோருதபோது உலகாபிவிர்த்திக்கு ஏதுவில்லை யாதலாலும், உலகாபிவிர்த்திக்கு ஏதுவில்லாதபோது உலகம் அபிவிர்த்தியடையாதாதலாலும், உலகத்தை அபிவிர்த்தி யடையச்செய்யாதசெய்கை லோகோபகார செய்கை யல்ல வாதலாலும் அது நீதியு மல்லவென்க. உலகத்தோடே ஒத்து வாழ்பவன் தன்னுடன் வாழும் உலகத்தவர் நட்பைத் தான்மட்டும் பெறுகின்ருனே யல்லாமல் இவன் நட்பை இவனுடன்வாழும் உலகத்தவரேனும் இவனுக்குப் பிற்பட்டுவாழும் உலகத்தவரேனும் பெறுகின்ருர்களில்லை. ஆதலால் உலகத்தோடொத்து வாழ்தல் ஒருதலைப்பயன் பேறேயல்லாமல் பொதுப்பயன் பேறன்ரும். பொதுவாய்ச் சலர்க்கும் பயன்பயக்கும் செய்கையே நீதியாதலால் மேற்சொன்னவாறு ஒருதலைப்பயன் பயக்கும் ஒத்துவாழ்தலென்னும் செய்கையானது நீதியன்ரும்.

உலகம் புரிவது சரியொன்றும் தவறென்றும் குற்றமுடையதென்றும் குணமுடையதென்றும் எண்ணுற்ற செய்கையென்றும் எண்ணற்ற செய்கையென்றும் தாரதம்மியம் பாராமல் ஒத்து வாழவேண்டுமென்பது அவ்வாக்கியகர்த்தா அபிப்பிராயமாயின் பிறிதோரிடத்திலும் எண்ணித் துணியென்று சுயபுத்தி சுவஞான விசிஷ்டத்துவத்தை வலிந்துரைக்காமல் உலகந்துணிந்தபடி துணியென்று மலிந்துரைப்பள். மனிதர் இயற்கையாகவே ஒருவருக்கொருவர் நிறத்தாலும் சாயையாலும் தொனியாலும் ஸ்வரத்தாலும் மனத்தாலும் பிறவாற்ருலும் வேறுபட்டே யிருப்ப, அவர்களுக்குள் சர்வ ஒற்றுமையெங்ஙன முண்டாயிருக்கும்? ஆனல் மனிதர் ஒற்றுமை யற்றிருக்கவேண்டுமென்பது எமது அபிப்பிராயமும் கோரிக்கையுமன்று. மனிதர், முன் விஷய ஆராச்சியில் வேறுபட்டுப், பின்விசாரணையால் சோதித்துத் தெளிந்த உண்மையிலேயே ஒத்து நிற்றல் வேண்டுமென்பதே எமது கோரிக்கையுந் துணிபுமாம். உலகம் இத்தன்மைத்தென்றும் அதன் ஒழுக்கம் இத்தன்மைத்தென்றும் நாம் இத்தகையாரென்றும் நமது ஒழுக்கம் இத்தன்மைத்தென்றும், நம்மிலும் உலகத்திலும் நம்முடையதிலும் உலகமுடையதிலும் விசிஷ்டம் இதுவென்றும் அதன்படி யொழுகுதற்கு நமக்கு இன்னின்ன சாதனங்கள் வேண்டற்பாலதென்றும் முன்னர் எண்ணித் துணிவதே ஒழுக்கு; துணிந்தபின் எண்ணுவ மென்பதிழுக்கு. மனிதசுவாபத்தையும் மனித னிலையையும் இன்னதெனப் பகுத்துணரும்பரிசினைப்பெருத சிலமதவாதிகளும் மதாபிமானிகளும் தம்மினும் வேறுபட்டகியானத்தையுடையாரிடத்தும் மனக்சாக்ஷிக்கு மாறுபட்டொழுசாத மாந்தரிடத்தும் பகை பாராட்டி அன்னோர்க்குத் தம்மாலியன்ற கேடென்னென்னவோ அவ[illegible]லாய்ச்செய்தும் நெடுங்காலம் அபவாதத்தைகம் பழியையும் சுமந்து போகின்ருர்கள். அந்தோ! இத்தகைய அடாத செய்கைகளுக்கு மேற்கோள் எடுத்துரைக்க வேண்டுமென்ருல் வான்மீனுங் கடன்மணலும் போல வரையிகந்தனவாகும். பெயின் வால்டேர் புருநோ முதலிய பிரதேசத்தவரும் பௌத்தர் க்ஷமணர் முதலிய சுதேசமதத்தினரும் ஓர்ந்துணரா உலகத்தவரிடம் அகப்பட்டுக்கொண்டு பட்டபாடும் துயருந்துன்பமும் யுகாயுகங்கள்மட்டும் திசாமுகங்கள்எட்டும் பிறிதொலிசெய்கின்றனவே. மேற்சொன்ன சுவஞானிகள் கொள்கைகளினும் சித்தாந்தங்களினும் தற்காலம் பிழையடைந்தது யாதேனும் உண்டா? முற்காலத்தவரால் இகழப்பட்ட அவர்கள் சித்தாந்தமே இக்காலத்தவரால் சிரமேற்கொள்ளப்பட்டு விசிட்ட மடைந்திருக்கின்றனவே. அக்காலத்தில் அவர்கள் உயிர்மேல் ஆசைவைத்து உடல்வருத்தத்தை யொழிக்கும்படி உலகத்தோடு ஒத்து வாழ்ந்திருந்தால் அவர்களால் தற்காலத்தவராகிய நமக்கு என்னபயன் கிட்டியிருக்கும், இப்படி நமக்கெல்லாம் உபகாரம் செய்த தத்துவக்கியானிகளுக்கு அபகாரம்செய்யும்படி நம்முன்னோர்களைத் தூண்டியதுயாது? அவர்களை யோசனையிற்சொல்ல வொட்டாமல் ஓரேநிலையாய்க் கடிவாளமிட்டிழுத்ததுயாது; அவர்களுக்குள்ள சீவகாருண்ணியம் இதக்கம் மானுஷிகம் பொறைமுதலிய நற்குண நற்செய்கைகளை யெல்லாம் நலியச்செய்ததுயாது? மதாபிமானம். மதக்காய்ச்சல் முதலிய அசுத்த அசப்பிய துன்மார்க்க செய்கைகளுக்கெல்லாங் காரணமாகிய மதாபிமானத்தை யொழித்து விவகாரசுவாதீனம் சமயசுவாதீனம் முதலிய சுவாதீனங்களைப் பிறர்க்கும் அளித்துத்தாமும் பெற்றுவாழ்வதே நீதியாம்.

சுவர்க்க நரகத்தி னுற்பத்தி.

கர்மமெனினும் வினையெனினு மொக்கும். கர்மம் அல்லது வினையானது நல்வினை யென்றும் தீவினை யென்றும் இருவகைப்படும். நல்வினையாவது ஜீவகோடிகளுக்கு இடுக்கண் ஒன்றுஞ் செய்யாது நன்மையையே புரிதலாம். தீவினையாவது ஜீவகோடிகளுக்கு நன்மை புரிவதையொழித்து தீமையை யியற்றுதலாம். மனிதருள் உத்தமர்கள் நல்வினை புரிய முயல்வர், மற்றவர்கள் தீமையை யியற்றிவருவர். தீமையை யொழித்து நன்மையைப் புரியும் உத்தமர்கள் ஜீவகாருண்ணியரெனப் பிறரால் புகழப்படுகின்றனர், நன்மையை யொழித்து தீமையை யியற்றும் அதமர்கள் பிறரால் இகழப்படுவது மன்றித் தாம் தாம் செய்த குற்றத்திற் கொத்தவாறு தண்டிக்கப்பட்டும் வருகின்றனர். ஆனால் சிற்சில உத்தமர்கள் தாம் தா மியற்றும் நற்கிருத்தியங் களுக்காகாப் பிறரால் புகழப்படா திருப்பதும் சிற்சிலர் தாம் தாமியற்றும்துர்க்கிருத்தியங்களுக்காகப் பிறரால் தூஷிக்கப்படாமலும் தண்டிக்கப்படாமலும் இருப்பதை மனிதர் கண்டுள்ளா ராதலால் அன்னோ ரிரு திறத்தாரும் இறந்தபிறகாவது முறையே புகழ்ச்சியாலும் இகழ்ச்சியாலும் பெருமையையும் சிறுமையையும் அடைய வேண்டு மென்று மனிதர் நினைக்கின்றார்கள்.

இங்ஙினைவு காரணமாகத்தானே மனிதர் நன்மை புரியும் உத்தமர்கள் புகழுடம்பைப் பெற்று புகழ்ச்சியுடன் வாழும்படியாக ஆகாயத்தின் கண் சுவர்க்கத்தையும், தீமைபுரியும் அதமர்கள் இழியதுன்பத்தை யநுபவிக்கும்படியாக பாதாளத்தின் கண் நரகத்தையும் ம[illegible] சிருஷ்டி செய்து விட்டனர். இவ்வாறு மனோசிருஷ்டியால் உண்டாக்கிய சுவர்க்கநரகங்களைப் பற்றிவெவ்வேறு ஜாதியாரும் வெவ்வேறு சமயத்தாரும் வெவ்வேறான அபிப் பிராயங்களை யு[illegible]யவர்களாக விருக்கின்றனர்.

கிறீஸ்த்தவர்கள்கருத்தியாதெனில்மனிதர்களில் எவரேவர் எங்தெந்த நற் கிருத்தியங்களைச் செய்யினும் எவரேவர் எங்தெந்த துர்க்கிருத்தியங்களைச் செய்யினும் அவர்கள் மூல பாவத்தினுல் அபராதிகளாக விருக்கின்றமையால், யாவருடைய பாவத்தின் பொருட்டும் பலியாகின்ற ஏசுவினில் நம்பிக்கை வைப்பவர்கள் நித்திய சுவர்க்கத்திலும் நம்பிக்கைவையாத மற்றவர்கள் நித்திய நரகத்திலும் அனுப்பப் படுவார்கள் என்பதே.

இஃதென்ன விபரீதம். ! பலர் செய்த குற்றத்திற்காக குற்றமற்ற ஒருவனைக் கொன்று சரிபங்கிடலாமா ? அவ்வாறு செய்வது மானுஷீகமாகுமா ? மேலும் அவ்வாறு செய்வது நீதிக்கும் ஒத்திருக்க வில்லையே ! ஏனெனில் எந்த நியாயாதிபதியும், குற்றவாளி யொருவன் தான்செய்தகுற்றத்தை யொத்துக்கொள்வானுனல் விடுவானு? ஏசுவானவர் தன் குற்றத்திற்காகமுன்னமே தன்னைபலிகொடுத்திருக்கின்றாராதலால், தன்னை யதன்பொருட்டு தண்டிக்காமல் விடுதலை செய்யவேண்டு மென்றுமன்றாடினும் தண்டியாது விடுதலைசெய்யானுதலாலென்க.

சுவர்க்க நரகத்தைப்பற்றி கிறீஸ்தவர்களது கருத்திதுவாக இந்துக்களின் கருத்தைப்பற்றிச் சற்று விசாரிப்போம்.

இந்துக்கள் ஆன்மாவானது பிரத்தியேக பதார்த்தமெனவும், அது செய்யுங்கிருத்தி யங்களுக்கேற்ப இடையிடையே ஜென்மங்களையும் நரகவேதனையையும் பெற்று வருகின்ற தென்றும், கடையில் பாசபந்தங்களெல்லாம் கழலப்பெற்று பரமாத்மாவி னிடத்திலே ஐக்கியமாய் விடுமென்றும் சொல்லுகின்றனர்,

இக்கொள்கையை யுடைய இந்துக்களே தத்தம் மூதாதைகளில் இருபத்தேழுதலைமுறை யோர்க்கும் ஸ்ரார்த்த மிடுகின்றனர், இவர்கள் இடும் ஸ்ரார்த்தமானது உண்மையாகவே மூதாதைகளால் ஏற்றுக் கொள்ளப்படுவதாயின் அம்மூதாதைகள் வெவ்வேறு ஜெனனங்களெடுத்திரா திருத்தல் வேண்டும். வெவ்வேறு ஜெனனங்களை அவர்கள் அடைந்திருப்பாராயின் அவர்களுக்கென்று ஸ்ரார்த்த மிடுவதேன். ? பிராமணர் பிழைக்கவா ? கர்மத்தில் முழு நம்பிக்கை வைத்துள்ள கர்நல் ஆல்காட் துரை ரிஷி இதற்கென்ன சொல்லுவரோ யா மறிகிலேம்,

D.

நிதிகள்.

நம்மிந்துதேசமானது கல்வி, ஐஸ்வரியம், மேன்மைமுதலிய பல வளப்பங்களையும் பொருந்தியிருப்பதால் ஒற்றுமை, அபிமானம், இராஜபக்தி முதலியவைகளையும் உடைத்தாயிருந்ததெனவும் நன்கு அறிகின்றோம். மேலும் காளிதாசன், பவபூபதி, போஜராஜன் முதலிய சமஸ்கிருத பண்டிதர்களும் தலை, இடை, கடைச்சங்கங்களென்னு முச்சங்கங்களும் பரிமேலழகர், நச்சினுர்க்கினியர், கம்பன், காளமேகம் முதலிய தமிழ் விற்பன்னர்களும் வேமுனு முதலிய தெலுங்கு விற்பன்னர்களும் ஏனையோர்களும் சாபானுக்கிரகராய் வீற்றிருந்து பெருங் காவியங்களை யியற்றி (இன்றுமுள்ளார்போல்) யாவரும் மதிக்கும்படி வாழ்ந்திருந்தனரென நாம்கேள்விப்படுகின்றோம்.அத்தகையவித்வசிரோன்மணிகள் பொலிந்திருந்த இந்நாடானது தற்காலத்தில் அடைந்திருக்கும்கேட்டை நோக்குமிடத்து எவருக்கும் பரிதாபத்தையே விளைவிக்கும். அந்தோ நம்மவர் அத்தகைய ஸ்திதிக்கு வந்தமையைப்பற்றி சிந்தித்து, பழமைபோலும் தம்மை நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரத்தக்க முயற்சிகளைச் செய்ய அசாத்தியமெனப் படினும் உள்ளதையாயினும் காத்துக் கொள்ளும்படி முயல்கின்றனரா ?இல்லை. இல்லை. ஆனால் அநேகர் தற்கால பயனை நாடி சுயார்பி மானிகளாய்க்கற்றகல்வியினைப்பண்டுகளைசிருஷ்டிக்கும்திறத்தில் காட்டுகின்றனர்.(அதாவது) பண்டுகள் என்றுசொல்லப்படுவன ஒவ்வொரு வீதியின் சந்தில் நீண்ட மரப்பலகைகளிலும் அட்டைகளிலும் நானுவிதவன்னத்தில்சித்திரந்தீட்டி எழுதப்பட்டிருக்கும் நிதிகளே. இந்நிதிகள் பல வகைப்படும். ஜனன நிதி, கரணரந்திரசடங்கு நிதி, உபநயன நிதி, ருது நிதி, கலியாண நிதி, மனிதர் சாவுபண்டு, மாட்டுசாவு பண்டு முதலியவைகளாம். ஆனால் சோபனப்பண்டு சிருஷ்டிகப்பிரம்மா வின்னும் தோன்றுமை பரிதாபமே. இவைகளன்றி, வீதிகள்தோறும் 2, 3, 4, 6, குட்டி நிதிகள் அதாவது வார நிதிகளும் அனந்தமே. ஆனால் இந்நிதிகள் ஏற்பட்டதால் அச்சுக்காரர், பயிண்டர், முச்சிகள், வைத்தியர் முதலியோரும் பலனடைகின்றனர். அதுநிற்க, ஒவ்வோர் நிதியாரும் தாம் பிரசுரப்படுத்தும் விளம்பரங்களில் தேசாபிமானமுன்னிட்டு யாவர்க்கும் தனசகாயம் செய்யும்படித் தத்தம் நிதிகளை ஸ்தாபனம் செய்யத் துணிந்ததாகக் கூறுகின்றன ராயினும் எம்போலியருக்குத் தத்தம் சுயாபிமான மேற்கொண்டு தனசகாயம் செய்துகொள்ளவே சிலர் இந் நிதிகளை ஸ்தாபனம் செய்ததாகவே புலப்படுகின்றது. அஃதெப்படியெனில் தாம் தாம் தந்தந்தொழில்களுக்கு குறிப்பிட்ட காலங்கள்போக மிச்சமாகக்கிடைக்கும் காலங்களில் முதலும் எஜமானனுமில்லாது லாபமடையும் வண்ணமும் அந்தக்கோவில், இந்தச்சாமி, அந்தமாரியாத்தாள், இந்த வீரபத்திரர் முதலிய ஒவ்வோர் தேவதைகள்பெயரை முன்னிட்டு அத்தேவதைகள் கைங்கிரியம் காரணமாக ஓர் நிதி ஸ்தாபனம் செய்வித்ததாகக் கூறி பந்து மித்திரர்களுக்கே அதிகாரநாமஞ்சூட்டி நிர்வாக சபையாரெனக் கூட்டி (உத்தியோகம் நெருங்கிப்பார்த்தால் எவ்விதமாகுமோ) கொல்லனைக்காஷீயர் எனவும் பில்லைபோட்ட உத்தியோகஸ்தனுகிலும் அவ்வுத்தியோகத்தைச் செப்பாது அவுஸ் எனவும், கேவலம் சில்லரைவேலை செய்பவராயிருப்பினும் மெர்ச்செண்டெனவும் ஏதோ கவுரவமான இன்னன தொழிற்களைக்காட்டி விடுகின்றனர். மேலும் சந்தாதாரர்களைச் சேர்க்கும்வண்ணம் சில கேவலமானவர்களையும் வண்ணுனிடம்

செல்லாது புருசடிபடும் சொக்காய்களைத் தரிப்பிக்கும்படி
ச்செய்து சேர்ப்பதும் அன்னோர்கள் டைரக்டரா யிருக்க
பலர் சம்மதியானொனத்தோன்றில் அன்னோரை ரூபில் கா
ட்டாது மஹாசபை முதலிய காலங்களில் இன்ன பெயரு
டையவர் மிகக் கவுரவமுடையவர் ஆனலிவ்வூரில் தற்கால
மில்லை இவ்விடம் வரவில்லை யெனப் போக்குகாட்டி பல
ருடைய சம்மதத்தின்பேரில் டைரக்டராக்கிக் கொள்வது
முண்டு. மேலும் சில நிதிகளில் காரியதரிசிகள் தமக்கன்
னியமானவர்களையும் உள்ளபடி கவுரவம் வாய்ந்தவர்களையும்
மெம்பர்களாகச்சேர்க்கின் தக்க பங்குகளைக்கொடுக்கும்படி
நேரிடுமெனவும் தமது மாறுபாடுகள் வெளிவருமெனவு மஞ்
சித் தம் சொற்களைத் தட்டிப்போாதவர்களை மெம்பர்களாக
ச்சேர்த்து அன்னோர்களுக்கு ஏதோ கொஞ்சம் வாய்பூசி
மற்றவைகளைத் தாமே யனுபவிப்பதாகவும் கேள்விப்படுகின்
றனம். இன்னுமெழுதப்புகின் விரியுமாதலான் இங்ஙனம் நி
ற்க, இந்நிதியில் சந்தாதார் பணம் இழக்கும் காரணத்தைச்
சற்று யோசிப்போமாக, நிதியார் (நிர்வாகசபையார்) தம்நி
தியில் சேர்ந்த மொத்த சந்தாதாரர்களிடம் இத்தனை கால்
ஸ் (Calls) மாதாந்திரம் வசூல்செய்வதாகத் தமது ரூல்பு
த்தகங்களில் பலர் சற்று சந்தோஷிக்கும் வண்ணம் போக்
கு காட்டி யிருக்கின்றனர்.

ஓர் தேசாபிமானி
(இன்னும்வரும்.)

பேயுண்டெனு மாத்திகரும், இல்லையெனும் நாத்திகரும்.

என்ற மகுடத்தாற் சலியாது நீட்டிவிட்ட ஸ்ரீசுதேசாபி
மானி யென்னும் பத்திரிகையொன்று "மறுக்கப்படுவது உ
ள்ள பொருண் மேலேறுவதன்றியில் பொருண்மேலேறு
மோ? இல்லாதபொருளைப் பலரும் ஏகோபித்து உண்டெ
ன்ற ஏகீகரிக்க வேண்டியதேன்? இல் பொருளை உண்டெ
ன்பவர் பித்தரே. உள்ளபொருளை இல்பொருளாகக் கூறு
வோருமத்த கையினரோ" என்று நவில்கின்றது.

அந்தோ! "உள்ளதுபோகாது இல்லதுவாராது" என்ற
லோகவசனத்தால் உள்ளதை உள்ளதென்றும் இல்லதை இ
ல்லதென்றும், சந்தேகமறத் தெளிந்ததுபோல் நடித்து, தி
ரும்ப "தீபத்தை ஏற்றிப்போய்க் கூபத்தில் விழுந்தவாறு"
"பேய் உருவங்கொண்டுலாவுவதையும், பலவகைப்பட்ட
செய்கைகள் செய்வதையும் கண்டு அதனை யுண்மைப்பொரு
ளாகவே இத்தேசத்தார் அங்கீகரிக்கின்றார்கள்" எனவழக்
திய தெற்றுக்கோ? உள்ளதை யில்லையென்பார் வெறியர். இ
ல்லதையுள்ள தென்பாருன்மத்தர். ஆனல் உள்ளதை யுள்
ளதென்றும், இல்லதை இல்லதென்றும், தனக்கனுபோக
மாகாதனவற்றை காட்சிப் பிரமாணமாகின்றபரியந்தம் சந்
தேகமென்று மறைப்பவர் விவேகிகளல்லது உத்தமர். அங்ங
னமிருக்க ஐயோ, பாவம்! நாத்திகர் பேயில்லையென்று,
யாண்டேனு முறைத்ததுண்டா? அல்லது விகித மூலமாயே
னும் நீட்டிக் காட்டியதுண்டா? ஆனல் நாமறிந்தமட்டில்,
அவர்கள் பேயுண்டென்பது உண்மையா? அல்லதின்மை
யா? எனக் கற்றுணர்ந்த பல்லோர்களையும் கடாவிவருகின்
றனரோ யன்றிவாஸ்தவமாகவே பேயில்லை யென்மறுக்கின்
றாரா? அவர்கள் அங்ஙனே மறுத்திருந்தபோதிலும் அவர்களு
க்குத்தக்க நியாயங்களை யெடுத்தோதி பேயுண்டெனச் சித்
தாந்திப்பதை விடுத்து அன்னோரை நிந்திப்பதுதர்மமா?
மேலும் "மறுக்கப்படுவது உள்ளபொருண்மேலன்று இப்
பொருண்மேலேறுமோ? என்றசுதேசாபிமானியே! உள்ள
பொருளாவதியாது அதன்பெயரென்னை? நீ யெடுத்துக்கா
ட்டியவரையில் பேய், கடவுள் என்ற உபயமொழிகளன்
றே? இவற்றுள் உள்ளபொருளென்பது பேயா? கடவுளா?
அல்லதிரண்டுமா?

அவ்விரு சொற்களுக்கேனும் பொருளைக்காண்பிக்க வலி
யுண்டா? உளதேல், அன்னவற்றை நியாயமாக ரூபீகாரப்
படுத்தத் தாமதமேன்? நீ யுள்ளதெனக்கூறியது விளங்காம
லே யுன்னை வினவனேர்ந்தது நீ யுண்டெனப்பகர்ந்தது உ
ண்டானதாயின் அதனை உண்டெனற்குரிய நியாயங்களை
யெடுத்தோதி யுண்டெனஸ்தாபிக்க வேலாதா? ஏலாதெனி
ன் ஏன்?

கர்னபரம்பரையாய்க் கேட்டுவரும் சொற்களையும் விஷ
யங்களையும் சுரோத்ராநந்தமாய்க் கேட்டு, உளதுபோற் பா
வனைசெய்து சுகித்தலொன்றே சுலபானுபவமா யிருக்கின்
றதே யொழிய அதனைக் காட்சிப்பிரமாணமாய்க் காண்ட
ல் அசாத்தியமாகவன்றோயிருக்கின்றது. இவ்வாறிருக்க, நீ கே
ள்விப்பட்டதை யனுபவித்ததைப்போலப் பேசியதேன்? அ
நுபவம் யாதெனின் ஏவல், சூன்யம், மாந்தரீகம் என்பி
ர்போலும் அந்தோ? ஏவல் என்றாலென்ன? சூன்யம் என்றா
லென்ன? இவற்றை இனையவென சந்தேக விபரீதமற
வுணர்ந்த பின்னறன்றோ அன்னவற்றைக் குறித்து வாதிக்க
வேண்டும். அதனைத்துறந்து செவிப்புலனாற்கேட்ட கேள்
வியையே பற்றுக்கோடாய்க்கொண்டு நாத்திகரைநோக்கிச்
சொற்றதன்றோ புதுமை? இப்புதுமையை நழுவவிட்டு நவநவ
மாய் அநுபவித்தறிந்த பேருண்மையை நாத்திகர் அங்கீக
ரிக்காத புதுமையேன்?" எனப் புதுமைகாட்டியதன்றோ பு
துமையினும் புதுமை!

அன்றியும் பேயுண்டென்றதற்கு திருஷ்டாந்தமாய் "ஏ
வல்" என்னுங்கிரியையால் திருஎவ்வளூரில் ஓர் கனவானு
டைய மனைவி வருந்தும் நிலைமையை இங்கே சொல்லமு
டியாது கனவான்மனைவியோ அழகிற்சிறந்த ரதிபோல்ப
வள். அவளைக்கண்ட மகமதிய மாந்தரீகனொருவன் அவள்
மேல்மையலாய் அவளைக்கூடிச்சுகிக்க நாடினன். கற்புள்ள
அம்மாதோ துட்டமாந்தரீகன் கருத்துக்கிணங்கவில்லை. மாந்
தரீகன் "நல்லது நீ இனிச்சுகப்படுவாய்ப் பார்ப்பேன்" எ
ன்று சொல்லிப்போயினன் மாந்தரீகனை இன்னவிடத்தா
னென் றொருவருந் தெரிந்து கொள்ள வில்லை.

அவன் அவ்வூரைவிட்டுப் போனதினந்தொடங்கி, யின்
றுவரையிலும் அம்மாதின் நிதம்பத்தின் வழியே உள்ளிருந்
தும் ஆணிகளும், குண்டூசிகளும், கூர்மையான முட்களும்
வெளிப்படுகின்றன நாயகனைக் கூடியணைய விரும்பினலோ
நிதம்பத்தில் வலியுங் குத்தலும் அதிகரிக்கின்றன இது சுமா
ர் 15 வருடமாக அநுபவத்திலிருக்கிறது" என்றாயே இத
னல் பேயின்கிருத்தியமென நம்புதற்கென்ன வத்தாக்ஷி?
அச்சோ! "அவனன்றி யோரணுவுமசையாது" என்றவா
க்கியத்தால் நீ புகன்றதுபோல சர்வஜ்ஞனங்கீகாரமான "கட
வுள்" செயலன்றி இச்சம்பவம் நேருமா? மேலும் அம்மா
தை கற்புள்ளவளென்றாய், கற்புள்ள மடந்தையர் "பெய்
யெனப்பெய்யுமழை" என்று சாத்திரங்கள் கூறுகின்றதால்அ
க்கற்புள்ள மாதிற் கிக்கர்மமுண்டாகுமா? உண்டாயின்அவள்
கற்புள்ள மாதெனவுணர்ந்திருக்குங்கடவுள், அவ்வாறுணராத
மகமதியனிடம் அம்மாது சிரோமணியை எமன்கையில் கா
ட்டிக் கொடுப்பதுபோல் கொடுக்குமா? அல்லது மகமதிய
னைக் கண்டோட்ட மெடுத்ததென்றாலும் சர்வ வல்லபமுள்
ளவன் என்ற பெயர்க்கியையுமா? அஃது கடவுளிலக்கண
மாமா? ஐயோ! எல்லாமுணர்ந்தகடவுள் அப்பதிவிரதைச்
குத் தீங்குசெய்ய யோசித்தவனை துஷ்டநிக்கிரகஞ் செய்
யாது விடுத்ததேன்? அதுவுமவன் செயல்தானெனின், அ
ந்தமகமதியனை யிச்சிக்கச்செய்தவனு மவனே அவனுக்குக் கா
மாந்தகாரத்தை மூண்டெரியச் செய்தவனு மவனே அம்மா
தை அவனுக்கிணங்காமல் பிணங்கச்செய்தவனுமவனே. அத
னலவளை யிச்சங்கடப்படும்படி வைத்தவனுமவனே, நின்னை
யதைக்குறித்துச் சொல்லவைத்தவனுமவனே எம்மைக் க
டாவவைத்தவனுமவனே யென்றல்லவா ஆகும் ஆகவே கு
ற்றம் எவர்மாட்டதென்று புலப்படுகின்றது? ஆகையால்
ஸ்ரீ சுதேசாபிமானியே! அவ்விஷயத்தில் நின்னையன்றி நி
யாயமுரைப்பவர் தற்காலம் யாருமில்லை யென்றே நின்சொ
ற்கொடுன்பால் விடுத்தனம்.

நாத்திகரை நியாயவாதிகளென வழுத்தற்றகுமேயன்றி நி
யாயமில்லாரெனல் விரோதமன்றோ? ஏனென்றால், அன்
னோர்கேட்கும் பிரசனைகளுக்கு உத்தரமளிக்க நம்மாலாகாதி
ருப்பதொன்றே கண்டபலனாய்க்கொண்டிருக்க அவர்களை நி
யாயமில்லாரென தர்மமா? நிற்க.

அம்மாதின் நிபந்தத்தினின்றும் ஆணிகள், ஊசிகள், கூ
ர்மையான முட்கள் வருகின்றதும், அதி லிடைவிடாத வ
லியுண்டாவதும் அபிமானியே? நீ செவியுற்றதா? அல்லது
காட்சிப்பிரமாணமாய்க்கண்டதா? கண்ணாற்கண்டதெனினு
ம் மாந்தர் நம்பற்பாலதன்றாய் முடியும் ஏனென்றால் மானி
டவகுப்புள் பெண்பாலர்க் கத்தானம் மகா அந்தரங்கமென
நீ யறியாயோ? யாவருமறியாரோ? அன்றியும் மானத்தை
க்காப்பாற்றும் மானிகள் தங்கள் கடிதடத்தை பிறர்காணச்
செய்வரா? செய்யின் மானிகளாவரா? அந்தோ! சிலர் உண்

மையாகவே தங்கள் சரீரத்தில் வதனம், கணுக்கை, கணுக்கால், அளவுதவிர மற்ற அவயவங்களில் ஓரங்குலப் பிரமாணமேனும் ஏனையோர்பார்வைபடச் செய்வோரா மானிகள்? ஆனால் சிலர் நடந்துபோம்போதும் நிற்கும்போதும் உட்காரும்போதும் சிற்சில அவயவங்களைக் காண்பிப்பதற்குச் சலியார் சிலர் முழந்தாளிலிருந்து இடுப்புவரையிலும் மூடுவர். சிலர் அரையைமாத்திரமும் சிலர் அதனினும் ஒன்றுபாதியாய்ப் பேருக்குமாத்திரம் மறைத்துள்ளார். இன்னாரையெல்லாம் நாகரீகமுடையவர்களென்றும் மானிகளென்றும் வழுத்த நாவெழுமா?

ஆனால் சிலர் பிரசவத்திற்கு ஆஸ்பத்திரி (வைத்தியசாலை) செல்லவில்லையா! எனின் எத்தனையோபெயர் செல்லாமலே தம்மானத்தைக்காக்கும் பொருட்டாய் உயிர்துறக்கவில்லையா? சிலரோ கணவன் முதலியவர்கள் பலாத்காரத்தால் கொண்டுபோகப் படுகின்றனரே யொழிய தத்பிரீதியாய்ப் போகின்றாரா? போனாலும் ரணவைத்தியர் அவர்களைப் பிரக்ஞையறச்செய்தே மருத்துவத்தொழில் புரிவரேயல்லது வேறல்ல.

ஆகையால் இத்தகைய உபமானங்களைக் கொணர்ந்துகொணர்ந்து கோர்ப்பது யுக்தமன்றாம் என்னவே மானமுளமங்கையருஞ் சிலருளரென்பதே நங்கூற்று. இத்தகையாளரையே விசேடித்துப் பேசினேமல்லது மற்றல்ல இதன்மேல் ஸ்ரீசுதேசாபிமானிதான் சங்கையறுக் கற்பாற்றாம்.

இங்ஙனம்
நியாயவாதி.
தி. வ.

த மெய்யறிவு.

நம்மவர்களுடைய சித்தாந்தங்கள் வெகுவாய்ப் பரிசோதனைப் பிரமாண மற்றவையாகவே யிருக்கின்றன வென்பதற்கு ஓர் திருஷ்டாந்தம்;—குளவி புழுவைத் தன்னுருவாக்கிக் கொள்ளுகிற தென்பது அநேக சாஸ்திரங்களிலும் புராணங்களிலும் ஏறியிருக்கிறது அது சுத்த அபத்தம். நான் பரிசோதித்தறிந்த மட்டில், குளவி யானது ஒரு கூடு கட்டியான வுடனே, அது கூட்டினுள் மேற்புறத்திலே ஒட்டும்படி தன்வாலைத் துறுத்து முக்கிற்று. இந்த அவஸ்தையினாலே அது முட்டை யிட்டதாகத் தோன்றியது. அந்தக்குளவி அ - எ புழுக்களைக் கொண்டுவந்து அடைத்து கூட்டின்வாயை மண்ணினால் மூடிப்போட்டது. அந்தக் கூண்டைபரிசோதிக்கையில். வெண்மையாக சீரக மளவு ஒரு முட்டை அந்தக் கூட்டினுள் மேற்புறத்தில் ஒட்டிக் கொண்டு தொங்கிற்று. பின்பு அந்தக் குளவி முந்தி கட்டி யிருந்த எ - அ கூண்டுகளும் பரிசோதிக்கப்பட்டன. அவற்றுள் இரண்டொரு முட்டை மஞ்சள் நிறம்டைந்தும், அந்த நிறத்தோடு சில முட்டைகள் ஒன்றற்கொன்று கொஞ்ச கொஞ்ச மதிகமாய்ப் பருத்து மிருந்தன. அதைக் கண்டறிந்தவன் நான் மாத்திரமல்ல. நான் தெரிவிக்க, பருத்திப்பட்டு ராமானுஜலு நாயகரும், பட்டுக் கோட்டை டிஸ்திரிக்ட்டு முனிசீபுசை. அருணகிரி முதலியாரும் பரிசோதித்தறிந்தார்கள். குளவி முட்டை யிடுகிற தேன்றும், அந்த முட்டை பழுப்பு நிறமுள்ள புழுரூபமாகி, குளவி கொட்டி சோர்வுள்ள தாக்கிக் கொண்டு வந்து அடைத்த புழுக்களைத் தின்று பருத்து முழுதும் தோற் போர்வையினால் மூடப்பட்ட வேறு உருவமாகி அதற்குள் ளிருந்து குளவிக் குஞ்சு தன் முழு ஸ்வரூபத்துடன் வெளிப்படுகிற தென்றும், சில இங்லீஷ் கிரந்தங்களில் சோல்லி யிருக்கிறது. இந்தக் குளவி விஷயத்தில் நமது முன்னோர்கள் மோசம்போயிருக்கலாம். எப்படிக் கென்றால், குளவி கூடுகட்டி புழுக்களை அடைத்து மூடிப்போட்டதையும் கடைசியில் கூட்டிலிருந்து சிறு குளவி வெளிப்பட்டு வந்ததையும் பிரத்தியட்சமாய்க் கண்டதினால், அவர்சள் புழு குளவியாயிற்றென்று சொல்லி யிருக்கலாம்; கூட்டையுடைப்பது பாவ மென்பதும், கூட்டைக் கலைத்தால் கர்ப்பிணிக்குக் கர்ப்பம் கலைந்துபோ மென்பதும் இக்காலத்திலும் சாதாரணமாய் வழங்குகிற வதந்தியாகையால், அது அவர்கள் பரிசோதித்தறியத் தடையா யிருந்திருக்கலாம். நம்மவர்கள் பெரும்பாலார் முன்னோர்கள் சொன்னதையும் செய்த ஏற்பாடுகளையும் சரியானவைக ளென்று சிலாசாசன மாக நம்புகிற தன்மை யுடையவர்களாதலால், இவர்களுக்கும் பரிசோதனை செய்ய அவசிய மில்லாமற் போயிற்று. அப்படி யிருக்க, முன்னோர்கள் சொன்னது வேறு குளவியா யிருக்கலாம், அது இக்காலத்தி லிருக்கிறதோ இல்லையோ வென்று தங்கள் கட்சியை சாதிப்பா ரும் சிலருண்டு. M.

கடிதம்.

உத்தமபத்தர்கள் நித்தம் புகழ்ந்திடும் தத்துவவிவேசினியாகியவெனதுமித்திர தங்கையே இதனடியில்வரையுமெனது சந்தேகங்களை நினது சோதரரை நிவர்த்திக்கச் செய்வாயாக.

இந்தவாரம் வெளியான "வெற்றிக்கொடியோன்" பத்திரிகையின் நான்காவது பக்கத்தில், சென்னை ஒற்றுமை கல்விகைத்தொழிற் சபையின் ஸ்தாபகர்களி லொருவராகிய தி. இர. பொன்னுசாமி பிள்ளை காலஞ் சென்ற தனது மாதுலன் ஏ. இராமஸ்வாமியாரை; சென்னை இந்து சுயக்கியான சபையின் பிரவர்த்தகரி லொருவராகிய ம. மாசிலாமணி என்பவரால் செய்த வருணபேதச் சுருக்கத்தின் ஒழுங்கை யநுசரித்து, வாத்திய கோஷ்டத்துடன் பல்லாக்கில் எடுத்துபோய், இடுகாடு சேர்த்து, மேற்படி சபையின் மற்றொரு ஸ்தாலகர் பெ. வி. வீரராகவலு பிள்ளை (நிச்சயமில்லா வாழ்க்கையைப்) பற்றி, ஒரு உபந்நியாசஞ் செய்தபின் அடக்கஞ் செய்யப்பட்டது, என்றிருக்கிறது. தி. இர. பொன்னுசாமியும் பெ. வி. வீரராகவலும், வருண பேதச் சுருக்கத்தை அநுசரிக்கின்றவர்களாகில், இவர்கள் பேர்களின் இறுதி மொழிகளாகிய பிள்ளை யென்னும் வார்த்தைகள் பொருந்துமா?

அப்பிரேதத்தை வாத்தியக் கோஷ்டத்துடன் இடுகாடு சேர்த்திருப்பாராகில், அக்கோஷ்டங்கள் சுயக்கியான சபையின் கோட்பாடுடையதா? மேற்குறித்த விரண்டு சந்தேகங்களை நிவர்த்திக்கும்படி மிக்க தாழ்மையான வந்தனத்துடன் வேண்டுகிறேன்.

ஓர் சந்தேகி.

ச வியயவருஷத்திய
ரிப்பன் பாக்கெட் பஞ்சாங்கம்.

இவ்விந்துதேசத்து இராஜப் பிரதிநிதியாயிருந்து பல நன்மைகளைச்செய்தும்செய்துகொண்டும் சற்குணசீலராய் பிரகாசிக்கும் லார்டுரிப்பன் பிரபு அவர்கள்ஞாபகக்குறியாக ஓர் பாக்கெட்பஞ்சாங்கம் பார்த்திபவருஷத்தில் பிரசுரஞ்செய்தோம். அவ்வருஷத்தில் எமது அச்சுயந்திரசாலை நூதனமாய்த் தாபிக்கப்பட்டபடியாலும், வருஷப்பிறப்பிற்குள் வெளியிடவேண்டுமென்று துரிதப்பட்டதினாலும் நாங்கள் விலைக்குவாங்கியிருந்த பழைய பாஸ்டர் பாக்கெட்பஞ்சாங்கத்திலிருந்தபிழைகள் முழுதையும் திருத்துவதற்கும், நாங்கள் புதிதாய் அப்பஞ்சாங்கத்தோடு சேர்க்க உத்தேசித்திருந்த லோகோபகாரமான அநேகவிஷயங்களைச் சேர்ப்பதற்கும் கூடாமையாய்க் காலதாமதப்பட்டுவிட்டது. இவ்வியயவருஷத்திய பஞ்சாங்கத்தில் அத்தகையபிழைகள் இலல்ாமல் திருத்தியும் அக்குறைவுபாடுகளைப் பூர்த்திசெய்தும் உயர்ந்தகாகிதத்தில் அழகான பைண்டுசெய்து மிகு உன்னதமான சீமைப்பென்சலுடனும் ரிப்பன்பிரபுவின் சாயாபடத்துடனும் பங்குனிமாசம் முதலில் (அதாவது ஏப்ரல் மீ 15உ திக்குள்) வெளியிடப்போகிறோம்.

இப்பஞ்சாங்கம் தஞ்சாவூரைச்சார்ந்த திருவாதியில் வானசாஸ்திரத்தில் மிகத்தேர்ச்சிபெற்று விளங்கும் பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர ஸ்ரௌதிகளால் கணிக்கப்பட்டது. ரிப்பன் பிரபுவைப்போல் விளங்கும் இப்பஞ்சாங்கம் தேசாபிமானமும் நன்றியறிதலுமுடைய சுதேசநண்பர் ஒவ்வொருவர்கையிலும் அதியாவசியமாக இருத்தல்வேண்டும்.

வேண்டியவர்கள் அடியிற்கையொப்பமிட்ட என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு அணா—6
,, 10-க்கு ஒன்றும்
,, 25-க்கு மூன்றும்
,, 50-க்கு ஏழும்
,, 100-க்கு பதினைந்தும் இனமாகக்கொடுக்கப்படும்
புத்தகம் 1-க்கு தபாற்செலவு அணா 1-அனுப்பவேண்டியது

இங்ஙனம்.
கு. சடையாண்டி செட்டி.
மானேஜர் ரிப்பன் பிரஸ்.

☞ ALL COMMUNICATIONS MUST BE ADDRESSED TO
P. Munisawmy Naiker, MANAGER
307 LINGHI CHETTY STREET
Madras.

தத்துவவிவேசினி

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

[VoV—No. 7.] MADRAS:—SUNDAY FEBRUAY, 14, 286 [MONTHLY, 5 ANNAS

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ, லச்சொல்லை

வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.—குறள்.

HETRODOX NUTS FOR ARTHODOX TEATH.

மதவாதிகள் பற்களை அதமாக்குங் கொட்டைகள்.

வால்டேர் என்னப்பட்ட சுவஞான சிங்கத்தைக் கண்ட ஓர் பிரான்சுதேசப் பண்டிதர் மதாபிமானமாகப் பேசிப் பேசி யிளைத்து ஈற்றில் மதங்களெல்லாம் கற்பனையே யாயினும் ஆகுக, 'கடவுள் ஒருவர் உண்டு' என்பது மாத்திரம் பொய்யாகாது. ஏனெனில் உலகத்திலே நம்முயற்சியால் மட்டுமே யாகத்தக்கது ஒன்றுமே யில்லை. ஒவ்வொரு அற்ப காரியத்திற்கும் நம்முயற்சியோடு பிறமுயற்சியும் வேண்டற் பாலதாக விருக்கிறது. இதோ நான் உமக்கு வேணமட்டும் அரிசி காய் கறி கோதுமை உப்பு நெய் பால் தண்ணீர் முதலிய சகல வஸ்துக்களையும் தருகிறேன் யாவற்றினும்மிக அற்பமும் நிசேதமுமான கொஞ்சம் மலத்தை மாத்திரம் செய்துகொடும் பார்ப்போம்" என்றார். வால்டேர் என்பவர் அப்படியே ஆகட்டு மென்று அவற்றை யெல்லாம் வாங்கிக்கொண்டு "ஆனால் ஒருபொருள் குறைவாயிருக்கிறது ஆயினும் பரவாயில்லை" என்று வீடுபோய் சமைத்துச்சாப்பிட்டுச் சுகமே யினிது வீற்றிருந்தார். அன்று அஸ்தமான வேளையில் இவர் அதை யெப்படிச் செய்கின்றாரோ பார்ப்போமென அப்பண்டிதர் இவர் வீட்டிற்குச்சென்று ஏதோ செய்தீராவென்றார். அதற்கவர் "உம்மால் சர்வவல்லவரென்று புகழப்பட்ட கடவுளுக்கே ஓர் நாளெல்லாம் செல்லத்தக்கதாக விருக்க என்னையேன் இவ்வளவு துரிதத்தில் செய்யச்சொல்லி கேட்கின்றீர்கள் நான் செய்து முடித்துக்காட்டுகிறேன் போ" மென்றார். மறுநாளும் அப்பண்டிதர் போய்க் கேட்க அவரைத்தான் மல விசர்ச்சனம் செய்தவிடத்திற்குக் கொண்டுபோய் "இதோசெய்தேன் பார்" என்றார். அதற்கவர் வெட்கித் தலை குனிந்து நிற்க "எது எது எதிற்சேர்ந்து எதுவாகத் தக்கதோ அது அது எல்லாம் அதிற்சேர்ந்தால்மட்டுமே அதுவாகும்; நீர் மனிதன்குறையமற்றெல்லாப்பதார்த்தங்களையுங் கொடுத்தமையால் அம்மனிதனே நானாகவிருந்து செய்து முடித்தேன் அது மலந்தானா வேறோன்றா பாரும் என்று போய்விட்டார்.

மிருகாதிகளுக்கு ஆன்மாவில்லை யென்கிற கிறீஸ்தவர்களும் பெண்களுக்கு ஆனமாவில்லை யென்கிற மகம்மதியர்களும் ஆன்மாவென்ப தென்ன வெனக் கொண் டிருக்கின்றார்களோ தெரியவில்லை. மிருகாதிகளுக்கு கியாபகமில்லை பகுத்துணர்வில்லை மனமில்லை எண்ணிபடி சூட்சிசெய்து முடிக்கச்சத்தியில்லை யென்று கிறீஸ்தவர்கள் சொல்வார்களேல், நாய், பூனை குதிரை யானை கரடி குரங்குமுதலிய சகல ஜீவராசிகளும் தாங்கள்வாழும் காட்டிலும்நாட்டிலுமுள்ள நீர்நிறைந்த தடாகங்களிலும் சமுத்திரங்களிலும் ஆறுகளிலும் நியடர்ந்த காடுகளிலும் அடுப்புகளிலும் எண்ணற்று வன் போய் விழுவதில்லை? சுடுண்ட பூனை அடுப்பங்கரை சேராதென்ற பழமொழியால் பூனைக்குக் கியாபகமும் பகுத்துணர்வும் இல்லையெனவாகுமோ? மனிதர்களைப்போலப் பழக்கப்பட்ட குதிரை குரங்குமுதலிய ஜெந்துக்கள் சர்கஸ்முதலிய விநோத ஆட்டங்களில் என்னென்ன வேடிக்கைகள் செய்கின்றன. இவைகளுக்கு கியாபகமும் கியானமும் மனமுமில்லாமலா செய்கின்றன? பெண்கள்போகவஸ்த்து ஆதலால் அவர்களுக்கு ஆன்மா வில்லையென்ற மகமதியர்களே! அப்பெண்களால் நுகரும் போகவஸ்துவாகவும் இருக்கிறபடியால் புருஷருக்கும் ஆன்மாவில்லையெனல் கூடுமே. புருஷருக்குள்ள குணகுணங்களில் அவர்களுக்கு எதுகுறைவு?

இந்துக்களின் தற்கால நிலைமையைக் குறித்த உபந்நியாசங்களைப் பற்றியது.

ஸ்ரீசுதேசாபிமானி பிப்ரவரிமீ 6உ பத்திரிகையில், இதற்குமுன்னே நமது கவர்னர் ஜனரலாயிருந்த ரிப்பன்பிரபு அவர்கள் தற்கால இந்தியாவின் நிலைமையைக் குறித்துச்செய்த உபந்நியாசம் பிரசுரஞ்செய்யப்பட்டது. அந்தஉபந்நியாசத்திலடங்கிய ஒவ்வொரு விஷயத்தையும் நாம் சீர்தூக்கிப் பார்க்குமிடத்து, நாம் இன்ன நிலையி லிருக்கிறோமென்றும், நாம் இன்னின்னவற்றை ஒழித்தாலல்லது சீ[illegible] [illegible] னபாஷாகியானம் வேண்டுமென்றும், இன்ன தேசத்தில் இன்னாரோடு பழகவேண்டுமென்றும் ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. அந்த உபந்நியாசத்தின் குறிப்புகளாவன;—

க-வது குறிப்பு.—சில வருஷங்களுக்கு முன்னே ஆங்கிலேயர், இந்துக்கள் யாதொரு விர்த்தியுமின்றி ஒரே நிலையி லிருக்கிறார்களென்றும், காலதேச வர்த்தமானங்களுக் குட்படாமல் முன்னோர்களின் ஆசாரங்களில் கண்மூடித்தனமாய் நடக்கிறவர்களென்றும், எப்போதும் ஒரே மாதிரியாய் இருக்கிறவர்களென்றும் சுபாவத்திற் பிடிவாதமுள்ளவர்களென்றும் எண்ணி யிருந்தார்கள்; இவ்வபிப்பிராயம் இப்போதும் அங்கிலேயருக்குண்டு. ஆனால் இந்துக்களின் தற்கால நிலைமையை ஆலோசித்துப் பார்க்கையில், அது தப்பபிப்பிராயமாகவே யிருக்கிறது. இப்படிச் சொல்வதினால், இந்துக்கள் புராணங்களிலே நம்பிக்கை யற்றார்களென்றும். பூர்வாசாரங்களை விட்டார்களென்றும், ஒரேமாதிரியா யிருக்கிறார்களென்றும் சொல்லவந்த தல்ல.

விவரணம்.—இதில் நம்மைப்பற்றிச் சொல்லியிருக்கும் விசேஷணங்கள் வெகு சிறப்பாயிருக்கின்றன வல்லவா? நம்முடைய பூர்வீக நிலைமை சுத்த மௌடீகமானதாக மதிக்கப்படுகிறதென்று பொருள்படவில்லையா? "இவ்வபிப்பிராயம் இப்போதும் ஆங்கிலேயருக்குண்டு" என்பதினாலும், "தற்கால நிலைமையை ஆலோசித்துப் பார்க்கையில்" என்பதினாலும், நமது சீர்திருத்தமான தற்கால நிலைமை ஓங்கிவளர்ந்து பிரகாசியாமல் மின்மினியைப்போல மினுக்கு மினுக்கென்று அற்பமாயிருப்பதால் கொழுந்துவிட்டு வளருமோ அவிந்துபோகுமோ, அல்லது உண்டோ இல்லையோ வென்று அனுமானிக்கப் படத்தக்கதா யிருக்கிறதென்றும், அதுபற்றி, உள்நுழைந்து பார்த்து தீர்க்கயோசனை செய்ய வேண்டியதா யிருக்கிறதென்றும், சொன்னதாகப் பொருள்படவில்லையா? புராணங்களில் நம்பிக்கை யறாமையினாலும் பூர்வாசாரங்களை விடாமையினாலும், சீர்திருத்தம் தீவிரமாய்ப் பரவுவது அருமையென்றும், அந்த நம்பிக்கையற்று அந்த ஆசாரங்களை விட்டாலொழிய, சீர்திருத்தம் மு

சிரமாட்டாதென்றும், ஆயினும் ஒரேமாதிரியாயிராமல் கிஞ்சித்து மாறுதலுண்டாகி வருகிறதென்றும் சொன்னதாகத் தெரியவில்லையா?

உ-வது குறிப்பு.—கல்விமான்களின் அபிப்பிராயங்கள் மாறுகின்றன; கல்வியின் வியாபகம், பத்திரிகைகளில் தங்கள் மனோபாவங்களை வெளியிடும் சுதந்திரம், நீதிபரிபாலனம், இருப்புப்பாதை, மின்தபால் இவற்றின் பிரபல்லியம், ஐரோப்பாவிற்குச் செல்லும் சுலபமார்க்கம், அதனால் அக்கண்டத்தாருடைய பிரவர்த்தகமும் அபிப்பிராயமும் இந்தியாவில் ஆசாரத்திற்குக் கொண்டுவரப்படுகை, இவையெல்லாஞ்சேர்ந்து இந்துக்களிடத்தில் விசேஷ மாறுதல்களைக் காட்டுகின்றன.

விவரணம்.—மேற்கண்ட குறிப்பின் கருத்துகளைச்சொல்லவேண்டுமாயின் வெகுவாய் விரியுமாதலால், சுருக்கமாக,—சீர்திருத்தம் வேண்டுமாயின் ஐரோப்பியருடைய அபிப்பிராயங்களையும் பிரவர்த்தகங்களையும் அனுஷ்டிக்க வேண்டுமென்று பொருள்படுகிறது. 'கல்விமான்கள்' 'கல்வியின் வியாபகம்' என்றது எந்தப்பாஷை? எந்தப்பாஷையில் ஞானமுடையவர்கள்? தேவபாஷையாகிய சமிஸ்கிருதத்தையும் மற்றுஞ் சுதேச பாஷைகளையும் கற்றுணர்ந்த சாஸ்திரிகளையும் பண்டிதர்களையும், புராணப் பிரசங்கிகளையும், வேதங்களோதி, விக்கிரகங்களுக்குக் கும்பாபிஷேகமுதலிய கிரியைகளால் பிராணப்பிரதிஷ்டை செய்கிறவர்களும் பௌண்டரீக முதலிய யாகங்களைச் செய்கிறவர்களுமாகிய குருக்கள்மாரையும் ஆசாரியர்களையும், கூடுவிட்டுக் கூடுபாயவும் குளிகை போட்டுக்கொண்டு பறக்கவுங் கற்ற மகாத்துமாக்களையும் குறிக்கிறதோ? அல்லது அங்கிலேய பாஷையையும் அப்பாஷாகியானமுடைய புத்திமான்களையும் குறிக்கிறதோ? இதனாலே சீர்திருத்தத்திற்கு அங்கிலேய பாஷாகியானம் அவசியமெனத் தெரியவில்லையா?

௩-வது குறிப்பு.—மேற்கண்ட மாறுதல்கள் இந்துக்களோடு பழகினவர்களுக்குத் தெளிவாகவே காணப்படுகின்றன; இவற்றை யறியக்கூடா விடினும், இங்கிலாந்துக்குப்போய் படித்துவரவேண்டுமென்னும் ஆசை இந்துக்களுக்கு அதிகப்படுகிறது எல்லாருக்குந் தெரியும். ஒருஜோலிக்கும் போகாமல் தங்கள்மட்டிலிருந்த கிராமவாசிகளின் சந்ததியாரும் [illegible] ...ங்களின் நடைகளைக்கற்று, தங்கள்பூர்வீக நடைகளைத் திருத்துகிறார்கள்.

விவரணம்.—மேலே 'பழகினவர்களுக்குத்தெளிவாகவேகாணப்படுகின்றன' வென்பதினாலும் (பழகியும்) 'அறியக்கூடாவிடினும்' என்பதினாலும், ஆ! ஆ! இந்தியாவில் சீர்திருத்தம் எவ்வளவு அதிகரித்திருப்பதாகத் தெரியவருகிறது! கேள்விப்படுவதினாலும் பார்ப்பதினாலும் தெரிந்துகொள்ளத்தக்கதாயிருக்கிற சீர்திருத்த மல்லவோ சீர்திருத்தம்! அப்படிக்கன்றி, பழகிப் தெரிந்துகொள்ளக் கூடாதாயின், அது உண்டோ இல்லையோவென்று நினைப்பதற்கு இன்னும் சந்தேகமா? இங்கிலாந்துக்குப்போய் இங்கிலீஷ்வாசிக்க ஆசைகொள்வது சீர்திருத்தமடைய வேணுமென்பதற்கு அடையாளமாக மாத்திர மிருக்கிறதென்று சொன்னதாகத் தெரியவில்லையா? பூர்வீகநடைகளை ஒழித்து அங்கிலேயருடைய நடைகளைக் கற்பது அவசியமெனப் பொருள்படவில்லையா?

௪-வது குறிப்பு.—கிறிஸ்துமதப் பாதிரிகளின் போதனையால் சாதிக்கக்கூடாமையாய் முடிந்த சாதிபேத முதலிய ஆசாரங்கள் புகைவண்டியின்முன் அடங்கின.

விவரணம்.—இது நமக்கு வெகு சிறப்பைத் தருகிறது. சாதிபேதம் வீணானதென்றும் நமது ஆசாரங்கள் சரியானவைகளல்லவென்றும் பாதிரிமார்கள் எடுத்துக்காட்டி நமக்கு உபதேசித்தபோது செவிகொடுத்துத் திருந்தாதிருந்த அவிவிகளாகிய நாம் புகைவண்டியின் மூலமாய்இலௌகிககாரியங்களைச் சுலபமாய் நிறைவேற்றிக்கொண்டு பொருளிட்டல் முதலிய ஆசைப்பெருக்கால் சாதியையும் ஆசாரங்களையும் ஒழிக்கத்தலைப்பட்ட நமது விவேகமே விவேகம்! கவையைப்பற்றி பிராமணர்களும் பறையர்களும் புகைவண்டியில் கலந்தேறிச் செல்வதையறிந்த நமது கவர்னர் ஜனரலவர்கள் இந்துக்களுடைய சாதிபேதங்களும் ஆசாரங்களும் மழுங்கி வருகின்றன வென்று நினைத்தார்கள். உண்மையில் அவ்வாறேயாயினும், வண்டியைவிட்டிறங்கின வுடனே, எப்புலனாலும் அறியப்படாத அந்தத் திட்டு ஸ்நானம் ஜபம் தபம் காயத்திரிமுதலிய வற்றால் துரத்தப்பட்ட மாத்திரத்தில் அந்தசாதி ஆசாரங்கள் மறுபடி பையவந்து நுழைந்துவிடுகின்றனவே. நம்மில் சிலர் ஜாதிபேதங்களும் நமது ஆசாரங்களும் வீணானவைகளென்று மனப்பூர்த்தியாய் நம்பியிருந்தபோதிலும், அவற்றை முற்றிலும் விட்டு நீங்கக்கூடாத பந்தங்களிருக்கின்றமையால், கவர்னர் ஜனரலவர்கள் குறித்தவாறு சீர்திருத்தத்தினிமித்தம் ஜாதிபேதங்களையும் ஆசாரங்களையும் ஒழிக்கவேண்டுமாயின், ஒரு ஏற்பாட்டின் வழியாய் ஒன்றுசேர்ந்து அவற்றைவிட்டு நீங்கினால் மாத்திரமே பிரயோசனம்.

௫-வது குறிப்பு.—மதங்களைச்சரியாக அனுசரிக்காவிட்டாலும் பரிஷ்காரமாக விட்டுவிடவில்லை. நாகரீகமும் அவ்வாறே பிறந்தாலும், பிறைக்கண்டும் அது விருத்தியானது.

விவரணம்.—இது உண்மையே. சிலர் பேசுவதெல்லாம் பொய்யாயினும், மதவைராக்கிய முடையவர்களைப்போல நடிக்கிறார்கள். உற்சவாதிகள் நடத்துவது பெரும்பாலும்பெருமைக்காகவேயன்றிபக்திக்காகவல்ல. ஓமத்திற்கு அரைவீசை மட்டநெய்யும் சாப்பாட்டிற்கு நான்குவீசை உள்ளூர் நெய்யும், பிராமணர்களுக்கு நான்குவீசை வெளிக்கத்தரிக்காயும் சாப்பாட்டிற்கு இரண்டுவீசை உள்ளூர் கத்தரிக்காயும் வாங்கிவா வென்றும், ஓய் குருக்களே, ஆசாரியரே, பொழுதுபோகிறது, இதுகளெல்லாம் உங்கள் ஜீவனத்திற்காக வியாசர்செய்த கட்டுப்பாடு, இத்தனையும்பணம்பறிக்கத்தான், எனக்குத்தெரியும், வேலையைசீக்கிரத்தில்முடியுமென்றும், பலர்சொல்லக்கேட்டிருக்கிறேன். மேற்படி உபந்நியாசத்தைப்பத்திரிகையில்வெளியிட்டவர் பரிந்துபேசிப் புத்திசொல்லுகிறபடி நாம் நன்மையடையவிரும்புவோமாயின் மதங்களை ஒழிக்கவேண்டுவதே. மேற்குறிப்பினால் நாகரிகத்திலும் நமது நிலைமையைத் தெரிந்துகொள்ளலாம்.

௬-வது குறிப்பு.—"பாஷைகள் கிரந்தங்கள் சரியான ஒழுங்கில் இன்னும் வைக்கப்படாத பாலியநிலையி லிருந்தாலும்."

விவரணம்.—நமது குறைவான நிலைமையைக் காட்டுவதற்கு மேலே 'இன்னும்' என்னும் வார்த்தையே போதுமானது. பாஷைகளிலும் கிரந்தங்களிலும் நமது முன்னோர்கள் அதிமேன்மையடைந்திருந்தார்களென்று பழமைபாராட்டுகிறோம்; இதனால் நமக்கென்னபெருமை? இதுவிஷயத்தில் நம்மை இகழ்வோருக்குப் பரிகாரமாகச் சொல்லிக்கொள்ளலாம். எனது முதாதைகள் குபேரராயிருந்தார்கள், நான் இப்போது பிச்சையெடுக்கிறேனென்பது ஒரு பெருமையோ? முன்னோர்களை இழக்காதிருப்பதே பெருமை. நமதுமுன்னோர்கள் தங்கள்காலத்திலே இப்போதிய அச்சுயந்திரம்போன்ற தேதாவதொரு சூழ்ச்சிசெய்து பாஷைகளையும் கிரந்தங்களையும் காப்பாற்றிவைக்க வகைதேடாமற் போனதே அவர்களுடைய புத்திக்குத்தோஷம்.

மேற்படி உபந்நியாசத்தைப் பத்திரிகையில் வெளியிட்டவர் "இவ்விஷயங்களைக் கவனிக்கும் நம்மவர்பலரும் துரைத்தனத்தாரால் நமக்குக்கிடைக்கும் பல நன்மைகளைப் பெற்றுச் சுகிப்பதற்காக லௌகிக ஞான உதவியால் ஒற்றுமையடைந்து, துரைத்தன விசுவாசிகளாய், பல பிரயத்தனங்கள்செய்து, துரைத்தனத்தாலே மேன்மையையடைய முயலவேண்டும்" என்று, தமது அபிப்பிராயத்தை விளக்கினர். இந்த அபிப்பிராயத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையிலும் எவ்வளவோமேம்பாடான பொருள்கள் அடங்கியிருக்கின்றன. 'முயலவேண்டும்' என்பதனால், முயலாதிருப்பது சரியல்லவென்றும், அகத்தியம் முயலவேண்டுமென்றும், அதினாலே ஒழிக்கவேண்டிய பலவற்றையும் ஒழிக்கவேண்டுமென்றும், கற்கவேண்டிய பலவற்றையும் கற்கவேண்டுமென்றும், மேற்குறித்த உபந்நியாசத்தை முழுவதும் அங்கீகரித்தவராகக் காணப்படுகிறார். யானும் இவருடைய அபிப்பிராயத்தில் கலந்தவனே. இந்த உபந்நியாசம் பெருமகிழ்ச்சியுடனே பூஷித்துப் பிரசுரஞ்செய்யப்பட்டது. இரண்டுவாரத்திற்குமுன்னமே, அ. இரத்தினசாமி முதலியார் B. A. அவர்களால் இந்துக்களுடைய தற்கால நிலைமையைப்பற்றி வாசிக்கப்பட்ட உபந்நியாசத்திலும் மேற்கண்ட உபந்நியாசத்திலுள்ள அபிப்பிராயங்களே யன்றி வேறொன்றுமில்லை. முன்னைய உபந்நியாசத்தில் துராசாரங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் ஒழிந்துவருகிற தென்றார், இவர் ஒழியவேண்டிய துராசாரங்கள் மிகுதியாயிருக்கிறதென்றார். இவ்விதமாய், பிரபுவினுடைய உபந்நியாசத்தில் குறிப்பாக மறைத்துச்சொன்னவற்றை இவர் விரிவாக வெளியிட்டுச்சொன்னார். இவ்விரண்டிற்கும், மேலே குறிப்புகளுக்கும் விவரணங்களுக்கும் கருத்தில் என்ன வித்தியாசமுண்டோ அவ்வளவுதானிருக்கும். ஸ்திரீகளின் புனர்விவாகத்தைப்பற்றி இரண்டொரு புத்திமான்கள் தலையையுடைத்து

க்கொள்ளுகிறார்கள், மற்றும்பலர் அவ்வித அபிப்பிராயமுடைய புத்திமான்களாகி உடன்பட்டால் மாத்திரமே அந்தமுயற்சி முன்னுக்குவருமென்றும், மேலும், புனர்விவாகத்தைப்பற்றி, கூடுமென்றும் கூடாதென்றும், இரண்டுகட்சியும் வாதிக்கப்படுதற்கு வேதம் இடங்கொடுப்பதால் இது விஷயத்தில் நாம் நூதன ஏற்பாடுசெய்து கொள்ளவேண்டும், அல்லது வேதங்கடவுளால் கொடுக்கப்பட்டதென்றால். அவ்வாறே நமக்கு வேறு கற்பனைகிடைக்கிறவரையில் பொறுத்திருக்கவேண்டுமென்றால், இது குற்றமோ ? நமது சாத்திரங்களை ஐரோப்பியர் கைகொண்டு அவற்றை விர்த்திசெய்து கொண்டபடியால், நமது சாஸ்திரங்களைத் தேடுவதில் வீணாய்க்காலங் கழிவதைப்பார்க்கிலும் அவர்களுடைய சாஸ்திரங்களை வாசித்துக் காலத்தை மீர்த்திக்கொள்வதே சிரேஷ்டமென்றால் இது ஒரு குற்றமோ ? இவருடைய உபந்நியாசம் "The Thinker" என்னும் பத்திரிகையில் பிரசுரமாகிவருகிறதே, அதிலுள்ள குற்றங்களை யெடுத்துக்காட்டிக் கண்டிக்கலாகாதா ? சங்கதி ஒன்றையும் குறிக்காமல், இந்துமதமுதலியவற்றை இகழ்ந்ததாக இவரைசென்ற ஜெனவரி.மீ 30உ சுதேசாபிமானி பத்திரிகையில் தூஷித்திருக்கிறது. இதனாலே எவ்விதத்திலாவது பத்திரிகை நிரம்பினால் போதுமென்பதாயிற்று. அன்றியும், கருத்தில் ஒன்றேயாயினும் ஒன்றைபூஷித்தும் மற்றொன்றை தூஷித்துமிருப்பது அடியில்வருங் கதைபோலிருக்கிறது. ஒரு அரசன் தன்பற்கள்கழன்று விழுந்துவிட்டனவாகக் கனவுகண்டான்; அதின் பலனைப்பற்றி ஒருஜோசியனைக்கேட்க, "அது கெட்டகனவு, தங்களுக்கு முன்பாகவே தங்கள் புத்திர மித்திர களத்திராதிகள் இறந்துபோவார்களென்றான். அரசன்கோபங்கொண்டு, அவனைச் சிறையிலடைப்பித்து, மற்றொரு ஜோசியனைக்கேட்க; அவன்—மகாப்பிரபூ, அது வெகு நல்லகனவு, தேவரீர் தங்கள்புத்திரமித்திர களத்திராதிகளைப் பார்க்கிலும் தீர்க்காயுசாய் வாழ்வீர்களென்றான். அரசன் சந்தோஷித்து அவனைச் சன்மானப்படுத்தினான், இந்த அரசனைப்போலக் கருத்தறியாமல், சொற்களினாலே மலைவுபடுகிறவர்கள் எதையும் விபரீதமாகநினைத்து, ஆராய்ச்சிசெய்யச் சக்தியற்றவர்களாய் பிறரை தூஷிப்பதை பூஷணமாக அணிவார்கள்.

இந்து அபிமானி.

ஒரு நன்மொழி.

1876-ம் வருஷத்திய க்ஷாமத்தில் பசிபிணியால்வருந்திய எவ்வருணத்தாரையும் காக்கும்பொருட்டு இந்தியதுரைத்தனத்தார் கருணை கூர்ந்து பலருக்கும் சகாயஞ் செய்யும்படி ஏற்படுத்திய க்ஷாமசகாயதிரவியத்தை Family relief Fund சில பிராமண உத்தியோகஸ்தர்கள் தம்மினத்தவருக்கு மட்டும் அனுகூலிக்கச்செய்து ஏனையோரை மிக வருந்தச்செய்தனராம், அவற்றிற்கு உதாரணமாக நான் கேள்வியுற்ற பலகதைகளில் ஒன்றை இதனைவாசிக்கும் எனது சிநேகர்களுக்கு சுருக்கமாக எழுதுகிறேன். அனந்தபூருக்கு அருகிலுள்ள ஓர் கிராமத்திலிருந்த, வயதிலும் சுயஜாதியபிமானத்திலும் முதிர்ந்த ஓர் பிராமண தாசில்தார் தன் அதிகாரத்திற்கு உட்பட்ட தன் நகரில் பிராமணரையன்றி ஏனையஜாதி யாசகர் பிரவேசிக்காவண்ணம் காவற்காரர்களை வைத்துத் தடுத்துப்பசிபிணியால் அநந்தம் பெயரை மடியச்செய்து பிராமணயாசகரைமட்டும் வருவித்து அங்குள்ள மெடிகல் ஆபீசரிடத்தினின்று சீட்டுகளை அவர்களுக்கே கொடுப்பித்துப் பொருள் சகாயஞ் செய்துவந்தனரெனவும், இதனைக்கேள்வியுற்ற மெடிகல் ஆபீசர் இதுதகாத செய்கையென அத்தாசில்தாரைக் கண்டு கேட்டனரெனவும், அதனால் அவ்விருவருக்கும் மனஸ்தாபமுண்டாகவே அதுமுதல் அத்தாசில்தாரது சுயஜாதியபிமானநோக்கம் முடியாமற் போயிற்றாம், அதனால் தாசில்தாரும் அங்குள்ள பிராமணர்களனைவரும் ஒன்றுசேர்ந்து அம்மெடிகல் ஆபீசரைப்பற்றி அவ்வூர் கலெக்டரிடத்தில் ஏதேதோ கோள்கொளுத்தி அவரை யவ்வூரினின்று அப்புறப்படுத்த பலமுயற்சிகள் செய்தனராம். ஆனால் அம்மெடிகல் ஆபீசர் மிகுகண்டிப்பும் நெறியுமுள்ளவரானதினால் அவர்கள் முயற்சிகள் பலவும் பயனற்றுப்போயினவாம். ஆகையால், பிரியமானவர்களே! பிராமணருடைய துரோகச் சிந்தனையைப் பாருங்கள். இப்படியே பிராமணரில் பெரும்பாலார் தத்தமது அந்தஸ்துக்கும், வலிமைக்கும் சாய்வுகாலத்திற்கும் தக்கபடி ஏனையஜாதியாரை வஞ்சித்து நாசஞ்செய்து வருவதைப்பாருங்கள்.

பிராமண விசுவாசிகளே ! பிராமணர் ஐரோப்பியரைப்போல் நீராவி ரதங்கள், மின்சார இயக்கங்கள்ஆகாய கமனம், தூர திருஷ்டிக் கண்ணாடி, கடிகாரம் முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றை ஏற்படுத்தி இருக்கின்றனரா ? இல்லையே. அல்லது, இவர்கள் புத்தியிலும், ரூபத்திலும், குணத்திலும், ஒழுக்கத்திலும் ஐரோப்பியரினும் சிறந்தவர்களா? அல்லவே. ஆனால் இவர்கள் தானத்தால்வந்த பட்டஞ்சு தோவத்தியின் கரையை மடிப்புமடிப்பாக முன்னேவைத்து உடுத்திக் கொள்வதையும், நாமத்தையும்விபூதியையும் நெற்றியில் பட்டை பட்டையாகத் தீட்டிக் கொள்வதையுங் கண்டாமதிமயங்கி உங்கள் பொருளை அவர்களுக்குவாரிஇறைத்து அவர்களைசுவாமிசுவாமிஎன்று அழைத்துவணங்குகிறீர்கள்? எத்தேச எவ்விழிந்தோரும் மனிதரைவணங்கார்களே. ஐரோப்பியரினும் இவர்கள்எதில் சிறந்தவர்களென்று எண்ணியிருக்கிறீர்கள்? ஆனால்,இவர்கள் ஸ்ரார்த்த முதலிய கிரியைகள் செய்யுங் காலங்களில் மாட்டின் சாணம், கோமயம், பால், தயிர், நெய் இவற்றை ஒன்று சேர்த்து உண்ணுகின்றனர். (இதற்கே பஞ்சகவ்விய மென்றுபெயர்) விலங்கினங்களில் பன்றி யொன்று தவிரமற்றெந்த ஜந்துக்களும் மலத்தையுண்பதில்லை. விலங்கினும் உயர்ந்தோராகிய மாந்தரில் பிராமணர்மட்டுமே மாட்டின் மலமாகியசாணத்தையும், மூத்திரமாகிய கோமயத்தையும் உண்பவர்கள். மாட்டின் மலத்தையும்மூத்திரத்தையும் உண்பதினாலா இவர்களை சுவாமி சுவாமி என்று அழைத்து வணங்குகிறீர்கள்.

இந்தியர்களே ! இதரதேசத்தாருக்கும் உங்களுக்கும் ஐக்கிய சம்பந்தம் உண்டாகும்வண்ணம் நீங்கள் ஜாதிபேதம் மதபேதம் பாராமல் உங்கள் புத்திரிகளையும் சகோதரிகளையும் வேறுபாஷை பேசி வேறுமதத்தையனுசரித்து வேறு தேசாச்சாரங்களைச் சார்ந்தொழுகும் அன்னியதேசத்தாருக்கு விவாகஞ் செய்து கொடுத்து அவர்கள் புத்திரிகளையும், சகோதரிகளையும் நீங்கள் விவாகஞ் செய்து கொள்ளுங்கள். விவாகஞ்செய்து கொள்ளும் மணமகனும் மணமகளுமாகிய உபயத்திராளும் தேகசவுக்கிய சாசனம் (Medical Certificate) பெற்று அனுப்பிக்கொள்ள வேண்டும். வைத்திய சாஸ்திரத்திற்கு மாறாக நீங்கள் உங்கள் நெருங்கிய உதிர சம்பந்தமானவரிலும், பரம்பரையாக வரப்பட்ட குஷ்டம், இரைப்பு முதலியதீராதவியாதியையுடையவமிசத்தாரிலும் விவாகஞ் செய்யலாகாது. கல்லாதவருக்கும், மிகுவரியருக்கும், வெறியருக்கும், வியாதிஸ்தருக்கும், மந்த புத்தியுடையவருக்கும், கள்ளருக்கும், சோம்பருக்கும், இருண்ட நிறத்தையுடைய வருக்கும், வயதுசென்ற முதுமை பருவமுடையவருக்கும் உங்கள் புத்திரிகளை மணஞ்சூட்டு விக்கவேண்டாம். விவாகஞ்செய்து கொள்ளும் இருபாலாரும் யவ்வன பருவமுடையவர்களாக இருக்கவேண்டும். விவாக சடங்கு செலவு மிகக் குறுகி இருக்கவேண்டும். விவாகமென்பது மணமகனுக்கும் மணமகளுக்கும் நடக்கும் உடன்படிக்கையே யன்றி வேறொன்று மல்ல.

இத்தேசத்தவர்களே ! பறையர்முதலியவர்கள் களவு
கொலைசெய்து வருவதால் அவர்கள் துன்மார்க்க ரென்
றும், துன்மார்க்கருக்குப்பிச்சையும் இடலாகாதென்றும்
சொல்லுகிறீர்களே. மாதம் நூறு இருநூறு ரூபாய் ச
ம்பாதிக்கும் பிராமணரில் அநேகர் அதுவும் போதாமல்
சூத்திரர் முதலியோரிடத்தினின்று துர்வழியில் பணஞ்
சம்பாதிக்கிறார்களெனின் மாதம் ஒரு ரூபாய்க்கும் வரு
வழியற்றிருக்கும் பறையர் முதலியவர்கள் பசியி
ன் கொடுமையினால் திருடாமல் என்னசெய்வார்கள் ?
பிராமணர் முதலியோர்கள் பூமியை வருஷமுழுதும் உ
ழுது எருவிட்டு விதைவிதைத்துநீர்பாய்ச்சிக் களைபிடுங்
கி இரவும் பகலுங் காவல் காத்து அறுத்து போரடித்
தெடுத்தபின் கஷ்டப்பட்டவனுக்கு 4-5 மரக்காலகொ
டுத்து விட்டுபூமிக்கு உடையவன்யாவற்றையும் தானே
எடுத்துக்கொண்டால் அவர்கள் திருடாமல் என்னசெ
ய்வார்கள். அவ்வினத்தவருக்குப் பிச்சையும் இடுவதில்
லை, கூலிக்கு எந்த வேலையிலும் அவர்களை அமர்த்
திக்கொள்வதுமில்லை அவர்கள் நகரினுள் வரவுங்கூடா
தெனின் அவர்கள் திருடாமல் என்னசெய்வார்கள். அ
வர்களை மற்றவர்களைப்போல் நடத்தினால் அவர்கள் ஏ
ன் திருடுவார்கள். இக்காலத்தில் அங்கிலேயர் மனைக
ளில் வேலையில் அமர்ந்திருப்பவர்கள் திருட்டு முதலிய
துன்மார்க்க செய்கைகள் புரிந்து வருகின்றனரா ? இல்
லையே. ஆகையால், பறையர்முதலியோரின் குற்றத்தி
ற்குப் பிராமணர் முதலியோரே காரணங்களாக இருக்கி
ன்றனர். ஆகையால் பிராமணர் முதலியவர்கள் தங்க
ள் சொத்தைக் களவுக் குட்படுத்தாதிருக்க வேண்டில்
அவர்களையும் தம்மினத்தவரைப்போலவே நடத்தி அ
வர்களையும் படிப்பிக்கவேண்டும். அவர்களிடத்திலும்
பக்ஷமாய் இருக்கவேண்டும்.

இவ்வுலகில் எந்தஜாதியாரேனும் நாகரீகத்திலும், ஐ
சுவரியத்திலும் செல்வத்திலும் விருத்தியடைய வேண
டுமானால் அச்சாதியார் கலவித்தேர்ச்சியிலும் அப்பியாசி
க்கத்தக்க சாஸ்திரீக கல்வியிலும், கைத்தொழில் விரு
த்தியிலும், இவை மூலமாக வியாபாரத்திலும விருத்தி
யடையவேண்டும். ஏனெனின், யுக்தி புத்தியின்றி முர
ட்டுத்தனமும் பலமு மட்டுமிருந்தால் பயனில்லை. ஆகை
யால், எச்சாதியார் மேற்சொன்னபுத்தி முதலியவற்றில்
சிறந்திருக்கின்றனரோ அவர்களே முரட்டுத்தனமும் ப
லமுமட்டும் உடையவர்களைவிட நாகரீகத்திலும் ஐசுவ
ரியத்திலும் செல்வாக்கிலும் சிறந்திருக்கிறார்கள். ஆ
கையால், பறையர் முதலியவர்களே ? நீங்கள் சமஸ்த
சுகாதாரங்களையு மடைந்து சிறப்படைய வேண்டுமானா
ல், உங்களுக்குள்ளிருக்குங்கெடுதிக ளனைத்தையும் நிவ
ர்த்தித்து, கல்விகற்று நல்லொழுக்கங்க ளனைத்தையும்
பின்பற்றவேண்டும். துர்நடத்தைகளாவன.—மதுபா
னஞ்செய்தல், சுருட்டு பிடித்தல், பொய் களவு கொலை
புரிதல், சூதுவிளையாடல், அகந்தை வார்த்தையாடல்,
முதலியவற்றை நிவர்த்திக்க வேண்டும். அதன் பின்
உங்கள் பிள்ளைகளை துர்விளையாட்டும், துன்மார்க்க சக
வாசமும் இல்லாதிருக்கும்படிக்கும் நன்றாகவாசிக்கும்ப
டிக்கும்செய்து, நாடோறும் நீங்கள் அனைவரும்ஸ்நானஞ்
செய்து உங்கள் வஸ்திரங்களையும், மனைகளையும் சுசி
யாகவைத்திருக்கவேண்டும. நீங்கள் கல்விகற்று சர்
ஜன சகவாசமபெற்று உயர்பதவிக்கு வந்தபின் நால்வ
கைவருணத்தவரும் உங்களுக்குப் பூர்வகாலந் தொட
ங்கி செய்துவருஞ் சூதுகளையும், வஞ்சனைகளையும் பற்
றிப் புத்தகங்களாக எழுதிதுரைத்தனத்தாருக்கு அறிவி
க்கவேண்டும். பிராமணர்முதல் நால்வகை வருணத்
தவரும் தங்களுக்கு சுய அரசாட்சி வேண்டுமென ஆங்
கிலேய துரைத்தனத்தாரை கேட்டுக்கொண்டிருக் கிறா
ர்கள். ஜாதி பிரிவினையையுடைய இத்தேசத்தவர்களுக்
கு சுய அரசாக்ஷியைக்கொடுப்பதற்கு அங்கிலேயதுரை
த்தனத்தார் அவிவிவேகரல்லர். ஜாதிபிரிவினை இத்தேச
த்தில் இருக்கும்வரையில் இவர்களுக்கு சுய அரசாக்ஷி
யைக் கொடுக்கவேமாட்டார்கள், அவ்வாறு ஒருக்கால்
கொடுத்தாலோ இத்தேசத்தவர்கள் உங்களை நாசஞ்செ
ய்து விடுவது திண்ணம். ஆகையால் இவர்களுக்கு அ
வ்வதிகாரங் கொடுப்பதற்கு முன்னமே நீங்களனைவரும்
வாசித்து முன்னுக்குவரவேண்டும். நீங்கள் பூர்வகாலந்
தொடங்கி பிராமண கட்டுப்பாட்டிற்கு சிறிதும் இணங்
காது விலகியிருப்பதால் நீங்கள் எங்களிலும் அதி துரி
தத்தில் விருத்தியடையலாம். நீங்கள் வாசித்து நாகரீ
கமடையும் வரையில் நால்வகை வருணத்தவருக்கும் அ
டிமைப்பட்டே யிருப்பீர்கள்.

M. MASILAMONI.

ஸ்ரீ வியயவருஷத்திய

ரிப்பன் பாக்கெட் பஞ்சாங்கம்.

இவ்விந்துதேசத்து இராஜப் பிரதிநிதியாயிருந்து பல நன்
மைகளைச்செய்தும்செய்துகொண்டும் சற்குணசீலராய் பிரகா
சிக்கும் லார்டுரிப்பன் பிரபு அவர்கள்ஞாபகக்குறியாக ஓர்
பாக்கெட்பஞ்சாங்கம் பார்த்திபவருஷத்தில் பிரசுரஞ்செய்
தோம். அவ்வருஷத்தில் எமது அச்சுயந்திரசாலை நூதன
மாய்த் தாபிக்கப்பட்டபடியாலும், வருஷப்பிறப்பிற்குள் வெ
ளியிடவேண்டுமென்று துரிதப்பட்டதினாலும் நாங்கள் விலை
க்குவாங்கியிருந்த பழைய பாஸ்டர் பாக்கெட்பஞ்சாங்கத்தி
லிருந்தபிழைகள் முழுதையும் திருத்துவதற்கும், நாங்கள்
புதிதாய் அப்பஞ்சாங்கத்தோடு சேர்க்க உத்தேசித்திருந்த
லோகோபகாரமான அநேகவிஷயங்களைச் சேர்ப்பதற்கும்
கூடாமையாய்க் காலதாமதப்பட்டுவிட்டது. இவ்வியயவ
ருஷத்திய பஞ்சாங்கத்தில் அத்தகையபிழைகள் இலலாமல்
திருத்தியும், அக்குறைவுபாடுகளைப் பூர்த்திசெய்தும் உயர்ந்
தகாகிதத்தில் அழகான பைண்டுசெய்து மிகு உன்னதமான
சீமைப்பென்சலுடனும் ரிப்பன்பிரபுவின் சாயாபட்டத்துட
னும் பங்குனிமாசமுதலில் (அதாவது ஏப்ரல் மூ 15உ தி
க்துள்) வெளியிடப்போகிறோம்.

இப்பஞ்சாங்கம் தஞ்சாவூரைச்சார்ந்த திருவாதியில் வான
சாஸ்திரத்தில் மிகத்தேர்ச்சிபெற்று விளங்கும் பிரம்மஸ்ரீ
சுந்தரேஸ்வர ஸ்ரௌதிகளால் கணிக்கப்பட்டது. ரிப்பன்
பிரபுவைப்போல் விளங்கும் இப்பஞ்சாங்கம் தேசாபிமானமு
ம் நன்றியறிதலுமுடைய சுதேசநண்பர் ஒவ்வொருவர்கை
யிலும் அதியாவசியமாக இருத்தல்வேண்டும்.

வேண்டியவர்கள் அடியிற்கையொப்பமிட்ட என்னிடத்
தில் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம் 1-க்கு அணா—6
,, 10-க்கு ஒன்றும்
,, 25-க்கு மூன்றும்
,, 50-க்கு ஏழும்
,, 100-க்கு பதினைந்தும் இனமாகக்கொடுக்கப்படும்
புத்தகம் 1-க்கு தபாற்செலவு அணா 1-அனுப்பவேண்டியது

இங்ஙனம்.

கு. சடையாண்டி செட்டி.
மானேஜர் ரிப்பன் பிரஸ்.

ALL COMMUNICATIONS MUST BE ADDRESSED TO
P. Munisawmy Naiker, MANAGER
307 LINGHI CHETTY STREET
Madras.

ஒருபைசாத்தமிழன்

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

V,—No. 8.] MADRAS:—SUNDAY FEBRUARY, 21, 286 A. S. [MONTHLY, 5 ANNAS

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.—குறள்.

"அபிமானம்" என்பது என்ன?

இஃது அமரம்பேடு. தி-ம

ம-ா-ா-ஸ்ரீ. முந்துசாமிமுதலியாரவர்கள் எழுதியது.

ஒருவனுக்குத் தேசாபிமானம், ஜாதியபிமானம், மதாபிமானம் முதலியஅபிமானங்களிருக்கவேண்டுமென்கிறார்கள். அது யதார்த்தமே. ஆயின், தேச நடவடிக்கைகளிலாவது, ஜாதி யாசாரங்களிலாவது, மதக்கோட் பாடுகளிலாவது காணப்படும் குறைவுகளை எடுத்துக்காட்டி இன்னின்னவற்றை விலக்குவது யுக்தமா யிருக்குமென்று குறை கூறுவோனை அபிமான மில்லாதவனென்று சொல்வதால், ஒருவன் தன் தேசம், ஜாதி, மதம், பாஷை முதலிய வற்றில் குற்றங்களிருக்கினும் அவற்றை யெடுத்துக்கூறாது, அதை யதைக் காத்து கள் [illegible] அநுப்புவந்நியர் குறை [illegible], அவாக [illegible] தித்திரயவர்களகையை நிலைநாட்டுவதுமே அபிமானமாகிறது.

இந்துமதம் பரவிய இந்துஸ்தானத்தை ஒருதேசமாகக்கொள்ளின், அதனுள்பலவகுப்பாருக்கு ஆசாரபேதங்கள் பலவாயிருக்கின்றன. இதனாலே இந்துமதத்தை அவலம்பித்திருக்கிற இந்துக்களில் மலையாளத்தார் மார்மேல் வஸ்திரம்போடுகிற ஸ்திரியை விலைமகளென்றும் போடாத ஸ்திரியைக் குலமகளென்றும் சொல்லுகிறார்கள். அப்படி தரித்தவள் தரியாதவளை மடைச்சி யென்றும், தரியாதவள் தரித்தவளை தாசியென்றும் தூஷிக்கிறதா யிருக்கின்றது. அவனவனுடைய ஆசாரம் அவனவனுக்கே சிறந்ததாய், உச்சிக்குடுமிக்காரன் பின்குடுமிக்காரனையும் இவன் அவனையும் ஏளனஞ் செய்கிறான். இதென்ன ஆசாரமெனில், அது குலாச்சாரதருமமென்கிறார்கள். இதைக் குலாச்சார அபிமானத்தினால் ஒத்துக்கொள்ளவேண்டிய தாயின், அவரவரும் தம்தம் பூர்வீக ஆசாரத்தில் நின்று விடவேண்டியதே யல்லாமல், ஒருவரை யொருவர்பார்த்து, 'நன்மைகடைப்பிடி' என்னும் ஔவையார் வாக்கின்படி சீர்மையை யேற்றுச் சீர்திருந்தவாவது சீர் திருத்தவாவது முயலக்கூடாது. முயலுகிறவன் ஏனையோரின்கண் அபிமானமற்றவனாகிறான். ஆயின், திருவான்கூர் மஹாராஜா அவர்கள் தனது நாட்டிலுள்ள ஸ்திரிகளுடைய மேற்படி ஆசாரம் நாகரீகமற்றதெனக்கருதி, மௌடீகமானநிலையிலிருக்கிற வெளிநாட்டார் கல்வி வளராமுன் ஒப்புக்கொள்வது அரிதென்றும், நாடுமுழுவதிலும் ஏககாலத்தில் திருத்துவது கஷ்டமென்றும் யோசித்து, நகரத்திற் குள்ளிருக்கிற மாதர்கள் அப்படி வஸ்திரந்தரிக்கவேண்டுமென்றும் ஏற்பாடுசெய்வது உசிதமென நியாயங்களை எடுத்துக்காட்டி நாகரீகத்தை மெல்லமெல்ல நுழைக்க முயலுவதாகக்கேள்வி. அப்படி முயலுவது உண்மையாயின், எவ்வெவராலும் எத்தேசத்தாராலும் புகழ்பெறத்தக்கதே. ஆயினும், பழமைபாராட்டுவதே அபிமானமென்று விருதுக்கொடிநாட்டுகிற அபிமானிகள் யாவரும் அந்த மஹாராஜா அவர்களை நிந்திப்பார்கள் போலும்.

இப்படிப்பட்ட அபிமானிகள், சேலஞ்ஜில்லாவில் அன்னதானப்பட்டிக்குச் சமீபத்திலுள்ள தேவதைக்குத் தமக்கு இன்னகாரியம் சித்தியானால் இத்தனை செருப்படியும் இத்தனை துடைப்பக்கட்டையடியும் பெற்றுக்கொள்ளுகிறோமென்றும் பிள்ளைபிறந்தால் இத்தனை அயல்புருஷர்களோடுசுகிக்கிறோமென்றும் பிரார்த்தனைசெய்துக்கொள்ளப்படுகிறதாகக்கேள்வியுற்றும் பிரார்த்தனைகள்பழயபடி நடந்தேறிவரவேண்டியவைதாமென்றுஒப்புக்கொள்ளவேண்டியதுதானல்லவா? இவர்களுடைய் கருத்தின்படி ஜாதிஅபிமானமென்பது அந்தந்த வகுப்பாரும் தத்தம் ஜாதியை உயர்வாகச்சொல்லிக் கொள்ளவேண்டியதுதானே. அப்படியே சொல்லிக் கொள்ளுகிறார்களல்லவா? ஒவ்வொரு வகுப்பாரும் தாம்தாமே உயர்வினரென்றால் தாழ்ந்தவர்கள் யார்? இக்கேள்விக்கு அவனவன் ஜாதிக்கு அவனவன் உயர்ந்தவனென்கிறார்கள். இதனாலும் அவனவன் திருஷ்டிக்கு மற்றவன் தாழ்ந்தவனாகிறான்: ஒருவகுப்பாருக்குள்ளும் ஒவ்வொரு குடும்பத்தார் தம்மோடு நெருங்கக்கலப்புற்றோரை மாத்திரம் சேர்த்துக் கொண்டு தம்மைத்தாமே புகழ்ந்துக்கொண்டு, மறுகுடும்பத்தாருக்குச்சொத்தை சொள்ளையெதுவாவது சொல்லிக்கொண்டு இகழுகிறார்கள். இது ஜாதியபிமானமோ மற்றென்ன அபிமானமோ? என்ன ஒருமையோ? சிலர் தாங்கள் இன்ன மகாரிஷிகோத்திரமென்றும், சிலர் தாங்கள் அக்கினியிற் பிறந்தவர்களென்றும், சிலர் தாங்கள் அக்கினி குண்டத்திற் குதித்தெழுந்தவர்களென்றும், இவ்வாறுபல பலகற்பனாவாதாரங்களைச்சொல்லிக்கொண்டு பெருமை பாராட்டுகிறார்களே யன்றி, அதை எதினாலும் ரூபிப்பவர்களைக்காணோம். பிரமாவினுடைய முகத்திலும் மார்பிலும் தொடையிலும்பாதத்திலும் [illegible] பிறந்தவர்களர்கள [illegible] ளாகிய (முறையே) பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்னும் ஒவ்வொரு பிரிவினுள்ளும் எத்தனையோ உட்பிரிவுகளுண்டாகி, ஒவ்வொன்றிற்கு மற்றொவ்வொன்றினிடத்தினுண்டாயிருக்கும் க்ஷாத்திரங்களையும் மாற்சல்லியங்களையும் யாவரும் அறிந்தேயிருக்கின்றனர். இந்தச் சிறுசிறு வகுப்புகளின் போராட்டம் இப்படியே யிருக்க, மேற்கண்ட நான்கு பெரும்பிரிவுகளாயினும் சரியாயிருக்கின்றனவா பார்ப்போம்.

இந்து வேதங்களும் இந்து மதமும் இந்த இந்துஸ்தானத்[illegible]ச்சயிங்கே உரியவை, ஆதலால் இந்துக்களுக்குரிய தேவனாகிய பிரமாவினிடமாய்ப் பிறந்தவர்கள் இந்துஸ்தானத்திலேதானே பிறந்திருக்க வேண்டும். பிராமணர்களாகிய ஆசாரியர்கள் அன்னியதேசத்திலிருந்துவந்தார்களெனத்தெரியவருகின்றது. ஆகவே மேற்படி பிறப்புக்கு ருஜூவெப்படி? இது இருக்கட்டும்; பூர்வத்திலிருந்த சூரிய வம்சமும் சந்திர வம்சமும் அற்றுப்போனதோடு க்ஷத்திரிய வம்சம் அவிந்துபோயிற்றென்றும், வைசிய குலம் நசித்து போயிற்றென்றும், சிலர் சொல்லுகிறார்கள். ஆயினும், சில வருஷங்களுக்கு முன்னே முனிசிபாலிட்டியில் ஜனசங்கியை எடுத்தபோது வேளாளர்கள் சூத்திர குலத்தில் சேர்க்கப்பட்டார்களென்பதைப்பற்றி பெரிய சபைசேர்ந்து ஆட்சேபனைகள் செய்யப்பட்டன. வைசியர்க ளின்னாரெனத் தெளிவபடாமையால், ஒவ்வொரு சில்லறை வகுப்பாரும் நாங்கள் வைசியர்கள் நாங்கள் வைசியர்களென எழும்பினார்கள், இது என்ன அபிமானம்? சரியை கிரியை முதல் மெய்ஞ்ஞானநான்கும் அரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே. சரியை - கிரியை - யோகம் - ஞானம் என்னும் நான்கும் ஒதிந்து வேதசம்மதமானவைகளே. வேதத்தின் அந்தமாகிய வேதாந்தமே ஞானம். வேதாந்தமானது மேற்படி நான்கு வருணபேதங்களும் கற்பனையென்று முறையிடுமானால், அந்தவருணபேத உற்பத்தியைச் சொல்லுகிற வேதபாகம் பொய்யாய் விடுகிறதே.

இந்த சித்தாந்தங்களை அனுசரித்தும், சூத்திரரும் வேதங்க
ளோதிவேதியரானார்களென்கிற சரித்திரத்தை அநுசரித்தும்,
பறையனொன்றும் பஞ்சமஜாதியென்றும் பிறரால்சொல்லப்ப
ட்டவர்கள், பிரமச்சியானமடைகிறவன்பிராமணனும்,செட்டு
செய்கிறவன்செட்டியும்,வேளாண்மைக்குரியவன்வேளாளனு
ம், படைக்குத் தலைவனா யிருப்பவன் நாயகனுமானாற்போல
பறையடித்ததினால் பறையனெனப்பெயர் பூண்டோமேயல்
லது வேறெதினால் குறைந்த ஜாதியாரானோம்? அறிவின்
மையாலும் ஏழ்மையாலும் குறைந்தவர்களா யிருந்தோம்.
இப்போது இந்தகுறைவில் இதர வகுப்பாருள் சில
ராயிருப்பதுபோல எங்களில் பலராயிருக்கிறோம். எங்கள்
ஏழ்மை நிலைக்குப் பூர்வீக அரசும் சத்துருவாயிருந்தது. நாங்
கள் கஷ்டப்பிராணிகள்; உயர்ந்தவருணத்தாரைப்போலல்ல;
எங்களில்பிட்சையெடுத்து ஜீவனஞ்செய்பவர்கள் அரிது ;
எங்கள் உழைப்பினால் எங்கள் வயிற்றையும் மற்றவர்கள்வ
யிற்றையுநிரப்பிவந்தோம்; இன்னும் நாடுகளிலே எங்களில்
பெரும்பாலார் அப்படியே செய்துவர வேண்டியிருக்கிறது.
விவேகமும் நிலமும் முதற்பணமும் குறைவினாலேதான் இ
ன்னும் அடிமைகளாக விருக்கிறோம். பிராமணர்கள் மற்ற
வருணத்தாரை அடிமையாக்கித் தங்கள் காலின் கீழ்மிதி
த்து வந்ததுபோல மற்றவர்களும் எங்களை மிதித்துவந்
தார்கள். அங்கிலேயதுரைத்தனம் பல்லாண்டு பல்லாண்டா
க வாழக்கடவது. இந்த துரைத்தனத்தினாலல்லவா நாங்
களும் மனிதராக எண்ணப்பட்டு தலைநிமிர்ந்து வருகிறோம்
இந்துக்கள் முழுமையையும் கணக்கிடுவோமாகில், இவ்வள
வுகாலஞ்சென்றும் அவர்களில் சிலர் மாத்திரந்தான் அங்
கிலேய பாஷாகியானத்தினாலும் அவர்களுடைய பழக்கத்தி
னாலும் கொஞ்சங்கொஞ்சமாய் சீர்திருந்தி வருகிறார்கள்.
அடிமைத் தளையினால் திமிர்கொண்டு தழும்பேறி கோணி
யிருக்கிற எங்கள் கால்கள் நிமிர்ந்துவர கொஞ்சகாலம்செ
ல்லவே செல்லும். இப்போது ஏற்பட்டிருக்கிற சுயச்கியான
சங்கம் தினே தினே விர்த்தியாகக் கடவது; அந்தச் சங்க
த்தாரால் எங்களுக்குரிய சுதந்தரம் இன்னதென்று நாங்க
ள் தெரிந்துக்கொண்டு வருகிறோம்; எங்கள் கண்கள் திறக்
கப்பட்டன. இனி எங்கள் சுதந்தரங்களை மற்றவர்களை
ப்போலக் கையாளாது விடோம். ஒரே ஊரில் ஒரேமதஸ்த
ராயிருக்கிறவர்களுக்குள் இடங்கைவலங்கை யென்கிற வித்
தியாசத்தினால் பே[illegible]களும் நெருக்கமும் வெவ்வேறாக
[illegible]
[illegible] பிரமாதமான கல
கங்களுண்டா[illegible] டிருந்தன. அவற்றிலும் நாங்களே
ஒருகட்சியி[illegible] முந்தித் தலைகொடுக்க வேண்டியவர்களா யி
ருந்தோம். அங்கிலேய துரைத்தனத்திலே மகாஜுபாவரா
கிய எல்லியட் துரையவர்கள் காலத்தில் அவருடைய விடா
முயற்சியால் சென்னையிலே அந்தக் கட்சிபேதங்கள் உடை
பட்டு, சமரசமுண்டாகி, ஒருபேட்டையி லுள்ளார் மற்
றொருபேட்டைக்குப்போக வேண்டுமாயின் கால்நடையாய்
ப்போகவேண்[illegible] நிர்ப்பந்தம் ஒழிந்தது. எங்களு
க்கும் [illegible]மற்றுந் தாழ்ந்தோராக எண்ணப்பட்ட தாசிகள் முத
லாயினோருக்கும் பட்டணத்திற்குள் நடந்துபோக வேண்டு
மென்கிற நிர்ப்பந்தமும் நீங்கிற்று. ஆயினும், ஒருகட்சி தா
சிகள் மறுகட்சிப் பிரபுக்களுக்கு மரியாதைசெய்யக் கூடா
தென்கிற நிர்ப்பந்தத்தினால், ஒருகட்சிப் பிரபுவீட்டுக் கச்சே
ரிக்கு மறுகட்சிப் பிரபுபோகும்போது பொதுமையான பி
ராமணனொருவனைக் கூட இட்டுக்கொண்டுபோகிறார். பா
டுகிறதாசி எழுந்து அந்தப்பிராமணனுக்குப் போடுகிற கும்
பிடு, கூடப்போன அந்தப் பிரபுவுக்கும் போட்ட பாவனை.
இப்படிப்பட்ட அற்ப ஆசாரங்களெல்லாம் உயர்ந்த வருண
த்தாரிடத்திலிருந்து ஒழிந்தவர்களுள்ளாக நாங்களும் சீர்திரு
த்தத்தில் மெல்ல மெல்ல நகர்ந்து வருவோம்" என்றுசொ
ல்லத் தலைப்படுகிறார்கள்.

அவர்கள் அப்படிச்சொல்வது சரியானதாக ஏற்றுக்கொ
ள்ளப்படாதல்லவா? ஏனெனில், அவர்கள் 'நாங்கள் உயர்
ந்தவருணத்தவர்களுக்குத் தொண்டுபூண்டு, அவர்கள் காலா
விட்டவேலையைக் கையாற்செய்து கொண்டு, தலையிலடித்
துக் கையில்விட்டதை வாயிற்போட்டுக்கொண்டு ஜீவிப்பதுதா
ன் எங்கள்பூர்[illegible] குலாச்சாரதருமம்' என்று சொன்னாலே
ல்லாமல், அது அவர்களுடைய ஜாதி அபிமான மாகாதே;
ஒவ்வொருவனும் தான் உயர்ந்தவருணத்திற் சேர்ந்தவனெ
ன்று சொல்ல இஷ்டங்கொள்ளுவதன்றி, ஒருவனைத்தனக்
கு மேற்பட்ட வருணத்தவனென்று சொல்வதரிது. குருக்
கள்மார்களும் ஆசாரியர்களுமா யிருக்கிற முதல்வருணத்தவ
ர்களாகிய பிராமணர்களை விதியில்லாமல் சிரேஷ்டமாகக்
கொள்ளுவதற்கும் சகியாதவர்களாய், அநேகர் பிர்ம்மஞியா
னமுடையவனல்லோ பிராமணன், இக்காலத்தில்பிராமண
த்துவமேது, அவர்களில்பலருக்குசாராயங்குடிக்கிறதும் மாமி
சபட்சணம் செய்கிறதுமே ஆசாரமும், இங்கிலிஷ்பாஷை
யே வேதபாராயணமுமா யிருக்கிறதென்று சொல்லி மனத்
திர்ப்தி செய்துகொள்ளுகிறார்கள். இது என்ன அபிமானம்
என்ன அருமை!

(இன்னும்வரும்)

சன்மார்க்க சங்கம்.

சகல வளமும் பொருந்திய விப்பிரதகண்டத்தின் கண்
ணே ஆங்கிலேய பாஷை யபிவிருத்தியாக வாகநம் இந்துக்க
ள் பூஜாநுஷ்டான முதலிய வாசாரங்களை யெல்லாங் கருத்
தில் வையாது கட்டிச்சுருட்டித் தங்கக்கத்தில் வைத்திருக்
கு மநுபோகமறிந்து அதற்காக வநுதாபப்பட்டு அவ்விஷயத்
தில் தாமே தலையிட்டுச்சன்மார்க்க சங்கமென்ற பெயர் வா
ய்ந்த சங்கங்களைச் சிற்சிலவிடங்களிலேற்படுத்தியது போல
வே மற்றுமுள்ள விடங்களி லாங்காங்கே புதுப்பிக்கவேண்
டுமென்னுங் கருத்துகொண்டுலோகோபகாரமா யாவருக்குஞ்
சென்னை பத்திரிகையொன்றின் மூலமா யறிவித்திருப்பதை
நம்பத்திரிகையினும்பிரகடனித்தனம். அத்தகையவுபகாரமவர்
எண்ணத்திற்பட அதைப்பலருக்கும் வெளியிட அதையே
நாமுந்தொட அதனால்தேகநுட்பமறியா மாந்தரின் அக்கியா
னங்கெட ஏதுவாயிருப்பதற்காக அவர்க்கத்தியந்த வந்தனம்
நித்தியமுந் தந்தனம்.

ஆனால் மேற்படி சங்கம் சன்மார்க்கமெனும் பெயரைச்
சூடியுளதால் அப்பெயரோ நிலைத்தோங்குதற்குச் சிற்சில த
டைகளுண்டென நமது புத்தியிற்படுமாறு வெளியிடுவோம்.
அவைவருமாறு.

முதலாவது—நந்தேயமே ஆங்கிலேயர் தேசம்போல ஒ
ரேமதமுஞ் சாதியுமுடையதன்று; ஈண்டே சைவம், வைஷ்
ணவம், கிறிஸ்தவம், மகமதியம் முதலிய மதங்களென்னுங்
காரிருளால் மறைக்கப்பட்டிருப்பதால் சிலர் வைஷ்ணவ மத
த்தைச்சார்ந்த சங்கங்கள் கூடவும், சைவர் அதைச்சார்ந்த ச
ங்கத்தை யேற்படுத்தவும் மற்ற மதங்களு மவ்வாறே தத்தமக்
[illegible]
[illegible] அங்கங்
ண்டாம். உண்டாயின் முன்னம் அல்லது இப்[illegible]
கொன்றிற் கொன்று சண்டை யிட்டு அதனால் கடவுள்பட்
டபாடும் படுகின்றபாடும்தெரிந்திருக்குமே; அதுஒரு போக்கா
யிருந்த போதினும் இனியுண்டாகுஞ் சங்கங்கள் ஒன்றுக்கொ
ன்று மூட்டிக்கொண்டால் முடிவாகக் கடவுள்பாடு அம்பல
மாய்விடும்போற் றோற்றுகின்றது தோற்றவே சங்கத்தின்
முன்னுள்ள அடைமொழியாகிய சன்மார்க்கம் என்பதற்கு
ஹாநிவருமே யாயின் என்னமார்க்கமென வெண்ணுவர் வி
வேகிகள்?

இரண்டாவது.—பாலியர்களாலும் சிறுவர்களாலும் ஏற்படு
த்தப்பட்டா லிடேறுமா "கன்றுகள்கூடிகளைபறிக்கச்சென்ற
வாறுபோல்" தாறுமாறாய்விடுமென்பதிற்சந்தேக மிராதே;
ஆகையால்இச்சங்கத்தின்தலைவர்வேதாந்தசித்தாந்த சன்மார்க்
கரும் மாணாக்கரின் நான்குவித தாரதம்மியங்களை எளிதிலு
ணரத் தக்கவரும், வடமொழியிலேனுந் தென்மொழியிலே
னும் வேதநுட்ப ஆராய்ச்சியுள்ளவரும் அநுபோகியுமாயிருப்
பதுடன் நன்னடத்தை யுடையவராயு மிருத்தல்வேண்டும்.
அன்றியும் மாணாக்கரின் பக்குவாபக்குவங்களை நோக்கி அவர
வர்க்குரிய அந்தஸ்துப்பிரகாரம் சரியை கிரியை யோகம் ஞா
னம் என்னும் நான்கு பாதத்தில் யார்யார்க்கெது உரித்
தோ அவரவர்க்கதனைச் சந்தேக விபரீதமற போதிக்கும்
போதனாசக்தி யுள்ளவராயு மிருத்தல் அத்தியாவசியக மாகு
ம். இன்றேல் என்னவாகுமென அவரவரே கண்டு தெளிய
லாம். தெளிவதால் மறைய பாஷாப்பியாசிகள் ஏதே
தோ சாஸ்திரங்களை யெல்லாங் கற்றுத் தேர்ந்தோமெனும்
பெயர் ஒன்றுவந்தால் சாலுமென் றிறுமாந்திருப்பதுபோய் ந
ம் வேதமும் வாசாகயிங்கர்யமாய் சிரத்தை, பக்தி, வைராக்கி
ய மென்னு மூன்றுமின்றித்தற்காலமுள்ள போலிஞானிகட்கு
அநுசரணையாய் வேதாந்த சித்தாந்த ஞானக்குஞ்சுகள் கூட்
டமதிகரித்து,

'தன்னையறியார் தலைவன்றனையறியார்
முன்னைவினையின் முடிவறியார்—பின்னர்
குருக்களென்றுபேரிட்டுக்கொள்ளுவர்களையோ
தெருக்கடனிலே சிலர்.

என்ற வெண்பாவை கீகர்த்துப் பட்டி ஞானிகளும் குட்டி ஞானிகளும் நிறைந்திடுமே. ஆதலினால், நம்முன்னோர்கள் பெயர்களெல்லாங் கெடுமே. அந்த வபசாரம் நம்மைத்தொடுமே. ஆகையால், மேற்கூறிய சங்கங்களின் ஏற்பாட்டினால் அதன் அடைவையே யிடைவிடாமற் கைப்பிடியாய்ப் பிடித்துச் சன்மார்க்கர்களாகும் வண்ணம் விசேஷப் பிரயத்தனஞ் செய்து தொடுத்ததை முடிப்பார்களானால் நற்கதிக்காளாக்கும் நன்னெறியாய்ப் பிரகாசிக்குமென்பதிற் கிஞ்சித்துமையமிரா.

மூன்றாவது-மாணாக்கரை வந்தவுடனே சங்கத்திற் சேர்த்துக் கொள்வதாற் கேடுண்டாம். ஆகையால் சிலகாலம் அவர்களைச் சோதனையில் வைக்கவேண்டும். நாளாவர்த்தியிலவர் குணகுணங்களைக் கண்டறிந்து பின்னர் எந்த வகுப்பிற் குரியவரோ அந்த வகுப்பிற் சேர்க்க[illegible]வண்டும்.

நான்காவது-வகுப்புகள் (Classes) பிரிக்கப்பட் டிருக்கவேண்டும்.

ஐந்தாவது-வஞ்சகமாணாக்க ரநேகருள ராகையால் அன்னோர் ஆசாரியர் முன்னிலையில் மாத்திரம் பயபக்தி விசுவாசத்தோடிருக்கிறதுபோற்பகட்டிப்பின்னால் துர்க்கிருத்தியங்கள் செய்வதும், குருவை நிந்திப்பதும்பற்றி அவாள் ஜாக்கிரதையாயிருந்து அவர்களை யக்கணமே சபையைவிட் டப்புறப்படுத்தல் வேண்டும். ஏனென்றால் 'நூற்றைக்கெடுத்தது குறுணி' என்றது போல அத்தகையரால் ஏனையருங்கெட ஹேதுவுண்டாம்.

ஆறாவது-மேற்படி சபைக்கு சமரஸசன்மார்க்க சங்கமெனப்பெயரிட்டு எம்மதமும் சம்மதமாய்க்கொண்டு காரியங்களை நடத்திவருவார்களானால் நாளுக்கு நாள் நகர்ந்ததுகாணம்மானே என்றதுபோல மதாபிமானங்கள் சிறுகச் சிறுக நீங்குதற்கு ஏதுவாகும்.

இன்னின சிலவேற்பாடுகளைச் செய்து வைக்கப் பிரயத்தனஞ் செய்வீர்களாயின் ஒருவாறழகுடைத்தாம் அங்ஙனமின்றி சன்மார்க்க சங்கத்திற்குத் தலைவராய் விட்டோம். அப்பெரும் பெயரையும் பெற்றோம். வேதமெல்லாங் கற்றுவிட்டோம் என்று அகங்கரித்து ஜம்பத்திற்காக வதிகாரியாவார்களானால்,

"சாத்திரத்தைப்பொங்கிவைத்தசட்டிதனைக்கிட்டவைத்துப், பாத்திருந்தா[illegible]"

என்றபடி வெறுமனே சாத்திரத்தை வாசித்து அதன்படிச் சொன்னாற் சாலுமா? சாலாதே ஆகையால்,

"சாத்திரத்தின்சார்பு தனையறிந்துநின்றுதான்
சூத்திரத்தினுள்ளே சுருக்கிலே பார்த்திருக்கக்
கோளெல்லாந்தீருங் குருவினருள்பெருகி
வாழ்கலாமென்றுமகிழ்ந்து"

என்ற செய்யுளைப்போல நடத்தி வருவோமானால் தற்காலத் துலகின் கண்ணடர்ந் திருக்கும் போலிக்குருக்களின் பிழைப்பில் மண்விழுதற்கும் அக்ஞானிகள் சுக்ஞானமடைதற்கும். காரணமாகும் அதனால் மேற்படி வஞ்சகரின் மாயத்தைவிட்டு நீங்கற்கு ஹேதுவாகும்.

"மெய்க்குருவைத்தேடு வெறித்தவெளிகாட்டும்
பொய்க்குருவைத்தேடி நீ போகாதே-மெய்க்குருகு
ஞானமனடுங்கா னடுவெளியிலே நிற்குந்
தோணமற்றோனுங் குறி"

அவ்வாறன்றி

"குருக்களென்றுசொல்லிக் குலாவித்திரியாதே
குருக்களளித்தகுறியறியீர் குருக்களே
எங்கேயிருந்தீ ரெவ்விடத்தே மெய்க்கொண்டீர்
அங்கேயிருந்ததறி"

இவ்வாறறிந்த குருவையடைந்து

"தியானமூலம் குரோர்மூர்த்திம்
பூஜாமூலம் குரோர்ப்பதம்
மந்த்ரமூலம் குரோர்வாக்யம்
முக்திமூல குரோர்க்ருப:"

[illegible]ன்றுஸ்தோத்ரஞ்செய்து அவரது வாக்குகளை மலையில[illegible]க வெண்ணி மனனம்பண்ணினால், பின்னர்

[illegible]ற்றட்டாதகொம்பி லிருக்கும்பராபரத்தை
[illegible] முட்டாக்குபோட்டொருபெண் மூடினள்-கிட்டி
[illegible]ந்துறையயுண்டமிழ்ந்துகாட்டினனென்றனுக்கு
தியவ[illegible]வாகிவந்தகுறி"

"மெ[illegible] பாவி னிலக்கியர்த்த மடைந்து கிருதார்த்தராக [illegible]ம்.

நன்மொழி.

நாம் எதினின்றுவந்தோம், மீளவும் எதில் சேர்ந்து விடுவோமென்னும் வினா நம் ஒவ்வொருவருக்கும் அதி யாவசியமானதாகவிருக்கிறது. நாம் எதினின்றுஉற்பத்தியானோமோ மீளவும் அதனிடம் ஐக்கியமாய் விடுகிறோம். எவ்வாறெனின், புல் உதிரமாகவும், உதிரஞ் சுக்கிலமாகவும், சுக்கிலம் பசுவாகவும், பசுவின் உதிரம் பாலாகவும், பால் தயிராகவும், தயிர் வெண்ணெயாகவும், வெண்ணெய்நெய்யாகவும், மாறுவதுபோல நாம் தாழ்ந்த ஜீவ ஜெந்துக்களினின்றே படிப்படியாக உயர்ந்து இம்மானிடஉருவைப்பெற்று உயர்ந்திருக்கிறோம். மூலபதார்த்தம் அந்தந்த ரூபத்தினின்று மற்றொரு ரூபத்திற்குமாறுகையிலுண்டாகும் முயற்சிக்கே அததற்கு ஒத்தமரண வேதனையாம். இம் மரணவேதனை ஸ்தாவர வர்க்கத்தில் ஓர் வகையாகவும், ஜீவப்பிராணி வர்க்கத்தில் மற்றோர்வகையாகவு மிருக்கிறது. மரண வேதனைஎன்பது:—ஒரு ரூபம்பெற்ற மூலபதார்த்தம் மற்றோர் ரூபத்திற்குச் செல்ல முயலும் அறிகுறியாம். மரணமென்பது உருவெடுத்த பதார்த்தம் இல்லாமற்போவதென்பதல்ல, அதன் நாமரூபஇடங்கள்மட்டும் மாறி பதார்த்தம்அழியாமல் என்றென்றுமுள்ளது. தேகத்தினுள் மனம் (mind) என்றொருதருமமிருக்கிறது. சமயவாதிகள் அது தேகத்திற்கு அன்னியமானதென்றும் தேகத்தை இல்லிடமாகக்கொண்டு அதனுள் பிரவேசித்திருக்கிறதென்றும், அதனையே ஆன்மாவென்றுங் கூறுகின்றனர், மனம் அல்லது ஆன்மா பிரத்தியேகமானதென்னின், குளோரபாரமில் (chloroform) மயங்கி இருப்பவனிடத்தும் மனம் இருக்கக் காண்கிறோமில்லையே. ஆகையால், மனமென்பது தேகத்தின் குணமேயன்றி அதற்குப் பிரத்தியேகமான வேறொருவஸ்து வல்ல, ஆகையால் பிரியமானவர்களே! இறந்தவர்களுக்[illegible]ங்கள் இயற்றவேண்டிய சடங்குகள[illegible]ன்:—இறந்தவரின் பிறப்பு குடிவாழ்க்கை முதலியவற்றைப்பற்றி எழுதிப்பிரேதக்ஷேம உற்சவகாலத்தில் வந்தவருக்கு உபன்யாசஞ்செய்து அதன்பின் கடற்கரையோரத்திலிருப்பவர்கள் அப்பிரேதத்தை கோணிப்பையினுள்ளிட்டு மச்சங்களுக்கு ஆகாரமாக நடுக்கடலில் போட்டுவிடவேண்டும். மலைக்கு அருகிலிருப்பவர்கள் மேல் மூடி யில்லாத பெட்டியினுள் பிரேதத்தைவைத்து கழுகு பருந்துகளுக்கு ஆகாரமாக மலையுச்சியில் வைத்துவிடவேண்டும். சமுத்திரமும் மலையும் ஆரண்யமும் நெருங்கி இராத இடங்களில் வசிப்பவர்கள் பிரேதத்தைப் புல் பூண்டு செடிகளுக்கு எருவாக பூமியில் க்ஷேமித்து விடவேண்டும், எங்கும் மனிதர் சஞ்சரிக்குமிடமாகவும் சாகுபடி பூமியாகவுமிருந்து மசானங் குறுகினதாக இருந்தால் அவ்விடங்களிலுள்ளோர் பிரேதங்களைத் தீமூட்டித்தகனஞ் செய்துவிடவேண்டும். மனையினின்று பிரேதங்களைச்சுடலைக்கு யாதொரு ஆரவாரமுமின்றி கொண்டுபோகவேண்டும். மேற்கண்ட உபன்யாசத்திற்கே பிரேதக்ஷேம உற்சவமென்னப்படும். பிராமணர்மட்டுமல்ல பூலோகத்திலுள்ள சமஸ்த சமயவாதிகளும் சாச்சடங்கால் தேகத்தின் குணமாகிய ஆன்மா [illegible]வென்பதற்கு ம[illegible] லாபலன்கள் கிடைக்குமென் [illegible]றெண்[illegible] அவ்வுற்சவத்தை மிகு மேம்பாட்டுடன் கொண்ட[illegible]கின்றனர். அச்சடங்குகளனைத்தும் அறிவீனருக்குரிய பயனற்ற கோட்பாடுடையதென்பதில் எவ்வளவும் ஐயமில்லை. க்ஷேமிக்கப்பட்ட மாந்தர் எங்கு சொல்லுகிறார்களெனின், புல், பூண்டு, மரங்களாகவும் காய்கனிகளாகவு மாறி, ஆடுமாடுகளுக்கும், ஆகாயத்துப் பறவைகளுக்கும் ஆகாரமாகின்றனர்.

இத்தேசத்தவர்கள் கலியாணங் கருமாந்திரம்முதலிய கிரியைகள் பிராமணரைக்கொண்டே இயற்றப்படவேண்டுமெனவும், பிராமணரை யொழிந்து செய்வது செல்லமாட்டாதெனவுங் கூறுகின்றனர். பிராமணர் இத்தேசத்திலன்றி மற்றெந்த தேசத்திலும் தீவிலுமில்லையே. ஆரிய வர்த்தமென்னும் இக்கீழ்கண்டத்திலன்றி வேறெந்த தேசத்திற்காயினும் பிராமணர் செல்வின் அவர்கள் ஜாதிபிரஷ்டராகின்றனர். ஜாதிபிரஷ்டரைக் கொண்டு கலியாணம்முதலிய கிரியாதிகளை இயற்றுவிக்கின் அது நியாயமானதாக அங்கீகரிக்கப் படமாட்டாதாம். அங்கிலேய துரைத்தனத்தின் ஆளுகையிலிருக்கும் போர்ட்ப்ளேயர், மொரிஷியஸ், ஏடன், ரங்கூன், இவற்றில் அநேக இந்துக்கள் குடியேறித் தங்கள் குலாசார மதாசாரங்களினின்று சிறிதும் வழுவாமல் அவைகளையே பின்பற்றி அவ்விடங்களில்வசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் குலாசார மதாசாரங்களின் பிரகாரம் ஸ்ரார்த்தமுதலிய கிரியைகள் பிராமணரைக்கொண்டு செய்விக்கப்படவேண்டுமே. பிராமணரைக்கொண்டு இயற்றுவிக்க அவ்விடங்களில் பிராமணரில்லையே. பிராமணர் அவ்விடங்களில் குடியேறியிருக்கின் அவர்கள் ஜாதிபிரஷ்டராக அங்கீகரிக்கப்படவேண்டுமே. ஜாதிபிரஷ்டரைக் கொண்டு இயற்றுவிக்கும் சடங்கு நியாயமானதாக அங்கீகரிக்கப் படமாட்டாது. ஆகையால் இவ்விடங்களில் இந்துக்கள் பிராமணரில்லாமலே விவாகமுதலிய கிரியாதிகளை இயற்றுகின்றனர். அவ்வாறே நீங்களும் விவாகமுதலியவற்றை ஏன் பிராமணரைத் தருவிக்காமல் இயற்றலாகாது. இத்தேசத்தினின்று இதரதேசத்திற்குச்செல்லுபவர்கள் ஜாதிபிரஷ்டராகின்றனரெனின், இராணுவத்தில் சேர்ந்திருக்கும் அநேகமாயிரம் இந்துமத யுத்தவீரர்கள் ஈஜிப்டு, மால்டா, ஆப்கானிஸ்தானம், அபிஸீனியா, பர்மா, சீனு இவ்விடங்களுக்குச் சென்று வந்திருக்கின்றனர். அவ்வளவுபேரையும் ஏன் ஜாதியினின்று ஒதுக்காதிருக்கிறீர்கள். ஒருவர் இருவர் மட்டும் [illegible] அவர்களை எளிதில் நிக்கிரகித்துவிடலாமென்றெண்ணி ஒதுக்கிவிடுகிறீர்கள். இதென்ன நியாயம்?

M. MASILAMONI.

முத்தியாலுப்பேட்டையைப்பற்றி முனிஸிபால்டி கவனிப்பு.

சென்னை முனிசிபாலிடிக்கு நான் நீ எனப் போட்டி போட்டுக் கமிஷனரான மெம்பர்கள் இப்போது மூலைவிட்டிலுறங்குகிறார்கள். மீட்டிங்கில் சரியாய் ஆஜராவதில்லை. வீதிகளில் சென்று பார்வையிடுவதில்லை. வீதிகளில் குப்பை சரியாய் எடுப்பதில்லை. சாக்கடை தள்ளுகிறவன் இஷ்டமிருந்தால் தள்ளுகிறான். இல்லாவிடில் கொஞ்ச கஞ்சம் சேத்தை எடுத்துவிட்டுப்போகிறான். சாக்கடை தள்ளின பிறகு குழாய் நீர் விட வேண்டுவது ஏற்பாடு, நீர்விடுகிறவன் சாக்கடைதள்ளியாயிற்று எனப்பாராது தன் வேலையைத் தான் செய்தமுடிக்க எண்ணிக் குழாய் யந்திரத்தைத் திருப்பிவிட்டுப் போகிறான், மீண்டும்வந்து யந்திரத்தைத் திருப்பும் சமயத்தில் அல்லது அதற்குச் சிறிது நேரம் முன் சாக்கடை தள்ளுகிறவன் வந்து சாக்கடைதள்ளுகிறான். இவ்[illegible]றைக்கேட்பார் யார்? ஓவர்சியர் தரிசனமும் கஞ்சி வரதராஜர் கருடோற்சவதரிசனமும் ஒன்றாகவிருக்கிறது. ஓவர்சியர் இன்னாரெனத் தெருவார்க்குத் தெரிவதில்லை. ஒரு நாளாவது தெருவில் நுழைந்து வேலைக்கார் தப்பைக்கண்டு பிடித்துக் கண்டித்தால்இவர் ஓவர்சியரென அறிவார்கள். ஓவர்சியர்தான் வரதராஜராயிருக்கின்றனரோ எங்ஙனம் தமது வேலையைச் செய்யப்போகிறார்? ஓவர்சியருக்குமேல் பைதீசாகக் கமிஷனர் புறப்பட்டால் அச்சமிருக்கும். இது பேருக்கு இங்கிலீஷ் துரைத்தனமும் நடவடிக்கைக்கு நவாப்புதுரைத்தனமுமாயிருக்கிறது. ஓவர்சியர் தமது வேலையைச் சரியாய்ச் செய்யாமல் ஆபீசுக்கு மாத்திரம் போக்குவருத்தாயிருந்து "முப்பது நாளே போடி பூவிராகனே வாடி" என்னும் பழமொழிக்கிணங்க மாதம்போனவுடன் பணத்தை அடித்துக்கொண்டுபோகிறார். ஒரு வீதியிலுள்ள வோடர் ஒருவர் ஓவர்சியர் வீதியில் வருவதில்லையென்று முனிஸிபாலிடிக்கு எழுதினால் அவ்வோவர்சியர் அவ்வோடரிடம் வந்து 'நான் வந்ததற்குச் சாக்ஷிகொடுக்கட்டுமா வரவில்லை என்பதை ருசுப்படுத்துவீரா' என்றாராம். அவ்வோவர்சியருக்குச் சாக்ஷி வெகு துர்லபமோ பொய்சாக்ஷிக்குக்கருப்போ நபர் ஒன்றுக்குக் கால் ரூபாய் தரின் நான் நீயென முந்துவரே, இவர் தப்புசாக்ஷியைக் கொண்டு வந்தால் வோடர் சும்மாவிடுவரோ, அதோகதியாக்கிவிடாரோ. முத்தியாலுப்பேட்டை இந்து தேசாபிமானசபையார் வீதி சுத்தமாயில்லையென்றும், இதைப்பற்றிச் சொல்ல ஓவர்சியர் நேரிடுவதில்லையென்றும், பிரஸிடெண்டு அவர்களுக்கு லிகிதமூலமாய்த் தெரிவிக்க வேண்டுமென்றும் சில தினங்களின் முன்னர் பேசினார்களாம். பரோபகாரமுள்ள ஓ சபையாரே இது நல்லவிஷயந்தான் அவசியம் எழுதுங்கள் மறந்து போகாதீர்கள்.

பொது நன்மை விரும்பி.

வியயவருஷத்திய

ரிப்பன் பாக்கெட் பஞ்சாங்கம்.

இவ்விந்துதேசத்து இராஜப் பிரதிநிதியாயிருந்து பல நன்மைகளைச்செய்தும்செய்துகொண்டும் சற்குணசீலராய் பிரகாசிக்கும் லார்டுரிப்பன் பிரபு அவர்கள்ஞாபகக்குறியாக ஓர் பாக்கெட்பஞ்சாங்கம் பார்த்திபவருஷத்தில் பிரசுரஞ்செய்தோம். அவ்வருஷத்தில் எமது அச்சுயந்திரசாலை நூதன[illegible] பிக்கப்பட்டபடியாலும் வருஷப்பிறப்பிற்குள் வெளியிடவேண்டுமென்று துரிதப்பட்டதினாலும் நாங்கள் விலைக்குவாங்கியிருந்த பழைய பாஸ்டர் பாக்கெட்பஞ்சாங்கத்திலிருந்தபிழைகள் முழுதையும் திருத்துவதற்கும், நாங்கள் புதிதாய் அப்பஞ்சாங்கத்தோடு சேர்க்க உத்தேசித்திருந்த லோகோபகாரமான அநேகவிஷயங்களைச் சேர்ப்பதற்கும் கூடாமையாய்க் காலதாமதப்பட்டுவிட்டது. இவ்வியயவருஷத்திய பஞ்சாங்கத்தில் அத்தகையபிழைகள் இல்லாமல் திருத்தியும் அக்குறைவுபாடுகளைப் பூர்த்திசெய்தும் உயர்ந்தகாகிதத்தில் அழகான பைண்டுசெய்து மிகு உன்னதமான சீமைப்பைண்டிஞுடனும் ரிப்பன்பிரபுவின் சாயாபடத்துடனும் பங்குனிமாசமுதலில் (அதாவது ஏப்ரல் மூ 15உ தேதி) வெளியிடப்போகிறோம்.

இப்பஞ்சாங்கம் தஞ்சாவூரைச்சார்ந்த திருவாதியில் வானசாஸ்திரத்தில் மிகத்தேர்ச்சிபெற்று விளங்கும் பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர ஸ்ரௌதிகளால் கணிக்கப்பட்டது. ரிப்பன்பிரபுவைப்போல் விளங்கும் இப்பஞ்சாங்கம் தேசாபிமானமும் நன்றியறிதலுமுடைய சுதேசநண்பர் ஒவ்வொருவர்கையிலும் அதியாவசியமாக இருத்தல்வேண்டும்.

வேண்டியவர்கள் அடியிற்கையொப்பமிட்ட என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகம்	1-க்கு	அணா—6
,,	10-க்கு	ஒன்றும்
,,	25-க்கு	மூன்றும்
,,	50-க்கு	ஏழும்
,,	100-க்கு	பதினைந்தும் இனுமாகக்கொடுக்கப்படும்

புத்தகம் 1-க்கு தபாற்செலவு அணா 1-அனுப்பவேண்டியது.

இங்ஙனம்.

கு. சடையாண்டி செட்டி.

மானேஜர். ரிப்பன் பிரஸ்.

☞ ALL COMMUNICATIONS MUST BE ADDRESSED
P. Munisawmy Naiker, M[illegible]
307 LINGHI CHETTY S[illegible]
Madras.

தத்துவவிவேசினி

இந்து சுயக்கியான சங்கத்தாரால் பரிபாலிக்கப்பட்டு வருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V,—No. 9.] MADRAS:—SUNDAY FEBRUARY, 28, 286 A. S. [MONTHLY, 4 ANNAS

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.—குறள்.

பதப்பிரயோகவிவேகம்.

பதப்பிரயோக விவேகமற்ற பண்டிதர்கள் கையிலும் பத்திராதிபர்கள்கையிலும் அகப்பட்ட சாத்திரங்களும் பத்திரிகைகளும் படும்பாட்டை எம்மனோரால் கண்டு சகிக்க முடியாமையா யிருக்கின்றது. தாம் தாம் பிரயோகிக்கும் பதத்தின் நியதார்த்தம், காரணார்த்தம், சம்பந்தார்த்தம், லட்சியார்த்தம் முதலிய அர்த்தங்களைத் தேறித் தெளிந்த பின் அந்தந்த பதங்களை யூகம் யுத்திகளாற் பாகுபடுத்திப் பிரயோகித்தல் வேண்டும். இங்ஙனம் செய்யச்சக்தி யில்லாதவர்கள் வீண்விஷயங்களில் தலைமுட்டிக்கொண்டு அவமானம் அடையாமல் உப்புகண்டம் பறிகொடுத்த பார்ப்பினிபோல இருப்பதே உசிதம். இத்தகையோரை இடம்பெற்றுழி யெடுத்துக்காட்டுவோம்.

நாம் கண்ணுற்றசுதேசாபிமானியென்னும்பத்திரிகையொன்றில் அடியிற்கண்டவாறு எழுதியிருக்கின்றது:—

தொண்டைமண்டலம் கல்விச்சாலையிற் சிலவாரங்களுக்கு முன்நிகழ்ந்த ஒரு சங்கத்தின் வருடோற்சவச் சிறப்பினையும் அத்தருணத்தில்இந்துக்களுக்குச்சீர் திருத்தத்தைச்செய்வான் வெளிவந்து பல பாஷாபண்டிதர்கூடி யிருந்த அவைக்களத்து இந்துக்களின் தற்கால நடையாதி பலவிஷயங்களை விரித்துவரைந்து மகாராஜராஜஸ்திரீ இரத்தினசபாபதிமுதலியார் வாசித்த பத்திரத்தின் சிறப்பினையும் சுதேசாபிமானியில் எமது பத்திரிகாபிமானிகளறியுமாறு வரைந்திருந்தோம் இவ்விஷயங்களை யொட்டியே சென்னையிலுள்ள விற்பனரொருவர் போலித் தேசாபிமானம் பாராட்டிச் சுதேசாபிமானி என்னும் பெயர்பூண்டு தம் அபிப்பிராயத்தை விளக்கிய நிருபத்தைத் தத்துவவிவேசினியிற் கண்ணுற்றோம் தத்துவவிவேசினி வாயிலாய்த் தமது அபிப்பிராயங்களை விளக்கிய நிருபநேசரான சுதேசாபிமானி நிதம் பெயர்படைத்த எம்பத்திரிகைக்கே தமது நிருபத்தை யனுப்பாததென்னோ அனுப்பினால் ஒருகால் நிருபம் பிரசரிக்கப்படாதென்னும் கருத்தக்கொண்டு பொய்யறிவு எனற்கேற்ற நூன் மெய்யறிவு எனத் திருநாமம் பூண்டாங்குச் சுதேசாபிமானிப் பெயர் பூண்ட நேசர் தம்நிருபத்தைத் தத்துவவிவேசினியிற்றோற்றுவித்தார் போலும் நிருபநேசர் மேற்கண்ட பத்திரவிஷயமா யெமது அபிப்பிராயத்தை மாறுகொள்ளுந் துணிவுடையரேல் தமது நிருபத்தை யெம்பத்திரிகையிற் றோற்றுவித்தல் உசிதமாகும் அங்ஙனம் செய்யலாம் இடந்தருவேம் அன்றியும் நிருபநேசர் விளக்குமாறு நியாயங்களை வெட்டி எமது அபிப்பிராயம் மெய்யறிவென்னும் பீடத்தின் மேலோங்குவதென்றறிஞர் அங்கீகரிக்கும்படி விடையுந்தருவேம்.

இதிற்குறித்த வருடோற்சவ சிறப்பில் இந்துக்களின் த[illegible]கால நடையாதிகளைப்பற்றி வாசித்தவர்பெயர் இரத்தினசபாபதிமுதலியாரல்ல ம-ா-ா-ஸ்ரீ இரத்தினசாமி [illegible]யாரவர்களே. இவரதுபிரசங்கத்தைப்பற்றியெழு[illegible]நும் சுதேசாபிமானியல்லர் இந்து அபிமானியே. [illegible]ப்யறிவு என்னும் நூல் பொய்யறிவு எனற்கேற்ற" தென்ற உரை நியாயமுகத்தாற் பிறக்காமல் நிராதரவாய்ப் பிறந்தமையால் வெற்றுரையே. "சுதேசாபிமானி" யில் தம் நிருபம் பதிக்கப்படா தென்கிற கருத்தினால் அதற்கெழுதவில்லை யென்பது அவர்கருத்தாக விருக்குமென்று யானெண்ணவில்லை. அம்மூலபத்திரிகை தத்துவவிவேசினியின் இங்கிலீஷ்பாகத்தில் பதித்திருக்கின்றமையாலும் அதைவாசித்தவர்கள் அதன்மாறுபட்ட கருத்தையும் அதன் சமாதானத்தையும் வாசிப்பதே உசிதமென்றும் எண்ணிவரைந்திருப்பார்போலும். அதனால் தம்பத்திரிகையில் எழுதாமல் விட்டதைக்காரணமாகக் கொண்டு விடையெழுதாமலிருப்பதுபத்திராதிபர்பாங்கும் சுதேசாபிமானமும் அன்று. இவர் எழுதவேண்டிய நியாயம் நி தம்பெயர்படைத்த இவர்தம்பத்திரிகையின் விளக்குமாறு வெளிவரின் நம்பத்திரிகையை இவர்க்கனுப்பத் தடையில்லை. அவர் இவருடைய நி தம்பெயர்படைத்த பத்திரிகைக்கு அனுப்பா விடினுந்தானென்? விவேசினியிலுள்ளதைப் பெயர்த்துப் பதித்து விடைபகரலாகாதா?

"அபிமானம்" என்பது என்ன?

இஃது அமரம்பேடு.

ம-ா-ா-ஸ்ரீ. முத்துசாமிமுதலியாரவர்கள் எழுதியது.

மதாபிமான மென்பது எது? நமது தேசத்தில் பூர்வீகத்திலாவது ஏக மதமா யிருந்ததா? இந்துமதமெனப் பெயர் பூண்டு, பல உட்பிரிவு மதங்களா யிருக்கின்றவை யொன்றையொன்று இகழ்ந்துகொண்டு வேதாந்த மீமூக அவ்வாறே முடிந்தது. விஷ்ணு ரிஷபமாகிச்சிவனைத் தாங்கினா னென்றும், வீரபத்திரன் [illegible]னைத் தோலையுரித்தானென்றும், பஸ்மாசுரன் தன் கையை எவன் தலையில் வைக்கிறானோ அவன் சாம்ப[illegible]ய்ப் போகும்படி கேட்டவரம் சிவன் தந்த பிரகாரம், அவ[illegible]சிப்பதற்கு சிவன் தலையில்தானேகையைவைக்கவரவே சிவன்[illegible]ந்தோடி ஒருகாயில் மறைய அந்தச்சிவனைக்காப்பாற்றும்பொருட்டு விஷ்ணு மோகினியாய்வந்து அந்த அசுரனை மயக்க அவன் தழுவப்போகையில், நீ அசுசியாயிருப்பதால் ஸ்நானஞ்செய்து வந்தால் சுகிக்கலாமென்று மோகினி சொல்ல, அவனப்படியே ஸ்நானஞ் செய்கையில் அவனதுகை அவன்தலையிற்படவே சாம்பரானான். இவ்விதமாய் விஷ்ணுவின் புத்தியுத்தியால் சிவன்தப்பிப்பிழைத்தானென்றும், சிருஷ்டி, ஸ்திதி, சம்மாரமென்னு மூன்றுகிருத்தியங்களை நடத்துவதற்கு விராட்டினிடமாக, பிரம்ம,விஷ்ணு,ருத்திரனெனமூன்றுகர்த்தர்கள்சகளீகரித்தார்களெனச் சைவர்கள் சொல்வதை வைஷ்ணவர்கள் மறுத்து, ஸ்ரீமந்நாராயணனிடமாய் பிரமன் தோன்றி பிரமனது நாபிக்கமலத்தில் சிவன் உற்பவித்தானென்றும், இந்துமத உட்சமயங்களே ஒன்றற்கொன்று மாறுபடச் சொல்லிக்கொண் டிருப்பதுமன்றி, ஒரு உட்சமயத்தார் சொல்வதை மறு உட்சமயத்தார் ஒப்புக்கொள்வதையுங்காணோம். விஷ்ணுவாலயத்தில் சாயங்காலம் திரைபோடுவதை வைஷ்ணவர்கள் அதுஇரணியனைச்சம்மரித்தவேளையாகையால்ஸ்வாமிமூர்த்தண்டியமாயிருப்பர் அப்போதுஅவரை தரிசிக்கக்கூடாததுபற்றித்திரைபோடப்படுகிறதென்கிறார்கள். சைவர்கள் அது பிரதோஷகாலமாகையால், அப்போது தங்கள் சிவன் நிர்த்தனஞ்செய்வதை தரிசிக்க பிர்ம,விஷ்ணுமுதலான தேவர்கள் வந்துவிடுகிறதினால் தங்களிருப்பிடத்தி விராததுபற்றி தரிசனைக்கு யோக்கியதை யில்லையென்பதாகத் திரைபோடப்படுகிறதென்கிறார்கள். இரணியாட்சன் பாயாகச் சுருட்டிக்

கொண்டுபோய்ச்சமுத்திரத்தில்ஒளித்துவைத்தபூமியைக்கண்டெடுத்துவருவதற்காக தங்கள் விஷ்ணுவராகாவதாரம் எடுத்தாரென்று வைஷ்ணவர்கள் சொல்வதற்கு மாருக, இன்னன் பெரியவனென்பதைப்பற்றிப் பிரமனுக்கும் விஷ்ணுவுக்கும் உண்டான வாதத்தை யொழிக்கவேண்டி (இந்த வாதம் தேவலோகத்தி லுண்டாயிருந்திருக்கவேண்டியதோ பூலோகத்திலுண்டாயிருந்திருக்க வேண்டியதோ?) சிவன் திருவண்ணமலையென்று இப்போது வழங்கும் ஸ்தலத்தில் அக்கினிஸ்தம்பமாக விஸ்வரூப மெடுக்க, அவரது முடியைக்காண பிரமன் அம்ஸரூபமெடுத்ததுபோல, அடியைக்காண விஷ்ணு வராகவதார மெடுத்தானென்று சைவர்கள் சொல்லுகிருர்கள். பிரமன் விஷ்ணுவை அபிஷேகஞ்செய்து பூசிக்க, அந்தச்சலத்தை சிவன் விஷ்ணுவினுடைய பாதத்தின் வழியாய்த் தன் ஜடையில் பிடித்துக் கங்கையாகத் தரித்தானென்கிற கதை விளங்கும்படி நாலைந்து வருடத்திற்கு முன்னே குச்சிலிக்கடையண்டைபட்டணம் பெருமாள் கோயிலுக்கெதிரில் ஒரு நூதன மண்டபத்தில் செதுக்கப்பட்ட பதுமை விஷயத்தில் மதாபிமானிகள் பட்டபாடு யாவருக்குந்தெரியுமே. ஒன்றற்கொன்று இவற்றிலுள்ள உயர்வு தாழ்வுகளை நான்விவரித்துச்சொல்லவேண்டியது அவசியமில்லை. வாசிப்பவர்களே தெரிந்துகொள்வார்கள். இதனுல் உட்சமயமாயினும் புறச்சமயமாயினும், உண்மையிருப்பினும் இராவிடினும், உண்மையில்லாமையினுல் நம்பிக்கையற்றிருப்பினும், அவரவரும் புறச்சமயத்தை நிந்தித்துக்கொண்டு தன்தன் பூர்வீகமதத்தைச் சிறப்பிப்பதே மதாபிமானமாக்கும். ஆயினும், முன்போலல்லாமல், இப்போது கட்சிப் பிரதி கட்சி மதச்சபைகளும் விபரீதப்பிரசங்கங்களும் ஒழிந்தன.

பற்பலதேசங்களில் சுயக்கியான சங்கங்கள்ஏற்பட்டிருப்பதினுலே, இத்தேசத்திற்கும் யாதொரு நன்மை உண்டாகாமற்போகவில்லை. இந்துமதங்களி லெதுவானுலும், கிரிஸ்துமதமானுலும், மகமதிய மதமானுலும், எதுவாவதொன்றை உண்மையானதாகக் கண்டறிந்து ஏகமதமாக நிலைநாட்டி, இப்போதுண்டாகி யெழும்பி வருகிற நாஸ்திகமதத்தை ஹிதம் செய்யவேண்டு மென்கிறஅபிப்பிராயஞ்சிலருக்குண்டாயிருக்கிறது. கடவுள் ஒருவரே என்று தமிழ்முதலிய பாஷைகளில் சொல்லியிருப்பினும், பூர்வத்திலும் இந்த அபிப்பிராயமுளதென்று ருசுப்பிக்க சிலர் பழமையாகிய சமஸ்கிருத பாஷையிலே பகவத்கீதையிலும் உபநிஷத்திலும், சிலஸ்லோகங்களைச் சில சிறுவர்களுக்குக் கற்பித்து ஒரு பெருஞ் சபையில் அவர்களைக்கொண்டு, கடவுள் ஒருவரேயென்றும், பாமரர்களுக்காக விக்கிரகாராதனை முதலியவை ஏற்படுத்தப்பட்டனவென்றும், அரங்கேற்றுவித்தார்கள். அதைக்கேட்டிருந்த சபையாரில் பெரும்பாலார் மிக்க மனமகிழ்ச்சியடைந்து கொண்டாடினர்கள். இவர்கள் எப்போதாங்கேளாததை நூதனமாய்க்கேட்டதாக மகிழ்ந்தார்களோ! அல்லது குழந்தைகள் அவ்வளவு தெரிந்துகொண்டனவேயென்று வியந்தார்களோ! இது [illegible]யாவதிருக்கட்டும்; இது நடந்து இப்போது ஒருமாசமாகிறது; அப்படி மகிழ்ந்தவர்களுள் பாமரர்களாயிருந்தவர்கள் கல்வியிலும் வயதுசென்றிருப்பதினுலும் அக்குழந்தைகளைப்பார்க்கிலும் அறிவு விளங்கினவர்களாயும் வியாபகஸ்தாளாயுமிருக்கின்றவர்களாதலால், அக்குழந்தைகளின் உபதேசத்தினுல், ஐயோ! நாம் இதுவரையில் பாமரராயிருந்துவிட்டோமே யென்று மனஸ்தாபப்பட்டு, பாமர கிரியைகளை விடுத்து கடவுள் ஒருவரேயென உண்மைஞான மடைந்தவர்களா யிருப்பார்கள். அப்படிக்கன்றி, ஸ்மசான வைராக்கியம், பிரசூத வைராக்கியமென்பதுபோல, உபதேசங் கேட்ட விடத்திலேதானே அந்த மதவைராக்கியத்தைவிட்டுபழையபடி பாமரர்ளாகவேயிருப்பார்களாகில் இவர்களையும் அக் குழந்தைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியதுதான். சிலர் சரியை கிரியைகளை விட்டு யோகநிலைக்கு வந்திருக்கிருர்கள்; இவர்கள் அந்தநிலையில் சரியான பயன் காணுவிடில் அதற்கு மேற்பட்ட ஞான நிலைக்காவது, சுயக்கியானநிலைக்காவது வரவேண்டியவர்கள்தானே. சிலர் சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று நிலைகளை விடுத்து, ஞானநிலையை அனுஷ்டித்து வருகிருர்கள். இவ்விதமாய் உண்மையறிதற்கு வரவர விசாரணைக்கிடமுண்டாகி படித்தரங்கள் மாறி வருகின்றன. கால்வலுமையுள்ளவன் இரண்டு மூன்று படி ஒருமிக்கத்தாண்டி சீக்கிரத்தில் நிலைக்குவந்து சேர்ந்தால், கால் வலுமையில்லாதவன் ஒவ்வொருபடியாய் நகர்ந்து கடையில் நிலைக்கு வருவதுபோல, புத்திநுட்பமுள்ளவர்கள் அதிதீவரத்தில் இடையிலுள்ள (ஞானமே சொல்லும்) கற்பனைப் படிகளைக் கடந்து உண்மை நிலைக்குவந்தால், புத்திநுட்பத்தில் குறைவுள்ளவர்கள் ஒவ்வொன்ருய் ஆராய்ந்து, வெகுகாலஞ் சென்ருயினும் உண்மை நிலைக்கு வந்துசேருவார்கள். 'சுடர்விளக்காயினுந் தூண்டுகோலொன்று வேண்டும்' என்னும் பழமொழிப்படி, உண்மையைக் கண்டறிந்தவர்கள் அதை அடிக்கடி எடுத்துச்சொல்லிக்கொண்டிருந்தால் மாத்திரமே, மற்றவர்கள் அதை மறுக்கவேண்டியாகிலும், முன்னிருந்த நம்பிக்கையிலே தானேயிருந்து விடாமல் ஆராய்ச்சி செய்யத்தொடங்கி, தங்கள் தவறுகளைத் தாங்களேகண்டு கொண்டபின்பு, உண்மைநிலைக்கு வர முயலுவார்கள்.

நமது பூர்வீக ஆசாரங்கள் துராசாரங்களாயினும் அவற்றைக் காத்துக் கொள்ளவேண்டு மல்லவா? உடன்கட்டை ஏறும் ஆசாரமும் செடில் குத்தியாடல், நெருப்பு மிதித்தல், முதலிய ஆசாரங்களும் துரைத்தனத்தாரால் நிறுத்தப்பட்டது. அபிமானிகளுக்கு இன்னும் விரோதமாகத்தா னிருக்குமென்று நினைக்கிறேன். சில வருடங்களுக்கு முன்னே தாரையென்னும் எமகாளகோஷத்தைத் துரைத்தனத்தார் நிறுத்தினபோது, அதினுல் தங்களுடைய ஆசாரத்திற்குக்கேடுண்டாகிறதென்று நாடு தேசங்கள் கூடி ஆட்சேபித்துக்காரியசித்தி யடையாவிடினும், உண்மையான அபிமானிகளென்று தாங்கள் மதித்திருந்த பெயரை ருஜுப்படுத்தினர்கள். பிரேதத்திற்கு எமகாள முதலிய வாத்தியகோஷம் அவசியமோ? அதினுல் நரகத்திற்குப் பாத்திரமான ஆன்மா மோட்சத்திற்குக் கொண்டுபோகப்படுமோ? (நாலடியார்) 'சிறுவரை நின்றே எறிப்பறையினை,' 'சாற்றுமேதொண் தொண்தொடுஎன்னும் பறை,' என்றதனுலும், இக்காலத்தும் மிக்கஏழைகள் பிரேதத்திற்குமுன் தமுக்கு மாத்திரம் அடித்துக்கொண்டு செல்வதினுலும், இது பூர்வீக வழக்கமாயிருந்திருக்கவேண்டு மென்றும், அதுவும் பிரேதம் வருவதைக்கண்டு பிறர் ஒதுங்கும்படி எச்சரிக்கை செய்வதற்காகஉத்தேசிக்கப்பட்டிருக்கலாமென்றுந் தோன்றுகிறது. (நாலடியார்) 'நார்த்தொடுத்திர்க்கிலென் நன்ருய்ந்தடக்கிலென்,' என்பதினுலும், திருவள்ளுவர் தனது பிரேதத்தைப் புரிகட்டியிழுத்துக்கொண்டு போய் வேலியில் எறிந்து விடும்படிக் கட்டளையிட்டாரென்பதினுலும், பிராமணர் முதலிய சில ஜாதியார் யாதொரு வாத்திய கோஷமில்லாமற் செல்வதினுலும், யாதொருகோஷமும் அவசியமில்லை யென்பதாயிற்று. அப்படியிருக்க, நம்முடைய ஆசாரங்களுள் துராசாரமாகத் தோற்றுமவற்றை நாமே விலக்குவோமாகில், நமக்கு எவ்வளவு பெருமையா யிருக்கும்! அப்படிக்கன்றி, மனக்கலக்கத்திற்கு ஏதுவாயிருக்கிற எமகாளகோஷ முதலிய அற்ப ஆசாரங்களை நிறுத்திவிட துரைத்தனத்தார் எத்தனித்தபோது, அப்படிச் செய்யக்கூடாதென்று ஆட்சேபித்த நம்மவர்களிடத்தில் துரைத்தனத்தாருக்கு என்னவிசேஷஅபிப்பிராயமுண்டாயிருந்திருக்கலாமோ அதை நாமே யோசித்தறிந்து கொள்ளலாம்.

பெண்கள் மயிரிழவு, மாரிழவு காலடவு கட்டியழல் என்னும் ஆசாரங்களை நடத்துகையில், கட்டியழும்போது, வாசல் பெரிதாயிருக்குமாயின், திட்டுத்திட்டாக பத்து பதினைந்துபேர் வட்டமாக நின்று கைகோத்து அசைந்தாடி ஒருவித ராகத்தோடு பாடிக்கொண்டு கொஞ்சகாலங் கழிந்த பிறகு, வேறு நடைச்சந்தத்தோடு பாடிக்கொண்டு காலடவு போட்டு மார்பிலடித்துக்கொண்டு சுற்றிவருகையில், புதிதாய்கற்றுக்கொள்ளுகிறவளாகவாவது விதரணை யில்லாதவளாகவாவதிருந்து, அடவு சரியாய்ப் போடாதவளைக் கையைப் பிடித்திழுத்து வெளியில் விட்டுவிடுகிருர்கள். இழவுக்கு அழப்போகையில் தலைமயிரை சிக்கில்லாமல் உடைத்துகோதிக்கொண்டு போய், எதிரெதிர் முகமாக நின்று, எதுகைமோனை தவருமல் அதற்கிசைந்த வேறு ராகத்துடனே பாட்டுகள் பாடிக்கொண்டுதலைமயிரை யிரண்டுகைகளாலும்விரல்களைக்கொண்டு சீவுகிருர்கள். கணவனை பறிகொடுத்துத் தவிக்கிறவளைக் கீழே தள்ளி மற்றவர்கள் அவளைச்சூழ்ந்து (லபலபவென்று) வாயிலடித்துக் கொள்ளுகிருர்கள். மார்மேலிருக்குந்துணியை எடுத்து இடுப்பில்வரிந்துகட்டிக்கொண்டும்மார்பிலடித்துக்கொள்ளுகிருர்கள். ஸ்திரீகள்மாத்திரமேயன்றி, புருஷர்களிலுஞ் சிலர் 'உன் கோயிலிடிய, உனக்குநான் என்ன குறை செய்தேன், வேண பணிவிடைகள் செய்தேனே, நீ எனக்கு இந்த கெதி வைத்தாயே, உன்னை நம்பினதற்குப் பலன் இதுதானு? இனியுன் வாயில் மண்ணுதான் என்று இவ்விதமாய்த் தன்தன் தேவதையை நிந்திக்கிருர்கள். அருமையாய்க் கற்றுக்கொண்டு செய்யப்பட்ட பரத நாட்டியத்திலே நடிப்பவர் வேருகவும்: அதற்கிசைவாக மேளக்காரம் பாட்டு நடத்துகிறவர்கள் வெவ்வேறு பேராகவு மிருக்கவேண்டியதாயிருக்க, இழவு நாட்டியத்தில் ஆட்டும் பாட்டும்

தாளமுமாகிய இம்மூன்றையும் ஒவ்வொருவருந் தனித்தனி ஏககாலத்தில் நடத்துகிறது அதிக சாமர்த்தியமே; பெருந் துக்கத்திலே, பழமை பாராட்ட வேண்டுமெனித்தம், துக்கத்தையொரு பக்கத்தி லொதுக்கி நிர்த்தனுதிகளில் கவனம் வைத்து முறை பிறழாது நடத்துவது பின்னும் விசேஷம். இப்படி செய்துவருவதும் ஜாதி அபிமானந்தானே! இதினாலேதான் பெண்கள் சமையல் செய்யும்போதும் சாவகாசமாய்த் தனியே உட்காந்திருக்கும்போதும் தாய், தந்தை, அண்ணன், தம்பி, கணவன், மகன் முதலிய உற்றார் இறந்துபோனால் அழவேண்டியதற்காக தாங்கள் கேட்டதும் கற்றதுமான பாட்டுகளைச்சொல்லி வழக்கப்படுத்துகிறார்களாம்.

கணவன் உற்றார் பெற்றார் முதலானவர்களில் யாரையாவது பறிகொடுத்தவளோடு காலைமுதல் மாலைவரையில் தங்களுக்குத் தீர்ந்தபோது சிற்சிலராய்வந்து இழவுகொடுத்து, அவளைப்போதும்போதுமெனச் சலிக்கச்செய்வது அந்த அலுப்பினால் அவள் இழவுதுக்கத்தை மறந்து, சரீர உபாதியாகிய சொந்த துக்கத்தில் மனந்திரும்பும்படிச் செய்வதற்கான யுக்தியாயிருந்திருக்கும். கபடமற்ற பூர்வீக காலத்தில், உயிருக்குயிரா யிருந்தவன் இறந்தபின்பு தனக்கழகிருந்தும் தன் சரீர மிருந்தும் என்ன பிரயோசனமென்று குய்யோமுறையோ வென்றழுது, மயிரைப் பிய்த்துப்போட்டு, வயிற்றிலும் வாயிலு மடித்துக்கொண் டிருந்திருக்கும்படியானதாகத் தோற்றும் பழமையைப் பாராட்டவேண்டி, தேசாபிமானம் ஜாதியபிமானமுதலிய அபிமானங்களினால் நாளுக்குநாள் கொஞ்சங் கொஞ்சமாக, மயிரைப் பிய்த்துக்கொண்டது சிவிக்கொள்வதாகவும், உருண்டு புரண்டு அழுதது காலடிவாகவும் வயிற்றி லடித்துக்கொண்டது ஒய்யாரமாகச் சில விரல்களை நீட்டியும் சில விரல்களை வளைத்தும் மார்பில் மெத்தெனச் சொகுசாக அடித்துக்கொள்ளும் மாரிழவாகவும், கணவா, துரையே, அண்ணா, அப்பா, அம்மா, மகனே என்னைவிட்டுப் போய்விட்டாயே, எனக்குத் திக்கு வேறேகாணேனே யென்று சொல்லிக்கொண்டது சந்தப்பாட்டாக மாறியிருக்குமாகில் இதுவும் நல்லநாகரீகமே! சீர்திருத்தமே! இக்காரியங்களில் இரண்டொன்று சில ஜாதியாருக்குளில்லையென்றாலும், மொத்தத்தில் யாவரும் இந்துக்களே. இந்த அனுசாரத்தை நம்மாடவர்களில் யாராகிலும் சம்மதமானதாகக் கொள்ளுவார்களா? அவலக்ஷணமென்பது பற்றி யாரையாகிலுங் கேட்போமாகில் நம்மில் சிலர் இதைத் தங்கள் மட்டில் நிறுத்தியிருக்கிறார்களே, வரவர நின்றுபோகுமென்கிறார்கள். சிலர் என்பது எத்தனைபேர்? இந்தக்கேள்விச்சமயத்தில் நிறுத்தினவர்களைத் தங்களில் சேர்த்துக்கொள்ளுகிறார்கள். எவனாவது நிறுத்த முயலும்போது அவனை, 'இவன் மற்றவர்களைப்போலத் தாய்வயற்றில் பிறந்தவனுயில்லை, ஆகாயத்திலிருந்து குதித்தவனுயிருக்கிறான், இவனுக்கு மாத்திரம் இரண்டு கொம்பு முளைத்திருக்கிறதாக்கும் இதுகளெல்லாம் வீண் சஷ்டக்கல்வி? முன்னோர்கள் நாள்முதல் நடந்துவருகிற வழக்கத்தை இவன் நிறுத்திப்போடுகிறானாம், என்று இகழுகிறார்கள். வரவர இது நின்றுபோகலாந்தான். வரவர யென்பது எவ்வளவுகாலம்? பெண்களுக்கு அவ்வளவாய் விர்த்தியாகாவிடினும் கொஞ்சங்கற்றறிந்தமட்டில், சிலர் தவிர மற்றவர்கள் முதிர்ந்தோருடைய சேர்க்கையால்பழைய வழக்கத்தையே அனுஷ்டிக்கிறார்கள். சிலர் மாத்திரம் வெட்கத்தினால் ஒதுங்கி நிற்கிறார்கள். இவ்விதமாய் அதுதானே யொழியத்தலைப்படுமாயின், எவ்வளவோ காலஞ்செல்லும். 'கூறையேறி கோழிபிடிக்கமாட்டாத குருக்கள் வானத்தைக் கீறிவழிகாட்டப்போகிறானோ' என்றாற்போல, நடந்துவருகிற இந்த அநாசாரத்தை நிறுத்துவதே கஷ்டமா யிருக்குமாயின, ஸ்திரீகளுக்குப் புனர்விவாகம் செய்வது, துரைத்தனம் பண்ணுவதுபோன்ற நூதனகாரியங்கள் அதிசுலபமா யிருக்குமோ?

(இன்னும்வரும்.)

ஜாதிபேதத்தால் விளையும் சங்கடங்கள்,

இந்துக்களாகிய நம்மவர்களுக்கு ஜாதிபேதத்தால் விளையும் சங்கடங்கள் பல. அவற்றுள் ஒவ்வொன்றையும் ஈண்டெடுத் துரைக்கவேண்டுமென்றால் காலமுமிடமும் போதாவாதலால் சிலவற்றை மாத்திரம் இவ்விடம் தீட்டுவேம்.

க. இந்துக்களாகிய நாம் பிறந்த நாள்தொட்டு பிரேதமாகும் பரியந்தம்மற்றமானிடர்களுடன் கலந்துஉண்டு உடுத்திக்களி ப்புற்றிருக்கச் சக்தியற்றவர்களாகிக்கினற்றுத்தவளைகள்போல் மற்றவர்களதுவளப்பத்தையும் வாய்மையையும் விசாரிக்காமலும், மற்றவர்களது நல்லொழுக்கநடை யுடை பாவனைகளைக்கண்டு அவற்றினை யனுசரித்தொழுகாமலும், மற்றவர்களது தீயொழுக்கப் படுகேடுகளைப் பார்த்து ஒத்திட்டு நமது சீர்கேடுகளைச்சீர்திருத்திக்கொள்ளாமலும் இருக்கின்றோம். இவ்வாறு நாமிருப்பதற்குக் காரணம் நம்மைப் பந்தித்திருக்கும் ஜாதிபேதக்கட்டேயல்லவா?

உ. இந்துக்களாகிய நம்மிலனேகர்வெகுவாய்வேசிகாந்தர்களாவும், தாசிவேசிகளுக்குத்தாம் தேடியதிரவியமனைத்தையும், பிதுரார்ச்சிதமாக வந்த திரவியமுழுவதையும் அழுதுவிடுவோர்களாகவும் இருப்பதற்குக் காரணமென்னை? நமக்கு இவ்வுலகத்தில் சிரேஷ்டமாகவுள்ளது ஆசை. ஆசைக்கிருப்பிடம் சிநேகம். அஃது சிறந்துதழைக்கும்ஸ்தானம் ஸ்திரிபுருஷாள். ஆகவே ஸ்திரியாவது புருஷனாவது முறையே புருஷனையும் ஸ்திரியையும் விவாகம் புரியவேண்டில் தத்தம் மனதிற்கு ரம்மியப்பட்டவர்களாகப் பார்த்து நியமித்துக்கொள்ளவேண்டிய ததியாவசியக மாகின்றது. ஆனால் இந்துக்களாகிய நாம்குலத்திற்பிறந்தது குரங்கேயானாலும்கொள்ளுவது உத்தமமென்று மணமகளும் மணமகனும் சம்மதமுறா திருக்கையிலேயே மணம்புரிவிக்கின்றோம். இக்கொடுவழக்கம் வேசி தாசிமார்கள் காமவலையில் புருடமச்சங்களைப்போய்ச் சிக்கிக்கொள்ளும்படி, செய்கின்றது. புருடமச்சங்கள் வேசையர் மோகவலையில் சிக்குறலும் ஆசைக்கணவர்கள் அகலப்பெற்ற குலமகளிரும் நிலைகுலைந்து கற்புநிலை பிறழ்கின்றனர். இவையெல்லாம் ஜாதிபேதத்தால் விளையும் தடுமாற்றங்களன்றோ?

3. மேலும் நமது குலமகளிரது நிர்ப்பாக்கியம்இத்துமட்டும் நிற்காமல் மென்மேலும் பெருகுகின்றது. அது வருமாறுவேசியர்வலைப்பட்டுழலும் தத்தமகணவர்கள் உயிர்வாழும் காலையிலேயேசுவற்றை வைத்துக்கொண்டுசித்திரம் எழுதுபவங்களை யொத்து மாலையிட்ட கணவன் பேர் வழங்கபிறர்பால் சுகித்து மகப்பேற்றினை யடைகின்றனர் சிலமாதர். இவ்விழிபகேட்டினிற்கு வித்தாயுள்ளது ஜாதிபேதமன்றோ?

4. இந்துக்களாகிய நம்மவருள் விதவைகளை மறுமணம் புரிவிக்காம லிருப்பதால் எத்தனை விதவைகள் எத்தனை சிறுவர்களைக் கைப்பிடித்திழுத்துக் கலவிகள் நிகழ்திப் புதல்வரைப்பெற்றுப்பூமியிற் புதைக்கின்றனர். இத்தனையும் ஜாதிபேதத்தால் விளையும் நிபந்தனையால் வந்ததன்றோ?

5. இந்து நாடாகிய நமது நாடானது நாளுக்குநாள் நலிந்துப்போவதற்குக் காரணம் யாது? ஓர்நாடானது செழிப்புறவேண்டுமாயின் அந்நாட்டிற்கு வேண்டிய யாவையும் அந்நாட்டில்தானே அந்நாட்டவர்களாலேயே யியற்றப்பட்டனுபவிக்கப்படுவதல்லாமல் பிறநாட்டிற்கும் வேண்டுவனவற்றைத்தானியற்றிச்சென்று தருவதாக விருத்தல்வேண்டும். இவ்வாறு செய்வதற்கு அந்நாடானது தனக்குள் ஐக்கிய பாவத்தையும் பிறதேசங்களுக்குப் போக்கு வருத்தையும் உடையதாகவிருக்கவேணடும். ஆகவே இந்துநாடாகிய நமது நாடானது பிந்தி நிற்பதற்குக் காரணம் உள்நாட்டில் ஐக்கியமின்மையும் பிறநாட்டுக்குப் போக்குவருத்தின்மையுமேயாம். மேலைய இருகாரணங்களுக்கும் ஆதிகாரணமாயுள்ளது ஜாதிபேதமன்றோ?

இவ்வாறு கொடுமைகளுக்கெல்லாம் ஆதிகாரணமாயுள்ள ஜாதிபேதத்தைச் சேதித்தாலொழிய மேதினியில் இந்துக்களாகிய நமக்கு பின்னிட்டகாலே முன்னிட்டு வைப்பதற்கு இடமிராது.

D.

சமயபுராதனம்.

யாதானுமோர் சமயமுண்டாய் ஓங்கிவளர்ந்து எண்டிசாமுகங்களிலும் பரவித்தழைத்து வருகையில்அதை நாசஞ்செய்ய மற்றோர் சமயமுண்டாவதும் அதையும் நாசஞ்செய்ய இன்னொருசமயமுண்டாவதும் இப்படியே சமயங்களனைத்தும் ஒன்றன்பின், ஒவ்வொன்று யுண்டாவதும், பின்னுண்டான சமயம்தான் பிரபலிக்க முன்னையசமயவாதிகளின் உதிரத்தை அருவிபோல் பெருக்கிவருவதும் இது சமயங்களுக்குரிய இயற்கையாம். இதனால் பிரபல மடைந்திருக்கும் கொள்கை பின்னுண்டானதென்றும், க்ஷீணதிசையை யடைந்திருக்குஞ் சமயம் முன்னுண்டானதென்றும் தெளிவாக விளங்குகின்றது. கௌதமபௌத்தரால் நிர்ணயிக்கப்பட்ட பௌத்தமதமானது இந்தியா, இலங்கை, திபெத்து, மங்கோலியா, மஞ்சூரியா, சீன, ஜப்பான், பர்ம்மா, சயாம் இவ்விடங்களனைத்திலும் வியாபித்துப் பரவி ஓங்கி வளர்ந்துதழைத்திருக்கின்றது. இப்பிரபலசமயமாகியபௌத்தமதத்தை இத்தேசத்தில் மட்டும் நாசஞ்செய்ய அற்ப சமயமாகிய பிராமணசமயம் நவீனமாக உற்பத்தியாகி. அதை நாசஞ்செய்து பிராமணசமயம் பிரபலமடைந்து வந்ததால் க்ஷீணதிசையை யடைந்திருக்கும் பௌத்தமதம் முன்னுண்டானதென்றும், பிரபலமடைந்திருக்கும் பிராமணசமயம் பின்னுண்டானதென்றும் கரதலாமலகம்போல் விளங்குகின்றது. இதற்கு சில திருட்டாந்தங்கள் எடுத்துக்காட்டுகின்றேன். சென்னைக்கடுத்த ஸ்ரீபெரம்பத்தூராரானைவரும் பௌத்தர்கள். வைஷ்ணவமத ஸ்தாபகராகிய உடையவரென்பவர் அங்குசென்று அந்நாட்டாரி லனேகரை வைஷ்ணவ சமயத்திற்கு உபாயதந்திரங்களால் திருப்பித் திரும்பாதவர்களைக் கற்காணங்களில்விட்டு ஆட்டியும் கழுவிலேற்றியும் வைஷ்ணவத்தை ஸ்தாபித்தார். ஜாலவித்தை கண்கட்டு வித்தைகள் கற்று பிராமணகொள்கையாகிய சைவ சமயத்தை அனுஷ்டித்த திருஞானசம்பந்த ரென்பவரை பிராமணர்கள் மதுரைக்கு அனுப்பி அங்குள்ளயாவரையும் பௌத்தமதத்தினின்று சைவமதத்திற்குத் திரும்பும்படி கற்பிக்கச்சொன்னார்கள். சில பிராமணர்களும் திருஞானசம்பந்தரும் அங்ஙனமேசென்று கூன்பாண்டியரின் மனைவியாகிய மங்கையற்கரசியையும், அவ்வரசனின் மந்திரியாகிய குலச்சிறை நாயனாரையும் ஏதேதோ உபாயதந்திரங்களால் தங்கள் கொள்கைக்குத் திருப்பி கைவசஞ்செய்து, அவர்கள் மூலமாகக் கூன்பாண்டியனையும் திருப்பிக்கொண்டபின் தைரியங்கொண்டு பௌத்தர்களாகிய அந்நாட்டா ரனைவரையும் வருவித்து நீங்களனைவரும் ஏககாலத்தில் நீறையணிந்து சைவசமயத்திற்குத் திரும்பிவிடவேண்டும். திரும்பாதவர்களனைவரையும் இதோ கொண்டுவந்து வைத்திருக்குங் கழுமரங்களுக்கு இரையாக்கி விடப்படுமென அங்கிருந்த பிராமணரும் திருஞானசம்பந்தரும் ஆக்கிரமித்து வற்புறுத்தினார்கள். இதனைக்கேட்ட பௌத்தர்கள் சினங்கொண்டு மெய்நடுங்கி ஆர்வாரித்து இங்கு கொண்டுவந்து வைத்திருக்குங் கழுமரங்களுக்கு பலியானாலு மாவோமேயன்றி, ஊன்நாற்றமடிக்கும் என்புகளை மாலையாகக் கழுத்திலணிந்து, புலித்தோலையுடுத்தி சாம்பலைச்சுவரி, ஆமோடு குதிரைகளை வதைத்து யாகத்தீயில் சமைத்துண்ணும் பாஷாண்டி மதத்தைப் பின்பற்றோமென்று சினந்துரைக்கவே அங்கிருந்த பிராமணர்களும், சம்பந்தரும் கிஞ்சித்தும் இரக்கமின்றி அவர்களனைவரையும் பிடித்துப்பிடித்து துடிக்கப்பதைக்கக் கழுவிலேற்றி உதிரப்பிரவாகத்தைப் பெருக்கி அவ்விடத்தில் சைவமதத்தை ஸ்தாபித்தனர். மற்றோரிடத்தில் இரணியனின் புத்திரனுகிய பிரகலாதனென்பவனை பிராமணர்கள் தங்கள்கொள்கைக்குத் திருப்பிக்கொண்டு, புத்திரனுக்கும் தந்தைக்குமே பகையைமூட்டி, பிள்ளைக்கும் தந்தைக்கும் வாக்குவாதம் நடந்துவருகையில் தேகவலிவுடைய ஓர்பிராமணன் புலிநகங்களைப்போன்ற நகங்களை எழுகினால்செய்து கையில்தொடுத்து கோரவேடம்பூண்டு ஓர் ஸ்தம்பத்தின் மறைவில்நின்று தருணம்பார்த்துஇரணியன்மீதுபாய்ந்து அவன் தொண்டையைக்கடித்துவயற்றைக்கிழித்துகுடலைப்பிடுங்கி மாலையாக அணிந்து தங்கள் வைஷ்ணவக் கொள்கையை ஸ்தாபித்தார். பூர்வகாலத்தில் பிராமணர் தங்கள் கொள்கையை ஸ்தாபிப்பதற்காக பௌத்தர்களுக்குச்செய்தஅநியாயமாகியகொலைபாதகங்களனைத்தையும் இதிலெழுதினால் மிகு விரியுமாதலால் இதனோடே நிறுத்துகிறேன். இப்படியேபிராமணர் ஒவ்வொருநாடுநகரமுஞ்சென்று இத்தகைய அநியாயங்கள் செய்து பௌத்தர்களை வெட்டி வெட்டி தங்கள் கொள்கையைநிலைநாட்டினர்.

ஆகையால் முன்னுண்டானது பௌத்தமதமென்றும் பின்னுண்டானது பிராமண சமயமென்றும் ஜலத்தின்கண் பிரதிபலிக்கும் சூரியபிம்பத்தைப்போல் விளங்குகின்றது. ஆகையால், பௌத்தமதமே யுண்டாய் 2500 வருஷமாகிறதெனின், அதற்குப் பின்னுண்டான சமயமாகிய பிராமண சமயமுண்டாய் சொற்பவருஷங்கள்தானிருக்குமென்று அனுமானிக்கப்படுகின்றது. பௌத்தரென்னும்பெயரைஉடைத்தாயிருந்தவர்கள் 12-பெயர். இப்பன்னிருவரில்,ஒருவர் வியாசருடைய காலத்திலிருந்து அவருடன் சமயவாதமாடி வந்தவர். இவர் பௌத்தமதத்தைஸ்தாபித்த முதல்பௌத்தரல்லர். அச்சமய மரபினரில் தோன்றி அதேபெயரைப்பெற்ற வேறொருபௌத்தர். இப்பௌத்தருக்கும் வியாசருக்கும்சமயசம்வாதம் நடக்கையில் பௌத்தர் வியாசரைநோக்கி நீங்கள் யாகாதி கிருத்தியகாலங்களில் ஜீவவதைசெய்து மாமிசத்தை உண்ணுவதால் உங்கள் கொள்கையில் ஜீவகாருணியமில்லை யெனவும், சமஸ்த ஜீவஜந்துக்களையும் தன்னுயிர்போலெண்ணி யாவற்றின்மீதும் ஜீவகாருண்ணியம் வைத்து ஜீவவதை செய்யாதிருக்க வேண்டுமெனவும் பௌத்தமதம் கற்பிப்பதால் அதுவே சிறப்புடையதென்று ஜெயக்கொடியை கரத்திலேந்தி ஜெயசீலராகத் தூக்கவே வியாசர் நாணமுற்று நாணித் தலைகுனிந்து அபஜெயப்பட்டுப் பின்னிடைந்து போனதினால் அவர்தம்மினத்தவர்களில் சிலரைத்தருவித்துத் தங்களுக்குள் ஓர் சங்கங்கூட்டி பௌத்தர்களை இவ்வாறன்று நாம் ஆங்காங்குள்ள குறுநில மன்னரிடஞ் சென்று அவர்கள் இறந்தபின் அவர்களை நாம் கடவுளாக எண்ணி வணங்குவதாக வஞ்சித்து அவர்களை கைவசப்படுத்தி பௌத்தர்களை நாசஞ்செய்து விடவேண்டுமெனத்திர்மானித்துக்கொண்டார்கள்.

M. MASILAMONI.

வர்த்தமானம்.

பிராஞ்சுதேசத்தில் குரங்கின் மாமிசத்தை மிகவும் உசிதமாகப் பொசிக்கப் பொசித்து வருவதாகத் தெரியவருகின்றது.

பாட்னாவிலே ஓர் இந்துவானவன் மறித்து காஷ்டத்தில் வைக்கப்பட்ட பிறகு உயிர்த்தெழுந்து வீடுவந்து சேர்ந்தானாம்.

குராச்சியில் இருவர் கூடிக்கொண்டு ஓர் குரங்கின் தேகத்தில் கிருசனெண்ணெயை யூத்தி தீயிட்ட குற்றத்திற்காகத் தலையொன்றிற்கு ஒவ்வொரு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டார்களாம். மேலும் குற்றவாளிகள் குரங்கினும் விசேடமான குரங்குகளாக விருக்கவேண்டும்.

அற்புதகுணமுள்ளஅரிசி.—ஆஸாம் தேசத்திலே ஒருமாகாணத்தில்அற்புதமுள்ள ஒருவகைத்தானியம் பயிராகின்றதாம். அரிசியை கடு நிமிஷம் தண்ணீரில் அல்லது பாலில் ஊரவைத்திருந்தால் அது வெந்து சோறுபதமாயுண்பதற்குத் தக்கதாகின்றதெனவும், அவ்வகைத்தானியம் அந்நாட்டில் விசேடமாய்ப் பயிராகிறதென்றும், அங்கிருந்து ஒரு நிருபநேசர் எழுதுகிறார். இப்படிப்பட்ட தானியம் இத்தேசத்து நிலங்களிற் பயிராகுமானால் மிகவும் அனுகூலம்தான். நீரில் ஊறவைப்பதொன்றினாலேயே சோறாக அரிசி சமைக்கையும்போது, நெருப்பு, விறகு தேவையில்லையே. சம்சாரதுக்கமும் பெரிது நீங்கும். இப்படிப்பட்ட நன்மையை அத்தேசத்துப் பிரஜைகள் பற்றிருப்பது வியக்கத்தக்கதே.

☞ ALL TAMIL LITERARY COMMUNICATIONS MUST BE ADDRESSED TO *P. Munisawmy Naiker* 307 LINGHI CHETTY STREET Madras.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியானபத்திரிகை.

VOL. V.—No. 10.] MADRAS:—SUNDAY MARCH, 7, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

மானுஷீகத்துவம்.	மதவைராக்கியம்.
"அபிமானம்"என்பதுஎன்ன?	சமயிகள் போர்.—இரகுநாதராவவர்கள்கூறியது.
ஒழுக்கபோதனை.	

மானுஷீகத்துவம்.

மனுஷருக்கு இன்றியமையாத அதியாவசியகமாய் இருத்தற்பாலதாந்தன்மை மானுஷிகம். பிறசீவராசிகளைப்போலவே மனுஷனுக்கும் உடல், உயிர், பிணி, மூப்பு, சாக்காடு, பசிநோய், காமநோய், மலோபாதை, சலோபாதை, இன்பம், துன்பம் முதலிய சகல சம்பவங்களும் ஒத்திருப்பினும் வெகு துரிதத்தில் அறிவு விர்த்திபெறும் பான்மையனுகவும், அவ்வறிவு விர்த்திகாரணமாக குற்றங் குணங்களை ஆராய்ந்தறிந்து அவற்றுள் தள்ளவேண்டியதைத் தள்ளவுங் கொள்ளவேண்டியதைக் கொள்ளவும் வல்ல பிருதக்கரண சக்தியைப் பெற்றுள்ளவன் மனிதனுதலால், இம்மனிதனே சகல சீவராசிகளினும் சிரேஷ்டனென மேன்மையடைந்திருக்கின்றான். ஓர் பதார்த்தத்திற்குப் பல சாதாரண குணங்களிருப்பினும் அதற்கே நியதமான சிரேஷ்டகுணமு மொன்றுண்டு. மானுஷீகத்துவமுடையார் யார்? எனின், பெண்ணுறுப்பு ஆணுறுப்புக்களெல்லாம் அமையப்பெற்றவர்களே மானுஷீகத்துவமுடையாரென்றும், காத்திரம், மனோதிடம், வீரம், அஞ்சாமை, ஊக்கமுடமை முதலிய தன்மையுடையார்களே மானுஷீகத்துவமுடையாரென்றும் சொல்லுவர். இவையெல்லாம் மனுஷருக்கும் உள்ள லக்ஷணங்களேயல்லாமல் வேறல்ல. ஆயினும் இவையனைத்தும் மனுஷப்பிரதான லக்ஷணங்களாகா. மனத்தூய்மை, குற்றங்கடிதல், நடுநிலைகோடாமை, பொய்பேசாமை, களவுசெய்யாமை, சூதுவிரும்பாமை, சொற்சோர்வுபடாமை, நீதிவிருத்தமான காமாதிபற்றுக்களில் மனதை அதிக்கிரமித்துச் செல்லவொட்டாமை முதலிய நற்குணநற்செய்கைகளே மனுஷப்பிரதான லக்ஷணங்களாம். ஆதலால் இவையுடையாரோ மானுஷீகத்துவமுடையாருமாம். இந்த சிரேஷ்ட லக்ஷணங்களுக்கெல்லாம் வியதிரேகமாகிய தன்மையுடையார்களெல்லாம் மேற்சொன்ன மனுஷ உருவைப்பெற்றிருத்தலால், மனுஷவேடம்பூண்ட மனுஷாமிர்கங்களேயாம். ஆதலால் மனுஷர்களெல்லாம் பொதுநீதியைப்போதிக்கும் பான்மையினவாகிய சாத்திரங்களையும், பதார்த்தம் விஷயம் முதலியவற்றின் குணகுணத்தைத் தெரிவிக்கும் பான்மையினவாகிய தத்துவநூல், நியாயநூல் முதலியவற்றையுமே அதியாவசியகமாய் உணர்தல்வேண்டும். இங்ஙனம் செய்யாமல் சமயாபிமானங்கொண்டு சமயப்படுகுழியில் வீழ்ந்து சமயசாத்திரங்களைக் கற்கப்புகுவார்களேல், அவ்வச்சமயங்களில் சிரேஷ்டித்துப்பேசப்பட்ட சமயதேவதைகளின் துர்க்கிர்த்தியங்கள் நாளாவர்த்தியில் தங்களுக்கும்படிந்து "நமது தேவர்களே அங்ஙனம் செய்தார்களே, நாம் செய்தாலென்னபிழை" யென்று மனோதிருப்தியெய்தித் தாங்களும் அத்தகைய அக்கிரமங்களைப்புரிந்து மானுஷீகத்தை நாளுக்குநாள் சவலைபோகச் செய்வார்களல்லவோ? அசுத்த அசப்பிய துன்மார்க்க கிரியைகளுக்கெல்லாம் தாயகமாகிய சமயநூல்களிலுள் நாமும் நமது புத்திரர்களும் புத்திரிகளும் பயில்வோமானுல், நம்மிடத்தில் நீதியும் மானுஷிகமும் எப்படி நிலைத்திருக்கும்? அதிவிவேகமும், பெருந்தகைமையும், ஆழ்ந்த கல்வியும், சூழ்ந்த உணர்வும் உடைய சர்வகலாசாலைப் பண்டித சிரோன்மணிகள், வித்தியார்த்திகளுக்குப் பரீக்ஷாபாடமாக ஏற்படுத்தப்பட்ட காவியங்களில் ஸ்திரிவர்ணனையாகவும், ஒடியமாகவும் இருக்கப்பட்ட பாடல்களையும் அடிகளையும் மாற்றிவிடுகின்றார்களே, அவர்கள் கருத்தும் இங்ஙனம் செய்தற்குக்காரணமும் யாதென நாம் யோசிக்கலாகாமோ? நமது மதநூல்களில் என்ன அசப்பியங்கள் இருக்கின்றனவெனின், நேற்று நடந்தேறிய சிவராத்திரியைப்பற்றிக்கூறும் மகாத்மியத்தைப் பார்ப்போம்—

ஆதியிலே தேவர்கள் பிணி மூப்புச் சாக்காடு இல்லாமல் அவுணரினும் தாங்கள் வலிமையோடிருக்கவேண்டி விஷ்ணுவினிடம் சென்று வேண்ட, அவர் அவ்வேண்டுகோளிற்கிரங்கி மந்தரகிரியை மத்தாகவும், வாசுகியைத் தாம்பாகவும் பூட்டி, அவுணரை யொருபுறமும், தேவரை யொருபுறமும் பிடித்துக் கடைவித்தபோது, அவ்வாசுகி கக்கிய விஷஜுவாலையைச் சகிக்கலாற்றாது தேவர்கள் "ஹாலா, ஹாலா" வென்று ஓலமிட, அப்போது சிவன் அவ்விஷத்தைத யுட்கொண்டாரென்றும், அவ்விடம் உட்சென்றால் சிவனுக்கு மோசம் வருமென்று பார்வதி கழுத்தைப் பிடித்துவிட்டதாகவும், விஷமேறியவர் நித்திரைசெய்தால் அது மண்டைக்கேறி மரணம் சம்பவிக்குமென்று அன்றிராமுழுதும் சிவனோடு தேவகணங்களும் நித்திரையற்றிருந்தார்களென்றும் அன்று சதுர்த்தசியென்றும், இதுகாரணமாகவே சிவராத்திரி கொண்டாடப்படுகிறதென்றும், இத்தருணத்திலே அமுதமும், அதனுடன் சந்திரனும், வெள்ளைக்குதிரைமுதலிய இன்னுஞ்சிலவும் உற்பவித்தனவென்றும், அவ்வமுதத்தை அவுணருண்டால் அதிகபலம் பெறுவார்களென்று அவர்களை மயக்க விஷ்ணு மோகினி அவதாரங்கொண்டாரென்றும், அதைக்கண்டு அவுணரோடு "சர்வலோகைக நாயகனாகிய சிவனே" மயங்கினாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

விவேகிகளே! இக்கதையில் பரஸ்பரவிரோத மிருப்பதோடு, இதனை மெய்யென நம்பி வழிபடுவோருக்கு துன்மார்க்க விருத்தியையும் உண்டாக்குவதாகவும் இருக்கின்றது. தம்மோடு சமமாய்ப் பாடுபட்ட அவுணர்களுக்குப் பாகங்கொடுக்காத துன்மார்க்கராகிய தேவர்களுக்குச் சிவன் விஷமுண்டும், விஷ்ணு மோகினியுருக்கொண்டும் துணைபுரிந்தார்கள். அச்சிவனும் அம்மோகினியைக்கண்டு மயங்கி அறிவிழந்தார். பரஸ்திரீகமனம் செய்வதே துன்மார்க்கம். அதிலும் பெண்ணுருக்கொண்டுவந்த தன்போன்ற புருஷனை இச்சிப்பது அதிலும் துன்மார்க்கம், இந்த துன்மார்க்கத்தை யறிந்தும் அறியாமலிருக்கும் ஆண் பெண்களுக்குக் கியாபகமூட்டி அவர்களை வருஷவாரி கொண்டாடச்செய்வது துன்மார்க்க வித்தை விதைத்து, அபிமான நீரைப்பெய்து விபசாராதிகளை வளர்ப்பதுபோலாம்.

"அபிமானம்" என்பது என்ன?

(௩௫-வது பக்கத்தொடர்ச்சி.)

இஃது

அமரம்பேடு, ம-ா-ா-ஸ்ரீ

முத்துசாமிமுதலியாரவர்கள் எழுதியது.

தன்னுடையகுமாரன் திருடனுயிருக்கக்காணில் அவனைத் தகப்பன் என்னசெய்யவேண்டியது? தேசம், ஜாதி, மதம் முதலியவற்றில் அபிமானம் வைக்கவேண்டுமென்கிற கருத்தின்படி, அந்தப்பிள்ளையினிடத்தில் வைக்கவேண்டிய புத்திராபிமானத்தினுல், அவனைத்திருடனென்று இகழுகிற பிறரோடு தன்மனச்சாட்சிக்கு விரோதமாய் வீணுக்குச்சண்டையிட்டு, அவன் மகாயோக்கியன், என்பிள்ளையைப்போல ஒருவனுமில்லை, அப்படிப்பட்டவனைப் பொறாமைமுதலிய துர்க்குணத்தினுல் வீணுய் நிந்திக்கிறார்களென்று அவன் பட்சத்தில் பரிந்துபேசி, திருட்டுத்தனத்தில் அவனை உற்சாகப்படுத்துவதுதான் அபிமானமோ? அல்லது அவனைத் தானுங்கண்டித்துப் பிறரைக்கொண்டும் அவனுக்குப் புத்திசொல்லுவித்து, தனக்குவேண்டியவர்கள் அவனையெங்கே கண்டாலும் அவனுடையநடத்தையைக் கண்காணிக்கும்படி கேட்டுக்கொண்டு பலவகையினுலும் புத்திவரப்பண்ணியவனைச்சீர்திருத்துவது அபிமானமோ? குறைகளிருப்பினும் அவற்றைப்பாராட்டாமல், ஜாதிமுதலியவற்றின் சார்பா

யிருப்பதே அபிமானமென்போமாகில், துரபிமானமென்ப
தயாது? அந்தவார்த்தையின்பொருள் என்ன? அதற்குப்பிர
யோசனம் ஒன்றையுங்காணேம். ஆதலால் அப்படிக்கல்ல,
நாற்றம் என்பது வாசனையென நற்கந்தத்திற்கும் துர்க்கந்த
த்திற்கும் பொதுச்சொல்லாயினும், துர்க்கந்தத்திற்கே உரி
த்தாய் வழங்குகிறது. அதுபோலவே, அபிமானமென்பது-
நல்ல அபிமானத்திற்கும் கெட்ட அபிமானத்திற்கும் பொது
வாயிருக்கிறது. ஒருவன் வித்தியாபிமானத்தினுல் கல்வி
யை விர்த்திசெய்கிரு னென்போமாகில், நன்மைக்கேதுவா
கிய கல்வியின்விர்த்தி நற்காரியமானதால் அந்த அபிமான
ம் நல்ல அபிமானமாகிறது ஒரு நியாயாதிபதியானவர் ஜா
தியபிமானத்தினுல் நடுவுநிலைமையில்லாமல் தன் ஜாதியா
ன்பட்சத்தில் தீர்ப்புச்செய்தாரொன்ருல், இங்கே அபிமான
மென்பது கெட்ட அபிமானமாகிறது; கெட்ட அபிமான
மே துரபிமானம்.

மேலே கேட்டைத்தருவனவாய்க்கண்டிருக்கிற விஷயங்
களில் வைக்கிற அபிமானம் துரபிமானமல்லவா? துரபிமா
னத்தைக் களையவேண்டியதோ, காக்கவேண்டியதோ? அபி
மானமென்பது துரபிமானமாகுமென்பதற்கு (ஸம்ஸ்க்ருத
ஸ்லோகம்) "అభిమానవశీకృతచేతసాం।బహువిదామపి।సంభవ
తిభ్రమః" (அபிமானவஸீக்ருதசேதஸாம்।பஹுவிதாமபி।ஸம்
பவதிப்ரமஃ) அபிமானத்திற்கு ஸ்வாதீனப்பட்ட மனசையு
டையவர்கள், வெகுவாய்த்தெரிந்தவர்களாயிருந்தபோதிலு
ம், பிரமைக்கு உட்படுவார்களென்பதேபோதுமானதாகும்.

ஆதலால், துரபிமானத்தை விடவேண்டியதுபற்றி, அப்
படிப்பட்டவையாகத் தங்களுக்குத்தோற்று மவற்றைக்களை
யமுயலுவோரை "அபிமானிக"ளென்று பெயர்வகித்திருப்ப
வர்கள் அபிமானங்கெட்டவர்களென்று பொதுமையாக வீ
ணுய்த் தூஷிக்கிருர்களேயன்றி, அன்னோர் நல்ல அபிமான
த்தைத் துரபிமானமென்றுசொல்லுவது இன்னகாரணத்தி
னுல் தப்பபிப்பிராயமாயிருக்கிறதென்று எடுத்துக்காட்டுவ
தில்லை, காட்டினுல், அது திருப்திகரமாயிருக்கும்பட்சத்தி
ல், அவர்களும் சிர்ப்படுவார்கள்.

தாங்கள் பழமைபாராட்டிக்கொண்டு தேசாபிமானமுத
லிய அபிமானமுடையவர்களாயிருக்கிருேமென்று சொல்
லுகிறவர்கள் பூர்வாசாரங்களிலேதானே நிற்கிருர்களோ
அல்லது மாறிவருகிருர்களோ என்பதையோசிப்போம். ந
ம்மவர்களுடைய பூர்வீக ஆபரணங்களாகிய நவடம், சேர்
வை, கழுத்துக்காரை, பவழமும், பொன்குண்டுங்கோத்த கை
யாபரணம், பூசாலிச்சிலம்புபோன்ற கால்தண்டைமுதலிய
சிறப்பான ஆபரணங்கள் இப்போது எங்கேபோய் ஒளித்த
ன? ஜிமிக்கை, ஜம்புஞ், போஞ்சி, பேசர்நத்து முதலிய ஆ
பரணங்கள் எந்தஜாதியாருக்குரியவை? அந்தப்பெயர்கள்
எந்தப்பாஷை? நமக்குப் பூர்வீகமாயுள்ள பலகாரபட்சணங்
களாகிய போளி, தோசை, அதிரசம், வடை, சுகியம், மு
றுக்கு, பயிற்றுண்டை, எள்ளுண்டை ஆகிய இவற்ருேடு இ
க்காலத்தில் நாம் அனுபவித்துவருகிற ஜிலாப்பி, லட்டு, பூந்
தி, பூரி, அல்வா, கொக்கல்முதலிய மிட்டாயென்னும் பொ
துப்பெயருடைய பண்டங்களும், கிச்சிடி, புலவு, வக்காளா
பாத்து என்னும் உணவுகளும் எந்தஜாதியாருக்குரியவை?
அவற்றின்பெயர் எந்தப்பாஷை? மகமதியரோடு நாம் பழக
வேண்டியிருந்தகாலத்தில் அவர்களுக்குரியவற்றில் நமக்கு
வேண்டியவற்றை நாம் கைக்கொண்டதாகத் தெரியவில்லை
யா! இதை யொருவரும் யோசிப்பதில்லையாக்கும்! நாம்
யோசிப்போமாகில், பழமைபாராட்டலென்னும் அபிமான
ம் இக்காலத்தில் இன்னவிதமாய் மாறியிருக்கிறதென்று நா
ம் அறிந்துகொள்ளுவோம். இப்போது ஆங்கிலேயருடைய
பழக்கத்தினுல், ரொட்டி, பிஸ்கத்து, காபித்தண்ணீர், தேத்
தண்ணீர், கோட்டு, வெஸ்கட்டு, பெண்ட்லம், பூட்ஸ் முதலி
யவை மெல்லமெல்ல நுழைகின்றன. நவீனமான இவைக
ளெல்லாம் நான்கூடாதென்பதல்ல. "பழையனகழிதலும்
புதியனபுகுதலும் வழுவலகாலவகையினுனே" என்னும்லட்
சணப்படி காலவித்தியாசத்தினுல் அவலட்சணமாகத்தோற்
றும் பழயனவற்றைவிலக்கி, லட்சணமாகக்காணும் புதியன
வற்றைக் கைக்கொள்ளுதல் உத்தமமே. காளிதாசமகாகவி
ஸ்லோகம். "పురాణమిత్యేవనసాధుసర్వం నచాపికావ్యం నవమి
త్యవద్యం।సంతఃపరీక్ష్యాన్యతరద్భజంతే మూఢఃపరప్రత్యయనేయ
బుద్ధిః" (புராணமித்யேவநஸாதுஸர்வம் நசாபிகாவ்யம்நவ
மித்யவத்யம்।ஸந்தஃபரீக்ஷ்யாந்யதரத்பஜந்தே மூடஃபரப்பிர
த்யயநேயபுத்திஃ) பழமையாயிருப்பது என்பதினுலேயே மு
ழுதும் நல்லதாயிருக்கமாட்டாது; நவீனமென்பதினுலேயே
முழுதுங்கெட்டதாயிருக்கமாட்டாது. ஆகையால், அறிவு
டையோர்கள் அவ்விரண்டையும் நன்ருய்ப்பரிசோதித்து,
அவற்றிலுள்ள நன்மைகளை ஏற்றுக்கொள்ளுவார்கள்; மூட
ர்கள் இதரான் நம்பிநடந்தவழியிலேயே நடப்பார்கள், என்
று அந்தமகாகவியும் சொல்லியிருக்கிருர். இவ்விதமாய்த்
தங்களுக்குச்சரியானதாகத்தோற்றிக் கோட்டு, பூட்ஸ்போ
ட்டுக்கொள்ளுகிற சிலரை மற்றவர்கள் 'வெள்ளைக்காரனுக்
குப்பிறந்தவன, வெள்ளைக்காரனுய்விட்டான்' என்று இகழு
கிருர்கள். தங்கள்மக்கள் அவ்வாடைகளைத் தரித்துக்கொ
ள்ளுங்காலத்தில், தங்கள் மக்கள் துரைமக்களாய்க்காணுகி
ருர்களென்று ஆனந்திக்கிருர்கள்.

ஆங்கிலேயர்கள்மாத்திரம் ஒருமிக்க நாகரிகமடைந்துவி
ட்டார்களோ, இல்லை. அவர்களும் நம்மைப்போலக் கையி
னுல் அள்ளிச்சாப்பிட்டவர்களே. சில நூற்றுண்டுக்குமுன்
னே அவர்களிலொருவர் தேசசஞ்சாரஞ்செய்தபோது, ஒரு
தேசத்திலே அங்குள்ளார் காண்டியினுல் சாப்பிடுவதைக்க
ண்டு, சாப்பிடும்போது கையிலுண்டாகும் வியர்வையை உ
ட்கொள்ளாதபடி அதினுல் சுகத்திற்கு அனுகூலமுண்டாகி
றதென்று, அந்தவழக்கத்தைத் தன்தேசத்தில் நுழைக்கமு
யலுகையில், அதை விந்தையானதாகநினைத்து அங்கிலேய
ர்கள் அருவருத்து அவனையிகழ்ந்து, பின்னர் கொஞ்சகால
த்தில் அதை அனுஷ்டித்தார்கள். அங்கிலேயர்கள் படிப்படி
யாக விர்த்திக்குவந்ததற்கு இதை ஒரு திருஷ்டாந்தமாக எ
டுத்துச்சொன்னேனேயல்லாமல், நாம் அதை அனுஷ்டிக்க
வேண்டுமென்பதல்ல. நம்மில் ஐசுவரியவான்கள் சிலர்தோ
ட்டங்களிலும் பங்களாக்களிலும் விசாலமான மெத்தைவீ
டுகளிலும் வசிப்பவர்கள்போக, மற்றயாவருக்கும்சுகம் சாக்
கடைநாற்றத்திற்குச் சமீபமான தெருத்திண்ணையும் சார்ம
ணையுமே. வீட்டினுள் அசுகம் அதிகமாயிராவிடில், சாக்க
டைநாற்றமடர்ந்த தெருத்திண்ணை நமக்குச்சுகமாயிராது.
தோல்வியாபாரி தோல்ஷாப்பிலிருந்து வழக்கப்படுவதினு
லே அந்நாற்றம் அவருக்கு இமிடிப்போவதுபோல, நம்மி
ல்பலருக்கு வீட்டினுளிருக்கும் ஊசனுற்றமும் சாக்கடைநா
ற்றமும் பழக்கத்தினுல் இமிடியிருப்பதினுலே, அதிகமாயிரு
ந்தாலொழிய, நாற்றத்தைத் தெரிந்துகொள்ளக்கூடாமை
யாயிருக்கிற நம்மவர்களுக்கு உண்மையானசுகம் இன்ன
தென்று தெரிந்துகொள்ளக் கொஞ்சங்காலஞ்செல்லும்.

பழமைபாராட்டவேண்டுமென்றும் ஜாதி அபிமானம் அ
கத்தியம் இருக்கவேண்டுமென்றும் சாதிப்பவர்கள் மனுத
ருமசாஸ்திரத்தில் தத்தமக்கு விதித்திருக்கிற விர்த்தியை
அனுஷ்டிப்பதல்லவோ முறைமை; அப்படிச்செய்யாமல்,
வேறுவிர்த்தி அதிகவரும்படியுள்ளதாயும் நாகரிகமுள்ளதா
யும் தோற்றினபோதிலும் அதைத்தொடர்ந்துவாழ்வது தரு
மமோ? வித்தியாபிமானமுடைய அநேகர் தேவபாஷையா
கிய சம்ஸ்க்ருதமும் மற்றச்சுதேசபாஷைகளும் வரவரமுற்
றும் க்ஷீணித்துப்போகின்றனவே, அவற்றைக்கண்திறந்து பா
ர்ப்பாரில்லையே, ஹூணபாஷையாகிய இங்கிலீஷைக்கட்டி
க்கொண்டு அழுகிருர்களேயென்று துக்கிக்கிருர்கள். மேற்
படி அபிமானமுள்ளவர்களும் தங்கள் மக்களை மேற்படி
ஹூணபாஷையிலேஉயர்ந்தபரீக்ஷைகளுக்குக் கற்பித்துவரு
கிருர்களேயல்லாமல், அந்தப்பாஷையையொழித்து, சம்ஸ
க்ருதமுதலிய சுதேசபாஷைகளைக்கற்பித்து சிறந்தபண்டித
ர்களாக்காமலிருப்பதற்குக் காரணமென்ன? இங்கிலீஷ் இ
ல்லாவிடில் ஜீவனம் நடவாதேயென்று ஒருவேளை சொல்லு
வார்கள். மற்றியாரைத்தான் "சுயபாஷைகளை வாசிக்கச்
சொல்லுகிருர்கள்? குள்ளனைக்கொண்டு ஆழம்பார்க்க விரு
ம்புவதுபோல, அந்நியருடைய பிள்ளைகள் சுயபாஷையை
வாசித்துக் கஞ்சிக்கலைந்தாலலையட்டும், தங்கள்மக்கள்மாத்
திரம் இங்கிலீஷ்வாசித்துப் பெரும்பதவி யடையட்டுமென்
று நினைப்பதும் புத்திராபிமானமே!

பூர்வீகத்திலாவது பழமைபாராட்டிவந்தார்களோ இல்லை
யோவென்று யோசிப்போமாகில், ரிஷிகள்முதலாய் ஓர்கா
லத்தில் மதுமாமிசபட்சணஞ்செய்துவந்தது பிற்காலத்தவ
ர்களால் நிவர்த்திக்கப்பட்டதென்பதினுலும், வேதோத்த
மாய் ஸ்திரிகளுக்கு ஓர்காலத்தில் புனர்விவாகம் நடந்தேறி
வந்ததென்பது மற்ருேர்காலத்தில் அந்தவேதோத்தமாகவே
நிவர்த்திக்கப்பட்டதென்பதினுலும், இவ்விதமாய் ஓர்காலத்
தில் நடந்தேறிவந்த ஆசாரங்களை மற்ருேர்காலத்தில் நிவர்
த்தித்தவர்கள் தங்களுக்குமுந்தியிருந்த பழமையைப்பாரா
ட்டாமல் விரோதித்தார்களென்று ஸ்பஷ்டமாய்விளங்கு
கிறது. இதனுலே காலதேசவர்த்தமானங்களை யனுசரித்து,
அந்தந்தகாலத்திலுள்ளவர்கள் தங்கள் தங்களுக்கு யுக்தமா
கத்தோற்றுகிறபடி மாற்றினுர்கள். இப்படிப்பட்டமாறுதல்
களைத்தான் நம்மவர்கள் யுகதருமமென்கிருர்கள். அதாவது-
ஆசாரங்கள் மாறியிருக்கிற காலபேதந்தான். மனுவினுடை
யகாலத்தி லம்மனுதருமசாஸ்திரமுண்டாயது. அக்காலத்தி
ற்கு அது நவீனந்தானே; பிந்தினவர்களுக்கு அதுபழமையா
யிற்று. யுகதருமசித்தாந்தப்படி கலியுகே, பிரதமபாதே, என்
றுவழங்கிவருமாறு, கலியுகம் நான்குபாகங்களாகப் பிரிக்க
ப்பட்டன. காலபேதங்களைக்காட்டுவதற்கே இந்தப்பிரிவினை
யுண்டாயிற்று, இதனுலே, வரவர இரவும்பகலும் குறுகி

மென்பதுமல்ல, சூரியசந்திரர்கள் பின்னுந் தலைதூரம்போய்விடுவார்களென்பதுமல்ல. காலமென்பது ஒன்றுதான். ஆசாரபேதங்களைக் காலத்தின்மேலேற்றிக் காலபேதங்களெனப்பட்டன. அந்தந்தகாலத்தில் மாற்றப்பட்ட ஆசாரங்களை அனுஷ்டித்தவர்கள் பழமைபாராட்டினவர்களோ, பாராட்டாதவர்களோ? பழமைபாராட்டுதலென்பது விபரீதம். அப்போதப்போது சீரற்றவையாகத் தோற்றியவைகளை ஒழித்துச் சீருள்ளனவாகக் காணப்பட்டவைகளைக் கைக்கொண்டதாகத் தெரியவருகிறது.

மேற்கண்ட பலசங்கதிகளினாலே, அபிமானமென்பது சிலவிஷயங்களில் துரபிமானமாகுமென்று தெரியவருகிறபடி, தேசத்தில் பழைய ஆசாரங்கள் எப்படிப்பட்டவையாயிருந்தபோதிலும், அவற்றைக்காத்துக்கொள்ளவேண்டுமென்பதுதான் துரபிமானம்; தேசம் க்ஷேமமடையவேண்டுமென்கிற எண்ணத்தோடு அதில் கேட்டைத்தருவனவாகக் காண்பவற்றையொழித்து, நன்மைபயப்பனவாகக் காண்பவற்றைப்புகட்டுவதே உண்மையான தேசாபிமானமாகும். ஒருதேசத்தில் பலஜாதிபேதங்கள் ஏற்பட்டு, ஒன்றையொன்று இகழ்ந்து, தன்னைத்தானே சிறப்பித்துக்கொள்வதுதான் ஜாதியைப்பற்றிய துரபிமானம்; அங்கிலேயதேசம், அங்கிலேயர்கள், அமெரிக்காதேசம், அமெரிக்கர்கள், சீனுதேசம், சீனர்கள்; என்றாற்போல, ஹிந்துதேசம், ஹிந்துக்கள்; என யாவரையும் உயர்வு தாழ்வின்றிச் சமரசமாய் ஒரேஜாதியாராக நினைத்து, எவ்வெவ்வகையினால் அவர்களுக்கு மற்றதேசத்தாரைப்போல மேன்மையுண்டாகுமோ அவ்வகைபுரிவதுதான் உண்மையான ஜாதியபிமானமாகும். இவ்வாறு ஆராய்ந்து, கிருஷிகன் களைகளைக்களைந்து, தன்பயிரை ஓங்கச்செய்வதுபோல, துரபிமானங்களை ஒழித்து, சீர்திருத்தத்தை வளரச்செய்வதே உண்மையான அபிமானம்; அப்படிச்செய்பவனே உண்மையான அபிமானி.

ஒழுக்கபோதனை.

பிராமணர்களே! உங்கள் வேதங்களும் சாஸ்திரங்களும் உங்கள் முன்னோரால் ஏற்படுத்தப்பட்டதால் உங்கள் சுகானுபவவிருத்தியைப்பற்றிமட்டும் அதில் மிகுசிறப்பித்தெழுதியிருக்கின்றது. கல்வி யறிவற்றிருந்த சூத்திரர் பறையர்கள் அவற்றை வாசிக்கலாகாதென்றும், வாசிக்கின் அவர்கள் நாவறுக்கப்படுமென்றும், அவர்கள் உங்கள் இனத்தவர்களுக்கே அடிமைப்பட்டொழுகி ஆயுளைப்போக்கவேண்டுமென்றுங் கெடுநினைவால் ஏற்படுத்தி எழுதியிருக்கின்றனர். இவ்வேர்ப்பாட்டைக்கண்ட பறையர் பூர்வகாலத்திலேயே அதனை இலட்சியஞ்செய்யாமல் ஒதுங்கிவிடவே முன்னிருந்த உங்கள் இனத்தவர்கள் கெடுநினைவுகொண்டு அவர்களை நாடு நகரங்களினுள் பிரவேசிக்காவண்ணந் தடுத்து, அவர்கள் அன்னவஸ்திராதிகளுக்கு வரும்வழியற்று வருந்திச்சாக அவர்களுக்குப் பிச்சையுமிடலாகாதென ஏற்படுத்தினர். இப்பொழுது பறையர் முதலிய சமஸ்த ஜாதியாருங் கல்விகற்பிக்கப்பட்டு சமுதாய க்ஷேமமடைந்து சமரசப்பட்டுவருவதால் நீங்கள் உங்கள் முன்னோரைப்போல் இதரதேசத்தாராலும் இகழப்படாமல் புகழப்படவேண்டுமானால் உங்கள் ஆபாச சாஸ்திரக்குப்பையை தீயினாற்சுட்டெரித்து நாசஞ்செய்துவிடவேண்டும். சுட்டெரிக்காவிடில் இனி அவை இருந்து பயனில்லை. ஏனெனின், அங்கிலேயதுரைத்தனத்தார் இருப்புப்பாதை, குழாய் ஜலம், வைத்தியசாலை, கல்விச்சாலை பிரதேசகுடியேற்றம், யுத்தவீரர்களின் பிரதேசயாத்திரை இவைமூலமாக உங்கள் ஏற்பாட்டைச் சிறிதுசிறிதாக ஒழித்துக்கொண்டிருக்க, அதனையறியாமல் குறங்குபிடியைப்போல் நீங்கள் அதைப்பிடித்திருந்து பலனென்ன! இப்பொழுதிருக்கும் பிராமணரில் அநேகர் தங்களைத்தாங்களே புகழ்ந்து கொள்ளுவதைச் சுருக்கமாக எழுதுகிறேன் பாருங்கள். "எங்கள் முன்னோர்தான் வேதசாஸ்திரங்களனைத்தையுமெழுதினார்கள். நாங்கள் அவர்கள் சந்ததியாரானதினால் நாங்களும் சிறந்தவர்களென்று" புகழ்ந்துகொள்ளுகிறார்கள். இது எத்தன்மையதெனின்:—என் நான்காம்பாட்டனார் தாசில் உத்தியோகத்திலிருந்தார். எனக்குப்பிச்சையிடு" என்பதுபோலிருக்கிறது. மேலும், சூத்திரர் கடைவகுப்பினரென்றும், அவர்களைத் தீண்டலாகாதென்றும், அவர்கள் தங்களுக்கே அடிமைப்பட்டொழுக வேண்டுமென்றுங்கூறி யவர்களின் சந்ததியாராகிய இப்பொழுதிருக்கும் பிராமணரில் சிலர், சூத்திரர் இப்பொழுது கல்விகற்றுதேர்ச்சியடைந்து வருவதைக்கண்டு, அவர்களைநோக்கி நீங்களும் ஆரியகுலத்தைச்சேர்ந்தவர்களென்றே புகழ்ந்து அவர்களுடன் சேர்ந்து கொள்ளுகிறார்கள். இன்னுஞ் சில பிராமணர் இப்பரியாயதீபத்திலுள்ள சமஸ்த ஜாதியாரிலும் பிராமணரே அறிவிற் சிறந்தவர்களென்று அங்கிலேயர் சொல்லுவதாகப் புகழ்ந்து சொள்ளுகிறார்கள். ஆகையால், பிராமணர்களே! இனி இத்தகைய முகஸ்துதி மொழிகளையும், தற்புகழ்ச்சியையும் கெடுநினைவையும் விட்டுவிடுங்கள். இனிச் சூத்திரர் முதலியோர் உங்களுக்கு அடிமைப்பட்டொழுகுவரென்னுங் கருத்தை நீங்கள் மறக்கக்கடவீர்கள். இனி சமஸ்த ஜாதியாரும் ஒரே தராசில் நிறுக்கப்பட்டு, ஒரே அளவுகோலினால் அளக்கப்படுவர்கள். இனி நீங்கள் ஒருவரை இகழ்ந்தால் அவர்களால் இகழப்படுவீர்கள். ஒருவர்மீது குற்றஞ் சுமத்தினால் உங்கள் மீது குற்றஞ் சுமத்தப்படும். இக்காலத்தில் சமஸ்தஜாதியாரும் அறிவிற் சிறந்து வருவதால் இனி அவர்கள் ஒருபோதும் உங்களுக்கு அடிமைப்பட்டொழுகுவரென்னுங் கருத்தை நீங்கள் மறக்கக்கடவீர்கள். உங்கள் யோகதசைகாலஞ் சென்றது! சென்றது!! இனி வாராது!!! இதாருடைய கஷ்டார்ஜிதத்தில் நீங்கள் வைத்திருந்த பேராசையை விட்டு விடுங்கள்.

M. MASILAMONI.

மதவைராக்கியம்.

சென்ற புதவாரம் மாலை ரு - மணிக்குமேல் சென்னை இவாஞ்சலிஸ்டிக் மண்டபத்தில் சிலேட்டர் பாதிரியார் அவர்கள் தற்கால மதங்களின் நிலைமையைப்பற்றி யோர் உபந்நியாசம் செய்தார். அவ்வுபந்நியாசத்தின் தாற்பரியமாவது: கடவுளால் அளிக்கப்பட்ட சர்வமதங்களின் நோக்கமும் கிறீஸ்துவிற்கும், அவர் பெயரால் வழங்கிவரும் கிறீஸ்துமதத்திற்கும் சான்றுபகர்வதற்கேயென்றும், இவ்விந்தியாவில் சுவிசேஷபோதகரா யெழுந்தருளும் கிறீஸ்தவப்பாதிரிமார்களின் கருத்து இந்துமதங்களுக்கு கிறீஸ்துமதசார்பாக உரைபகரவும் என்றும் சொல்லி, கிறீஸ்துமதமானது பிராட்லா, இங்கர்சால் முதலான நாஸ்திகரால் சண்டப்பிரசண்டமா யெதிர்க்கப்பட்டுவரினும் அஃது ஓர்காலும் பின்னிடாதென்றும் கூறினர்.

விவேகிகாள்! சிலேட்டர் பாதிரியார் கிறீஸ்துமதமென்பதெதை? கிறீஸ்துமதமானது நூற்றாண்டு நூற்றாண்டாக நூதனமாக மாறிக்கொண்டு வருவதாகப் பாதிரிமாரே பகர்கின்றனரே. மேலும் தற்காலத்தில் கிறீஸ்தவர் இருநூற்றிற்கு மேற்பட்டக் கிளைக்கொள்கையினராக விருக்கின்றனரே. இது விஷயம் பாதிரியார் அறியாததல்ல. ஆகவே கிறீஸ்துமதமென்பது யூதமதத்தையா, மகம்மதியமதத்தையா, அல்லது விவிலியநூலில் கூறியபடி பழைய வேர்ப்பாட்டையா, புதிய வேர்ப்பாட்டையா, அல்லது பின்னெந்த கொள்கையினைக் குறிக்கின்றதோ யாமறிகின்றிலம். பாதிரியாரும் பகர்ந்திலர். கிறீஸ்துமதத்தையே யின்னதென விளக்க வல்லரல்லாத இப்பாதிரியாரா முப்பத்துமுக்கோடி தேவர்களை வழிபட்டு நாற்பத்தெண்ணாயிர ரிஷிகளின் எண்ணிறந்த கொள்கைகளைப் பிரதிபாதிக்கும் வேதத்தினைப் பின்தொடரும் இந்துக்களுக்கு அவ்வேதத்தைக்கொண்டே கிறீஸ்துமத மென்னும் சாரத்தைப் பிழிந்துக் கொடுக்கவல்லார்? ஆ! ஆ!! சாலவழகுடைத்து!!! மேலும் இந்துமதங்களானவை மனிதனது பாவநிவாரணத்திற்குக் கைம்மாறாக வொன்றையும் நிர்ணயிக்கவில்லையே. நிர்வாணதிசையையடைதலென்றும், ஜோதியோடு ஜோதி கலத்தலென்றும், ஐக்கியமடைதலென்றுமே கூறியிருக்கின்றது. இத்தகைய கொள்கைகளினின்று எவ்வாறு பாதிரிமார்கள் கைம்மாறுவக்கும் கிறீஸ்துமதத்தைக் கிரகித்துக் கொடுக்கப்போகிறார்களோ யாமறிகிலம். மேலும் கிறீஸ்துமதத்தையும் அதற்கு மூலகிரந்தமாயுள்ள விவிலியநூலையும் சல்லடைக்கண்ணாக நியாயசரங்கள் தொடுத்துத் துளைத்துவரும் கர்னல் இங்கர்சால், சார்லஸ் பிராட்லா, ஆனிபிசாண்டு, ஜே. சய்ம்ஸ் முதலியோரோடு மதப்போர்புரிந்து ஏன் அன்னோர்க்கும் அன்னோர் சங்கத்தவர்களுக்கும் கிறீஸ்துமத உண்மையை ஊட்டப்படாது? இஃது செய்யவல்லரல்லாத பாதிரிமார்கள் இந்துமதக்கொள்கைகளையெல்லாம் கிறீஸ்துமதபாவமாய் உரையிட முயலப்போவது கூரையேறி கோழ்பிடிக்கவறியாத குருக்கள், வானத்தைக்கீறி வழிகாட்டமுயலும் திறத்தையொத்திருக்கின்றது.

இதுமட்டோ! பாதிரியார் இந்துக்கள் நாஸ்திகராகார் என்னும் துணிபுகொண்டவரா யிருக்கின்றனர். இத்துணிபு மெய்த்துணிபோ பொய்த்துணிபோ வென்றுணரவேண்டின், இந்நாட்டுச்சிறுவர்கள் விவிலியநூலையா, அல்லது சுயக்கியான புத்தகங்களையா அதியாவலுடன் வாங்கி வாசிக்கின்றனரென்று விசாரித்துணரக்கடவர். பாதிரிமார்களே பலமுறையும் பலவிடங்களிலும் சுயக்கியான புத்தகங்களைப் பாலியர்கள் இந்நாட்டில் அதியாவலுடன் வாங்கி வாசித்துவருகிறார்கள் என்பதாக வரைந்தும் அறைந்து மிருக்கின்றனர். மேலும் இந்துவேதத்தில் ஆரங்கமென்னப்பட்டவைகளுள் ஓர் அங்கத்தில் சார்வாகர் முதலியவர்களும் நிரீ

ச்சுவரசாங்கிய முதலியவைகளை யெழுதியிருக்கின்றனர். ஆகவே இனி கிறீஸ்துமதமானது இந்துசாஸ்திரங்களினின்று புறப்பட்டு இன்னாட்டில் நிலைக்கப்போகின்றதென்கின்ற வெண்ணத்தில் மண்விழுவதும், சுயக்கியானமானது இந்நாட்டில் பண்டைநாள்தொட்டு உள்ளதென்பதும், இனி இச்சுயக்கியானமானது வளர்பிறைபோல் வளருமென்பதும் திண்ணம், திண்ணம். சுயக்கியானமென்னும் சூரியன்முன் மதவைராக்கியமென்னு மந்தகாரம் மாயவேண்டுவதுதான், D.

சமயிகள்போர்.

சேவகசுப்பாநாய்க்கன்.

போதும் சுவாமி துரைகள் வீட்டுக்கு எஜமான் என்னை அனுப்புகிறார் அப்போது தாங்கள் சொல்லுகிற விதமாய் நாமமிட்டுக்கொண்டுபோனால் என்னைப்பார்த்தால் பூச்சாண்டிபோ லிருக்கிறதென்று துரைசானிகள் பயந்து இனி இந்த மனுஷனை இங்கே வரவொட்ட வேண்டாமென்று துரத்திவிடுவார்கள். எங்களவர்களும் "ஈகூட்டிகா இன்னிநாமாலு"என்று சொல்லுவார்கள். இருக்கிற நாமம் போதுஞ்சாமி முகத்தை விகாரப்படுத்திக்கொள்ள இஷ்டமில்லை. நாமத்தாலாகிறகாரியமென்ன? இது வீண்பயித்தியத்தில் சேர்ந்தது. எவனுக்குப் பரிசுத்த இருதயமும் கடவுளிடத்தில் மெய்யறிவும் உண்மையான பக்தியு முண்டாயிருக்கின்றதோ அவனே மகாபுருஷன், அவனே தெய்வ அருளுக்குப் பாத்திரன் அதைவிட்டுக் கோயில் திருமதிலுக்கு மாணிக்கப்பட்டை அடித்தாற்போல் நாமத்தைக்குழைத்துத் தளமாக உடம்பெல்லாம் பூசிக்கொள்வதினால் யாதொரு பிரயோஜனமுமிராதென்று புத்திமான்கள் யோசிப்பார்கள். வீணாடம்பவேடம் அல்லது பயித்தியபுத்தியின் காரியமேயொழிய வேறில்லை (பாகவதர்) சரி சரி அப்பா சுப்பாநாயக்கா நன்றாய்ச்சொன்னாய் நாமம்பேச்சு வெளுத்தது.

சேவக சுப்பாநாயக்கன்.

தாங்கள் பாஞ்சராத்திரம் வைகானசம் முதலாகிய கிரந்தங்கள் வாசித்திருக்கிறீர்களா?

பரமபாகவதர்.

நாமந்த புந்தகங்களிருந்த ஊரிலுங் குடியிருந்ததுமில்லை பேர்சொல்லக்கேட்டதுமில்லை, ஆனால் நூற்றெட்டுத் திருப்பதி தரிசனமாத்திரம் ஆயிருக்கிறது. அந்தந்தக் கோவில்களில் செய்யப்பட்ட சுண்டல், புளியோரை, ததியோதனம், சருக்கரைப்பொங்கல், பகாலாபாத்,ஆமைவடை, தோசை, வடை, தேங்குழல், அக்கராவடிசல் முதலாகியவைகளின் ருசிபாகங்களும் போக்கியமாயிருக்கிற விவரங்களும் தெரியும்.

சுப்பாநாயக்கன்.

ஐயா சிவதூஷண சிங்கய்யங்காரே, சிவனைவிட மகாவிஷ்ணுவுக்கு உண்டாயிருக்கிற பெருமையைத் தாசனுக்கு உபதேசிக்கக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

சிவதூஷணசிங்கய்யங்கார்.

அ ? ஆ ? அப்படியே உபதேசிக்கிறேன் கேளப்பா, மகாவிஷ்ணுவினுடைய நாபிக்கமலத்தில் சதுர்முகபிரமாபிறந்தார், அந்த பிரமாவின் புருவங்களின் மத்தியில் சிவன் பிறந்தார். அவரிடத்தில் ஆறுமுகன் பிறந்தான். சிவன் பிறக்கும்போது அவர்ரோதனைசெய்தார். என் ரோதனைசெய்கிறாயென்று பிரமா கேட்டார். அப்போது சிவன் நான் பாபியாகையால் பாபவிமோசனத்துக்காக எனக்கு நல்லபேர் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கேட்டார். அப்போது பிரம்மா சிவனைப்பார்த்து அப்பா மகனே? ரோதனைசெய்தபடியால் உனக்கு ருத்திரனென்றும் ஈசானனென்றும் பேரிட்டேனென்றார். ஒருசமயத்தில் தபசுசெய்த சேதனனை சிவனாகவும், பிரமனாகவும், பிறக்கும்படி பிராட்டியனுக்கிரகித்தால்-சிவனுக்குப்பிதா பிரமன், மற்றொருசமயத்தில் பரமபுருஷனான ஸ்ரீமந்நாராயணனுடைய நெற்றியில் வேர்வைபிறந்தது அந்தவேர்வையினின்றும் ஒரு குமிழியுண்டாயிற்று. அதில் சிவன்பிறந்தார். பிரமனுஞ் சிவனும் இறந்து விஷ்ணு ஒருவரே முடிவிலிருக்கிறார். சதியலோகத்தையுங் கைலாயத்தையும் படைத்தவர் விஷ்ணுவாகையால் அவரையே யாவரும் தொழவேண்டும்.

பிராமணன் பஸ்பந்தரித்தால் நிஷேதிக்கும்படி சிவன் வசனமுமுண்டு. கற்பத்தின் முடிவில் பிரமன் ருத்திரன் இவர்கள் இறந்துபோய் விஷ்ணு ஒருவரே யிருக்கிறார். விஷ்ணு நினைத்தமாத்திரத்தில் பிரம ருத்திரர்களுண்டாகிறார்கள். சங்கரனாலே ஞானத்தையும் விஷ்ணுவினாலே மோக்ஷத்தையும் அடைகிறார்கள். பிரமாவும் சிவனும் விஷ்ணுவின் தேஜசினாலே கூடிவிளங்கி அதைவிட்டபோது மரணத்தையடைகிறார்கள். சிவன் பாபமுடையவன். பிரமாவுக்கும் சிவனுக்கும் விஷ்ணு பரனாயிருக்கிறார். பிரம ருத்திரர்கள் விஷ்ணுவுக்கு அங்கங்களாயிருக்கிறார்கள். சிவனுடைய கபால துன்பத்தை விஷ்ணுபோக்கினார். அர்ச்சாமார்க்கத்தைச் சிவனுக்கு விஷ்ணு உபதேசித்தார். சிவன் ராமமந்திரத்தை உச்சரித்துக்கொண்டிருக்கிறார். சிவனுடைய லிங்கமும் பார்வதியினுடைய யோநியும் பிருகுரிஷிசாபத்தால் அறுந்துபோனதை விஷ்ணுவினுடைய அனுக்கிரகத்தால் அவ்விருவரும் லிங்கமும் யோநியும் பெற்றனர். விஷ்ணு ஒருவரே புருஷோத்தமன் பிரமருத்திரர்கள் ஸ்திரீகளுக்குச் சமானம். ஓங்காரத்திற்குப் பொருள் விஷ்ணு, பிரமருத்திரர்கள் விஷ்ணுவினிடத்தில் பிறந்தபடியால் விஷ்ணுவிற்குக்கேசவனென்கிற பேர்வந்ததென்று சிவன் சொன்னார். பிரமருத்திரர்கள் தங்கள் கருமங்களினாலே ஜனிக்கிறார்கள். சைவாகமங்கள் அநாதரிக்கத்தக்கவையென்று வியாசரும், சங்கராசாரியரும், ராமாநுஜாசாரியரும், மாத்துவாசாரியருங்கண்டித்தார்கள். வைணவர்களிடத்தில் யமன் கிட்டமாட்டான். காசியில் விஷ்ணு சிவனுடைய சமஸ்த பாவங்களையும் போக்குகிறேனென்றும் பயப்படாதே என்றம் திருவாய்மலர்ந் தருளினார். நாலுவேதங்களையும் படித்தும் விஷ்ணுவே பரமனென்று சொல்லியிருப்பதை யறியாம லிருக்கப்பட்டவன் வேதத்தை சுமந்துகொண்டு திரிகிற பிராமணக்கழுதையென்று புராணவசனமுண்டு. திருவாய்மொழி வியாக்கியானத்தையும், பிரபன்னகாயத்திரி வியாக்கியானத்தையும், திருப்பல்லாண்டு வியாக்கியானத்தையும் பார்த்தாலிவைகளெல்லாம் விசிதமாகும். (இன்னும்வரும்.)

கிறீஸ்துமதத்தையும் இந்துமதத்தையும்பற்றி டிவான்பகதூர் இரகுநாதராவவர்கள்கூறியது.

சென்ற குருவாரம் மாலை 6½-மணிக்குமேல் இவாஞ்சலிஸ்டிக் மண்டபத்தினகண் சிலேட்டர் பாதிரியாரவர்கள் கிறீஸ்துவானவர் மற்ற மனிதர்களைப்போலாது தெய்வீகம் பொருந்தியவரென அவரது ஜீவியத்தைக்கொண்டும் மற்று மனேகவத்தாட்சிகளைக்கொண்டும் நிரூபிப்பான் ஓர் திவ்விய உபந்நியாசம் செய்தார். அவ்வமையந்து அவ்விடம் அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்த டிவான்பகதூர் இரகுநாதராவவர்கள் எழுந்து கிறீஸ்துவானவர் காலாகாலங்களில் வெளிவந்த உபகாரபுருஷர்களில் ஒருவரேயல்லது பாதிரியார் கூறியபடி ஒப்புயர்வற்றவரல்லரென்றும், கிறீஸ்துமதத்திலுள்ள திவ்விய கொள்கைகளனைத்தும் இந்துக்களின் வேதத்தினின்று எடுக்கப்பட்டவைகளேயல்லாது அவையொன்றும் பூர்வீகமாகவே விவிலியநூலாசிரியருக்குரியன வல்லவென்றும், வேதத்திலுள்ளவைதானே விவிலியநூலிலுமுள்ளனவாதலால், கிறீஸ்துமதத்தை யேன் இந்துக்கள் அனுசரிக்கக்கூடாதெனின், கிறீஸ்துமதத்தை யநுசரிப்பதற்கு அம்மதத்தில் இந்துமதத்திலுள்ளவைகளைப்பார்க்கிலும் விசேடமானவை இருக்கக் காண்கிலேமாதலாலென்றும் கூறினார். D.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.) வெளியூர்—(அட்வான்சு.)

உள்ளூர்		Rs.	As.	P.	வெளியூர்		Rs.	As.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	6	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	14	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	10	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	13	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிச்வாமிநாயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசைடி ஆனரெரி மெம்பர் மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் வேப்பேரிக்கும் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 11.] MADRAS :—SUNDAY MARCH, 14, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

கடவுளினது சங்கற்பம்.

அதிக தேவபக்தி விசுவாசமுள்ள ஒரு குருக்கள் சமையம் வாய்க்கும்போதெல்லாம் தன் குமாரனுக்கு, கடவுள் எல்லா ஜீவராசிகளையும் பாதுகாத்துவருகிறாரென்றும், தன்னுடைய சகல சிருஷ்டியினிடத்திலும் அன்புகூர்ந்திருக்கிறாரென்றும், ஒரு ஊர்க்குருவி கீழேவிழுகிறதாயிருந்தாலும் அதைக் கவனிக்கிறாரென்றும், எதையும் இரவும் பகலும் கண்காணித்து வருகிறாரென்றும், மனதில் நன்றாய்ப் பதியும்படி உபதேசித்துவந்தார். ஒருநாள் ஒருநாரை இரைதேடிக்கொண்டு தண்ணீரில் போய்க்கொண்டிருக்கிறதைக்கண்ட அந்தப்பெரியவர் தன் மைந்தனை யழைத்து, அந்த நாரையைச் சுட்டிக்காட்டி, அது இவ்விதமாய்த் தன்னுடைய ஆகாரத்தைச் சம்பாதித்துக்கொள்ளுவதற்காக அதினுடைய உடல் எவ்வளவு தகுதியாய் அமைக்கப்பட்டிருக்கிறது பார்த்தையா! அதினுடைய கால்கள் தண்ணீரில் போவதற்கேற்றவிதமாக எப்படிச் செய்யப்பட்டிருக்கின்றன! அதினுடைய மூக்கு எவ்வளவு நீண்டு மெல்லீசாயிருக்கிறது! அது தன்னுடைய அடிகளைத் தண்ணீரில் அழுத்தும்போதும் வெளியில் எடுக்கும்போதும் எவ்வளவு மெதுவாய் மடிக்கிறது, எவ்வளவேனும் தண்ணீரை அலையவொட்டவில்லை பார், இவ்விதமாய் மீனுக்குச் சுத்தமாய்த் தெரியாதபடி அந்த நாரை நெருங்கிப்போகக் கூடியதாயிருக்கிறது. மகனே! இந்தப்பட்சியைப் பார்க்கும்போதே, அதற்கு ஜீவனோபாயம் கற்பித்திருப்பதில், கடவுளினுடைய ஞானமும், அன்பும் தெரியாமற்போகவில்லையே என்று சொன்னார். அதற்கு அந்தச்சிறுவன், ஆமப்பா நாரையின்மட்டில் கடவுளினுடைய நற்குணம் தெரியவருகிறதென்று நினைக்கிறேன்; ஆனால் மீன்விஷயத்தில் அந்த ஏற்பாடு கொஞ்சங் கொடூரமாயிருக்கிறதென்று உமக்குத் தோன்றவில்லையா வென்றான்.

A. M. M.

மயங்குகிறவர்களும் மயக்குகிறவர்களும்.

ஒருவன் இறந்தபின்பு, அவனுடைய ஆன்மாவை நோக்கிச் செய்யப்படுங் கருமகாலத்தில், கசு - பிராமணர்களுக்கு சோடசங் கொடுக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். அது ஏனெனில், அந்த ஆத்துமா மேலுலகத்திற்போய்ச்சேர கஉ-மாசஞ் செல்லுகிறதென்றும், நம்முடைய அந்தப் பன்னிரண்டுமாசமும் அந்த ஆத்துமாவிற்குப் பன்னிரண்டுநாளென்றும், ஒருதினத்திற்கு ஒருவேளை போசனமாக கஉ - மாசிகமும், இடைவழியில் காஞாறு முதலிய நான்கு கடங்களைக் கடந்துபோவதினாலுண்டாகிய ஆயாசந்தீர அந்தந்தக்காலத்தில் போசனமாக உதவும்படி நான்கு ஊனமாசிகமும், ஆகப் பதினாறுமாசிகம் பன்னிரண்டுமாசத்திற்குள் கொடுக்கவேண்டியதாம். அந்தந்த மாசத்திலுங் காலத்திலுங் கொடுக்கவேண்டிய இந்த மாசிகங்களை முன்னதாய்க் கருமாந்தினத்தில் கொடுக்கவேண்டிய அவசியம் யாதெனில், கருமத்துக்குரிய கர்த்தா அதுவரையில் ஜீவித்திருப்பானென்கிற நிச்சயமில்லாதபடியால் முந்தி நடத்திவிடவேண்டுமென்கிறார்கள். அந்தமட்டில் சரியென்று வைத்துக் கொள்வோம். மறுபடி அந்த மாசிகங்களை மாசமாசங்கொடுக்கச்சொல்லுகிறார்கள். ஒருமிக்கக் கொடுத்தாய்விட்டதை மறுபடியுங் கொடுக்கவேண்டியதென்னையெனின், இக்காலத்திற்குள் கருமகர்த்தா இறந்துபோயிருப்பானாகில் அது பிரயோசனப்படுமேயன்றி, ஜீவித்திருந்தால் பிரயோசனப்படமாட்டாது, மறுபடி கொடுத்துத்தான் தீரவேண்டுமென்கிறார்கள். இப்படிப்பட்ட சாஸ்திரம் யாருக்குப் பிரயோசனகரமாய்ச் செய்யப்பட்டதோ? வெகு நேர்த்தியானது! ஒருவன் அப்போதப்போது செய்கிற புண்ணிய பாபகருமங்கள் அவன் சாகிறவரையில் இவ்விடத்திலேதானே தங்கியிருந்து, அவன் இறந்தபின்பு அவனுடைய ஆத்துமாவோடு கூடச்செல்லுஞ் சக்தியுடையனவாயிருக்கையில், மேற்கண்ட மாசிககர்மமாத்திரம் உரிய ஆத்துமாவினிடமாய்த் தங்கியிருந்து அந்தந்தக்காலத்தில் பிரயோசனப்படாமற்போவானேன்? இது வெகு அதிசயம்! பிரமைகொண்டு ஏமாறுகிறவர்களிருப்பதால், ஏமாற்றுகிறவர்கள் ஏற்பட்டார்கள்.

A. M. M.

வரி எவருக்கு.

இத்தேசத்தாருக்கு இந்திய துரைத்தனத்தாரால் இதுவரையில் விதிக்கப்பட்டிருக்கும் வரி இந்துக்களால் கொடுக்கக்கூடியதா அல்லது கூடாததா வென்பதனையும், அது எத்தகையோர்மீது சுமத்தக்கூடியதென்பதனையும் ஆலோசிப்போம். விவாக டம்பவிஷயத்திலும், கருமாந்த விஷயத்திலும், நாமகரணவிஷயத்திலும், கர்ணாந்திரவிஷயத்திலும், விக்கிரகங்களின் அபிஷேக உற்சவ ஊர்கோலவிஷயத்திலும், பிராமணருக்குத் தானங்கொடுக்கும் விஷயத்திலும், கோயில்கள் கட்டும்விஷயத்திலும், விக்கிரகங்களைத் தோளில் சுமந்து தெருத்தெருவாக ஈனமானங்கெட்டு அலையும்போது கொளுத்தும் பூரணம், மத்தாப்பு, தீவட்டிவிஷயத்திலும் அளவிறந்த திரவியம் அழிந்துபோகின்றது. தாயாதி வழக்குவிஷயமாகவும், இன்னும் வேறு அழிவழக்கு விஷயமாகவும் லாயருக்கும், பாரிஸ்டருக்கும் திரவியத்தைத் தொலைத்துவிடுகின்றனர். அநேகர் குடிவெறிவிஷயமாகத் தங்கள் பொருளைத் தொலைத்துவிடுகின்றனர். இன்னுஞ்சிலர் "நீ கீழ்மகன், நான் உயர்ந்த ஜாதியான்" என்று வழக்கிட்டுப் பணத்தைத் தொலைக்கின்றனர். ஆகையால் இதுவரையில் விதித்திருக்கும் வரிகளை மூவத்தனையாகப்பெருக்கி மேற்கண்டவர்கள்மீது சுமத்தி, மேற்கண்ட நடவடிக்கையில்லாத சற்புருஷர்மீது சுமத்தியிருக்கும் வரியை நிவர்த்திக்கவேண்டும். அன்றியும், க0-வருஷங்களுக்குமுன் க0-ரூபாய்க்கே விலை ஆய்க்கொண்டிருந்த க0 - ரூபாய் சவரன் இப்பொழுது கரு-ரூபாய்க்கு விலை ஏறி இருக்கின்றது. எவ்வளவு சவரன் இத்தேசத்திற்கு வந்தபோதிலும் இத்தேசத்தார் "நீ-நான்" என்று போட்டிசெய்து ப்ரிமியங்கொடுத்து வாங்கி உருக்கி ஆபரணங்கள் செய்துவிடுகின்றனர். இதனால் பொன் முதலிய உலோகங்கள் இந்நாட்டில் வரவர குறைகிறதென்றும் நன்றாய் விளங்குகின்றது. சாதாரண ஏழைச்சனங்களுக்கு விதிக்கும் வரிகளை நிறுத்திப் பணக்கொழுப்பால் வீண்விரையஞ்செய்யும் டம்பர்களுக்கும், குடியர்களுக்கும் மது, ஒயின், விராண்டி, ஷெரி முதலிய பானவஸ்துக்களுக்கும் விதித்தால் துன்மார்க்கப் பரித்தியாகம் ஆவதோடு லோகோபகாரமாகவும் இருக்கும்.

M. Masilamoni.

வருமானத்தைப்
பந்தயமாக வைத்தாடியது.

பூர்வீகத்தில் சகுனியுடன் தர்மராஜனும், புட்கரனுடன் நளராஜனும் சுவருடி நாடுநகரங்களையும், ஆஸ்தியையும், த

ம்மையும் பந்தயமாகவைத்துத் தோற்றார்களென்று சரித்திரவாயிலாய் அறிந்திருக்கின்றோம். சிலநாட்களின் முன்னே கல்கத்தாவில் துரைத்தன உபகாரச்சம்பளம்பெற்றுச் சீவிக்கும் ஒருவன் சீட்டாட்டத்தில் பந்தயம் வைக்கப் பொருளில்லாமையால்,பென்ஷனைப் பந்தயமாகவைத்துச் சீட்டாடித் தன் குடும்பத்தை ரக்ஷைசெய்யத் தனக்குக் கிடைத்திருந்த சீவனமார்க்கத்தை யிழந்தானென்று கேள்விப்படுகிறோம். நேசர்களே! சூதாடல், கள்ளுண்டல் முதலிய துர்ப்பழக்கங்கள் தம்மில் இன்பத்தைத் தோற்றுவித்துத் துன்பத்தை யுடனே யளிக்குங் குணமுடையனவென்பதை யறிந்து எச்சரிக்கையோடிருங்கள். நளமகாராசன் சூதாடத்துணிந்தபோது, அவனுடைய மந்திரிகள் பல நீதிகளை எடுத்தோதித் தடுத்தார்கள். அவர்கள் அரசனுக்குரைத்த நீதி அடியில்வரும் செய்யுளாம்—

"காதல்கவறுடல் கள்ளுண்டல்பொய்மொழிதல்
ஈதன்மறுத்த லிவைகண்டாய் - போதில்
சினையாமைவைகுந் திருநாடாசெம்மை
நினையாமைபூண்டார் நெறி"

இச்செய்யுளிற்புகன்ற நீதி யாவருங் கைக்கொண்டொழுகத் தக்கவையாம்.—திராவிடவர்த்தமானி.

அரசனெவ்வழி யவ்வழி குடிகள்.

ஓர்நாடு அல்லது பதியையாண்டுவரும் அரசனானவன் எம்மாதிரியாகத் தனது குடிகளை யாளுகின்றனனோ அவ்வாறே அக்குடிகளும் அவ்வரசனுக்குக் கீழ்ப்பட்டிருப்பர். அரசன் பிறதேசத்தார்மீது வீண்வழக்குகள் தொடுத்து தன்னூரில் கலக்கத்தையும், அயலூரில் கலகத்தையும் வகித்துத் தன் குடிகளுக்கு மிக்க திரவியநஷ்டம் செய்துவிப்பதிலும், மிதமற்ற வரியிறைகளைவிதிப்பதனாலும்,இன்னும் ஏனையவற்றாலும் கொடுமைகள் புரிந்து அன்னோரை அடிமைகொள்வானாயின்,அடிமைத்தனத்தையும் கொடுமையையும் குடிகள் சகியாதவராய் அவ்வரசனுக்குத் துரோகஞ்செய்யும் சிந்தையுடையவர்களாகவே யிருப்பர். அரசன் தன் குடிகளுக்கு இகத்தில் சுகமுண்டாகும்படியாகத் தனது பதியை எவ்வெவ்விதத்தில் சீர்திருத்தக்கூடுமோ அவ்வவ்விதத்தாலும் சீரைத்தேடியும், பிறநாடுகளால் தன்னுடைய நாட்டிற்கு அபாயமின்மையைத்தேடியும் செங்கோலோச்சிவருவனேல், குடிகளும் அவ்வரசனுக்கேனும் தங்கள் பதிக்கேனும் அபாயம் நேரிடுங்கால் கண்ணை இமைகள் காப்பதுபோலும், விரலை நகங்கள் காப்பதுபோலும் துணைபுரிவர்.

ஆனால் குடிகள் கொடுங்கோன்மன்னனால் ஆளப்படினும் சலகம் நேர்ந்த காலங்களில் தமது நாட்டின்மீது அல்லது தமது அரசர்மீது படையெடுத்துவரும் எதிலர்பாலேகார். ஏனெனில், அவ்வாறு செய்பவர்களின் கதியானது அரசனைநம்பி புருஷனைக் கைவிட்டவள் தலையெழுத்தாம். புருஷனைக்கைவிட்டு அரசனுக்குக் கைகொடுத்தவளை எவ்வாறு அரசன், புருஷனைக் கைவிட்டதுபோல் தன்னையும் அவள் கைவிடுவாளென்றெண்ணித் தண்டித்துத் தாழ்மைப்படுத்துவானோ அவ்வாறே பிறவரசனும் தன்னரசனைக் காட்டிக் கொடுப்பவர்களைத் தனக்கு மவ்வாறே அவர்கள் செய்வார்களென வெண்ணித் தண்டித்துத் தாழ்மைப்படுத்துவானென்பது திண்ணம்.

இவ்விஷயத்தையறிந்தோ வறியாமலோ தற்காலம் இந்துக்கள் இராஜபக்தியுடையவர்களோ அல்லரோ வென்னும் வீண்வியவகாரம் இச்சென்னையின்கண் நிகழ்ந்துவருகின்றது. இந்துக்களுக்கு இராஜபக்தியுண்டில்லையென்பதை யநுபவத்திலே கண்டறியவேண்டியது. இதைவிட்டு வீணே வார்த்தையாடுவதிற் பிரயோசனமில்லை. D.

வேதோபந்நியாசம்.

திவான்பகதூர் இரகுநாதராயர் அவர்களும், கிறீஸ்தவ போதகாசிரியரும் கருத்து வேறுபட்டு ஒருவர் கூற்றை யொருவர் மறுக்கும்படி பல உபந்நியாசங்கள் செய்துவருகின்றனர். இவர்களுடைய விவாதத்தைப்பற்றிச் சென்றவாரம் D.என்பவர் எழுதியுள்ளவற்றால் விளங்கியிருக்கும். சென்ற ஆதிவாரம் மாலை கிறீஸ்தவபோதகாசிரியர் கிறீஸ்துமதத்திலுள்ள நீதிகள் வேதத்தில் கிடையாதென்று தாம் பிரதமத்தில் சொல்லிய வாக்கியத்தைச் சில வேதவாக்கியங்களைக் கொண்டு சாதிக்கவேண்டிச் சில சுலோகங்களைச் சத்தச்சிதைவோடு குதலைச்சொற்களால் படித்து, இந்துக்களுக்குப் பல் தேவருண்டென்றும், ஒவ்வொரு தேவருக்கும் ஆயிரம் ஐந்நூறு மனைவியருண்டென்றும், அத்தேவருக்குப் பூர்வீகத்தவர் அஸ்வமேதம், கோமேதம், நரமேதம் முதலிய செய்துவந்தார்களென்றும், அத்தேவர்களுக்குக் கொலையிலும் புலையிலும் கள்காமாதிகளிலும் விருப்பமுண்டென்றும், இத்தகைய அசுத்த அசப்பிய துன்மார்க்க ஒழுக்கங்கள் கிறீஸ்துமதத்திற் கிடையாதென்றும், ஆதலால் கிறீஸ்துமத நீதிவேதத்தில் கிடையாதென்றும் உபந்நியாசித்தார். இதனை மிகு அமைதியோடு செவிசாய்த்துவந்த திவான்பகதூர் அவர்கள் அப்பாதிரியாரா லெடுத்தாளப்பட்ட வேதவாக்கியங்களுக்கு வேறு பாவப்பொருளுண்டென்றும், அவற்றை விளக்கித் தாம் ஒரு உபந்நியாசம் இம்மதி ௧0வ புதன்கிழமை செய்யப்போகிறதாகவும் சொன்னதுபோலவே சென்ற ௧0வ பல விவேகிகள் கூடிய சதசில் தாம் உபந்நியாசிக்கவாரம்பித்தார். முதலில் இந்துக்களுக்குப் பலதேவருண்டென்று பாதிரியார் சொன்னதை மறுதலிக்கவேண்டிச் சில வேதசுலோகங்களின் எண்ணைமாத்திரம் குறித்து அவற்றில் கடவுளை ஒன்றன்பாலாகவும் ஒருமையாகவும் கூறப்பட்டிருக்கின்றமையால், கடவுள் பலருண்டென்பது வேதசம்மதமல்லவென்றும், தேவர்களென்னுஞ் சொல்லிற்குச் சத்தார்த்தம் தீவிரபுத்தி அல்லது பிரகாசமுடையானென்றும் சொல்லினர். ஆதலால் வேதத்தில் குறிக்கப்பட்ட அக்கினி வருணன் வாயு முதலிய தேவர்களெல்லாங் கடவுளரல்லரென்றும் சொல்லினர் தேவர்களெனப்படுவோர்கள் கடவுளரல்லவாதலால், ௧000-௫00-மனைவியரை யுடைத்தாயிருந்தது தீவிரபுத்தியுடைய தேவனென்னப்பட்ட மனிதரேயல்லாமல் கடவுளரல்லரென்றும் ஆதலால் இந்து கடவுளருக்குப் பல மனைவியருண்டென்று வேதங் கூறுகிறதென்பது சுத்தாபத்தமென்றும் காட்டினர். வேதாபிப்பிராயமோ எல்லோருங் கொலைகள் காமாதிகளை ஒருபோதும் ஒ ஒருசிறிதும் அநுசரிக்கா திருக்கவேண்டு மென்பதேயாம். இஃது எங்ஙனமெனின், இந்த துர்க்கிருத்தியங்களிலெல்லாம் மனஞ் செல்லத்தக்கது மனித இயற்கையாதலால், அதை முற்றும் மறுதலிக்க ஒரேமுறையில் பிரவேசிப்பது அசாத்தியமென்று புத்திசாலிகளாகிய இருடிகள் சில நிபந்தனைகளை யேற்படுத்தி அந்நிபந்தனைவாயிலாக மதுமாமிச விபசாராதிகளை யொழிக்கப் பிரவேசித்தனர்களாம். ஒருவன் மாமிசபக்ஷணம் செய்யவேண்டில் ஐந்துநகங்களையுடைய மிருகங்களையே கொல்லவேண்டுமென்றும், அதிலும் இன்னின்னது போஜனயோக்கியதை யற்றதென்றும், போஜனயோக்கியதையுடையவைகளையும் அததற்குத்தக்க [illegible]களைச்செய்தே கொன்று பக்ஷிக்கவேண்டுமென்றும், அப்படி யாகஞ்செய்யத்தக்கவன் தனக்கும் தன்னை யடுத்தவர்களுக்கும் மூன்றுவருஷத்திய உணவாதிகளைத் தேடிவைத்திருப்பவனே யாகஞ்செய்ய யோக்கியதை யுடையானென்றும், இப்படியே ஒரு கன்னிகையை மணம்புரியவேண்டினும், மதுவைப் புசிக்கவேண்டினும் யாகங்களைச்செய்தே மணம்புரியவும் புசிக்கவும் வேண்டுமென்றும் நிபந்தித்திருக்கின்றார்களாம். இத்தியாதி நியாயங்களால் வேதத்தில் அவற்றையெல்லாம் புரிய இடந்தரவில்லையென்றும் ஜாதிவித்தியாசமும் சொல்லப்பட்டிருக்கவில்லையென்றும் மகாபாரத திருஷ்டாந்தங்காட்டி முடித்தார். இதன்மேல் அத்தியக்ஷரொழுந்து தான் கிறீஸ்தவராதலால் இதிற் சிற்சில அம்சம் தனக்குச் சம்மதமில்லையென்றும், பெரும்பாலும் சம்மதமேயென்றும் அவற்றை இந்துக்கள் பின்பற்றவேண்டுமென்றும் முடித்தார்.

இதைப்பற்றிய எமது அபிப்பிராயத்தை வருகிறமுறை வெளியிடுவோம்.

திட்டின் உற்பத்தி.

பிராமணர் தாங்கள் தொன்றுதொட்டு உண்டுவந்த மாமிசபோஜனத்தை பௌத்தர்களைக்கண்டு நிக்கிரகித்துத் தாங்கள் மேன்மையடையக்கருதி, நெடுங்காலவழக்கத்தைத் திடீலென்று விட்டுவிடக்கூடாதவர்களாகவும், அவ்வாறு விடுவதினால் தேகசௌக்கியக்குறைவு நேரிடுமெனவுங்கருதி எக்கியம், வேள்வி, யாகம், ஸ்ரார்த்தம், தேவாராதனை முதலிய பிரயோஜனகாலங்களில்மட்டும் உண்ணலாமென்று ஏற்படுத்தி அவ்வாறே உண்டுவந்தனர். சிலர் இவ்வேற்பாட்டின் வரம்பில் உறுதியாகநிற்க சக்தியற்றவர்களாக மற்றக் காலங்களிலும் அதனை உண்டுவந்திருக்கவேண்டும். இரகசியமாக உண்ணுவதை மற்ற ஜாதியார் கண்டால் தங்களை மதிக்கார்களெனக்கருதி தங்கள் பாகசாலைகளுக்குள் மற்ற ஜாதியார் வரலாகாதென்றும், தங்கள் போஜனவகைகளை அவர்கள் பார்க்கின் அது திட்டாகிறதென்றும் ஏற்படுத்தி இரகசியமாக மற்ற காலங்களிலும் மதுமாமிசாதிகளை உண்டுவந்திருக்கவேண்டும். இதற்கு சிலகாலத்திற்குப்பின் தா

ங்களும் மதுமாமிசாதிகளை உண்ணுதவர்களென்று பிரசித்
தப்படுத்தி இத்தேசப்பிரஜைகளால் கௌரவப்பட்டு வருகி
றகாலத்தில் மதுமாமிசாதிகளை இரகசியமாக விலைக்கு வா
ங்கவாகிலும், அல்லது எவர்களைக்கொண்டாகிலும் வாங்
கொள்ளவாகிலும் அனுகூலிக்கா திருந்திருக்க வேண்டும்.
இக்காரணத்தினாலேயே மதுமாமிசாதிகளை விட்டுவிட்டு,
அவற்றிற்குப்பிரதியாக உழுந்து தேனைத்தெரிந்து ஏற்படு
த்திக்கொண்டனர். இரகசியமாக மதுமாமிசாதிகளை உண்
டுவந்தகாலத்தில் சூத்திரர் முதலியோர் தங்கள் பாகசாலை
யினுள் வரலாகாதென்றும், தங்கள் போஜனபதார்த்தங்க
ளை இத்தேசத்தார் பார்க்கலாகாதென்றும், பார்க்கின் தீட்
டாகிறதென்றும் ஏற்படுத்திய நிபந்தனையை மரக்கரி பதார்
த்தங்களைமட்டும் உண்ணும் இக்காலத்திலும் ஏன் வைத்திரு
க்கவேண்டும். அந்நிபந்தனை முன்போல அவ்வாறே இருப்ப
து கௌரவமென்றும், இஷ்டமிருந்து மதுமாமிசாதிகளை
உண்ணுபவர்களின் இரகசியம் வெளிப்படாதிருக்கட்டுமெ
ன்றல்லவா அவ்வேற்பாட்டை இன்னமும் முன்போலவே
வைத்திருக்கிறார்கள். ஒரு பௌத்தமத அரசன் தவளையை
ப்பிடித்த சர்ப்பத்திற்குத் தன் தொடையினின்று சிறுதுண்டு
மாமிசத்தை அறுத்துப்போட்டுத் தவளையைத் தப்பவிட்டதா
கச் சரித்திரமிருக்கிறது. இத்தகைய சரித்திரம் பிராமணர்
சரித்திரத்தில் எங்காகிலும் எழுதியிருக்கிறதா? இல்லையே!

> வாகநகர்துவச மன்னுநின்னுனுதவி
> நீகமுயிர்பெறவே நீக்கியே - நாகத்தின்
> தன்பசியைத்தீர்த்த தயாளாஇவ்வேளைதனி
> லென்பசிக்கேது இலை.

M. MASILAMONI.

சமயபுராதனம்.

(௩௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆரியர் பூர்வ அரசரிடத்தில் மந்திரிகளாகவும், கல்விச்ச
ங்கத்தாராகவும் அமர்ந்து, இதிகாசமெழுதியவரால் எழுதப்
பட்ட சரித்திரங்கள் அரசர் முன்பாகக் கொண்டுவரப்பட்டு
அரங்கேற்றுபடி செய்விக்கப்படவேண்டுமென நியமித்து,மு
றையே கொண்டுவரப்பட்ட இதிகாசங்களில் தங்களைப்புகழ்
ந்திருப்பனவையை யங்கீகரிக்கச்செய்தும், தங்கள் பூர்வோத்
திரங்களில் உள்ளதைஉள்ளபடி எழுதி இருப்பவையை யழி
க்கச்செய்ததினாலும், தங்களுக்கு முன்னிருந்த பூர்வசரித்
திரங்களை ஒழிக்கச்செய்ததினாலும் இப்பரியாய நீபத்தின் பூ
ர்வசரித்திரம் இல்லாமற்போனதினாலும் இவர்கள் இத்தே
சத்தில் குடியேறிய காலம் இன்னதென்று தெரியவில்லை.
2500-வருஷங்களுக்குமுன் தன்னாணையைச்செலுத்தி,சத்து
ருக்களுக்கு அறிவுபுகட்டி, சான்றோருக்குத் துணைபுரிந்து
அறமுறைவழுவாமல் செங்கோல் நடாத்திவந்தவரும், ஆசி
யாகண்டத்தில் பௌத்தமதத்தை ஸ்தாபித்தவரும், சாங்கே
யமுனியின் புத்திரருமாகிய கௌத்தம பௌத்தரென்பவர்
உன்னைப்போல் பிறனையும் விரும்பக்கடவாயென்னும் வாக்
கியத்தையும்,கொல்லாவிரதத்தையும் நிலைநாட்டிப் பிரஜைக
ளுக்குத் தெளிவாக விளங்கும்படி விவரித்து விவரித்து இர
ண்டுகோடியே தொண்ணூற்று மூன்று இலக்ஷத்து அறுபத்
தெண்ணாயிரம்எழுத்துகளால் பிடகாக்கியமென்னும் முப்பத்
திரண்டுபிரிவுகளாக எழுதிய தர்ம்மபதம் (Darmapada)
வென்னும் வேதக்கோட்பாட்டின் அமிசங்களும், ஜோரா
ஸ்டர் (Zoroaster) என்னும் பாரசீகவேதியன் மாமிசபோ
ஜனஞ்செய்யும்படியும், தீயை வணங்கும்படியும் கற்பித்தெ
ழுதிய இன்டவஸ்டா (Zendavesta) வென்னும் வேதக்கோ
ட்பாட்டின் அமிசங்களும் பிராமண வேதாகமங்களில் அட
ங்கியிருப்பதால், அவ்விருவேதங்களினின்றுஞ் சிலவற்றை
த்தழுவி, இல்லாதன சிலவற்றை நூதனமாகச்சேர்த்து பூத
லில் நவீனமாக ருக்வேதத்தை யெழுதியிருக்கவேண்டும்.
யாககாலங்களிலும், ஸ்ரார்த்தகாலங்களிலும் மாமிசாதிக
ளை உண்ணலாமென்று ருக்வேதத்தில் மிகவிரிவாக எழுதப்
பட்டு, சாமவேதத்தில் அதனை நிக்கிரகித்திருப்பதாலும், வ
டதிசை பிராமணரினும் தென்திசை பிராமணர் சுத்த சை
வர்களாயிருப்பதாலும் இக்காரணங்களினாலே பிராமணர்
பூர்வகாலத்தில் மாமிசபக்ஷணிகளா யிருந்தன ரென்றும்,
பௌத்தர்களைக்கண்டு மாமிசபோஜனத்தைச் சிறிதுசிறிதாக
நிக்கிரகித்திருக்க வேண்டுமென்றும் திருட்டாந்தப்படுவதா
ல், பிராமணர் இத்தேச பூருவகுடிகளல்லவென்றும், கௌ
தமமுனிக்குப் பின் இத்தேசத்தில் குடியேறி இருக்கவேண்
டுமென்றும் அனுமானிக்கப்படுகின்றது.

துளுவவேளாளர், கொண்டைகட்டிவேளாளர், மைசூர்
மாகாணத்திலிருக்கும் சிவாச்சாரர்கள் முதலிய வகுப்பார்
தற்காலம் பிராமணக்கொள்கையினராக இருக்கினும் பூருவ
காலந்தொடங்கி மாமிசபோஜனஞ் செய்யாதவர்களாக இ
ருக்கின்றனர். தற்காலம் பிராமணக்கொள்கையைப் பின்ப
ற்றி இருக்கும் சிவாச்சாரர்கள் பிராமணர் ஸ்ரார்த்தகாலங்க
ளிலும், யாககாலங்களிலும் மாமிசாதிகளை உண்ணுவதால்,
அவர்கள் மனைகளில் ஜலபானமும் செய்யோமென்கிறார்
கள். இதனால் அவர்கள் எவர்களுடைய பலவந்தத்தினா
லோ தங்கள் பூர்வகொள்கையைவிட்டு பிராமண சமயத்
தைப் பின்பற்றினபோதிலும் மாமிசபோஜனஞ் செய்யோ
மென்கின்றதால், பௌத்தமதத்தின் ஓர் அமிசமாகிய கொ
ல்லாமை இவர்களிடத்தில் தோற்றுகின்றதாதலால், இவர்
களது பூர்வகொள்கை பௌத்தமதமென விளங்குகின்ற
து. வைஷ்ணவமதஸ்தாபகராகிய உடையவரென்பவர் மை
சூருக்கு அருகிலிருக்கும் மேலைக்கோட்டைக்குச்சென்று அவ்வ
ரசனைத் தன்வயப்படுத்தி பலவந்தத்தினால் அங்கிருந்த பௌ
த்தர்களனைவரையும் வைஷ்ணவமதத்திற்குத் திருப்பிக்கொ
ண்டார். கிறீஸ்தவர்கள் தலைமயிரை 2-3-அங்குலம் விட்டுக்
குச்சைப்போல் கத்திரித்துவிடுகின்றனர். மகம்மதியர் த
லைமயிரை சௌளஞ்செய்துவிடுகின்றனர். இவ்வாறே சீனர்,
மங்கோலியர், ஜப்பானியர், பர்ம்மியர் முதலியோர் குடு
மிவைப்பது அவர்கள் மதாச்சாரம். இந்துக்களும் சீனர்
முதலியோரைப்போலவே குடுமிவைப்பதால், இவர்களு
ம் பூர்வகாலத்தில் பௌத்தமதத்தைப் பின்பற்றினவர்க
ளாக இருந்திருக்கவேண்டுமென்று அனுமானிக்கப்படுகிற
து. கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி முதலிய இட
ங்களிலுள்ளோர் கறுத்த நிறத்தையுடையவர்களாக இருக்க,
அவற்றிற்கு அருகிலிருக்கும் கொச்சி, திருவாங்கூர், மலை
யாளத்தார்மட்டும் வெண்ணிறத்தையுடையவர்களாக இரு
ப்பதாலும், மலையாளபாஷை தமிழ்கெட்டு உண்டானதாக
இருப்பதாலும், இத்தேசபுருஷர்களே சமஸ்த சுதந்திரங்க
ளையும் பெற்றவர்களாகவிருக்க, பர்ம்மியரைப்போல் அவ்
விடங்களின் புருஷர்களினும் ஆடவர்களே சமஸ்த சுதந்தி
ரங்களையும் பெற்றிருப்பதாலும், அடர்ந்தவனங்களில் சஞ்ச
ரிப்பவர்களான பர்ம்மியரைப்போலவே மலையாளத்தாரும்
தங்கள் மனைகளைச்சுற்றித் தெங்கு, கமுகு முதலிய சோலைக
ளை வைத்து அதில் வாசஞ்செய்வதாலும், இவர்களுடைய ந
டையுடைபாவனைகள் யாவும் பர்ம்மியருக்கு ஒத்திருப்பதா
லும்,இவர்கள் பர்ம்மாவினின்றே மலையாளத்தில் குடியேறி
யிருக்கவேண்டுமென்றும், இவ்விந்துதேசமும் பௌத்தமத
த்தை அனுஷ்டித்ததாக இருந்ததினால் பௌத்தமதத்தரான
பர்ம்மியர் மலையாளத்தில் குடியேறி யிருக்கவேண்டுமென்
றும் அனுமானிக்கப்படுகின்றது. ஆகையால், இக்காரணங்க
ளினாலே பௌத்தமதம் முன்னுண்டானதென்றும், பிராம
ணசமயம் பின்னுண்டானதென்றுந் தெளிவாக விளங்குகி
ன்றது.

இமயமலைக்கு வடமேற்கிலுள்ள பாரசீகக்குடிகள் தீயை
வணங்குவதுபோல பிராமணர்களும் வேள்வி, யாகாதி கி
ருத்தியங்கள், தீபநமஸ்காரம், சூரியநமஸ்காரஞ்செய்து தீ
யை வணங்குவதாலும்; பாரசீகரும், மகம்மதியரும் ஆத்தி
கருக்குள் வழங்கும் ஆன்மாவென்று பெயருற்ற தனியேக
பதார்த்தம் ஆண்பாலாருக்கேயன்றி பெண்பாலாருக்கில்லை
யென்றும், ஆகையால் அவர்கள் வேதங்களை ஓதவும், கடவு
ளை வணங்கவும் படாதென்று தடுத்திருப்பதுபோல, பிராம
ணரும் மாதரை வேதம் ஓதுதலினின்றும், தேவவழிபாட்டி
னின்றும் விலக்கி இருப்பதாலும், அவர்களது பாஷையும்,
நடையுடைபாவனைகளும் இத்தேசத்தவர்களின் நடையுடை
முதலியவற்றிற்கு முற்றும் பேதப்பட்டிருப்பதாலும், ஒரு
தேசத்தினின்று மறுதேசத்தில் குடியேறி இருப்பவர்கள்
அத்தேச பூர்வகுடிகளைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்துவது
போல, பிராமணர் இத்தேசத்துப் பூருவகுடிகளைத் தங்களு
க்குக் கீழ்ப்படுத்தியிருப்பதாலும், மகம்மதியர் தங்கள் ஊ
ழியங்களை இயற்றுவித்துக்கொள்ள அடிமைகளை வாங்குவ
துபோலவும், விற்பதுபோலவும், பிராமணர் இத்தேச பூரு
வகுடிகளிடத்தில் தங்கள் கிரியைகளை இயற்றுவித்துக்கொ
ள்ளவும், அவர்கள் செல்வத்தைக் கிரகித்துக்கொள்ளவும்
ஜாதிபேதங்களை நிருபித்திருப்பதாலும் கிறீஸ்தவர்களும்,
பௌத்தர்களும், இத்தேசத்தவர்களும் சுருட்டுபிடிக்கின்ற
னர். மகம்மதியர் குடாக்குப் பிடிக்கின்றனர். ஆனால் பார
சீகருக்கோ அக்கினியே தெய்வமானதால், அவர்கள் தங்க
ள் தேவதையாகிய அக்கினிபகவான் சுருட்டு முதலியவற்
றைப் பிடிப்பதினால் தீட்டாகிறதெனச் சுருட்டுமுதலியவற்
றை யவர்கள் பிடிப்பதில்லை. பூருவகாலமுதல் பிராமணர்
மதுமாமிசாதிகளை உண்ணுவதாக மேற்கோள் இருக்கிறதே
யன்றி சுருட்டு முதலியவற்றைப் பிடித்ததாக எதிலும் எழு
தியிருக்கவுமில்லை, பிரத்தியக்ஷத்தில் நாம் பிடிக்கப் பார்த்
ததுமில்லையாதலால், இத்தேசத்தின் பூர்வ இதிகாசமில்லா
விடினும் மேற்கண்ட காரணங்களால் அவர்கள் இத்தேச

பூர்வகுடிகளல்லவென்றும், பாரசீகதேசத்தினின்றும் இத்தேசத்தில் குடியேறியவர்களென்றுந் தெளிவாக விளங்குகின்றது. (இன்னும்வரும்.)

M. MASILAMONI.

கன்பூசியஸும் யேசுவும்.

1. இவர்களிருவரும் இராஜவம்சத்தில் பிறந்தவர்களாக வதந்தி.
2. இவர்களிருவரும் ஏழைக்குடும்பத்தில் பிறந்தவர்கள்.
3. இவர்களிருவரும் மனிதர்மீது பூரணவாஞ்சை யுடையவர்களாக விருந்தனர்.
4. இவர்களிருவரும் நீதிமார்க்கங்களைப் போதித்துக்கொண்டு திரிந்தவர்கள்.
5. இவர்களிருவருக்கும் சீடர்களும் பரிவாரங்களு முண்டு கன்பூஷியஸ் அதிக சீடர்களையுடையார்.
6. இவர்களிருவரும் தங்களுடைய சீடர்களை ஒருவரையொருவர் நேசிக்கும்படியாகவும், சகோதரர்போல் ஒழுகும்படியாகவும் கட்டளையிட்டு வந்தார்கள்.
7. இவர்களிருவரும் பிறன் தனக்குச்செய்ய விரும்புவதைத் தான் பிறனுக்குச்செய்ய விரும்பும்படியான நீதியினைப் போதித்துவந்தார்கள்.
8. இவர்களிருவரும் கர்விகளாலும், துடுக்கர்களாலும் இகழப்பட்டுவந்தார்கள்.
9. இவர்களிருவரும் ஆச்சரியப்படத்தக்க கோடானுகோடி சனங்களால் மதிப்புற்றனர்.
10. இவர்களிருவரும் உலகத்தில் மிக்க வாய்மைபெற்றிருந்தனர்.

இதுநிற்க,

1. கன்பூசியஸ் விவாகம் புரிந்திருந்தார். ஏசுவானவர்க்கு விவாகமில்லை.
2. கன்பூசியஸுக்கு புத்திரனுண்டு. ஏசுவானவர்க்குப் புத்திரனில்லை.
3. கன்பூசியஸ் தன் இருபதாம்வயதில் பிரசங்கம் செய்ய வாரம்பித்தார். ஏசுவானவர் முப்பதாம் வயதில் தொடங்கினூர்.
4. கன்பூசியஸ் ஐம்பதுவருடகாலம் பிரசங்கஞ்செய்தார். ஏசுவானவர் இரண்டொரு வருடகாலம் பிரசங்கஞ்செய்தார்.
5. கன்பூசியஸ் ஏசுவானவர் போதித்துவந்த நீதிகளைப்பார்க்கிலும் இருபதுமடங்கதிகமாகப் போதித்துவந்தார்.
6. கன்பூசியஸ் படித்தவர். ஏசுவானவர் படியாதவர்.
7. கன்பூசியஸ் இவ்வுலகத்தைப்பற்றி போதித்ததுமல்லாமல், இவ்வுலகத்தைப் பொருளாக மதிக்கவும் சொன்னூர். ஏசுவானவர் இவ்வுலகத்தை அவமதிக்கச் சொன்னூர்.
8. கன்பூசியஸ் மறு உலகத்தைப்பற்றி யொன்றுஞ் சொல்லவில்லை. ஏசுவானவர் பரத்தைப்பற்றி மிகக் கூறியுள்ளார்.
9. கன்பூசியஸ் ஆன்மாக்களை இகத்தில் சுகஜீவிகளாக்க வெத்தனித்தார். ஏசுவானவர் ஆன்மாக்களைப் பரத்தில் சுகஜீவிகளாக்க வெண்ணினூர்.
10. கன்பூசியஸ் மனிதனைச் சபிக்கவில்லை. ஏசுவானவர் சபித்தார்.
11. கன்பூசியஸ் கடவுளைப்பற்றி யொன்றும் சொல்லவில்லை. ஏசுவானவர் யூதர்களின் கடவுளைப்பற்றி யநேகமாய்ப் பேசியுள்ளார்.
12. கன்பூசியஸுக்கு பசாசங்களில் நம்பிக்கையேயில்லை. ஏசுவானவர்க்கு மிகவுண்டு.
13. கன்பூசியஸ் நரகத்தில் நம்பிக்கையுடையவரல்ல. ஏசுவானவர் நரகதண்டனையில் நம்பிக்கையுடையவர்.
14. கன்பூசியஸ் ஒருவனையும் பழிக்குப்பழி வாங்கவில்லை. ஏசுவானவர் பழிக்குப்பழி வாங்குவதில் எண்ணமுடையார்.
15. கன்பூசியஸ் ஒருவனையும் கெடுவாய் என்று கூறவில்லை. ஏசுவானவர் அவ்வாறு கூறியுள்ளார்.
16. கன்பூசியஸ் ஓர்போதும் கோபிக்கவில்லை. ஏசுவானவர் கோபித்தார்.
17. கன்பூசியஸ் தாய்தந்தையர்களை விசுவாசிக்கச்சொன்னூர். ஏசுவானவர் அவர்களைப் பகைக்கச் சொன்னூர்.
18. கன்பூசியஸ் ஒருவனையும் சவுக்காலடித்துத் துறத்தவில்லை. ஏசுவானவர் அவ்வாறு செய்தார்.
19. கன்பூசியஸ் தன்னுடைய சீடர்களைத் திருடும்படிச் சொல்லவில்லை. ஏசுவானவர் அவ்வாறு செய்தார்.
20. கன்பூசியஸ் ஜனங்களுக்குச் சாராயத்தைச் செய்துக்கொடுக்கவில்லை. ஏசுவானவர் அவ்வாறு செய்தார்.
21. கன்பூசியஸ் ஊரான் வயலில் விளையும் தானியங்களைத் திருடவில்லை. ஏசுவானவர் அங்ஙனஞ் செய்தார்.
22. கன்பூசியஸ் தன்னுடைய நீதிவாக்கியங்களை எழுதிவைத்திருக்கின்றூர். ஏசுவானவர் அங்ஙனஞ்செய்யவில்லை.
23. கன்பூசியஸ் தான் கூறியவாறு நடந்தவர். ஏசுவானவர் அங்ஙனஞ் செய்திலர்.
24. கன்பூசியஸ் தன்னைக் கடவுள் புத்திரனென்று கூறவில்லை. ஏசுவானவர் அவ்வாறு கூறியுள்ளார்.
25. கன்பூசியஸ் அற்புதங்களைச் செய்யவில்லை. ஏசுவானவர் அற்புதங்களைச் செய்ததாகக் கூறியிருக்கின்றது.
26. கன்பூசியஸ் தெய்வபக்தியுடையவரல்ல. ஏசுவானவர் அப்படிப்பட்டவரன்று.
27. கன்பூசியஸ் கைத்தொழிலையும், விவசாயத்தொழிலையும் விருத்திசெய்துவந்தார். ஏசுவானவர் அஃது செய்யவில்லை.
28. கன்பூசியஸ் விவாகத்தை விருத்திசெய்யும்படிச் சொல்லுகிறார். ஏசுவானவர் அங்ஙனஞ்செய்கின்றிலர்.
29. கன்பூசியஸ் கொடுமைகளைச்செய்யத் தூண்டவில்லை. ஏசுவானவர் அவ்வாறு செய்துவந்தார்.
30. கன்பூசியஸ் கன்னியத்தோடுங்கூடிய காலமரணத்தை யடைந்தார். ஏசுவானவர் குற்றஞ்சாத்தப்பட்டு சிலுவையி லறையப்பெற்று இறந்தார். D.

நூற்றைக்கெடுத்தது குறுணி.

மேலைய மகுடவாக்கியத்திற்கேற்ப நம்மவர்கள் செய்துவரும் வியவகாரங்களு ளனேகமானவை விவரணையற்றவையாய் வியர்த்தமாகின்றன. நம்மவர்களில் பெரும்பாலார் ஆயிரமாயிரமாகச் செலவுசெய்து விவாகம் புரிவரோயாயினும், விவாகத்திற்காக வழைக்கப்படுவோர்க்கும், வருவோர்க்கும் வெள்ளித்தட்டுகளில் வைத்துக்கொடுக்கப்படும் வெற்றிலைப்பாக்கானது பெரும்பாலும் மட்டைவெற்றிலையும், வெட்டைப்பாக்குமாகவேயிருப்பது வழக்கம். நம்மவர்களிலனேகர் இரவொன்றிற்கு நூறுநூறாகக் கொட்டிக்கொடுத்து பாட்டுகச்சேரி ஆட்டகச்சேரிகளை வைத்து, அக்கச்சேரிகளுக்கு வந்தவர்கள் தலையில் பனிநீர் செம்புகளில் வென்னீரை நிறப்பிக் கொட்டிவருகின்றனர். நம்மவர்களிலனேகர் ஆயிரமாயிரமாகச் செலவிட்டு மாடமாளிகைகளையும், கூடகோபுரங்களையும் கட்டிவருகின்றூர்களேயாயினும், தாங்கள் கட்ட உத்தேசித்திருக்கும் கட்டடங்களின் எழில் அல்லது ஏற்பாட்டைத் தக்க சிப்பிகளைக்கொண்டு நிர்ணயித்துக்கொள்வதும், பிறகு வேலையாரம்பித்தகாலத்தில் தக்கவதிகாரத்தலைவர்களை நியமிப்பதுமில்லை. ஆதலால் கட்டடங்கள் கட்டயில் தாங்கள் ஆதியில் உத்தேசித்ததொன்றுயும், முடிவதொன்றுயும் முடிவதும், முடியுமுன்னும், முடிந்த பின்னும் இடிவதும், அதனுல் அனேகர் உயிர் முடிவெய்தி மடிவதுமாக முடிகின்றது. நம்மவர்களிலனேகர் தத்தம் குற்றங்களைப்பாராமலே பிறரைச் சாதிப்பிரஷ்டரெனத் தள்ளிவைப்பதும், பிறகு அன்னோராலே தமக்குக் கனத்ததனம் பெயருமேயாயின், உடனே பிரஷ்டத்துவம் பரிசுத்தமாகியதாகவெண்ணி அன்னோரோடு கூடிக்கலந்து குலாவுகின்றனர். நம்மவர்காள்! நமது திருவிழாக்களில் ஊரைச் சுற்றிவரும் இரதமானது எத்தனை பெரிதாகவிருப்பினும், அல்பமாகிய அச்சாணியொன்றின்மையால் பயன்படாத்தன்மைபோல் நாம் எவ்வளவு திரவியம் செலவிட்டு எவ்வளவு பெருத்த காரியத்தைச் செய்யப்புகினும், அக்காரியத்திற்கு இன்றியமையாமலிருக்கும் எந்த சிறுவிஷயத்தையும் அசட்டைசெய்யாதிருப்ப ததியாவசியகமாகின்றது. D.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிநாயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசைடி ஆனரெரி மெம்பர் மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் வேப்பேரிக்கும் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 12.] MADRAS:—SUNDAY MARCH, 21, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

கடவுட்கியானம்.

நாம் உலகத்தின்கண்ணே பிரபலித்து விளங்குகின்ற சாஸ்திரங்களையும், சமயநூல்களையும் நூதனவிவேகத்தைக்கொண்டு நோக்கிப்பார்க்கையில், எல்லாம் அபூரணக்கியானமுடைய மனிதரால் செய்யப்பட்டனவாக இருக்கின்றனவேயல்லாமல் பூரணக்கியானமுடையோனென்று ஆத்திகராலே சொல்லப்படுகின்ற ஓர் சர்வஞ்ஞனாலே செய்யப்பட்டனவாகத் தோன்றவில்லை. ஆனால் எல்லா உற்பவங்களுக்கும் ஓர் காரணமிருப்பச் சர்வஞ்ஞருக்கும், சர்வஞ்ஞானத்திற்கும் காரணமில்லா திருக்கின்ற தேனெனின் கூறுவாம். ஆதியிலே மனிதர்கள் தமது ஐம்புலாதிகளுக்கும் விஷயமாகாத யாதையும் கருத்துட்கொள்ளவில்லை. ஆயினும் அவர்களுக்கு அப்போதிருந்த நிஷ்கபடத்துவ சிந்தைக்கு எட்டாத காரணங்களுக்கு ஒவ்வோர் நாமஞ்சூட்டி அக்காரணங்களுக்குடைய அசாத்திய சக்தியைப் புந்தியில் நிதானித்துத் தம்மினும் விசேஷமாகிய சில உற்பாத காரணங்கள் உலகத்திலே உண்டென்றும், அவை தமக்கு அசாத்தியமான விஷயங்களைக் கோபங் காரணமாகவும் சந்தோஷங் காரணமாகவும் இயற்றி வருகின்றனவென்றும் ஓர் மனோபாவங்கொண்டு, அம்மனோபாவத்தைப் பலர்க்கும் வெளியிட, அவர்களும் அக்காலத்தில் தமது புந்திக்கு எட்டாத விஷயங்களைப்பற்றி எண்ணி இளைத்திருந்தமையால், இவர்கள் சொன்ன காரணங்களே அவ்வுற்பாத சம்பவங்களுக்குக் காரணமாதல் வேண்டுமென்று சம்மதித்து அவ்வுற்பாத காரணங்களுக்கு தேவர்கள் என்கின்ற பொதுப்பெயரும் வருணன், வாயு, குபேரன், ஈசானியன், நிருதி, சூரியன், சந்திரன், அக்கினி யென்னும் சிறப்புப் பெயரும் கொடுத்துவந்தார்கள். மழை ஒவ்வோர்காலத்தில் பெய்கின்றமையால், அதற்கொரு காரணகர்த்தா இருத்தல் வேண்டுமென்றும், அவரே வருணனென்றும், இப்படியே வாயு அக்கினி முதலிய திக்குப்பாலகர்களும் ஏனைய தேவர்களும் காரணகர்த்தாக்களாக விருக்கின்றார்களென்றும் எண்ணி அம்மனோசிருட்டி தேவர்களுக்கு வணக்கம், பலி, ஆராதனை முதலிய உபசாரங்கள்செய்து வந்தார்கள். பிரதமநூல்களாகிய இருக்காதி வேதங்களில் மிகு முக்கியமாய் இத்தேவர்களை ஸ்தௌத்தியம் செய்திருப்பதற்குங் காரணம் இதுவே யென்க. நம்மிந்துதேசத்தார்கள் மாத்திரம் இங்ஙனம் செய்தவர்களல்லர். கிரேக்கர், ஸ்பானியர், அமெரிக்கர் முதலிய இன்னுஞ் சிற்சில தீவார்களும் இங்ஙனமே செய்து வந்தார்களென்று அவர்கள் பூர்வசரித்திரங்களும் சாஸ்திரங்களும் சான்று பகர்கின்றன. இதனால் தேவக்கியானம் சகல சனங்களுக்கும் கபடற்றகாலத்தில் அறியாமை காரணமாக ஜெனித்து அவருக்குப் பின் வந்தோர்களால் சிந்தனை யில்லாது அபிமான நீர் பெய்து வளர்க்க வளர்ந்து நாளாவர்த்தியில் தேவக்குஞ்சுகள் பலுகிப்பெருகி ஜனசங்க மேலிட்டதுபோல தேவர்கூட்டங்களும் நாளுக்குநாள் மேலிட்டேவந்தன. நாகரீகம் விர்த்தியாகவாக சில தேவர்கள் அநுசரணை ஆராதனையற்று ஒழிந்தும் வருகின்றார்கள்.

இப்படியே இடிக்கொருதேவர், மின்னலுக்கொருதேவர், மழைக்கொரு தேவர், ஜலத்திற்கொரு தேவர், காற்றிற்கொரு தேவர், நெருப்புக்கொரு தேவர், மலைக்கொரு தேவர், ஆகாயத்திற்கொரு தேவர்களாய்ச் சிருட்டிசெய்துவிட்டதுமல்லாமல் இவர்களை ஏகாங்கிகளாய் வைப்பது நன்றல்லவென்று இவர்களுக்கு மனைவி மக்களையும், சுவர்க்கமத்திய பாதாளமென்னும் ஸ்தானங்களையும், இவர்களுடைய நடையுடை பாவனையாதிகளைச் சூசிக்கப் புராணகாவியங்களையும் சிருட்டித்துவிட்டார்கள். இம்மட்டோடே போகாமல் ஒவ்வொரு தேவர் உண்டென்றும் வழிபட்டு வணங்கி வருகின்றார்கள். பின்னர் கல்வி, நாகரிகம் முதலியன விர்த்தியாகவாக, பல பிரஜைகளுக்கும் ஓர் அரசன் இருப்பதுபோலும், பல அரசர்களுக்கும் ஒவ்வோர் சக்கிரவர்த்தியிருப்பதுபோலும், அச்சக்கிரவர்த்திக்கு மேலும் ஓர் மண்டலேஸ்வரன் இருப்பதுபோலும் இத்தேவர்களுக்கும் அதிகார தேவர்களுண்டென்றும், அவர்களுக்கும் மேலான தேவர்களிருந்தே நடத்திவருகின்றார்களென்றும் ஏற்படுத்தி வேத பாஷியாதிநூல்களை இயற்றினார்கள். இத்தியாதி மனோசிருட்டிகளாகிய தேவதா பனிக்கூட்டங்களெல்லாம் தத்துவஞான திசையிலிருந்து உதயமாகிவரும் சுவஞான சூரியனுக்குமுன்னே யெண்டிசாமுகத்தும் இரிந்தோடும். ஆனால் பழமை, அபிமானம், மந்தமதி, மதவைராக்கியம், மூர்க்கம் முதலிய இலைகளடர்ந்த மனோ வனங்கள்மத்தியில்மட்டும் அச்சுவஞான சூரிய கிரணங்கள் விரைவில் புகுந்து ஒளி விசாது, அவ்விலைகள் தாமே பழுத்து உதிர்ந்த பின்னர் அல்லது கல்வித் தீப்பட்டெரிந்த பின்னரே புகுந்து ஒளிவீசும்.

வேதோபந்நியாசம்.

(சஉ-வது பக்கத் தொடர்ச்சி.)

கிறீஸ்துமதத்திலுள்ள நீதிகள் வேதம் அல்லது இந்துமதத்தில் கிடையாதென்று சொன்ன பாதிரியார் இன்னின்ன நீதி கிறீஸ்துமதத்திலுள்ளது, அது இந்துமதத்தில் கிடையாதெனக் காட்டுவான்வேண்டி ஒன்றாகிய தெய்வவழிபாடு, பலஸ்திரீகமனம் இன்மை, நரபலி முதலிய பலியிடுதலின்மை முதலிய சில நீதிவசனங்களைக்காட்டித் தம்மதம் பரிசுத்தமுடையதென விவகரித்தார். அதன்மேல் திவான்பகதூர் கிறீஸ்துமதத்தில் கொலை, களவு, கள், காமாதிகளைப் பிரேரேபித்திருக்கும் பாகங்களைக்காட்டி யவற்றின் பரஸ்பரவிரோதத்தை யெவர்க்கும் விளக்காமல் அவர் தம்மதத்தின்மேல் சாத்திய தோஷத்தை நிவர்த்திப்பான்வேண்டி பாதிரியார் எடுத்துக்காட்டிய பிரதிகூல வாக்கியங்களுக்கெல்லாம் அனுகூலபாவனு அர்த்தம் உண்டென்று தமது கல்விவிசேஷத்தால் பிரபலித்துப் பூரித்தார். அதற்கு அப்பாதிரியார் சம்மதிக்காதவராகிச் சில பரஸ்பரவிரோதங்களைக்காட்டி அவை பொருளல்லவென்று தான் இன்னொருபோது ரூபிப்பதாய்ச்சொன்னார். இதனோடு தேவர்கள் என்பதற்குச் சுருசுருப்பானவர்கள் பிரகாசமுள்ளவர்கள் என்பது பொருளானால், அவர்கள் இடி மழை முதலிய அசாத்தியமான காரியங்களை யுண்டாக்கினார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றமையாலும், ஓர் உலகத்தை ஆக்கவும் அழிக்கவும் வல்லமையுடையார்களென்று சொல்லப்பட்டிருக்கின்றமையாலும் அவர் மனிதர்களாக எப்படி எண்ணப்படுவார்கள்? இது பரஸ்பரவிரோதமாயிற்றேயென்றும் மறுதலித்தார். வேதாங்கீகாரிகளாகிய உட்சமயத்தாரே வேதவசனங்களுக்குப் பொருள் செய்வதில் ஒருவர் சொன்னபடி ஒருவர் சொல்லாமல் விவாதித்து பலவேறு சமயங்களும், பலவேறு அனுசரணைகளும், பலவேறு ஒழுக்கங்களும் உடையவர்களாய் மண்டையுடையச் சண்டையிட்டு மடிகின்றனரே, புறச்சமயி இதற்கெப்படி ஒப்புவர்? இவ்வியாக்கியானி தம்மவரையே ஒருமிக்கச்செய்து தாம் சாதிக்க வெளிவந்திருக்கும் விதவாவிவாகத்தை முடிக்கச் சக்தியில்லாதவராயிருக்க, ஊர்கூடிச் செக்குத்தள்ளுவதுபோல பிறமதத்தவரையெங்ஙனம் ஒருமிக்கச்செய்வர். இது அம்பரத்திற்கு ஏணியிட்டு ஆகாயக்கோட்டைகட்ட முயல்வதேயாம். விவேகிகளாயுள்ள யூகிகள் எவ்வாற்றானும் நியாயத்தையே பின்பற்

றல்வேண்டும். அபிமானத்தைப்பற்றிச்செல்வது அவலமாய்முடியும். இப்படித் தன் முதுகிலுள்ள அழுக்கைத் தொடைத்துக்கொள்ள ஏலாத திவான் தத்துவக்கியானிகள்மேல் பழுதுசொல்லி சபாரஞ்சிதப்படுத்தினது வெகுவியப்பு.

தத்துவக்கியானிகளில் **மில்பெயின், வால்டேர்** முதலியவர்கள் விசாரணையில் வெகுதொலை சென்றிருக்கின்றார்களென்றும், அவர்கள் சொல்வதெல்லாம் வெகுவாய் சுவானுபவத்திற்கு ஒத்திருப்பதென்றும், அவர்கள் சொல்லுக்குமேல் இரண்டு மூன்றுபடி கடந்தபோனால்தான் முடிவாகிய உண்மை விளங்குமென்றும், அவர்கள் போனமட்டும் ஒன்றுமில்லையென்று முடித்துச் சகலமும் பதார்த்த சக்தியேயென்று சொல்கின்றார்களென்றும், அப்பதார்த்த சக்தியே நாமெல்லோரும் வழிபடத்தக்க கடவுளென்றும் சொன்னார். திவான் அவர்கள் தத்துவக்கியானிகள் காட்டிய படிகளுக்குமேலும் சகலரும் நிர்விவாதமாய் சொல்லத்தக்க படிகளிருக்குமேல் காட்டலாகாதா? காட்டின் இவர்க்கு அது பரோபகாரமாகாதா? அதனால் இவர் இப்போது எடுத்து அவாந்தரத்தில் விடுத்த கக்ஷியினும் பெருத்த கீர்த்தி விளையாதா?

முன்னர் கிறீஸ்துவை நம்பி விசுவாசித்தால்தான் மோக்ஷமுண்டு என்று பறையறைந்து திரிந்த பாதிரிகள் சுவஞான அபிவிர்த்தியை நோக்கி "இதேது முதலிற்கே மோசம் வருகிற" தென்றெண்ணி எத்தேவனுகிலும் தேவனொருவனுண்டென்றால் போதும் என்கிறார்களே: இதற்கா இவர்களுக்கு மாதவேதனம் ரூபாய் 400-500 - ஏற்படுத்தி இவர்களை எண்டிசாமுகத்தும் அனுப்புவது? கிறீஸ்துமதத்திலும் கொலை களவு கள் காமாதிகளைப்புரிந்த துன்மார்க்கரையும் சன்மானஞ்செய்திருக்கிறதே அது இந்துவேதத்தினும் எப்படிச் சிரேட்டமடைந்தது? அது பழைய ஏற்பாட்டிலெனின், பழைய ஏற்பாடு கிறீஸ்து மதாங்கீகாரமன்றோ. அன்றேல் அதை யேன் எவ்வளவோ பொருள் செலவிட்டுப் பதித்துப் புதிய ஏற்பாட்டுடன் ஒன்றுசேர்த்துக் கட்டுவித்துக் காயிதக்கிரையமுங் கட்டிவராத இழிய விலைக்கு விற்றுவருவானேன்? அதையேன் கிழித்தெறிந்துவிடப்படாது? கிறீஸ்துமதத்திலும் பொருள்பேதத்தால் எத்தனையோ பிரிவுகள் பிரிந்திருக்கின்றனவே, அவற்றை ஒருமைப்படுத்த சக்தியற்ற பாதிரிகள் பிறசமயத்தாரைத் தம்மோடு ஒருமைப்படுத்த முயல்வது எவ்வளவு அசாத்தியம்? ஓர் சுத்தவீரன் பெண்டு பிள்ளைகளோடு இரணகளஞ்சென்று போர்புரிவானேல், அவன் புத்திர மித்திர களத்திராதிகளோடு மாண்டு மடிவது திண்ணம், அவர்களையெல்லாம் நிறுத்தி வாளாதி ஆயுதங்களைக்கொண்டு செல்வானேல் அவன் வெற்றியடைவன். இதுபோல ஓர்வாதி கால்வைத்தால் சறுக்கக்கூடிய நியாயவழுக்குடைத்தாய சமயசாத்திரங்களை ஆதாரமாகக் கொண்டு சமயப்போர் புரியப்போவானேல், அவன் அபஜெயமடைவது திண்ணம். அவற்றையெல்லாம் கட்டிப் புறம் போட்டுவிட்டு, நியாயவாள்கொண்டு நிற்பானேல் அவனை வெல்வதரிது. ஆதலால் நமது திவான் அவர்கள் சமயப்பற்றைவிட்டு நியாயபீடிகைமேல் நின்று பிரமாணவாளேந்திச் சமயப்பேர் புரிவாரேல் வெற்றியடைவர். எதிரி சேனையை வெட்டாதிருந்தால் சண்டையும் முடியாது, ஜெயமும் சித்திக்காது. எதிரி சேனையை வெட்டினால்தான் ஜெயமுண்டு. அதுபோல பிறமதத்தைக்கண்டித்து அதிலுள்ள பரஸ்பரவிரோதத்தைக் காட்டினால்தான் வெற்றியுண்டு இல்லாவிட்டாலில்லை.

இதைவிட்டு வழவழ கொழகொழவென்னும் விவகாரத்தால் ஒன்றும் அருது. தென்றல்முற்றிப் பெருங்காற்றாகும். இதனை உபயவாதிகளும் அனுசரித்தொழுகுதல் வேண்டும்.

சமயபுராதனம்.

(சரு-ம் பக்கத் தொடர்ச்சி.)

பாரசீகக் குடிகளில் பெரும்பான்மையோர் கல்வியும் நாகரிகமுமின்றி கிர்மூடரைப்போல என்பு பலகறை முதலியவற்றை ஆபரணங்களாக அணிந்தும், தோல் இலைகளை ஆடைகளாக உடுத்தியும், நானாவித மாமிசாதிகளை பாகஞ்செய்யாதுண்டும், ஓரிடத்திலும் நிலையாயிராது நாடோடிகளாகத் திரிந்தும் ஜீவனஞ் செய்து வந்த இவர்கள் தங்கள் தேசத்திலுண்டான பஞ்சத்தால் அன்னவஸ்திராதிகளுக்கு வருவழியற்று கிழ்க்கண்டமாகிய இவ்விந்துதேசத்தை வந்து பார்க்க பூலோகத்தின் கண்ணே சிறந்து விளங்காநின்ற இத்தேசம் எக்காலத்தினுங் குறைவுபடாத நீர்வளமுள்ள கங்கை, சிந்து, யமுனை, காவேரி முதலிய பெரியதும் சிறியதுமான பல நதிகளை அடுத்தடுத்துடையதாயும், வாழை, பலா, மா, தெங்கு, கரும்பு முதலிய பலனுள்ள பலசோலைகளையும், சண்பகம், பாதிரி முதலிய விருக்ஷங்களால் நெருங்கி வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளையும், பரிமளகந்தம் வீசும் அழகிய நானாவித மலர்கள் மலர்ந்திருக்கும் செடிகளில் அம்மலர்களுக்கேற்ற பலவித வருணங்களையுடைய சிறிய புள்ளினங்கள், காண்போர் எவருங் களிக்கும்படி யம்மலர்களில் ஒழுகும் மதுரத்தை அருந்த அருணோதயங்களில் மலர்கள்தோறும் பரந்துதிரியும் வண்டினங்களையுடைய நந்தவனங்களையும், தாமரைத்தடாகங்களையும், நீர் நிறைந்து அல்லி நீலம் முதலிய புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளையும், ஏரி குளம் முதலிய பல நீர் நிலைகளையும் செந்நெல் முதலிய பலவித பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய புலங்களையும், அரசமண்டபங்கள், விசித்திரமண்டபங்கள், வினோதமண்டபங்கள், நியாயஸ்தலங்கள், கல்விச்சாலைகள், பாடற்சாலைகள், ஆயுதசாலைகள், சிலம்பக்கூடங்களு முடையதாயும், பொன், வெள்ளி இரத்தின வகைகள், யானைதந்தம், பரிமளகந்தம் வீசும் சந்தனமரம் இவை முதலியவை ஏராளமாக அகப்படத்தக்கதாயும் எத்தேசத்திலும் இதுவே சிறந்து விளங்குவதைக் கண்டு களிப்புற்று, இப்பரியாயதிப்த்தில் குடியேற ஆரம்பித்து முதலில் சிந்துநதிவரையில் குடிபுகுந்து, பின்பு கங்காநதியோர முழுவதும் வியாபித்துப் பரவினார்கள். அதன்பின் இமயமலை முதல் விந்தியமலை வரையிலும், யமுனாநதிமுதல் கங்காநதிவரையிலும் தங்கள் வசமாக்கி, இமயமலை முதல் விந்தியமலை வரையில் ஆரியவர்த்தமெனவும், அவர்கள் பலங்கொண்ட இடமாகிய சிந்துநதி முதல் சரஸ்வதியாறு வரையில் பிரமவர்த்தமெனவும், விந்தியமலைக்குத் தெற்கிலிருப்பவை யனைத்துந் தண்டகாரண்யமெனவும், அவ்வாரண்யத்தில் ஆரியர் குடியேறலாகாதெனவும் விதித்தனர். ஆரியரினின்று இத்தேச மன்னவரும், மன்னவரினின்று ஆரியருந் தோன்றி இருப்பதைக் கருதாது, தங்கள் சுயஜாதியார் விர்த்தியான அநேக வருஷங்களுக்குப் பின் திடங்கொண்டு, பூருவ இந்துக்களுக்குள் பக்ஷபாதமின்றி நானா சமயத்தாரையுந் தற்காக்குந் தன்மையுள்ள சட்டதிட்டங்களேற்பட்டு அவனவன் தன்தன் மதநிபந்தனைகளையும் கிரியைகளையும் திண்டாட்டமின்றி அனுஷ்டித்து வரும்படி விதிக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்களை ஆரியர் ஒழிக்கச்செய்து, தங்கள் சட்டதிட்டங்களையே சார்ந்தொழுகும்படி நயத்திலும் பயத்திலும் பலவந்தஞ்செய்து தங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டு, தங்களை மந்திரிகளாகவும், சேனாதிபதிகளாகவும் உயர்த்தவேண்டுமென மகுடவர்த்தனர்களைக் கேட்டமைந்து எங்கும் வியாபித்துப் பரவினார்கள். இவர்கள் தங்கள் சுயகுலத்தவர்கள் விர்த்தியடைந்த அநேக நூற்றாண்டுகளுக்குப் பின் நிரக்ஷரேகைக்கு அதி தொலைவில் இருந்ததினால் சிவந்திருக்குந் தங்களை உயர்குலத்தாரெனவும், சூரியவெப்பத்தால் கறுத்திருக்கும் இத்தேச பூருவகுடிகளை கீழ்குலத்தாரெனவும் இருவகுப்பாகப் பிரித்து, இத்திசைக் குடிகளைக் கீழ்ப்படுத்தித் தாங்கள் மேன்மையடைவதற்காக ஜிண்டவஸ்டா பிடகாக்கியமெனும் இருவகை வேதங்களினின்றும் முதலில் ருக்வேதத்தை எழுதி அதை பௌத்தமத இறைவர்களிடத்தில் காண்பித்து இவ்வேதந் தாங்கள் கடவுளால் பெற்ற வரப்பிரசாதமெனவும், அதனை ஓதத் தாங்களே உரியவர்களெனவும் இனி இத்தேசம் தங்களால் நற்சீருக்கு வர எதிர்நோக்கிக்கொண்டிருக்கிற தெனவுமொழிந்து, அதனை யாவரையும் அங்கீகரிக்கும்படி உபாயதந்திரஞ் செய்தார்கள். அதனை யாவரும் அங்கீகரித்தபின் தாங்கள் உயர்ந்த ஜாதியாரெனவும், க்ஷத்திரியர் முதலானவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களெனவும், இத்தேசப் பூர்வ குடிகளைத் தொடுவதினால் தீட்டெனவுஞ் சாதித்து, இத்தேசமன்னர் முதலானவர்களுடன் கலந்திருந்த பாரசீகராகிய ஆரியர் தங்கள் சுயகுலத்தவர்களுக்குள் ஓர் சங்கங்கூடி, வேதம் ஓதுபவர்களை வேதியரெனவும், புஜபல பராக்கிரமத்தை க்ஷாத்திரத்துடன் சாதிப்பவர்களை க்ஷத்திரியரெனவும், வாணிபம் செய்வோரை வைசியரெனவும், மற்றைய தொழில்களை இயற்றுவோரை சூத்திரரெனவும் வகுத்து தொழிலினாலே ஜாதி வகுப்புப் பிரித்தார்கள். மனு என்பவர் அச்சங்கத்திற்குச் சபாநாயகராக இருந்ததினால் அச்சபையில் எழுதப்பட்ட நூலுக்கு மனுதரும நூலென்று பெயரிடப்பட்டது. அம்மனுவுக்கு சுவாயம்பு, சுவாரோசிஷன், தேபஸ, சூரியளைவதன், சாக்குஷன், வைவசுவதன் என்ற ஏழுபெயர் தவிர, வேறு ஏழுபெயர் உபபலமாக இருந்து உதவி புரிந்தனர். இவர்களுக்கும் இவர்கள் பின் சந்ததியாருக்குமே பிராமணரெனவும், வேதியரெனவும் அந்தணரெனவும் பெயராம்.

(இன்னும்வரும்.)

M. MASILAMONI.

சமயிகள் போர்.

(௪௰-வது பக்கத்தொடர்ச்சி.)

சுப்பாநாயக்கன்.

இவ்வளவுதானு சிவதூஷண சிங்கய்யங்காரே இன்னுமிருக்கிறதை யெல்லாம் வெளிப்படுத்துங்கள்.

சிவதூஷண சிங்கய்யங்கார்.

ஆ! ஆ!! சிவனைத் தலையெடுக்காமலடிக்கிறதற்கு அநேகமிருக்கின்றன. நீ கேட்டால் போதும் சொல்லுகிறேன் கேள். பாகவதத்தில், சிவனை ஆராதிக்கிறவர்களும் அவர்களது கோட்பாட்டின் அனுசாரிகளும் பதிதரும் வேதசாஸ்திரங்களுக்கு விரோதிகளுமா யிருக்கிருர்கள் - மேலும் பந்தத்தினின்று நீங்கி வீட்டையடைய விரும்புகிறவர்கள் பயங்கரமான பைசாச தேவர்களை விட்டுக் கழித்துச் சாந்தமும் நிரபராதமு முடையவரான நாராயணனைத் தொழவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பத்மபுராணத்தில் வாசுதேவனைத் தொழாமல் விட்டு விட்டு மற்ற தேவனை யாராதிக்கிறவன் எப்படிப்பட்டவனென்றால் தாகமாயிருக்கிற ஒருவன் தண்ணீருக்காக கங்கைக்கரையில் ஒருகிணறு வெட்டுகிற மதிகேடனுக் கொப்பாயிருக்கிருன்.

சிவன் பார்வதிக்கு உபதேசிக்கிறபடி விஷ்ணுவைவிட்டு மற்ற தேவர்களைத் தொழுகிறவர்களையும், மற்ற தேவர்களை விஷ்ணுவுக்குச் சமமென்று சொல்லுகிறவர்களையும், வைஷ்ணவரல்லாத எல்லாப் பிராமணரையும் நேரிட்டுப் பார்க்கவுமொண்ணுது, தீண்டவுமொண்ணுது, அவரோடு பேசவுமொண்ணுது.

சிவபத்தருக்குச் சிறந்த கோலமாகிய கபாலம், புலித்தோல், விபூதி இவைகளைத் தரிக்கவொண்ணுதென்று வேதத்தில் விலக்கப்பட்டிருக்கின்றது. சுருதிசுரங்கிதத்தில் சொல்லியிருக்கிறபடி நமுசி முதலாகிய தைத்தியர்களுடைய தபோபலத்தினுல் அவர்களை யெதிர்க்க இந்திரன் முதலாகிய தேவர்களுக்கு வல்லமையில்லா திருந்ததைப்பற்றித் தேவர்கள் விஷ்ணுவினிடத்தில் முறையிட்டுக்கொண்டார்கள் விஷ்ணுவானவர் சிவனைநோக்கி நீ சென்று தைத்தியருக்குச் சைவகோட்பாட்டையும் சைவ ஆசாரங்களையும் கற்பித்து வஞ்சித்து விபூதிகபாலம் புலித்தோல் முதலாகிய வைகளைத் தரிக்கும்படிச்செய்து அவர்களைத் துன்மார்க்கர்களாகவும் ஈனர்களாகவுஞ்செய்துவிடும்படி கட்டளையிட்டார்.

இச்செய்கையில் சிவனுக் குதவியாய்த் தாமசகுணத்திலும் அறிவின்மையிலுந் தோய்ந்திருக்கிற பத்துப்பெரிய இருடிகளையும் அனுப்புவித்தார். அவர்கள் தியபாஷண்ட-பதித-கோட்பாடுகளை யெழுதிப் பரம்பச்செய்தார்கள், அந்த இருடிகள் ஆரென்றல் கனதன், மௌதமன், சாகதி, உபமனு, ஜயமுனி, கபிலன், துருவாசன், மிருகண்டேயன், பிரகற்பதி, பார்க்கவன், இவர்களேயாம்.

பாசுபதகிரந்தங்கள் சிவனுலேயே செய்யப்பட்டன, கநாடம், வைசேஷிகசாஸ்திரம் நியாயசாஸ்திரம் கௌதமராலுண்டுபண்ணப்பட்டது, சாங்கிய வித்தியாலயம் கபிலராலுண்டாக்கப்பட்டது, சார்வாகமதம் பிரகற்பதியாலுண்டு பண்ணப்பட்டது, மீமாம்சம் சிவனுடைய உத்தரவின்படி வேதப்புரட்டாய் ஜயமுனியால் செய்யப்பட்டது. சிவனே வியாசனென்கிற பிராமணனுய்வந்து வேதாந்தம் பிரசுரஞ்செய்தார், அந்த வேதாந்தம் வைஷ்ணவருடைய மதிப்பில் வேதவிலக்கான எதிர்போதகமா யோசிக்கப்படுகிறது; ஏனெனில், அந்த வேதாந்தத்தில் கடவுளை பொறிபுலனுக்கெட்டாத குணங்களை யுடையவனென்று சொல்லி யிருப்பதினுலேயாம். விஷ்ணுவானவர் புத்தனுகி நிருவாணியாய் திரியவும் அல்லது கறுப்புவஸ்திரந் தரிக்கிற ஆசாரங்களையும்போதிக்கிற சாஸ்திரங்களைக் கற்பித்தார். புராணங்களும் ஒருபங்கு மனிதரைக் குருடராக்குகிற இந்தவேலையில் ஆயுதங்களாக இருக்கின்றன.

மச்சியம், கூர்மம், இலிங்கம், சைவம், ஸ்காந்தம், ஆக்கினேயம் இவைகள் ஏறக்குறையச் சைவத்தைச்சேர்ந்த அந்தகார தாமசபுராணங்களாக விருக்கின்றன. வைணவம், நாரதீயம், பாகவதம், காருடம், பதுமம், வராகம் இவைகள் சாத்துவீகபரிசுத்த சத்தியமான புராணங்கள். இவை வைஷ்ணவருக்குச் சோதனைக் கிரந்தங்களாகவிருக்கின்றன.

பிரமாண்டம், பிரமகைவர்த்தம், மார்க்கண்டேயம், பௌடியம், வாமனம், பிரமம் இவைகள் இரஜோகுணபுராணங்கள், கோபமுதலாகிய குணங்களிலிருந்து விடுவிக்கின்றன. இவைகள் சாக்தேயத்தைச் சார்ந்திருக்கும் மார்க்கண்டேயம் பிரசித்தமாய்ச் சிறப்புற்ற சண்டிபதம் துர்க்கைமகத்துவம் அடங்கியிருக்கின்றன. துர்க்கை பூஜாகாலத்தில் ஓதப்படுகின்றது, பிரம்மகைவர்த்தபுராணம் கோவிந்தனுகிய கிருஷ்ணனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதில் முக்கியமாய் கிருஷ்ணனைக்குறித்தும் அவனுடைய தேவியாகிய ராதாவைக்குறித்தும் எடுத்துப் பேசியிருக்கின்றது. மேலும் பிரகிருதியை உருவகப்படுத்திப் பேசியிருக்கின்றது.

இந்தப்பிரகாரமே ஸ்மிருதிகளாகிய தருமசாஸ்திரங்களும் பிரிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

வசிஷ்டர், ஆரீதர், வியாசர், பராசர், பரத்துவாசர், கசியபர் இவர்களுடைய தருமநூல்கள் பரிசுத்தமானவைகள். யாஞ்ஞுவற்கியர், அத்திரி, தித்திரி, தட்சகன், காத்தியாயன், விஷ்ணு இவர்களுடைய தருமநூல் ராஜஸவகுப்பு. கௌதமன், பிரகற்பதி, சம்வர்த்தகர், இயமன், சாங்கியர், உசானன் இவர்களுடைய தருமநூல் தாமசவகுப்பு.

சாத்வீக புராணங்களையும் அதற்குள்ள தருமநூல்களையும் வாசிப்பவருக்கு முத்தியுண்டாம், ராஜஸபுராணங்களையும் அதற்குள்ள தருமநூல்களையும் வாசிப்பவருக்குச் சுவர்க்கபதவியுண்டாம், தாமசபுராணங்களையும் அதற்குள்ள தருமநூல்களையும் வாசிப்பவருக்கு நரகமேயுண்டாம், அறிஞர் அவைகளை விலக்குவார். பி. போ.

(இன்னும்வரும்.)

பரம் ஒன்ரு பலவா?

தற்காலம் சில பாதிரிமார்களுக்கும், திவான்பகதூர் இரகுநாதராவவர்களுக்கும் இந்துவேதத்தில் கூறியபடி பரம் ஒன்ரு பலவா வென்னும் விவகாரம் நிகழ்ந்துவருவதை இப்பத்திரிகையை வாசித்துவருபவர்கள் அறிவர். ஆனுல் இவ்விவகாரம் கிறஸ்துமதத்தில் கூறப்பட்டுள்ள பரம் ஒன்றேயென்றும், இந்துமதத்திலே பரங்கள் பலவென்றும் சிலேடர் பாதிரியார் உபந்நியாசஞ் செய்ததின்மேல் விளைந்தது. தற்காலம் திவான் அவர்கள் இந்துவேதத்தில் பரம் ஒன்றேயென்று ரூபிக்க வேற்பட்டிருக்கிருர். அஃது விஷயம் யார்பால் ஜெயத்தை விளைக்கின்றதோ நாம் வெகு சீக்கிரத்தில் தெரிந்துகொள்ள நேரிடும். ஆனுல் கிறீஸ்துமதத்தில் பரம் ஒன்ரு பலவாவென்று நாம் சற்று யோசிப்பதத்யாவசியகமே. ஏனெனில், இருவர் கட்சியின் வலிமையையும் தூக்கிப்பார்ப்பது சுயக்கியானிகளின் கடமையாதலாலென்க. விவிலியநூலானது முழுவதும் கடவுளின் அருள் வாக்கென்று சொல்லப்படினும், அதனுள் சிற்சில வாக்கியங்கள் கடவுளினுல் மனிதர்களுக்கு நேரே சொல்லப்பட்ட தேவவாக்கியங்களென்று கொள்ளவேண்டியவைகளுமுண்டு. அவற்றுள் கடவுளால் தரப்பட்டதென்று சொல்லப்படும் பத்துக்கற்பனைகளுள் முதற்கற்பனையும் ஒன்ருகும். அஃது வருமாறு: என்னைவிட வேறு தேவர்களை வழிபடாதிருப்பீர்களாக. மேலைய வாக்கியத்தால் நாமறியவேண்டியது பரம் ஒன்றென்பதையா, பலவென்பதையா? மேலைய வாக்கியத்தைக்கூறிய கடவுள் தன்னைவிட வேறு கடவுளர்கள் இருந்தாலன்றி, மேலைய வாக்கியத்திற்கிடந்தருவரா? மேலும் தன்னைவிட வேறு கடவுளர்கள் இல்லாதபட்சத்தில் யாவரும் தன்னை வழிபடல் வேண்டுமென்று பொதுவாய்க் கூருமல் தன்னைவிட வேறு தேவர்களை வழிபடாதிருக்கக்கடவீர்களென்றும் வேறு கடவுளர்களை வழிபட்டுத் தொழுவோரை தலைமுறை தலைமுறையாகத் தண்டிப்பதாகவுங்கூற விடமிராது. D.

மதச்சின்னம்.

வாக்குவாதம்.

மதாபிமானி—ஐயா! சுயக்கியானியாரே, தாங்கள் நெற்றியில் ஒன்றுமிடாமலிருக்கின்றீரே, உங்களைப் பார்ப்பவர்கள் பறையனென்று பரிகாசஞ்செய்யார்களா?

சுயக்கியானி—ஐயா! பறையர்களை யேன் பார்ப்பவர்கள் பரிகாசஞ்செய்யவேண்டும். அவர்களும் நம்மைப்போல் மனிதர்கள்தானே. மேலும் பறையர்கள்தான் என்ன, மதச்சின்னங்களை நெற்றியில் வைப்பதில்லையா? இவைகளையெல்லா மோசிக்காமல் எம்மைநோக்கிய பார்ப்பவர்கள் பறையனென்று பரிகாசஞ்செய்வார்கள் என்று கூறுகின்றீரோ அஃதென்னை?

மதா—ஐயா! கோபித்துக்கொள்ளவேண்டாம். நான் பறையனென்று சொன்னதற்கு அருத்தம் கிறீஸ்தவன் என்பதே.

சுய—ஆ! ஆ!! நன்று! நன்று!! இவ்வுலகத்தில் நெற்றியில் விபூதி, திருச்சூரணம், சந்தனம், கரிக்கோடு, குங்கும முதலியவைகளை யிடாதவர்கள் கிறீஸ்தவர்கள் ஒருமதத்தினர்

தாம்போலும்! மகம்மதியர்களும், சீனர்களும், பாஷாண்டிகளும் என்ன சின்னங்களை நெற்றியிற்றரிக்கின்றனரோ வறிகிலேன்.

மதா—ஐயா! சுயக்கியானியாரே ஏளிதஞ்செய்யவேண்டாம். நாங்களெல்லாம் அலங்காரமாக நெற்றியில் ஏதோ வோர் சின்னங்களை வைத்திருக்கின்றோமே. அவ்வாறுகவே தாங்களும் ஓர் சின்னத்தை நெற்றிக்கலங்காரமாக வைத்துக்கொள்வீர்களென்று சொல்லியதேயல்லாமல் வேறல்ல.

சுய—ஏன் ஐயா! மற்ற தேசத்தாரெல்லாம் நெற்றியிலொன்றும் வையாதிருக்க, நாம்மாத்திரம் அவ்வாறு செய்ய வேண்டும்? அவர்களுடைய நெற்றிகளெல்லாம் பூரணவழகு வாய்ந்திருப்பதும், நமது வதனமாத்திரம் அபூரணமாய்ச் செய்யப்பட்டு அலங்கோலமாயிருப்பதென்றெண்ணியா? அல்லது உலகத்தில் யாவருடைய வதனங்களும் சிருட்டியின்கண் பூரணமெய்தாது அவலட்சணமாயிருக்கின்றனவென்பதும், அவ்வவலட்சணத்தை யறிந்துள்ளவர்கள் நம் போலிய விந்திக்களுமென்பதுமா? ஆயின் மனிதனைச் சிருட்டித்தவர் என்று சொல்லப்படும் கடவுளிற்கு அபூரணத்துவத்தை நாட்டுவதொக்குமே. ஆகவே நீங்கள் உங்கள் மதிமுகத்திற் சேற்றை வாரிப் பூசிக்கொள்ளுவ தொருபக்கமிருக்க, உங்களால் உங்களுக்குச் சிருட்டிகர்த்தாவென சிருட்டிக்கப்பட்டுள்ள கடவுளின் பூரணத்துவத்திலும் மண்ணைப்போட வேற்பட்டீரோ. இஃதென்ன கொள்ளை!

மதா—ஐயா! சுயக்கியானியாரே, நாமெடுத்துக்கொண்ட இவ்விஷயத்தில் நியாயம் பேசுவதிற் பிரயோசனமில்லை. அநுபோகத்தை யொட்டியே பார்க்கவேண்டும். மாங்கல்லியந்தரித்து மஞ்சள் பூசிவரும் மாங்கல்லிய ஸ்திரீயையும், மாங்கல்லியமிழந்த விதவைஸ்திரீயையும் வைத்துப்பார்த்தால் இலட்சணமின்னதென்றும், அவலட்சண மின்னதென்றும் விளங்கும்.

சுய—ஐயா! நியாயத்தைவெறுத்து அநுபோகத்தையே யொட்டிப்பார்க்க உத்தேசித்த நீவிர் விதவைக்கும் மஞ்சளைச் சமமாய் பூசியல்லவா இலட்சணுலட்சணங்களைச் சீர்தூக்கிப்பார்க்கவேண்டும். அஃது செய்யாமை யார்குறை கூறும். நமது குறையா! விதவையின் குறையா? D.

பெரியபாளையம்.

தன் தந்தையாகிய ஜமதக்கினியின் சொற்கேட்டு தன் தாயாகிய எல்லம்மாளை அவள் புரிந்த விபசாரகுற்றத்திற்காக அவளை படுகொலை செய்ததினிமித்தம் வியசனமுற்றிருந்த பரசுராமனது மனவருத்தத்தை ஒருவாறு நிவர்த்திக்க சென்னைக்கடுத்த பெரியபாளையத்தில் ஓர் சிறிய ஆலயங்கட்டி, அவள் பெயரால் ஒரு விக்கிரகஞ்செய்து அதில் நாட்டி, அவள் சோரநாயகனுல் நிருவாணமாக்கப்பட்டு சையோகிக்கப்பட்டதற்காக வெட்டப்பட்டதுபோல, இத்தெய்வத்திற்குப் பிரார்த்தனை செலுத்துபவர்கள் தாங்கள் அணிந்திருக்கும் ஆடைகளைக்களைந்து, வேம்பு இலைகளால் தங்கள் அவயவத்தை மறைத்து, நிருவாணமாகவே அவ்வாலய பிராகாரத்தை மூன்று சுற்று வந்து, அவள் வெட்டப்பட்டதுபோல ஆடுமாடுகளை வெட்டி தண்டாகாரமாக விழுந்து வணங்கும்படி பிராமணர் ஏற்படுத்தினர். முறையே நாளதுவரையில் பெரியபாளையத்தில் அவ்வுற்சவம் வருஷத்தில் ஐந்துநாட்கள் பிராமணர்முதல் சமஸ்த ஜாதியாராலுங் கொண்டாடப்பட்டு வருகின்றது. இத்தகையோருக்கு சுய அரசாட்சிவேண்டுமாம்.

M. Masilamoni.

கடிதம்.

பணக் கலியாணம்.

ஐயா, இங்கு சிலர் பத்து பன்னிரண்டு வயது பெண்களை மனைவியிழந்த ஐம்பது அறுபது வயசுசென்ற புருடர்களுக்கு கலியாணம் செய்துகொடுத்து ஆயிரம் ஐந்நூறு பணம் வாங்கிக்கொள்ளுகிறார்களே, அதைப்போல பதினைந்து பதினாறு வயதுள்ள பிள்ளைகளை புருஷனிழந்த ஐம்பது அறுபது வயசுசென்ற ஸ்திரீகளுக்கு கலியாணம் செய்து கொடுத்து பணம் வாங்கிக்கொள்ளாதிருப்பதேன்? இதன் விபரம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

தம்பதிதருமமும் பதிபத்தினிவிரதமும்
பத்தினிபதிவிரதமும் பாலிக்கவேண்டும்.

இங்ஙனம், சந்தேகி.

வர்த்தமானம்.

பர்மாவுக்கு சேனை—இராஜப்பிரதிநிதியவர்களும் முக்கிய சேனாதிபதியவர்களும் பர்மாவுக்கு அதிகப்படி சைனியம் அனுப்பவேண்டிய விஷயத்தைக்குறித்து மிஸ்டர் பெர்னூட் அவர்களுடன் ஆலோசனை செய்ததில், இப்பொழுது பர்மாவிலிருக்கும் சைனியங்களே தேசத்தை அடக்கி யாளுவதற்குப் போதுமானதா யிருக்கிறதென்றும், அதிகப்படி சைனியம் அனுப்பவேண்டிய தில்லையென்றும், தீர்மானித்திருக்கிறார்கள். ஆகையால் பர்மாவுக்குப் புறப்படுவதற்குத் தயாராயிருக்கும்படி உத்திரவு செய்யப்பட்ட பட்டாளங்கள் இனியப்படி தயாராயி[illegible]டிய அவசியமில்லையென்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

புத்தகுரு மரணம்.—சிலோனிலே புத்தர்களுட்சிறந்த குரு ஒருவர் பிப்ரவரிமீ 3உ காலஞ்சென்றனர். அவர் தேகத்தை மிக்க விபவத்தோடு தகனஞ் செய்தார்கள். அப்போது அங்கிருந்த கர்னெல் ஆல்காட்டு அவர்கள் அச்சமயத்தைத் தமது பிரசங்கத்தினுல் சிறப்பித்தனர். தகனத்தின்போது புத்த குருவுக்கு மரியாதை செய்வதின்குறியாக கொள்ளியிடும்படி புத்தர்கள் கர்னெல் ஆல்காட்டை வேண்டினார்கள். அவர் அதற்கிணங்கவில்லை. அதற்கும் இவர் மதத்திற்கும் சம்பந்தமில்லைபோலிருக்கிறது. இதை இந்துக்கள் சிலர் தெரிந்துகொள்ளாமல் கோழையில்விழும் ஈக்களைப்போல் விழுகிறார்கள்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	6	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	14	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	10	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	13	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ருபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ருபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிநாயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் வேப்பேரிக்கும் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 13] MADRAS :—SUNDAY MARCH, 28, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

விஞ்ஞாபனம்.

பகுத்தறிவுடைய பதிஞானிகளே!

நாம் அடைந்திருக்கும் கடவுட்கியானம் ஆதாரமுடையதா அன்று என்று பரியாலோசனை செய்ய வேண்டியது நம்முடைய கடனாகவேயிருக்கின்றது. கடவுள் என்பது பொருளில்லாப்பெயரா, அல்லது பொருளுடைய பெயரா? பொருளில்லாப்பெயரேல் அதற்கு இலக்கணம் கற்பித்தல் கூடாது. பொருளுடைய பெயரேல் அதற்கு இலக்கணம் இருத்தல் வேண்டும். இலக்கணமுண்டேல் அது இலக்ஷியமாதல்வேண்டும். இலக்ஷியமாகுமேல் மனிதர்க்குள்ள பஞ்சேந்திரியங்களுள் ஓர் இந்திரியத்திற்கேனும் விஷயமாதல்வேண்டும். ஓர் இந்திரியத்திற்கேனும் விஷயமாகத்தக்கது பிரத்தியக்ஷமாதல்வேண்டும். ஆதல்லால் கடவுள் பிரத்தியக்ஷமா? பிரத்தியக்ஷமாகுமானால் எத்தனையோகோடி சமயபேதங்களும், எத்தனையோகோடி ஆசாரபேதங்களும், எத்தனையோகோடி பூஜாபேதங்களும், எத்தனையோகோடி முத்திபேதங்களும் எத்தனையோகோடி இலக்கணபேதங்களும் உலகத்திலே நிகழ்வதும், அப்பேதங்கள் காரணமாக அவ்வச்சமயாபிமானிகள் மதசைனியங்களைக் கூட்டிக்கொண்டு மதப்போர் புரிந்து கோர்ட்டு கச்சேரிகளுக்குச்சென்று தாங்கள் வருந்தித் தேடிய பொருள்களையெல்லாம் விழலுக்கிறைத்து வறியவராவதேன்? கடவுள் சர்வ பிரத்தியக்ஷமல்ல, ஞானிகளுக்கே பிரத்தியக்ஷமாவனெனின், அஞ்ஞானிக்குப் பஞ்சறிவினும் மிக்க அறிவு வேறே யுண்டோ? உண்டெனின், கண்ணினாற்காண்பதைக் கையினாற் பரிசித்துத் தெளிவதுபோல் அவ்வறிவைப் பரீக்ஷிக்கப் பரீக்ஷையென்னை? இக்கியானம் நமக்குக் கேள்வியால் வந்ததா? காக்ஷியால் வந்ததா? கேள்வியால் வந்ததெனின், உமக்குச் செவியறிவுறுத்திய கடவுட்கியானிகள் தாங்கள் கண்டவண்ணம் உங்களுக்குச் சொன்னார்களா, அல்லது அவர்களும் உங்களைப்போலவே கேட்டவண்ணம் சொன்னார்களா? கேட்டவண்ணம் சொன்னார்களெனின், போகப்போக சகலமும் கேள்வியாகவே போகின்றமையால், கண்டார் இன்னாரென்று எதிர்வருவாரொருவரையுங் காணோம். ஆதலால் நீங்கள் செவியுற்றதைச் சிந்தித்துப் பரீக்ஷித்தல்வேண்டும். கடவுள் பிரத்தியக்ஷமல்ல அநுமானமேயெனில் எவ்வாறு அநுமானம். சர்வ பிரபஞ்சமும் தானே அமையுமோ, அதையொருவர் செய்துதானே யிருத்தல் வேண்டுமெனின், சர்வ பிரபஞ்சமும் ஓர்கால் இல்லாதிருந்து பின் உற்பவித்ததென்பதற்குதான் என்ன ஆதாரம், அப்படி யோர்காலில்லாதிருப்பினும் அதை யிக்கடவுள்தான் உண்டாக்கினானென்பதற்கு என்ன ஆதாரம்? பானைக்கு முதற்காரணம் மண்ணாயிருத்தல்போல சர்வ பிரபஞ்சத்திற்கும் முதற்காரணம் யாது? கடவுளா வேறா? தேதெனின், கடவுள் சிருட்டிக்கு முன்னும் பிரபஞ்சகாரணமிருக்கிறதே; அது தானே யெப்படி இருக்கக்கூடும்? கடவுளே காரணமெனின், மண்ணின் தன்மை மண்ணாலாகிய குடத்திற்கு உண்டாயிருப்பதுபோல, கடவுள் தன்மை கடவுளாலாகிய சர்வ பிரபஞ்சத்திற்கு மிருத்தல்வேண்டுமே: அங்ஙனமிருப்பின், கடவுட்தன்மை நமக்கெல்லா முண்டாயிருத்தல் வேண்டுமன்றா? அப்போது கடவுளுக்கும் நமக்கும் என்னபேதம்? பேதமில்லாதபோது கடவுள் சிருட்டிபோல நாமும் சிருட்டித்தல் கூடுமே: அநுபவத்தில் அங்ஙனம் நம்மால் கூடாதென்றே நாம் கண்டிருக்கின்றமையால், நம்மினின்றும் பேதப்படாத கடவுளுக்கும் அச்சத்தியில்லையென்பது விளங்கவில்லையா? அச்சக்தியில்லாதபோது அக்கடவுள் உலககாரணனென்றும், உலக உற்பவத்திற்குக் காரணமாக ஓர் கடவுள் இருத்தல் வேண்டுமென்றும் அநுமானித்த அநுமானம் தப்பென்று விளங்கவில்லையா? யோசியுங்கள், யோசியுங்கள்.

பிராமணஜநநம் புண்ணியஜநநமா?

பிராமணஜனனம் புண்ணியஜனனமெனின் துக்கமும், கொடிய நோய்களும், பிரசவவேதனையும் பிராமணருக்கில்லாதிருக்கவேண்டுமே. அவ்வாறின்றி பாவிகளாகிய பறையர் முதலியோரையே பற்றி வருத்தவேண்டிய பாவசம்பந்தமாகிய குஷ்டமுதலிய கொடியநோய்கள், புண்ணியத்தினால் புண்ணியஜனனமெடுத்த பிராமணரையும் பற்றி வருத்துவதால் பிராமணஜனனம் புண்ணியஜனனமென்பதெங்ஙனம்! ஜன்மாந்தகர்மத்தால் அந்தந்த ஜாதியாராக ஜனனமெடுப்பதென பிராமணர் கூறுவதால் ஜன்மமென்பதனைப் பரிசோதிப்போம். ஆகாயத்துப் பறவைகளும், நீர்வாழ்வனவும், விலங்கினங்களும், தானியவகைகளும் மனிதருக்கு ஆகாரமாக இருக்கின்றன. இவ்வாகாரமே உதிரமாகின்றது. இவ்வுதிரமே என்பு, தோல், தசை, நிணம், மூளைமுதலியவை ஆகின்றது. அவயவங்கள் அனைத்தினின்றும் பீஜத்தினிடத்தில் இறங்கிய உதிரத்தின் மெல்லிய பகுதியாகிய சத்தானது இந்திரியமாகின்றது. இவ்விந்திரியமே மாந்தருக்கு மூலகாரணமாக இருக்கின்றது. இவ்விந்திரியத்தையே ஆன்மாவெனவும், சைதன்னியமெனவுங் கூறுவர். ஆண்பால் தேகத்தின் அவயவங்கள் அனைத்தினின்றும் இழுத்த சத்தாகிய சுக்கிலத்தில் ஜனிக்கும் கிருமியின்ஜனனம் முதல்ஜனனமாகும். பெண்பாலோடு சயனிக்கையில் அவனுக்குள் ஜனித்த சுக்கிலக்கிருமி அவன்தேகத்தினின்றும் அவள் யோனியினுட்பிரவேசித்துக்கலப்பதே இரண்டாம் ஜனனமாகும். அவள் கெர்ப்பாசயஞ்சென்ற சுக்கிலக்கிருமி அவள் உதிரத்தின் ஆதரவால் மானிட உருவமாய் ஐயிரண்டு திங்களானபின் பூலோகபிரவேசமாகின்றது. இப்பிரவேசமே மூன்றும் ஜனனமாகும். இவ்வாறு ஜனனமான புதல்வனே இவன்து புநர்ஜனனமாக இருக்கிறான், இந்த புநர்ஜனனமான மற்றொருவனாகிய அவனே தன்னுடைய பிரதிகாரியஸ்தனாக இருக்கிறான். மைந்தரின் தந்தையாகியவன், வயது சென்றபின் இறந்துபோகிறான். இறந்தபின் எந்தெந்த பதார்த்தத்தினின்று தன் தந்தையால் உருவாக்கப்பட்டானோ

மீளவும் அவற்றில் சேர்ந்துவிடுகிறான். விவரஞ்சொல்லில்:—என்பு, தோல், தசை, நாம்பு முதலியவை பிரிதிவியுடனும், உதிரம் அப்புவுடனும், தேகத்தீ தேயுவுடனும், இரேசக பூரகங்களாகிய பிராணவாயு வாயுவுடனும் சேர்ந்துவிடுகின்றன, இதன்றி வேறுவகையான ஜன்மமில்லையாதலால் பிராமணஜனனம் புண்ணியஜனனமென்பதெங்ஙனம்? மார்தர் சென்ற ஜன்மத்தில் புரிந்த பாவபுண்ணியப்படி அந்தந்த ஜாதியாராக உதிப்பதெனின், கலியுகத்தில் புண்ணியமிராதென்று பிராமணரது வேதாகமங்கள் முறையிடுவதால், இக்காலத்தில் பிராமணர் இல்லாதிருக்கவேண்டியதுமன்றி, இப்பொழுதிருக்கும் பிராமணஜனனம் புண்ணியஜனனமென்பதெங்ஙனம்? பாவபுண்ணியத்தால் அந்தந்த ஜாதியாராக உதிப்பதென பிராமணர்செய்த ஆகமங்கள் முறையிடுவதால் அப்பாவபுண்ணியத்தை யளவிடுவோம். பாவம் ஆதியாயாவது அநாதியாயாவது இருத்தல்வேண்டும். சமயவாதிகளின் அபிப்பிராயப்படி அது அநாதியானதல்ல. ஏனெனின், கடவுள்மட்டும் அநாதியானவர். பாவமும் அநாதி எனில், அநாதியான பாவத்திற்கு அந்தமில்லை, அந்தமில்லை எனின்: அழிவில்லை என்பதாம். பாவம் அழியாதெனின் தேவவழிபாடாகிய ஜெபதபங்களனைத்தும் பயனற்றனவாமே. பாவம் ஜெபதபங்களினாலேதானே நீங்கவேண்டும். ஆகவே பாவம் நீங்குவதெப்படி? அது ஆதியானதுமல்ல, ஏனெனின்:—அது ஆதியானதெனின், அது கடவுளிலிருந்தாவது, கடவுளுக்குப் புறம்பிலிருந்தாவது உதித்திருக்கவேண்டும். கடவுள் பரிசுத்தமுள்ளவரென்று ஆஸ்திகர்களால் சொல்லப்பட்டிருப்பதால் அது கடவுளிடத்திலிருந்து உதித்திராது. கடவுள் சர்வவியாபகரென்று வேதங்கள் முறையிடுவதால் பாவம் கடவுளுக்குப் புறம்பிலுமுண்டோ! இல்லையே. பாவம் கடவுளிலிருந்தாவது கடவுளுக்குப் புறம்பாயாவது உதித்திருக்கவேண்டும். கடவுள் பரிசுத்தரெனப்படுவதால், அது கடவுளால் சமைக்கப்பட்டிருக்கக்கூடாது. ஏனெனின் சுத்தத்தினின்று அசுத்தந்தோன்றாது. அசுத்தமாகிய பாவம் அதுவே தோன்றியுமிராது. அவ்வாறு அதுவே தோன்றியிருக்கின் கடவுள் சர்வவல்லவரல்லர், கடவுள் சர்வவல்லவரானால் தம்மையறியாது தோன்றிய தீமையை யழித்திருக்கவேண்டும். நாமோ இப்பொழுது உலகத்தில் தீமையைக் காண்கிறோம். கடவுள் தீமையை அழிக்க விருப்பமுடையவராயிருந்து அதையழிக்க சக்தியற்றவராக இருக்கின்றாரென்றால், அவர் சர்வவல்லவரல்லரென்றும், அழிக்கவல்லமையிருந்து விருப்பமில்லாதிருக்கிறாரெனின், சர்வ நல்லவரல்லரென்றுமாயிற்று. ஆதலால் பாவபுண்ணியமேது? பாவபுண்ணியங்களே இல்லையாமாயின், பிராமணஜனனம் புண்ணியஜனனமென்பதெங்ஙனம்.?

(இன்னும்வரும்.)

M. MASILAMONI.

சமயபுராதனம். ௭

(சகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவர்கள் பெரும்பாலும் பொருளாசையும், பொய்யும், வஞ்சனையும், தந்திரமும், தற்புகழ்ச்சியும், சுயஜாதியாரிடத்திலேயே விசுவாசமும் உள்ளவர்கள். இவர்களே இத்தேசத்தவர்களை ஐக்கிய சம்பந்தத்தினின்று கலைத்து, பல பிரிவினராகப்பிரிந்து ஒழுகும்படிச்செய்து, தற்கால சீர்கெட்டநிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள். இவர்கள் இயற்றிய நூலிற்கண்டவண்ணம் உயர்ந்தவருணத்தாராக இருப்பதால், மற்றைய மூவினத்தவரும் வருந்திச் சம்பாதிக்கும் பதார்த்தங்களில், உயர்ந்ததும் நல்லதுமான சமஸ்த பதார்த்தங்களையும் தமக்கே அளித்து, தாழ்ந்தனவற்றிலும் தங்களுக்கு வேண்டுமவ்வளவுமட்டும் எடுத்துக்கொண்டு மற்றதையும் தம்மவருக்கே அளித்துவிடவேண்டுமெனவும், கடவுளை வணங்கத் தாங்களே உரியவர்களெனவும், மற்ற மூவினத்தவரும் அக்கடவுளைத் தங்கள் முன்னிலையிலன்றி வழிபடலாகாதெனவும், தங்களைக் கடவுளாக வழிபடவேண்டுமெனவு மேற்படுத்தி, போதித்துவந்தமையை, (மனுநூல் 122-சுலோகம் "சூத்திரன் சுவர்க்கத்திற்காகவாவது, ஜீவனத்திற்காகவாவது, அல்லது இரண்டிற்குமாகவாவது பிராமணனையே தொழவேண்டும். இவன் பிராமணனையடுத்த சூத்திரனென்று ஒருவனுக்குப் பெயர்வந்தால் அதுவே அவனுக்குப் பாக்கியம். ஆதலால் பிராமணனை யுபசரிப்பதே சூத்திரனுக்கு எல்லாத்தொழிலையும்விட மேலான தருமமென்று கருமகாண்டத்தில் சொல்லியிருக்கிறது.") நாலுதிக்குகளிலுமுள்ள இத்தேசகனவான்கள், தனவான்கள், மன்னர், மகுடாதிபதிகள், பட்டவர்த்தனர்கள் யாவரும் ஒப்பாமல் ஆட்சேபித்ததினால், மனுநூல் எழுதிய பிராமணர்களும் மற்ற பிராமணர்களும் ஒருங்குகூடி ஆலோசித்துத் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றத் தங்கள் குலத்திற்பிறந்தவனும், தன் தாயைப் படுகொலை செய்தவனும், ஜமதக்கினியின் புத்திரனும், க்ஷத்திரிய வமிசத்தை நாசஞ்செய்யப் பனிரண்டுமுறை படையெடுத்தவனுமாகிய பரசுராமனை மகுடவர்த்தனனாக்கினார்கள். அவன் அகமகிழ்ந்து முகமலர்ந்து சிங்காசனத்தைப் பெற்றுக்கொண்டான். அவன் தாமரைமலர்போல் முகமும், செவிக்கினிய மொழியும், கடுவிஷங் கக்கும் அகமும், எவர்குடி கெடுத்தும் என்னென்ன துரோகஞ்செய்தும், தானுந் தன் இனத்தவருமட்டும் பெருவாழ்வு வாழும் அபிலாக்ஷமுமுள்ளவன். அவன் தனக்கும் மனுநூலாசிரியருக்கும் நற்சமயம் வாய்த்ததென்றெண்ணித் தங்கள் சட்டதிட்டங்களுக்கு எதிர்த்து நிற்பவர்களை அமர்களத்திற்கு வரவழைத்து படுகொலைசெய்தும், அச்சுறுத்தியும் தங்கள் சட்டதிட்டங்களில் ஓரக்ஷரமேனுந் தவறிப்போகாமல் யாவும் எழுத்தெழுத்தாக இத்தேசபூருவகுடிகளின் அனுஷ்டானத்திற்கு வருமளவும் தங்கள் ராக்ஷசமனவலிமையால் தங்கள் கோட்பாட்டிற்குச் சிறந்த சின்னமாக வருணபேதத்தையும், தங்கள் சமயாசாரங்களையும் பின்பற்றுபவர்கள் எவர்களுஞ் சமயசின்னங்களாகிய திருநீறென்னும் வெண்குறியையும், திருமண்என்னும் செங்குறியையும் முகத்தில் பதிந்துக்கொள்ளவேண்டுமெனவும், வருணபேதக்குறிகளாகிய முதலியார் நாயுடு முதலிய மொழிகளையும் அவரவர் பெயர்களுக்கு இறுதியில் அழியாமுத்திரையாகக் கூட்டிக்கொள்ள வேண்டுமெனவும் விதித்தனர். (மனுநூல் - சாதகர்மாதி சமஸ்காரம். 30 - 31 - 32-வது அத்தியாயங்கள். "பிராமணருக்கு உதிக்கும் குழந்தைக்குப் பத்து அல்லது பனிரண்டாவது தினத்தில் புண்ணிய திதியில் நல்ல முகூர்த்தத்தில் நல்ல நக்ஷத்திரத்தில் நாமகரணஞ்செய்யவேண்டியது. பிராமணகுழந்தைக்கு மங்களத்தையும், க்ஷத்திரியகுழந்தைக்குப் பலத்தையும், வைசியகுழந்தைக்குப்பொருளையும், சூத்திரக்குழந்தைக்குத் தாழ்வையும் பிராமணருக்கு அடிமை எனப்பொருள்படும் பெயரையும் இடவேண்டியது. பிராமணகுழந்தைக்கு ஐயர், ஐயங்கார், ஆச்சாரி என்பதையும், க்ஷத்திரியகுழந்தைக்கு ராவ் உடையவர் என்பதையும், வைசியகுழந்தைக்கு செட்டி என்பதையும், சூத்திரக்குழந்தைக்கு முதலியார், நாயுடு, நாயக்கன், கௌண்டன், பிள்ளை, கிராமணி என்பதையும் அவரவர் பெயர்களுக்கு இறுதியில் தொடர்மொழியாக வரவேண்டியது.") இதர ஜாதியாரையும், மதஸ்தரையும் ஜென்மப்பகையாகப் பகைத்துக் கிஞ்சித்தும் இரக்கமின்றி வருத்தும் உருகாத இருப்புநெஞ்சுடைய இதாமதத்துவேஷிகளாகிய பிராமணர் அவ்விருமுத்திரைகளையும் பதிந்துக்கொள்ள விருப்பமில்லாத பௌத்தர்களைத் தங்களுக்கு ஐக்கியப்பட்டவர்களாகிய சம்பந்தர், வாதவூரர் முதலியவர்களைக்கொண்டு அவர்களையும், உடலும் உள்ளமும் மெலிந்திருக்கும் மெல்லியர்களாகிய அவர்கள் ஆடவர்களையும், எவ்வித பழிபாதகமும் அறியாத அவர்கள் பசுங்குழந்தைகளையும் சிறிதும் தயாளசிந்தையின்றித் துடிக்கப் பதைக்கக் கழுமரங்களிலேற்றியும், கற்காணங்களில் கழுத்திறுகப்பிடித்தமிழ்த்தி ஆட்டியும், இன்னும் சொல்லிமுடியாத விதங்களால் மானிட உதிரப்பிரவாகத்தைப்பெருக்கிச் சைவ வைஷ்ணவ சமயம் வருணபேதமென்னு மிருவித விதைகளையும் இத்தென்னிந்தியாவின் பல திசாமுகங்களிலும் நாட்டி, அவை ஓங்கிவளர்ந்து தழைக்கச்செய்தார்கள். அதன்பின் பூர்வ மனுநூலுக்கு உபபலமாக வசிஷ்டர், கௌதமர், கசியபர், உசனர், அத்திரி, காத்தியாயனர், பாராசரர் முதலியவர்கள் திடங்கொண்டு ஜாதிவகுப்புத் தங்களால் வகுக்கப்பட்டதாக இருக்கலாகாதெனக்கருதி, பிரம்மாவின் முகத்தினின்று பிராமணரும், புஜத்திலின்று க்ஷத்திரியரும், தொடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் உதித்ததாக வேற்படுத்தித் தம்மவர்களாகிய பிராமணரின் ஜீவன விருத்திக்காகவே சதுர்த்தருக்குந் தனித்தனியான கிரியைகள் பிரித்தனர். அவற்றில் பிராமணருக்கு வேள்விசெய்தல், வேள்விசெய்வித்தல், வேதமோதுதல், வேதமோதுவித்தல், தானம் வாங்குதல், தானங்கொடுத்தல் என்னும் அறுவகைக்கிரி[illegible]களையும், க்ஷத்திரியருக்கு வேதமோதுதல், வேள்விசெய்தல், தானங்கொடுத்தல், பிரஜைகளைக்காத்தல், மன அடக்கம் என்ற ஐவகைக்கிரியைகளையும், வைசியருக்கு வேதமோதுதல், தானங்கொடுத்தல், பசுவைக்காத்தல், வாணிபஞ்செய்தல், வட்டிவாங்குதல், வேளாண்மைசெய்தல் என்னும் அறுவகைத்தொழில்களையும், சூத்திரருக்கு பிராமண அடிமைத்தொழில் செய்வதென்னு மிழிதொழில்களையுந் தனித்தனியாகப்பிரித்தனர். க்ஷத்திரிய வைசியருக்குக் கற்றுக்கொடுத்து அவர்கள் திரவியத்தைக் கிரகிப்பதற்காகவே பிராமணர் தங்கள் பிராமணகுருவுக்குச் சிறிது பொருளளித்து வேதமோதவும் வேள்விசெய்யவுங் கற்றுக்கொள்ளவேண்டுமெனவும், உலகத்திலுள்ள சமஸ்த பதார்த்தங்களும் தம்பொருட்டே பிரம்மாவினால் படைக்கப்பட்டனவெனவு

ம் ஆகையினால் அவை எவர்களிடத்திலிருப்பினும் தங்களுக்கே பாத்தியமுள்ளவைகளாக இருப்பதாயும் அவற்றைத்தாங்கள் தானமாக வாங்கப் பாத்தியப்பட்டிருப்பதாயும் தங்களுக்கே சமஸ்த ஜாதியாருந் தானங்கொடுக்க வேண்டுமெனவும் விதித்தனர். (பிராமணர்தானம்வாங்குவதைமட்டும் நாம் தினந்தோறுங் கண்டுங் கேட்டும் வருவதேயன்றி அவர்கள் தானங்கொடுப்பதை யவ்வளவாய்க் கண்டதுங்கேட்டதுமில்லையே!) க்ஷத்திரியர் பிராமணருக்குத்திரண்டதிரவியமளித்து வேதமோதவும், வேள்விசெய்யவுங் கற்றுக்கொள்ளவேண்டுமெனவும், தம்மவருக்கே தானங்கொடுக்கவேண்டுமெனவும், தம்மவருக்கே எதுந் தீங்குவாராவண்ணங் காக்கவேண்டுமெனவும், பிராமணஸ்திரீகளைமட்டும் விரும்பாதிருக்கவேண்டுமெனவும் ஏற்படுத்தினர். வைசியர் க்ஷத்திரியரினும் திரவிய குறைவுள்ளவர்களானதினால் வேள்விசெய்வதை இவர்களுக்கு நிவிர்த்தித்து இவர்களும் பிராமணருக்குத் திரவியமளித்து வேதமோதக் கற்றுக்கொள்ளவேண்டுமெனவும், தம்மவருக்கே தானங்கொடுக்க வேண்டுமெனவும், பசுவைக் காப்பாற்றி அதன்பாலை பிராமணருக்குத் தானமாக அளித்துத் தாங்கள் ஆடு எருமை இவற்றின்பாலை உண்ணவேண்டுமெனவும், வியாபாரத்தால் கிடைக்கும் பொன் இரத்தினவகைகளை பிராமணருக்குச் சமர்ப்பித்து தாங்கள் தாழ்ந்தனவற்றை எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும், க்ஷத்திரியர் முதலியவர்களிடத்தினின்று நெருக்கி வட்டிபெற வேண்டுமெனவும், வேளாண்மையால் கிடைக்கும் நெல் கோதுமை முதலிய உயர்ந்தனவற்றை பிராமணருக்குத் தானமாக அளித்துத் தாங்கள் கேழ்வரகு முதலிய தாழ்ந்தனவற்றை உண்ணவேணடுமெனவும் ஏற்படுத்தினர். சூத்திரர் வறியர்களானதினால் இவர்கள் தங்களுக்கு உயர்ந்த குலத்தோராகிய மூவினத்தோருக்குரிய எக்கிரியையும் புரியலாகாதெனவும், மூவினத்தோருக்கும் அடிமைத்தொழில் புரியவேண்டுமெனவும், முக்கியமாக பிராமணருக்கே அடிமைத்தொழில் செய்யவேண்டுமெனவும் ஏற்படுத்தினர். 87 - ("பிரம்மாவானவர் இந்த உலகத்தைக் காப்பாற்றுவதற்காக தன் முகம், தோள், தொடை, பாதம் இவற்றினின்று முண்டான பிரம்ம, க்ஷத்திய, வைசிய, சூத்திர வருணத்தாருக்கு இம்மை மறுமைக்கு உபயோகமான கருமங்களைத் தனித்தனியாக வகுத்தனர்.")

இதன்பின் இவர்கள் தாங்கள் தங்கள் முன்னோரால் குடியேறலாகாதென்று தடுக்கப்பட்டிருந்த தண்டகாரண்யமென்னும் விந்தியமலையின் தென்பாகத்திலும் குடியேற ஆரம்பித்து, எவரெவருக்கு எந்தெந்த மாகாணம் அல்லது கிராமங்கள் அனுகூலித்தனவோ அவரவர் அந்தந்த மாகாணம் அல்லது கிராமத்தில் குடிபுகுந்தனர். (மனுநூல் 23-வது சுலோகம். "கிருஷ்ணசாரமென்னும் மானானது எந்தவிடத்தில் சுபாவமாய் சஞ்சரிக்கின்றதோ அந்தவிடந்தான் யாகஞ்செய்தற்குரியது. மற்றவிடம் சூத்திரர் வசிக்கும் அசுத்தமான மிலேச்சதேசமென்று சொல்லப்படும்." 24 - இப்படிப்பட்ட புண்ணியதேசங்களை இருபிறப்பாளராகிய ஆரியர் வேறுதேசத்திற் பிறந்தவராயினும் (வேறுதேசமென்பது பாரசீகம்) வந்தடையவேண்டியது. அல்லது சூத்திரர் ஊழியத்தொழிலைவிட வேறு விருத்தியை எந்தவிடத்தில் அடையமாட்டார்களோ அந்த விடத்தில் வசிக்கத்தக்கது.) (பிராமணர் தங்களுக்கு கிருஷ்ணசாரமென்னும் மானின் மாம்சத்தில் உதிப்பிரீதி எனக் குறிப்பிக்க அதன் தோலில் சிறிது துண்டித்து ஆவணியவிட்டம் அல்லது ஸ்ராவணத்தில் பூணூலில் கட்டிக்கொள்வதுமன்றி, அதன் தோலின்மீது உட்கார்ந்து ஜெபதபங்கள்செய்து, தங்கள் தேவாராதனை சாமான்களை அதன் தோலால்செய்த பையில் வைத்துக்கொள்ளுகிறார்கள்.) மனுநூல் 2-வது அத்தியாயம். 21 - (இமோத் பர்வதத்திற்கும் விந்தியபர்வதத்திற்கும் நடுவாயும், ஸரஸ்வதி நதி மறைந்த விசனசதேசத்திற்குங் கிழக்காயும், பிரயாகைக்கு மேற்காயும் இருக்கிற இடமானது மத்தியதேசமென்று சொல்லப்படுகிறது. 22-கிழக்கு சமுத்திரந்தொடங்கி மேற்கு சமுத்திரம்வரையில் முன்சொன்ன மலைகளின் நடுப்பிரதேசமானது சாதுக்களாகிய பிராமணர் வசிக்கிற ஆரியவர்த்த தேசமென்று சொல்லப்படுகின்றது.) எவரெவர் எந்தெந்த மாகாணம் அல்லது கிராமத்தில் குடிபுகுந்தனரோ அந்தந்த கூட்டத்தாருக்கு அந்தந்த மாகாணம் அல்லது கிராமத்தின்பெயரோ இந்நாள்வரையில் வழங்கிவருகின்றது. வட இந்திய பிராமணருக்கு காராசியரெனவும், தென்னிந்திய பிராமணருக்கு திராவிடர் எனவும் பெயராம். காராசிய பிராமணர், கேனோஜியர், ஸாரஸ்வாத், கோராட, அட்கல, மதில எனும் ஐவகைப்பிரிவினராகவும், திராவிட பிராமணர் - ஆந்த்ரர், மராட்டியர், திராவிடர், கர்னாடகர், கூர்ச்சிரர் எனும் ஐவகைப்பிரிவினராக்வும், இவர்களில் ஒவ்வொரு பிரிவினரும் அனந்தம் உட்பிரிவினராகவும் பிரிந்திருப்பதுமன்றி, அநேகங் கோத்திரத்தாராகவும் பிரிந்திருக்கின்றனர். இவர்கள் கோத்திரங்களை வழுவற எடுத்துரைப்பது சாத்தியமல்ல. இவர்கள் கோத்திரங்களைப்பற்றிச் சிலர் 155-என்றும், சிலர் 39-16-9-19-என்றும் மொழிகின்றனர். ஆனால், இவர்கள் பூர்வகோத்திரங்கள் சிறந்த எழு இருஷிகளின் பெயர்களால் வழங்கிவருகின்றன. இவர்கள் கோத்திரங்களாவன:—கசிப, பாரத்வாஜ, வசிஷ்ட, கௌதம, விஸ்வாமித்திர, ஆத்ரிய, பத்ராயண, அகஸ்திய, ஜமதக்னி, சுவாதாதரகாபிச, கௌசிக, ஸ்வரீவாட்ச, பார்க்கவ, பராசர, கான்வந்த மித்திரிய் என்பவையன்றி இன்னும் அநேக இருஷிகளின் பெயர்களை கோத்திரங்களாகவைத்தும், வைஷ்ணவபிராமணர் வடகலை தென்கலை என்னும் பிரிவினையையும் ஏற்படுத்தியும் பிரிந்திருக்கின்றனர். (இன்னும்வரும்.)

M. Masilamoni.

விகிதவிஷயம்.

பஞ்சாங்கம்.

இம்முறை நமதிராஜதானியில் வழங்கிவரும் பற்பலவிதமான பஞ்சாங்கங்களைக்குறித்துச் சிலது பிரஸ்தாபம் செய்ய உத்தேசிக்கிறோம். நாமெடுத்துக்கொண்ட விஷயத்தைக்குறித்துப் பத்திரிகைகளின் மூலமாகச் சந்தேக நிரஸ்காரம் செய்துகொள்ளலாமென்று நான்கு மூன்றுவருஷமாக உத்தேசித்தும், நமது சோம்பேறித்தனத்தினாலும் பற்பலவிதக் கவலைகளினாலும் ஒருவரும் பிரஸ்தாபியாத இவ்விஷயத்தில் தலையிடக்கூடாதென்னும் எண்ணத்தினாலுமே வாளா இருந்தனம். இப்பொழுது வரவரச் சந்தேகம்பெருகி இதுவோ அதுவோவென்று எண்ணுதுமெண்ணி யேங்கும்படி வந்துவிட்டபடியாலும், இரண்டொரு வருடங்கட்குமுன் ஸ்ரீசுதேசாபிமானியில் ஒருவர் ஒருவித பஞ்சாங்கத்தைக்குறித்து பிரஸ்தாபித்திருந்தபடியாலும் சபையில் தாராளமாயுரைக்கலாமென்று உரைத்தால் எப்படியும் நமது ஐயம் நீங்குமென்றும் எண்ணி வெளிவந்தனம். இதைக்குறித்து மகாகனம்பொருந்திய பிச்சைக்குடுமி, உச்சிக்குடுமி முதலிய பிராமண உத்தமர் நிவர்த்திக்கக்கடவர்.

நாம் ஜோதிஷசாஸ்திரத்தில் ஜாதகபாவத்தைப் பார்ப்பவரானதால் பலன் சொல்லும் ஸமயங்களில் இன்னதுகொண்டு சொல்லுவதென்பது தோன்றாமல் மயங்கி யேங்கவேண்டியதாக நேரிடுகிறது. நாம் சிலகாலத்திற்குமுன் ஜகத்குரு ஸ்ரீ-சங்கராசாரியசுவாமிகள் சன்னிதானத்துக்கு எழுதிக்கொண்டு இதுவரையில் யாதொரு பதிலும் கிடைக்காமலிருக்கிற ஒரு கடிதத்தை இதனடியிலெழுதுகிறோம். அதைப்பார்வையிட்டுப் பத்திராதிபராவது இஷ்டர்களாவது தாங்களாகவேனும் பண்டிதர்கள் மூலமாகவேனும் செவ்வையாக விசாரித்துப் புதுவருஷம் பிறக்குமுன் வெளியிடுவார்களென்றுத்தேசிக்கிறோம். ஜகத்குரு ஸ்ரீ-சங்கராசாரியசுவாமிகள் சன்னிதானத்துக்கு எழுதிய விஞ்ஞாபனம்.

இஃது.

இதனடியிற்கண்ட ஸந்தேகங்கள் இந்தப் பிராந்தியத்தின் அநேக ஜனங்களுக்கு ஜனித்திருப்பதால், அதை ஸன்னிதான ஸ்ரீமுகபூர்வகமாக நிரஸ்காரம் செய்துகொள்ள வேணுமெனகிற துறையானது என்னையறியாமல் அதிக்கிரமித்துக்கொண்டே 5-6-வருடகாலமாக இருந்தது. தத்காலம் சந்தேகம் நிவர்த்திக்கப்படவும் ஹவ்யகவ்யாதிகளுக்கு சரியானகாலத்தைத் தெரிந்துகொண்டு கர்மலோபமில்லாமல் நடத்தவும் கூடியகாலம் ஸமீபித்துவிட்டதால் அவ்விதமாகவே நிவாரணம் செய்யுஞ் சன்னிதான ஸ்ரீமுகத்தைப் பிரதிலட்சித்துக் கிருதார்த்தனாகப் பிரார்த்திக்கிறேன்.

"1. காலவித்யாஸத்தினாலோ, அல்லது சித்தாந்த மதவைஷம்மியத்தினாலோ, அல்லது சாஸ்திரம் அபத்தமென்று சொல்லப்படவேண்டியதினாலோ கிரகங்களுடைய சதி ஸ்திதி முதலியவைகளும், திதிஆதிகளும் பேதப்பட்டு வருகின்றன. எப்படியென்றால், கஞ்சனூர் ஐயங்கார் குமாரர் அண்ணாவையங்கார், திருவையாறு ஸாமிஜோசியர் என்பவர்களால் குணிக்கப்பட்டதென்பதும், சென்னைபுரி இரகுநாதாசாரியார், "இப்போது சி. இராகவாசாரியார்." கோமல் வேங்கடேசுவர் தீக்ஷிதர், நாகப்பட்டணம் இராமைய சித்தாந்தி இவர்களால் குணிக்கப்பட்டதென்பதுமான பஞ்சாங்கங்களுக்குக் கேவலம் திதியாதிகளில் சுமார் 10-நாழிகைவரையிலும் கிரகபாதசாரங்களில் சீக்கிரத்தியாயுள்ள சிலசாரங்களில் இரண்டொருதினங்களும் மத்தியகதியாயுள்ள கிரகபாதசாரங்களில் பத்துதினங்கள்வரையிலும் மந்தகதியுடைய பாதசாரங்களில் மூன்றுமாஸங்கள்வரையிலும் வித்யாசங்களிருக்கினறன. இப்படி வித்யாசமாயிருந்தால் ஸ்ரீர்த்தாதிகால நிர்த்தாரணத்தையும், யாத்ராவிவாக உற்சவ ஜாதகாதிகாலங்களையும் நிச்சயிக்கக்கூடாதென்பதை நான் சொல்லவேண்டியதில்லை.

"2. முதலில் கண்டபடி சித்தாந்த மதபேதத்தினாலென்று சொல்லுமிடத்தில் மேஷாதி துலாதிகாலங்களில்கூட சரியாய்வராமல் தர்சபூரணமாவாசியா காலங்களில்மாத்திரம் ஒருசுமாராக 'சொல்பவித்யாசத்துடன் சரிப்பட்டுவருவதினால் சித்தாந்தபேதமென்று சொல்லக்கூடாமலிருக்கிறது.

3. கணக்கர்களுடைய தப்பிதமேயொழிய சாஸ்திரம் அபத்தமென்பதாக ஒருவனும் மனசாறச் சொல்லமாட்டானாகையால் சாஸ்திரம் அபத்தமென்று சொல்லக்கூடவில்லை.

4. இப்படி யிவைகளிரண்டுக்கும் ஸமாதானங்களேற்பட்டிருப்பதாலும் விஷ்ணுபுராணம் முதலியவைகளில் காலாந்தரானுஸாரமாக திருச்சித்தமாகும்படி கணிதம் ஸ்புடம் செய்துக்கொள்ளலாமென்று சொல்லியிருப்பதாலும் காலபேதமேயெனச் சொல்லலாமென்று எனக்குத் தோற்றுகிறது.

5. தத்தத்கதி ௦ என்னும் சுலோகப்படி திருத்தல்யமாகும் கிரகங்களைக்கொண்டே ஹவ்யகவ்யாதி காலங்களும் யாத்திராவிவாகாதி காலங்களும் நிச்சயிக்கவேண்டியதென்பதாக எனக்குத் தோன்றினபோதிலும் ௦ மற்ற சாஸ்திரங்களைப்போல வாதத்தினால் ஜோதிஷத்தையும் கொண்டால் மகாதோஷம் சம்பவிக்குமென்றிருப்பதினாலும் எவ்வித சந்தேகங்களையும் குருமுகமாக நிவாரணம் செய்துகொள்ளவேணுமென்று சாஸ்திரமிருப்பதாலும் பூதபவிஷ்யவர்த்தமான பலன்களைத் தெரிந்துகொள்ள ஜாதகம் முக்கியமாகவும் அதற்குக் கிரகங்களே அங்கங்களாகவும் இருக்கிறபடியாலும் கிரகங்களை நிச்சியம் செய்துகொள்ளவேண்டியதாக இருக்க இந்த ஸந்தேகங்களினால் ஒரு கிரகமானது ஒரிஷ்டதினத்தில் ஒருவர் பஞ்சாங்கரீதியாய் மேஷத்திலும் இன்னொருவர் பஞ்சாங்கரீதியாய் மீனம் அல்லது விருஷபத்திலும் இருக்கிறதாக ஏற்படுகிறதினாலும் இன்னதுதான் சுத்தமென்று நிச்சயிக்கும்படியாகிய சக்தியில்லாதவர்களாக நான் முதலானவர்களிருக்கிறோம். கண்ணுக்குத் தெரியத்தக்கதாகவிருந்தும் நீதியான ஒருபஞ்சாங்கத்தை யனுசரிக்கலாமென்றால், பின்னொரு பின்னொருபஞ்சாங்க கணகரானவர் சுவமதானுசாரம் 'தன்மதமேற்கோளல்' என்னும் யுக்திரீதியாக என்னுடைய பஞ்சாங்கம்தான் சுத்தம், மற்றது அசுத்தம் ஆகையால் இந்த பஞ்சாங்கரீதியாகிய காலங்களைத்தான் எல்லா விஷயங்களிலும் உபயோகித்துக்கொள்ளவேணுமென்பதாகிய விளம்பரமூலமாகவும் உபந்நியாசபூர்வமாகவும் தோன்றினபடிக்கெல்லாம் எழுதிவிட்டுவிடுகிறார்கள்.

6. யாத்ராவிவாகம் முதலிய காலநிர்ணயம் செய்யும் காலத்தில் ஒருபஞ்சாங்கரீதியாக நிர்ணயிக்கவேண்டிய ஸ்தானமானது சுத்தமாகவும் மற்றொன்றின்பிரகாரம் கிரகயுக்தமாகவும் இருக்கக்கூடியதாக இருப்பதாலும் இவ்விடத்திலிருக்கும் சில தர்மசாஸ்திரிகளையும் ஜோதிட்சாஸ்திரிகளையும் விசாரித்தால் உனக்கு சந்தேகமுள்ளவிடத்தில் எனக்கு சமுசயமென்றும் ரகசியமான இந்த விஷயத்தில் ரிஷிமூலம் நதிமூலத்தைப்போலவே இதையும் சொல்லக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள் என்று இந்த விஞ்ஞாபனம் செய்துகொண்டேன்.

ஆகையால் சன்னிதானத்தில் தாசன் வரில் பூரணதயா திருஷ்டிவைத்து சந்தேகங்கள் பின்னமாகும்படிக்கும் ஹவ்யகவ்யாதி கர்மங்களால் சம்பவிக்கும் தர்மலாபத்தை காலாகாலத்தில் தெரிந்து நான் முதலிய சிஷியகோடிகள் கிருதக்யாளாகும்படிக்கும் கிருபை செய்யவேண்டுமென்றும் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன் என்பதே.

இதைப்பார்வையிட்டு அவரவர் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தை இப்பத்திரிகை வாயிலாகப் புதுவருஷம் பிறக்குமுன் வெளியிடுவார்களென்று கோருகிறோம்.—இந்துசுமித்திரன்.

இப்படிக்கு.

ஸமுத்திரம் - வேங்கடரமணஜோசியன்.
பட்டுக்கோட்டை.

சிலமதஸ்தர்களின் கொள்கை.

மதஸ்தர்களில் விசாரணையுள்ள புருஷர்கள் சிலர் முற்காலத்திலே கடவுளர் இவ்வுலகத்தில் அடிக்கடி வந்து அநேக அற்புதங்களைச் செய்தும், அடியார்களோடு பேசியும், உண்டு உடுத்தும் நாயகன் நாயகிகளுக்குத் தூதுநடந்து பிணக்குத் தீர்த்தும், விவாகப்பொருத்தஞ் செய்தும், தாயிழந்ததற்குத் தாயாகிவந்து முலைப்பால் கொடுத்தும் இவ்வித அநேக அருமையான காரியங்களைச் செய்திருக்கிறார்களென்று சொல்லியிருப்பதுபோல, இக்காலத்தில் இவ்வுலகத்திலே அவ்வளவு அதிகசம்பந்தம் வைத்திருக்கிறார்களென்கிற நம்பிக்கையற்றவர்களாயிருந்தபோதிலும், ஆதியில் ஏதோ ஒருகடவுள் செய்திருக்கிற சங்கற்பங்களினாலே பிரபஞ்சம் நடந்துவருகிறதென்று இன்னும் நினைக்கிறார்கள், இந்த சங்கற்பங்களினாலே தான், ஒருவன் கையினால் நகர்த்தக்கூடியவனாயிருக்கிறானென்றும், அந்தக் கடவுள் பொருள்களைச் செய்திருக்கிற வகையினாலும் வஸ்துக்களை யேற்படுத்தி வைத்திருக்கிற ஒழுங்கினாலுந்தான் இரண்டு சடபதார்த்தங்கள் ஏககாலத்தில் ஒரேஇடத்திலே அடங்கமாட்டாதிருக்கின்றனவென்றும், ஒருதரம் அசைத்துவிடப்பட்ட பதார்த்தம் யாதொரு காரணத்தினால் நிறுத்தப்படுகிறவரையில் அசைந்துகொண்டே யிருக்குமென்றும், ஒருவட்டத்தின் குறுக்களவைப் பார்க்கிலும சுற்றளவு அதிகமாயிருக்கிறதென்றும், சதசதுரமானது ஐந்தாறுபக்கங்களையுடையதா யிராமல் சமமான நான்குபக்கங்களையுடையதாயிருக்கிறதென்றும் நம்புகிறார்கள். கடவுளினுடைய சங்கற்பத்தினாலேதான் பூரணமானது பின்னத்தைப் பார்க்கிலும் பெரியதாயிருக்கிறதென்றும், சுபாவத்திற்கு மிஞ்சின அந்த தெய்வசங்கற்பமில்லாவிட்டால் இப்போது ஈரிரண்டு நான்காயிருப்பது எட்டுபத்தாயிருந்திருக்குமென்றும், தடிஅல்லது கயிற்றுக்கு இரண்டுமுனை யிருப்பதற்குப்பதிலாக ஒரே ஒருமுனைதானிருந்திருக்கலாமென்றும் உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். பிறந்தவுடனே யிறவாதபடி, மோட்சசாம்பிராச்சியத்தைத் தேடிக்கொள்ள நமக்குச் சாவகாசமுண்டாகத்தக்கதாகக் கடவுள் ஆயுளைக்கொடுத்துக் கடைசியில் மரணத்தை அனுப்புவதறகாக அவருக்கு வந்தனஞ்செய்கிறார்கள். இந்த மதஸ்தர்களுக்கு எங்கேபார்த்தாலும் கடவுளினுடைய சங்கற்பமே, எவ்வளவு அற்பமாயினும் அந்தவஸ்துவிற்கூட கடவுளினுடைய வியாபகமே; பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்பட்டதென்றும் காரியசித்திக்கு உபகரணங்கள் அமைக்கப்பட்டிருப்பது மிகவும் பிரத்தியக்ஷமாயிருக்கிறதென்றுஞ் சொல்லுகிறார்கள். கடவுளினுடைய சங்கற்பத்தை வெளியிடவேண்டி சூரியவொளியையும் புஷ்பங்களையுங் கோடைகாலமழையையும் உலகத்திலே அழகும் உபயோகமுமுள்ளனவாயிருக்கிற சகலத்தையுங் குறித்துக் காட்டுகிறார்கள். பிளவைநோய் கண்டுவளர்ந்துவரவர, அது கடவுளினுடைய சங்கற்பத்தினால் சிவந்த ரோஜாபுஷ்பத்தைப்போல விகசித்து அவ்வளவு விநோதமாய்க் காணுகிறதென்று மகிழ்ந்ததுண்டா? காரியசித்திக்கு உபகரணங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவென்று வெகுவாய்ச் சந்தோஷித்துச் சொல்லுகிறார்களே, அந்த அமைப்பு கோடைகாலமாரியில காணப்படுவதுபோலப் பிளவைநோயில் அவ்வளவு பிரத்தியட்சமாயிருக்கிறதா? ஜீரணமாக்குவதற்கான சவுபாயங்கள் எவ்வளவு நேர்த்தி! பிளவைக்கு ஆகாரங் கிடைக்கும்படி எவ்வளவு சூட்சுமமாய் இரத்தங் கெடுத்துப்போடப்படுகிறது! மனிதனுடைய கட்டுமஸ்தான சரீரம் எவ்வளவு அதிசயமான உபாயத்தினால் தெய்வீகமான அற்புத பிளவைக்கு வசமாக்கப்பட்டிருக்கிறது! சுற்றிலுமிருக்கிற மதுரமான மாமிசத்தை எவ்வளவு அதிசயிக்கத்தக்க வழியாய்த் தின்னுகிறது! ஒரே நிதானமாய் நாளுக்குநாள் வளர்ந்து எப்படி பரவுகிறதுபார்! அது எவ்வளவு அழகான நிறமடைந்திருக்கிறது! பூதக்கண்ணாடியினால் பார்ப்போமாகில், அது வெளிப்பட்டுவருகிற ஒழுங்கும் அழகும் வெகு அற்புதமாயிருக்கிறது. மனிதனுடைய சூட்சுமபுத்தி முழுமையையும் உபயோகித்தபோதிலும் அதினுடைய வளர்ச்சியைத் தடுக்கமாளாது. ஒருபிளவை நோய்க்காக ஒருமனிதனையுண்டாக்கி வளரச்செய்து, அவனை அந்த நோய்க்கு இரையாகக் கொடுப்பதற்கானவழி கற்பிப்பதற்கு எவ்வளவோ யோசனை வேண்டியிருக்கிறது பார். இந்த அற்புதமான பிளவையைப் பார்த்தும், பிரபஞ்சத்திலே தேவசங்கற்பமிருக்கிறதென்பதற்கும், பிளவையை யுண்டுபண்ணினவன் அளவிறந்த வல்லமையுடையனாயும், இயற்கை யுணர்வினனாயும், உத்தமசிரேஷ்டனாயு மிருக்கவேணுமென்பதற்கும் இன்னுஞ் சந்தேகமா!

அ-மு.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷம் செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிநாயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் வேப்பேரிக்கும் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியானபத்திரிகை.

VOL. V.—No. 14] MADRAS:—SUNDAY APRIL, 4, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

இந்து கைத்தொழிலாளர்பெருமை.

சொற்சாதுரியமுடையவரும் வேடிக்கைப் புருஷருமாகிய ஒருவர் இந்துகைத்தொழில் வித்வர்களின் சிறப்பைப் பற்றிப் பேசினதில், இவர்கள் மகா நிபுணசிரோமணிகளென்றும் நவநவமான பொருள்களைக் கற்பிப்பதில் மகா சமர்த்தரென்றும், இதற்குக் காரணம் "நுட்பமும் கூரியதும் பரந்ததுமான அறிவே" யென்றும் இப்படியிருக்க, ஐரோப்பியர்கள் தங்கள் தேசங்களில் செய்யப்பட்ட பொருள்களை இங்கே கொண்டுவந்து மலிவாகநிறப்பி, இந்து கைத்தொழில் வித்தவர்களை, வறுமைக்காளாக்கி விட்டார்களென்றுஞ் சொல்லி, இந்தியாவின் கைத்தொழில் தாழ்வடைவதற்கு ஐசுவரியமின்மையே முக்கியகாரணமா யிருக்கிறது என்று எழுதியிருக்கின்றனர். 'இந்து கைத்தொழில் வித்வர்கள்' 'ஆகிய 'மஹா நிபுணசிரோமணிகள்' முற்றுமுதிர்ந்த தொழில்களை நடத்திக்கொண்டிருந்த காலத்தில் செல்வம் வளர்ந்துகொண்டு வந்திருக்கவேண்டுமே யல்லாமல் குறைவுபட வேண்டுவதில்லையே. அதினால் தொழிலுந் தாழ்வடைய வேண்டுவதில்லையே; அதிருக்கட்டும். சிறப்பித்துச் சொல்லப்பட்ட இத்தேசத்துக் கைத்தொழிலாளர்கள் பூர்வத்திலே, புதுமையான அளவற்ற பொருள்களைச் செய்து, தங்களுக்கென்று நீராவிக்கப்பல்களைச் சமைத்து, அவற்றின் மூலமாய் (இக்காலத்தில் ஐரோப்பியர்கள் செய்துவருவதுபோல) அப்பொருள்களை அந்நியதேசங்களுக்கனுப்பி வியாபாரம் நடத்திவந்திருப்பார்களாகில், ஐரோப்பியர்களை எங்குந் தலைகாட்டவொட்டாமல் அடித்திருக்கலாமே. அப்படிச் செய்யும்வகை அவர்கள்புத்தியில் நுழையாமற் போயிற்றோ. அல்லது பொருளாசை யில்லாமற்போயிற்றோ தெரியவில்லை. இக்காலத்தில் கைத்தொழிலாளர்களின் புத்திநுட்பத்தை யறிந்திருக்கிற வரைப்போன்றவரொருவர் அக்காலத்திலிருந்திருப்பாராகில் யோசனைசொல்லிக் காரியசித்தி செய்வித்தேயிருப்பர். கடைசியில் அவர், இந்துதனவான்களை நோக்கி, வேண்டிய திரவியசகாயஞ்செய்து, தொழிற்சாலைகள் கட்டுவித்து பிறதேசங்களிலிருந்து யந்திரங்களை வரவழைத்து தொழில்களை நடப்பித்துத் தொழிலாளிகளை ஆதரிக்கும்படியாகவும் தேசவிர்த்தி செய்விக்கும்படியாகவும் சிபாரிசு செய்கின்றனர். இது உத்தமமே! ஆயினும் "யந்திரங்களை நம்மவர்களே செய்துகொண்டால், அதின் ஊதியம் அந்நியர் பரமாகாமல் நம்மவர்களே புசிக்கலாம், அந்தப்பணமும் நமது தேசத்திலே தானேயிருக்குமே. இது அவருக்குத் தெரியாததல்ல. இத்தேசத்துத் தொழிலாளிகள் சீமைஉளி, சீமை யிழைப்புளி, சீமைவாய்ச்சியென சீமை ஆயுதங்களைக்கொண்டு நாணயமான வேலைகளையும், நாட்டுஉளி, நாட்டு இழைப்புளி, நாட்டுவாய்ச்சியென நாட்டு ஆயுதங்களைக்கொண்டு மட்டித்தரமான வேலைகளையுஞ் செய்கிறவர்களா யிருக்கிறபடியால், இப்போது யந்திரங்கள் செய்ய அவர்களால் முடியாதென்று ஒருவேளை நினைத்திருப்பாரென்றாலும், அப்படியுமிராது; ஏனெனில்:— "இந்துவித்துவர்களின் காரியங்களை யெல்லாம் நாம் அதிகமாய் உறுத்திச் சொல்லவேண்டுமானால், ஒரு இந்துவுஞ்சரி பத்து பார்ளிமென்ட் மெம்பர்களும் முப்பது அமெரிக்காகைத்தொழில் வித்வர்களும் பதின்மூன்று மில்டனும் 25-செக்ஷ்பியரும் ஒருலட்சம் (நினைத்த ஓரொரு சொல்லைச்சொல்லும்) கம்பர்லண்டென்பவரும் சேர்ந்த ஒருபெருத்த கூட்டமுஞ்சரி. இங்ஙனமாயிருக்க, மஹா நிபுணசிரோன்மணிகளான இந்து கைத்தொழில் வித்வர்கள் அங்கிலேயரால் விளைந்த வறுமையினால் மெத்தவும் நொந்து அழுக்குவஸ்திரமுடுத்தி மேல்பார்வைக்கு மெத்தவும் சாமானியமானவர்களா யிருக்கிறார்கள்" என்று கூறியிருக்கின்றனர். ஆகலால் இக்காலத்திலுள்ளவர்களும் வெகு சமர்த்தர்களே. மேலே ஒரு இந்துவையும் ஒரு கூட்டத்தையும் ஒப்பிட்டிருக்கிற சங்கியை யோசிக்கையில் உலகவழக்கின்படி பத்துபன்னிரண்டு இருபது முப்பது ஆயிரம் இரண்டாயிரமெனப் பரியாயமாய்ச் சொன்னதாகத் தோற்றவில்லை. பத்தென்றும் முப்பதென்றும் சொன்னபிறகு ஒரு விருத்தமானலக்கமாகச் சொல்லாமல் பதின்மூன்று மில்டன் என அளவறுத்துச் சொல்லியிருப்பதினாலும், இருபத்தைந்து செக்ஷ்பியருக்குமேலே லட்சம்கம்பர்லண்டைச் சொல்லியிருப்பதினாலும், ஏதோவொரு சரியான கணிதமூலமாய் இருதிறத்தாருடைய திறமையை ஆராய்ந்து நிறுத்து அளவிட்டாற்போலிருக்கிறது. அல்லது முப்பதில் மூன்று முன்னும் பத்து பின்னும் வருவதை பத்துமுன்னும் மூன்று பின்னுமாக மாற்றிப் பதின்மூன்றென்று தமாஷாகச் சொல்லியிருக்கலாம். அதுபோலவே, சங்கதி முழுவதையும் தமாஷாகச் சொல்லியிருப்பர்போலும்.

விசாரிக்குந் தன்மையுள்ள சிறுவன். "அப்பா, நாம் மோட்சவுலகத்தில் பிரவேசிக்கும்போது, முத்துவாயில்களின் வழியாய்ச் செல்லுகிறோமல்லவா?" **தந்தை.** "ஆம், என் அருமைமகனே".—**சிறுவன்.** "ஒவ்வொருவாயிலும் ஒருபெரிய ஆணிமுத்தினால் அமைக்கப்பட்டிருக்கிறதல்லவா?"—**தந்தை.** "ஆம், குழந்தாய்."—**சிறுவன்.** "அப்படிப்பட்ட பெரிய முத்துகளை மீனுகிறதாய்ச் சிப்பிகள் எங்கே உற்பத்தியாகி வளருகின்றன?"—**தந்தை.** (கோபமாய்) "அடா, துஷ்டப்பயலே என் சவுக்கெங்கே" என்றார்.

அ-மு.

பிராமண ஞானோபதேசம்.

க்ஷத்திரிய வைசிய சூத்திராருக்குப் பிராமணர் உபதேசித்துவரும் ஞானோபதேசங்களில் இரண்டொன்றை யாவருக்கும் விளங்கும்படி சுருக்கமாக இதனடியில் எழுதுகிறேன்.

மௌற்கல்லியர் என்னும் ஓர் பிராமணதபசி நளாயினி என்னும் ஓர் க்ஷத்திரிய இராஜபுத்திரியை விவாகஞ் செய்துகொண்டு, தாம் தலை தாடி மயிர்களை வளர்த்து, கௌபீனமட்டும் உடுத்தி அவலட்சண சொரூபமாக இருப்பதுடன் யாசகமெடுத்துண்டு வருவதைத் தம்மனைவி இராஜபுத்திரியாகவும் க்ஷத்திரியகுலத்தில் தோன்றினவளாகவும் இருப்பதால் அவளது மனோபாவத்தை யறிந்துகொள்ள பலமுயற்சிகள் செய்தும் தெரியாமல் தமக்குக் குஷ்டரோகத்தை வருவித்துக்கொண்டார். அவர் குஷ்டரோகியாகியும் அவள் மனம் தளராததால், இன்னும் அவள் மனதைச் சோதிக்கக்கருதி அவர் தன்மனைவியைநோக்கிப் பெண்ணே!- நான் இவ்வனத்திற்கடுத்த கிராமத்திலிருக்கும் பொதுமகளுடன் சயனிக்க மிகு ஆவல்கொண்டிருக்கிறேன். நான் குஷ்டரோகியாக இருப்பதால் அவள் என்னை விரும்புவாளோ மாட்டாளோ வென்றார். அதுகேட்டு அவர் மனைவி அருணோதயத்திற்கு முன்னெழுந்து விலைமகள் மனைக்குச்சென்று அவள் வீட்டுத்தெருக் குறடுகளைப் பெருக்கி மெழுகி மொக்கிட்டு எவரும் அறியாமல் வந்துவிடுவாள். வேசி நித்திரையினின்று எழுந்துவந்து பார்த்து இஃதார் பெருக்கினது? இதைக் கண்டுபிடிக்க வேண்டுமென ஒருநாள் விழித்திருந்து அவள் பெருக்குவதைக்கண்டு அக்

குலமகளிடஞ்சென்று நீயேன் என்மனையைப் பெருக்குகிறுய்? உன்னைக் காணின் இராஜபுத்திரியைப்போலிருக்கிறதேயென வினவ, அதுகேட்டு இராஜபுத்திரி என்புருஷன் தரித்திரருங் குஷ்டரோகியுமானவர். அவர் உன்னுடன் சயனிக்க விரும்பியிருக்கிறுர். அதற்கு நீ சம்மதிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள, அவ்வாறே பொதுமகள் சம்மதித்து அழைத்துவரச்சொன்னுள். தபசிகள் காமத்தை வெறுத்தவர்கள் எனப் பெயர்கொண்ட இத்தபசி நடக்கக்கூடாதவரானதால் அவர் நாயகி அவரை ஒருகூடையில் எடுத்துவைத்து சிரசின்மீது தூக்கிக்கொண்டுபோய் விலைமகள் மனையில் விட்டுத் தான் தெருத்திண்ணையில் சயனித்திருந்து மீளவுந் தூலை - 3 4 - மணிக்குக் கணவனை கூடையில் தூக்கிவைத்தி எடுத்துத் தன்வீடு செல்லுவாள். கள்ளர் அம்மார்க்கமாக செல்லுகையில் அங்கோர் தபசியைக்கண்டு அவனைத் தூக்கிவந்து அவ்விலை மாதின்மனைக்குச் செல்லும்வழியில் நாட்டியிருந்த கழுமரத்தில் தூக்கிவிட்டு ஓடிப்போய்விட்டார்கள். தன் கணவனைச்சுமந்து இருட்டில செல்லும் அவ்விராஜப்புத்திரி நாட்டியிருக்குங் கழுமரத்தைப் பாராது அதில் மோதிக்கொண்டாள். அதில் தூக்குண்டிருந்த பிராமணதபசிக்கு இவள் மோதிக்கொண்டது மிகு வருத்தத்தை யுண்டாக்கினதால், தூக்குண்ட தபசி சினங்கொண்டு இவளை நோக்கி சூரியன் உதயமாவதற்குமுன் நீ விதவையாகக் கடவாயென சபித்தார். அவள் அதுகேட்டு சூரியன் உதயமாகாதிருக்கக்கடவது என சூரியனுக்கு மறுசாபமிட்டாள். இவள் பிராமண தபசியினுல் மணமாலை சூட்டப்பட்டவளானதால் இவள் வாக்கு சூரிய இரதத்தை வரவொட்டாது தடுத்தது. சூரியன் உதயமாகாதசால் விஷ்ணு-சிவன் - பிரம்மாதி தேவர்கள் அனைவரும் அவளிடஞ்சென்று சூரியனுக்கிட்ட சாபத்தை நிவர்த்திக்கக் கேட்டுக்கொண்டார்கள். அதற்கு அவள் கழுமரத்தில் தூக்குண்டிருக்கும் பிராமணதபசி எனக்கிட்ட சாபத்தை நிவர்த்தித்தால் நான் என்சாபத்தை விலக்குவேனென்றுள். தேவர்கள் கழுமரத்தில் தொங்கும் பிராமணனிடஞ்சென்று நீ அம்மாதுக்கிட்ட சாபத்தை நிவர்த்திக்க வேண்டுமெனக்கேட்டு அவ்வாறே நிவர்த்தித்துக்கொண்டு அதன்பின், அவளிட்ட சாபத்தை நிவர்த்தித்து சூரிய உதயமாகும்படி செய்தனரென உபதேசிக்கிறுர்கள்.

புருஷரில் பிராமணர் உயர்ந்த ஜாதியாரென்றும், மாதகுதகததையுடைய மடந்தையர் புருஷரினும் இழிந்த சாதியாரென்றும், க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களைத் தீண்டின் தீட்டாகிறதென்றும், இம்மூவினமாதரைத் தீண்டின் அதிலுங் கொடிய தீட்டாகிறதென்றும், அவர்களுடன் சயனிப்பது அதிலுங் கொடிய தீட்டாகிறதென்றும் பராசரர் கூறினர். சர்வகலாஞானமுடைய மேற்கண்ட மகா தபசி ஜாதிபேதம் பாராது க்ஷத்திரியஜாதி மாதைமணம் புரிந்ததால் அவர் ஜாதிப்ரஷ்டரானதுமன்றி குற்றமென்று அறிந்த காரியத்தைப் புரிந்ததால் பெருங்குற்றவாளியுமாகின்றுர். இக்கற்றரிந்த ஞானிமோகத்தால் மணம்புரிந்துகொண்டதால் மோகத்தை வெறுத்த பெரியோர்களுக்குடைய முனிவரென்னும் பெயர் இவருக்கு ஏற்காதே. இவர் பொருளாசையை வெறுத்திருக்கவேண்டியவராக இருக்க அவ்வாசையினுலேயே இராஜபுத்திரியை மணம்புரிந்தார் முக்காலங்களையும் தெரிந்துகொள்ளக்கூடியவராகவும், சூரியனையும் அதன் நிலையினின்று அசையாதிருக்கச் செய்யக் கூடிய வல்லமையுடையவராகவு மிருக்கும் இத்தபசி தம்மனைவியின் குணத்தைத் தெரிந்துகொள்ள சக்தியற்று மனங்கலங்கி பலபரீட்சைகள் செய்ததால் நிர்மூடருக்குரிய விவேகமும் இவரிடத்திலில்லையென்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. தன்னை கழுமரத்தில் தூக்கின கள்ளரை சபிப்பதைவிட்டு இருளில் அறியாது இடித்துக்கொண்ட குற்றமற்ற அம்மாதை வேதமறிந்த தபசி சபித்ததென்னவிவேகம்? அவ்வாறு சபித்தபோதிலும் அவளைச் சபிப்பதைவிட்டு தனக்கு ஒரு தீங்கும் புரியாத அவள் நாயகன் இறக்கவேண்டுமென அவள்நாயகனைச் சபித்ததென்ன விவேகம்? குஷ்டரோக தபசி கழுமரத்தில் தொங்கின தபசிக்கு ஒரு தீங்கும் புரிந்தவனல்லவே. சாபனை என்பது வாய்மொழியேயன்றி அதுபருவதமல்ல, கல்லல்ல, மரமல்லவே. கல்மரமல்லாத அவள் வாய்மொழி சூரியகதியை எவ்வாறு நிறுத்திற்று. அத்தபசிகள் எல்லோரும் இக்காலத்தில் எங்கு சென்றேடி மறைந்தார்கள்? இருக்கினும் ஏப்பிரல் - மே மாதங்களில் சூரிய தீக்ஷண்ணியம் அதிகரிப்பதை முறையிட்டு, சூரியனை சிலகாலம் இங்கு வரவொட்டாது தடுக்கும்படி நாம் மிகு வேண்டிக்கொள்ளலாமே. கழுமரம் மகா தபசியின் குதத்தினின்று கபாலம் வரையிலேறி இறக்குந் தருணத்தில் இனியமொழிகள் அவர் மிடற்றினின்று உதிக்கவேண்டியதாக விருக்க சபிக்கும் கொடூர துன்மார்க்கபுத்தி மரணதருணத்திலும் போகாதிருந்தது மிகு ஆச்சரியமே. பிராமணர் தங்களுக்கு மற்ற ஜாதியாரிடத்திலுள்ள துவேஷத்தால் அவர்களைக் கெடுப்பதற்காகவே கெடுநினைவால் தவவேடம்பூண்டு உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் இராஜபுத்திரிகளை விவாகம்புரிந்துத் தங்கள் வஞ்சந் தீரும்படி அவர்களால் தாங்கக்கூடாத இம்சைகளை அவர்களுக்குப்புரிந்து வந்தார்கள். செல்வமுள்ள க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களில் எவர்களேனும் தங்கள் புத்திரிகளுக்குத் திரண்ட ஸ்திரி தனங்கொடுத்துத் தங்கள் புத்திரிகளை B-A. பரீட்சையில் தேறின எச்சாதியாருக்கேனும் விவாகம்புரிந்துகொடுப்பதாகப் பிரசித்தப்படுத்தினுல், பிராமணர் பொருள்வாஞ்சையினுல் தாங்கள் விவாகஞ்செய்துகொள்வதாக வஞ்சித்து அக்கன்னிகையை மணம்புரிந்து, அவள் இரண்டொரு பிள்ளைகளைப்பெற்றபின் விவாகஞ்செய்துகொண்டவர் இவள் என் வைப்பாட்டியேயன்றி மனைவியல்லவென்று தம் சுயகுலத்தில் வேறொரு பெண்ணை மணஞ்செய்து கொள்ளுவார்கள். ஆகையால் பிரியமானவர்களே! உங்கள் புத்திரிகளை பிராமணருக்குமட்டும் விவாகஞ்செய்துகொடாமல் அவர்கள் புத்திரிகளை நீங்கள் விவாகஞ் செய்துகொள்ளுங்கள்.

வில்வலன், வாதாபி என்னும் இருசகோதரர்கள் இருந்தார்கள். அவர்கள் நரமாமிசம் பக்ஷணிக்கும் மிலேச்சர்கள். அவர்கள் தபசிகள்நடமாடும்மார்க்கத்தில் வீடுகட்டி வாதாபியை ஆடு உருவமாக்கித் தெருஸ்தம்பத்தில் கட்டி அவ்வழிச்செல்லும் பிராமண தபசிகள், சன்னியாசிகள், முனிவர்களைக்கண்டு இஷ்டமுள்ளவர்கள் இங்குவந்து போஜனஞ்செய்து போகலாமென்பார்கள். வழிப்போக்கராகிய பிராமண தபசிகள் முநிவர்கள் சன்னியாசிகள் மாமிசப்பிரியத்தால் அங்கு சென்று போஜனமெடுத்துக்கொள்வார்கள். அவர்கள் மாமிசபோஜனஞ் செய்தபின் வில்வலன் "வாதாபீ!" என்று அழைக்க, ஆடு உருவமெடுத்து கொலையுண்டு சமைத்து உண்ணப்பட்ட வாதாபி அவர்கள் வயற்றைக் கிழித்து வெளியேவந்து இருவருஞ் சேர்ந்து தபசிகளைக் கொன்று புசிப்பார்கள். ஒருநாள் அகஸ்தியரும் அவர்கள் மனைக்குச் சென்று மாமிசபோஜனஞ்செய்து வாதாபியை ஜீர்ணபியாக்கிவிட்டாராம். இதனுல் சிலபிராமணர் இக்காலத்தில் மட்டுமல்ல, பூர்வகாலத்திலும் மாமிசபோஜனஞ் செய்துவந்ததற்கும், பூர்வகாலத்தில் ஜாதிபேதம் இல்லாதிருந்து மத்தியகாலத்தில் உண்டானதென்பதற்கும், பூர்வகாலத்தில் பிராமணர் மிலேச்சர் மனைகளிலும் போஜனஞ்செய்துவந்ததற்கும் இதுவே போதுமானசாக்ஷி. இப்பூமிக்குக் கீழுலகத்திலும் மேலுலகத்திலும் நடக்கும் சமஸ்த விஷயங்களின் முக்காலங்களையும் இவ்வுலகத்திலிருந்தே தெரிந்துகொள்ளக்கூடிய சக்தியையுடைய அகஸ்தியர் தன்னெதிரில் ஓர் இராக்ஷதன் மற்றொரு இராக்ஷதனை ஆடுருவமாக்கிக் காண்பித்து அதை வெட்டிச்சமைத்துப் பரிமாறியதை அறியாமல் உண்டதால் இவர்ஞானம் அஞ்ஞானமாயிற்று.

பரசுராமர் துரோணச்சாரியாருக்கு வில்வித்தை கற்றுக்கொடுத்தார். துரோணசாரியர் தாம் கற்ற வித்தையை அர்ச்சுனனுக்குக் கற்பிக்கையில் ஒருவேடன் தனக்குங் கற்பிக்கவேண்டுமென்று துரோணச்சாரியரை மிகவேண்டிக்கேட்க அதற்கு துரோணச்சாரியர் மகுடவர்த்தனர்களின் மைந்தருக்குமட்டுங் கற்றுக்கொடுப்பேனேயன்றி உன்னைப்போன்ற வறியவருக்குக் கற்பிப்பதில்லையென்றுர். அவ்வேடன் துரோணசாரியரைப்போல் ஒரு பிரதிமை செய்துவைத்து தானே தன்னறிவைக்கொண்டு அவ்வித்தையைக் கற்றுவருகையில் ஒரு பாணத்தால் நான்கு இரந்திரமாக்கும் வித்தையை துரோணசாரியர் அர்ச்சுனனுக்குமட்டும் மிகு அருமையாகக் கற்றுக்கொடுத்திருந்தார். இவ்வித்தையை அவ்வேடன் தன்னறிவால் கற்று அதைப்பரீட்சிக்க ஒருமரத்தில் பாணத்தை எய்து நான்கு இரந்திரமாகும்படி செய்திருந்தான். அவ்வழிச்சென்ற அர்ச்சுனன் அந்தரந்திரங்களைக்கண்டு நமது குருவாகிய அப்பிராமணன் நமக்குமட்டும் அவ்வித்தையை மிகு அருமையாகக் கற்றுக்கொடுத்ததாக மொழிந்து அவ்வேடனுக்குங் கற்றுக்கொடுத்திருக்கிறுரெனச்சினந்து அவருடன் சிலகாலம் பேசாதிருந்தான். துரோணச்சாரியர் அர்ச்சுனனைக்கண்டு என்னகாரணமாக என்மீது சினந்து பேசாதிருக்கிறுயென வினவ, அதற்கு அர்ச்சுனன் ஒருபாணத்தால் நான்கு இரந்திரமாகும் வித்தையை எனக்குமட்டுங் கற்பித்ததாகக்கூறி அவ்வேடனுக்குங் கற்றுக்கொடுத்தீரோ என வினவ துரோணச்சாரியர் அர்ச்சுனனுக்கு ஏதோ சமாதானஞ்சொல்லி அனுப்பிவிட்டு, வில்வித்தைகற்ற தம் சிஷர்கள் தமக்குக் கொண்டுவந்த குருதக்ஷணையைப் பெற்று வருகையில், அவ்வேடனும் அவரிடத்தில்

வைத்திருந்த அபிமானத்தால் அவன் தன்அந்தஸ்திற்குத் தக்கபடி கொண்டுவந்த பொன் வெள்ளி தக்ஷிணையை நிக்கிரகித்து உன் பெருவிரலை தக்ஷிணையாகக்கொடுத்தால் போதுமெனவே, கபடமற்ற அவ்வேடன் அவ்வாறே தன் பெருவிரலைத் துண்டித்துத் தக்ஷிணையாகக் கொடுத்தான். வில்லை யழுத்திப்பிடிக்கும் பெருவிரல் போனபின் அவன்கற்ற வில்வித்தைகளனைத்தும் விழலுக்கிறைத்த நீரைப்போலாயிற்று. இதனால் பிராமணருக்கு இக்காலத்தில் மட்டுமல்ல, பூருவகாலந்தொடங்கி அவர்களுக்கு பொருள்மீதில் நாட்டமேயன்றி மற்றெதின்மீதும் நாட்டமில்லையென விளங்குகின்றது. வேடன் தன்முயற்சியால் வில்வித்தையைக் கற்றுக்கொண்டவனாக இருக்கினும் அப்பிராமணன் தனக்கு அவ்வித்தையைக் கற்றுக்கொடுப்பதில்லை என்று மறுதலித்ததையு மறந்து நன்றியுள்ளவனாக காணிக்கைகொடுக்க, அவன் நன்றியையு முணராமல் அர்ச்சுனனின் தாக்ஷணியத்திற்காக வேடனின் விரலை துண்டிக்கச்செய்ததால் வேடனிடத்தி விளங்கிய அறிவுகூட இவரிடத்தில் விளங்கவில்லை யென ஸ்பஷ்டமாக வெளியாகின்றது.

க்ஷத்திரியகுல மரபினருக்குச்சண்டாளச்சி கெர்ப்பத்தினின்று உதித்துத் தமது தபோபலத்தால் பிராமணரான விஸ்வாமித்திரர் தூலதேகத்துடனே விண்ணுலகத்திற்கேகவேண்டுமென வேண்டிக்கொண்ட தமது சிஷனாகிய திரிசங்கு மகாராஜனை அவ்வாறே யனுப்ப, அங்ஙனமே அவன் தவ தூலதேகத்துடனே செல்ல, அச்சொர்க்கவாசிகள் மண்ணுலகினின்று இவ்விடம் வருகின்றவன் யாரெனச் சினந்து அவனைத்தலைகீழாகத்தள்ள தள்ளுண்டஅவன் அபயம்! அபயம்!! அபயமெனஓலமிட்டு அந்தரத்தில் வருவதைவிஸ்வாமித்திரர் கண்டு கோபித்து அனுஷம், கேட்டை, பூராடம், உத்திராடம் ஆகிய தேவர்களென்னும் இன்னட்சத்திரங்களைப் பிடுங்கித் தென்திசையில் நாட்டி திரிசங்கு சொர்க்கமென்னும் ஓர் நவீனசொர்க்கத்தை யமைத்து, அவனை அங்கு அனுப்பினரென்று பிராமணர் மற்ற ஜாதியாருக்கு உபதேசிக்கிறார்கள்.

அனுஷம், கேட்டை முதலிய நக்ஷத்திரங்களைப் பிடுங்கி வேறொரு திசையில் நாட்டச்சென்ற விஸ்வாமித்திரர் இம்மண்ணுலகினின்று விண்ணுலகத்திற்கேகியது காகத்தின்மீதேறியா அல்லது கருடன்மீதேறியா? நமது பாதத்தின் கீழ்த்தட்டை வடிவமாக இப்பூமி இருப்பதுபோல அண்ணாந்துபார்க்கின் நமது சிரசிற்குமேல் நீலவருணமாகத்தோற்றுவதொரு, பெரிய உலகமென்றும் அதிலிருக்கும் கிரகங்களும் நட்சத்திரங்களும் இப்பூமியினின்று சென்ற பிராமணர்களென்றும் பிராமணஆகமங்கள் சொல்லுவதால், அதன்படி கிரகங்களாகிய அப்பிராமணர்கள் தங்களுக்குத் தாயிடமாகிய இப்பூமியினின்று அவர்களைப்போன்ற மற்றொரு பிராமணர் அனுப்பிய திரிசங்கை அங்கீகரியாமல் தலைகீழாகத் தள்ளியது எவ்வளவும் அவர்களுக்கு நியாயமல்ல. ஆகையினால்தான் விஸ்வாமித்திரர் கோபித்து சில நட்சத்திரங்களைப் பிடுங்கி வேறொரு திசையில் நாட்டி. மற்றொரு சொர்க்கத்தை யுண்டுசெய்தார். அத்தேவர்கள் திரிசங்கை யங்கீகரித்திருந்தால் அவர்கள் சொர்க்கத்திற்குப் போட்டியாக மற்றொரு சொர்க்கம் ஏர்ப்பட்டிராதே. அவர்கள் கெர்வத்தால் அவர்களே கெட்டார்கள்.

சங்கராச்சாரியர் பரகாயப்பிரவேசஞ்செய்து வருகையில் சிறந்த ரூபலாவண்யமுடைய ஓர் அரசனது இருமனைவியரையும்அவர்ஆலிங்கனம்புரியவிரும்பித்தமதுதேகத்துடனே சென்று கேட்கின் அவர்கள் தமக்கிணங்காரெனக் கருதி, அவ்வரசன் வியாதியடையுந்தருணம் பார்த்திருந்து, அவன் தேகவியோகமடைந்த உடனே தமது தேகத்தைவிட்டு அவனது தேகத்தில் பிரவேசித்து அப்பட்டஸ்திரிகளுடன் சிலகாலம் புணர்ந்திருந்தாரென்று உபதேசிக்கிறார்கள்.

நாம்புரியும் சமஸ்தசுகங்களையும் அனுபவிப்பது தேகதத்துவாதிகளேயன்றி மற்றதெதுவுமல்ல. தேகத்திலுள்ளிருந்த பிராணவாயு தேகத்தினின்று விலகி அவ்வரசனின் தேகத்தினுட் பிரவேசித்து சுகங்களை அனுபவித்ததெனின், பிராணவாயுவுக்கு அனுபவதத்துவாதிகளேது? சங்கராச்சாரியரென்னும் பெயர் ஜீவனோடிருக்கும் தேகத்திற்கேயன்றி ஒன்றினின்று ஒன்றுபிரிந்த தேகத்திற்காயினும், அல்லது பிராணவாயுவுக்காயினுமல்ல. இவருக்குள்ளிருந்த பிராணவாயு தேகத்தினின்று பிரிந்தஉடனே அகண்டவாயுவில் கலந்துபோகாமல் இறந்த அரசனின்தேகத்தில் பிரவேசித்ததெப்படி? பிரவேசித்திருக்கினும் இறந்தவரின் இரத்தாதிகயாவும் கட்டி இறுகிக்கெட்டு சலனமற்றது மீளவும் உடல் சலனத்திற்கு வந்ததெப்படி? மேலும், அஞ்ஞானிகளுக்கு ஞானமூட்டும் சங்கரர் திருட்டுத்தொழிலில் பிரவேசித்ததால், அவர் ஞானோபதேசம் யாவும் அத்தன்மையதாகவே தானிருக்கும்.

(இன்னும்வரும்.)

M. MASILAMONI.

தருமம் யாருக்குச்செய்யவேண்டும்?

சில மாதங்களுக்குமுன் இச்சென்னையின்கண் நிகழ்ந்தவோர் கருமாந்தகாரியத்திற்குப் போயிருந்த வமையத்து நேர்ந்தவோர் விவகாரத்தை யீண்டு தீட்டுவாம்.

மேலைய கருமாந்தகாலத்தில் வழக்கப்படி பிராமணர்கள் சிரார்த்தமுதலியவைகளை வாங்கி மூட்டை கட்டிக்கொண்டு போனபிறகு கருமாந்தம் கல்லெடுப்பு முதலியவை நடத்துவோர் வீட்டில் வைக்கும் உலைக்கே யெதிர்பார்த்து உடலை வளர்த்துவரும் தெண்டசோற்றுக்காரர்களெல்லாம் வந்து கூடினார்கள். அப்பொழுது அவர்களைக்கண்ட அவ்வீட்டுக்காரர் கதவைத் தாளிட்டு தம்மால் வருந்தியழைக்கப்பட்டுவந்த விருந்தாளிகளுக்கு மாத்திரம் விருந்திட்டார். அப்பொழுது அவ்வீட்டுக்காரரை நோக்கி வெளியில் காத்துக்கொண்டிருக்கின்றவர்களை யென்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கவர் வெளியில் வந்திருப்பவர்களெல்லாம் பாபிகள். கடவுள் அவர்களை அந்தஸ்திதியில் வைத்திருப்பது மதற்குத்தான் அவர்களை நாம் சன்மானிப்பதும் கடவுளுக்கு விரோதமாகத் தானிருக்கும் ஆகவே நான் அவர்களுக்கு அன்னமளிக்கப் போகிறதில்லையென்று கூறினர். அதற்கு நாம் பதிலாகக் கூறினதாவது கடவுளென்பவர் ஒருவரிருப்பாரேல் அவர் சிலரைத் தாழ்ந்த ஸ்திதியிலும் சிலரை யுயர்ந்த ஸ்திதியிலும் வைப்பாரா? யாவரையும் ஒரேநிலைமையிலல்லவா வைப்பார்; கொஞ்சநேரத்திற்குமுன் மூட்டைகளைக் கட்டிக்கொண்டுபோன பிராமணர்களுக்கும் இப்பொழுது வெளியில் கூடியிருக்கும் ஏழைகளுக்கும் உள்ளபேதமென்னை? பிராமணர்களோ தங்களைப்போலொத்தவர்களால் வலியக் கொடுக்கப்பட்ட தனதானியங்களைக் கொண்டு சொத்திலும் சோம்பலிலும் சிறந்தவர்களாக விருக்கின்றனர். ஏழைகளோ தங்களைப்போ லொத்தவர்கள் செய்யும் ஜம்பவிருந்துகளைத் தின்றுதின்று தொழிலொன்றுந் தேடாமல் சுத்தசோம்பேறிகளாக விருக்கின்றனர். ஆகவே நம்போலிய சீமான்கள் இனியாவது பிறர்பொருளுக்கே உலைவைத்திருக்கும் பிராமணர்களுக்கும் பிச்சைக்காரர்களுக்கும் பிரதிஷ்டைக்காக தாங்கள் வருந்தித் தேடிய திரவியத்தை வாறியிறைக்காமலிருப்பார்களாயின் பிராமணயாசகமும் பிச்சைக்காரர் ரொஷ்டமடங்கும். இதனை செவியுற்ற வவ்வீட்டுக்காரர் தருமம் யாருக்குத் தான் செய்யவேண்டியதென்று வினவினர். அதற்கு விடையாகக் கூறினதாவது வேலைசெய்து வயறு வளர்க்கக்கூடாத அங்கவீனமதியீனங்களையுடையார்க்கும் உண்ண உணவையும் உடுக்க உடையையும் படுக்கப் பாயையும் இருக்க இடத்தையும் தந்து அன்புடன் ஆதரித்து வரல்வேண்டும். இதுவே தனவான்கள் செய்யவேண்டிய தருமமாகும். இதைவிட்டு வேலைசெய்து பொருள்தேடி உண்ணவும் பற்பல போகாதிகளை நுகரவும்வல்ல பிராமணர்களுக்கும் ஏனைய பிச்சைக்காரர்களுக்கும் கொடுப்பது ஒருக்காலும் தருமமாகாது தருமத்திற்கு எதிர்மறையாகிய அதருமமே யாகும். மேலும் இஃதல்லாமலும் தருமஞ் செய்யவேண்டியது யாருக்கெனில் ஏழைப்பிள்ளைகளுக்கு அன்னவஸ்திரமீந்து அன்னோரைப் படிப்பித்தல், ஆங்காங்கு வேண்டுமட்டும் வைத்தியசாலைகளை யேர்ப்படுத்தி யேழைகளுக்குப் பிணிதீர்த்துவரல் ஜலமில்லாவிடங்களில் ஜலமுண்டுபண்ணல், காற்று வீசாது அனல்வீசும் ஸ்தானங்களில் குளிர்காற்று வீசும் வண்ணம் விருட்சங்களைவைத்தல், பட்டணங்களில் பொது நலங்களைப் பட்டணவாசிகள் சமயம் நேர்ந்தவிடத்துக் கூடிப்பேசும்படியாக தக்க பொது மண்டபங்களைக் கட்டுவித்தல் முதலிய பரோபகாரங்களைத் தம்மூரார்க்குச் செய்தலாம்.

D.

பிராமணதந்திரம்.

வேதமென்பது:—பூலோகத்திலுள்ள மாந்தரை ஓர் வரம்பில் நிறுத்தி அவர்களை அதன்எல்லையினின்று மீளாவண்ணந் தடுத்து ஒழுகுவிக்கும் ஓர் நூலாம். பூலோகத்திலுள்ள சமஸ்த சமயவாதிகளும் தங்கள் தங்கள் ஒழுக்கத்திற்குத் தத்தமது வேதப்பிரமாணமே ஆதாரமெனக் கூறுகின்றனர், ஆகையால் சமயவாதிகளின் ஒவ்வொருவருடைய ஒ

முக்கத்திற்கும் வேதப்பிரமாண மிருக்கவேண்டும். ஒவ்வொரு வேதப்பிரமாணத்திற்கும் மனிதருடைய நடத்தை சாட்சியாகவேண்டும். எது வேதத்தில் சொல்லப்பட்டு அனுஷ்டானத்தில் வராமலிருக்கிறதோ அது பயனற்றவிதியெனத் திர்மானித்து அது அழிவுற்றதாக அங்கீகரிக்கப்படவேண்டும். எது வேதத்தில் சொல்லப்படாமல் அனுஷ்டானத்தில் மட்டும் இருக்கிறதோ அது வேதத்தின்குறை வெனக்கருதி நவீனமாக அவ்வேதத்தில் சேர்க்கப்படவேண்டும். வேதத்தில் சேர்க்கப்படாமற் போனபோதிலும் எது ஆசாரத்திலிருக்கிறதோ அது வேதப்பிரமாணத்திலும் மேலானது. எவர்களேனும் பிராமண அனுஷ்டானத்திலிருக்கும் ஜாதிபேதம், விக்கிரக ஆராதனை, பல தேவவழிபாடு முதலியவற்றைக் கண்டிக்கின் அப்போது பிராமணர் அவை சுருதி, ஸ்மிருதி புராணகாவியங்களில் மட்டும் எழுதப்பட்டிருப்பதேயன்றி வேதத்தில் எழுதப்பட்டிருக்கவில்லை என்றும், வேதம் எங்களுக்கு ஆதாரமேயன்றி புராணமுதலியவை ஆதாரமல்லவென்றுங் கூறி, வினவியவரின் வாயைப்பூசி விடுகின்றனர். ஆனால், அவர்கள் அனுஷ்டானத்திலிருப்பது சுருதி, ஸ்மிருதி புராணகாவியங்களே யன்றி வேதமல்ல. அவர்கள் பொருள் சம்பாதிக்கையில் ஜாதிபேதம் கடவுளால் சமைக்கப்பட்டதென்றும், விக்கிரக ஆராதனை செய்ய வேண்டுமென்றும், பலதேவர்கள் உண்டென்றும் அவற்றிற்குப் புராணகாவியங்களில் ஆதாரங்களை யெடுத்துக்கூறிப் பொருள் கிரகிக்கின்றனர். ஆகையால் தர்க்கம் நேர்ந்தபோது வேதத்தையும், பொருள் சம்பாதிக்க நேர்ந்தபோது புராணமுதலியவற்றையும் எடுத்துக் கூறுகின்றனர். இது பிராமணரின் சமயோசிதத் தந்திரமாம். உங்கள் வேதத்தின் இன்னின்ன விஷயங்கள் குற்றமுள்ளதென வினவின் எங்கள் வேதம் எழுதாமறையாயிருக்க அதுஉமக்கு எப்படிக் கிடைத்தது! நீர் சொல்லுவது வேதமல்லவென்று சொல்லுகிறீர்கள். அது வேதந்தானென்று ருசுப்படுத்தியபின் அதின் சப்தார்த்தம் இதல்லவென்றும், உமக்குத் தெரியாதென்றும் ஏமாற்றுகின்றனர். எவர்களேனும் அவர்கள் சந்தியாவந்தனத்தை எடுத்துக்கூறி அதிலுள்ள குற்றத்தை எடுத்துக் காட்டின், அது எங்கள் சந்தியாவந்தனமல்ல, இன்னொருவகை பிராமணருடையதென அவர்கள் வாயையடைத்துவிடுகின்றனர். இது பிராமணருக்குரிய இயற்கையாம்.

M. MASILAMONI.

வர்த்தமானம்.

இத்தேசத்திற்குப் புதிதாய் போடப்பட்ட இன்கம்டாக்ஸென்னும் வருமான வரியானது இந்த ஏப்ரல்மாதம் அனுஷ்டானத்திற்கு வருவதாயிருக்கிறது. இவ்வரியைப்பற்றி இவ்விராஜதானியிலுள்ள அனேக ஆதுலசாலைகளும், அடைக்கலசாலைகளும் தங்களுடைய தர்மார்த்த விஷயத்திற்கு மேற்படி வரி தங்களுக்குத்தகாதென்றும் அது விலக்கப்படவேணுமென்றும் கவர்ன்மெண்டாருக்கு ஒரு மனுசெய்துக்கொள்ளப்போகிறதாகத் தெரியவருகிறது. மேற்படி சாலைகளிலுள்ள அநாதபிள்ளைகளுடைய சொற்ப சம்பாத்தியத்தாலும் இதர வகைகளாலும் வரும் சொற்ப வரும்படியைக்கொண்டு அதின் தர்மத்திற்கே செலவழித்து வருவதால் அதன்மீதும் வரியுண்டாவது பொருத்தமாயில்லையென்று பேசிக்கொள்ளப்படுகிறது. மேலும் வடபர்மாவிலும் இவ்வரி இதற்குள்ளாக குதித்தேறுவது தகாதென்றும் அவ்விடத்திய முக்கிய கமிஷனராகிய மிஷ்டர் பெர்னார்ட் என்பவர் கவர்னர் ஜெனராலுக்கு ஒருமனு செய்துக்கொண்டதின் மேல் மேற்படி சட்டத்தை அவ்விடத்தில் ஒருவருஷம் வரையில் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது, இப்படியே அவரவர்களும் இவ்வரியை ஒதுக்கிக்கொள்ளுவார்கள்போலும்.

அருணாஜலேஸ்வரர் கோவில்—இக்கோவிலுக்கு அதீனப்பட்டிருந்த, விலையேறப்பெற்ற நகைகளுடையவும் பூமி சொத்துகளுடையவும் விஷயத்தில் கொஞ்சம் சமுசயங்கள் தோன்றியிருப்பதினால் கூடிய சீக்கிரத்தில் இக்கோவில் சங்கதி ஹைகோர்ட்டுக்கு வரும்போலத் தோணுகிறது.

சர்ப்பங்கள்—கடந்தவாரம் வருஷித்த ஒருவித பெரியமாரியால் அரபிலயின், ஆட்கோடி, சின்னையாபாளையம், நீலசமுத்திரம் முதலான இடங்களிலெல்லாம் சர்ப்பங்கள் விசேஷமாகத் தலைக்காட்டித்திரிகின்றன.

—சண்டையிடும் குணமுள்ளவளும், வீட்டு சொத்தை திருடுபவளும், பிறருக்கு அநுகூலமானவளும், எப்பொழுதும் பரிகாசம் சொல்பவளும், கணவனுக்கு முன்னுண்பவளும், எப்போதும் அண்டை அயல் வீடுகளுக்குப்போகிறவளும் ஆகிய இப்படிப்பட்டவள் பத்துப் பிள்ளைகளைபெற்று அவற்றுக்குத் தாயாயிருந்தாலும் தியஜிக்கவேண்டும். நிற்க, வீட்டுவேலையில் பணிப்பெண்போலவும், காரியாலோசனையில் மந்திரிபோலவும், உருபத்தில் மகாலட்சுமிபோலவும், பொறுமையில் பூமிதேவிபோலவும், ஸ்நேகத்தில் தாய்போலவும் இவ்வைந்துவகையாய் கணவன்விஷயத்தில் பிரவர்த்திப்பவள் குலஸ்திரியாவாள்.

—லண்டன் மார்ச்சு மீ கஅஉ இந்தியாதுரைத்தன விஷயமாய் விசாரணை செய்து ரிபோர்ட் செய்வதற்காக நியமிக்கப்படும் பார்லிமெண்டரி கமிடிக்கு பார்லிமெந்தின் லார்ட்ஸ் (பிரபுக்கள்) சபையைச்சார்ந்த பின்னால்வரும் பிரபுக்கள் மெம்பர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

டியூக் அப்நார்போக்	இட்டஸ்லேபிரபு
டியூக் அப் பக்கிங்ஹாம்	க்ரானப் ரூக்பிரபு
ரிப்பன் பிரபு	லார்ட் ஹாரிஸ்
டெர்பி பிரபு	லார்ட் எல்ஜின்
க்டொகான் பிரபு	லார்ட் நேபியர்
கிம்பர்லி பிரபு	லார்ட் ரெவில்ஸ்டோக்
நார்த்ப்ருக் பிரபு	லார்ட் ஹாப்ஹௌஸ்
லிட்டன் பிரபு.	

தீ மிதித்தல் ஒருவர் எழுதுகிறார்:—"இவ்விடம் திருநெல்வேலிஜில்லா சங்கரநயினார்கோவில் தாலுகா கஸ்பாவில் நேற்றையதினம் நடந்த தர்மர்கோவில் உற்சவ அக்கினிக்குழியில் கோவில் பூசாரி வகைரா அனேக ஜனங்கள் ஒன்றுகூடி இறங்கி ஓடும்பொழுது, மேற்படி பூசாரி காசியாபிள்ளை யென்பவர் காலிடறி அக்கினியில் விழுந்தார். அவர் பின்னால் தொடர்ச்சியாய் இறங்கிவரும் ஜனங்களில் மிதியுண்டு உ-ங-தரம் அதில் புரண்டதில் தேக ஆதியந்தமும் சுட்டுப்போட்டது. அவர் இந்த அபாயத்தினால் ரொம்பவும் வருத்தப்படுகிறார். அவர் முற்றிலும் சுகமுடைய ஒருமாசம் செல்லும். இவரை அத்தருணத்தில் அக்கினியில் நின்று தூக்கினவர்களுக்குக் கால்களை சுட்டுப்போட்டது. இந்த உற்சவம் ஒவ்வொரு இடங்களிலும் கொண்டாடுகிறது வழக்கமாக விருக்கிறது. இதை நிறுத்தினால் மிக நலமாயிருக்கும். இப்பேர்ப்பட்ட அபாயம் நேரிட்ட தன்மூலமாயாவது ஜனங்கள் நிறுத்தமாட்டார்களாவென்று நினைக்கிறேன்.

—வடமேற்கு மாகாணங்களில் சிசு கொலை அதிகமாய்ப் பரவி வருவதாகச் சொல்லப்படுவதால் கவர்ன்மெண்டார் அது விஷயத்தைப்பற்றி மிசக் கவலை யெடுத்துக்கொண்டு வருகிறார்கள். சிசு கொலை இவ்வளவுதூரம் அனுஷ்டானத்திலிருந்து வருகிறதென்று நிச்சயமாய் அறிந்துகொள்ளுமாறு ஓர் விசாரணை துவக்கப்பட்டிருக்கிறது. உடனே இது விஷயத்தில் சமுசயப்படத்தக்க குடும்பங்களையெல்லாம் பரிசோதித்து அக்கும்பங்களை அடிக்கடி பார்வையிட்டு அவைகளிலுள்ள குழந்தைகளை சரியாய் ரிஜிஸ்திரர்செய்து வைக்குமாறு ஏற்பாடு செய்வார்களென்று தெரியவருகிறது.

தத்துவவிவேசினியின் கையொப்பக்காரர்களே! "சமய புராதனம்" என்று இதில் பிரசித்தப்படுத்திவரும் தலைப்புப் பெயரை பிராமணப்புராதனம் எனமாற்றிக்கொள்ளுங்கள்.

M. MASILAMONI.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	6	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	14	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	10	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	13	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செய்த்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் -1-14-0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிநாயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொஸைடி ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் வேப்பேரிக்கும் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS,

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 15.] MADRAS :—SUNDAY APRIL, 11, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

உலகியல்.

"இமிழ்திரைப்பரவைஞாலம் ஏழமையுடைத்துமாதோ" என்று கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பர் தமது காவியத்திற் கூறியிருப்பதுபோலவே வையத்தவர்கள் பெரும்பாலும் ஏழைமைக்குணமுடையவர்களாகவே யிருக்கின்றார்கள். ஒருவர் வசப்பட்டு மற்றவர் நடக்கத்தக்கவர்களாகவே யிருக்கின்றார்களேயல்லாமல், சுயபுத்தி சுயாநுபவம் முதலிய ஆதாரங்களைக்கொண்டு சுயாதினர்களாய் நடக்கவல்ல நாட்டமுடையவர்களாகத் திலப்பிரமாணமேனும் தமது ஒழுக்கத்தால் காட்டுகின்றிலர். உலகத்திலே ஆதரவற்ற கொள்கைகள் அனேகமாக விருக்கின்றனவென்பதற்கு அவ்வவர் சுயமன ஒழுக்கங்களே சான்றுபகரத் தக்கனவாகின்றன. சிற்சில சார்பாரொழிய ஏனையவர்கள் தாம் பிதா புத்திரசந்தானமாய்ச் 'செவியறிவுறுக்கப்பெற்ற சமயங்களையும், சமய நூல்களையும், சமய கடவுளர்களையும், சமயாசாரியர்களையும், சமய சீடர்களையும் அதிவினைய பயபக்தியுடன் வழிபட்டு பூசை நைவேத்தியாதி உற்சவங்களியற்றியும், பெருநாள் கொண்டாடியும், தமது காலத்தையும், கனத்தையும், காசையும், கவனத்தையும், கஷ்டத்தையும் வியர்த்தம் செய்கின்றார்கள், சகல விவகாரங்களிலும் நியாயமுகடுமுற்றிலுஞ் சென்று தீர்மானித்து நடத்தும் விவேகிகளிற் சிலரும் தாம் தம்பிதாக்களால் செவியறிவுறப்பெற்ற சமயவிஷயத்தில் கிஞ்சித்தேனும் சோதனுசித்தக்கியானமில்லாமல் "உலகத்தோடொத்து" நிற்கின்றார்கள். இவர்கள் இங்ஙனம் நிற்றற்குக் காரணம்தான் யாதோ! இலாபம் பயக்கும் பலவிஷயங்களிலும் சிந்தித்துச் சிந்தித்துச் சிந்தையிளைப்புற்ற தமக்கு இவ்விஷயத்தையுஞ் சிந்திக்க மனோதிடமில்லாமையினுலோ! இலௌகிகத்தில் பல சுகங்களையும் தரும் விஷயங்கள் அபரிமிதமாக விருக்கின்றமையால், இவ்வைதிக விஷயத்தையும் சிந்திக்க அவகாசமில்லாமையினுலோ! இலௌகிகத்தில் கிடைக்கும் பலன் பிரத்தியக்ஷமாதலால், அப்பிரத்தியக்ஷமாகிய வைதிகவிஷயத்தில் தலைமுட்டிக்கொள்வதில் யாதுபிரயோசனம், வைதிகபோதனு ஞானமும் அப்பிரத்தியக்ஷம், வைதிகயுணர்த்தும் பொருளும் அப்பிரத்தியக்ஷம், அப்பொருளின் குணுனுபவங்களும் அப்பிரத்தியக்ஷம், அப்பொருளளிக்கும் பயனும் அப்பிரத்தியக்ஷம், அப்பயனைப்பெற்றோரும் அப்பிரத்தியக்ஷம், அவர்கள் உறையுளும் அப்பிரத்தியக்ஷம், இன்னும் அதைப்பற்றிய சகலமும் அப்பிரத்தியக்ஷமாக விருக்கின்றமையினுலேயோ? பசியாவரங்கொடுக்கவல்லவன் பழயதை யாசித்ததுபோல, வைதிகர்கள் தங்கள் பரம்பொருள் "மனோவாக்குக்காயங்களுக்கு எட்டாதவர்" என்று தங்கள் மனத்திற்குமாத்திரம் எட்டப்பெற்றதாய்ச் சொல்கின்றார்களே இதென்ன பிரத்தியக்ஷ விரோதமாகவிருக்கின்றதே, இது நம்மனத்திற்கும் வாக்குக்கும் காயத்திற்கும் எப்படி எட்டும்? எட்டாத கனியை யெட்டியெட்டிக் கொட்டாவிகொள்வதிற் பயனென்னை? கிட்டாதாயின் வெட்டென மறத்தல் வேண்டுமென்பதினுலேயோ, இலௌகிக விவகாரங்களை விசாரிப்பதுபோல வைதிகமார்க்கத்தை விசாரிப்பதில்லை. விசாரிக்கப்புகின் "கடவுள்" என்பது இன்னது, அது மனிதரால் சிருட்டிக்கப்பட்டது, சர்வஞ்ஞத்துவம் சர்வகருணுநிதித்துவம் சர்வவல்லமை சர்வசக்தி வரம்பிலின்பம் முதலிய அக்கடவுட்டன்மை மனிதரால் அவருக்கு அலங்கரிக்கப்பட்ட ஆபரணங்கள், அக்கடவுள் வழிபாடு வயதிளம்பெண்கள் மரப்பாவைகளைச்செய்வித்து, அதற்கு உடையாதி ஆபரணங்களைப் பூட்டித் தம்பதிகள்போல் மணவறையில் நிறுத்திச் சகல மேளவாத்தியங்கள் முழக்குவித்துக் கலியாணஞ்செய்து களிப்பதுபோல், அறிவிளம்பிள்ளைகளும் தங்கள் முன்னோர் சிருட்டித்த கடவுளர்களைச் சரிதை கிரியை யோக ஞானுதிகளால் பூசித்து வணங்கி ஓர்வித திருப்தியடைகின்றார்களென்பது ஸ்பஷ்டமாய் விளங்கும். இவ்வளவுகூட விசாரணை செய்யாமல் உண்பதிலும் உடுப்பதிலும் உறங்குவதிலுமே தத்தம் காலத்தைப்போக்கி உலகம் அழியும் அழிவை ஒருக்காலும் நோக்காமலும், உண்மையைத் தெளியாமலும், பலர்க்குந் தெளிவிக்காமலும், நெஞ்சையொளித்து வஞ்சக வாழ்வு வாழ்ந்து மாண்டுபோவதா பகுத்தறிவினையுடைய மானுடவாழ்க்கை? இப்படி வாழ்பவர்களா தேசாபிமானிகள்? பொதுநன்மைப்பிரியர்கள்? உலகவாழ்க்கைக்கு உற்ற ஒழுக்கம் இதுவன்றே:

கடவுள் ஒருவர் தக்கினுல் போதும்.

ஐரோப்பாவில் ஏற்பட்டு நாளுக்குநாள் விர்த்தியாகிப் பரவிவருகிற சாஸ்திரங்களினுல் உண்மை தெரிந்துகொண்டு, பற்பல தேசங்களிலே சுயக்கியான சங்கங்களேற்பட்டுக் கடவுளைப் பறக்கடிப்பதினுல், அந்தந்த சமயிகள் தங்களுக்கென்று ஒரு கடவுளாவது நிலைபெற்றால் போதும் போதுமெனக்கருதி, கடவுளொருவருண்டென்று தங்களுக்குரிய நியாயங்களை எடுத்துக்காட்டி வாதித்து வருகின்றனர். இதனுலே பற்பல நாமங்களையுடையராய் வெவ்வேறு கடவுளர் ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்குங் கொள்கையொழிந்து, கடவுள் வேறும் ஜீவன் வேறுமாகிய த்வைதமார்க்கம் நிலைக்கவேண்டியதாயிருக்கிறது. அது நிலைக்கவே, பிரமாவினுடைய முகத்திலும் மார்பிலும் துடையிலும் பாதத்திலும் பிறந்ததாகக் கற்பிக்கப்பட்ட நான்கு ஜாதிபேதங்களும் ஒழியவேண்டுவதே. இவ்வளவுமட்டில் சீர்ப்படுமாயினும், இத்தேசத்தவர்களுக்குள் ஐக்கியபத்தியமுண்டாகித் தேசம் க்ஷேமமடைவதற்கு அடையாளமாகும். இந்த நிலைக்குவருவதும் விசாரணையினுலன்றி வேறொன்றினுலுமல்ல. 'ஆட்சேபனையுண்டானுல் சமாதானமுண்டாகும்' என்கிற வாக்கியத்தின்படி, சுயக்கியானசங்கங்களாகிய எதிர்க்கட்சிகள் ஏற்பட்டிருப்பதினுலல்லவா ஜனங்கள் இவ்வளவு விசாரணைசெய்யவாவது தலைப்பட்டார்கள். விசாரணை தேறத்தேற யாவராயினும் உண்மையான முடிவுக்கு வருவது நிச்சயம். வாசாகயிங்கரியமாகப் பேசுவதுமாத்திரமன்றிக் கூடுமானமட்டில் தத்தம் நூதனக்கொள்கையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவராமல் பழயபடியே நடப்பார்களாகில் பிரயோசனமொன்றுமில்லாமற்போம்.

இதுநிற்க, இந்துக்கள் சாதாரணமாய்ச் சாந்தமூர்த்திகளே. இப்போது ஏற்பட்டுவருகிற அத்வைதசபைகள் பலப்படுமாயின், பின்னுஞ் சொல்லவேண்டுவதேயில்லை. அத்வைதத்தின் கொள்கையென்ன? மௌனஞ் சாதித்தலும் ஜீவன் பிரமத்தோடு கலந்துபோவதுமே அதினுடைய முக்கிய தருமம். மௌனஞ் சாதித்துக்கொண்டு ஒவ்வொருவராய் பிரமத்தில் கலந்துபோக நின்றுவிடுவதினுலே, பிரபஞ்சம் பாழாய்ப்போகாமல் அதின் சுபாவப்படி நடந்தேறிவந்தபோதிலும், தேசக்ஷேமம் சீர்திருத்தம் விருத்தி முதலியவற்றின் வாயில் மண்ணுதான். அத்வைதமார்க்கம் பலப்படுமாகில், மேலேழுலோகம், கீழேழுலோகம், சொர்க்கலோகம், மோட்சலோகம், நரகலோகம், கடவுள் என்பவையெல்லாம் பொய்யென ஒழிந்துபோமல்லவா? இந்தமட்டில் பெருத்த நன்மையே. ஆயினும், அத்வைதமார்க்கத்தவர்கள் சகலமும் பிரமமென்கிருர்கள்; மறுபடியும் சகலமும் பாவனையென்கிருர்கள். இதனுலே பாவனையும் பிரமமும் ஒன்ருகிறது. பாவனையாவது - வெறுந்தோற்றம். ஒருவனுக்கு இன்று மரமாய்த்தோற்றினது நாளைக்குக் காற்றாணுய்த்தோற்றுமா? அத்வைதியும் தான் தரித்துக்கொண்டிருக்கும் வஸ்திரம் இன்றைக்கு நூலாகவும், நாளைக்குத் தோலாகவுந் தோற்றுகிறதென்று சொல்லுவரோ? பைத்தியக்காரன்தவிர வேறொருவரும் அப்படிச்சொல்லமாட்டார். பிரமமென்பதற்குப் பொருள் எல்லாவற்றினும் பெரிதென்பதாம். இதனுலே பிரமமென்பதை அகண்டமானதாகவும், நித்தியமானதாகவும் வைத்துக்கொள்வோம். அப்படியாயின், பிரமத்தைப்போல வேறொரு பதார்த்த மிருக்கக்கூடாதல்லவா? பிரமம் எங்கும் வியாபித்திருக்கிறதென்பதினுலே, அது இருப்பதற்கிடமாகிய ஆகாய வெட்டவெளியும் அகண்டமாயிற்றே. ஆகாயம் அநாதியல்லாமல் பிரமத்திற்குப் பின் தோன்றியதென்ருல், முந்தி அந்தப்பிரமம் இடமில்லாதிருக்கவேண்டுமே; அது எப்படிக்கூடுமென்றதற்குச் சிலர், பிரமமும் ஆகாயவெளியும் ஏகமாய் அநாதியென்கிருர்கள். இப்படிச்சொல்வதைப்பார்க்கிலும், ஆகாயமே பிரமமென்னலாகாதா? ஆகாயத்தினிடமாய்த்தோன்றிய பிரபஞ்சம் ஆகாயத்திலே ஒடுங்குமென்பது ஒரு சித்தாந்தம். அதற்குமேல் ஆகாயமும் ஒடுக்குவதுண்டோ? அதுபோய் ஒடுங்குவதற்கு வேறே என்ன பதார்த்தமிருக்கிறது? நாயனுரை நோக்கி, நீர் எந்த ஊரென்று சங்கத்தார் கேட்டதற்கு, அவர்—

> " எந்தவூரென்றீ ரிருந்தவூர்நீர்கேளீர்
> அந்தவூர்செய்தி யறியீரோ - வந்தவூர்
> முப்பாழும்பாழாய் முடிவிலொருசூனியமாய்
> அப்பாலும்பாழென் றறி. "

என்றபடி, கடைசியில் ஒன்றுமில்லாமற்போவதுதான் முடிவாக்கும்.

மதஸ்தர்கள் உண்டென்று ஒப்புக்கொள்ளுகிற மாயை, பிறப்பு, மோட்சம், நரகம் முதலிய பலவற்றுள்ளும், மாயையும் பிறப்பையுமாத்திரம் ஒப்புக்கொள்ளுகிற அத்வைதிகள் மற்றவைகளை ஏன் ஒப்புக்கொள்ளக்கூடாது? அவர்கள் தங்கள் கொள்கையை அனுஷ்டியாதவனுக்கு ஒரு கதி கற்பிக்கவேண்டிய நிமித்தம் பிறப்பையும், உலகத்தில் மயக்கமான காரியங்கள் நடப்பதற்குக் காரணங் கற்பிக்கவேண்டி மாயையையும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். " வேண்டுதல் வேண்டாமையிலான்" என்று நாயனுர் சொல்லியபடி, விருப்பும் வெறுப்புமில்லாத பிரமத்தினிடமாய் மாயை எப்படித்தோன்றும்? பிரமத்திற்குத் தோஷமுண்டாகக்கூடாதென்கிற கருத்துடன் பிரமத்தினிடமாய் மாயை பிரதிபிம்பித்ததென்று உபாயமாய்ச் சொல்லிவிட்டபோதிலும், பிரமத்திற்கு நினைப்பாவது இச்சையாவது இல்லாமல், மாயை தோன்றலும் பிரபஞ்ச உற்பத்தியும் எவ்வளவேனும் கூடாமை. ஆதலின், விருப்பும் வெறுப்புமில்லாமை எதற்கென்று நாம் யோசிக்கவேண்டும். கர்னல் இங்கர்சாலவர்கள் சொல்லியிருக்கிறபடி நாம் கண்டறிந்துகொள்ளக்கூடியமட்டிலே, எப்போதும் விருப்பு, வெறுப்பு, எண்ணமொன்றுமில்லாமல் உருப்படுகிறதும், உருக்கள் மாறிமாறி வேற்றுருவடைகிறதும் சுபாவத்திற்குண்டு. அது அழுவதுமில்லை, சிரிப்பதுமில்லை; அது உத்தேசமில்லாமலே மனிதனை உற்பத்திசெய்கிறது, துக்கமில்லாமலே அழித்துப்போடுகிறது; அதற்கு உபகாரமென்றும், அபகாரமென்றும், விஷமென்றும், பாலென்றும், உபத்திரவமென்றும், சந்தோஷமென்றும், பிழைப்பென்றும், சாவென்றும் பேதமில்லை. அதற்குச் சிரிப்பும் கண்ணீரும் இரண்டுமொன்றே. அதற்கு அருளுமில்லை, கொடுமையுமில்லை; அதைத்தொழுது துதிப்பதினுலே அது பூரிப்பதுமில்லை, கண்ணீர்விட்டழுவதினுலே அது இரங்குவதுமில்லை, பிரார்த்தனையின் நடைநொடி பாவனைகளையும் அது தெரிந்துகொள்ளுவதில்லை. அதற்குப் பாம்பின் பற்களிலுள்ள விஷத்திற்கும், மனிதனுடைய ஹிருதயத்திலுள்ள கிருபைக்கும் பேதம் கிடையாது. நல்லதென்றும், உண்மையானதென்றும், அழகானதென்றும் மனிதன்மூலமாயறிவதன்றி மற்றைப்படி அது அறிவதில்லை. ஆதலால், நமக்குத்தெரிந்தமட்டில், எல்லாவற்றைப்பார்க்கினும் விசேஷமாய் மனிதனுக்கே யுள்ளது பகுத்தறிவு. அ-மு.

பிராமணவேதமும் சந்தியாவந்தனமும்.

பிராமணவேதங்களும், சந்தியாவந்தனங்களும் அரும்பதங்களோடு உயர்ந்த நடையில் பற்பல இராகங்களுக்கு இணங்கச் செய்யுள் நடையில் எழுதிருப்பதாலும், அவற்றை மற்ற ஜாதியார் வாசிக்கலாகாதென்னப்படுவதாலும், அவை எழுதாமறையாக இருப்பதாலும், அவற்றின் சப்தார்த்தம் இதல்லவென்னப்படுவதாலுமே அவற்றினிடத்தில் மகிமையும் பெருமையும் உண்டாயிருப்பதேயன்றி, அவற்றின்பொருள் தெம்மாங்கு தங்கப்பாட்டுகளினும் இழிந்ததாகவே இருக்கின்றது. அவர்கள் சந்தியாவந்தனத்தை எளிய நடையில் மொழிபெயர்த்து வாசித்துப்பார்க்கின், அப்போது நீங்களே அது பிரயோஜனமற்றதென்று அறிந்துகொள்வீர்கள். பிராமணசந்தியாவந்தன சுலோகத்தில் ஒன்றை இதனடியில் மொழிபெயர்க்கிறேன் பாருங்கள்.

மத்தியான ஜலபிராசனமந்திரம்.

" ఆపః పునస్తు పృథివీం, పృథివీపూతా పునాతుమాం పునస్తుబ్రహ్మణస్పతిర్ బ్రహ్మపూతా; పునాతుమాం యదుచ్ఛిష్టమభోజ్యం యద్వాదుశ్చరితంమమ, సర్వంపునస్తుమామాపో సతాంచ ప్రతిగ్రహగ్ స్వాహా.

ஆப8புநந்துப்ருதிவீம், ப்ருதிவீபூதா புநாதுமாம் புநந்து ப்ரஹ்மணஸ்பதிர் ப்ரஹ்மபூதா; புநாதுமாம் யதுச்சிஷ்டமபோஜ்யம் யத்வாதுஸ்சரிதம்மம, சர்வம்புநந்துமாமாபோஸதாம்ச ப்ரதிக்ரஹக் ஸ்வாஹா.

இ-ள். மழை ஜலத்தினுல் சுத்தியான பூமியே என்னை சுத்திசெய். சமஸ்த வேதங்களில் புகழ்ந்து பேசப்பட்ட கடவுளால் சுத்திசெய்யலான ஜலங்கள் என்னை சுத்திசெய்யவேண்டும். ஒருவர் உண்டு மிகுந்த போஜனத்தையும், உரோமம் புழுமுதலியன விழுந்து அசுசியடைந்த போஜனத்தையும், உண்பதினுல் உண்டாகும் குற்றத்தையும், முக்கரணங்களால் செய்யப்பட்ட பாவத்தையும், துஷ்டசகவாசத்தினுல் உண்டான குற்றத்தையும் நிவர்த்தித்து ஜலம் என்னை சுத்திசெய்யக்கடவது என்று ஜபித்து சுவாஹா என்று ஜலபானஞ்செய்து என்பாவமுழுவதையும் நாசமாக்கிவிட்டேன் என்று ஜலத்தை கையிலெடுத்து கீழேவிடவேண்டும். "

இந்த சந்தியாவந்தன சுலோகத்தை நீங்கள் எந்த பிராமணரிடத்தில் சொல்லிக்கேட்கினும் ஒவ்வொருவகை பிராமணரும் இது எங்கள் சந்தியாவந்தன சுலோகமல்லவென்பார்கள். ஏனெனின், அவர்கள் சந்தியாவந்தனத்தை நாம் தெரிந்துகொள்ளலாகாதென்னுங் காரணத்தாலேயே அவ்வாறு சொல்லுவார்கள். ஆனுல் இது அவர்கள் சந்தியாவந்தனந்தான். அவர்கள் சந்தியாவந்தன சுலோகங்களில் சிலதுமட்டும் அந்தந்த பிரிவினருக்குத்தக்கினபடி ஏற்படுத்திருப்பதேயன்றி முழுதும் வேறல்ல.

M. Masilamon[illegible]

தேவமனிதன் அல்லது மனிததேவன்.

மனிதன் இன்னவன் இத்தகையவன் என நம்மை நாமே நிதானித்துப்பார்த்தால் விளங்கும். தேவன் இன்னது என நம்மில் ஒருவருக்கும் அநுபவபூர்மவாய்த் தெரியாது. தெரியும் தெரியும் என நம்மிற்சிலர் வாய்ப்பறையறைந்து வருகின்றவர்களாக விருப்பினும், அத்தேவனை பிறர்க்கு அறிவிக்கக்கூடாதவர்களாகவே யிருக்கிறார்கள். மேலும் தேவனைக்கண்டவர்கள்போல் சாஸ்திரங்களை யெழுதிவைத்திருக்கிறார்களெனில், அச்சாஸ்திரங்களி லெழுதப்பட்டுள்ளவைகள் ஒன்றையொன்று உதைக்கின்றன. ஆகவே தேவனைப்பற்றிய விஷயம் நமக்கு ஒன்றுமே தெரியாது. இவ்வாறு நமக்குத் தேவனைப்பற்றி யொன்றும் தெரியாதிருக்க, ஒரு மனிதனைப்பற்றித் தேவனென்றும், தேவமனிதனென்றும் எவ்வாறு துணிதல் கூடும். கூடாததாயினும், நம்முன்னோர்கள் காலாகாலங்களில் சாலவலிவும், வாய்மையும் பெற்றிருந்த அரசர், வீரர், அதிகாரிகள், உபகாரிகள் முதலியவர்களைப் பிற்காலத்தில் பெருமை பாராட்டும்பொருட்டுத் தேவர்களாக்கிவிட்டார்கள். இவ்வாறு ஆக்கப்பட்ட தேவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு சமயங்களுக்கதிகாரிகளாக விருக்கின்றனர். ஒவ்வொரு சமயத்தவர்களும் மற்றைய சமயத்தவர்களின் தேவர்களைப் பொய்த்தேவர்களென்றும், தத்தம் சமயக்கடவுளே மெய்த்தேவனென்றும் பித்துளையாடுகின்றனர். இவ்வாறு பித்துளையாடும் சமயகோடிகளுள் கிறீஸ்து சமயத்தவர்கள் மெரியாளுக்குப்பிறந்து சிலுவையின்கண் இறந்த ஏசுகிறீஸ்துவைத் தேவனுக்கினதுமல்லாமல், தெய்வீகமும் மானுஷீகமும் ஒன்றுபடக்கலந்துதித்த தேவமனிதனென்றும், அல்லது மனிததேவனென்றும் சொல்லுகிறார்கள். மானுஷீகத்தைச்சார்ந்த மெரியாளுக்கும், தெய்வீகத்தைச்சார்ந்த தேவதூதனுக்கும் உண்டாகிய சம்பந்தத்தால் உண்டாகியவரானவராதலால், ஏசுகிறீஸ்துவைத் தேவமனிதனென்கிறோமென்பாராயின், ஆதி சங்கராச்சாரியாரவர்களும் ஓர் விதவையின் கர்ப்பத்தில் தெய்வீக சங்கல்பத்தால் உற்பத்தியானதாகக் கூறியிருக்கின்றதே. சாலிவாகனனது உற்பத்தியு மிவ்வாறாகவே தெய்வீகம்பொருந்தியதாகவிருக்க, இதற்கு கிறீஸ்தவர்கள் கூறுவதென்னையோ? இதுநிற்க, கிறீஸ்துவுக்குக் கடவுள் இலக்கணங்களென்று சொல்லப்பட்ட தெய்வீக நற்குணங்கள் உண்டாவென விசாரிக்கப்புகுவாம். கிறீஸ்துவானவர் ஓர்நாள் மிகவும் பசியால் வருத்தமுற்று காலமில்லாகாலத்தில் கனியைத் தாராதுநின்ற ஓர் அத்திமரத்தின்மீது குற்றம்பாராட்டி யதனைப் பட்டுப்போகும்படிச் சபித்தாராம். ஆ! ஆ! இதென்ன கொள்ளை! ஏசுவானவர் பசியால் வருத்தமுற்றமை மானுஷீகத்தன்மையாயினும் காலமல்லாகாலத்தில் கனியைக் காணாததினால் அவ்வத்திமரத்தினைப் புத்தியில்லாமல் சபித்தமை தெய்வீகமாகுமா? இன்னொருவிஷயம். ஏசுவானவர் தமது பன்னிரு சீடர்களில் ஒருவனாகிய ஜூடாஸ்காரியட்டென்பவனால் காட்டிக்கொடுக்கப்படுவோமென் றறியாமல் அவனையும கணக்கில் ஒருவனாகவெண்ணித் தமது பன்னிரு சீடர்களுக்கும் வானத்தில் பன்னிரு சிம்மாசனங்களைத் தயார்செய்து வைத்திருக்கிறதாகச் சொல்லியிருக்கின்றாரே. இதுவும் தெய்வீகந்தானோ? இஃது தன் தலையிலேயே கையை வைப்பானென்றறியாது, பாணாசூரனுக்கு வரமளித்த பித்தனது கதையை யொற்றிருக்கின்றது. D.

போஜனம்.

தேகத்தின் எல்லாப்பாகங்களைப்போலவே தோலுக்கும் இரத்த ஓட்டத்தினாலே ஆதாரம் உண்டாகின்றது. இரத்தத்திற்கு உயிர்நிலை வயிற்றில் இருந்துவருகிறது. அகாலபோசனத்தினாலும், சாப்பிடுகின்ற விதங்களினாலும், தகுதியற்ற சாமான்களைச் சாப்பிடுவதினாலும், சரியான போஜனத்தையே அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடுவதினாலும், போஜனமானது சீரணிக்கப்படாமல் இருந்தால், இரத்தத்திற்குத் தீமை விளைக்கக்கூடிய சத்துக்கள்வந்து சேருகின்றன. இவைகள் தோலுக்கு வருகிறதினாலே உரோமம் அடித்துவாரங்கள் உண்டாகிறதற்கும், (Glands.) விசைநரம்புகளுக்குடைய செய்கைகள் நிறைவேறுகிறதற்கும் கெடுதி சம்பவிக்கிறது. நரம்புகளுக்கும் இரத்த நரம்புகளுக்கும் அழற்சியுண்டாகும்படி செய்கிற வயிற்றினுடைய செய்கையினாலே தோலின்பேரில் கொப்பளங்கள் உண்டாவது சகலருக்கும் தெரியும். சில சாப்பாட்டைச் சாப்பிட்டவுடனே முகமானது சிவந்துவிடுகிறது. நாற்றக்கருவாட்டைத் தின்றால் எரிவுகொடுக்கின்ற கரப்பான்முதலானவை உண்டாகின்றன. வயிற்றைப்போலவே ஈரல் குடல் முதலான அவயவங்களிலும் கெடுதிசம்பவிக்க இரத்தத்தில் தகாத சாமான்கள்சேர்ந்து தோலின்மேல் கெடுதி விளைவிக்கும். ஆதலினால் தகாதபோசனத்தினாலே நேரான கெடுதிமட்டுமல்ல வேறுரூபமான கெடுதிகளும் உண்டாகின்றன. அன்றியும் வயிற்றிலிருக்கின்ற நரம்புகளினாலே அதற்கு உண்டாகின்றன. கெடுதிகள் தோலுக்கும் உடனே உண்டாகும்படி செய்யப்படுகின்றன. அஜீரணத்தை உண்டுபண்ணக்கூடிய சகல வஸ்துக்களும் தோல் வியாதியை உண்டுபண்ணத்தக்கவைகளாயிருக்கின்றன. வம்ச தொடர்ச்சியாகத் தோல் வியாதிகளால் வருந்துகிறவர்களுக்குப் போசனப்பிசகாவது, அல்லது ஜாஸ்திப்போசனமாவது அவ்வித வியாதியால் வருத்தப்படாதவர்களுக்குண்டாக்காத அதிக தீங்கை விளைக்கும். அவ்வியாதியஸ்தர்கள் வெல்லம், அதிகமாமிசம், லாகிரி வஸ்துக்கள் மிட்டாய் முதலாகிய பலகாரங்களைச் சாப்பிடக் கூடாது.

தோலுக்கு வேண்டிய உணவு கிடைக்கும்படி நாம் சாப்பிடுகின்ற சாப்பாடானது சரியான குணமுள்ளதும் சரியான அளவுள்ளதுமாயிருக்கவேண்டும். இப்படிக்கில்லாவிட்டால் தேக அசவுக்கியமுண்டாகிறது. இதினாலே தோலானது மெல்லிதாயும், சுருங்கியும், கடினமாயும், முறடாயும் ஆகிவிடுகிறது. அதுவுமன்றிச் சிலகாரணங்களினால் மிகுந்த வியாதியுண்டாகிறது. இருக்கின்ற வியாதிகள் விருத்தியாகின்றன. புதிய காய்கறிகளைச் சாப்பிடாததினாலே சொறி கரப்பான் உண்டாகின்றது. காய்கறிகளுக்கு விசேஷமாய் இரத்தத்தை சுத்திசெய்கின்ற குணமிருக்கின்றதென்பதல்ல. ஆனால் நம்முடைய சாப்பாட்டில் கலப்பு சரியானபடி யிருக்கவேண்டியது. சாப்பாட்டில் அரிசி மாமிசமட்டுமல்லாமல் எல்லாம் கலந்திருக்கவேண்டும்.

அகாலபோசனத்தினாலே குழந்தைகளுக்குண்டாகும் கெடுதிகள் அதிகம். சிசுக்களுக்குத் தாயார் கொடுக்கின்ற இயற்கையான உணவைப்பார்க்கிலும் வேறுவித உணவுகள் பிரயோசனத்தைக்கொடுக்காமல் அவைகளைப் பலஈனமுள்ளவைகளாக்குகின்றன. அநேகம் பெற்றோர்கள் சிசுக்களுக்கு அதிக தித்திப்பான ஆகாரத்தைக்கொடுக்கிறார்கள். இது வெகுகெடுதி. அதிகவெல்லம் ஒருவிதப் புளிப்பைக்கொடுக்கிறது. இது தோலுக்கு ஒருவிதமான தொந்தரவு கொடுக்கத்தக்க ஸ்திதியில் இரத்தத்தைச்செய்கிறது. அநேகம் பெற்றோர்களும், வைத்தியர்களுங்கூட சிறுகுழந்தைகளுக்கு ஒயின் (Wine) பலத்தைக் கொடுக்கிறதாக நினைக்கிறார்கள். இதைவிடப் பெரிய தப்பித மிருக்கமுடியாது. ஏனென்ன போதிலும், முன் என்னை ஆபத்காலத்தில் பார்த்து அது எப்படி "எனக்கென்ன" என்று சொல்லிவிட்டு ஓடிற்றோ அம்மாதிரியாகவே நானும் இப்பொழுது அதேவார்த்தை சொல்லுவேன் என்று சொன்னதாகவும்; உடனே பூனையும் ஓடிவந்து அதே ஓநாயைப்பார்த்து உங்கள் இஷ்டப்படி சொல்லுங்கள், 'அதினால் எனக்கென்' னென்று சொன்னதாகவும், இத்தியாதி சொற்பனங்கண்டது. திடீரென்று நாய் தூக்கத்தை ஒழித்து எழுந்து பார்த்தபோது ஓநாய் அருகாமையில் இல்லாதிருப்பதைக்கண்டு சந்தோஷப்பட்டது. என்றபோதிலும் அது ஒருவேளை இது நடந்துமிருக்கலாம்; ஆதியில் ஊரைவிட்டுப் புறப்பட்டபோது என்ன எண்ணத்தோடு புறப்பட்டேனோ அப்படிக்கில்லாமல், இனிமேல் யாவரையும் ஆபத்காலத்தில் என்னாற்கூடியமட்டும் ரட்சிப்பேன்" என்று தீர்மானித்தது.—சுகுணபோதினி.

நட்சத்திரங்களின்தூரம்.

பிரகாசமான சந்திரவெளிச்சமுள்ள இரவில் நட்சத்திரங்களினால் இலங்குகிற வானத்தை நாம் கண்ணுறும்போது, அதிபிரபையுள்ள சோதி கோளங்கள் பிரபைகுன்றின கோளங்களைவிட நமக்கு அதிக சமீபமென்று அனுமானிப்பது சகஜமே. சமீபகாலம்வரையும் நட்சத்திரங்களில் தூரம் சந்தேகவிஷயமாகவே இருந்தது. பூமியினது அயனத்தின் எதிர்நிலைகளிலிருந்து, அதாவது கஅ-கோடியே கூ0-லட்சம் மைல் தூரத்திலிருந்து நோக்கினபோதுதானும், ஒரு நட்சத்திரத்தின் திசையில் யாதொரு விகற்பமும் தோன்றவில்லை, நட்சத்திரங்களின் திசை பேதமாகிய இலம்பனத்தின் யாதொரு சாயையும் தென்படவில்லை. கடந்த நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் நம்பத்தக்க பலன் ஒன்றும் வானசாஸ்திர கலை[illegible]ருக்கு எட்டாவிடினும் அவர்கள் இந்தத் தாஷ்டாந்தரத்தை ஆராய்ச்சி செய்கிறதில் ஓயவில்லை. கடைசியில் இவ்விஷயத்தைப் பிளப்பதற்கான ஆப்புப்போன்ற ஒருசங்கதி பிடிகிட்டினது. சில நட்சத்திரங்கள் நேர்கோடாக வேககதியில் முன் நோக்கிச் செல்

னுகிறது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வெள்ளிகளே பூமிக்கு அதிக சமீபமானவைகள் என்கிற அனுமிதமும் பிறந்தது, "அன்னப்பட்சி" (Swan) என்கிற தாராகணத்தில் ஆரும் பரிமாணத்தை உடைய வெள்ளியாகிய "அறுபத்தொன்றும் சிக்னி" (Cygni) என்னப்பட்டது வருஷத்தில் ௬ - மாசம் தகுந்த ஓட்டமுள்ளதாகக் கண்டறிந்தார்கள். பெசல் (Bessel) என்னும் சாஸ்திரியார் அதையே ஆராய்ச்சிவிஷயமாகத் தெரிந்துகொண்டு, ௧௮௩௮-ம் ௵ அதின் இலம்பனத்தை (Parallax) அளவிட்டு, விருத்தபாகத்தில் அது கிட்டத்தட்ட அரை விகலை (Second) என்று புத்திசித்தியா கண்டுபிடித்தார். இதைக் கணக்கேற்றும்போது, அறுபத்தொன்றும் சிக்னி நட்சத்திரம் பூமிக்கும் சூரியனுக்குமுள்ள தூரத்திற்கு ௪-லட்சம் மடங்கு அதிகம் என்று தெரியவருகிறது.

அவ்வளவு பிரமாண்டமான தூரத்தைக்குறித்த யோசனையைக் கணிதலக்கங்களில் சொல்லிக்கொள்ளக் கூடாமையால், அதை வருஷத்தினுல் அளவிடவேண்டியிருக்கிறது. இவ்வாறு நமக்கு அதிக சமீபமான அறுபத்தொன்றும் சிக்னி வெள்ளியிலிருந்து வெளிச்சம் நம்மைச் சேர்வதற்கு சுமார் ௭-வருடஞ்செல்லுகிறது. ஆகையால் மேற்படி நட்சத்திரம் நமக்கு ௭-வருஷதூரத்தில் இருக்கிறதென்று சொல்லுகிறோம். தட்சண தாராகணம் ஒன்றிலுள்ள "அல்பாசெவுந்தரி (Alpha centauri) என்னும் பிரகாசமுள்ள வெள்ளியேறக்குறைய இதேதூரத்தில் இருக்கிறது. இவ்வாறு தூரங்கள் அளக்கப்பட்ட ௧௨-நட்சத்திரங்கள் உண்டு. அவற்றின் தூரம் எத்தனை அதிகப்படுகிறதோ அத்தனைக்கு அளவும் தல்லிப்படுகிறதில்லை. பிரகாசமுள்ள "வீகா" (Vega) அல்லது "அல்பாலூரி" (Alpha Lyrœ) என்னும் தாரகை ௧௭-வருஷதூரம் சோபிதமான "கபல்லா" (Capella) ௧0-வருஷம், இலங்குகிற "சிரியுஸ்" (Sirius) ௧௪-முதல் ௨௩-வருஷம் வரைக்கும் பற்பல கணக்காய் மதிக்கப்பட்டிருக்கிறது. "அர்க்தூரஸ்" (Arcturs) வெள்ளியோ ௪0-வருஷம்.

இவ்வாறு ஏகதேசம் தூரம் அளக்கப்பட்ட நட்சத்திரங்கள் நீங்கலாக, காட்சிக்குரிய மற்றெல்லா வெள்ளிகளும் எட்டாத்தொலையில் இருக்கின்றன. பெரிய தூரதிருஷ்டிக் கண்ணாடியினுல் வெளிப்படும் தாரகைகளோ அகாதமான அந்தரவெளியினுல் நம்மைவிட்டு அகன்றிருக்கின்றன. அவைகளுடைய வெளிச்சம் ஆகாசத்தை ஊடறுத்துவர ஆயிரக்கணக்கான வருஷங்கள் செல்லும். ஆகவே விண்ணினின்று இவைகள் எடுபட்டுப்போனுலும், பல்லாயிரம் வருஷம் பிரகாசித்துக்கொண்டேயிருக்கும். ஆகாயவிரிவில் அதிபிரபையுள்ளதான சிரியுஸ்நட்சத்திரம் இன்றைக்கு அழிக்கப்பட்டுப்போனுலும், இன்னும் ௨0-வருஷந்துக்குப் பிரபை குன்றுமல் இலங்கிக்கொண்டிருக்கும்.—சுகுணபோதினி.

தேசாபிமானிக்கோர்மொழி.

௧௮௮௬ ௵ பிப்ரவரி௴ ௨௭௳ க்குச்சரியான பார்த்திப ௵ மாசி௴ ௧௭௳ சனிவாரம் திருப்பாதிருப்புலியூரின்கண் ணவதரித்த தேசாபிமானி என்னும் பத்திரிகையே சென்ற மார்ச்சி௴ ௧௩௳ சனிவாரம் நீ ஆசாரங்களைக்குறித்துப் பேசியது புத்தியை விளக்கத்தக்கதாயும், நாகரிகத்தை மென்மேலும் விர்த்தியாக்கத்தக்கதாயும் பேசியதாய்த் தோன்றவில்லை. அஃது:—

இந்துக்களது ஆசாரம் சீர்திருத்தமுடையது; ஆங்கிலேயர் ஆசாரம் அங்ஙனம் யோராது; இங்கிலாந்து தேசம் மிக குளிர்தேசமாதலால், ஆங்கிலேயர் சப்பாத்து, சட்டை, தொப்பி முதலியவற்றையுடுத்திக்கொள்ளுகிறுர்கள். இந்து தேசமானது குளிரும் உஷ்ணமும் சமமாயிருப்பதால், அவற்றை இந்தியராகிய நாம் உடுத்திக்கொள்வது மடமை. ஆதியில் அவர்கள் நாகரிகமின்மையால் மாம்சபக்ஷணம் செய்ய வாரம்பித்ததை யின்னு மன்னுகரிக்குறைவால் அதனை அனுசரித்துவருகிறுர்கள் என பலவாறுக ஆங்கிலேயரின் உடை உணவு முதலியவற்றை அணிந்துக்கொள்வது நாகரிகத்தின் குணமல்ல, அங்ஙனம் உடுத்திக்கொள்வதால் அவர்களை நாகரிகத்திற்சிறந்தவரென மதிக்கப்படாது. இந்துக்களாகிய நாமே நாகரிகத்திற்சிறந்தோர் என நினது நாகரிகக்குறைவினுலன்று உறைக்கத்துணிந்தனை? நன்று! நன்று!! இந்துக்களாகிய நாம் நாகரிகத்திற்சிறந்தோர் என்பது எங்ஙனம்? சோமன் புடவை முதலியவற்றை உடுத்திக்கொள்வதினுலா? காட்டிலிருக்கும் ஒருவேடன் அக்காட்டின் மிருகங்களிலொன்றுய்த்திரிந்து குளிர்முதலியவற்றை யசட்டைசெய்தவனுதலால் கோவணமு மில்லாதிருப்பதைப்பற்றி யவனும் சீர்திருத்தமுடையவன்தானே! அங்ஙனம் செப்புவதின் பிரமெனின், மேற்கூறியுள்ள நின் நியாயமே நின்னை வினவ நேரிடுகின்றது. புலாலுண்ணும் விஷயத்தைப்பற்றி கல்வியிலும் கீர்த்தியிலும் வல்லமையிலும் பேர்பெற்றோங்கிய தத்துவவிவேசினி என்னும் நின் சோதரியினிடத்து (மெய்யறிவு முதல்பாகம்) என்னும் புத்தகத்தை மிக்க வணக்கத்துடன் கேட்டு அதனை வாசித்துணர்வாயாக. நீ ஆசாரங்களைக்குறித்து பேசிவந்தகாலத்து கொலைசெய்ததினுல் சண்டாளரென பெயரிட்டு அவர்களை கீழ்மக்களெனவும், அங்ஙனம் செய்யாதவர்களை மேன்மக்களெனவும், இவர்களில் பிராமணரோ உயர்மக்களெனவும் ஆரியர் கூறியுள்ளாரென பகரத்துணிந்தது என்ன நியாயம்? தேசாபிமானி என்னும் பெண்ணே! இனி யித்தகைய பேதை நியாயம் பேசாமலிருக்க நினக்கு ஆசிர்வாதம்.

இங்ஙனம்.
புதுவை சுயக்கியான நண்பரில்
V. K. உண்மைவிளம்பி.

வர்த்தமானம்.

பாம்பில் மரணம்—மேட்டுப்பாளையத்திற்கு அடுத்த வச்சிரம் பாளையத்தில் கொள்ளுப்பொட்டு போரில் எடுத்து மாட்டுக்குத் தீனிபோடப்போனவனை பாம்புக்கடித்து மரணமடைந்தான்.

சிசுவதை—மேட்டுப்பாளையத்தில் ஓர் விதவை ஒரு பெண்குழந்தையைப்பெற்று வாயில் கல்லைவைத்து அடைத்துக் கொன்றுவிட்டாள். அவளைப் போலீஸ்காரர்கள் தேடிக்கொண்டிருக்கிறுர்கள். இன்னம் அகப்படவில்லை.

பாம்பில் மரணம்—மேட்டுப்பாளையம் ரயில்வே ஸ்டேஷனுக்குப்போகும் தடத்தில் கட்டியிருக்கப்பட்ட வீட்டில் குடியிருந்த ஒரு பெண்பிள்ளை ஜலபாதிக்குப்போகும்பொழுது பாம்புகடித்து மரணமானுள்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும் உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிராயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் பெரம்பூர் பாரெக்ஸ்ரோட்டில் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 16.] MADRAS:—SUNDAY APRIL, 18, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

அபிமானம்.

நம்முடைய நாட்டில் அபிமானமென்னும் அளவை அறிந்தவர்களில்லை. அறிந்தவர்களானால் அனியாயங்களினாலும், அரசாங்கத்தாராலும் அடிக்கடி அவதிப்படமாட்டார்கள். அப்படி அவதிப்படாதிருக்க வேண்டுமானால் ஒவ்வொருவரும் தன்மானம்போல் பிறர் மானத்தையுங் காக்கவேண்டும். அப்படி காப்பவர்கள் சிலர். பலரும் அப்படிப்பட்ட வழியில் இழியவேண்டும். சிலர் ஒருகாரியத்தைச்செய்தால் பலர்கூடி பரிகாசிக்கக்கூடாது. அப்படிச் சிலரால் தொடங்குங் காரியத்தை நிறைவேற்றும்பொருட்டு பலரும் ஒருங்குகூடி முயற்சிசெய்யவேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்." நம்மூர்களிலிருக்கும் பணக்காரர்களில் அனேகர் கைத்தொழிலாளருக்கு உதவிசெய்யாமல், ஊரில் சேகரிக்கும் பணத்தை உதவியில்லாத் துணிமணிகளுக்கும், பிரயோசனமற்றதும், அளவற்றதுமான வஸ்துக்களுக்கும் வட்ட நாணயத்துடன் கப்பலிலேற்றி அன்னியதேசத்திற்கு அனுப்புகிறார்கள். அத்திரவியத்தை நம்மூர் கைக்கோளர்களுக்கும், தச்சருக்கும், கருமாருக்கும் உதவிசெய்து உகப்பித்தால் எவ்வளவு பெருந்தன்மையான வேலைகள் நடக்கும். ஆனால் சிலர் இங்கிலீஷ் வஸ்துக்களைப்போல் நம்மவர்கள் ஒருக்காலும் ஓர்வஸ்துவைக்கூட செய்யார்கள் என்று போலிநியாயங் கூறுகிறார்கள். இப்படிக்கூறுபவர்கள் பூர்வஸ்திதியைப் பாராட்டாதவர்கள். சிலர் அவயவக்குறிகளை அழகாய்க்காட்டும் ஆங்கிலேய துணிகள்போல் சுலபத்தொகைக்கு நம்முடைய தேசத்து கைக்கோளர்கள் நெய்துக்கொடுக்கமாட்டார்களே யென்கிறார்கள். அந்தோ! இப்படிக் கூறுமவர்கள் திரவிய ஹீனர்கள். நம்முடைய விராஜதானியின் செங்கற்பட்டு ஜில்லா ஆரணியென்னுங் கிராமத்தில் வசிக்கும் சேணியர் நெய்யுந்துணிகளை அதிக பணங்கொடுத்து லோகாபிமானிகளாகிய சென்னையில் வாழுஞ் செல்வவந்தர்கள் வாங்கியுடுக்கு மவைகளைக்கண்டால் சீமைத்துணிகள் சிதறுற்றுப்போமே! அதுபோல மற்றைய தேசங்களிலும் நம்மூரைச்சார்ந்த கிராமங்களிலுமுள்ள நெய்தற்றொழிலை ஆதரிக்காததினால் அல்லவா? நெல்லூர், புல்லம் முதலிய தேசங்களில் நெய்யும் உயர்விலைபெற்ற ஒப்பிலாத்துணிகள் உதவியில்லாது ஒடியொளித்தன! சேலந்துணிகள் சீரழிந்தன! மதுரைத்துணிகள் மதிப்பற்றன! இப்படிப்போலவே தச்சர், கருமார், கம்மாளர் முதலினர் உயர் கைத்தொழில்கள் மறைந்துபோயின! இதுநிற்க, மானுஷீகத்தன்மையுடைய ஒவ்வொருவரும் கருதியவிடத்தில் இரண்டுகால்கள்நோக நடந்து, அவ்விடத்தில் செய்யவேண்டிய செய்கைகளைச் செய்து, பேசவேண்டிய பேச்சுகளைப்பேசி, வணங்கவேண்டிய தலையை வணக்கி, பெறவேண்டிய திரவியத்தைப் பெற்று, பெற்ற வஸ்துவைப் பெண்டுகளிடமீந்து உவர்ப்பு, கைப்பு, தித்திப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய அறுசுவையோடு உணவுகள் அமைத்து சாண்வயிற்றுக்கு திருப்தியுண்டாக்க எவ்வளவு பாடுபடுகிறோம்.— இப்படி வருத்தப்படுதல் நம்முடைய பசியின்கொடுமையினாலல்லவா? இது எவ்வளவு அபிமானம். இவ்வண்ணமாக தேசாபிமானிகளாகிய கனவான்கள், துயருற்ற ஏழைகட்கும், படவேண்டிய பாட்டைப்பட்டுத் தீரவேண்டியது வெகு மேன்மையுடையதே. "நாடெங்கும்வாழக் கேடொன்றுமில்லை" என்னும் வாக்கியத்தை ஆபரணமாகப் பூணவேண்டும். "கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்" என்று கடையராய் ஒதுங்கக்கூடாது. அப்படி செய்தால் சாண்வயிற்றுக்குச்செய்யுந் துரோகத்துக்கொப்பாகும். சூரியனில்லாத பகலும், சந்திரனில்லாத இரவும் சுகமடையாததுபோல், தேசாபிமானிகளில்லாத தேசம் க்ஷேமமடையாது. ஒவ்வொருவரும் தேசாபிமானிகளாயிருந்து தக்கபடி உதவிசெய்வதே மிக்க உத்தமம். அப்படி செய்யாமல் வேற்றுநாட்டார் முயற்சியின் பயனை எதிர்பார்ப்பது மிக்க மத்திமம். தேசாபிமானமில்லாமல் யார் எப்படிகெட்டாலும் நாம் வாழ்ந்தால் போதுமென்று இருப்பது அதிக அதமம். உத்தமத்தைச்செய்வதே மானுஷீகம். மத்திமம் மானுஷீகத்தையடக்கி பலரால் பரிகாசிக்கச்செய்யும். அதமம் மிருகச்செய்கையாக்கும். உலகத்தில் தோன்றியுள்ள சராசரங்களுள் மானுஷீகப்பிறப்பே மேன்மையுடையது. அதிலும் நோய்நீங்கிய சுகத்தையும், மேன்மையையும் அடைதல் மிக்க சிறப்புடையது. அந்நோய் நேராமல் அபிமானமாகிய அவுஷதத்தை அருந்தவேண்டும்.—வேலூர் ஜநாநுகூலன்.

அதிகப்பிரசங்கம்.

நிகழும் ஏப்ரல்மீ ௧௦உ வெளியாகிய "நிதம்பெயர்பூண்ட" சுதேசாபிமானியில் மதமும் அபிமானமும் மீக்கொண்டதால், மதாபிமானியெனப் பெயர் வகித்துச் சமயப்பிரசங்கமென மகுடஞ்சூட்டி அதிகப்பிரசங்கம் செய்திருக்கும் விந்தையை இதனடியில் தீட்டிக்காட்டுவாம்.

இப்பொழுது ஆங்கிலேயபாஷையைப் படித்துக்கொண்டு சில இந்துக்கள் சுவாமி இல்லையென்றும், கடவுளென்பது மெத்த நான்சென்சென்றும் மூடக்கிழப்பிராமணர்கள் சாஸ்திரிகள் வேடம்போட்டு நம்மிடத்தில் பணம் பிடுங்க இவ்விதமாகச் செய்கிறார்களென்றும், பூணூலைக் கழற்றிவிட்டு முகத்தில் மதக்குறியின்றி குடுமியைக் கத்திரித்து பம்பாய் குல்லா பூட்ஸ் முதலானதை யுடுத்திக்கொண்டு பச்சை மூக்குக்கண்ணாடிகளைப் போட்டுக்கொண்டும் கிறீஸ்தவர்களைப் போல வைதீகர்களை இகழ்கின்றனர்களென்றும், பிரசங்க காலங்களில் அதை ஏளிதம் செய்கின்றார்களென்றும், பல் துலக்காமல் காப்பி சாப்பிடுகிறார்களென்றும், சாராயங் குடிக்கிறார்களென்றும் அவதூறு செய்கின்ற இந்த மதாபிமானி ஆங்கிலேய பாஷையே நாஸ்திக விர்த்திக்குக் காரணமென்றும், நாஸ்திகவிர்த்தி ஆஸ்திகவிர்த்தியினுங் கொடிது என்றும், ஆஸ்திகமே நியாயத்திற்கு நிற்கத்தக்கது நாஸ்திகமல்லவென்றும் நியாயம் ஒன்றும் பகராமல் நடுத்தெருவில் சோம்பேறிப்பயல்கள் அதிகந் திட்டினவன் பலவான், கெலித்தவன் என்று எண்ணி எதிரியினுடைய தீமையைக் காட்டாமலே மிலேச்சரும் கேட்டுச் சகிக்கலாற்றாத ஒடியமான துர்வார்த்தைகளால் வைவதுபோல நமது அபிமானியெனப் பெயர்பூண்ட இப்பேமானி கூறுகின்றார். யோக்கியர்

சோம்பேறிப்பயல்களுக்கும் துஷ்டர்களுக்கும் அஞ்சுவது, தங்களுக்கு அவர்களைப்போல் துர்வார்த்தை வழங்கத்தெரியாதென்பதினாலேயும், தாங்கள் அவர்களைக்காட்டினும் பலவீனர்கள் என்பதினாலேயும் அல்ல. அவர்களைக்காட்டினும் தமக்கு யோக்கியதையும், நாணமும், பெருமிதமும் அதிகமிருக்கிறதென்பதினாலேயே. இந்த யோக்கியர்கள் துஷ்டரைக்கண்டு தூரநிற்பது இவர்கள்மட்டில் சாத்வீக செய்கையேயாயினும், எதிரியை நல்வழிக்குக் கொண்டுவரத்தக்க நன்மார்க்கமன்றும். ஏனெனில், உலகத்தில் தேசாபிமானிகள் யாரெனின், தம் உறவினருக்கும் தம்மைச் சேர்ந்தவர்களுக்குமட்டுமே நன்மையைச் செய்பவர்களல்லர், தம் பகைவருக்கும் தம்மை யிகழ்வோருக்கும் நன்மையைச் செய்பவர்களே. எப்படியெனின்,—

> மாதர்க்கிதங்கவிவாணர்க்குச்சாலவணக்கங்குரு
> நாதர்க்குநீதியோடாசாரங்கல்விநயந்தவர்க்குக்
> கோதற்றவாசகம்பொய்குப்பொய்கோளுக்குக்கோளறிவி
> லாதற்கிரட்டிப்பறிவுடையோர்செயும்ஆண்மைகளே.

என்பதினாலே துன்மார்க்கம்செய்யும் துன்மார்க்கருக்கு அஞ்சாமல் அவர்களுக்கு இரட்டிப்பேசெய்து அறிவு உதிப்பித்தலும் தக்கோர் செய்கையேயாம். ஆதலால் இந்த பேமானிக்கு அறிவுதிக்குமாறு சில சொற்கொள்ளிகொண்டு சூடுபோடுவாம்,—அபிமானம் என்பது இன்னது என்று ம-ா-ா-ஸ்ரீ அ-மு. என்பவர் மிகுந்த கவனத்தோடு இப்பத்திரிகையில் பல நியாயமுகத்தால் காட்டியுள்ளதைத் தெரிந்துகொண்டோர் பலர். அதற்கு இதுகாறும் ஒருவரும் பிரதியுத்தரம் கூறிலர். ஆதலால் அபிமானமென்பது அத்தகையதேயல்லாமல் வேறல்ல. துரபிமானங் காரணமாக அவலை நினைத்துக்கொண்டு உரலை யிடிப்பதுபோல, ஆஸ்திகத்தைத் தாபிக்க வழியின்மையால், நாஸ்திகத்தையும் நாஸ்திகரையும் வாயில்வந்தபடி தூஷிக்கும் பேமானியே! இங்கிலீஷ்பாஷையா நாஸ்திகத்தைத் தூண்டிவிட்டது? சாங்கியர், சார்வாகர், பௌத்தர் முதலிய உன் சுதேசிகள் இங்கிலீஷ்படித்து தானா நாஸ்திகரானார்கள்? அவர்கள் கடவுளில்லையென்று சொல்லியதுபோல இங்கிலீஷ்படித்த சுயக்கியானிகள் எவ்விடத்தேனும் எப்பொழுதேனும் கடவுளில்லையென்று மதோன்மத்தமாய்க் கூறக் கேட்டிருக்கின்றேனையா? அல்லது கடவுள் இன்னது என்று அஷ்டப்பிரமாணங்களாலும் நிரூபிக்கவல்லையா? கடவுளுண்மையைப்பற்றி ஆத்திகநூல்கள் கூறுங் கூற்றிற்குக் கண்டனைசெய்யும் சுவஞானிகளுக்கேனும் மறுமொழி சொல்லவல்லையா! அதவா, உனக்கு கடவுள் விஷயத்தில் நம்பிக்கை பிறந்ததற்கேனும் நியாயங்காட்டவல்லையா?

இவ்வாறு யாதேனும் ஒன்றைச்செய்து உன்மதத்தைத் தாபிக்காமல், உன்மத்தனைப் வாயால் அசுத்த அசப்பிய துன்மார்க்க சொற்களைக் கான்றனையே, அதன் துர்மணம் எண்டிசாமுகத்துங் கமழ்கின்றதே: அதனைக் கண்டகண்டபேர்கள் கால்கின்றனரே. உனக்கு இதனாலேனும் இலச்சையுண்டாமோ? இன்னுங் கொடியபாணங்கள் வேண்டுமோவென்பதனைப் பிறகிட்டுத் தெரிந்துகொண்டு செய்கிறேன்.

செ. ந.

சர்வம்பஞ்சபிர்மம்"

"மூடபக்தி."

மேகந்தவழும் கமுகமரத்தி லனந்தராவராலினம் வாளைகள்பாய, பாளைவிரிந்து தேன்பொழிந்து பெருகும் கழனிகள் சூழ் சென்னைமாநகரில் சீர்பெற்று சிறப்புற்றோங்கும் மதிகுணமானே, "தத்துவவிவேசினி" நங்காய்! நான் வரைந்தவற்றை நின் சந்திர பிம்மம்போன்ற சேலையினோர்கோணத்தில் தீட்டி, அஞ்ஞான "ஆத்திகருக்குக்காட்டி" யுக்தியனுபவத்திற்கொத்த நமது "சுயக்கியான" சங்கத்திற் றேர்ந்தொழுகச்செய்வாயென நின்னையும்,நின் பிதாவையும் வந்தித்தே னேற்றுக்கொள்குக.

கல் - மண் - செம்பு - வெள்ளி - தங்கத்தையும், களிமண்ணை மிதித்து குயவன் பிள்ளைகள் விளையாடச்செய்த கோலத்தையும், வலிமைதங்கிய இரும்பு - வெங்கலம் - மற்றும் பஞ்சலோகத்தாலுரிக்கி வடித்து விற்பனைசெய்ததையும், செல்லரிக்கக்கூடிய மரங்களில் சித்திரவேலைகள் தீர்ந்ததையும், கண்ணாடி - பீங்கான் - காகிதம் - ரப்பர் - தண்டவாளங்களால் செய்த பற்பல பொம்மைபடங்களையும், வாயிருந்தும் ஊமையும், கண்ணிருந்தும் குருடும், காதிருந்தும் செவிடும், இருகரமிருந்தும் தொடாமலும், காலிருந்தும் நடவாமலும், நாசியிருந்தும் முகராமலும், வன்னியிலெரிந்து சாம்பலாகிறதையும், ஓரிடத்தில் வைத்தால் செயலற்று செத்தப் பிணம்போல் கிடந்து கள்வர் திருடக்கூடியதையும், கோழிகுஞ்சினைத் திருடும் பருந்து - கருடன் - நையாண்டிகாட்டும் குரங்கு - கொடிய விஷத்தை வைத்திருக்கும் நன்றியற்ற பாம்பையும், வீட்டைத்தோண்டி விலையுயர்ந்த பட்டுவஸ்திரங்களைக் கடிக்கும் எலி - பெருச்சாளி - களையும் பன்றி-மீன்-கிளி-அன்னம் - தோகை-எருமைக்கடா-ஆதி-மதி-தாரகை-வான்பரவை - காற்று - வன்னி - மேகம் - தாரணி-விண் - ஊர்வன - நடப்பன - நாலுகால் விலங்கு - கதிரவன் கிரணத்தால் தீய்ந்துபோம் புல் - செடி - தாபரங்கள் - வாரி-அனந்தராவராலினம் வாளை - நதி - ஆறு - ஏரி - ஆழி - வாரணம் - திக்கு - நகர் - கோணம் - பேய்கணம் - வீட்டுப்பெண் - ஆண்தெய்வம் - குலதெய்வம்-இறந்த கன்னிப்பெண்-நஞ்சுண்டு நான்றுக்கொண்டிறந்த மூடர்களையும், இன்னும் வீடு - தெரு - திண்ணை - ஆற்றங்கரை - சுடுகாடு-பிறவிடை முதலிய விடங்களிலுள்ள குட்டிசாமிகளாகிய அரிதணல் மாரி - அமகண்டி - சாமளை - வராகி - ஓங்காரி - துர்க்கை-வீரி - பிடாரி - காட்டேரி - ஏகரி - பில்லிவாய் குறளி-பேச்சிசாமுண்டி - உத்தண்டி - ரணபத்ரகாளி - பெரியமாகாளி - பொம்மன் - தொட்டியசின்னான் - இடும்பன் - பொன்னியங்காளி - கங்காளி - சக்கதேவி புத்தனார் - காத்தவராயன் - கருப்பண்ணன் - தடிமாடன் - இருளன் - வீரபத்திரன் - அனுமந்தன் - காலசங்காரன் - அரி - சிவன் - பிரம்மா - விஷ்ணு - ருத்திரன் - சதாசிவன் - கணபதி - குறமுருமுகம் - பழனி ஆண்டி - ஈசுரன் - எமன் - கோளி - பார்வதி - லட்சுமி-அலமேல் - கெங்காதேவி - பூமகள் - நாமகள் - வனகன்னிகள் - ஆகாயவாணி - ரங்கன் - ஸ்ரீரங்கன் - காவேரிரங்கன் - காரமடைரங்கன் - மதுரைவீரன் - பரளாற்று ரங்கன் - மனுபிறவிகளாகிய ஆறிரண்டு ஆள்வார்கள். வீரராகவன் - நாராயணன் - குலமக்களாகிய கோபஸ்திரீகளைப்புணர்ந்த கிருஷ்ணன் - குசலவன் - பாணத்தால் மாண்டு மடிந்துபோன ராமன் - லட்சுமணன் - மலம்-ஜலம்-நாய் முதலிய விக்கிரகங்கட்கு கள்ளுடன் சாராயம் - பிராண்டி - ஜின் - ஒள்டாம் - ஒயன் - போர்ட்டுவொயன்-ஷைடர் - பீர் - கேரோசே - சம்பொயன் - கஞ்சா - அபீன் - ஈறல்கரி - கஞ்சா ரொட்டி - வளையல் - குங்குமம்-கடலை-அவுல் - பொரி - கடாக்கள் - ரணபலி - மனுபலி - ஆடு-மாடு - சேவல் - முட்டை கோழி - கடல்மீன் பொரியல்-பிள்ளையாருக்கேற்ற தோசை - வடை - பிட்டு - அதிரசம்-காரவடை - இனிப்புவடை - பொத்தல்வடை - பொரியுண்டை-பணியாரம் - இட்டலி - எள்ளு - பயறு - கிழங்கு - பழம் - நவதானியம் - பச்சையரிசி - தேங்காய் - எண்ணை - நெய் - பால் - தயிர் - "படைத்து" சூடம் - சாம்பிராணி தூபதீப நைவேத்தியஞ்செய்து நோன்பிருந்து சாஷ்டாங்க நமஸ்காரஞ்செய்தும், தள்ளி நீபோடா குறைகள் உண்டெனவே சத்தமிட்டலரி கற்சிக்கு மித்தனை கோடாகோடி மேலைய பிரையோசனமற்ற "விக்கிரகங்களை" வந்தனைசெய் தடிபணிந்தும் போதாமல் நமது தேயத்தின் கற்றறிந்த வித்வசிரோன்மணிகளிற் சிலர் ஆண்குறி - பெண்குறிகளையும் நமஸ்கரித்து பூசித்து வருவதென்ன வனீதம், மகாவனீதம், மிகவுமனீதம். நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநான்கு கலைக்கியானம் - மனுவிக்கானம் - இலக்கணம்-இலக்கியம்-நன்னூல் - நீதிநூல் முதலிய நற்புத்தகங்களைக் கற்றுக்கொண்டதற்கு மேற்கண்ட விக்கிரகங்களைப் பூசித்துவருவதுதான் பட்டப்பெயரோ? ஆத்திக நண்பர்காள்! ஒவ்வொன்றையு மாராய்ந்து திர்க்காலோசனைசெய்து, "கிட்டாதாயின் வெட்டெனமற" என்ற சான்றோருறைப்படி கிட்டாதவற்றை விட்டு, நன்மைக் கடைப்பிடியென ஆன்றோர் மொழிப்படியே நன்மையைப்பற்றி வீணில் காலத்தையும் நேரத்தையும் வீணில் நமஸ்காரத்தையும் போக்கடிக்காவண்ணம் ஆத்திக நாத்திக மிரண்டினும் எதுவிசேஷித்ததெனத்தாங்கள் தாங்களே உத்தேசித்து விக்கிரகவாராதனையின் பிரயோசனத்தை கிஞ்சிற்று யோசிக்க வேண்டாநின்றேன்.

(இன்னும்வரும்.)

இங்ஙனம்,

தி. சி. நாராயணசாமிபிள்ளை,

இ. சு. ச. உ. கோ.

நகைதரித்தல்.

இந்துதேச மாதரைப்பற்றிப் பிரசங்கிப்போர் பலரும் அவர்கள் தரிக்கும் ஆபரணங்களின் விஷயத்திலும், அவற்றைத் தரிக்கக் காதுகளையும், மூக்குகளையும் குத்திப் பல தொளைகளைச் செய்வதிலும் வெறுப்படைகிறார்கள். இத்தேசத்து மாதர்களைப் பொன்னாபரணங்களாலும், நல்ல ஆடைகளாலும், மலர்மாலைகளாலும் அலங்கரித்துப் பார்ப்பதாலுண்டாகும் சுகம் இவ்வளவென்பதை அநுபவிகளே யறிவார்கள். ஐரோப்பாவிலோ ஆடையொன்றினாலே நவநவமாக ஐரோப்பிய மாதர்கள் தம்மை யலங்கரித்துக் கொள்ளுகிறார்கள். இத்தேசத்தில் பொன் வெள்ளிகளாலும், நவமணிகளாலும் நவநவமாக ஆபரணங்கள் செய்யும் வித்தையைக் கம்மியர் அறிந்திருக்கிறார்கள். ஐரோப்பாமுதலிய மற்றத் தேசத்தவர்க்கு இவ்வித்தையிற்பயிற்சி மிகவுங் குறைவு. ஆடையொன்றால் தம்மைப் புனையு மாதர்கள்பால் இயற்கையழகு ஒன்றே விளங்கும். ஆடையாபரணம், மலர்மாலை முதலியவற்றாற் றம்மைப்புனையு மாதர்கள்பால் இயற்கையழகும் செயற்கையழகும் கலந்து விளங்கும்.

“பொன்னூற்றுகிலாற் புனையாவிடிலவர்மெய், யென்னுகுமற்றினை யெண்ணிலையே” என்றார் பிறரும். மாதர்களுக்கு ஆபரணங்களைத் தரித்தலால் அழகுமிகுமென்பதை யங்கீகரித்தாலும், அவற்றைக் கள்ளர்முதலியோர் பறித்துக்கொள்வதால், உயிரை வாங்குவதால் உண்டாகும் அச்சமும் துன்பமும் பெரிதென்பதை யெவர் மறுக்கவல்லவர்? இவ்வச்சம் ஆபரணந்தரிப்பதேயில்லாத மாதர்களுக்குண்டாவதில்லை. செல்வம் வர்த்தகமூலத்தால் விர்த்தியாவதில்லாமல் மாதர்களின்மேலும் பெட்டிகளிலுமே யடங்கியிருக்கும். இப்படி யளவற்றகோடி செல்வம் இந்தியாவிலே தேவாலயங்களிலும் இந்து குடும்பங்களிலும் வட்டிக்கு நஷ்டமாகவும், அபிவிருத்திக்கிடமில்லாமலும் இருப்பதை நாமறிவோமன்றோ? அச்செல்வத்தை நாணயங்களாக மாற்றி வர்த்தகங்கள் செய்தால், கைத்தொழிற்சாலைகளைத் தாபித்தால் அநேகர் பிழைக்க இடமுண்டாவதுமன்றிச் செல்வமும் பெருகுமே.

ஆங்கிலேயர் செல்வமெல்லாம் வர்த்தகத்திலும் பூஸ்திதிகளிலும், தோட்டங்களிலும், பாங்கிகளிலும் வைத்து அபிவிருத்தியடைகிறதை நோக்க ஆங்கிலேயர் மகாபுத்திமான்களென்றே தோற்றுகிறது. இந்துக்கள் அங்ஙனம் செய்யாமைக்குக் காரணம் யாது என்பார்கள். இந்துக்களும் தங்கள் செல்வமுழுமையும் ஆபரணவடிவமாக்கி வைத்திருக்கவில்லை. பூஸ்திதி, தோட்டம், மனை முதலியவற்றிலும், வேண்டிய அளவுக்கு வர்த்தகத்திலும் வைத்திருக்கிறார்கள். ஸ்திரீகளுக்கும் தம்மக்கட்கும் தரித்துக்கொள்ள ஆபரணங்களைச்செய்ததில் செலவிட்ட பொருளையும் வர்த்தகத்தில் வைத்தால் அதிக இலாபம் கிடைக்குமேயென்பதும் அங்கீகரிக்கத்தக்கதுதான்.

ஆபரணத்திலே அவரவர் அந்தஸ்துக்குத்தக்கபடி பொருள் வைக்கப்பட்டிருக்கிறது. ஆபரணாலங்காரத்தால் அழகும் [illegible]சியானந்தமும் உண்டாவதையே நம்மவர் கருதி இங்ஙனம் செய்தார்களோ! அன்று, அன்று. பொன், வெள்ளி, த[illegible]பாக்குகளாலும், நவரத்தினங்களாலும் செய்யப்பட்டிருக்கும் பணிகளைத் தரித்துக்கொள்வதனால், உலோக சத்துக்க[illegible]ம், நவமணிகளின் சத்துக்களும் தேகங்களிற் பொருந்தி[illegible] டிகளின் வழியேபாய்ந்து தேஜசையளித்து இரத்தத்தைச்[illegible]த்திசெய்து நோய்களைப்போக்கி, வலிவை யுண்டுபண்ணுமென்பதனை நம்முன்னோர் நன்றாகச் சோதித்துணர்ந்திருப்பதனால், மாதர்களும் புருடர்களும் காது, நாசி, கண்டம், மார்பு, இடை, கை, கால் இவ்வுறுப்புகளில் ஆபரணங்களை தரிப்பது நலமென்றே எண்ணிப் பலபணிகளை வகுத்தார்கள். * இவ்வபிப்பிராயத்தோடு செய்த முன்னோர் ஏற்பாட்டை அநுசிதமென்னும் தற்கால விவேகிகளின் பிரசங்கங்கள் அங்கீகரிக்கத்தக்கவையல்ல, இவ்வுண்மையை ஐரோப்பியர் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ஐரோப்பிய மாதர்களும் கைகளிற் காப்பு கொலுசுகளை அணியத்தொடங்கினார்கள். காதுகளிலும் பணிபூண்கிறார்கள். கைவிரல்களில் விலையுயர்ந்த மோதிரங்களை யணிகிறார்கள். பூலோகத்தில் எந்தத் தேசத்தார் பொன்னாபரணமின்றி யிருக்கிறார்கள். பலதேசத்தாரினும் இந்துதேசத்தார் அதிகமாக ஆபரணங்களைத் தரிக்கிறார்கள். இவ்வாறு விசேடநகைகளைச் செய்யாமலும், கடன்பட்டு நகைகளை வாங்காமலும் இருக்கவேண்டுமென்று போதிப்பதைவிட்டு, இந்து ஸ்திரீகளே நகைகளைத்தரிக்க ஆசைகொண்டு காது மூக்குகளைத் தொளைகளாக்கி அந்தப்பழுது செய்யாதீர்கள் என்று தற்கால விவேகிகள் கூறுவது நியாயவிரோதமான காரியமேயாம். நகைதரித்தல் விஷயமாக நம்முன்னோர் கொண்ட அனுஷ்டானம் சுகாதாரத்தை யனுசரித்ததாதலால் தோஷரகிதமானதே.—ஸ்ரீசுதேசாபிமானி.

ஆபரணத்தால்வருங்கேடு.

இந்தியாவிலுள்ளவர்கள் சிறுகுழந்தைகளுக்கு ஆபரண அலங்காரஞ்செய்து அழகுபார்ப்பதில் மிகவும் பிரீதியுடையவர்களா யிருக்கிறார்கள். வறியவர்களேனும், வயோதிகர்களேனும், இன்னு மெவ்வகைப்பட்டவர்களேனும் வயற்யை வஞ்சித்தும் பொருள் சேகரித்துய் தந்தம் பெண் குழந்தைகளுக்கும் ஆண்குழந்தைகளுக்கும் பொன் வெள்ளி முதலிய உலோகங்களால் காப்புத், தண்டை, கொலுசு, சரப்பளி, சந்திரஆரம் முதலிய ஆபரணங்களைப்பூட்டி அழகு பார்க்கின்றனர். இவ்வாறு செய்தல் பெற்றவர்களுக்கேயல்லாமல் மற்றவர்களுக்கும் நேத்திரானந்தம் விளைக்குமென்பதிற் சந்தேகமில்லை. ஆயினு மவ்வாபரணாதிகளால் பிள்ளைகளுக்குப் பிராணச்சேதமும், பெற்றோருக்குத் தீராததுக்கமும், மற்றோருக்கு மாநடுக்கமும் விளைகின்றதை நாம் பலவிடங்களிலுங் கண்டுஞ் செவியில் நாராசம் விட்டதுபோலக் கேட்டுமிருக்கின்றோம். கள்ளருஞ் சோரரும் ஆபரணந்தரித்துள்ள பிள்ளைகள் வீட்டருகில் பதிவிருந்து ஆருமிலாதபோது அக்குழந்தைகள் தன்னிச்சையாய் விளையாட்டை நாடி வெளியில் வரும்போது அத்துட்டர்கள் எலியைப் பூனை பற்றுவதுபோலக் கூக்குரலிடவொட்டாமல்பற்றிப் புறத்தே கொண்டுபோய் ஆபரணங்களை யபகரித்துக்கொண்டு பிள்ளைகளையுங் கொலைசெய் தெறிந்துவிடுகிறார்கள். இதுமட்டோ! வீட்டில் வருவார் போவாருள்ளும் வேலையாள்களுள்ளுஞ் சிலர் நகையை யிச்சித்துக் கொலைபுரிந்துவிடுகின்றதை கண்டுங் கேட்டு மிருக்கின்றோம். இவ்வாறு பலவிடங்களிலும் பிராணச்சேதம் நேரிடக்கண்டிருந்துங் குழந்தைகளுக்கு ஆபரணத்தைப்பூட்டி உயிரிற்கு உலையைப்படு தெவ்வள வறி

---

* இது “ நரகுடு காசிகியேளி நீள்ளுநாலு பாலுலு சேசி நாடுகதா ” என்னும் தெலுங்கு பழமொழிபோலும், கீழே விழுந்தவன் தன்னை கேலிசெய்வார்களே யென்றெண்ணி ஓர் வரிசை செய்தேனென்று சொல்வதுபோலும், குடியனை யேண்டா குடிக்கிறாயென்றால் குடி ஜீர்ணத்தையுண்டாக்கும், உதிர ஓட்டத்தை விர்த்திபண்ணி தாதுக்களுக்கு வலிவுண்டாக்கும், ஆதலால் நான் பிரயோசனத்தை நாடியே குடிக்கின்றேன் என்பதுபோலும் இவர் கூறுவது வெகு விந்தையாகவிருக்கிறது. பொன் வெள்ளி நவரத்தினாதிகளால் ஆபரணம் பூண்டால் தேகவலிவென்று எந்த வாகடத்தில் சொல்லுகிறது? அவ்வாபரணங்களைத் திருடரிச்சிக்காத இரும்பு, எஃகு முதலியவற்றால் ஏன் செய்வித்துக்கொள்ளப்படாது? இப்படித்தான்போலும் சமயிகள் செய்யும் பிரயோசனமில்லாக் காரியங்களுக்கும், விரதாதிகளுக்கும் ஒவ்வோர் குத்திரயுத்தி கற்பிக்கின்றனர்போலும். பளா! பளா! நன்று! நன்று!!—ED.

யாமை. இவையெல்லா மிந்த ஏழைச்சனங்கள் உணராமல்
சில மதியீனப்பெண்கள் வார்த்தையைக்கேட்டு மக்களை இழ
ந்துவிடுகின்ருர்கள்.

அழகுபார்க்க யிச்சையிருந்தால் ஆபரணங்களைப்பூட்டிச்
சிறிதுநேரங் கண்ணெதிரி லிருக்கப்பார்த்துப் பின் கழற்றிப்
பதனஞ்செய்துவிடல்வேண்டும். அல்லாவிடின் சதாகாலமு
ம் அப்பிள்ளைகளையே கண்ணை யிமை காப்பதுபோலக் காவ
ல் காத்திருத்தல்வேண்டும். அங்ஙனஞ்செய்ய முடியாதவர்
கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆபரணம் பூட்டாமலிருப்ப
தே நலம். மார்ச்சுமீ உகூ௳ ஆகிய வெள்ளிக்கிழமை கன்
ஞரத்தெருச் சுப்பிரமணியசுவாமிகோவில் தோட்டத்தில்
கம்மாளப்பெண் குழந்தைக ளொருங்குசேர்ந்து விளையாடி
க்கொண்டிருக்கும்பொழுது அக்கூட்டத்தில் நின்றுந் தனிச்
சென்ற பெண் குழந்தையின் வெள்ளிக்காப்பை முன்னதா
கப் பதிவிருந்த கள்ளன் கழட்ட, அக்குழந்தை சத்தமிட்ட
ழ அச்சத்தத்தைக்கேட்டுச் சனங்கள் வர முன்னதாக ஒளி
த்தோடிவிட்டான். கள்ளனுங் காப்பு மகப்படவில்லை. அன்
பர்களே! குழந்தைகளுக் காபரணத்தைத் தரிப்பதினு லுயிர்
ச்சேதம் அல்லது ஆபரணநட்டம், இவைகளேயன்றிப் பிறி
தோர் பிரையோசனமுங் காணப்படவில்லை. குழந்தைகளுக்
காபரணத்தைத் தரிப்பதினுல் திரவியமுடையவர்களுடைய
பிள்ளைகளென்றும், பிறர் நினைப்பார்களென்னு மபிமானத்
தினுல் ஆபரணங்களைத் தரித்துப் பிள்ளைகளையு மிழப்பதல்
லாமல் இல்லறத்துட்புகுந்த நாற்ருெட்டுப் புத்திரபாக்கிய
த்துக்காக வியற்றிய தானதருமபலன்களுமிழந்து புத்திர
பாக்கியத்தாலடைய விரும்பிய கீர்த்தியாதி பதவிகளை மிழந்
து விடுகின்றீர்களே. அறிவுடையோர்களே! மேலே காட்டி
ய நியாயங்களைச் சிந்தித்துக் குழந்தைகளுக் காபரணுதிக
ளைத் தரியாதுவிடுதலே மிக்க நலம், மிக்க நலம்.—இலங்கை
த்தினவர்த்தமானி.

வர்த்தமானம்.

சுதேச பிரயாணிகளுக்குச் சாப்பாட்டு அறை.—திவான்
பகதூர் ஆர். இரகுநாதராயரவர்களுடைய கோரிக்கையின்
பேரில் மதிராஸ் ரயில்வேகம்பெனியின் ஏஜெண்டவர்கள்
சென்னை மார்க்கத்திலுள்ள ரயில்வே ஸ்டேஷன்களில் ரயில்
மார்க்கமாய்ச்செல்லும் சுதேசப்பிரயாணிகள் ஆகாராதிகள்
செய்து இளைப்பாறும்படிக்குப் பிரத்தியேகமாய் சிலஸ்டே
ஷன்களில் அறைகள் ஸ்தாபிக்கவேண்டிய விஷயத்தை தம்
முடைய ஆலோசனையில் எடுத்துக்கொள்ளும்படி செய்யப்
பட்டார். அவர் ஆலோசித்து சென்னை ரயில்வே அதிகாரிக
ள் இவ்வித ஏற்பாட்டுக்கு அனுகூலமாயிருப்பதாக இவ்விட
த்திய கவரன்மெண்டாருக்குத் தெரிவித்ததின்பேரில் அவர்
கள் இப்புதிய ஏற்பாட்டை இப்போது ரெய்ச்சூர் ஸ்டேஷ
ஷனில்மட்டும் அமுலுக்குக் கொண்டுவந்து பரீக்ஷித்துப்பா
ர்க்கவேண்டுமென்று தீர்மானித்து அந்த ஸ்டேஷனில் சொ
ற்பகாலத்துக்குமட்டும் ஏற்படுத்தப்பட்ட ஓரிடத்தில் முதல்
இரண்டாவது வகுப்பு சுதேசபிரயாணிகளுக்கு ஆகாராதி
கள் திட்டம்பண்ணிக் கொடுக்கப்படுமென்று உத்தரவு செ
ய்திருக்கிருர்கள். ஆகாராதி வகைராக்கள் கொடுப்பதற்கா
கச் செய்யப்படவேண்டிய ஏற்பாடுகள் திவான்பகதூர் இர
குநாதராயரவர்களோடு ஆலோசித்துக்கொண்டு ஒருகண்டி
ராக்டர் வசம் ஒப்புவிக்கப்படும்.

"தேவஸ்தானமோ பாவஸ்தானமோ."—நாமக்கல் கஸ்
பாவிலே நரசிம்மசுவாமி தேவஸ்தான மொன்றிருக்கிறது.
இது பெரிய ஸ்தலமாயும், வருடமொன்றிற்கு உ௫௦௦ ரூபா
ய் தஸ்திக்குள்ளதாயுமிருக்கிறது. கமிட்டி தர்மகர்த்தாக்க
ளாக ஏற்பட்டிருக்கும் கண்ணியவான்கள் முக்காலே நாலு
மா, முக்காணி அரைக்காணி முந்திரிப் பணங்களையும் கபளீ
கரஞ் செய்துவிட்டு சுவாமிக்கு பெரிய திருநாமஞ் சாத்தி
விட நினைத்திருக்கின்ருர்களாம். இப்போது நாமம் குழைத்
தாகிவிட்டதுபோலு மிருக்கிறது. அவ்வூரின் பெயரோ 'நாம
க்கல்லாகையால்' நாமத்திற்கு பஞ்சமில்லையே. முன்கால
த்தில் அபிஷேக முதலியது செய்வதற்கு யாவரேனும் வந்
தால் அவர்கள் சக்திக்கியைந்த தொகையைப் பெற்றுக்கொ
ண்டு அபிஷேகமுதலியன செய்தனுப்புவார்கள். தற்காலத்
திலோ எவ்வளவு ஏழையாயிருந்தாலும் அபிஷேகமொன்றி
ற்கு மூன்றேகால் ரூபாய் கொடுத்தாலன்றி நடத்தமாட்
டோமென்று மறுத்து ஓட்டிவிடுகிருர்களாம். இதுவும் தரு
மகர்த்தரிட பேராசையன்றி வேறில்லை. இதனைக் கண்டிக்க
ப் பெருமாளுக்குங் கூடவில்லையே.

தென்னைமரவிசேடம்—இலங்கையில் ஒரு வியாபாரசங்
கத்தார் வெளியிட்ட ஒரு புத்தகத்தில் உலகத்தில் உஅ-
கோடி தென்னைமரமுள்ளதாகவும், அவற்றில் வருடந்தோ
றும் ௧௦-ஆயிரங்கோடி தேங்காய்கள் காய்க்கின்றனவென்
றும் மதிப்பிட்டெழுதினர். தென் அமெரிக்காவில் தெங்கு
ஏராளமாய்ப் பயிர்செய்யப்பட்டிருக்கிறது. ௬௦-லட்சம் ஏக
ரா தென்னந்தோட்டம் உண்டு. இந்தியாவிலும் பிறகாலனி
களிலும் நாலுலட்சத்து அ௦-ஆயிரம் ஏகராக்கள் தென்னந்
தோட்டங்களிருக்கின்றன. இந்தியாவில் இலங்கை சிறிய
தேசமாயிருந்தும் இந்தியாமுழுமையிலுமுள்ள தென்னந்
தோட்டத்தினைப்பார்க்கிலும் இலங்கையின் தென்னந்தோட்
டம் பெரிதும் வியக்கத்தக்கவையே. இலங்கையினின்றும்
வருடவாரியில் புறத்தேசத்துக்கு ஏற்றுமதிசெய்யும் தேங்
காய்களின் கிரயம் அ-லட்சம் பவுண்டு. அதாவது தற்கா
லம் சவரன்விலையின்படி கோடிரூபாய் ஆகும். இந்தியாவி
லே தேங்காயேற்றுமதியால் எ-லட்சம் பவுண்டு வருமான
முண்டு.

பிரபு—அமெரிக்காகண்டத்தின் இலட்சாதிபிரபுவும், இ
ருப்புப்பாதையின் இராஜனென்று பெயர்வைத்து இப்போ
து இறந்துபோன மே. வண்டர்பிலெட் துரைக்கு ஒரு நிமி
ஷத்திற்கு ௫௦-ரூபாய் வட்டி வருமாம். இவரல்லோ மகா
ராஜன்.

மரித்தெழுதல்—பாட்னுவிலே ஓர் இந்துவானவன் காஷ்
டத்தில் வைக்கப்பட்ட பிறகு உயிர்த்தெழுந்து வீடுவந்து
சேர்ந்தானும், இவர்தான் இராமலிங்கப்பிள்ளைபோலும்.

மதுரையில் துரைகள் வழக்கு—ரெவினியுபோர்ட் இரண்
டாவது மெம்பராகிய மிஸ்டர் கார்ஸ்டின் அவர்கள் சென்ற
டிசம்பர் மாசக்கடையில் மதுரை ஜில்லாவில் பிரயாணம்
செய்ய நேரிட்டபொழுது ஷை டிசம்பர்மீ உ௯௳ தேவகு
ளத்துக்குப்போய்விட்டு அங்கிருந்து திரும்பிவருகையில்,
பெரியகுளம் கிராமத்துக்கும், தேவதானும்பட்டி என்னும்
கிராமத்துக்கும் மத்தியில் சிலரால் கொள்ளையடிக்கப்பட்டு
நன்ருய் அடித்துப் புடைக்கப்பட்டார். இந்தகேஸ் மார்ச்சு
மீ அ௳ மதுரை டவுன் மாஜிஸ்திரேட்டான டர்னர் துரை
யவர்கள் முன்னிலையில் வந்தது. போடிநாயக்கனூர் ஜமீன்
தாரும், தனது உள்ளாள் வெள்ளைய ராவுத்தனுஞ்சேர்ந்து
ஆக ௧அ-கைதிகள் இருக்கிருர்கள். மீதி ௧௬-பேர்களும் ஜ
மீன்தாருடைய ஊழியக்காரர். பெரியகுளத்துக்கும், தேவ
தானபட்டிக்கு மிடையில் டிசம்பர்மீ உ௯௳ கொள்ளையடி
க்கப்பட்ட கார்ஸ்டின் துரையவர்களால் வியாச்சியம் ஸ்
தாபகமானது. இதை விசாரித்து செஷன்கோர்ட்டுக்கு கம்
டிசெய்திருக்கிறது. இந்தக்கேஸில் கலெக்டர் குரோல் து
ரையையும் கொண்டுவருவதாயிருப்பதால், ஐகோர்ட்டுச்சு
வந்துவிட்டது. இது எப்படி முடிகிறதோ பின்னிட்டு தெரி
ந்துகொள்ளலாம்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	[illegible]

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செ
த்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்ப
டும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாய்
வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-
0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷ
ம் செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவ
மிராயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களை
ம், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசை
ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரை
யவர்கள் பெயரால் பெரம்பூர் பாரெக்ஸ்ரோட்டுக்கு
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
Authi Kalanithi Press,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியானபத்திரிகை.

Vol. V.—No. 17.] MADRAS:—SUNDAY APRIL, 25, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து —குறள்.

பிராமணபுராதனம்.

ருக - ம் பக்கத் தொடர்ச்சி.

வானசாஸ்திரம் முதல் முதல் நவீனமாகக் கண்டுபிடித்தவர்களின் வாசஸ்தானமாகிய எகிப்த்து தேசத்திற்கு அருகினின்று பிராமணர் வந்தவர்களானதால், அவர்களும் ஆதியில் வானசாத்திரம் தெரிந்தோராயும், இத்தேசத்தவர்கள் அச்சாத்திரமுணராதவராயு மிருந்தனர். ஆகையால் அப்பிராமணர் குடியேறிய ஆரம்பத்தில் இத்தேச மன்னர்களிடத்தும், ஏனைய பிரஜைகளிடத்தும் எதிர்காலத்தில் சம்பவிக்கும் சூரிய சந்திராதிகளின் கிரஹணங்களை முன்னரறிவித்தும், தாம் அறிவித்தவண்ணமே அச்சூரிய சந்திரர் மறைவுபடுவதையுங் காண்பித்து, யாவரையும் வியக்கச்செய்து, தம்மிடத்து என்றுமிலா மதிப்பையும், கௌரவத்தையும் வரித்துக்கொண்டனர். இங்ஙனம் வருவித்துக் கொண்டபின் ஆகாயவீதியில் விளங்கும் வியாழமுதலிய சில கிரகங்களைத் தம்மரபினரைச்சார்ந்த பிராமணரெனவும், அவர்கள் [illegible]ளின் அருட்பிரசாதம் மிகவும் பெற்றோராதலின், தே[illegible]மயமான வடிவங்களைப்பெற்று நட்சத்திரமண்டலத்தில் கிரகங்களாக உயர்த்தப்பட்டார்களெனவும், அக்கிரகங்களின் சுயகுலத்தவர்களான தம்மவரால் ஏனையோர் புரிவிக்குங் கிரியைகளை யங்கீகரித்து அவரவர் வேண்டுகோளை நிறைவேற்றுகின்றமையால், மாந்தர் தத்தமக்குச் சம்பவிக்கும் பிணியாதி மனவிடுக்கண்களை நிவிர்த்தித்துக்கொள்ள விரும்பின், தங்களாலாயினும் தம்மரபினராலாயினும் நவக்கிரக சாந்தி முதலிய கிரியைகளைப் புரிவித்துக்கொள்ளின் நிவர்த்தியாகுமெனவுங் கற்பித்து சொற்பதிரவியவரவு ஏற்படுத்திக்கொண்டபின், மந்திரவல்லமையினாலும் யாகாதிகிருத்தியங்களினாலும் மழைபொழிவிக்கத் தங்களுக்கு வல்லமையுண்டெனப் பகர்ந்து அங்ஙனமே செய்வித்துக்கொள்ளச் செய்தும், தாம் தூரதிருஷ்டி சக்தியுடையார்போல் நடித்து, பின் சம்பவிக்கும் சம்பவங்களை முன் குறித்தலெனப்பரும் சோதிடத்தையும், சுபாசுபசகுனங்களை யுணர்த்துதலெனும் சகுனசாஸ்திரத்தையும் தம்மால் தெரிந்துகொள்ளலாமெனவுங் கற்பித்துரைத்து முன்னிலுஞ் சற்றதிக பொருள்வரவை ஏற்படுத்திக்கொண்டபின், இத்தேச மன்னரிடத்து ஸ்தானுதிபத்தியம் பெற்றுத் [illegible]தர்களாகச்சென்று சி[illegible]ல அரசர்களையும், பிரஜைகளையும் கைவசப்படுத்தியபி[illegible] இத்தேசத்தார் சூதும், வாதும், வஞ்சனையும், கபடமும சாந்தஸ்தரும், எதையும் எளிதில் நம்பி எப்பக்கமும் [illegible]த்திரப்பாவைபோல் திரும்பக்கூடியவரெனவுமறிந்து தை[illegible]ங்கொண்டு இப்பேதைமக்களை மிகு சுலபத்தில் கைவசப்[illegible]த்தி சிறப்படையக்கருதி தம்மனஞ்சென்றவாறெல்லாம் [illegible]சித்தும், தம் வஞ்சனைக்குட்படா தொழுகுபவர்களை சங்[illegible]ந்தும், சங்கரிக்கச்செய்வித்தும் வந்ததுமன்றி, தீச்சிகை[illegible]லும் தண்ணீரிலும் விழுந்திறக்கச்செய்தும், மன்னரைத்தங்[illegible]ள் மக்களையே கொல்லும்படி துர்ப்போதனை யூட்டிக்கொ[illegible]லபுரிவிக்கச்செய்தும், அவர்களது மனைவியருடனும் சை[illegible]யாகித்தும், தமது பாதங்களை அலம்புவித்து அவ்வசுத்த[illegible]ரை பாவவிநாச பரிசுத்ததீர்த்தமென உபதேசித்துப்பானம் [illegible]ண்ணுவித்தும், யாவருந் தங்கள் தங்கள் பாவம் ஒழிய [illegible]ண்டின் தங்களைக்காணு மிடந்தோறுங் கடவுளென மதி[illegible]ச் சுவாமி சுவாமி எனப் பரிந்தழைத்துப் பணிதல் வே[illegible]மெனவுங் கற்பித்து, அவர்கள் செல்வத்தைப் பலவாற்[illegible]ங் கவர்ந்து, தமதுள்ளக்கருத்தை களிப்புடனிறைவேற[illegible]டுமன்மையடைந்தனர். இவர்கள் இப்பரியாய தீபத்தில் குடியேறிய காலாரம்பமுதல் ஆங்கிலேய வரசாட்சி இங்கு ஸ்தாபிக்கப்படும் வரையில் இக்கண்டத்தவர்களுக்குப் புரிந்துவந்த கொடுமைகளைச் சுருக்கி இதனடியில் காட்டுவாம்.

இப்பிராமணர் தங்களுக்கும், தங்கள் மரபினர்களுக்கும் ஜீவனுதாரமாகச் சதுர்வித கிரியைகளை முன்னர் ஏற்படுத்தினர். அவையாவெனின்:—தவம், ஞானம், யாகம் அல்லது வேள்வி, வேளாண்மை என்பவையேயாம். இவற்றுள் ஒவ்வொரு கிரியையும் விசேஷ அபிவிர்த்தியடைந்து நாசமடையுங் காலாந்தரத்தை ஒவ்வொரு யுகமுடிவென ஏற்படுத்தினர். எவ்வாறெனின்:—தவவேடம் விசேஷித்தகாலத்தைக் கிருதயுகமெனவும், ஞானோபதேசம் அபிவிர்த்தியடைந்த காலத்தைத் திரேதாயுகமெனவும், வேள்வியின் விசேஷகாலத்தைத் துவாபரயுகமெனவும், வேளாண்மைபுரியும் இக்காலத்தைக் கலியுகமெனவுமேயாம். இந்நால்வகை யுகவகுப்பினுள் கிருதயுகத்தில் பிராமணரிற் சிலர் இத்தேசத்தாரை வஞ்சித்துத் தாமும் தம்மரபினரும் சிறப்படையுநிமித்தம் தவவேடம் பூணக்கருதிச் சில ஒட்டுவர்க்கங்களால் தமது சிகையின் உரோமங்களைச் சடைகளாக்கியும், நகங்களை வளர்த்தும், சுத்த நிர்வாணர்களைப்போல கௌபீனமட்டும் உடுத்தியும், ஆலவிருட்சத்தின்கீழ் உட்கார்ந்து தமது விழிகளை மூடி அன்னாகாரமின்றி எதனையோ தியானிப்பவரைப் போல், தம்மருகில் வருவோருக்கும் தம் வழிச்செல்வோர்க்கும் நடித்துக்காட்டித் தம்மை யாவருங்கண்டு வியக்குறும்படி மதிமயக்குவித்து, இரவுதோறும் ஆங்காங்குத் திரிந்து மான், மாடு, கடம்பை முதலிய விலங்குகளை வேட்டையாடி யுண்டு, மீண்டும் அருணோதயத்திற்கு முன்னமே தாம் முன் உட்கார்ந்த ஸ்தானத்திலேயே உட்கார்ந்து தமது விழிகளை மூடிக்கொள்வார்கள். இவர்களைக் காண்பவர்கள் இத்தவசி நெடுங்காலமாக அன்னாகாரமின்றி தவம்புரிகின்றாரென நகர வீதிகள்தோறுஞ் சென்று பறையறைந்து பிரசித்தப்படுத்தி வருவதை செவியுற்ற நிஷ்கபடிகளாகிய அக்குருநிலமன்னர் அத்தபோதனர் வசிக்கும் இடங்களுக்கேகி அவர்களது தவக்கோலத்தைக்கண்டு மதிமயங்கி அவர்களைத் தம் நாடுநகரங்களுக்கு அழைத்துச்சென்று வந்தனை வழிபாடுடன் ஓ, தவசிரேஷ்டர்களே! தேவரீரவர்களுக்கு வேண்டுவனவற்றைத் தயைகூர்ந்தால் அவற்றை நிறைவேற்றுவோமென்பார்கள். இதனைக்கேட்ட தவப்பிராமணர்கள் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்னும் வாக்கியத்திற்கிணங்க, இதுதான் தக்க தருணமெனவெண்ணி தங்களுக்கும் தம்மரபினருக்கும் வேண்டுவன யாவற்றையும் கேட்டுப் பெற்றுக்கொள்வார்கள். (வருணபேதத்தை யளவிடுமிடத்து மதசம்பந்தமான விஷயங்களை எடுத்துக்கூறவேண்டிய தென்ன காரணமெனின், பிரம்மாதிதேவர்களெனப்படுபவர்களின் ஒழுக்கங்களனைத்தையும் நோக்குங்கால் அவ்வனைவரும் இவ்வுலகத்திற்குப் புறம்பானவர்களல்லவெனவும், மனிதரேயெனவும், அம்மனிதரினும் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்களெனவும் தெளிவாக விளங்குவதால் வருணபேதத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும் பிராமணரின் பூர்வ சரித்திரங்களை முன்னர் எடுத்துக்கூறுவது கிரமமானதால் அப்பிரம்மாதிதேவர்களின் சரித்திரங்களை இதனடியில் எடுத்துக்கூறப்பட்டதென வறிக.)

இத்தன்மையுள்ள தவவேடப் பிராமணர்களில் சிவன் என்பவரோ அநேகரை வஞ்சித்துக் கீழ்ப்படுத்திக்கொண்டவர். இவர் அன்னாகாரமின்றிக் கொடுந்தவம் புரிபவர்போல் நடித்துத் தமது கையில் வைத்துள்ள சூலாயுதத்தினால் இரவில் வேட்டையாடி விலங்கினங்களை யுண்டு, சூரியோதயத்திற்கு முன்னமே தவநிலையிலுட்கார்ந்து தமது கண்களை மூடிக்கொள்வார். இவரது வஞ்சனையைப்பரிசோதித்தரியாத இத்தேசத்தவர்கள் இச்சிவனை வழிபட ஆரம்பித்தனர். ஆரம்பிக்கவே இத்தவத்தோன் தன்னிடத்துப் பிரஜைகளுக்குண்டான மனப்பற்றை மேன்மேலும் அபிவிர்த்தியுண்டாகச் செய்துகொண்டபின் ஓர் இராஜகன்னிகையை மணம்பு

ரிய விருப்பங்கொண்டு சில மூலிகைகளின் இரசத்தைத் தம் கரத்தில் சுவரி அதன் ஆதரவால் தீச்சட்டியை ஏந்தியும், சர்ப்பங்களை வசப்படுத்தி மாலையாகப்பூண்டும், தாம் கொன்ற புலி சிறுத்தைகளின் தோல்களை ஆடையாக உடுத்தியும், நரமாமிசம் பட்சணிக்கும் மிலேச்சரின் பூர்வ ஆசாரத்தின்படி தாம் கொன்று பட்சித்த மாந்தரின் சிரசுகளைக் கோர்வைசெய்து கழுத்தில் மாலையாகத்தரித்தும், இக்கோலாகலத்துடன் இராஜனிடஞ்சென்று தம் வீரபராக்கிரமத்தைக் காண்பித்து, அவ்விராஜ புத்திரியாகிய பார்வதியெனும் மாதை மணம்புரிந்து கணபதி, சுப்பிரமணியர் எனும் புதல்வர்களைப் பெற்றார். சிவன் சோமபானத்தில் மிகு ஆவல்கொண்டவரானதினால் கெஞ்சா இலை என்னும் சோமபூண்டை பலவிதமாகத் தாமும் தம்மனைவியுமுண்டு அதன் வெறியால் இருவரும் நடனம் புரிந்து வந்தனர். இச்சிவன் ஒருநாள் தம் சுயதேசத்தவர் கூடும் சங்கத்திற்குச் சென்றிருந்தபோது சோமபானவெறியால் தமக்கு களாசாஸ்திரம் நன்றாகத்தெரியுமென்றும், தாம் எத்தகைய மாதரையும் மிகு சுலபத்தில் தம் வசப்படுத்திக்கொள்ளும் சக்தி தமக்குண்டென்றும், தாம் அனந்தம் ஸ்திரீகளை ஆலிங்கனம் புரிந்ததாகவும் தம்மைத் தாமே புகழ்ந்துகொண்டார். தவவேடம்பூண்டு குன்றுகள், மலைகள், வனங்கள் யாவிலும் உலாவும் வைதேவதையாகிய நாரதனென்னும் மற்றோர் பிராமணன் இதனைக்கேட்டு அச்சிவனைநோக்கித் தாருகாவனமென்றோர் வனமுண்டு. அவ்வனவாசிகள் அனைவரும் பௌத்தர்கள். அங்குள்ள மாதர்களோ சிறந்த ரூபலாவண்யமும், மகாபதிவிரதைகளுமாதலின், அவர்களுடன் சயனிக்க உம்மால் முடியாதெனக் கூறினர். இதைக்கேட்ட சிவன் நான் அதனை சுலபத்தில் முடிப்பேனெனச் சபதங்கூறி, அவ்விடஞ்சென்று வீணையை வாசித்துக்கொண்டு வீதிகளில் உலாவுகையில் சங்கீதத்தில் மிக்க பிரியங்கொண்ட அத்தாருகாவனத்து மங்கையர் வெளியேவந்து அவ்வாத்தியத்தின் இனிய வோசையைக்கேட்டு நிற்கையில், சிவன் அவர்களது வடிவழகைக்கண்டு காமவெறிகொண்டு அம்மாதரைத் தம் மோகவலைக்குட்படுத்தி அவர்களுடன் சையோகித்து அவர்கள் கற்பையழித்தார். இதன்றி மோகினிவடிவெடுத்த விஷ்ணுவை மோகவெறியால் ஆண்புணர்ச்சியும் புரிந்தார். இவ்வாறு சிவன் துர்நெறியில் பிரவேசித்து எண்ணிறந்த மாதரின் கற்பழித்து வருகையில் பிருகுமாரிஷி யென்னும் பௌத்த முனியின் மனைவியையுங் கற்பழித்தமையால், அவர் சினங்கொண்டு அச்சிவனது ஆண்குறியைத் துண்டித்துவிட்டனர். துண்டிக்கப்பட்ட அவ்வாண்குறியைப்போல கருங்கல்லாற்செதுக்கி, பூமியில் நாட்டித் தாம் பூண்டிருந்த பூணூலை அதற்குத் தரித்துப் பற்பல மலர்களை அதற்குச்சூட்டி அதைத் தம்மடியார்களையும் ஏனையோரையும் வணங்கி வழிபடச்செய்தனர். இவ்வண்ணங் கொடுமையே புரிந்துவந்த சிவனென்னும் அப்பிராமணன் நரமாமிசபட்சணையில் மிக விருப்பங்கொண்டோராய்ச் சிறுத்தொண்டனென்னும் அடியான் மிகவும் சீராட்டிப்பாராட்டி அருமையாகவளர்த்துவந்த அவனது ஏகபுத்திரனாகிய சீராளனென்னுஞ் சிறுபாலகனைக்கண்டு, அச்சிறுவனது மாமிசம் இளமாமிசமாகவும், நிணமுள்ளதாகவும் இருக்குமெனக்கருதி அச்சிறுவனது பெற்றோரிடஞ்சென்று தந்திரோபாயங்களினால் அவர்களை மதிமயக்குவித்துச் சிறிதேனும் இரக்கமின்றி அத்தாய்த்தந்தையாராலேயே அக்குழந்தையைக் கொன்று சமைப்பித்துத் தமக்குப் பரிமாறும்படி போதித்து ஐயோ! அப்பாலகனைப் புசித்தார். இதன்றியும் அச்சிவப்பிராமணன் நரமாமிசத்திலுள்ள விருப்பத்தால் மயானத்தையே தமக்கு உரிய மனையாகக்கொண்டு உண்ணுதற்குச் சவங்கள் அகப்படாத காலங்களில் சுடுகாட்டில் வெந்தெரிந்துபோன பிணச்சாம்பரிற் புரண்டு வெறிகொண்ட பித்தனைப்போல் அலைவார். இச்சிவனை வழிபட்டவரில் திரௌபதையும், பீமனும் இராக்காலங்களில் படுகளத்திற்கேகி அங்கு யுத்தத்தில் மடிந்திருக்கும் சவங்களைப் புசித்துவந்தன ரென்கிறார்கள்.

(இன்னும்வரும்.)

M. MASILAMONI.

காளிகுழுமாயி.

திரிசிரபுரத்திற்கு மேற்கில் மூன்றுமயில் தூரத்தில் குழுமாயி கோயிலென்றொரு ஆலயமுண்டு. அவ்வாலயத்திற்குச் சில தினங்களுக்குமுன் நானும் எனது நண்பரிற் சிலருமாக ஆண்டுசென்றிருந்தோம். ௸ ஆலயத்தில் ஏறக்குறைய நூறுபேர் ஸ்திரீகளும் சில புருஷர்களும் கூடியிருந்தனர்கள். அஃது என்னவென விசாரிக்குமளவில், ௸ கோவில் மருளாளிபேரில் மருள் வருவதாயும், அச்சமயம் பிள்ளையில்லாதவர்களுக்குப் பிள்ளை கொடுப்பதாயும், பேய் பிடித்தவர்களை யப்பேயினின்று விலக்குவதாயும், தாங்கள் தாங்கள் நினைத்த காரியங்களைச் சரிவரச்சொல்லுகிறதாயும் அவ்விடமுள்ளவர்களால் கேள்வியுற்று அங்கு நடப்பதைப் பார்ப்போமென நின்றனன். ௸ ஆலயத்தில் வந்திருந்தவர்களில் எல்லோருமே இளமைப்பருவமுடைய ரூபலாவண்ய மடவார்களாக இருந்தனர். சிலநேரஞ் சென்றபின் மருளாளியென்பவன் ஸ்தானபான கிரியைகளைமுடித்து ஆலயத்துட்சென்று தூபதீப நைவேத்திய முதலான சடங்குகளை முடித்து ஒரோங்கார சப்தமாய்க் கூக்குறலிட்டு வெளியேவந்தனன். ௸ தொனியைக்கேட்ட யான், காட்டில் சஞ்சரிக்கும் துஷ்டமிருகராசிகள் இவ்விடமெப்படி வந்தனவென்று நடுங்கி குலுங்கி மெய்மறந்து நிதானிக்குமளவில், அஃது நாட்டு மானுஷீக மிருகராசியா யிருக்கக்கண்டு, இன்னும் நடப்பதைப் பார்க்குங்கால் ௸ மருளாளி மிருகத்தைப்போல் கொர்ஜ்ஜித்து வெளிவந்து நின்றனன், பேதையர்களாகிய மடவார்கள் அவனைச்சூழ நெருங்கி நின்றனர்கள். ௸ மருளாளி ஒரு நீண்ட அறிவாளின்பேரில் நின்றுகொண்டு ஒவ்வொரு பெண்களையும் கைப்பிடித்திழுத்து, அடீ! நீ என் தாயாராகிய அம்மனுக்கு செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்தத் தவறிப்போனதால், உனக்குத் தரிக்கும் சிசுக்களையெல்லாம் நிலைக்கவொட்டாமல் செய்வதுமன்றி யுன்னை ஞாபகத்தில் வைக்கும்படி யென் தாயாரெனக்குச் சொல்லியுமிருக்கிறாள். அடீ! நீசெய்த தவறுதலை நிமித்தம் [illegible]ட்டைவெடி துப்பாக்கி தயார்செய்திருக்கிறேன், வாடியென்றும் போடியென்றும் வாய்மதத்தால் சொல்லி ஆனந்தப் பரவசமடைந்தனன். ௸ பேதைப்பெண்ணனவள் ஆண்டவனே பிள்ளை செய்த குற்றங்களைப் பெற்றோர் மன்னிக்கும் தன்மைபோல், பேதையர்களாகிய நாங்கள் செய்த குற்றங்களைத் தேவரீர்தான் மன்னிக்கவேண்டுமென்று அந்தப் புத்தியில்லாப் பூசாரி காலில் சரணமடைந்தனள். அதற்குப் பூசாரியாகிய தடியன், அடீ! பெண்ணே நீ செய்த தவறுதல் நிமித்தம் என் தாயார் சன்னிதியில் விளக்கிற்கு மூன்று ஆடம் நல்லெண்ணெய் கொண்டுவந்து கொடுத்து மூன்று கிழமை வருவதுந்தவிர, அண்ணரொண்டி முத்தையனிருக்கு மெனது கிரகத்திற்கு மூன்றுகிழமை வருவாயானால் (அடிபெண்ணே) வருகிற வருஷம் உன்வீட்டில் தொட்டிகட்டி யாட்டுகிறேனென்று மற்றொரு மாதின்பேரில் ஆவேசமாய்ச்சென்று கைப்பிடித்திழுத்து அடிபெண்ணே! சி[illegible] தினங்களுக்குமுன் நீசென்ற பகல் பனிரண்டுமணிவே[illegible]யில் அது உன்னைப் பின்றொடர்ந்து வந்ததடியென்றும், [illegible]து பின்பற்றிய நாள் முதலாய் நீ இவ்வண்ண முருகிப்[illegible]னாயடியென்றும் அதற்குச் சில சடங்குகள் செய்யவேண்[illegible]மடி நீ வருகிற சோமவாரம் என் கிரகத்திற்கு வருவா[illegible]னால் அப்பேயை யடித்து விரட்டித் துறத்திவிட ஒண்டி[illegible]த்தையன் என்பக்கலிலிருக்கிறானென்று மற்றோர் மாதி[illegible]ஞ்சென்று அடிபெண்ணே! உன்னை முந்திகொள்ள விரு[illegible]பிய உங்களிலொருமனிதனுண்டே, அம்மனிதனுக் குன்னை[illegible] கொடாததினா லிது அவன்செய்த வேலையடியென்று ம[illegible]னை யின்னும் சில தினத்தில் ஒண்டிமுத்தையன் பார்க்கி[illegible]னென்று மவனைப் பொசிக்கிப்போடுகிறேனென்றும் நீ எ[illegible] தாயாரின் சன்னதிக்கு மூன்று ஆடம் நல்லெண்ணையும் எ[illegible]க்குப் பொங்கலிட்டு இரட்டைகுட்டி பலிகொடுப்பாய[illegible]ல், அடிபெண்ணே! எண்ணி மூன்றுமாதம் தொண்ணூ[illegible]ளி லவனைக் கருவறுத் துன்னைச் சொஸ்தப்படுத்துகிறே[illegible]

ன்று வலக்கைப் போட்டுக்கொடுத்தான். ஐயா, பத்திராதிபரே! இவ்விதமாகவே அவன் கோவிலிற்கும், தன் வயிற்றுப்பிழைப்பிற்கும், தன்னைச்சார்ந்து ஷெ கோயிலிலிருக்கப்பட்ட குட்டிப்பூசாரிகளின் வயிற்றுக்கொடுமைக்கும் வகைதேடித்திரிகிறவனென நன்கு விளங்குகின்றது.

ஐயா, திரிசிரபுரத்தில் வசிக்கும் விவேகிகளாகிய வாலிபர்களே! உங்கள் பெண்டீர்களுடகூடவிருந்து மிப்பாதகனாகிய அப்பூசாரி செய்யும் கொடிய செய்கைகளைக் கண்ணுற்று முங்களுடைய மனம் பதைக்கவில்லையா, துடிக்கவில்லையா? புத்திமான்களே! நூறு இருநூறு செலவு செய்து ஒருமங்கையை எட்டித் தொட்டுத் தாலிகட்டின புருடன்கூட செய்திராத செய்கைகளையெல்லா மவன் செய்ய, நீங்கள் கண்ணுற்றிருப்பது உங்களுக்கு வெட்கமில்லையா, விவேகமில்லையா, நாணமில்லையா, இது மானுஷீகப்பிறவியா? அன்று, அன்று. விவேகிகாள்! இடுப்பில் பன்னிரண்டுமுழ உடையும், மேலிலாறுமுழ அங்கவஸ்திரமும், நெற்றியில் பொட்டும், மார்பில் சந்தனமும், குடுமியில் புஷ்பங்களும் சூடி, மீசைகளைக் கருக்காகத்தீட்டி, வீரசூரப்புலிகளைப்போல் வெளியில் வருகிறதினு லென்ன பிரயோசனம். இதைவிட தாங்கள் தங்கள் பெண்டீர்களை இத்தகைய வாலையங்கட்கனுப்பி தாங்களும் மத்தளங்களை மார்பிலணிந்துச் சென்று வாசித்து நடனம்புரிந்து வருவீர்களாகு லும்மைப் போன்றவர்க ளானந்தப்பி க்கியாதை யடைவார்கள். யோசியுமின்! யோசியுமின்!

உத்தமர்களுக் குறைக்கும் தத்துவவிவேசினி நங்காய்! மேலைய பூசாரி கூறியவண்ணம் நின் சகோதரிகளை இப்பாதகப்பூசாரி கிரகத்திற்குச் செல்லவொட்டாவண்ணம் விஸ்தரித்துரைப்பாயென்று நினக்கு வந்தனம். நேயமே! பின்ளைவரத்துக்குச்சென்று புருடனிழந்தவாறுபோல் இப்பூசாரி கிரகத்திற்குச்சென்று வரப்போகிற அவமானத்தை நின் சகோதரிகள் அறியாதிரார். ஐயா, பூசாரி மருளாளிகளே! மானுஷீகராசியில் பிறந்திருக்கும் நீங்களெல்லாம் சிற்றறிவுடைய மிருகராசியைப்போல் நடப்பது மானுஷீகத்தன்மையா? அல்ல, அல்ல. விவேகிகள் மானுஷா மிருகங்களெனவே அழைப்பார்கள். பூசாரிகளே! இத்தகைய பிழைப்பை யனுசரித்துப் பிழைப்பதைவிட, கிண்ணியில் சலங்கொண்டு திண்ணையிலுட்கார்ந்து பிழைப்பது மிகவும் நல்ல பிழைப்பு.

ஐயா, மருளாளியாகிய ராமகிருஷ்ணப்பிள்ளையவர்காள்! யானிவ்விதமா யெழுதினேனென்று என்பேரிலும் ஒட்டைவெடி தொடுக்கப்போகிறீர். பேதையர்களை மிரட்டுவதுபோல் சுயக்கியானத்தைச் சேர்ந்திருக்கும் மெம்போலியர்களின்முன் உங்கள் பகல் திருட்டுத்தனங்களெல்லாம் செல்லுமா? செல்லாது, செல்லாது. பிள்ளையவர்காள், ஒட்டைவெடி தங்களிடமிருக்கிறதா? அல்லது தாயாரிடமிருக்கிறதா? வெடியிருந்தால் குண்டுவேண்டுமே மருந்துவேண்டுமே, ஷாப்பில்போய் வாங்குவீர்போலும். கல்வித்தேற்சியடைந்த இக்காலத்தில் (Indian Penal-Code) என்னும் சட்டத்தை அறிந்திலீர்போலும். ஜாக்கிறதை, ஜாக்கிறதை.

இனி சமயம் நேர்ந்துழி உன் பிழைப்பிற்கும், உன் தாயாரின் பிழைப்பிற்கும் உலைவைக்கினும் வைப்பேம்.

இங்ஙனம்.

திரிசிரபும் புத்தூர்-வையாபுரிபிள்ளை.

கடிதம்.

ஓ, ஆத்திகரே!

வினாவுக்குத் தக்கவிடைவேண்டும்.

பத்தரை மாற்றுதங்கமே பசும்பொன்னே ரத்தினமே
இத்தரா யோர்புகழு மின்ப ரசதேனே
"தத்துவ விவேசினியே" தயவுள்ள கண்மணியே
உத்தமியே பத்தினியே சத்தமுடை யவர்க்குறையே.

பத்திராதிபர் தயைகூர்ந்து பத்திரிகையினோர் கோணத்தில் தீட்டி, நமது தத்துவவிவேசினியில் விடாமுயற்சியாகவெழுதிவரும் சுயக்கியான நண்பரோடு வீண்குதற்கம் செய்து அறியாமைக்கு ஆட்பட்டு, தெரியாமைக்குத் தொண்டுபூண்டு, அந்தகாரத்திற்கு வந்தனம் செய்யும் ஆத்திகரிடமாகிலும், கோ. அணுப்பர்பாளையம் - க. அ. வீரராகவதாசரிவசமாகிலும், மற்ற யேனையோர் வசமாகிலும் விடைபெற்று, நமது த. வி. னி. வாயிலாகவே விடைபகர வேண்டாநின்றேன்.

நமது தேயத்தி லனேக வைஷ்ணவ பாகவதாள் தங்கள் தங்களின் நெற்றிகளில் இரண்டு வெள்ளையும், நடுவில் சிகப்புமான மூன்று குறிபோட்டு வருகிறார்கள். அவர்களைப் பாதம்போன்ற விரண்டும் நடுவில் சிகப்புகோடு மென்னகாரணத்தினுலிட்டு வருகிறீர்களென்று உசாவினால், அவர்களிலனேகர் பன்னீராயிரம் கோபஸ்திரீகளை லீலாவிநோதஞ்செய்து ஆமை, பன்றி, மீன் உருவாகி திருவிளையாடலாடிய ஸ்ரீமந்நாராயணனாகிய ஸ்ரீராமனுடைய திருப்பாதங்களைப் பணிந்து, நாங்கள் வைஷ்ணவ சமயத்தாரென வெளிக்குக் காட்டுகிறோ மென்கிறார்கள். நடுசெகப்பென்னவெனின்; உலகவழக்கமென்றும், முன்னோர் தீட்டியவண்ணம் யாங்களும் நெற்றியிலணிந்து வருகிறோமென்கிறார்கள். இன்னுஞ் சிலரை உசாவினால், ஸ்ரீராமன் தன் மனைவியைச் சுமந்துப் போகச்சே வழியில் சீதை வீட்டுக்கு தூரமாகி வொழுகின ரத்தம் என்றும் பலவிதமாக விடைபகருகிறார்கள். ஸ்ரீராமனை துதித்தேற்றுகிற வைஷ்ணவ பாகவதாளென்ற மேலைய முதல்விடை சரியாக விருந்தபோதினும், சீதையின் மாதவிடாய் விரத்தத்தை நெற்றியிலணிவது புத்திசூன்யமாக விருப்பதல்லாமல், ஸ்ரீராமனும் இரண்டு வெள்ளைபாதம் ஓர் சிகப்பு கோடுமான மூன்றுகுறியைத் தமது நெற்றியில் தீட்டி யிருக்கிறாரோ, அவர் யாரைத்தொழு தடிப்பணிய விருக்கிறாரோ. "சாமிக்குமேல் தகப்பன்சாமி உண்டென்றாற்போல்" இராமனுக்குமேல் ஓர்ராமனுண்டோ? மற்றுஞ் சிலர் சொன்ன கீழ்க்கண்ட விரண்டாவது விடை சிலவேளை சரியென வேற்கினும், அஃது மகாவசுத்தமும் யுக்தி யனுபத்திற்கு நேர்விரோதமும் ஸ்ரீராமன் தன் மனைவி சீதையாகிய வாதையைப்பூசித் தடிபணிகிறவருமாகக் காணப்படுகிறது. அந்தோ! என்ன வனீதம். யோசியுமின், யோசியுமின். ஆதலின் மேலைய உபய விடைகளும் வினாவுக்குத்தக்க விடையாகக்காணுமல் சந்தேகத்தை யுண்டுசெய் தென்னேரமும் ராமனாகிய ரோமனின் துக்கசாகரத்தி லாழச்செய்கின்றமையால், பாண்டவாளுக்கு தூதுசென்ற பரமசண்டாளனாகிய பக்தர் கொடூரன் பாதம்பணி தாசரிகளாகிய வைஷ்ணவபாகவதர்காள் "உண்மைக்குத்தாரமாய்" உள்ளங்கை நெல்லியங் கனிபோல தன் உண்மையான விபரத்தையென் சந்தேகமற தெள்ளிதினுரைப்பீரேல், "செய்யாமல் செய்தவுதவிக்கு-வையகமும்வானகமும்மாற்றலரிது" என்ற சான்றோர் நீதி உரைப்படி யான் செய்த்தக்கதொன் றின்றெனினும், நும்மனோர் நற்குண நற்செய்கைகளை சிந்தித் தொழுதுவேன். இங்ஙனம்.

அறிவிலாதவனாகிய

தி. சி. நாராயணசாமிபிள்ளை, இ. சு. ச. உ. கோ.

சோரநாயகனால்நேர்ந்த விநோதக்கொலை.

புதுச்சேரியில் உ௦-வயதுள்ள தாய்தகப்பனுக்கு அடங்காத தறிதலையொருவன் தனது துர்ச்செய்கை மிகுதியால் அவனுடைய பெற்றோரால் அரசாங்கத்தாரிடம் ஒப்பிக்கப்பட்டான். அவனை அரசாங்கத்தார் சிறைச்சாலையாகிய இராஜாத் தோட்டத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் தண்டித்து வைத்தார்கள். அவன் மேற்படி பள்ளிக்கூடத்தின் உபாத்தியாயருடைய மனைவியிடத்தில் சினேகஞ்செய்து லீலாவிநோதனாயிருந்து சிலநாள்பொறுத்து விடுதலைகாலமானபடியால் நீக்கப்பட்டான். பிறகு அச்சோரஸ்திரீயின் வேண்டுகோளினால் அருகாமையிலிருக்கின்ற பஞ்சு ஆலையில் வேலைசெய்துகொண்டு

முன்போலவே இருவரும் கொஞ்சி விளையாடிக்கொண்டிருந்தார்கள். இப்படி சிலநாள் வசிக்கையில், அவன் அந்தஸ்திரீயினுடைய சகலவித போஷணபூஷணமுமிருந்தும், அவள் பூண்டுள்ள ஆபரணத்தை அபகரிக்க ஆசைகொண்டவனாய் அந்தஸ்திரீயின் மடியில் உட்கார்ந்துக்கொண்டு விளையாடுகிறவன்போல் விளையாடி கழுத்தை நெறித்துப்பிடித்தான். அவள் விளையாட்டுச் செய்கையென்றெண்ணி, அவன் கையைத்தட்ட, மீண்டும் விளையாட்டின் வழியாகவே அவள் கழுத்தை உறுத்திப்பிடிக்கவே, அவள் உயிர்விட்டாள். உடனே அவளுடைய நகைகளையெல்லாம் பறித்துக்கொண்டு அருகாமையிலிருக்கிற முள்ளின் புதறில் தூக்கிப்போட்டுவிட்டுப் போய்விட்டான். பிறகு உபாத்தியாயர், தன்னுடைய மாணாக்கரில் ஒருவனை வீட்டுக்குப்போய் ஜலங்கொண்டுவர அனுப்ப, அவ்விடத்தில் உபாத்தியாயர் மனைவியைக்காணாது, அவள் தோட்டத்தில் இருக்கிற வழக்கமாகையால் அதையறிந்த சிறுவன் தோட்டத்திற்பார்க்க, அவ்விடத்திலுள்ள முள்ளில் உயிர்மாய்ந்துகிடக்கிற கோரத்தைக்கண்டு உபாத்தியாயரிடம் சொல்லவே, உபாத்தியாயர் தன்மனைவி அலங்கோலத்தைக்கண்டு போலீசாரிடம் ரிபோர்ட்டு கொடுத்தான், அவர்கள் பிரேதம் புதைக்க உத்தரவு அடைந்தபின், கொன்ற புலையனைத்தேட அக்காலத்தில் அத்தோட்டத்திலுள்ள குத்தகைதார் மூன்றுபேரும் கொலையாளனும், கொலையுண்டவளும், சேர்க்கைக்குறிப்பைக் கண்டதைச் சொன்னார்கள், உடனே அந்தச்சிறுவனைப்பிடித்து அவன் வீட்டைச்சோதிக்கையில், புறக்கடையின் குப்பையில் நகைப்பெட்டி அகப்படவே, அவனை தொந்திரவுசெய்து விசாரிக்கும்பொழுது குத்தகைதார் மூவரும் சேர்ந்துக் கொலைசெய்ததாக வாக்குமூலம் கொடுத்தான். அந்த மூவரையும் குற்றவாளிகளாக்கி தொந்திரவுசெய்ய அவர்கள் அக்கொலையில் உடன்படாதிருந்தும் உட்பட்டதாக ஒப்புக்கொண்டார்கள். உடனே போலீசார் சாமார்த்தியத்தால் உண்மையைக் கொன்றவன் மூலமாகவே விசாரித்து அம்மூவரையும் விடுதலைசெய்து அக்கொலைப்பாதகனை அத்தேசத்து குடியரசின் ஏற்பாட்டின்படி கொலைசெய்ய உத்தரவில்லாமலிருந்தும் இவனை பழய வழக்கப்படி வாள் இயந்திரத்தினால் சிரச்சேதஞ் செய்யும்பொருட்டு, பிரான்சுதேசத்துக்கு எழுதியிருக்கிறார்களாம்.—வேலூர் ஜநாநுகூலநி.

வர்த்தமானம்.

—கோயமுத்தூர் ஜில்லாவின், ஓர் தாலுகா சிரஸ்தேதாராகிய ஒரு பிராமணப் பிரபுவின்பேரில், ஷெயார் மனைவி ஜீவனும்சத்துக்காக டிஸ்திரிக்ட் முன்சிப்கோரட்டில் பிராது செய்திருப்பதாகவும், அதற்கு மேற்படி சிரஸ்தேதாரவர்கள் ஷெயாள் சோரனுபகப் பிரியையென்றும், அவளை இரண்டுவருஷத்திற்கு முன்னிட்டே மேற்படி காரணமாய்த் தள்ளிவிட்டுத் தான் மறுவிவாகம் செய்துகொண்டிருப்பதாகவும் ஆகையால் ஜீவனும்சம் கொடுக்கத்தான் அருகரல்லவென்றும், ஆன்சர்கொடுத்ததின்பேரில், மேற்படி அம்மாள் "சிவசிவா" நான் ஒன்றும் அறியமாட்டேன். ஆனால் என் எஜமானருக்கு உத்தியோகமாகும் விஷயத்திற்காக அவருடைய உத்தரவின்படிக்கு ஒரு துரையை ஆதியில் நேசித்ததைவிட மற்றொருவரைக் கனவிலும் பார்த்தறியேனென்னும்பயிரங்கமாகச் சொன்னதாகவும் அந்தக்கேசு இன்னும் முடியவில்லையென்றும் எமதோர் நிருபநேசரா லறிந்தோம். இது வெகுவிநோதமும் ஆச்சரியகாரமுமான சங்கதியாயிருப்பதைப்பற்றி எல்லோருங் கவனிக்கவேண்டியதே.

ஆபரணம் பூண்டதால்வந்த ஆபத்து—சென்ற மார்ச்சுமாசக்கடைசியில், புதுவையில் ஓர் சிறுகுழந்தை ஆபரணங்கள் பூண்டு தெருவில் விளையாடுகையில், ஓர் இராக்கதிபோலும் பெண்பிள்ளை குழந்தையை மெல்ல தந்திரஞ்செய்து எடுத்துக்கொண்டுபோய் ஆபரணங்களை கழற்றிக்கொண்டு குழந்தையை கூறு கூறாய் வெட்டி அக்கூறுகளை ஓர் சாக்குபையில் கட்டி தலைமீது எடுத்துக்கொண்டு கண்டமங்கலம் சாயர் வழியாய்ப்போயினளாம். அவள் சாக்கில் உப்போ அபினியோ ஏதோ கொண்டுபோகிறாளென்று சாயரிலுள்ளோர் சந்தேகித்து மூட்டையை அவிழ்த்து பரிசோதிக்கையில் குழந்தையின் கூறுகளைக்கண்டார்களாம். இவளை போலீசார் வசம் விசாரணைக்கு ஒப்புவித்திருக்கிறார்களாம்.

—கொட்டயூரில் ஒன்பதுவயதுடைய பாலவிதந்துவப்பெண் தன்இஷ்டசகியுடன் தானடைந்த நிர்ப்பாக்கிய நிலைமையைப்பற்றி பிரஸ்தாபித்துக்கொண்டு வருங்கால், மிக புத்தி சாதுரியமாக குறிப்பிட்ட விஷயத்தை நமது நண்பர்களுக்குச்சொல்ல யெத்தனப்படுங்கால் மனவருந்துகிறது. அக்கொடுமையான வசனம் என்னவென்றால், "பிராணசகியே! நாயகனில்லாத இந்தப் பூமியிலிருப்பதைக்காட்டிலும் உடன்கட்டை யேறுவது உத்தமமடி, என்தலைவிதியடி யென் மதிகெட்டது. சுகருணமில்லாமலும் என் பெற்றோர்களுக்கு சதாகாலம் மனம்வருந்த ஜீவிப்பது என்னத்திற்கு?" நண்பர்களே! இக்கொடிய வசனத்தை சீர்தூக்கிச் சிந்தியுங்கள். இச்சிறுவயதுடைய பெண்ணுக்கிருக்கும் அறிவுகூட நமது ஆண்டில் முதிர்ந்த ஆண்மக்களுக்கில்லையே! பரிதாபம், பரிதாபம்.

வண்ணார் விண்ணப்பம்—சென்னை முனிசிபாலிடியார் வண்ணார் வெளுக்கிற கல்லொன்றுக்கொரு ரூபாய் வரி விதிக்கவே வண்ணார்கள் வீடொன்றிற்குத் தாங்கள் கொடுக்கிற ஒருரூபாய் போதாதென்று கல்லொன்றுக் கொருரூபாய் விதித்துவிட்டார்களென்று முறையிட்டும் முனிசிபாலிட்டியார் கேளாதிருப்பதினால், தங்கள் நிர்ப்பாக்கியத்தைக் கவரன்மென்டாருக்கு விண்ணப்பஞ்செய்திருக்கிறார்கள். கடந்த செவ்வாய்க்கிழமை சுமார் முன்னூறு வண்ணார்கள் சென்னைக் கோட்டை வாசற்படியில் மாட்சிமைபொருந்திய கவர்னர் கவுன்சலுக்கு வருகிறபரியந்தங் காத்திருந்து அவரைப் பின்றொடர்ந்துபோய் முனிசிபாலிடியார் தங்களுக்கு விதித்திருக்கிற வரி சுமக்கக்கூடாததாக விருக்கிறதென்று எழுதிக்கொண்ட விண்ணப்பத்தைக் கொடுத்தார்கள். கவர்னர் அதைவாங்கி வாசித்துப்பார்த்துச் செக்ரிட்டேரிகள் வசமளித்தார். அவர்களென்ன முடிவுசெய்வார்களோ!

—சிம்லாவில் கல்மழை பெய்ததாம்; ஒவ்வொரு கல்லும் கோழிமுட்டையினளவு இருக்குமாம். கர்லங்குலம் கனமுள்ள பெருத்த கண்ணாடியுங்கூட தாங்கப்பலனற்றுடைந்தது. இதனால் கல் எவ்வளவு பெரிதென்பதை யிதைப் படிப்பவர்களே யறிந்துகொள்ளலாம்.—தேசாபிமானி.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும் வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிராயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் பெரம்பூர் பாரெக்ஸ்ரோட்டில் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the Authi Kalanithi Press, No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 18.] MADRAS :—SUNDAY MAY, 2, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

பிராமணபுராதனம்.

௯௫ - ம் பக்கத் தொடர்ச்சி.

இதன்றியும் சிவனும் அவர் மனைவியாகிய பார்வதியும் மாமிசபட்சண விருப்பமுடையாரென அறிவித்தற்கு அறிகுறியாக அவர்களை வழிபட்டொழுகும் அனைவரும் சென்ற நூற்றாண்டுவரையில் நரபலி கொடுத்துவந்தார்கள். இத்தகைய சிவன் விஷ்ணு முதலியோர்க்கு உணவைவைத்து நைவேத்தியஞ்செய்யு நிமித்தமாகவே அவரவர்களின் பெயரால் பிரதிமைகளை வைத்துள்ள ஆலயங்களின் துவஜஸ்தம்பத்திற்குமுன் வட்டவடிவாகக் கருங்கல்லினால் பலிபீடமென்றொரு கல் செதுக்கி நாட்டப்பட்டிருக்கின்றது. அப்பலிபீடத்தின்மீது வைத்து நைவேத்தியஞ்செய்யும் நிவேதனப்பொருள்கள் எப்பொழுதும் ஒரேவிதமாக இராமல் காலந்தோறும் வேறுபட்டே வந்திருக்கின்றன. எப்படி எனின்:- நரபலி கொடுத்துவந்த முன்னாளில் மாந்தரை வெட்டி அப்பலிபீடத்தின்மீது நைவேத்தியம் புரிந்துவந்த கொடுந்தொழில் ஆங்கிலேய துரைத்தனத்தாரால் மறுதலிக்கப்பட்டபின், அது நிறுத்தப்பட்டு ஆடு, மாடு, எருமைகள் நிவேதனப்பொருளாக பலிகொடுக்கப்பட்டு வந்தன. அதன்பின், ஜீவவதைபுரிவதே இழிவான கிரியையென பௌத்தர்களால் அருவருக்கப்பட, அதுவும் நிறுத்தப்பட்டு சாதத்தையே நிவேதனப்பொருளாக வைத்து நைவேத்தியஞ் செய்து வருகின்றனர். ஜீவபலி கொடுத்துவந்த முற்காலங்களில் அப்பலியினின்று வடியும் உதிரத்தைச் சாதத்தில் விட்டு கலந்து, அச்சாதத்தை அவ்வவ்வாலயங்களின் சுற்றுப்புறமாகிய பிரகாரங்களில் வசிக்கும் தேவர்களெனத் தம்மவரால் கூறப்படும் பிராமணர்களுக்கு ஆஹுதியமாக்க் கொடுத்து, அவற்றின் மாமிசங்களை அவ்வவ்வாலயத்திற்குச் சம்பந்தப்பட்ட பிராமணரனைவரும் உண்டுவந்தனர். பிராமணரனைவரும் மாமிசம் புசித்தல் அடாதகிரியையென நிறுத்தி ,பின் பலியிடுவதையும் நிறுத்தியதனால் தற்காலம் பெரும்ன்மை வருடத்திற்கொருமுறை காளிகோவில்கள்தோறு ஜீவபலிகொடுத்து அதில் வடியும் உதிரத்தைச் சாதத்தோ கலந்து வீதிகள்தோறுஞ்சென்று ஆஹுதியாக இறைக்கின்றனர். சென்னைக்கடுத்த பெரியபாளைய தேவதையாகிய பிராமணகுலத்தில் தோன்றிய பரசுராமரது தாய்க்கு நாளதுவரையில் வருஷத்தில் ஆடி ஆதிவாரங்கள்தோறும் எண்ணிறந்த ஆடு கோழிகளை பலிகொடுத்து வருகின்றனர். இவ்வண்ணம் பிராமணர் புரிந்துவந்த கொடிய கிரியைகளனைத்தையும் எடுத்துரைக்க என்மனம் மிகவும் பதைக்கின்றதே. ஐயோ! கங்கைக்குப்பலியாக இளங்குழந்தைகளை கங்காநதியில் எறிவித்தும், தெரீசாவில் பயிர்செய்யும் வயல்களின் பூமாதேவிக்கு ஆகாரமாகக் குழந்தைகளைக் கொன்று புதைக்கச்செய்தும், ஜெகநாதத்தில் அத்தெய்வத்திற்குப் பிரீதியாக அவ்விடத்தில் செல்லும் இரதத்தின் கீழ் சிறுவர்களை படுக்கவைத்து நொறுங்குண்டு இரக்கச்செய்வித்தும், கணவனையிழந்த கைம்மாதரை அக்கினிதேவதைக்கு இரையாக உடன்கட்டை யேறுவித்தும், இன்னும் இவைபோல அனந்த கொடுந்தொழில்களைச் சற்றேனும் இரக்கமின்றிப் புரிவித்தும்வந்தனர். இவ்வாறு புரிவித்துவந்த கொலைத்தொழில்கள் முற்றும் ஆங்கிலேய துரைத்தனத்தாரால் கண்டிக்கப்பட்டமையால், அத்தேவதைகள் அனைத்தும் நரமாமிசபோஜனமற்று ஏக்கமுற்றிருக்கின்றன.

இதன்றி, விஷ்ணுவெனும் பிராமணனும் எழுகினால் விருத்தவடிவமாக அமைத்த சக்கரமென்னும் ஆயுதத்தினால் தம்பகைவரைச் சங்கரித்தும், உணவிற்கு வேண்டிய விலங்கினங்களைக் கொன்றுதின்றும்,இலட்சுமியென்னும் மாதை மணம்புரிந்தும், நகர்கள்தோறுஞ்சென்று எதிர்ப்பட்ட யவ்வனமாதரின் கற்பை யழித்தும் திரிந்தனர். விஷ்ணு ஓர் நாயகன் சுவாதீனத்திலிருந்த அதிரூப சுந்தரமும், பரபுருஷகமனஞ் செய்யாதவளுமாகிய பிருந்தையென்னுங் கற்புடைய மாதின்மேல் நெடுங்காலம் காதல்கொண்டு, பலவாற்றானும் முயற்சித்து வருநாளில், அம்மாது சிரோன்மணி வியாதியால் பீடிக்கப்பட்டு மறித்தமையால், அவளது நாயகன் தன் மனைவியின் தேகத்தைத் தகனமாக்கினன். இதனைக் கேள்வியுற்ற அவ்விஷ்ணுவானவர் மிகவும் வியாகுலமடைந்து அம்மாதைத் தகனித்த மயானத்திற்கேகி பிருந்தையின் உடல் வெந்தெரிந்துபோன சாம்பரின்மீது விழுந்து புரண்டழுது பிரலாபித்தனர். இச்செய்கையையே வருடந்தோறும் அவ்விஷ்ணுவின்மீ தன்புடையார் பிருந்தாவனோற்சவமெனப் புகழ்ந்துகொண்டாடுவர். அப்பிருந்தை வெந்து தணிந்த சாம்பரின்மேல் உற்பவித்த பச்சிலையைத்தான் தொளசியென்றும், விஷ்ணுவிற்குப் பிரீதியென்றும் சாத்துகின்றனர்.

பிராமணர் ஆங்காங்குள்ள அரசர்களின் திரவியங்களைக் கிரகித்து மேன்மையடையு நிமித்தமாகவே அவ்வவ்வரசரிடஞ்சென்று, நீங்கள் ஜீவதசையோடிருக்குமளவும் எங்களைக் கடவுளாக மதித்து வணங்கி வருவீராயின், நீங்கள் இறந்தபின் உங்களைக் கடவுளாகக்கருதி யாம் வணங்குவோமெனவுரைத்து அங்ஙனமே இராமர்,கிருஷ்ணன், காசிவிஸ்வநாதன்,காஞ்சி கரிவரதராஜன்,திருப்பதி வேங்கடராஜன், தில்லை கோவிந்தராஜன், மதுரை சோமசுந்தரபாண்டியன், திருவொற்றியூர் தியாகராஜன்,பழனி செங்கல்வராயன் முதலிய மன்னர்களையடுத்து அவ்வரசர் ஜீவித்திருக்கும் வரையில் எண்ணிறந்த பிராமணர் அவ்வரசரைச்சூழ்ந்து அவர்கள் திரவியத்தைக் கிரகித்துவந்தார்கள். அவ்வரசர் இறந்தபின் அவர்கள் மைந்தரைக்கொண்டு முறையே ஆலயஞ் சமைப்பிக்கச்செய்து அந்தந்த நகருக்கு ஒவ்வொரு ஸ்தலபுராணமெழுதி, அப்புராணத்தில் இவ்வரசரையே பிரத்தியக்ஷமான தேவதையென ஏற்படுத்தி, அவர்கள் மைந்தரைக்கொண்டும், மற்றுமுள்ளோரைக்கொண்டும் இக்கடவுளுக்கு விவாகமென்றும், சோபனமென்றும், காலைபோஜனமென்றும், மாலைபோஜனமென்றும், நகர்சோதனை வருகிறாரென்றும், இன்று பள்ளியறைக்குப் போகிறாரென்றும் ஏற்படுத்தி, இன்னின்ன கிரியைகளுக்கு இன்னின்ன பதார்த்தங்கள் வேண்டுமெனவும், இவ்வளவு பொருள் காணிக்கையாகக் கொடுக்கவேண்டுமெனவும் ஏற்படுத்தி அவர்கள் பொருளினை கிரகித்துவந்தனர். (அந்தந்த ஸ்தலத்தின் பூருவசரித்திரத்தைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் அந்தந்த ஸ்தல புராணத்தை வாசித்துத் தெரிந்துகொள்க.) இரணியனென்னும் ஓரரசன் கல்வியறிவால் சிறப்புற்றோங்கித் தனது

நிழற்கீழ்வாழுங் குடிகளின் உயிரையும், உடைமையையும், தனது உயிரும் உடைமையும்போல பாவித்துப் பாதுகாத்து வந்தனன். பிராமணர் இப்பட்டவர்த்தனனிடமுஞ் சென்று அவனைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ள முயன்றார்கள். அயல் உடைமைக்குப் பேயாய்ப்பறந்து, அகத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றும் செய்யுங் குணமுடைய இவ்வகுப்பினர் செய்த வாக்குபசாரம், மாயநட்புகளால் களிப்படையாமல் இவர்களுக்கு அடிநாக்கு நஞ்சு, நுனிநாக்கு அமிர்தமென்று புத்தி பூர்வமாய்க் கண்டறிந்து அவர்கள் இடத்தினின்று உதிக்குஞ் சித்திரப்பேச்சுகளுக்கு மனமகிழாமல் இவர்களைத் தனது நாட்டினின்றும் அப்புறப்படுத்தி "யாவர்க்குந்தெய்வ மிலைமுகப்பைம்பூணிறை" எனும் முதுமொழிக்கிணங்கத்தானே யாவர்க்கும் இறைவனெனவும், தன்னையே யாவரும் வணங்கவேண்டுமெனவும் பிரசித்தப்படுத்தி அவ்வண்ணமே புரிவித்துவந்தனன். இவ்வாறு புரிவித்து வருவதைக்கண்ட விஷ்ணுவெனும் பிராமணன் யாவருந் தன்னையுந் தன் மரபினரையுங் கடவுளாக மதித்து வணங்கவேண்டுமெனப் போதித்துவருவதற்கு வெதிரேகமாக இவ்விரணியன் தோன்றினமையால், இனி வாளாயிருப்போமாயின் ஏனைய வரசர் இவ்விஷயத்தைக் கேள்விப்படின் தமக்கும் தம்மரபினருக்குமுள்ள பொருள்வரவும், கௌரவமும் அற்றுவிடுமெனக்கருதி அவ்விரணியனை நாசப்படுத்த அவனது மனைவியையும், புதல்வனாகிய பிரகலாதனென்பவனையும் கைவசப்படுத்தி ஏதேதோ உபாயத்தால் நாயகனுக்கும் நாயகிக்கும், தந்தைக்கும் புத்திரனுக்கும் பகையை மூட்டுவித்து விரோதிக்கச்செய்ய, அவ்விரோதத்தினால் பிதாவுக்கும் புத்திரனுக்கும் வாக்குவாதம் நடக்கையில் விஷ்ணுவென்னும் அப்பிராமணன் அகோரவேடம்பூண்டு, சிம்மநகம்போல் எழுகினால் செய்த கூரிய ஆயுதத்தைக் கரத்திலேந்தி, ஓர் ஸ்தம்பத்தின் மறைவில் நின்று தருணம் பார்த்து அவ்விரணியன்மீது பாய்ந்து, அவன் குரல்வளையைக் கடித்து, உதிரத்தைக்குடித்து, அப்பானத்தாலுண்டான வெறியினால் மற்றுள்ளோரையும் அச்சுறுத்தி, யாவரையும் தன்னை வணங்கும்படி ஏற்படுத்தினான். இதன்றியும், பிராமணர் இலங்கையில் பிரவேசித்து அங்குள்ளோரையும் வசப்படுத்த முயலுங்கால் அவ்விலங்காதிபதியாகிய இராவணன் இப்பிராமணப்பூண்டுகளைத் தன் நாடுநகரங்களில் நிலைபெறவொட்டாது அப்புறப்படுத்தினன். இவ்வாறு இராவணன் அப்புறப்படுத்தியதினால் பிராமணர் கெடுநினைவுகொண்டு அவ்விராவணனுடன் இலங்காபுரி முழுவதையும் படுசூரணமாக்கிவிடக்கருதி அந்நகரவாசிகளை இராக்ஷதரென்றும், அரக்கரென்றும் மிகு இழிவாகப்பகர்ந்து, பிராமணவிசுவாசிகளாகிய அயோத்திமாநகரை அரசுபுரிந்துவந்த தசரதருக்கு அவரது இளையமனைவியைக்கொண்டு இராமரை நகரைவிட்டு வனசஞ்சாரம் புரியிக்கும்படி துர்ப்போதனைகளைப் புகட்ட, அவ்வாறே இராமர் தன் இல்லாளோடும், தம்பியாகிய இலட்சுமணரோடும் "தந்தைசொன்மிக்க மந்திரமில்லை" எனும் முதுமொழிக்கிணங்க தந்தை மொழியைக் கடவாமல் வனப்பிரவேசமாகுங்கால் அப்பிராமணர் பரிதாபப்பட்டவர்களைப்போல நடித்து, அவருடன் தொடர்ந்து அவ்விராமரை இந்தியாவின் தென்கோடிக்கு அழைத்துவந்து, இராமருக்கும் இராவணனுக்கும் பகையை மூட்டுவித்து, அவ்விராவணனின் பங்காளியாகிய விபீஷணனைக் கைவசப்படுத்தி, அவனால் இராவணனது அந்தரங்க மர்மங்களனைத்தையுமறிந்து, இராமரை ஏவி இராவணனுடன் அவன் மனைவிமக்களையும், சகோதரரையும் மற்றுமுள்ள அந்நகரவாசிகள் அனைவரையும் சங்கரிக்கச்செய்து அவ்விலங்கையைப் படுசூரணமாக்கிவிட்டனர். இவ்வாறு கொடுமைகளையே புரிந்துவரும் பிராமணர்களில் சிறந்தோனாகிய விஷ்ணுவைப் பின்பற்றின கிருஷ்ணன் தனக்கு முலைப்பால் கொடுத்த பூதகி எனும் மாதின் முலைப்பாலுடன் உதிரத்தையும் உரிந்துவிட்டதினாலும், கர்ணனும் அருச்சுனனும் போர்புரியுங்காலையில், அர்ச்சுனன் எய்த அஸ்திரங்களினால் கன்னன் தேகத்தினின்று வடியும் உதிரத்தில் மிகஆவல்கொண்டு அருச்சுனனிரதத்தைவிட்டிறங்கிக் கன்னனிடஞ்சென்று, சில தந்திரமொழிகளையுரைத்து அவன் தேகத்தினின்று வடியும் உதிரத்தை தாரைவார்க்கப் பெற்றுக்கொண்டதினாலும், விஷ்ணுவின் இயல்பாகிய உதிரபானஞ்செய்யும் தன்மை அக்கிருஷ்ணனிடத்தும் விளங்கிற்று. இக்கொடுங்கொலைத்தொழில்கள் அனைத்தையும் நோக்கிய இத்தேசத்தார் தவவேடம் சூதுமார்க்கமென அறிந்துணரவே அக்கிரியை நிறுத்தப்பட்டு ஞானோபதேசகிரியை ஆரம்பிக்கப்பட்டது. இத்தவவேடகாலத்திற்கே கிருதயுகமென நாமம் புணர்த்தினர். இக்கிருதயுகத்திலிருந்த பிராமணரனைவரும் நரமாமிசமுதல் நாய்மாமிசம் ஈறுயுள்ள சர்வ மாமிச வகைகளையும் பட்சித்துவந்ததுமன்றிச் சோமபானமும் செய்துவந்ததாக அவர்கள் இயற்றிய வேதாகமங்களினாலேயே தெளிவாக விளங்குகின்றது. இப்பிராமணர் ருக்வேதத்தை வரைந்த அக்கிருதயுகத்தில் நடந்தேறிவந்த தவவேடச்சூதினை யாவரும் அறிந்துகொண்டமையால், அது நிறுத்தப்பட்டது. அவ்வாறு நிறுத்தப்பட்ட அக்காலத்தையே கிருதயுகத்தின் முடிவெனவும், அந்த யுகத்தின்காலம் 17,28,000 - வருஷமெனவும் பெரும்பொய்யைக்கூறி, அப்பொய்யான வசனங்களைத் தாங்களியற்றிய புராணாதிகாவியங்களில் எழுதிவைத்தனர். இக்கிருதயுகத்தில்தான் பிராமண சமயவித்து ஆங்காங்கு சிற்சில இடங்களில் ஊன்றப்பட்டதேயன்றி, வருணபேதவித்து நாட்டப்பட்டதில்லை. கலியுககாலம் 4,32,000-வருஷமென்றும், துவாபரயுககாலம் கலியுககாலத்திலும் இருமடங்கு அதிகமானதென்றும், திரேதாயுககாலம் கலியுககாலத்திலும் மும்மடங்கு அதிகமானதென்றும், கிருதயுககாலம் கலியுககாலத்திலும் நால்மடங்கு அதிகமானதென்றும் புராணகாவியங்களில் எழுதிவைத்தனர். அவை:—

கிருதயுகத்துக்கு - 17,28,000.
திரேதாயுகத்துக்கு - 12,96,000.
துவாபரயுகத்துக்கு- 8,64,000.
கலியுகத்துக்கு - 4,32,000.

இனி ஞானத்தின் அளவினை எழுதுகிறேன்.

(இன்னும்வரும்.)

M. MASILAMONI.

ஆலயங்களில் தாசிகள்.

சிவாலய விஷ்ணுவாலயங்களில் நெடுங்காலமாய் தாசிகளிருந்து வருகின்றார்கள் என்பதுண்மையே. சுவாமிக்குப் பலவித உபசாரங்கள் புரிந்துவருவதோடு கணிகைமாதரைக்கொண்டு நாட்டிய உபசாரஞ்செய்யும்படி சாஸ்திரங்கள் பகர்கின்றன.* ஆதலால் அங்ஙனமே நாளதுவரையில் இயற்றிவருகின்றார்கள். மேற்படி தாசிகள் ஆலயங்களில் வேண்டிய பணிவிடைகள் புரிந்து அங்கு தரும் சாதத்தை வாங்கிச் சாப்பிட்டு யாதொரு கெட்ட நடத்தைகளில்லாமல் முன்பு நடந்துவந்தார்கள். இப்போதோ அது சுத்தமாய் மாறிவிட்டது. பற்பல ஜாதி புருஷரோடு சேர்ந்து வாலிபர் புத்தியைக்கெடுத்துப் பிதிரார்ஜ்ஜித ஸ்வயார்ஜ்ஜித திரவியங்களை நாசம்செய்து அரையாப்பு, கொறுக்கு, வெள்ளை முதலிய துர்வியாதிகளைத்தரும் வேசித்தொழில் செய்வதற்கே முற்றும் வெளிவந்த மாதரையே முத்திரை போடுகிறார்கள். அவர்கள் வாலிபரை மயக்கும் வண்ணம் ஆடை ஆபரணங்கள் தரித்து மேனிமினுக்கி, சுவாமி தரிசனம் செய்து நற்கதியடையவரும் புருஷரை அங்ஙனம் செய்யாவொட்டாமற் கெடுத்து மாயவலைவீசித் தங்களைத் தேடிவந்து தங்களோடு புணர்ந்து அவர்கள் மாதா, பிதா, மனைவி, மக்களைத் துறந்து தங்கள் திருவடியே கதியென்று அடைந்து பலவித பாபச் செய்கைகளைச்செய்து இகபர சுகங்களையிழந்துபோகச்செய்கிறார்கள். o இது யாவரும் அறிந்தவிஷயமே. இவ்வ

* கண்ணிருந்தும் பார்க்கவுங் காதிருந்துங் கேட்கவும்மாட்டாத பிரதிமைகளுக்கு இதில் என்ன பிரீதியுண்டாமோ தெரியாது.

o இக்குற்றம் இவர்களுடையதோ, இவர்களைச் சன்மானிக்கும் சாத்திரத்தினுடையதோ?

ளவு கெடுதியுள்ள அம்மாதனை ஆலயங்களில் இக்காலத்தில் சேர்க்காமலிருப்பது உசிதமென்று கல்விமான்கள் யாவருமே ஒப்புக்கொள்கிறார்கள். எதற்காக ஆலயங்கள் ஏற்பட்டனவோ அதற்கு நேர்விரோதமான துன்மார்க்கத்திற்கு மேற்படி தாசிகளிடந்தருவதால் அவர்களைப் பரிஷ்காரமாய் ஆலயங்களிலிருந்து நீக்கிவிடுவது எவ்வளவோ புண்ணியமான காரியம். இதைக்குறித்து எந்த தர்ம்மகர்த்தரும் யோசிப்பதில்லை. திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய மடத்தார்க்குள் வெகு ஆலயங்களிருக்கின்றன. ஆதலாலும் அவர்கள் விசேஷமாய்ச் சாஸ்திர வாராய்ச்சி செய்தவர்களானதாலும், அவர்கள் தங்களுக்குட்பட்ட ஆலயங்களில் முன்பு தாசிகளை விலக்கிவிடுவார்களானால் அவ்வாறே மற்றவர்களும் விலக்குவார்கள். தாசிகளிருந்து ஆலயங்களிருப்பதைக் காட்டிலும் அவ்வாலயங்களில்லாமலிருப்பதே மேலென்று யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

தாசிகளைக் கோவிலுக்கு முத்திரைபோடுவது அடிமையாக்கிக்கொள்வதே. சட்டப்படி ௧௬-வயசில் முத்திரைபோடவேண்டும். சாஸ்திரத்தில் ருதுவாவதற்கு முன்பே முத்திரைபோடச் சொல்லுகிறது. ௧௪, ௧௬, ௧௮, ௨0-வயதுள்ள தாசிகள் அனேகர் ஆலயங்களில் இப்போது இருக்கிறார்கள். இவர்கள் ருதுவாவதற்கு முன்பே முத்திரை போட்டிருக்கவேண்டும். ௧௨, ௧௪-வயசில் ருதுவாகிறது வழக்கம். இவர்கள் ௧௨, ௧௪-வயதிற்குள், அதாவது ௮, ௯, ௧0-வயசிலேயே ஆலயங்களுக்கு அடிமையாய் முத்திரை போடப்பட்டிருக்கவேண்டும். ஆக்டில் ௧௬-வயதிற்குள் அடிமையாக்கப்படாதென்ச் சொல்லுகிறது. இப்படியிருக்க, இப்போது சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலும் இரகசியமாய் ௮, ௯, ௧0-வயசில் முத்திரை போடுவதாய்த் தெரிகிறது. இது வெளிப்பட்டால் தர்ம்மகர்த்தர்க்கும், குருக்கள் அர்ச்சகர்க்கும், தாசிப்பெண்ணின் வீட்டார்க்கும், துணைநின்றவர்க்கும் தப்பித்துக்கொள்ள முடியாத சங்கடங்களில் அகப்பட்டுக்கொள்ளவேண்டிவரும். சென்னையைச்சார்ந்த கோயம்பேடு, பழவேற்காடு இவ்விரு ஆலயங்களில் இப்படிப்பட்ட கே[illegible]சுகள் போலீசார் வசம் அகப்பட்டுப் பிரபுக்களெல்லாம் வாரண்டிற்கு மறைந்து பின்பு ஆயிரம் ஆயிரமாகச் செலவுசெய்து பட்டபாடும் கெட்டகேடும் சென்னைவாசிகள் அறிந்திருப்பார்களன்றோ? அப்படியிருக்க, இரகசியமாய் போலீசு உத்தியோகஸ்தருக்கும் மற்றவர்க்கும் சுவர்ணபுட்பம் சமர்ப்பித்து இன்றும் முத்திரைபோடுகிறார்களே. ஒருமுறை இல்லாவிட்டாலும் ஒருமுறை வெளிப்படின் பெருத்த அபராதத்தோடு ஜெயில் எப்படி இருக்கிறதென்றுவது எட்டிப்பார்க்க நேரிடுமே. ஒருகாரியம் தொடங்குங்கால் நன்றாய் ஆலோசித்தன்றோ தொடங்கவேண்டும். தருமகர்த்தர் மௌடீகமாய் ஆலோசனையின்றி நடப்பது நன்றல்லவே. எந்தச் சமயத்தில் எந்தகோவில் தர்மகர்த்தர் அகப்பட்டுகொள்வரோ அறியோம். ஓ குருக்கள்மாரே! ஓ அர்ச்சகரே! நீங்கள் ஜாக்கிரதையாயிருங்கள்; ௧௬-வயசிற்குள்பட்டு முத்திரை போடாதீர்கள்; சாஸ்திர மிடங்கொடாமையால் ருதுவான பெண்களுக்கும் முத்திரைபோடாதீர்கள்; தர்ம்மகர்த்தர் பலாத்காரம் செய்தாலும் இணங்காதீர்கள்.

சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலும் ஆங்காங்குள்ள அதிகாரிகளைக்கொண்டு ஒவ்வொரு ஆலயங்களிலும் தாசிகள் எத்தனை பேரிருக்கிறார்களென்றும், அவர்கள் வயசு இத்தனையென்றும் வருஷாவருஷம் தர்ம்மகர்த்தரிடம் கணக்குவாங்கும்படி கவரன்மெண்டார் ஒரு ஏற்பாடு செய்வார்களானால், அன்றே கோவில்களைவிட்டுத் தாசிகள் ஒழிந்துவிடுவார்கள். இது தக்கயோசனை. கவரன்மெண்டார் அவசியம் செய்யவேண்டுவதே. கவரன்மெண்டார் சிலவருஷகாலம் செய்தால் போதும். பின்பு கோவில்களில் மருந்துக்கு வேண்டுமானாலும் தாசிகள் அகப்படமாட்டார்கள். பின்பு தாசிகளில் வெகுபேர் சமுசாரிகளாய்ப் போவார்கள். கோவில்களில் தாசிகள் கூடாவெனச் சொன்னோமன்றி அவ்வவ்வூர்களில் வேசிகளிருக்கக் கூடாவெனப் பகர்ந்தோமில்லை. மேற்படி விஷயத்தைப்பற்றிக் கவரன்மெண்டார் கவனிக்காவிடின், சென்னை மகாஜனசபையாரும் மற்ற சபையாரும் இதைச்சுட்டி ஓர் மனுசெய்து கவரன்மெண்டாருக்கு அனுப்புவது நன்றெனப் புலப்படுகிறது.

இதை மற்ற பத்திரிகைகளிலும், இந்துமுதலிய இங்கிலீஷ் பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்ய மன்றாடுகின்றோம். இன்னும் தங்களபிப்பிராயத்தையும் கூடச்சேர்க்கலாம்.—சுதேசமித்திரன்.

ஒருபெண்ணைக் கலியாணம் செய்துகொள்ளவந்த மூன்று போட்டி வரன்கள்.

சென்ற வாரத்தில் ஹைகோர்ட்டில் நூதனமான விண்ணப்பமொன்று விசாரணைக்கு வந்தது. கொல்ல இரங்கநாயகம்மாள் என்னும் ௧0 - வயதுள்ள ஒரு கோமுட்டி ஜாதி சைவசமயப்பெண் தனக்கு ரக்ஷகியாயிருந்துவந்த தன் பாட்டியாரை இழந்துவிட்டமையால், அப்பெண்ணும் அவளுக்குள்ள ௨0,000 - ரூபாய் பெறுமான ஆஸ்தியும் ஹைகோர்ட்டாருடைய ஆதரணைக்குள் எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்தப் பெண்ணுக்கு வேறு ரக்ஷகர் நியமிக்கவேண்டுமென்று கோர்ட்டாரை விண்ணப்பம் செய்துகொண்டதற்கு கோர்ட்டார் அந்தப் பெண்ணுக்கு சமீபகாலத்தில் கல்யாணம் ஆகப்போகிறபடியால், அதன்பிறகு அவள் தன்னுடைய கணவனின் நேர் ஆதரணையின்கீழ் இருந்துவரலாமென்றும், அதற்குள் வேறுரக்ஷகர்கள் நியமிக்கப்படவேண்டிய தில்லையென்றும் உத்தரவு செய்தார்கள். அதன்பேரில் அந்தப் பெண்ணுக்கு மூன்று வரன்கள் வந்தன. ஒருவரனுடைய பெயர் கோபாலசெட்டி, வயது ௧௮-இருக்கும். இவன் இச்சென்னையில் ஒருபாரியவர்த்தகராகிய வெங்கட்டராம செட்டியினுடைய குமாரன், முதல் தாரமிழந்தவன். முதல்தாரத்தால் ஒருபெண்குழந்தை யிருக்கிறது. பெண்ணைப்போல சைவமதத்தைச் சேர்ந்தவன். பெண்ணுக்கு ௩0,000-ரூபாய் சீதனமளிப்பதாகச் சொன்னான். இரண்டாவது வரன் ஜி. வெங்கட்டராமையசெட்டி யென்னுமொருவர், இவர் பி. ஏ. பிரிக்ஷை கொடுத்து சேலம் ஜில்லா ஒஸூரில் ஸப் ரிஜிஸ்திரார் வேலையிலிருக்கிறார். வயது ௩௧-ஆகிறது; இவரும் சைவமதஸ்தர். ௩ - வது வரன்: இந்நகரிலுள்ள தனமிகுந்த ஒருவர்த்தகராகிய மம்மையசெட்டி என்பவருடைய குமாரனாகிய ௧௨-வயதுள்ள ஒரு பையன் இப்பொழுது பச்சையப்பமுதலியார் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கிறான். இவனைக் கல்யாணம் செய்துகொண்டால் பெண்ணுக்கு ௪0,000 - ரூபாய் சீதனம் கொடுப்பதாக அப்பையனின் பெற்றோர்கள் சொன்னார்கள். அன்றியும், இப்பையனே அப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ளத் தகுந்தவனென்று அப்பெண்ணினுடைய இறந்துபோன பாட்டியாரால் சிபார்சுசெய்யப்பட்டிருக்கிறான். ஆனால் வைஷ்ணவ மதத்தைச்சேர்ந்தவன். இம்மூவரும் அப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்வதற்காக சென்ற திங்கட்கிழமையதினம் ஹைகோர்ட்டாருக்கு அவரவர்கள் வக்கீல்கள் மூலமாய் விண்ணப்பம் செய்துகொண்டார்கள். அப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள இம்மூவர்களுக்குடைய பாத்தியதைகளையும்பற்றி கோர்ட்டார்முன் பேசப்பட்டதில் இரண்டாவது விண்ணப்பதாரனாகிய ௧௨-வயதுப் பையன் வைஷ்ணவமதஸ்தனாதலால், அவனுக்கு அப்பெண்ணைக் கொடுப்பதாயிருந்தால் கல்யாணம் செய்யுமுன் பெண்ணையும் வைஷ்ணவமதத்துக்கு மாற்றும்படி சூட்டினால் முத்திரைபோடவேணுமென்றும், அது மிக குரூரமானதென்றும், அவனுக்குப் போட்டியாய் வந்த மற்றிருவர்களும் கக்ஷிபேசினார்கள். அதன்பேரில் கோர்ட்டார் முதலாவது விண்ணப்பதாரன் முதல் தாரமிழந்தவனும் ஒரு குழந்தையையுடையவனுமாயிருத்தலால், அவனுக்கு இப்பெண் கிடைக்கமாட்டாதென்றும் மற்ற இருவர்களில் ௧௨ - வயதுப்பையனே அப்பெண்ணுக்கு அதிகலாயக்குள்ளவனாக விருந்தபோதிலும், முத்திரை குத்தும்விதம் அதிக குரூரமாயிருக்கும்பக்ஷத்தில் ஹைகோர்ட்டார் அதற்கு சம்மதிக்கமாட்டா

ர்களென்றும், ஆகையால் முத்திரைபோடும் விஷயத்தைப்பற்றி விசாரித்த பிறகு தீர்மானஞ் சொல்லுவதாகவும் அதற்குள் ௩-வது விண்ணப்பதாரனாகிய ஸப் ரிஜிஸ்தாரரை கோர்ட்டார் பார்வையிடுவதற்காக கோர்ட்டுமுன் வரும்படி கேட்டுக்கொள்ளவேணுமென்றும் சொன்னார்கள். அந்தப்படியே சென்ற புதன்கிழமையதினம் ஹைகோர்ட்டில் மிஸ்டர் ஜஸ்டிஸ் கர்னன் முன்னிலையில் இதுவிஷயமாய் திரும்பவும் விண்ணப்பம் செய்துகொள்ளப்பட்டதின்பேரில் நீதிபதியவர்கள் முத்திரைபோடும் விஷயத்தைக்குறித்து விசாரித்து அப்படி முத்திரைபோடுவதில் குரூரமானதாவது, அநாகரீகமானதாவது ஒன்றுமில்லையென்று திர்ப்திகரமாய்த் தெரிந்துகொண்டதின்பேரில், அப்பெண்ணைக் கல்யாணம் செய்துகொடுப்பதற்குத் தகுதியான வரன் மம்மய்செட்டியின் குமாரனாகிய ௧௨-வயதுள்ள பையனேயென்று தீர்மானித்து அப்படியே கல்யாணம் நடத்தும்படி அனுமதிகொடுத்தார்.—சுதேசமித்திரன்.

மதவிருக்ஷ நாஸ்திககண்டனம்.

ஆருமில்லாதவூரில் அஸ்வமேதம் புரிதல்போலும், குண்டுசட்டியிற் குதிரை யோட்டுதல்போலும் நாஸ்திகரில்லாவிடங்களில் நாஸ்திககண்டனம் செய்துவிட்டோமென்றும் பகடிவார்த்தைகள் பேசி மகிழ்ந்து தம்மவரோடு மகிழ்வுற்றிருப்பது பேரும் பிரதாபமுமன்று. இங்ஙனம் செய்யின் பூர்வமிருந்த மதாசிரியர்கள் கோடிகோடியாய்ச் செய்துள்ள கிரந்தங்களுக்கும் இதற்கும் என்னபேதம்? அவர்கள் பரமதகண்டனமாகவும், சமய ஸ்தாபகமாகவும் இயற்றியுள்ளதால் அதன்முன் இது பிரயோசனமற்றதாய் விடுமே: மதகண்டனம் செய்யவல்ல தீரபுருடர்கள், அவ்வம்மதத்தினரை நேரே வைத்துக்கொண்டு பிரஞ்ஞா உத்தரமாகத் தமது கக்ஷியை நிலைநாட்டியபின், அங்குள்ள மத்தியஸ்தர்கள் சாக்ஷியத்துடன் தமது சித்தாந்தத்தை வெளியிடுவாரேல், அதுவே பேரும் பிரதாபமுமாம். இப்படிக்கல்லாமல் தட்டிப்பேச ஆளில்லாத மறைவிடத்தில் தம்பிமார் சண்டப்பிரசண்டம் செய்வது தகாது.

வர்த்தமானம்.

திருவள்ளூர் வீரராகவர் கையுடைந்தது, டாக்டர்மாராகிய பிராமணர்களுக்கு கும்பாபிஷேக முதலியவற்றால் பலத்த ஆதாயங்கிடைக்கும். மருத்துவர் பலர்கூடி குழந்தையைக்கொன்ற கதையாய் முடிந்ததெனப் பேசிக்கொள்கின்றார்கள்.

—மெஸ்தர் கிளாட்ஸ்தன் அவர்கள் ஐர்லாந்து தேசத்தாரை ஒருவாறு திர்ப்தி செய்யும்பொருட்டு அத்தேசத்தாருக்கு உள்நாட்டு துரைத்தனவிஷயத்திலும் சட்டநிருபகம் செய்துகொள்ளவும் சுதந்திரம் கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்து அதற்காக ஒருபில் தயார்செய்து காமன்ஸ் சபையார்முன் கொண்டுவந்திருக்கிறார். அவர் இந்த ஏற்பாட்டை வெளியிட்டதின்பேரில் முன்னமேயே இதுவிஷயமாய் மந்திராலோசனை சபையில் மெம்பர்களாயிருந்து வேலையைவிட்ட மெஸ்தர் சாம்பர்லேன், மெஸ்தர் ட்ரிவெலியன் இவர்களைத்தவிர இன்னுஞ்சிலர் தங்களுடைய வேலைகளை ராஜிநாமா கொடுத்துவிட்டார்கள். அவர்களில் ஒருவராகிய லங்காஸ்டர் மாகாணத்து சான்ஸெல்லராயிருந்த மிஸ்டர் ஹினியேஜ் என்பவருக்கு பதிலாக இந்தியா உதவி செக்ரிடெரியாகவிருந்த மிஸ்டர் யு. கே. ஷட்டில்வர்த் அவர்கள் அவ்வேலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறார். அவருக்கு பதிலாக மிஸ்டர் எட்வார்ட் ஸ்டாபோர்ட் ஹவார்ட் என்பவரை மெஸ்தர் கிளாட்ஸ்தன் இந்தியா உதவி செக்ரிடெரிவேலைக்கு நியமித்திருக்கிறார். இவர் பர்மா சண்டையைக்குறித்து பார்லிமென்டில் நடந்த தர்க்கத்தில் அச்சண்டையின் செலவை இந்தியாவின் தலைமீது கட்டுவது நியாயமல்லவென்று மிஸ்டர் ஹண்டர் அவர்கள் கொண்டுவந்த திருத்துப்பாட்டுக்கு அனுகூலமாய் அவருடன் வோட்டுக்கொடுத்த ௮௨-பெயர்களில் ஒருவரென்று அறிகிறோம்.

—இத்தேசத்து ஸ்திரீகள் பிள்ளைகள் பிறக்கவில்லையென்று பலவாறு பிரார்த்தனை செய்துகொண்டு பலவிடங்களுக்கு யாத்திரை போகிறார்கள்: இதுவுமன்றி அரசமரங்களைப் பிரதக்ஷணம் செய்தும், துளசிசெடி பூஜைசெய்தும் பலவாறு பிரயத்தனப்படுகிறார்கள். இவைகளினாலெல்லாம் பிள்ளைகள் பிறக்குமா? எதுவும் சந்தற்பானுசரணை யிருக்கவேணும்; இதுவுமன்றி தேகசவுக்கிய மிருக்கவேணும். இப்படி கடையில் பிள்ளைகள்பிறந்தால்அவைகளை சாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ள அவர்களுக்கு சக்திகிடையாது.வேளையில் சாப்பாடு கொடுக்கவேணும். அப்போதைக்கப்போது குழந்தைகளுக்கு ஸ்தானம் பண்ணிவைத்து தேகத்தை சுசியாக வைத்திருக்கவேணும். இப்படியெல்லாம் செய்தால்தான் அக்குழந்தைகள் வியாதியின்றி வளரும். இப்படியெல்லாம் அக்குழந்தைகளை வளர்க்காமல் காதுகளையும், மூக்குகளையும் குத்தி அவைகளை கோரப்படுத்துவதில்மட்டில் இத்தேசத்து ஸ்திரீகள் வெகு ஜாக்கிரதையாக இருக்கிறார்கள். இத்தேசத்து ஸ்திரீகள் நகைகள் போட்டுக்கொண்டபோதிலும் ஏன் தேகத்தை கோரப்படுத்தி நகைகள் தரிக்கவேணும். இதைப்பற்றி நமது தேசத்து புருஷர்கள் அங்கங்குள்ள ஸ்திரீகளுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டே யிருக்கவேண்டும்.

—தூக்கம் தேகத்துக்கு பிரதானம். பகல்முழுதும் வேலைசெய்து இராக்காலத்தில் அலுப்புற்று ஜனங்கள் தூங்குகிறார்கள். அப்படி கிரமப்படி தூங்கினால்தான் மறுபடியும் வேலைசெய்யலாம். இதையறியாமல் நமது தேசத்தார் இராக்காலங்களில் வீண்பொழுது போக்கிவிட்டு நாளெல்லாம் தூங்குகிறார்கள். நாள்முழுதும் தூங்குவதால் தேகத்துக்கு உபாதியேயன்றி வேறல்ல. மேலும் இராக்காலத்தில் ஜனங்கள் அலுத்து தூங்கும்போது அவர்களுடைய தூக்கத்தைக்கெடுப்பது மிக அதர்மம். இதுதெரியாமல் பல மேளவாத்தியங்களை யடித்துக்கொண்டு இராத்திரி ௧௨-மணிக்கு மேல் தெருத்தெருவாய்ச்சென்று தூங்கும் ஜனங்களை விழித்துக்கொள்ளும்படி அனேகர் இத்தேசத்தில் செய்துவிடுகிறார்கள். இதை சுதேசிகள் நிறுத்தவேணும். மேளவாத்தியங்கள் முழங்கக்கூடாதென்று நாமிங்கு சொல்ல வரவில்லை. காலாகாலத்தில் எதுவும் செய்யவேணுமென்பதுதான் நமது கருத்து. மேலும் எந்தவேலை செய்தாலும் ஜனங்களுக்கு எவ்வித உபத்திரவமுமின்றி செய்யவேண்டும்.

—தாசிகள் கச்சேரிகளை இத்தேசத்தார் நிறுத்திவிடவேணும். இந்த தாசிகளை இராக்காலங்களில் நிற்கவைத்து இராமுழுதும் கூத்தாடவைப்பதுபோல் கொடிய பாவம் ஒன்றுமில்லை. இப்பட்டணத்தில் வண்டிகளில் ஓடும் குதிரைகள், மாடுகள் அதிகமாய் அடிபட்டு காயப்படுத்தியிருந்தால் அந்த வண்டிக்காரர்களை மாஜிஸ்திரேட்டின்முன் பிடித்துக்கொண்டு போகும்படி ஓர் சங்கம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அம்மாதிரியாகவேஇப்பட்டணத்துப் பல கனவான்கள்கூடி ஓர்சங்கம் ஏற்படுத்தி தாசிகளை ஆடும்படி வருத்துகிறவர்களை தண்டனைசெய்யும்படி முயலவேண்டியது. தாசிகளை பாடும்படிசெய்வது சரி. வீணைகளையும், பிடில்களையும் கையில் கொடுத்து அவர்களிடத்தில் சங்கீதம் கேட்கலாம். இதுமேல். இதைவிட்டுவிட்டு அவர்களை கூத்தாடும்படி செய்யும் அனுஷ்டானத்தை நமது நாட்டார் நிறுத்திவிடவேணும்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)		Rs.	As.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிநாயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொஸைடி ஆனரரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால் பெரம்பூர் பாரெக்ஸ்ரோட்டில் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natcoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—NO. 19] MADRAS:—SUNDAY MAY, 9, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து —குறள்.

நாஸ்திகம்.

நாகர்கோவிலில் பிரசுரமாகிவரும் "தேசோபகாரி" என்னப்பட்ட ஓர் கிறீஸ்த மாதாந்தர பத்திரிகையில் பேக்கன் என்று கையொப்பமிட்டு அடியிற்கண்டவாறு தீட்டப்பட்டிருக்கிறது.

"ஓர் தேவன் உண்டு என்பதை மறுக்கிறவர்கள் மனிதனுடைய மேன்மையை மறுக்கிறார்கள், எப்படி என்றால், மனுஷன் தன் சரீரத்திலே மிருகங்களுக்கு உடந்தையாயிருப்பது திண்ணம். அவன் தன் ஆவியினாலே தேவனுக்கு உடந்தையாயிராவிட்டால் அவன் இழிவும் எண்ணிக்கையற்றதுமான மிருக ஜீவன்களுக்குச் சமானமானவனாவான், மேலும் நாஸ்திககொள்கை மனுஷசுபாவத்தின் மகத்துவத்தையும் உயர்வையும் அலக்கழிக்கிறது. இதற்கு ஒருநாயை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். அது ஒருமனிதனால் ஆதரிக்கப்பட்டு அவன் தனக்கு தெய்வமாய் அல்லது மேலான சுபாவமுள்ளவனாய் இருக்கிறான் என்று காணும்போது அது எத்தனையோ தயாளத்தையும் தைரியத்தையும் தரித்துக்கொள்ளுகிறது என்றுபார். அந்த தைரியம் தன்னிலும் மேலான சுபாவமுள்ள ஒருவன்பேரில் வைக்கும் திடநம்பிக்கையினால் அன்றி மற்றப்படி அதற்கு வரவேமாட்டாது, இவ்வாறு மனிதனும் தெய்வீகபாதுகாப்பு தயாபரம் என்பவைகளில் சார்ந்து திடநம்பிக்கைகொள்ளும்போது வெறும்மனுஷசுபாவத்தில் கிடைக்கமாட்டாத சத்துவமும் விசுவாசமும் அவனில் ஜனிக்கிறது; ஆகையால் நாஸ்திகம் சகலவிதத்திலும் வெறுக்கப்படத்தக்கதாய் இருக்கிறதுபோல மனுஷபலவீனத்துக்கு மேலான உயர்பதவிக்கு மனுஷசுபாவத்தை ஏறெடுக்கும் எத்தனத்தையும் அது கொடுக்கிறதினால் சர்வநிஸ்காரத்திற்கும் உரியதென்றே சொல்லவேண்டும்"

தற்காலம் உள்ள சென்னை சுவஞானசாதனை தேவன் உண்டு என்பதை மறுப்பதல்ல. பூர்வமிருந்த சார்வாகர் முதலிய சமயத்தவர்களே மறுத்தவர்கள். இவர்கள் இதை மறுப்பினும் மனுஷமேன்மையை யெப்படி மறுக்கின்றார்களோ தெரியவில்லை ஆவி மனிதனுக்குப் புறம்பாகிய தனிப்பதார்த்தமா? நிரூபிப்பதற்கு முன்னம் மனிதனை யுயர்த்திப்பேசல் ஆதரவற்ற உபாயாம். மனித உயர்வு மனிதன் தன்மனோரத சம்யுத்தமாய்த் தற்சிருட்டி செய்துகொள்வதினாலேயேயா நிலைநிற்கும்? தன்மனத்திற்கும் யுத்தி அனுபவாதிகளுக்கும் எட்டாதயாதோ ஒன்று இருக்கிறதென்று மனோபீதிகொண்டு அறியாமைக்கு ஆட்பட்டு தெரியாமைக்குத் தொண்டுபூண்டு அந்தகாரத்திற்கு வந்தனஞ்செய்வதா மனுஷஉயர்வு? இதை எம்மனோர் கருத்தில் சித்தபேடிமையென்றே மதித்திருக்கின்றோம். யோசனுபுருஷத்துவமன்றும். மிருகாதிகளுக்கு ஆன்மா வில்லையென்றும் மனிதருக்கே பிராபரன் தன் ஆவியை நாசியில் ஊதியமையால் ஆன்மா உண்டென்றும் சொல்கின்ற கிறீஸ்தவர்களே ஆன்மாவில்லாத நாயை உதாரணமாக வெடுத்த பேச்சனை அநுவதித்துக் கூறுவது அதிகவிந்தை.

இந்த ஆதாரமில்லாத வாதத்தை அவலம்பிக்கும் கிறீஸ்தவர்கள் தங்கள் விவிலியநூலைக் கைவிட்டார்கள்போலும்.

சுவஞான இந்நாட்கண்ணி.

வேதமெனும் வேதாளம் வேதனை செய்யாதோடப்
பாதகஞ் செயுஞ்சமயப் பற்றொழிவ திந்நாளே.

ஜாதி சமயமெனும் சண்டாளப்பேயோட்டி
நீதிநெறி நின்று நிஜம் பெறுவ திந்நாளே.

வேதியர்கள் கூடிமுன்னாள் வேண்படி கட்டிவைத்த
வாதனைசெய் வேதத்தை வாட்டிடுவ திந்நாளே.

சமயமெனும் பேய்க்கதையைச் சாற்றி மதிமருண்டு
இமைப்போதும் நண்ணு திருக்குநா ளிந்நாளே.

ஆரணங்க ளாகமங்க ளயன்றி தேவர்களுங்
காரணங்க ளென்றெண்ணுங் கருத்தொழிவ திந்நாளே.

மந்திரங்கள் யந்திரங்கள் மயக்குபில்லி சூனியங்கள்
தந்திரங்க ளென்றெண்ணித் தள்ளுநா ளிந்நாளே.

வேட்டியுந் தாழ்வடமும் வெண்ணீறும் வெண்பல்லுங்
காட்டிக் களவுசெய்வோர் கள்வரென லிந்நாளே.

சமய குரவரொனுஞ் சண்டாளர் பொய்மொழியை
இமைப்பொழுது மெண்ணு திருக்குநா ளிந்நாளே.

கள்ளுனை வேட்டுக் களிக்கின்ற ஞானிகளை
எள்ளாமலெள்ளி யிகழுநா ளிந்நாளே.

அத்தனிருப்பை யெண்ணி யாராய்ந்து காணாமல்
சுத்த சுவஞான சுகம்பெறுவ திந்நாளே.

உளியிட்ட கல்லும் உருப்பிடித்த செஞ்சாந்தும்
புளியிட்ட செம்பும் பொய்யாவ திந்நாளே.

சிந்தை சிவமென்னுந் தீப்பிடித்து மாளாமல்
முந்த சுவஞானம் முதிருநா ளிந்நாளே.

நானங் கொண்டு அலைந்தழிந்து போகாமல்
நானங் கொண்டு சுகிக்குநா ளிந்நாளே.

ஆலயங்க ளோடிநிதம் அர்ச்சனைகள் செய்வோரை
வேலையற்ற வீணரென வெறுக்குநா ளிந்நாளே.

வேசை யாசையாலே விழாக்களுக்கு ஓடிநிதங்
காசழிக்கு நீசர்களைக் கடியுநா ளிந்நாளே.

தீர்த்தங்களாடித் திரிந் தலைந்து மாய்வோர்க்கு
வார்த்தைசொல்லி நன்னெறியில் வரிக்குநா ளிந்நாளே.

விநோதசரித்திரம்.

இப்பெயருடைய புத்தகம் ஒன்று நாம் வரப்பெற்றோம். இதை ஆக்கியோர் - திரிசிரபுரம் - வித்வசிரோன்மணி - ம-ா-ா-ஸ்ரீ, கோவிந்தப்பிள்ளை யவர்கள் புத்திரரும் பெங்களூர் சென்றல்காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய ம-ா-ா-ஸ்ரீ தி-கோ-நாராயணசுவாமிபிள்ளையவர்கள். இந்நூல் இங்கிலீஷ்பாஷையில் "நாவல்" என்று சொல்லத்தக்கதாயினும் அந்த நாவல்கள் பெரும்பாலதாய் சிற்றின்பவிஷயங்களாகவும் கனவுகண்டிரங்கல் நனவெழுந்திரங்கல் உருவுகண்டிரங்கல், பிரிவாற்றாமை, உளாவியந்திரங்கல்முதலிய விஷயங்களாகவுமிருக்கும். இதிலோ வித்தியார்த்திகள் வாசிக்கத் தகாதவிஷயங்கள் ஒன்றுங்கிடையாது. இஃது சொற்சுவை பொருட்சுவை தொடைச்சுவை நடைச்சுவை வாசகச்சுவை சரித்திரச்சுவை என்னும் அறுசுவைகளையுந்தன்னுள் அடக்கியுள்ளதால் எத்தனைமுறை மாறி மாறி வாசிப்பினும் தெவிட்டாதென்பது திண்ணம். நீதிநூற்சாகரத்தைக் கல்விகேள்வியென்னும் வடங்களால் தொடுக்கப்பட்ட மனமென்னும் மந்திரகிரியாற் கடையவெழுந்த அமுதமே இவ்விநோத சரித்திரமென்னக் கற்றோர் மதிக்கற்பாலது. இதனைச் சூசிப்பான் வேண்டி அவ்விநோத சரித்திரத்தில் கடற்காட்சியால் உணரத்தக்க உன்னத கற்பனைகளை விளக்கத்தக்க ஓர்பாகத்தை இதனடியில் தீட்டிக் காட்டுவாம்.—

அதற்கவர், அப்பா! கடற்காட்சி, உன்கருத்தை மாத்திரமன்று, யாவருடைய கவனத்தையும் கவரத்தக்கது. அது சிறந்த விநோதத்தை விளக்கும். இச்சாகரம், தனக்கு ளடங்கிய அளவில்லாத பொருள்களைக்கொண்டு நமக்குப் பெரும்பயனை யளிப்பதுமன்றிக் கவிவாணர்கள் கூறும் வர்ணனைகளுக்கு இலக்காயிருக்கின்றது. இதோபார், இதன் தோற்[illegible]ர்கிருப்பினும் நீர் வெளுத்துளது கரி கரிதெனினும் குணம் [illegible]ரவது[illegible]. இந்நீர் வெண்மையும் சுத்தமும் உடையதாயினும் உண்ண உதவாததுபோல டம்பம் பெருமை முதலிய [illegible]ர்க்குணமுடையவன் உபயோகியாகான். அறியாமையால் ஆடி ஓடும் சிறுவர்களைப்போலச் சிறுமீன்கள் துள்ளித் திரிகின்றன. இதனைக்கண்ட கொக்கு உறங்குவதுபோல அப்படகில் வாளாநிற்கின்றது. "அடக்கமுடையார் அறிவிலரொன்றெண்ணிக் கடக்கக்கருதவும் வேண்டா" என்னும்பொருளை இதனால் தெரிகிறோமல்லவோ? கல்லாத கயவர்கள் வெல்லக்கருதி யெதிர்ப்பினும் கற்றவல்ல சான்றோர் சற்றும் பேசார். அந்நீர்க்காகம் இரையளிக்கத் தொடர்ந்து தொடர்ந்து சென்றும் அதனை யேற்காமல் எட்ட ஓடும் துஷ்டப்பார்ப்பு, வலியக் கல்விப்பொருளைப் புகட்டமுயலும் உபாத்தியாயர்களை மதியாது விளையாட்டிலே மனம்வைத்துழலும் மாணக்கரை யொத்திருக்கின்றது. அவர்கள் இரைவதுபோல வொலிக்கும் இவ்வலை அடங்கா மனைவியை அடித்து அடக்கமுயலும் ஆடவர்போலக் கரையை அடித்து மோதுகின்றது. வீணாரவாரம் விளைப்பவர் போன்ற இவ்வொலி, அறஞ்செய்தேன் என ஆடம்பரம் செய்வார்போல என்றும் அடங்காது. இது அடங்கினபின் நீராடுவோமென்பவர்போலச் சிலர் நற்கருமங்களைப் பிற்காலம் செய்வோமெனவெண்ணி நாள்கழிக்கின்றனர். அந்தோ! சென்றநாட்களை எண்ணித் தீர்க்கலாம், இருக்கும் நாட்கள் இவ்வளவினவென எண்ணுதலுங் கூடாது. வாழ்நாட்களை வீழ்நாட்களாக்கி வறிதே மாண்டவர்கள் [illegible]ன்றவர்களை வரையறுக்கக்கூடுமோ? அறநெறி [illegible] அறிவுபுகட்டுவது அடாது. புகட்டினும் அதுமலையி[illegible]றைந்த மர ஆணி கூர்மைமழுங்கி அறைந்தவன் கைக்கு அரிய துன்பம் விளைப்பதுபோலாம். எவரெவர்கள் சுபாவம் எப்படியோ அப்படியே யியலும். எட்டிப்பழத்தை யினிப்பாக்கலாமா? வாழைமரம் தீபத்தைக் கிரகிக்காததுபோலச் சில மந்தமதிகட்கு எந்தவிதமாகப் போதிக்கினும் தம்சொந்தபுத்தி யாறாது. அவருட்சிலர் அறிவில் போதிக்கப்பட்டவைகள் அக்கணம் நிற்கினும் புராண வைராக்கியம்போல நீடித்து நில்லா. கரும்பொன், கசடறத் துலக்கும்போது மாத்திரமல்லவோ ஒளிவிடும். கண்டமாத்திரையில் கற்பூரம் தீபவொளியைக் கவர்வதுபோல, உன்னைப்போன் மதியூகிகட்குப்போதிக்க வாய் திறக்குமுன் வஸ்து [illegible]ணர்ச்சிவாய்க்கும். வெண்பொன் செம்பொன்கள் சிறிது துலக்கினும் மிஞ்ச வொளிதரும். எத்தகைய விவேகிகளாயினும் வித்தியாபோதனை அவர்கட்கு நித்தியமும் வேண்டும். விலைவரம்பில்லாத மாணிக்கமாயினும் மாசு படியும். அதுபோல அஞ்ஞானவிருள் யாரையும்விடாது. சுடர் விளக்காயினும் தூண்டுகோலொன்று வேண்டு மல்லவோ? சிலர் ஓதாதுணர்ந்தேமென்று உழறுவது உண்மையாமா? பகலும் இரவும் உண்ணுதவன் பருத்திருப்பானு? நாம் குழவிப்பருவத்தில் மழலைச் சொற் பயின்றது தாய் தந்தைகளிடத்தில் அல்லவோ? விவேக போதினிகளாகிய சாஸ்திர விளக்கு நமது அறிவை விளக்கிக்காட்டும் விமலமான கருவி. இதனை இளமையிலே கைபழகி விளையாடவேண்டும். இங்ஙன மிருக்கும் இவ்வித்யா விளையாட்டையான் சிறுவயதிலே விட்டுச் சாதாரணமான வேடிக்கை பார்த்தலென்னும் வாடிக்கை மேலிட்டு வயதையெல்லாம் வறிதாக்கி என்மனைவியையும் அதனுள் மேவு வித்து அவளையும் அவள்பெற்ற அருமைச் சிறு குழந்தையையும் இழந்து விசனத்துக்குள்ளாகி விழலனுன என்விவேகத்தை யென்னென் றெடுத்துரைப்பேன் என்று உரைத்து மிகுந்த வியாகூலராய் நின்றவிடம்விட்டு அகன்றனர்.

வித்தியார்த்திகள் இத்தகைய கற்பனைகளைத் தாங்கள் பார்க்கும் காட்சிகளை முன்னிலைச் சூட்டாகக்கொண்டு கற்பார்களேல் அவர்கள் அறிவு எவ்வளவு விர்த்தியாகும். கடலோடிகள் சரித்திரங்களையும் குருவி கொக்கு கதைகளையும் சர்வகலாசாலை பரீக்ஷைக்குப் பாடமாகவைப்பதைக் காட்டினும் இத்தகைய நூலைப் பாடமாகவைப்பின் வித்தியார்த்திகளுக்கு மிக நலமுண்டாகுமென்பதற்குத் தடையிராது. இப்புத்தகம் கல்வி கேள்வி அறிவொழுக்கங்களிற் சிறந்த சர்வகலாசாலை அவயவிகள் கண்ணுக்கு எட்டினுல் பருத்தியில் நெருப்பு பற்றுவதுபோல பலன் கிடைக்குமென்று நாம் உறுதியாகச்சொல்வோம். பாடசாலை இன்ஸ்பெக்டர்களுக்கும் ஒவ்வோர் புத்தகம் அனுப்பின் அவர்கள் பாடசாலைகளிலும் பிரயோகிப்பார்கள் அதனுல் விர்த்தியார்த்திகள் பல நீதி நெறிகளை யுணர்ந்து புனிதராவார்கள்.

"சர்வம் பஞ்ச பிர்மம்."

மூடபக்தித்தொடர்ச்சி.

நம்மவர் விக்ரகபூசனைகளைக் கிஞ்சித்து கவனிப்பதல்லாமல் காவடிசுமந்து தோள்கள்தடித்து - கடும்பிரயாணங்கள் செய்து கழுத்தினி லரிசண்டங்களணிந்து செடில்குத்தி யாடி, வன்னியில்விழுந்து கொடியபந்தங்களால் சுட்டு கொக்கரித்துக் கூத்தாடி கோணிக்கோணி அடித்து உடம்பெல்லாங்கீறி தலைமொட்டையடித்து தோளை வல்லிரும்பால்சுட்டு நடைதீபமேற்றிச் செருப்பெடுத்தடிக்க ராமா ராமா வெனக் கதறி விரதமும் நோன்பும் பிடித்து அங்கப்பிரதக்ஷணம் செய்து வள்ளுவன், பார்ப்பான், ஆண்டி, தொட்டியன், கோடங்கிகள் வயித்திய குறிகளைக்கேட்டு யோகமும், வாரமும் பார்த்து மைந்தருக்கு சஞ்சலம் வருமென்றெண்ணி சாதகமெழுதி நாள்கணித்து ராசிபலன்பார்த்து சடங்குகள் விதம் விதமாய்ச்செய்து பல்லி கத்தலுக்கு நே[illegible]யும் பொருத்தம் நிமித்தமும் பார்த்து கல்யாணம், ருதுசாந்தி, [illegible]நாள், சிறுவர் பிறந்த தினத்திலும் ஆடவர் தையலர் இறந்த தேதியிலும் கருமாதி அந்தங்களிலும் நன்மை, தீமை நாட்களிலும் அனைத்திற்குமிவரே முதலென நம்பி, விப்பிரர் சொன்னபடியெல்லாஞ் செய்தடிபணிந்து தொழுகின்றனர். பதிபெற விது சமயமென்றெண்ணி தாடியும் சடையும் வளர்த்து, உருத்ராக்ஷ தாவடம் பல பல கழுத்தினில் கட்டி மயிலின் தோகை, காவி ஆடை, தண்டுடன் கமண்டலமும், சாம்பலும் வீம்புடன்பூசி, ஆயிணமும், குறடும், கவசகுண்டலமுமிட்டு அரகரா வெனக்கத்தி, காடு-மலை-கெபிகளில் புகுந்து கந்தமூலங்களைப் புசித்து கடுந்தவங்கள்செய்து உடலை ஒறுத்து மற்றவரையும் மயக்கித் தம்வசமாக்கிக் கேடுறச்செய்யும் பக்திவேஷப் பகடிகளுக்கு மயங்கி அவரடித்தொண்டுபூண்டு ஒழுகும் நம்மவர் விவேகமேவிவேகம்.!!

நிலையிலாப் பொய்களைநம்பி பொருள் ...ளத்தோற்று பஞ்ச
...பாதகரைக் குருவென்று நம்பி வீண் ...ாஸ்திரங்களைக்கற்று
...றந்திறக்கும் காலம்வரையில பிர ...ணர் பிதற்றிய பொய்
...ளைநம்பி கர்த்தனென்றவரைத் ...தாழுதும் வருகிறார்கள்.
...ளா! பளா! நன்று நன்று கு... ...நின்றுபேய்ந்தால் சீடன்
...ளையவளையப் பெய்வானென் ...படி, கல்வி கேள்விகளில்
...தர்ந்த கதாப்பிரசங்கன்... ...வோரோ கண்டுணர்ந்தறியாவி
...ல் கற்றறியாமூ...ர்கள் ...வ்விதஞ்செய்வார்களென்பதை
...த்திக... ...ண்டுணரவேண்டும்.

புல்தெய்வமானால் மாடு அதனைப்பொசிப்பதற்கியலுமோ
...வன்றும் அல்லது போற்றிய மாடு தெய்வமேயானால் புலை
...னெப்படி யதனைப்பொசிப்பானென்றும் மாட்டின சாணி
...ம் தெய்வமேயானால் அடுப்பினி லெரிப்பதும் அதமமல்ல
...வாவென்றும் அதனைச் சாமபல்களாக்க அக்கினிக்கு பலமு
...தோவென்றும் அக்கினியும் தெய்வமேயானால் மழையினு
...யக்கூடுமோவென்றும் வர்ணனும் தெய்வமேயானால்
...ாய், கை, கால் கழுவவும் படுமோவென்றும் கல்விகற்றறி
...நல்லவரிதனைக் கருத்தினி லிருத்திவைப்பார்.

இங்ஙனம்,
கற்றறியாதவனாகிய
தி. சி. நாராயணசாமிபிள்ளை. இ. சு. ச. உ. கோ.

தொனிகேள்விச்சூத்திரம்.

என்பது செவிடரான மனிதர் காதுக்குப்பதிலாக வாயி
...னால் தொனிகளைக் கேட்கும்படி உதவுகிற சூழ்ச்சமாம். இந்
...க்கேள்வி உபகரணம் சமீபகாலத்திலேதான் கண்டுபிடிக்க
...ப்பட்டது. தற்காலம் இக்கருவி சாமானிய உபயோகத்துக்
...குள்ளாகவில்லை. ஆகையால் தொனிகேள்விச் சூத்திரத்தைக்
...குறித்து நம் இஷ்டர்கள் அறியத்தக்கதாக சுருக்கமும் தெ
...ளிவுமான வரலாறு இங்கே சொல்லுவோம்.

தொனிகேள்விச் சூத்திரத்தை நிர்மித்தவர்தாமே சுமார்
உ௰-வருஷகாலம் செவிப்புலனற்றிருந்தாராம். செவிப்பூரி
...கை முதலிய சூழ்ச்சங்களைப் பிரயோகித்தும், அவைகளினு
...ல் போந்தபடியான சகாயம் கிடையாததையிட்டு, அவர் த
...மக்காகவே சிலபரீட்சைகள் செய்யத்தொடங்கினார். ஒருநா
...ள் தமது கைக்கடியாரத்தை காதில் பிடித்தபோது, அதில்
...யாதொருசத்தமும் கேளாதிருந்தும்; பற்களிடையில் வைக்
...கவே, டிக் டிக் என்கிற அதன் தொனி புலப்பட்டதைக்கொ
...ண்டே இப்படி செய்வதற்கு ஏவப்பட்டார்.

கடியாரத்தின் தொனியைப்போலவே மனுஷசத்தத்தின்
...ஒலிகளும் நரம்புக்குழாயினூடு கேள்வி நரம்புக்குச் செல்ல
...த்தக்கதான ஓர் உபாயம் சூழ்வது சாத்தியந்தான் என்கிற
...யோசனை அவருக்குள் உதித்தது. உடனே அவர் பல பரீ
...க்ஷைகள் ஆரம்பித்து, அனேக வருஷங்களாய் அவைகளை
...நடத்தினதில்; மரங்கள் லோகங்கள் ஆதியான நானாவித வ
...ஸ்துக்களையும் பற்பல வடிவும் வேலைப்பாடு முடையனவக
...ளாய் சேர்த்துப்பார்த்து, கடைசியில் கனத்த மார்ச்சனி
என்னும் ஒரு விசேஷித்தகலவைப் பொருளில் சித்திகண்டா
...ர். அது மெல்லிய கடுதாசி ரூபத்தில் தீர்க்கமான தொனிக
...ளைத் தெளிவாய்க் கேட்கப்பண்ணினதுமன்றி, அவர் சோதி
...த்த மற்றெல்லா வஸ்துக்களில் உண்டாயிருந்ததும் அறிவுக்
...குரிய சம்பாஷணை விஷயத்தில் அவைகளை அப்பிரயோசன
...மாக்கினதுமான இரைச்சல் இல்லாததுமா யிருந்தது. இப்ப
...டிப்பட்ட கருவியின் உத்தமவடிவைக்குறித்து அவர் அப்புற
...ம் ஆராய்ச்சிபண்ணத்தொடங்கி, மிகுந்த, பிரயாசமும் மன
...சாரமும் அடைந்து ஓய்ந்தபின், அறிதற்குரிய தீர்க்க
...தொனிகள் கேள்வி நரம்பில் பாய்வதற்கு சூத்திரத்தின்வெ
...ளிப்புறம் கவிந்த வடிவாய் இருப்பதும், செவிடரான தனி
...தனி ஆட்களின் அவசியம் குணங்குறிகளுக்குத் தக்கதாய்
...த்தபடி கவிந்தவடிவைச்சரிக்கட்டுவதும் அவசரம் என்று
...கண்டறிந்தார் தூரதிருஷ்டிக் கண்ணாடி முதலிய நயனக்க
...ருவிகளை காட்சிகளின் பேதங்கள் அல்லது தூரங்களுக்கு ஒ
...ப்ப செப்பமாய் அமைகின்றபடியே தொனியானது தெளி
...வும் தீர்க்கமுமாய் திரித்தறியப்படுவதற்கு தொனிகேள்விச்
...சூத்திரத்தின் மையம் பற்பல அளவான கவிந்த வடிவுக்கு
...இசையும் தாரதம்மியமுள்ளதாய் நிர்வகிக்கப்படவேண்டும்
...என்பதே அவர் யூகித்துக்கொண்ட முக்கிய பிரமாணம். ஆ
...கையால் சாதனைக்குக் கண்ணொளி மங்கின ஆட்கள் அவரவ
...ருக்கேற்ற கண்ணாடிகளைத் தெரிந்துகொள்ளுமாறே, செவி
...டர் ஒவ்வொருவரும் தத்தமக்கிசைந்த தொனிகேள்விச் சூ
...த்திரம் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். ஒவ்வொரு
சூத்திரமும் கேட்கிறவனிடத்திலிருந்து பற்பல தூரங்களில்
...றக்கும் ஒலிகளைத் திட்டும் சத்துவமுள்ளதாய் சரிக்கட்
...டத்தக்கதாக இயற்றப்படுவதும் அகத்தியம்.

வேதம் அபௌருஷேயம்.

திவான் பஹதூர் இரகுநாதராயர் அவர்கள் வேதவிஷய
மாய் செய்த பிரசங்கத்தின் சாரம்.

வேதம் ஈசுவரவாக்கா? என்னும் வினாவுக்கு வேதம்என்று
வழங்கிவரும் கிரந்தங்களில் அடங்கிய சொற்களின்கருத்து
கள் ஈசுவரனுடைய கருத்துகளென்றும் அவைகள் அவரா
ல் பலவிதமாக வெளியிடப்பட்டனவென்றும் நம்புகிறேன்.
முதலாவது அவைகளில் சில அவர் வெவ்வேறு ரூபங்களெ
டுத்தகாலத்தில் அவரால் சொல்லப்பட்டன. இரண்டாவது
அவைகளில் சிலவற்றை அவருடைய பக்தர்களுக்குக் காண
பித்து அவர்களை வாசிக்கச்செய்தார். இவ்விதமாய் வெளியி
டப்பட்டவசனங்கள் வெகுகாலம்வரையில் கரணபரம்பரை
யாய் பிதா புத்திரனுக்கும் குரு சிஷியனுக்கும் போதித்துவ
ந்தார்களே தவிர லிகிதமூலமாக எழுதப்படவில்லை. அந்த
வசனங்களால் கருதப்பட்ட அபிப்பிராயங்களில் அநேகம்
உபாக்கியானங்களாகவும் வர்ணனைகளாகவும் சொல்லப்பட்
டிருக்கின்றன, அவைகளின் யதார்த்த தாற்பரியத்தை அவ
ரிடம் அத்தியந்தம் பக்தியுள்ளவர்களே அறிந்திருந்தார்கள்
இந்த பக்தர்களும் தங்கள் சிஷியர்கள் அறியவேண்டிய வி
ஷயமெத்தனையுண்டோ அத்தனைக்கே வியாக்கியானஞ் செ
ய்தார்கள். இதற்கு சில ஆயிரம் வருஷங்களுக்குமுன் வ
ரையில் இந்த தாற்பரியங்கள் சில ஆரியர்களுக்குத் தெரிந்தி
ருந்தது, அதற்கு பிற்பாடு அதுதெரிந்ததாய்க் காணப்படவி
ல்லை. வேதவாக்கியங்கள் மூன்றுவிஷயங்களைக் கற்பிப்பதா
ய் சொல்லுகிறார்கள். முதலாவது ஈசுவரனுடைய குணங்க
ளையும் கிரியைகளையும் தோத்திரத்தையும் சொல்வது, இர
ண்டாவது ஆத்மாவுக்குரிய குணங்களையும் தருமங்களையும்
சொல்வது, மூன்றாவது ஜடபதார்த்தங்களின் குணங்களையு
ம் நியமங்களையும் சொல்வது. இந்த மூன்றையும் ஆத்தியாத்
மம், ஆதிதைவம், ஆதிபூதம் என்று ச...மாய்ச்சொல்லுகி
ன்றார்கள். ஆகையால் வேதத்தில் ஈசுவரனும் அவரது கிரி
யைகளும் ஆத்துமாக்களும் அவைகள் இந்த ஜகத்தில்செய
யவேண்டிய காரியங்களும் ஜடதத்துவங்களும் சொல்லப்
படுகின்றன.

(இன்னும்வரும்.)

பிரம்ஹசமாஜ நா... ...ாடகம்.

(முன்தொடர்ச்சி.)

பாகவதருக்கு விவேகன்சொல் வஞ்சித்துறை.

துய்யநாமங்களிட்டு, மெய்யெலாம்சந்தம்பூசி
கையிலேதுளபமேந்தும், ஐயங்கார்வாரீர்வாரீர்.

வசனம், ஆ! ஆ! திருநாமம் சாத்திக்கொண்டு தேகமெல்
லாம் சந்தனக்காப்பிட்டு துளபங் கையிலேந்திக்கொண்டுதி
ரிகிற அய்யங்காரோ வாருங்கள் வாருங்கள்.

விவேகனுக்கு வைஷ்ணவன்சொல் விருத்தம்.

அரனயனுதிபோற்றும் அரிதனையகலவிட்டே
பிரமமேமுதலாயெண்ணும் பிரமையைநீக்கிநீங்கள்
கருமேகவண்ணவள்ளல் கண்ணனுமுலகமேத்தும்
திருமாலைப்பணிகவென்னத் திருமறையோதுவேனே.

வசனம். அரனென்று சொல்லப்பட்ட சிவன்தானென்
ன அயனென்று சொல்லப்பட்ட பிரமதேவன்தானென்ன
இவர் அனவரதம் அடிவணங்கிப்போற்றி யேத்தாநின்ற அ
ரியென்று துதிக்கப்படும் அனந்தசயனனையறிந்து ஆராதிக்
காமல் அகலவிட்டு ஏதோ இந்தப் பீதாம்பரபெருமானுக்கு
மேல் ஒரு பிரமமிருப்பதாக நீங்கள்கொண்ட பிரமையைவி
ட்டுக் கறுத்ததிருமேனிபூண்ட கமலக்கண்ணனாகிய ஸ்ரீகிரு
ஷ்ணபகவானான திருமாலுக்குத் திருத்துளசியையிட்டுத் திரு
வாராதனை திருச்சேவைசெய்து கடைத்தேறும்படி யுமக்கு
த் திருவாயமொழிப் பிரபந்தங்கள் முதலாகியவைகளையோ
தவந்தேன் விவேகனே-இதோ இரண்டுகைகளையேந்திப்பிடி
நான் ஓதிக்கொடுக்கிற திருத்துழாய் - திருப்பதிவடை - ஸ்ரீ
பாதரேணு, இனியாவது சாம்பல் பூசுகிறதை விட்டுவிட்டுச்
சக்கிராங்கிதம்பெற்றுக்கொண்டு விளக்கமாய்த் திருநாமம்
சாத்திக்கொண்டு பெருமாள்கோவில்களெல்லாம் போய்ச்
சேவைசெய்துகொண்டு நல்லதீர்த்தப் பிரசாதங்களாகிய
சக்கரைப்பொங்கல், புளியோரை, ததியோதனம், வடை
தோசை முதலாகியவைகள் சாப்பிட்டு மார்பில் சந்தனம்பூ
சிக்கொண்டு சந்தோஷமாயிரு. இல்லாவிட்டால் நான்கேட்
கிற வினாவுக்கு விடைகொடு.

விவேகன் சொல்வசனம்.

தாங்கள் கேட்கிற கேள்வியெல்லாம் கேளுங்கள் எனக்கு
த்தெரிந்தமாத்திரம் விடைகொடுத்துக்கொண்டுவருகிறேன்.

(இன்னும்வரும்.)

வர்த்தமானம்.

குருடுஞ் செவிடுமான பத்திராதிபர்கள்.—இங்கிலாந்தில் மில்வோ என்றவிடத்தி லொருபத்திரிகை நடந்துவருகிறதாம். அதன் பத்திராதிபர் சிறு பிராயந்தொட்டு குருடுஞ்செவிடு முடையவராம். அப்படியிருந்தும் ருய வருடங்களாக புதினப்பத்திரிகையை நடத்தி வருகிறாராம்.

சூதினால்வரும் முடிவென்ன.—இங்கிலாந்திலே சில தினங்களுக்குமுன்னே ஒரு பிரபு நித்தியமும் சூதாடித் தோல்வியடைந்தேவந்தார். முடிவில் பெருந்தொகையாக வைத்துச் சூதாடித்தோற்ற வெட்கத்தினாலே, பிஸ்டலினால் தன்னைத்தானே சுட்டிறந்தார். அவருடைய பெண்சாதியும் அந்த மனவருத்தத்தைச் சகிக்கமுடியாதவளாய் லோடனம், வாங்கிச் சாப்பிட்டுயிர்மாண்டாள்.

(ஓம் அன்கலோனியல்மெயில்.)—முற்காலத்திலேயிருந்த பற்பல அரசர்களும் நாடுநகரிழந்தும், தங்கள் அருமருந்தன்ன பெண்சாதி பிள்ளைகளைவிற்றும், ஆண்டிகளானது குடிகெடுக்கும் இச்சூதினாலல்லவா!

அநேகர் தற்கொலைபுரிவதும் இதனாலல்லவா; இப்படிப்பட்ட சூதை நம் சிநேகர் விடாமற் கைக்கொள்வது யாதுகாரணமோ? நாம் ஒன்று சொல்லப்போகுங்கால் தங்களுக்கு அது தீமையென்றுதான் எண்ணினார்கள் போலும்!! இனியாகிலும் இவ்வழக்கத்தை நமது சிநேகர் நீக்கினாலோ? ஆ! ஆ!! கொடிய சூதே! நீ பொருள்களை நாசமாக்கி ஆட்களைப் பரதேசியாக்கினது போதாமல் உயிரையுமா வாங்குகின்றனை?

நூதனமறியற்சாலை.—ஐக்கியமாகாணத்தில் ஓமர்கா என்ற இடத்தில் ஓர் விநோதமான மறியற்கூடமியற்றி முடிவாயிருக்கிறது. அது இரும்பாற்செய்யப்பட்டிருக்கிறது. அதை [illegible]லும் அறைகளிருக்கின்றன. இது வழக்கம் போற்த [illegible] தரையிலூன்றப்பட்ட ஓராணியில் ச்சுற்[illegible] மையிற் கட்டப்பட்டாம[illegible] யொரு அ நின்று சுழலுகின்றது. அது சுழலுகையில் ஒவ்வோரறை மாத்திரம் தோற்றப்படும். அது மூன்றடுக்குள்ளது. ஒவ்வோரடுக்கைச் சுற்றியும் ௰, அறைகளுள் அதின் நிறை சுருடன், இப்பிரமாண்டமான பாரத்தை ஒருவனொரு சிறு கைப்பிடியைக்கொண்டு லேசாய்ச் சுற்றலாம். எந்தமறியற்காரனையாவது தேவையாயிருக்கும்போது மறியற்கூடத் தலைவர் அம்மறியற்காரனிருக்கும் அறை தனக்கெதிரில் வருமட்டுஞ் சுழற்றுவார். அவ்வறை தனக்கெதிரில் வந்தவுடனே ஓர் சிறிய அசைப்பினாற் கதவு திறக்கப்படும். இது நூதனந்தானே!!

எருமைப்பலி.—கோயமுத்தூர் காட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் (டோடாஸ்) என்னும் ஒரு மிலேச்ச ஜாதியார் இறந்தவர்களுக்குச் செய்யும் உத்தரக்கிரியை வெகு குரூரம் சராசரி ௨0 ரூபாய் பெறுமான கிடாக்களில் ௨0, ௩0, எருமை கடாக்களை பலிகொடுத்து வருகிறார்கள். சொத்தும் அதிகமா யழிந்துபோகிறது. அவர்கள் செய்யும் கிருத்தியமும் கொடுமையும் ஒழுங்கீனமுமாயிருக்கிறது. அவ்வெருமை கடாக்களைக் கொன்றுவிட்டாலு மத்துடன் தொந்திரவில்லாமல் செத்துப்போய்விடும். அப்படி செய்வது வழக்கமில்லையாம். தடிகொண்டு கண்டமட்டில் புடைத்து குற்றுயிராய் விட்டுவிடுகிறதாம். அது மரண வலியெடுத்து அதிக அவஸ்தைப்பட்டு உயிர் துறக்கின்றதாம். ஐயோ? ஜீவவதை வீண் போகாது; கொடுமை! கொடுமை! இவ்வழக்கத்தையடியோடே யொழித்துவிட வேண்டுமென்று கலெக்டர் கவர்ன்மெண்டாருடைய உத்தரவின்பேரில் கோட்டீசு பிறப்பித்திருக்கிறார். மேஸ்தர் தாம்ஸ் அவர்கள் டோடாஸ் என்பவர்கள் ௨-எருமைக்கடாக்களை பலியிடுவதாக ஒத்துக்கொண்டதாய் ரிபோர்ட்செய்தார். இனி டோடாஸ் என்பவர்கள், இரண்டு கடாக்கள்தான் பலிகொடுக்க வேண்டுமென்றும், அக்காரியத்தை நிறைவேற்றும்பொழுது போலீஸாரை பக்கத்தில் வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், மிருகத்துக்கு அதிக தொந்திரவு நேரிட்டா லதற்கு போலீஸார் ஜவாப்புதாரிகளா யிருக்கவேண்[illegible] தான்தோன்றியாய்[illegible]மென்றும், அப்படி யளவுக்கு மிஞ்சி[illegible] யடியோடே யொழித்செய்வதாயிருந்தால் இவ்வழக்கத்தை [illegible]டாஸ்களுக்கு அறிவிக்க[illegible] விடப்படுமென கலெக்டர் [illegible] வர்னர் உத்தரவு செய்திருக்[illegible]டுமென்றும் நமது சென்னை [illegible]ன்றார்.

சாட்சிகள்.—மதுரையிலே [illegible] சாட்சிகள் ரூபாய்க்கு நாலு விகிதம் அகப்படுகின்றனவென்று [illegible] ஒரு லாயர் எழுதுகின்றார். அதுசேட்ட பம்பாய் லாயர் ஒருவர் தம் [illegible]ரில் ரூபாய்க்கு 16 விகிதம் அகப்படுமென்று கூறுகின்றார். அதனைக்கேட்ட ஜட்சி ஒருவர் பிராமண சாட்சிகளும் அகப்படுமோவென்று வினவ, பிராமண சாட்சிகள் ரூபாய்க்கு எட்டுத்தான் அகப்படுமென்று லாயர் உத்தரங் கூறுகின்றார்.

சுருட்டுப்பிடிப்பவர்கள்.—கனவான்களிடத்தில் பேசும்போது வாய் நாறுமென்று அஞ்சி எட்ட நிற்பார்கள். அதினால் குணம் உண்டென்று எவரும் சொல்லத் துணியார்கள். நம்மிடத்தில் பூர்வீகத்திலிருந்த துர்வழக்கங்களை ஐரோப்பியர்கள் கைப்பற்றிவருகிறார்கள். அவ்வழக்கங்கள் அப்படியே தூரதேசமொழியட்டும். நாமதை ஒன்றன்பின் ஒன்றாய் ஒழித்திடுவது குணம். வர வர ஐரோப்பியர்கள் தூள்போடவும் கற்றுக்கொள்ளுகிறார்கள். சுருட்டுபிடிப்பவரை நாமிங்கு எடுத்தெறிந்து பேசவரவில்லை. இனி நூதனமாக எவரும் அதை பயிலா திருப்பது நலம். பயின்றவர்கள் அடிக்கடி அகத்தி இலையை சமயலில் உபயோகித்து வருவார்களானால் க்ஷேமமுண்டு. அகத்தி இலை ரசம் புகையிலை புகையின் நஞ்சைக்கெடுக்கும்.

புருஷரால் ஸ்திரீகள்கேடு.—ஐயோ! சிலபுருடர் தமக்கமைந்த நாயகிமார் எத்தனை ரூபலாவண்யமும் சற்குணசீலருமாயிருந்தாலும், தம்முடைய துர்வழக்கங்களாகிய கஞ்சா, அபினி, கள், சாராயமுதலிய லாகிரி வஸ்துக்களையுண்டு, அவர்களை யநேகவித ஹிம்சைகளாகிய ரோதனாதிகளாற்செய்யும் கொடூரமானது அறியாச்சிறுவன் கையிலகப்பட்ட புள்ளினம்போலும், பூனைக்குட்டிபோலும் வருந்தி ஏங்கி அத்துன்மார்க்கரைவிட் டகல்கின்றார்சிலர். சிலரோ வெளிப்பட்டுப்போனால் மானம்போம் என்னுந்துக்கத்தால் தம் வாழ்நாட்களைச் சதா துக்கத்திற் கழித்திருக்கின்றனர். சிலரோ அக்கொடுமைகளைச் சகிக்காமல் நீரிற்பாய்கின்றனர், இங்ஙனே ஆடவர்செய்யுங் கேடுகளால் ஆடவிகள் நற்குணமும் நாளடைவில் மாறுபட்டு சுபாவகுணம் வேறுபட்டு விடுகின்றமையால் பொல்லாப்பெண்டுகளென்ற பெயரை ஏற்கின்றனர். [illegible] பாதாபம.—தி-ணி.

ஆரியபஜினி.—என்னும் பேர்கொண்ட மராட்டி பத்திரிகையொன்றை 'மனுபேஸ்லாத்' என்னும் நாமங்கொண்ட சுதேசப்பெண் ஒருத்தி விசேடித்து நடத்திவருகிறாளாம். இதனால் பெண்களுக்கேற்றப் பிரகாரமாக அநேக நற்காரியங்கள் திட்டியுள்ளதாய்த் தெரியவருகிறது மிக்க சந்தோஷம் சந்தோஷம். தென்னிந்தியா பெண்களும் இப்படிசெய்தால் தேசோபகாரமாம்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு) வெளியூர்—(அட்வான்சு.)

உள்ளூர்	Rs.	As.	P.	வெளியூர்	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாய் வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய்-1 [illegible] ()-ம் செலுத்தவேண்டும்.

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசுவாமிராயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களையும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொஸைடி ஆனரரி செக்ரிட்டேரி மெஸ்டர் அப்ஷன்துரையவர்கள் பெயரால் பெரம்பூர் பாரெக்ஸ்ரோட்டில் அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
Authi Kalanithi Press,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 20] MADRAS :—SUNDAY MAY, 16, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

கடவுள்.

கடவுள் என்னப்பட்ட சொல் வெகு தெளிபொருளாக சர்வசனங்களாலும் வழங்கப்பட்டுவருகின்றது. இந்தசொல்லை வழங்கிவரும் சனங்களுக்கெல்லாம் இச்சொல்லால் சூசிக்கப்படும் பொருள் இன்னதென்றும் அதனது சொரூபலக்ஷணம் தடத்தலக்ஷணம் முதலிய இலக்கணங்கள் அவ்வளவு சாதாரணமாய் விளங்கியிருக்குமென்பதுஞ் சந்தேகம். பொருள்விளக்கமாகாமற் பெயர்மட்டில் பிரீதிகொண்டு இருக்கும்போதும் நிற்கும்போதும் இரவிற்கண் துயிலும்போதும் நடக்கும்போதும் பொருந்தி உண்டு உய்க்கும்போதும் "கடவுளே; ஈஸ்வரா; நாராயணா; ஜகதீசா" வென்று மனுஷகற்பனா நாமங்களையிட்டு அருகிருப்பவனை யழைப்பதுபோல அழைக்கின்றார்களே இஃதென்ன பித்தத்தின்சேட்டையோ யாமறிகின்றிலம். காணாதபொருளைக் கதறிக்கூவியழைத்தும் தெரியாதபொருளைத் தேடியுலைந்து அலைந்தும் பயனொருசிறிதும்பெறாமல் வாணாளை வீணாட்படுத்துவதும் பிருதக்கரண சக்தியுடைய பிராணிகளாகிய மனிதருக்கழகா? இதுமட்டோ வீணிற்கு முத்துலைபோட்டு விழலுக்கிறைத்ததுபோல தாங்கள் தாங்கள் வருந்தித்தேடியபொருள்களையெல்லாம் கோயிற்கட்டடத்திற்கென்றும், கும்பாபிஷேகத்திற்கென்றும், திருவிழா நைவேத்தியமுதலியவற்றிற்கென்றும், கொட்டுமுழக்கிற்கென்றும், ஆபரணத்திற்கென்றும், கல்செம்பாதி யுலோகங்களாற்செய்த விக்கிரகங்களைக்கழுவி யாடையாபரண அலங்கிர்தஞ்செய்து கனங்குறைந்துமாயும் நம்மிந்துவிவேகிகளுக்கு என்னதான் சொல்வோம். மரப்பாச்சிக்கு மாலைசாத்தி மணம்புரிந்து களிக்கும் மந்தமதியுடைய நம்மக்களுக்கும் அனுபவமுதிர்ந்து அறிவிற்சிறந்த நம்ம ஆத்திகமார்க்கும் என்னபேதம். அவ்வீண் விஷயங்களிற் செலவிடும் பொருள்களைக்கொண்டு அன்னதானம்செய்தாலாகாதா? வித்தியாசாலைகட்டுவித்தாலாகாதா? வித்தியாபிவிர்த்தியின்பொருட்டுச் செலவிட்டாலாகாதா? அனாதரவாகிய பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் பசியாதிதேகபிணிகளைத்தீர்க்க வைத்தியசாலை வயோதிகசாலை முதலியன வேற்படுத்தினாலாகாதா? பொன்னாற்பிரயோசனம் பொன்படைத்தாற்குண்டோ அல்லது அப்பொன்னிற்குத்தானுண்டோ† எல்லாமுடையார் கடவுள் என்னுங்கியானம் உண்மையாகவே இவர்களுக்கு இருக்குமானால் இவர்கள் என் அக்கடவுளுக்கு ஆடையாபரணம் தூபதீபநைவேத்தியம் செய்கின்றார்கள்? ஓர்பொருளின்பிரயோசனம் அஃதில்லாதவர்களுக்கு அதைக்கொடுத்தால் உண்டாகுமோ, உள்ளவர்களுக்குக்கொடுத்தால் உண்டாகுமோ யோசித்துப்பாருங்கள்.

நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா?

அமரம்பேடு

முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

"ஆத்துமா அழிவில்லாததா?" என்னும் தலைப்பெயருடைய மெய்யறிவு உ-ம் பாகத்தின் கடைசியில்மனிதருடைய ஆத்துமா அழிவில்லாததென்பதற்கு விக்கினம் வருமாயின், அவனுடைய நல்லொழுக்கத்திற்கு அழிவுவருமென்று சிலர் சொல்லுவதைப்பற்றி வேறு சஞ்சிகையில் எழுதுவதாக நான் குறித்திருப்பதால், ஆத்துமா அழிந்துபோவதாயிருக்குமாயின், மறுமைப்பயனனுபவம் அவசியமில்லாமற்போதலின், நல்லொழுக்கமுடையவனாயிருக்க வேண்டுமென்கிற எண்ணம் மனிதனுக்குண்டாக மாட்டாதென்று அவர்கள் சொல்லுகிறதினிமித்தம், மனிதனைச் சன்மார்க்கத்தில் நடத்துவதற்கு மோட்சசாம்பிராஜ்ய சந்தோஷமும் நரகவேதனை துக்கமும் இருக்கவேண்டுமென்பது எவ்வளவு மட்டில் பயன்படுகிறதோ அதை ஆராயவேண்டி, இந்தவிஷயத்திற்கு "நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா?" என்கிற தலைப்பெயரிட்டு எழுதத்தொடங்குகிறேன்.

நல்லொழுக்க மின்னவையென்றும் தீயொழுக்கமின்னவையென்றும் ஆதியிலேதானே வேதங்களிலும் பின்பு அவற்றை அனுசரித்து ஆகமபுராண மனுநீதி சாஸ்திரங்களிலும் வகுக்கப்பட்டிருக்கின்றனவென்றும் அந்த நல்லொழுக்கங்களை அனுசரிப்பது புண்ணியமென்றும் அதனால் மேலுலகத்தில் பேரின்பமுண்டாகுமென்றும், அந்தத் தீயொழுக்கங்களை அனுசரிப்பது பாவமென்றும் அதனால் நரகலோகத்தில் பெருந்துன்பமுண்டாகுமென்றும் சொல்லுகிறார்கள்.

ஆதியிலே மாமிசபட்சணமும், மதுபானமும், நரபலி மிருகபலிகளும் சாதாரணமாய் நடந்தேறிவந்தன. இவை அப்போது வேதமாகிய சுருதி சம்மதமாகவே யிருந்திருக்கின்றனவென்றும், பின்னர் அவை பாபகிருத்தியங்களென கலியுக தருமத்தைநோக்கி ரிஷிகள் ஸ்மிருதிகள்செய்து அவற்றின்மூலமாய் விலக்கியிருக்கிறார்களென்றும் சொல்லுகிறார்கள். நாளதுவரையில் சில தேவதைகளுக்கு மிருகபலி கொடுப்பதும், சத்திகளுக்கு மதுமாமிச பட்சணம் படைத்து ஆராதித்து சில பிராமணர்கள் புசித்துவருவதாகச் சொல்லப்படுவதுந்தவிர, ரதோர்ச்சவ ஆரம்பத்திலும் நூதனமான வண்டி முதலிய வாகனப்பிரதமப் பிரவேசகாலத்திலும், உதிரங் காணவேண்டுமென்கிற பிரமாணத்தினால், கலியாணப்பூசினிக்காயைத்துளைத்து குங்குமத்தை அடைத்து போலியாக செந்நீரொழுகும்படி பலிகொடுக்கிறார்கள். இதனாலே ஆதியில் நீதியாக எண்ணப்பட்டது பின்பு அநீதியாக முடிந்ததுமன்றி, உண்மையான கலியாணமுதலியவற்றின் பாவனையாக சிறுமிகள் விளையாட்டயர்வதுபோல, பாவனையாக பலிகொடுப்பது முதலியவை என்னவிளையாட்டோ, என்ன ஆசாரமோ! கலியாணகாலத்தில் ஆகாயந்தெரியாமல் பந்தலின்கீழ் தம்பதிகளிருக்கையில் ஆகாயத்தில் அருந்ததியென்று விளங்கும் நட்சத்திரத்தைக்குறித்து தலைகுனிந்துகொண்டிருக்கும் கலியாணப்பெண்ணைப் பார்த்து ஆசாரியர் மாப்பிள்ளையைப் அருந்ததியைப் பார்த்தையாவென்று கேட்கச் சொல்லுகிறதையும், பாராதிருக்கப்பார்த்தேனென்று பெண்ணைச் சொல்லச்சொல்லுகிறதையும் யோசிப்போமாகில், இவ்வாறு பொய்சொல்லும்படி சுருதிகளையும், ஸ்மிருதிகளையும், ஆகமங்களையும் ஆராய்ந்த ஆசாரியர்கள் இடங்கொடுத்திருப்பதை நினைக்க நினைக்க, அது எவ்வளவு நீதிமார்க்கமாகத் தோன்றுகிறது? விவாககாலத்தில் தேவதைகள் சாட்சியாயும், அக்கினி சாட்சியாயும், வேதபிராமணர்கள் சாட்சியாயும், பந்துக்கள் சாட்சியாயும் 'நீயே எனக்குப் பத்தினி, நானே யுனக்குக் கணவன்' என்று மனைவிக்குப் பிரமாணஞ் செய்துகொடுத்த கணவன், அந்த மனைவி சுகஸ்திதியிலிருக்கையிலும், பிராமணர்கள் முதலாய் வேறு மணங்கள் புரிவதையும், வைப்பாட்டிகள் வைத்துக்கொள்வதையும், அவ்வாறே தேவர்களுக்கும் பல பத்தினிமாரும் வைப்பாட்டிகளும் உண்டாயிருந்ததையும் யோசிப்போமாகில், இவ்வாறு நடப்பதற்கு வேதத்தில் ஏற்பாடிருக்குமென்றே நினைக்கிறேன். அப்படியிருக்குமாயின், அந்த வேதங்களும் உத்தமமானவைகளே; அவற்றைச்செய்தவர்களும் உத்தம புருடர்களே.

அன்றியும் கடவுள் ஒருவர் உண்டென்கிற நம்பிக்கையும் நரகவேதனை பீதியுங் காரணமாக மானிடர்கள் நல்லொழுக்க நெறியில் நிற்பதன்றி, அவையில்லாவிடில் உலகம் நன்

னெறி தப்பிச்சிதைந்து அலைக்கழிந்து போமென்றும், அப்ப
டிப்பட்ட நம்பிக்கையும் பீதியுமில்லாத நாஸ்திகர்களிடத்தி
ல் நற்குண நற்செய்கைகள் மருந்துக்காயினும், எள்ளளவா
வது காணப்படாவென்றும், மதஸ்தர்கள் உறுதியாய்ச்சொ
ல்லுகிறார்கள். அவர்கள் அப்படிச்சொல்வது சகஜமே. ஏ
னெனில், தங்களுக்கமைந்திருக்கிற கிஞ்சித்து சன்மார்க்க
மும் கடவுள் நம்பிக்கையினாலும் நரகபீதியினாலும் கிடைத்
த மகாப்பிரசாதமென்று கருதியிருப்பதுமன்றி, கருடபுரா
ண வசன காவியத்துடன் சேர்த்திருக்கிற நரகலோகபடம்
போல், பிரமலோகம், தேவேந்திரபோகலோகம், வைகுந்த
ம், கைலாயபதவிகளையும், இவ்வுலகத்திலே காணவுங் கருத
வும் படுகிற ஜந்துக்களும் ஆயுதங்களும் போன்றனவாகிய
அரவக்குழி, அரணைக்குழி, அட்டைக்குழி, அக்கினிக்குழி, க
ரும்பாலை, செக்கு, உடைவாள், சுரிவாள், சூலம், வேல்,
கழுமர முதலியவைகளால் நிறைந்துள்ள நரகலோகத்தையு
ம் எழுதியிருக்கிற ஒருபிரமாண்டமான படத்தைவிரித்து,பா
ர்க்கிற சனங்கள் பிரமிக்கும்படி இன்னின்ன பாவத்திற்கு
இன்னின்னதெண்டனையென்று ஏற்ற சந்தப்பாட்டினால் வி
ரித்துரைத்து மதியூட்டிக் காசுபறிக்கிற கள்ளப்பண்டாரங்
கள் பிறருக்குத் தாங்கள் உணர்த்தியவறிவை இன்னதென்
று தாங்களுணராமல் நரகபீதியற்றவர்களாய்க் கடைசியில்
கள்ளுக்கடையில் நுழைவதையும், சாயுங்காலமானால் குளி
த்து நார்மடியுடுத்தி விபூதிருத்திராட்சந்தரித்து, தேவாலய
த்திற்சென்று, சுவாமிதரிசனஞ்செய்து, புத்திவந்ததென்று
தாடையிலறைந்துகொண்டு திரும்பிவருகிற சிலபத்தர்களும்
பகற்காலத்தில் நீதிஸ்தலங்களிற்சென்று பொய்ச்சத்தியம்ப
ண்ணி, பொய்ச்சாட்சி சொல்லிவருகிறதையும், சில ஹரிப
க்தர், சிவபக்தர்கள் அக்கிரமமான செய்கைகளுக்காக ராஜ
நீதி சட்டப்படி சிட்சையடைந்து வருவதையும், தேவாலய
ங்களுக்கு அதிபதிகளாய், தேவதாக்கிரியைகளைக் கிரமமா
ய் நிறைவேற்றுவதாகத் தருமகர்த்தர்களெனப் பெயர் பூண்
ட சில புண்ணியவான்கள் தேவாலய சொத்தைக் கவளீகரி
ப்பதையும் பார்த்து வருகிற மற்றமதஸ்தர்கள் கடவுளொரு
வருண்டென்று நம்பி நரகவேதனைக்குப் பயப்படுகிற ஆஸ்தி
கர்களே இவ்வாறு அதிக்கிரமித்து நடப்பார்களாகில், நிர்ப்
பயமாயிருக்கிற நாஸ்திகர்களைக்குறித்துக்கேட்பானேனென்
று பிரமிக்கிறார்கள்.

தேவநம்பிக்கையும் நரகபயமும் மதஸ்தர்களுக்குள் ஒவ்
வொருவருக்குமுண்டு. நரகவேதனைபயம் அற்பசொற்பமா
னதல்ல. ஒருவன் ஒவ்வொருகாரியஞ் செய்யத்தொடங்குந்
தோறும், அவனுடைய மனதைவிட்டு அகலாமல் எப்போது
ம் குடிகொண்டிருக்கவேண்டிய அந்தப்பயம் அவனுக்கு எ
ச்சரிக்கை செய்துகொண்டேயிருக்கும். ஒருவேளை மறந்து
விடுவானென்றாலும், அவனுக்கு நினைப்பூட்ட ஒருதெருவுக்
கு இரண்டுமூன்று ஆலயங்களிருக்கின்றன. இவ்வாறுகையி
ல், ஒவ்வொருமதஸ்தனும் முழுதுஞ் சன்மார்க்கனாயிருந்திரு
க்கவேண்டுமே. அப்படிக்கிராமையால், மதத்திற்கும் சன்
மார்க்கத்திற்கும் சம்பந்தம் கற்பிக்கக்கூடாமைபற்றி, ஆஸ்தி
கனாயினும் நாஸ்திகனாயினும் சன்மார்க்கனாயிருப்பதற்குக்கா
ரணம் வேறேயிருக்கிறதென்று நினைக்கவேண்டும். புத்திமா
னாயிருக்கிறவன் இவ்வுலகத்திலே சுகத்தையும் மதிப்பையும்
விரும்பாதவனாயிரான். மானுஷீகமும் அவனிடத்திலிக்கிற
து. அப்படிப்பட்டவன் சன்மார்க்கனாயிராவிடில் தனது வி
ருப்பம் நிறைவேறாதென்று தெரிந்துகொள்ளுகிறான. இவ்
வாறு ஆராய்ச்சிசெய்து, தெளிவடைந்து மானுஷீகத்தோடு
நடப்பவனே சன்மார்க்கத்தில் நிலைபெற்று எப்போதும் பரி
சுத்தனாயிருப்பான். பயத்தினாலே சன்மார்க்கத்தை யனுசரி
க்கிறவன் சன்மார்க்கனல்லன். ராஜநீதி சட்டதண்டனைக்கு
ப்பயந்து திருடாதிருப்பவன் திருட்டுகுணமுடையவனே ய
ல்லாமல் யோக்கியனல்லன். திருட்டுகுணம் மனிதனுக்குத்
தகாததென்றும், அந்தக்குணமுடையவன் இழிந்தவனாய் ம
னிதரெண்ணிக்கையில் வைக்கப்படமாட்டானென்றும, இவ்
வாறு பலவித யோசனையாற் றெளிந்து அத்துர்க்குணத்தை
யொழித்திருப்பவனே யோக்கியன். இதற்குத் திருஷ்டாந்த
மாகத் தனித்தனியாய் ஒவ்வொரு நபரையும், கூட்டமாக
வொவ்வொரு தேசத்தாரையும் நாம் ஆராய்ந்துபார்க்கவே
ண்டும். இதுவிஷயமாய் (ராபர்ட்டுகூப்பரென்பவர்) எடுத்து
ப்பேசியிருக்கிற சங்கதிகளின்கருத்து அடியில்கண்டெழுதப்
படுகிறது.

பரலோக வின்ப துன்ப சித்தாந்தமானது அகத்தியம்
வேண்டியிராவிட்டாலும் அது உபயோகமுள்ளதாகவே யி
ருக்கிறதென்றும், அந்த சித்தாந்தமிராவிடில் உலகத்திலே
சன்மார்க்கமென்பது பூண்டற்று எங்கும் துன்மார்க்கம் பர
வி விடுமென்றும், யோக்கியதைக்கு முகாந்தரமேயிருக்கமா
ட்டாதென்றும்,ஜனங்களுக்குள் துர்க்குணங்கள்நிறைந்து கு
ற்றங்கள் அளவிறந்தனவாய் விடுமென்றும், மிகவும் புகழ்ச்
சியாய்ச்சொல்லப்படுகின்றது. எனது நண்பர்களே!இந்த அ
பிப்பிராயம் உண்மையானதல்லவென்று நான் கடுகடுத்து
மறுக்க வல்லேன். அப்படிப்பட்ட அபிப்பிராயம் மானி
டஜாதியின்பேரில் கடுங்குற்றங் கூறுவதாகும்; நீதியும் ந
ல்லொழுக்கமுமுடைய சகலருக்கும் அது பெருத்த அவ
மானம்; மானுஷிகத்திற்குரிய சிறந்த மேன்மையை உண
ராதவர்கள் தவிர வேறொருவரும் அப்படிப்பட்ட அருவ
ருப்பான இழிந்த அபிப்பிராயத்திற்கு ஆதரவாய்ப் பேச
மாட்டார். அப்படிப்பட்ட அபிப்பிராயம் நிலைபெற்று ந
ல்லொழுக்கத்திற்கு இன்றியமையாததாய் மதிக்கப்படுமா
யின், நமது சன்மார்க்கமானது எப்போதும்போலவே க
படமார்க்கமான ஏற்பாடாகவும் பிரபலமான கள்ளவொ
ழுக்கமாகவுமிருப்பதன்றி, மேன்மை, உதாரத்துவம், விசு
வாசமுதலிய அறநெறிகளையுடைய பலருக்கும் வெட்கக்கே
ட்டை யுண்டுபண்ணுவதாயு மிருக்கிறது. ஜனங்கள் பிறப்பி
லேயே துன்மார்க்கர்களாயிருக்கிறார்களென்றும், நமக்கு அ
ப்படிப்பட்ட சித்தாந்தமொன்று இராவிட்டால் நாம் மனித
ராயிராமல் மிருகங்களாக விருப்போமென்றும் சொல்லி ஜ
னங்களுக்கு நல்லொழுக்கத்தைக்காட்டுவதற்குச் செய்திரு
க்கிற அந்த ஏற்பாடு மிகவும் விந்தையானதுதான். அப்படிப்
பட்ட சித்தாந்தத்தை லட்சியஞ்செய்யாமல் சன்மார்க்கத்
திலே மேன்மையடைந்திருக்கிற நபர்களையுந் தேசத்தார்க
ளையும் நாமெடுத்துக்காட்டுவோமாகில், சன்மார்க்கத்திற்கு
அப்படிப்பட்ட சித்தாந்தம் அவசியமென்பது அடிபட்டுப்
போம். இப்படிப்பட்ட சித்தாந்தம் எவ்வளவேனுமிராத தே
சங்களிலே வெகுமேன்மையான சன்மார்க்கங்கள் காணப்
படுகின்றன. அர்ரூஜலாந்த்ஸ் என்னும் தீவிலுள்ளவர்கள் இ
றந்தபின்பு மோட்சசாம்பிராச்சியமாவது நரகவேதனையா
வது அடைவோமென்கிற எண்ணமற்றவர்களாயிருந்தும்,
அவர்கள் ஒருவருக்கொருவர் மிகவும் அன்னியோன்னிய
மாய் வாழ்ந்துகொண்டு,ஒருவருடைய சொத்தை யொருவர்
அபகரியாமல் தங்கள் தலைவர்களுடைய தீர்ப்புகளுக் குட்ப
ட்டு நல்லொழுக்கத்தில்நடக்கிறார்களென்று, (D. H. Kolff)
என்பவர் தமது கிரந்தத்தில் எழுதியிருக்கிறார். இப்படிப்பட்
ட சித்தாந்தத்தைக் கனவிலுமறியாத காப்பிரிகள் நல்லொ
ழுக்கத்தில் சிறந்தவர்களா யிருக்கிறார்கள். அந்த ஜனங்களு
டைய நல்லொழுக்கத்தைக்குறித்து காப்டன் பெஞ்ஜமின்ஸ்
டவுட் என்பவர் வெகு மேன்மையாய்ப் பேசியிருக்கிறார். த
ங்களைப்போன்ற மானிடரிடத்திலே (நடுவுநிலைமையாய்) ந
ல்ல அபிப்பிராயங்கொள்ளுகிற யாவரும் மவுடீகர்களென்று
சொல்லப்பட்ட அந்த காப்பிரிகளின் மரியாதை இரக்கமுத
லிய சற்குணங்களைப்பார்க்கையில் ஆனந்தியாமற்போகார்க
ள். அவர்களுடைய நடத்தையைக்கண்டு நாகரீகமுள்ள தே
சத்தார் வெட்கிப்போகவேண்டியதே. கடவுள் ஒருவர் உண்
டென்கிற எண்ணங்கூட இல்லாதவர்களாயிருந்தும் அப்படி
ப்பட்டவர்களுடைய நடத்தையானது கிரிஸ்தவ மயமான
நாகரீகமுள்ள தேசத்தவர்களும் கற்றுக்கொள்ளதக்கதா யி
ருக்கிறது. (கிரிஸ்தவ) சமயிகளாகிய நமது தேசத்தவர்க
ள் தூண்டுவதற்கு மோட்சம் நரகமென்ப தொன்று மில்லா
மலே நல்லொழுக்கத்தி லொழுகுகிற அந்த ஜனங்களைப்பார்
த்து ஒழுகுவது உத்தமம். (இன்னும்வரும்.)

மூடசுவாமிகள்.

ஐயா, தத்துவவிவேசினிபத்திராதிபரே! இச்சிறுவன் வ
ரைந்தனுப்பும் சிலவரிகளைத் தமது தத்துவவிவேசினி பத்தி
ரிகையி னோர்கோணத்தில் தீட்டி, சுயக்கியான நண்பரோடு
வீண்குதர்க்கம் பேசிவரும் சில அஞ்ஞான ஆத்திக மூடசுவா
மிகளுக்குக் காட்டி நாட்டுவீர்களென வரையாநின்றனன்.

கனம்பொருந்திய ஐயா, இக்கருவூரின்கண்ணுள்ள பசுப
தி ஈஸ்பரர்கோவிலில் யாரோ ஒருசுவாமியார்நிர்வாணியாக
வும், மௌனியாகவும், சிலமாதங்களாக இவ்விடமிருப்பதா
ய் எனது நண்பர்களால் கேள்வியுற்று நிகழுமாதம் சவு சா
யந்திரம் சுமார் ஐந்துமணிக்கு ஆண்டு சென்றிருந்தேன்.
ஷை கோவிலில் யான் சென்றிருந்தநேர மவர் வெளியேகியி
ருந்தனர். யான் ஷை ஸ்தலத்தை சுற்றிப் பார்வையிட்டுவரு
வதற்குள் ஷை சுவாமியார் தனது ஸ்தானத்தில் வீற்றிருக்க
க்கண்டேன். அங்கு இவரைத் தேடிக்கொண்டு நின்ற ஒரு
பிராமண வாலிபன் மறுபடி இவரிருக்கக்கண்டு இவரிங்கு
எப்படிவந்தனர், ஆச்சரியம்! ஆச்சரியம்! என்றான். ஷை சு
வாமியாரை யான் சற்று கவனிக்கையி லவர் பாதங்களெல்
லாம் தூசி நிறைந்திருக்கக்கண்டு இப்பொழுதுதான் வந்திரு
க்கலாமென்றேன். அன்றியும் இவர் ஸ்தானத்தில் இவருக்-
கு வேண்டிய உணவாதிகள்வைத்திருக்கக்கண்டேன். அஃது
பின்வருமாறு:—ஓர் கலயத்தில் பணியாரமென்கிற பக்ஷண
மிருக்கக்கண்டு சுவாமிக்கு பணியாரத்தின்மேலும் பிரீதியுண்

டோவென்றேன், மௌனமாயிருந்தனர். இன்னும் ஓர் கலயத்தில் தைரிருக்கக்கண்டு சுவாமிக்கு தைரின்பேரில்கூட பிரீதியுண்டோவென்றேன், அதற்கும் மௌனமாய்த் தலையைக் குனிந்துகொண்டிருந்தனர். சுவாமி ஏறிட்டுப்பார்க்கக்கூட கஷ்டமோவென்றேன், அதற்கும் ஊமைபோலிருந்தனர். மேலும் சுவாமி நிர்வாணியென்பதை கேள்விப்பட்டு அவரது ஆண்குறியின்பேரில் ஓர் வஸ்திரமிருக்கக்கண்டு ஏது சுவாமிக்கு அபிமானமென்பது இன்னும் கொஞ்சமிருப்பதுபோலத் தோன்றுகிறது. ஆனால் இவர்சகலமும் துறந்தவரல்லவென்றேன், அதற்கும் சவாப்புசொல்லவில்லை. அன்றியும் இவர் புகைகுடிப்பதற்கு அடுப்பிலிருந்து நெருப்பெடுக்கும்பொழுது ஓர் பொறி அவரது வஸ்திரத்தில்பட்டு எறிந்தது. அதையவர் தனதுகையால் அணைத்துவிட்டார். சுவாமி சகலமும் துறந்தவராயிற்றே, அந்நெருப்பு தங்களை சுடாதேயென்றேன், அதற்கும் பேசாமலிருந்தார். இதற்குள்ளாக ஒருபேதையானவள் அவருக்கு ஒருபாத்திரத்தில் உணவாதிகள் கொண்டுவந்து உண்ணவேண்டுமென்றாள். அதற்குபரமபுருஷன் குரும்பாட்டைப்போல் வேண்டாமென தலையசைத்தான். பேதையானவள் அருகிருந்தவர்களைநோக்கி சுவாமிகளை யென்னசெய்தீர்கள்,சுவாமிவருத்தப்படுகிறதேயென்றனள். யான் ஷை யானிடமிருந்து சுவாமியினுடைய வரலாற்றைக்கேட்க ஆரம்பிததேன். (அவள்சொல்லுகிறதாவது) சுவாமி இங்குவந்து நாலுமாதமாகிறது; அவருக்கு இங்கிலீஷ், துலுக்கு, தெலுங்கு, கன்னடம்முதலிய பாஷைகள் நன்றாய்த்தெரியும், இவர் இரண்டுமாதத்திற்குமுன் கடிதமூலியமாய் அநேகம்பேசியுளார். ஆனால் இயற்கைமௌனமல்ல, ஏதோசில காரணநிமித்தம் இப்படிவந்திருக்கிறார்; அன்றியும் இவர் கையால் அள்ளிச்சாப்பிடுகிறதில்லை. மிருகங்களைப்போல் தரையிலிடவேண்டும் அல்லது குதிரைகளுக்குக் கொள்ளுகட்டுகிறதுபோலிவருக்கு சாதம் ஊட்டவேண்டும். ஐயா சுவாமியை யென்னசெய்தீர்கள், மெத்தவருத்தப்படுகிறதே யென்றனள், அதற்கு யான் சுவாமியை ஒன்றும் செய்யவில்லை சில சங்கைகளைக்கேட்டேன் மௌனமாயிருந்தனர் யென்றேன். அதற்குள் ஷை மூடசுவாமி தவம்புரியும் பாவனையைக்காட்டி உட்கார்ந்தனர். பேதையானவள் அவரைப்பார்த்து சுவாமியை யென்னமோவல்லோ செய்திருக்கிறீர்கள். ஆகையால்தான் அவர் தவசுசெய்கிறார், கடைசியில் யெப்படிமுடியுமோவென்றாள். யான் பயந்து அவிடம் விலைபெருமல்வீடுவந்து அன்றுராத்திரிமுழுதும் நித்திரையில்லாமல் ஷை சுவாமியின் வாக்கு பலிக்குமென்கிற நோக்கம்கொண்டிருந்து பலியாமற்போனதினால் இங்கு தீட்டலானேன்.

ஐயா, பத்திராதிபரோ! புத்தியிற் றேர்ந்த கனவான்களே! இத்தகைய பேதைச்சுவாமிகளை எங்கையாகிலும் கண்டிருக்கின்றீர்களா? கிஞ்சித்தும் மானுஷீகத்தன்மை பொருந்தியிலாத இம்மானுஷாமிருக மூடசுவாமியா என்னைத் தவம்புரிந்து கொல்லப்போகிறார்? பத்திராதிபரோ! இவர் இக்கோயிலில் நிவேதனமாகும் தோசை, வடை, கடலை, சுண்டல், பணியார முதலிய பக்ஷணங்களை மெத்தபிரீதியுடன் கொழுக்கத் தின்றுவிட்டு தான் சகலமுந்துறந்த சன்யாசி யெனப்பேர்வைத்துக்கொண்டு பேதையர்களைமிரட்டி காலக்ஷேபம் செய்துவரும் இம்மூடசுவாமியினிடம் சில மகத்துவமுண்டெனக் கருதி செல்லுகின்ற இக்கருவூரின்கண்ணுள்ள கனவான் தனவான்களே! எச்சரிக்கை, எச்சரிக்கை.

இங்ஙனம்.

திரிசிரபுரம். புத்தூர்

சுயக்கியானநேசன் - வையாபுரிபிள்ளை.

காளிகுழுமாயி.

(௬௭-வது பக்கத் தொடர்ச்சி.)

திரிசிரபுரம் புத்தூரின்கண் ஷை திருவிழா மாசிமாதம் மூன்றுதினமாய் நடந்தேறிவருகின்றது. அத்தினங்களில் கொல்லயுண்ட ஆடுகளின்தொகை சுமார் ஆயிரமுண்டென கணிததால் தெரியவருகின்றது. அவைகளில் ஒருமாதத்திற்குட்பட்ட ஆட்டுக்குட்டிகளின் தொகை சுமார் எண்ணூறு, மீதி பரியாடுகளே. இதன்றியும் அநேக பட்டித்தொட்டிகளிலிருந்து கொண்டுவந்து கொடுப்பதும் வழக்கம். யானும் சிலவருஷங்களுக்குமுன் கொடுத்தவன்தான். ஆயினும் தற்காலம் சுயக்கியான அபிவிர்த்தி நாளுக்குநாள் பெருகிவர அந்நூர்க்கிரியைகளையெல்லாம் யுக்தியனுபவத்தால் பொய்யென மதித்து சுமார் தத்துவவிவேசினி பத்திரிகைகள்கிடைத்த இரண்டு மூன்று வருஷ காலமாய் மேலைய பூசாரிகளின் பிழைப்பிற்கும் ஞாயம்பகராமல்நடுத்தெருவில்நின்று கடவுள் ஒருவர் உண்டென்று வீண் குதர்க்கம் பேசிவரும் அஞ்ஞான ஆத்திகரின் பிழைப்பிற்கும் உலைவைத்துக்கொண்டுவருகிறேனென்பதை மேற்படி யூரின்கண்ணுள்ள ஆத்திக சுவாமிகளும், மருளாளி ராமகிருஷ்ணப்பிள்ளையுமறிந்தவிஷயமே.

மருளாளியவர்காள்! ஏழை ஆட்டுக்குட்டிகளைக்கொன்று அதின் உதிரத்தை உட்கொள்ளும்பாவனைகாட்டி உட்கொள்ளாமல் ஆனந்தமடைவது யென்னமதியீனம். அப்படியாகிலும் அதின் உதிரத்தை பலருமறிய பகிரங்கமாய் உட்கொள்ளுகிறீரா? இல்லையே; உமது குட்டிப்பூசாரிகள் உமக்கு மேற்படி குட்டிகளை அறுத்துக் கொடுக்குந் தந்திரமும் நீரதை உட்கொள்ளுந் தந்திரமும் யானறிந்து எத்தனையோதரம் எமதன்பர்களுக்கு நிரூபித்திருக்கிறேன். பிள்ளையவர்காள், எண்ணிறந்த குட்டிகளின் உதிரத்தை மேற்படி தினங்களில் நீருட்கொள்ளுகிறதாக எனது நண்பர்கள் அடிக்கடி என்னை வாதிப்பதாலும் யானும் பத்து பன்னிரண்டுவருஷகாலமாய் அனுபவத்தில் பார்த்து வந்திருப்பதாலும் மருளாளியவர்காள்: இதோ உம்முன் ஒருபாத்திரத்தில் ஒரு குடம் ஜலமாகிலும் அல்லது உதிரமாகிலும் வைக்கிறேன், நீராவது அல்லது இவ்வுலகின்கண்ணுள்ள எந்தப் பூசாரி மருளாளிகளாவது அதை பானஞ் செய்வார்களேயாகில் ரூபாய் - ௫0 - கொடுக்கிறேன், வருஷத்தில் ஆயிரம் ஆட்டுக்குட்டிகளின் உதிரத்தை உட்கொள்ளும் உமக்கு ஒரு குடம் ஜலத்தை உட்கொள்ளுவது கஷ்டமா?

ஐயா, பிள்ளையவர்காள்! சென்ற 1884-ௗ டிசம்பர்மாதம் வருஷித்த மழையின்போது தாங்களெவ்விடம் சென்றிருந்தீர்களோ யானறிந்திலன். மேற்படி மழையின்போது உமது தாயாராகிய தேவதை பட்டபாடு எவ்வளவு! ஒரு வாரம்வரையிலும் மூச்சுவிடாமல் ஜலத்தில் அமிழ்ந்துகொண்டிருந்தனளே பாவம், பாவம், தினே தினே அபிஷேகாதி நைவேத்திய சடங்குகளெல்லாம் யெங்கே யொழிந்தன. மேற்படி கோவில்பெருச்சாளிகளாகிய குட்டிப்பூசாரிகள் என்னசெய்தனர்களோ யானறிந்திலன். அக்காலம் நீர் ஊரிலிருப்பதாய்க் கேள்வியுற்று உமது தாயார் படும்பாட்டை மேற்படி யூரின்கண்ணுள்ளவர்கள் உமக்குத் தெரிவித்தனர்களே. அச்சமயமாகிலும் இடறுற்றபோது உதவிசெய்யாதபேர் நட்பிருந்தென்ன போயுமென்ன என்ற வாக்கியத்தின்படி நீர்வந்து உம்மால் இயன்றசக்தியை காண்பியாமல் நீரும்பிறரைப்போல் வேடிக்கைபார்க்க வந்தாற்போல்வந்து போய்விட்டீரோ, இதுதானோ நம்முடைய வீரம், ஜலப்பிரவாகம் மிகுதியாயிருந்ததினாலா? கடக்கமுடியாமற்போய்விட்டீர். இஃது சால அழகுடைத்து. பிள்ளை கொடுக்கவும் பேயைவிரட்டவும் சக்தியுள்ள உமக்கு மேற்படி பிரவாகத்தைக் கடக்க ஏலாதென்றால் பேதையும் வாயினால் சிறிப்பளோ, ராமகிருஷ்ணம்பிள்ளையவர்காள் இது என்னபேதைமைநியாயம் யோசியுங்கள்.யோசியுங்கள்.ஐயோ! உமது தாயார் ஒருவாரம்வரையிலும் ஜலத்தில் அமிழ்ந்து கிடந்ததினால் பாசம்பற்றி தவளை, மீன், பாம்பு முதலிய நீர்வாழ்வன ஜெந்துக்களெல்லாம் மேற்படி உமது தாயாராகிய விக்கிரகத்தின் கண்ணிலும், காதிலும், மூக்கிலும், சந்திலும், பொந்திலும் முட்டையிட்டுக் குஞ்சுபொரித் திருந்தனவே, அதுகளை நீராவதுசென்றுவிரட்டினீரா அல்லது அது வதுவாகச் சென்றதுகளா தெரியப்படுத்தவும். பிள்ளையவர்காள், ஜலப்பிரவாகத்திலமிழ்ந்து கரையேறமுடியாத நின் தாயாராகிய இக்காளியென்னும்மூளியா ஏனையோர்க்குவரும் விபத்துகளை தீர்க்கப்போகிறாள், மேலே யெடுத்துக்காட்டிய நியாய ஆதாரங்களால் உமது தாயாரின் சக்தியை மிகவும் தெரிந்தேன். இச்சக்தியால்தானா நீவீர் ஏனைய மதத்தர்களை ரெட்டைவெடி துப்பாக்கிகொண்டு தொடுக்கப்போகிறீர். பளா, பளா! நன்று, நன்று! ஐயா, பத்துபன்னிரண்டு வருஷகாலமாய் யானும் ஷை புத்தூரின்கண் வசிக்கின்றேனே, ஏன் என்முன் உமது சக்தியை நாட்டக்கூடாது. உம்மையும் உமது தாயாரையும் காற்றில் பறக்கடிப்பேனென்றெண்ணியா!

ஐயா, ராமகிருஷ்ணம்பிள்ளையவர்காள்! இவ்வருஷம் நீர் உமது குடும்பசவரக்ஷணைக்குத் தந்திரஞ்செய்து மேற்படி கிராமத்திலுள்ள குடிகளிடத்தில் குடும்பமொன்றுக்கு ரூபாய் க-வீதம் வரிகொடுக்கவேண்டுமென்று உமது கோவில் பெருச்சாளிகள் மூலியமாய் ஏற்பாடு செய்யச்சொன்ன விஷயங்களைக்குறித்து வருகிறமுறை தீட்டுவேன். உம்மையும் வாட்டுவேன் அறியவும். (இன்னும்வரும்.)

திரிசிரபுரம், புத்தூர்-வையாபுரிபிள்ளை.

கார்ஸ்டினைக் கொள்ளையடித்த கேஸ்.

மதுரை ஸெஷன்கோர்ட்டிலிருந்து போடிநாயக்கனூர் ஜமீன்தாருடைய வக்கீலாகிய மிஸ்டர் நார்டன் அவர்களுடைய விண்ணப்பத்தின்பேரில் ஐகோர்ட்டுக்கு மாற்றிக்கொள்ளப்பட்ட மேற்படி கேஸ சென்ற மாசம் உஅவ புதன்கிழமைதினம் ஹைகோர்ட்டு ஸெஷனில் சிரேஷ்டநியாயாதிபதி முன்னிலையில் விசாரணைக்குவந்து, ஒன்பதுநாள் விசாரணை நடந்தபிறகு சென்ற சனிக்கிழமைதினம் உ - மணிக்கு முடிவாகி எல்லா கைதிகளும் எவ்விதத்திலும் குற்றவாளிகளல்லவென்று ஜூரிகளால் திர்மானிக்கப்பட்டு அந்தப்படி ஜட்ஜியவர்களால் உடனே விடுதலைசெய்யப்பட்டார்கள். ஹைகோர்ட்டில் வாதி தரப்பில் பப்ளிக் ப்ராஸிகியூடராகிய மிஸ்டர் ப்ரான்ஸன் அவர்களும், மிஸ்டர் பௌவலும் மிஸ்டர் ப்ரொஞ்சு அவர்களால் உதவிசெய்யப்பட்டு கேசை நடத்தினார்கள். இந்தக் கேஸில் மொத்தக் கைதிகளான கச-பெயர்களில் கச - வது, கைதிதான் போடிநாயக்கனூர் ஜெமின்தார், கங-வது கைதி அவருடைய ஏஜண்டாகிய வெள்ளையராவுத்தன் மற்றக் கைதிகளனைவரும் அல்லது அவர்களில் பெரும்பாலார் ஜமீன்தாருடைய வேலைக்காரர்களென்று சொல்லப்பட்டிருக்கிறார்கள். முதல் கஉ-கைதிகளும் சென்ற டிசம்பர்மாதம் உகவ இராத்திரி தேவதானம்பட்டிக்கும் பெரிய குளத்துக்கும் மத்தியில் மிஸ்டர் ஜெ. எச். கார்ஸ்டின் அவர்களைக்கூட்டக்கொள்ளையடித்து களவுசெய்ததாகவும் அப்படி களவுசெய்ததில் மேற்குறித்த மிஸ்டர் ஜெ. எச். கார்ஸ்டினுக்கு வேணுமென்று கடுஞ்சேதம் விளைவித்ததாகவும், ங-தலைப்பின்கீழ் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தார்கள். கூ, கக, கஉ, கங; கச - வது கைதிகள் மேற்படி குற்றங்களைச்செய்வதற்கு உதவியாயிருந்து தூண்டிவிட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டார்கள். இவர்களில் கஉ-வது கைதியொருவனைத்தவிர மற்றவர்களெல்லோரும் தங்கள்பேரில் சாட்டப்பட்ட ஒவ்வொரு குற்றத்தையும் மறுதளித்தார்கள். கஉ-வது கைதியாகிய சுப்பாநாடன் என்னும் ஒருவன் மட்டும் தன்பேரில் சாட்டப்பட்ட எல்லா குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு தலைப்பின்கீழும் தான் குற்றவாளியென்று ஒப்புக்கொண்டான். மதுரை டிஸ்ரிக்ட்கோர்ட்டு வக்கிலாகிய மிஸ்டர் போல் அவர்கள் க, உ, ங, ச, ரு - கைதிகளுக்கு வக்கீலாகவிருந்து எதிர்வாதம் பேசினார். ம-ா-ா-ஸ்ரீ ஸி. வி. சுந்திரம் சாஸ்திரியவர்கள் கூ, கங - வது கைதிகளுக்காகப் பேசினார், ம-ா-ா-ஸ்ரீ ப. அநந்தாசார்லு அவர்கள் எ, அ, கூ, வது கைதிகளுக்காகப்பேசினார், ம-ா-ா-ஸ்ரீ ஜகராவ்பிள்ளையவர்கள் க0, கக - வது கைதிகளுக்காக எதிர்வாதம் பேசினார், கச-வது கைதியாகிய ஜமீந்தாருக்கு மிஸ்டர் நார்டன் அவர்கள் வக்கீலாகவிருந்து பேசினார். கீழ்க்கோர்ட்டில் இந்தகேஸ் வெளிக்குக்கொண்டு வரப்பட்டபடி இதன்விவரத்தை மித்திரனில் சொல்லியிருந்தது. கீழ்க்கோர்ட்டில் பராஸிகியூஷன் நடத்தியதில் மதுராஜில்லா கலெக்டராகவிருந்த மிஸ்டர் க்ரோல் பெயரை இத்தோடு பிணைத்து அவரைச் சந்தோஷப்படுத்துவதற்காக அவருக்கு இஷ்டராயிருந்த போடிநாயக்கனூர் ஜமீன்தார் தம்முடைய ஆட்களையேவி மிஸ்டர் க்ரோலின் பகைவராயிருந்த மிஸ்டர் கார்ஸ்டினை அடித்து நொறுக்கச் சொன்னாரென்றும், பொருள்பறிக்க வேணுமென்பது கொள்ளையடித்தவர்களுடைய எண்ணமல்லவென்றும் சொல்லப்பட்டது. கீழ்கோர்ட்டில் வாதி தரப்பு வக்கீல் மிஸ்டர் க்ரோல் பெயரை இந்தக் கேசோடு சம்பந்தப்படச் செய்ய முயன்ற காரணத்தினாலேயே இது ஹைகோர்ட்டார் முன் கொண்டுவரப்பட்டது என்று யாவரும அறிவார்கள். இதுகாரணத்துக்காகவே இந்தக்கேஸ் மிஸ்டர் க்ரோலுக்கு கவரன்மெண்டில் பகைவர்களாயுள்ளவர்களால் அவரைக்கெடுக்கவேணுமென்கிற எண்ணத்தின்பேரில் இப்படி ஜமீன்தார்பேரிலும் அவருடைய வேலைக்காரர்கள்பேரிலும் புதிதாய் உண்டுபண்ணிக்கொண்டு வரப்பட்டிருக்கிறதென்று ருசுப்படுத்தவேணுமென்று ஜமீன்தாருடைய வக்கீலாகிய மிஸ்டர் ஸல்லிவன, மிஸ்டர் கத்ரீ, முதலிய இன்னும் அனேக பெரிய உத்தியோகஸ்தர்களுக்கு சாக்ஷி சம்மன் பிறப்பிக்கவேணுமென்று மன்றாடிக் கேட்டுக்கொண்டு அவர்களை கோர்ட்டுக்கு வரவழைத்திருந்தார். ஆனால் ஹைகோர்ட்டுக்கு கேஸ் மாற்றப்பட்டது முதற்கொண்டு மிஸ்டர் ப்ரான்சன் அவர்கள் மிஸ்டர் க்ரோல் பெயரை இந்தக்கேசோடு சேர்க்கக்கூடாதென்றும், கீழ்கோர்ட்டில் வாதி பக்ஷத்து வக்கீலாகிய மிஸ்டர் ப்ரொஞ்சு அவர் பெயரைக்கொண்டுவந்தது பிசகென்றும் சொல்லி, தாம் கேசை ஆரம்பிக்கையிலும் பின் அதை நடத்துகையிலும் அவருடைய பெயரைக் குறிக்காமலே அதிக ஜாக்கிரதையெடுத்துக்கொண்டு நடத்திவந்தார். ஆயினும் மிஸ்டர் நார்டன் அவர்கள் கீழ்க்கோர்ட்டில் கைதிகள் ஒரு நோக்கத்தைக்கொண்டு மிஸ்டர் கார்ஸ்டினை கொள்ளையடித்ததாக வாதிபக்ஷத்து வக்கீல்சொல்லியதை சாக்ஷிகளை குறுக்கு விசாரணைசெய்வதால் முழுதும் அலசி கீழ்க்கோர்ட்டில் கைதிகளுக்குள்ள நோக்கத்தைக்குறித்துச் சொல்லியதெல்லாம் முழு அபத்தமென்று வாதி தரப்பு வக்கீல் தாமே ஒப்புக்கொண்டதும் போதாதென்று மிஸ்டர் க்ரோல் பெயரை இந்தகேசோடு கொண்டுவந்துசேர்த்தது முழுமுட்டாள்தனமென்றும் கொஞ்சமேனும் சரியல்லவென்றும் சிரேஷ்ட நியாயாதிபதியவர்களும் நிந்திக்கும்படி அடிக்கடி அந்த விஷயத்தைப்பற்றியே சாட்சிகளை விசாரணைசெய்து கீழ்கோர்ட்டில் கைதிகள்பேரில்சாட்டப்பட்ட நோக்கத்தை நிற்கவொட்டாமல் நாசம் செய்துவிட்டார். இது விழுந்துபோகவே கைதிகள் இன்ன நோக்கத்தின்பேரில் மிஸ்டர் கார்ஸ்டினை கொள்ளையடிக்கத் துணிந்தார்களென்று சொல்வதற்கு வாதி பக்ஷத்தாருக்கு வகையின்றிப் போய்விட்டது. சென்ற புதன்கிழமை மத்தியானம்வரையில் வாதி தரப்புச் சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு வாதி கட்சிபேசி முடிவாயிற்று. பிறகு எதிர் கட்சி வக்கீல்கள் சில சாட்சிகளைக் கூப்பிட்டு மறுவிசாரணைசெய்து வாதிதரப்பு சாட்சிகள்சொல்லிய சாட்சியங்களின்பேரில் வியாக்கியானம்செய்து ஜூரிகளைப்பார்த்துப் பேசினார்கள். சென்றவெள்ளிக்கிழமையோடு எதிர்க்கட்சி வக்கில்கள் ஜூரிகளைநோக்கிப் பேசவேண்டியது பேசிமுடியவே சென்ற சனிக்கிழமையதினம் காலமே கோர்ட்டுகூடினதும் சிரேஷ்ட நியாயாதிபதியவர்கள் இருகட்சிக்காரர்களும்பேசிய நியாயவாதங்களையும் சேர்த்து ஜூரிகளுக்குப் பிரசங்கித்தனர். அதன்பேரில் ஜூரிகள் ஆலோசனைசெய்து கைதிகளனைவரும் எந்தக்குற்றச் சாட்டின்பேரிலும் குற்றவாளிகளல்லவென்று தீர்மானித்தார்கள். சாயந்திரம் இரண்டு மணிக்கு ஜூரிகளில் முதலாயுள்ளவர் எழுந்திருந்து கைதிகள் குற்றவாளிகளல்லவென்று ஜூரிகள் தீர்மானிப்பதாகச் சொல்லியதும் கோர்ட்டில் நிறைந்திருந்த அத்தனை ஜனங்களும் பெருஞ் சப்தமிட்டுக் கைகொட்டிக்களித்து ஆர்ப்பரித்தார்கள். இச்சென்னையில் ஹைகோர்ட்டு ஸ்தாபனமான நாள்முதல் இதுவரையில் எந்நாளும் மேற்படி கோர்ட்டுமுன் விசாரணைக்கு வந்திராத அவ்வளவு பிரமாதமான இந்தகேஸ் நீதிமுறைபிறழாமல் எல்லாருக்கும் திர்ப்திகரமாய் இவ்வாறு முடிவுபெற்றது.—சுதேசமித்திரன்.

வர்த்தமானம்.

நாயின் அன்பு—பிராஞ்சுதேசத்தில், டூலோஸ் என்னும் ஊரில், ஒரு பெண்பிள்ளை கழனியில் வேலைசெய்யும்பொழுது நிழலாயுள்ள ஓர் மூலையில் தன்னுடைய குழந்தையைவிட்டு வைத்தாள். எப்பொழுதாவது ஒருவேளை முலைகொடுக்க வருவாள். அக்குழந்தைக்குக்காவல் ஓர்நாயை ஏற்படுத்தினாள். பின்னையும் இரண்டுநாழிகை கழிந்தபின் முலைகொடுக்கவந்தாள். அக்குழந்தை முன்போல ஆவலாய் ஸ்தந்யபானஞ்செய்யவில்லை, பசியில்லையென்றும் சொல்வதற்கிடமில்லை வேறுவியாதியும் இடையாது. ஒருநாள் தன்குழந்தையை வீட்டுக்குக் கொண்டுபோகும்படி வந்தாள். வெகு ஆச்சரியமாய் தன்குழந்தை நாயின் முலையை வாயில்வைத்து பாலுண்பதைக் கண்டாள். உண்டபின் குழந்தையை வீட்டுக்கு எடுத்துக்கொண்டுபோனாள். அப்படியே வழக்கப்படுத்திக் கொண்டுவந்தாள். அந்தநாய் குழந்தையை தன்குழந்தை போல் பாவித்து அதிக பிரீதியாய் பாராட்டிக்கொண்டு வந்தது. அக்குழந்தை பெரியவனானபின்பு ஒன்றுக்கொன்று அந்யோந்யம பாராட்டிக்கொண்டதுகளாம்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	[illegible]	[illegible]	[illegible]
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	[illegible]	[illegible]
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	[illegible]
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	[illegible]

☞ எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும், 1885-ம் வருஷ[illegible]ரை செலுத்தவேண்டிய பாக்கிகளும் பு. முனிசு[illegible]பிராயகருக்கும்; 1886-ம் வருஷத்திய சந்தாக்களும், இங்கிலீஷ் பத்திரிகைகளும், செகுலர் சொசை[illegible] ஆனரெரி செக்ரிட்டேரி மெஸ்டர். அப்ஷன்து[illegible]யவர்கள் பெயரால் பெரம்பூர் பாரெக்ஸ்ரோட்[illegible] அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
Authi Kalanithi Press,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 21.] MADRAS:—SUNDAY MAY, 23, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

யோசனை.

கணக்கன் கணக்கறிவான், தன்கணக்கைத் தானறியான் என்று உலகத்திலே வழங்கிவரும் பழமொழிக்கிணையாக, நம்மவர்கள் தாங்கள் புரியும் ஒவ்வொரு கருமமும் பரியாலோசனைசெய்தே புரிந்துவருகிறதாக நாம் பார்த்துவருகிறோமேயல்லாமல் அநேகமாக யோசனையில்லாமலே காரியங்களை நடத்தி வீண்விரயஞ் செய்கின்றார்கள். பழக்கத்திலிருப்பதற்குப் பரிசோதனை வேண்டியதில்லையென்பது நம்மவர் துணிபுபோலும். இப்படிப் பழக்கத்திலிருப்பதெல்லாம் பழுதற்றதென்றும், பழக்கத்திலில்லாததெல்லாம் பழுதுற்றதென்றும் மதோன்மத்தமாயெண்ணி விஷயவிசாரணை செய்யாமல் காலத்தையுங் கனத்தையும் வீணேபோக்கி விழலாண்டிகளாவது அநியாயம், அநியாயம். இப்படி வழக்கத்திலிருக்கும் இழுக்கைக் கண்டிப்போரை இகழ்ந்து பேசுவதும், அவர்களுக்குத் தம்மாலியன்ற இடுக்கண் எவ்வளவோ அவ்வளவையுஞ்செய்து அவர்களை யதோகதிப்படுத்த முயல்வதும் அதனினும் அநியாயம். இவ்வளவிற்குங் காரணம் துரபிமானமேயல்லாமல் வேறல்ல. துரபிமானத்தை யொழித்தோரே தக்கோர். துரபிமானத்தை யொழித்தவர்களே நியாயவாதிகள்; துரபிமானமென்னும் மனக்களிம்பை - நடுநிலையென்னும் பரிசவேதியால் போக்கி, சுத்த நிஷ்களங்க சகிதமாய் விளங்கும் மனமுடையாரே மனுடப்பிறவியை எடுத்ததால் அடையத்தக்க பயனைப்பெற்றோர். பெரும்பாலும் தற்காலம் அபிமானமென்பது துரபிமானத்திற்கே பெயரெனப் பலரும் எண்ணுகின்றார்கள். இது பெருத்த பிழை. ஏனெனில், அந்நிய தேசத்தாரை யடித்துப் பிடுங்கிச் சுதேசத்தாருக்குக் கொடுப்பது தேசாபிமானமன்று; எல்லா மதத்தையுங் கண்ட கண்டபடி துவேஷங்காரணமாகக் கண்டித்து சுயமதபுகழ்ச்சிசெய்வது சமயாபிமானமன்று, ஊர்பிள்ளைகளின் உடைமைகளையெல்லாம் பறித்துத் தன் சொந்த புத்திரனுக்கு அலங்கரிப்பது புத்திராபிமானமன்று, இவையெல்லாந் துரபிமானமே. இதுபோலவே பிதாவானவன் வியாதியினாலோ, சித்தவிகற்பத்தினாலோ, வாசனைவிசேஷத்தினாலோ, அல்லது ரூபாலங்கார விசேஷத்தினாலோ ஓர் கைக்குங் கனியைக் கவனிக்காமல் கொடுத்து மைந்தா, இத்தீங்கனி யெவ்வளவு சுவையாயிருக்கிறது பார் என்றால், அதைத் தன் சுவானுபவத்தால் பரிசோதித்துணர்ந்து உண்மையைப்பேசாமல் ஆம் ஆம், நன்று நன்று, மிகு இனிப்பாயிருக்கிறதென்று தாளத்திற்குத்தக்க மத்தளம் போடும் மைந்தன் பிதுர்வாக்கியாபிமானியன்று, துரபிமானியே: இத்தியாதி நியாயங்களையே நாமடைந்திருக்கும் கடவுட்கியான விஷயத்திலும் பிரயோகித்துப் பரிசோதிப்போமானால், நமது கடவுட்கியானம் துரபிமானங் காரணமாகவே நிலைபெறுகின்றதேயல்லாமல் வேறல்லவென்று ஸ்பஷ்டமாய் விளங்கும். கடவுள் ஏகர், சர்வஞ்ஞர், சர்வவியாபகர், சர்வவல்லவர், சர்வநல்லர், கருணாநிதி, தன்வயத்தர், வரம்பிலின்பமுடையார், அநாதிநித்தியர், அளவிலாற்றலுடையார் என்று நம் பிதாக்களாயினும், குருமார்களாயினும், போதகாசிரியர்களாயினும் சொல்லின், கடவுள் ஏகரேல் அவரன்றி நாமார், உலகமேது என்றும், சர்வவியாபியேல் அவருக்குக் கோயிலேன் என்றும், அவர் தன்வயத்தரும் சர்வ நல்லவருமேல் அவருக்குப் பிரார்த்தனையேனென்றும், அவர் சர்வஞ்ஞரேல் அவரை வேண்டுவதேன் என்றும், இத்தியாதி சங்கைகளைச்செய்து இப்படி மனோவாக்குக் காயங்களுக்கு எட்டாததும், லக்ஷணவிருத்தமாயுள்ளதுமாய பொருளை யெப்படி நம்பலாமென்றும் தீர்க்காலோசனை செய்து துரபிமானத்தையொழித்து அபிமானத்தை அனுசரித்து ஒழுகுதலே யோசனாபுருஷத்துவமாம். உலகத்திலே மனிதருக்குக்கீழ்ப்பட்ட சீவராசிகளும் அவ்வவற்றின் கருவிகளின் அமைப்புக்குத்தக்கவாறு யோசனை செய்கின்றன. சிலர் அவற்றிற்கு யோசனை யில்லையென்றும், அவை பழக்கத்தால் தமக்கொத்தபடி செய்கின்றனவென்றும் சொல்லுவார்கள். இவைகட்கு யோசனையில்லையேல் மனிதரைக்கண்டு அஞ்சுவதேன்? தமக்கு அனுபவப்பட்ட சில மிருகராசிகளைக்கண்டு அஞ்சாமல் புறங்கிடப்பதேன்? தாம் புசிக்கத்தக்க பதார்த்தங்களையே தேடிப்புசிப்பதேன்? காற்று, தண்ணீர், தீ முதலாய அபாயங்களுக்கு அஞ்சி தப்பித்திரிவதேன்? பழக்கமென்றால், பழக்கமாவதென்ன, முன்பின் நடந்ததைக் கவனத்தில்வைத்து இது தக்கது, இதன்படிசெய்தால் அனுகூலம்; இது தகாதது, இதன்படிசெய்தால் பிரதிகூலமாம் என்று கருதி செய்தலேயல்லவா? பழக்கப்படி நடத்தலுக்கும் யோசனையே காரணமாகின்றபடியால், அற்பஜெந்துக்களும் யோசனையோடே நடக்கின்றன. ஆதலால் மனிதர் யோசனையோடேயே சகல காரியத்தையும் நடத்த வேண்டியது ஆவசியகம்.

நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா?

அமரம்பேடு
முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(எஅ-வது பக்கத் தொடர்ச்சி.)

நரகாக்கினி யில்லாவிடில், சன்மார்க்கம் அவிந்தே போய்விடுமென்கிற அபிப்பிராயம் மூடத்தனமென்பதற்குச் சீனதேசமே போதுமான திருஷ்டாந்தமாயிருக்கிறது. 'Philosophy of History' எழுதிய கிரந்தகர்த்தா சொல்லியிருப்பதாவது:—"இறந்த பின்பு அடையும் மோட்சநரக இன்ப துன்பத்தைப்பற்றிச் சீனதேசத்துத் தருமசாஸ்திரத்தில் ஒன்றுஞ் சொல்லியிராதது யதார்த்தமே; தங்களுக்குத் தெரியாததைதையும் அவர்கள் உண்டென்று சொல்லத் துணிவதில்லை; நரகமுண்டென்கிற சித்தாந்தம் உபயோகமுள்ளதாயினும், சீனதேசத்துத் துரைத்தனத்தார் அதை ஒப்புக்கொள்ளுவதில்லை. ஜனங்களுடைய ஆசார நடவடிக்கைகளைக் கண்டிப்பாய்க் கவனித்து எப்போதும் கண்காணித்து வருவதினாலே, ஆட்சேபனைக்கிடமான சித்தாந்தங்களினாலுண்டாவதைப்பார்க்கிலும் அதிக பிரயோசன முண்டாகிறதென்றும், இனி வரப்போகிறதென்கிற தெண்டனையைப்

பார்க்கிலும் எப்போதும் பிரஸ்தாதத்திலிருக்கிற தெண்டனைக்கு ஜனங்கள் மிகவும் அஞ்சி நடந்துகொள்ளுவார்களென்றும் அவர்கள் நம்புகிறார்கள்'' என்று எழுதியிருக்கிறார். இதுவே நல்ல சித்தாந்தம்; ஐரோப்பாக்கண்டத்தில் பரவியிருக்கிற நல்லொழுக்கத்தைப்பார்க்கினும், அதிக ஜனசங்கியையுள்ள சீனராச்சியத்திலே நல்லொழுக்கம் குறைவாயிருக்கிறதென்று யாவர் சொல்லுவர்? ஐரோப்பாவிலுள்ள எந்தத்தேசத்தார் அவர்களை மிஞ்சுவார்கள்? கொஞ்சகாலத்திற்குமுன்னே நடந்த சீனயுத்தம் மறந்துபோயிற்றா? அது உண்டானதெப்படி? விஷமல்லாவிட்டாலும், சன்மார்க்கத்தைக் கெடுப்பதற்கான (ஆங்கிலேயருடைய) அபினிமருந்தைத் தங்கள் ஜனங்களைப் புசிக்கவொட்டாமல் காத்துக்கொள்ளுவதற்காகச் சீனதுரைத்தனத்தார் யத்தனித்ததினாலுண்டானதுதானே. மறுமைப்பய னனுபவ சித்தாந்தத்தை அதிசயித்துப்புகழுகிற ஒருதேசத்தார் ஒரு ராச்சிய முழுவதையும் துர்க்குணத்துக்குள்ளாக்கப் பிடிவாதஞ் செய்ததையும், அப்படிப்பட்ட சித்தாந்தத்தை லட்சியஞ்செய்யாத ஒருதேசத்தார் நல்லொழுக்கத்தைக்கெடுக்கும் இழிவான பிரயத்தனத்தைக் கம்பீரமாய் எதிர்த்ததையும் நாம் காணுகிறோம். இவ்விரண்டு தேசத்தார்களில் மிகுந்த நல்லொழுக்கமுடையவர் யார்? யாருடைய நடத்தையை நாம் கற்றுக்கொள்ளவேண்டும்? மோட்சசாம்பிராச்சியமாவது நரகவேதனையாவது அடைவோமென்கிற எண்ணமில்லாவிட்டால், நாம் நல்லொழுக்கமுடையவர்களா யிருக்கவேண்டுமென்கிற நோக்கமே யுண்டாகாதென்னும் அபிப்பிராயம் மேற்கண்ட ஒரே சங்கதியினால் அடிபட்டுப்போகிறது.

நபர்கதியாய்ச் சிலரைப்பற்றி யோசிப்போம். மோட்சநரக சித்தாந்தத்தை நம்பாமலாவது அதை லட்சியஞ் செய்யாமலாவது இருக்கிறவர்களுடைய குணாகுணங்களை ஆராய்வோமாகில், ஞானத்திலும் தேசாபிமானத்திலும் ஜீவோபகாரத்திலும் நல்லொழுக்கத்திலும், Epicurus, Porphyry, Sydney, Neville, Harrington, Sir W. Temple, Halley, Collins, Hume, Adam Smith, Gibbon, Hobbes, Franklin, Paine, Barlow, Washington, Jefferson, Abner Kneeland, Darwin, Day, Burdon, Hollis, Bentham, Montesquieu, D'Holbach, Diderot, D'Alembert, Helvetius, Turgot, Condorcet, Volney, Lalande, Laplace, Say, Robert Owen, Robert Dale Owen, இவர்களைப்பார்க்கிலுஞ் சிறந்தவர்களை நாம் எங்கே காணுவோம்? அவர்கள் சன்மார்க்கர்களாயும், பிரயோசனகாரிகளாயு மிருந்ததற்குத் தூண்டுகோலாக அவர்களுக்கு மோட்சமாவது நரகமாவது வேண்டியிருந்ததில்லை. தாங்கள் மதிப்படைவதற்கும் ஜனசமூகத் தேர்ச்சிக்கும் சுகத்திற்கும் தாங்கள் சீராயொழுகுவது தங்கள் கடமையென்று மனதார நினைத்து சன்மார்க்கத்தி லொழுகிவந்தார்களேயன்றி, அப்படி நடவாவிட்டால், கிரந்தரமான நரகாக்கினியில் தள்ளப்படுவோமென்கிற பயத்தினால் நடந்தவர்களல்லர்.

சாதாரணமான ஜனங்களுக்குள் பார்ப்போம். தற்காலத்திலே சிற்பத்தொழிலாளர்களுக்குள் அதிக சமர்த்தர் எவர். அதிக அமைதியுள்ளவர் எவர்? கஷ்டமும் அவசரமுமான காலங்களிலே எஜமான்கள் எவர்களிடத்தில் நம்பிக்கை வைக்கிறார்களோ அவர்கள் யார்? சூட்சுமமும் யோசனையும் கடைப்பிடியும் விவேகமுமுள்ள சுயக்கியானிகள்தானே. இது உண்மை. இந்த ராச்சியமுழுவதுமுள்ள பெரிய தொழிற்சாலைகளிலிருக்கும் தலைமையான தொழிலாளிகளோடு எனக்குண்டாயிருந்த நெடுநாளைய பழக்கத்தினால் இந்த முக்கியமான சங்கதியைச்சொல்ல எனக்குத் தைரியமுண்டாயிருக்கிறது. சில வருஷங்களுக்கு முன்னே இங்கிலாந்து தேசத்தில் சமுதாய சுகமுண்டாயிருக்க வேண்டுமென்கிற அபிப்பிராயத்துடன் சோஷியாலிஸ்ட்ஸ் என்னுஞ் சங்கத்தார் ஆராய்ச்சி செய்துகொண் டிருந்தகாலத்தில், சகல சோஷியாலிஸ்ட்களையும் சுயக்கியானிகளையும் அவர்களுடைய எஜமான்களைக்கொண்டு வேலையிலிருந்து தள்ளிப்போடுவிக்க வேண்டுமென்கிற தேவபக்தி விஸ்வாசமான எண்ணத்தோடு, பாதிரிமார்களில் ஒருவராகிய ஜான்பிரிண்லி என்பவர் மான்செஸ்ட்டர் என்னும் பட்டணத்திலுள்ள பெரிய யந்திரசாலைகளி லொன்றிற்குச்சென்று, அதின் தலைவர்களைக்கண்டு பேசினார். அவர்களிலொருவர் — நாங்கள் உமது பேச்சைக் கேட்போமாகில், எங்கள் சிப்பந்திகளுக்குள்ளே வலதுகை இழந்தவர்களாவோம், தொழிற்சாலையையும் சீக்கிரத்தில் மூடிப்போடவேண்டியதா யிருக்குமென்று உடனே மறுமொழி சொன்னார். அந்த உபகாரசிந்தையுள்ள பாதிரியார் போய்க்கண்ட தொழிற்சாலைகளிலெல்லாம் அவருக்கு அவ்வித பரிசுத்தமான மறுமொழி கிடைத்திருக்குமாகில், அது அவருக்கு நல்ல இடிதான். தொழிற்சாலைகள், யந்திரசாலைகள், அச்சுக்கூடங்கள், புத்தகசாலைகள் முதலிய சாலைகளிலும், மதுபானங் கூடாதென்கிற கட்டுப்பாட்டுக்குட்பட்ட சங்கங்கள் முதலிய சன்மார்க்க சங்கங்களிலும் சுருசுருப்பாயிருப்பவர் யார்? சுயக்கியானியே. நெய்தல், தைத்தல் முதலிய தொழில்களுக்கு தெரிந்தெடுத்துக்கொள்ளப்படுகிறவர் யார்? கவனமுள்ள சுயக்கியானியே. சாயுங்காலவேளையில் தன்மனைவியோடு நாடகசாலைக்காவது, ஆட்டக்கடுதாசியோடு பீர்கடைக்காவது செல்லுகிறவனைப்போலச் செல்லாமல் நெருப்புமூட்டத்தினருகே உட்கார்ந்துகொண்டு, சுபாவ தத்துவசாஸ்திரம், மனிதனுக்குரிய சுதந்தரசாஸ்திர முதலிய பல தத்தவசாஸ்திரங்களை வாசித்துக்கொண்டிருப்பவராவது, ஜனங்களுக்குச் சுதந்தரங்களைக் கிடைப்பிக்க வேண்டியதற்காகக் கூடுகிற பெருஞ்சபைகளுக்குச் சென்றும், அப்படிப்பட்ட சபைகளைக் கூட்டியும், உலகத்தவர்களைத் துன்பம், அடிமை, மடைமை என்னும் அந்தகாரத்தில் முழுகடிக்கும்படி பழமையா யுண்டாயிருக்கிற மதசம்பந்தமான துராசார முதலிய அநாசாரங்களை வெளியிடுகிறவராவது யார்? தேசாபிமானமும் கடைப்பிடியும் திரமுமுள்ள சுயக்கியானியே. இருதிறத்தாருடைய குணாகுணங்களைப் பரிசோதிக்க வேண்டுமானால், (கிரீஸ்து) மதத்தின் குணங்களைப்பற்றியும், துரபிமானமில்லாமல் ஆராய்ச்சி செய்யும்படியான குணங்களைப்பற்றியும் அவற்றை அனுசரிப்பவர்களுடைய நடத்தையைக்கொண்டு வாதிப்பதற்கு எவ்விடத்திலாவது எந்தக்காலத்திலாவது நான் சித்தமாயிருக்கிறேன். நான் கேட்டுக்கொள்ளுகிறபடி வாதத்திற்காவது வரட்டும், அல்லது குருக்கள்மார்கள் தங்கள் மேடையின்மேல் நின்றுகொண்டு, அவர்களுடைய மோசத்திற்குட்படாத சுயக்கியானிகளைக் கொடூரமாகத் தூஷித்துச் சபிப்பதையாவது விட்டுவிடட்டும்.

மறுமைப்பயனாவது வேறே யாதொரு சித்தாந்தமாவது மானிடவொழுக்கத்திற்கு அவசியமில்லையென்பதை இக்காலத்தில் ஜனங்களுக்குப் பிரியமான குருக்கள்மார்களில் ஒருவராகிய (Dr. Chalmers) என்பவர் ஒப்புக்கொண்டிருப்பதைக்கொண்டே ருசுப்படுத்தக்கூடும். கிளாஸ்கோ என்னும் பட்டணத்தில் திரான்சர்ச்சு என்னும் திருச்சபையில் செய்யப்பட்ட பிரசங்கத்திலே இந்த மகாபுருஷர் சொன்னதாவது:—'நாமிப்போது கடவுளொருவ ருண்டென்கிற நம்பிக்கையானது உலகமுழுவதிலும் சுத்தமாயற்றுப்போய்விட்டதாக ஒருநிமிஷம் எண்ணிக்கொள்வோம், அப்படி நம்பிக்கையற்றுப்போவதினாலே ஜனங்களுக்கு லவுகீக இன்பம் வெகுவாய்க் கெட்டுப்போகுமென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் எப்போதும்போலவே உலகம் நடந்துகொண்டேதான்வரும்; உலகத்தவருள் ஒவ்வொருவருக்கும் யோக்கியாயோக்கியதை அந்தஸ்தும் படிப்படியான புகழ்ச்சியும் இகழ்ச்சியும் பழயபடிதானே யுண்டாயிருக்கும். உலகமானது கடவுளினுடைய பராபத்தியத்திலிருந்து சுத்தமாய் நீங்கிவிட்டதாகவும், இப்போது உலகம் என்ன சுகஸ்திதியிலிருக்கிறதோ அந்த நிலைமையிலே இயற்கையிலுள்ளபடி பிறப்புமுதலிய சகல தத்துவங்களுடனே கடவுள் இனி இந்த உலகத்தைப்பற்றித் தமக்கு நிமித்தமில்லையென்று ஒழித்துவிட்டதாகவும் வைத்துக்கொள்வோம்; அப்போதும், நமக்குள் நல்லொழுக்கமுடையவர்கள் இருக்கவே யிருப்பார்கள்; சிலர் நல்லவர்களென்றும், சிலர் கெட்டவர்களென்றும் பகுத்தறிகிற அறிவுமிருக்கும். நாஸ்திகமதம் பரவுகிற இந்த காட்டிலும் இரக்கம், உபகாரம், உதாரத்துவ முதலிய குணங்கள் வியாபித்தே யிருக்கும்; அன்பான தாய்கள் இறந்துபோன தங்கள் மக்களை நினைத்துக் கண்ணீர் சிந்தவே சிந்துவார்கள்; துன்மார்க்கங்கள் ஒருபக்கத்திலிருக்க, சிறந்த சன்மார்க்கங்களும் ஒருபக்கத்தில் நிலைபெற்றேயிருக்கும்; உபகாரமானது தனது பிரயோசனத்தைக் கொடுத்துக்கொண்டேதான் வரும்; தேசாபிமானமும் ஜனங்களுக்குள்ளே தனக்குரிய பெருமையை யடைந்துகொண்டேதான்வரும்; இவ்விதமாய் இரக்கமும் அன்பும் நீதியும் உபகாரசிந்தையும் நமக்கிருக்கவே யிருக்கும்' என்று சொல்லியிருக்கிறார். மதஸ்தர்களுக்குள் முதன்மையாய் நிற்கிற இவர் ஒப்புக்கொண்டு சொல்லியிருக்கிற இந்த அபிப்பிராயத்தை, மத கோட்பாட்டை யனுசரியாத ஒருவன் (நரசிங்கம்போல) நாமிருகமா யிருக்கவேண்டுமென்று இடைவிடாமல் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறவர்கள் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

(இன்னும்வரும்.)

ஸ்தலயாத்திரை.

(The People's Friend) ஜனப்பிரியனென்னும் பெயர்பூண்ட சென்றவாரத்துச் சிறந்த பத்திரிகையிலே, ஸ்ரீசைலத்திலும் காளாஸ்திரியிலும் சிலநாளைக்கு முன்னே நிகழ்ந்த இரண்டு உற்சவங்களைக்குறித்து எழுதியிருக்கிறது. அந்த விஷயத்தின் கடைசியில் அந்தப்பத்திராதிபர் விவேகம் விளங்கும்படி தமது மேன்மையான அபிப்பிராயத்தைக் குறிப்பிட்டிருக்கின்றனர். அதாவது:—"இந்த உற்சவங்களைப் போய்ப்பார்ப்பதும், அவை நடத்தப்படும் ஸ்தலங்களுக்கு, அதிக பணச்செலவு செய்துகொண்டு, தேகத்தைக் கெடுத்துக்கொண்டு, சங்கடப்பட்டுக்கொண்டு யாத்திரைபோவதும், விவேகமும் உபயோகமுமற்ற காரியமென்பதைக்குறித்து நாம் சிலவார்த்தைகள் சொல்லாதிருப்போமாகில், நமது கடமையைச் செலுத்தினவர்களாகமாட்டோம். இந்த உற்சவங்கள் என்ன நன்மை பயக்கின்றன, என்ன பிரயோசனத்தைத் தருகின்றன? ஒன்றுமேயில்லை. இவற்றிற்காகப் புருஷர்களும், ஸ்திரீகளும், சிறுவர்களும் வேடிக்கைப் பார்ப்பதற்குக் கும்பல் கும்பலாய் அடர்ந்து நெருங்குகிறார்கள். இவர்களாலே அந்தக்கோயில்களுக்கு நல்லவரும்படி கிடைக்கிறது. கல்வியறிவில்லாத கும்புகளை ஆராய்ந்து பார்க்கும்படி நம்முடைய வழிக்குத்திருப்புவது மிகவும் அசாத்தியமே; ஆயினும், கல்வித்தேர்ச்சியுள்ள விவேகிகள் வேடிக்கைப் பார்க்கவேண்டுமென்கிற ஆசையைத் திருப்திசெய்வதற்காகவும், ஒரு தெய்வத்தினிடத்தில் ஏதோ கொஞ்சம் இழிவான நம்பிக்கையை ஒருவேளை அதிகப்படுத்துவதற்காகவும் நடத்தப்பட்ட மதியீனமான இந்த உற்சவங்களுக்குச்சென்று உபபலஞ்செய்யாதிருப்பது அவர்களுடைய கடமை. இந்த உற்சவங்களுக்காகவும், இந்த ஸ்தலயாத்திரைகளுக்காகவும் பாழ்செய்யப்படுகிற பணத்தில் காற்பங்காவது அரைக்காற்பங்காவது பொதுஜனநிதிக்கு உபகாரமாக அளிக்கப்பட்டாலும், பாடசாலைகளையும் கலாசாலைகளையும் ஸ்தாபிப்பதற்கு உபயோகிக்கப்பட்டாலும், நமது தேசத்தவர்களுக்கு எவ்வளவு நன்மை பயக்கமாட்டாது. கல்விச்சுடரொளியினாலும், நாகரீக முதிர்ச்சியினாலும் சீக்கிரத்தில் நமக்கு எவ்வளவு அபிவிர்த்தியுண்டாகமாட்டாது!

ஜனப்பிரிய பத்திராதிபரே! விடாதேயும், உண்மைக்காகத் தைரியமாய்ப் பாடுபடும். மூடத்தன்மையும், ஆசாரியகபடமும் உண்டுபண்ணி மாட்டியிருக்கிற அநேக விலங்குகளில் சிலவற்றையாவது உதறிக்கொள்ளுவதற்கு அவஸ்தைப்படுகிற மானிடர்களுக்கு அவ்வாறு உதவிசெய்யும்.

The Thinker. 16th May.

விசேஷ அறிக்கை.

நம் தேசத்து சிறுவர் சிறுமியர்கள் தேகபலம் குன்றிப் பிஞ்சில் பழுப்பதற்குப் பிச்சைக்குடுமி அவர்கள் பேசிய காரணமன்றி பின்னும் ஒன்றுண்டு. அது இது: நம் தேசத்தில் இளமையில் விவாகம் செய்துவிடுகிற விஷயம் இஷ்டர்கள் அறிவார்களே. பெண் ருதுவாய் ஒருமாசம் கழியுமுன்னமே சோபனம் செய்துவிடுவார்கள். சோபனமண்டபத்தில் ஆண்பெண்ணாகிய இருவர்க்கும் இருமஞ்சமல்ல, ஒரேபடுக்கையிடுவார்கள். பள்ளிகொள்ளும் அறையோ காற்றுலாவவும் இடமின்றிக் குறுகிச் சிறுத்திருக்கும். மூன்றாவது மனுஷன் போக அங்கு இடமிராது. அந்த நெருங்குண்ட இடத்தில் பெட்டி பேழையிட்டிருக்கும். இவைகளின் மத்தியில் விரித்த சயனத்தில் தம்பதிகள் பள்ளிகொள்வார்கள். இது இயல்பாய் நடப்பதினால் சயனமுறை இன்னதென்று தம்பதிகள் அறியாது அல்லும் பகலும் அறுபதுநாழியும் கூட்டுறவை நாடுவார்கள். இதனால் தம்பதிகள் தேகம் நாளொருவண்ணம் கெட்டுப் பலம் குன்றிப்போம். காலக்கிரமத்தில் பெண் கர்ப்பவதியாவாள். இளம்வயதில் பெண் பல புதல்வரையும் புதல்விகளையும் பெற்று முப்பது நாற்பது வயதுக்குள் பழுத்த பழமாய்விடுவாள். ஆ...வர் பெண்படுக்கையண்டையில் நித்த நித்தம் சேராமல் வாரமொரு வட்டம் மாத்திரம் பெண்ணுடன் சயனிக்க மனத்திடம் செய்துகொண்டால் தேகம் கெடாது, திடகாத்திரராயிருக்கலாம். ஆயுசும் வளர்ந்துவரும். அறுபது எழுபதுவயது வருந்தனிலும் பெண்சயனிப்புப் பெறலாம். பிறக்கும் புத்திரரைத் திண்ணியராயிருக்கக்காணலாம். பெண்பாலார்க்கு ஆடவர் கற்பிப்பதே நாட்டம். எட்டுநாளொருவட்டம் சயனிக்க இடந்தருவோமானால் அவர்களும் அப்படியே பழகுவார்கள். நித்த நித்தம் ஓயாவண்ணம் சயனிக்கக் கற்பித்தபின் இருவர்க்கும் ஒரு மாதகாலம் பிணக்குண்டானால், அதை அவர்கள் தேகம் தாங்காமல் துவண்டு மனம் வேறுபடுவார்கள். இதனால் விளையும் கெடுதி மிகுதி. ஆகவே, தம்பதிகள் பள்ளிகொள்ளும் மண்டபத்தில் அவரவர்க்குத் தனித்தனி படுக்கையிருத்தல் நலம். ஆடவர் இரவில் படிப்பதோ எழுதுவதோ ஏதேனும் ஒருவிஷயத்தைப் பார்த்துப்போகவேண்டும். இப்படிச் செய்வதினால் பெண்ணாசை மனதில் உதியாது. அவ்வாறு செய்பவர்க்குப் பெண்ணாசை உதிக்க அவர்கள் மனம் இணங்குமா? பெண்ணாசை வினையொழிந்திருக்கும் வீணர்க்குரிய பயனற்ற விநோதமேதவிர மற்றென்ன?

கொள்ளேகாலம் நேசன்.

அறிக்கைமேலறிக்கை.

நமது கொள்ளேகாலநேசர் சொல்வது பெரும்பாலும் நியாயமாகவே யிருக்கின்றது. ஆயினும் அ-தினத்திற்கொருகால் ஸ்திரி செய்கையிருந்தால்மட்டும் புத்திரோற்பத்தி அதிகப்படாதா? ஆண்பிள்ளை உச-மணிநேரத்திற் கொருகால் புத்திரோற்பவத்திற்கு வேண்டிய சத்தை யடைவதாக ஆயுள்வேதமும் அனுபவமும் காட்டுகின்றனவே. அ-நாளைக்கொருகால் சேர்ந்தும் அபரிமிதமாய்ப் புத்திரோற்பத்தியுண்டாயின், அதனால் ஸ்திரி தேகதுற்பலமடையாளா? அடைவாள், அடைவாள்.

இளம்பிராயத்தில் விவாகம் செய்துகொண்டாலும், காமத்துரோகிகளாய் அதனாலுண்டாகும் நோய்க் கிடங்கொடாவண்ணம் மிதமாய் சகவசித்துவந்தாலும், பெண்ணிற்கு உ0-உரு-வயதுவரையில் புத்திரோற்பத்தியில்லாதிருக்கச் செய்துகொள்வது மகா உத்தமமென்று நினைக்கிறேன். ஆனால் அங்ஙனம் செய்தல் சாத்தியமாமோவென ஓர் கேள்விபிறக்கும். எப்படியுஞ் சாத்தியமே யாமென விடையளிப்பேன். இதைப்பற்றிப் பிரஜாநிருபணசாரம் என்று முன் இப்பத்திரிகையில் எழுதியிருக்கிறபடியால், அதில் விசிதமாகக் கண்டுதெளியலாம். இதை வாசிப்பவர்கள் இங்கிலீஷ் பாஷையிற் பயிற்சியுடையார்களேல், (Law of Population) என்னும் புத்தகத்தில் கண்டு தெளியலாம்.

அகந்தையின்மை.

உலகத்தின்கண் பற்பலவித பாஷைகளாலும், வேஷங்களாலும், நடைகளாலும், உடைகளாலும், மதாபிமான பேதங்களாலும், இவைபோன்ற இன்னும் விஷயங்களாலும் வித்தியாசப்பட்டு விலகவசிக்கும் சகல சாதிகளிடத்திலும் சன்மார்க்கப்பிரமாணத்தின் சர்வ நியாயங்களும் காணப்படுகின்றனவென்பது ஆட்சேபிக்கக்கூடாத அனுபோகத்துணிவாம். இச்சன்மார்க்கப் பிரமாணத்தைச் சோடித்துப் பரிசுத்த பிரமாணத்தை அலங்கரிக்கும் விசேஷித்த ஆபரணம் அகந்தையின்மை அல்லது தாழ்மையே. ஆகவே, அகந்தையாவதேதென்று அறியாதவர்களுக்கு முதல்முதல் தாழ்மையின் சத்துருவாகிய அகந்தையின் அநேக படிகளையும் அவற்றினெதிர் ஆட்சேபனைகளையும் ஒருவாறு சுருக்கித் தெரிவிக்கின்றோம்.

க-வது ஒருவனுக்கு அவனது சரீரபலமே மேட்டிமைக்குக் காரணமாகும். அதாவது, தன்னைப்போல வீரியத்தில் சௌரியவான் ஒருவனும் இல்லையென்பதுமன்றி, தான் முன்னொருகாலத்தில் கோட்டை கொத்தளங்களைப் பிடித்து ஜெயம் சிறந்த தளகர்த்தனாயிருப்பதால், எதுவும் தனக்கு நிகரன்று என்று ஏளனம் பேசுவது. இவன் 'கூரம்பாயினும் வீரியம் பேசேல்' என்ற ஔவைப்பெண்ணின் புத்தியை அறியாதவனும், 'வலியார்முற்றன்னை நினைக்கத்தான்றன்னின்-மெலியார்மேற் சொல்லுமிடத்து' என்னும் திருவள்ளுவருரையைக் கேட்டிராதவனும், தனக்கு அப்பேர்ப்பட்ட ஆச்சரியமான பலத்தைக் கொடுத்ததும், அப்பலத்தை அவனின்று அகலச்செய்வதுமாகிய காலத்தை தூஷணிப்பவனும், தன்னை எதிர்த்து வெல்லக்கூடிய சத்துருக்களைப் பார்க்கக்கூடாத அந்தகனும் என்பது பிரத்தியட்சமே. இச்சத்துராதிகள் நோய், மரணம் முதலியனவே. இவைகளுக்குமுன் சிங்கத்துக்கு மேற்பட்ட எந்த அசுரனும் எதிர்த்து நிற்கக்கூடாதபடி அருண்டோடிப்போகவேண்டும். மேலும் தேகமானது, இம்மானிடன் 'இதோசற்று முன்னே நின்றான், இருந்தான், கிடந்தான்; இதோ இப்போ தன்கேளலறச்சென்றான்' எனப்படும் நிலையாமையை யுடையதாதலால், அதைச்சார்ந்த பலத்தின்பேரில் ஒருவன் பெருமைபாராட்டுவது என்ன?—இலங்கைத் தினவர்த்தமானி.

வேறோர் வீரியப்பெண்.

சரு-யி. எட்மண் என்ற இப்பெண் ஆண் வேடம்பூண்டு அநேகவருஷகாலமாய் ஓர் அமெரிக்காப் பட்டாளத்தில் சேர்ந்து புள்ரன் என்ற சண்டையில் காலாள் பட்டாளத்துடன் முன்னிட்டு யுத்தஞ்செய்தும், இன்னும் பெரிதும் சிறிதுமான வேறு யுத்தங்களிலும் பங்குபெற்றும் ஒருகாயமாவதில்லாமல் தப்பிக்கொண்டாள். கடைசியாய் ஷை பட்டாளம் கெந்தக்கி எனுமிடத்திற்குப் போன சமயம் இந்தப்பெண்ணுக்கு அவ்விடம் ஒத்துக்கொள்ளாமல் காச்சல் பிடித்தது. காச்சல்பிடிக்கவும் டாக்டர் மருந்து கொடுக்கும்படி தன்னைப் பரீட்சைசெய்தால் தான் பெண்ணென்று வெளிப்பட்டுப் போகுமெனக்கருதி தன் வீட்டுக்குப் போகும்படி லீவ் கேட்க, லீவ் கொடுக்கமாட்டோமென்று மறுத்துவிட்டார்கள். உடனே பட்டாளத்தை விட்டுவிட்டுத் தனது சுயவூருக்குப்போய் இப்போது தனது சுயவேஷம்பூண்டு இருக்கிருள், இவளுடைய நடக்கையைப்பற்றி அந்தப்பட்டாளத்து ரிக்கார்ட்டில் "சேவகத்தைவிட் டோடிப்போனவன்" என்று எழுதப்பட்டிருக்கிறதை மாற்றும்படி யிப்போ பிரயாசப்படுகிருளாம். (காச்சலாயிருந்தபோது சொல்லாமல் ஓடிவிட்டாள்போலும்.)

வர்த்தமானம்.

உலகத்தின் ஜெனனமரணக் கணக்கு—இவ்வுலகில் ஒரு வருடம் பிறக்கிற பிள்ளைகள் நாலுகோடியே முப்பதுலட்சம் என்றும், ஒருநாளில் பிறக்கும் பிள்ளைகள் ஒரு லட்சத்துப் பதினேழாயிரத்து எண்ணூற்றெட்டென்றும், ஒருமினிற்றுக்கு எண்பது என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. மரணக் கணக்கைப் பார்த்தாலோ சற்றுக் குறைவாகத்தான் தோற்றுகிறது.

—ஒருவருஷத்தில் மரிப்போர்தொகை மூன்றுகோடியே தொண்ணூறுலட்சம் என்றும், ஒருநாளில் மரிப்போர் ஒரு லட்சத்து ஆருயிரத்து எண்ணூற்று நாற்பத்தொன்பது என்றும், ஒரு மினிற்றில் மரிப்போர் எழுபத்துநாலு என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்திய கைம்பெண்கள்.—இந்தியாவில் தற்சயம் ஒரு கோடியே அறுபதுலட்சம் கைம்பெண்கள் இருக்கிருர்களென்றும், அவர்களில் ஒரு லட்சத்து பதினுருயிரம்பேர், இருபத்துநாலு வயதுக்கு உட்பட்டவர்களென்றும் ஓர் இந்திய பத்திரிகை கூறுகிறது.

வால்வெள்ளிகள்—கல்கத்தாவில் இந்தமீ இரண்டு புதிய வால்வெள்ளிகள் காணப்படுமென்று ஓர் வானசாஸ்திரி சொல்லியிருக்கிருர். அவைகளில் ஒன்றுக்கு பர்நாட் என்றும், மற்ருென்றுக்கு பேபிரிஸ் என்றும் பெயராம். இவைகளிற் பிந்தினதுதான் முதலாவதாகக் காணப்படுமென்கிருர்.

இங்கிலாந்துநீங்கி—குழந்தை துவக்கி அதாவது பஞ்சாப் புநாடு ஆங்கிலேயரால் கட்டிக்கொள்ளப்பட்ட காலமுதல் இதுவரையில் 37-வருஷகாலங்களாக இங்கிலாந்தில் வாசஞ்செய்துவந்த மகாராஜா டுலீப்சிங் அடுத்த மாசத்தில் இந்தியாவுக்குத் திரும்பிவிடத் தீர்மானித்துவிட்டார். இதற்கு வெளிக்காரணம், தமக்கு வருஷாவருஷம் கவரன்மெண்டரால் கிடைக்கிற 2,50,000 - ரூபாய் போதாது என்பதாம். ஆனுல் தாம் தமது பிதாவின் நாடாகிய பஞ்சாப்பை தமக்கு விடவேண்டுமென்று கவரன்மெண்டாரைக் கேட்டதற்கு அவர்கள் மறுத்துவிட்டதே, இவர் இங்கிலாந்தை விடுதற்குக் காரணமெனத் தெரியவருகிறது.

அறிக்கை.

மெம்பர்களுக்கு,

பாக்கிவைத்துக்கொண்டிருக்கிற மெம்பர்களை அகத்தியங் கேட்டுக்கொள்ளுகிற தென்னவென்ருல்; (The N. S. S.) என்னும் தலைமையான சங்கத்திற்குச் செலுத்தவேண்டியிருக்கிற மூன்றுமாசத்திய கட்டணத்தை யனுப்பி, மெம்பர்களாயிருப்பதுபற்றி அவ்விடத்திலிருந்து அவசியமான சர்ட்டிபைகேட்டுகள் பெறவேண்டியநிமித்தம், கூடுமான சீக்கிரத்தில் தங்கள் பாக்கிகளைச் செலுத்தவேண்டியது.

நம்முடைய ஜாபிதாவிலே இப்போது 50-மெம்பர்களிருக்கிருர்கள். இவர்களில் ஒவ்வொருவரும் தங்கள் சிநேகிதர்களோடு பேசி முயற்சிசெய்வார்களாகில், சீக்கிரத்தில் அந்தச்சங்கியை இரட்டிப்பாகும். மெஸ்ஸர்ஸ். டேல், கிப்ஸன், உல்ஸன், இவர்கள் நாம் மேற்போட்டுக்கொண்டிருக்கிற காரியத்துக்காக மெம்பர்களாகவும், கையொப்பக்காரர்களாகவும் அநேகரைச் சம்பாதித்ததற்காக அவர்களுக்கு நமது நன்றிகூர்ந்த வந்தனஞ் செலுத்துகிருேம்.

கையொப்பக்காரர்களுக்கு.

பாக்கிவைத்துக்கொண்டிருக்கிற கையொப்பக்காரர்கள் தங்கள் பாக்கித்தொகையை உடனே யனுப்புவார்களென்று அகத்தியங் கேட்டுக்கொள்ளலாகின்றது. நமது பத்திரிகை செலவாகிப் பணவரவுவந்தால்மாத்திரமே நிலைபெற்று வருமேயல்லாது, வரவு தடைபடுமாகில் வெகு சங்கடத்திற்கிடமுண்டாகும்.

நமது பத்திரிகையை வாசிப்பவர்களில் சிலர், முன்பணஞ் செலுத்தவேண்டுமென்பது கெடுவாய்விட்ட தேதிக்கு நாலைந்துமாசத்திற்குப் பின்பு செலுத்துவதல்லவென்பதை மறந்துவிட்டார்கள்போலும்.

நமது வெளி கையொப்பக்காரர்கள் தங்களுக்கு அனுப்பப்பட்ட பத்திரிகைகளுக்கு மூன்றுமாசத்திய தபாற்கூலியை முன்னதாய்ச் செலுத்தவேண்டுமென்பதையும், தங்கள் கையொப்பத்தொகையை அனுப்பாவிட்டால், சங்கத்திற்கு அதிக தொந்தரையும் செல்வும் நேரிடுமென்பதையும் கவனிக்கவேண்டும்.

பத்திரிகைக்குப் பணஞ்செலுத்தக் கூடாமையாயிருக்கிறதென்று எவராவது தெரிந்துகொண்டமாத்திரத்தில், பத்திரிகையை வாங்கிக்கொண்டேயிருந்து பணஞ்செலுத்தாதிருப்பதைப்பார்க்கிலும், உடனே பத்திரிகையை நிறுத்திப்போடுவதே மனுஷத்தனம்.

சுயக்கியான பத்திரிகையில் இப்படிப்பட்ட முறைபாடு செய்துகொள்ள இடமுண்டாவது மிகவும் விசனமானகாரியம். ஆதலால், மறுபடியும் இவ்வித முறைபாடு செய்துகொள்ளுவதற்கு நமது மெம்பர்களும் கையொப்பக்காரர்களும் இனி இடம்வைக்கமாட்டார்களென்று நம்புகிருேம்.

இப்போது நமது கணக்கிலே 100 - கையொப்பக்காரர்களிருக்கிருர்கள்; ஆனுல், நமது சிநேகர்கள் கொஞ்ச முயற்சிமாத்திரம் செய்வார்களாகில், சீக்கிரத்தில் அந்தத்தொகை மூன்றத்தனையாய்விடும். புதுவையிலுள்ள சிநேகிதராகிய ஷாமியப்பன்தாஸ் என்பர் தமிழ்ப்பத்திரிகையைப் பரவச்செய்வதற்கு விடாமுயற்சி செய்துவருகிருர்; அவ்விதமாகவே நமது சிநேகர்களிற் சிலர் இங்கிலீஷ் பத்திரிகைக்காகவு நன்முயற்சி செய்வார்களென்று கோருகிருேம்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும்,

1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும்

பு. முனிசுவாமிநாயகருக்கும்;

1886 - ம் வருஷத்திய சந்தாக்களையும்,

இங்கிலீஷ் பத்திரிகைகளும்,

செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி

மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயரால்

பெரம்பூர் பிரோ[illegible]

அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—NO. 22.] MADRAS :—SUNDAY MAY, 30, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

பிராமணோபதேசம்.

பிராமணகுலத்தில் தோன்றிய தேவேந்திரன் கவுதமரின் மனைவியாகிய அகலிகையின்மீது காதல்கொண்டு நடு ஜாமத்தை அருணோதயம்போலாக்கக் கோழி உருவங்கொண்டு கோழியைப்போல்கூவினான். அதைக்கண்டு அகலிகையின் கணவன் அருணோதயமாய்விட்டதென வெண்ணி படுக்கையினின்று எழுந்து ஜபஞ் ஜபிக்க கங்காநதிதீரத்திற்குச் சென்றான். அவன் சென்றபின், தேவேந்திரன் கவுதமரின் மனைவியாகிய அகலிகையுடன் புணர்ந்தான். கங்காநதிதீரஞ்சென்ற கவுதமர் இது அர்த்தராத்திரியென வறிந்து திரும்பிவந்து பார்க்கையில், தன்மனைவியுடன் தேவேந்திரன் சயனித்துக்கொண்டிருப்பதைக் கண்டு கோபித்து தேவேந்திரனை உன் தேகமுழுவதும் அநந்த யோனிகளாகக் கடவது எனச் சபித்து, தன் மனைவியை கல்லாகக்கடவது எனச்சபித்தாராம். அவர்நாயகி இச்சாபம் எப்பொழுது நீங்குமெனக் கேட்க, இராமர் உதிக்கப்போகிறார், அவர் தம் கோதண்டத்துடனே நீ உருவெடுத்த கல்லின்மீது வந்து நிற்பார். அவர் பாதம்பட்டமாத்திரத்தில் உன் சாபம்மாறிப் பெண்ணுருவமாவாய் என்றார். இப்படியே யாவும் ஆயிற்றும். இதில் தேவேந்திரன் கோழி உருவங்கொண்டதல்ல. அவன் கூரையின்மீதேறி கோழியைப்போல்கூவியிருக்கவேண்டும். தேவேந்திரனை நோக்கி உன் தேகமுழுவதும் யோனியாகப்போகக்கடவது என்று சபித்ததினால் அவன் தேகமுழுவதும் யோனியுருவமான தென்னவெனின், தேவேந்திரனுக்கு விபசாரம் செய்வதே தொழிலானதால், விபசாரத்தால் உதிரங்கெட்டு தேகமுழுவதும் வட்டவடிவமாகக் காணும் கிரந்திப்புண் கண்டிருக்கவேண்டும். அவளை கல்லாகச்சபித்தது என்னவெனின், தேவேந்திரனுடன் நீயேன் புணர்ந்தாயென வினவியதற்கு, அவள் தேவேந்திரனென்று நானறியேன், நீயென்றே எண்ணியிருந்தேன் என்றாள். இவ்வளவுகாலமாக என்னுடன் சேர்ந்திருந்த உனக்கு தேகபேதம் தெரியாமல் போயிற்றா? கருங்கல்லுக்கல்லவோ உணர்ச்சியில்லை. உனக்கு ஜீவனிருந்தும் தேகபேதம் தெரிந்துகொள்ளாமலிருந்ததால், உணர்ச்சியற்ற கருங்கல்லுக்கு சமானமானவள் என்று வைதிருக்கவேண்டும். அதனையே சாபனை என்றும், அது பலித்ததென்றும் எழுதிவிட்டனர். இதனால் பிராமண ஸ்திரீகள் இக்காலத்தில்மட்டுமல்ல, முற்காலத்திலும் விபசார ஸ்திரீகளாக இருந்தார்களென்று விளங்குகின்றது.

M. MASILAMONI.

நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா?

அமரம்பேடு முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(அஉ-வது பக்கத் தொடர்ச்சி.)

மறுமைப்பய னனுபவசித்தாந்த மிராவிடில், ஜனங்களுக்குள் ஒழுங்கிருக்கமாட்டாதென்று மதஸ்தர்கள் சொல்வது உண்மையாயிருக்குமாகில், எவ்விடங்களில் அப்படிப்பட்ட சித்தாந்தம் கொண்டாடப்பட்டு வருகிறதோ அந்தந்த தேசத்தவர்களுக்குள் மிகுந்த சன்மார்க்கம் பரவியிருக்குமென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறதே; அப்படிக்கில்லாமல், உலகத்திலே அதிக சமயப்பற்றுள்ள சில தேசங்கள்மிகுந்த துன்மார்க்கங்களுக்குப் பேர்போனவைகளா யிருக்கின்றன. உலகத்திலே வேறொரு தேசத்தைப்பார்க்கிலும் அதிக திருச்சபைகளும், தேவாலயங்களும், வேதபுஸ்தகங்களும், குருக்கள்மார்களும் நிறைந்த நமது சொந்த தேசத்தைப் பார்ப்போம். இவற்றின் பிரபலத்தைப்பற்றி நாம் வெகுவாய்க் கொண்டாடினபோதிலும், குற்றங்களும் துன்மார்க்கங்களும் நாம் நடுக்கமுறும்படி வியாபித்து வருவதைக்குறித்து நாம்முறையிடவேண்டியதாயிருக்கிறது. சமயவியாபகம் அபரிமிதமாயிருந்தும், இடுக்கண்களும் துன்மார்க்கங்களும் அளவற்றனவாயிருக்கின்றன. விஸ்தாரமான பெரிய பெரிய குருக்கள்மார்களோடுகூட விஸ்தாரமான போலீசு பந்தோபஸ்தும் வேண்டியிருக்கின்றது. தற்காலத்தில் இங்கிலாந்துதேசத்திலே வேதபுஸ்தகங்களும், சிறு கைத்துப்பாக்கிகளும், பிரார்த்தனைகளும், கலபைகளும், வேதப்பிரசங்க மேடைகளும், பீர்க்கடைகளும், பலிபீடங்களும், சிறைச்சாலைகளும், திருச்சபைகளும், ஏழைகள் வேலைசெய்து ஜீவிப்பதற்கான தொழிற்சாலைகளும் கலப்புற்றிருப்பதோடுகூட, ஆத்துமசுத்தி செய்கிறவர்களாகிய கறுப்பங்கிக்காரர்களும், கொலைபுரிகிற படைவீரர்களாகிய சிவப்புச்சட்டைக்காரர்களும் கலப்புற்றே யிருக்கிறார்கள். ஓர்வித மதக்கோட்பாடுடைய குவாக்கர் சபையைச்சேர்ந்த பாக்ஸ் என்பவர் 'யோக்கியதையையும் இயற்கையான அறிவையுங் கலக்கடிக்க லாயர் கூட்டங்களும், பொன்னுக்கு மாறாகக் கொள்ளி நோட்டுக்கட்டுகளும், பிரெஞ்சுக்காரரோடு சண்டைசெய்யச் சேனைக்கூட்டங்களும், மரணத்தைத்தடுக்க டாக்டர் கூட்டங்களும், பிசாசோடு போராடக் குருக்கள்மார் கூட்டங்களும் நமக்கிருக்கவே யிருக்கின்றன' என்று சொல்லியிருக்கிறார். இப்படியிருக்க, மோட்சநரக சித்தாந்தத்தில் நம்பிக்கைவைத்தால்மாத்திரமே பாபமும் துன்மார்க்கமும் தடைபடுமென்று சொல்லுகிறார்கள். ஜனங்கள் தீயொழுக்கம் நிறைந்து இடியுண்கிற தற்கால நிலையை யோசித்து, சீர்திருத்தஞ்செய்கிற தேவபக்திக்காரர் —'இழிவானநடத்தையையுடைய நம்மவர்களுக்காக இன்னுந் திருச்சபைகளும், தேவாலயங்களும் கட்டவேண்டியிருக்கிறது, அவர்களைக் குணப்படுத்துவதற்காக இன்னும் வேதபுஸ்தகங்களும் பாதிரிமார்களும் அதிகமாய் வேண்டியிருக்கின்றன, ஜனங்கள் வேதபுஸ்தகங்களைப் படித்துக் கடவுளைப் பிரார்த்தனை செய்வாராகில், அவர்களுக்குச் சீக்கிரத்தில் ஆறுதலும் சகாயமுங் கிடைக்கும், அவர்களுக்கு வேறே யாதொரு ஆதரவும் வேண்டுவதில்லை, சீர் திருத்துவதற்காகச்செய்கிற மற்றச் சகல ஏற்பாடுகளும் சரீரசம்பந்தமானவையாயிருக்கின்றன, நாம் ஆத்மார்த்தமாக வேண்டியிருப்பதைத் தேடிக்கொள்ளவேண்டும்' என்கிறார்கள். அவர்கள் சொல்லுஞ்சொல் உண்மையாகவாவதிருக்கலாம், கபடமார்க்கமாகவாவதிருக்கலாம். பெரும்பாலுங் கபடத்தை மறைப்பதற்காகவே வெளிக்கு (தவவேடம்) மதவேடந் தரிக்கப்படுகிறது.

உலகத்திலே அதிகமாய் மதம் வியாபித்திருக்கிற சில தேசங்களின் ஜனங்களை மொத்தமொத்தமா யெடுத்துப் பார்க்கும்போது, அவர்கள் மிகவும் தீயொழுக்கமுடையவர்களாகவே யிருக்கிறார்களென்கிற உண்மை ஊர்ஜிதப்படுவதுமல்லாமல், தக்குடி தக்குடியாகப் பிரித்துப் பார்த்தபோதிலும் முடிவு அவ்வாறாகவே யிருக்கிறது. உலகத்திலே கிளாஸ்கோ பட்டணத்தைப்பார்க்கிலும் அதிக தேவபக்தியுள்ள பட்டணம் வேறொன்றிருக்கிறதா? எவ்விடத்திலே அதிக துன்மார்க்க மிருக்கிறது?

பாதிரிமார்களுக்கு சம்பளங் கொடுப்பதும், திருச்சபைகளுக்குச் செல்வதும், வேதபுத்தகங்கள் வாசிப்பதும், நரகத்திற்கும் சைத்தானுக்கும் பயப்படுவதும் நிறைந்த இங்கிலாந்துதேசத்தின் உண்மையான நிலையை அடியில் வருகிற சங்கதிகளினால் தெரிந்துகொள்ளலாம். டப்லின் பட்டணத்

திலே கிரொக் பாதிரியாருக்கும், மக்வயர் பாதிரியாருக்கும் நடந்த வாதத்திலே ஒருவருஷத்தில் எழுபத்தினாலாயிரம் வம்புப்பிறப்புப் பிரியாதுகள் பாரிஷ் அதிகாரிகளுக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டதாய்ப் பார்லிமெண்டு கணக்கினால் தெரியவருகிறதென்று சொல்லப்பட்டது. ஸ்டோர்ட்டு வார்ட்டி.லியவர்கள் கேட்டுக்கொண்டதின்பேரில், ஹவுஸ் ஆவ்காமன்ஸ் என்னுஞ் சபையினுடைய மேசையின்பேரில் வைக்கப்பட்ட கணக்கினாலே, 1839-ஞ முதல் 41-ஞ வரையில் அவ்வளவு தொகையே வெளியாகிறது. ஆன்சிலி பாதிரியார் வேசித்தனத்தைக்குறித்து வெகு சாமர்த்தியமாய்ச்செய்த பிரசங்கத்திலே, லண்டன் பட்டணத்தில்மாத்திரம் வேசிகள் 80,000-பேருக்குக் குறைவில்லையென்று சொல்லியிருக்கிறார். இப்போது ஜனசங்கியை இருபத்தைந்து லட்சத்திற்கு மேற்படவில்லை. அவர்களில் பாதிபேர் பெண்பாலார். குறைந்த கணக்குப்போட்டாலும், அந்தப்பாதியில் அந்தக்குற்றஞ் செய்யவல்லவரல்லாத சிறுமிகள் மூன்றிலொரு பங்குபோக, மற்றிரண்டு பங்காகிய எட்டுலட்சம் ஸ்திரீகளுக்குள்ளும் பெண்களுக்குள்ளும் எண்பதினாயிரம் வேசிகளிருப்பதால், பத்து ஸ்திரீக்கு ஒருவேசி கணக்காகிறது. இதுவும் மறுமைப்பயனது சித்தாந்தம் இடைவிடாது ஜனங்களுடைய கண்ணுக்கெதிரிலிருக்கிற கிரிஸ்தவ நாகரீகமடைந்த ந்ராச்சியத்திலல்லவா! வேறொரு துக்குடியை எடுத்துப்பேசுவோம்.

வேதப்பாட்டுப்பாடுவதும், மஹாத்தும வியாபகமும், ஆத்தும இரட்சிப்பும் பிரபல்லியமாயிருக்கிற லங்காஷயர், யார்க்குஷயர் என்னும் பேட்டைகளிலே, பதின்மூன்று பிள்ளைகளுக்கு ஒருபிள்ளை வம்புப்பிறப்பா யிருக்கிறதென்று சர் ஆர். பிலிப்ஸ் அவர்கள் தமது கிரந்தத்தில் சொல்லியிருக்கிறார்கள். கிரிஸ்டியன் ரிமெம்பிரான்சர் என்னும் மதப்பத்திரிகையிலே, வியவசாய துக்குடிகளைக்குறித்துப் பேசிவந்தபோது, சமர்செட்ஷயர் என்னும் பேட்டையைச்சேர்ந்த [illegible]-வெல்ஸ்-என்னும் சிறிய கிராமங்களிலே தராசு குண்டுகளையும் படிகளையும் சோதனைசெய்கையில், குறைந்த எடையுள்ள கள்ளகுண்டு வைத்திருந்தவர்கள் நூற்றறுபத்தேழுபேர் அகப்பட்டார்களென்றும், அந்த மோசக்காரர்களில் நாலைந்துபேர் கடைக்காரர்களாயுமல்லாமல் செக்டேரியன் மதபோதகர்களாயும், இரண்டுதொழிலுடையவர்களா யிருந்தார்க ளென்றும் சொல்லி யிருக்கிறது. 1843-ஞ எப்பிரல்மீ 28உயையுடைய மான்செஸ்ட்டர் கார்டியன் என்னும் பத்திரிகையில் 1842-ஞ ஜனவரிமீ முதல் 1843-ஞ ஜனவரிமீ வரையில் லாங்காஸ்ட்டர் கோட்டையில் கவுன்ட்டி ஜெயிலில் அடைக்கப்பட்ட கைதிகளைக்குறித்து அடியில் வருகிற [illegible]:—

கிறிஸ்துமதப் பிரிவுகள்.	
இராஜாங்கத்துமதமாகிய புரொடெஸ்டான்டு மதஸ்தர்கள்	471
ரோமன் காத்தொலிக்குகள்	107
மெதாடிஸ்டுகள்	59
பாப்டிஸ்டுகள்	9
பிரிஸ்பிட்டேரியன்கள்	8
இண்டிபென்டென்டுகள்	4
யூதர்கள்	3
கால்வினிஸ்டுகள்	2
பிரிமிட்டிவ்மெதாடிஸ்டுகள்	1
யூனிட்டேரியன்கள்	1
இன்னமதஸ்தரென்று தெரியாதவர்கள்	...10

இந்த 675-கைதிகளில் 665-பேர் ஏதோ ஒருமதத்தைச்சேர்ந்தவர்கள்தானே! மதஸ்தர்கள் சொல்லுகிற நியாயம் எவ்வளவாவது தகுதியாயிருந்தால், மதஸ்தர்களாகிய கைதிகளுள் சங்கியை அதிக குறைவாயிருக்கவேண்டியதல்லவோ கிரமம். இந்த சங்கதிகளிலே மறுமைப்பயனது சித்தாந்தம் பிரயோசனகாரியாயிருக்கிறதா? தீயொழுக்கத்தை விலக்குவதற்கு மதபோதனைமாத்திரம் சுத்தமாய்ப் பிரயோசனபடமாட்டாதென்பதற்கு பார்க் ஹர்ஸ்ட்டு பிரதேசத்து ஏச். ஸ்மித்து பாதிரியாரவர்களுடைய சிறந்த ரிப்போர்ட்டிலே அத்தாட்சி காணலாம். அவர் அந்த ரிப்போர்ட்டிலே, பொதுவான சவரட்சணைக்குளிருக்கிற தாய் தகப்பனற்ற ஏழைப்பிள்ளைகள் 154-பேரில், 113-பேர் ஆதிவார போதக வித்தியார்த்திகளா யிருந்ததாகவும்; நமக்குள் உறுதியான சன்மார்க்கம் செழிக்கவேண்டுமானால், மதப்புஸ்தகங்களல்லாமல் மற்றவைகளிலே இப்போதிய சந்ததியாரைக் கற்பிக்கவேண்டுமென்பதாகவும்; இந்தத் தலைமுறையிலே அவர்களுடைய காலத்தில் அவர்கள் உபயோகமுள்ளவர்களா யிருக்கவேண்டுமானால், அவர்களுடைய ஞானத்தகப்பன் யார், ஞானத்தாய் ஆர், எத்தனை பரிசுத்தநாட்கள் இருக்கின்றன, ஏசுகிரிஸ்துவை பைசாசு மலையில் எங்கே வைத்திருந்தது, என்பன முதலியவற்றைக் கிளிப்பிள்ளையைப்போலச் சொல்லுவதற்குத் தெரிந்துகொண்டிருப்பதைப்பார்க்கிலும் அவர்கள் கொஞ்சம் விசேஷமாய்த் தெரிந்துகொள்ளவேண்டியிருக்கிறதாகவும்; அவர்கள் நல்லொழுக்கத்திலொழுகி உபயோகமுள்ள மேன்மையான காரியத்தில் பிரவர்த்திக்கவேண்டுமானால், திரிமூர்த்தி ஸ்வரூபமாயிருக்கிற கடவுளில் அவர்கள் நம்பிக்கை வைப்பதைப்பார்க்கிலும் வேறொன்றில் நம்பிக்கை வைக்கவேண்டியிருக்கிறதாகவும் சொல்லியிருக்கிறார். தொழிலாளிகளாகிய வகுப்பினர்கள் நன்குயறிந்திருக்கிற ஒரு பிரபலமான உபாத்தியாயர், பாதிரிமார்கள் கற்பிக்கிற சமயப்படிப்பைக் குறித்துப்பேசுகையில், ‘லவுகீகப்பிரயோசனமான படிப்பை வெகுவாயொழித்து, மதசம்பந்தமான படிப்பை அவர்கள் கற்பிப்பதினாலே எவ்வளவேனும் பக்தியுண்டாவதுமில்லை; உண்டானாலும், மனதார சாமானியமான யோக்கியதையோடு அது அனுஷ்டிக்கப்படுவதுமில்லை. சாதாரணமான விவேகத்திற்கும் புத்தி விசாலப்படுவதற்குமுரிய உபகரணங்களில்லாமல் நல்லொழுக்கத்தை உதிக்கச்செய்வதற்காக பாதிரிமார்கள் வெகுகாலம் பாடுபட்டார்கள்; அது சித்தியாகாமலே போயிற்று. சமயநூல்மாத்திரமே சற்குணத்திற்கு ராஜபாட்டையுமல்ல, நன்மைக்கும் மேன்மைக்கும் சுருக்கமான மார்க்கமுமல்ல. அவர்களுடைய சிஷர்களுக்குச் சித்தமாய்த்திறக்கும் வாயில்கள், (இவ்விடத்திய) வாயில்களேயல்லாமல் சுவர்க்கவாயில்களல்ல’ என்று திரமாய்ச் சொல்லியிருக்கிறார். சமயநூல் படிப்பாகிய பழைய ஏற்பாட்டுக்குமேலே விசேஷ விர்த்தியாக, உழைப்புத்தொழிற் பழக்கத்தையும்,லவுகீகப்பிரயோசனமான படிப்பையும் நுழைக்க வேணுமென்று ஸ்மித் பாதிரியாரும் விதியில்லாமல் சொல்லவேண்டியவரானார். சுமார் ஐம்பதுவருஷத்திற்குமுன்னே ராபர்ட்டு ஓவன் அவர்கள் கடைசியில் இந்த நிலைக்குத்தான் வரவேண்டுமென்று இங்கிலாந்துதேசத்துப் பாதிரிமார்களுக்குச் சொல்லியருந்தார். அவருடைய தீர்க்கதரிசனம் நிறைவேறுங்காலம் இப்போது வந்திருப்பதாகத் தோன்றுகிறது. (இன்னும்வரும்.)

பிராமணபுராதனம்.

உறுதியற்ற கற்களில் அவலக்ஷண சொரூபத்தோடு பௌத்தமத சின்னங்களால் அமைந்துள்ள கற்கள் உடைந்து பூமிக்குள் புதைந்து அதன்மீது படிந்தமண் எவ்வளவு அலம்பினும் பிரியாமல் கல்லோடு கல்லாக ஒட்டியிருக்குங் கற்கள் கிருஷ்ணாநதிதீரத்திலுள்ள கருமொன்னும் ஓர் கிராமத்தில் ஏதோ ஓர் கட்டடம் கட்ட பள்ளம் வெட்டினபோது பூமிக்குளிருந்து அகப்பட்டனவாக அவ்விடத்திய கலெக்டர் எடுத்து சென்னை மியூசியத்திற்கு அனுப்பியுள்ளார். அவற்றில் இரண்டுகற்களை லண்டன்மியூசியத்தின் செகிரிட்டெரி தம்மியூசியத்திற்கு வேண்டுமென இந்தியாசெகிரிட்டெரிமூலமாக கவர்னர்ஜெனரலைக் கேட்டுக்கொள்ள, அவ்வாறே கவர்னர்ஜனராலின் உத்தரவுபடி சென்னை கவரன்மென்டார் அவற்றில் இரண்டு கற்களை லண்டனுக்கு அனுப்பிவிட்டு மற்ற கற்களை சென்னை மியூசியத்தில் வைத்திருக்கின்றனர். பிராமணசமய கற்சிலைகள் மிகு உறுதியான கருங்கற்களில் எந்தெந்த அவயவங்கள் எவ்வெவ்விதமாக [illegible]க்கவேண்டுமோ அவ்வவ்விதமாக செய்யப்பட்டிருப்ப[illegible] அவை பிரஜைகள் நாகரீகமடைந்த பிற்காலங்களில் [illegible]ப்பட்டவையென்றும், அவலக்ஷண சொரூபத்தோடு உறுதியற்ற கற்களில் பௌத்தமத சின்னங்கள் அமைந்துள்ள கற்கள் பிரஜைகள் நாகரீகமடைந்திராத பூர்வகாலத்தில் செய்யப்பட்டவையென்றும், அக்கற்கள் பலவாறுக உடைந்து பூமிக்குள் புதைக்கப்பட்டிருந்ததால் பிராமணசமயினர் பௌத்தர்களை நாசஞ்செய்தபோது, அவர்கள் ஆலயத்தை இடித்து பௌத்தமத சின்னங்கள் அமைந்துள்ள கற்களையும் உடைத்து புதைத்திருக்கவேண்டுமென்றும், அக்கற்களின்மீது படிந்த மண்ணை எவ்வளவு அலம்பினும் பிரியாமல் கல்லோடு கல்லாக ஒட்டிக்கொண்டிருப்பதால், அவை அநேக நூற்றாண்டுகளுக்குமுன் உடைத்துபுதைக்கபப்பட்டவையென்றும் இதனால் முன்னுண்டானது பௌத்தமதமென்றும், பின்னுண்டானது பிராமணசமயமென்றும் கரதலாமலகம்போல விளங்குகின்றது.

M. Masilamoni.

சுதேச அரசரும், தேசத்திருத்தமும்.

தன்னுடைய நாட்டில் ஜனங்களுக்குள்ளே யாதொரு திருத்தம் உண்டுபண்ணி, அதனாலே இந்தியாமுழுமைக்கு சிறந்த வழிகாட்டியா யிருந்து, புகழுடம்பு பெறுவதற்கு போதுமான கியானமும், திரமுமுடைய சுதேசத்தரசர் ஒருவருமில்லையா? அப்படிப்பட்ட அரசர் அடியில் கண்டிரு

கிற காரியசித்திக்காகச் சட்டஞ்செய்வது சகுதியாயிருக்
மே; (1) பிராமணர்கள் விஷயத்தில் 12-வயதாவதற்கு
ன்னமே பெண்ணுக்கு விவாகஞ்செய்யக்கூடாதென்பது;
(2) மற்ற வருணத்தவர்கள் விஷயத்தில் 15-வயதாவதற்கு
முன்னமே பெண்ணுக்கு விவாகஞ்செய்யக்கூடாதென்பது;
(3) பிள்ளைகளுக்கு 20-வயதாயிருக்கலாமென்பது; (4) விரு
த்தர்களுக்குப் பெண்களை விவாகஞ்செய்துகொடுக்கக் கூடா
தென்பது. இதுவிஷயத்தில் யாதொரு சுதேசத்தரசர் முய
ற்சிசெய்யத் தலைப்படுவாராகில், அவசியமான விவரங்க
ளெல்லாம் எடுத்துக் கூறப்படும். (சுதேசசுயக்கியானி, மதி
ராஸ் டயம்ஸ்.)

சிறுவயதுவிவாகம்.

(மதிராஸ் டயம்ஸ்.)

இந்துக்களுக்குள் சிறுவயதிலே [illegible] ஞ்செய்கி
ற விஷயம் யோசிக்கத்தக்கதாயி[illegible] கும் சாதா
ரணமான விவாகத்திற்கும் வி[illegible]. குழந்தைப்
பருவவிவாகத்தினாலே சரீர[illegible] லுவுங் குன்றிப்
போவதுமன்றி, ஒருகால் சி[illegible] விதந்துவாகும்படி
[illegible]ங்கட்டமு முண்டாகிறது. அப்படிப்பட்ட விவாகங்
உடைத்தத்திலே, நாயகன் விரும்பித் தெரிந்தெடுத்து,
[illegible] அன்புடனே சம்மதித்து நடத்தப்பட்ட விவாகங்
[illegible]ால சுகமுள்ளனவா யிருக்கின்றனவா வென்கிற
[illegible]மான கேள்விபிறக்கிறது. இத்தேசத்தவர்களுக்குள்
[illegible]மமான வழியா லல்லாமல் உற்றார் பெற்றரால் ஏ
[illegible]சய்து நடத்தப்பட்ட விவாகங்கள் மொத்தத்திலே,
[illegible]ப்பியர்களுக்குள் நாயகன் வேண்டுகோளும் நாயகிச
மதமும் பொருந்திய விவாகங்களைப்போலவே சுகமுள்ள
வா யிருக்கின்றன வென்று மிக்க வாராய்ச்சியுள்ள புத்தி
ான்கள் சொல்லக் கேட்டிருக்கிறேம். அதை நாம் ஒப்புக்
காள்ளவேண்டுவது மில்லை, ஆட்சேபிக்கவேண்டுவதுமில்
ல. இத்தேசத்தவர்களுக்குள்ளே நாயகன்கோரி நாயகிச
மதியின்பேரில் நடந்தேறியிருக்கிற விவாகங்கள் சிறுவய
திலே உற்றார் பெற்றருடைய இஷ்டப்படி நடத்தப்பட்ட
விவாகங்களைப் பார்க்கிலும் வெகுவாய்ச் சச்சரவுக்கிடமில்
லாமல் அன்போடிங்கூடி அதிக சுகமுள்ளனவா யிருக்கின்
றனவென்று நாம் உறுதியாய்ச் சொல்லலாம். பட்டணங்க
ளில் வாசஞ்செய்கிற உயர்ந்த வகுப்பினராகிய சுதேசிகள்
நீங்கலாக, மற்ற சாதாரணமான ஜனசமூகத்தைப் பற்றி
யோசிப்போமாகில், [illegible] வயதில் விவாகமான பெண், கண
வனோடு கூடி வாழுங்காலம் வந்தபோது, அவளுக்கு மாமி
நாத்தி ஓரகத்தி முதலானவர்களுடைய சங்கட்டம் பெரிதா
யிருக்கிறது. அப்போது கணவனும் சாதாரணமாய்ச் சிறுவ
னாகவே யிருக்கிறான்; அவன் தன் மனைவிபட்சத்தில் பேச
வேண்டுமென்று நினைத்தாலும், வெட்கத்தினாலே பேசாதிருந்து
விடுகிறான். பெரும்பாலும் அப்படி நினைப்பதுமில்லை; தான்
புருஷகாரியாய்விட்டதாக எண்ணுவதினால், அவனும் மனை
வி மேல் அவ்வித கொடுமையான அதிகாரஞ்செலுத்த ஆரம்
பிக்கிறான். அந்தச் சிறுபெண் கணவனுடைய வீட்டை விட்
டு அடிக்கடி தாய்வீட்டுக்கு ஓடிப்போகிறாள். கொஞ்சம்
பாராட்டமும் சமாதானமும் நடந்தபின்பு, கணவன்வீட்
டார்போய் அவளை அழைத்துவருகிறார்கள். இப்படி அவள்
தாய்வீட்டுக்குக் களவாய் ஓடிப்போவதுமல்லாமல், சில
வருஷம் வரையில் காலாகாலங்களில் கணவன் மாமி முத
லானவர்களுடைய சம்மதியின் பேரிலும் தாய்வீட்டுக்கு அ
னுப்பப்படுவதோடு, முக்கியமாய் அவள் கர்ப்பிணியாயிருக்
கும்போது அனுப்பப்படுகிறாள். அப்படி போயிருக்குங்கால
ங்களிலே அவள் தன் தாய்வீட்டாருக்காக வேலைசெய்துகொ
ண்டிருந்து, தன் மாமியார் வீட்டுக்கு மறுபடியும் போகவே
ண்டியபோது புதுப்புடைவை கொண்டுபோவதற்காகவும்
வேலைசெய்கிறாள். இவ்விதமாய் அவள் தான் பிறந்த வூரில்
காலத்தைக் கழிப்பது சுகமாகவே யிருக்கிறது; சிலமாசகா
[illegible] மாமியார்வீட்டு உபத்திரவம் நீங்கி எதேச்சையா யிருக்
[illegible]யதெனி[illegible] எதேச்சையானது வெகுவாய்க் கெடுதிக்கே
[illegible]பிரத்திய[illegible]து. அந்த மனைவி தன் கணவனிடத்தில் அ
[illegible]தேசன்[illegible]வளாகி தோஷத்திற் குள்ளாகிறாள்; இவ்வாறு
[illegible]ம் நீக்க[illegible]கூடி வாழ்வது வெறுப்புள்ளதாகிறது. மனைவி
[illegible]கப்புடா[illegible] நடக்கிற நடத்தையைக் குறித்து கேள்விப்படு
[illegible]ன் அதிககோபங்கொண்டவனாகிறான். அவள் சி
[illegible]வேளைகளில் கணவனிடத்திற்குத் திரும்பி வருகிறதெனறு
[illegible]றது; ஓய்வாகத் திரிந்தகாலத்தி
[illegible]ானது சில சமயங்களில் கணவ
[illegible]றது. இதனாலே கொடுமையுமேய
[illegible]சில்வேளைகளில் கொலையு முண்டாவதுதான் முடிவு.
[illegible]யான வயதிலே நாயகன்கோரி நாயகி சம்மதித்து விவா
கம் நடத்தப்படுமாகில், அது சுதேசிகளுக்குள் வெகுசுகமா
ன காரியம். அப்படிக்கானால், துன்பத்திற்கு முக்கியமான
தாகிய காரணமொன்று ஒழிந்தாவது போகிறது, அல்லது
வெகுவாய்க் குறைந்தாவது போகிறது;—அதாவது மாமி
யாருடைய கொடுமைதான்; மனைவி தாய்வீட்டிற்கு ஓடிப்
போகவேணுமென்கிற நினைப்புண்டாவது அரிது; அவ்விடத்
திற்கு அடிக்கடி போகவேணுமென்கிற எண்ணமும் உண்
டாகமாட்டாது, போனாலும் நீடித்திருக்கமனமிராது; அதி
னாலே கெடுதியுண்டாவது அரிது. பெண்கள் கல்வி கற்பதி
னாலே, கணவரிடத்தில் விசுவாச முள்ளவர்களாயிரார்களெ
ன்றும் இல்வாழ்க்கை சுகமாயிராதென்றும் சில மூடஜனங்
கள் நினைப்பதுபோ லல்லாமல் அதிக நன்மையுண்டாகும்.
சில நாளைக்குமுன்னே மனைவியைக்கொன்ற சில குற்றவிசா
ரணைகள் ஜனங்களுக்குத் தெரியவந்ததினாலே இந்த விஷய
த்தைப்பற்றி யெழுதவேண்டிய நினைப்புண்டாயிற்று.

ஹிந்து கைம்பெண்களின் கோரம்.

இந்தத் தலைப்பெயர் கொடுத்து, (The People's Friend)
என்னும் பத்திரிகையிலே, கைம்பெண்களின் புனர்விவாக
சபையைச்சேர்ந்த அத்தியட்சரொருவர், கணவன் இறந்து
போன பதினோராம்நாளில் அவனுடைய மனைவியைத் தலை
மொட்டையடிக்குங் கோரமான வழக்கம் கூடாதென்று எ
ழுதிய கடிதமும், அந்தச் சபைத்தலைவர் எழுதிய மறுமொ
ழியும் வரையப்பட்டிருக்கின்றன. அந்த அத்தியட்சருடைய
கடிதத்திலிருந்தெடுத்து அடியில் கண்டிருக்கிற சங்கதியினா
லே, அந்த வழக்கம் மிகவும் கொடுமையும் இழிவுமுள்ள
தென்று தெரியவரும். அதாவது:—

"அந்த வழக்கம் சாஸ்திரசம்மதமானதென்று நான் நம்
பவில்லை. சாஸ்திரசம்மதமானதாயிருந்தாலும், மானுஷீகத்
துக்கடுத்த விசேஷ அறிவுவிளங்கும் இக்காலத்தில் இந்த து
ர்வழக்கத்தை நிறுத்திப்போடுவது யுக்தமாயிருக்கவில்லையா.
ஒவ்வொரு குடும்பத்திலும் இந்தக் கொடிய வழக்கத்தி
னாலுண்டாகுந் துக்கத்தை வர்ணித்துச்சொல்ல நான் கவி
ராயனாயிராமற்போனேன். சிலநாளைக்கு முன்னேதான் எ
ன்னுடைய உத்தியோக முறைமையிலே ஒரு சிறுபெண்ணி
னுடைய சங்கதி தெரியவந்தது; அவளை அவளுடைய உற்
றார் பெற்றார் தலைமொட்டை யடித்தலென்னும் இந்த மத
சம்பந்தமான சடங்கைச் செய்வித்துக்கொள்ளும்படி நிர்ப்
பந்தித்தார்கள்; அவள் இந்த அவமானத்தை நிவர்த்தி செய்
துகொள்ளும்பொருட்டு கிணற்றில் விழுந்து இறந்துபோனா
ள்" என்பதே.

இதனாலே, கைம்பெண்களின் புனர்விவாகச்சபையில் திர
மும் உண்மையான கியானமுமுடைய அத்தியட்சரொருவ
ராவதிருக்கிறாரென்று தெரியவருகிறது.

அந்தச்சபையின் தலைவராகிய ம-ா-ா-ஸ்ரீ ர. ரகுநாதரா
யரவர்கள் அந்தக்கடிதத்திற்கு எழுதின மறுமொழியில், அ
ந்த வழக்கம் கொடியதுதானென்று ஒப்புக்கொண்டு, அதை
நிவர்த்திப்பதற்காக அத்தியட்சர்களோடு ஒருங்குகூடி வே
ண்டிய முயற்சிசெய்வதாய்ச் சொல்லியிருக்கிறார்.

ஆயினும், அவர் அக்கடிதமெழுதின அத்தியட்சர் சாஸ்தி
ரத்தை மதியாமைக்காக நடுங்கி, அடியில் வருமாறு எழுதி
முடிக்கிறார். அதாவது:—

"(அந்த வழக்கம்) சாஸ்திரசம்மதமானதாயிருந்தாலும்,
மானுஷீகத்துக்கடுத்த விசேஷ அறிவு விளங்கும் இக்காலத்
தில் இந்த துர்வழக்கத்தை நிறுத்திப்போடுவது யுக்தமாயிரு
க்கவில்லையா?" என்று எழுதியிருக்கிற அபிப்பிராயத்தில்
நான் உம்முடன் கலக்கமாட்டேன், அதற்காகமன்னிக்கவே
ண்டும்; அது சாஸ்திரசம்மதமாயிருக்குமானால், அதற்கு வி
ரோதமாய்ப் பிரவர்த்திக்க எனக்கு இஷ்டமில்லை என்றார்.

யாதொரு தீமை சாஸ்திரசம்மதமானதா யிருக்குமாகில்,
அது சீர்திருத்தத்திற்குத் தலைவராகிய ரகுநாதராயரவர்க
ளுக்குத் தீமையல்லவாக்கும்! இந்தத்தலைவர் தம்மைச்சேர்
ந்த மேற்படி அத்தியட்சரோடு கொஞ்சகாலம் பழகிவருவா
ராகில், வெகு நன்மை பயக்குமென்று நினைக்கிறோம்.

(The Thinker.)

கேட்டையின் சேட்டை.

சிருற்றேங்குர் தென்புதுவாபுரியில் - பேருற்றேங்கும்
புலவர்பெருமானெனப்பன்னும், பு. ஏ. வே. வி. மு. இ. நா.
என்பவர் தமதில்லத்தில் தனது திருநக்ஷத்திர மஹோற்சவ
த்தை சிறப்பிக்கும் விடயத்தைச் சற்று யோசிக்கின் மிக்க
வியப்புறுகின்றது. அஃது:—

அவரது ஜென்மநட்சத்திரம் பங்குனி கேட்டையென அவரது சீடர் பலரால் பலதடைவையிலும் கேள்வியுற்று, நிகழும் 1886ஞ மார்ச்சுமீ 26உக்குச்சரியான பார்த்திப ஞ பங்குனிமீ கசஉ சுக்கிரவாரம் கேட்டையினன்று ஆண்டேகிப்பார்க்க, அவர் தன்னை யலங்கரித்துக்கொண்டு, ஸ்திரீ-புருஷர் நிறைபெருந்திரளின்மத்தியில் ஒருயர்ந்த வாசனத்தின்மீது திண்டு தலைக்கணையுடன் வீற்றிருக்க, சில அம்மையார் சாமரமிரட்டவும், சிலர் வெட்டிவேர் விசிறிகொண்டு வீசவும், அவருக்கு தீபதூபங்கொடுக்கவும், சிலர் கதலி முதலிய பல வாராதனஞ்செய்யவும்; சிலர் சோமன்சோடும், சிலர் சால்வையும், சிலர் புடவை ரவுக்கையும், சிலர் பத்தாறும் கொடுப்பதைப் பற்றிக்கொண்டு, சில ஏழைகள் தம்மாலியன்ற காலணா கொடுப்பதைத் தடுக்கவும் கண்ணுற்றேம். ஈதென்ன விந்தை! பின்பு கவிஞர் காலில் திடீர் திடீரென விழுவதும், புகழ்வதும், வாழ்த்துவதும் என்ன வியப்பு!

இப்படிப்பணிந்தபின் அன்னேரை விளித்து இச்சம்வற்சரம் ஏனிப்படி செய்துவிட்டீரென வினவலும், விசேஷ பொருள் கொடுத்தோர்க்கும், பொருளுடையோர்க்கும் தன் காலலம்பிய நீரில், குங்குமப்பூ - பச்சைக்கர்ப்பூரம் - துளபம் முதலிய திரவியங்களைச் சேர்த்ததனைக் கொடுக்கையும், முன் காலணா கொடுத்தோர்க்கில்லை; தீராது பெற்றுக்கொள்ளுங்கோளெனத்தருவதும் என்ன மகிமை!

இதுநிற்க, சிலரிடம் பத்தாறு வாங்கிக்கொண்டு ஒண்ணேகால் சாண்துணியில் காவியைத்தடவிய காலைப் பதிய வைத்து ஈவதும், முன் தாமுண்ட சேடத்தை செல்லோர்க்களிப்பதும்,தனது உருவப்படத்தைத் தன்னெதிரே தூபதீப நைவேத்தியஞ் செய்வித்து மகிழ்வதும் என்ன ஆநந்தம்! (அவரது சீடரின்னும் சிலரிருக்கின், அப்படத்தை கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.)

தத்துவவிவேசினி யெனப் பேர்பெற்றுவரும் உத்தமியான பத்திரிகையைக் கண்டுகளிக்கும் கனவான்களே! இத்தகைய நாவலரின் குணநுட்டானங்களை யோசிக்கின், இதற்குச் சாத்திரமுளவா? உளதெனினும், யுக்தியனுபவத்திற்கொத்திருக்கவேண்டு மென்பீர்களன்றோ? இதற்கு விடை வேண்டுமென விசாரிக்கப்புகின், மரித்தபின் திவசம் கொடுப்பதிலும், தாமுயிரோடிருக்கையிலேயே யதனை யனுபவிப்பதுத்தமமென்பார்போலும். இங்ஙனம்.

புதுவை - சுயக்கியான நண்பரில்
[illegible] உண்மைவிளம்பி.

சென்னபட்டணத்தில் புசல்.

இரண்டுதோணிச்சேதம்.

சென்ற ஆதிவாரம் சென்னபட்டணத்திலே புசல் அடித்தது. காலை 8-மணி வரையில் சாந்தமாயிருந்த கடல், வாயு மூலைக்காற்றினாலும் மழையினாலும் மும்முறங் கொண்டது. அன்று மத்தியானம் மாஸ்ட்டர் அட்டென்டாண்டானவர் உத்தரவு செய்தபடி ஹார்பரிலிருந்த ஐந்து நீராவிக் கப்பல்கள் உடனே நடுக்கடலுக்குப்போய், மறுநாள்வரையில் அங்கேதானே இருந்துவிட்டன. ஹார்பருக்கு வடபக்கத்திலே நின்றிருந்த அநேக தோணிகள் தத்தளித்துக்கொண்டிருந்தன. மேமாசத்தில் அவ்விடத்திலே தங்கியிருப்பது அபாயமென்று அந்தத் தோணிகளின் தண்டல்களுக்கு அடிக்கடி முன்னெச்சரிக்கை செய்திருந்தும், அதை அவர்கள் லட்சியஞ் செய்யாமற் போனார்கள். ஆதிவாரம் பகல் அவர்கள் தென்பக்கமாய் வந்திருப்பார்களாகில் அபாயமடையா திருக்கலாம். அவர்களுக்கு சிக்னல் தெரியாதாகையினாலே நடுக்கடலுக்குப் போய்விடும்படி சிக்னல்செய்தபோதிலும் பிரயோஜனமில்லை.

அபாயம் நேரிட்டால் உதவி செய்வதற்காக கோட்டையிலிருந்து பட்டாளம் தருவிக்கப்பட்டது. தென்பக்கமாயிருந்த மூன்று சிமைக்கப்பல்கள் இரட்டை நங்கூரங்களினால் தப்பித்துக்கொண்டன. பகல் மூன்றுமணிக்குமேல் நான்குமணிக்குள்ளாக காற்று உறப்பாய் அடித்ததினால் பழயதோணி ஒன்று, மூன்று நங்கூரங்களை அறுத்துக்கொண்டு ஒரு சிறிய தோணியில் தாக்கி, அதின் ஸ்தம்பங்களை முறித்துப்போட்டு, கடைசியில் ஹார்பரின் வடமுனையில் இடிபட்டு சுக்கல் சுக்கலாய் உடைந்துபோயிற்று. அந்தத் தோணியில் இருந்தவர்கள் ஒன்பதுபேர், மற்றவர்கள் கரைக்கு வந்துவிட்டார்கள். கட்டுமரம் போட்டுக்கொண்டுபோய் கரைக்குக்கொண்டுவரப்படுகிற ஒவ்வொரு நபருக்கு இருபதுரூபாய் விழுக்காடு இனும் கொடுப்பதாய் மாரீன் இலாகாதார் சொன்னதின்பேரில், சில கட்டுமரக்காரர்கள் துணிந்துபோய் எட்டு ஆள்களை ஏற்றிக்கொண்டு வந்தார்கள். ஒருவன் அகப்படவே யில்லை. அகப்பட்டவர்களில் மூன்றுபேர் மிகச் சோர்ந்திருந்தபடியால், அவர்களைக் கஞ்சிதொட்டிக்கு எடுத்துக்கொண்டுபோனார்கள். பின்பு சுமார் ஒருமணிநேரத்திற்கெல்லாம் வேறொரு தோணி விடுபட்டு, முன்னதுபோலவே இடிபட்டுச் சுக்கல் சுக்கலாய்ப் போயிற்று. அந்தத் தோணியிலிருந்த பன்னிரண்டுபேரில் பத்துபேர் தப்பிப் பிழைத்தார்கள்; இரண்டுபேர் போனவழி தெரியவில்லை. அந்தப் பத்துப்பெயரில் ஆறு பெயரை கட்டுமரக்காரர்கள் கொண்டுவந்து சேர்த்தார்கள். பியர் வாராவதிக்கு நீந்திவந்து சேர்ந்த மூன்றுபெயர் கரைக்குக் கொண்டுவரப்பட்டார்கள். ஒருவன் நீந்திக் கரைவந்து சேர்ந்தான். அந்த இரண்டுதோணிகளிலும் சரக்கு ஒன்றுமில்லை, எல்லாம் முன்னதா யிறக்கிவிடப்பட்டது. பட்டாளம் வந்திருந்தும் யாதொரு உதவியுமில்லை.

தென் இந்திய றெயில்வே உடைப்பு.

சென்ற ஆதிவாரம் புதுவையிலும், கடலோரத்திலும் கனத்தமழை பெய்ததினால், 54 - வது மயில் முதல் [illegible] மயில்வரையில் தென் இந்திய ரெயில்வே மார்க்கம் [illegible]பட்டு, அன்றைய காலை 7 - மணி தபால்வண்டியும் [illegible] வண்டித் தொடர்களும் நின்றுபோயின. சென்னபட்டணத்திலிருந்தும் தூத்துக்கொரீனிலிருந்தும் வந்த தபால்வண்டிகள் கட்டுகளை யிறக்கிவிட்டு வந்தவழியே திரும்பிவிட்டன. சீக்கிரத்தில் உடைப்பு மறமத்தானவுடனே, ஒருபக்கத்திலிருந்த பயணக்காரர்களையும் தபால் கட்டு முதலானவைகளையும் கொண்டுபோய் மற்றொருபக்கத்திலிருந்த வண்டித்தொடரில் ஏற்றினார்கள். மற்ற பயணக்கார வண்டித் தொடர்களும் பயணக்காரர் முதலானவைகளை அவ்வாறே மாற்றி ஏற்றிக்கொண்டு போயின. அன்று ஆதிவாரதினமே கூட்லூர் புதுப்பேட்டைக்கும், பழையபேட்டைக்கும் நடுவில் சொற்ப உடைப்பு உண்டாயிற்று. அந்த டிவிஷன் இஞ்சினீர் அதிக ஜாக்கிரதைப்பட்டு அந்த மார்க்கததை சீர்ப்படுத்திவிட்டார்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.) வெளியூர்—(அட்வான்சு.)

உள்ளூர்	Rs.	As.	P.	வெளியூர்	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செலுத்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும், வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-14-0-ம் செலுத்தவேண்டும்.

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும்,

1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும்

பு. முனிசுவாமிநாயகருக்கும்;

1886 - ம் வருஷத்தி[illegible] சந்தாக்களையும் [illegible]

இங்கிலீஷ் பத்திரிகைகளும், [illegible]ம் நாகே[illegible]

செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிடரும் ஏத[illegible] ஸ்ரீவிர[illegible]

மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் [illegible]யான [illegible]

[illegible]நமல்ல

பெரம்பூர் பாரெக்ஸ் ரோட்டில் [illegible]

அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MADRAS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

[Vol. V.—No. 23.] MADRAS :—SUNDAY JUNE, 6, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுக சொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

சிருட்டிகர்த்தர்கள்.

உலகாதி சகல வஸ்துக்களும் ஓர் இறைவனால் சிருட்டிக்கப்பட்டுள்ளனவென்பது சமயவாதிகள் கருத்து. இக்கருத்துள்ள சமயவாதிகளைச் சிருட்டி என்பதற்குப் பொருளென்னையெனின், ஒருவர் சொல்வதுபோல் பிறரொருவர் சொல்லுவதில்லை. சூன்யோபாதானமாய் ஒன்றை உண்டாக்குதலே சிருட்டியென்று சிலரும், நிற்சொரூபமாயுள்ள வஸ்துவிலிருந்து ஒன்றைச் சொரூபப்படுத்தலே சிருட்டியென்று சிலரும், சர்வசூன்னியமா யிருக்குங்காலத்திலே விராட்டினுடைய ஞெப்திமாத்திலாயில் ஜனிப்பதே சிருட்டியென்று சிலரும் இப்படியே பற்பலர் பற்பலவிதமாகவும் சொல்கின்றனர். இவர்களை நோக்கி யுங்களுக்கு இக்கருத்துண்டானதற்குக் காரணமென்னவென்றால், அனுபவமும் அனுமானமுமே யென்கிறார்கள். அனுபவமாவதெப்படி? யாதேனும் ஒன்றை ஒருவர் சிருட்டிக்கப் பார்த்தாவது, அல்லது நீங்களே சிருட்டித்தாவது இருக்கின்றீர்களா வென்று கேட்டின் இரண்டுமில்லை யென்கிறார்கள். இங்ஙனம் இடமில்லையேல் எப்படி அனுமானித்தீர்களென்றால், ஒருவன் நினைக்காமல் ஒருவஸ்து தற்செயலாய் உதிக்குமா வென்கிறார்கள். இப்போதுள்ள வஸ்துக்கள் அல்லது இவற்றின் ஆதார ஆதேயங்கள் ஓர்காலத் தில்லையென்றாவது உங்களுக்கு நிச்சயமாகத் தெரியுமாவெனின், அதுவுந் தெரியாதென்கிறார்கள். தெரியாதேல், அவை யொருகாலத்தில்லையென்று கருத்து கொள்ளவும், அவற்றை ஆக்கியோ னொருவனுண்டென்று திடங்கொள்ளவும் என்ன ஆதாரமிருக்கிறதெனின், பசபசவென்று விழிக்கிறார்கள். சூனியத்தினின்றும் ஒன்றை யுண்டாக்குதலே சிருட்டியெனின், சூனியத்தினின்று நிற்சூனியமுண்டாகாது. "நா அபாவாத் பாவம்" என்று அனுபவவாக்கிய மிருக்கின்றமையாலும், இல்லது எங்கால் உள்ளதும் இல்லாமற்போதல் கூடுமாதலாலும், உள்ளதோ ஒரு அணுமாத்திரமும் இல்லாமற்போக நாம் கண்டதும், கண்டதாகக் கேட்டதும் இல்லையாதலால், சூனியத்தினின்றும் உலகாதிப்பிரபஞ்சங்கள் உற்பவித்தனவென்பது அசாத்திய வாக்கியமென்றுணர்க. முன்னுள்ள ஓர்பொருளை வேற்றுருவாகச்செய்தலே சிருட்டியெனின், இது மாயாகாரிய வாதமாகின்றது. எப்படியெனின், அனாதிகாரணமாயுள்ள மாயையினின்றும் காரியப்படுத்தப்பட்டதே இவ்வுலகமென்பார் கூற்றை ஒத்திருக்கின்றமையால். யாதொன்று தன்னுருவொழித்து வேற்றுருவாகக்கூடியதோ அது நியதமான உருவென்பதொன்றில்லையாதலால், அதை காரணமெனல் கூடாது. காரியசம்பந்தத்தை ... [illegible] ..., அது நிஷ்காரணமாயுள்ளதென்கிறதே. ... மாகிய மாயை நிஷ்காரணமாயுள்ளதென்று ... விவேகிகள், பிரத்தியக்ஷமாகிய பிரபஞ்சம் ... ரணமா யிருக்கக்கூடுமேயென்று ஏன் உத்தேசிக்கலாகாது? அங்ஙனம உத்தேசிக்கவும் மனம் நாடாதவர் ... ர்ச்சியளவில் திருப்தியடைந்து ஏன் இருக்கப்படாது? இவ்விருவழியிலும் சிருட்டியுண்டென்று சொல்லுதற்கிடங்காணோம். மூன்றாவதாகிய பிரஞ்ஞாமாத்திரையில் பிரபஞ்சங்களும் உதித்தொடுங்குகின்றன வென்பதை யோசிப்போம். பிரக்ஞையுள்ளபோதே பிரபஞ்சமுண்டென்பதும், பிரக்ஞை யில்லாதபோது பிரபஞ்சமில்லையென்பதும் அதே யமையுமல்லவா? பிரக்ஞைக்குக் காரணம் உண்டோ இல்லையா? இல்லையெனின், பிரஞ்ஞையாகிய பிரபஞ்சத்திற்கும் காரணமில்லையென்றாகிறது; உண்டெனின், அக்காரணம் யாது? தேகாதி அந்தக்கரணங்களேயன்றோ? அத்தேகாதி அந்தக்கரணங்கள் பிரக்ஞா காரணமாகின்றமையால், அவை பிரக்ஞைக்கு முந்தியதாகின்றன. அதாவது பிரக்ஞை யுதிப்பதற்கு முன்னரே தேகாதி அந்தக்கரண முண்டெனவாகின்றமையால், பிரக்ஞையே பிரபஞ்சமென்பதும், பிரக்ஞையுண்டேல் பிரபஞ்ச முண்டென்பதும் தப்பாய் முடிகின்றது. ஆதலால் சிருட்டி சித்தாந்திகள், சிருட்டி சிருட்டியென்று ஓர் பெயரைச் சிருட்டிசெய்திருக்கின்றமையால், இவர்களே சிருட்டிகரல்லாமல் வேறு சிருட்டிகரைக் காண்கின்றிலம்.

நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயன் அவசியமா?

அமரம்பேடு

முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(அகூ-வது பக்கத் தொடர்ச்சி.)

குருக்கள்மார்களைத் தலைமையாக உடைய ஜனங்களையும், எவர்களுக்குள் இலவுகீக வித்தியாப்பியாசமும் சுயக்கியானமும் ஆசோதையான காலத்தில் விவேகமற்ற காலட்சேபமும் பாவச் செய்யுப்படுகிறதோ அந்த ஜனங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். ஸர் - ச்சார்லெஸ் - லீயெல் என்பவர் ... [illegible] ... க்குறித்து நவீனமாய்ப் பிரசித்தஞ்செய்த ஜியாலொஜீ சாஸ்திரத்தில், நியூஹார்மொனி பட்டணத்தைக்குறித்து எழுதியிருப்பதாவது: 'நியூஹார்மொனி பட்டணத்தில் திருச்சபையுங் கிடையாது, தேவாராதனை ஸ்தலமுங் கிடையாது; அது மேற்படி இராச்சியமுழுதும் நாங்கள் சுற்றிப் பார்த்துவந்தமட்டிலே, அந்தப்பட்டணத்தில் பாதியளவுள்ள எந்தப்பட்டணத்திலும் நாங்கள் பாராத விசேஷம். தேவாலய மில்லாததுபற்றி, அந்தப்பட்டணத்தாரை ஓர் காலத்தில் கிரான்வில்லி பட்டணத்தார் பரிகாசஞ் செய்தபோது, அவர்கள் எங்கள் பட்டணத்திலே சாராயவகைகள் விற்பதற்குக் கடைகளும் கிடையா வென்றார்கள்; அதுவே அந்தப்பட்டணத்திற்குச் சிறந்த புகழ். கிரான்வில்லி பட்டணத்திலோ, (தேவாலயங்களிருக்கிற) சுற்றுப் பக்கத்துப் பட்டணங்களைப்போலவே, குடிவெறிக்கு முகாந்தரமான சாராயக்கடைகள் விஸ்தாரம் இருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்' என்று எழுதியிருக்கிறார். சாராயவிற்பனை சாலைகளும், ஆத்மார்த்த போதனாசாலைகளும் ஆங்காங்கு அன்னியோன்னியமான அயலுக்கயலாயிருக்கின்றன. குடியை வெறுக்கிற நண்பர்களே! சாராயமாகிய 'ஆவியை' நிவர்த்தி செய்யும்படி ஜனங்களுக்குப் புகழ்ச்சியான புத்திசொல்லப்போய், அதற்கு வதிலாக, ஜனங்களுடைய சாலைகளை வீணே பிரார்த்தனைசெய்து பெருமூச்செறிகிற சாலைகளாக்கி, கடவுளாகிய 'ஆவியைத்' தொண்டுவைத்து நுழைத்துவிடாதீர்கள். நியூஹார்மொனியில் திருச்சபைகளுக்கும் தேவாலயங்களுக்கும் வதிலாய் உபயோகமான உபந்நியாசங்கள் செய்யப்பட்டும், ஜனங்கள் விவேகம் விளங்கும்படியான காலட்சேபஞ்செய்தும் வருவதற்கான மாளிகைகளும், மியூஜியங்களும் இருக்கின்றன. சுயக்கியான விசாரணையும் தாராளமான வாதங்களும் நடந்தேறிவருவதைத் தடுக்க முயற்சிசெய்யாமல், உலகமுழுவதும் திருச்சபை முதலிய மதசம்பந்தமான கட்டடங்களை மேற்படி சாலைகளாக மாற்றுவதுதான் உத்தமம், அப்படி மாறவே மாறும். மூடபக்திக்கு வதிலாக சாஸ்திரமும், மூடநம்பிக்கைக்கு வதிலாக நியாயமும், தெய்வபக்திக்கு வதிலாக சன்மார்க்கமும், கொடுமைக்கு வதிலாக எதேச்சையும் ஓர்கால் மேற்கொள்ளுமாகில், கியானமும் ஆராய்ச்சியுமுள்ள மனிதர்கள் யோக்கியர்களும், உபயோகமுள்ளவர்களுமாவதற்கு அவர்களை ஆசைகாட்டி யி

முக்கப் பரலோக இன்பமென்னுந் தித்திப்பும், அவர்களைப் பயப்படுத்த நரகவேதனையென்னுங் கைப்பும் அவர்களுக்கு வேண்டுவதில்லை.

ஒழுக்கையும் க்ஷேமத்தையும் விர்த்திசெய்வதற்குப் பரலோக இன்பதுன்ப நம்பிக்கை மிகவும் அவசியமாயும் பிரயோஜனகாரியாயு மிருக்குமாகில், அதை ஆதரிக்கிற துரைத்தனத்தாருக்கு அதனிடத்தில் ஏன் அதிக நம்பிக்கையில்லை? விஸ்தாரமான போலீசும் சேனையும், அதிக செலவுள்ள ஜட்ஜிகள், லாயர்கள், அட்டரணிகள், மாஜிஸ்திரேட்டுகள், ஜூரிகள், ஜெயிலர்கள், கொலையாளிகளும், அவர்களுக்குக் கொடிய உபகரணமான சிறைச்சாலைகளும், தூக்குமரங்களும், அரைத்தூக்குசளும், தொழுமரங்களும், சவுக்குகளும் ஏன் வைத்திருக்கிறார்கள்? பூட்டுகள், தாழக்கோல்கள், இருப்புச்சட்டங்கள், இருப்புப்பெட்டிகள், நாய்கள், பிஸ்தோல்களும், காவற்காரர்களுமில்லாமல், சொத்துகள் பத்திரமாய் இருக்குமென்று ஏன் நினைக்கக்கூடாது? மதஸ்தர்களாகிய ஜனங்கள் நரகத்திற்குப் பயப்படுவதைப்பார்க்கிலுஞ் சட்டத்திற்கு அதிகமாய்ப் பயப்படுகிறதினாலும், பைசாசைப் பார்க்கிலும் போலீசு சேவகனுக்கு அதிகமாய்ப் பயப்படுகிறதினாலுமல்லவா? சீனர்கள் சொல்வது முழுதஞ்சரி. இனி வரப்போகிறதென்கிற தண்டனையைப்பார்க்கிலுந் தற்கால தண்டனைக்கு ஜனங்கள் எப்போதும் அதிகமாய்ப் பயப்படுகிறார்கள். பரலோக இன்ப துன்பங்களைக்குறித்த சித்தாந்தம் மிகவும் பிரயோசனகரமானதென்று வற்புறுத்திச் சொல்லுகிறவர்கள் எங்கே பார்த்தாலும் பாபமும் அநீதமும் நிறைந்திருக்கிறதென்று முறையிடுகிறார்களே. அவர்களுடைய பக்திவிசுவாசமான பேச்சைக் கேட்போமாகில், சகல மனிதர்களுங் கொடிய பாவிகளென்றுதானே நாம் நம்பவேண்டும். நன்மை செய்கிறவன் ஒருவனுமில்லை, இல்லவேயில்லை. எல்லாருங் கடவுளினுடைய கோபாக்கினிக்குப் பாத்திரவான்கள்தான், அவர்களுக்கு உலகம் கொடுமையுங் கண்ணீரும் ஊளையிடுதலும் நிறைந்துள்ள காடே. அவர்கள் ஜனங்களை இவ்வாறுசச் சொல்லிக்கொண்டிருக்க, மறுபடியும் அப்படிப்பட்ட கெடுதிகளைத் தடுப்பதற்குப் பரலோக சித்தாந்தம் பிரயோசனகாரியா யிருக்கிறதென்று புகழ்ந்து பேசுகிறார்கள்! மிகவும் வேடிக்கைதான், ஆனால் மிகவும் பரிதாபப்படத்தக்கதே.

விவேகக்குறைவினால் உலகத்திலுள்ள குருக்கள்மாருக்குள்ளாயிருக்கிற வயதுவந்த மக்களைப் பயப்படுத்துவதற்கு முகாந்தரமாக நரகத்தை [illegible] ட்டால் உள்ளபடி நடுநடுக்குகிறது; மோட்சத்தைக் கேட்டாலும் அப்படியே. ஈமன் என்பவர் செய்த வேதப்பிரசங்க புஸ்தகத்திலே மேடையிலிருந்து பிரசங்கித்த சாதுரியத்தையும், கிரிஸ்தவ தருமகுணத்தையும், மன்னிப்பையுங் குறிக்கிற சில வாக்கியங்களை மாதிரியாக நான் எடுத்துக்காட்டுவதைக் கேளுங்கள்—'நரகத்தில் வீழ்த்தப்பட்டவர்கள் அநுபவிக்கிற துக்கங்களைப் பார்ப்பது மோட்சத்திலிருக்கிறவர்களுக்கு ஆனந்தத்தோடு சேர்க்கையே. நரகத்திலுள்ளவர்கள மோட்சத்திலுள்ளவர்களுடைய மக்களாயும், தாய் தந்தையர்களாயும், கணவர்களாயும், மனைவிகளாயும், உறவினர்களாயுமிருக்கலாம். நரகத்திலுள்ளவர்களைப் பார்க்கும்போதெல்லாம, அவர்கள் துக்கத்தை யனுபவிக்க, தங்களைச் சுகமனுபவிக்கும்படிச் செய்த கடவுளினுடைய கிருபையையுணர்ந்து அதசயித்து ஆனந்தங்கொள்ளுவார்கள். நரகாக்கினியிலிருந்து இடைவிடாதெழும்புகிற புகையை, மோட்சசாம்பிராச்சியத்தை யனுபவிப்பவர்கள் பார்த்து, அந்த நிர்ப்பாக்கியர்களுக்காக இரக்கங்கொள்ளாமல், ஓ! பராபரவஸ்துவே! உம்மை வாழ்த்துகிறோம், துதிக்கிறோமென்று சொல்லுவார்கள்;' என்றெழுதியிருக்கிறது. எட்வார்ட்ஸ் என்பவர் அவருடைய வேதப்பிரசங்கத்திலே, 'மோட்சத்திலுள்ள பரிசுத்தவான்கள் கடவுளினுடைய கோபம் எவ்வளவு பயங்கரமாயிருக்கிறதென்று மிகவு முணர்ந்தவர்களாய், நரகத்திலுள்ளவர்கள் படுகிற [illegible] ரமாயிருக்கிறதென்று தெரிந்துகொள்ளுவார்கள்; ஆயினும் இதனாலே அவர்களுக்கு விசனமுண்டாகாமல் ஆனந்தமேயுண்டாகும். அவர்கள நரகவேதனை யனுபவிப்பவர்களுக்காக விசனப்படார்கள், பரிதாபமென்பது அவர்களைவிட்டொழிந்தது, அவர்களுக்கு மனவருத்த முண்டாகவேமாட்டாது; ஆனால் அப்படிப்பட்ட கோரத்தை அவர்கள் பார்க்கும்போது மனவருத்தப்படாமல் ஆனந்தங்கொள்ளுவார்கள்! சந்தோஷத்தோடு கடவுளை வாழ்த்துவார்கள்' என்றெழுதியிருக்கிறார். என்னைப்போல மானிட ஜன்மத்தைச்சேர்ந்த அத்தனைபேர் அப்படிப்பட்ட சித்தாந்தத்தை ஒப்புக்கொள்வதை நினைக்க எனக்கு வெட்கமாயிருக்கிறது.

நரகவேதனைகளை எவ்வளவு கோரமாய்ச் சித்திரித்துச் சொல்லியிருந்தபோதிலும், அந்த வேதனைகள் மனிதர்களைக் குற்றஞ்செய்வதினின்றுந் தடுக்கமாட்டாதென்று நம்பிக்கையோடு உறுதியாய்ச் சொல்லுவேன். அப்படிப்ப[illegible] கோரபயமில்லாமலே நிரபராதிகளா யிருக்கும்படியா[illegible]ல பிதப்பைகள்மாத்திரம் அஞ்சுவார்கள். ஜனங்களுக்[illegible] துன்பம் விளைவிக்கிற துஷ்டர்கள் அப்படிப்பட்ட நரக[illegible] தனையை லட்சியஞ் செய்கிறதில்லை. தேறியிருக்கிற [illegible]டர்களும், வழிகட்டிக் கொள்ளையடிக்கிறவர்களும், [illegible]ய்ந்தோய்ந்து கொலைசெய்கிறவர்களும், போலீசு[illegible]வகர்களுக்குத் தப்பித்துக்கொள்வார்களாகில், மதம் [illegible]ம் நரகமென்பவற்றை ஊதிப்போடுகிறார்கள். அவர்கள் [illegible] லோகத்துக்குப் போகவேண்டி யிருக்கிறபோது, (தா[illegible] ருமம் பிராயச்சித்தம் முதலியவற்றால்) சரிப்படுத்திக்[illegible]ள்ளக் கூடுமென்கிறார்கள். கொஞ்சகாலத்திற்கு முன்[illegible] லிவர்பூல் பட்டணத்தில் தூக்கிற் போடப்பட்ட இர[illegible] பேர் திரளாய்க் கூடியிருந்த ஜனங்களுக்கெதிரில் தூ[illegible]மரத்தின்மேல் நின்றுகொண்டிருந்தபோது, தீங்கள் ப[illegible]ங்களை ஒப்புக்கொண்டு, தங்களை மன்னிக்கும்படி க[illegible]ளை பிரார்த்தித்தால், அவர் கிருபாசமுத்திர ராகையா[illegible] தங்களை ரட்சிப்பாரென்று தங்களுக்குச் சொன்ன கு[illegible]களினுடைய கற்பனைகளுக்குத் தலைவணங்கிக் கீழ்ப்ப[illegible]றோமாகையால் தாங்கள் ரட்சகரிடத்திற்குச் செல்[illegible]மென்கிற உறுதி யுண்டாயிருக்கிறதென்று சொன்னார்க[illegible] அவர்கள் அப்படியே செய்திருப்பார்களாகையால் (மர[illegible] காலத்தில் நாராயணஸ்மரணையினால் வைகுந்தஞ்சேர்[illegible] போல) அவர்களுக்கும் அவர்களுடைய ரட்சகருக்கும் [illegible]மைப்பாடாகவே காரியம் முடிவாய்விட்டது. இப்படி[illegible]ட்ட சித்தாந்தங்கள் நல்லொழுக்கத்திற்கு வழிகாட்டு[illegible]று யாவரேனும் உறுதியாய்ச்சொல்ல மாட்டுவார்களா? [illegible]ண்மையாய் மானிடர் சீர்திருந்துவதற்குத் துணைபுரியு[illegible]ன்று சொல்லவல்லரா? அப்படிப்பட்ட சித்தாந்தங்களி[illegible]லே குற்றத்திற்கு (பிராயச்சித்தமாகிய) பரிகார முண்[illegible]யிருக்கிறதல்லவா? சொற்பகுற்றஞ் செய்கிறவனுக்கும் [illegible]ன்னைவிட்டுக்காரனை கொலைசெய்கிறவனுக்கும் பரிகா[illegible] சொல்லியிருக்கிற அப்படிப்பட்ட சித்தாந்தங்கள். நல்லொ[illegible]ழுக்கத்திற்கு என்ன உதவியாயிருக்கும்? அப்படிப்பட்ட [illegible]த்தாந்தங்கள் நல்லொழுக்கத்திற்கு முக்கியமானவை[illegible]லாமற் போவதுமன்றி, அதைக்கெடுக்கச் சத்துருவாயு[illegible]க்கின்றன. குருக்கள்மாருக்குப் பணங்கொடுத்துப் பாப[illegible]காரந் தேடிக்கொள்ளலா மென்பதினாலே, குற்றஞ்செய்[illegible]மலிருப்பதற்கான சொற்ப [illegible]யும் உரோம[illegible] மார்க்கம் கெடுத்துப்போடுகிறதென்று புரொடெஸ்டான்[illegible] குருக்கள்மார்கள் உறுதிச்சொன்னதை நாம் எத்த[illegible] கேட்டிருக்கிறோம், ஆயினும் உரோமன் குருக்கள்மா[illegible]ணம்வாங்கிக்கொண்டு பாபபரிகாரத்தை விற்கிறதற்கும் [illegible]ரொடெஸ்டாண்டு குருக்கள்மார் (பணமில்லாமல்) பாப[illegible]கார வாக்குக்கொடுக்கிறதற்கும், யோசித்துப்பார்த்த[illegible] உண்மையில் என்ன வித்தியாசமிருக்கிறது, ஒன்று[illegible]லையே. உண்மையான துன்மார்க்கர்களை மற்றவழிகளி[illegible]லே அடக்கமாளாவிட்டால், வெகுகாலமாய் [illegible]ண்ட[illegible]ப்பட்டு வருகிற மறுமைப்பயனது சித்தாந்தத்தினால் [illegible]மாளாதென்பது நிச்சயம்; அதப்படி யிருக்க, உண்மை[illegible]ய் நல்லொழுக்க முடையவர்களுக்கு அப்படிப்பட்ட [illegible] பந்தம் வேண்டுவதேயில்லை. நல்லொழுக்க முடைய[illegible] மேன்மையைத் தேடுவது இவ்வுலகத்தில் அனுபவசி[illegible]யா யிருக்கிற பிரயோசனத்தைப்பற்றியே யல்லாமல், [illegible]மையில் அடையலாமென்கிற பிரயோசனத்தைப் பற்[illegible]ல்ல. பயமுறுத்தப்படுவதினாலே சன்மார்க்கத்தில் [illegible]வன் திரிகரணசுத்தியாய் எப்போதும் சன்மார்க்கனு[illegible]கமாட்டான். ஒருவன் க்ஷேமத்தைக் கோரியே சன்ம[illegible]கத்தை விரும்பவேண்டும். எவனாவது நரகமும் அதினு[illegible]ய வேதனையும் தன்கண்ணுக் கெதிரிலிருப்பதாக நினை[illegible] ஆசாரியரும் அவருடைய அடியார்களும் போதிப்ப[illegible] கேட்பதினாலே தான் நீதிமார்க்கத்தில் நடக்கிறானெ[illegible] [illegible] நீதிமானென்று நான் ஒருக்காலும் [illegible]பமாட்டேன். அவனுக்கு வேதபோதனையிலு[illegible] [illegible]னையிலும் நம்பிக்கை கொஞ்சகாலந்தா னிருக்[illegible] தொருவிஷயம் அவனை பலமா யிழுக்குமானா[illegible] [illegible]டையும் மறந்துவிடத் தக்கவனுவான். உண்மை[illegible] க்கியதைக்குத் தெளிவான புத்தியே காவ[illegible] ல் இழிவான பயம் காவலாகமாட்டாது. ம[illegible] சித்தாந்தத்தினாலேமாத்திரந் தடுக்கப்படுகிறவர்கள் [illegible] தேவபக்திக்காரர்களா யிருக்கலாமே யல்லாமல் நீதி[illegible]ளா யிருப்பார்களென்பதில்லை. அவர்கள் (தெய்வத்[illegible] பணத்தையும் கணக்குப் புஸ்தகத்தையும் சமமாக்கி[illegible]ண்டு விவகாரம் பேசுகையில் வேதவாக்கியங்களை யோகித்துக்கொண்டு இடைவிடாது செய்யும் பாவ[illegible]க்கு ஒவ்வொர்காலத்தில் தான் செய்யுங் கடுமையான ஜுஷ்டான ஜெபம் சரிப்பட்டுப் போயிற்றென்றெண்

ன்மார்க்கப் புனிதனும், சூதுவாதில் தன்னைப் பார்க்கினுஞ் சமர்த்தன் யார், தன்னை யெவன் பக்திமானல்லவென்பானென்று தனக்குள்ளே ஆனந்திப்பதாக) அடியில் வருங் கவியில் தாமஸ். ஹூட் என்பவரால் விவரித்துச் சொல்லப்பட்டவனுக்கு ஒப்பானவர்கள்தான்:—

மொழிபெயர்ப்புக்கவி.

சீர்தருகடவுளுஞ் செல்வமுஞ்சமனு
நேர்தரநோக்கு நிபுணனைப்பாராய்
பழமறையொடுமென் பதிவுசெய்புத்தகம்
பிழையறவொப்பெனப் பேணுவன்பேசின்
மறையொடுகணக்கை யறைமொழியொருங்கே
பிணைத்துப்பேசும் பேச்சின்றிறம்பார்
இணைக்குறத்தியன வியற்றுவோனுயினும்
புனிதனுந்தோன்றும் பொலிவினைநோக்காய்
முனிந்துபாவமு முழுமோசமும்புரிந்
திதமுறநிட்டை துதிபுரிகுவன்காண்
அறுநாள்செய்யு மரியவினைக்கு
மறுநாள்வேதம் வழங்குவஞ்சகவொலி
சரியெனவுலம்புஞ் சமர்த்துநோக்குதியால்
இன்னவனறன்னு ளின்புடன்கூறுதல்
என்னைலாற்சோர னிலன்பொய்ம்மைமக்கோர்
வரம்பிலென்மோச வழிக்களவில்லேன்
திரம்பெறுபொருளே வரம்பெறுகடவுள்
ஆங்கதுபெறுவா னளவிலாநடனம்
ஓங்கிநின்றியற்றுவே னுலகிலெவ்விழுதை
பத்திமானலனெனப் பகரவல்லுநனெனல்
இத்தரணியின்மிசை யிஃதொருவியப்பே.

(இன்னும்வரும்.)

புத்திமதிகள்.

லக்ஷாதிபதிகளுக்கு.

லக்ஷாதிபதிகளே! யாமுறைப்பதைச் சற்றுச் செவிகொடுத்துக் கேளுங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு என்னபாடுபட்டாலும், எவ்வளவு பணத்தைச் செலவழித்தாலும் உயர்ந்த கல்வி கற்பித்துக்கொடுங்கள். இங்கிலீஷில் பி. ஏ. முதலிய பட்டங்கள் பெறவும், சுதேசபாஷைகளில் வித்வானுகவும் செய்யுங்கள். ஸ்கூலுக்குப்போய்ப் படிக்கமாட்டேனென்றால், வீட்டிலாவது ஒரு உபாத்தியாயர்க்கு ௧௦-ரூ-கொடுத்துப் படிப்பியுங்கள். முகம் கொடுக்கவேண்டாம்; சருகைவஸ்திரங்கள் தரவேண்டாம்; ஆபரணங்கள் தரிப்பிக்கவேண்டாம்; சாதாரணபோஜனம் போடுங்கள்; எந்நேரமும் தின்றுகொண்டிருக்கச் சிற்றுண்டி தராதீர்கள்; கையில் காசுகொடாதீர்கள்; துஷ்டர் கூட்டுறவு செய்யாதிருக்கப் பாருங்கள்; தாசிகள் நாட்டியஞ் செய்யுங் கோவிலுக்குச் செல்லவிடாதீர்கள்; கூத்துபார்க்க அனுப்பாதீர்கள்; கல்விமான்கள்செய்யும் பிரசங்கங்களுக்கு அடிக்கடி இட்டுக்கொண்டு போங்கள்; அல்லது போகச்செய்யுங்கள்; வீட்டில் என்னவேலை யிருந்தாலும் நிற்கவைக்காமல் ஸ்கூலுக்கு அனுப்புங்கள். சுருட்டு, தூள் முதலிய துரப்பியாசங்களில் இடந்தராதீர்கள்; கற்றவரோடு சிநேகஞ்செய்வித்துவருங்கள்; கசரத்து முதலிய தேகபயிற்சியில் பழகவிடுங்கள்; இவை முதலியவைகளில் பழகச் சதா கண்ணுயிருங்கள் முகங் கொடுக்கப்போகிறீர்கள்; பெண்டுகளுக்குப் பிள்ளை நல்லவழியில் பழக்கிவைக்கத் தெரியாது; ஆகையால் எவரும் செல்லங்கொடுக்காமல் ஜாக்கிரதையாய்ப் பார்த்துவாருங்க[illegible]

[illegible]வ்வாறு செய்யாமையால் சென்னையில் எத்தனையோ [illegible]ளைகள் கல்வியில்லாமல் தின்று கொழுத்தது துன்மார் சாவுகாசம் செய்து வேசிவீட்டிற்கு டாபர்த்தொழிலும் தூதரோ[illegible] கூடித் தூள்போட்டுச் சுருட்டு பிடித் சூதாடிக் கள், சாராயம் குடித்துத் தாசிவீடுகளே கதி ௩-ராந்தல், ௪-ராந்தல் போட்ட ஜோடிகுதிரை ௩-[illegible] பூட்டின விதம் விதமான வண்டிகளேறி லக்ஷம் [illegible]ாகப் பணத்தை யழித்து மாதா பிதாக்கள் சோற்றிலைய, மனைவி மக்கள் நடுத்தெருவில் நின்று தியங் [illegible]காருக்கு, அரையாப்பு, இருமல் முதலிய துர்வியாதி [illegible]ாகி வேப்பிலையுங் கையுமாய் நின்றார்கள். மேல் எழு [illegible]பிரகாரம் நல்லொழுக்கத்தில் பழக்கிவரின் இவ்வாறு [illegible]டுப்போவார்களா? லக்ஷாதிபதிகள் கற்றவரா யிருந் பிள்ளைகளை அவ்வாறு நல்வழிக்குக் கொண்டுவரா முட்டாள்களுக்கு அதிஷ்ட வசத்தால் பணம் வந்[illegible]ால் அவர்களுக்கு என்ன தெரியப்போகிறது? நாம் [illegible]லும் புத்தியையாவது கேட்பார்களாயின் தாங்களும் [illegible]களும் க்ஷேமமா யிருப்பார்கள்.—சுதேசமித்திரன்.

சூதாட்டம்.

சூதாட்டம், பலகறை, சொக்கட்டான், சதுரங்கம், காகிதம் முதலிய அநேகவிதங்க ளிருக்கின்றன. நமது தேசத்தில் வேலையின்றிக் கிடக்கும் சோம்பேறிகள் மிதமிஞ்சி யிருக்கின்றமையால், தின்று. தூங்கி எழுந்தபின் ஒருவேலையுமின்றி மேற்படி விதங்களில் ஏதாவது ஒரு சூதாட்டம் பந்தயமின்றி ஆடி அருமையாய்க் கிடைத்த நாளை விருதாவில் செலவழித்து வருகிறார்கள். இவர்களுக்குப் பிறர் ஆட்டத்தில் ஜெயமடையப்படாது. எல்லாம் தமக்கே ஜயம் கிடைக்கவேண்டுமென்கிற எண்ணமே எற்படும். இவ்வாட்டம் வெகுநாள் ஆடினவர்கள் பிறருடைய க்ஷேமத்தையே நாடாது சுயக்ஷேமத்தையே நாடும் பாவிகளாய்ப் போவார்களென எமது புத்தியில் படுகின்றது. இவர்கள் பந்தயமின்றி நாளைக்கழிக்க ஆடுபவரா யிருப்பதால் இவர்களுக்கு ராஜதண்டனை யில்லை. இது நிற்கப் பந்தயம் வைத்து ஆடப்படாதெனச் சட்டமிருந்தும் வெகுபெயர் சென்னையில் கூட்டங் கூட்டமாய் ஆடிப் பொருளை யிழந்து; குடி அதிகரித்து, வேசிகட்புக்குரியவராகித் தந்தை தாயை அவமதித்துப் பெண்டாட்டி பிள்ளைகளை மறந்து, சூதாடும் பயித்தியமே பெரும பயித்தியமாகிப் பொய், களவு, விபசார முதலிய துர்க்குணங்கள் அதிகரித்து இகபரசுகங்களை யிழந்து எவ்விதத்தாலும் தலையெடுக்காது நாசமாய்ப் போகின்றார்கள். எத்தனைமுறை சூதாடி ஜெயித்தாலும் அதற்குப் பத்துப்பங்கு அதிகமாய்த் தோல்வி யடைவார்கள. சூதாடிப் பணம் சம்பாதித்த பெயர் எங்கும் கிடையாது. இச்சூதாடிகள் வீதிவீதியாய் வீட்டிற்குள் ஆடியும் கான்ஸ்டேபில்களுக்கு அடிக்கடி சமர்ப்பிக்கும் சுவர்ண புஷ்பத்தால் வெளிக்கு வருவதில்லை. கான்ஸ்டேபில்கள் மனசுவைத்தால் ஒரே தேதியில் அநேக சூதாடிகளைப் பிடிக்கலாம். தெருவில் நின்று காலணாவை மேலே எறிந்து பட்டுச்சிங்கம் என்னும் இரண்டு அடையாளங்களை வைத்துச் சூதாடும் உச்சிட்டம் புசிக்கிற சோம்பேறிகளைத் தினம் தினம் எவரும் எங்கும் பார்க்கக் கான்ஸ்டேபில்கள் கண்களுக்கு மாத்திரம் அகப்படாம லிருப்பது விந்தையிலும் விந்தையே! மாறுருவங் தரித்துச் சென்றால் அத்தனை பெயரையும் பிடிக்கலாமே இதைவிட வெண்ணெய் வெட்டும் இச்சூரர் செய்யும் செய்கை யாதோ? ஜட்காவண்டிக்காரர், நாட்டுப்புறத்து வண்டிக்காரர், பசு ஓட்டிப் பால்விற்கும் இடையர், சலஸ்பரிசத்துக்குச் செல்பவர் முதலானோரிடத்தில் ஏமாற்றிக் காசைப் பிடுங்கத்தானோ இவ்வீரரேற்பட்டது? பேஷ்! பேஷ்!! இப்படிதா னிருக்கவேண்டுவது போலீசுக்கு இது வெகு அழகு!—சுதேசமித்திரன்.

இந்துக்கள் கதி வந்த விதி.

இந்துக்கள் இந்தக்காலத்தில் சொந்தமதிகொண்டு வாழ்ந்துவருவது மிக கடினம். இத்தேசம் எந்தகாலத்திலேயோ செய்த தவப்பயனுல் சில புத்தியுள்ள பத்திரிகாசிரியர்களும், தனவான்களும் பிறந்து ஜனோபகாரமாய் அநேக விந்தையுள்ள தகுந்த மதிகளும், விச்சஷதிரவியங்களும் அபரிமிதமாக விதைக்கிறார்கள். இவைகளைக்கண்டு இவ்வுலகத்தில் மானுஷீகம் என்னுங் கனத்தைப்பெற்று வாழும், தனவந்தாளாகிய சில இந்துக்கள் தாமெந்த நற்செய்கையிலும், துற்செய்கையிலும் மனதைச்செலுத்தாமல் பணத்தைப புதைத்துவைத்து நடைப்பிணமாகிறார்கள். சில இந்துக்கள் பொறுமையுள்ளவர்களாய் தாம் யாதொரு விஷயத்திலுனும் மனத்தை நாட்டாமல் வெறுமனே வசிப்பவர்களாயிராமல், புத்திமானகளைக்கண்டு இவர்கள் உலகத்தை ஒரேகாலத்தில் சாதிப்பவர்களாய்த்தோன்றி, எனனென்ன காரியங்களோ செய்துகொண்டுவருவது நன்றன்றென்று விந்தை கூறிக்கொண்டு வருகிறார்கள். சில இந்துக்கள் பததிரிகை வாங்கி வாசிப்பதினுல் யாதுபயன்? பத்திரிகைகளுக்கு ஒரு தம்பிடிகூட கொடுக்கமாட்டோம் என்று பந்தயம் போட்டுக்கொண்டு, காளி, கூளி, காட்டேறி, வீட்டேறி முதலிய கண்ணுக்குப்புலப்படாக் கலதிதேவதைகளுக்குப் பிரார்த்தனை செலுத்துவதாக, இந்துசாஸ்திர விதிப்படியும் யாதொரு பீஜமந்திரங்களமையாத எல்லைக்கல், குற்றுக்கல் முதலியவைகளுக்கு பிரார்த்தனைசெய்து நூறுநூறுகச் செலவுசெய்து பிச்சாண்டியாகிறார்கள். அநேக இந்துக்கள் சென்னை பொதுஜன நிதியிற்சேர்ந்து பொதுநிதிக்காக சுல்ப சம்பாவனைகளைப் பெருமையாகக்கொடாமல், அல்ப உத்தியோகஸ்தர்களுக்கெல்லாம் பயந்து காலில் விழுந்து கருதிய விஷயம் கைகூடுமோ கூடாதோ என்பதையும் கவனியாது, அதி சிறுமைப்பட்டுக் கொடுத்துத் தியங்கித் தவிப்பதோடு, இங்கி

லாந்திலிருந்துவரும் பீர், ஒயின், ஜின், ரம் முதலிய மதுபா
னங்களுக்கும், விலைமாதர்களுக்கும் அளவில திரவியங்களை
ச் செலவழிக்கிருர்கள். இப்படிபோல விஷயங்கள் அனந்த
ம் உள; அவைகளை இந்துக்களாகிய பலரும் ஊற்றைக்கண்
ணைமூடி உள்ளக்கண்ணைத்திறந்து, திறவுகோலாகிய பகுத்
தறிவுகொண்டு பார்ப்பவர்களானல் தெள்ளென விளங்கு
ம். அப்படி தெளிவுற்று வாழ்ச்செய்யுங் கருமம், சுதேச
பாஷாபத்திரிகைகளை வங்கி வாசிப்பதும், சொந்ததேசத்
திற்காக ஏற்பட்டிருக்கும் பொதுஜனசபை, மஹாஜனசபைக
ளிற்சேர்வதும், அச்சபைகளுககுப் பணத்தைத் திரணமாகக்
கொடுப்பதுமே. நமது பத்திரிகையை வாங்காவிடினும், செ
ன்னை பொதுஜன நிதிக்கேனும் உதவிசெய்வார்களாயின்,
நமக்குற்ற விதி வந்தவழியேகும். இன்னும் பின்னர் கூறு
வாம்.—வேலூர் ஜநாநுகூலன்.

கடிதம்.

ஓ, ஆத்திகர்களே!

I. மூவரையும் சனியன்தான் பிடித்ததாலே
 முதலொருவன் தலையிழந்தான் முக்கண்ணுள்ளோன்
சாவுவரு மெனமுனிவன் தனக்குஅஞ்சி
 தாஒளித்தா னைவரலி காயிலேதான்
பாவியெனும் பெருமானோர் பெண்ணினாலே
 பதியிழந்த நாரிபுடன் வனத்திற் சென்முன்
தேவரொன்ற இவர்களுட நீதிமார்க்கம்
 தேர்ச்சிமிகும் சுயக்கியானி சேர்கொள்ளானே.

II. சத்தியினு லுதித்தசிவன் தன்னையீன்ற
 தாயாளாத் தாரமென புணர்ந்ததாலே
பித்தனென்று உலகுள்ளோ ரவனைச்சொல்ல
 பிசகுவரு மென்றிருந்த பெரியோர்கேளீர்
அத்திமுகன் தாயின்மேல் மோகமீற
 அவள்தனைப்போ லங்குவரு மவதிமட்டும்
நித்தநெடுந் தெருக்கள்தண்ணீர் றுறைமுகத்தில்
 நிர்மூடர் செய்துவைத்த நிந்தைகாணே.

III. பெற்றவளைப் பெண்டாக்கிக் கொண்டசுத்த
 பித்தருந்தான்பெற்றபெண்ணைப் புணர்ந்தோன்தானும்
மற்றுமுள்ள பற்பலவாங் குலங்கடம்மின்
 மங்கையரைக் கற்பழித்து மயக்கினோனும்
சிற்றறிவாற் காட்டுமிரு கங்கள்போல
 திரிந்துலகில் நாய்போல வுலைந்துகெட்டார்
கற்றறிந்த சுயக்கியானி இதுகளெல்லாம்
 கடவுள்செய லல்லவெனக் கருதுவானே.

ஓ, ஆத்திகரே! மேலே கூறிய இவர்களா நமது கடவுளர்
கள்? சபாஷ்! வெகு திவ்வியம், நன்றாயிருக்கிறது. பகுத்
தறிவிலா மிருகங்களுக்கிருக்கும் தன்மைகூட ஓர்காலத்தி
ல் இக்கடவுளர்களுககு இல்லையென ஸ்பஷ்டமாய் விளங்
குகின்றதே. இத்தகைய கடவுளர்களை வழிப்பட்டொழுகும்
மானுஷாமிருக மந்தமதி கூட்டங்கள் ஏனைய நாஸ்திகமத
த்தைக் கண்டனம் செய்துவிட்டோமென மூலைவீட்டில் மூ
லைக்கு மூலை பறையறைந்து திரிகின்றனர். ஐயா, பத்திராதி
பரே! இவர்களுடைய புத்தி உலக்கைக்கொழுந்தோ? கீழே
விழுந்தும் மீசையில் மண்படவில்லையென்று கூறு மிவ்வாத்
திகர், நமது சுயக்கியான நண்பர்களாகிய ஸ்ரீமான் - முத்து
சாமிமுனிவரவர்களாலும், கிருஷ்ணகிரி - உண்மைவிரும்பி
யவர்களாலும், D. என்பவராலும், C. A. என்பவராலும்,
தி. சி. நாராயணசாமிபிள்ளை, இ. சு. ச. உ. கோ. ஆகிய எம
து நண்பர்களாலும் பட்டுக்கொண்டுவரும் பாடுகள் தெரி
யாதா. எனது சுயக்கியான நேயர்கள் கூறும் விருவிற்கு
யுக்தியனுபவசம்பந்தமாய் தக்கவிடை பகராமல், முனனே
போகவிட்டுப் பின் புறணிபேசிய ஈசூர் கணக்கு சச்சிதான
ந்தசுவாமிகள் பட்டபாடு போதாதா. பத்திராதிபரே! இத்
தகைய ஆத்திகசுவாமிகளுக்கு யார்தான் புத்திகூறுவர்.
ஓர்கால் மேலே காட்டிய கடவுளர்தாம் கூறுவரோ யான
றிந்திலன். ஓ, ஆத்திகரே! கல்வியிலும், பெருமையிலும்,
கீர்த்தியிலும், நியாயததிலும், தயாளத்திலும பேர்பெற்றோ
ங்கும் எமது நேயராகிய கிருஷ்ணகிரி - உண்மைவிரும்பி
யவர்கள் சில மாதங்களுக்குமுன் ஆஸ்திக நாஸ்திக சம்வா
தம் இயற்றியுளார். அவைகளை நுங்கள் நேயமாகிய தத்து
வவிவேசினி உத்தமபத்தினி நங்கையின் பத்திராதிபரிடம்
சென்று மிக்க வணக்கத்துடன் கேட்டு வாசித்தறிந்து அவர்
"செய்யாமற்செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மா
ற்றலரிது" என்ற ஆன்றோர் நீதியுரைப்படி, ஷை சுயக்கியா
னசங்கத்தைச் சேரலாகாதா?

ஓ, ஆத்திகரே! யானும் எனது காலமெல்லாம் ஆத்திகத்தி
ல் முழுகி கரையேற முடியாமல் வாழ்நாளெல்லாம் வீணு
ளாக்கிய என்னை கரையேறவைத்த எமது நேயராகிய
பரோபகார கிருஷ்ணகிரி-உண்மைவிரும்பி யவர்களுக்கும்,
D. என்னும் நற்குண சீலருக்கும், தி. சி. நாராயணசாமிபிள்
ளை, இ. சு. ச. உ. கோ. என்னும் தயாளகுண சீலருக்கும்
கோடிகோடி வந்தனம், எனஇருகைகூப்பித் தந்தனன்.

இங்ஙனம்.
திரிசிரபுரம் புத்தூர்
சுயக்கியானநேசன் வையாபுரிபிள்ளை.

அற்புதக்காட்சி.

திருக்கோவிலூர்த் தாலுகா இருந்தையென்னும் ஊரில்
சுப்பராயபண்டாரம் என்ற ஒருவருக்கு முருகக்கடவுள்
சொப்பனத்திற்றோன்றிச் சாப்பக்காவடிகட்ட உத்தரவளி
த்ததாயும், உடனே விழித்தெழுந்த அப்பண்டாரம் அடுத்த
தினம் ஓர் காவடியொன்று பூஜாவிதியோடு கட்டி முடித்
து அதை ரு - சு - வருஷகாலமாய்த் தன் வீட்டுப் பரணில்
வைத்துப் பூசித்துப் பத்திரப்படுத்தி வந்ததாயும், சென்ற
மாசிமாதத்தில் அங்குள்ள சிவராத்திரி குளத்தில் அற்புத
மாய் ஒருமணிநேரம் மணித்தொனி முழங்கியதாயும், அ
தைக்கேட்ட ஊரிலுள்ளோரும் மேற்படியாரும் ஆச்சரிய
மடைந்து மேற்படி காவடியை யெடுத்துப் பரிசோதித்ததா
யும், அப்போது அதில் அற்புதமான ரு - எலுமிச்சம் பழ
ங்கள் இருக்கக்கண்டதாயும், உடனே காவடியைப் பூஜிக்
கையில் ஓர் பெரிய சர்ப்பம் அதினின்றும் புறப்பட்டுவந்த
தாயும், பண்டாரத்தின் கழுத்திற் சுற்றிக்கொண்டு ஆடியதா
யும், அதுமுதல் சிலதினம் ஷையார் அச்சர்ப்பத்துடன் பல
ரும் பார்க்கக் கிராமப்பிரதக்ஷணம் வந்ததாயும், பின்னர்
இது முடிந்தவுடன் காவடியைப் பரிசோதிக்கையில் எலுமி
ச்சம்பழங்கள் இல்லாதிருக்கக்கண்டதாயும், பங்குனிமாத
த்தில் மேற்படி பண்டாரம் தனக்குக்கிடைத்த உத்தரவுப்ப
டி காவடியைப் பூசிக்கையில் மேற்படி சர்ப்பம் வெளிவர,
அதனைத் தலைவேறு வால்வேருய்க் கூறிட்டு மேற்படி காவ
டியின் கலயங்களில் மேற்படி இரண்டுபாகங்களையும் தனித்
தனியாய் வைத்து முத்திரித்துக் காவடியை எடுத்துக்கொ
ண்டு பழநிக்குப் புறப்பட்டதாயும், அப்போது அநேகர் பின்
தொடர்ந்ததாயும், அப்போது மேற்படியார் தனக்கேற்பட்
ட உத்தரவுப்படி அந்த வழியையடுத்த கெருடநதியண்டை
காவடியைப் பரிசோதிக்கையில், வெவ்வேறு கலயங்களில்
இருந்த மேற்படி சர்ப்பத்தின் பாகங்கள் ஒரே கலயத்தில்
ருந்ததுடன் சர்ப்பமும் உயிர்பெற்றிருக்கக் கண்டதாயும்,
மேற்படியார் இதன் பின்னர் இதை முத்திரித்துப் பழநிக்கு
எடுத்துக்கொண்டுபோய் இடும்பன் சந்நிதியிற் பரிசோதிக்
கையில், மேற்படி எலுமிச்சம் பழங்களே இருக்க மேற்படி
தொடர்ந்த சிலரும் அங்குள்ள அநேக ஜனங்களும் கண்ட
தாயும், பின்னர் இதை மேற்படியார் முத்திரித்துப் பழநிய
ண்டவர் சந்நிதானத்தண்டை கொண்டுபோய்ப் பரிசோதிக்
கையில், காவடியிலிருந்து சர்ப்பம பலர் பார்க்க வெளிப்ப
ட்டுத் தரிசனந்தந்து சந்நிதானத்தண்டைபோய் மறைந்து
விட்டதாயும், இதுமுதல் மேற்படி இருந்தைக்கிராமத்தி[ல்]
சில மகத்துவம் விளங்கிவருவதாயும் ஒருவர் எழுதுகிறா[ர்].
(சுஜனமனோரஞ்சனி.)

இதை வாசிக்கும் நண்பர்கள், 'சொல்லுவார் சொன்ன[ா]
லும் கேட்பார்க்கு மதியில்லையா' என்கிற பழமொழியை
நினையாமற்போகார்கள். மேலே சொல்லப்பட்ட அற்புத[ம்]
நடந்து இப்போது சுமார் மூன்றுமாசமாகிறது. அது உண்
மையாக நடந்ததாயினும், தந்திரமாக நடத்தப்பட்டதாயி[னு]
ம், வெகுதூரத்திற்கு வெகுதூரம் பரவி, எங்குள்ள ஜனங்க
ளும் மேற்படி 'இருந்தை' கிராமத்தில் சேர்ந்திருப்பார்க
ளே. இருப்புப்பாதை மார்க்க சகாயமுமிருக்கிறதே. ச[மை]
க்கப்பட்ட மச்சம் பழநியில் உயிர்[பெற்]றுத் தடாகத்தி[ல்]
குதித்தோடிவிட்டதுபோன்ற அற்புதங்கள் முற்காலத்தி[ல்]
நடந்ததாகச் சொல்லியிருப்பினும், இது இக்காலத்திய [அற்புத]
க்கூத்தாக்கும்! பின்னும் மவுடீகத்தை வளர்ப்பதற்கு இ[து]
வே போதும்.

அ-மு.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MAADRS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 24] MADRAS:—SUNDAY JUNE, 13, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

நண்டுகொழுத்தால் வளையிற்றங்குமா?—இந்துக்கள் கடைத்தேறுவதெப்படி? சகுனம்.	நல்லொழுக்கத்திற்கு மறுமைப் பயன் அவசியமா?—இந்துக்கள் வாசிக்கவேண்டியவை. வரவுக்குத்தக்க செலவு.

நண்டுகொழுத்தால்
வளையிற்றங்குமா?

இந்தப் பழமொழியைப்பற்றி யோசிக்குமிடத்து அனேக விஷயங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. அவற்றிற் சிலவற்றை இங்கு எடுத்துக்காட்டுவாம்.

இந்நாட்டுப் பாலியர்களிற் சிலர் செல்வாக்கினால் கல்வியைக் கவனிக்காமல் வாழ்நாளை வீணாளாக்கியமையால், வயிற்றைக்கிழிப்பினும் வாரடையுங் கிடையாத நிரக்ஷரகுக்ஷிகளாய்த் தம்மாதா பிதாக்கள் வருந்தித்தேடிவைத்த ஆஸ்தியையெல்லாம் பொருளீட்டுங் கஷ்டம் தெரியாமையால், கள் காமாதி சூதாட்டங்களிற் போக்கியும், விதம் விதமான வண்டிகள், நவநவமான குதிரைகள், வண்ணவண்ணமான பீதாம்பரங்கள், கோட்டுகள், பூட்ஸ்கள், தடிகள் முதலியன வாங்குதலினாலும், வங்களாக்கள், வீடுகள் வாங்கிப் பின் சரிப்படாமல் குறைந்த விலைக்கு விற்றலினாலும், பைகாட் சினேகிதரோடு வாரம் இருமுறை மும்முறை வெளிநாட்டிற்குப் புகைரதம், போட்ஸ் முதலிய ஏறிச்சென்று விருந்து வைத்துண்டலினாலும், செலவு செய்துவிட்டுப் பிற்காலத்தில் யாதொரு ஒத்தாசையுமில்லாமல் "குந்தினையா குரங்கேயுன் சந்தடியடங்க" வென்று ஒடுங்கி யுட்கார்ந்துவிடுகிறார்கள். சிலர் சொற்ப கல்வியாளராய்த் தங்கள் கல்விக்குத்தக்க உத்தியோகம் யாதேனும் தேடிப்பிழைக்காமல், தமக்கு யாதொரு அனுபவமும் இல்லாவிடினும், ஞானியாராடுந் தேருக்கூத்தோடு நானு மாடுகிறேனென்று, தம் பிதா மாதாக்கள் வாழ்ந்த நாணயத்தின்பேரில் கடன் வாங்கி ஆகாசவர்த்தகம் செய்ய முயல்கின்றார்கள். "கிழக்கு மேற்கு அறியான், வழக்குப்பேசப் புகுந்தான்" என்பதாய் நீக்குப்போக்கு தெரியாத இவர்கள் வர்த்தகத்தில் புலியைப்பார்த்து பூனை சூடிக்கொண்டதுபோல் பிரவேசித்து நஷ்டத்தையுற்று இன்சால்வென்டு மேஸ்டர்களாய் தக்கிக்கிறார்கள். கேட்பவர்களுக்கு நான் யாதொரு துன்மார்க்கத்திலும் செலவழித்துவிடவில்லை, வர்த்தகத்தில் நஷ்டம்வந்தால் நான் என் செய்வேன் என்கிறார்கள். வர்த்தகத்தில் பயிற்சியும் அனுபவமும் அற்பமுமில்லாத இக்கிணற்றுத் தவளைகளுக்கு நாட்டுவளப்பமேன், நீந்தவறியான் நிலைக்காத தண்ணீரில் இழியலாமா? குருவிக்கேற்ற இராமேசுரம் என்பதாய் இவர்கள் இருப்புக்குத் தக்கபடியல்லோ வர்த்தகம் செய்யவேண்டும்? உயரப்பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமா? இருப்பில் நாலிலொரு கூறுமட்டுமே தத்தமக்குக் கைவல்லியமான வர்த்தகத்தில் வைத்து, பிறனை நம்பாமல், இளைப்பையும் தேகபாதையையும் பாராமல் பிரயாசைப்படவேண்டும். ஓரிடத்தில் பதை மற்றோரிடத் தெடுத்துவைக்க வேலாத சோம்பேறிகளுக்கு வர்த்தகம் கூடாது. பிரதமத்திலே கௌரவம் பாராட்டி எஜமானத்துவங் காட்டவேண்டுமானால் ஏலாது. எறும்புபோல் பிரயாசைப்படவேண்டும், பிரபுபோல் பலனனுபவிக்கவேண்டும்.

பூசினிக்காய் போகிற விதந் தெரியாமல் கடுகிற்கு காலை முறித்துக்கொள்ளும் நம்மவர்கள் யோசனையே யோசனை! ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு உயர்ந்த உத்தியோக நிலைமை பெற்றுவந்து 1000-10000-மாக இந்தியாவின் பணத்தையும், பொன் - வெள்ளி முதலிய உலோகங்களையும், வைரம் - கெம்பு - பச்சை முதலிய விலையுயர்ந்த இரத்தினங்களையுங் கொள்ளைகொண்டு போகின்றார்களென்று அழுகின்றார்களேயல்லாமல், நமது நாட்டுப்பொருளில் அபரிமிதமானவை என்னவிதமாய் அயல்நாட்டிற்குப் போகின்றதென்பதை அறிகின்றார்களில்லை. அதவா அறிவுறுத்தினவிடத்தும் அதைப் போகவொட்டாமல் தடுக்கத்தக்க மார்க்கத்தை கவனித்து தக்கபடி செய்கின்றார்களில்லை. நமது நாட்டிலிருந்து போகும் பஞ்சு, நீலம், தோல் மறுபடி நாநாவித வேலைகள் செய்யப்பட்டு இவ்வூருக்கே கொண்டுவந்து உள்ளூர் சரக்கினும் விலை சரசமாக விற்று கோடிகோடியாக கொட்டிக்கொண்டு போகின்றார்களே, அப்படி யேன் செய்யப்படாது? சுதேசிகள் உத்தியோகத்தில் உயர்நிலை பெறவேண்டியது இக்காலத்திலாகுங் காரியமல்ல, பின்சொன்னதோ இக்காலத்திலேயே செய்யத்தக்கது, இதை யேன் ஒற்றுமையோடு செய்து நமது நாட்டுதிரவியம் புறம்போகவொட்டாமல் தடுக்கலாகாது?

இந்துக்கள் கடைத்தேறுவ தெப்படி?

இவ்வுலகமானது ஆசியா, ஐரோப்பா, அமெரிகா, ஆபிரிகா, ஆஸ்திரோலியாவென ஐந்து மஹா கண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இவற்றுள் ஒவ்வொரு கண்டங்களும் அனேக நாடுகளாகவும், ஒவ்வொரு நாடும் பற்பல நகரங்களாகவும், கிராமங்களாகவும், சிற்றூர்களாகவும் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் வசிக்குங் குடிகளோ நடையுடை பாவனை முதலியவற்றால் ஒருதன்மைப்படாமல் பலவேறு சாகையினராக விருக்கின்றமையால், இவர்களுடைய ஒழுக்கங்களை முற்றுமுணர்வதும், அவற்றின் விதிவிலக்குகளை ஆராய்ந்தறிவதும், அங்ஙனம் அறிந்தவற்றை அவ்வப்பாஷைகளில் அவ்வவர்க்கு நன்றாய் விளங்கும்படி போதிப்பதும், அப்படி போதிப்பினும் அதை யங்கீகரித்து அவ்வவர்கள் ஒழுகுவதும் அசாத்தியமாதலால், ஊர்கூடிச் செக்குத்தள்ளுவதாகிய இவ்வுற்பாதச் செய்கையை விட்டு நஞ்சுதேசிகளாகிய இந்துக்களிலும் நம்மனோபாவத்தைத் தெரிந்துகொள்ளத்தக்க சிலருக்கே அவ்வவர்கள் கடைத்தேறு மார்க்கங்களைச் சொல்கின்றோம். இதை யெழுதும் யாமும் இவர்களோடு சேர்ந்தவரோ யல்லாமல் அன்னியரல்லம். இந்துக்களாகிய நாம் ஒற்றுமையுடையவர்களாகவும், அழுக்காறு, பொறாமை, வஞ்சம், கூடாநட்பு, காய்ச்சல், புறங்கூறல், மெலியாரை நடுங்கச்செய்தல், வலியார்க்கு அடங்கிநடத்தல், இலச்சையின்றி இச்சகம்பேசல், கோட்சொல்லல், பொய்மொழி பகர்தல், களவெடுத்தல், பிறர்மனை விழைதல், வன்கண்மை முதலிய துர்க்குணங்களில்லாதவர்களாகவும் இருத்தல்வேண்டும். நமது புத்திரர் புத்திரிகளுக்கு விவாகாதி சுபகாரியங்கள் செய்யும்போதும், மாதாபிதாக்களுக்கு கருமக்கடனாகிய அசுபகாரியங்களைச் செய்யுங் காலங்களிலும் கச்சேரிக்கென்றும், வாத்தியத்திற்கென்றும், பந்தலுக்கென்றும், சேவாகாலத்திற்கென்றும், தொழில் செய்து சீவனம் பண்ணவல்ல திடகாத்திரராகிய பிராமணருக்கென்றும் வருந்தித்தேடிய பொருளை வீண்விளையாய்ச் செய்யாதிருத்தல்வேண்டும். பொன், செம்பு, வெள்ளி, பித்தளை, கல்லாதிகளைக் கழுவுதலாகிய அபிஷேகத்திற்கென்றும், அவற்றின் உற்சவாதிகளுக்கென்றும், கும்பாபிஷேகத்திற்கென்றும் வீண்விரையஞ் செய்யாதிருத்தல் வேண்டும். இவற்றில் செலவிடும் பொருளாளிக்குப் பொருள் நஷ்டமாவதோடு அப்பொருள் சுதேச பாலியர்களை விபசாராதிகளில் உய்த்து அவர்கள் கல்வி விருத்தியையும் பரித்தியாகஞ்செய்து, தீராப்பிணிகளுக்கு ஆளாக்கி அவர்கள் மனைவிமக்களையும் ரோகிகளாக்கி மானுஷீகத்தை க்ஷீணதசைக்குக் கொண்டுவருகின்றமையால், அது அசற்பாத்திரத்திற் செலவிட்ட பொருளே யாகின்றது. பொருள் செலவிட்டால், செலவாளிக்கேனும் அல்லது பிறர்க்கேனும் பயனைத்தரத்தக்க மார்க்கத்திலேயே செலவிடல்வேண்டும். செலவாளிக்கும் நஷ

டத்தை வரித்துப் பிறக்குங் கெடுதியைச்செய்யும் மார்க்கத்தில் பொருள் செலவிடுதலைக்காட்டினும் செலவிடாதிருத்தலே மேல்.

சிலர் பெண்களுக்குக் கல்விப்பயிற்சி செய்வித்தல் கௌரவத்தாழ்வென வெண்ணுகிறார்கள். "மடங்கொன்றறிவகற்றுங்கல்வி" யென்று பொதுப்படச் சொல்லப்பட்டிருப்பதனால், அது ஆண்மக்களுக்குமாத்திரம் இதம் செய்யும் பெண்களுக்கு அஹிதம் செய்யும் என்பதுண்டா? எல்லாருக்கும் பொதுப்படத்தானே கூறியிருக்கின்றது. ஆதலால் பெண்களையும் பிள்ளைகளைப்போலவே படிப்பித்தல்வேண்டும். மனைவியை இழந்த கணவன் இஷ்டப்படின் மறுமணம் செய்துகொள்ளுதல்போலவே, புருஷனை யிழந்த பூவையும் இஷ்டப்பட்டால் மறுமணம் செய்துகொள்ள இடங்கொடுத்தல்வேண்டும். இதற்கெல்லாம் மதபந்தத்தையும், சமயக்கட்டையும், ஜாதியொழுக்கத்தையும் சாக்ஷி காட்டலாகாது. இவைகளெல்லாம் ஒருவழிப்பட்டு ஒற்றுமையுண்டாகுங்கால், இந்துக்கள் கடைத்தேறுவதற்குச் சந்தேகம் ஒரு சிறிதும் இல்லை.

சகுனம்.

சுதேசஸ்தர்கள் உண்மையென்று நம்பியிருக்கிற சகுனங்கள் அபத்தமானவையென்று நான் பலமுறை யெடுத்துக் கூறியிருக்கிறேன். நான் சொல்வது உண்மையென்று அடியில் வருஞ் சங்கதியினால் ருசுவாகும். அநேக சுதேச சமஸ்தானங்களிலே சகுனம் வேண்டியிருக்குஞ் சமயங்களில் அதற்கென்று ஒரு உத்தியோகஸ்தன் நல்ல சகுனங்கள் நேரிடும்படி கிரமமான ஏற்பாடுசெய்கிறான். அதாவது: அரசன் பவனி புறப்படும்போது, எதிரில் ஒரு மங்கிலிய ஸ்திரீயை வரும்படியாகவும், தலையிற் சுமையும் கையிற்றடியுமாய் ஒரு வழிப்போக்கனை வரும்படியாகவுஞ் செய்கிறான். அமங்கலிய ஸ்திரீகளும் ஒற்றைப்பிராமணனும் அவ்வழியே வராதபடி தடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு நற்சகுனமாக எண்ணப்பட்டவைகளை எதிரில் வரும்படியாகவும், துர்ச்சகுனமாக எண்ணப்பட்டவைகளை விலகியிருக்கும்படியாகவுஞ் செய்கிறான்! குடும்பங்களிலும் விவாக முதலிய முக்கியமான சடங்குகள் நடக்குந்தருணங்களில் இவ்விதமாகவே செய்யப்படுகிறது. ஆ! ஆ! வேண்டியிருக்கிறபடி இஷ்டம்போல நற்சகுனங்களை நாமாய் வருவித்துக்கொள்ளுதல் என்ன அதிசயம்! என்று ஒருவர் எழுதியிருக்கிறார்.

சாதாரணமாய் சிலர் யாதொரு காரியத்தை உத்தேசித்துச்செல்ல வீட்டைவிட்டுத் தெருவில்வந்து, எதிரில் தோன்றுந் துர்ச்சகுனங்கள் தொலைகிறவரையில் காத்திருந்து, நற்சகுனந்தோன்றுஞ் சமயம் பார்த்து, அதற்குள் வேறொரு துற்சகுனம் வந்துவிடப்போகிறதென்கிற பயத்தினால், அதிதீவிரமாய் அந்த நற்சகுனத்தைக்கடக்க ஓடுகிறார்கள். அத்தருணத்தில் ஏதாவதொரு துற்சகுனஞ் சம்பவித்துவிட்டால் வெகு மனவருத்தமடைகிறார்கள். போய்க்கொண்டிருக்கும்போது பூனை குறுக்கிடுமாகில், மூன்றுசுற்று சுற்றிவிடுவதினாலே அந்த அவசகுனத்தின் துர்க்குணமொழிந்துவிட்டதென்றும், இனித் தங்கள் காரியஞ் சித்தியாகுமென்றும் நினைக்கிறார்கள். எண்ணெய்ப்பானை யெதிரிடுமாகில், திண்ணையின்பேரில் உட்காருவதினாலே தோஷநிவாரணையாகுமென்றெண்ணிச் சற்றுக்காத்து பின்பு செல்லுகிறார்கள். இதன் கருத்தென்ன? சுற்றுவதினாலும், உட்காருவதினாலும், முன் உத்தேசித்துச் சென்ற காரியத்தை நிறுத்தித் திரும்பிவிட்டதாகவும், அக்காரியத்தைப்பற்றிப் பின்பு நூதனமாய்ச் செல்லுகிறதாகவும் பாவிக்கிறார்களென்று நினைக்கிறேன். ஆகிற காரியத்தைத் துர்ச்சகுனம் அழிப்பதுமில்லை, ஆகாதகாரியத்தை நற்சகுனம் ஆக்குவிப்பதுமில்லை; சகுனங்கள் "காரியம் ஆகும் ஆகாது" என்பவைகளிற்கு அறிகுறியா யிருக்கின்றனவென்பார்கள். அப்படியாயின், ஆகாதென்று சகுனத்தினால் தெரிந்துகொண்ட காரியத்தை மறுபடி செய்ய முயலக்கூடாதே யென்றால், அக்காலத்தில் ஆகாதென்பதற்குக் குறியேயல்லாமல், பிந்திச்செய்வதற்குத் தடையாகமாட்டாதென்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு கேள்விக்கு மறைபொருளான யுக்தி சொல்லிக்கொண்டு போவதன்றி, யாராகிலும் அனுபவசித்தியாய்க் காட்டவல்லரா? நம்மவர்களில் சிலர் சகுனம் பாராமல் மற்றவர்களைப்போலக் காரியங்களை முடித்து வருகிறார்களே; சகுனம் பாராத மற்ற தேசத்தவர்கள் நம்மைப்பார்க்கினும் மிகு அருமையான காரியங்களை முடித்து வெகு சிரேஷ்டமடைந்திருக்கிறார்கள். சகுனம் பார்ப்பதினால் அப்போதே முடிகிற காரியம் தடைபடுகிறதன்றி பிரயோசனமொன்றையுங் காண்கிலோம். சகுனம் பார்க்கிறவர்களுக்கும் பாராதவர்களுக்கும், 'வருந்தியழைத்தாலும் வாராதவாரா, பொருந்துவன போமினென்றாற்போகா' என்னுஞ் சித்தாந்தப்படி காரியங்கள் சமமாகவே முடிகின்றன. 'ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித், தாழாதுஞற்றுபவர்' என்று நாயனாரருளிய பிரமாணத்தின்படி, எதிரில் தோன்றாமல் அருவுருவாய் நிற்கின்ற ஊழ்வினையையும் லட்சியஞ்செய்யாமல் ஒரு மூலையிற் கட்டிப்போட்டு முயற்சியினால் காரியசித்தியாக்கிக்கொள்ளவல்லவர்கள் மற்றெதை வெல்லார்கள்? எதிரே தோன்றுஞ் சகுனங்களையும், கரிநாள், இராகுகாலம், வாரசூலை, மரணயோகம், முதலிய மனப்பிரமையிற்றோன்றும் அஞ்ஞானங்களை யொருநொடியிலடித்துத் தூரத்தவல்லாரல்லரோ? ஊழ்வினையும் அடித்துத் தூரத்தப்படுமென்பதினாலே, மற்ற அஞ்ஞானங்களை அடித்துத்தூரத்தாமல் பாராட்டுவது பேய்த்தனமென்று தோன்றவில்லையா?

முத்தியாலுப்பேட்டை பவழக்காரர் தெருவில் வசித்திருந்த பஞ்சநாதசெட்டியா ரென்னுமொரு ஸ்ரீமான் நவீனமாய் வீடுகட்டினபோது பட்டணத்திலுள்ள சில சிற்பிகளையும் சோதிடர்களையுங்கொண்டு ஆராய்ச்சி செய்வித்து, சாஸ்திரப்படி வாயிற்படி ஜோடித்துவைத்து வேலை நடத்திவருகையில், காவேரிப்பாக்கத்திலுள்ள சிற்பி மகாநிபுணனெனக் கேள்வியுற்று அவனை வருவித்தனர். அவர் முன்னிருந்தது சரியென்றால், தனக்குப் பெருமையில்லையென்றோ, வரும்படி சிறுமைப்படுமென்றோ, அல்லது தானறிந்தமட்டில் உண்மையென்று நம்பியோ, நூதனமா யளவிட்டு மனைகோலி, பெருத்த வாயிலைச் சிறுத்த வாயிலாக்கிப் புதிதாய் வேலை நடத்தப்பட்டது. அந்தச்செட்டியார் கட்டடத்தை முடித்துச் சித்தமாய் வைக்கும்படி தனது மூத்த குமாரனை இங்கேவிடுத்து, இளைய குமாரனுடைய விவாகத்திற்காக நாகப்பட்டணஞ்சென்று அங்கே சீதபேதி கண்டு குணப்பட்டு, கிரகப்பிரவேசஞ்செய்யத் திரும்பிவருங்கால், வழியில் அந்த வியாதி மறுபடி பீடிக்க, வந்தவழியே திரும்பிப்போய், கட்டிமுடிந்த வீட்டைப் பார்க்கும்படியான பாக்கியமும் பெறாமல் மேல்வீட்டுக்குச் சென்றனர்.—காற்று வாராமை முதலிய சங்கடத்தினால் வீடு சரிப்படவில்லையென்றால் யாவரும் ஒப்புக்கொள்ளத்தக்கதே. செல்வமுதலிய பெருக்குண்டாகாமையால் வீடு 'ஆயி' வரவில்லையென்கிற எண்ணத்தோடு ஓர் கிராமத்திலொருவன் சென்றவருடம் தானிருந்த வீட்டையிடித்துச் சாஸ்திரம் பார்த்து வேறோரிடத்தில் வீடுகட்டிய மூன்றாமாதத்தில் திருவண்ணாமலைக்குச்சென்று வாந்திபேதி கண்டிறந்துபோனான். இவ்விடத்திலே, ஒரு சரத்துக்கு நான்கு தூண்வைத்து, அதிலிருந்து வேறொரு திசையாகத் திரும்புகிற சரத்துக்கு மூன்று தூண் வைத்து, இரண்டு சரத்துக்கும் மூலையாக நிற்கிற ஒருதூணை ஒரு சரத்தோடு சேர்த்து நான்கு தூணாகக் கணக்காக்கியும், மறுபடியும் அதே மூலைத்தூணை மறுசரத்தோடு சேர்த்து நான்கு தூணாகக் கணக்காகியும், இரட்டைப்படையா யிருக்கிறதென்கிறார்கள். சேலத்திலோ, ஒரு சரத்துக்கு நான்கு தூண் வைத்து, திரும்புகிற மறுசரத்துக்கு இரண்டு தூண்வைத்து, இவ்விடத்திலுள்ளாருக்கு ஒற்றைப்படையாகக் காண்பதை அவர்கள் இரட்டைப்படை யென்கிறார்கள். இருதிறத்தாரும் ஒரே ஜாதியே, ஒரே மதஸ்தரே; சாஸ்திரமாத்திரம் வேறுபட்டதெப்படி? இதனாலே வழக்கமே சாஸ்திரமாயிற்றென்று தோன்றுகிறது. இவ்வாறு அவரவரும் அநேக சம்பவங்களைப் பார்த்தே யிருப்பார்கள். அப்படியிருந்தும், அஞ்ஞான சகுன சோதிடங்களில் நமது காலத்தையும் பொருளையும் ஒழித்துவிடாமல், 'தெய்வத்தானாகா தெனினுமுயற்சிதன், மெய்வருந்தக்கூலிதரும்.' என நாயனார் கூறியபடி காரியசித்தியடைவதற்கு நாம் விடாமுயற்சிசெய்வதே நமது கடமையாகக் கொள்ளவேண்டும். அ-மு.

நல்லொழுக்கத்திற்கு

மறுமைப்பயன் அவசியமா?

அமரம்பேடு

முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(கூ0-வது பக்கத் தொடர்ச்சி.)

நல்லொழுக்கத்திற்கு மறு உலக இன்ப துன்ப சித்தாந்தம் அவசியமில்லாமற்போவதுமன்றி, அது அநீதியாயுமிருக்கிறது. சொற்ப குற்றங்களுக்கெல்லாம் கோரமான தண்டனைகள் விதித்திருக்கின்றன. அவ்வளவு கொடுமையான துன்பத்திற்குப் பாத்திராகும்படியான பலத்த குற்றம் நாம் என்னசெய்யக்கூடும்? அப்படிப்பட்ட சித்தாந்தம் யின்படி நாம் என்ன நினைக்கக்கூடுமோ அதற்கொத்திரு

குமா? யாவரேனும் ஒத்திருக்கிறதென்பாராகில், அவர்களை
ப்பற்றி நாம் பரிதாபப்படவேண்டியதே.

வேறொருவிதமாய் நோக்கிப்பார்த்தாலும், அந்தச் சித்
தாந்தத்தினிடத்தில் தோஷமுண்டாகிறது. அது மானுஷீக
மில்லாமையே. உபத்திரவஞ்செய்ததற்காகப் பழிக்குப்ப
ழி வாங்கி வஞ்சந் தீர்த்துக்கொள்ளுவதா யிருக்கிறதேயன்
றி, அதில் சீர்திருத்தவேண்டுமென்கிற விவேகமான நோக்
கமேயில்லை. அப்படிப்பட்ட சித்தாந்தத்தைத் தகுதியான
தாக விவேகி நினைக்கமாட்டான். ஒருவனைத் தெண்டிப்ப
திலெல்லாங்கூடி அவனுக்குப் புத்திவரப்பண்ண வேண்டுமெ
ன்பதுதான் முக்கிய கருத்தாகக்கொள்ளவேண்டும். சீர்ப்ப
டுவதற்கு வழிவிடாமல் தெண்டிப்பதினு லென்ன பிரயோ
ஜனம்? [நரகதண்டனை யடைந்தபின்பு மறுஜனனமுண்டெ
ன்பது சீர்ப்படுவதற்கென்றே சில மதஸ்தர்கள் சொல்லு
வார்கள். அப்படியாயின், முன் ஜன்மத்தி லனுபவித்த த
ண்டனை யின்ன குற்றத்திற்கென்று மறு ஜன்மத்திலே
ஞாபகத்திற் பொருந்தியிருக்குந் தன்மையதானல், தப்பா
ற் சீர்ப்படுவதற்கு முகாந்தரமாயிருக்கும்; அப்படிக்கில்
லாமையால், சீர்ப்படுவதற்காக மறுஜனன மெடுக்கிறதென்
று நம்பக்கூடாமையாயும், எப்போதும் ஜனனமெடுத்துக்
கொண்டே நற்கதியடைய வழியில்லாமையாயு முடியும்.]
ஒருகோடி யூதர்களும், பெருக்குப் பதினேழுகோடி கிரிஸ்
தவர்களும், பதினாறுகோடி மகமதியர்களும், நாற்பத்தெட்
டுகோடி (பற்பல) விக்கிரகாராதனைக்காரர்களும், ஆக எண்
பதுகோடி ஜனங்கள் கணக்காயிருக்கிறது. [இவ்வாறான ப
ல மதங்களுள் ஒரு மதந்தான் உண்மையானதா யிருக்க
வேண்டும்; அந்த ஒருமதத்திலும் கடவுளினுடைய கற்ப
னைகளின்படிச் சரியாய் நடந்து அவரிடத்திற் சேருபவர்க
ள் வெகு கொஞ்சம்பேர்தான். இந்தக் கொஞ்சம்பேர்தவிர,
அந்த மதத்தைச்சேர்ந்த மற்றவர்களும், பற்பல இதரமதங்
களைச் சேர்ந்தவர்களும் நரகத்திற்குப் போகவேண்டியவர்க
ள். கடவுள் எவ்வளவு கிருபையோடு மோட்சவாயிலை
ஒடுக்கமாகவும், நரகவாயிலை விரிவாகவும் அமைத்திருக்கி
றர்!] சிலநாளைக்கு முன்னமேதான் இந்தக் கொடுமையைப்
பற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது, நாஸ்திகமதத் துவே
ஷியாகிய ஒரு வயிராக்கிய ஆஸ்திகர் கிரிஸ்துமதக்கோட்
பாட்டை நான் தப்பாய்க் கிரகித்தேனென்றும், மற்றெல்
லாருமே நரகாக்கினைக்குள்ளாகிறவர்களல்லவென்றும், அ
வர்கள் அவரவருக்குளிருக்கிற ஞானவொளிக்குத்தக்கபடி
தீர்மானிக்கப்படுவாரகளென்றுஞ் சொல்லினர். இது உ
ள்ளபடி (முள்ளைப்பிடுங்கிப்போட்டு வசியை யடித்துக்கொ
ண்டதுபோல) சொற்ப சங்கடத்தை நிவர்த்திக்கப்போய்ப்
பெரிய சங்கடத்தி லகப்பட்டுக்கொள்வதாயிருக்கிறது. இத்
தாற்பரியத்தினாலே கிரிஸ்துமதத்தில் முக்கிய கோட்பா
டு சுத்தமாய்க் கெட்டுப்போகிறது. 'நம்பிக்கைவைத்து
ஞானஸ்நானம் பெறுகிறவன் இரட்சிக்கப்படுவான், நம்பி
க்கையில்லாதவன் சபிக்கப்படுவான்' என்று ஏசுநாதர் சொ
ல்லியிருப்பது அவலமாய்ப்போகிறதே. மனிதர்கள் அவரவ
ருடைய ஞானத்திற்குத்தக்கபடி பரலோக மடைவரென்று
இரட்சிப்பின்பொருட்டுக் கிரிஸ்தவனுவானேன்? யூத
னாவாவது மகமதியனாகவாவது ஹிந்துவாகவாவது ஏன்
இருக்கக்கூடாது? ஒருவன் மற்றொருவனைப்போலச் சுகம
டையலாமென்றால், ஒருவன மற்றொருவனைத் தன் மதத்தி
னுள்ளாக்கப் பிரயாசப்படுவானேன்? பிறமதஸ்தர்களைத்
தங்கள் மதத்திற் சேர்த்துக்கொள்ளக் குருக்கள்மார்களை
அனுப்புவதேன்? தேசத்திலேதானே இருந்துகொண்டு, இவ்
வகையிற் செலவழியும் அமிதமான பணத்தை, ஜெயில்க
ளுக்கு வதிலாகக் கல்விச்சாலைகளையும், பிட்சை யூழிய நா
டோடிகளுக்கு வதிலாகச் சுகானுபவ நாடுகளையும், ஏழைச்சாலை
களுக்கு வதிலாக வேலைச்சாலைகளையும், சமயசாலைகளுக்
கு வதிலாகச் சாஸ்திரசாலைகளையு மேற்படுத்தி, இந்த லோ
கத்தைத் தெய்வலோகமாக்குவதில் உபயோகப்படுத்தலா
காதா?

இவையெல்லா மிருக்கட்டும்; மானிடர்களை நல்லொழுக்
கத்திற்கேவுதற்கு மறுமைப்பயனது சித்தாந்தம் அவசிய
மில்லாமற்போவதுமன்றி, அவர்களுடைய மேன்மையான
பிரயோசனங்களுக்கு மிகவுங் கெடுதியாயுமிருக்கிறது. இவ்
வுலகத்திலே இன்னகாரணங்களினால் நமக்குத் துன்பம்
வருகிறதென்கிற உண்மையை அறிந்துகொள்ளவொட்டா
மல் அநேகமாய்த்தடுத்து, மறுமையில் பேரின்ப மனுபவமி
ருக்கிறதென்று வீணான ஆசைகாட்டி, அடிமைத்தனத்துக்கு
ம் உழைப்புக்கு முள்ளாகும்படி போதிக்கிறது. அன்றியும்,
இம்மையிலே சிறுமையைப் பொறுமையோடு சாந்தமாய்
எவ்வளவு பொறுத்துக்கொள்ளுகிறோமோ அவ்வளவும ம
றுமையிலே பெருமை யடைவோமென்று நம்பும்படிக்கும்
தூண்டுக்கின்றது. அப்படிப்பட்ட சித்தாந்தத்தை நம்புகிறவ
ர்கள் அவ்வாறு தங்களை யடிக்குங்கோலை முத்தமிட்டுக்கொ
ண்டார்களா, தங்களுக்குப் பூட்டப்பட்ட விலங்குகளை ஆ
சையோடு அணிந்துகொண்டார்களா, தங்களைக் கடித்த பா
ம்புக்குப் பால்வார்த்து வளர்த்தார்களா. நாமிப்படிச் சங்
கடப்பட்டுக்கொண்டிருக்க, குருக்கள்மாரும் அரசர்களும்,
மேன்மையையும் அதிகாரத்தையும் சலனமில்லாமல் அனுப
வித்துவந்தார்கள்.

மனிதர்கள் அனுபவிக்கத்தக்க சுகம் இவ்வுலகத்தின்மட்
டில்தானென்று நாமெல்லோரும் விவேகத்தினாலறிந்துகொ
ண்டு பிரவர்த்திப்போமாகில், இந்த உலகம் எவ்வளவு க
ண்காட்சியான வாழ்க்கையும், திடமும், திறமும், உபயோ
கமுமுடையதாகும்! மூடபக்தி - அடிமைத்தனமென்னுங்
கைவிலங்குகளை மனிதன் எவ்வளவு சீக்கிரத்தில் உதறிக்
கொண்டு, அவனுக்காக இவ்வுலகத்தில் காத்துக்கொண்டிரு
க்கிற பல நன்மைகளையு மடையத்தக்கவனாவான். கொடு
மையென்னுங் கூளி, மூர்க்கமான வெற்றியோடு இப்போ
தெங்கும் பறந்துகொண்டிருந்தபோதிலும், பணம் பறிக்கக்
குருக்கள்மார்கள் வேதப்பிரசங்க முதலியவை செய்துகொ
ண்டிருந்தபோதிலும், ஜனங்கள் ஆத்மார்த்தமென்று மிந்த
மயக்கங்களினின்றும் விலகி, மானிட யதேச்சையையும்
சுகத்தையுங்குறித்த சாஸ்திரங்களைச் சிந்தித்தால்மாத்திர
மே, மடமையும் குற்றமும் துன்பமும் அவர்களை யாளாது
எப்போதும் ஒழிந்துபோய்விடும்.

இந்துக்கள் வாசிக்கவேண்டியவை.

சென்ற டுவ சனிவாரம் சாயங்காலம் இந்து எக்செல்சி
யர் ரீடிங்ரூம் என்னும் சங்கத்தின் மூன்றும் வருஷோற்ச
வம் கொண்டாடப்பட்டது. அக்காலத்தில், தியாசொபி
(யோகநிலை) சங்கத்தலைவராகிய கர்னல் ஆல்காட்டவர்கள்
இந்துக்கள் வாசிக்கவேண்டியவை இன்னவென்று சிபாரிசு
செய்து பிரசங்கித்து வருகையில், இலவுகிகப்பிரயோசனத்
திற்காக வாசிக்கவேண்டியதோடு ஆத்மார்த்தமாகவும் வா
சிக்கவேண்டியதென்றும், தற்காலத்து இந்து வாலிபர்களு
க்குத் தங்களைப்பற்றி யொன்றுந் தெரியாதென்றும், நீங்க
ள் யாரென்று கேட்டால் இந்துக்களென்பார்கள், இந்து
மதமாவதென்னவென்று கேட்டால் மேலுங் கீழும் பார்ப்
பார்களென்றும், பிலிப்பிக்குச் சமீபத்தில் நடந்த யுத்தத்
தைக்குறித்துச் சொல்லுவார்கள், மஹாபாரதயுத்தம் என்
னவென்று கேட்டால பசபசவென்று விழிப்பார்களென்
றும், எவனாவது தேவ உண்மையை யறியவேண்டுமானா
ல், பகவதகீதை வாசிக்கவேண்டு மென்றும், ஐரோப்பா
விலுள்ள எல்லாப் பெரிய புஸ்தகசாலைகளையுஞ் சுற்றிச்
சுற்றிப் பார்த்தபோதிலும் அதற்கு மிஞ்சினது ஒன்றும்
அகப்படமாட்டாதென்றும், அடையாற்றில் தமது சங்கத்
தார் இப்போது கிட்டத்தட்ட ஒரு புஸ்தகசாலை பூர்த்திசெ
ய்திருக்கிறார்களென்றுங் கூறினர்.

இக்காலத்தில் இந்தியாவிலே தமிழ் தெலுங்கு சமஸ்கிரு
த முதலிய சுதேசபாஷை யச்சுக்கூடங்கள் விஸ்தாரமிருக்
கின்றன. அவைகளில் அச்சிடப்பட்ட நளசரித்திரம், பார
தம், பாகவதம், ஞானவாசிட்டம், இராமாயணம், கைவல்
லியம் முதலிய மதாசார நூல்களும். ஞானநூல்களும் குச்
சிலிக்கடையில் அபரிமிதமாய் மடிபடுகின்றன. அப்புத்தக
ங்கள் குப்பைக்காடெல்லாம் பரவுகின்றன. பாச்சிகையில்
சனீஸ்வரன் புகுந்துகொண்டு புரட்டினகதையையும், அன்
னந் தூதுசென்று பேசினகதையையும், நளன் கலதமிட்டு
க்கொண்டு ஒருவர்கண்ணுக்குந் தெரியாமற்சென்று தமயந்
தி திருஷ்டிக்குமாத்திரந்தோன்றி அவளோடு பேசின விந
தையான கதையையும், உரியப்பட்ட துகில் வளர்ந்துகொ
ண்டேயிருந்ததையும், அறுந்து விழுந்த மாங்காய் (உற்றது
சொன்னால் அற்றது பொருந்துமென) கர்ணன்பேரில்தான்
இச்சைகொண்ட துண்டென்று துரோபதை உண்மையைச்
சொன்னவுடனே பழயபடி காம்பிற்போய் ஒட்டிக்கொண
டதென்கிற விநோத கதையையும், யாகத்திற்பிறந்த பாயச
த்தை யுண்டதினால் கர்ப்பந்தரித்ததென்பதையும், மரத்தி
லொளித்துவைத்த பாணப்புதையல் சர்ப்பங்களாகச் சீறி
னதையும், விடப்பட்ட பாணம் பிரதட்சணம்வந்து நமஸ்
காரஞ்செய்துகொண்டு திரும்பிவந்து அம்புறாத்தூணியில்
புகுந்துகொண்டதையும், ஒருபாணம் பத்துநூறு ஆயிரம்
பத்தாயிரம் பாணங்களைக் கக்கினதையும், மந்திரித்து விட
ப்பட்ட புல் பாணமாகச்சென்று உபத்திரவமுண்டுபண்ணி
னதையும், மற்றும் காகிகதைபோன்ற கதைகளையும் கேட்
டறிந்த புத்திமான்கள் அவற்றை நம்புவார்களா? அப்படிப்
பட்ட புஸ்தகங்களை வாசிக்க இச்சைகொள்ளுவார்களா?
உண்மையறியச் சக்தியில்லாதவர்கள் முற்காலத்திலே அப்
படியும் நடந்ததேயென்று பிரமித்து ஆனந்தத்துடன் படிப்

பார்களேயன்றி, மற்றவர்களுக்கு அவை ருசிக்குமா? கர்ன லவர்கள் கலியுகத்திலே மகாத்தும வியாபகம் முடியாதென் றறிந்து அதை யொழித்து, தமது ஸ்வீகார சுதேசமாகிய இத்தேசத்தின் அரிச்சுவடி முதலாய் ஆராய்ச்சிசெய்யப் புத்தகசாலை யேற்படுத்தினார்போலும். இத்தேசத்தைத் தமது ஸ்வீகார சுதேசமாக்கிக்கொண்டதும், தமக்கிசையாத சொந்த பிள்ளையைக் கைவிட்டு, எங்குந் தேடிப்பார்த்து இசைவாகத் தெரிந்தெடுக்கப்பட்ட அயற்பிள்ளையை ஸ்வீகாரஞ் செய்துகொண்டதையொத்த பிரயோசனகரமானதே.

(அ - மு.)

வரவுக்குத்தக்க செலவு.

ஐயா, "பணமில்லாவிடில் பிணம்" எனவும், "பணத்தைக்கண்டால் பிணமும் எழுந்திருக்கும்" எனவும் பழமொழி வழங்கிவராநின்றது. இது இன்று நேற்றல்ல, நெடுநாட்பட்டதே. இதை யறியாதார் எவருமில்லை. இப்படியிருக்கவும் வரும்படியை யறிந்து செலவுசெய்யாமல் தாந்தூம் என்று தலைகால் தெரியாது செலவிட்டுப் பின்பு இஞ்சிதின்ற குரங்குபோல் விழித்துத் தலைமேல் கையை வைத்து எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி "ஐயோ! தெரியாமல் அற்பகாரியங்களையெல்லாம் ஊரார் மெச்சப் பிரபலமாய்ச் செய்தோமே! எல்லாம் போய்விட்டதே! கையில் ஒன்றுமில்லையே! நகைகளெல்லாம் ஒன்றுக்கு அரையாய் விற்பனை செய்தோமே! வீடுவாசல்கள் போயினவே! தோட்டந்தரவு பங்களாக்கள் பிறர்க்குச் சொந்தமாயினவே! வண்டி குதிரைகள் அன்னியரோறக் காலமாயினவே! கால்நடையாய் நடக்கவும் குடிக்கூலி வீட்டில் வசிக்கவும் தலைவிதி வந்ததே!" எனப்புலம்பி அழுவோர் இச்சென்னையில் எத்தனையோ பேருளர். இவர்களைப்பார்த்தாவது மற்றவர்களுக்குப் புத்திவருகிறதா? இல்லையே. கண்ணுக்குக் கண்ணெதிரே கெட்டுப்போனவர்களைக் கண்டிருக்கவும், கண்கெட்டவர்போல் நடந்தால் அவர்களுக்கு என்னபகரலாம். இந்துக்களுக்குள் கடன்வாங்கியாவது செலவுசெய்யும் துர்வழக்கங்கள் வழக்கத்தில் வந்துவிட்டன. அதோடு தம்மை யாவரும் மெச்ச வேண்டுமென்று கருதி ஒன்றுக்குப் பத்தாகக் கடன்பட்டாவது செலவழிக்கிறார்கள். இந்த மூடத்தனத்திற்குப் படிப்பில்லாமையேயன் காரணம்; படிப்பற்றவர்களுக்கு என்ன வுரைத்தாலும் உறைக்காது; உரோஷமும் இராது; இப்படிப்பட்டவர்கள் ஜனோபகாரமாகப் பொதுவிஷயங்களில் ஒருகாசுகூடக் கொடுக்கமாட்டார்கள். இவர்களுக்குச்சாரமான தருமம் இதுவெனவும், சாரமில்லாத தருமமிதுவெனவும் தெரியா. தமது பிள்ளைகளுக்குப் பகுத்துணரும் உயர்ந்த வித்தைகளைக் கற்றுக்கொடுக்காமல் தம்மைவிடப் பெருமூடராக்கிவிடுவார்கள்.—சுதேசமித்திரன்.

கடிதம்.

உ

கடவுள்துணை.

சித்திபுத்தி நாயகனெவனோ அவனே எனக்குத்துணை.

தேகாதி பிரபஞ்சத்தைக் கடந்துள்ளவனெவனோ

அவனே எனக்குத் தலைவன்.

விஞ்ஞானதிபகண்டனம்.

முத்துசாமிமுனிவர்களே! தாங்களியற்றிய விஞ்ஞானதிபத்திற்குச் சிறப்புப்பாயிரம் தந்த மதுரைமாநகரம் நற்கம்பரியற்றிய சாத்துக்கவியில் வேதாந்தத்தைக் கடைந்து அமிர்தத்தை எடுத்து சித்தர் முதலாயினோர் கூட்டினாரெனவும், ப. அப்பாதுரைச்செட்டியாரியற்றிய சாத்துக்கவியில் வேதாகமப்புரட்டை வெட்டவெளியாக்கி யெனவும் இருவரும் ஒருவருக்கொருவர் மாறுகச்சொன்னது தாங்கள்செய்த நூலைக்கண்ட ஆனந்தத்தாலேயோ!

II. தாங்களியற்றிய நூலில் 132-ஞ் செய்யுளில் "காணப்படுவனவாகிய வுருவமெல்லாம் பஞ்சபூதமே அன்றி வேறொன்றில்லை" என்றும், 110-ஞ் செய்யுளில் "ஒன்றிலிருந்து பஞ்சபூதங்கள் தோற்றியது" எனவும் இருவகைப்படக் கூறியது அறிவுமிகுந்த மயக்கத்தாலேயோ!

III. தாங்களியற்றிய நூலில் 138-ஞ் செய்யுளில் "நித்தியமாகியும், உருவில்லாத பொருளாகியும், எங்கும் நிறைந்த பரவெளியாகியும், ஒரு அளவைகளால் அறியக்கூடாத அறிவாகியும் நின்ற ஒருபொருள், பிரிதிவு - அப்பு - தேயு - வாயு - ஆகாயம் ஆகிய பஞ்பூதங்களாய்த் தோன்றினது" என்றும், 155-ஞ் செய்யுளில் "அண்டம் முதலாகிய பல உருவங்களை ஒரு கடவுள் படைக்கவில்லை" என்றும் முன் சொன்னவைக்குப் பின் சொன்னவை மாறுகவைத்து அக்கினியில் மூழ்கியெழுந்த பெருமைகொண்டோ!

IV. தாங்களியற்றிய நூலில் 135-ஞ் செய்யுளில் "பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களும் ஒன்றோடொன்று கலந்த செயலால் அனேக வுருவங்கள் தோன்றினது" என்றும், 4-ஞ்செய்யுளில் "காணப்படுவனவாகிய யாவையும் பார்த்து அறிந்தால் அவைகளெல்லாம் இயல்பே அல்லாமல் வேறொருசெயலை எவ்விடத்துங் காணேனென்றும், ஓரிடத்திலே செயலாலே உலகந்தோன்றினதென்றும், மற்று ஓரிடத்திலே இயலாலே உலகந்தோன்றின" தென்றும், ஒன்றிற்கொன்று மாறுகவே சொன்னது துணிவுதான். பிரிதிவுக்கு கடினமும், தண்ணீருக்குத் தண்மையும், அக்கினிக்குச் சூடும், காற்றினுக்குச் சலனமும் இயல்புதான். குலாலன் கையிலே அகப்பட்ட பிரிதிவி, அப்பு, தேயு, வாயு ஆகிய நான்கு பூதங்களுங்கூடி கடமாகுதல் செயல்தான். இதுபோன்ற அனேக நியாயங்களிருக்க இந்நூலாசிரியர் தனக்கோராதாரமின்றி, ஒருநூலை முன்பின் ஒன்றிற்கொன்று மாறுகவே செய்து பழைய நூல்களாகிய வேதாகமத்தையும், அதின் அங்கமாகிய ஆறுசாத்திரங்களையும், புராணங்களையும், கலைக்கியானங்களையும் தூஷணஞ்செய்து அந்நூலையே நிறப்புகின்றனர்.

இஃதுு

யாழ்ப்பாணத்து வல்லிபுரம்

சிதம்பரநாதபிள்ளை குமார

நாராயணபிள்ளை.

விஷபேதியைத்தடுக்கும் ஓர்வழி.

நாம் சாப்பிட ஆரம்பிக்குமுன் ஒரு பிடிசாதத்தில் ஒரு குன்றுமணி யளவு உப்புத்தூளைச்சேர்த்துச் சாப்பிட்டபின் நமக்குள்ள ஆகாரத்தைச் சாப்பிடவேண்டும். இந்த அற்ப கருமத்தைச்செய்யவும் சாத்திய மற்றவர்கள் தாம் புசிக்கும் ஆகாரத்தில் சற்றதிக வுப்புச் சேர்த்துக்கொண்டு சாப்பிட்டு வரவேண்டும். இதனால் எந்த வியாதியும் அணுகப் பயப்படும். இப்படிப் பழகினவர்களுக்கு விஷபேதி வாராதென்று ஓர் இந்திய பத்திரிகை கூறுகின்றது.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)		Rs.	As.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செய்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும் வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-0-ம் செலுத்தவேண்டும்.

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும்,

1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும்

பு. முனிசுவாமிநாயகருக்கும்;

1886-ம் வருஷத்திய சந்தாக்களையும்,

இங்கிலீஷ் பத்திரிகைகளும்,

செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி

மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயருக்கு

பெரம்பூர் பாரெக்ஸ் ரோட்டில்

அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MAADRS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 25.] MADRAS:—SUNDAY JUNE, 20, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

Fatalism.

ஊழ்வாதம்.

இவ்வுலகத்தின்கண்ணே மக்கள் அனுபவிக்கும் நன்மை தீமைகள் அவ்வவர்கள் முற்பவத்திற்செய்த வினைக்கீடாகவே யிருக்கின்றனவென்றும், ஊழ்வலிதென்றும், அதன்முன் யாருடைய உபாயமும் செல்லாதென்றும், ஊழ்வினையைக் கடந்து நடந்தவர்கள் சுவர்க்கமத்திய பாதாளமென்னும் திரிலோகத்துமில்லையென்றும் சில சமயவாதிகள் கூறுகின்றார்கள். ஊழாவதென்னவெனின், ஆன்மாக்கள் ஆதியிலே செய்த நல்வினை தீவினைகளே ஊழாம். ஊழ்-ஆகூழ் என்றும், போகூழ் என்றும் இரண்டுவகையாம். நல்வினையைச்செய்து அதற்கீடாகிய போகபாக்கியத்தைப் பெறுதலே ஆகூழாம்; தீவினையைச்செய்து அதற்கீடாகிய துன்பம் நரகம் இவைகளை அனுபவித்தலே போகூழாம்.

இன்னபடி திரிகரணசுத்தியாய்க்கூறும் ஊழ்வாதிக்குக் கடவுள் நம்பிக்கை யில்லாதேனும் இருத்தல்வேண்டும், அப்படிக் கடவுள் நம்பிக்கை ஓர்காலிருப்பினும் அக்கடவுள் வல்லமையிலும் கன்மவல்லபம் சிறந்ததென்றேனும் அவன் [illegible]ருத்தல்வேண்டும். இப்படிக்கில்லாமல் "கடவுளும் [illegible]ன்மமும் உண்டு, கன்மாகிய ஊழின்படியே சகல [illegible]டக்கவல்லதேனும் கன்மவலியைக்காட்டினும் கடவுள் வலியே மிக்கது" என்று ஒருவன் சொல்வானேல், அவன் பகுத்தறிவில்லா மானுடப்பதரேயாவன். ஏனெனில், [illegible]லமும் ஊழ் அல்லது அவ்வவர் கன்மத்தின்படி நடக்க [illegible]லதேல், கடவுளென்னத்திற்கு? கடவுள் ஊழின்படி நட[illegible]தற்கெனின், ஊழின்றேல் கடவுளுக்கென்னவேலை? ஆன்[illegible]க்களது செய்கையால் உற்பவித்தது ஊழா? அல்லது [illegible]ழின் செய்கையால் உற்பவித்தவர்கள் ஆன்மாக்களா? [illegible]திகள் சொல்லின்படி ஆன்மாக்கள் முற்பவத்தில் செய்த நல்வினை தீவினையே ஊழாயின், அவ்வான்மாக்கள் சுவாதந்திரியரா? சுவாதந்திரியரேல் அவரை ஆக்கியளித்து அழிக்குங் கடவுளர் ஒருவர் உண்டென்பது எப்படி? அவர் [சு]வாதந்திரியரல்லரேல், அவரை யாட்டுவித்த சூத்திரபாகி கடவுளின் கருத்தப்படி ஆடினவர்களாகின்றார்கள். ஆதலால் "ஊழின் செயலே செயல், அதன்முன் யாருடைய உபாயமுஞ் செல்லாது" எனனும் ஊழ்வாதிகள் சித்தாந்த[த்]தின் தலையில் இடிவிழுந்துவிடுகிறது. இப்படியே நியாயி[ல்] வருந்தோறும் கடவுள் நின்றால் ஊழ்நிற்கவில்லை, ஊழ்நின்[றா]ல் கடவுள் நிற்கவில்லை. "கடவுள் ஊழ் என்னப்பட்ட [இ]வ்விரண்டுமேயிருந்து சகலகாரியங்களையும் நடத்துகின்றன" [என]னின், கடவுளுக்கேனும் ஊழிற்கேனும் சுயமாய் நடத்த[த]க்க சக்தியில்லையென்றுதானே வெளிப்படுகின்றது. வெ[ளி]ப்படவே கடவுளும் ஊழும் தனித்தனி அபூரணசக்தியுடையதென்றாகிறது. ஆகவே கடவுளேனும் ஊழேனும் தனித்துள்ளவிடத்துச் சடம்போல் செயலற்றிருக்கவேண்டியதேயன்றோ? ஊழின் கதியும் கடவுள் கதியும் இவ்வளவா[த]லான், ஆன்மாவின் கதியைப்பற்றி விசாரிப்பாம்.

ஊழ், கன்மம், வினை என்பன ஒருபொருட்கிளவி. ஊழ்வாதிகள் சித்தாந்தப்படி "முற்பவத்தில் ஆன்மாக்கள் செய்த நல்வினை தீவினையே ஊழாதலால்," செய்வினைக்குமுன் செய்வோனாகிய ஆன்மா விருந்திருத்தல்வேண்டும்; அவ்வான்மா யாதானும் ஓர்கருமத்தைச் செய்தற்குமுன், ஊழில்லை; ஊழின்மையால் மேற்காட்டியபடி அவ்வூழோடுகூடி அல்லது அதைக் கருவியாகக்கொண்டு இயற்றுஞ் செய்கை கடவுளுக்கில்லை. ஊழில்லாதகாலத்திலும் (கடவுள் இருந்ததாக வைத்துக்கொள்ளினும்) அக்கடவுள் செயலற்றிருந்த காலத்திலும், தான் சுவாதந்திரியமாய்ச் செயல்புரிந்த ஆன்மவலியே கடவுள் வலியினுங் கன்மவலியினுஞ் சிறந்ததாகின்றது. ஆதலால் விதிவலிதென்கிற ஊழ்வாதிகளே! மதி வலிதோ, விதி வலிதோ யோசியுங்கள்.

அத்வைதோபந்நியாஸம்.

1885௵ நவம்பர்௴ 25௳ ஸ்ரீமான்......................
..............சாஸ்தியாரவர்களால் நடத்தப்பட்ட அத்வைதோபந்நியாஸத்தின் பெருமையும் உசிதமும் சிரவணிகர்க்கானந்தகரமாக்குவித்த அதன் விஷயங்களையும் பின்வருமாறு காண்க.

முதலாவது அத்வைதத்தின் இலக்கண மினையதென்[று]க அதனை யேற்படுத்தியவர் இன்னாரென்று புலப்படாததெழுல் அநாதியென்றும், அது மகா பெருமையுடைத்துவிட்டது; சொல்லிமுடித்தார். [illegible]க்காரர்களும்

இரண்டாவது பஞ்சகோசமாகிய அன்னமய அடையாள மயம், மனோமயம், விக்ஞானமயம், [illegible]திரம் அழிந்துபோ[illegible]

முதலிரண்டின் ஞானமுடையவர்களே நாஸ்திகரென்றும், மற்ற மூன்றினும் ஞானமுடையவர்கள் ஆஸ்திகரென்றும் கூறி, ஷை நாஸ்திகர் கொண்டது பிரத்தியட்சப்பிரமாணமென்றும், ஆஸ்திகர் கொண்ட வேதம் அல்லது சாஸ்திரமோ பிரத்தியட்சம் அநுமானம் இரண்டினாலும் அறியக்கூடாதது என்றும் புகன்று, ஷை மனோமயமானது இன்னதென்று வேதாந்தசாஸ்திரங்கள் கூறும்வண்ணம் உணர்க்காமல், மனமென்பது - பித்தம், ரத்தம், மூளை இம்மூன்றையும் அநுசரித்து இருப்பதென்றும் * அல்லது நாபி, இருதயம், புருவமத்யம் இம்மூன்றையு மநுசரித்திருப்பதென்றும் வெகு சாமர்த்தியமும் சாந்தமுமாய்ப் பிரசங்கித்து சரீர முதலிய பதார்த்த தத்துவங்களின் பரிசோதனையிலும், அவற்றின் குணகுணங்களைத் தெரிந்துகொள்வதிலும் நாஸ்திகர்கள் மெத்த வலியுடையவர்கள் என்பதிற்சந்தேகமில்லையென்றும் ஆகையால் நாமும் அவர்களை நிந்தைசெய்யாமல் நமக்குச் சகாயமாக வைத்துக்கொண்டு, அவர்களுக்குப் புலப்படாத மனம், அறிவு அல்லது ஆன்மா, பரமான்மா முதலிய வஸ்துக்களை அநுசரித்து நடக்கவேண்டியது நமது கடமையென்றும் மேற்படி உபந்நியாஸத்தை முடித்தனர். †

தத்துவவிவேசினியே! சாஸ்திரியார் தொடுத்தது அத்வைதமும் விடுத்தது அவாந்தரமுமென நீயுங் கேள்விப்பட்டிருக்கலாம். ஆயினும் அதைக்குறித்து எமக்குப் புலப்பட்டதையுஞ் சற்றே புகட்டிக் காட்டுவாம். அதாவது:—

அத்வைதத்தைச் சாஸ்திரியார் மதமென்றனரோ, அது மதமா? அல்லது வேறென்னவென்று ஆய்ந்துபார்க்கப் புகுவோமாயின், வேதத்தின் பிரிவுகளாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பிரதான பாகங்களுள் ஒன்றேயாகுமல்லவா ? அன்றியும் மேற்படி சரியையாதி நான்கும் வேதத்துள் அடங்கினவையா, அன்றோ? அங்ஙனமிருக்க, அத்வைதத்தைமாத்திரம் ஓர்மதமென்றும், அதைக் கண்டுபிடித்தவர் இன்னாரென்று தோன்றாமையால் அதை அநாதியென்றும் சொல்லப்புகின், A மற்ற முப்பாகங்களை

---

*. இதற்குச் சாஸ்திரியார் வேதாந்த சாஸ்திரப் பிரமாணங் காட்டின் ஒப்புவாம்.

†. அவர்களுக்குப் புலப்படாததைப் புலப்படுத்தினாலன்றோ அவர்கள் சாஸ்திரியாருடனிருப்பர்?

A. ஓர்நூல் செய்தோன் இன்னானென்று கண்டுபிடிக்கக் கூடாமையால், அதைச் சாஸ்திரியார் அநாதியென்றே மதிப்பார்போலும்!

யும் அவ்வாறே அனுவத்தனேயும் பேதமின்றி கூறநேரும். நேரின், சாஸ்திரியார் மொழிந்தபடி வேதம் அநாதி என்ற லட்சணத்தை கிஞ்சித்காலமேனு மேற்றுநிற்கும். இன்றேல் மற்ற முப்பாகங்களைக் கண்டுபிடித்த கர்த்தாக்களை யெடுத்தோதல்வேண்டும். அதாவது-சரியையைக்கண்டுபிடித்தவன் யாவன்? கிரியையைக் கண்டுபிடித்தவன் யாவன்? யோகத்தைக் கண்டுபிடித்தவன் யாவன்? இம்மூவரையும் சாஸ்திரியாரறிந்துதான் அறியாத அத்வைத கர்த்தா இல்லாமையால் அநாதியென்றுரோ! பளா, பளா! நன்று, நன்று!

மேலும் மேற்படி முப்பாகங்களை யாதியென்பாரேல் பஞ்சும், நெருப்பும், இருளும், ஒளியும் ஒன்றாய்க் கூடியிருந்ததன்ன அநாதியாகிய வேதத்துள் ஒருபாகம் அநாதியும் ஏனைய திரிபாகங்கள் ஆதியும் என்றதுபோலாய் ஆபாஸப்பட்டு பரஸ்பரவிரோதமுண்டாம். அந்தோ! இதனை சாத்திரியார் கவனியாததென்னே? பின்னும், கிறீஸ்து என்பவனாற் கண்டுபிடிக்கப்பட்டதற்கு கிறீஸ்துமதமென்றும்; மகம்மதுவினால் கண்டுபிடிக்கப்பட்டதற்கு மகம்மது மதமென்றும், அந்தந்த மதத்தைக் கண்டுபிடித்தவன் பெயரால் அவ்வம் மதங்களும் வழங்கப்படுகின்றனவென்றும், ஆனால் அத்வைதமோ அங்ஙனமன்று, இதைக்கண்டுபிடித்தவன் இன்னானென்று தெரியாமையால் அநாதியென்றும் சாஸ்திரியார் பகர்ந்தாரோ, கிறீஸ்துமதம் கிறீஸ்துவால் கண்டுபிடிக்கப்பட்டதன்றென்றும், அதுபோலவே மகம்மது மதத்தைக் கண்டுபிடித்தவன் மகம்மது வன்றென்றும், இவர்களுக்கு முன்னரே அம்மதங்களிருந்தனவென்றும், ஆனால் ஷை கிறீஸ்துவும், மகம்மதுவும் அவ்வம்மதங்களைச் சீர்திருத்தவந்தவர்களென்றும், மேற்படி மதத்தர்களாலும், மதங்களாலும் அறியப்பட்டிருக்க, சாஸ்திரியார் ஆங்கிலேய தத்துவங்களிற் சிலவற்றை யறிந்துகொண்டதுபோல மேற்படி மதக்கோட்பா[illegible] முணராமல் தம்மனம்போனவாறு பேசியது அவர்க்[illegible]? ஒன்றைச் சற்றேரக்குறையவேனும் உணர்ந்த[illegible] அதைக்குறித்துப் பேசவேண்டியது விவேகிகள்[illegible]வும் "பதருதகாரியம் சிதருது" என்ற வசன[illegible]ஸ்திரியார் பதறி வழுத்தியது "ஆனைக்கு[illegible] றதனுலா!

[illegible] இம்மூன்றையு மநுசரித்திருப்பதே மனம் என்றுரோ. மேற்படி மூன்றையு மநுசரித்துள்ள மனம் பிரத்தியேகமாயிருக்கின்றதா? அல்லது ஷை மூன்றுலாயது மனமா? அல்லது ஷை மூன்றிற்கே மனமென்று பெயரா? முற்கூறிய முப்பொருளையும் அநுசரித்திருப்பது மனமென்றுரோ. மனமென்றுலென்ன? பதார்த்தமா? பதார்த்தங்களின் [illegible]மா? அல்லது பதார்த்தங்களின் தருமமா? மனமென்பதினையவெளத் தெளிவாய்க் காண்பியாமல் அவாந்தரமாய் விட்டுவிட்டதென்னே! "என்மனம்" என்று சொன்னதனுல், மனம் என்பது சரீரத்தை விட்ட தனிப்பொருளென்றர்த்தமாயின், "என்தலை" என்னும் தலையுந் தனித்ததாக வேண்டும். இங்ஙனே சரீரத்தின் ஒவ்வொரு பாகத்தையும் என் எனும் பதத்தின் பின்னே கூறி சரீரத்தைவிட்ட தனிப்பொருளாக்கிவிட்டால் சாஸ்திரியார் சரீரத்தை யெதுவாகக் காண்பிப்பாரோ? அன்றியும் அவயவங்களாலாய சரீரமே சூன்யமாகும்போது, இவர் எதுவாக, எங்கே என்னசெய்துகொண்டிருப்பாரோ தெரியவில்லை. அந்தோ! செடியல்லது கொடிதன் ரஸத்தை என் ரஸமென்னுமானுல், செடியல்லது கொடியைச்சம்பந்தியாத தனித்த பதார்த்தமா ரஸம்? அல்லது செடியல்லது கொடியாலாயது ரஸமா? அன்றியும் செடியைத்தவிர ரஸத்தைத் தனியே காண்பிக்கவுங் கூடுமா? செடி செடியாயிருக்கும்போதே செடியை வேறு, ரஸத்தை வேருகக் காண்பிப்பாரா சாஸ்திரியார்? அதுபோல் "என் உயிர்" என்னும்போது சரீரத்தை வேருகவும், சரீரியை வேருகவும் காண்பிக்க உடலை நீங்கிய பதார்த்தமா உயிர்? அல்லது உடலாலாய பதார்த்தமா? ஆனுல் செடியின் இலை, பூ, காய், கனி, கிளை என்னுங்கால், செடியினேர் பாகமாகிய அவயவத்தைக் குறிக்கின்றதா? வேறு? அதுபோலவே என் கால், என் கை, என் தலை, என் கண், என் செவி எனப் புகலும்போது சரீரத்தின் அவயவங்களைக் குறிக்கின்றதென்பது கைக்கனிபோல் விளங்கவில்லையா? ஆனுல் செடியின் பழம், பழத்தின் ருசி என்போமாயின், செடியாலாயது பழமென்றும், பழத்தாலாயது ருசியெனறும் ஆகுமா? வேறு? அதைவிடுத்து செடி வேறு, பழம் வேறு; பழம் வேறு ருசி வேறு என்றுவது அல்லது செடியே பழம், பழமே ருசியென்றுவது சாற்றக்கூடுமா? அன்றியும செடியைத்தவிர பழமுண்டா? பழத்தைத்தவிர ருசியுண்டா? இல்லையே. ஐயா! நாம் ருசியைமாத்திர முணர்ந்தோமென்றுல், ருசி பழத்தைவிட்டிருக்கற்பாலதோ? பழம் செடியையன்றிக் கனியக்கூடுமா? கூடாதே. அதுப்பால "என்மனம்" "மனேவியாபாரம்" என்னும்போதும் உடலாலாயது மனமென்றும், மனத்தாலாயது வியாபாரமென்றுங் கொள்ளாமல் மனதைப் பிரத்தியேகப்படுத்த முயல்வது, மணியை வேறு ஓசையை வேருக்க முயல்வதுபோலும், கூரையேறி கோழிபிடிக்க வகையறியாத குரு ககனத்தைக்கீறி கைலாஸத்திற்கு வழிகாட்டியதை யொக்கும், ஒக்கும். நிற்க.

கடவுள், ஆன்மா, அத்வைதம் முதலியவற்றின் உற்பத்தியை எச்சமயத்தவரேனும் அறிந்திரார். ஆகையால் அவற்றை யில்லையென்பது சரியன்றென்றுர் சாஸ்திரியார். அங்ஙனமானுல் மேற்குறித்தவற்றைப் பெயர் மாத்திரத்தில் பொருள்களென மதித்து அவற்றின் உற்பத்திக்குச்சென்று அது தெரியாமையால் அவற்றைப் பொருளெனச் சம்மதிக்க என்ன சம்பந்தமுண்டு? அல்லது அதுமாத்திரம் சரிதானு? ஒன்றின்பெயரைக் கேட்டமாத்திரத்தில், பரீட்சைசெய்யாமல் அதனைப் பொருளென மதிப்பாரா விவேகிகள்? மேற்கூறியவை பொருட்களா யிருக்கும்பட்சத்தில் அவற்றைப் பொருளென ஸ்பஷ்டமாய்க் காண்பியாமல் கிளறிக்கொண்டிருந்ததேனே? B.

மனம், ஜீவன், ஆன்மா, பரமான்மா ஆகிய இவை யின்ன பொருளென சாஸ்திரியார் பிரசங்கத்தினுல் உணர்ந்தவர் யாவர்? பெயர்க்குப் பொருளை (வஸ்து) இன்னதென்றுணராமல் உரைப்பதால் என்ன லாபம்? தெரியாதவர்கட்குத் தெரியப்படுத்தவந்த சாஸ்திரியாரே குழப்பிவிடுவாரானுல், சிரவணிகர் என்னதான் செய்வர்? கேவலம் சமஸ்கிருத மொழிகளையே அதிகப் பிரயோகஞ்செய்ததால், அதவர் கல்வியில் தேர்ச்சியில்லாச் சிலர்க்கு ஆ! ஆ! சாஸ்திரியார் வெகு நன்றுய்ச் சொன்னுர், எல்லாமதங்களையும் அதப்படுத்திவிட்டார், மூச்சிவிடாமல் சொற்களைப் படபடவெனப் பறக்கவிட்டார் என்பர்; சிலர்க்கோ போனதும் வந்தது[illegible] தெரியும், அங்கே நடந்ததொன்றுந் தெரியாதென்றுர், என்[illegible]ணமாத்திரமேயொழிய வேறல்ல. ஆனுல் கற்றோர்க்கு அ[illegible]ர் பாஷை விளங்கியிருக்குமேயொழிய பொருள்பட்டிருக்கு[illegible]மென்பது சுத்த பொய்யாய் முடியும் என்பதற்குச் சந்தே[illegible]மேயில்லை. வேண்டுமானுல் சாஸ்திரியாரிடமிருந்து நீ ஒரு[illegible] விடை பெறு, பின்னர் வெளிப்படுத்துகிறேன் பொறு. நிற்க.

சூரியனைச் சுற்றிவருகின்ற விந்த பூமி அநேககாலந்தொ[illegible]ட்டு உருண்டு உருண்டு வருகின்றமையால், வண்டிசக்கர[illegible] உருள உருள தேய்வடைவதைப்போல இந்த பூமியுந் தேய்[illegible]வடைந்திருக்கின்றதென்றும் அதனுல் பூமியின் பளு கு[illegible]ந்து இரவியின் ஆக்ருஷ்ணசக்தியினுல் மேல்நோக்கி ப[illegible]லோன் சமீபத்தில் சென்றிருக்கின்றதென்றும், அ[illegible]தான் பூமிக்கு உஷ்ணம் அதகரித்து ஜீவர்கள் ஆயுளையுங் குறைக்கிறதென்றுர்.

(இன்னும்வரு[illegible])

நவீன இந்தியாவைப்பற்றி.

ரிவரெண்ட் ஜி. எம். கப்பன் பாதிரியாரவர்களுடைய

உபந்நியாசத்தின் [illegible]ரம்.

தற்காலத்தவர்கள் வெகு பாடுபட்டுத்தான் இப்போ[illegible] இந்தியாவைத் தங்கள் முன்னேர்கள் காலத்து இந்தியா[illegible]ன்று தெரிந்துகொண்டார்கள். தெரிந்துகொ[illegible] பின் சில விஷயங்களிலே தற்காலத்தைப்பார்க்கிலும் மு[illegible] சிறந்திருந்ததென்று கண்டறிந்தார்கள். இந்தியாவின் தற்[illegible]லநிலையையும் முற்காலநிலையையும் யோசிக்கையில், நான்கு பக்கங்களிலும் இப்போது பிரத்தியட்சமாயிருக்கிற மாறு[illegible]ல்கள் இன்னவிதமாயுண்டாயின வென்பதைப்பற்றி அதி[illegible]பிக்காமற்போகார்கள். இந்தியா ஜயிக்கப்பட்ட காலத்[illegible] மௌடிகம் மிகுதியாயிருந்தது, சீர்ப்படத்தொடங்கினது[illegible]ன்புதான்; அதுமுதலாய் இந்தியாவிலே உண்மையான[illegible] துபுது விஷயங்கள் உதயமாயின; அதின் மக்களுக்கு[illegible]க சுயாதீனமுமுண்டாயிற்று. இந்தியாவானது பூர்வகா[illegible]லதைப்பார்க்கிலும் இக்காலத்தில் அதிக விர்த்தியடைந்தி[illegible]கிறதென்பது ஒத்துக்கொள்ளத்தக்கதே. அப்படியாவதற்கு[illegible]க் கல்விச்சகாயம் மிகுதியாயிருந்தது. கல்விகற்ற பெ[illegible]ளின் சங்கியையும் விர்த்தியாயிற்று. வித்தியார்த்திகளுக்கு[illegible]ப் படிப்பிக்கும் விஷயமும் மாறிற்று. முற்காலத்தில் பூ[illegible] முக்கோணவடிவாகவாவது பரப்பான வட்டவடிவாகவா[illegible]திருந்ததென்று கற்பித்தார்கள். அதை இப்போது நம்பு[illegible]ரொருவருமில்லை. பூமி உண்மையான அளவுக்கு [illegible] 160,000 - பங்கு பெரிதா யிருந்ததாகவும், 6,072 - மை[illegible] உயரமுள்ள விந்தையான மேருமலை யொன்றிருந்ததாக[illegible] பூர்வீகர்கள் கற்பித்ததுபோல இக்காலத்தவர்கள் கற்பி[illegible]தில்லை. சந்திரனைப்பாக்கிலும் சூரியன் பூமிக்கு அதிசமீ[illegible]

B. முசாமுகி என்று ஓர் கற்பனுவார்த்தையைச் சொன்[illegible]ல் அப்பெயருக்கு ஓர் பொருளுண்டென்றுதால் சா[illegible]திரியார் வாதிப்பார்போலும்!

திலிருந்ததென்றும், மழை சந்திரனிடத்திலிருந்துவந்ததென்றும் தற்கால வானசாஸ்திரிகள் ஒருக்காலுஞ் சொல்லார்கள். பூர்வீகபண்டிதர்கள் பூண்டுசெடிகளை சாமானியமானவையும் விசேஷமானவையுமென இரண்டுவகையாக வகுத்தார்கள். தற்காலத்தவர்களுக்கோ செடி செட்டுகளைப்பற்றி உரித்தான சாஸ்திரமிருக்கிறது. பூர்வீகபண்டிதர்கள் சரீரத்திலே ஆறு (ஆறாதார) சக்கரங்களும் வயிற்றிலே ஆமையும் சிரசிலே அம்சமுமிருந்தனவென்று விந்தையான சாஸ்திரஞ் சொல்லிவந்தார்கள். அந்த சாஸ்திரம் இப்போது ஒழிந்துபோகவே போயிற்று, மறுபடியும் வராது. ஜனசமூகவிஷயத்திலும் இந்தியாவானது பூர்வகாலத்தைப்பார்க்கிலுந் தற்காலத்தில் அதிக பிரயோசனமடைந்திருக்கிறது. அக்காலத்தில் சூத்திரர்கள் பள்ளிக்கூடத்திற்குப் போகலாகாது, பிராமணர்கள் சட்டைபோடலாகாது, சுருட்டுப்பிடிக்கலாகாது. இக்காலத்திலோ சில பிராமணர்கள் பூட்ஸ் தரித்தார்கள், முனிஷி முதலிய உத்தியோகஸ்தரானார்கள்; கப்பல் யாத்திரையுஞ்செய்தார்கள். ஜாதியாசாரம் அனுஷ்டிப்பதாக வீட்டில்மாத்திரம் நடிக்கப்படுகின்றதேயல்லாமல் வெளியிலில்லை. பழயசித்தாந்தப்படி அநேக பிராமணர்கள் சண்டாளர்களும் அநேக சண்டாளர்கள் பிராமணர்களுமானார்கள். சூத்திரன் பிராமணனுக்கு அடிமையாதலால் அவனுக்குச் சொத்து இருக்கலாகாதென்பதுபற்றி அவனிடத்திலிருந்து பிராமணன் சொத்தைப் பறித்துக்கொள்ளலாமென்று மனுவானவர் விதித்திருந்தார்; இந்தக் கவர்ன்மென்டார் மனுவைத்திருத்தி சில வருஷங்களுக்குமுன்னே மேலான சட்டங்களேற்படுத்தினார்கள். முற்காலத்திலே ஸ்திரீகளுக்கு நீதிநடப்பிக்க ஒருவரும் எத்தனப்படவில்லை, தற்காலத்திலோ ஸ்திரீகளுடைய புனர்விவாகத்தைப்பற்றி வெகு முயற்சி செய்யப்படுகிறது. ஸ்திரீகளுடைய நிலைமையைப்பற்றி மிகுந்த கவனஞ் செலுத்தப்படுவதைப்பார்க்க வெகு சந்தோஷமுண்டாகிறது. இந்தியாவின் வாலிபர்களி[illegible]நேகர் ஜாதியாசாரத்தை யொழித்துவிட்டதாகச் சொல்[illegible] தைரியம்போதாமல், அதைப் பாராட்டிவருவதாய் நடி[illegible]பதைப்பார்க்க விசனமாயிருக்கிறது. அப்படி நடிப்பதினா[illegible] யோக்கியதைக்குக் குறைவுநேரிடுகிறது. சிலவருஷங்க[illegible]ளாய் தேசத்திலே துரைத்தனத்தால் அநேக மாறுதல்க[illegible]ண்டாயிருக்கின்றன. தேசமுழுவதும் அப்படிப்பட்ட [illegible]மாறுதலுண்டாக வேண்டுமென்கிற நோக்கம் வைக்காமல் [illegible]ற்றப்படி இந்தியாவைக்குறித்து யோசிப்பது வீண். கொ[illegible]சகாலமாய் துரைத்தன சம்பந்தமான யோசனையும் பிரச[illegible]ங்கங்களும் வி[illegible]மாய் நடந்துவருகின்றன. தற்காலத்தி[illegible] [illegible]களைகள் கூட்டவும், தந்திமூலமாய் காபரா[illegible] [illegible]கள் எழுதவுந் தெரிந்துகொண்டார்கள். [illegible]லாங்கூடி, ஹிந்துக்களுக்குப் பின்னுங் [illegible]ரம் வேண்டுமென்பதே. துரைத்த[illegible]ம் [illegible]காரம் பெறுவதற்குக் காலம் இன்னும் பின் [illegible]றது. ரிப்பன்பிரபு அவர்கள் சுயாதீனப் பிரதே[illegible] [illegible]ன ஏற்பாட்டைக் குறிப்பிட்டதினாலேயே இந்தி[illegible] கல்விமான்கள் வெகு மதிப்புவைத்து அவருக்[illegible] நன்றிகூர்ந்த பத்திரங்களெழுதிக்கொண்டார்கள். அப்ப[illegible]ப்பட்ட அதிகாரம் இத்தேசத்திற்கு இன்னமுதவாது. ப[illegible]யபடி கிராமபஞ்சாயத்து ஏற்பாட்டை ஸ்தாபிப்பது உத்[illegible] அந்த ஏற்பாட்டினால் வீண்வழக்கு லஞ்சப்பிரதான[illegible]ளுக்கு இடமுண்டாகாது. ரிப்பன்பிரபு அவர்கள் இத்[illegible] நன்மைக்காகச் செய்ததெல்லாம் நல்ல எண்ணத்தோ[illegible] செய்யப்பட்டதென்பதற்குச் ச[illegible]தகமில்லை, ஆயினும் [illegible] உள்ளபடி கடிதாசியின்மே[illegible]ல்மாத்திர மெழுதப்பட்[illegible]. செங்கற்பட்டு ஜில்லாவில் பரவியிருக்கிற பிராசினா[illegible]சிஸ்டத்தினால் வெகு கெடுதியுண்டாயிருக்கிறது. துரை[illegible] சம்பந்தமான காரிய நிர்வாகத்தைப்பற்றிப் பிரோ[illegible]வர்களில் தானறிந்திருக்கிற முக்கியமானவரொருவர் வலிது[illegible]ய அதிகாரத்துக்குட்பட்ட குடிகளை வெகுவாய் [illegible]ந்தப்படுத்தினவர். ஜாதியேற்பாடொழிந்து, ஸ்திரீகள் [illegible]ல்வியறிவால் மேன்மையடைகிறவனாயில், இந்தியாவின் [illegible]ளுக்குத் துரைத்தன சம்பந்தமான அதிகாரங் கொடுக்[illegible]ாதென்று சொல்லி, உபன்னியாசகர் சபையாவா[illegible]கி, யாவரும் ஒன்றுபட்டுச் சாதிக்கட்டுப்பாட்டை[illegible]க்க முயற்சிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்[illegible]

A. M.

சீர்திருந்தாத பிராமணர்கள்.

[illegible]இந்தியன் ஸ்பெக்டேட்டர்' என்னும் இங்கிலீஷ்பத்திரி[illegible]யில் கூறியிருக்கிற சங்கதியாவது:—இந்துக்களுக்குள் சீர்திருத்த முண்டுபண்ண முயலுகிறவர்கள் யோசிக்க[illegible] விஷயமொன்றிருக்கிறது. குஜராத்திதேசத்திலுள்ள நாகர் பிராமணர்கள் சகல விஷயங்களிலுஞ் சிறந்தவர்களே. அவர்களில் கல்விகற்றவர்கள ஆடவருள் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுபேரென்றும், பெண்டிருள் நூற்றுத் தொண்ணூற்றினன்குபேரென்றுஞ் சொல்வது வெகு புகழ்ச்சியே. இந்த அபிவிர்த்தியானது நன்றாய் வாசித்தவன் கனவுகாணுவதற்கும் மிஞ்சினதாகவே யிருக்கிறது. இந்தக் கணக்கானது - குஜராத்தி பத்திரிகையில் குறித்திருக்கிற ஜனசங்கியை ரிபோர்ட்டின்படி (சாமானியமாய் எழுதப் படிக்கக் கற்றுக்கொள்ளுகிறவர்களுஞ் சேர்ந்து) உண்டானதொகைதான். ஆயினும, கொஞ்சகாலமாய் இந்த நாகர்கள் என்ன சீர்திருத்தந்தான் செய்தார்கள்? ஸ்திரீகளின் புனர்விவாகத்தைத் தங்களுக்குள் நடத்திவராவிட்டாலும், அதைச் சரிதானென்றாவது ஒப்புக்கொள்ளுகிறார்களா? அப்படிக் கொன்றையுங்காணோமே. சுறுசுறுப்பான தங்கள் வாலிபச்சிறுவர்களை இங்கிலாந்துக்குப்போய் வாசித்துவரும்படி யனுப்புவதற்கு என் இன்னுந் திடங்கொள்ளவில்லை. அநேக வருஷமாய் அதைக்குறித்து யோசித்துக்கொண்டேயிருக்கிறார்கள். இரண்டுவருஷத்திற்குமுன்னே ஜனகார்நபாபு அவர்கள் தமது நாகர் குடிகளுக்காகப் பணச்செலவு 'ஸ்காலர்ஷிப்ஸ்' என்னுஞ் சில வர்த்தனைகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்த வர்த்தனைகளை யின்னும் அனுபவிப்பவர்களைக்காணோம். அந்த ஜனங்களில் முதியோர்கள் தங்கள் குருக்கள்மாரோடு கலந்துபேசி, அதுவிஷயத்தைப்பற்றிப் பெருத்த யோசனை செய்வதாய்ச் சொல்லியிருந்தார்கள்; இளையோர்களோ 'எல்லாம் முடிவாய்விட்டன, இங்கிலாந்துக்குப் போகவேண்டியவர்கள சித்தமாயிருக்கிறார்கள், நிராவிக்கப்பலையும் அதைச்செலுத்த இந்துக்கப்பலாள்களையும் மற்ற வேலைக்காரர்களையும் அமர்த்தி முடிவுசெய்யப்பட்டிருக்கிறது, இந்தியாவிற்கு நல்லகாலம் வந்துவிட்டது' என்று (முட்டைப்பணியாரம்போல்) எழும்பிக் குதித்தார்கள். சில இந்துபத்திரிகைகளும் அவ்வாறே குதுகுலித்தெழுதின. இப்போது இரண்டுவருஷகாலம் கழிந்துவிட்டது; சீர்திருத்துவோரும் கப்பற்காரர்களும் வேலைக்காரர்களும் குருக்கள்மாரும் முதியோர்களும் வெளிவந்த அடையாளத்தைக்காணோம். அந்த எண்ணம்மாத்திரம் அழிந்துபோகாமலிருக்கிறதென்பதற்குச் சந்தேகமில்லை; ஆனால் அது நிறைவேறுவதுமாத்திரம் எப்போதும்போலவே தலைதூரத்திலிருக்கிறது. மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிற நமது நேசர்கள் இன்னும் மனப்பால் குடித்துக்கொண்டும் கனவு கண்டுகொண்டும் சர்ச்சை செய்துகொண்டுமே யிருக்கிறார்கள். பன்னிப்பேசுவதேன், இன்னும் அவர்கள் யோசித்துக்கொண்டுதானிருக்கிறார்கள். உறுதிக் கேட்போமாகில், பிரிட்டன் தேசத்துப் பூர்வீகர்கள் உடம்பில் வர்ணந்தீட்டிக்கொண்டு மிருகப்பிராயிகளா இருந்தகாலத்தில், இதை-அதை மற்றதையெல்லாஞ்செய்த ஆரிய சூரர்களாகிய தங்கள் பூர்வீகர்களின் குணநிசயங்களை யெடுத்துக்காட்டி தங்கள் குறைவை மறைக்கத் தலைப்படுகிறார்கள. குஜராத்தித் தேசத்து நாகர்கள் மொத்ததிலே சிறந்த ஜாதயார்தான், மிகுந்த சரீரவலுவும் மனோதிடமுமுடையவர்களே. ஏதோ சில ஏற்பாடுசெய்துகொண்டு அந்தப்படி அவர்கள் சீக்கிரத்திலாவது பொறுத்தாவது கப்பலில் போகத்துணியலாம். இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவிற்குள் அவர்கள் பந்தடித்தல், ஒற்றைச் சக்கரவண்டிச் சவாரிசெய்தலையும கற்றுக்கொள்ளலாம். ஜனங்களுக்குள் சீர்திருத்தமுண்டுபண்ணுவதைக்குறித்தும முக்கியமாய புனர்விவாகத்தைக்குறித்தும அவர்களுக்குச் சொல்விப் பிரயோசனமில்லை. அவர்களைச் சூழ்ந்திருக்கிற நிஷ்பலமான சங்கதிகளினாலே அவரவரும் தனித்து முயற்சிசெய்ய அவர்களுக்குச் சுத்தமாயக் கூடாமை. ;எதையாவது வெளிக்கெடுத்துப் பேசினால் தங்களைப் பேயர்களாய் நினைப்பார்களென்கிற பயத்தினால் அவர்கள் வெளிக்குவந்து பேசுவதில்லை. சீர்திருத்துவது அவசியமென்று தாங்கள் அறிந்திருந்தும், விவாகச்சடங்குகளைத் திருத்தச் சக்தியில்லாத பிறவி ஆசிரியர்களென்றும் பிறந்தபோதே துரைத்தனச் சூழ்ச்சியோடு பிறந்தவர்களென்றும் இவர்களைச் சொல்லவேண்டும். A. M.

இந்துப்புருடரும், பெண்களும்.

இந்துப்புருடரும், பெண்களும், ஒருவர்க்கொருவர் அன்னியோன்னிய சமரச சந்தோஷவாழ்க்கையை அடைந்து வாழ்ந்துவருதலே நலமென்பது இக்காலத்துள்ள இந்துக்கள் சிலரோருடைய அபிப்பிராயம். இவ்வண்ணத்துணிபு ஆதிகாலந்தொடங்கி நிகழ்ந்து வந்ததாவென யோசிக்குமிடத்து இலை, ஏனெனின், தொன்றுதொட்டு வந்த இந்துக்கள், அவர்களுடைய நடவடிக்கையால் ஏற்படுத்திவைத்த நூல்களிலும், அதனை அப்யசித்தனுசரித்துவரும் தற்காலத்திய பல இ

ந்துக்களுடைய மனத்திலும் அவை பதியா? ஆங்கிலேய நூல்களையும், சட்டங்களையும், நடவடிக்கைகளையும் அநுசரிப்போர்களுக்கு ஆணி யணித்ததுபோற் பதியும். ஆனால் இவ்விஷயங்கள் ஆங்கிலேயருக்கே தகுதியாமாயினும், அதனை நம்மனோரும் ஒருவழியில் அனுஷ்டிப்பது நலமே. இவ்வாங்கிலேய வரசாக்ஷியில் புருஷர்கள் எவ்வண்ணம் ஆங்கிலேயரைப்போல் நடையுடை பாவனைகளின் பிரவேசித்தார்களோ! அவ்வண்ணமே பெண்களும் பிரவேசிக்கத் துணிபு கொண்டிருக்கிறார்கள். அதனை இந்துக்கள் தடுப்பவர்களானால், பரிபவத்துக்குள்ளாவர்களேயொழிய, அவர்கள் எண்ணம் நிறைவேறாது. ஆகையால் இந்துக்கள் தங்களுடைய பெண்களையும், பிள்ளைகளையும் இக்காலத்திய நடவடிக்கை கொண்டே நடத்தல்வேண்டும். இதுபற்றிய விஷயங்களுக்கு தங்கள் தங்கள் எண்ணங்களை நிலைநிறுத்தும்பொருட்டு விவாதங்கொண்டு எத்தனைகாலம் மண்டையுடைய சண்டையிட்டுக்கொண்டாலும் முடிவுபெறாது. இவ்விஷயமாக இருதிறவருக்கும் பிரமாண உபமானங்கள் வேண்டுமானால் நமது நூல்களிலேயே சாலவுங்கிடைக்கும். ஆகையால் மானுஷீகர்களுக்கு அத்தியாவசியகமாக வேண்டற்பாலனவாகியும், கல்விக்கு ஆதாரமாகியுமுள்ள இலக்கண நூலார், அவ்விலக்கணத்தை நிர்வகிக்கும்பொருட்டு எவ்வளவோ சூத்திரங்களை சொல்லிக்கொண்டுபோன அந்நன்னூலாசிரியர் கடையில் பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல் காலவகையினானே" என்று முடித்துவிட்டாரேயன்றி, முகிவுபடுத்திலர், ஆகையால் நம்மனோர்கள் பரம்பரையாக அநுஷ்டித்துவரும் மதாசாரங்கள் எவ்வளவிருந்தபோதிலும், அவைகளில் முக்கியமான அம்சங்களைக் கைக்கொண்டு, முக்கியமில்லாதவைகளைக் கழித்தும் நடந்துக்கொள்ள வேண்டியது நம்முடைய கடமையாயிருக்கின்றன. இவற்றில் புருடர்களுக்கும், பெண்களுக்கும் அத்தியாவசியகமான விஷயங்கள் சிலவுள. அவையாவன.

1-வது. கல்வி.
2-வது. கூடிவாழ்தல்.
3-வது. உறவினர் பொறாமை நீக்கல்.
4-வது. விவாகமுறைமை.

ஆனால், இவைகளை மொத்தமாக எடுத்துச் சொல்லிவிட்டோமென்று யாவரும் கலங்குதல் கூடா? அவைகளுள்ளும் பேதாபேதங்கள் பலவுள. அவைகள் நமது இந்துசாஸ்திர சம்மதமாகவே யிருக்கும். அவைகளின் கருத்துகளையும், நடவடிக்கைகளையும் எமது கருத்தினையும் சர்வஜன சம்மதமாகவே எடுத்துக்கூறுவாம். ஆனால் யாம் கூறும் விஷயங்களைக்கண்டு, பிரமசமாஜ மதத்தினுடையவும், கிறிஸ்து மதத்தினுடையவும், நாஸ்திகமதத்தினுடையவும் ஆகிய கொள்கைகள் என்று எண்ணுதற்கூடாது. அவை இந்துக்களுடைய பூர்வசரித்திர சம்மதமாகவே யிருக்கும்.

1-வது. கல்வியென்னும் அறிவை புருடரும், பெண்களும் அநுசரித்தலே வேண்டும். ஆனால் புருஷர்களே கல்வி கற்கற்குரியார் என்று சிலரும், பெண்களும் கல்வி கற்கற்குரியார் என்று சிலரும் வாதித்து வருவர். இவ்வாதம் எட்டுணையும் பொருந்தாது. நமது பூர்வீக இராஜஸ்திரீகள் முதல் பிச்சையெடுத்துண்டு காலங்கழித்த பெண்கள் வரையிலுள்ள கீழ் அந்தஸ்தினரும், தாரதம்மியமின்றி கல்வி கற்றுக்கொண்டு தங்கள் தங்கள் புருஷரோடு கூடி வாழ்ந்தாரென அவ்வக்காலத்திய சரித்திரங்களா லறிகிறோம். பெண்கள் கல்வி கற்றதினால், சோரஸ்திரீகளாகவும், புருஷர்களை மதியாதவர்களாயும் ஆய்விடுகிறார்களென்றும் கூறுவர். அப்படிபோலவே புருஷர்களும், கற்றும் கல்லாத இழிஞராய் வாசம்பண்ணுவதும் நாம் பிரத்தியக்ஷமாய்க் காணுகிறோம். ஆகையால், இதுவிஷயத்தில் பிரயோஜன மற்றவைகளைப் பிரமாணமாக காட்டிக்கொள்வதில் பிரயோஜனமின்று. ஆனால் முன்னைய நாளில் கல்வி கற்றுவந்தவர்கள் இதுகாறும் ஏன் பரம்பரையாகக் கற்றுக்கொண்டுவரவில்லை என்று கேள்வி உதிக்கும். அப்படியாயது புருஷனுடைய ஆலிங்கனத்திற்குப் பெண்ணானவள் தனது அவயவ முழுமையும் ஒப்புக்கொடுக்கவேண்டிய காலம் ஒன்று நேரிடுகிறபடியால், அப்பெண்ணானவள் தனது கல்வி சாமார்த்தியத்தினால் புருஷனை அலக்ஷியஞ்செய்து சேராது தமதிஷ்டப்படி திரிந்து பிரஜாவிருத்தி மாழ்குமதைக்கண்டு அக்காலத்திலுள்ளோர். "பேதைமையென்பது மாதர்க்கணிகல" மெனவும், "நுண்ணுணர்வுடையார் நூலொடுபழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேதைமைத்தே" "எண்ணறக்கற்று எழுத்தறவோதினும் பெண்புத்தி பின்புத்தி" "சேலைமேல் சேலைகட்டித் தெய்வரம்பையானாலும், ஓலைமேலெழுததாணி பூணும் பெண்ணாகாது" என்று பெண்களை இழிவுபடுத்தினதுமன்றியில், "தெய்வந்தொழாஅள் கொழுனற்றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யுமழை" என்று பெண்ணை புருஷருக்கு ஐக்கியமாக்கித் தொண்டுசெய்து வரும்படியாகவும் செய்துவிட்டனர். ஆனால் அக்காலத்தில் அனேக கவிஸ்வரிகளிருந்து வந்தமைக்கு ஐயமின்று. ஆயினும், அனந்தம் ஸ்திரீகள் கற்றும் கயமைத்தனம் நீங்காமை யிருந்தமையால் எல்லாருக்கும் ஒரே கதியாயது. ஆனாலும் இக்காலத்திலும் எவ்வளவு பெண்கள்தான் படித்தாலும், அவாளில் விசேஷமாக படிப்புக்கேற்ற நன்னடக்கையற்றுத் திரிகிறார்களென்பதற்குச் சந்தேகமில்லை. ஆயினும் நம்மாற்கூடியவரைக்கும், புருஷரிற் சிலர் கற்றும் கயவராய்த் திரிகிறார்கள் என்பது தெரிந்தும் எப்படி கற்கச் செய்கிறோமோ! அப்படிபோலவே பெண்களும் கற்கச் செய்துவிடுதல் நம்முடைய கடன்.—வேலூர் ஜாநுகூலன். (இன்னும்வரும்.)

உலோபம்.

ஐயா, இகலோக பரலோக சுகங்களுக்கு அவசியமானது பொருளென எவருமே அறிவர். இவ்வளவு முக்கியமாயிருப்பதாலும், இதையன்றி ஒருகாரியமும் சித்தியாகாதாகையாலும் "திரைகடலோடியும் திரவியந்தேடு" என ஔவை கூறினார். இவ்வண்ணம் தேடினபொருளைக்கொண்டு அடையவேண்டிய பயனை யடையாது இப்பூமியில் வைத்துவிட்டுச் செத்துப்போகும் உலோபிகளைப்பற்றி யாதுரைப்போம். தாமும் அநுபவியாது பிறர்க்கும் ஈயாது என்றும் சாகாமல் பொருளைக் காத்திருப்போமென எண்ணி எண்ணி ஏமாந்து இறுதியில் எவனெவனோ கொள்ளைகொள்ள இழந்துவிட்டு இறந்துபோகும் ஈயாலோபிகளுக்கு என்று புத்திவருமோ! "படிப்பது திருவாசகம், இடிப்பது சிவன்கோவில்" என்றபடி வண்ணம் வண்ணமாக வேதாந்தம்பேசிப் பொங்கிவழிந்து முடிவில் பணத்தினிடத்துமாத்திரம் பல்லைக்கடித்து கழுத்தை யறுத்துக்கொண்டாலும் இரக்கமின்றி வன்கண்ணராய் நின்று ஒருகாசும் கொடாமல் இப்பூமிக்குச் சுமையாய்க் கிடப்பது விருதாவே. பொருளைத் தக்க விஷயங்களில் தக்கபடி செலவிட்டு ஏழைகளைக் காத்துப் பரோபகார வழுவாய்நின்று புகழுடம்புபெற்று வாழ்வதைவிட்டு நாய் பூனை முதலிய மிருகங்களில் ஒன்றாய் இருந்து வாழ்வதில் யாது பயன். சதையும் பணமும் ஒன்றெனக்கருதும் லோபிகள் பணத்தைவிட்டு எங்ஙனம் செத்துப்போவரோ? அந்தோ அந்தோ! இப்படிப்பட்ட பாவிகளை எமன் என்று வருவானென நோக்கி வந்தவுடன் நல்லவிருந்து வந்ததென அகங்களித்து தன்னிடமிருக்கும் நரகமெல்லாம் இவனுக்கே சொந்தமாகவிடுவான். அக்காலத்தில் பழையலோபத்துவத்தை நினைந்து நினைந்து அழுதால் தீருமா? இப்போவ்[illegible] துவாழ்ந்து ஆஸ்திபோக மீதியைத் த[illegible] வர் மனங்களிக்க அக்களிப்பைக்கண்டு [illegible] உ[illegible]பியாய் மானிடசரீரத்தை எடுப்பதை[illegible] டலெடுப்பது நன்றாமே. உலோபமுள்ளவனிடத்திலுடைய[illegible] யிருக்கமாட்டாது. உண்டெனின், அது சால[illegible] ன நன்மையாயிராது. உலோபிக்கு இரக்கமி[illegible] த்தைவிட்டு ஒருநன்மையும் ஜீவியாது. இ[illegible] சுதேசமித்திரன்.

வர்த்தமானம்.

உண்மையான மதப்பிரசித்த சங்கம்.—சென்றவார[illegible] லே திருவல்லிக்கேணி தங்கைகொண்டான் மண்டபத்[illegible] ஒரு பெருஞ்சபை கூடினார்கள். அதில் விசிஷ்டாத்வைதத்தைப்பற்றிப் பிரசங்கமொன்று எழுதி வாசிக்கப்பட்ட[illegible] பல இந்துமதக்கோட்பாடுகளுள் விசிஷ்டாத்வைதமே [illegible]மையானதென்று இனிந் தேறுகடையாரும்போலும். [illegible]ஷ்டாத்வைத சித்தாந்தப்படி ஈஸ்வரனும் சித்தும் (ஆ[illegible] அசித்தும் (வஸ்து) என மூன்றும் தனித்தனி வெவ்வே[illegible] பதார்த்தமென்றும், ஈஸ்வரனும் சித்தும் உணர்வுடைய[illegible] வென்றும், அசித்து உணர்வற்றதென்றும், ஈஸ்வரன் நி[illegible] யனாகிய ஆண்டானென்றும், சித்து நித்தியமாகிய அ[illegible] யென்றும் கூறப்பட்டது.—ஈஸ்வரனென்றும், ஆத்மா[illegible] றும், வஸ்துவென்றும் வைத்துக்கொண்டு கதையை ந[illegible] வதாயிருநதால் வேண்டியமட்டில் நடத்தக்கூடும். அ[illegible] ச்செய்யாமல் ஈஸ்வரன் என்பது யாது, ஆத்மா சரீர[illegible] ன்றியபோது தோன்றி, அழியும்போது அழிந்துபோகி[illegible] அல்லது நித்தியத்துவமுடையதோ, வஸ்து எவ்வாறு [illegible]யிற்றோ வென்கிற சங்கையை முன்னே தீர்த்துக்கொ[illegible] வேண்டும். A. M.

Printed and Published for the Proprietor at th[e]
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MAADRS.

JUN

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

[Vol. V.—No. 26.] MADRAS:—SUNDAY JUNE, 27, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

Fatalism.

ஊழ்வாதம்.

(கஅ - ம் பக்கத் தொடர்ச்சி.)

நமது இந்துசமயிகளிற் சைவர் வைணவர் ஸ்மார்த்தர் முதலியவர்களும், புறச்சமயத்தவர்களுள் சில சார்பினராகிய கிறீஸ்தவர்களும் தம்மால் வணங்கி வழிபடப்படும் சர்வவியாபகத்துவம், சர்வவல்லமை, சர்வநன்மை, அநுதிநித்தியத்துவம் முதலிய குணங்களையுடைய கடவுளர்களோடு கன்மமென்னப்பட்ட ஊழையும் நம்பத்தக்கவர்களாக விருக்கின்றனர். இவர்கள் கடவுள் சர்வவியாபியேல், ஊழ் எங்ஙனம் வியாபித்தற்கு இடமுண்டு? ஊழ் கடவுளுக்கு அன்னியமான பதார்த்தமேல், ஊழ் ஒருபுரமும் தாமொருபுரமுமிருக்கின்ற கடவுள் எப்படி சர்வவியாபியாவர்? சர்வவியாபகமான வஸ்து எதுவோ அதுவே பூரணம்; பூரணமான வஸ்து எதுவோ அதுவே ஏகம். ஏகமெனினும் ஒன்றெனினும் ஒக்கும். ஏகவஸ்துவான பதார்த்தத்தோடு பிறிதோர் பதார்த்தமுமுண்டேல் ஏகத்துவங்கெடும்; ஏகத்துவங்கெடவே பூரணத்துவங்கெடும்; பூரணத்துவங்கெடவே சர்வவியாபகத்துவங்கெடும். ஆதலால் ஊழ்வாதிகள் கடவுளுக்கு மேற்சொன்ன இலக்கணத்தைக்கற்பிப்பது நியாயவிருத்தம்.
சீவர்களைச் சுகதுக்கங்களிற்படுத்தற்கு ஏதுவாகிய ஊழை அதோகதிப்படுத்தும் சக்தி கடவுளுக்கில்லையேல், கடவுள் சர்வவல்லவராகார். ஊழை அதோகதிப்படுத்தும் சக்தி கடவுளுக்கிருந்தும், அங்ஙனம் அதைச் செய்கின்றிலரேல், அக்கடவுள் சர்வ நல்லவரல்லர். ஆதலால் ஊழுள்ளமட்டுங் கடவுளைச் சர்வவல்லவரென்றுவது சர்வநல்லவரென்றுவது சொல்லுதல் நியாயவிருத்தம்.

அநுதிநித்தியமான வஸ்து எதுவோ அதுவே சகலத்திற்குங் காரணமாதல் வேண்டுமேயல்லாமல் அதற்கு வேறுகாரணம் கதுவப்படாது. ஊழோ "ஆன்மாக்கள் முற்பவத்திற்செய்த நல்வினை தீவினைகளேயாதலான்" அது அநுதிநித்தியத்துவத்தை யேற்காது. அது அநுதிநித்தியத்துவத்தை யேற்காதெனவே (துவிசிருங்கி நியாயசம்பந்தத்தானே) ஆதி அனித்தியத்துவத்தையே யேற்கும். ஏற்கவே "ஊழ்[illegible] அதன்முன் யாருடைய உபாயமுஞ்செல்லாது" என்ற ஊழ்வாதிகள் சித்தாந்தம் அபசித்தாந்தமாய் அழிகின்றமை காண்க.

மேலும் அவ்வூழானது காரியமாதலால், அதன் காரணம் ஒன்றிருத்தல்வேண்டும்; அதன்காரணமே ஆன்மாக்களெனின், அவ்வான்மாக்கள் கடவுளைப்போல அநுதிநித்தியமாகவேனும், அல்லது ஆதியுடைத்தாகவேனும் இருத்தல்வேண்டும். இந்து துவிதிகளைப்போல ஆன்மாக்களும் அநுதிநித்தியமெனின், கடவுளும் அநுதி ஆன்மாக்களும் அநுதியாய் உள்ளமையால், மேலே விவகரித்தபடி, கடவுள் ஏகர் என்பதும், சர்வ வியாபியென்பதும், பூரணர் என்பதும் விவாதமாய் முடியும். கிறீஸ்தவர்கள் சொல்வதுபோல ஆன்மாக்கள் கடவுள் சிருட்டியேயெனின், அவ்வான்மாக்களா லியற்றப்பட்ட காரியமாகிய ஊழிற்கு மூலகாரணர் கடவுளேயாகின்றார். ஆதலால் அவரைச் சர்வ நல்லவரென்பதெப்படி? இவ்விருவழியும் இன்றிக் கடவுளே ஆன்மா, ஆன்மாவே கடவுள் எனின், ஊழ் நேரே கடவுள் செயலேயாகின்றது. ஆதலால் கடவுளே சீவர்களைத் தீமையிலுய்க்கின்றார்.

கிரகணதோஷம்.

பூமியைச் சுற்றிப்போகுஞ் சந்திரன் அமாவாசியை காலத்தில் பூமிக்குஞ் சூரியனுக்குமத்தியில் வரும்போது, சந்திரன் தானிருக்கும் நிலைமைக்குத்தக்கபடி பூர்த்தியாகவாகிலும் கொஞ்சமாகவாகிலும் சூரியனை நமக்குத் தெரியாதபடி மறைப்பதினால் சூரிய கிரகணமுண்டாகிறதென்றும்; பூமியானது பௌர்ணமிகாலத்தில் சந்திரனுக்குஞ் சூரியனுக்குமத்தியில் வரும்போது சூரியனுடைய கிரணங்களைப் பூமிமறைக்க, பின்புறமாகவிழுகிற இருட்டுநிழலில் சந்திரன் பிரவேசிக்கையில் அதின் ஒளிமறைந்துபோவதினால் சந்திரகிரகண முண்டாகிறதென்றும்," சாஸ்திரத்தினால் தெரிந்துகொண்டவர்கள்போக மற்றவர்களில் பலர் - இப்போது பிரசுரமாகிவருஞ் சில பஞ்சாங்கங்களில் கண்டிருக்கிற சங்கதிகளினால் அறிந்தே யிருப்பார்கள். அப்படிக்கன்றி, சூரிய சந்திரர்களை ராகுகேதுக்கள் விழுங்கிக் கக்குகிறதாகவாவது மறைக்கிறதாகவாவது வைத்துக்கொள்வோம். அதினாலே நமக்குத் தோஷமுண்டாகிறதென்பது எவ்வாறோ அது தெரியவில்லை. எப்புலனுக்குந் தெரியாமல் வருகிற தோஷமானது சமுத்திரஸ்நானம், தர்ப்பண முதலியவற்றினின்று தெரியாமலுண்டாகிற பலனால் பரிகரிக்கப்படுகிறது. வீட்டிலுள்ள அரிசிமுதலிய பதார்த்தங்களுக்குத் தோஷமுண்டாகாதபடி அவற்றில் அக்காலத்தில் தர்ப்பைப்புல் போடப்படுகிறது. கிரகணதோஷத்தை ஹதஞ்செய்யும்படியான குணம் அந்தப்புல்லினிடத்தில் கண்டறிந்தது அதிவிவேகமே. பதார்த்தங்களைத் தோஷம் பிடிக்கிறதென்[illegible]ர்கள் [illegible] உயிருள்ள நம்மையுந் தோஷம் பிடித்தலால் [illegible]யலிலுள்ள தானியங்களையும் தோட்டத்திலுள்ள காய்[illegible]களையும் வீட்டிலுங் காட்டிலுமுள்ள மிருகங்களையுந் தோஷம் பிடியாதோ? தர்ப்பைப்புல்லின் ஸ்பரிசத்தினால் தோஷநிவர்த்தியாகுமென்றால், சமைத்துவைத்த பண்டங்களிலும் அந்தப் புல்லைப் போட்டுவைத்தால் போதுமே; அல்லது பண்டங்களில் அந்தப் புல்லைப்போட்டு ரசம் ஊறும்படிச் சமைத்து வைத்துக்கொண்டால் பின்னும் விசேஷமே. அப்படிச் செய்யாமல், கிரகணம் பிடிப்பதற்கு முன்னமே ஜீரணமாவதற்குப் போதுமான காலத்திற்கு முந்திப்புசித்து, மறுபடி அந்தத்தேவர்களைப் பார்க்கிறவரையில் பட்டினிகிடந்து வருந்துவானேன்? கிரகணகாலத்திற்கு நெருக்கத்திலாவது அக்காலத்திலாவது போஜனஞ்செய்தால் பிணியுண்டாகுமென்று பயந்து, காலந்தப்பாமல் சாப்பிடவேண்டுமென்கிற வைத்தியசாஸ்திரத்திற்கு விரோதமாயும், 'மிகினுங்குறையினும் நோய்செய்யும்நூலோர், வளிமுதலாவெண்ணியமூன்று' எனவும், 'அற்றால்அளவறிந்துண்க, அஃதுடம்புபெற்றானெடிதுய்க்குமாறு' எனவும், நாயனாருளிய குறள்களுக்கு விரோதமாயும், பட்டினியிருந்து ஆத்துமவதை செய்துகொள்வது கிரகணதோஷத்தினும் உண்மையான அதிகதோஷமே.
கிரகணதோஷத்தினால் கர்ப்பத்திலிருக்கிற சிசுவுக்கு அங்கப்பழுதுண்டாகுமென்று கர்ப்பிணிகளை அக்காலத்தில் அறைக்குள் அடைத்துவைக்கிறார்கள். அரூபமாயிருக்கிற தோஷம் வந்தடைவதற்கு வழியும் வேண்டுமோ? பசு எருது முதலிய ஜந்துக்களுக்கும் அங்கப்பழுதுண்டாவது இந்தத் தோஷத்தினாலே யாக்கும். அப்படிக்கானால், காட்டிலுள்ள மிருகங்களுக்கும் வெட்டவெளியிலுள்ள காலிமாடு ஆடு முதலியவைகளுக்கும் கிரகணதோஷத்தினால் மிகுதியாய் அங்கப்பழுதுண்டா யிருக்கவேண்டுமே; மனிதருக்குள் சிலருக்குமாத்திர முண்டாயிருப்பதுபோலவே அவற்றுள் சிலவற்றிற்குமாத்திரந்தான் உண்டாயிருக்கிறது. அன்றியும், இந்தத்தோஷத்தை எவ்வளவேனும் பாராட்டாத அநேக தேசத்துக் கர்ப்பிணிஸ்திரீகள் கிரகணதரிசனஞ் செய்துகொண்டிருக்கிறார்களே; அவர்களுடைய சிசுக்களுக்கெல்லாம் அங்கப்பழுதுண்டா யிருக்கவில்லையே. எல்லாச்சனியும் இந்தியாவைத்தான் பிடித்திருக்கிறது. எல்லா அநுஷ்டானங்களும் சாஸ்திரசம்மதமானவையல்ல; வழக்கத்தினால் அநே

கம் பரவிவந்தன. பொழுதுபோனால் கண் தெரியாத மாலை
க்கண் என்னும் வியாதிகண்டிருந்த ஒருவர் தான் இந்துவா
தலால் வீரராகவர், வேங்கடேசர், பழநியாண்டவர் முதலி
ய தேவதைகளுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டு நெடுநா
ள்வரையில் ஒவ்வொரு தேவதையின் பேரைச்சொல்லி வெ
வ்வேறு அவிழ்தம் சாப்பிட்டும் பிணிதீராமல், ஒருநாள் அ
வரும் அவருடைய பத்தினியாருமாக எண்ணமிட்டுக்கொ
ண்டு விசனமுற்று முற்றத்திலிருக்கையில், பிச்சைக்குவந்த
ஓர் பக்கிரி அதைக்கண்டு என்னென்று வினவ, அவன் பக்கி
ரியாதலால் ஏதாவதொரு உபாயஞ் சொல்லுவானென்கிற
நம்பிக்கையினால் தங்கள் குறையைச் சொல்லிக்கொண்டன
ர். பக்கிரி வெகு சுலபமான ஒரு அவிழ்தமுறையைக்காட்
டி, அல்லாவைப் பிரார்த்தித்து நாகூர் மீராசாயபுபேரைச்
சொல்லி அந்த அவிழ்தத்தைச் சாப்பிட்டால் குணமுண்டா
கும், ஆனபின்பு சில பக்கிரிகளுக்கு அன்னங் கொடுக்கவே
ண்டுமென்று சொல்லிப் போயினன். பிணியாளி அவ்வாறு
செய்து சொஸ்தமடைந்து, மகமதிய தேவதாப்பிரார்த்தனை
களைச்செலுத்தி, இந்து தேவதைகளைக் கைவிடுத்து, கண்கொ
டுத்த கண்கண்ட தெய்வமாகிய நாகூர் மீராசாயபினிடத்தி
லே முழுநம்பிக்கை வைத்து, வருஷந்தோறும் அல்லாக்
கயிற்றைக் கொஞ்சமாகத் தன் குடுமியிற் சுற்றிக்கொண்டு,
தன் மக்களுக்குப் பூர்த்தியாய் அல்லாவேஷம் போட்டுவந்
தனர். அந்த வியாதிகண்டு பின்னுஞ் சிலர் அவரிடத்தில் உ
பதேசம்பெற்று அவ்வாறே நடந்துகொண்டார்கள். அவருக்
குப் பின்பு அவருடைய சந்ததியார் எவ்விதப் பிரார்த்தனை
யுமில்லாமலே அந்த அவிழ்தத்தினால் அந்த வியாதியைச்
சொஸ்தப்படுத்தி வந்தார்கள்.

மேலும் ஒருகதையுண்டு—இராமேஸ்வரயாத்திரை சென்
ற ஒருவர் தனக்கிருந்த ஓர் செப்புச்செம்பை எடுத்துக்கொ
ண்டு, பொழுதுவிடியா முன்னமே சமுத்திரஸ்நானத்திற்கு
ப்போய், செம்பை வைத்துக்கொண்டு தர்பணஞ் செபஞ்செ
ய்வது கூடாமைபற்றி, மறைத்துவைக்க மறைவிடமில்லாம
ல் கரையெங்கும் வெட்டவெளியாயிருந்ததினால், பள்ளந்
தோண்டிச் செம்பைப்புதைத்து, அந்த இடத்தை யொருவ
ரு மறியா[illegible]ம்படியாகவும், தனக்கு அடையாளந் தெ
ரியும்படியாக[illegible] மேடைசெய்து சிவலிங்கம் பிடித்துவைத்
துக்கொண்டிருக்கையில், சனங்கள் வந்துகொண்டிருந்தார்
கள். அவர் தனது கரவடத்தை மறைக்கவேண்டி அந்த லி
ங்கத்திற்குப் பூசைசெய்கிறவர்போலச் சில மந்திரங்களைச்
சொல்லிவிட்டு ஸ்நானத்திற்குச் சென்றனர். இதைப் பார்த்
த ஜனங்கள் உண்மையை யறியாதவர்களாய், யோசனையி
ன்றி, ஸ்நானத்திற்குப்போகு முன்னர் சிவலிங்கபூசைசெய்
வது முறைமையாக்குமென்றெண்ணி, யாவரும் அவ்வாறே
ஒவ்வொரு லிங்கம் பிடித்துவைத்தனர். ஸ்நானத்திற்குப்
போனவர் திரும்பிவந்து, கரையெங்குஞ் சிவலிங்கக் காடா
யிருக்கக்கண்டு, தன்னுடைய மேடை அடையாளந்தெரியா
மல் சில மேடைகளைக் குறிப்பாகச் சோதித்துப்பார்த்துச்
செம்பு அகப்படாதபோது அவர் சொன்ன மேற்கண்ட கரு
த்தடங்கிய ஸ்லோகமாவது—“గతానుగతికోలోకః।నలోకఃపా
రమార్థికః। సేతౌసైకతలింగేన।నష్టంమేతామ్రభాజనం” (கதானு
கதிகோலோகஃ - நலோகஃபாரமார்த்திகஃ - சேதௌசைகத
லிங்கேன-நஷ்டம்மேதாம்ருபாஜனம்.) அன்றியும், அனு
வாக ஆரம்பிக்கிற வழக்கம் பின்பு மலையாய்விடுகிறது—
குழந்தைகள் அரிசியெடுத்துத் தின்னும்போது அதைத் தடு
க்கும்பொருட்டு, நீ அரிசிதின்றால் உன் கலியாணத்தில் ம
ழைபெய்யுமென்று பெண்டுகள் சாதாரணமாய்ச் சொல்லி
வருகிறார்கள்; ஓர் கலியாணகாலத்தில் மழைபெய்தால், இ
ந்தக் கலியாணப்பெண் அரிசி தின்றிருக்கவேண்டும், அதி
னாலேதான் இப்போது மழை பெய்கிறதென்று அத்தாட்சி
கூறுகிறார்கள். இந்த வழக்கச்சொல் ஊர்ச்சிதமாகவாக
இதுவே வழக்கத்தை யனுசரித்த சாஸ்திரமாய்விடும். இவ்
வாறு ஜனங்கள் உண்மையைக்கண்டறியாமல் ஒருவரை
யொருவர் பார்த்து அநுஷ்டிக்கிற துராசாரங்களைக் கல்வி
ப்பயிற்சி முதலிய கூடுமான வகையால் துலைக்கும்படி செ
ய்வது விவேகிகளுக்கு முந்திய முதன்மையான கடமை
யாகும்.

A. M.

அத்வைதோபந்நியாஸம்.

(கூஅ - ம் பக்கத் தொடர்ச்சி.)

புத்தியையும் குறைத்துவிட்டதென்றும், அங்ஙனம் குறை
ந்திருக்கும் புத்தியையுடைய இக்காலத்தவர் பூப்பிரமாணம்
அதிகரித்திருந்தபோது நிறைந்த புத்தியுடையோரால் செ
ய்யப்பட்ட சாஸ்திரத்தைப்பார்த்து அதன் மர்மமுணர இ
க்காலத்தவர்க்குச் சக்திபோதாததுகொண்டு முன்னோர் சா
ஸ்திரங்களைத் தவறென்று அநேகர் கவனிக்கிறதே யில்லை
யென்றார் சாஸ்திரியார்.

ஓ, தத்துவவிவேசினியே! பண்டிசக்கரமோ கற்களும் ம
ண்ணுமான தரையிலிருக்கின்றது, அதன்பேரிலோடுவதனால்
சக்கரம் அணுவணுவாய்த் தேய்வடையுமென்றது பிரத்திய
ட்சம். ஆனால் பூமி சுற்றிவருவதனால் தேய்வடையுமென்ற
சாஸ்திரியார், எதன்பேரில் பூமி யோடுகிறதாய் மதித்திருக்
கின்றாரோ தெரியவில்லை. இரண்டுபதார்த்தம் ஒன்றோடொ
ன்று உராய்ந்தாலொழிய தேய்வடைதற் கேதுவில்லை. அது
போல பூமி எதன்பேரிலோடு மோட்டத்தால் தேய்வடைகி
ன்றது? அன்றியும், அங்ஙனே தேய்வடைந்தபோதினும், பூ
மி தனக்குரிய ஆக்ருஷ்ணசக்தியினால் அணுவையேனுந் த
ன்னைவிட்டப் புறப்படுத்துமா? தேய்வடையினும் தேய்ந்த
வணுக்களையெல்லாம் தன்னிடத்தே ஆக்ருஷித்துக்கொண்
டிருக்குமேயன்றி அகற்றுமா? தன்னைவிட்டொரு அணுவே
னும் அப்புறப்படாமலிருந்தால் பூமி பளு குறைவதேன்?
சாஸ்திரியார் அபிப்பிராயப்படி அக்காலத்து பூமியைவிட இ
க்காலத்து பூமி பளு குறைந்திருப்பதால் சூரியன் சமீபத்தி
ல் போகின்றது, அதனால் சூடதிகரிக்கின்றது, அதனாலாயு
ளும் புத்தியும் குறைகின்றதென்றால், உயர்ந்து போகப்போ
க சூடதிகமா அல்லது குளிர் அதிகமா என்று பரீட்சிக்க
சாஸ்திரியாரை உயர்ந்த மலையின்பேரில் வைத்துப்பார்த்தா
ல் அறுபோகத்தில் உணர்வர். பூமி நாளுக்குநாள் அல்லது
காலத்திற்குக்காலம் குறைவுள்ளதா யிருக்கின்றதென்னும்
சாஸ்திரியார் வசனத்தால் பூமியிலுள்ள யாவரோயாயினும்
இக்காலத்துள்ளமையால் குறைந்த புத்தியுடையவரேயன்
றி நிறைந்த புத்தியுள்ளார் ஒருவருமே யில்லையெனத் தீருவ
தால், எந்த சாத்திரத்திலும் எந்த பெரியவாளிடத்திலும் உ
ண்மையில்லாமையாலும், தத்காலம் சாஸ்திரியாராயிருக்கும்
இவரும் அந்தக்கணக்கி லொருவரானபடியாலும். இவர் பே
ச்சை மப்படித்தள்ளென்ன விடமுண்டு என்றாகவே சாஸ்திரி
யார் சொல் சாஸ்திரியாருக்கே கழுத்தறுப்பா யிருந்ததைப்
பிரத்தியட்சமாய்க் காணலாம்.

அன்றியும் ௬௦-அல்லது ௬௫-வருடங்களுக்குமுன் B. A.
பரீட்சை யெத்தனைவயதில் தேறினர், இக்காலத்தில் ௬௫-அ
ல்லது ௬௬-வயதிலேயே தேறுவதாயும், இன்னும் சில வரு
ஷங்கட்குப்பின் அ - அல்லது ௯-வயதிலேயே தேறுவார்க
ளென்றும் சாஸ்திரியார் சொல்லியது ஒன்றற்கொன்று முர
ண்படுகின்றது. இங்ஙனமாவதன் காரணங் காண்புழி ஆங்
கிலோ திராவிடமென்னு மிரண்டபிப்பிராயத்தி லொன்றை
யேனும் பற்றுக்கோடாய்க்கொள்ளாது ஆற்றிலொருகால்
சேற்றிலொருகால் வைத்திருக்கும் எவர்போலவோ இரண்
டையுங் குழப்பிவிட்டு சித்தாந்தமில்லாமல் அவாந்தரமாய
முடிவுபெற வைத்தனர். ஆனால் சாமர்த்தியமுடையோர் எ
ததனை பாஷை யபிப்பிராயத்தை யேற்கினுமேற்பர்.

அந்தோ! சாஸ்திரியார் பின்வருமாறு சொல்லியிருந்தாலு
ம் ஒருபோக்காயிருந்திருக்கும். எப்படியென்றால், பொன்
னானது புடத்திற்குப்புடம் மாற்றுயர்ந்து கனம் குறைவதை
ப்போல ஜீவர்களுக்கும் காலத்திற்குக்காலம் ஆயுள்[illegible]
யும் குறைந்து புத்தி அதிகரிக்கின்றது என்றாலும் உசித[illegible]
யிருக்கும், இங்ஙனமாதற்குக் காரணங்கேட்கின், அக்காலத்
திருந்தவர் பலரும் புறக்கருவி யல்லது சரீரசாதனை (Phy-
sical exercise) யை மிச்சமாய்க் கையாண்டனர், அதனால்
வலிமையுடையவர்களாய் இருந்தனர். ஆனால் இக்காலத்தி
லோ அகக்கருவிசாதனை (Mental exercise) சிறுபோதுமுத
ல் அதிகமாய்க் கைக்கொண்டு மற்றொன்றைக் கைவிட்டிரு
க்கும் காரணத்தால் புத்தி பிரகாசித்தும், சரீரம் மங்கித்த
ம் இருக்கின்றது. இதுகாரணத்தாலேயே தத்துவசாத்திரிக
ள் இப்போது பாடசாலைகடோறும் எக்ஸர்சைஸ் (Exerci
se) வைத்திருக்கின்றனர். இதை நம் சாஸ்திரியார் கேள்வி
ப்படவில்லையோ அல்லது ஞாபகத்திற்கு வரவில்லையோ
இரண்டிலெதுகாரணமோ தெரியவில்லை. ஆகையால் ஓ,
தத்துவவிவேசினியே! சாஸ்திரியாரை நீயே கண்டு எமது
சங்கையை அவர்க்கு விண்டு, உண்மையை யறிவிப்பாயெ
ன தண்டனிடும்,

கி. உண்மைவிரும்பி.

கேட்டையின் சேட்டையென்று
இதில் முன் பிரசுரமாகியதைச் சுட்டி
அடியிற் கண்டவாறு ஒருவர் எழுதுகிறார்—

ஐயா, பத்திராசிரியரே!

"இச்சுயக்கியானியார் இவ்விஷயத்தில் தலையிட்டுக்கொ
ள்வதினால் பிரயோஜனமென்ன? சாஸ்திரக்கியானிகள் சுய
க்கியானங் கொள்ளுவாரொன்றோ? சாஸ்திரக்கியானந் தலை
கொண்டுள்ளோமென மதித்திருக்கும் இந்நாவலர்போன்றோர்
மேல் தோஷாரோபணஞ் செய்வதில் பயனென்ன? சுயக்
கியானம் விருத்திசெய்ய முயலும் வழி வேறுயில்லையோ?
இந்துசாஸ்திரங்களில் பெரியோர்களுக்குச் செய்யவேண்டி
விதியாகிய—

எதிர்கொளல்பணிதலோடு மிருக்கைதாள்கழுவல்நாறும்
புதுவிரைநறும்பூத்தூபம் புனைவிளக்கடைவேபோற்றல்
விதியின்வாளரவுதோறும் விடமுநீத்தென்னநீத்த
லதிகருக்கமுதமேந்த லவைநவபுண்ணியந்தான்.

என்பன வாதியாகவுடைய கொள்கையைக் கொண்டார்கள்
யாவும். இப்படியில் நடக்குமவனைத் தூஷிப்பவர்கள் அர
சாங்கத்தார் தெண்டனைக்குள்ளாவார்களென்றறிந்து நடக்
வேண்டும்." நன்மைவிளம்பி.

இதனால் சமயநூல்களிற்சொலும் அயோக்கிதா கிரியை
யல்லாங் கண்டித்துப் பேசப்படாதென்றும், அப்படிப்பே
னால் அரசதண்டனை யுறவேண்டி வருமென்றும் பனங்கா
டு நரிக்குச் சலசலத்துக்காட்டுகின்ற நன்மைவிளம்பியே!
ன் நின்றுகொண்டு பெய்கிறீரென்றால், ஓடிக்கொண்டே
பய்வேனென்பதா தகைமை? செடிலாடல், உடன்கட்டை
யுறல், நரபலி கொடுத்தல், சக்கிராங்கிதச் சூடுபோடல்
முதலிய சமய உற்பாத கிரியைகளையெல்லாம் அரசாங்கத்
தார் சன்மானிக்கின்றார்களா? எச்சில் பொசித்தல், காலைக்
கழுவி குடித்தல் இவை செய்யத் தக்கதுதானா? இங்ஙனம்
ன்மைவிரும்பி செய்வாரா?

உள்ளதையுரைப்போன்.

நிருவாகமுடைமை.

இத்தலத்தெவ்வெவ் வியல்பையும்விளங்கக்
கைத்தலத்தாமல் கனியெனக்காட்டி
வைத்தொளிசெயுந்தத் துவவிவேசினியே!

த்னரினைக்கண்டு தெரிசிப்பவர்தம், மனமெனும்காது மகி
ழாத்தக்க, தெனுமிவ்வுரையை யெடுத்துக்காட்டுதி.

ம்மனோரிடத்துச்சென்று யாதோருதவியைப்பெறாதும்,
யர்கட்குக் கடமைப்படாதும் பிறருக்கு நன்மையே எப்
பாதும் செய்தல் வேண்டுமென்னும் முறைமையோடு ஒழு
தற்கணுண்டாகுஞ் சுயாதினமே நிருவாகமெனப்படும்
ந்த நிருவர்கத்துக்குக்காரணம், ஒருவன் தன்னிடத்துள்ள
பொருளின் வலியளவறிந்து வரவுக்கேற்ப சரீரசுகத்தின்
பொருட்டும் தருமத்தின்பொருட்டும் மட்டாய்ச் செலவு
செய்தலேயாம். இதுவே மனுடருள் எத்தொழிலினோர்க்கும்
வசியகமாய் வேண்டப்படும் மனுபூஷணங்களுட் சிறந்த
தான்றும். வரவுக்கேற்ப மட்டாய்ச் செலவுசெய்தலுக்கு
அதிடமும் அற்ப அறிவும் அமையுமே; பேராண்மையும்
அறிவும் வேண்டா. இன்னும் நிருவாகமென்பதனை உய்
நோக்குமிடத்து வரவுக்கேற்ப மட்டாய் செலவுசெய்த
லாகும் நிருவாகமுடைமையே இல்வாழ்க்கைக்கமைந்த சி
த லட்சணமாம். இல்வாழ்க்கையை நடாத்தும் ஒழுங்கு
ாயம் வருணச்சிரம நெறிகளைப் பேணலும், அறிவும, வீ
செலவுவாராமல் காத்தலாம். தத்தம் வரவுகளை அறிந்து
ற்கேற்ப மட்டாய்ச் செலவுசெய்தலே பொருள் சேர்க்
வழி. தன்பொருள்வரவின் ஒருகூற்றைத் தனக்கு நோ
ந்தகாலத்து அதனை நீக்குதற்கு வைத்து மற்ற எஞ்சிய
வகளை நியாயமான புறச்செலவில் விடுதலே சிறப்பாம்.
விற் செலவு சுருங்கில் பொருள் ஒருகாலத்துங் குறை
து. "ஆற்றினளவறிந்தீவதுபொருள் - போற்றிவழங்கு
றி" என்பதனாலும், "வருவாயுட்கால்வழங்கி வாழ்தல்
மாட்சி நல்லவர்கோள்" என்பதனாலும், தனக்குள்ள
பொருளின் வரவையறிந்து அதற்கேற்ப வாழாதான் செல்
விரைவில் அழிந்து தரித்திரனாய்ப் பெருந்துன்பத்தையு
அவமரியாதையையு மடைவான் என்பதை "அளவறிந்து
தான்வாழ்க்கை-யுளபோல்வில்லாகித்தோன்றிவிடும்"
னாலும், "உளவளாதூக்காதவொப்புரவாண்மை-வள
ல்லைகெடும்" என்பதனாலும் தனக்குள்ள அளவுதூக்
றருக்குபகாரம் பண்ணுபவனது செல்வம் சுருக்கில்
என்பதனாலும் அறிக.—இலங்கைத்தினவர்த்தமானி.

வீட்டுப் பெண்கள் செய்யும் வேலைப்பாங்கு.

வீட்டுவேலைகளை யெல்லாம் பாங்காய்ச் செய்வது இல்லா
ளின்பொறுப்பாம். எவ்வளவுக்கெவ்வளவு நாகரிகமோ அவ்
வளவுக்கவ்வளவு சீர்திருத்தமுண்டாகும்.

மழைகாலமாயிருந்து, பாய் படுக்கைகள் நனைந்திருக்குமா
னால், கொதிக்கக் கொதிக்க வென்னீரை ஒரு கற்சாடியில்
வார்த்து நன்றாய் மூடியபின், நனைந்திருக்கும் தலையணை மெ
த்தை முதலியவற்றின்மேல் அதைச் சிறிதுநேரம் வைத்தி
ருந்தால் ஈரம் உலர்ந்துவிடும்.

ஈ மொய்த்தல் யார்க்கும் வெறுப்பாயிருக்கும். ஈயைப்பி
டிப்பதற்காகச் செய்யப்பட்டிருக்கிற கண்ணாடி யந்திரமில்
லாமலே அவற்றின் உபத்திரவத்தைத் தீர்த்துக்கொள்ளவே
ண்டுமானால், வாகை எண்ணெயைத் தடவினால் அது கிட்ட
வராது. கண்ணாடி, படங்கள் முதலியவற்றின் சட்டங்களி
ன்மேல் இந்த எண்ணெயைப்பூசிவைத்தால், அவற்றின்மே
ல் ஈ ஒருபொழுதும் உட்காராது.

பூமியில் வரிவண்டுகள் மொலேறொன்று மொய்த்துக்கொ
ண்டிருக்குமானால், ஒருபங்கு கார்பாலிக் என்னும் திராவக
த்தோடு பத்துமடங்கு தண்ணீரைக்கலந்து இரண்டொருத
ரம் நன்றாய்த் தெளித்துவிட்டால் அப்புறம் வண்டு கிட்ட
வாராது.

ஜாதிக்காய் நல்ல காயாய் வாங்கவேண்டுமானால், ஊசி
யால் குத்தினவுடனே தைலம் வெளியேவந்தால் அந்தக்கா
யைவாங்கலாம்; தைலமில்லாதகாய் நல்லதல்ல.

எலுமிச்சம்பழத்தை அதிகநாளைக்கு வைத்திருக்கவேண்
டுமானால், ஒருசாடியிலே தண்ணீரைவார்த்து அந்தப்பழத்
தை அதிலே வைத்திருந்து அன்றன்று காலைதோறும் புதிதா
கத் தண்ணீரைவிட்டு மாற்றிக்கொண்டே வரவேண்டும்.

விஞ்ஞானதீபம்.

தத்துவவிவேசினிப் பத்திராதிபதிக்கும்,
ஏனைய நண்பர்களுக்கும் வந்தனம்.

கேளுங்கள் விவேகிகளே!

இம்மதி 13உ வல்லிபுரம் நாராயணபிள்ளை, விஞ்ஞான
தீபத்தைச்சுட்டியும், அதற்குக் கவிசாத்தியவர்கள் கருத்தை
ச்சுட்டியும் சில வினாக்கள் வினவியிருக்கின்றார்.

இப்பிள்ளை வினாக்களுக்கு எம்மாலியன்ற விடைகளைப்
பகர்வாம்—

முதலாவது. வேதம் என்னும் சொல் 'வித்' என்னும் தா
துவடியாகப் பிறந்தமையால், ஞானம்எனப் பொருள்படுமே;
"அந்தம்" முடிவு எனப் பொருள்படும் ஆதலால், "வேதா
ந்தம்" என்பதின் திரண்டபொருள், ஞானத்தின்முடிபு என்
பதே. இதுவே அப்பதத்தின் நியதார்த்தம். இவ்வருத்தத்
தையே பொருளாகக்கொண்டு நற்கம்பர் கூறினர். இப்பெ
யரையே இந்து மகமதிய கிறீஸ்தவ சமயநூல்களுக்கு அவ்
வச்சமயாபிமானிகளால் போலியாய் வழங்கப்படுகின்றமை
யால், இப்பெயர் அந்நூல்களைக் குறிக்குமிடத்துப் போலியா
ய் பிரயோகார்த்தத்தில் வழங்கிவருகின்றது, இக்கருத்தைச்
கொண்டே அப்பாதுரைசெட்டியார் "வேதாகமப்புரட்டை
வெட்டவெளியாக்கி" என்றார். இங்கு பரஸ்பரவிரோதம் யாது?

II. இதில் காரணகாரிய சம்பந்த ஆற்றலை யுணராது வி
னாவிய பிள்ளை வினாவிற்கு விவேகிகள் நகைப்பார். வேட்டி
யைப்பற்றிப் பேசுமிடத்து நூலைத்தவிர வேட்டி யில்லையெ
ன்றும், நூலைப்பற்றிப் பேசுமிடத்துப் பஞ்சைத்தவிர நூலி
ல்லையென்றும் அவ்வவற்றிற்கு நியதமாய் முன்னிற்கும் கா
ரணத்தைக்கூறின், அது ஒன்றற்கொன்று விரோதமாகுமா?
இதுபோல 132 - ஆம் செய்யுளில காணப்படுபொருளைப்பற்
றிப் பேசுமிடத்து "காணப்பட்ட உருவமெல்லாம் பஞ்சபூ
தமே" யென்றும், 110-ஆம் செய்யுளில் பஞ்சபூதத்தைப்பற்
றிப்பேசுங்கால் "ஒன்றிலிருந்து பஞ்சபூதங்களுற்பவித்தன"
வென்றும் சொன்னதில் என்னவிரோதம்?

III. இது மூர்த்த பூதியத்திற்கு வேறும் வஸ்து இல்லை
யென்பதை வற்புறுத்துதலேயல்லாமல், பரஸ்பர விரோத
மன்றும்.

IV. பஞ்சபூதங்கள் ஒன்றோடொன்று கூட்டுறவால் சக
ல உருவங்களு முண்டாயினவென்றும், ஆதலால் பஞ்சபூத
த்திற்குப் பிரத்தியேகமான வேறு சிருட்டிகர் இல்லையென்
றும், ஆதலால் பிரத்தியேகமாகக் கூறப்பட்ட கடவுள் சிரு
ட்டிகர்அல்லவென்றும் சொன்னதில் யாது விரோதம்.

இங்ஙனம்.
மூர்த்திராயன்.

கடிதங்கள்.

தத்துவவிவேசினி! நின்னைவிட வையகத் தெமக்கிங்கார்?
கூறாய், கடைக்கண்ணுற் பாராய், எமதல்லலைத்தீராய், ம
னோகரநீதிகளால் இன்பந்தருந்தேனே! நடனமிடு மயிலே,
நல்லிசையுளக் குயிலே!

யாமிதுகாறும் நின்னைப் பிரதிவாரமும் தெரிசித்தும், நின்
னுடன் வார்த்தையாடாமலிருந்த குற்றம் எமதென் றெம்
மேல் நின் சினக்குரியைக் காட்டாதே, துன்பத்துண் மாட்
டாதே. அது நின் ஆண்டவராகிய ஸ்ரீமான் - முனிசுவாமி
நாயகரால் நேர்ந்த வியவகாரத்தொல்லையால் நின்னோடு
கூடிக்குலாவிப் பேசிச்சிரிக்கச் சந்தர்ப்பமில்லை; இக்காரண
மன்றி மற்றியாதுமில்லை. *

அம்மணி! என்னிருகண் அனையாய்! நின்னிடத்தோர் வி
ந்தையான சமாசாரஞ் சொல்வதற்கெனவே இவ்வார மெ
மக்குற்ற வியவகார வியாபாரத்தை யோர் பக்கலிருத்தி
யோடோடியும் வந்தோம். அஃதியாதெனின்—

நிகழுமாண்டு மேமாத மிடையிற்பொழிந்த மழையுடன்
கொள்ளேகாலத்தில் சுமார் ௪0-மைல் விஸ்தீரணத்திற்குக்
கோழிமுட்டையத்தனை பருமனுள்ள கன்மழை பெய்ததாம்.
இஃதன்றி யின்னுஞ் சிற்சில விடங்களிலும் இங்ஙனே பெ
ய்ததென்றும் பல பத்திரிகைகளா லறிந்தேம், நீயுமறிந்திரு
க்கலாமென்று முத்தேசிக்கின்றேம். கன்மழை பெய்வது
சஹஜமாயினும் யாம் கூறு மிதுபோன்றது அருமை. கன்
மழையென்று யாமியம்பிய வருஷத்தா லநேக வாயிரக்க
ணக்கான பட்சிகள் மாண்டனவாம். அவ்வாலங்கட்டிகள்
மேகத்தினின்றும் பூமியைநோக்கி வரும் வேகத்தா லடியு
ண்ட உருவிற்சிறிய பிராணிகள் ஜீவிப்பதருமையே.

அன்றியும் தட்சணதேயத்தில் இவ்வருடம் குடியினுலுயி
ர்துறந்தவர்களும் பலர் என்றுந் தெரியவந்த இவ்விஷயத்
தால் நம் சுயக்ஞானநேயர்கள் அகமகிழ வோர் சங்கையு
ண்டு. அஃதாவது—

இப்பூமியின்கண்ணே மனிதர் ஒருவரையொருவர் கொ
ன்றாலும் அல்லது மனிதர் இதர ஜீவன்களை ஹிம்ஸித்தாலு
ம் கொலைபாதகரெனத் தீர்க்கப்பட்டு இராஜதண்டனைக்குள்
ளாகா நிற்கின்றனர். அன்றியும் எவரேனும் எந்த ஜீவராஸி
யையாயினும் கொலைசெய்யக் காண்புழி காருண்ய மனமு
டையோர் ஐயோ! கொலைபாதகன் கொன்றுவிட்டானேயெ
ன்று சொல்லு மநுபவமிருக்க, மேற்கூறிய கன்மழையால்
ஆயிரக்கணக்கான பட்சிகள் முதலியன கொலையுண்டதற்
குக் கொலைபாதகன் யாவன்? அரசாங்கத்தார் கொலைக்குக்
கொலை வாங்குஞ் சட்டத்தை யேற்படுத்தியிருக்கவும், அங்
ஙனே நடந்துவருதலும் பிரத்தியட்சந்தானே, அதுபோல
மேற்படி பட்சிகளைக் கன்மழையாலும், மனிதர்களை யிடியி
னாலுங் கொன்ற கொலைபாதகனைப் பழிக்குப்பழி வாங்கவே
ண்டுமல்லவா? அவன் கொல்லவில்லை யென்பார்களேல்,
"அவனன்றியோரணுவுமசையாது" என்ற ஆன்றோர் வாக்
கியத்திற்கு விருத்தமுண்டாம். முன் வரியிற்கூறிய குரவர்
வாக்கியத்திற்குக் குறைவெய்தாமல் அக்கொலைபாதகனை
நீயேனும் நின் பத்தாவேனும் நியாயவாயிலாகப் புகல வே
ண்டாநிற்கும். கிருஷ்ணகிரி - உண்மைவிரும்பி.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

அரியோம்நமஃ.

தத்துவவிசாரணைக்காரருக்கோ ருத்தமதானம்.

தத்துவவிசாரணைக்காரரே!

ஒருதலைவனை இன்றிப் பஞ்சபூதங்கள் தனுகரணபுவன
போகங்களாகவே காரியப்பட்டனவென்று சாதிப்பது வி
சாரணை அன்று; அதுவே தாபனம்.

வேதாகமபுராணாதிகள் பொய்நூலென்று சாதிப்பது வி
சாரணை அன்று; அதுவே தாபனம்.

கடவுளொருவர் இருந்தாற் காட்டு, காட்டாவிடில் கடவு
ள் இல்லையென்று சாதிப்பது விசாரணை அன்று; அதுவே
தாபனம்.

விஷ்ணு ஆலயம், சிவாலயங்களிற் சென்று வணங்குதல்
அறியாமையென்று சாதிப்பது விசாரணை அன்று; அதுவே
தாபனம்.

வேதாகமபுராணாதிகளை உள்ளபடி வாசித்துணராதவர்
களிடத்திலே தத்துவங்களை விசாரிப்பது விசாரணை அன்று.

தத்துவவிசாரணைசெய்வது எப்படியென்னில், அகத்
ய்மை, புறத்தூய்மை இன்னதென்றறிந்து அன்னதின்
யே அகத்தூய்மை புறத்தூய்மைசெய்து, அதன்பின்
வேதாகமபுராணாதிகளின் ஞானகாண்டம், கிரியாகாண்
இன்னதென்றுணர்ந்தும், அக்காண்டங்களில் சொல்லப்
ட மந்திரகலை, தந்திரகலை, உபதேசகலை, உபாயசரிதை,
பாயகிரிகை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்
தை, உண்மைக்கிரிகை, உண்மையோகம், உண்மைஞான
இவைகளின் பேதத்தை அறிந்தவராயும், விதிவாதம் -
வாதம் - அர்த்தவாதம் ஆகிய இவைகளின் கருத்தை அ
தவராயும் உள்ள ஞானசாரியரிடத்திற்சென்று அவரை
னோவாக்கு காயங்களினால் வணங்கி தத்துவங்களை விச
க்கவேண்டும்.

உலகங்களை நோக்கும்போது, அவ்வுலகங்கள் காரிய
ட்டிருக்கின்றன. அவைகள் எவைகளினாலே காரியப்பட
தென்றறியுமிடத்துப் பஞ்சபூதங்களினாலே காரியப்பட்டி
க்கின்றன. இப்பஞ்சபூதங்கள் தானே காரியப்படுத்தி
னவோவெனில், அவைகள் சடமா இருத்தலால், அவை
தானே காரியப்படுத்தமாட்டா. பஞ்சபூதங்களாலே கா
ப்பட்ட தனுகரணபுவனபோகங்கள் தங்களிற் தாங்கள்
ரியப்பட்டனவோவெனில், அவைகளுக்குத் தற்சுதந்தர
ன்மையாற்றானே காரியப்படமாட்டா. ஆதலால் பஞ்சபூ
திகளினாலே தனுகரணபுவனபோகங்களை காரியப்படுத்
ற்கு ஓர் கருத்தா விருத்தல்வேண்டும்.

இஃது
இயாழ்ப்பாணத்து வல்லிபுரம்
சிதம்பரநாதபிள்ளை குமார
நாராயணபிள்ளை.

வர்த்தமானம்.

விந்தையானசமாதி—தென் கன்னட ஜில்லாவிலுள்ள
டுப்பியில் பிரபலமான கிருஷ்ணன் கோயிலைச்சேர்ந்த மட
களிலொன்றின் அதிபதியாகிய ஸ்வாமியாரொருவரை சம
திசெய்தபோது, அந்தப் பிரேதத்தைப் பூஜானுஷ்டான ஜ
ஞ்செய்கிற பாவனையாக உட்காத்தி, கையில் பூஜைசாம
களைக்கொடுத்து, மற்றச்சடங்குகளை முடித்து, எப்படிப்ப
ட மேன்மையான இந்துவும் சாஷ்டாங்கமாக விழுந்
ணிந்தபிறகு, தலைமண்டைமாத்திரந் தெரியும்படி புதைத்
விட்டு, மண்டையின்பேரில் ஒரு தேங்காயைவைத்து, ம
டையுந் தேங்காயுஞ் சிதையும்படி ஒரு பெருத்த சம்மட்
யைக்கொண்டு நோக்கியடித்து, பிளந்த மண்டையின்
யில் ஒரு சாளிக்கிராமத்தைத்துறுத்து அடக்கஞ்செய்தா
ளென்று ஒருவரெழுதியிருக்கிறார்.

நூறுபேர் ஜாதிகெட்டது.—பொம்பாய் ராச்சியத்தி
ஜாதிகெட்ட வேடிக்கையான சங்கதியொன்று நடந்திரு
கிறது. மாட்டுமாமிசபட்சண ஜாதியாகிய கங்காபாயி எ
னும் ஒரு ஸ்திரியை ஆட்டுமாமிசபட்சண ஜாதியானொரு
ன் விவாகஞ் செய்துகொள்ள இச்சைகொண்டான். இப்ப
ப்பட்ட விவாகம் இந்துவிவாக சம்பந்த விதிகளுக்கும்
ஸ்திரத்துக்கும் விரோதமானது. இது அந்த ஸ்திரீக்கு
தெரியுமாகையால், அவள் தன்னை விவாகஞ் செய்துகொ
ளப்போகிறவனுக்கு ஒற்றுமையான ஜாதிஸ்திரீயாக ஏ
வொரு தந்திரஞ்செய்து எண்பித்தாள். ஒரு பிராமணபு
கிதரால் விவாகம் நடத்தப்பட்டது. உறவினர் முதல்
அநேகர் விருந்துண்டார்கள். விவாகமுடிந்து கொஞ்ச
ஞ்சென்றது. சுமார் இரண்டுவாரத்திற்கு முன்னமே
ளைத் தாழ்ந்த ஜாதியளாகிய இன்னாளென்று அறிந்திரு
அவளுடைய வூரானாகிய வொருவன் அந்த சங்கதியை
ளியிட்டனன். அதைக் கேள்வியுற்ற அவளுடைய கண
அவளைப் போலீசார்வச மொப்பித்தான். அவளிப்பே
போலீசு பந்தோபஸ்திலிருக்கிறாள். அவள்பேரில் பிரி
நடத்துவதற்கு வேண்டிய பலஞ் செய்யப்படுகிறது.
யாணச்சாப்பாடுண்ட நூறுபேரையும் மறுபடி ஜாதியில்
ர்த்துக்கொள்ளப் போகிறார்களாம். ஒருபுளித் துளி பு
பால்கெட்டாலும், காயம்பட்டுப் பழம் கன்றிப்போனா
இப்படிப்பட்ட பிரத்தியட்சமான தோஷங்களை நிவர்த்
துப் பழயபடி நற்பாலாகவும் நற்பழமாகவுஞ் செய்வத
வகையில்லாவிட்டாலும், எந்த அறிவுக்கும் புலப்படா
திக்கேடு, கிரகணதோஷம், தீட்டுமுதலிய தோஷங்க
வாரணை செய்வதற்குமாத்திரம் மந்திரோபாய மேற்ப
ருப்பது சிலருக்குப் பிரயோசனகரமானதே. A.

---

* இங்கு வியவகாரத்தொல்லை என்றதால் எமக்கவர் பிரதி
கூலம் செய்தாரென்பதல்ல.

Printed and Published for the Proprietor
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MAAD

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியானபத்திரிகை.

VOL. V.—NO. 27.] MADRAS:—SUNDAY JULY, 4, 286 A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

The Mind according TO THE VEDANTIC PHILOSOPHY.

பொன்போல விலங்குமனம் சஞ்சலத்தால் குரங்காம்
புத்திவிசா ரித்தறியும் பொலிவதனுல் அரவாம்
தன்போல விலையெனலா லகங்கார மதமாத்
தனைநிகராஞ் சித்தமொரு தன்மையினுல் நாயாம்
மின்போலுஞ் சலனமனம் அசையாமல் நிறுத்தி
விசாரிக்கும் புத்தியினை மெய்ப்பொருட்பால் விடுத்து
வன்போடு வருமகங்கா ரத்தினையுங் கடிந்தால்
வைத்தவிடந் திருந்துசித்த மகத்துவமுந் தருமே.

என்பது உபநிடதவாக்கியம்.

இதன்பொருள்—சாம்பூநதமென்னப்பட்ட மாற்றுயர்ந்த பொன்னைப்போலும் களங்கரகிதமாய்ப் பிரகாசிக்கத்தக்க து மனமாகிய பொன்னும். இம்மனமாகிய பொன்னிற்கு இயற்கையாக வந்தெய்துகின்ற சஞ்சலத்தினுல் அது குரங்கைப்போல சதா சேட்டையுடையதாம். இங்ஙனம் சேட்டிக்கத்தக்க மனத்தின் திரிபாகிய புத்தியானது காரியங்களைப் பூராயமாய் விசாரித்தறியும் மேன்மையினுலே (சத்தத்தால் தன்னை அயலாருணராதபடி நகர்ந்துசெல்லும்) அரவமாம். அப்புத்தியின் திரிபாகிய அகங்காரமெனப்படுவது தானே தனக்குச் சமம் என்றெண்ணுகின்ற தன்மையால் (தனக்கு ஒப்புயர்விலையென்று இறுமாந்திருக்கும்) மதயானைபோல்வதாம். இவ்வகங்காரத்தினுல் பரிபாலிக்கப்பட்டவிடத்து இதன் சார்பாகவும், அப்புத்தியால் பரிபாலிக்கப்பட்டவிடத்து அதன் சார்பாகவும் செல்கின்ற அவற்றின் திரிபாகிய சித்தம் (தனக்குக் கஞ்சிவார்க்கும் எஜமானன் சார்பாகத்தொடர்ந்து செல்லும்) நாய்க்குச்சமானமாம். இப்படி இயற்கையால் வந்துறுஞ் சஞ்சலத்தால குரங்கைப்போல் சேட்டித்து மின்னலைப்போல் சலிக்கின்ற மனத்தை அசையவொட்டாமல் நிறுத்தி, விசாரிக்கும் இயல்பினையுடைய புத்தியைச் சத்தியத்தின்கண் நிறுத்தி, வலிமைகொண்டு உதிக்கின்ற அகங்காரத்தினையும் ஒழித்தால் சித்தமானது தன் பதாஸ்திதியி லிருந்து ஏகபாவனையாய் மகத்துவத்தைக் கொடுக்குமாம்.

இவ்வுபநிடதவாக்கியத்தால் மனமெனப்படுவதன் ஏகதேலக்ஷணத்தைப் பொன்னிற்கு உபமானித்துக் கூறுவதாகத் தரியவருகிறதேயல்லாமல், அதன் பூரண இலக்கணம் விளங்கிலது. மற்றப்படி புத்தி, அகங்காரம், சித்தம் எனப்படுவன அம்மனத்தின் திரிபேயெனக் கூறுகின்றமையால், மனம் இன்னதென்ப் பூரணமாய் விளங்காதவிடத்து அதன் திரிபுகளும் பூரணமாய் விளங்கா. ஆதலால் முன்னம் மனமென்பதின்னதென விசாரிக்கவேண்டிய தாவசியகம்.

"மெய்வாய்கண்மூக்குச் செவியானுண்பதுவிடயம்விடயவும், ஐவாயிலரவென வுற்றுணர்தன்மனோவிருத்தி.'

இதனுல் ஐந்துதலை நாகம்போல தனக்குள்ள ஐந்துபொறிகளாலும் விஷயங்களை உணரத்தக்கது மனோவிருத்தியான்றது. ஆகவே "விடையமறிந்திடும் பொறிகள்விடையமோ - மிக்கபொறியறிகரணம் பொறிகளாமோ" என்றனால் மனம் விஷயமல்லவென்றும், விஷயம் பொறிகளல்லவென்றும் ஆகின்றது. ஆயினும் "ஓதரியவஞ்ஞானந் தனைதனையறியா வுணர்விதற்சோ ருறுதிமூலமாதன் மனோவிருத்தி" என்பதனுல் "சொல்லுதற்கரிய அஞ்ஞானமெனப்படுவது தன்னைத் தானென அறியுந் தன்மையற்ற உணர்வேயென்றும், இவ்வுணர்வைத் தெளியவொட்டாது மருளின்கண் ஆழ்த்துதற்கு உறுதிமூலமாய் நிற்பது மனோவிருத்தியே யென்றும்" வெளியாகின்றமையால்; ஓரிடத்தில் விஷயத்தை அறிவது மனோவிருத்தியென்றும், மற்றோரிடத்தில் விஷயத்தை அறியவொட்டாமலிருத்தற்கு மனோவிருத்தியே காரணமென்றும் மாறுபடக்கூறும் இலக்கணம் பரஸ்பரவிரோதமா யிருக்கின்றமையால், இதனுல் மனோலக்ஷணம் எங்ஙனம் விளங்கும். மனோலக்ஷணம் விளங்காதவழி அதன் திரிபாகிய புத்தி, சித்தம், அகங்காராதிகள் எங்ஙனம் விளங்கும்? விளங்காதவிடத்து அவ்வவற்றை மேற்செய்யுளில் சொன்னபடி நிறுத்தற்கு எங்ஙனம் கூடும். அஞ்ஞானத்தை அஞ்ஞானமென உணரவொட்டாமல் செய்யும் விருத்தியையுடைய மனத்திற்குப் பொன்போலுங் களங்கரகிதமாகிய மனமெனப்பெயரோ?

இயற்கையறிவும், பகுத்தறிவும்.

ராபர்ட்டு கூப்பரவர்களுடைய
அபிப்பிராயத்தையனுசரித்து,
அமரம்பேடு
முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

ஆத்மாவைப்பற்றி நாம் முந்தி செய்திருக்கிற சகல ஆட்சேபங்களும் வியர்த்தமானவை யென்றும், மதஸ்தர் நினைத்திருக்கிறபடி மனிதனுடைய ஆத்மா சடமற்ற பதார்த்தமாயும், அழிவில்லாததாயு மிருக்கிறதென்பது யதார்த்தமென்றும், வாதத்தின்பொருட்டு ஒப்புக்கொள்வோம். அப்படியானுற்றுனென்ன? அதோடு மதஸ்தர்களுக்கு எல்லாச் சங்கடமும் நிவாரணமாய் விட்டதா? மனம், அறிவு, நினைப்பு முதலியவை ஆத்மாவென்று அவர்கள் வாதிக்கிற வாதத்தினுலே, ஐயோ! மிருகங்களுக்கும் ஏற்ற அளவாக மனோவியாபார மிருப்பதினுல் மனிதருக்கிருப்பதுபோல் அவற்றிற்கும் அழியாத பதார்த்தமொன்றிருக்கிறதாக ருசுவாகிறதே. இந்தப் பரமரகசியமான லட்சணம் மனிதனொருவனுக்கேயன்றி மற்றெதற்கு மில்லையென்பது முக்கியமான மதசித்தாந்தம். அந்த லட்சணம மனிதனுக்குண்டென்று மதஸ்தர்கள் சொல்வது ஒப்புக்கொள்ளத்தக்கதாயிருந்தால், வேறெதற்கு மில்லையென்று சொல்வது கூடாமை. மதமானது வழக்கப்படித் தன்னைத் தானே விரோதித்துக்கொள்ளுகிறது. பக்திக்காரர்கள் தங்கள் சித்தாந்தங்களுக்குச் சாதாரணமாய் நேர்விரோதங்கூறுவது யாவருக்குந் தெரிந்திருந்தாலும், அப்படிக் கூறுவது விந்தையா யிருக்கிறது.

மானது மனிதனுக்குள் அழியாப் பதார்த்தமாயிருக்கிறதென்று ஜனங்கள் கொள்ளுகிற கொள்கை சுத்தப் பேய்த்தனம்; ஏனெனில், நாய்கள் யானைகள் குதிரைகள் குரங்குகள் முதலிய மிருகங்கள் மறு உலகத்திற்போய் வாழுமென்கிற பேய்த்தனத்தைப்பார்க்கிலும் இழிவானது வேறுென்றிருக்கிறதா? அவை அவ்வுலகத்திலே எவ்வித பரங்களாயிருக்குமோ? விசாரணைகாலத்தில் அவை தங்களைப்பற்றிச் சொல்லும் விருத்தாந்தம் வெகு வேடிக்கையாயிருக்கும்; [தங்கள் தங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்குச் சில பல்லை இளிக்குமாக்கும், சில காதை யசைக்குமாக்கும், சில வாலையாட்டுமாக்கும்.] கனவுகாணுகிறவர்களில் முதன்மையாகிய செய்ண்டுஜான் என்பவர் - பரமண்டலத்திலே அரைமணிநேரம் நிசப்தமுண்டாயிருந்தது, அது தேவானுக்கிரகமென்றே யெண்ணப்பட்டதென்றுர்; மிருகபரங்களுங் கூடிக்கொண்டு செய்கிற தேவாத்திய கோஷத்தை நாம் இடை

விடாது சிரவணித்துக்கொண்டிருக்கவேண்டியதாமாகில், அவ்வளவாவது அமரிக்கை கிடைத்தது விசேஷமென்றே யானும் நினைக்கவேண்டும்! ஆயினும், நமக்கில்லாத பிரயோசனமொன்று மிருகங்களுக்குண்டாயிருக்கிறது, அவற்றிற்குள் எல்லாப் போராட்டங்களிலும் தீராத போராட்டமாகிய மதப்போராட்ட முண்டாயிருப்பதாக நாம் கேள்விப்படவில்லை. அத்வைத நாயாவது, துவைதக் குதிரையாவது, விசிஷ்டாத்துவைதக் கழுதையாவது, ஆதிசைவப் பூனையாவது, வீரசைவக் குரங்காவது, வடகலை வைஷ்ணவக் கோநாயாவது, தென்கலை வைஷ்ணவ வேசரியாவது, ஸ்மார்த்தமத எருமையாவது, கிருஸ்தவப் புலியாவது, மகமதிய யானையாவது நாம் காணாததென்னை? நான் சொல்லுவதற்கு நீங்கள் சிரிக்கலாம், ஆனால் ஆத்மாவைப்பற்றி மதஸ்தர்கள் கொள்ளுகிற கருத்து சரியானதாகில், நித்தியமானதென்று சொல்லப்பட்ட அந்த லக்ஷணம் மிருகங்களுக்கும் ஏற்ற அளவாயிருக்கிறபடியால், நான் கொள்ளுகிற கருத்து முற்றும் நியாயத்திற்கு விரோதமன்று.

மிருகங்களும் மனிதர்களைப்போலவே அனுபவத்தினால் அநேக காரியங்களை யறிந்துகொண்டு, இன்னின்ன காரணத்தினால் இன்னின்ன காரிய முண்டாகிறதாய்க் கிரகிக்கிறதென்பது பிரத்தியட்சமாய்க் காணப்படுகிறதென்று டேவிட்ஹியூ மென்பவர் வெகு நேர்மையாய்ச் சொல்லியிருக்கிறார். இது பகுத்தறியும் அறிவேயல்லாமல் வேறென்ன? பேர்போன சரிதாசிரியரும், தத்துவக்கியானியுமாகிய அவர் - 'இந்த யறிவினாலேயல்லவா, புலப்படும் பொருள்களின் குணகுணங்களை அவை தெளிவா யறிந்துகொள்ளுகின்றன; தீ, நீர், மண், கல், உயரம், ஆழம் முதலியவற்றின் தன்மையையும், அவற்றின் தொழிலாலுண்டாகும் பலன்களையும் பிறந்ததுமுதல் நாளுக்குநாள் தெரிந்துகொண்டு ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுகின்றன; தங்களுக்குக் கெடுதிசெய்வதை விலக்கவும், சுகத்தையும் இன்பத்தையுந் தருவதை யனுசரிக்கவும் நெடுநாளைய கவனத்தினால் அறிந்துகொண்டிருக்கிற வயது சென்ற மிருகங்கள் தந்திரமாயுங் கூர்மையாயும் பிரவர்த்திப்பதினாலும், குட்டிகள் அனுபவமில்லாமையால் மூடத்தனமாய்ப் பிரவர்த்திப்பதினாலுமே பரிஷ்காரமாய் வித்தியாசந் தெரிந்துகொள்ளப்படுகிறது. யுத்தகளத்தில் பழகிய குதிரை தன் வேகத்திற்கும் சக்திக்குமிஞ்சின காரியத்தைச்செய்ய எத்தனப்படாது. கிழவேட்டை நாயானது வேட்டையில் மிகவுங் கஷ்டமான வேலையை வயசுநாய்க்கு விட்டுவிட்டு, முயல் திரும்பி வரும்போது பிடித்துக்கொள்ளக் காத்திருக்கிறது. இந்தச் சூட்சமபுத்தி ஆராய்ச்சியினாலும் அனுபவத்தினாலு முண்டாயிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார். இது விவேகத்தைக் காட்டுகிறதேயல்லாமல் வேறென்ன? அப்படிப்பட்ட காரியம் மனிதன் செய்வானாகில் விவேகத்தினால் செய்யப்பட்டதென்பார்கள்; மிருகத்திற்கேன் அப்படிச் சொல்லக்கூடாது? மிருகங்களின் உணர்ச்சியானது வெளிப்புறத்துக் குறிகளினால் மனிதர்களுக்கு எவ்வாறு இந்திரிய உணர்ச்சி யுண்டாகிறதோ அவ்வாறே யுண்டாகிறதென்று நாம் நம்புகிறோமென்றும், அவற்றிற்கு ஞாபகமுந் தோற்றமுஞ் சிந்தையு முண்டாயிருப்பது வெகுவாய் ருசுவாயிருக்கிறதென்றும், புத்தியில் பதிகிற எண்ணங்களைக்குறித்து அவை ஆராய்ச்சி செய்கின்றனவென்றும் அவற்றின் பல செய்கைகளால் தெரியவருகிறதென்றும், சர் சி. மார்கன் என்பவர் விசேஷமாய்ச் சொல்லியிருக்கிறார். திமிங்கலமுதல் ஒரு அங்குலத்தில் மூந்நூறு நானூறு பங்குகளி லொருபங்களவுள்ள அற்பஜந்து ஈறாகச் சகல ஜீவராசிகளுக்கும் இஷ்டங்கொள்ளுதலும் நினைத்தலும் தானென்கிற உணர்ச்சியும் தனதென்கிற உணர்ச்சியு மிருக்கிறதென்றும், நினைப்பதற்கும், இஷ்டங்கொள்ளுதற்கும், தான் - தனது என்று உணர்தற்கும் ஒரு ஆவி வேண்டியிருக்குமாகில், கண்ணாடிக்கருவியினால் பார்க்கக்கூடியதாகமாத்திர மிருக்கிற ஒவ்வொரு அற்பஜந்துவுக்கும் ஆன்மா இருக்[illegible]டுமென்றும், எல்லியட்ஸன் மகானுபாவர் சொல்[illegible]றார். லாக் என்பவரும் சகல தாழ்வான ஜந்துக்களுக்கும் நினைக்குஞ் சக்தி யுண்டென்று ஒப்புக்கொள்ளுகிறார். அநேக பிராணிகளுக்கு அறிவு உண்டென்றும் விசேஷமாய் யானைக்குங் குதிரைக்கு முளதென்றும் (ஆங்கிலேய) பூர்வீகாள் சொல்லியிருக்கிறார்கள். ஜீவராசிகளைப்பற்றி கிரந்தமெழுதிய பிளினி என்பவர் எறும்புகள் பெருந்தானிய மணிகளைத் தங்கள் தோளால் தள்ளிக்கொண்டு போவதில் அவற்றிற்கிருக்கிற சூட்சுமபுத்தியை விவரித்துச் சொன்னபிறகு, அந்தச் செய்கையிலேயே அவற்றிற்குப் பகுத்தறிவும் ஞாபகமும் ஜாக்கிரதையு மிருப்பதாக வெளியாகிறதென்று சொல்லியிருக்கிறார்.

ஆயினும், மதஸ்தர்கள் சிலர் இது மனதல்லவென்றும், இந்த மேலான லட்சணம் மனிதனுக்குமாத்திரம் அளிக்கப்பட்டிருக்கிறதென்றும், தாழ்வான பிராணிகள் இயற்கையறிவினால்மாத்திரம் பிரவர்த்திக்கிறதென்றும் சாதிக்கிறார்கள்; இது உண்மையல்ல. தடுமாற்றத்தினின்றும் ஓர் சார்படைவதற்கு மதஸ்தர்கள் துணிபாய்க்கொண்ட கருத்தேயல்லாமல் வேறல்ல. இயற்கையறிவென்பதைச் சரியாய் வகுத்துப்பார்க்கும்போது, பகுத்தறிவைப்போல மனோவியாபாரமேயாகும்; ஒன்றுக்குமேல் மற்றொன்று பின்னும் விளக்கமாயிருப்பதுதான் வித்தியாசம். ஆதலால், ஜந்துக்கள் இயற்கையறிவினால்மாத்திரம் பிரவர்த்திக்கிறதாயிருந்தாலும், சடமற்ற பதார்த்த லட்சணமும் அவற்றிற்கிருக்கவேண்டுமென்பது திண்ணம். இயற்கையறிவென்பது மனோவியாபாரத்தோடுங் கூடியிருக்கிறதென்று காட்டுவது எவ்வளவேனும் கஷ்டமல்ல. அது தத்துவசாஸ்திரத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சித்தாந்தம். சுகம் துக்க முதலிய சகல பொறிபுலனுணர்ச்சியும் மனதென்று சாதாரணமாயச் சொல்லப்பட்ட தலைமூளையிலிருக்கிறதென்று மதஸ்தர்களும் ஒப்புக்கொண்டிருக்கிற சித்தாந்தமே. இயற்கையறிவினாலாகிய காரியம் உணர்ச்சியைத் தெரிவிக்கவில்லையா? அக்காலத்திலே அந்த ஜந்துவின் மனச்சலனத்தில் அது உண்டாகவில்லையா, அந்தக்காரியம் நடக்கையில் சுகமாவது துக்கமாவது உணரப்படவில்லையா? அன்பு, தைரியம், விசுவாசம், கோபம், பயம், பொறுமை, தந்திரம் முதலிய குணங்கள் மனிதருக்கிருப்பதுபோலவே மற்ற ஜந்துக்களுக்கு மிருக்கின்றன. மனிதனிடத்துள்ள இந்தக் குணங்களை மனதின் தொழிலேயல்லாமல் வேறொன்றின் தொழிலென்று ஒருவரும் நினையார்கள். மிருகத்திற்கேன் அப்படி கூடாது?

மனிதருடைய சகல செய்கைகளும் பகுத்தறிவிலிருந்தே யுண்டாகின்றனவென்பது சரியல்லாததுபோல மிருகங்களின் சகல செய்கைகளும் இயற்கையறிவிலிருந்தே யுண்டாகின்றனவென்பதுஞ் சரியல்ல. மனிதனானவன் சில செய்கைகளை இயற்கையறிவைக்கொண்டு இயற்றுகிறான், மற்றவைகளைப் பகுத்தறிவைக்கொண்டு இயற்றுகிறான். மற்றப் பிராணிகளும் அப்படியே. இயற்கையறிவாலாகிய செயலென்பது யாது? ஆராய்ச்சியினாலாவது அனுபவத்தினாலாவ துண்டாகாமல், பிரயோகிக்கப்பட்ட உபகரணங்களும் சித்தியாகவேண்டிய காரியமும் ஆதிமுதல் பூர்த்தியாயமைந்திருக்கிற விஷயமென்று பொருளுரைக்கப்பட்டிருக்கிறது. குழந்தையும் மிருகக்குட்டியும முலைப்பாலுண்ணுதல் இயற்கையறிவினாலாய செய்கை. டாக்டர் டேவியென்பர் சிம்ஹளத்வீபதைப்பற்றி யெழுதிய விருத்தாந்தத்திலே ஒருமுதலையினிடத்தில் இயற்கையறிவினாலாகிய ஒரு விந்தையான காரியத்தைக் கண்டெழுதியிருக்கிறார். அவர் மணலிலே விரி[illegible]யும்படியான தருணமாயிருக்கிற ஒரு முட்டையைக்கண்டு அதைத் தன் கைக்கோலால் உடைத்தார். உள்ளிருந்த ஜந்து வெளிப்பட்டு உடனே ஆற்றிற்போய் மறைந்துவிட்டது. ஈயைப்பிடித்துத் தின்னும் ஓர்பட்சி முட்டையிலிருந்து வெ[illegible]ளிப்பட்டவுடனே, வெகுகாலம் பாடுபட்டுக் கற்றுக்கொ[illegible]டாற்போல அவ்வளவு பூர்த்தியாய் லக்குவைத்துப் பாய்[illegible]து ஒரு ஈயைக்குறிப் பிடிக்கக் காணப்பட்டது. ஆதிமுதல் பூர்த்தியாயும் ஜந்துக்கு வயது செல்லச்செல்ல விர்த்தியா[illegible]மாட்டாததாயுமிருக்கிற இப்படிப்பட்டவை தாம் இயற்கையறிவோடுங்கூடிய காரியங்கள், பகுத்தறிவோடுங்கூடி[illegible] காரியங்களோ, கவனத்தினாலும் அனுபவத்தினாலுமுண்டாகி விர்த்திசெய்யப்படத்தக்கவையா யிருக்கின்றன.

ஆதலால், கவனத்தினாலும் அனுபவத்தினாலும் பிரத்தியட்சமாயுண்டாவதாயும், ஜந்துக்கு அனுபவ முதிரமுதிர விர்த்தியடையத்தக்கதாயுமிருக்கிற காரியங்களைத் தாழ்ந்த [illegible]துக்கள் செய்துவருகின்றனவென்று நான் காட்டக்கூ[illegible]தாயிருந்தால், ஏற்ற அளவாக அவற்றிற்குப் பகுத்தறிவுண்டென்று ருசுவாகிறது; ஆகவே, மதஸ்தர்களுடைய சித்[illegible]ந்தப்படி சடமற்றதும் நித்தியமுமாகிய ஆன்மா அவற்[illegible]கு மிருக்கவேண்டியதே. (இன்னும்வரும்.)

[illegible]லைவ.

யோகி கற்பகோடிகால மிருப்பானென்றும், இறைவன் [illegible] ஈஸ்வரனொருவனிப்பதுபோலும், அவனை நோக்கிப் பூசை[illegible] தலிய தவங்களைச்செய்து மனுடரனேககால மிருக்[illegible]ளென்றும், இன்னும் மந்திரமுதலிய வாதாஞ்சன குளிகை[illegible]ளுண்டென்றும், சித்தர்கள் முதலாகிய முனிவர்களாயுள்[illegible]பேர்களுக்கு அதரணமான செயலுண்டென்றும் பொய்ய[illegible]ன நூல்களை மனதாரச்செய்தார்களோ அல்லது தெரிய[illegible]மையால் செய்தார்களோ தெரியவில்லை. இவ்வாறு செய்[illegible] தாங்கள் கெட்டதுமல்லாமல் பின்னுள்ளபேர்களையுங் கெ[illegible]ம்படி அநேக நூல்களைச் செய்துவைத்தபடியால், அந்நூ[illegible]களை மனுக்கள் நம்பி கெடுகின்ற கேட்டை அளவிடப்போகா[illegible]து, ஆயினும் எனக்குத் தெரிந்தமட்டிலுஞ் சொல்லுகிறேன்.

உ-வது. முன்னுள்ளபேர்களைப்பார்க்கிலும் இப்போதுள்ளபேர்கள் அறிவில் குறைந்தவர்களல்ல, முற்காலத்தில் சித்தர்கள் அனேக அற்புதங்களைச் செய்தார்களென்று சொல்லுங் கட்டுப்பாடான சுருதிகளின்பேரில் இக்காலத்துள்ள சில பேதைச்சனங்கள் புத்திமான்கள் சொல்லைமறுத்து முந்நூலின்பேரில் நம்பிக்கைவைத்து மயங்கி தங்கள் வாழ்நாளை வீணில்கழிக்கின்றனர். அந்நூலால் ஓரணுவளவாகினுமிப்பூமியின்கண் யாரும் நிசங்கண்டதில்லை. விவேகிகள் அந்நூலைக் கவனமாகப் பார்ப்பார்களாகில், சித்தர் முதலான தேவர்களுக்கு மிதுவனாயில் பெருமையிராதென்பது எனக்கு நிச்சயம்.

ங-வது. மனுடராகப் பிறந்தபேர்கள் தம்மறிவா லுடலை மாற்றி வேறே உடலெடுக்கவும், அவர்களெண்ணம்போல நீடித்த காலமிருக்கவு முடியாது. அது எப்படியென்றால், நமது பால்யகாலமுதல் குடும்பத்திலாவது அல்லது தனித்திருந்தாவது வாசியினிடத்தும் பழக்கம் வைத்தாவது பஞ்சபூதியங்களையும், அவற்றுட்பிரிவாகிய சத்துக்களினியற்கைக் குணங்களையும் பகுத்தறிந்து மனந் திடப்படுவதற்கு விவேகிக்கு நெடுநாள் செல்லும்படி அனுபவத்திலிருப்பவர்கள் கோடிபேரானால் அதிலொருவன் தேறுவான். அப்படித் தேர்ந்தவனையும் நரை திரை நோய் மூப்பு விடாது.

ச-வது. யோகி ஞானி குடும்பி இம்மூவகைப்பட்டபேர்களுக்கும் சமமாக வருகின்ற தீங்கைச் சொல்லுகிறேன். மனிதர்கள் புசிக்கின்ற ஒவ்வொரு வஸ்துகக்ளிலும் நலந் தீங்கான சத்துக்கள் கலந்து நிற்கின்றபடியால், அவற்றில் உடலை வளர்ப்பிக்குஞ் சத்துவானது உடலுள் கலந்து ஒவ்வொரு கருவியையு மொவ்வொன்று சார்ந்து உடலை யுண்டாக்குகின்றது. இவற்றுள் கெட்ட சத்துக்கள் தேகத்துள் மறைந்து நின்று முதிர்ந்து நோயாகும். அப்படி அவ்வுடலுள் எத்தனை கெட்ட சத்துக்கள் நிற்கின்றனவோ அதுபோலிப்பரவெளியில் நிறைந்துநிற்கின்ற பல சத்துக்களடங்கிய காத்துகள் இப்பரவெளியில் நின்று ஒவ்வொருகால மொவ்வொன்றுதித்து இவர்கள் தேகத்திற்படுமாகில், அப்போது இவர்கள் தேகத்தில் அம்மாதிரியாகிய காத்து விசும்பித்து ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு இவர்களுக்கு அம்மையோ காச்சலோ பேதியோ கண்வலியோ இப்படி இன்னம் பலவிதமான நோய்களெதுவோ அது வெளியாகி தேகத்தை வருத்தப்படுத்தி சிலநாளிருந்து மும்மலாதிகள் கழிவதுபோல அன்னோய் கழிந்துபோம், அல்லது கொல்லும். இவ்வகைப்பட்ட நோயாகிய சத்து தன்னுள் சேராதிருக்கும்படி செய்யமுடியாது.

ரு-வது. இந்தப்பூமி தோன்றியகா லின்றுவரை யோகியென்று பேர்பெற்றவர்கள் சாகாமல் நிலைபெற்றிருந்தால் இப்பூமி அவர்களுக்கே இடம்போதாது, சுருதிகளை நம்பி யோகி கர்ப்பகோடிகால மிருப்பானென்று பஞ்சபூதத்தில் அநுபவமில்லாத பேதைச்சனங்கள் சொல்லுமேயல்லாது [illegible]திலு மனுபவித்தவர்கள் சொல்லமாட்டார்கள். ஆனால் [illegible]ன் யோகமில்லையென்று சொல்லவில்லை, யோகி என்பவர்கள் கோடிபேர்களானால் அதிலொருவன் தேறுவான். அப்[illegible]த் தேர்ந்தாலு முன்னூருவருஷத்துக்குமே லவன் சரீர[illegible]து, அவர்கள் இவ்வளவுகால மிருந்தாலும் அவர்களுக் அதரணமாகிய செயலொன்றுங் கிடையாது.

சா-வது. பிரம்மமென்று சொல்லப்பட்ட நிர்ம்மலவெளி[illegible]ல் சலமானது உடலாயும், அக்கினியானது உயிராயு மிவ்விரண்டு முடலுமுயிருமாயும் பரம அணுவாயும் பரவெளி[illegible]ல்லா மொரு பாத்திரம்போலும், அப்பாத்திரத்தில் ஜல நிறைந்திருப்பதுபோலும் இடைவிடாமல் எங்குந் தானாய் [illegible]மயமாய் நிறைந்துநிற்கின்ற இவ்விரண்டில் சலத்தினி[illegible]த்தில் அக்கினியென்னும் அப்பும், அக்கினியிடத்தில் வாயுமிருக்கின்றபடியால், இந்நான்கில் பெரிதாகிய அக்கினி[illegible]ளியோடு நான்கையு மியல்பா யிழுத்து அங்கங்கு வுறை[illegible] கடல் திடல் சூரிய சந்திர நட்சத்திரங்களாக வுருப்ப[illegible]டெழுந்தபின் இவைகளி லனந்த பேதவுருவங்கள் சனித்[illegible]ன்றுமந்த அக்கினியால் தளர்ந்து உடைபட்டு அழிந்து [illegible]ல் கலந்துபோகின்றது. இப்படி இயல்பாயுதித்து [illegible]ன்ற பஞ்சபூதாதிகளின் இயற்கைகளை மனிதர்கள் [illegible]தயமென்னும் விளக்கைத்தூண்டி அவ்வெளிச்சத்[illegible]ராமல் வேதமுதலிய பல சாஸ்திரமென்னு மந்த[illegible]ன இருட்டில் புகுந்து தட்டுண்டு அலையு மதவாதிகள் [illegible]சபூதாதிகளி னியற்கையாகிய சத்துக்களையு மவற்றின் [illegible]பிரிவாகிய குணங்களையும் பகுத்தறிவார்களாகில் அவர்[illegible]க்கு அஞ்ஞானமென்பதிராது.

[illegible]-வது. எந்த சீவர்களுக்குந் தன் தாயார் கெர்ப்பத்தில் [illegible]ந்தபோது பிதாவின் தேகத்தில் அப்போதிருந்த பூதபே[illegible]பால வரும் நலந் தீங்குகளிலொன்றாகிய ஆத்மவிசார அல்லது வஸ்துவின் நிச்சய மிவற்றை யரியும்படியாய் [illegible]ற்சித்தவர்களி லவரவர் விவேகத்துக்குத்தக்கபடி தேகத்தையாவது அல்லது வஸ்துநிச்சயத்தையாவது அறியக்கூடும். அப்படி அறிந்தால் அப்படி அறிந்த யோகிமாத்திரம் தன் தேகத்தை சிலகால மதிகமாக வைத்துக்கொள்ளக்கூடுமேயல்லது அவர்களுக்கு ஓரணுவை அசைக்கும்படியான செயலொன்றுமிராது. திருசிய வஸ்துக்கள் யாவும் எதில் நின்றுவந்ததோ அந்த ஆதாரமான பொருளுக்கே நானென்னுந் தன்மையில்லை, அறிவில்லை, ரூபமில்லை, நிறமில்லை, முன்னில்லை, பின்னில்லையென்று மழியாததாய் எங்குந்தானாய் நான்குசத்து நிறைந்துள்ள இந்தப்பரவெளியையே பிரம்மமென்னப்படும். இந்தப் பிரம்மத்தினிடத்தில் எது யில்லையோ, அது அந்தப்பிரம்மத்தினாலுண்டாகிய பொருளினிடத்து எப்படி வரும்.

முத்துசாமிமுனிவர்.

ஆலயங்களில்தாசிகள்.

சிவாலய விஷ்ணுவாலயங்களில் நெடுங்காலமாய் தாசிகளிருந்துவருகின்றார்கள் என்பதுண்மையே, சுவாமிக்குப் பலவித உபசாரங்கள் புரிந்துவருவதோடு கணிகைமாதரைக்கொண்டு நாட்டிய உபசாரஞ்செய்யும்படி சாஸ்திரங்கள் பகர்கின்றதும் நூதனமே. அங்ஙனமே நாளதுவரையில் இயற்றி வருகின்றார்கள். ஷ தாசிகள் ஆலயங்களில் வேண்டிய பணிவிடைகள் புரிந்து அங்கு தரும் சாதத்தை வாங்கிச் சாப்பிட்டு யாதொரு கெட்ட நடத்தைகளில்லாமல் முன்பு நடந்துவந்தார்களாம். இப்போதோ அதுசுத்தமாய் மாறிவிட்டது. பற்பல ஜாதிப்புருஷரோடு சேர்ந்து வாலிபர் புத்தியைக் கெடுத்துப் பிதுரார்ஜ்ஜித ஸ்வயார்ஜ்ஜித திரவியங்களை நாசம்செய்து அரையாப்பு, கொறுக்கு, வெள்ளை முதலிய துர்வியாதிகளைத்தரும் வேசித்தொழில் செய்வதற்கே முற்றும் வெளிவந்த மாதரையே முத்திரை போடுகிறார்கள். அவர்கள் வாலிபரை மயக்கும்வண்ணம் ஆடையாபரணங்கள் தரித்து மேனிமினுக்கிச் சுவாமிதரிசனஞ் செய்வதுபோல் வரும் புருஷரை அங்ஙனம் செய்யவொட்டாமற் கெடுத்து மாயவலைவீசித் தங்களைத் தேடிவந்து தங்களோடு புணர்ந்து அவர்கள் மாதா, பிதா, மனைவி, மக்களைத்துறந்து தங்கள் திருவடியே கதியென்று அடைந்து பலவித துற்செய்கைகளைச்செய்து இகபோக சுகங்களை யிழந்துபோகச் செய்கிறார்கள். இதுயாவரும் அறிந்த விஷயமே. இவ்வளவு கெடுதியுள்ள அம்மாதரை ஆலயங்களில் இக்காலத்திற் சேர்க்காமலிருப்பது [illegible]மென்று கல்விமான்கள் யாவருமே ஒப்புக்கொள்ளகிறார்கள். எதற்[illegible]க ஆலய[illegible]பட்டனவோ அதற்கு நேர்விரோதமான துன்மார்க்[illegible]ற்கு ஷ தாசிகளிடந்தருவதால் அவர்களைப் பரிஷ்காரமாய் ஆலயங்களிலிருந்து நீக்கிவிடுவது எவ்வளவோ புண்ணியமான காரியம். இதைக்குறித்து எந்த தர்மகர்த்தரும் யோசிப்பதில்லை. திருவாவடுதுறை, தருமபுரம் முதலிய மடத்தார்க்குள் வெகு ஆலயங்களிருக்கின்றன. ஆதலாலும் அவர்கள் விசேஷமாய்ச் சாஸ்திரவாராய்ச்சி செய்தவர்களானதாலும், அவர்கள் தங்களுக்குட்பட்ட ஆலயங்களில் முன்பு தாசிகளை விலக்கிவிடுவார்களானால், அவ்வாறே மற்றவர்களும் விலக்குவார்கள். தாசிகளிருந்த ஆலயங்களிருப்பதைக்காட்டிலும் அவ்வாலயங்களில்லாமலிருப்பதே மேலென்று யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

தாசிகளைக் கோவிலுக்கு முத்திரைபோடுவது அடிமையாக்கிக்கொள்வதே, சட்டப்படி கரு-வயதில் முத்திரை போடவேண்டும். சாஸ்திரத்தில் ருதுவாவதற்கு முன்பே முத்திரைபோடச் சொல்லுகிறது. கச, கரு, கஅ, உ0-வயதுள்ள தாசிகள் அனேகர் ஆலயங்களில் இப்போது இருக்கிறார்கள். இவர்கள் ருதுவாவதற்கு முன்பே முத்திரைபோட்டிருக்க வேண்டும். கஉ, கச-வயதில் ருதுவாகிறது வழக்கம். இவர்கள் கஉ, கச-வயதிற்குள் அதாவது அ, ௯, க0-வயதிலேயே ஆலயங்களுக்கு அடிமையாய் முத்திரை போடப்பட்டிருக்கவேண்டும்.—இலங்கைத்தினவர்த்தமானி.

ஆனந்தக்களிப்பு.

ம - ா - ா - ஸ்ரீ

தத்துவவிவேசினி ஐய - பின்கவி
சந்தேகந்தீர்த்தரு ளென்போல்வாருய்ய (தத்துவ)

அஃதிஃது.

எத்தனைமநுக்கள் பிறந்து - இங்கேன்
இல்லாமல்எல்லாரும் போனார் இறந்து
அத்தையுன்னாது மறந்து - யாவரும்
ஆளாகின்றாமதற் கறைவீர் திறந்து (தத்துவ)

இங்ஙனம், சி. அ.

கடிதம்.

நாராயணபிள்ளைக்கோர் பூராயகேள்வி.

நாராயணபிள்ளையவர்களே!

கணபதியார்? துணை யாருக்கு? அதன்மேற்சுழியேன்?

திருச்சிற்றம்பலம். அரியோம்நமஃ. என்றெழுதவேண்டிய ஆவசியகமென்னை?

தட்டுந் தொழிலுடைய ஒருவனை நோக்கி நீயாரென மற்றவன் கேட்ப, அதற்கவன் "நான் தட்டானெனச்சொல்ல" சிச்சி நீ தட்டானல்ல நகை செய்கின்றமையால், நகை செய்வோனேயென்று சொல்லும் புத்திசாலிக்கொப்பாக நாங்கள் செய்வது விசாரணையன்று தாபனமேயெனச் சாதிக்க வந்த உமது புத்திசாதுரியத்தை யிப்பத்திரிகையைப் படிப்பவர்கள் மெச்சுவார்கள்! மெச்சுவார்கள்!!

"வேதாகமபுராணாதிகளை உள்ளபடி வாசித்துணராதவர் களிடத்திலே தத்துவங்களை விசாரிப்பது விசாரணை அன்று" என்ற பிள்ளையவர்களே! அவ்வேதாகமாதிகளை, நீரோனும் அங்ஙனம் வாசித்துணர்ந்திருப்பீரேல், பஞ்சபூதங்களும் ஒரு தலைவனாலேயே தனுகரணபுவனபோகங்களாகக் காரியப் பட்டுள்ளனவென்று சாதிக்க வெளிவாரும் பார்ப்போம்.

"உலகங்களை நோக்கும்போது அவ்வுலகங்கள் காரியப்பட்டிருக்கின்றன" என்கின்றீரே, அவை காரியமென்பதற்கு என்ன ஆதாரம்? எப்படித்தெரியும்? பஞ்சபூதங்களைக் காரியமென்பதற்கு என்ன ஆதாரக்குறைவு இருக்கிறது? சடமாவதென்ன? பூதங்களைச் சடமென்பதற்கும், அவற்றிற்குத் தானுயியங்குஞ் சத்தியில்லை யென்பதற்கும் என்ன ஆதாரம்? பூததத்துவ சாத்திரப்பயிற்சியுண்டோ? சடத்திற்கு வெதிரேகமாக யாதானும் பொருளுண்டோ?

A. M. N.

எருமைப்பலி.

கோயமுத்தூர் காட்டுப்பிரதேசங்களில் வசிக்கும் (டோடஸ்) என்னும் ஒரு மிலேச்சஜாதியார் இறந்தவர்களுக்குச் செய்யும் உத்தரக்கிரியை வெகு குரூரம். சராசரி ௨௦-ரூபாய் பெறுமான கிடாக்களில் ௨௦, ௩௦-எருமை கடாக்களை பலிகொடுத்து வருகிறார்கள். சொத்தும் அதிகமா யழிந்து போகிறது. அவர்கள் செய்யும் கிருத்தியமும், கொடுமையும், ஒழுங்கீனமுமாயிருக்கிறது. அவ்வெருமைக்கடாக்களைக் கொன்றுவிட்டாலும் அத்துடன் தொந்திரவில்லாமல் செத்துப்போய்விடும். அப்படிச்செய்வது வழக்கமில்லையாம். தடிகொண்டு கண்டமட்டில் புடைத்து குற்றுயிராய் விட்டு விடுகிறதாம். அது மரணவலியெடுத்து அதிக அவஸ்தைப்பட்டு உயிர் துறக்கின்றதாம். ஐயோ! ஜீவவதை வீண்போகாது, கொடுமை! கொடுமை! இவ்வழக்கத்தை யடியோடே யொழித்துவிட வேண்டுமென்று கலெக்டர் கவரன்மென்டாருடைய உத்தரவின்பேரில் நோட்டீசு பிறப்பித்திருக்கிறார். மெஸ்தர் தாப்ஸ் அவர்கள் டோடாஸ் என்பவர்கள் ௨-எருமைக்கடாக்களைப் பலியிடுவதாக ஒத்துக்கொண்டதாய் ரிபோர்ட்செய்தார். இனி டோடாஸ் என்பவர்கள், இரண்டு கடாக்கள்தான் பலிகொடுக்கவேண்டுமென்றும், அக்காரியத்தை நிறைவேற்றும்பொழுது போலீசாரைப் பக்கத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும், மிருகத்துக்கு அதிக தொந்திரவு நேரிட்டா லதற்கு போலீசார் ஜவாப்புதாரிகளா யிருக்கவேண்டுமென்றும், அப்படி யளவுக்கு மிஞ்சித் தான்தோன்றியாய்ச் செய்வதாயிருந்தால் இவ்வழக்கத்தை யடியோடே யொழித்துவிடப்படுமென கலக்டர் டொடாஸ்களுக்கு அறிவிக்கவேண்டுமென்றும் நமது சென்னை கவர்னர் உத்திரவு செய்திருக்கிறார்.—இலங்கைத்தினவர்த்தமானி.

கண்கள்.

பிரான்சுதேசத்திலிருக்கும் டாக்டர் ச்சிபோர்ட என்பவரொருவிதமான நேத்திர அமைப்பைக் கண்டுபிடித்திருக்கிறார். அதாவது சாதாரணமாக மனிதர்களுக்குக் கண் பழுதுபட்டுப்போனால் (கிளாஸ்) கண் என்னும் பொய்க்கண்களை வைத்துப் பொருத்திவருவ தாங்கிலேயர்களது இப்போதைய வழக்கமாயிருக்கிறது. ஆனால், இக்கண்கள் பார்வைக்கு மாத்திரம் கண்களைப்போலத் தோன்றுமேயன்றி திருஷ்டிக்குப் பிரயோசனப்படுகிறதில்லை. ஆனால் ஷை ச்சிபோர்ட் எனும் பிரான்சு டாக்டரிப்போது கண்டுபிடித்திருக்கிற திப்படியல்ல. இவர் செய்வதெப்படியெனில், மிருகங்களுடைய கண்களையெடுத்து மனிதர்களுடைய கெட்டுப்போன கண்களின் குழியிலே பொருந்துகிறார். இதை இவர் கடந்த மேமாதமுதல் தகுதியாகப் பரீக்ஷை பார்த்தாராம். பரீக்ஷையில் தன்னுடைய பிரயாசம் சித்தியாச்சுது. அதாவது முயலினுடைய கண்களையெடுத்து மனிதர் கண்களிற் பொருத்தினாராம். பொருத்தின கண்கள் மனிதர் கண்களைப்போலவே விளங்கினதோடு இயல்பான கண்செய்வைப்போன்ற நெவ கண்சுழலல் ஒளியூறுவல் முதலானவைகளெல்லாம் ஜென்ம அமைப்பைப்போலவே உண்டாயினவாம். இதனாலெண்ணிய காரியம் ஜெயம்பெற்றே, இப்போதத்தொழிலை உலகமெல்லாம் பிரசித்தியாக்கவேண்டி டாக்டரநேக முயல்களைச் சேகரஞ்செய்துவருகிறார்.—இலங்கைத்தினவர்த்தமானி.

வர்த்தமானம்.

விவாக சடங்குகளுக்குப் பிராமணர்கள் தள்ளுபடி.—(பொம்பாயைச்சேர்ந்த) ஜுனூர் கிராமத்திலும் அதின் சுற்றுப்பக்கத்துக் கிராமங்களிலும் மராட்டியர்களும் மஹாராக்களும் தாங்களே நிறைவேற்றிக்கொள்ளுகிற விவாகசடங்குகள் பிராமணபுரோகிதர்களால் நடத்தப்பட்டாற்போலவே [illegible] [illegible]ண்டு, இதுவரையில் முப்பத்தினான்கு விவாகங்கள் நடத்தினார்கள். ஓர்காலத்தில் பரிசுத்தமான இருபிறப்பாளராகிய பிராமணர்கள் இன்றியமையாததாயிருந்த காரியத்திற்கு இக்காலத்தில் அவர்கள் அவசியமில்லாமற்போகிறது.

நூதனபிறவி—கொழுப்புத்துறை முசீயர்களுக்குள் ஒரு மூக்குவப்பெண் இருதலையும், நாலுகண்களும், நாலுசெவிகளும், இருகரங்களும், இரண்டு கால்களுமுள்ள ஓர் குழந்தையைப் பெற்றாள், குழந்தை யிறந்து பிறந்தது. இது பிரபுரதகனியினும் சிறப்புடையதே, எப்புரத்தை யழிக்கவந்ததோ?

தமிழ்சந்தாவிபரம்.

Printed and Published for the Proprietor at the Authi Kalanithi Press, No 6, Natoo Pilliar Covil Street, MAADRS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியானபத்திரிகை.

Vol. V.—No. 28.] MADRAS:—SUNDAY JULY, 11, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

Is Atheism or Theism Better Suited for this Life?

இவ்வுலகவாழ்க்கைக்கு மிக உரித்தானது ஆஸ்திகமா நாஸ்திகமா?

இந்த அரிய ஓர் சங்கையை ஆழ்ந்து யோசிக்கவேண்டியது, யோசனுபுருஷத்துவமுடைய புத்திமான்களாவார் யாவருக்குமே அதிமுக்கியம், இங்ஙனம் யோசிப்பார் ஒவ்வொருவரும் ஆஸ்திகம் இன்னதென்றும், அதன் ஒழுக்கம் சாதை அனுஷ்டானம் இன்னவென்றும், அதின் விதிவிலக்குகள் இன்னவென்றும், அதைக் கடைப்பிடித்தார் இன்னின்ன பலாபலன்களைப் பெற்ருரொன்றும், அன்னோர் அவ்வப்பலன்களைப்பெற்றது நமக்குப் பிரத்தியக்ஷானுபவமோ கேள்வியோவென்றும், நமக்குச் செவியறிவுறுத்தியவர்களேனும் மதாபிமானம், மதவைராக்கியம், மதமயக்கு முதலிய பிராந்தங் காரணமாகவேனும், தற்சிறப்பு தற்பிரயோசனம் முதலியவற்றை நாடியேனும், சுயகாரிய தூரந்தரராய்க் கூறினார்களாவென்றும், அல்லது மனக்கோட்டை கட்டி மனோராச்சியம் செய்து மகிழ்ச்சியோடிருந்து மகானென மதிக்கப்பெற்று மாண்டார்களாவென்றும் பன்னிப்பன்னிப் பரியாலோசனை செய்யின்; எறும்பூரக் கற்குழியு மென்பதாய்க் கொஞ்சமேனும் விளங்காதிராது. ஆதலால் ஆஸ்திகத்தைப் பற்றி விசாரிப்போம்.—ஆஸ்திகமாவது பஞ்சபூதங்களுக்கும் வேருய் ஓர்வஸ்து உண்டென்றும், அதுவே சகலத்தையும் சிருஷ்டித்து ரக்ஷித்து அழிக்கின்றதென்றும், அதுவே அநாதிநித்தியமென்றும், அதையன்றி ஓர் அணுவும் அசையாதென்றும் நம்பி விசுவசித்தலேயாம்.

நாஸ்திகமாவது அத்தகைய வஸ்து ஒன்றிருப்பின், அதுவும் அறிவுடைய பிராணிகளுக்கெல்லாம் பஞ்ச அறிவில் ஓர் அறிவிற்கேனும் விளங்குதல் வேண்டுமே, அங்ஙனம் விளங்காமல் ஓர் வஸ்து இருக்கிறது என்று கொள்ளுதற்கு ஆதாரமும், அதற்கு மனோதிருப்தியும் எப்படி யுண்டாகும்? ஆதலால் மனோவாக்குக்காயங்களில் அதவா ஒன்றற்கேனும் எட்டாதது வுண்டென்பதில் நம்பிக்கையும் விசுவாசமும் நாடிலதாவென்பதேயாம். பாடுபட்டால் உடனே பயன் கிடைத்தக்க இலெளகிக வியவகாரங்களுக்குப் பங்கம் செய்து காலத்தையும் கவனத்தையும் தேகவலிமையையும் வருத்தித்தேடிய பொருளையும் அறியாமைக்கு ஆட்பட்டுத் தெரியாமைக்குத் தொண்டுபூண்டு அழித்து அந்தகாரத்திற்கு வணக்கம் செய்து நிற்பது அறிவாளிக்கு அழகல்லவென்பதும் நாஸ்திகமே. மனோவாக்குக்காயாதிகளுக்கெட்டாத கடவுள் ஒருவர் உண்டென வைத்துக்கொண்டபோதிலும், அவர்தாம் இன்னார் என்றும், தமது இலக்கணம் இன்னதென்றும் நமக்கு விளக்கஞ் செய்யாதிருக்க, நாம் நமது நெஞ்சை வஞ்சியாது மனப்பூர்த்தியாய்க் கண்டதைக் கைப்பற்றி விசுவசித்தும், காணுததைக் கருத்திலுங் கருதாமல் நாள்கழித்தும் வருவதற்கு அவர் நம்மேல் கோபிப்பாரா? அப்படியவர் கோபிப்பினும் அப்பிழை யாருடையது? தித்திப்பூட்டியொருவன் செய்த அப்பத்தை யவனே உண்டு இனிமை போதாதென்று துப்பிவிடுவானுனல். அக்குற்றம் அப்பத்தைச் சாருமா, அதைச் சமைத்தோனைச் சாருமா? அப்படியும் ஒருவன் செய்வானேல், அவனை விவேகிகள் என்னவென்று மதிப்பார்கள்? அற்ப அறிவையுடைய ஓர் தந்தையும் தன் மைந்தனுக்கு வித்தியாப்பியாசம் செய்திராவிட்டால் அவன் படியாமையைப்பற்றிப் பழுது சொல்வானு? ஓர் குழந்தையானது தன் பருவபேதத்திற்கும் தேகவலிவிற்குந்தக்கபடி தவழுங்காலத்திற் றவழ்ந்தும், உட்காரும் பருவத்தில் உட்கார்ந்தும், நடக்கும் பருவத்தில் நடந்தும் வருமேயல்லாமல், அது பிறந்தபோதே அங்ஙனம் செய்யக்கூடியதா? அப்பருவங்கள் வாய்க்கு முன்னரோ அப்பிள்ளை காலகதியாய் விட்டால், அது தவழவில்லையென்றும், நடக்கவில்லையென்றும், தன்னை யுணர்ந்துகொள்ளவில்லையென்றும் தந்தை கோபிப்பானு? தெண்டிப்பானு? விசுவாசமொழிவானு? அப்படியும் ஓர்கால் ஓர் தந்தை அங்ஙனம் கோபிப்பானேல், அவனை அறிவுள்ள உலகத்தவர் எத்தகையோனென மதிப்பர்? அற்பராகிய மனிதர்களே இப்படிச்செய்தால் சூடுவந்து சம்பவிக்குமென்முல், அகிலசராசரங்களையும் அவற்றிலுள்ள எறும்புகடை யானை யிருயுள்ள சேவாகவையும் ஆக்கயளந்து அழிக்கவல்லவனென்னப்பட்ட ஓர் பேரருட்டிறத்தையுடைய கடவுள் தன்னை யுணர்ந்து விசுவசியாதவர்களைக் கோபிப்பாரொன்றும், அவர்களுக்குச் சுகங் கிடைக்கப் பண்ணுரொன்றும், ஆதலால் அவர்கள் தெரியாததைத் தெரிந்ததாகவும், மனத்திற்கெட்டாததை யெட்டியதாகவும் பாவனை பண்ணத்தான் வேண்டும் என்றுங் கண்மூடிக் கியானமுடையவர்களாய்க் கண்மூடி நியாயம் பேசும் ஆஸ்திகர்களுடைய புத்திவிசாலத்தையும், அவர்கள் மனோபாவங்கொண்டிருக்கும் கடவுளிலக்கணத்தையும் எவ்வளவென மதிக்கவேண்டியிருக்கிறது விவேகிகளே பாருங்கள் பாருங்கள். இப்பேர்க்கொத்த கடவுளும் இருக்கின்ருரொன்று மனோபாவங்கொண்டு அவருக்குக் கடையிலுங்கடையாய அபகீர்த்தியை வருவித்து தத்தம் பேதமைக்குணத்தையுங் காட்டுவதைக்காட்டினும் அக்கடவுட்கியான மில்லாதிருப்பதே மிகமேலன்ருே?

கடவுள் கடவுள் என்று சகல பாரத்தையுங் கடவுள்மேல் போடும் ஆஸ்திகருள் யாவர் கடவுளை நம்பி சுயமுயற்சி செய்யாதிருக்கின்ருர்கள்? யாதவரினுங் கடவுள் காப்பாற்றுவாரொன்றிராமல் பசிவந்தபோது உணவைத்தேடியுண்டும், நோய்வந்தபோது மருந்தைத் தேடியுண்டும், மழைவருமென்றஞ்சி மனைகோலிக்கொண்டுந் தற்காத்துக்கொள்கின்ருர்களேயல்லாமல் கடவுளை நம்பி கைகட்டி நிற்பவரார்.

இயற்கையறிவும், பகுத்தறிவும்.

ராபர்ட்டு கூப்பரவர்களுடைய
அபிப்பிராயத்தையனுசரித்து,
அமரம்பேடு
முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(கoகூ - வது பக்கத் தொடர்ச்சி.)

லார்டு புரோகாமென்பவர் சாஸ்திரத்தைப்பற்றிச் சர்ச்சைசெய்த கிரந்தத்திலே, பலஜாதி ஜந்துக்கள் அதிசயமா

ன அளவுக்குப் பகுத்தறிவையும் விவேகத்தையும் வெளியிடுகிற மிகவும் விசேஷமான சில காரியங்களைச் செய்ததாய்ச் சொல்லியிருக்கிறார். தார்த்தாரி தேசத்திலும் தென் அமெரிக்காவிலும் காட்டுக்குதிரைகள் மந்தைமந்தையாய்ச் சரிகிற வனாந்தரங்களிலே ஒவ்வொரு மந்தையில் ஐந்நூறு அறுநூறுகுதிரைகளிருக்கின்றன. அவை சண்டைபோடுவதற்காவது எதிர்ப்பதற்காவது வகையற்றிருப்பதாலும், ஓடிப்போனால்மாத்திரமே அபாயத்திற்குத் தப்பிப் பிழைக்கலாமென்று அறிந்திருப்பதாலும் தூங்கப்போகையில் காவற்காக்கும்படி ஒவ்வொரு குதிரையை முறைவட்டமாக நியமித்துவிட்டு, மற்றவை தூங்குகின்றன. மனிதனெவனாவது நெருங்கிவந்தால், காவற்குதிரை வேவு பார்க்கிறாப்போல அவனுக் கெதிரேபோய், அவனைக் கிட்டவரவொட்டாமல் தடுக்கப்பார்க்கிறது; அவன் பின்னும் நெருங்கி வருவானாகில், அது வேற்றுமையான தொனியோடு உரக்கக் கனைக்கிறது; அது கேட்ட அந்த மந்தை திடுக்கிட்டெழுந்து ஓட்டம் பிடிக்கிறது; அந்த காவற்குதிரை பின்னால் செல்லுகிறது. இந்த ஏற்பாடு சொற்பமானதாயிருந்தாலும், இதைவிட அதிக யுக்தியும் பகுத்தறிவுமுள்ளது வேறொன்றுமில்லை. அவ்விதமாகவே, டோவர்பட்டணத்தில் கள்ள சாராயக்காரனொருவனுடைய குதிரை சாராயச்சுமை யேற்றிக்கொண்டு ஆளில்லாமலே குறித்த இடத்திற்கு வழக்கமாய்ப் பாட்டையே போகிறதுண்டு. அது சேவகனைக்கண்டால் பாட்டையை விட்டுக் குதித்து ஒருபள்ளத்தில் ஒளித்துக்கொள்ளும்; அகப்பட்டுக்கொண்டால் தன் சுமைக்காகப் போராடும். (இப்போது லார்டு தரூரோ என்னும் பெயரையுடைய) சார்ஜிந்து ஒயல்டு என்பவர் தானறிந்திருப்பதாக ஒரு நாயைக்குறித்துச் சொல்லியிருக்கிறார்; அதினுடைய தந்திரம் அதவா மேற்படி சங்கதிக்குச் சமானமாயிருக்கிறது. ஆட்டை வேட்டையாடிக் கொல்லாதபடி முன் சாக்கிரதையாய் அதைக் கட்டிவைக்கிற வழக்கமுண்டு. இராத்திரியில் கழுத்துப்பட்டையினின்றும் தலையை உருவிக்கொண்டு வெளியிற்போய், பொழுதுவிடியு முன்னமே திரும்பிவந்து, இராத்திரி தி[illegible] பட்டையில் தலையைத் துறுத்துக்கொள்ளும். அந்த சார்ஜிந்தினுடைய சகோதரராயும் கொஞ்சகாலத்திற்கு முன்னமே லண்டன்பட்டணத்து ஷெரிப்பாயுமிருந்த ஒரு பெரிய மனிதரிடத்தில் ஒருநாயிருந்தது, நாயிற்றுக்கிழமைதோறும் அதைக் கட்டிவைக்கிறதுண்டு; கட்டுண்டிருக்க அதற்கிஷ்டமில்லாமையால் பலானநாள் சனிக்கிழமையென்று தெரிந்துகொண்டு, அன்றிராத்திரிக்குத் தப்பித்துக்கொண்டுபோய், திங்கட்கிழமை காலமே வந்து சேரும்! விவேகத்தையும் தந்திரத்தையும் யோசனையையும் பின்னும் பரிஷ்காரமாய்த் தெரிவிப்பதற்கு வேறொன்றிருக்கிறதா?

ஜீவராசிகளின் சரித்திராசிரியராகிய கீர்த்திபெற்ற Buffon என்பவர் சொல்லுகிறதாவது—லீட்ஸ் என்னும் பட்டணத்து சர்ஜியனானவர் நொண்டியான ஒரு ஸ்பானியல் நாயைக்கண்டு, அதை வீட்டுக்குக் கொண்டுபோய், காலுக்குக் காயங்கட்டி இரண்டுமூன்றுநாள் வைத்துக்கொண்டிருந்து பின்பு துரத்திவிட்டார். அந்த நாய் பூர்த்தியாய்க் கால் குணப்படுகிறவரையில அந்த சர்ஜியனுடைய வீட்டுக்குத் தினந்தோறுங் காலமே வந்துகொண்டிருந்தது. சிலமாசத்திற்குப்பிறகு அந்த நாய் கால் நொண்டியான வேறொரு நாயைக் கூட்டிக்கொண்டு அவரிடத்திற்குவந்து, தனக்குச் செய்ததுபோலவே தன் சினேகிதனுக்கும் உதவிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிற பாவனையாக விவேகத்தோடு இரக்கமாய் எளிய முகத்தைக்காட்டித் தெரிவித்தது. இது கவனத்தினாலும் அனுபவத்தினாலுமுண்டான காரியமாகத் தெரியவில்லையா? இதை வெறும் இயற்கையறிவோடுங்கூடிய காரியமென்று ஒருவனுஞ் சொல்லமாட்டான். ஒருவன் தனக்கு முன்னே குணப்படுத்தின ஒருதிறமையுள்ள சர்ஜியனிடத்திற்குக் கைநொருங்குண்ட தன் சினேகிதனை யிட்டுக்கொண்டு போவானாகில், இன்னது செய்தால் இன்னபலனுண்டாகுமென்று பகுத்தறிந்து செய்ததாக நாம் நினைக்கவேண்டும், இதினாலே இன்னது செய்தால் இன்னபலனுண்டாகுமென்றறிந்து செய்ததாய்த் தெரியவருகிறது. இப்படிச்செய்வதுதான் புத்திக்குச் சிரேஷ்டம். மேற்படி ஆசிரியர் ஒரு நரியைக்குறித்து யெழுதியிருக்கிறார். அது எவ்வளவு விந்தையோ அவ்வளவும் வேடிக்கையானது. ஒரு கோழி கிடங்கிலே ஒரு சிறிய வெடிப்பிருந்தது, அதுதவிர நுழைவதற்கு வேறே வழியில்லை, அந்த வெடிப்புவழியாய் ஒருநரி நுழைந்து, சந்தடிசெய்யாமல் கோழிகளையெல்லாங் கொன்று, வேண்டியமட்டில் விலாப்புடைக்கத்தின்று வயிறுபருத்து, அந்த வெடிப்பின்வழியாய் வெளியில் வரக்கூடாமல், செத்தாற்போலக் கால்களைப் பரப்பிக்கொண்டு மல்லாக்கே விழுந்துகிடந்தது. காலமே குடியானவன் கோழிகள் நாசமாய்ப் போயினதைப்பார்த்து அவற்றை நாசஞ்செய்த சண்டாள நரியும் அதிகமாகத்தின்று தேக்கெறிந்து செத்துக்கிடக்கிறதென்றெண்ணி, அதைப் பின்னங்கால்களைப்பிடித்துத் தூக்கிக்கொண்டுபோய் வீட்டுக்குப் பின்புறத்திலெறிந்துவிட்டுத் திரும்புந் திரும்பாததற்குமுன்னமே, அது விரைந்தெழுந்து அதிவேகமாய் வோட்டம் பிடித்தது. இப்படி லண்டன்பட்டணத்துத் திருடன் செய்திருப்பானாகில், அது மிகவுந் திறமான தந்திரமென்றே சொல்லவேண்டும். நீர்நாயைக்குறித்துச் சொல்லியிருக்கிற விசேஷமென்னவென்றால், சில நீர்நாய்கள் ஒரு கூட்டமாகக் கூடிக்கொண்டு மரத்தினடியைக் கடித்துக் கடித்துக் கீழே தள்ளுகின்றன, மற்றொருகூட்டம் கிளைகளை வேறு படுத்துகிறது, அச்சமயத்தில் வேறொருகூட்டம் ஆற்றங்கரையிலே மனிதனுடைய காற்பருமனளவுள்ள சிறுமரங்களைக் கடித்துத் தள்ளுகிறது. இவற்றையெல்லாம் அம்மிருகங்கள் ஆற்றங் கரையோரத்திற்குத் தரைவழியா யிழுத்துக்கொண்டுபோய், பின்பு தங்கள் கட்டடத்திற்கு உத்தேசித்திருக்கிற இடத்திற்குத் தண்ணீர் வழியாய்க் கொண்டுபோகும்; அவ்விடத்திலே அவற்றின் ஒருமுனையைச்சீவிக் குச்சுகளாக்கி, கொஞ்சமிடம் விட்டுவிட்டுப் பூமியில் ஒவ்வொன்றாக அடித்து நாட்டி, மத்தியிலுள்ள காலியான இடங்களை வளையும்படியான கிளைகளால் அடைக்கின்றன. சில நாய்கள் இந்த வேலைசெய்துகொண்டிருக்கையில், மற்றுஞ் சில களிமண் தேடியெடுத்துக்கொண்டு வருவதற்குப்போய், தங்கள் காரியத்திற்கு உதவும்படி வால்களினாலுங் கால்களினாலும் அதைப் பக்குவப்படுத்துகின்றன. அவைகள் போடும் அணையின் முகட்டிலே யிரண்டு மூன்று திறப்புகள் விடுகின்றன; அவற்றை நதி நீரோற்றமா யிருக்கும்போது பெரியவையாகவும், வற்றமாயிருக்கும்போது சிறியவையாகவுஞ் செய்கின்றன. நீரோட்டம் மிகவுஞ் சாந்தமா யிருக்குங்காலத்தில் அணையைக் கிட்டத்தட்ட நேர்குறுக்காகக் கட்டுகின்றன, வே[illegible]மாயோடுங்காலத்தில், நீரோட்டத்திற்கு எதிர்முகமாக வளைவின் வெளிப்புறந்தோன்ற அணையை ஒரேரீதியாக வளைத்துக் கட்டுகின்றன. நீர்நாயின் இச்செய்கைகளிலே விசேஷ சூட்சுமபுத்தியும் திறமையும் விவேகமும் விளங்குகின்றன. அப்படிப்பட்ட காரியத்திற்கு நிபுணரான ஒரு இஞ்சி[illegible] ஆராய்ந்து நிர்ணயிக்கவேண்டியதாயிருக்கிற இடத்திலே [illegible]ந்நாய்கள் அணைகட்டுகின்றன. ஓரிடத்தைவிட மற்றோரிடத்தைத் தகுதியானதாகத் தெரிந்துகொள்வதற்குப் பல இடங்களைச் சோதித்துப்பார்த்து ஓரிடத்தை நிச்சயிக்கவேண்டி[illegible]தவசியமாயிருக்கிறது, அது மிகுந்த யோசனையோடு ப[illegible]தறிந்து செய்கிற காரியம். இந்த விந்தையான மிருகம் [illegible]ன்னபடி செய்கிறதென்று முன் எண்ணங்கொண்டு, [illegible]கேற்றபடி யேற்பாடுசெய்து, வேண்டிய கருவிகளைச்சே[illegible]த்து, தக்கபடி வேலையை முடிப்பதை யோசிப்போமாகி[illegible], அது இயற்கையறிவினாலே செய்யப்படுகிறதென்று செ[illegible]வது எவ்வளவேனு மொவ்வாது. எதில் காரியசித்திக்கு [illegible]ண்டிய உபகரணங்கள் பிரயோகிக்கப்பட்டு காரணகாரி[illegible]கள் வெளியாகின்றனவோ அதில் விசேஷ பகுத்தறிவு [illegible]ளங்கவே விளங்கும். மேற்படி நாய்களின் கட்டு வேலையி[illegible] பகுத்தறிவு விளங்குவதை மறுப்பவர் யாவர்? ஜந்துக்[illegible] விவேகமுடையனவா யிருக்கிறதென்பதற்கு எறும்பு [illegible] அற்புதமான திருஷ்டாந்தமாயிருக்கிறது. எறும்புகள் க[illegible]டங்கூட்டமாயிருப்பது யாவருக்குந் தெரிந்திருக்கிற வி[illegible]

மே, நான் விவரித்துச்சொல்ல வேண்டுவதில்லை. அவை நம்முடைய ஏற்பாடுகளில் பலவற்றை மிஞ்சியிருக்கின்றன. அவற்றிற்கு ஞாபகசக்தி மிகுதியாயிருக்கிறது, அது மனதின்தன்மையென்று யாவருமறிந்திருக்கிறார்கள். ஸர் ஆர். பிலிப்ஸ் என்பவர் 'Million of Facts' என்னுங் கிரந்தத்திலே எறும்புகளுக்குப் பகுத்தறிவுண்டென்பதற்கு விந்தையான சில சங்கதிகளெழுதியிருக்கிறார்; அதை வாசித்தால் விசேஷமாகத் தெரிந்துகொள்ளலாம். [பிராங்கிலின்துரை சர்க்கரைப்பாகுக் கலயத்தை ஒரு பெட்டியில் வைத்திருந்தார். ஒருநாள் அதற்குள் எறும்புகள்போய், பாகை அரித்துச் சேதப்படுத்தின. துரை அதுகண்டு எறும்புகளை யோட்டிவிட்டு அந்தக்கலயத்தை யெடுத்து ஒருகயிற்றில் கட்டி முகட்டில் தூக்கினார். அதில் ஒரு எறும்புமாத்திரம் அவர் கண்ணுக்குத் தப்பியிருந்தது. அது சற்றுநேரத்தில் கலயத்தினின்று வெளிப்பட்டு, கயிற்றின் வழியாய் முகட்டிலேறி ஊர்ந்துபோய்த் தன் புற்றைக்கண்டு பிடித்து அதனுள் நுழைந்தது. அரைமணிநேரத்திற்கெல்லாம் திரளான எறும்புகள் புற்றிலிருந்து வெளிப்பட்டு ஊர்ந்துபோய் முகட்டிலேறி கயிற்றின் வழியாயிறங்கி, கலயத்திலுள்ள பாகை அரித்துப்பட்சித்தன. அந்தக்கூட்டம் திரும்பினவுடனே மறுகூட்டம் வந்தது. இப்படி மாறிமாறிப் பல எறும்புக்கூட்டங்கள் வருவதும் போவதுமாயிருந்தன, பாகு முழுமையையும் பட்சித்துவிட்டன. இதனால் அந்தத் தனி எறும்பு கலயத்திற்குச்செல்லும் வழியைக்குறித்து மற்ற எறும்புகளுக்கு ஒலிவழியாய்த் தெரிவித்திருக்கவேண்டுமென்பது தெளிவாகத்தோன்றும்.

பூச்சியிலக்கண நூலாசிரியர்களாகிய கெர்பி, ஸ்பென்ஸ் என்பவர்கள் எழுதிய பிரபந்தங்களில் எறும்புகளுக்குப் பாஷையுண்டென்று உறுதியாய்ச் சொல்லுகிறார்கள். எறும்பின் வளையை வெட்டி, அதிலுள்ள எறும்புகளைக் கலைத்துவிட்டால், கலைந்த எறும்புகள் அநேக வழிகளில் சிதறிப்போகும். அவ்வவ்விடத்தில் ஒன்றையொன்று சந்தித்துத் தங்களுக்கு இ[illegible]டம் எதிர்ப்படுமளவும் செல்லும். வெடிப்பு இருக்குமி[illegible]தை ஒரு எறும்புகண்டால், அது திரும்பி, தனக்கு எதிர்[illegible] மெறும்புகளுக்கு பரிசவுறுப்பினால் அதைத் தெரிவிக்க, [illegible]வைகள் மற்றவைகளுக்கு அறிவிக்கும். இவ்வாறு கலை[illegible] எறும்புகளெல்லாம் அவ்விடத்தையறிந்து மு[illegible]ன்போலக்[illegible]ட்டமாய்ச்சேரும்.

[illegible] எறும்புக வளைசெய்யும்பொழுது, தலையெறும்பு மற்ற[illegible]வைகளை அதி ஜாக்கிரதையுடன் வேலைசெய்யத்தூண்டும் [illegible]ாவனையாகத்தன் பரிசவுறுப்பால் புற்றின்பக்கத்தில் அடித்[illegible] ஒருவிதமா[illegible] ஒலிக்கிறதென்றும், உடனே மற்ற எறும்புக[illegible] அதற்கு உடன்படுகிறதை வெளிப்படுத்தும் பாவனையாக [illegible]வைகயா இரைந்து, முன்னிலு மதிகமுயற்சியுடன் வே[illegible]கின்றவென்றும் சொல்லியிருக்கிறார்கள். எறும்பு[illegible]ள் ஒ[illegible]ந[illegible]க்கூடி நிரைகுலையாமல் செல்லும்பொழுது, இ[illegible]பக்க[illegible]தி[illegible] [illegible]கிற காவலெறும்புகள் பரிசவுறுப்பால் [illegible] [illegible]டிச்ச[illegible] கிக்க [illegible] [illegible]வகள் இரைந்துகொண்டு விரைவாயூ[illegible]கிறதை [illegible] பா[illegible] [illegible]. தங்களுக்கு விரோதமான ஒரு [illegible]ஜந்துவை எ[illegible]த்துச் [illegible] [illegible]டைபண்ண எத்தனஞ்செய்யும் [illegible] எறு[illegible]கள் மு[illegible] [illegible]ற்றர்களை யனுப்பி உளவறியு[illegible] [illegible]ின்பு இராணுவவீரா[illegible] [illegible]டயெடுத்துச்செல்லும் பாவ[illegible]க அவைகள் அணிவகு[illegible] [illegible]நின்று, அந்த ஜெந்துவினி[illegible]த்துக்கு நிரையாகச்செல்லும்; செல்லும்பொழுது, [illegible]களில் சில முன்னணிக்கும் பின்னணிக்கும் ஓயாமல் [illegible]க்குவரவாயிருக்கும். ஜெந்துவினிருப்பிடத்திற் சேர்[illegible]னே சண்டைதொடங்கும். கூடவந்த எறும்புகள் ஜய[illegible]றுவது கஷ்டமாயிருந்தால், அவைகளில் சில வளையி[illegible]த்திற்குத்திரும்பி, வேறு எறும்புகளைச் சேர்த்துக்கொ[illegible]போய்ச் சண்டைசெய்து ஜயம்பெறும்.

(இன்னும்வரும்.)

கலவை.

மலடின்விபரம்.

அ-வது. புணர்ச்சி செய்யும்படியாயுள்ள ஆண் பெண் ஆகிய எந்த சீவர்களிலும் மலடும் பேடியும் உண்டு. அது எப்படி யென்றால்; ஸ்திரீ புருஷர்கள் இருவருங் கூடும்போது புருஷதேகத்தில் சந்திரனுடைய கலை நடந்து சமமாய்ப் பின் கலையில் மாறுவதற்குமுன்பு உணர்ந்து தரித்தசிசு பெண்மலடாகும். சூரியனில் இவ்வாறு தரித்த சிசு ஆண்பேடியாகும். இங்ஙனம் யான்சொன்னதில் அனேகருக்குச் சந்தேகத்துக்கு இடமுண்டு; அது யாதெனில் - யார்க்குஞ் சுழிமுனையில் கெற்பம் அலியாகுமென்று யாவரும் நிச்சயமாய்ப் பேசுவதுண்டு, அதை யானுங் கேட்டதுண்டு. அது எப்படி. யென்றால்; கலை சுழிமுனையா யிருக்கும்போது பூதபலமில்லாதிருந்தால் அலியாவது நிஜந்தான். சுழிமுனையில் அப்போது பூதபலம் இருக்குமாகில் அலியாகாது. இன்னம் எந்த சீவர்களிலும் ஸ்திரீ தேகத்தில் சந்திரகலையில் பிரிதிவு அல்லது அப்பு இந்த சமயத்தில் ஸ்திரி புருஷர்களுக்கு இன்பஞ் சனித்து இருவருங் கூடினால் விந்து கருப்பாசயத்துள் அமர்ந்து சேதப்படாமல் நிற்கும், அப்போது புருஷதேகத்தில் சந்திரகலையா யிருக்குமாகில் தரித்த சிசு பெண்ணாகும் சூரியகலையா யிருக்குமாகில் தரித்த சிசு ஆணாகும். அவைகளுக்கு அப்போதிருந்த பூதாதிகளைப்போல புத்திமுதலிய சுகதுக்கங்களும் நடத்தைகளும் வந்து சம்பவிக்கும். இதுதான் விதியென்பது. இந்த விதியுஞ் சேர்க்கைவாசனையால் அநேகமாக மாறிப்போம். கலையும் பூதியங்களுங் குறைவற்று பூரண உச்சமாயிருக்குமாகில் அப்போது தரித்த அந்த பிராணிக்கு சேர்க்கைவாசனையால் விதிமாறாது.

கூ-வது. இன்னமொன்று ஸ்திரீகளுடைய சந்திரகலையில் பிரிதிவு பூதியத்தில்தான் கெர்ப்பந் தரிக்கவேணும், அப்படிக்கல்லாமல் வேறு எந்த பூதியமானாலும் அந்தபூதியத்துள் பிரிதிவு பூதமிருக்கவேணும் அப்படியிருந்தால்தான் கெர்ப்ப[illegible] இந்[illegible]க்கின் [illegible]க்கிரி நீடித்திரார்கள் இதனால்தான் ஆயிசு குறைவுகூடல்வந்து சம்பவிக்கின்றது. அப்படி பிரிதிவியில் தரித்த பிண்டம் பிரிதிவின்பாகமாகிய கூ0-வயதுவரை வள[illegible] [illegible]ந்து (சூ0) து வரை அப்புவின்பாகமாதலால் சரீரம்பருத்து தி[illegible]தளப்புடன் அழகுங் காந்தியுங் கொடுக்கும். (சூ0) முதல் (கூ0) வயதுவரை அக்கினியின் பாகமாதலால் சரீரத்தில் நரை திரை மூப்புவந்தெய்தும் (கூ0) முதல் (க௨0) வயதுவரை வாயுவின்பாகமாதலால் தேகநடுக்கத்துடன் கோலூன்றி குறுகி நடக்கவைக்கும் (க௨0) முதல் (கரு0) வயதுவரை நடந்தும் இருந்தும் படுத்தும் நடக்கச் சக்தியற்று சிசுக்களைப்போல அறிவு குறைந்துகொண்டே வந்து சத்துக்களெல்லாம் இப்படி பரம அணுவாய் எழுந்து (கரு0)க்குள் பரத்தில் கலந்துபோம். இவ்விதமாக அக்கினி நமதுவுடலையுண்டாக்கி பின்பு அததானே சிறுகச் சிறுக வுண்டுவிட்டு ஓடிப்போகின்ற இந்த அக்கினியானது யாவற்றிலும் நிறைந்திருக்கிறபடியால் அவ்வக்கினி நமது உடலை அல்பத்திலுண்டுவிடுமென்று அந்த மூலாக்கினிக்கு நல்ல சத்துக்களைக் கொடுத்துக்கொண்டே வருகின்றோம். அந்த சத்துக்களை மூலாக்கினியானது தகிக்கும்போது பதார்த்தம் வேகும்போது பாத்திரத்துக்குச் சூடுதாக்குவதுபோல சரீரத்திலுஞ் சூடுதாக்குவதினால் எந்த சீவர்களுக்கும் நரை திரை மூப்பு எய்துகொண்டே வருமன்றி எந்தயோகஞானிகளையும்விடாது.

இதுவன்றி சிலர் யோகிகளென்று வேடம்பூண்டுகொண்டு நல்ல பாலியகாலத்தில்தானே தெரியாமையால் புசிப்பைக்குறைத்தால் யோகஞ்சித்திக்கும் அநேகநாளிருக்கலாமென்று உண்டியைக்குறைத்து தன் தேகத்திலுள்ள மாமிசாதிகளை யிழந்து அஸ்தியை மாத்திரங் காட்டிக்கொண்டிருந்து சிலநாட்களுக்குள் அக்கினியில் அகப்பட்ட விறகைப்போல யாண்டுபோகிறார்கள். யோகி இன்னகாலத்தில் இன்னபடி உண்டியைக் குறைக்கவேணுமென் றறியாமல் தான் கெடு

வதுமன்றி அவ்வழியைப் பிறர்களுக்கும்போதித்து அவர்களையுங் கெடுத்த பாலியகாலத்தில்தானே தாங்களு மரணமடைந்து போனார்களேயன்றி இன்றுவரை யிருந்த யோகி ஒருவரையுங் காணேன். யோகிகளெல்லாங் கற்பகோடிகாலமிருப்பார்களென்றுசொல்லு முன்னூல்களெல்லாம் பிசகு.

௧0-வது. மனுடர்கள் தன்னைப்பேண உத்தேசித்து வாசியினிடத்தில் பழக்கம் வைப்பார்களாகில் அது மூலாக்கினியை எழுப்பி பசியை யுண்டுபண்ணும் அப்பசியால் போசிப்பு அதிகப்படும் அப்புசிப்பிலிருந்து சத்தானது இவனுடலிற்சார்ந்து வீரியவிருத்தி யுண்டுபண்ணும் அப்போது யோகிபோலிருந்த இவனுக்கு ஸ்திரீபோக இச்சையைக்கொடுக்கும். அதனால் அவன் மயங்கி யோகிபோல வேடத்தைக்காட்டி சிற்றின்பத்தில் முழுகியிருப்பான் இதை வெல்லும்படியாகிய புருடன் உலகின்கண் இருள் என்பது எமக்கு நிச்சயம்.

யோகிமரணம்.

௧௧-வது. இப்பூமியின்கண் பலவிதமாகிய ஈக்களும், வண்டு, தும்பி, கம்பிளிப்புழு முதலிய இன்னும் அனேகவிதமான அஸ்தியில்லாத கிருமிகள் வாயுவை ஸ்தம்பித்து சிலநாள் சமாதிகூடி உடலைமாற்றி வேறு உடலை எடுக்கின்றதுகள். இதுவன்றிச் சில கிருமிகள் நாளளவில் இயல்பாகவே வேறு ரூபமாகின்றதுகள். அதனை யான் சொல்லவில்லை; வாசியை ஸ்தம்பித்து சமாதிகூடி உடலை எடுக்கிற கிருமிகளைமாத்திரஞ் சொன்னேன். இந்தக் கிருமிகள் அப்படி சமாதிகூடி யிருக்கும்போது சமாதியிலிருந்து உடலை மாற்றிக் கொண்டு வெளியில் வரும்போது சிறுவர்கள் கண்டு பிடித்து பிடுங்கி பிச்சி எறிந்துபோகின்றார்கள். இந்தக் கிருமிகோடிகளில் ஒன்று விவேகியாயிருந்து தேகத்தை மாற்றத்தக்க வழியாகிய யோகத்தில் நிலைபெற்று சமாதிகூடியிருக்கும்போதும் இருந்து வெளிவந்தபோதும் அதற்குச்செயல் ஒன்று யிருந்தால் கொலைப்படுமோ? ஒருக்காலும் அப்படிக் கொலைப்படமாட்டாது இதை அற்பஜீவமென்று நினைப்பார்கள். அப்படி அற்பஜீவிகளாயிருக்கின்ற கிருமிகள் சமாதியில் நின்று வேறு உடலை எடுப்பதை யான் கண்டது போல் மனுடர்களாய் ஜனித்த விவேகிகள் ஒருவரும் தேகத்தைமாற்றி வேறு ரூபம் எடுத்ததையாவது. சா[illegible] இருந்[illegible]ஙகண்டதில்லை.

முத்துசாமிமுனிவர்.

ஆனந்தக்களிப்பு.

ம-ா-ா-ஸ்ரீ

தத்துவவிவேசினி	ஐய - பின்கவி	
சந்தேகந்தீர்த்தரு ளென்போல்வாருய்ய		(தத்துவ)

அஸ்திஸ்து.

எத்தனைமநுக்கள்	பிறந்து - இங்கேன்	
இல்லாமல்எல்லாரும் போனார்	இறந்து	
அத்தையுன்னுது	மறந்து - யாவரும்	
ஆளாகின்றேமதற் கறைவீர்	திறந்து	(தத்துவ)
உய்யுமாற்கேட்டிட்ட	யானும் - விடை	
ஓர்ந்துரைப்பார்பால் பழம்இனித்	தேனுந்	
துய்யகற்கண்டிடுதென்	பாலும் - கலவைகொள்	
சொல்வரமறுமுறை தூண்டினே	னனுந்	(தத்துவ)

இங்ஙனம். சி-அ.

ஆனந்தக்களிப்பு.

விடை.

எண்ணித்துணிந்ததே	யீது - ஐயம்	
ஏதேனுமுண்டே லினிமேசீ	யோது	(எண்ணித்)
உண்பதுமலமா மென்	றெண்ணி - யதை	
உண்ணுதிருந்தோரா ருலகத்தி	லன்னி	
இன்றியமையா வித்	தேகம் - இதை	
எடுத்தோரார்வேண்டி யளித்தோரார்தூண்டி		(எண்ணித்)
உலகில் நிலைநின்ற	தியாது - அதை	
யுன்னுமல்நீரும் உசாவிய	தீது	
கலையினிற்புள்ளியே	னென்று - நாளும்	
கருதாதுகேட்ட கருத்தொக்கு	மீது	(எண்ணித்

வர்த்தமானம்.

காசில்லாமருந்து—எவ்வகையான விக்கல்காரரும் நிம்காதின் நுனியை ஒருசொட்டுத் தண்ணீரால் நனைத்துவிடுடாற் குணமாகுமென்று ஒரு ஆங்கிலேய வயித்தியர் செல்லுகிறார். விரும்பினோர் சோதித்துப்பார்க்க.

ஆப்கானிஸ்தான் அமீர்—ஆப்கானிஸ்தானத்தின் அரசனாகிய அமீர் அப்துல் ரோமான் மிகவும் வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறதாகவும், இவர் ஒருவேளை இறந்தால் ஆப்கானிஸ்தானத்தில் சண்டையுண்டாகு மென்பதாகவும் எண்ணப்படுகிறது.

—அமெரிக்காவில் அயோவா என்ற இடத்தில் ௬00 - ரூபாய் பெறும்படியான நான்கு பசுக்கன்றுகளைத் திருடியதனிமித்தம் எட்டுவருஷகாலமாய் வழக்கொன்று நடந்தது இப்போது வழக்காளிக்கு நஷ்டத்திற்காக ௧௬000-ரூபாயும், செலவு பணத்திற்காக ௬0000 - ரூபாயும் இருக்கும்படி தீர்மானமானது. இதனாற் சில கட்சிக்காரர் ஓட்டாண்டிகளானார்கள், அற்ப ஆசை கோடி தரித்திரந்தானே.

—மாண்டலே சூன்மீ ௩௨ வெங்காளம் ஸ்டாப்கோர் காப்டன் டன்ஸ்போர்ட் இன்னும் சிலருமாய் ௫00-திவர்த்திதிருடர்களை யடித்துத் துரத்திவிட்டார்கள். காப்டன் டன்போர்ட் கொல்லப்பட்டார். இன்னுஞ்சிலர் காயப்பட்டார்கள். யூ வென்னுமிடத்தில் ௩,000 - கலகக்காரர்கள் அடித்துத் துரத்தப்பட்டார்கள்.

இரங்கோன்—சீனா, சையாந்தேசத்து வியாபாரிகள் மோல்மேன் பட்டணத்திலிருந்து கோவேறுகழுதைகளின்பேரிற் பொதிபோட்டுக்கொண்டு வருகையில், சென்னை பட்டாளவீரர்கள் இந்த வியாபாரிகள் கூட்டக்கள்வரென்று தீர்மானித் தெதிர்த்தார்கள். வியாபாரிகள் சிப்பாய்களுக்கடங்காமலிருக்கவே, துப்பாக்கியால் நால்வரையுஞ் சில கோவேறுகழுதைகளையுங் கொன்றுவிட்டார்கள். வதவத்தை விசாரிக்கும்போது கொல்லப்பட்டவர்கள் வியாபாரிகளென்[illegible] விளங்கவே சிப்பாய்களை விசாரணைக்கு [illegible]த்திருக்கிறார்கள்.—வேலூர் ஜனாநுகூலன்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)		Rs.	As.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14

உள்ளூரிலும் வெளியூரிலும் உள்ள கையொப்பம் செய்தும் மெம்பர்களுக்கு பத்திரிகை இலவசமாக அனுப்பப்படும். உள்ளூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு 3-ரூபாயும் வெளியூர் மெம்பர்கள் மூன்றுமாசத்திற்கு ரூபாய் - 1-10-ம் செலுத்தவேண்டும்.

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளுக்கும்
1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய பாக்கிகளும்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886-ம் வருஷத்திய சந்தாக்களையும்
இங்கிலீஷ் பத்திரிகைகளும்,
செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெயருக்கு
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
AUTHI KALANITHI PRESS,
No 6, Natoo Pilliar Covil Street, MAADRS.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியானபத்திரிகை.

Vol. V.—No. 29.] MADRAS:—SUNDAY JULY, 18, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

௨௯ The Idea of God
OR
BRUMMUM.

வேதத்திலே கடவுளிலக்கணம் விசிதமாய்க் கூறப்பட்டிருக்கிறதென்றும், அதனை வாசித்துத் தெளிந்தவர்கள் கடவுள் நிச்சயச் சங்காநிவிர்த்தி செய்யவல்லார்களென்றும், வேதத்தை வெகு பெரிதாக மதித்துள்ள சில இந்துசமயிகள் கூறுகின்றார்கள். இப்படிக்கூறும் இவர்களை நோக்கி வேதத்தில் சொல்லப்படும் கடவுளிலக்கணந்தான் என்னையெனில், "நாங்களும் உணரோம், அதிலும் இல்லாதிராது" என்று சிலரும், அதில் இன்னின்னபடி சொல்கிறதென்று சிலரும் பரஸ்பர விரோதமாகிய வாக்கியங்களைக் கூறிப் போக்குகாட்டி வருகின்றார்கள். அவ்வேதந்தான் யாது சொல்கின்றதென்று ஆராய்ந்து அவற்றிலுள்ள வாக்கியங்களைப் பரஸ்பரவிரோதங்காட்டி மறுக்குமிடத்தும் "அதுவல்ல அநனது உண்மைப்பொருள்; அஃது இருடிகளுக்கேயல்லாமல் நமக்கு அவ்வளவா விளங்காது" என்கிறார்கள். ஆனால் அவ்விருடிகள்தான் அவ்வேதப்பொருளை எவ்வாறு விளங்கிக்கொண்டார்களென்று வாருணியென்னப்பட்ட தைத்ரேயக உபநிடதத்திலே,மூன்றாவது அத்தியாயத்திலே,ஆரம்பத்தையும் கடைசியையும், முதலாவது உடநிடதத்திலே முகவுரையையும் நோக்குமிடத்து அடியிற்கண்ட இருடிகளே தங்கள் தங்கள் மனத்தெழுந்தவாறே பிரம்ம இலக்கணம் கண்டிருருக்கின்றார்கள். அது வருமாறு—

வருணன் சந்ததியான பிருகு என்பவர் தம்முடைய தந்தையை நெருங்கிப்போய்,வணங்கப்பெற்ற தந்தையே! எனக்குப் பிரமத்தைத் தெளிவிக்கவேண்டுமென்றார். அதற்கு வருணன் இதற்கு அடியில்வருவதை விளக்கினார். "உண்டி (அல்லது-சரீரம்.) உண்மை (அல்லது-பிராணன்.) பார்வை, கேட்டல், மனது (அல்லது-எண்ணம்.) பேச்சு இவைகளும், மற்றெல்லாப்பதார்த்தங்களும் எவ்விடத்திலிருந்து உண்டானவோ அதுவும், பிறந்தபோது எதனால் ஜீவித்திருக்கின்றனவோ அதுவும், அவைகள் எதைப் பராமரிக்கின்றனவோ அதுவும், எதில் அவைகள் செல்லுகின்றனவோ அதுவும், தேடுகிற அதுவே பிரமமாக இருக்கிறது."

அவர் தபோநிஷ்டையிலிருந்து கியானதிருஷ்டியினால் உண்டி அல்லது சரீரமே பிரமமென்றறிந்தார். ஏனென்றால், எல்லாச்சீவர்களும் உண்டியிலிருந்தே உண்டாயினார்கள். பிறந்தபோதும் உண்டியினாலேயே பிழைத்திருக்கிறார்கள். உண்டியைப் பராமரிக்கிறார்கள். உண்டிக்குள்ளாகவே செல்லுகிறார்கள். ஆதலால், [illegible] கண்டறிந்தார். ஆனால் இன்னம் திர்ப்தியையபிச்சைமல் வருணனாகிய தந்தையைக் கிட்டிப்போய் வணங்கப்பெற்ற தந்தையே! பிரமத்தை யெனக்குத் தெளிவி[illegible]பிரமத்[illegible]மென்றார். வருணன் [illegible]ஷ்டையினால் பிரமஞானத்துப் பல[illegible]டையென்று மறுமொழி சொன்னார். பிரமம் அனுசாலிவடிவ பொருளா யிருக்கிறதென்றார்.

பிருகு ஆனவர் கனயோகத்திலிருந்து பார்த்து உயிர்ப்பாய பிராணனே பிரமமாகக் கண்டார். ஏனென்றால், இந்த வஸ்துக்களெல்லாம் உண்மையாகவே உயிர்ப்பிலிருந்து உண்டாயிருக்கின்றன. பிறந்தபோது உயிர்ப்பினாலேயே இவைகள் சீவித்திருக்கின்றன. உயிர்ப்பையே அவையவை பராமரிக்கின்றன. உயிர்ப்பிலேயே அவைகள் செல்லுகின்றன. ஆதலால் இதை யவர் உணர்ந்தார். ஆனால் மறுபடியும் அவர் தந்தையாகிய வருணனைக் கிட்டிப்போய் வணங்கப்பெற்ற தந்தையே! பிரமத்தை யெனக்குத் தெளிவிக்க வேண்டுமென்றார். அதற்கு வருணன் கனயோக நிஷ்டையினால் தேடியறி. அதுதான் பிரமமென்றார்.

நிஷ்டையிலிருந்து தியானித்து அறிவே பிரமமாகக்கண்டார். ஏனென்றால், இந்த எல்லா ஜீவர்களும் உண்மையாகவே அறிவிலிருந்துண்டாயிருக்கிறார்கள். பிறந்தபோது அறிவினாலே ஜீவித்திருக்கிறார்கள். அறிவை பராமரிக்கிறார்கள், அறிவிலே செல்லுகிறார்கள். ஆதலால் இதை யவர் அறிந்தார். ஆனால் மறுபடியும் அவர் தந்தையாகிய வருணனிடம் சென்று வணங்கப்பெற்ற என் தந்தையே! பிரமத்தை யெனக்குத் தெளிவிக்கவேண்டுமென்றார். ஞானவானு சந்தானத்தினால் விசாரித்தால் [illegible]னையே பிரமமாக இருக்கிறதென்றார்,

அவர் தியானித்துப்பார்த்து ஆனந்தமே பிரமமென்றறிந்தார். ஏனென்றால், எல்லா ஜீவர்களும் உண்மையாகவே ஆனந்தத்திலிருந்துண்டா யிருக்கிறார்கள். பிறந்தபோதும் ஆனந்தத்திலேயே ஜீவித்திருக்கிறார்கள், ஆனந்தத்தையே பராமரிக்கின்றார்கள். ஆனந்தத்தில்தானே செல்லுகிறார்கள் ஆதலால்.

இப்படிப்பட்டதுதான் வருணனால் போதிக்கப்பட்டுப் பிருகுவினால் அடையப்பட்ட சாஸ்திரமாக இருக்கின்றது, அது மேலான பரமாணு ஸ்வரூப ஆத்துமாவைக் குறித்துப் பேசப்பட்டதாகஇருக்கின்றதாம். இதை எவன் அறிந்திருக்கிறானோ இதை எவன் அனுஷ்டிக்கிறானோ அவன் [illegible]ம் போஜனமளிக்கப்படுவான். அன்னத்தை ஜீரணிப்பிக்கிற ஒளியுள்ள அக்கினியாவான். சந்ததியினாலும் கால்நடைகளாலும் பரிசுத்த பரிபூரணங்களாலும் பெரியவனாகி மங்களகரமான கீர்த்தியினாலும் பெரியவனாயிருப்பானும்.

௨௭ இயற்கையறிவும், பகுத்தறிவும்.

ராபர்ட்டு கூப்பரவர்களுடைய
அபிப்பிராயத்தையனுசரித்து,
அமரம்பேடு
முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(௩௨௧ - வது பக்கத் தொடர்ச்சி.)

அபாயம் நேரிட்டிருக்கும்பொழுது, சில எறும்புகள் அதைக்கண்டு, எறும்புக்கூட்ட முழுமைக்கும் குறிப்பாய்த்தெரிவிக்கும். உடனே அவையெல்லாம் ஏகமாய் அபாயத்திற்குத் தப்பும்படி விரைவாய் நகர்ந்து, அடைக்கலஸ்தானந் தேடி எதிர்ப்படும் புற்றில் புகுந்துகொள்ளும். ஒரு எறும்பு தனக்குண்டாகும் அச்சத்தையாவது கோபத்தையாவது மற்ற எறும்புகளுக்குத் தெரிவிக்கவேண்மொனால், அர்த்தமண்டலமாய் வளைந்து எதிர்ப்படு மெறும்புகளின் அடிவயிற்றில் தன் தலையால் தொடும். தங்களுக்கு விரோதமான ஜெந்துக்களின்மேல் படையெடுத்துப்போக இருக்கும்போது, எறும்புகள் புற்றிலிருந்து வெளிப்பட்டு ஒன்றாய்க்கூடி, பரிசவுறுப்பினாலும் நெற்றியினாலும் ஒன்றையொன்று தலையில் தொடும்; தொட்டவுடனே ஒவ்வொன்றும் விரைவாய்ச்செல்லும். முன்னணியில் செல்லு மெறும்பு அபூர்வமாயொன்றைக்கண்டால், உடனே திரும்பி அடுத்துப்போகு மெறும்பின் தலையில் தொட்டு அறிவிக்கும்; இவ்வாறு ஒவ்வொரு எறும்பும் தன்னை யடுத்துவரு மெறும்புக்கு அதை அறிவிக்கும். ஒரு எறும்பு பசியாயிருக்கும்போது இரைகவ்வித்திருக்கின்ற எறும்பினிடத்திற்போய்த் தன் பரிசவுறுப்புக

ளிரண்டையும் விரைவாய் ஆட்டி, அவைகளால் அந்த எறும்பின் பரிசவுறுப்புகளைத்தொடும்; அப்பொழுது அது தன் வாயைத்திறந்து இரைகொடுக்கும். இந்த எறும்பின் செய்கைகளால் அதனிடத்து விளங்கும் சிரேஷ்டமான குணங்களை யொருவர் எடுத்துக்கூறுவதைப்பார்க்கினும் அவரவரும் ஆராய்ந்தறிவதே விசேஷம்.

ஒருகோழி தன் குஞ்சுகளுடன் மேய்ந்துகொண்டிருந்தபோது, ஓர் குஞ்சு ஒரு தேளைப்பார்த்து அதைப் பிடிக்கப்போயிற்று. அதைக்கண்ட தாய் குர்குர் என ஒருவித மந்தசத்தமிட்டு அந்தக் குஞ்சைத்தடுத்து, நெருங்கிவந்த மற்றக் குஞ்சுகளையும் கால்களாலும் மூக்கினாலும் உதறித்தள்ளி, தானே அந்தத் தேளைக் கொத்திக்கொன்று குஞ்சுகளுக்குப் பகிர்ந்துகொடுத்தது. இந்த அற்பகாரியத்தினாலே, [illegible]ள் விஷமுள்ள செந்துவென்றும், அதினால் தீங்குண்டாகுமென்றும், அதைப்பிடிக்கும் பக்குவம் குஞ்சுக்குத் தெரியாதென்றும் அறிந்திருந்ததாகக் காணுகிற அந்தத் தாய்க்கோழியினிடத்தில் யோசனையும் அனுபவமும் விளங்குகிறது.]

மிருகங்களின் காரியங்கள் கவனிப்பதினாலும் யோசனையினாலுமே வெகுவாய்ச் செய்யப்படுகின்றன.—அதாவது, அவை கற்பிக்கப்படத்தக்கவையாயிருக்கின்றனவென்று ருஜுப்படுத்துவதற்கு, அநேக வீட்டுமிருகங்கள் கற்பிக்கப்பட்ட நானாவிதமான காரியங்களைக் கற்றுக்கொள்ளக்கூடியவையாயிருக்கின்றனவென்று [illegible]ங்களுக்கு ஞாபகப்படுத்துவதே போதும். அந்தக்காரியங்களை மனிதன் செய்வானாகில் பகுத்தறிவினாற் செய்யப்பட்டவை[illegible]யென்று ஒப்புக்கொள்ளுவதற்குச் சந்தேகிக்கக்கூடாது. [illegible] ஒரு பிரான்சு துரையாகிய எம். லேனார்டு என்பவருக்கு இரண்டுநாய்களிருந்தன, அவற்றிற்கு மிகவும் ஆச்சரியப்[illegible]படத்தக்க காரியங்களை நிறைவேற்றும்படிப் பூர்த்தி[illegible] கற்பித்துவைத்தார். அவற்றை அவர் லண்டன்பட்டணத்[illegible] ஜூலோஜிகல் சொசைட்டி யென்னுஞ் சபையாருக்கு [illegible] முன்பாக 1843-ஞூத்தில் கொண்டுவந்து காட்டி, அவற்றிற்கு விவேகம், யோசனை, ஞாபகம் ஒப்பிட்டுப்பார்க்குஞ் சக்தி இருக்கின்றனவென்று சொன்னார்; இவையெல்லாம் மனதைச்சேர்ந்த குணதிசயங்களே: அவருடைய திறமையுள்ள நாய்களும் அவர் சொன்னதைப் பரிஷ்காரமாய் ருசுப்படுத்தினவென்று நினைக்கிறேன். இப்போது வாதத்திலிருக்கிற சித்தாந்தத்தின்பட்சத்தில் போராடுகிறவர்கள் இந்த சங்கதிகளை எவ்வாறு எதிர்ப்பார்களோ எனக்குத் தோன்றவில்லை. நடந்த காரியங்களை அட்லாஸ் என்னும் பத்திரிகையில் கண்டிருக்குமாறு:—எம். லேனார்டு அவர்களுடைய நாய்கள் திறமையுள்ளவையுமல்லாமல் நன்றாய்க் கற்பிக்கப்பட்டவைகள்; அவை அதிக பழக்கத்தினால் கேட்கிற எழுத்தை யெடுத்துக்கொடுக்கும், கேட்கிற யெண்ணைக்குறித்துக்காட்டும்; கிட்டத்தட்ட பகுத்தறிவோடுங்கூடிய சக்தியைச் செய்கையினால் வெளிப்படுத்துகின்றன; அதாவது - அவற்றிற்கு ஞாபகசுத்தி மிகுதியாயிருக்கிறது. அந்தச்சபையார் வரிசையாயல்லாமல் வரிசைதப்பி 2-4-6-8-என்கிற நான்கு எண்களில் ஒவ்வொன்றை ஒவ்வொரு துண்டுக்கடுதாசியிலெழுதி, அந்த எண்களை ஒரோ ஒருதரஞ் சொல்லிவிட்டு, அந்த நான்கு துண்டுகளையுங் கலப்படமாக முன்னும் பின்னுமாய் தரையில் வைத்தபிறகு கேட்ட எண்ணை யெடுத்துக்கொடுத்தன. பின்பு வேறே யெண்களை யெழுதி வைத்தும் அவ்வாறே யெடுத்துக்கொடுத்தன. அதானபினபு, சில வெவ்வேறுவிதமான வஸ்துக்களைத் தரைமேல் வைத்து, அவற்றில் கையுறையோ, பென்சிலோ, கத்தியோ எதை அந்நாய்கள் எடுக்கவேண்டுமென்று நினைத்தார்களோ அப்படிப்பட்ட வேறொரு வஸ்துவைக் கொண்டுவந்து காட்டினவுடனே, தரையின்மேலிருக்கிற அதேமாதிரியான வஸ்துவை யெடுத்துக்கொடுத்தன. அந்நாய்கள் வர்ணபேதங்களைப் பகுத்தறிந்தன, கடைசியாய், அவற்றிற்குச் சொன்னதையெல்லாம் தெரிந்துகொண்டவையாய்க் காணப்பட்டன. பிரேக்கு என்கிற நாய் எவனுக்கு ஆட இஷ்டமிருக்கிறதோ அவனோடு தாமினோஸ் என்னுங் காயாட்டமாடினது. காய்களை வைக்கும்போது வீடுகளை எண்ணிப்பார்க்கவேண்டிய அவசியமிருந்ததை நாம் யோசிக்கும்போது, அதற்குப் பகுத்தறிவு வேண்டியிருந்ததாக நாம் ஒப்புக்கொள்ளவேண்டியதுதான். அந்த நாய் தன் காய்களை வைத்துக்கொண்டு நாற்காலியிலுட்கார்ந்து, எதிரியாடும்போது அவன் வைக்கிற ஒவ்வொரு காயையும் ஆழ்ந்த கவனத்தோடு வெகு ஜாக்கிரதையாய்ப் பார்க்கிறது; இது மிகவும் ஆச்சரியமானது. எதிரியினுடைய காயை மடக்க மாளாதபோது, வெகு வேஷ்டையடைந்து, தலையையசைத்துப் பலவிதமாய் வருத்தப்படுகிறது. மனிதன் அதைவிட அதிககவனஞ் செலுத்தமாட்டான். அந்த நாய் ஆட்டத்தைக் கெலிக்கவேண்டுமென்று அக்கறையுள்ளதாய்க் காணப்பட்டது; இன்னுமென்னவேணும், அது கெலிக்கவுங் கெலித்தது. கொஞ்சகாலத்திற்கு முன்னமே ஒரு விசேஷமான குதிரையைக்குறித்து அடியில்வரும் விவரங்கள் பத்திரிகைகள் மூலமாய் உலாவிவந்தன. அவற்றால் மிருகங்களுக்கும் மனமென்னும் பதார்த்த மளிக்கப்பட்டிருக்கிறதென்கிற சங்கதி ஸ்தாபிதமாகிறது, மதசித்தாந்தத்தை நம்புவதாயிருந்தால் அவற்றிற்கு ஆன்மாவு மளிக்கப்பட்டிருக்கவேண்டும். மிருகசாதிகளில் மிகவுஞ் சிறந்ததல்லாத குதிரையினால் அதிவிவேகத்தோடும் யோசனையோடுஞ் செய்யப்பட்ட காரிய மொன்றுண்டு. உயின்ஸர்காசில் என்னுங் கோட்டையில் உத்தியானவனத்திலே மகாராணியவர்களுக்கும் ஆல்பெர்ட் ராசகுமாரரவர்களுககு முன்பாக அந்தக் காரியஞ் செய்யப்பட்டது. மகாராணியவர்கள் சொல்ல, அந்தக்குதிரையினால் செய்யப்பட்ட வேடிக்கைகளுளொன்று - துண்டுக்கடுதாசிகளில் தனித்தனியாக அச்சடித்து, அதற்கு முன்பாக மேசையின்மேல் வைக்கப்பட்ட பல எழுத்துகளுள் 'ஆல்பெர்ட்டு' என்னும் வார்த்தைக்குரிய எழுத்துகளைப் பொறுக்கி யெடுத்துச் சேர்த்ததே. வரிசையாய் ஒவ்வொரு எழுத்தாக வயினாற் கவ்வியெடுத்து மகாராணியவர்களுடைய கையில் வைத்தது. இராசகுமாரர் 'விக்டோரியா' என்னும் வார்த்தைக்கு எழுத்துகளைச் சேரென்று உத்தரவுசெய்ய, அந்தக்குதிரை முன்செய்தபடியே செய்து முடித்தது. அநேக மனிதர்களுக்கு அழியாப்பதார்த்தமாகிய ஆன்மா உண்டென்று சொல்லுவதைப்பார்க்கிலும், அப்படிப்பட்ட ஜந்துவுக்குண்டென்று சொல்வது மகாவிசேஷம். நம்முடைய தொழிற்சாலை மாகாணங்களிலும் வியவசாய மாகாணங்களிலுமுள்ள வயதுவந்த மதஸ்தர்கள் எத்தனைபேர் இளவரசருடைய உத்தரவினால் விக்டோரியாயென்னும் வார்த்தைக்கு எழுத்துக்கூட்டமாட்டுவார்கள்? ஒரு நாய்க்கூட்டம் மிகவும் அற்புதமான வேடிக்கைகளைச் செய்ததாக மெஸ்ஸர்ஸ் சேம்பர்ஸ் அவர்களால் பிரசுரஞ்செய்யப்பட்ட சஞ்சிகைகளில் கண்டிருக்கிறது. ஒருவிருத்தர் எங்களுக்குச் சொன்னதாவது - ஐம்பதுவருஷத்திற்கு முன்னே ஒரு பிரெஞ்சுக்காரர் சுமார் நூறுநாய்களை லண்டன் பட்டணத்திற்குக் கொண்டுவந்தார்; அவற்றில் அநேகம் பூடில்சாதி நாய்கள், மற்றவை ஸ்பானியல்சாதி; எல்லாம் கிட்டத்தட்ட ஒரே அளவும் மட்டமுமுள்ள சிறுநாய்கள். அவற்றிற்குக் கற்பிக்கச் சொந்தக்காரன் வெகு பிரயாசை யெடுத்துக்கொண்டான். குட்டிப்பருவமுதல் முன்னங்கால்களைத் தூக்கிக்கொண்டு பின்னங்கால்களால் நடக்கும்படி கற்பிக்கப்பட்டன, அந்த நிலையிலே அவை சுலபமாக வெகுதாராளமாய் நடந்தனவேயல்லாமல், எவ்வளவேனுந் தடுமாற்றமுறவில்லை; கூடியமட்டில் 'ஒன்றுக்கொன்று' ஒழுக்கமாய் நடந்துகொள்ளும்படி பழக்கப்பட்டன; அவை கூட்டமாயிருக்கும்போது மொறுமொறுத்தல் கிடையாது, குரைத்தல் கிடையாது, சேஷ்டையொன்றுங் கிடையாது. எல்லாவற்றினு மிகவு மாச்சரியமான தென்னவென்றால், சூரத்துவமும் சாதாரணமுமான நானாவித நாடககாரியங்களை வெகு திட்டமாய் நடைநொடி பாவனைகளால் நிறைவேற்றின. அவற்றின் செய்கைகளால் பணஞ் சம்பாதிக்கவேண்டுமென்பதுதான் சொந்தக்காரனுடைய கருத்து; அப்பிரகாரமே ஒரு களரிமேடையில் அக்காரியங்களைப் பார்க்கும்படி ஜனங்கள் வரவழைக்கப்பட்டார்கள். அந்நாய்கள் செய்த களரியான காரியங்களில் முற்றுகைபோட்ட பாவனையைக் காட்டினதொன்று. திரையைத் தூக்கினவுடனே, ஒன்றுக்கொன்று உயரமாக பிதுக்கமான மூலைகளையுடைய மூன்றுவரிசைக் கொத்தளங்களும் ஒரு அகழியுங் காணப்பட்டன; அந்தக்கட்டடம் கிரமமாய்க் கட்டப்பட்ட கோட்டையைப்போலவே யிருந்தது. அந்தக்கோட்டைக்கு நடுவே ஒரு கோரியில் கொடிபறந்துகொண்டிருந்தது; அந்தக்கோட்டைக்குப் பின்னால் கொஞ்சந்தூரத்தில் ஒரு பட்டணத்தைப்போலக் கட்டடங்களும் ஸ்தூபிகளுந்தோற்றின. படைவீரர்களாகிய செந்துக்கள் ஒரேமாதிரியான உடுப்பு தரித்துக்கொண்டு, ஏற்ற அளவுள்ள துப்பாக்கியையும் கத்தியையும் பிடித்துக்கொண்டு, அந்தக் கொத்தளங்களைக் காத்துக்கொண்டிருந்தன. இவையெல்லாம் நாய்களே; எதிர்க்கவந்த கட்சியை அணுகவொ[illegible]மல் மதி[illegible]க காப்பது தான் இவற்றின் அலுவல். [illegible]க்கட்சியும் நாய்கள்தான், அவை முற்றுகைபோட்ட ஆ[illegible]தன. அந்தக் களரிமேடையின் முன்புறத்திலே மட்[illegible]வான கட்டடங்களும் பள்ளமேடான தரையும் [illegible]டன; சோதனைபார்க்கி[illegible] அவற்றிலிருந்து புறப்ப[illegible]சிப்பாய்களுக்குத் தலைவனான நாய் ஒரு அந்தஸ்[illegible]ரைப்போல உடுத்திக்கொண்டு மிகுந்த கவனத்தோடு [illegible]தக்கோட்டையைச் சுற்றிப் பார்த்தது; அது பூராயமாய்ப் பார்வை இட்டதையும் தனோடுகூடவந்த சேனையோடு யோசனைசெய்ததையும் பார்த்தால், எதிர்ப்பதே சரியென்று தீர்மானித்ததாகக் காணப்பட்டது. மதில்களைக் காத்துக்கொண்டிருந்த சிப்பாய்களும் அந்த யோசனையைக் கண்டறியாமற் போகவில்லை; காவ[illegible]

காப்பதாகிய ஒருவாய் எதிர்க்கட்சியைப் பார்த்தமாத்திரத்தி
ல் வெடி. தீர்த்தது; இது பீரங்கிகுண்டு பாயும் வாயிலண்
டை ஒவ்வொன்றும் சாக்கிரதையாயிருக்கும்படி தெரிவிக்க
ப்பட்ட அறிகுறியாகக் காணப்பட்டது. சற்றுநேரத்திற்கெ
ல்லாம் எதிரிசேனை அணிபோட்டேறத் தலைப்பட்டது; ஆனா
ல், அகழியைக்கடந்து மதிலண்டை வருவதற்குக் குறுக்க
ணை போடவேண்டிய தவசியமா யிருந்தபடியால், அப்பிர
காரமே சில சிப்பாய்கள் கொடிக்கிளைகளால் செய்யப்பட்
டிருந்த மிதவைசாரத்தை யிழுத்துக்கொண்டுவந்து கோட்
டைக்கு நேராக அகழியிற்றள்ளி ஒழுங்குபடுத்தின.

(இன்னும்வரும்.)

சாத்திரத்துட்சமயம்புகுந்து

பாமராக்கிய சங்கை.

கோயமுத்தூர்ச் சுதேச தருமரட்சணி சபையின் ·ாரியத
ரிசியும், மதவிருக்ஷம், அல்லது பூலோகத்திலுள்ள பெரிய
மதங்களின் சரித்திரம் ஸ்திரிபுருஷ சாமுத்திரிகாலட்சணம்,
இந்து தருக்கசாத்திரம், இராஜயோகசாத்திரம், சேலம் கோ
யமுத்தூர் பூமிசாஸ்திரம், வேதாந்த சூரியோதயம், பஞ்ச
திவ்விய தேசசரித்திரம் முதலான கிரந்தங்களின் கருத்தரு
ம், கலாநிதிப் பத்திரிகாசிரியருமாகிய சேலம் பகடாலு -
நரசிம்முலு நாயுடவர்கள் சமுகத்துக்கு விஞ்ஞாபனம்.

ஐயா, இத்தனைவிதமான அரியநூல்களை இயற்றி உலகோ
பகாரமாய் அச்சிட்டு விற்பனைசெய்கிற தாங்கள் இப்போது
நவீனமாக இயற்றி இருக்கும் "ஆரியருடைய சங்கீதசாத்தி
ரத்தின் சரித்திரம்" என்னும் நூலை நாம் கையேற்றுப் படித்
துப்பார்க்க அதனுள் அநேகம் சங்கைகள் ஜநித்தமையால்,
தங்களிடமாகவே அவைகளை நிவிர்த்தித்துக்கொள்ள எண்
ணி இரண்டொரு சங்கைகளை இங்கு வினவத்துணிந்தேம்.
அவைகட்குத் திருப்திகரமான விடைகொடுப்பீர்களென்று
நம்புகிறேம். அவைகட்கு விடையளிக்கமாட்டே மென்பீர்
களாயின், அந்நூலை யேன் வெளியிட்டீர்கள் என்று கேள்வி
புறப்படும்; உலகோபகாரமாய் என்பீராயின், உலகத்துள்
ளோர் அதைப் படிக்குங்கால் நேரிடுகிற சந்தேகங்களைப் ப
ரிகரியாவிடத்து அது எப்படி உலகத்தாருக்கு உபகாரப்படு
வது என்னுங் கேள்வியுண்டாம்; முகதாவில் வாய்மொழி
மொழியாகவே சந்தேகங்களைக் கேட்டறியலாம் என்பீராயி
ன், அப்படியே தாங்களும் சங்கீதவரலாறுகளை யாவருக்கு
[illegible]யமொழி[illegible]யாய்ப் [illegible]போதிப்பதொழிந்து புத்தகமாக ஏன்
[illegible]ியிட்டீர்கள் என்னுங் கேள்வி பிறக்கும்; வாய்மொழி
[illegible]க்கே உபயோகப்படும் லிகிதரூபம் பலருக்கும் உபயோ
[illegible]கும் என்பீராயின், அப்படி நாமடைந்த சந்தேகத்தைப்
[illegible]ல் பலருமடையக்கூடுமே, அதற்கு நிவிர்த்தியும் பலர
[illegible] வேண்டுமாகையால் இவ்வாக்ஷேப சமாதானங்களை
[illegible]லிகிதமூலமாகவே நடத்தவேண்டுமல்லவா வென்னுங்
[illegible]வி பிறக்கும்; அதனாலெமக்கு அச்சுச்சிலவு நேரிடுமே
[illegible]பீர்களாயின், தங்கள் சொந்தத்திலேயே யொரு பத்
[illegible]க யிருக்கவில்லையா என்னுங் கேள்விவரும்; எனக்குச்
[illegible]னஞ் சொல்லத்தெரியாது என்பீர்களாயின், அப்போ
[illegible]மக்குண்டாயிருக்கிற சந்தேகங்களைப்போலவே அந்த
[illegible]ல் தங்களுக்கும் சந்தேகமுண்டாயிருப்பதாக வெளிப்
[illegible] பட்டாலோ தமக்கே பல சந்தேகங்களுண்டாயிருக்கி
[illegible]லை வெளியிட்டுப் பலருக்குஞ் சந்தேகமாகிற மனக்குழ
[illegible]தை யுண்டாக்கினர் என்று புலப்படும்; ஆகையால் இந்
[illegible]வெளியிட்டது லோகோபகாரத்திற்கு என்பதுபோய்
[illegible]த்திற்கு என்று வெளிப்படும்! ஆதலால் அடியிற்க
[illegible]கைகட்கு விடையளிப்பது தங்களுடைய_ தீராக்க
[illegible]க்கிறது. சங்கையாதென்பீரேல் வருமாறு.—
[illegible]ப்பிரமம் தனது இச்சையினால் ஒலிவடிவான தன்
[illegible]த்தைச் சப்தப்பிரமமாக ஆகாயத்திற்சனிப்பித்து ச
[illegible]னுருக்கு உபதேசித்தருளினர் என்று ஷை புத்தகம்
[illegible] பக்கம் சங்கீதத்தின் ஆதிஸ்திதி என்பதற்குக் கீழ்வ
[illegible]க்கிறீர்கள். ஸ்ரீபரப்பிரமத்திற்கு இச்சையென்பது
[illegible]வண்டுதல் வேண்டாமையிலான் என்று ஆன்றோர்
[illegible]ா! ஆனால் அவ்விச்சை சமயப்பிரயோசனங்கருதி
[illegible]பாலும். அற்றாயினுமாகுக. ஒலிவடிவான தன் சு
[illegible] யென்றீரே பரப்பிரமத்தின் சுரூபம் ஒலிவடிவே
[illegible] அல்லது அதற்குப் பலவித சுரூபங்களுண்டாயிருந்
[illegible]வகளில் இவ்வொலிவடிவும் ஒன்றாயிருக்குமோ? தெ
[illegible]ல. ஐயா, கிரந்தகருத்தரவர்களே! பிரமத்தின்சுரூ
[illegible]னதுதானென்று நாம் நிச்சயமாயறியும்படி இன்
[illegible]றை தெளிவாயறிவிக்க வேண்டுகிறேன். சப்தப்பி
[illegible]காயத்திற் சநிப்பித்து என்றீரே ஜநிப்பித்து என்னு
[illegible]ம் பிறவினைப்பொருளில் வருவதால் ஜநித்ததொ
[illegible]க இரண்டு பிரம்மமாகிறபடி
யால், தாய்ப்பிரமத்திற்கு ஸ்ரீ பரப்பிரம்மம் என்றும் சேய்
ப்பிரமத்திற்கு சப்தப்பிரமம் எனவும் பேர்வைத்து விளக்கி
க்காட்டினீர்கள்போலும்! ஆனால் அப்போது பிறந்ததாயும்
பிள்ளையுமாகிய இரண்டு பிரமங்களோடே நின்றுவிட்டதோ!
அதன்பின்பு பேரப்பிரமம் கோட்பேரப்பிரமம் முதலிய
வைகளும் பிறந்தனவோவென்பது எமக்குப் பெரிய சந்
தேகமாயிருக்கிறபடியால், ஐயா, கிரந்தகருத்தரவர்களே!
சீக்கிரத்தில் சந்தேகநிவிர்த்தி செய்ய வேண்டுகிறேன். சது
ர்முகனுருக்கு உபதேசித்தருளினர் என்றீரோ அருளினர் என்
று உயர்திணை யிறந்தகால வினைமுற்றாகக் குறித்தீராதலால்
இதற்கு எழுவாய் எங்கிருக்கிறதோ அதைக்காட்டும்படி வே
ண்டுகிறேம். ஐயா, கிரந்தகர்த்தாவே! சதுர்முகனுருக்குப
தேசித்தது தாய்ப்பிரமமோ? சேய்ப்பிரமமோ? அவ்விரண்
டுமல்லவோ? இது பெரிய சந்தேகமாயிருப்பதால் நல்ல
விடை கொடுப்பீர்களென்று எதிர்நோக்குகின்றோம். இவை
களுக்குமட்டும் இப்போது விடைகேட்டுச் சந்தேகநிவிர்த்தி
செய்துகொண்டு மற்றுள்ளவைகளையும் கேட்கலாமென நி
னைத்து ஈண்டிவ்வளவில் நிறுத்துகிறோம்.—சு-ன்.

புலவர்பெருமான் யாவர்?

புலவர் என்பதற்கு நாவலர் எனவும், கற்றவர் எனவும்
பொருள் அமையும். குற்றமறக் கல்வியைக்கற்று அக்கற்ற
வழியில் நிற்பவரே கற்றவராவர். குற்றமற மற்றவர்க்குப்
போதிப்பதே கற்றதனாலாயபயன். இதற்கு, கற்க கசடற
க் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக எனவும், கல்விக்
கழகு கசடற மொழிதலெனவும், ஆன்றோரால் அழகா
கக் கூறப்பட்டதே நிதரிசனம். இது இவ்வண்ணமிருக்க,
சென்ற மேமீ 30உ வெளியான தத்துவவிவேசினி யென்
னும் நமது பத்திரிகையில், V. K. எனக் கையொப்பமிட்ட
சுயக்கியான நண்பர்கள் புதுவையில் வசிக்கும் ஓர் புலவர்
பெருமானைப்பற்றி கேட்டையின்சேட்டை யென்ற மகுட
வாயிலான் சிலமொழிகள் தொடர்ந்தெழுதி யிருக்கின்றதை
க்கண்டேம். அதனால் அறியாமை, மனோபீதி, மௌட்டியம்,
ஆராச்சியின்றி நம்பல், ஏழமைக்குணம், சித்தசபலம் என்னு
ம் பலவகைப்பட்ட பைங்கூழ்கள் சூழ்ந்தற்ற ஓர் வைணவ
மதபோதகரொன்றறிந்தேம். ஆ! கற்றவரெனப் பெயர் தா
மே வகித்துக்கொண்ட அப்புலவர்பெருமானுக்கு அவ்வித
சேட்டைகள் மாத்திரந்தானா? இல்லை, இல்லை. இன்னும் வி
[illegible] தமது தென்கலை [illegible] நின்றநட்
ட சைவம் முதலாகிய மற்ற மதங்களை துவேஷிப்பதும்,
வடகலையாரை வக்ரபுண்டரதாரிகளென்றும், பரமபதத்திற்
கருகரல்லவென்றும், பின்ன சம்பிரதாய முடையவர்களெ
ன்றும் பன்முறையாத் தூஷிப்பதும், தென்கலையிலும் இ
த்தம்போன்ற சிகப்புநிற ஸ்ரீசூர்ணமிடுபவரை பூஷிப்பதும்,
மஞ்சள்வர்ண ஸ்ரீசூர்ணமிடுபவரை தூஷிப்பதுமே அவருக்
குரிய விசேஷ சேட்டைகள். இவ்வித சேட்டைகள் பொரு
ந்திய கற்றவரும், கல்வி அறிவில்லாச் செல்வந்தரும், தேசா
பிமானமில்லாக் கனவான்களும் உள்ள நாடு எங்ஙனங்கடை
த்தேறும். அந்தோ! இவ்வித அந்தஸ்திலுள்ள சுயகாரிய
சீமான்கள் பரம்பரையாய் அவதரித்துக்கொண்டிருப்பதனா
லன்றோ நமது தேசம் பராதீனப்பட்டுக்கொண்டே வருகிற
து. இவர்களுக்கு ஐக்கிய பத்தியமும், கல்விஅறிவும், தேசா
பிமானமும், உண்மையை உணரும் குணமும் எப்போதுதா
ன் வருமோ அறிகிலேம், அறிகிலேம்.

புதுவை - தத்துவநேயன்.
A. C. M.

N. B.—பொதுவிஷயங்களைவிட்டு வன்மம் சாதிக்கும்படி
யெழுதுங் கடிதங்கள் பிரசுரிக்கப்படா.—ED.

இந்தியா சுயாதீனமடையுமா?

இஃது
பிரம்மானந்தராகிய கேசவசந்திரசேனர்
சகோதரராகிய
கிருஷ்ணபிகாரிசேன ரவர்கள்செய்த பிரசங்கம்.

அடியில் எழுதப்படும் விஷய மகுடமாய் நிற்கும் இக்கே
ள்வி மிகவும் பெரியது, இது பொலிதிகல் சம்பந்தமுள்ள
கேள்வியேயாகும். பொதுவாய்ப் பிரஜைகளைப்பொறுத்த
பல காரியங்களில் உண்டாகியிருக்கும் ஊக்கமும் உற்சாக
மும் அளவுகடந்து அதிகரித்தலால், பொலிதிச்சம்பந்தமாக
ச் சொல்வதெதுவும் அச்சத்தையும் சந்தேகத்தையுமே வி
ளைவிக்கும். எமது பொலிதிகல் அபிப்பிராயமோ குற்றமற்
றது. சீர்திருந்துதங்களைப்பற்றியேனும், இராணுவசம்பந்த
த்திலாவது துரைத்தன சம்பந்தத்திலாவது யாதொரு சுதந்
தரத்தைப்பெறுவது குறித்தேனும் யாம் பேசவரவில்லை.

நம்மவர்களின் நிலைமையை யுயர்த்தும்படி அறிஞர்களால்
இந்தியாவிற் செய்யப்படும் சீர்த்திருத்தங்களில் இரக்கமு
டையோமாய், அச்சம்பந்தமுள்ள எத்தகைய வேற்பாடும்
சிநேகத்தையும் ஒற்றுமையையும் வளர்க்கும் நோக்கங்களை
யுடையனவா யிருக்கின்றனவென்பதையே விளக்குவேம்.
பொலிதிகல் விஷயங்களை நாம் கவனிக்குமுன் ஒற்றுமைக்
குரிய சங்கங்களின் சம்பந்தமான கேள்விகளைக் கவனிக்க
வேண்டும். சங்கங்களின் ஒற்றுமையும் சீர்த்திருத்தங்களும்
குறைந்த எத்தேசத்திலும் பொலிதிகல் விஷயங்கள் அபா
யத்தையே யடையும். சங்கங்களின் ஒற்றுமை குறையும்
போது வேற்றுமைகளும் அபிப்பிராய பேதங்களுந்தோன்
றும். சீர்த்திருத்தங்கள் குறையும்போது அநாகரீகமும், அ
ஞ்ஞானமும், அனுசாரங்களுமே நிலைபெற்றிருக்கும். தேச
நன்மைக்குக் காரணமான இவை தாறுமாறாகி இருக்குமா
யின், பொலிதிகல் விஷயவிசாரம் தலையெடுக்குமோ? இங்
கிலாந்தையும் இந்தியாவையும் ஒப்பிடுவோமாயின், அனை
த்தன ஆளுகைக்குரியனவாகிய சட்டங்களும், சீர்த்திருத்த
ங்களைத் தினே தினே செய்யும் ஏற்பாடுகளும் இவ்விரண்டு
தேசத்திலும் சமமாய்க்காண இடமுண்டோ? இல்லை. இந்
தியாவில் பொலிதிகல் விஷயமாய் விசாரமும், ஒற்றுமைச்
சங்கங்களினூற் சீர்த்திருத்தங்களும் மிகவுங்குறைவே. இந்
தியாவில் எவ்வித சட்டங்களும், பொலிதிகல் சீர்த்திருத்த
ங்களும் பிரஜைகளின் கடினசித்தத்தை யுருக்கத்தக்கவை
யன்று. தனவான்கள் ஏழைகளின் நிலைமையைச் செவ்வனு
கச் செய்தல்வேண்டுமென்றும், கல்விமான்கள் தமது நாட்
டவரின் அஞ்ஞானத்தைப் போக்கவேண்டுமென்றும் இரக்
கங்கொள்வதில்லை. பலசாதிப் பிரிவுகளால்,பிரஜைகள் துன்
பம் நேர்ந்தபோதும் ஒருவருக்கொருவர் அபிமானத்தாற்
பரிதபிக்கும் சிந்தையற்றவரானார்கள். சட்டங்கள் என் செ
ய்யும்? சட்டங்கள் சாதியை யாக்குமோ? ஒருசாதியார் தா
ம் நடத்தற்குரிய சட்டங்களையாக்குதல் கூடும்.

இந்தியாவில் இந்துக்கள் என்பேர் ஒரு சாதியரா, அல்ல
து பல சாதியரா? ஒரு சாதியென்பது இன்றி, இந்தியாவி
ல் பலசாதியானபோது சட்டங்கள் பலவகைப்படுமேயன்
றி ஒருவகையாய் நிற்க இடமேது? பல சாதியராய்ப் பிரிந்
தவர்களை ஒற்றுமையால் இணக்கி ஒருசாதியாராகச் செய்
வதென்ன இலேசின் முடியத்தக்க காரியமோ?—பி-னி.

பிரம்மவித்தியா.

இம்மகுடத்தையுடைய மாதாந்த பத்திரிகை யொன்று
ஜூலைமீ 30உ சமஸ்கிர்தமும் தமிழுமாக சிதம்பரம் பிரம்
வித்தியா யந்திரசாலைத்தலைவர் ஸ்ரீமான் - கு. ஸ்ரீநிவாச
சாஸ்திரியார் அவர்களால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அது
டிம்மி இரண்டுபக்க அளவில் 16-பக்கங்கொண்டது. அதன்
விலை வருஷம் 1-க்கு $3\frac{1}{2}$-ரூபாயும், பிரதி 1-க்கு 5-அணுவு
மாம். இதில் தபால்செலவு அடங்கியிருக்கிறதோ யென்ன
மோ தெரியாது. அதில் அடங்கிய விஷயம்—ஸமஸ்கிர்தம்,
மதமும் அதன் பிரயோசனமும் ஆசிரியரும், நமது மதவி
ருத்தி, ஒற்றுமை முதலிய. அப்பத்திரிகையின் அச்சுப்பதிவு
காயித முதலியவற்றையும் விர்த்திசெய்வதுடன் எழுத்துப்
பிழையறப் பரிசோதிக்கவேண்டி யிருக்கிறது. இதுகாறும்
இத்தென்பாகத்தில் சமஸ்கிர்த பத்திரிகை பிரசுரிக்க யாம்
கண்டிலம். சமஸ்கிர்த பாஷாபிமானிகளும், இந்துசமயா
பிமானிகளும் இதைப் பரிபாலித்து வாசித்து யோசித்து வ
ருவார்களேல், தங்கள் மதநிலை இவ்வளவென விளங்கும்.
அதன் யுத்தி, யூகம் முதலியன சிற்சில பாகங்களில் எம்ம
னோர்க்கு நியாயவிருத்தமா யிருப்பினும், அத்தகைய பத்திரி
கை யொன்று இருக்கவேண்டுமென்பதே எம்மனோர் கருத்
து அவ்விருத்தங்களை மறுமுறை எடுத்து வியவகரிப்பாம்.
இப்பத்திரிகையை எமக்கனுப்பியவர்க்கு வந்தனம் செய்கி
ன்றோம்.

வர்த்தமானம்.

ஓர் அஷ்டாவதானி—நிகழ்ந்த ஜூன்மீ உஎஉ கோயமுத்
தூர் காலேஜ் ஹாலில், காஞ்சிபுரத்திலிருந்துவந்த ஸ்ரீமான்
சதாவதானம் சக்கிரவர்த்தி வேதாந்ததேசிகாசாரியார் பல
அவதானங்கள் செய்தார். அக்காலத்தில் நமது நகரத்திலி

சிறுத்து வெண்மையாகவும் இருக்கும். இந்தப்புஷ்பங்க
சிவபூஜைக்கு உபயோகப்படுத்துவதுண்டு. இந்தச் செடி
ன் சமூலத்தை இடித்து இரசமெடுத்து அதில் அரைவீச
படி ரசத்தில் அரைவீசம்படி நல்லெண்ணெயை (எள் எ
ண்ணெயைச்சேர்த்து நாகபாம்பினால் கடிக்கப்பட்டு விஷ
றிய ஆடுமாடு முதலான கால்நடைகளுக்கு உள்ளுக்கு
கொடுக்க உடனே அரைமணிக்கெல்லாம் விஷம் நீங்கிவி
ம். மேற்படி இரசத்தில் சம அளவாக வேலிப்பருத்தியி
இரசம், காய்ந்த புகையிலை இரசம் சமஅளவாகவும், எரு
கன் பழுப்பு இலை இரசம் சம அளவாகவும் சேர்த்து ம
ஷர்களுக்குக் கொடுக்க அரைமணிக்கெல்லாம் விஷந்தீரு

இந்துக்களுக்கு ஒருவழியில் நல்லகாலம்—ரிவினியுபோ
ட்டாரவர்கள் பாலர்களுடைய விவாகத்தைத் தடுக்க முத
ல் யத்தனித்தார்கள். மைனர்களுடைய விவாகம், அவர்
ள் தேகபலத்திலும் மனோபலத்திலும் பெருகும் பக்குவக
லம்வரையில் நிறுத்தப்படும் விஷயத்தில் கோர்ட்டார்களு
கு அதிக சம்மதமென்று ஸ்டான்டிங் ஆர்டர் போட்டிரு
கிறார்கள். மேலும் அவ்விஷயத்தில் கோர்ட்டாரவர்களு
டைய தீர்ப்பான அனுமதியின்றி யாதொரு ஏற்பாடுகளு
செய்ய இடம்விடாமல் சாக்கிரதையாயிருக்கும்படிக்கும்
ங்கள் அபிப்பிராயம் நன்கு நிறைவேற கலெக்டர்கள் தங்
ளுடைய செல்வாக்கை சிநேகமோலாயாய் மைனர்களுடை
ய பந்துக்களிடத்தில் உபயோகிக்கும்படியாயும் கலெக்ட
களெல்லாரையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

சீனாவில்தோன்றிய உற்பாதக்குறி—சீனாதேசத்தில் செ
ன்ற ஏப்பிரல்மீ உஉஉ இராத்திரி மகத்ஜோதியுள்ள ஒரு
நட்சத்திரம் விழுந்ததாகவும், அதன்பின்னே ஆகாசத்தி
உடும்பைப்போலும் தலை, வயிறு, கால், வால், உடையதா
ஒரு அதிசயிக்கத்தக்க சோதியுருவம் உ0-நிமிஷங்கள்வரை
யில் தோற்றிக்கொண்டிருந்ததாகவும் அறிகிறோம். இது உ
ற்பாதக்குறியென்றே பல்லோர் கூறுகிறார்கள். ருஷியாருக்
கும் மண்ணாசை கனவிலுமறியாத இங்கிலாந்துக்கும் நோக்
கம் சீனத்தின்மேல் விழுந்திருக்கிறது. ருஷியா சீனாவைச்
சமீபித்திருக்கின்றது. இங்கிலாந்தும் பர்மாவைச் சுவாதீன
ப்படுத்தியிருப்பதால் கிழக்கே சீனாவை யெட்டிப்பிடிக்கு
தானத்தில் இருக்கிறது. அதுவன்றி திபெத்துக்கு ஆங்கிலே
யவர்த்தகர்களும் போய்வருவதாக இருக்கிறார்கள். சீனமு
தூங்கவில்லை, எச்சரிக்கையோடுதான் இருக்கிறது.

இந்துக்களில் பலர்—பொய்சொல்வோரை பூஜிப்பர், மெ
ய் சொல்வோரை [illegible] இவை மாறுகிறவரையி
இந்தியா சீரும் சிறப்பும் பெறாது.

புலவர்களே!—பிரஜைகளுக்குப் புராணக்கதைகளைச்
ல்லி பேதைகளாக்காமல், வேதக்கருத்தைச்சொல்லி
மையோராகச் செய்யுங்கள். இப்படி செய்யாவிட்டா
ந்துதேசத்தார் எப்படி அஞ்ஞானத்திலிருந்து நீங்குவார்
மேலும் சீரும் சிறப்பும் எப்படி பெறுவார்கள்.

புதுவை பொன்னுதம்பிப்பிள்ளை.

இவர் புதுவைக்குப் பெரும்புலிபோன்றவர்.ஜனோப
ரி. ஜாதிப்பற்று, சமயப்பற்று முதலிய அசுத்தங்களை
ல்லாம் (தமது கல்விகேள்வியாகிய கயத்திற்குளித்து
போக்கியவர். இவரோடு சிலபோது நாம் வார்த்தை
டிவந்த விடத்து இவரும் சங்காநாஸ்திகரென்றே
ளியிட்டார். இவர் தமது பேரையுங் கீர்த்தியையும் நி
நிறுத்திப் பூரணமாய்விட்டார். இதைக் கேள்வியு
நாம் விசனமுற்றோம்.—ED.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியானபத்திரிகை.

Vol. V.—No. 30.] MADRAS:—SUNDAY JULY, 25, 286 A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

இயற்கையறிவும், பகுத்தறிவும். 3.9

ராபர்ட்டு கூப்பரவர்களுடைய

அபிப்பிராயத்தையனுசரித்து,

அமரம்பேடு

முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(கஉ௫ - வது பக்கத் தொடர்ச்சி.)

சண்டை தொடங்கும்படி தமுறடிக்கவே, கோரமான யுத்தம் நடந்தது. மதிலிலுள்ள துளைகளின் வழியாய் வரிசைவரிசையாகப் புகை கிளம்பிற்று; முற்றுகைபோடுஞ் சேனையானது அந்தத்தீயைச் சட்டைபண்ணமல் கும்பல்கும்பலாய் நெருங்கிவந்து அகழியிலிறங்கி, குழப்ப மதிகமாயிருந்தும், மதிலின்பேரில் ஏணிகளைச்சாய்த்தது. அப்போது [illegible] டை முடிகிறது. முதலில் ஏணியின்மேலேறின தலைமையானவைகளை கோட்டைக்குளிருந்த சிப்பாய்கள் வெகு தீரத்தோடு எதிர்த்தன; இந்தச்சமயந்தான் வெகு கண்காட்சியாயிருந்தது. இந்தச் சேனைக்குத் தலைமைகாய் அற்புதங்கள் செய்தது, அது சேனையாள்களைத் தூண்டிக்கொண்டு, இருந்தாற்போலிருந்து இங்கிருந்தங் கோடுகிறதும், அங்கிருந்திங் கோடுகிறதுமாயிருக்க, அதுவும் அதனோடுகூட ஏறினவைகளும் ஏணியுடனே உருண்டு புரண்டு விழும்படி இரண்டாம் வரிசைக்கொத்தளத்திலிருந்து இரண்டுதரந் தள்ளப்பட்டன; ஆனால் அது சளையாததாய், தோல்வியடையும்போதெல்லாம உடனுக்குடனே தீரங்கொண்டதாகக் காணப்பட்டது. பார்க்கப்பார்க்க என்னவேடிக்கை! இருகட்சிகளிலும் சிறுசிறு பீரங்கியின் வெடியையும், தமுறடிக்கிற சத்தத்தையும், எக்காள கோஷத்தையும், வீரர்களின அட்டகாசத்தையும் பார்த்திருந்தவர்கள் நாய்களால் வேடிக்கை செய்யப்படுகிறதென்பதை மறந்து அந்தச்சமயத்தில் உண்மையாய் நடக்கிறதாகவே நினைத்தார்கள். அந்தச்சண்டையில் குரைக்கிற சந்தடி கிடையவேகிடையாது. அநேகவிசை மயிரிழையளவாகத் தப்பித்துக்கொண்ட பிறகு, தலைமையான நாய் தன் சேனையோடு மூன்றாங்கொத்தளத்தின்மேலேறி, எதிரியினுடைய கொடியை யிறக்கிவிட்டு, இங்கிலீஷ்கொடியை யேற்றிற்று; கொத்தளங்களை [illegible]யசாலிகள் காவல்காத்தன; புகையடங்கினபோது,'மகா[illegible]சாவைக் கடவுள் ரட்சிப்பாராக' என்னுமிராக ஓசையுண்டாயிற்று.

[illegible] கற்பிக்கப்படத்தக்கவையென்றும், அதினுடைய அறிவோடுங்கூடிய சக்திக்குமிஞ்சின சக்தி[illegible]ற் கிருக்கிறதென்றும், மிகவும் விந்தையான மே[illegible]யத்தினால் நிச்சயமாய்த் தெரியவில்லையா? ஒன்[illegible]த்தபடி செய்கிற சக்தியும் ஞாபகசுத்தியுமாகிய மனத்தொழில் அந்த வாயில்லாச் செந்துக்களிட[illegible] நிசயமாகவே விளங்குகிறது. விவேகமென்பதெவ்[illegible]திராவிட்டால் அது சாத்தியமாகுமா?

[illegible]ஸ்ஹாக் என்பவர் தம்முடைய ஷெப்ஹெர்டுகாலெ[illegible]ட்கிரந்தத்திலே, நாய்கள் தமக்கக்கறையுள்ள[illegible]திரம், [illegible]ச் சொல்லப்பட்டதைத் தெரிந்துகொ[illegible]ஸ்து [illegible]னால் சமைபடுத்துக்காட்டி, சொல்லப்பட்டதை[illegible]க்கொள்வதாலுண்டாகு விந்தையான சக்தியுள்ள ஹெக்ட்டர் என்னும் பெயரையுடைய ஆட்டுமந்தைக்காவல் நாயைக்குறித்து அவர் சொல்லியிருப்பதாவது—ஒருநாள் ஜேம்ஸ்ஹாக் என்பவர் "நான் நாளையதினம் புவ்வர் ஹோப்பென்னு மூருக்குப்போகிறேன், வருவதற்கு ஒருபட்சஞ்செல்லும், மற்ற நாய்களோடு எந்நேரமுஞ் சண்டைசெய்கிறபடியால், ஹெக்ட்டரை என்னோடுகூட இட்டுக்கொண்டுபோகேன்" என்று தன் தயாருடனே சொன்னார். அந்தச் சம்பாஷணையைக் கிட்டவிருந்து கேட்டிருந்த அந்நாய் மறுநாள் காலமே காணமற்போயிற்று; பின்பது புவ்வர் ஹோப்பென்னு மூரைச்சேர்ந்து, அவர் வருகையை யெதிர்பார்த்துக்கொண்டு ஒரு மேடையின்மே லுட்கார்ந்திருந்தது; அவ்வூருக்கு ஒரு பிரவாகமான ஆற்றையும் நீந்திக் கடந்துபோயிற்று. பின்னும் ஆச்சரியமான தென்னவென்றால்- வார்த்தைகளின் அர்த்தத்தைத் தெரிந்துகொள்ளும்படி நாயைப் பழக்குவதுமல்லாமல், அவற்றை யுச்சரிக்கவும் பழக்கலாம். வித்துவானாகிய லீப்னீஜ் என்பவர் ஜெர்மனியில் சிலவார்த்தைகளை யுச்சரிக்கக் கற்பிக்கப்பட்ட ஒருநாயைத் தான்பார்த்ததாக பிரான்சிலுள்ள சாஸ்திராபிவிர்த்தி சங்கத்தாருக்கு அறிக்கைசெய்தார். அந்த நாய்க்கு வாத்தியார் அத்தேசத்திலுள்ள ஒருநாட்டுப்புறத்துப் பையன்; அவன் அந்த நாயின் ஓசையில் தெளிவில்லாவிட்டாலும், மானிடவொலிக்குச் சமானமான வொலி ஒருவகையா யிருக்கக்கண்டு, அதற்குப் பேசக் கற்றுக்கொடுத்துப் பார்ப்போமென்று எண்ணங்கொண்டான். படிப்பு ஆரம்பித்தகாலத்தில் அந்நாய்க்கு மூன்றுவயசானதால், அவனுடைய எண்ணம் நிறைவேறுவது கஷ்டந்தான்; ஆயினும் அதிக பிரய[illegible]யினாலும் விடாமுயற்சியினாலும் மூன்றுவருஷத்தில் [illegible] ஜெர்மன்வார்த்தைகளை யுச்சரிக்கும்படி அதற்குக் க[illegible]ரன். [illegible]ட்டீ, காப்பி, சொக்கொலேட் வரவழைத்தும், மற்றுஞ் சிலவார்த்தைகளை யுச்சரித்தும், பார்த்தவர்களை யாச்சரியப்படச் செய்துவந்தது!

இதைவிட, பகுத்தறிவு - யோசனை - உணர்ச்சி - ஞாபக முதலிய உயர்வான மனோசக்தியைக்காட்டவல்லது வேறொன்றிருக்கிறதா? இந்த விஷயத்திலே நித்தியாத்ம சித்தாந்தக்காரர்கள் மனிதனுடைய பகுத்தறிவுக்கும் மிருகத்தினுடைய இயற்கையறிவுக்கும் என்னவித்தியாசஞ் சொல்லுவார்களோ தெரியவில்லை. மிருகத்தினிடமாய் வெறும் பதார்த்தமே அப்படிப்பட்ட மனத்தொழிலைச் செய்யுமென்றால், மனிதனுக்கேன் அப்படிக்கூடாது? ஒருவிஷயத்தில் ஆத்துமா வேண்டியிருக்கிறதென்றால், மற்றோர் விஷயத்திலும் ஆத்துமா என் கூடாது? வாரத்தின் நாள்களைச் சரியாயெண்ணுவது மனத்தொழிலே;—அந்த யுணர்ச்சியையுடைய ஒருநாயைக்குறித்து நான் சிலநாளைக்குமுன்னமே வாசித்திருக்கிறேன். அது கசாய்க்காரர் கொட்டடிகளிலே தனக்காக இரை சம்பாதித்துக்கொள்ளச் சனிக்கிழமைதோறும் மார்க்கட்டுக்கு இரண்டுமயல்தூரஞ் சென்றது. வேறொரு நாயைக்குறித்து வாசித்திருக்கிறேன், அது ஒரு ஐரிஷ்காரனது, அதை யவர் இங்கிலாந்துதேசத்தில் விற்றுப்போட்டார்; அது சுக்கிரவாரதினத்தில் ஆகாரந் தொடுவதேயில்லை. அந்த ஐரிஷ்காரர் அதைத் தன்னைப்போலவே நல்ல கத்தோலிக்கு நாயாகச் செய்துவைத்திருந்தார். அந்த நாய்க்கு ஆத்துமாவென்பதொன்று அகத்திய மிருந்திருக்கவேண்டியதே.

நிக்கர்பாக்கர் மாகேஜின் என்னும் கிரந்தத்திலே, ஒரு பட்சியைக்குறித்து விந்தையான விருத்தாந்தமுண்டு. கருங்கல் பேர்த்தெடுக்கு மிடத்திற்குச் சமீபத்திலே அக்குருவி கூடுகட்டி முட்டையிட்டு அடைகாத்துக்கொண்டிருக்கையில், பாறைகளைப்பேர்க்க மருந்துவைத்துக் கொளுத்தும் வெடியினால் பலவிசை பயந்து நடுக்கமுற்றது. வெடிகிளம்புவதற்கு முன்னமே மணியாட்டுகிற வழக்கத்தை அது சீக்கிரத்தில் தெரிந்துகொண்டு, ஆள்கள் வெளியில் வந்துவிடுவது போலவே, மணியாட்டுங் குறிப்பறிந்தமாத்திரத்தில் பத்திரமான இடத்திற்போய்த்தங்கி பின்பு திரும்பிவந்துகொண்

டிருந்தது. இதை வேடிக்கைபார்க்கிற சிலர் கண்டுகொண்டு, அதை மருட்டவேண்டுமென்று வீணாய் மணியாட்டினார்கள்; அக்குருவி அதை உண்மையென்று நம்பிப் பறந்துபோய்க்கொண்டிருந்தது; அந்தச்சமயங்களில் வேலையாட்கள் வெளியில் வராமையால், அதைச் சூதென்று சீக்கிரத்தில் கண்டறிந்து, பின்பு ஆள்களும் வெளியில் வந்தாலொழிய, மணிச்சத்தத்தைக் கேட்டமாத்திரத்தில் அது பறந்துபோவதில்லை. அந்தப்பட்சியினிடத்திலே கவனமாய்க் கண்டறியுஞ் சக்தியிருந்ததாகவும், நாம் அனுபவத்தினாலறிந்துகொள்வதுபோலவே அதுவு மனுபவத்தினாலறிந்துகொண்டதாகவும், அதின் செய்கையால் ருசுவாகவில்லையா? யானையானது ஒருதரம் படுகுழியில் வீழ்ந்து தப்பித்துக்கொண்டால், பின்பு காட்டில் சஞ்சரிக்கும்போது வெகு சாக்கிரதையாயிருக்கிறது; தன் துதிக்கையால் மரத்தினின்று ஒருபெருங்கிளையை முறித்து, வழியிலே யேதாவது படுகுழியிருக்கிறதாவென்று கண்டுகொள்ளத் தரையை மிதிப்பதற்கு முன்னமே அதைக்கொண்டு தரையுறுதி பார்க்கிறது; பாலத்தின் பேரில் போகும்போதும் அவ்வாறே யோசனையோடு பிரவர்த்திக்கிறது. இதனாலே யானைகள் அனுபவத்தினால் கற்றுக்கொள்ளுகிறதென்று தெரியவில்லையா? கீர்த்திபெற்ற தேசசஞ்சாரியாகிய ஹம்போல்ட்டு என்பவர் தென்னமரிக்க வேசரியாகிய ஒருவகை செந்துக்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறார்—அந்த வேசரி அபாயத்திலிருப்பதாகக் காணும்போது, அது நின்று வலமிடமாகத் திரும்பிப்பார்க்கிறது, காதுகளை யசைப்பதைப்பார்த்தால் என்ன தீர்மானஞ் செய்கிறதென்று யோசிப்பதாகக் காணுகிறது. அது ஒரு தீர்மானத்திற்கு மெதுவாகத்தான்வரும், ஆனால் பயணக்காரன் அதை அவசரப்படுத்தாமல் நிதானிப்பானாகில் அது செய்கிற தீர்மானம் எப்போதுஞ் சரியாகவேயிருக்கும் நீரோட்டங்களால் சூழப்பட்ட மலைகளைக்கடந்து ஆறேழுமாசப்பயணம் போகையில் ஆண்டெஸ் மலைகளின் பயங்கரமான பாதைகளிலே குதிரைகளும் சுமைசுமக்குஞ் ஜெந்துக்களும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் விவேகத்தை வெளியிடுகின்றன. 'இந்தக் கோவேறுகழுதை மெதுவாய்த்தான்போகும், ஆனால் பகுத்தறிவிலோ மகா விசேஷப்பட்டது, இந்தக் கழுதையை நான் கொடுக்கமாட்டேன்' என்று மலைவாசிகள் சொல்லுகிறார்கள். மனிதனுடைய மனத்தொழிலுக்குச் சடமற்ற பதார்த்தமாகிய ஆன்மாவும் தலைமூளையோடு சேர்ந்திருக்கவேண்டுமென்றால், மனிதனுடைய தன்மைக்கு அதிசயித்[illegible] அறிவோமிக்கூடிய இந்தப் பிராணிகளுக்கும் அப்[illegible]ய யிருக்கவேண்டுமென்று நியாயமாய்ச் சொல்லலா[illegible]கும். இவற்றிற்கு ஆன்மா யிருக்கலாமென்றால், இவற்றிற்கடுத்த இரண்டாந்தர ஜெந்துக்களுக்கு இராதென்று சொல்லக்கூடாது; இவ்வாறே ஊர்வனமுதலிய கண்ணாடிக்கருவியினால் பார்க்கக்கூடியதாயிருக்கிற அற்பஜெந்துவரையிலுள்ள பிராணிகளுக்கு ஆன்மா உண்டென்று ஒப்புக்கொள்ளவேண்டும். இந்த ஜெந்துக்களுக்கெல்லாம் சடமற்ற பதார்த்மொன்றிருக்கிறதாக ஒப்புக்கொள்ள எவராவது சித்தமாயிருக்கிறாரா? இராவிட்டால், அது மனிதனுக்கு மில்லையென்று தள்ளுதலை செய்யவேண்டும்.

ஜெந்துக்கள் சங்கதிக்குத்தக்கபடி வசதிசெய்துகொள்ளுகின்றன வென்பதற்கும் பின்னும் திருஷ்டாந்தமுண்டு. தேனீக்கள் அவசரத்துக்குத்தக்கபடி தேனடையின அறைகளை அதிகமாகவும் ஆழமாகவும் விர்த்திசெய்து கொள்ளுகின்றன. குளவியானது செத்துப்போன தன் கூட்டாளியைக் கூண்டிலிருந்து அப்புறப்படுத்துகையில் பளுவு அதிகமாயிருக்குமானால், தலை வேறும், உடல் வேறுமாகத்தறித்து ஒவ்வொரு துண்டாய் வெளியில் கொண்டுபோகிறது. குரங்குகளில்லாத மாகாணங்களிலே செடிகளிலும் பிளப்புகளிலுங் கூடுகட்டுகிற பட்சிகளே குரங்குகள் நிறைந்த தேசங்களில் மிருதுவான கொடிக்கிளையின் முனையில் அதைத் தொங்கக்கட்டுகின்றன. உருமாறி வேற்றுரு அடையுந்தருணத்தில் செத்தை பருக்கை அல்லது மீனோட்டைப் போர்வையாக மேலே ஒட்டிக்கொள்ளுகிற (பட்டுப்பூச்சிபோன்ற) ஒருவித நீர்ப்பூச்சியானது தண்ணீரில் எந்த மட்டத்திலே தானிருக்கவேண்டியதோ அந்த மட்டத்திற்கேற்ற அளவாக மேற்போர்வையைச் செய்துகொள்ள உபாயந்தேடுகிறது. அதிக பளுவாயிருந்து கீழுக்கிறங்குமாகில், கொஞ்சம் மேலுக்கு மிதந்துவரும்படித் தக்கைத்துண்டையாவது செத்தையையாவது ஒட்டிக்கொள்ளுகிறது; அதிக லேசாயிருந்து மேலுக்கெழும்புமாகில் பருக்கைக் கற்றுண்டை ஒட்டிக்கொள்ளுகிறது. இதிலே உபாயம் விளங்கவில்லையா? இதற்கு மூலம் பகுத்தறிவாகிய விவேகந்தானே.

(இன்னும்வரும்.)

இருஷிகள்.

ஆங்கிலேயர் தேகசௌக்கியத்திற்காக உதகமண்டலம், சிம்லா முதலிய மலைநாடுகளுக்குச்சென்று அங்குள்ள வனவிலங்கினங்களை வேட்டையாடி அம்மாமிசாதிகளை மதுபானத்துடனுண்டு உல்லாசமாக நாள்கழிப்பதுபோல, பூருவகாலத்திலிருந்த பிராமணரிற் சிலர் பொருள்வாஞ்சையினால் இராஜபுத்திரிகளை மணம்புரிந்து, தத்தம் மனைவியருடன் எவரெவர் எவ்வெவ்வித ஆயுதங்களைப் பிரயோகிக்கப் பழகியிருந்தனரோ அவரவர் அவ்வவ்வாயுதங்களுடன், அதாவது- சிவன் சூலாயுதத்துடனும், விஷ்ணு சக்கராயுதத்துடனும் வனப்பிரவேசஞ்செய்து தத்தம் ஆயுதங்களால் வனவிலங்கினங்களை வேட்டையாடி அவற்றின் மாமிசாதிகளை சோமபானத்துடனுண்டு, வெறிகொண்டு களித்திருக்க வனங்களில் சஞ்சரித்தார்கள். வனங்களில் நாவிதரின்மையால், தாடி சிகை ரோமங்களையும், நகங்களையும் வளர்த்திருந்து நாடு நகரங்களையடைந்த பின்னும் சௌளஞ் செய்துகொள்ளாமலிருந்தார்கள். ("தலைக்கோ முழுக்கெண்ணெயில்லாமல் மயிரெலாம் ஜடைபிடித்தது.") அவர்களுக்குத் தலைமுழுக்கு இல்லாதிருந்ததினால் அவர்கள் சிகைகளின் ரோமங்கள் சிக்காகிச் சடைகள் பிடித்திருந்தன. வனங்களில் மாமிசாதிகளைப் பாகஞ்செய்துண்ண பாத்திரங்கள் அகப்படாதிருந்ததினால், அம்மாமிசாதிகளைத் தீமூட்டி அத்தீச்சிகையில் சுட்டு புசித்தனர். வனசஞ்சாரஞ் செய்தோரை இருஷிகளென்றும், அவ்விருஷிகள் மாமிசத்தை உண்பதற்கு தீயில் சுட்டதையே வேள்வியெனவும் நாமமிட்டு மற்றவரும் அவ்வண்ணம் சுட்டுண்ணும்படி தங்கள் முறையை சுலோகங்களாகப்பாடி தாங்கள் ஏற்படுத்திக்கொண்டுவந்த தங்கள் வேதங்களுடன் சேர்த்துவைத்தனர். இப்பாக முறைக்குரிய சுலோகங்களே வேள்விக்குரிய மந்திரங்களாயின.

M. MASILAMONI.

இரவல்நகை வாங்குவதாலுண்டாகும் கஷ்டநஷ்டங்கள்.

நம்மவர்க்கு நகை யிரவல் வாங்கித்தரிக்கும் [illegible] ஒருவாயின ஒருவராய் எந்த ஜாதியிலும விர்த்தியடைந்து வருகின்றது. நகை யிரவல் வாங்கிச் சுபகாலங்களில் தரித்து மீண்டும் கொண்டுபோய்ச் சேர்க்கும்வரையில் உண்டாகும் கஷ்ட நஷ்டங்கள் இத்துணையென நன்றாயறிந்தும் ம[illegible]றுபடியும் அங்ஙனம் செய்யாதிருப்பதில்லை. விவாகமுதலிய சுபங்களில் சாமான்களுக்கு அச்சாரம் தந்து பந்தற்போட்டுச் சித்திரவேலை புரிந்து அரிசி, பருப்பு, எண்ணெய் முதலான அளவற்ற பண்டங்களும் காய்கறியாதி தினந்தோறும் வாங்கும் வஸ்துக்களும் சேகரித்து வீடு பழுதுபார்த்து முக்கியமான நகைகள் செய்வித்து வீதிவீதியாய்க் கால்நோகச்சுற்றிப் பந்துமித்திரரை அழைத்துத் துணிமணிகள் வாங்கிவரும் ஜனங்களை ஆவலோடும் அன்போடும் அழைத்[illegible] உபசரித்து எந்தப்பொருள்களும் குறைவின்றி நிரம்ப அ[illegible] போதப்போது தேடி அறுசுவை பதார்த்தங்களோடும் பற்[illegible]ல பலகார பழவர்க்கங்களோடும் விருந்திட்டு, அவரவர்க்[illegible] மரியாதையியற்றி வைதீககாரியங்கள் குறைவின்றி நடத்[illegible] இன்னும் உள்ள அனேக அலைச்சலால் வேளைச்சோறு வேலைக்கின்றி யுடலிளைத்து வாடிவுதங்கி நாவுலர்ந்து தொண்டை கம்மலாகிப் பித்தம் பிடித்தவன்போல் மனங்கலங்கித் துன்புறும் எஜமானன் ௧0-ஆயிரம், ௨0-ஆயிரம், ௪0-ஆயிரம், லக்ஷம் ரூபாவரையில் மதிப்புள்ள நகை நட்டுகளைச் செட்டுச்செட்டாக வாங்கி எவர் மனசும் கோணுதலின்றி [illegible] கேட்டவர்க்கெல்லாம் கொடுத்துக் கணக்கெழுதித் தினந்[illegible]றும் அல்லது முடிவில் வாங்கிப் பெட்டியில் பத்திரப்ப[illegible] யிவ்வளவு வேலையுடன் அப்பெட்டி மீதே க[illegible] க்கம்பிடியாது அப்பெட்டியின்மீதே படுத்[illegible] எந்த நகை போக்குப்போகிறதோ, கள்ளச்[illegible] கைகளை எவன் திருடுகிறானோவென அதுவே[illegible] ந்து அலுவல் முடிந்தபின் நகைகளைக் கொ[illegible] புவிக்கிறான். ஒன்றிரண்டு அல்லது முற்றுட[illegible] குமானால், ஐயோ! அவன் படும் பாட்டை [illegible] ச் சொல்வதெங்ஙனம்? பதினாயிரம் இருபதி[illegible] யுள்ளவனானாலும் ஆஸ்தியெல்லாம்போய் பாக்கி நிற்கும் தொகைக்கு நகைகொடுத்தவ[illegible] கு இரண்டாயிரம் சொல்வான்; நிற்கும் பா[illegible] சக்தியில்லாமலும், இதுவரையில் [illegible] போய்ச் சோறு வெல்லமாகிக் கு[illegible] யினைத்துத் தெரியாமல் நகைக[illegible]

இப்போது நகைக்கு ஈடு என்னசெய்வது; ஆஸ்தியெல்லாம்
போயும் நிர்மலமாயிருக்கச் சரிப்படவில்லையே; எப்படிச்ஜீ
விப்பது; யார்காலில் விழுவது; விழுந்திடினும் ஓர்காசு தரு
பவரார்; புத்திகெட்ட காரியம் செய்தோமே; பிறர்மெச்ச
நகை முடித்தோமே; அவரெல்லாம் இன்று வருகின்றனரா?
பெண் பிள்ளைகள் அந்த நகை வாங்கிவா, இந்த நகை வாங்
கிவா, அதுபோட்டால் நன்றாயிருக்கும், இதுபோட்டால் ந
ன்றாயிருக்கும், நகையில்லாவிடில் ஏளனம் செய்வார்களெ
ன்று சொன்னார்களே, அவர்களிப்போது என்ன செய்யக்
கூடும், நகைச்செட்டுகள் அவளைப்போய்க்கேள், இவளைப்
போய்க்கேளெனப் பலாத்காரம் செய்து தூண்டின பந்து
மித்திரர் இப்போது தலைகாட்டுகின்றனரா? யானை மண்ணை
வாரித் தலையில் போட்டுக்கொள்வதுபோல் புத்தியில்லாம
ல் நாமே கெட்டுப்போனோமென எண்ணுத எண்ணமெல்லா
ம் எண்ணியெண்ணி ஏங்கி இளைத்து எம்பெருமானே என்
னை இரட்சிக்கவேண்டுமென வியம்புவான்.

பணம் சேரச்சேரப் பற்பல தொழில் புரிந்து விர்த்திசெ
ய்து ஏழைகளுக்குக் கல்வி போதித்தல், கைத்தொழில் கற்
பித்தல் முதலிய அரும்புண்ணியங்கள் செய்தலின்றி வீடுக
ட்டல், தோட்டம் வாங்கல், ஜோடிக்குதிரைவண்டி கொள்
ளல் முதலியவற்றோடு ஏழைமுதல் தனவந்தன்வரையில் த
மது வீடேறிக் கேட்கவும் உண்டில்லையென லகுபிகுவோடு
தரவு மிதற்காகவே உயர்ந்த நகைகள் லக்ஷம் லக்ஷமாய்ச்
செய்து அல்லது ஏலத்திலெடுத்து அல்லது வாங்கிவைத்து
க்கொண்டு இரவல் தருகின்றவர் அனேகருண்டு. நகை இர
வல் வாங்குபவர்க்கு எவ்வளவு திகிலோ அவ்வளவு கொடுப்
பவர்க்கு மில்லாது போகவில்லை. எங்ஙனமெனின், நகை
கொடுக்கும்போதே இவனிவ்வளவுக்குத் தாங்கமாட்டானே,
இவனிடத்தில் காசுக்கும் வழியில்லையே, இப்படிப்பட்டவ
ன் காலில் விழுகிறோனே, இவன் ஊர்ப்பணத்தையெல்லாம்
சுருட்டிப் பெண்டாட்டி பிள்ளைகள்மீது எழுதிவைத்து ஒன்
றும் இல்லையென நியாயச்சபையில் அச்சமின்றிச் சத்தியஞ்
செய்தவனாயிற்றே, இவனுக்குக் கடன் மிதமிஞ்சியிருக்கின்
றதே, இவன் குடியனாயிற்றே, இவன் கூத்தி காலிலேயே
விழுந்து பணத்தை யழிக்கிறவனாயிற்றே, இவனுக்கு நஷ்ட
ம் தலைமேல் வந்திருக்கிறதே, இவன் இன்னானிடத்தில் நகை
வாங்கிக் கொதுவை வைத்து நகைக்குடையவன் வாயில்
கடுக்காய் வைத்தவனாயிற்றே; இவன் செல்வனானாலும் அ
பனாயிற்றே, இவன் ஊர்குடியைக் கெடுக்கும் மாபாவி
யாயிற்றே, இவன் யோக்கியனானாலும் ஒருநகை கைசோர்
ந்தால் மறுபடியும் அதற்கீடு சொல்லக் கையிலொன்று மில்
லாதவனாயிற்றே, இவன் இன்னான் இன்சால் வெண்டுக்குப்
போகும்போது இரகசியமாய் வைத்த பதினாயிரம் ரூபாயை
த் திருப்பிக் கேட்டபோது கோர்ட்டில் ஒன்றுமில்லையெனச் ச
த்தியஞ்செய்த நீயா என்னிடத்தில் பணம் வைத்தாயென
க்கூவி வேலைதீர்த்துவிட்டு இப்போது மகாயோக்கிய
னாக வெளிவந்தவனாயிற்றே, இவன் இவ்வளவு லஞ்சம் வா
ங்கிக் கோர்ட்டில் சென்று பொய்ச்சாக்ஷி புகன்றவனாயிற்
றே; இவர்களுக்கெல்லாம் பதினாயிரம் இருபதினாயிரம் ஐம்
பதினாயிரம் பெறும் நகைகளை எவ்வாறு எடுத்துக்கொடுப்ப
து; கொடாவிட்டால் திட்டுவரோ, புதுப்பணம் படைத்தவ
னெனக் கேலிபண்ணிச் சிரித்துக் கைகொட்டுவரோ, செல்வ
த்துக் கொடாவிடில் அலக்ஷியஞ்செய்து அவமதிப்பரோயெ
ன்று ஏதாவது கொடுப்பர், அன்றி ஏழைகளுக்குக்கொடுப்பது
சுவர்க்கத்தில் சென்று கைலாஸ்தான பலனெனக் கருதித்தருவர்.
ஒருவருக்கு மேற்சொன்ன குணமுடையவரைச்சுட்டி இன்
னான் இப்படியாயிற்றே, இன்னான் அப்படியாயிற்றே எப்படி
யெடுத்து சேரப்போகிறது. கொதுவை வைத்துவிட்டால்
என்ன செய்கிறது; கைச்சோர்ந்துபோனால் செய்வதுயாது;
...ல திருடனெடுத்துக்கொண்டுபோனாலும் நகைகளைப்
...ம்பண்ணிவிட்டு நேற்றிராத்திரி திருடன்வந்து பெட்
டியோடு தூக்கிப்போனானெனச் சொன்னாலும் என்ன செ
ய்கிறதென்று தூக்கமின்றி ஏக்கத்துடன் நீக்கமில்லாத் துக்
...க ஊக்கமிழந்து நகை வாங்கிக்கொண்டுபோனவன்
...ணம் வருந்துவானோ அவ்வண்ணமே வருந்துவர்.
...ர்கொடுக்க நகைவாங்கிக் கேட்டவர்க்குக் கொடுத்து
...ன்னர் திராச்சஞ்சலத்தை யுண்டாக்கிக்கொள்வதும்,
...மண்ணைவாரித் தலையிற் போட்டுக்கொள்வதற்குச் ச
...ம.

...வளவு ஆபத்தோடு அன்பப்படுவதற்கேதுவான நகை
...ரண்டுநாழிகை வாங்கி முடித்துக்கொள்வதால் உட
...ரன்னாய்விடுமா? இரவல் நகையென எவரும் அறிந்
...ள்ளமாட்டாரோ? சொந்த நகையென்று மதிப்பரோ?
...ம், சீ, உதிரம், சளி, எலும்பு, நரம்பு முதலிய அர்க்
...வஸ்துக்களால் சமைந்துள்ள உடம்பில் உ-நாழிகை
...க்கொள்வதாலுண்டாகும் சந்தோஷத்தையும், நகை
இரவல் வாங்கி அலுவல் முடிந்தபின் கொண்டுபோய் ஒப்பு
வித்தல் அல்லது பறிகொடுத்தல் இவைகளாலுண்டாகும் து
க்கத்தையும் நிறுத்துப்பார்த்தால் சந்தோஷம் அணுவளவும்
துக்கம் மகமேரு அளவுமாகவிருக்குமெனச் சிறுவருமொப்
புக்கொள்வர். அணுவளவு சந்தோஷத்திற்காக மகமேரு அ
ளவு துக்கத்தை அனுபவிப்பது நியாயமென எவர்தான் கூ
றுவர்.

இந்தத் தூர்வழக்கம் சிலவருஷங்களாகத்தான் அதிகமாகி
வருகின்றது. எவ்வளவு புத்திமானாயிருக்கினும் இரவல் ந
கையின்றிச் சுபகாரியங்களை நடத்தக்கூடுவதில்லை. நன்மை
தீமைகளைப் பகுத்தறியும் அறிஞர் எவரோ ஒருவரிருப்பதா
ல் மற்றவர் வாக்குக்குமுன் அவர் வாக்குப் பயன்படுவதில்லை.
சொல்வது நன்றென அறிந்துகொள்ளினும் அவ்வாறு நட
க்கப் புத்தியீனர்முன் முடிவதில்லை. பெண்பாலார் சுத்த
மூடராயிருப்பதால் பின்வருங் கதியையறியப் புத்திவல்
லமையில்லை. இனியாவது இரவல்நகை வாங்குவதை
யொழித்துத் தமதிடத்திலிருப்பவைகளைக்கொண்டு சுபகாரி
யங்களை முடித்துக்கொள்வாராக. நகை முடிப்பதிலும் இ
ரவல் வாங்குவதிலும் ஒன்றுக்கு நூறுசெலவிட்டுச் சுபாசு
பங்கள் செய்வதிலும் சதுரராயிருக்கின்றனரேயன்றி அறி
வை விர்த்திசெய்யும் உயர்ந்த கல்விகற்று உத்தமர்பால் நல்
ல கேள்விகள் கேட்டுப் பொருளை விர்த்திசெய்து தாமும் உ
ண்டுடுத்து ஏழைகளுக்கு வித்தியாதானம் புரிந்து நீங்காப்
புகழ்பெற்று வாழ்பவரைக் காணோம். இகலோகத்திற்கே
யச்சுவதந்திரராயிருக்கும் இவர் பரலோகத்திற்காக என்ன
சாதிக்கப்போகின்றனர்.

குழந்தைகளுக்கும் இரவல்நகை வாங்கிப்போடுவதுமு
ண்டு. நகையோடு குழந்தைகளையும் பறிகொடுப்பவர் இத்த
னைபேரென எண்ணமுடியுமா? இப்பத்திரிகைவாயிலாக எந்
நேரமும் காண்கின்றோமன்றோ?—சுதேசமித்திரன்.

திரவியத்தன்மையும், திரவியத்தின்பிரிவுத்தன்மையும்.

தந்தை—தத்துவஞானிகள் திரவியம் என்கிற மொழியை
என்ன அர்த்தத்திலே வழங்குகிறார்கள்.

மகள்—நாம் பார்க்கிற பரிசிக்கிற வஸ்துக்களெல்லாம் தி
ரவியத்தினாலே உண்டாகிறதுகள் அல்லவா.

தந்தை—நம்முடைய இந்திரியங்களுக்கு விஷயமாகிய எந்
த வஸ்துவும் வெவ்வேறு உருப்படுத்தின; அல்லது
அமைத்த திரவியத்தினாலாகிறதுதான். ஆனால் தத்து
வசாஸ்திரக்கருத்திலே திரவியம் என்பது பிரமாணமு
ம் திண்மையும் சலனமும் நிர்ச்சலனமும் உள்ள பதார்
த்தமென்று தீர்மானிக்கப்படுகிறது.

மகன்—பிரமாணமென்கிறது நீட்சியும் அகலமும் கனமு
மென்று அர்த்தமாயினால் திரவியம் சந்தேகமில்லாமல்
ஒருபரிணமித்த பதார்த்தமேயாம். இதன் திண்மையும்
இதைத் தொடும்பொழுது இதனுடைய உறுத்தலினால்
விளங்குகிறது.

மகள்—திரவியத்தினுடைய மற்ற குணங்களையும் ஒருவனும்
இல்லை என்பதில்லை. ஏனென்றால், மேற்கூறிய திரவி
யத்தினாலாகிய பதார்த்தங்கள் யாவும் தம்மால் தாமே
இயங்குகிறதுகளல்ல; அப்படியிருந்தும் இயங்கச்செய்
யப்படத்தக்க வலியையடைந்தால் இயங்காமலிருக்க
த்தக்க வஸ்து எதுவுமில்லையென்று சித்தமாயறியலா
ம். ஆனால் திரவியத்தின் பிரிவுத்தன்மை அளவிறந்தி
ருக்கவேண்டுவதென்று நீங்கள் சொன்னதைக்குறித்து
ஏதோ அதிசயத்தை நீங்கள் எங்களுக்குச் சொன்ன
தா யெனக்கு ஞாபகமிருக்கிறது.

தந்தை—இந்த பிரிவுத்தன்மையானது விருப்பத்தையும் இ
ன்பத்தையும் தருகிற விஷயமென்று சிலநாளைக்குமு
ன் உங்களுக்கறிவித்தேன். அதை விவரிக்க இதுவே
மிகவும் தகுதியான காலமாயிருக்கிறது.

மகன்—அளவில்லாமல் பகுத்தலென்றது அனந்தமாகப் ப
குத்தலென்ற அர்த்தமாகத் தோற்றுகிறபடியால், திர
வியமானது மெய்யாகவே அனந்தமாகப் பகுக்கப்பட
த்தக்கதா.

தந்தை—இவ்வாறு பிரியுந்தன்மை முதலிலே நன்றாகத்தோ
ற்றாமலிருந்தபோதைக்கும்,இனிமேல் திருஷ்டாந்தமா
காணத்தக்கதாயிருக்கிறது. மேற்புறம் கீழ்ப்புறம் கா
ணக்கூடாத அவ்வளவு சிறுமையையுடைய வொரு தி
ரவிய அணுவை நீ காணமாட்டுவையா.

மகன்—மேற்கூறிய திரவியத்தின் எந்தப்பகுதியும் எவ்வளவு நுட்பமாயிருந்தாலும் எவ்விதத்திலும் இரண்டு பக்கங்களை நிச்சயமாயுடைத்தா யிருக்கவேண்டியது. ஆனதுகொண்டு அது சந்தேகமில்லாமற் பாகிக்கப்படத்தக்கதென்று எனக்குத் தோற்றுகிறது. அதாவது மேற்புறமானது கீழ்ப்புறத்தில்நின்றும் வேருக்கப்படுகிறது.

தந்தை—நீ தீர்மானித்தது சரியே; திரவிய அணுக்கள் சிதமாக நம்மாற் பாகிக்கப்படக்கூடாத நுட்பங்களாயிருந்தாலும், அதுகள் சுபாவத்திலே பாகிக்கப்படத்தக்கதுகளே. ஆகையால் அதுகளை பாகிக்கத்தக்க ஆயுதங்கள் நம்மிடத்திலிருந்தால் அதுகள் பாகிக்கப்படலாம்.

மகன்—ஆனால் திரவியத்தை மிகவும் நுட்பமாய்ப் பகுக்கிறத்தைக்குறித்துச் சில விசேஷமான திருஷ்டாந்தங்களை எங்களுக்குக்காட்ட எத்தனித்திருந்தீர்களல்லவோ.

தந்தை—சிலவருஷங்களுக்குமுன் இங்கிலீஷ்தேசத்தில் ஒரு துலாசாஸ்திரி, ஒரோபவுன் எடைமயிரை ககூஅ000-கெசம் நீள இழையாக நூற்றுள். இதுவுமன்றி இரண்டரைகிறையின் எடையுள்ள பட்டுப்பஞ்சு ந00-கெச நீளமாக நூற்கப்பட்டதென்று பாயலோவென்ற துரையுந் தன்னுடைய கிரந்தத்திலே சொல்லுகிறார். ருஎகூ0-கிறையின் எடைகொண்ட ஒருபவுன் எடைவெள்ளியும், ஒரு கிறையின் எடைத்தங்கமும் ஒன்றாயுருக்கப்பட்டால் இந்த ஒருகிறையின் எடைத்தங்கம் அந்த வெள்ளியில் எங்கும் கலந்திருக்கின்றது, இவ்வாறு கலந்து உருக்கின கட்டியில் ஒருகிறையின் எடைமாத்திரம் வெட்டி பொட்டிலுப்பு திராவகத்திற் கரையவிட்டால், இந்த ஒருகிறையின் எடையுள்ளும் கலந்திருக்கின்ற தங்கம் வெள்ளியினின் றடியிலிறங்கிவிடுகிறது. இந்தப்பரிசோதனையால் ஒருகிறையின் எடைத்தங்கத்தில் ருஎகூக-பாகத்தில் ஒருபாகம் ஒருகிறையின் எடையிலும் குறைந்த வெள்ளிக்குள்ளும் கலந்திருந்தபடியால், ஒருகிறையின் எடைத்தங்கம் கண்ணுக்குத தோற்றத்தக்க ருஎகூக-பாகமாகப் பிரிக்கப்படலாம்.

கடிதம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

அரி ஓம்நமஃ

A. M. N. என்பவர்க்கோர் நாராயம்

என்னை விளித்து என்மாட்டின் தங்கள் கடாக்களை ஏற்றிய A. M. N. என்பவரே! தாங்கள் அனுப்பிய கடாக்களுக்கு அடியுந் தலையுமில்லை. ஆதலால் பிரதியாக என் விடையை தங்களுக்கனுப்ப அஞ்சி விடுத்தனன். ஏனெனில், தாங்கள் என்மாட்டில் தங்கள் கடாக்களை ஏற்றவேண்டிய காரண மொன்றுமில்லை, காரண மில்லாமல் அகாரணமாக அனுப்பினபோதிலும் அக்கடாச்களுக்கு அடியுந் தலையுங் காணேன்.

1-வது. 'கணபதியார், துணையாருக்கு, அதன்மேற்சுழியேன், திருச்சிற்றம்பலம், அரிஓம்நமஃ, என்றெழுதவேண்டிய ஆவஸ்யமென்னை' யென்று கேட்கவேண்டிய ஆவஸ்ய முமக்கென்ன விருந்தன, அதை உமக்குச்சொல்வது எனக்கு ஆவஸ்யமன்று.

2-வது. தட்டானை உவமையாகக்கூறி தங்களை உவமேயமாககாட்டி தத்துவவிசாரணையை தங்கள்மேலேற்றித் தங்களுக் கொருகுறை யான் செய்ததாக நாட்டி, என்னை மதிமயக்குடையவனென்று காட்டி வாய்ஞானம் பேசுவானேன். தங்களையாவது, பிறரையாவது சுட்டி எவ்விடத்திலேனும் யான் வரைந்ததுண்டா? தெருவிலே கிடக்கின்ற கோடாலியைத் தன் தலையிலே போட்டவனுக்கும், தங்களுக்கும் ஏதேனும் பேதமுண்டா.

3-வது. வேதாகமபுராணாதிகளை உள்ளபடி வாசித்துணராதவர்களிடத்திலே தத்துவங்களை விசாரிப்பது விசாரணையன்று எனவே, நான் தீட்டியதில் தங்களுக்காகுதல் பிறருக்காகுதல் விரோதமுண்டா? விரோதமில்லாமலிருக்க, என்மேல் குறைகூறுவானேன்.

4-வது. 'பூததத்துவசாஸ்திரப் பயிற்சியுண்டா?' என்று என்னை நோக்கி வினவுகின்றீர். இந்த வினா அறிந்தான் வினாவோ, அறியான் வினாவோ, சந்தேக வினாவோ, அறிந்தான் வினாவேயாயின், பூததத்துவசாஸ்திரப் பயிற்சியுண்டாவென்று வினவமாட்டீர். திருநீற்றுப்பதிகத்திலே திருநீற்றினுடைய மகத்துவம் [illegible]ட்டியிருக்கின்றதா? என்று வினவினவனுக்கும் த[illegible]களுக்கும் ஏற்றத் தாழ்ச்சியுண்டா, அறியான் வி[illegible]வேயாயின், அகத்தூய்மை புறத்தூய்மை யில்லா[illegible]வனுக்கு ஞானநூல்களை ஓதக்கூடாதென்று கடித[illegible]திலே வரைந்திருக்க, அதற்குமாறாக நீர் என்னிட[illegible]தில் வினவுகின்றது குடிகாரன்கதை யிருக்கட்டு, [illegible]டிபடி கள்ளை என்றவனுக்கும் தங்களுக்கும் வித்[illegible]யாசமுண்டா, சந்தேக வினாவேயானால் தங்களு[illegible]க்கும் எனக்கும் அயிக்கியமில்லாதிருக்க, அதை எ[illegible]னிடத்தில் வினவுவானேன். தனக்கு அயிக்கியமி[illegible]லாத வானரத்துக்கு புத்திகூறிய தூக்கணாங்குரி[illegible] பட்டபாடு நான் கேள்விப்பட்டிருக்கவில்லையா.

நடுவுநிலைமையை ஆபரணமாகப்பூண்ட பத்திராதிபர்களே[illegible] இப்பத்திரிகையைகண்ணுற்று நிறைகோலாக ஆராயும் ம[illegible]ன்களே! நான் இப்பொழுதும் இதற்கு முன்னும் வரைந்[illegible] கடிதங்களையும் அதற்குமாறாக A. M. N. என்பவர் [illegible]ரைந்த கடிதத்தையும், தங்கள் தங்கள் அறிவால் சீர்தூக்[illegible] சமாதானம் சொல்லுவீர்களென்பதை எதிர்பார்க்கின்றேன்[illegible]

இங்ஙனம்.

யாழ்ப்பாணம் - சி. நாராயணபிள்[illegible]

வர்த்தமானம்.

மீன்மழை—இந்தியாவுக்கு வடக்கேயுள்ள பட்டிப்பூர் [illegible]ன்னும் இடத்திலிருந்து நாளது ஜூலைமீ எவயில் ஒருவர் [illegible]ன் வருமாறு ஒரு பத்திரிகைக்கு எழுதியிருக்கிறார்—"[illegible]றைக்கும் இன்றைக்கு இவ்விடத்தில் மீன்மாரி பொழி[illegible] வருகிறது. அவைகளில் அனேகம் மீன்களை என்னுடை[illegible] தோட்டத்திலிருந்து பொறுக்கியெடுத்து வைத்திருக்கி[illegible]ன். அவைகள் சுமார் உ-அங்குலம் நீளமுள்ளவைகளாய்[illegible]ல இன்னும் உயிரோடிருக்கின்றன. இது அதிசயந்தானோ அல்லது சாதாரணமோ எனக்குத்தெரியாது. எனக்குத்[illegible]ந்தமட்டில் இவ்விநோதத்தை இப்பொழுதுதான் முதல்[illegible]தல் பார்த்தேன்." இது வாஸ்தவமாயிருந்தால் இனி ப[illegible]பு தேள் மழையும் பொழியுமோ என்னமோ!

வியபிசாரதண்டனை—வியபிசாரம்புரிந்த ஒருவன் அ[illegible]வநிவிர்த்தியின்பொருட்டு மயிர் நீக்கப்படாது பக்குவஞ்[illegible]ய்யப்பட்ட கழுதைத்தோலை மயிர்ப்புறம் வெளியிற்றோ[illegible]றுமாறு ஆடையாகத்தரித்து ஆறுமாசகாலம் இரந்துண்[illegible]ல் வேண்டுமென்பது சாஸ்திரவிதியென்று ஒரு பிரம்ம[illegible] ஐ பத்திரிகை கூறுகின்றது.

ஏசு கிறீஸ்து யாவர்—இத்தலைப்பெயருடைய புத்தகம் ஒன்று பதிப்பித்திருக்கின்றோம். அதில் கிறி[illegible]வின் சரித்திரப் பரஸ்பரவிரோதம் நன்றாய் விளக்கியி[illegible]றது. இது மெஸ்டர். பிராட்லா அவர்களால் இங்கி[illegible] செய்யப்பட்டது. இதைத் தமிழில் மொழிபெயர்த்[illegible]து. விலை அணா - க. வேண்டியவர்கள் தத்துவவிவே[illegible] பத்திராதிபருக்கு எழுதிக்கொள்ளவும். தபால் [illegible] அணா - உ.

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளும்,
1885-ம் வருஷவரை செலுத்தவேண்டிய [illegible]
பு. முனிசுவாமிநாயகருக்[illegible]
1886-ம் வருஷத்திய சந்தாக்[illegible]
இங்கிலீஷ் பத்திரிகைகளும்,
செகுலர் சொசைடி ஆனரெரி செக்ரிட்[illegible]
மெஸ்டர். அப்ஷன்துரையவர்கள் பெ[illegible]
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at
AUTHI K[illegible]LANITHI PRESS,
No 6, Natoo Pilliar [illegible]ovil Street, MAADRS

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 31.] MADRAS :—SUNDAY AUGUST, 1, 286. A. S. [Monthly, 4 Annas.

சோல்லுகசோல்லைப்பிறிதோர்சோலச்சோல்லை
வேல்லுஞ்சோலின்மையறிந்து.—துறள்.

நாஷனல் சிக்கியுலர் சோசைட்டியின் வருஷாந்தரசபை. ஓ.ஃ

சென்ற ஜூன்மீ 13உ ஆதிவாரம் கிளாஸ்கோ என்னும் பட்டணத்தில சபைகூடியது. ஷை சோஸைசட்டியைச்சேர்ந்த பலசாகை சபைகளிலிருந்து அத்தியட்சர்கள் வந்திருந்தார்கள். ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது; அதனால் பலரால் விராளங் கொடுக்கப்பட்டதாகவும், 998 புது மெம்பர்கள் சேர்ந்ததாகவும், 7 புது சாகைகள் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது. மறு வருஷத்திற்கும் மிஸ்ட்டர் பிராட்லா அவர்களே சபாநாயகராக ஏற்படுத்தப்பட்டார்.

சாயங்காலம் - 6½ - மணிக்கு ஆல்பியன் ஹால் என்னும் மந்திரத்தில் மகாசபைகூடியது. அதற்கு வந்திருந்தவர்கள் கிட்டத்தட்ட இரண்டாயிரம்பேர். பேசினவர்கள் மூன்றுபேர் தான் 1வது Mr Foote அவர்கள் சுயக்கியானம் அபிவிர்த்தியாகிவருவதைக் குறித்துப் பேசினர்; 2வது Mrs. Besant அம்மா அவர்கள் மதமானது அபிவிர்த்திக்குச்சததுருவாயிருப்பதைப்பற்றிப் பேசினர்; 3வது—

மிஸ்டர். பிராட்லா அவர்களுடைய பிரசங்கம்.

மதத்தின்பேரில் குற்றங்கள்.

இந்தச் சபையிலே இப்போது நான் கடைசியாய்ப் பேசுகையில், நாஷனல் சிக்கியுலர் சோசைட்டியாராகிய நாங்கள் கொண்டிருக்கிற கருத்துக்கிசையாத அநேகர் வந்திருக்கலாமென்று நினைக்கிறேன். இன்னுமொருவருஷத்திற்கு என்னைத் தங்கள் சபைக்குத் தலைவனாக இன்று நியமித்துக்கொண்டவர்களுக்கு, நினைக்கவும் பேசவும் செய்யவும் உங்களுக்கு என்ன சுதந்தர முண்டாயிருக்கிறதோ அந்தச் சுதந்தரம கிடைக்கவேண்டுமென்று உங்களில் எம்மோடு கலவாதவர்களிடத்திலே தாவா செய்யவந்திருக்கிறேன். உங்களுக்கு அந்த சுதந்தரமில்லையா? நீங்கள் அதைக்கையாளவில்லையா? என்று நீங்கள் எங்களைக்கேட்கலாம். நாங்கள் கையாளுகிறோம், ஆனால் உங்கள் சட்டங்கள் அந்தச்சுதந்தரத்தையெங்களுக்குக் கொடுக்கவில்லை, உங்கள் செய்கைகளினாலே அது எங்களுக்கில்லையென்று மறுக்கிறீர்கள்; சட்டங்களை உடனே மாற்றினாலு மாற்றலாமேயல்லாமல் வழக்கத்தில் வந்திருக்கிற செய்கையை ஒருநாளில் மாற்றுவது கூடாமை. பார்லிமென்டுக்கு மெம்பர்களை நியமிக்கிற அதிகாரம் (குடிகளாகிய) உங்களுதாயிருக்கிறபடியினாலே, எங்களோடு ஒற்றுமை கொள்ளாதவர்களுக்கு இரண்டு விஷயங்களை யெடுத்துக்காட்டுகிறேன். கெட்ட சட்டங்களை வைத்துக்கொண்டிருப்பதினாலே உங்களுக்குப்பிரயோசன மொன்றுமில்லை; கெட்ட சட்டங்கள் குறைசொல்லிக்கொள்ளும்படியான சுதந்தரத்தை எங்களுக்குண்டுபண்ணுகிறது; அவைகளிருக்கிறவரையில் ஒருவரையொருவர் நேசிக்கிறோமென்கிற உங்கள் மதக்கொள்கை தந்திரமானதுதான், நாமெல்லோரும் சகோதரர்களென்று நீங்கள் சொல்வது வெற்றுச்சொல்லுதான். நீங்கள் என்ன சட்டங்களென்று கேட்கலாம். முதலாவது—பிரமாணம் செய்வதைக்குறித்த சட்டத்தைப் பாருங்கள், அது எங்களுக்கு எவ்வளவு தடையாயிருக்கிறது; நாங்கள் பிரமாணஞ்செய்யாவிட்டால் அது எங்கள் வழியை யடைக்கும் பெரிய பாருங்கல்லாயிருக்கிறது, பிரமாணஞ்செய்தால் அப்படி யெங்களைச் செய்யச்சொல்லி நிர்ப்பந்திக்கி நீங்கள் எங்களைக் கபடர்களென்று இகழுகிறீர்கள். நீங்கள் பிரமாணஞ்செய்கிறபடி யெங்களைசெய்யச்சொல்லி நீங்கள்நிர்ப்பந்திக்கிறவரையில், கபடத்தனம் உங்களுதே; அதனால்வருங்குறைவு உங்களுதே. துவீத்நதிக்குவடக்கே, மறுஉலக இன்பதுன்பங்களில் நம்பிக்கையில்லாதவன் பிரமாணஞ் செய்யவாவது உறுதிமொழிசொலலவாவது அர்ஹனல்லன், அவன் தன்னுடைய கருத்தை வெளியிட்டாலும், அவனுடைய கருத்து தெரிந்துகொள்ளப்பட்டாலும், அவன் பேச்சுவழியில தன் கருத்தை நழுகச்சொல்லிவிட்டாலும் அவனுடைய சாட்சியம் உதவாதென்று ஆட்சேபித்து விடக்கூடும். சிவில் வியாச்சியமாயிருந்தால் அவனுடையதாவாபோகவே போய்விடலாம்; கிரிமினல் வியாச்சியமானால், உதவாதென்று ஆட்சேபித்துவிடப்பட்டஅவனுடையசாட்சியமில்லாமையினால், குற்றவாளி தப்பித்துக்கொண்டு நிரபராதி அகப்பட்டுக்கொள்ளலாம். நரகநம்பிக்கையில்லாத வொருஜூரர்உறுதிமொழிசொல்லவுங்கூடாது பிரமாணஞ் செய்யவுங்கூடாது. ஆயினும், அந்தசாட்சி ஒருஊரைவிட்டு மற்றோரூருக்குப்போனால் அவ்விடத்திலே அவனுடையசாட்சியம் உதவும்; அவன் நியூகாசில்என்னும் பட்டணத்திற்குப்போவானாகில் அவ்விடத்தியஜட்ஜி அவனை அங்கீகரிப்பார்; துவீத்நதிக்கு வடக்கே ஆட்சேபிக்கப்பட்டசாட்சியம் அதற்குத்தெற்கே ஏற்றுக்கொள்ளப்படுகிறது. பிரதேசஎல்லைக்குறிப்பினாலே இப்படிப்பட்ட ஆட்சேபமுண்டாவது சரியல்ல. நடுவுநிலைமையா யிருங்கள். ஒருவனைப் பிரமாணஞ்செய்வதோ உறுதிமொழி சொல்வதோ அவனிஷ்டப்படி செய்யவொட்டுங்கள்; ஜனங்களுக்குப் பிரியமில்லாத அபிப்பிராயங்களை நல்ல எண்ணத்தோடு வெளியிடுகிறவன் யதார்த்தவாதியா யிருக்கலாம். எவர்கள் பிரமாணத்தைப் பரிகாசஞ்செய்கிறார்களென்று நீங்கள் சொல்லுகிறீர்களோ அப்படிப்பட்டவர்களைப் பிரமாணஞ் செய்யும்படி யினி நிர்ப்பந்திப்பது ஒழிகிறவரையில், இந்தச் சீர்திருத்தத்திற்குப் பிரதி கிறிஸ்தவரும் பாடுபடவேண்டும். பொய்ச் சத்தியத்துக் குண்டான சட்டதெண்டனைக்குத் தப்பித்துக்கொள்ளவேணுமென்று நாங்கள் கேட்கவில்லை. நாங்கள் சொல்லுகிற வெறும் உறுதிமொழிக்கும் அந்தச் சட்டதெண்டனை யிருக்கவேண்டியது எங்களுக் கிஷ்டந்தான். இன்னதென்று எங்களுக்கு அர்த்தந்தெரியாததும் உங்களில் அவரவருடைய கருத்துக்கிசைந்த அர்த்தம் வைத்துக்கொள்ளப்பட்டு மிருக்கிற வார்த்தைகளாலாகிய ஆசாரத்தை அனுஷ்டிக்கும்படி எங்களை நிர்ப்பந்திக்கவேண்டாமென்று மாத்திரம் கேட்டுக்கொள்ளுகிறோம். "ஒருபோதும் சத்தியம் பண்ணாதிருப்பாயாக;" உனது பராபரனாகிய கர்த்தரின்பெயரை வீணாய் வழங்காதிருப்பாயாக;" என்னும் வாக்கியங்களின் அர்த்தத்தைக் குறித்து நான் உங்களோடுவாதாடவில்லை. ஆனால், நீங்கள் எங்களைக் கபடர்களென்று சொல்லத் துணிவீர்களாகில் உங்கள் சொல் நிலைக்காதெனறும், நாங்கள் ஒருஅர்த்தமுங் கொள்ளாதவார்த்தைகளைச் சொல்வோமாகில் தேவதூஷணஞ் செய்தவர்களாகமாட்டோமென்றும், அப்படிச் சொலவதல் எங்களுக்கு மத நம்பிக்கை யுண்டாயிருப்பதாய் நாங்கள் ஒப்புக்கொள்வதாகமாட்டா தென்றும், பீட்டர்பரோவின் பிஷப்பவர்கள் உங்களுக்குச்சொல்லி யிருக்கிறதை உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன். இரண்டாவது,—தேவதூஷணச் சட்டத்தைக் குறித்துக் குறை கூறுகிறோம்; அந்தச்சட்டத்தை யனுசரித்துதான் Mr. Foote அவர்கள் சிறையில் வைக்கப்பட்டார்; அந்தச் சட்டத்தை யனுசரித்துதான் மிஸ்திரெஸ் பீசாண்டம்மாள் தன் குழந்தையை இழக்கவேண்டியவ ரானார்; அந்தச் சட்டத்தை யனுசரித்துதான் லார்டு ஆம்பர்லி யவர்களுடைய உயில் ரத்தாய்விட்டது, அவர் தன் மக்களுடைய படிப்புக்காக ஏற்படுத்தி வைத்த திரஸ்டு ஏற்பாடும் ஒதுக்கி விடப்பட்டது; அந்தச்சட்டத்தைப் பற்றித்தான் மிஸ்டர் ஜஸ்டிஸ் ஸ்டீவென் அவர்களும் அதிலுள்ள கோரமான அநியாயங்களையெல்லாம் பலரறியத் தான் எடுத்துத் தூற்றவேண்டி யிருக்கிறதென்று சொல்லினர். நாங்கள் கேட்டுக்கொள்ளுகிற தெல்லாம் இந்தச்சட்டங்களை ரத்துசெய்யவேண்டு மென்பதே. அந்தச்சட்டங்கள் உபத்திரவஞ் செய்வதற் குதவுமேயல்லாமல் வேறொன்றற்கு முதவா; அவை மதத்திற்கும் உபயோக

ப்படா, சமயபேதத்தையுந் தடுக்கா. வால்ட்டேயரவர்கள் அவற்றைப் பரிகாசஞ்செய்தனர்; ஹாப்ஸ் அவர்கள் அவறறிற்காக அசங்கியப்பட்டனர்; அவற்றைக்கொண்டு இரண்டொருவரை நீங்கள் சிறையிலடைத்துப் பூட்டலாம், எண்ணத்தையடைத்துப் பூட்ட உங்களால் மாளாது. உங்கள்மதம் உண்மையானதாகில் உங்களுக்கு அந்தச்சட்டங்கள் வேண்டுவதில்லை; உங்கள்மதம் பொய்யானதாகில் அந்தச்சட்டங்களை நீங்கள் வைத்திருக்கக் கூடாது. ஒருவரையொருவர் நேசிப்பது உங்கள் மதக்கொள்கையாகில், அந்தச்சட்டங்களை நீங்கள் உபயோகிக்கலாகாது; ஒருவரையொருவர் பகைப்பது உங்கள் மதக்கொள்கையாகில், அவற்றை உங்களிடத்தி லிருந்த (கொடிய) ஆயுதத்தைப் போலப் பறித்துக்கொள்ள வேண்டும். அந்தச்சட்டங்களை ரத்து பண்ணும்படி இப்போது மசோதாச்சட்டம் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது; அதைத் தாக்கல் செய்தவர்கள் மதஸ்தர்களே; உபத்திரவஞ்செய்வது கெட்டதென்றும், அதினுல் அதைப் பிரயோகிக்கிறவர்களுடைய துர்பலம் வெளியாகிறதென்றும் நம்பினவர்கள்தான் அதைத் தாக்கல் செய்தவர்கள். சுதந்தரம் யாவர்க்குஞ் சமமாயிருக்கவேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம். அந்தச் சுதந்தரத்தை யடையும்வெற்றி பெறவே பெறுவோம்; பற்றற விலக்கிவிட உங்களால் மாளாது, நீங்கள் கொஞ்சமட்டில் தடுக்கக்கூடும். அநேகர் கொளுத்திவிடப் பட்டார்கள், கொளுத்தினதினுலே எண்ணமொழியவில்லை. அநேகர் சிறைச்சாலையி லடைக்கப்பட்டார்கள், அதினுலே பேசுவது நின்று போகமாட்டாது. கழுமரமும் சிறைச்சாலையு மிருந்தும், அவற்றிற்கெதிராக எங்கள் பிரசங்கமேடை ஜயம் பெற்றிருக்கிறது. பூரத்தியாயக் கற்பிப்பதற்கும் நேர்த்தியாய்ப் பரிசோதிப்பதற்கும் புதுசங்கதிக்கும் புது எண்ணத்திற்கும், பேனுவும் தெலெஸ்கோப்பும் மைக்ரஸ்கோப்பும் வெற்றியடைந்திருக்கின்றன. எங்களை மதப்புரட்ட ரெனகிறீர்கள். [அதெப்படியாவ திருக்கட்டும்;] நாங்கள் மனிதருக்குரிய சுதந்தரத்தைச் சமமாகக்கேட்கிறோம், நாங்களும் மனிதர்களே, நீங்களும் மனிதர்களுக்கு மிஞ்சினவர்களல்ல. நியாயங்களை யெடுத்துப் பேசுஞ் சுதந்தரத்தையும் வாதிக்கும்படியான சுதந்தரத்தையும் உத்தரஞ் சொல்லும்படியான சுதந்தரத்தையுங் கேட்கிறோம். இருபட்சத்தையும் ஆராய்ச்சிசெய்து முடிவுகட்டுவது சிறைச்சாலையின் வாயிலல்ல; சிறைச்சாலைக் காப்போனுடைய திறவுகோல் வாதமல்ல. நாங்கள் பரிகாசவார்த்தைகளைப் பேசுகிறோ மென்கிறீர்கள். ஏன்பேசக்கூடாது? உங்கள் சொந்தமதந்தவிர மற்றப் பிறமதத்தையும் நீங்கள் பரிகாசஞ் செய்கிறீர்கள், நாங்களேன் உங்கள்மதத்தைப் பரிகாசஞ் செய்யக்கூடாது? நாங்கள் பரிகாசஞ்செய்வது உங்களுக்கிஷ்ட மில்லாவிட்டால், எங்களுக்கு நியாயம் நடப்பியுங்கள்; நாங்கள் பட்சமாயிருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினுல், எங்களிடத்தில் நீங்கள் பட்சமாயிருங்கள்; வருத்தமுண்டபண்ணும் வார்த்தைகளை நாங்கள் பிரயோகிக்கக் கூடாதென்றுல், நீங்களும் அப்படியே யிருங்கள். அநேகமதங்கள் சிவித் திருந்து மாண்டுபோயின; ஒருவேளை உங்கள்மதம் பொய்யாயிருக்கலாம். நீங்கள் சொல்வதே சரியென்கிற நிச்சயமிருக்குமாகில், நீங்கள் உதாரத்துவமா யிருக்கக்கூடும்; உண்மை உங்களுதாயிருப்பது நிச்சயமாகில், நீதியாயிருப்பது அத்தியாவசியகம், நீங்களெல்லோரும் என்னுேடு ஒற்றுமை கொள்ளுகிறீர்க ளென்று நினைக்கத் துணியேன்; நாங்கள் சொல்வது சரியல்லவென்று நினைப்பவர்களும் இங்கே சிலருண்டென்று எனக்குத்தெரியும்; ஆனுல் எத்தனைபேர் அவர்கள்காலத்திலே தோஷங் கூறப்பட்டுப் பின்பு கனப்படுத்தப்பட்டார்களோ அதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள், அவர்களுடைய வரிசையில் சேர்க்கப்படுதற்கு நாங்கள் பாத்திரரல்லாமற் போயினும், நாங்கள் நவீனமான கருத்தைத் தெரிவிப்பதை நீங்கள் அவசரப்பட்டுத் தடுப்பது உங்கள்பேரில் தப்பிதமாகலாம். பேக்கனுனவர் சுத்த லௌகிகியென்று நிந்திக்கப்பட்டார்; நியூட்டனுனவர் வேதப்புரட்ட னென்று அவதூறு பேசப்பட்டார். அவர்களுடைய காலத்திலே நாஸ்திகரென்று இகழப்பட்டவர்கள் மானிட சீர்திருத்தத்திற்காகச் செய்தமுயற்சியி னிமித்தம் அவர்களுடைய பிற்காலங்களில் சுத்தவாளரோடு சேர்க்கப்பட்டார்கள்.

உங்களுக்குச் சம்மதமாயிராத இவ்வளவையும் பொறுமையோடு கேட்டிருந்ததற்காக உங்களுக்கு வந்தனஞ் செய்கிறேன், உங்களுக்குநேரமாயிற்று, செலவுகொடுங்கள், போய் வருகிறேன். A. M.

இயற்கையறிவும், பகுத்தறிவும்.

ராபர்ட்டு கூப்பரவர்களுடைய
அபிப்பிராயத்தை யனுசரித்து,
அமரம்பேடு
முத்துசாமிமுதலியாரால் எழுதப்பட்டது.

(118 - வது பக்கத் தொடர்ச்சி.)

டப்லின்பட்டணத்துத்தற்கால ஆர்ச்பிஷப்பாகிய டாக்டர் வேட்லியவர்கள் அப்பட்டணத்துத் தாவரஜங்கமசாஸ்திரச்சங்கத்தாருக்கு முன்பாக இயற்கை யறிவைப்பற்றிக் கொஞ்சகாலத்திற்குமுன்னே செய்தஉபந்நியாசத்தில் எனக்குமிகவுமாதரவான அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கிறர். அவர் இக்காலத்திய மிகச்சிறந்த தத்துவ சாஸ்திரிய மல்லாமல் திவ்வியமான தர்க்கசாஸ்திரமுஞ்செய்த ஆசிரியர். அப்படிப்பட்ட தர்க்க சாஸ்திரம் எந்தப் பாஷையிலுங் கிடையாது. அவர் சொல்லுகிறதைக் கேளுங்கள். மிருகங்களைவிட மனிதருக்கு இயற்கையறிவு குறைவாயிருப்பதுபோலவே, மனிதரைவிட அதவா உயர்ந்தவகுப்பு மிருகங்களுக்குப் பகுத்தறிவு குறைவாயிருக்கிறதென்று அந்த உபந்நியாசத்தில் வேண்டிய நியாயங்களை யெடுத்துக்காட்டிக் கூறியிருக்கின்றனர். 'மனிதனுல் செய்யப்பட்டபோது பகுத்தறிவின் காரியங்களென்று யாவராலு மொப்புக்கொள்ளப்பட்ட பலகாரியங்கள் பரிஷ்காரமா யவ்வித ஞண்டுகோலுக்குட்பட்டே மிருகங்களால் செய்யப்பட்டன' என்று குறித்திருக்கிறர். அறையைவிட்டு வெளியில் போகவேண்டியபோதெல்லாம் மணியையாட்டக் கற்றுக்கொண்ட ஒரு பூனையைக் குறித்துப்பேசினர். அதுமுதல்தடவை இந்த உபாயஞ்செய்தது இராக்காலத்திலாகையால், வீட்டிலிருந்தவர்க ளெல்லாருந் திருடனென்று நினைத்து, சலாகைகள் குறடுகள் கோல்கள் முதலியவற்றை யெடுத்துக்கொண்டு மெத்தையைவிட்டுக் கீழே யிறங்கி ஓடிவந்தார்கள். இந்த விருத்தாந்தத்தைப்பற்றி ஆர்ச்சி பிஷப்பவர்களே 'அப்படிப்பட்ட காரியம் மனிதனுல் செய்யப்பட்டால் பகுத்தறிவைக்கொண்டு செய்யப்பட்டதென்று மதிக்கப்படுமென்பது மிகவுந்தெளிவாயிருக்கிறது, அப்படிப்பட்ட காரியங்கள் மனிதனுல் செய்யப்பட்டபோது பகுத்தறிவின் காரியங்களென்று சொல்லுகிறுர்கள், மிருகங்களால் செய்யப்பட்டபோது ஏனப்படிச்சொல்லக்கூடாதோ எனக்குத் தெரியவில்லை' என்றுர். சாபாஷ், ஆர்ச்சி பிஷப்பவர்களே! உம்முடைய நுாயகுணத்திற்காக வந்தனம். அப்படி யவர் ஒத்துக்கொள்வதினுலே- மனிதனுக்குப் பகுத்தறிவு மனம் முதலியவை யளிக்கப்பட்டிருக்கிறபடியால் அவனுக்கு அழிவில்லாத ஆன்மா வொன்றிருக்கிறதாகில், அந்தப்பூனைக்கு மிருக்கவேண்டுமென்கிற-சங்கட்ட முண்டாகிறதென்று அவர் நினைத்தாரோ இல்லையோ எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. அவரும் அவருடைய பூனையும் பரலோகத்திலே என்ன தமாஷான பரங்களாகக் கூடிக்கொண்டு வாழவேண்டியதிருக்கும்!

அநேகஜெந்துக்களுக்குத் தூரதிருஷ்டியோசனையுண்டு; அது மனதைச்சேர்ந்த சிறந்தலட்சணமே. இதை மழைகாலத்தில் ஜீவிக்கவேண்டியதற்காக அவற்றுல் பண்டங்கள் சேகரித்துச்சேர்க்கப்படுவதில் காணலாம், அது பரம்பரையாய் நடந்துவருகிற பகுத்தறிவினு லுண்டானதுதான்; அப்படிப்பட்ட காலத்தில் பண்டஞ் சம்பாதிப்பது அசாத்தியமென்பதையும், இவ்வளவுவேண்டுமென்பதையும், அதை யின்னபடி சேர்த்து வைக்கவேண்டுமென்பதையும், கெடாதிருக்கும்படியான பதார்த்த மின்னதென்பதையும் அறிந்துகொள்வதே பகுத்தறிவின் லட்சணமென்று ஸ்பஷ்டமாய் விளங்கும். தற்காலத்துப் பசியைத்தணித்துக்கொள்ளுவதற்கு வெறு மியற்கையறிவின்பிரேரபனை போதுமானது; பின்னுக்கு வேண்டியதை முந்தியறிந்துகொள்வதற்கு மனத்தன்மை பரிஷ்காரமாய் வேண்டியேயிருக்கிறது. எறும்பு தேனீ அணிற்பிள்ளை நீர்நாய் முதலியவை தூரதிருஷ்டியோசனைக்கு விளக்கமான திருஷ்டாந்தமா யிருக்கின்றன.

கடவுளினிடத்திலே ஞானம் விளங்குகிறதென்பதை மெய்ப்பிக்க டாக்டர் பேலியானவர் செய்த உபந்நியாசத்திலே பிரபஞ்சத்தினுலே (இன்னதினுல் இன்ன துண்டாகவேண்டுமென்கிற) சூழ்ச்சியும், அந்தச் சூழ்ச்சியினுல் உத்தேசமும், உத்தேசத்தினுல் ஞானமும் வெளிப்படுகிறதென்று சொல்லியிருக்கிறர். அப்படி சூழ்ச்சியானது உத்தேசத்தையும், உத்தேசமானது ஞானத்தையுந் தெரிவிக்கிறதாயிருந்தால், பட்சிகளின் கூண்டுகளாலும், தேனீயின் அறைகளாலும், சிலந்திக்கூடினுலும், எறும்புப்புற்றினுலும், நீர்நாயின் அணையினுலும்

செல்லுப் புற்றினுலும் சூழ்ச்சியும், சூழ்ச்சியினுல் உத்தேசமு
ம், உத்தேசத்தினுல் ஞானமும் விளங்குகிறதென்று நான் நிச்
சயப்படுத்துகிறேன்.

சில பக்த்திக்காரர்கள் மனம் அல்லது விவேகந்தான் ஆத்
துமாவென்று சொல்வதினுலே சங்கட்டத்திற்குள்ளாவதை ய
றிந்து, விவேகம் விளங்குவதினுலேயேயல்ல, மேலான விவே
க மிருபபதினுலேதான் மனிதன் அழிவில்லாதவனென்று சொ
ல்லி அதற்கு விசேஷங் கற்பிக்க எத்தனப்பட்டிருக்கிருர்கள்.
இப்படிச்சொல்வதும் அவர்களுடைய வாதத்திற்குக் கெடுதி
யாகவேயிருக்கிறது. அடுத்த இரண்டாவதாகிய செந்துவை
விட மனிதனுக்கு மேலான விவேகமிருப்பதால் அவனுக்கு அ
ழிவில்லாத தன்மையுண்டெனபோமாகில், ச்சிப்பாஞ்சி யென்
னு மொருவித காட்டுமனிதனுடைய விவேகமானது வரிசையி
ல் அதற்கடுத்த செந்துவைவிட மேலானதாயிருக்கிறபடியால்,
அந்தக்காட்டுமனிதனுக்கும் அம்மாதிரியான பகுத்தறி விருப்
பதினுலே அழிவில்லாத கொள்கையிருக்கவேண்டும்; அப்படி
யே ஜூபைட்டென்னு மற்பசாதிப்பூச்சிவரையி லிருக்கவேண்
டியதே. ஆயின், கூர்மையான புத்தியுள்ள குரங்கு முதல்மனி
தன்வரையில் ஆராய்வோமாகில், அவனுடைய மேலான மூளை
யின் தொழிலை விளக்குவதற்குப் பிரத்தியேகமான வொரு ச
த்து இருக்கிறதென்று நாம் நினைக்கவேண்டியதா ? குரங்கினு
டைய மூளையின்தொழில் ஆட்டைவிட மேலானதாயிருப்பதா
ல் குரங்கிற்கு அந்த சத்தல் ஓர் பாகமாவது அம்மாதிரியான
ஏதோவொரு சத்தாவதிருக்கிறதென்று ஏன் ஒப்புக்கொள்ளக்
கூடாது ? வளர்க்கிறவன் அழைத்தால் வருகிறதும் அன்ருட
வாகாரத்திற்காக வரவழைக்கிற விடத்திற்கு நீந்திவருவதுமா
கிய மீனுக்கு ஏதோ வொரு அழியாத சத்தில் கடுகத்தனையாவ
திருக்கிறதென்று ஏன் சொல்லக்கூடாது ? இப்படி கேட்பது
அவலட்சணமாயிருந்தால்,—அதாவது, தாழ்வான செந்துக்க
ளின் விசேஷமான மூளைத்தொழிலை நடத்த வேறு சத்துவே
ண்டியிராவிட்டால், சொற்ப ருசுவாவதில்லாதிருக்க, மனித
னுடைய விசேஷமான மூளைத்தொழில்மாத்திரம் அப்படிப்ப
ட்ட சத்துயில்லாமல் நடக்கமாட்டாதென்று நாமேன் நினைக்
கவேண்டும் ! சிறந்த செந்துவாகிய உருங் ஊட்டாங் என்னு
ம் ஒருவிதகாட்டுமனிதனைக்குறித்து, பவ்வன் என்பவர் இந்தப்
பிராணிகளிலொன்று அதைப் பார்க்கவந்தவர்களுக்குக் கை
கொடுத்து, அந்தக் கூட்டத்தாரில் ஒருவனுகத்தா னிருந்தாற்
போல அவர்களோடுகூட உலாவினதையும்; மேசையினிடத்து
ட்கார்ந்து துவாலையைவிரித்து உதடுகளைத்துடைத்துக்கொண்டு
போசனஞ்செய்ய மேசைக்கத்தியையும் முள்ளையு முபயோக
ப்படுத்தி, பானத்தைப் பளிங்குபாத்திரத்தில் வார்த்து, கோ
ப்பையையும் தட்டைப்பீங்கானையு மெடுத்துச் சர்க்கரையைப்
போட்டுத் தண்ணீரா வார்த்து அது ஆறுகிறவரையில் துழா
விக்கொண்டிருந்ததையும் பார்த்ததாகவும், இதைத் தன்னெஜ
மானனுடைய உத்தரவினுலல்லாமல் தன்னிஷ்டமாய்ச்செய்த
தாகவுஞ் சொல்லியிருக்கிருர். நித்தியாத்ம சித்தாந்திகள் அ
ப்படிப்பட்ட காரியங்கள் மிருகத்தினிடத்தில் வெறுமியற்கை
யறிவா லுண்டாகின்றவையென்றும், நம்மிடத்தில் பகுத்தறி
வா லுண்டாகின்றவையென்றும் நிச்சயமாய்ச் சொல்லத்து
ணிகிருர்களே அதற்கென்ன அத்தாட்சியென்று பின்னுமொரு
தரங் கேட்கிறேன்.

பகுத்தறிவானது மிகவும் விசாலப்பட்டுப் பிணைந்திருக்கிற
இயற்கையறிவேயல்லாமல் வேருென்று மல்லவென்றும், யா
தொரு காரியத்தை இயற்கையறிவாலாயதென்று நாம் சொல்
லும்போது அங்கபந்தத்தின் சேஷ்டையால் உடனே யுண்டா
கிற தனிக்காரியமெனத் தெரிவிக்கிருேமென்றும், நாம் கொ
ள்ளுகிற தனித்தனியான வொவ்வொரு தீர்மானமும் உணர்ச்
சியின் தருமததையொட்டி இயற்கை யறிவாலாகிய காரியமெ
ன்றும், அதினுலே பிணைந்திருக்கிற நமது கருத்துகளைப் பிரிக்
க நமக்குச் சக்த்தி யுண்டாகிற தென்றும், ஒருவிஷயத்தினிட
த்து நமக் குண்டாகிற இச்சையானது- அவ்விஷயத்தை நட
த்தவேண்டியதா யிருக்கிற தசைக்கோதுகளின் எழுச்சியோடு
சேர்ந்து அங்கபந்தத்தின் முக்கியமான தருமத்தினின்று இய
ற்கையறிவோடுங்கூடி யெழும்புகிற எழுச்சிதானென்றும்; நா
ம் இச்சைகொள்ளுகிருேம், தசைக்கோதுகள் அதற்குட்படுகி
ன்றன, நமக்கு உணர்ச்சியுண்டாகவே எழுச்சி யுண்டாகிறதெ
ன்றும்; ஆகையினுலே நமது பகுத்தறிவும் இச்சையும் மிகவும்
பிணைந்துகொண்டிருக்கிற இயற்கையறிவு சம்பந்தந்தானென்
றும், இயற்கையறிவு பகுத்தறிவென்றபேதம் நாமாய் வைத்
துக்கொண்டதேயல்லாமல் உண்மையான பேதத்திற்கு ஆதார
மொன்றுமில்லையென்றும், ஸர் சார்லிஸ் மார்கன் சொல்லியி
ருக்கிருர். அவர் சொல்வது சரியாயிருக்குமானுல், நித்தியா
த்ம சித்தாந்திகளுடைய கற்பனை முழுதும் சுருக்கமாய் அடி
பட்டுப்போகிறது.

மற்றப் பிராணிகளுக்கும் விவேகம் மனம் முதலியவை யி
ருப்பது உண்மையாகி, சடமற்றதும் அழிவில்லாததுமாகிய ல
ட்சணமுண்டென்று ருசுப்படுமாகில், அந்தப் பிராணிகளும்
மேலான மறுஉலகத்தில் வாழவேண்டுமென்பது நிர்ணயமே.
அழிவில்லாமையைப்பற்றிச் சிறப்பித்துச்சொல்லப்பட்ட சித்
தாந்தத்தின் பேய்த்தனமும் ஒவ்வாமையும் இவ்விதமாய் வெ
ட்டவெளி யாகிறது. குருக்கள்மாருடைய சித்தாந்தத்தினு
லேயே வேறுவகையில்லாமல் நியாயமாய்த் தேறுகடையாகிற
முடிவையோசிக்கையில் அவர்களும் சிரிக்கவேண்டியதுதான்.

திரவியத்தின் பிரிவுத்தன்மை.

தங்கத்தகடு அடிக்கிறவர்கள் ஓரோகிறையின் இடைத் தங்கத்
தை-ருய-சதுர அங்குலங்கொண்ட தகடாக அடிக்க வல்
லவர்களா யிருக்கிருர்கள். இந்தத்தகடு சித்தமாய்-ரு
லக்ஷம் பங்காகப் பாகிக்கப்படலாம். இந்தபாகங்களில்
ஒவ்வொன்று சுபாவ திருஷ்டிக்குத்தோற்றத் தக்கதாக
இருக்கிறது. ஒரு பூதகண்ணுடியானது ஒரு வஸ்துவி
னுடைய மேற்புறத்தை அதிருக்கிற பிரமாணத்திலும்-ா-
மடங்கதிகமாக தோற்றச்செய்யத்தக்கது-ஆகையால் அ
ந்த பூதகண்ணுடியின் சகாயத்தினுல் மேற்கூறிய-ரு லட்
சம்பாகங்களில் ஒவ்வொருபாகத்தில் நூற்றிலொருபங்கு
கூட தோற்றத்தக்கதாக இருக்கின்றது—அதாவது ஒரு
கிறையின் இடைத்தங்கத்தில் ருா லட்சம்பாகங்களில் ஒ
ருபாகந் தோற்றத்தக்கதாக இருக்கின்றது-எனவே ஒரு
கிறையின் இடைத்தங்கத்தைத் தோற்றததக்க ருா லட்ச
ம் பாகங்களாகப்பாகிக்கலாம் என்கிறஅர்த்தம்ஆகிறது.
ஆனுல் தங்கச்சரிகை என்கிறதைச் செய்கிற வேலையில்
வழங்கப்பட்ட வெள்ளிக்கம்பியின் மேலே சுற்றப்படுகிற
தங்கமானது வெகுநீளமாயிருக்கிற மேற்புறத்தைமூடா
நின்றது-அப்படியிருந்தாலும் இந்தச்சரிகையை ஒருபூத
கண்ணுடியினுல் பார்த்தால் அது ஒரேதங்கக்கம்பியைப்
போலவேயிருக்கிறது-இப்படி யடிக்கப்பட்ட ஒருகிறை
யின் இடைத்தங்கமானது-ருய-கெசச்சதுர ஸ்தானத்
தைப் போர்த்துக் கொள்ளுமென்று கணிக்கப்பட்டிருக்
கிறது.

திரவியத்தின் சுபாவப்பகுதிகள் இன்னும் ஆச்சரியப்படத்தக்
கதுகளா யிருக்கிறதுகள் - கற்பூரம் - கஸ்தூரி - பெருங்
காயம் இப்பேர்ப்பட்ட வாசனை திரவியங்களிலே அற்புத
மான நுண்ணியபாகங்கள் காணப்படுகிறதுகள்-எப்படி
யென்ருல் - அதுகள் தங்களுடைய பரிமளரேணுக்களால்
விஸ்தாரமான வெள்ளிடையை எப்பொழுதும் நிரப்பிக்
கொண்டிருந்த போதைக்கும் - அதுகள் வெகுநாள் இப்
படியிருந்தால் அதுகளின் இடையில் எவ்வளவோ கொஞ்
சங்குறைகிறது.

இதுவுமன்றி எல்லாவற்றிலும் நல்ல பூதகண்ணுடிகளால் இந்
தக்காரியங்களைப் பரிசோதித்தவர்களாலேயும் எல்லாரா
லும் நம்பப்படுஞ் சரிசோதனை செய்தவர்களாலேயும்
சொல்லப்படுகிறது என்னவென்ருல்-காட்பீஷ்-என்கிறது
ஒருகடல்மீனும் - அதினுடைய சினைக்கொத்திலே இந்த
உலகம்எங்கும் உள்ளமனிதர்கள் தொகையிலும் அதிக
தொகையான செந்துக்க ளிருக்கிறதுகளாம் - இப்படிப்
பட்ட செந்துக்கள் நாற்பதுலட்சம் ஒன்ருகக்கூடினுலும்
ஒருமணல்பிரமாணம் ஆகமாட்டாதுகளாம்-இந்த சிறிய
செந்துக்கள் இருதயஸ்தானம் - தீபனஸ்தானம் - சதை
நரம்புகள் - நரம்புகள் - உதிரக்கால்கள் முதலான இப்
பேர்ப்பட்ட தாது பாகங்களை யுடையதுகளாம். பெரிய
செந்துக்களிலிருக்கிறபடியே இதுகளும் உதிரங்கள் சஞ்
சரிக்கத் தக்ககுறைவில்லா ஏற்பாட்டை உடையதுகளாம்.
இதை நீங்கள் இப்போது ஒத்துக்கொள்ளுவீர்க ளாகில்
திரவியத்தின் அனந்தமான பிரிவுதன்மையினுடைய கி
யானம் உங்களுக்கு வந்திருக்கலாம். ஓரங்குலத்தில் ப
த்தில் ஒருபாக விஷ்கம்பத்தையுடைய ஒருகோளமான
து - இந்த முழுப்பூகோளத்துக்கு எத்தனைபாகம் சிறிதா
யிருக்கிறதோ அத்தனைபாகம்- இந்த செந்துக்களில் ஒன்
றினுடைய ஒரு உதிரஅணுவானது முன்னேசொன்ன
கோளத்துக்குச்சிறிதாயிருக்கிறது என்று நன்ருகக்கணிக்
கப்பட்டிருக்கிறது.அப்படியிருந்தாலும் இந்த செந்துவினு
டைய உதிரத்தின் அணுக்களை - ஒளியின அணுக்களோடு
உவமானித்துப் பார்க்குமிடத்தில்-இந்தஉதிர அணுக்கள்
ஒளியின அணுக்களுக்கு பிரமாணத்தில் எவ்வளவுபாகம்
அதிகப்பட்டதுக ளாகக் காணப்படலாம் என்ருல்-ஒவ்
வொருமணலுக்கு ஒவ்வொருமலையானது எவ்வளவு பா
கம் அதிகப்பட்டிருக்கிறதோ அவ்வளவுபாகம் என்று
காணத்தக்கது.

இவ்வகைப்பட்ட அனேகம் வேறே திருஷ்டாந்தங்களை ஒவ்வொன்று நான் காண்பிக்கலாம் - ஆனால் இவ்விடத்திலே கூறிய திருஷ்டாந்தங்களே மேற்கூறிய திரவியம் இவ்வளவு சிறிய பாகங்களாகப் பிரிக்கப்படத்தக்கதா யிருக்கிறது என்று உங்களுக்குத் தெளிவிக்கப்போதும்– ஆகையால் இதுகளோடே நம்முடைய தற்கால சம்பாஷணையை நிறுத்துவோம்.

கடிதம்.

ஐயா,

சிலமதஸ்தர்களோடு நமது கொள்கையைப்பற்றிப் பேசவேண்டிவந்தபோது, எனதறிவுக் கெட்டியமட்டிலே தத்துவவிவேசினியின் பேருதவியைக்கொண்டு பேசிவந்தேன். எங்களிருதிறத்தாருக்கும் சிலமணி நேரம் வாதம் நடந்தது. அதில் பத்திரிகையி லெடுத்துக்காட்டியிராத நவீனமான விஷயமொன்று மில்லாமையால, நடந்த சங்கதிகளை யெழுதிப் பத்திரிகையை வீணாய் நிரப்புவதற்கெனக் கிஷ்டமில்லை. எனவாததை யடிக்கும்பொருட்டு எதிரிகள் ஒன்றற்கொன்று முரணாயிருக்கிற சைவம், வைஷ்ணவம், துவைதம், அத்வைதமாகிய இவற்றின் சாரங்களைச் சமயத்திற்கேற்றவாறு பிரயோகித்துவந்து, கடைசியில் சமாதானஞ்சொல்லச் சரிப்படாமல் மடங்கவேண்டிவந்தபோது, என்பேரில் வெறுப்படைந்து, கலியுகத்தில் எல்லாம் சங்கிரமசாதியாகி எல்லாமதங்களு மழிந்து நாஸ்திக மதமொன்றே நிலைபெறுமென்று பாகவதமுதலிய கிரந்தங்களில் சொல்லியே யிருக்கிறது, அந்தப்படி நிறைவேறுவதற் கையமில்லையென்றார்கள். அவர்களுடைய கடவுளின் சித்தமு மப்படியிருந்து, அந்தக்கிரந்தங்களில் சொல்லியிருப்பது முண்மையாகில், அவர்களும் ஜாதியையொழித்து நாஸ்திகர்களாக வேண்டியதுதானே. இதையறிந்திருந்தும், அவர்கள் நம்மோடு வீணுக்கு வாதாடுவானேன்? இதைச்சுத்தமாய் மறந்து, தங்கள் கடவுளினிஷ்டத்திற்கு விரோதமாய்க் கூடியமட்டில் சைவ வைஷ்ணவ சமயங்களை நிலைநாட்ட வகை தேடுகிறார்கள்போலும். அப்படியு முடியுமோ? இதை வாசிக்கிற மதஸ்தர்கள் தங்கள் கிரந்தங்களில் சொல்லியிருக்கிற சித்தாந்தங்களை ஞாபகத்தில் வைத்து, இனியாவது வீணுக்கு நம்மோடு வாதாடாமல் தங்கள் மதங்களை விட்டொழிவார்களென்கிற நம்பிக்கையோடு இச்சிலவரிகளை யெழுதிக்கொண்டேன்; மன்னிக்கவும்.

கையொப்பக்காரன்.

பெங்களூரிலிருந்து கடிதநேசரொருவ ரெழுதியது.

கர்னல்ஆல்காட் ருஷீஸ்வரர் சென்றமீ 17௳ பெங்களூர்வந்துசேர்ந்து, 19௳ சென்றல்காலீஜ் வித்தியாசாலையில் இங்கிலீஷில் பிரசங்கம்செய்தாரென்றும், மைசூர்திவான் சேஷாத்திரிஐயரவர்கள் சபாநாயகராக வீற்றிருந்தாரென்றும், பிரசங்கியார் குறிக்கப்பட்ட காலந்தப்பிவந்தமையால், காலநியதிதவறுந்தன்மையுள்ள இந்துக்களுடைய பழக்கத்தினால் அவரும் காலதாமசமாய்வந்திருக்கலாமென்றும், மகாத்துமாக்களைத் தரிசித்துஅவர்களுடையஅனுக்கிரகத்தினால்சித்திபெற்றவரா யிருப்பாராயின், நினைத்தபோது ஆகாயகமனமாய் வந்திருக்கக்கூடுமேயென்றும் வினவுகிறார். அந்தப்பிரசங்கியார் தாம் அமரிக்காதேசஸ்தரென்றும், தமது பிறப்பு வளர்ப்பைப்பற்றிச் சிறப்பித்தும், தமதுகுருவாகிய மாடாம் பிளாவட்ஸ்கி யம்மையாரிடத்தில் தாம்உபதேசம்பெற்ற இரகசியவரலாற்றையும், இந்துசாஸ்திரங்களைத் தாமறிந்திருக்கிற விமரிசையையும், இமாசலபர்வதத்திற்குச் சென்று மகாத்துமாக்களைத் தரிசித்ததையும், யோகவித்தையைத் தாமறிந்திருப்பதையும், தந்தி-தப்பால் இல்லாமலே ஒருதேசத்தார் மற்றொருதேசத்தாரோடு சம்பாஷிக்கலாமென்றும், ஆகாயத்தில் உலாவலாமென்றும், யாவருக்கும் சகோதரவாஞ்சை யிருக்கவேணுமென்றும், இலிங்கம், ஆவுடையார் முதலியவைகளைப்பூசிக்கலாமென்றும், தமக்குத்தெரியாத சமிஸ்கிருதபாஷையை இளைஞர் கற்கவேண்டுமென்றும், சமிஸ்கிருதவித்தியாசாலைகள் ஸ்தாபிக்கவேண்டுமென்றும் சமிஸ்கிருதபண்டிதர்களைப் போஷிக்கவேண்டியதற்குப் பொருளுதவி அனைவரும்செய்யவேண்டுமென்றும், சங்கராச்சாரியரையும், மாத்வாச்சாரியரையும், புத்தாச்சாரியரையும் ஸ்தோத்திரித்தும், தாம் மஹான்மாக்களின் "சேவகனும், தூதனுமாய்," உத்தரவின்பேரில் வந்திறங்கியதாகவும் சொல்லித் தமது ஆச்சரியமான பிரசங்கத்தை முடித்து விட்டனரென்றும், முடிவில்சபாநாயகர்தமதுஅபிப்பிராயமொன்றுங் கூறவில்லையென்றும், ம-ா-ா-ஸ்ரீ கிருஷ்ணராவ் அவர்கள் பிரசங்கியாருக்குவந்தனம் சொன்னாரென்றும், அன்றுகூடிய இந்துஜனங்களில் அநேகர் இங்கிலீஷ்தெரியாதவர்களா யிருந்தபோதிலும், தங்கள்மதத்தையும் வேதங்களையும், இலிங்கங்களையும் புகழ்ந்தாரோயென்றுமாத்திரம் மிகவும் ஆனந்தங்கொண்டார்களென்றும்,பிரசங்கியார்வாக்கில் வெளிவந்தவிஷயங்களைமாத்திரம் உள்ளும்புறமுமாகக் கவனிக்கவேண்டியதேயன்றி, அவர் இந்துமதத்தில்சேர்ந்து இந்துமதத்தை யனுசரிக்கிறாரென்று, எப்படி உண்மையான இந்துகனவான்கள் அவர்வாக்கெல்லாம் சுத்தமானவையென்று முழுமனதோடு நம்பக்கூடும்! ஆகையால் அவர்சங்கதியை நன்றாய்விசாரிப்பது நம்மவர்களகடமையென்றும், அவர் புத்த மதஸ்தரென்று முன்னமே அவரால் அச்சிடப்பட்ட புஸ்தகங்களின் மூலமாய் பட்டப்பகற்போல் வெளியாயிருக்க, அவர்இந்துமதத்தைத் தழுவிக்கொண்டாடுவதேனோ வென்பதைப்பற்றி இந்துக்கள் விசாரியாமல் கண்ணைமூடிக்கொண்டும், வாயைத்திறவாமலும், செவியையடைத்துக்கொண்டும் இருப்பதைப்பார்த்தால் ஆச்சரியமாயிருக்கிறதென்றும், இவர் சித்திபெற்றவராயிருந்தால், நரை, திரை, ஏன்வரவேண்டும்? சமாச்சாரம்பேசத்தந்தியும், தபாலும் வேண்டாதவர், சிலர்சோரியபுஸ்தகங்களை வரவழைக்க, சென்னையிலிருக்கும் தமது ஆசிரமத்துக்குக் கடிதமெழுதி தபாலில் அனுப்பத் தமது சிஷ்யருக்குச் சொல்லவேண்டிய தென்னவென்றும், மோட்சந்தர கிரிஸ்தவர்களுக்குக் கிரிஸ்துவைப் போலவும், மகமதியருக்கு மகம்மதுநபியைப போலவும், ஆல்காட் ரிஷியானவர் இந்துமதத்தைச் சீர்ப்படுத்தி, அனைவரையும் பொந்தியுடன் மோட்சத்திற்கனுப்பத் தூதனாய் அவதரித்தாற்போல் அவர்வாக்கினாலேதானே தெரியவருகிறதென்றும்; அவ்வூரில் ஒருகனவான்வீட்டிலுள்ள ஒரு பைத்தியக்காரனுக்கு அவர்மந்திரித்து அதுகுணப்படாமையால் கர்மவியாதியென்று சொல்லிவிட்டாரோயல்லாமல்,தான்மகாத்துமாவாயின் சொஸ்தமாவது செய்யவேண்டும்,அல்லது மந்திரிப்பதற்கு முன்னமே தீராவியாதியென்றாவது சொல்லிவிடவேண்டுமே! என்றும், பெங்களூரில் சிலர் நபருக்கு பத்து ரூபாய்கொடுத்துத் தியாசொபிச்சங்கத்திற்சேர்ந்தார்கள், இனியவர்கள் F. T. S. என்னும் பட்டப்பெயர் பெறுவதுதான் தாமசமென்றும்; நம்மவர்கள் குருட்டாட்டமாய் எதிலும்விழாமல், நன்றாய் ஆராய்ச்சி செய்து உண்மையைக்கண்டறிவார்களென்று கோருகிறதாகவும் எழுதினார்.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தீன்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால்,அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ௬

தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா ௨

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே இரண்டணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி---என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 32.] MADRAS :—SUNDAY AUGUST, 8, 286. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

WOULD HE NOT BE DEEMED A FOOL WHO COVERS HIMSELF AMONG A NAKED NATION ?

நிர்வாணபட்டணத்தில் நீர்ச்சீலைகட்டினவன் பைத்தியக்காரன்தானே ?

சுவாதீனம், பகுத்தறிவுடைய பிராணிகள் யாவற்றாலும்
விரும்பப்பாலதோஅன்றோ! ஓர்பிராணி தன்னால் விரும்பப்பட்
ட சுவாதீனத்தைத் தன்னையொத்த வேறோர்பிராணி அனுப
விக்கச் சகியாதிருக்குமாயின் அப்பிராணி நீதிநெறிதவறாத
விவேகாத்மியென மதிக்கற்பாலதுதானா? பிறர்சுகம் தம்சுக
மென்றும் பிறர்துக்கம் தந்துக்கமென்றும் கருதுவதைக்கா
ட்டினும் வேறேதருமமும் நீதியும்உண்டோ? இங்ஙனம் கரு
தாமையைக் காட்டினும் வேறும் அதருமமும் அநீதியும்
உண்டோ? இல்லை யாதலால் விவேகாத்மிகளென மதிக்கப்
பட்டமானுடர் தம்மால்விரும்பற்பாலதாந் தன்மையினதாகிய
சுவாதீனத்தைத்தம்மோடொத்தமானுடர் ஒவ்வொருவருக்கும்
ஈதல்வேண்டும். இவ்வீகை இல்லார் விவேகாத்மிகளென்னப்
பட்ட மனிதரெண்ணிக்கையிலுறாமல், காட்டகத்தேவாழும்
மேட்டிமைதங்கிய விலங்காதிகளோடு கூட்டுறவாளிகளேயா
வர். இந்நாட்டினும் பிறநாட்டினும் உள்ள சிலசமயிகள் தம்
அத்தியயனப்படியும் அனுபவப்படியும், சித்தசார்பின்படியும்
பேசவும் எழுதவும் தமக்கு எப்படிச் சித்தசுவாதந்திரியமுண்
டோ அப்படியே தம்மின் வேறுபட்ட அத்தியயனத்தையும்
அனுபவத்தையும் சித்தசார்பையும் உடையவர்களுக்கும் பே
சவும் எழுதவும் உண்டாயிருத்தல்வேண்டுமேயென்று சிந்தி
யாமல், அவர்களைத்தூஷிப்பதும் பகைப்பதும் அவர்கள்மேல்
அசுத்த அசப்பிய துன்மார்க்க வசனப்பகுதிகளை வாசாமகோ
சரமாகத்தூற்றுவதும் மானுஷிகமாமா? நீதியாமா? தரும
மாமா? சைவசமயிகளே! பூர்வம் குலச்சிறைநாயனாரும்
மங்கையர்க்கரசியும் சைவப்பற்றுடையவர்களாய் க்ஷமணர்
மத்தியில் அவர்கள்கொடுமைக்கு அஞ்சி வாழ்ந்துவந்த நாளில்
விபூதியை அவர்கள் அறியாவண்ணம் அந்தரங்கஸ்தானத்தில்
அணிந்து வந்தார்களென்று உங்கள் புராணத்திலேயே சொ
ல்லப்பட்டிருக்கிறதே. அப்படிச்செய்ததால் அவர்கள்விசுவா
சத்திற்கு யாதேனும் ஊறு உண்டாகியதா? சைவமகிமைகு
ன்றியதா? கொடுமைக்கு அஞ்சி அவர்கள் அங்ஙனம் செய்ததா
ல் அந்தஅவமானம்யாரைச்சாரும்? க்ஷமணர்களையா? சைவ
ரையா? சென்றஅக்ஷயவருஷக்கருப்பிலே பசிப்பிணியால்
வருந்தி ஜீவனாதாரம் அற்றுக்கிடந்த சில நாட்டுப்புறத்துசன
ங்களைச் சிலகிறீஸ்தவ போதகாசிரியர்கள் அன்னம்கொடுத்து
அவர்கள் மனச்சாக்ஷிக்கு விரோதமாய்த் தங்கள் குலம்புகச்
செய்தார்களே அந்த அவமானம்யாருக்கு? கிறீஸ்தவர்களுக்கா
ஏழைகளுக்கா! இப்படியே சிலசுவஞானிகளையும் சைவவை
ணவசமயிகளாகிய அவர்கள் மாதாபிதா உறவின்முறைபந்து
மித்திராதியர்கள் வலாத்காரஞ்செய்தலாலும், தூஷித்தலினா
லும், பகைபாராட்டுவதினாலும், இடுக்கண்பலசெய்வதினாலும்
அஞ்சி நாமம்முதலிய குறிகளைப்போடுகிறார்கள், இதனால்
அவர்கள்சுவஞானத்திற்குயாதேனும் பின்னமுண்டா? அவர்
கள் இங்ஙனம் செய்தலால் உண்டாகும் அவமானம் யாரை
[illegible]? அவர்களைவலாத்காரஞ்செய்யும் சமயிகளையல்லாமல்
அவர்களை அணுத்துணையுஞ்சாருமோ? மானைக்காட்டிமானைப்பி
டிப்பதுபோல உயிர்க்குயிராகிய ஈசன் மானுடச்சட்டைபோர்
த்து குருமூர்த்தமாய் ஆளவந்தாரென நம்பும் நீங்களே உங்
கள்மதத்தில் உங்களைப்போலவே வேடந்தாங்கி உங்களுக்கு
ச்சுவஞானபோதம்செய்யவந்த சுவஞானிகளைப்பழுதுசொல்வ
து ஆச்சரியமாகவல்லவோயிருக்கிறது. மாமியாருடைத்தால்
மண்பானை மருமகளுடைத்தால் பொன்பானையா? ஓ! சமயா
பிமானிகளே! சுவஞானிகள் தங்கள் இனத்தவர்செய்யும் உப
வாசம் பூசைமுதலியவற்றைத் தடுக்கின்றிலரென்றும் ஆதலா
ல் அவர்கள் அகத்தில் நாஸ்திகரல்லரென்றும் ஏளிதம்செய்யும்
உங்கள் நிகமனத்திற்கு ஆச்சரியப்படுகின்றோம். சித்தசுவாதீ
னமும் சமயசுவாதீனமும் நாங்கள் விரும்புதல்போலவே
பிறரும் விரும்பக்கூடுமாதலால் அவர்களை வலாத்காரத்தால்
தடுத்தல் நீதியுந்தருமமும் மானுஷிகத்துவமுமன்றெனவெண்
ணி மேலே சொல்லியபடி சன்மானிக்கின்றோமே யல்லாமல்
வேறல்ல. இதனாலேயே சுவஞானிகளுடைய பெருந்தகைமை
யும் ஏனையசமயிகளுடைய இழிதகைமையும் நன்குவிளங்கும்.
ஓ சமயிகளே, சுவஞானிகள் அவ்வம் மதாபாசங்களை அவ்வவ
ர்க்கு அங்கைநெல்லிக்கனிபோல எடுத்துக்காட்டி அவ்வவர்
மனத்தைத்தானேகனியும்படிச் செய்கின்றவர்களே யல்லாமல்
மதாபிமானந் தலைக்கொண்டு மதவெறிகொண்டு வலாத்கார
மென்னுந்தடிகொண்டு அடித்துக் கனிவிக்கின்றவர்க ளல்லர்.
இதனை நும்மனத்தில் திடமாகக்கொள்ளுங்கள். ஓசமயாபிமா
னிகளே, சுவஞானச்சுடர் உமது சமயசறுகைச்சாம்பராக்கு
மெனவஞ்சி அவலைநினைத்துக்கொண்டு உரலையிடிப்பதுபோல
(சுயமதஸ்தாபனம்பரமதகண்டனம் செய்வதைவிட்டு) சுவ
ஞானிகள்மேல் வீண் தோஷாரோபணம்செய்து எரிகிறகொள்
ளியை ஏறத்தள்ளாதீர்கள்; தள்ளின் சுவஞானச்சுடர் கொழு
ந்துவிட்டெரிந்து நும்மையும் நுஞ்சமயத்தையும் அதோகதிப
பிரயாணத்திற்கு ஆட்படுத்திவிடும். உங்களுக்கு நாஸ்திகத்தை
யெதிர்க்கக்கருத்தும் ஆண்மையுமுண்டேல் பத்திரிகாவாத
மேனும்வாக்குவாதமேனும் நேர்நேர்நின்று செய்யுங்கள். புற
ம்போக்கு போகாதீர்கள், ஒளித்துச்சண்டைசெய்வது யுத்த
வீரனுக்கழகன்று; நியாயாயுதந்தாங்கி நேரில்வந்துநில்லுங்கள்;
தட்டிப்பேச ஆளில்லாத சந்தைக்கூட்டங்களிலும், எதிர்வாதி
களில்லாத இடங்களிலும் சண்டப்பிரசண்டஞ்செய்து சந்தோ
ஷியாதீர்கள். இதனால் பெருமையும் புகழுங்கிடையாது. சு
வஞான சங்கத்தவர் உபந்நியாசிக்குந் தோறும் இப்பத்திரி
கையிலும் பிரத்தியேக கடிதங்களிலும் இன்னமாசம் இன்ன
தேதி இன்னவிடத்தில் இத்தனைமணிக்கு இதைப்பற்றி இன்னார்
பிரசங்கிக்கப்போகின்றார், நியாயவரம்புகடவாமல் வாதிக்கத்
தக்கவர்கள் இஷ்டமிருந்து வாதிக்கவேண்டில் வாதிக்கலா
மென்று பிரசுரம்செய்தே உபந்நியசித்து வருகிறார்கள். அவ்
வப்போது சிற்சிலர் வந்து வாதித்தும் இருக்கின்றார்கள். இங்ங
னம் செய்தால்மாத்திரம் பேரும் புகழும் கௌரவமுமுண்டா
மேயன்றி சுப மதாபிமானிகள் மத்தியில் தத்தம் மனம்போன
படி ஒருதலைத்துணிபாய்ப் பேசிக்களிப்பதில் பயனில்லை.

வைஷ்ணவாசாரியர்.

மானிடர்கள் பகவானுடைய ஸ்ரீபாதத்தை நெற்றி
யில் தரிப்பது கிரமமேயாயினும், அவருடைய பாதத்
தை அவர்நெற்றியில் தரிப்பது நியாயமாகக் காணவில்
லையே யென்கிற கேள்வியுண்டானபோது, உலக முய்
யும்பொருட்டு ஸ்ரீமந்நாராயணன் மானிடனாய் ஆசாரி
ய அவதாரஞ்செய்து, ஜனங்கள் வைஷ்ணவக்கோட
பாட்டின்படி நடக்கத்தெரியாதவர்களா யிருந்தபடியா
ல், தான் ஆசிரயித்து(நடந்து) காட்டவேண்டித் தனது
நெற்றியில் ஸ்ரீபாதத்தைத் தரித்துக்காட்டினனென்று
ஒரு வைஷ்ணவர் விடைதந்தனர். அப்படியாயினும்,

அந்த ஆசாரியர் திருக்கோலங்கொண் டெழுந்தருளிய பாவனையாகக் கம்மியனாற் செய்யப்பட்ட விக்கிரகத்திற்குமாத்திரம் அதை சாற்றவேண்டியதே யல்லாமல், அந்த அவதாரத்திற்குமுந்தித் திருவுருக்கொண்டிருக்கிற வேங்கடேசன், வரதராசன், பார்த்தசாரதி முதலிய ஸ்ரீமந்நாராயண சொரூபத்திற்கு அவருடைய பாதத்தையே அவர் நெற்றியில தரிப்பது முறைமையாகக்காணவில்லை. பக்தர்கள் தங்கள் மனோபீஷ்டத்தின்படி அலங்கரித்துத் தரிசித்து ஆனந்திக்க விரும்பி ஆசாரிய ஸ்வரூபத்திற்கு நாமம்போடுவதுபோல முதற்கடவுளுக்கும் நாமம் போடுகிறார்கள்போலும். இந்த ஆசாரிய அவதாரத்திற்குமுந்தி வைஷ்ணவ மில்லை யென்னலாகாது; அது ஒழுங்குதப்பிச் சிதைவுண்டுகிடந்ததைச் சீர்ப்படுத்த அவதரித்தவர். ஆதியிலே வேதங்களின்மூலமாய் ஸ்ரீமந்நாராயணனே வைஷ்ணவ மதஸ்தாபனஞ்செய்தார்; பின்பது சிதைந்துபோமென்று அப்போ தவர் நினையாமற் போனபோதிலும், அனுபவத்தினா லது சிதைவுண்டதையும் மற்ற மதங்களேற்பட்டதையுங்கண்டு சிந்தாகிராந்தனாய், உலகத்தவர்களை நல்லவழியில் நடத்தத் தாமே ஆசாரிய அவதாரஞ்செய்ததாகத் தோன்றுகிறது. இக்கதிகள் நேரிடுமென்று ஆதியிலேதானே அவருணராமல், பின்பு அனுபவத்தினாற் றெரிந்துகொண்டும், தாம் பரமபதமெழுந்தருளுவதற்குமுன்னமே உலகத்தவர்கள் யாவரையும் தமது கொள்கையின் வசப்படுத்தாமலும் யாவரும் வசப்படுகிறவரையிலாவது உலகத்தில் ஜீவியாமலும், சாதாரணமான மனிதனைப்போலவே காலஞ்சென்று பரமபதஞ்சேர்ந்தனர். அனுபவம் போதாமையால் குறைவாக விட்டுப்போயிருப்பாராகில், இதுவரையில் கொஞ்சகாலஞ்சென்றதினாலும் மதங்கள் தத்தளிப்பதைப்பார்ப்பதினாலும் அனுபவ முதிரா திராதாதலால், உலகத்தைச்சீர்ப்படுத்துவதற்குக் கடைசியாய்க் கலிகாவதாரஞ்செய்கிறவரையில் பொறுத்திருப்பரோ அல்லது இடையில் என்ன அவதாரஞ்செய்வரோ தெரியவில்லை. சர்வ வல்லவராகிய பகவானொருவரிருந்து, அவர் ஆசாரிய அவதாரஞ்செய்தது உண்மையாகில், தாம் கருதிவந்த காரியத்தை முடிக்காமற்போவரோ? கிரிஸ்துமதத்திலே, கடவுளே ஏசுநாதராக அவதாரஞ்செய்து வெகுபாடுபட்டும் யாவரையும் கிரிஸ்தவர்களாக்க முடியாமற்போனதுபோல மார்பால்நகர்ந்து மண்சுமந்தும் சிலகாரியங்கள் முடிவுபெறாமற்போயினும், ஓர்காலத்தில் அக் கிரிஸ்தவக் கடவுள் கோபங்கொண்டு சலப்பிரளயத்தினால் உலகத்தை யழித்தபின்பு பேழையில் காப்பாற்றப்பட்டவர்களால் உலகம் விர்த்தியாகவே, ஜனங்கள் மறுபிரளயத்திற்குத் தப்பிப்பிழைக்கும்படி மேலே யேறிக்கொள்ள ஒரு உன்னதமான பேபெல் என்னுங் கோபுரங் கட்டத்தொடங்கி வேலை நடத்திவரும்போது, அக்கடவுள் தாமனுப்பப்போகிற ஜலப்பிரளயத்திற்கு மாறாக மனிதர்கள் செய்யுங்காரியத்தை நிறைவேற்றவொட்டக்கூடாதென்கிற வஞ்ச மனத்தராய், அவர்களில் ஒருவர் சொல்வதை ஒருவர்தெரிந்துகொள்ளாதபடிப் பேச்சுகளைப்பேதித்து வேலையைத் தடுத்துவிட்டனரொன்று நினைத்தபடி உடனே நிறைவேறியதாகச் சொல்லியிருக்கிற இக்காரியத்தினால் சர்வவல்லமை விளங்குகிறது. இவ்வாறு சர்வவல்லமையுடைய நாராயணன் [illegible]த்தில் முடியத்தக்க காரியம் அதற்கென்று அவதாரஞ்[illegible] முடியாமற்போனது ஆச்சரியத்திலு மாச்சரியமே!

இந்த சங்கதிகளை யோசித்துப் பார்ப்போமாகில், மனிதனாய்ப் பிறந்தவர் தனது வடகலைஆசாரியரிடத்தில் கலைகளைக்கற்று அவரினும் வல்லவராகி, வித்தியா கர்வத்தினால் தானு மாசாரியராகவேண்டுமென்கிற விருப்பங்கொண்டு, ஒரு ஆசாரிய ரிருக்கையில் தானும் வடகலை ஆசாரியராதல் ஆசாரிய துரோகமாக எண்ணப்படுமென்றும், தனக்கு விசேஷ பெருமை யுண்டாகாதென்றும், தனது ஆசாரியனை யிழிவுபடுத்தி அவனை மிஞ்சுவதற்கு முகாந்தர மல்லவென்றும், அதனாலே வேறுவித நூதன ஏற்பாட்டைக் கற்பித்து முதன்மையான ஆசாரியராவது உசிதமென்றுங்கருதி, (நாராயணனென்கிற சப்தம் சிலர் விஷ்ணுபரமாமென்றும் சிலர் சிவபரமாமென்றும் அர்த்தஞ்செய்து வாதாடுவதுபோல) சில பதங்களுக்கு வேறு அர்த்தஞ்செய்து சில ஆசாரங்களை மாற்றித் தென்கலை வைஷ்ணவத்தை யேற்படுத்தித் தனக்கு வசப்பட்ட சிலரைச் சீஷர்களாக்கிக்கொண்டு, காலம் வந்தபோது மரித்ததாகத் தெரியவருகிறது.

A. M.

௬ம் மெய்யறிவு.

க-ம் பாகம்.

நமது பத்திரிகையில், "அபிமான மென்பதென்ன?" "நல்லொழுக்கத்திற்கு மறுமைப்பயனது சித்தாந்தம் அவசியமா?" இயற்கையறிவும் பகுத்தறிவும்." என்று சொல்லப்பட்ட முறையே மெய்யறிவு ௬-வது ௨-வது ௫-வது பாகங்கள் பிரசுரமாகி, நமதுகொள்கைக்கு அசிவயமானவை யாயிருக்கிற ௪-வது ௨-வது பாகங்கள் பிரசுரமாகாதிருப்பதாலும், அவைநமது பத்திரிகைநேசர்களெல்லோருக்குங் கிடைத்திருக்குமென்கிற நம்பிக்கையில்லாமையாலும், நமதுபத்திரிகையில் அவற்றைப் பிரசுரஞ்செய்யத் தொடங்குகிறோம்.

ஆசாரியருக்கும் சீஷனுக்கும் நடந்த சம்பாஷணை.

ஆசாரியர்—'என்வீடு' என்பது தற்கிழமைப் பொருளோ, பிறிதின்கிழமைப் பொருளோ வென்றார்.

[தற்கிழமைப்பொருள்— 'பாலின் வெண்மை' என்பதில் வெண்மையை யுடைய பால்வேறும் வெண்மை வேறுமா யிராமல் ஒன்றுபட்டிருப்பது. பிறிதின்கிழமைப் பொருள்— 'ராமனது பலகை' என்பதில் பலகையையுடைய ராமன் வேறாயும் பலகை வேறாயு மிருப்பது.]

சீஷன்—ஐயா, வீட்டையுடையவனாகிய நான்வேறும், வீடுவேறுமா யிருத்தலால் பிறிதின்கிழமை என்றான்.

ஆசாரியர்— 'என்தலை' என்பது என்னகிழமை? என்று வினவ.

சீஷன்—தலை, கை, கால முதலிய சகல உறுப்புகளோடுங் கூடியவனாகிய நான் தலையாகிய ஒருறுப்பைப் பிரித்துச் சொன்னபோதிலும், தலை முதலாகிய எல்லா அவயவங்களும் ஒன்று சேர்ந்திருப்பதினால், தலை வேறுபடாமைபற்றி அது தற்கிழமை எனக்கூறினான்.

ஆசாரியர்—எல்லா அவயவங்களோடுங் கூடிய சரீரமுழுமையையும் ஒன்றுசேர்த்து என் சரீரம் என்னும்போது சரீரத்தையுடைய நான் என்பவன்யார்? என்றார்.

சீஷன்—சற்று பிரமித்து கொஞ்சநேரம் யோசித்து சரீரத்தில் இருக்கும் உயிரை 'நான்' என்றாலும், உயிருக்கு மேற்பட்ட ஆத்துமாவை 'நான்' என்றாலும், ஆத்துமாவிற்கு மேற்பட்ட. பரமாத்துமாவை 'நான்' என்றாலும், பரமாத்துமாவிற்கும் மேற்பட்டதாக பரபரமாத்துமாஎன இவ்வாறு ஐயாயிரம வார்த்தைகளைக் கற்பித்து அதை அதை 'நான்' 'நான்' என்றாலும், அவற்றில் ஒவ்வொன்றையும் 'என்னுயிர்' 'என் ஆத்துமா' 'என் பரமாத்துமா' என் பரபரமாத்துமா என்னுமே! தேவரீருடைய வினாக்களின்படி 'நான்' என்பது இவை யெல்லாவற்றையும் கடந்த வேறொன்றாகத் தோன்றுகிறதே! அது என் மனதிற்கும் புத்திக்கும் எட்டாததாகக்காணுகிறதே! இதற்கென்ன செய்வேன்! ஸ்வாமி, தேவரீர் தாங்களாய் வினவியும் நானாய் கேட்டும் அனேகமாய்ப் போதித்துவந்தீர்; இப்போது 'நான்' என்பதை எனக்குத் திருவாய் மலர்ந்தருளவேண்டுமென்று சீஷன் அஷ்டாங்கங்களும் தரையிற்படிய பணிந்து பிரார்த்தித்து ஆசாரியர் திருவடிகளைப் பிடித்துக்கொண்டு கேட்டனன்.

ஆசாரியர்—அப்பா, பிள்ளாய், நீ வெகுபுத்திசாலி, அதி தீவரப் பக்குவமுடையவன், 'நான்' என்[illegible]

சொன்னபடி மனவாக்குக்கெட்டாதது, அது பரமரகசியம், அதை அறிந்தவனுக்குப் பேச்சில்லை மூச்சில்லை, அது ஒருவராலும் சொல்லப்படாதது, அவனவனும் தன்தன் முயற்சியால் அதை அறியவேண்டுமென்றார்.

சீஷன்—ஸ்வாமி, தேவரீர் வாக்குக்கு எதிர்வாக்குண்டோ? தங்கள்சித்தம் எனது பாக்கியம் என்று சொல்லி வீட்டுக்குவந்தபிறகு, ஆசாரியர்கட்டளையின்படி தானாகவெகுவாய் யோசித்தும், தன்தோழர்களையும் இன்னும் பெரியோர்களையும் வினவியும் எவ்வளவேனும் விளங்காமையால், அதுபரமரகசியமென்று ஆசாரியர் சொன்னதினாலே அது அவருக்குத்தெரியாததுதான், ஆயினும் நாம் அதை இன்னதென்று நிச்சயிக்காமல் விடக்கூடாதென்று உறுதியாகப்பிடித்து, கூரையை அண்ணாந்துபார்த்துக்கொண்டு யோசிக்கையில், இந்தக்கூரை-சுவர்-தூண்-கதவு-முதலிய சகலவுறுப்புகளுங்கூடித்தானே 'வீடு' ஆயிற்று; 'வீட்டின்கூரை' எனக் கூரையை வேறாகக்கூறினும், கூரையின்றி 'வீடு' ஆகாததினால், அவ்வவ்வுறுப்பைச் சுட்டிக்காட்டுவதற்கு சொற்களால் பிரிவினையுண்டாக்கின போதிலும் ஒற்றுமையினாலே பிரிவின்றி ஒன்றுபட்டிருக்கிறது; அதுபோலவே, 'மரம்சாய்ந்தது' என்போமாகில், வேர்- அடி-கிளை-இலை-காய்-கனி- யாவும்கூடியேமரமாயிருக்கிறது, 'மரத்தின்கிளை' என்போமாகில் 'வீட்டின்கூரை' என்றாற்போலத்தான்; இவ்வாறே, நினைப்பதாகியமனதும்* சரீரசம்பந்தமுடைத்தாய் அதனோடு ஒற்றுமைப்பட்டு ஒன்றாயிருந்துகொண்டு, மனதைச் சுட்டும்போது என்மனதெனச் சொல்லிக்கொண்டு வேறுபிரியாமலிருக்கிறதென்று உய்த்துணர்ந்து தெளிவுற்றனன். ஆயினும், தான் கண்டறிந்த உண்மையை ஆசாரியருக்குவெளியிட்டு அவரது அங்கீகாரம்பெறுவது சிரேஷ்டமெனக்கருதி, அவரைவணங்கி தனது கொள்கையைத் தெரிவித்தனன். 'நான்' என்னும்[illegible]த்தியத்தில் விழுந்து உழன்று அழுந்திகிடந்த ஆசாரியர் சீஷனால் கண்திறக்கப்பட்டவராய் தன் சீஷனைப் போல்[illegible]ன்னமேதானே ஆராய்ச்சிசெய்யாமல், நாம் ஒருவர்[illegible]சொன்னதை நம்பி மோசம்போனேமே யென்று விசனமுற்று மவுனமாயிருந்துவிட்டனர்.

பின்னர் சீஷன்தனக்கு ஆசாரியர் கற்பித்த சகலவிஷயங்களையும் அவர் சொன்னபடி நம்பியிருப்பதுசரியல்லவென்று நினைத்து ஒவ்வொன்றாக ஆராய்ச்சிசெய்யத்தொடங்கினன்.

* 'ஆத்துமா அழிவில்லாதது' என்கிறவிஷயம் கூறப்படும் சஞ்சிகையில், மனதைப்பற்றியும்வரும்.

(இன்னும்வரும்)

சமயகள்வர்.

சமயகள்வர்களாவார் தாம்தாம் அபிமானித் தொழுகும் சமயங்களிலே உண்மையாகவே பந்தம் விசுவாசம் நம்பிக்கை ஊக்கம் முதலியன ஒரு சிறிதும் தமக்கில்லா திருப்பினும், அவையனைத்தும் தமக்குமிக வுள்ளனபோல நடிப்பாற்பகட்டி உலக வஞ்சகர்களாய்த் திரிபவர்களேயாம். "சமயகோடிகள் இருத்தற்பாலது ஆவசியகம், சமயகடவுளர் உண்மையும் வாஸ்த்தவ்வியம், அக்கடவுளர்களும் தம்மடியார்களது பக்தி விசுவாசத்திற்குத் தக்கபடி பலாபலன்களை யளிப்பதும் சத்தியம்" என்று வியவகாரார்த்தம் ஒப்புக்கொள்ளினும், மேற்சொன்ன சமயக்கள்வரினும் சர்வசமயபரித்தியாகர்களாகிய சுவஞானிகளே மேம்பாடடையத் தக்கவர்கள். ஏனெனில், உட்பகை புறநட்பைக் காட்டினும் கடும்பகையே மேலென்றும், ஒளித்துப்பேசுவதினும் உண்மைபேசுவதே புருஷார்த்தமென்றும் வியவகாராதிகளோ டோடிய விற்பன்னர்கள் சர்வாங்கீகாரமாக ஒப்புக் கொள்கின்றமையால், இச்சமயகள்வர்களின் நடிப்புக்கு ஆதிகாரணமாவது சாதாரணர்களுடைய மதப்பிராந்தமே யென்று அங்கை நெல்லிக்கனிபோலசங்கையற விளங்குகின்றது. அகிலப்பிரவஞ்சனா பூரிதமன பரதோத்திரப் பிரியர்களாய்ப் புலி பசுத்தோல் போர்த்தாலன்னப் பகல் வேடம்பூண்டு பிரபஞ்சத்தலாவும் இவர்களைக் கண்ட கண்ட விடங்களிற் கனங்குறைத்துச் சன்மானம் செய்யாமல் புன்மானத்தையும் போக்கிவிடுவதே ஆன்றோர் செய்கடனும். இங்ஙனம் செய்யாமல் இவர்களைச் சன்மானிப்பது நாகத்தைவளர்த்து நர்மத்தியில் விடுக்கும் நரகாதகர் செயலேயாம். இக்கள்ள சுவாமிகளிற் சிலர் கஷ்டப்பட்டு சீவனஞ் செய்யச் சக்தியில்லாது வெளிவந்தவர்கள். தம் மாதா பிதா மனைவி மக்களுக்குக் கஞ்சிவார்க்க அஞ்சிப் புறங்கொடுத்தோர் சிலர். தேச தேசாந்தரங்களிற் றம்மினத்தவரையோ பிறரையோ வஞ்சித்துங் களவெடுத்தும் விபசாரம் புரிந்தும், நம்பிக்கைத் துரோகஞ்செய்தும் அசப்பட்டால் அரசதெண்டனையுற நேருமேயென்று அஞ்சி வேற்றூர் புகுந்து வேடம் பூண்டு வயிறுவளர்ப்போர் சிலர். சுவாமிவேடம்பூண்டால் (அக்கிராரத்துநாய் பிரதிஷ்டைக்குப் பாடுபடுவதுபோல) பிச்சையெடுத்தாலும் பெருமையோடு வாழலாமேயென்று பிரதிஷ்டைக்கு வேடம் பூண்டோர்சிலர். கள் சாராயம் சஞ்சா வாக்கிவேதனாலாகிரி வஸ்துக்களுக்கு ஆசைகொண்டு வேடம் பூண்டோர்சிலர். காமாந்தகாரக் கள்ளுண்டு தள்ளுண்டு நீதி அநீதி யென்னும் மேடுபள்ளந் தெரியாமல் 'கட்டினவனுக்கு ஒருவீடு கட்டாதவனுக்குப் பலவீடு' என்பதாய் விவாகத்தை விட்டு விதவைகளை நட்டு வேளிவந்த சுவாமிகள் சிலர். இன்னும் இவைபோன்ற பற்பலகாரணங்களால் வெளிப்பட்டசுவாமிகள்பலர். இவர்களில் கிஞ்சித்து எழுத்தவாசனையறிந்தவர்கள் ஞானவேட்டிசித்தாதி ஞானநூல்களிற் சிற்சிலபாடல்களை மநநம்பண்ணிக்கொண்டு பெண்களையும் பேதைகளையும் வெருட்டி வயிறுவளர்க்கிறார்கள். வயிற்றைக்கிழிப்பினும் வாரிடையுங்கிடையாத நிரக்ஷரகுக்ஷிகளாகிய சிலர் மௌனவேடம்பூண்டு மௌனசுவாமிகளாய்க் கைசைகை கண்சைகை செய்துகொண்டு பிழைக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் மதப்பித்தேறிய இவ்விந்துதேசம் சன்மானஞ்செய்கிறது. நாகரிகமுள்ளதேசங்களில் இத்தகைய வேடதாரிகளுங்கிடையார், கிடைப்பினும் அவர்களுக்கு அவ்வளவா சன்மானமுங்கிடையாது.

நமது இந்துவிவேகிகளிற்பலர் இவர்கள் கள்ள வேடத்தைக் கண்டித்தேயிருக்கின்றனர். பாலையாநந்த சுவாமிகள் தமது ஞானக்கொம்மியில்,

> மௌனமந்திரங்காணமல்தங்கள் வாய்தனை
> மூடித்திரிவார்கள்
> புவனவேதப்புரட்டாலேயவர் பிழைக்
> கிறாரடி ஞானக்கண்ணே என்றும்

வேறொருவர், "வேட்டியுந்தாழ்வடமும்[illegible] வெண்ணீறும் வெண்பல்லுங் காட்டிவரு ஞானக்களவுகா" னென்று[illegible],

"கள்ளுணைவேட்டுக் களிக்கின்றஞானிகளே எள்ளுவார்க்கென்செய்வீங்கு" என்றும் "பகலெல்லாம் ஞானிகளாய்ப் பாதி இரவின்மோகம், மிகுதலாற்காமிகளாய்மேவி—அகவிளக்கம், இல்லதனாற் சையோகத் தின்பறுகர்ஞானிகளே, எள்ளுவார்க்கென் செய்வீங்கு" என்றும், இன்னும் பற்பலவாறாகவும் இகழ்ந்து பேசியிருப்பதைக் கண்டிருந்தும் கேட்டிருந்தும் சற்றேனும் யோசனையில்லாமல் இவர்களைச் "சுவாமி சுவாமி" யென்று சன்மானிப்பதும், இவர்களுக்குத் தங்கள் கிரகத்தில் விடுதி யளிப்பதும், இவர்களுக்குத் தங்கள் பெண்டுகளைக்கால்கைபிடிக்கச் செய்வதும் போசனம் ஊட்டப்பண்ணுவதும், அந்தோ என்னபேதைமை! என்னபேடிமை !!

கடிதர்.

சி. அ. என்பவரால்-எழுதும்

ஆனந்தக்களிப்பு.

ம-ா-ா-ஸ்ரீ.

தத்துவவிவேசினி. ஐய பின்கவி.

சந்தேகம் தீர்த்தருளென்போல்வா ருய்ய
விடைக்கு வினு பின்னும் வினு.

எடுத்ததும் அளித்ததும் வேண்டில் - வெகுவாய்
இருக்குது பின்பார்ப்போம் நால் தொம்பைக்கூண்டில்
அடுத்துநான் கேட்டிட்டதாண்டில்—விடைமீன்
அகப்படாவிடில் விடேனெனை விட்டுத்தாண்டில். (தத்துவ.)

இறப்பில்லாவகை காணவென்று நான்
எழுதிய கடிதத்துக்கு எதிலையென்று
மறப்பின்றித்திறந்து சொல்லென்று-கேட்ட
வாய்மைக்கு உண்பதை வரைந்திட்டீர் நன்று (தத்துவ.)

உண்பதைப்பிறப்பெனக் கொள்ளும்-மலமாய்
ஒழிவதை இறப்பென்று உவந்தீர்தள்ளும்
பண்புள இஃதிரண்டுள்ளும் - உண்டுவெளிப்
படாவிதஞ்சொல யார்க்கும் பாகமாய்விள்ளுர். (தத்துவ.

சொல்லிய சொற்களைவெல்லும் - உண்மைச்
சொல்லல்லால் மற்றச்சொற்று விதத்தைக்கெல்லும்
வல்லமையாளரே சொல்லும்—வாய்மை
வாய்க்காட்டாலது வாண்டாமைய்யைய நில்லுங். (தத்துவ.)

உலகில் நிலைநிற்குஞ்சூது - பலர்கூடி
ஒத்துணராமுனங் தொடர்வழக்கேது
பலபல விதங்களாயோது - மமது
பகுவக்கருத்தோர்ந்து பார்த்திடாநீது. (தத்துவ.)

சுயக்கியான மாக்ஷிமையார்க்கு - நான்
சொந்தந் தொந்தங்களேவோர்க்கும்
அயலல்ல யானுந்தனூர்க்கு - ஒத்து
அடுத்தகிராமத் ததிபனென்மார்க்கு. (தத்துவ)

ஒழுக்கமுடைய ஒருவன் - கல்வியால்
ஓங்கி நடுவுநிலைக்கு வருவன்
இழிச்குச்கருவரூப் புறுவன் - எவனவன்
இணையிலாக்கியானி யென்றரும் பெயர்பெறுவன். (சத்துவ.

அனைவர்க்குங் கண்ணுக்குக்கண்ணாய் - இருந்
சஞ்ஞானக்குப்பையை அகற்றிவ எண்ணாய்
மனைமக்கள் சுற்றத்தார் குண்ணாய் - வளர்ந்தோங்கும்
வாழ்வுக்கு இறப்பில்லாவழி நன்குபண்ணாய். (தத்துவ.)

தத்துவவிவேசினி ஐய. மேற்கவி.
சந்தேகந் திர்த்தருளென்போல்வார் உய்ய.

இங்ஙனம்,
சி·- அ.

———o———

கடிதநேயருக்கு.

உண்மைவிரும்பி என்பவர் மூலமாய், சைவசித்தாந்தமென்று மகுடந்தரித்து, கடையில் S.N. Aroonachella Moodelliar Watch and Clock Repairer, என்னுங் கைபொப்பமிட்டிருக்கிற பாடல்பத்திரிகை யொன்று நமக்குக்கிடைத்தது. அதில், (நட்டகல்லைநாதனென்று நாடலின்றிநாதனை, நட்டகல்லதென்றுநாடிநாளுமேத்திவாழ்த்திடீர், நட்டகல்லினுதனில்லையோ) என்றுஎழுதியிருப்பதினால், கல்லிலுமாத்திரமோயிருப்பான், தூணிலும்துரும்பிலும் எல்லாவற்றிலுமிருப்பானென்று பொருள்படுதல்பற்றி, துடைப்பக்[illegible]றையிலுமிருப்பானுதலின், அதைப்பூசிக்[illegible]கொ[illegible]தா வெனக்கேள்வி பிறக்குமென்று அருணைசல[illegible]முதலியார் அறிந்திலர்போலும். மேற்படிபத்திரிகையில், பிர்ம்மவாதத்தையும் நாஸ்திகத்தையும் கண்டிக்கும்படியான நியாயமொன்றையுமெடுத்துக் காட்டாமல், வசைச்சொற்களைமாத்திரம் பிரயோகித்திருப்பதால், பிறரைதூஷிப்பதே சைவசித்தாந்தமாக்கும். இதுவரையில் சிலர்நியாயவாதங்கள் செய்துசொண்டுவந்து, கடைசியில் மடங்கும்படி நேரிட்டபோது, வேறேவகைதெரியாமல் தூஷித்ததுண்டு. இந்தமுதலியார்முதலிலேதானே அந்தத்தொழிலையேற்றுக்கொண்டு முடித்துவிட்டபடியால், இவரிடத்தில் இனி நியாயவாதம்பெறுவோமென்கிற நம்பிக்கையில்லை. அவர்தூஷித்தபடி நாமுந்தூஷிப்பதுநமக்கடாது. ஆதலின், அந்தப்பத்திரிகையில் 'பிர்ம்மவாதம்,' 'நாஸ்திகம்' என்கிறபதங்கள் வருமிடத்து, அவற்றிற்குவதிலாக 'சைவம்' என்கிறபதத்தைச் சேர்த்து வாசிக்கும்படி அந்த வாச்சுரிப்பேரரைக் கேட்டுக்கொள்வதே நமது மறுமொழி.

வர்த்தமானம்.

சென்னையிலே ஓர்சமாஜப்பூனை நாஸ்திக கண்டனமாக அறுபத்துநான்கு உபந்நியாசங்கள் எழுதிவைத்திருக்கின்றதாம். அவற்றில் ஒன்றாகிய ஆகாயபூதஸ்தாபகத்தைப்பற்றிச் சென்ற ஆதிவாரம் உபந்நியசித்ததாம்.அவ்வுபந்நியாசத்தில் நாஸ்திகர் ஆகாயம் ஓர்பூதமல்ல வென்பதாகவும் அதற்குச்சில ஆக்ஷேபங்களைச்சொல்வதாகவும் சில ஆக்ஷேபங்களைக்காட்டித் தன்னைத்தானே மறுத்துக் கொண்டதாம். முதலே மூக்கில்லையென்றால் முகத்தழகைப்பார்க்க முக்காட்டையும் நீக்கவேண்டுமோ? மற்ற அறுபத்து மூன்றும் இதுபோலவேதானிருக்கும்போலும்.

இதைச்செவியுற்று அருகிருந்த ஓர்சைவப்பூனை "நாஸ்திகர் சமயசின்னங்களைத் தரிக்கின்றார்கள், சமயவழிபாட்டிற்கு இடந்தருகின்றார்கள்" என்று ஏளிதம் செய்ததாம். இம்மார்ச்சாலங்களால் இவ்வளவு முடியுமேயல்லாமல் நேரோஎதிர்த்து சுயமதஸ்தாபனம் செயயமுடியாதுபோலும்.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால்,அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற
இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே இரண்டணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்ஷதர்களோடு போராடி வெற்றிபெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம.

இந்தியாவிலுள்ள
சுயக்கியானிகளை
மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்
மெம்பர்களாகச் சேரும்படி
கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3— 0—0
வெளி " —ரூ 1—14—0
செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படு[illegible]

தத்துவவிவேசினி·

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு· முனிசுவாமிநாயகருக்கும்
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிறாஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர்· அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 33.] MADRAS :—SUNDAY AUGUST, 15, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

பக்திமோக்ஷசாதனம்.

நிகழும் ஆகஸ்டு மாசம் முதலில், திருவல்லிக்கேணியிலே கங்கைகொண்டான் மண்டபத்திலே மாலை சுமார் - ரு - மணிக்கு "பக்திமோக்ஷசாதனம்" என்பதைப்பற்றி ஸ்ரீமான் - ஸ்ரீநிவாசாசாரியர் மூன்றுமணிநேரம் மூச்சுவிடாமல பிரசங்கித்தாரென்றும் அங்கு பல ஐஸ்வரியவான்களும் வந்திருந்தார்களென்றும் சென்னைத் தமிழ்ப் பத்திரிகை யொன்றில் கண்டோம்.

அதில் இந்தியாவில் அநேக மதங்கள் உண்டு என்றும், அவற்றில் இந்துமதம் மிகச்சிறந்ததென்றும், இதுவே சுருதி ஸ்மிருதிகளைக்கொண்டு தாபித்துக்கொள்ளத்தக்கது என்றும், இம்மதஸ்தர்கள் இதன்பெருமையை யுணராமல் இதரமதங்களிற் சேருகின்றார்களென்றும் ஆதலால் இம்மதம் தூங்குகிறதென்றும், இதனை அவ்வைஸ்வரியவான்களே எழுப்புதல்வேண்டுமென்றும் சமயத்தைப்பற்றிப் பிரலாபித்துப் பின் ஈஸ்வரனையும் ஆன்மாவையும் பக்தியையும்பற்றி அடியிற்கண்டவாறு கூறுகின்றார்—:

"சர்வேஸ்வரன் உணிமெழுகில் பொன்போலே உருமாய்ந்து கிடக்கிற இவ்வாத்மாக்களை மூலப்பிரகிருதியினின்று மெடுத்து, நமது கர்மானுசாரமாக ஜனிப்பித்துச் சிறகொடிந்த பட்சிபோல் கிடக்கிற தசையில் தனுகரண புவனபோகங்களைக்கொடுத்து, இவற்றைக்கொண்டு சமுசாரமாகிய பெருங்கடலைக்கடந் தக்கரைப்பட்டுத் தன்னையடைதற்கு வழி, சுருதி ஸ்மிருதிகளை ஏற்படுத்தியதிற் சொல்லுகிறபடியேசெய்து, நம்மையடைந்து, வாழக்கடவர்களென்று ஜாயமான கடாக்ஷத்தால் இத்தனை நன்மைசெய்தான். அவன் தன்னை யடையும்படி கொடுத்த வேதத்தையும் வேதோப்பிரமாணங்களையும் வேறுவிதமாய் உபயோகிப்பது, ஒரு ஆசாரியன் தன் சிஷியனிடத்தில் ஒரு கத்தியைக்கொடுத்து சமித்தொடித்துக்கொண்டுவாவென்றால் அவன் அக்கத்தியின் தீக்ஷணியத்தைக் குருவின் பசுமாட்டின்வாலில் பரிக்ஷைசெய்வதையொக்கும். இது பின்னும் மூடனொருவன் யாகம்செய்யத்தொடங்கி அன்னகுதி செய்யும்போது சுவாகா என்றுசொன்னதும் அக்னியில் சேர்க்காமல் வாயில்போட்டுக்கொண்டு மறுபடி யாககுண்டத்தில் உமிழ்ந்து நீர்சொரிந்ததைப் போலும். ஈஸ்வரன் அவதாரஞ் செய்தது துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலனார்த்தமாயும், தர்மஸம்ஸ்தாபனார்த்தமாயுமே. அவனுக்கு நாம் செய்யவேண்டியதெல்லாம் பக்தி. அவனைச் சரக்கற நினைக்கவேண்டியதேபக்தியாவது."

"இச்சரீரம் வேறுயென்றும் ஆத்துமா வேறென்றும் நினையாமலிருப்பது அவிவேகம். ஆத்துமா சோதிச் சுவரூபமுள்ளது. இது மாணிக்கத்தைச் சேற்றில் அழுத்தினதுபோல் இவ்வுடலில் தன் ஒளிமழுங்கிக்கிடக்கிறது. இச்சரீரமும் ஆத்துமாவுமொன்றென்றால், இவ்வுடலுக்கு அக்கினி, கழுகு முதலிய பக்ஷிகள் நாய் நரி முதலிய மிருகங்கள், பிசாசங்கள், மற்றும்பல பாசஸ்தனவாவிருக்கின்றனவாதலால் உடலுமுயிருமொன்றென்பார்பக்ஷம் பிசகாகும்."

"ஈஸ்வரனை யடைவதற்குக்கர்ம, ஞான, பக்தி, போகம் ஆகிய நான்கினுள் பக்தியே சுலபமான மார்க்கம். அவனை நாம் பக்தி செய்வதற்கென்றே ஒவ்வொருவனுடைய மனதிலும் [illegible]யாயிருக்கிறான். 'மார்வமென்பதோர் செயிலமைத்து மா[illegible]னென்னும் தெய்வத்தை நாட்டி, ஆர்வமென்பதோர் பூவிட[illegible]லார்க் கரவதண்டத்துய்யலுமாமே' என்றபடி பக்தியே [illegible] மார்க்கம்."

மனிதருக்கு ஒருவிஷயத்தில் பக்தி அல்லது விசுவாசம் அவ்வளவு இலேசில் உதிக்காது. விசுவாசம் அல்லது நம்பிக்கைக்குமனோதிடம்வேண்டும்; மனம்திடப்படுதற்கு ஆராச்சிவேண்டும், ஆராய்ச்சியாவது ஒவ்வொருவிஷயத்தையும் பதார்த்தத்தையும் அவ்வதற்குக்கூறப்பட்ட இலக்கணங்களோடு பொருந்தியிருக்கின்றனவா ? இன்னது இன்னகாரணத்தால் உண்டானது இதன்பிரயோசனம் இவ்வளவுதானென்று ஆராய்வார் தமக்குள்ள கியானத்தைக்கொண்டு பரிசோதித்தா லல்லாமல் ஆராய்ச்சி எனப்படாது. ஆராய்ச்சியில்லையேல், மனோதிடம் உண்டாகாது ; மாேனாதிடம் இன்றேல் நம்பிக்கையுண்டாகாது. ஆதலால் ஒவ்வொருவருக்கும் தத்தம் யதார்த்தசோதனையால் பூரண நம்பிக்கை யுண்டாகவேண்டுமேயல்லாமல், கேள்விச் சொற்களால் பூரணநம்பிக்கையுண்டாகாது. போதனையால் ஒருவரை நம்பச்செய்தல் நாய்வாலைக் குணக்கெடுத்து நார் போட்டுக்கட்டுதல்போலாம். ஆதலால் பிரசங்கியார் நம்பிக்கை அவசியமிருக்கவேண்டுமென்றதிலும் ஆராய்ச்சியிருத்தல் வேண்டுமென்று சொல்லியிருப்பரேல் மிகநன்றாயிருக்கும். நியாயாதாரத்தால் நிலைநிற்கும் நம்பிக்கையே நம்பிக்கையல்லாமல், மூடநம்பிக்கை நம்பிக்கையாகாது. "நம்பிக்கையாலன்றி நியாயமதால் நாட்டறியார் வம்பரெனற்காணிமருவுமோ" வென்று சிலபுத்திமான்களும் சொல்லி யிருக்கின்றனர்.

மேலும் ஷை பிரசங்கியார் "இந்தியாவிலுள்ள மதங்களிலெல்லாம் இந்துமதந்தான் சிறந்தது" என்றார். ஏன் ? மற்றமதங்களைக்காட்டினும் இந்துமதத்திற்குள்ள சிறப்பிலக்கணமென்னை? இதுதான் சுருதிஸ்மிருதிகளைக்கொண்டுதாபித்துக்கொள்ளத்தக்கது என்றாரே, இவற்றைக்கொண்டு தாபித்துக்கொள்ளலே அதன்சிறப்பிற்கு ஓர்காரணமாமா? பௌத்தன் ஒருவன் இந்தியாவிலுள்ள மதங்களனைவற்றிலும் தனதேசிறந்த தென்கின்றான். ஏனெனின் தன்மதம்பிடகாகமத்தால் தாபித்துக்கொள்ளத்தக்கதனாலென்கிறான். கிறீஸ்தவனுமப்படியே சொல்கின்றான். ஒன்றையுயர்த்தி ஒன்றைத்தாழ்த்துதற்கு நியாயம் வேண்டாமோ ! அபிமானந்தான் நியாயமோ ? அல்லது நம்பிக்கையே நியாயமோ ?

சர்வேஸ்வரன் ஆன்மாக்களை மூலப் பிரகிர்தியினின்றும் தநுகரணபுவன போகங்களைக்கொடுத்து இரக்ஷிக்கின்றார் என்றார். சர்வேஸ்வரன்யாவன்? அவன் இலக்கணமென்னை? அவன் ஆன்மாக்களுக்கும் மூலப்பிரகிர்திக்கும் அன்னியனா? அனன்னியனா? அனன்னியனேல் தன்னைத்தான் இரக்ஷித்துக்கொண்டவனாகின்றான். அன்னியனேல், அவனின்வேறாகிய ஆன்மாவும் மூலப்பிரகிர்தியும் இருக்கின்றமையால் அவனுக்கு விபுத்துவலக்ஷணமில்லையெனக் கோடல்வேண்டும். ஆன்மாக்கள் யாவை! அவற்றின் சொருபலக்ஷணமென்னை? அவை தனுகரணபுவன போகங்களைப் பெறுதற்குமுன் எங்கு எப்படி என்னவாயிருந்தன? அவைபிரத்தியக்ஷபதார்த்தமா அனுமான பதார்த்தமா? அவை தநுகரணாதிகளைப் பெறுதற்குமுன் ஒன்றையொன்று அறியுமா? ஆன்மாக்களென்று மொத்தார்த்தமாய்க் கூறப்பட்டிருக்கிறதே அவற்றின்தொகையென்ன! அவை கணிதவரம்புகடந்தன வெனில் யாருடைய கணிதவரம்பு? மக்களுடைய கணிதவரம்பைக் கடந்திருப்பினும் சர்வேஸ்வரனுடைய கணிதவரம்பைக் கடந்திருக்கப்படாதே? சர்வேஸ்வரனுடைய கணிதம்தான் எத்தனையென்று சொல்லுகிறது? இதுகளை யெல்லாம் விளக்கிக்கொள்ளாமல் ஆன்மாவேறு தேகம்வேறுஎன்று சொல்லாதவர்கள் மூடாள்என்று பதறிப் பேசியதுதகாது.

WHO IS A BRAHMIN.

சென்ற ஜூலைமீ 10உ ஆந்திரப்பிரகாசிக பத்திரிகையின் உப பத்திரிகையிலே, ம-ா-ா-ஸ்ரீ, பள்ளெ - செஞ்சலராவு அவர்கள் எழுதியிருப்பதில்:

பிராமணத் தாய்தந்தையருக்குப் பிறந்தவனே பிராமணனல்லாமல் மற்றெவனும் பிராமணனாகானென்று சொல்லப்பட்

ட உலகவழக்கச்சொல சாஸ்திரசம்மதமானதா, அல்லவா? என்கிற சந்தேகம்பிறந்து விசாரணைசெய்ததில், அடியில் உதகரித்திருக்கிற பிரமாணத்தினால் சாஸ்திரசம்மதமானதல்லவென்று தோன்றுகிறது. அதற்கு விரோதமான வாக்கியங்களிருக்குமாகில் அவற்றைப் பண்டிதர்கள் எடுத்துக்காட்டி அடியில்வரும் வாக்கியங்களோடு ஒப்பிட்டுப்பார்க்கும்படி செய்வாகளென்று கோருகிறார்.

௧௭ வஜ்ரசூச்சிகோபநிஷத்.

(“ఓమ్ ॥ వజ్రసూచిం ప్రవక్ష్యామి”) என்பது தொடங்கி, (“సచ్చిదానందం బ్రహ్మ భావయేదిత్యుపనిషత్”) என்பதோடு முடிகிற வாக்கியங்களைப் பூர்த்தியாயெழுதி அவற்றிற்குச் செய்திருக்கிற பதவுரையினின்றும் எடுத்துக்கொள்ளப்பட்ட பொழிப்புரையாவது—அஞ்ஞானத்தைக் கண்டிக்கும் ஆயுதமாகவும், அஞ்ஞானிகளுக்குத் தூஷணமாகவும், ஞானிகளுக்குப் பூஷணமாகவும் விளங்காநின்ற வச்சிர சூச்சியென்னு முபநிஷத்தைச் சொல்லுகிறேன். பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திரனென்னும் நான்கு வருணங்களில் பிராமணன் முதன்மையானவனென்று, வேதவாக்கியங்களுக்கு ஒத்தாற்போலவே ஸ்மிருதிகளாலுஞ் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த விஷயத்தில் விசாரிக்கத்தக்க தொன்றுண்டு. அதாவது—பிராமணனென்னும் பேருடையவனெவன்? க-வது. ஜீவனா? இதுவரையில் வந்துபோனவையும் இனி வருபவையுமாகிய அநேக தேகங்களின் ஜீவனுக்கு ரூபம் ஒன்றே யாதலாலும், ஜீவனொன்றேயாயினும் கர்மவசத்தால் அநேகதேகங்களில்பிறத்தலாலும், ஜீவன் பிராமணனல்ல. உ-வது. தேகத்தைப் பிராமணனென்போமாகில் தேகம் பஞ்சபூதக்கலப்பாயிருப்பதினாலும், சண்டாளன்வரையில் சகல மனிதர்களின் தேகங்கள் ஒரே ரூபமுடையவையானதாலும், விருதாப்பியம் - சாவு - தர்மம் - அதர்ம முதலியவை யெல்லாருக்கும் பொதுவாதலாலும், பிராமணன் வெள்ளை நிறமுடையவன், க்ஷத்திரியன் சிவப்பு நிறமுடையவன், வைசியன் பச்சை நிறமுடையவன், சூத்திரன் கறுப்பு நிறமுடையவன் என்கிற நியமமில்லாதபடியினாலும் (சரீரம் பிராமணனாகில்) தகப்பன் முதலாயினோருடைய சரீரத்தைத் தகனஞ்செய்யுங் குமாரர்களுக்குப் பிரமகத்திமுதலான தோஷங்கள் சம்பவிக்குமாதலாலும், தேகம் பிராமணனல்ல. ங-வது. வருணந்தான் பிராமணனென்றால், ஒருவருணத்திலேதானே அநேக ஜாதிக ளிருப்பதாலும்; மகாரிஷிகள் அநேகரிருக்கிறார்களே, அவர்களுடைய பிறப்பாவது— ருஷியசுருங்கன் பெண்மானிடத்திற் பிறந்தவன், கௌசிகன் தர்ப்பையினாற் பிறந்தவன், ஜாம்பூகன் நரியினாற் பிறந்தவன், வால்மீகன் புற்றிலிருந்து பிறந்தவன் வியாசன் செம்படத்தியினிடத்துப் பிறந்தவன், கௌதமன் முசலின் பின்பாகத்திற் பிறந்தவன், வசிஷ்டன் ஊர்வசியினிடத்துப் பிறந்தவன், அகஸ்தியன் குடத்திற் பிறந்தவன் என்று நாம் கேள்விப்படுகிறபடியாலும்; இவர்கள் பிராமண வருணத்தவர்க ளல்லாமற் போனபோதிலும், முற்காலத்தில் ஞானமுண்டாகும்படி செய்துவந்தவர்கள், இப்படிப்பட்ட ரிஷிகள் அனேக ருண்டாதலாலும், வருணம் பிராமணனல்ல. ச-வது. ஞானத்தைப் பிராமணனென்போமாகில், இராஜாக்கள் முதலானவர்களிலும் யதார்த்தத்தை யறிந்துகொண்டு ஞானவான்களாயிருந்தவர்கள் அநேகருண்டு; ஆதலால் ஞானம் பிராமணனல்ல. ரு-வது. கர்மம் பிராமணனென்றால், சகல ஜீவர்களின் பிராரப்தம் - சஞ்சிதம் - ஆகாமியமென்னுங் கர்மங்கள் யாவரிடத்தும் சாமானியமா யிருப்பதாலும், கர்மத்தினால் பிரேரேபிக்கப்பட்ட ஜனங்கள் அதற்கேற்ற காரியங்களைச் செய்கிறார்களாதலாலும், கர்மம் பிராமணனல்ல. சு-வது. தர்மஞ்செய்கிறவன் பிராமணனென்போமாகில், காசுகொடுக்கிற க்ஷத்திரியர் முதலானவர்கள் அனேகரிருக்கிறார்கள்; அதினாலே தர்மஞ்செய்கிறவன் பிராமணனல்லன். ஆனால், பிராமணனென்னும் பேரையுடையவனெவனென்று கேட்பீராகில், (பிரமத்தின் குணங்களை யெடுத்துக்கூறி அப்படிப்பட்ட) பகவானை உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பிரத்தியட்சத்தில் கண்டுகொண்டு, சித்தியடைந்தவனாகி, ஆசை முதலிய தோஷங்களை நீக்கி, சாந்தி முதலிய குணங்களடைந்து, மோகம் மாற்சரிய முதலிய தோஷங்களொழித்து, அகங்காரம் டம்பம் முதலியவை அணுகா மனத்தனாய் எவனிருக்கிறானோ அவனே பிராமணனென்பது—சுருதிகள், ஸ்மிருதிகள், புராணங்கள், இதிகாசங்கள் இவற்றின் கருத்து. இப்படிக்கன்றி பிராமணத்துவ முண்டாவ தில்லவேயில்லை.—இந்தக் கருத்தையே விளக்கும் வாக்கியங்களைப் பாரத பாகவதங்களிலிருந் தெடுத்துக்காட்டி யிருக்கிறார்.

பிர்மம் - ஆத்மா - கர்மம் - முற்பிறப்பு - மறுபிறப்பு இவற்றைக்குறித்துத் தத்துவவிவேசினியில் பலவிசை பேசியிருப்பதால், இப்போது அவற்றைப்பற்றி யான் ஆட்சேப சமாதானமொன்றுஞ் சொல்லவேண்டிய அவசியமில்லை. சுருதி ஸ்மிருதி இதிகாச புராணங்களில் உண்டென்று சொல்லியிருக்கிறபடி அவற்றை ஆராய்ச்சிசெய்யாமலே வைத்துக்கொண்டு, வஜ்ரசூச்சியென்னு முபநிஷத்தில் பிராமணத்துவத்தைக் குறித்து மாத்திரஞ் சர்ச்சைசெய்ததாத் தெரியவருகிறது. மேற்கண்ட குணங்களையுடையவன்தான் பிராமணனாவானென்றதனால், அது குணத்தைப்பற்றிவந்த பெயரேயல்லாமல் பிறப்பைப்பற்றிவந்ததல்ல. ஆதலின், மற்ற க்ஷத்திரிய வைசிய சூத்திரரென்னும் பெயர்களும் அவ்வாறே அவரவருக்குரிய குணத்தைப் பற்றி வரவேண்டிய பெயரேயன்றி, அவர்களுக்குமாத்திரம் பிறப்பினால் வரக்கூடாமையாகிறது. ஆகவே, பிறப்பினால் வருணபேதமின்றி யாவரும் மானிடஜாதியென்னு மொரேஜாதியராவர். அவர்களில் எவனெவனுக்கு எவ்வெக் குணங்களமைகின்றனவோ அதற்கேற்றபடி அவனவனும் பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரனென்னப்படுவான். இப்படியிருக்க: இந்த நான்குவருணங்களும் பிர்மாவின் முகத்திலும் மார்பிலும் தொடையிலும் பாதத்திலும் முறையே பிறந்ததாக வேதம் முறையிடுகிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். அன்றியும், தினந்தோறும் பிராமண நமஸ்காரஞ்செய்தபின்பு போசனஞ் செய்கிறதென்கிற விரதத்தை மேற்கொண்டிருந்த மார்க்கண்டேயர் ஒருநாள் பலவிடங்களி லலைந்துதிரிந்தும், பிராமண னகப்படாமையால், வருத்தத்துடனேவந்துகொண்டிருக்கையில், ஒரு பறைச்சி தன்னுடைய இரண்டு குழந்தைகளில் ஒருகுழந்தைக்குப் பால்கொடுத்தவுடனே ஸ்தனங்களைக் கழுவிப்போட்டுப் பிறகு மற்றொரு குழந்தைக்குப் பால்கொடுத்ததைக்கண்டு, இரண்டும் உன்குழந்தைகளாயிருக்கக் கழுவவேண்டிய காரணமென்ன வென்றுவினவ; அப்பறைச்சி பிந்தியகுழந்தை பிராமணனுக்குப் பிறந்ததாகையால, மார்பைக் கழுவிப்போட்டுப் பால்கொடுத்தேனென்றாள். உடனேமார்க்கண்டேயர் அக்குழந்தையின்பாதத்தில் சாஷ்டாங்கமாக விழுந்து பிராமண பீஜத்திற்கு நமஸ்காரமென்று நமஸ்கரித்துப் போயினாரென்பது புராணகதை. இந்த காரணங்களினால் வருணபேதம் பிறப்பி லிருப்பதாகத் தெரியவருகிறது. இவ்வாறு ஒன்றையொன்று விரோதிப்பதால், மேற்படி உபநிஷத்து புராண முதலியவற்றைப் பொய்யென்று கூறுகிற அத்வைதத்தைச் சேர்ந்ததாய் ஒருதலையாகக் கொள்ளவேண்டியதே யல்லாமல், பொதுவானதாகக் கொள்ளப்படாது. அந்த உபநிஷத்திலே, ஒருவன் தருமஞ் செய்வதினால் பிராமணனாக மாட்டானென்று சொல்லியிருக்க; “சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால், நீதிவழுவா நெறிமுறையின் மேதினியில், இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுலத்தோர், பட்டாங்கி லுள்ளபடி.” என்கிற நீதிவாக்கியத்திலே, சாதியிரண்டே; தருமஞ்செய்கிறவன் உயர்ந்தசாதி, செய்யாதவன் தாழ்ந்தசாதி, இதுவே வேதப்பிரமாணம், என்றிருக்கிறது. மேலும் கர்மம் பிராமணனல்லவென்று மேலே சொல்லி யிருப்பதற்கு விரோதமாய, “ஜன்மனாஜாயதே சூத்ர: கர்மணாஜாயதேத்விஜா” என்று வழங்கிவருகிற வாக்கியத்தின்படி பிறப்பினாலே சூத்திரனாயிருப்பவன் கர்மத்தினாலே பிராமணனாவ னென்பதினால், பிராமணனுக்கு வடமொழியில் த்விஜ னென்றும், தென்மொழியில் இருபிறப் பாளனென்றும் பெயர்வந்திருக்கிறது. ஸ்திரிகளுக்குப் புனர் விவாகஞ்செய்ய முயல்வோர் அதுவிஷயத்தில் வேதப்பிரமாண முண்டென்றுவாதிக்க, எதிர்கட்சியார் கூடாதென்பதற்கு வேதப்பிரமாண முண்டென்று சாதிக்கிறது போலவே, ஆம், அல்லவென்னு மிரண்டிற்கு மொன்றே பிரமாணமாய் நிற்குமாகில், முடிவுதேறுவதெப்படி? நாம் கடைத்தேறுவதெக்காலம்? ஆயினும், ஐரோப்பாக் கண்டத்தில் இந்தப் பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடங்கி வரவரவிசார[illegible]அதிகரித்து ஞானம்பரவிவருவது போலல்லாவிட்டாலும் இத்தேசத்திலே சைவவைஷ்ணவ முதலிய சமயங்கள் ஒன்றற்கொன்று சுத்தலாடிக்கொண்டு சலஞ் சாதித்து வந்ததைவிடுத்து, தற்காலத்தில் விசாரணை செய்யப்புகுந்தது நமது நல்லகாலந்தான். ராயரவர்கள் கேட்டுக் கொண்டபடி பண்டிதர்கள் உடன்சேர்ந்து கட்சிப் பிரதிகட்சி ஆராய்ச்சிசெய்து, சகலவேதசாஸ்திர புராணமுதலிய வற்றில் கழிக்கவேண்டியவைகளைக் கழித்து, நிலை நிற்பவைகளை ஒருவழிப்படுத்தி ஸ்தாபிப்பது உத்தமம். அப்படிச்செய்யின், நீக்கு நின்றவற்றுள் உண்மையைக் கண்டறிவதற் கிடமுண்டாகும். இப்படிச் செய்வதற்குக் கர்னல் ஆல்காட்துரை யவர்கள் ஏற்படுத்திவருகிற புஸ்தகசாலை பேருதவியாயிருக்கலாம். அவர் தியாசொபிச்சங்கத்துத் தலைவராகையால், அவரை இச்சபைக்குந் தலைவராகவைத்துக் கொண்டு காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்கிற பழமொழிப்படி அவர் இவ்வூரிலுள்ளபோதே காரியத்தை முடித்துக் கொள்ளவேண்டும். அவர் இந்தியாவைஸ்வீகார சுதேசமாக ஏற்படுத்திக் கொண்டதாய்ச் சொல்லியிருப்பதால், அவர் இத்தேசத்தைவிட்டு அகலாராயினும், காலதேசவர்த்தமானங்களை யோசித்து, நாம்தீவிரப்படுவதே நன்மை.

A. M.

பரிசோதனை.

சென்ற ஜூன்மீ 20உ யுடைய "The Free thinker" என்னும் லண்டன் பட்டணத்துப் பத்திரிகையிலிருந்தெடுத் தெழுதியது:—

ஹிந்துக்களின் தற்கால நிலைமையைப்பற்றி, அ-இ ரத்தினசாமி முதலியார், பி. எ. அவர்களால் எழுதப்பட்டு, மதிராஸ் செக்கியுலர் சோசைட்டியாரால் பிரசுரஞ்செய்யப்பட்டது.—மேற்படி முதலியார் தன் தேசத்தாரை முகஸ்துதி செய்கிறவரல்ல. ஐரோப்பாவின் நாகரீகத்தையும் சாஸ்திரத்தையு மறிந்தவராய், ஹிந்துக்கள் பூர்வீக வழக்கமென்னும் உளையில் இன்னும் எவ்வளவு அழுந்திக்கிடக்கிறார்களோ அதையெடுத்துக் காட்டுகிறார். அவர்கள் பற்றற்ற யோசனையினாலும் கல்வித்தேர்ச்சியினாலும் மேன்மையடையவேண்டியதேயல்லாமல் பூர்வீக வேதங்களையும் சாஸ்திரங்களையும் வாசித்து அவற்றை ஜீர்ணோத்தாரஞ்செய்வதினாலாவது தற்கால ஞானத்தோடு அவற்றைப் பொருத்தஞ்செய்ய எத்தனப்படுவதினாலாவது மேன்மை அடைவார்களென்று அவர் நம்பவில்லை. அச்சிறு புத்தகமானது இந்தியாவுக்கு நன்மை பயக்கு[illegible]தாயும், (இங்கிலாந்து) இத்தேசத்தில் பிரயோசனகரமாய் வாசிக்கத்தக்கதாயு மிருக்கிறது.

பேரான சீர்திருத்தத்திற்கு மூலபுருஷனா யிருப்பவன் அவனுடைய காலத்தில் வெகுவாய் ஜனப்பிரியனாயிரான். அவன் தன்னுடைய வாழ்நாளை சஞ்சலத்திலும் அபாயத்திலுமே சாதாரணமாய்க் கழிக்கிறான். ஆகையால், அப்படிப்பட்டவர்களுடைய பேர்களை நாம் சிரேஷ்டமாக ஞாபகத்தில் வைப்பதினால், அவர்களுடையகாலத்திலிருந்தவர்கள் அவர்களைத் தூஷித்துப் பகைப்பதைப்பற்றி, பிந்தித் தங்கள்பேர் அழியாமல் நிலைத்திருக்குமென்கிற எண்ணத்தோடு உண்மையை வெளியிடுகிறார்கள், அதினால் மானிடஜாதிக்குப் பிரயோசனம் உண்டாகிறது. வெகுகாலஞ்சென்று பயனைத்தெரிந்துகொள்ளும்படியான உண்மையைப்பற்றி இப்போ தெடுத்துரைப்பது சங்கட்டமான காரியமே. அது பிந்திக் கீர்த்திபெறத்தக்க காரிய மில்லாவிடில், அதை யார் மேற்பொட்டுக்கொள்ளுவார்? மதில்களை சுவாதீனப்படுத்திக்கொண்டபின்பு, உந்நதமான கோபுரத்தின்மேல் கொடியைநாட்டுவதற்கு மனிதர்க ளகப்படுவது வெகு சுலபமே. மதிலைத் துளைத்துக்கொண்டு முதலில் நுழைவதற்கு மனிதர்கள் தயாராய்ப் புறப்படுவதுதான் கஷ்டம். அப்படிப்பட்டவர்கள் உடைப்புக்குள் விழுந்து இறந்துபோவதினாலே, ஜீவித்திருந்து கோட்டைக்குள் நுழையமாட்டாமல் மாண்டுபோனார்களே, அவர்க ளென்னமனிதர்களென்று தூஷிப்பதுதான் அவிவேகம்.— *Macaulay.*

பெரியபாளையத்தாள்

பிரபாவம்.

பெரியபாளையம் போகும் புத்திசாலிகளுக்கு ஓர் அறிக்கை.

நாங்கள் இதனடியிலே கூறும் விஷயத்தைப் பொறுமையோடு ஆத்திரப்படாமல்வாசித்து யோசித்து உங்களைப் பலமுறை பெரியபாளையம் போக வேண்டுமென்று செல்லரிப்பதுபோல எரித்துத் தொந்தரைசெய்யும் பெண்டுபிள்ளைகளுக்குப் பலமுறை படித்துக்காட்டி சன்மார்க்கத்தைக் கைப்பிடித்தொழுகும்படிச் செய்யுங்கள்.

சாதாரணமாய் கட்டோடுங் காவலோடும் பாது காக்கப்படுகின்ற பட்டணவாசமாகிய காஞ்சிபுரம் திருவொற்றியூர் திருமயிலை திருவான்மியூர் திருவல்லிக்கேணிமுதலிய நாகரிகமுள்ள தேவஸ்தானங்களுக்கு சுவாமி தரிசனார்த்தம் திருவிழாக் காலங்களிலே செல்லும் ஆடவர்களும் பிள்ளைகளும் அதற்கென்றே சன நெருக்கத்தில் வந்துலாவும் சோரர் கைப்பட்டுத் தங்கள் சொந்த ஆபரணங்களையும் இரவலாபரணங்களையும் ஆடைமுதலிய பலபண்டங்களையும், தாங்கள் கைப்பற்றிய பிள்ளைகளையும் இழந்தும், வேண்டுமென்றே சன நெருக்கத்தில் வந்துலாவும் காமப்பற்றுடைய துன்மார்க்கர் மத்தியி[illegible]கப்பட்டுக்கொண்டு தங்கள் தீண்டொணாத் திருமேனியின் [illegible]ல அவயவங்களும் அப்பரபுருஷரால் தீண்டப்பெற்றும்மானபங்கப்பட்டு கற்பழிந்து கனங்குலைந்து உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனிபோல புறத்திற் சொல்ல வெட்கிக் கிடப்பதை யாவரறியாதார்? நடுப்பட்டணங்களிலே இஞ்சித்து நாகரிகமுள்ள சனங்கள் மத்தியிலேயே இவ்வளவு அவமானம் சம்பவிக்குமானால் காடோடாந்தரங்களைக் கடந்திருக்கும் ஓர் குக்கிராமத்திலே கல்வி, அறிவு, நாகரீகம், வெட்கம், மானம் என்பன ஒரு சிறிதுமில்லாத சில இழிதகையோர் கூடிய கூட்டத்திலே பருவம்வாய்ந்த யவ்வனஸ்திரீகளும் விடைப்புருடரும் தங்கள் வஸ்திரங்களைக் களைந்துவிட்டு வேப்பிலையை வைக்கோலிலும் வாழைநாரிலும் தொடுத்து ஒருசுற்று கட்டிக்கொண்டு சனநெருக்கத்திலே ஒருவரையொருவர் இடித்துக்கொண்டும் நெருக்கித் தொண்டும் செல்லும்போது எவ்வளவு மானபங்கத்திற் கிடமிருக்கும், கற்புக்கழிவுண்டாகும் பாருங்கள். ஆண்மானம் பெண்மான மென்றிராத இவ்வசங்கதக்கிரியையினாலும் ஓர் தேவதை பிரீதி கொள்வாளா? இந்த அசப்பியச்செய்கையில் பிரீதிகொள்ளும் சன்மார்க்கமில்லாத தேவதையையும் அனுசரித்துப் பிரார்த்தனைசெய்து கொண்டாடும் ஆண் பெண் இருதிறவர்புத்தியும் எவ்வளவு கூர்மையுள்ளதாதல் வேண்டும். அந்த பெரியபாளையத்திலே சிலகாலங்களுக்கு முன்னே வேப்பஞ்சேலை கொடுத்தலாகிய மானாபிமானமில்லாச் செய்கையோடு கோரமான செடில் குத்ததலுண்டு. இதுபார்ப்பதற்குப் பயங்கரமானசெய்கை. இதைச் சீர்திருத்தமுடைய நமது அரசாங்கத்தார் அடியோடே நிறுத்திவிட்டார்கள்.

கழு[illegible]தேய்ந்து கட்டெறும்பாய் விட்டதுபோலும், உலக்கைதேய்ந்து உளிப்[illegible]யாய் விட்டதுபோலும், நாளுக்குநாள் இவ்வுற்பாதக்கிரியை நழுவிவிட்டத[illegible]கு மிகச் சந்தோஷிக்கின்றோம். அவிடம் செல்பவர்களில் தேவதாப[illegible]க்தியோடு செல்லும் நிஷ்கபடிகளாகிய பூர்வீகாள் மிகச்சிலரே யொழி[illegible]ய பெரும்பான்மையும் மதுமாமிசாதிகளை விரும்பியும், காமப்பற்[illegible] த[illegible]லைக்கொண்டு பலசனக்கூட்டத்திலே ஸ்திரீகளோடு சமமாய் ஆற்றிலிறங்கி ஸ்நானம் செய்யும்பொருட்டும் அன்னோரைச் சனநெருக்கத்திலே தீண்டிக் களிக்கும் பொருட்டும் பட்டிமாடு போலக் கேளிவிலாசமாய்த் திரியும் பொருட்டுமே செல்கின்றவர்கள்பலர். இது உண்மைபொய்யென ஆராயவேண்டில் அவிடம்சென்று ஒவ்வொரு விஷயத்தையும் கவனித்துப் பார்த்தால் நன்கு விளங்கும். ஆண்மையுடைய வீரசூரபராக்கிரம சிங்கங்களே; நாணமட மச்சமாகிய பெண்மையுடைய குயில்களே; உங்களுக்குஉண்மையாகவே தேவதாவிசுவாசமிருக்குமானால் உங்கள் இருப்பிடத்திலேயே யிருந்துகொண்டு பத்திபண்ணலாகாதா? உங்கள்மானத்தைப் பிறர்க்குக் காட்டுதலினால்தானா உங்கள்மேல் அத்தேவதைக்கு விசுவாசம் பிறக்கும்? ஒபுருஷர்களே; உங்களிலனேகர் தொண்ணூறும் பத்தும் ஆவண்ட கிழவரோயினும் ஒரு யவ்வனஸ்திரீயைப் பார்த்துவிட்டவிடத்து உங்கள்மனம்படும்பாடு உங்கள் மனத்திற்கே தெரிந்திருக்கப் பலபோக்கிரிப்பாலியர்கள் கூடியசன நெருக்கத்திலே, உங்கள் ஸ்திரீகளை ஆடைநீக்குவித்தும் வேப்பிலையணிவித்தும் ஆண்மக்கள் கும்பலிலே செல்வித்தும் அங்கப்பிரதக்ஷணம் செய்வித்தும் அடிதண்டம் போடுவித்தும் கண்டதீபம் ஏற்றுவித்தும் வேடிக்கைபார்ப்பதற்குக் காரணம் தானியாதோ? உங்கள்மனம்போல அவர்கள்மனம் இராதென்னும் நம்பிக்கைகாரணமோ? நீங்கள்மாத்திரங்கெட அவர்கள் கெடாதிருக்கலாமாவென்கிற பொறாமைகாரணமோ? நீங்கள் முகம்பார்த்து மோகத்திற்குள்ளாகியதுபோல் அவர்களும் உள்ளாகட்டுமென்கிற அனுதாபங்காரணமோ? ஒருவருக்குள்ள உறுப்பைப்போலவே பலருக்கு மிருக்கிறபடியால் ஒருவருடையதை மற்றவர் பதித்துக்கொள்ளப் போகின்றார்களாவென்னும்உதாரகுணங்காரணமோ? அல்லதுஅப்பெரியபாளையத்து தண்டுமாரியைப் போன்ற உங்கள் பெண்டுகளின் ஆவாரக் கூச்சலுக்கஞ்சி அவர்கள் மனம்போலேபோனால் பிழையொன்று மில்லையென்னும் பேடிமைதான் காரணமோ? மற்றுயாதுகாரணமோ நாமறியோம். இனிமர்ம்மம் வெளிப்பட்டபிறகேனும் உங்கள்பெண்களையும் பிள்ளைகளையும் தாய் தாரம் தமக்கையர்களையும், இரவல் வஸ்திரங்களையும் நகைகளையும் வாங்கிக்கொடுத்த பெரியபாளையத்துக்கனுப்பி வேப்பஞ்சேலை தரிக்கவொட்டாதீர்கள். உங்கள் நன்மையை நாடியே நாங்கள் இவ்வளவுஞ் சொன்னோமாதலால் எங்களைக் கோபிக்காமல் எங்கள் சொல்லை அலக்ஷியஞ்செய்யாமல் கவனித்துப் புத்திசாலிகளென்று பிறதேசத்தவர் மதிக்கப் பெயரெடுங்கள்.

நமது தேசம்: நமது கடமை.

நாம் சென்ற வாரத்துக்கு முன்பத்திரிகையில் நமது தேசத்தின் க்ஷேமத்திற்கு ஏராளமான கல்விப்பயிற்சி அவசியமென்று கூறினோம். நமது தேசத்திற்கு நாம் செய்யக்கடமைப்பட்டிருக்கும் விஷயங்களில் அதுமுதன்மையானது. இரண்டாவது தேசாபிமானம். இந்தியாவில் வசிக்கும் குடிகள்ஒரே

ஜாதியாரல்ல; பற்பல மதஸ்தர்களாயும், பற்பலபாஷைகளைப் பேசுகிறவர்களாயும் இருக்கிறார்கள். அவர்களுள் ஒற்றுமையில்லை. ஒரு இனத்தார் மற்றொரு இனத்தாருடன் சண்டை சச்சரவு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் அவர்கள் சுயஅரசாட்சிக்காவது உன்னதபதவிகளுக்காவது தகுந்தவர்களல்ல. கவர்னர் கவர்னர் ஜெனரல் இவர்களுடைய சபைகளுக்கு மெம்பர்களை பொறுக்கி எடுக்கும் சுதந்தரத்தைச் சுதேசிகளுக்குக் கொடுத்தால் மேற்சொன்ன காரணங்களால் அவர்கள் அந்தச்சுதந்தரத்தைச்சரியாய் அனுபவிக்கத்தகுந்தவர்களாய்க் காணப்படவில்லையென்று நமது விரோதிகளான அநேகம் ஆங்கிலேயர்களும் அவர்களால் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகளும் கூறுவது வழக்கமாயிருக்கிறது. நாம்இங்கிலீஷ்காரர்களைப்போல ஒரே மதத்தை யனுசரித்து, ஒரே பாஷையைப் பேசி ஒரே இடத்தில் எல்லாரும்சாப்பிடத் தகுந்தவர்கள் அல்ல என்பது வாஸ்தவந்தான். ஆனால் அதனிமித்தமாய் நமக்குள் ஒற்றுமை யில்லாமல் இருக்கவேணுமென்கிறது சரியல்ல. நாம் எந்தப்பாஷையைப் பேசினாலும், நம்மவர்கள் எந்தமதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் நாம் எல்லாரும் சகோதரர்களாகப்பாவித்து வேற்றுமை பாராட்டாமலிருப்பது அவசியம். நாமே ஒருவருக்குள்ஒருவர் மனஸ்தாபப்பட்டுக்கொண்டால் நஷ்டம்நமக்குத்தான். ஒருசுதேசி கஷ்டப்பட்டால் நாம்கஷ்டப்பட்டால் எப்படியோ அப்படியென்று நினைக்கவேணும். இது நமதுதேசம். நாம் இந்தத்தேசத்தில் பிறந்து வளர்ந்து எப்போதும் இவ்விடத்திலேயே நமது காலத்தைக் கழிக்கவேண்டியதாகையால், நாம் பொதுவிஷயங்களில் எல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்திருக்கவேணும். முக்கியமான சங்கதிகளைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்யப்படும்பொழுது எல்லாரும் அந்தப்பிரசங்கங்கள் நடக்கும் இடங்களுக்குப்போய் அதில்சொல்லுகிற சங்கதிகளைத் தெரிந்துகொண்டு தமது புத்திக்கு எட்டியவளவில் ஏதாவது சொல்லவேணுமென்றால் அதைக் கூச்சமில்லாமல் உரைக்கவேணும். இங்கிலாந்திலுள்ள நாடுகளில் ஒரு மகாநாடு கூடினால் சாதாரணமாய் நாலாயிரம் ஐயாயிரம் பிரஜைகள் கூடுவார்கள். நமது நாட்டிலும் ஏன் அப்படிச் செய்யக்கூடாது? ஒருவனுக்கு எவ்வளவு வேலைத் தொந்தரவிருந்தாலும், பொது நன்மையைச்சார்ந்த விஷயங்களைக் கவனிப்பதற்காக அவனுடைய நேரத்தில் சொற்பபாகத்தை உபயோகப்படுத்துவதற்கு சம்மதமுள்ளவனாய் இருக்கவேண்டியது அவசியம். கெட்டவழக்கங்கள் அல்லது சரித்தப்பான நடவடிக்கைகள் இருக்கிறதாகத் தெரிந்தால் அது சங்கதிகளைத் தகுந்த அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்து நிறுத்துவதற்கு வேண்டிய பிரயத்தனங்களையெல்லாம் செய்யாமல் எவன் கெட்டாலென்னவென்று சோம்பலாய் இருக்கக்கூடாது. நமது கைத்தொழில்களெல்லாம் நாளாவர்த்தியில் க்ஷீணகதியை அடைந்துவிட்டது. எங்கும் வறுமை ஜாஸ்தியாயிருக்கிறது. நமது ஜமீன்தாரர்களும் ஸ்திதிவான்களும் உபயோகமில்லாத கூத்திலும் தங்களுடைய சவுக்கியத்திலும் ஏராளமான பணத்தை வீணாய் நாசமாக்குகிறார்கள். பணத்தை அப்படி வீண் செலவு செய்யாமல் வர்த்தக விஷயத்தில் உபயேகப்படுத்தினால் அவர்களுக்கும் ஐஸ்வரியம் விர்த்தியாகும். அநேகம் குடிகள் பிழைப்பார்கள். பம்பாய் பட்டணத்தில் அநேகம் யந்திரங்களை வைத்துக்கொண்டு நூல்நூற்று வேஷ்டி முதலானவைகளைநெய்கிறதற்காக அநேகம்கம்பெனிகள் சுதேசிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நமது இராஜதானியிலுள்ளவர்கள் ஏன் அப்படிச்செய்யக்கூடாது. சேலம், மதுரை, தஞ்சாவூர், திருச்சினாப்பள்ளி, திருநெல்வேலி, கோயமுத்தூர் இந்த ஜில்லாக்களில் பெரிய மிராசுதாரர்களும், ஜமீன்தாரர்களும் உண்டு. அவர்களில் சிலர் ஏற்பட்டால்வெகு காரியங்களையெல்லாம் முடிக்கலாம். இப்பொழுது உ,ரு- எந்திரங்களை வரவழைத்துப் பெரிய தொழிற்சாலை ஏற்படுத்தலாம். பணத்திற்குத் தகுந்த வட்டியும் கிடைக்கும்; ஜனங்களுக்கும் உபயோகமாயிருக்கும்; அநேகம் ஏழைக்குடிகள் வேலைசெய்து பிழைப்பார்கள். நமது தமிழ்ப்பாஷை நாளுக்குநாள் க்ஷீணகதியடைந்துவருகிறது. ம-ா-ா-ஸ்ரீ தாமோதரம்பிள்ளை யவர்கள் பழைய கிரந்தங்களைஎல்லாம் அச்சிட உத்தேசித்திருக்கிறார். அது வெகு மேன்மையான விஷயம். இப்பொழுதே அநேகமாயிரம் முதல்தர தமிழ் கிரந்தங்களெல்லாம் செல்லரித்து வீணாய்ப்போயின. பாக்கியிருக்கிற சொற்பப் புஸ்தகங்களும் அப்படியே மடிந்துவிட்டால் நமது நாட்டோருக்கு அதைவிட அதிகமான அபகீர்த்தி என்னவிருக்கிறது? ஆகையால் நமது கனவான்களெல்லாம் தமமால் இயன்றவளவில் இப்பேர்ப்பட்ட சத்விஷயங்களுக்கெல்லாம் மனப்பூர்வமாய் ஒத்தாசை செய்து தேசத்தைக் கனப்படுத்தித் தாமும் கனப்படுத்திக்கொள்ளவேண்டியது அவர்கள்கடமை.

சுதேசமித்திரன்.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகப்பத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே இரண்டணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுசசகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடிவெற்றிபெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுயக்கியானிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3— 0—0
வெளி „ „ —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிரூஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுயக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுயக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 34.] MADRAS :—SUNDAY AUGUST, 22, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

நாஸ்திகரென்போர் யாவர்? அல்லது ஆஸ்திகரின் அறியாமை.

மதப்பிராந்தத்திற்கு மாதாவாயுள்ள இவ்விந்து தேசவாசிகளுட்சிலர் நாஸ்திகக்கொள்கை யின்னதெனவும் இத்தகையதெனவும் அறியாது அறியவும் முயலாதயானைகண்ட வந்தகரிதியாய் நாஸ்திகரைப்பற்றி நவிலுவது யாதெனின்கூறுவாம். நாஸ்திகர்களுக்கும் ஆஸ்திகர்களாகிய நம்மவர்களுக்கும் யாதொரு பேதமுமில்லை. ஆஸ்திகர்களாகிய நாமோ கடவுளைப் பூஷித்து வருகின்றோம். நாஸ்திகர்களோவெனின் கடவுளைத்தூஷித்து வருகின்றனர்கள். நெருப்பை அறிந்து மிதிப்பவர்களையும் அறியாமல் மிதிப்பவர்களையும் அந்நெருப்பானது சுடுவதுபோல் கடவுளானவர்தன்னைத்தூஷிப்பவர்களாகிய நாஸ்திகர்களையும் பூஷிப்பவர்களாகிய ஆஸ்திகர்களையும் ஒருங்கேபேதமின்றி இரக்ஷித்தருள்வர் என்றும் மனம்போனபோக்காக உன்னிஉணர்போனபோக்காக வார்த்தையாடா நிற்கின்றனர். விவேகிகாள்! இவர்கள்கருத்துப்படி நாஸ்திகர் என்னும் பதத்திற்குக் கடவுள்தூஷகர்என்று அருத்தமாகின்றது. ஆனால உண்மையை விசாரிக்குமளவில் ஆஸ்திகர்களே கடவுள் தூஷகர்கள் எனஏற்படுகின்றது. அஃது வருமாறு—ஆஸ்த்திகர்களென்போர் தம்முட்பற்பல குழாங்களாய்ப் பிரிந்து ஒவ்வோர் குழாத்தினுக்கும் வெவ்வேறு கடவுளர்களை வகித்துக்கொண்டு ஒவ்வொரு குழாத்தினரும் முறையேதத்தம் கடவுளர்களைப் பூஷித்தும் பிறமதத்தினர் கடவுளர்களைத் தூஷித்தும் வருகின்றனர்களாதலானும், கடவுட்கியானமேயில்லாத நாஸ்த்திகர்கள் தூஷிப்பதற்கேனும் பூஷிப்பதற்கேனும் இப்பிரபஞ்சத்தைத்தவிர வேறொன்றுமிருக்கக் காண்கின்றிலராதலானும், கடவுட்துவேஷகரென்னும் பழிமொழிக் குரியவர்கள் ஆஸ்த்திகரென்பதையும் நாஸ்த்திகரென்பதையும் நீங்களே நிர்ணயித்துக்கொள்ளவேண்டிய விஷயமாகவிருக்கின்றது. வாஸ்த்தவத்திலே கடவுளை யறிந்தவர்களும் அவ்வறிவிற்கேற்ற வாறு பிறர்க்கு அதனையறிவிப்பவரும் கிடையாமலே யிருக்கிறார்கள். பிரபஞ்சத்தைத்தவிர வேறுபதார்த்தத்தை யறிந்தவர்கள் ஆஸ்த்திகருமன்று நாஸ்த்திகருமன்று. ஆனால் இவ்விருதிறத்தவர்க்குமுள்ள முக்கியபேதம்யாதெனின் கூறுவாம். நாஸ்த்திகரென்போர் உண்மைக்கு உத்தாரமாக, அறியாததும் அறியவேண்டியதும் கடல்மண், அறிந்தது கைப்பிடிமண், எனபதாக் இப்பிரபஞ்சத்தினிடமே தமக்கோர் சிறிது ஞானமுளதென்பர். ஆஸ்திகரென்போர் பிரபஞ்ச முழுவதையும் மிக்க வறிந்தவர்போல் நடித்தும் அதன் பிரயோஜனத்தைக் கடிந்தவர்போல் விட்டும் விடாததுமாய் பிரபஞ்சான்னியமாய் பெருத்தவோர் பொருளுள்ளதாக மனோபாவனையில் சிருஷ்டிசெயதுகொண்டு அச்சிருஷ்டிப் பொருளுக்கு வந்தனை வழிபாடுகளியற்றி அறியாமையென்னும் பந்தனைக்குட்பட்டு வருபவர்களாக விருக்கின்றனர். ஆஸ்திகர்கள் நிலைமையிதுவாக விருக்க, அன்னோர் நாஸ்திகர்களைக் கடவுள் தூஷகரெனவும இன்னும் பலவாறாகவுந் தூஷித்துவருவது என்ன அறியாமை!

D.

கோரமானவிசேஷம்.

பெரியபாளையத்தம்மன் பிரபாவத்தையும் யாத்திரைப்பெருமையையுங் குறித்துச் சென்றபத்திரிகையில் பேசியேயிருக்கிறது. கேள்விப்பட்டகோரமான விசேஷமொன்றுண்டு. பெரியபாளையத்து ஆற்றில்கோயிலுக்கு இரண்டொரு மயில்தூரத்திலே அவ்வூர்ப்பறையர்கள் குறுக்கே அணைபோட்டு தண்ணீரைக் கட்டிப்போடுகிறார்களாம். ஜனங்கள் ஆற்றில் தண்ணீரில்லாதவிடங்களிலே பொங்கலிட்டுக்கொண்டு கொண்டாட்டமாயிருக்கும்போது, அந்தச் சண்டாளர்கள் அணையில் இரண்டு மூன்றுமடைதிறந்து தண்ணீரைவிட்டு, வெள்ளம்வருகிறதென்று காபராசெய்ய, ஜனங்கள் மருண்டு பொங்கற்பானை மூட்டை முடிச்சுகளை யெடுத்துக்கொண்டுபோகத் தலைப்படுஞ் சமயத்திலே, அந்தக்கள்வர்கள் கூடக்கலந்துகொண்டு அகப்பட்டதைச் சுற்றிக்கொண்டு போய்விடுகிறார்களாம். இதுவாலாயமாய் நடந்துவருகிறதா யிருந்தால், அது சர்க்காருக்குத் தெரியாதிருந்தாலும், அவ்வூரார் அறிந்தே யிருக்கவேண்டும. அப்படியாயின், அவர்கள் உடந்தைதான். சென்றவாரத்தில் சிலர் வெள்ளத்திலடித்துக்கொண்டு போகப் பட்டார்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். கோயிலுடைமையைக் கொள்ளை யிடுகிறவர்களை அந்தந்த தேவதை ஒன்றுஞ் செய்யாதிருப்பதுபோலவே, அந்த துரோகிகளுக்குப் பெரியபாளையத்தம்மன் கூலிகொடாதிருப்பதும் இயல்பா யிருக்கிறது. ஆகையால் அவரவரும் தன்னைக்காக்கத் தெய்வத்தைக் கோரிநம்பியிராமல், தன்னைத்தானே காத்துக்கொள்ள முயற்சிசெய்வது உத்தமம், இதை ஒவ்வொருவரும் யோசித்துப் பார்ப்பாராகில் தத்தம் அனுபவச் செய்கையினாலேயே அறிந்துகொள்ளுவார்கள்.

௧௭ மெய்யறிவு.

க-ம் பாகம்.

(127-வது பக்கத்தொடர்ச்சி.)

1-வது புலான்மறுத்தல்.

(இரத்தத்தினாலாகிய தசை, நிணம், தோல்முதலிய) புலாலைப்புசித்தல் கூடாதென்பதுபற்றி நாவலரொருவர் பிரசங்கஞ்செய்ததைக் கேட்டிருந்த எனது சினேகிதரொருவர் என்னிடத்தில் அந்தப் பிரசங்கம் வெகு சிறப்பாயிருந்ததென்று பேசிக்கொண்டிருக்கையில் புலையனிடத்திற் சென்று புலால்வாங்கிவந்து புசிப்பவர்கள்அந்தப்புலையன்தங்களிடத்திற்குவந்தால், அடா கிட்டவராதேயென்று (மருட்டி, உருட்டி, அதட்டி) விலகிப்போடாவென்கிறார்களே, இதென்ன அநியாயமென்று அந்த நாவலர் சொன்னதாக வியந்துபேசி, அன்றுமுதல் சைவசிகாமணியாகத் தலைப்பட்டனர். அதுகேட்ட யான் இந்தச் சைவசிகாமணிகளுக்கு தெய்வலோகத்திலிருந்து எந்தத் தெய்வசிகாமணிகள்வந்து தங்கள் கைப்பட பட்சணபண்டங்கள் தருகிறார்களோவென்று யோசிக்கையில், அந்தப்புலையர்கள் கைப்படத் தந்தவைகளல்லாது வேறொன்றையும் காண்கிலேன். தானியத்தைப்பார்க்கிலோ, விதைவிதைப்பதுமுதல்அந்தத்தானியம்சைவர்களென்பவர்கள் கையில் வந்துசேருகிறவரையில் நடந்ததண்ணீர்ப்பாய்ச்சல், களைகட்டல், மிதித்தல், அறுத்தல்முதலிய சகலதொழில்களும் அந்தப்புலையர்கள் கைப்பட்டவையாகவேயிருக்கின்றன. காய்கறி பதார்த்தங்களில் ஒவ்வொன்றையும் யோசிக்கையில், அவை அவர்கள்தொட்டிறைத்த தண்ணீரும் இட்ட (கெட்ட) எருவும் ஊறி வளர்ந்து, மற்றத் தொழில்களிலும் அவர்கள் கைப்பட்டவையாகவே யிருக்கின்றன. இந்தச் சைவர்கள் அந்தப் புலை

யர்களை விலகிப்போகச் சொல்லுகிற தில்லையாக்கும்; சொன்னால் அநியாயந்தான். இது இருக்கட்டும். சைவர்கள் புலால் புசிப்பதில்லையென்பதை யோசிப்போம். இவர்கள் குழந்தைப் பருவத்தில் தாய்முலைப்பாலாகிய மானிடரத்தத்தைஉண்டு வளர்ந்தவர்கள். இதினாலேயே மாட்டின்பால், தயிர், நெய்யும் இப்படிப்பட்டவையென்று இதை வாசிப்பவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள்.

செடிவர்க்கங்களோவெனில், சிலசில செடிகளுக்கு வெவ்வேறுவகை எருபோட்டாலொழியவிர்த்தியாகா. வெற்றிலைக்கொடிக்கு ஆட்டுமயிர்வேண்டும், கொடிமுந்திரிக்குப் பன்றிப்புட்டை, அழுகின மீன், ஆட்டுத்தோல் வேண்டும். இவ்வாறே ஒவ்வொருசெடிக்கும் பயிருக்கும் தாங்கள் பார்த்தமட்டில் போட்டுவரப்பட்ட எருவையும் மேற்கண்ட சங்கதிகளையும் சைவர்கள் யோசிக்கட்டும். அவர்கள் தாங்களும் புலால் புசிப்பதுண்டென்று ஒப்புக்கொளளுவார்கள். புலால் புசிப்பதேயில்லை யென்பார்களாகில், ஜலபானம்செய்வதையும் விட்டுவிடவேண்டியவர்க ளாவார்கள். ஜலத்தில் கண்ணுக்குப்புலப்படாத (தேள்—சிலந்தி முதலிய ரூபமுள்ள) அற்ப ஜந்துக்களிருப்பதை கண்ணாடிக் கருவி சகாயத்தினால் பார்த்தவர்களும் கேட்டறிந்தவர்களும் அனேகருண்டு.

சைவர்கள் பாலைத் தேவாமிர்தமென்றும், அது தேவர்களுக்கும் பிரீதியென்றும், ஜீவவதைசெய்து மாமிசத்தைப் புசிக்கிறதில்லையென்றும், இவ்வித சமாதானஞ் சொல்லுவார்கள். ஜீவவதைசெய்து மாமிசத்தைப் புசிக்கிறதில்லையென்றால், ஜீவவதைசெய்யாமல் (பிணம்) மாமிசத்தைப் புசித்தால் புசிக்கலாமென்றும், வதைசெய்யாமல் உயிரோடு விழுங்கிவிடலாமென்றும் ஒப்புக்கொள்ளுகிறவர்களாவார்கள். இப்போது எவ்வித புலாலாவது புசிப்பதுண்டோ இல்லையோ வென்பது சங்கை. இந்தச்சங்கை நிவாரணமாகும்படி 'உண்மை' என்னும் பீடத்தின்மேல் நடுவுநிலைமையாக நின்று சொல்லப்படும் சமாதானங்கள் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கவையேயல்லாது, 'ஒருஜீவனைக்கொன்று பின்பு சேதிக்கப்பட்ட தசைக்கே புலால்என்றுபெயர்,' 'சாஸ்திரம்முறையிடுகிறது' 'வேதம்கோஷிக்கிறது 'பெரியோர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்' என்று சொல்லுகிற சமாதானங்கள் சரிவரா. ஏனெனில், பூமி நிலையாய்நின்றிருக்கிறதென்கிற காரணத்தினால் நிலமென்று பெயரிடப்பட்டது, அது நிலையாய் நிற்காமல் அசைகிறதென்று தெரிந்துகொண்ட காலத்தில் அந்தப் பெயர் உதவாது. ஒருபொருளுக்கு அதைக்குறிப்பதற்காக மரமென்று பெயரிடப்பட்டது, அந்தப்பெயருக்குவதிலாக வேறொருபெயர் இட்டிருந்தாலு மிருக்கலாமே; அதினால் அந்தப்பொருள்மாறாதே. ஒருவனுக்கு ராமனென்றுபெயர், அது ஸ்ரீராமருடைய லட்சணங்களெல்லாம் அவனுக்கிருக்கிறதாக அல்ல, ஆளைக் குறிப்பதற்காகத்தான். அதுபோல, உயிரிழந்த மாமிசத்தைப் புலாலென்றாலும்சரி, உயிருள்ள மாமிசத்தைப் பொற்கட்டி என்றாலும்சரி; பாலை அமிர்தமென்றாலும்சரி. யான் சொற்களின்பேரில் தோஷஞ்சொல்லவில்லை. ('புலையனும்விரும்பாதவிப்புன்புலால்யாக்கை' என தேகத்தைப்பற்றி முன்னோர்கள் சொல்லியிருக்கிற இழிவை யோசிக்க.) பொய்யைக்கொண்டு மெய்யை வெல்லக்கருதி, சொற்களின்பேரில் வாதாடிக்கொண்டு, சம்பந்தமில்லாத திருஷ்டாந்தங்களையும் கதைகளையும் சொல்லி மலைக்கச்செய்து, நாடோடியான ஜனங்களுக்கு மேற்பூச்சாக நம்பிக்கை வரப்பண்ணுவது அறிவிலிகளின் லட்சணம். அப்படிக்கல்லாமல்,அந்தந்தப்பதார்த்தத்தின் லட்சணங்களை ஆராய்ந்து, ஒன்றற்கொன்று இருக்கிற பொருத்தத்தையும் பொருத்தமின்மையையும் கண்டறிவது அறிஞரது லட்சணம்.

(இன்னும்வரும்)

வானம் வழங்குவதார்செயல்.

தத்துவவிவேசினி பத்திராதிபதியவர்களுக்கு.

ஐயா.

யான் சென்ற ஆதிவாரம் "சென்னை அருணாசலீசர் வசந்த மண்டபத்தில்" நாஸ்திககண்டனமென நாமஞ் சூட்டிச் செய்த உபந்நியாசத்திற்குச் சென்றிருந்தேன். அங்கே உபந்நியசித்த கந்தப்பதேசிகரென்பவர் தாய் தங்கையென்னும் பேதம் பாராமல் நாஸ்திகர் புணருவர், அவர்களுக்குக்கடவுள் அச்சமிருப்பின் அங்ஙனம் செய்யார் என்று கூறிச் சிலவிஷயங்களைப் பிரசங்கித்தார். பிரசங்கத் தீற்றில் வானம்வருஷிப்பது கடவுள் செயலா அல்லது தற்செயலா? வென்றுகேட்டேன்; அதற்கு வீட்டண்டைவந்தால் சொல்கிறேனென்றார். பலர் கேட்கக் கூறவேண்டுமென்றேன்; வருகிற வாரம் கூறுவதாகச் சொன்னார். அங்ஙனம் அவர்கூறுங்கால் அப்போதுகொண்டுவரும் "கோளாகாரம்-விருத்தாகாரம் துவாதசபாவாகாரம்" அந்தகாராதி ஆபாசகாரங்களைப் புகட்டிக் குழறுபடி செய்யாமல் நிராக்ஷேபமான உத்தரவுகொடுப்பாரென நம்புகிறேன். என்தேகம் வாயுவினால் பீடிக்கப்பட்டதாகக்கண்டபோது வைத்தியனைக்கண்டு எனக்குற்ற வியாதியைச்சொன்னேன் "வாதி சேராவழக்கும் வாளம் சேராவாயுவும் அறாதாதலால், வாளப்பேதிக்கு எடுத்துக்கொள்ளென்று கொடுக்கச் சுகமடைந்தேன். அதுபோல இச்சந்தேகத்தையும் வாதப் பிரதிவாதமாக விருந்து நிவர்த்தி செய்யும்படிக் கோருகிறேன்.

ஐயா - உபந்நியாசகரே

கடவுள் ஆஞ்ஞையால் மழைவருஷிப்பதானால் சனங்களுக்கு அனுகூலமாகவல்லவோ வருஷிக்கவேண்டும்? அதிவிருஷ்டி அனாவிருஷ்டிகளால் அவர்களைக் கெடுப்பதேன்? அக்ஷய ஈஸ்வர வருடங்களில் மழையின்றி பயிருன்றி பலனின்றி உலகம் பட்டபாட்டில் தங்களுக்கும் பாகம் கிடைத்திருக்கும். சென்றவருஷத்திய விசேஷமழையால் பல ஏரிகள் உடைபட்டு உயிர்ச்சேதம், பயிர்ச்சேதம், பொருட்சேதம் நேர்ந்ததைத் தாங்களும் அறிவீர். இதுயார்செயல்? மேகம் தற்செயலாய்த் தனக்கிஷ்டமானபோது இஷ்டமானவிடத்தில் இஷ்டமான அளவுக்குப்பெய்து உலகத்தைக் கஷ்டப்படுத்தி நஷ்டங்கண்டால் கடவுளிருந்தென்செய்ய?

> கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்பாய்மற்றாங்கே
> யெடுப்பதூஉம் யாவொன்றியம்பு.
> வானின்று நீர்சொரிந்து வையகத்தைக் காக்காதேல்
> கோனேது நீயேது கூறு.

இங்ஙனம்.
அ-பூசைலிங்கமுதலியார்.

குட்டிக்குறளிகள்.

குட்டிக்குறளிகள் என்றால் சிறியபைசாசங்கள்என்பது பொருள். இங்குநாம்உபயோகிக்கும் பொருளோ அதுவன்று; பின்னையாதெனின் துர்க்குணங்களமைந்த அறிவிற் சிறிய ஓர்பிராணி. இக்குறளிகளுக்கு ஆவேசம்பிறந்து இச்சென்னையின்கண்ணே தலைவிரித்தாடுகின்றன. இவை தமக்கு நாடகசாலையாக நாடித்தேடியடையும் இடமோ பேயோடாடிய பித்தன்கோயிலே. இவைகட்குத்தானத்திற்குத்தக்க ஞானமுதித்தமையால் தாம்பேசும் வாக்கியம் தமக்கே தெரியாமல் குழறிவழிகின்றன. சென்றஆதிவார ஆவேசத்தில் ஒன்று "நாத்திகர்தாயென்றும் தாரமென்றும் தமக்கையென்றும் பேதம்பாராமல்சம்பந்தம்செய்வர்" என்றதாம், ஏனெனில், அவர்களுக்கு ஓர்மேலான கர்த்தன் உண்டென்னும் நம்பிக்கையில்லாமையால் எதற்கும் அஞ்சார்கள் என்றதாம். தனக்குமேலாய பிரான் இல்லையென்றுகண்டுதான் பிச்சாண்டி பரதாரங்களாகிய தாருகவனரிஷிபத்தினிகளைக் கற்பழித்தனரோ, தமக்குமேலாயபரம்இல்லையென்றுதான் மண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்தனரோ, கிருஷ்ணனும் தனக்குமே லொருவரில்லையென்றுதானே கோபிகைகளைக்கற்பழித்ததும் அம்மான்மனைவியை அலைக்கழித்ததும், பிரமன் தான் பெற்றபெண்ணைப் பெண்டாளப் பார்த்ததும்; இச்குட்டிச்குறளிகளுக்கும் மேலாயஒருவனில்லையென்றுபுலப்படுமானால் தாதையையும் தாயையும் தாரதம்மியம்பாராபோலும்! இவைகள் தெண்டனைக்குப்பயந்துதான் தகாதன செய்கின்றிலபோலும். தெண்டனையின்றேல் எதற்கும் பின்வாங்காபோலும்.

கடிதங்கள்.

ஐயா. பத்திராதிபரே.

யாம் இரண்டுமாதகாலமாய். ஊருக்குவெளியே போயிருந்தோமாதலின், (நன்மைவிளம்பி) என்பவர் யாமுரைத்த (கேட்டையின்சேட்டை) யென்பதற்கு-கண்டனமாக சிலகூறியவற்றிற்கு, எம்மாலியன்றன பல பகர்வதற்குக் கூடாமற்

போயினவாதலின். அதுகாரணமா யிதனடியில்வரைந்திருக்கும். சிலவரிகளை இவ்வாரத்தில் நமது சுயக்கியான பத்திரிகையின்கண்ணே பிரசுரம் செய்வீர்களென நம்புகின்றனன்.

பெரியவர் யாவர்?

நம்மவரில் அனேகர் பெரியவர்யாவர்? எனநன்காராய்ந்துணராது, வயதின்மிகுத்தோரேபெரியோரெனமதித்து, அவருக்கே நானாவித வுபசாரங்களும் செய்துவருகிறார்கள். அதைக்குறித்து யாமிங்குவிவரிக்கவந்தோமில்லை.

சென்ற - 26 - நம்பர் பத்திரிகையில் வெகுவீரசூரத்துடனே நிமிர்ந்தெழுந்து மிக்கஸ்ரத்தையெடுத்துக்கொண்டு பேசிய நன்மைவிளம்பி என்பவரே! யாம் (கேட்டையின்சேட்டை என்றெழுதியவற்றிற்கு நீவிர்கண்டனஞ்செய்ய நினைந்ததுவும். கவரன்மெண்டார் எமக்குத்தண்டனை விதிப்பரென பயமுறுத்தியதுவும், இஃதன்றியும், சிலபோலி விஞாக்களைநிகழ்த்தியதுவும் வெகுவிந்தை; யாம்கேட்டையின் விஷயத்தில் தலையிட்டுக்கொண்டதனாலும்,சாத்திராக்கியானந்தலைகொண்டுள்ளோமெனத்தம்மைமதித்திருக்கும் நாவலர்போன்றார்மேல் தோஷாரோபணஞ்செய்ததனாலும், பயனென்னை! எனநீவிர்வினவியுள்ளீரன்றே? மெய்யாகவே எமக்கதனாற் கிடைத்த தொன்றையுங்காணேம். ஆயினும் நீவிர் யாம் எழுதியவற்றிற் கையிட்டுக்கொண்டதனாலும், எம்மேல்தோஷாரோபணஞ்செய்ததனாலும், உமக்கென்னவேனும் கிடைத்திருக்கவேண்டுமெனத்தோன்றுகின்றது. அதுயாதெனஒளிக்காமல் வெளிப்படுத்தும்.

எத்தகைய ஒருவரை பெரியோரெனத்தகும்! பலரும் ஒப்பற்கரியபுராண முதலியபலநூல்களைச்செய்து அவைகளுக்குக்கண்டனமடைதல், சுதேச பிரதேசத்தினராலும் - தம்மதப்பிறமதத்தினராலும் தம்மினத்தினராலும் அவமதிக்கப்படல் நிஷ்காரணமாய்மததூஷணஞ்செய்தல்,தாங்கற்றதனால் - கர்வித்தல் பொறாமைமுதலிய துர்க்குணங்களை யுடையவரா! அல்லது புத்தியின்மிக்கவல்லவராய், எவ்விஷயத்திலும் பொதுநோக்கையுடையவரா! பெரியோரெனப்படுவர்; (நன்மைவிளம்பியென்பவரே;எம்மேல்சினங்கொள்ளாது இதனைநன்காராய்ந்துணர்ந்தபின்னேஅரசாங்கத்தாரால் எமக்குத்தெண்டனைவிதிக்கயோசியும்; யோசியும் -) உம்மாலன்று; எங்கேயோபதுங்கிக்கிடந்த வற்றையெல்லாம் வெளியிலிழுத்துப் போடவேண்டியிருந்தது. இன்னும் எவ்விஷயத்திற்கும் பேசத்தொடங்குங்கால் (சொல்லுகசொல்லைப் பிறிதோர்சொலச்சொல்லை வெல்லுஞ்சொலின்மையறிந்து) என்னும் குறட்பாவின்தாற்பரியத்தையறிந்துணர்வீராக. வந்தனம்.

இங்ஙனம்,
புதுவைசுயக்கியான,
நண்பரில் - V. K. உண்மைவிளம்பி.

படாடோபப்பகல்வேஷக்கள்வர்.

I. சீர்பெருகும் சென்னையம்பதியில் பேர்பெற்றோங்கும் தத்துவவிவேசினி நங்காய்! யான்வரைந்தனுப்பும் இக்கடிதத்தை நின்சூரிய உதயம்போன்ற சேலையினோர் கோணத்தில் பதித்து தாமதமின்றி இவ்வாரமே பிரகடனஞ்செய்ய கிஞ்சித்திடங்கொடுப்பாயென நின்னையும் நின்பிதாவையும் வந்தித்தேனேற்றுக்கொள்க.

II. நங்காய்? நிகழும் ஆகஸ்டு ௴ 3 ௳ மங்களவாரம் சாயந்திரம்சுமார்மூன்றுமணிக்குயாரோ ஒருசுவாமியார் தேகாதியந்தமும் சாம்பல்களைப்பூசிக்கொண்டு நீண்டசடைகளுடன் யான்குடியிருக்கும் இல்லத்தின் திண்ணையின்பேரில் வந்துட்கார்ந்தனர். ஷை இல்லத்தின் சமீபத்துள்ள பென்ஷன் சுபேதார் வெங்கிடாசலம் பிள்ளை என்பவரும் இன்னும்சிலருமாக அவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர்கள். அவருடன் சம்பாஷித்துக்கொண்டிருந்தவர்களில் ஒருவர் "சுவாமி"இக்கிரகத்திலொருவருளர், அவர்கடவுளேஇல்லையென்பதாக சாதிக்கின்றனரே. அஃதென்னை யெனவினவி என்னையுமழைத்தனர். யான் ஷை சுவாமியைக்கண்டு சற்றுகவனித்து கண்ணுறுகையிலவர் பலபுஸ்தகங்களை மூட்டைகட்டிவைத்துக்கொண்டு அதிலுள்ள பாடல்களை மனனஞ்செய்து வழிதுறைதெரியாமல் அணில்களை யோட்டிக்கொண்டிருக்கக்கண்ணுற்றேன். பின்னுமவர் என்னைநோக்கிக் கூறியதாவது.நீவிர் கூறியபடி கடவுளை இல்லையெனவைத்துக் கொள்வோம் (இல்லை யானால்) சிலர்டல்லக்கேறுவதும் சிலர்பல்லக்கு சுமப்பதுமான இத்தியாதி வித்தியாசங்களேற்பட்டிருப்பதினால் அவரவர் கர்மாந்தபலன்களுக்குத்தக்கபடி கடவுள் படிப்படியாய் ஏற்படுத்தியிருக்கிறார் என்றும், பின்னும் உண்டென்பார்க்குண்டு. இல்லை யென்பார்க்கில்லை யெனவும் வாய்ப்பறையறைந்தனர்.

III. நமது தேயத்தின் கண்ணுள்ள மதவாதிகளோடு மதப்போர் புரிந்து வெற்றிபெற்று மாணிக்கம்போல் துலங்கி கூடிக்குலாவி குஞ்சிரிப்புக்கொள்ளும் நங்காய்? மேற்கூறிய திருஷ்டாந்தத்தினால் சுவாமியார் கடவுளைக் காணவில்லையென்றும் இப்பிரபஞ்சத்தின்கண் சிலர் தனவானாகவும, சிலர்ஏழையாகவும் விளங்குகின்ற இத்தியாதி வித்தியாசங்களினாலோர் கடவுளிருக்க வேண்டுமென சந்தேகமாய் சாற்றினரென்றும் உள்ளங்கை நெல்லியங்கனிபோல் விளங்குகின்றதே. நங்காய்? இவருக்குசுமார் வயது எழுபது ஆகியும் அச்சதுராட்சரச்சொல்லை யின்னதெனக் கண்ணுறாமல் சந்தேகியா யிருந்துகொண்டு பிறரையும் அச்சந்தேகவலையில் மாட்டி ஆபாசநூல்களைத்தீட்டி வெற்றுரையாடிக் காலத்தைக்கழிப்பது புத்திமான்களுடைய கடமையல்லவென நும்போலியவிவேகிகள் ஒப்புவர் ஒப்புவர்.

IV. நங்காய், பின்னுமவர் கூறியதாவது—இப்பூமிஎன்னும் கிரகம் ஜலத்தின்பேரில் அசைவாடிக்கொண்டிருக்கிறதென்றனர் அதற்கு அவரைச் சமீபித்துள்ள ஆப்காரி டிபோகீப்பர் மகாா - ா - ஸ்ரீ - சுந்தரம் பிள்ளையென்பவர், சுவாமியைநோக்கி தாங்கள் சொல்லுவதொன்றும் யுக்தியனுபவத்திற் கொவ்வாதிருக்கின்றதே. அன்றியும் இப்பூமி என்னும்கிரகம் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருக்கிறதென்றால் பேதையர்போன்ற அறிவிலிகள் ஒப்புவரேயன்றி விவேகிகள் எதினால் சிரிப்பரோஅறிந்திலேன். "சுவாமி" அஃதிருக்கட்டும், மேற்படி ஜலம்எதின்பேரில்அசைவாடிக்கொண்டிருக்கிற தென்றனர். அதற்கு, உத்தரம் தனக்குத் தெரியாதெனவும் பின்னுங்கூறினார்; (அதாவது) நான்ஒருபட்டணத்திலிருந்தபொழுது அவ்வூரார் பூமியில் 'இருபதுகஜம் ஆழம்வெட்டினார்கள், போகப்போகமுழுமையும் ஜலமாகத்தான் இருந்ததென்றும் சிலஐரோப்பிய சாஸ்திரத்தில்கூட இவ்விதமேகூறியுளதென்றும் சொல்லினர். மேற்படி சாஸ்திரமின்னதென விளங்கச்சொன்னாரில்லை. ஞாபகமறதிபோலும்.

V. நங்காய், என்னிடமிருந்த மெய்யறிவு முதற்பாகம் மெனுமோர்புத்தகத்தை சுவாமியிடம் கொடுத்துப்பார்வையிடவேண்டுமென்றேன்; ஷை சுவாமி அதைக்கையேந்தி வாசித்து இதில்வம்புந்தும்புமான சில விஷயங்களடங்கி யிருக்கிறதென்று சிலபாடல்களைச்சொல்லி நேரத்தைப்போக்கினார். அன்றியுமவர் தஞ்சாவூர், கும்பகோணம் மாயூரம்முதலான இடங்களுக்குச் சென்றிருந்தபோது சில Protestants, பாதிரிமார்கள் இவரைநோக்கி என்னை ஐயா உம்மைப்பார்த்தால் பூச்சாண்டிபோல் தோன்றுகிறதே இவ்விதபிசாசுகள் இன்னும் தங்களைவிட்டு அப்புறப்படவில்லையா தங்களுடையநாட்களை எல்லாம்வீணாய்க்கழித்துவிட்டதற்காக நியாயதீர்ப்பின்போது அந்த மெய்யான தேவனாகிய இயேசுகிருஸ்துமுன்னே என்னசொல்லக்கூடுமென இவைகள்போன்ற வார்த்தைகளாடினார்களாம் இவர்களைஎல்லாம் ஷை சுவாமியார் ~~அதமாக்கி தம்சப்படுத்தி~~ தமது நியாயத்தை நிலைநாட்டி ஷை பாதிரிகளிடமிருந்து ரூபா (௧) வெகுமானம் பெற்றுக்கொண்டு அன்றையப்படிச்செலவுடனும் புறப்பட்டு வந்ததாக தனதுபூரணசாமர்த்தியத்தை என்னிடம்புகட்டினார். "சுவாமி" அஃதிருக்கட்டும், தாங்கள் எவ்விடமிருப்பதென்றேன்? சென்னை என்றார். அவ்விடத்தில் தத்துவவிவேசினி எனும் நங்கையை யறிவீரோ வென்றேன். தெரியுமென்றனர். தங்களுடைய நாமதேயமென்னையென்றேன். ஒருமுழத்திற்கும் நீளமாகவே சொன்னார். அஃதுயெனக்குவிவரப்படவில்லை. அவரைச்சமீபித்துள்ள ஒருவரை உசாவினபோது பட்டுக்கயிறுகட்டி சச்சுதானந்த சுவாமிகள் என்றார். இதுவும் எனக்குசந்தேகமே. நங்காய் நினக்குதெரிந்திருந்தால் இப்பத்திரிகையின் வாயிலாகவே வெளியிடுவாயெனவேண்டாநின்றேன். ஷை கயிற்றை எங்குகட்டியுளரென எமதறிவிற்குப் புலப்படாமலிருப்பதால் இங்குதீட்டலானேன்.

VI. நங்காய்? இவ்விதசம்பாஷணைகள் முடிந்தபின்பு தன்னுடையகையிலுள்ள நோட்டுப் புத்தகத்தை எடுத்துக்கொடுத்து கையெழுத்து செய்யவேண்டுமென்றனர். ஷைபுத்தகத்தில் கையெழுத்திடுகிற ஒவ்வொரு நபர்களும்ஒருரூபாவுக்குக்குறையாமல் கொடுக்கவேண்டுமென்றும்மேற்படி தொகைக்கு ஒருகாசேனும் குறைந்த போதிலும் தான்வாங்க அருகனல்லவென்றும் கூறினர். நங்காய்! எதுஎக்கேடுகெட்டபோதிலும் தன்வரும்படியின்பேரில் கண்ணோக்கமா யிருந்துகிரகிக்கும் இப்பாதக சுவாமியாரை யென்னவெனமதிக்கலாம் யோசியுங்கள் யோசியுங்கள்.

VII. உண்மையை ஆபரணமாகப் பூண்டுதித்துலாவும் த. வி. னி. நங்காய், ஸ்ரீமான் மூனிசாமிநாயகரெனும் பத்திராதிபரோ. கி. உ. என்னும் பரஉபகாரரே. D என்னும் சத்தியசீலரே. தி. சி. நாராயணசாமி பிள்ளை. இ. சு. சா. யென்னும் நேயமுள்ள உத்தமகுணாளரே, V. K. யென்னும் உண்மைவிளம்பியவர்களே, இக்கரூரென்னும் தாலூகா இத்தகைய சுவாமிகள் வாசஞ்செய்து, காலங்கழிக்கத்தகுதியானதென்று யான்வரைந்ததி னிமித்தம் எளியேன்பேரில் கிருபைகூர்ந்து தாங்கள் தங்களிடங்களில் சோற்றிற்கு ஆலாப்பறக்கும் சோம்பேறிசுவாமிகளை இவிடமனுப்பிவீர்களென்ற எமது அன்புள்ள வந்தனம் அகமகிழத்தந்தனம்.

இனியோர்கால் சமயம்நேர்ந்துழி உள்ளூர்சுவாமிகளைப்பற்றிச்சற்றுக் கடாவிப்பார்ப்போம்.

இங்ஙனம்,
திரிசிரபுரம்புத்தூர் வையாபுரி. பி.
இந்துசுயக்கியான சங்கத்தின் ஓர்மெம்பர்.

கரூர்,
14-8-86.

———o———

அழுக்காறு சந்தேகம்.

சைவசமாஜத் தவர்களிலொருவராகிய தண்டலம் பாலசுந்தர முதலியாரவர்களுக்கு அனேகவந்தனம் அகமகிழ்ந்து தந்தனன். ஐயா! சஅஅசுவஸ் ஆகஷ்ட்டுமீ அவ தங்கசாலைவீதி அருணாசலீசர் வசந்தமண்டபத்தில் காலை-ய மணிக்கு நாஸ்திககண்டன பிரசங்கத்திறுதியில், ஞானசம்பந்தர் நாவுக்கரசரை தெரிசிக்கவேண்டி அவ ரெழுந்தருளியிருந்த ஸ்தலத்திற் கருகாமையி லெழுந்தருளுங்காலையில், மருள் நீக்கியார் தமதுழவாரப்படையை மறைத்து தாம்கரந்து, பிள்ளையாரின் முத்துச்சிவிகையைச் சுமந்துவர, சம்பந்தர், என்னப்பர் எங்குற்றுர் எனவினவலும், தாமூர்ந்தவரும் பல்லக்கைச் சுமக்கும் பெருவாழ்வுபெற்றே னென்றெதிர்வர, பிள்ளையார் விரைந்திறங்கி யெதிர்கண்டு பணியத் தாமுன்பணிந்தார். இவ்விருவருக்கும் அழுக்காறு கிடையவேகிடையாது. ஆதலால் அவர்போல் நாமு மழுக்காறற்றிருக்கவேண்டும் என்றீர். திருமறைக்காட்டிற்கு இவ்விருவரும் சுவாமியைத் தெரிசிக்கவெழுந்தருளுகையில், மறைக்காட்டாலயக் கோபுரவாயிற் படிதிறவாது மூடிநாளேறியதால், அப்பரே, இக்கதவந்திறக்கப் பதிகமோதுவீரென, அவரிசைந்து "பண்ணினேர் மொழியாளுமைபங்கரோ," எனமுதலெடுத்துப் பதிகமோதி "அரக்கனை விரலாலடர்த்திட்ட நீரிரக்கமொன்றிலீ ரெம்பெருமானிரே" எனக் கடைக்காப்புச்சாற்றியபின்பு கதவந்திறந்ததாயும்; சுவாமிதெரிசனையாகியபின் திரும்பும்போது ஞானசம்பந்தர் கதவுமூடப் பதிகமோதுகையில் "சதுரம் மறைதான் றுதிசெய்து வணங்கும்," எனப்பாடிய முதற்பாட்டு முடியுமுன் கபாடபந்தனமாகக்கண்ட நாவுக்கரசர் விசனமுற்று அன்றிரவுவரைக்கு மதேசிந்தையா யிருந்தாரொன்றும்; இரவில் சுவாமி தெரிசனந்தந்து பிணக்குத்தீர்த்தாரொன்றும், பெரியபுராணங் கூறுவதால், அப்பர் சுவாமிகளுக்கு அழுக்காறிருந்ததாகத் தோன்றுகிறது. திருவீழிமிழலையி லிவ்விருவரும் சந்தித்து வசித்தபோது பஞ்சம் நேர்ந்ததாலிவ்விருவரும் நித்தலும் படிக்காசுபெற்ற அந்நாளில் சம்பந்தருக்குத்தந்த காசுக்கு அவ்வூரார் வட்டம்கேட்கப் பிள்ளையார் மனவருத்தமுற்று "வாசிதீரவே, காசுநல்குவீர், மாசின்மிழலையீ, ரேசலில்லையே" எனப்பதிகமோதியது அழுக்காறுசொண்டா? இன்று? இதுவெமக்குச் சந்தேகம். அழுக்காறுவதென்ன?

ஐயா! தண்டலம் பாலசுந்தரமுதலியாரவர்களே, கருணைகூர்ந்து வருமாதிவாரப்பிரசங்கத்தில் இச்சந்தேகமகற்று வீரொன்று கேட்டுக்கொள்ளுகின்றனன்.

ஒவ்வொருவாரத்திலும் பிரசங்கிக்கும்போது சந்தேகமுடையார் கேள்விகேட்கவும் நீங்கள் விடைபகரவும் இடந்தரவேண்டுகின்றனன். அவ்வவ்வாரத்துப் பிரசங்கத்தை வாய்ப்பறையாகவிடாது, ஒவ்வொருவாரத்திலும் நிகழும் பிரசங்க சந்தேகாட்சேப சமாதானமியாவற்றையும் நடந்தவண்ணமச்சடித்து யாவருக்கும் விசிதமாகப் புத்தகப்பறையு மடியுங்கள்.

அ-பூ-மு.

———

வேதசிவாகம புராணாதிகளின் இயல்பு.

நிகண்டுகற்று, இலக்கிய ஆராய்ச்சிசெய்து, இலக்கணநூல்களிலேபயின்று, அடிதொடை முதலியசந்திகளைக் கூட்டியும், பிரித்தும் உணரவல்ல வித்துவான்களுக்கேயன்றி, ஏனையோர்க்கு வேதசிவாகமபுராணாதிகள் சிறிதும்பயன் படாதிருக்கின்றது. அவ்வித்துவான்களுக்கும், நோய், கவலை. மூப்பு முதலிய ஏதுக்களால் விவேகங் கிளராக்காலத்துப் பிரயோசனம் ஆகாது. கற்றுவல்லோர் சிலரேனும், கற்றுவல்லோரல்லாதார் பலருக்குத்தாமே யுணர்த்தவும் அக்கற்றுவல்லோரல்லாதார் கற்றுவல்லோரைத் தாமேயடைந்து உணரவும், அஃது பெருங்காவியங்களாயும் அரிய நடையாயும் இருக்கின்றன.

இவைகளை அறியாதசில அமார்க்கர்கள்கூடி வாதிகளாயும் பிரதிவாதிகளாயும் பிணக்கடைகின்றனர். பிணக்கடைந்தார்களிற்சிலர் தேரையைக் கடித்துச் சிங்கத்தைக்கொன்றேமென்று பத்திரியைக் கொடியைத்தூக்கி இரம்பிக்கின்றனர் அவர்கள்கருத்துமிகவும் நன்று. நன்று!

நாராயணப்பிள்ளை.
யாழ்ப்பாணம்.

இக்கடிதனைப்போன்ற அமார்க்கரல்லாதார் யாரேனும் அல்லது இவரேனும் வாதியாய் நின்று வேதசிவாகம புராணாதிகளின் இயல்பையும் அவற்றிற் கூறப்படும் பதி பசு பாசங்களின் உண்மையையும் நிலைநாட்டுவரேல் மேலெழுதிய இவர்கடிதத்திற்குப் பொருளுண்டென மதிப்போம். இங்ஙனம் செய்யாமல் ஒளித்துச்சண்டைசெய்யும் ஒப்பற்றவீரன்போல தூரத்தேநின்று ஓர் கல்லெறிந்துவிட்டு நானும் எதிர்த்தேனென்பரேல் இக்கடிதம் வெற்றுரையென்றே மதிப்போம்.

E. D.

விஞ்ஞாபனம்.

நாஷனல் சிக்கியுலர் சோசைட்டியின் உபகாரநிதி.

விருத்தாப்பியமும் வறுமையுமடைந்திருக்கிற சுயக்கியானிகளுக்கு உதவிசெய்யும்பொருட்டு இந்த நிதிஸ்தாபிக்கப்பட்டு, காரியநிர்வாகசபையார் வருஷந்தோறும் ஏற்படுத்துகிற கமிட்டியாரால் பரிபாலிக்கப்படுகிறது. சிக்கியுலர் சொசைட்டிகளில் மெம்பர்களாயிருக்கிற வர்களுக்கும் இருந்திருக்கிற வர்களுக்குமே முந்திஉதவிசெய்யப்படும், ஆனால் சுயக்கியானிகளா யிருப்பவர்களுடைய விண்ணப்பங்களை அந்தக்கமிட்டியார்யோசிக்க அதிகாரமுடையவர்களே யல்லாமல், யாதொருசபையைச் சேர்ந்தமெம்பர்களைப் பற்றி யோசிக்கலாகாது. அப்படிப்பட்டவர்களுடைய சங்கதிகளை முக்கியமாய்க்காரிய நிர்வாகசபையார் யோசித்து நடத்துவார்கள். சரீரவலுவுள்ள சுயக்கியானிகளுக்கு யாதாமோர்காலத்தில் நேரிடுஞ் சங்கட்டநிவாரணைக்காக வட்டியில்லாமல் கடனுங் கொடுக்கப்படுகிறது; அதையவர்கள் சந்தர்ப்பமானபோது செலுத்தலாம். இந்தநிதி மிகவுஞ் சாக்கிரதையாயும் சிக்கெனமாயும் பரிபாலிக்கப்பட்டு, ஒருகாசளவில் அதின் உத்தேசத்திற்காகவே சேர்த்துவைக்கப்படுகிறது. காரியநிர்வாக செலவு பொது நிதியிலிருந்து செலவழிக்கப்படும். இந்த சொசைட்டியைச் சேர்ந்தசாகைகள் இந்தநிதியின் பிரயோசனத்துக்காக வருஷத்திற்கொருதரம் பணச்சேகரஞ்செய்யவேண்டிய தென்று எடிம்பரோசபையில் சர்வத்திர சம்மதமாய் நிகமனஞ்செய்யப்பட்டது."

தாய்ச்சபையின் உபகாரநிதிக்குக் கிஞ்சித்து சகாயஞ் செய்யும்படி மதிராஸ் சிக்கியுலர் சொசைட்டியைச்சேர்ந்த சகல மெம்பர்களையும் அதின்க்ஷேமத்தைக் கோருகிறவர்களையும் நிபந்தனையை அனுசரித்துக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்த நிதியின்உத்தேசம் சற்பாத்திரமானது; ஆகையால், கிரேட்டு பிரிட்டனிலுள்ள நமது சோதரர்களுக்கு உதவிபுரிய இந்தியாவிலுள்ள சுயக்கியானிகள் யாவரையும் ஆவலோடு அழைக்கிறோம்.

கையொப்பங்களை வருகிற அக்டோபர்மீ கஉ வரையில் பெற்றுக்கொள்ளலாகும். வரவுதொகையைப் பற்றிக்கொண்டதாக, சென்னபட்டணம், வேப்பேரி, சில்வர்ஸ் ரோட்டிலிருக்கும் மதிராஸ் சிக்கியுலர் சொசைட்டியின் காரியதரிசியானவர் "தின்கர்" பத்திரிகை மூலமாய்த்தெரிவிப்பார்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)	Rs.	As.	P.
மாசம் 1-க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிறாஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.

[illegible]

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 35.] MADRAS :—SUNDAY AUGUST, 29, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

வேதம்பிரமாணந்தானு.

சென்றஆதிவாரம் திருவல்லிக்கேணி கங்கை கொண்டான் மண்டபத்தில்செய்த மதவிஷயமான உபந்நியாசத்தில் ஸ்ரீ-உ-வே-சிற்ருத்திக்காடு ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமிகள்சொல்லியதாவது— "வேதமானது பரமபுருஷனைப்பற்றிய சாத்திரம். அதில் சொல்லுங்கர்மம் என்பது பகவானுடைய ப்ரீதி; அதர்மந்தான் பகவானுடைய அப்ரீதி; வேதம் அனாதி; சிலகாலம்மறைந்திருந்தது. அப்போது ரிஷிகளுடைய மார்வமென்னுங்கோயிலில் நித்தியவாசஞ் செய்துகொண்டிருந்தது. வேதத்தைச்சர்வேஸ்வரன் பிரமனுக்கு உபதேசித்தபொழுது தானொன்றைப்புதிதாய் நிர்மித்துச்சொன்னானல்லன். எத்தனை பிரம்மகற்பமானாலும் வேதத்தில் ஓர்சொல்லேனும எழுத்தேனும்மாருது. இராவணன் "இராவணப்பட்டு" என்னும் ஓர்கிரந்தம்செய்திருக்கிருன். அதில் வேதத்திலுள்ள எழுத்தித்தனையென்றும் சொல் இத்தனையென்றும்வாச்கியம்முதலியவைகள் இவ்வளவுதானென்றும் கணக்கிட்டுப் பிரித்தெழுதப்பட்டிருக்கிறது."

வேதம் அனாதியேல் அதை ஆக்கியோன் ஒருவனும் இல்லையென்ருகிறது. பரமபுருஷனைப்பற்றியசாத்திரமே வேதமென்றமையால் அவ்வேதம் அப்பரமபுருஷனாலேனும் அல்லது அப்பரமபுருஷனுடைய குணானுபவத்தைக்கண்ட மற்றெவராலேனும் செய்யப்பட்டிருத்தல்வேண்டும். வேசம் அனாதியென்றமையால் தனுகரணாதிகளையுடைய பிராணிகள்எல்லாம் அதற்குப்பிந்தியே உண்டாயிருத்தல்வேண்டும். பிந்தியுண்டான ஒருவர் முந்தியுள்ளவேதத்தைச் செய்திருக்கமாட்டார். ஆனால் அப்பரமபுருஷனே வேதத்தைச்செய்திருத்தல்வேண்டும். அவன்செய்திருப்பனேல், அவ்வேதம் அவனால் செய்யப்படு பொருளாகின்றமையால் அதற்குக் கர்த்தாவோடு சமத்துவம்பாராட்டி அனாதித்துவம் கற்பித்தல்கூடாது. ஏனெனில் செய்வோன் இருக்கைக்குப்பிந்தியதே செய்யப்படுபொருளாதலால், அதைஅப்பரமபுருஷனும் செய்திலனெனின், அதற்குச்சொரூபலக்ஷணமும் இருந்தவிடமும் ஏற்படல்வேண்டும். அதுசத்தசொரூபமெனின், சத்தம்மூர்த்தபூதியங்களின் அதிட்டிப்பேயாதலால் அச்சத்தத்திற்கு முந்தி மூர்த்தபூதியம் (Matter) இருந்திருத்தல்வேண்டும். அப்போது மூர்த்தபூதியம்காரணமும்சத்தம்காரியமுமாகின்றது. ஆகவே, காரணத்தைவிட்டு அதற்குப்பிற்பட்டகாரியத்திற்கு அனாதித்துவங்கற்பித்தல் தருக்கசாத்திரத்தணிபும் யோசனாபுருஷத்துவமும்அன்று. ஆதலால் வேதம்அனாதியென்றது பிழைபட்டொழியும். பரமபுருஷன் ஒருவன் உளனோஇலனோவென்று சந்தேகிக்கும் சந்தேகிகளுக்கு அப்பரமபுருஷன் இன்னானென்றும அவன் இலக்கணம் இன்னவென்றும், அவனை இன்னவாறுகாணலாமென்றும், அவனைநாம்கண்டதுபோலவே இன்னின்னார் கண்டிருக்கின்றனரென்றும் நிரூபிக்காமல் ஒருபரமபுருஷனுளனென்ருல் அவர்களுக்கு எவ்வாறு விளங்கும்? எங்ஙனம் மனோதிடமும் நிச்சயமும் உண்டாகும்? இப்படியே இவ்விந்துதேசமல்லாத பிறதேசத்தவர்களும் தங்கள்தங்கள் சமயத்தையே பெருமைபாராட்டித் தங்கள்தங்கள் கடவுளருக்கே அனாதிநித்தியத்துவம் கற்பிக்கின்றார்கள். அவர்களைக்காட்டினும் மேலையஉபந்நியாசத்தில் என்னவிசேஷம்கண்டோம். இவ்வளவு ஆக்ஷேபங்களுக்கும் இடம்கொடுக்கின்றமையால் வேதம்எப்படிபிரமாணமாகும்.

பரமபுருஷனும், வேசமும் அனாதியென்பது சாத்தியம்என்றுகாட்டும்படி யோர்உபமானகதைசொல்கின்ருர்.—

ஒருவன் சொம்பு, கம்பளி யிரண்டையு மோரிடத்தில்வைத்துவிட்டு ஸ்நானஞ் செய்துவிட்டுவந்து சொம்புகம்ப்ளியைத் தேடிக்காணுமல் அலைந்து கொண்டிருக்கையில், ஒரு வழிப்போக்கன் என்னப்பாஅலைகிருயென்றுகேட்க, அவன்சொம்புகம்பளிகாணுமற்போயிற்றென்ருனும்; இவன் சொம்புஎங்கேவைத்தாயென்ருனும், அவன்கம்பளியிருந்தவிடத்திலென்ருனும், கம்பளியெங்கேவைத்தாயென்ருனும், சொம்புவைத்தவிடத்திலென்ருனும், இப்படியேசொம்புகம்பளிஇரண்டும் ஒன்றையொன்றுபற்றிநின்றதுபோல வேதமும் ஈஸ்வரனுமெனக்கொள்ளவேண்டுமாம். இந்தஉபமானம் கடவுள்உண்டு வேதமும் உண்டுஎன அங்கீகரித்துக்கொண்டு, இவ்விரண்டும் எப்படி அனாதியாயிருக்கக்கூடுமெனக்கேட்புழி, அதுஇதுபோலவெனவிளக்குதற்கு மாத்திரம் மேலையஉபமானம் ஒருவாறுபயன்படுமேயல்லாமல், "வேதம் பிரமாணமாமா" என்பதற்கு ஒருவாற்ருனும் பொருந்தாது. இப்பேர்ப்பட்டவேதத்தில் என்னமகிமையைக்கண்டுவிட்டோ "இப்பேர்ப்பட்டமகிமையுடைய ஓர்வேதம் பொய்சொல்லுமா! ஒருபொழுதும் சொல்லத்துணியாது. பொய்யல்லவென்பதை அதில் சொல்லியபடி செய்துபார்த்து அதுபலிக்குமேல் மெய்யென்று நம்பத்தானேவேண்டும், அது கலியின்கொடுமையால் ஒருவேளை பலிக்காமற் போயிற்று. அப்பொழுதென்ன! அப்பொழுதும் வேதத்தில்சொல்லியபடி நாமனுஷ்டித்தோமோ யில்லையோ அனுஷ்டிக்காததினால்தான் பயனில்லையென்று நாம் நினைக்கவேண்டுமேயல்லது இதுபொய்தான், மெய்யென்று மெய்ப்பிக்கிறதற்கு வேறுசாக்ஷிவேண்டுமென்ருல் அப்புறம் அதற்கின்னொரு சாக்ஷிவேண்டும் அதற்கு வேருெரு சாக்ஷிவேண்டும், இப்படி யனவஸ்த்தையாய் போய்க்கொண்டிருக்குமாதலின், எப்படி ஒருவிளக்கு சுயம்பிரகாசமாய்நின்று பிறவஸ்துக்களைப் பிரகாசிப்பிக்கிறதோ அதுபோல வேதம் சுயம்பிரகாசமாய் நல்லது தீயதென்பதைப் பிரகாசிப்பிக்கிறது என்று திருப்தியடையவேண்டியது" என்கிருர். திருடருக்கெல்லாம் நற்புத்திவரும்படிச் சிக்ஷைசெய்கிற அதிகாரியாயிற்றே, அவன் திருடுவானு வென்பதும் ஓர்நியாயந்தானு? எத்தனையோ அதிகாரிகள் திருடி தெண்டனையடைந்திருக்கின்ருர்களே. இன்னும் அவர்களால் தெண்டிக்கப்படத்தக்க திருடரின் திருட்டைக்காட்டினும் அவர்கள் திருட்டு பெருந்திருட்டாக விருக்கின்றதே. வேதத்திற்கு விளக்கைப்போல சுயம்பிரகாசமுண்டேல், அது கிரேதாயுகத்திலும் கலியுகத்திலும் ஒரேதன்மையான ஒளியையல்லவோ கொடுக்கும். அதைக்கால மென்செய்யும். கிரேதாயுகத்தில் சுட்டகொள்ளி கலியுகத்தில் சில்லென்று குளிர்ந்திருக்குமோ? இதுபோல கலியுகத்தில் பலிக்காதவேதம் கிரேதாயுகத்தில் பலித்ததென்பது என்ன நிச்சயம். அவ்வேதத்தை அனுஷ்டித்துப் பலன்கைகூடாதபோதும் அனுஷ்டிப்பின்மேல் தோஷம் சொல்லவேண்டுமேயல்லாமல் வேதத்தின்மேல் தோஷம்சொல்லப்படாதென்பது என்ன அபிமானமோ என்ன நியாயமோ? ஒன்றைநம்புவதற்கு சாக்ஷிவேண்டுமென்ருல் அதைநம்புவதற்கு இன்னொரு சாக்ஷிவேண்டுமென்றும், அதற்கு மற்ருெருசாக்ஷிவேண்டுமென்றும் மேலுமேலும் சென்று அனவஸ்தா தோஷம் விளையுமென்பதனால் சாக்ஷியேயில்லாமல் நம்பச்சொல்கின்ருர்போலும். இதை வாசிக்கும் நண்பர்களே; நீங்கள் கோர்ட்டு கச்சேரிகளுக்குப் போகும்போது உங்கள் விவாதத்திற்குச் சாக்ஷிகொண்டுபோகாமலே போங்கள். நியாயாதிபதி சாக்ஷியெங்கென்ருல், சாக்ஷிமெய்யென்பதற்கு வேறுசாக்ஷிவேண்டுமாதலால் அது அனவஸ்தா தோஷத்தில் முடியும், ஆதலால் சாக்ஷியில்லாமலே நம்பித் தீர்ப்புகொடுக்கும்படிச் சொல்லுங்கள், அதற்கு என்னவிடை பிறக்கிறதென்று கண்டுகொள்ளுங்கள்.

இதுநிற்க,சாதிபேதம் இருக்கவேண்டியதென்றும் அது அப்பரமபுருஷனால் ஏற்படுத்தப்பட்டதேயென்றும், இவ்வுலகத்தில்மாத்திரமல்ல தெய்வலோகத்திலும் பிரம்ம க்ஷத்திரிய வை

சிய சூத்திரர் இருக்கின்றார்களென்றும், இந்த ஜாதிபேதத்தைப்பற்றிக் கிருஷ்ணர் அருச்சுனனுக்கு கீதையில் சொல்லியிருக்கிறாரென்றும் ஆதலால் சாதிபேதம் அவசியம் இருக்கவேண்டுமென்றும் ஷி உபந்நியாசி சொல்லுகின்றார். தேவர்களெல்லாம் யாதொரு பேதமும் பாராட்டாமல் அனேக ஆவர்த்தியில் சம்பந்தியாய் போஜனம்செய்தார்களென்றும் காந்தர்வ ஸ்திரீகளை தேவர்கள் மணந்தார்களென்றும் பலவாய்ப் புராணங்கள் முறையிடுகின்றன. கண்ணன் கீதாஉபதேசம்செய்தபோது, சகலஜாதி வேறுபாடுகளும் கட்டுப்பாடேயல்லாமல் வேறல்ல, எல்லாம் ஒன்றே, இவர் பகைஞர் இவர் உறவினரென்பதெல்லாம் மாயாச்சம்பந்தமே யல்லாமல் உண்மையல்ல. எல்லாம் நானேயாக விருக்கிறேன் என்று உபதேசித்தவர் இதற்குமாறாய சாதிபேதம் இருக்கவேண்டுமென்று உபதேசித்தது சாத்திரக் கருத்துக்கே முழு விரோதமாகின்றது. ஆதலால் சாதிபேதம் கற்பனையேயல்லாமல் உண்மையல்ல.

நாஸ்திகக்கொள்கை.

நமது தலைவர்களையும் நமது நோக்கத்தையும்பற்றிப் புறட்டுபேசி சுவக்கியான அபிவிர்த்தியைத் தடுப்பதற்குக் கிரிஸ்தவர்களும் மற்ற எதிரிகளும் தங்களாற்கூடுமான முயற்சி செய்துகொண்டுவருகிற இககாலத்தில் நமது சரியான கொள்கையை விளக்கமாகத் தெரிவிப்பது மிகவும் அவசியமாயிருக்கிறது. சுத்தலவுகீகர்களாகிய நாம் தங்களுக்கு இன்னதென்று எவ்வளவேனுந் தெரியாததை மிகவும் ஊர்ச்சிதமாய் ஸ்தாபிக்கிற அந்தப் பெருத்தகும்போடு சேர்ந்தவர்களல்ல. ஜீவன் உற்பத்தியைப்பற்றியாவது கடவு ளிருப்பைப்பற்றியாவ துண்டாகிற சகல கேள்விகளுக்கும் நமது விடையானது "எனக்குத்தெரியாது" என்பதே. தெரியாதவிஷயங்களில் நாம் ஆராய்ச்சி செய்கிறவர்களாயும் கற்றுக்கொள்ளுகிறவர்களாயு மிருக்கிறோம். நியாயத்திற்கும் தர்க்கத்திற்கும் அடங்கிநிற்கிற சகலத்தையும் சுத்தலவுகீகர்களாகிய நாமஒத்துக்கொள்ளுகிறோம், கண்மூடியான சித்தாந்தங்களையும் கர்னபரம்பரையான கதைகளையும் நிராகரிக்கிறோம். ஜனசமூகப் பிரயோசனத்துக்கடுத்த விஷயங்களிலே கூடியவரையில் உள்நுழைந்து பாடுபடச் சித்தமாயிருக்கிறோம்; மடமை, மூடபக்தி யென்னும் அடிமைத்தனத்தினின்று மனிதனை மீட்பதாகிய உயர்ந்தபடிப்பிலே (முக்கியமாய் உண்மையான சாஸ்திரப்படிப்பிலே) நமது நோக்கத்தையும் அபேட்சையையும் நாட்டுகிறோம். துரைத்தனவிஷயத்திலோ, நாமும் அதை அபேட்சிக்கிறவர்களாகவே யிருக்கிறோம்; ஆனால், தங்கள் குடும்பங்களை யாளுவதற்கு இன்னும் சக்திபோதாதிருந்தும், சுயப்பிரதேச ஆளுகையை ஒருமிக்க அபேட்சித்து ஆர்ப்பாட்டஞ்செய்கிற உற்சாகமுள்ள பிரபுக்களோடு சேர்ந்தவர்களல்ல. நமது தேசத்தவர்களில் பெரும்பாலார் (தாராளமான கல்வித்தேர்ச்சி யென்கிற வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தின்படி) கல்வித்தேர்ச்சி அடைந்தால்மாத்திரமே அப்போது தான் சுயப்பிரதேச ஆளுகை சாத்தியப்படுமென்பது நமது அபிப்பிராயம்.

மானிடருக்கு நன்மைசெய்வதுதான் நமதுமதம்—"உலகமுழுதுமே எனதுதேசம், நன்மைசெய்வதே எனதுமதம்" என்று தாமஸ் பெயின் அவர்கள் கொண்டிருந்த சிறந்த கொள்கையின்படி நடக்க நாம் முயலுகின்றோம்.

நியாயப்பிரமாணம், கவனமான ஆராய்ச்சி, அனுபவமென்னும் இம்மூன்றையும்கொண்டு செய்கிற பரிசோதனையே நமது உரைகல். எதுவாவது மற்ற மதஸ்தர்களால் எவ்வளவு தெய்வீகமானதாக எண்ணப்பட்டிருந்தபோதிலும் நமக்கு நிமித்தமில்லை, மேற்படி மூன்றின் பரிசோதனைக்கு நிலைநிற்காத தெதையும் சபலப்படாமல் நிராகரித்துப்போடுகிறோம். ஆகையால், நமக்குக் "கடவுள்" என்பது "எனக்குத் தெரியாது" என்பதற்குப் பிரதிபதமாயிருக்கிறது.—

A. M.

கல்லுநாதன்.

ஐயா,

சைவசித்தாந்தமென்னுந் தலைப்பெயருடைய பத்திரிகையில், "நட்டகல்லில் நாதனில்லையோ" என்று எழுதியிருப்பதற்குத் தங்கள் பத்திரிகையில் நியாயமெடுத்துப்பேசியிருக்கிறது. ஆயினும், ஒரு மனுவு செய்துகொள்ளுகிறேன். நட்டகல்லில் நாதனில்லையோ? என்பதினால், குறட்டுக்கல் முறட்டுக்கல் மிதிகல் முதலிய சகல கல்லிலுந்தான் அந்த நாதனிருப்பன். அதுபற்றியே சில விரதங்களில் அம்மிகுழவியையும் பூசிக்கிறார்கள். அகண்டமா யெங்கும் நிறைந்துள்ள அந்த நாதனுக்கு மனிதனைப்போல, வாய் - கண் - மூக்கு - செவி - தலை - கை-கால் முதலிய அங்கங்க ளேற்படுமாகில், கண்டமாய்விடுகிறதே. எங்கும் நிறைந்துள்ள நாதன் என்னரூபமுடையவன்? கை கால் முதலிய ரூபமுள்ள நாதன் தன்னைப்போல மனிதனைச் சிருஷ்டித்தானோ, அல்லது மனிதன் தன்னைப்போலத் தனக்கொரு நாதனைச் சிருஷ்டித்துக்கொண்டானோ? உள்ளே நாதனிருக்கிற கல்லுக்கு அவயவங்களுண்டானதற்கு காரணன் கம்மியன்தானே. மிதிபடுகிற கல்லைப் பூசிக்கிறார்களோ! அம்மி குழவிகளும் ஒருவித உருவத்தை அனுசரித்தே பூசிக்கப்படுகின்றன. வெறுமையான எந்தக்கல்லையும் பூசியாமல், உருப்பட்டகல்லைப் பூசிப்பதினால், அந்தக்கல் நாதனாயிற்றேயல்லாமல், நாதன் கல்லாகவில்லை. அன்றியும், நாதனை ஆணுருவாகவும் பெண்ணுருவாகவும் ஆண்குறியாகவும் பெண்குறியாகவும் பல வுருவங்கள் சிலையில அமைக்கப்பட்டிருந்தபோதிலும், அச்சிலைகள் வெறுமையாய் விழுந்துகிடந்தால் அவற்றில் நாதனில்லையென்று, கும்பாபிஷேகம் சம்புரோட்சணைமுதலிய மூலமாய் அச்சிலைகளுக்குப் பிராணப் பிரதிஷ்டைசெய்து, பினபு பூசிக்கிறார்கள். (மந்திரத்தினால் பிராணனை வருவிக்கத்தக்க சக்தி யுண்டாயிருக்கும்போது, கம்மியன் சகாயமில்லாமல், மொத்தாகாரமான கல்லை மந்திரத்தினால் உருப்படுத்தக்கூடாதா?) இசனாலே மற்றக் கல்லுகளில் நாதனில்லையென்றும், அப்படிச் சிரேஷ்டப்பட்ட கல்லுதான் நாதனாயிற்றென்றும் நன்றாய் விளங்குகிறதுமன்றி, கல்லு நாதனல்ல, நாதன் கல்லென்றுசொல்லுகிறவர்கள் நினைப்பது ஒன்றும், சொல்லுவதொன்றும், செய்வது ஒன்றுமாயிருக்கிறது. பற்பலர்பற்பலவாய்த் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றுள் அதையதை சமயத்திற்கேற்றவாறு எடுத்துச்சொல்லுகிறார்களேயன்றி ஒன்றற்கொன்று முரணாயிருப்பதை எவ்வளவேனும் யோசிப்பதில்லை. யோசித்தால்மாத்திரமே கண்திறக்கும். நாதனென்று பொதுவாக ஒருபெயரைச் சொல்லிவிட்டதினால் சைவசித்தாந்தம் நிலைத்துவிட்டதோ? நாதனென்கிற ஒரு பொதுச்சொல்லை யனுசரிப்போமாகில் சித்தாந்தமும் ஒன்றாகத்தானேயிருக்கவேண்டும்? அப்படிக்கன்றி, சைவசித்தாந்தமென்பதினாலே, வைஷ்ணவமுதலிய வேறேசித்தாந்தங்களுண்டெனத் தானே யேற்படுகிறது. அந்த சித்தாந்தங்களுக்கு நாதன்யார்! நாதன் ஒருவனேயாகில் பலசித்தாந்தங்களேன்? பலசமயச்சின்னங்களேன்? பலசித்தாந்தங்களிலும் உண்மையான சித்தாந்தமெது? அருணாசலமுதலியார் வாதிக்கிறபடி சைவந்தான்போலும். சித்தாந்தங்கள் பலவாயினும், அவற்றில் விளங்கும் நாதன் ஒருவனே யென்போமாகில், ஒரு சிந்தாந்தக்காரர் மறுசித்தாந்தக்காரரை தூஷிப்பானேன்? சிவனைத் திருமால் ரிஷபமாய்த் தாங்கினானென்றும், கிருஷ்ணனை வீரபத்திரன் தோலையுரித்தானென்றும் சொல்லப்பட்டிருக்கிறதே; இதை வைஷ்ணவர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா? சிவன்யார்? கிருஷ்ணன்யார்! வீரபத்திரன்யார்! இவர்கள் யாவரும் ஒரேநாதனாயின், நாதனானவன் அவ்சரம் நேரிட்டபோது தன்னைத்தானே தாங்கிக்கொண்டானோ! தன்னைத்தானே தோலையுரித்துக்கொண்டானோ? "பாதியா யழுகிய கால்கையரோனும் – பழிதொழிலு மிழிகுலமும் படைததாரோனும், ஆதியா யரவணையா யென்பராகில் - அவரன்றோ யாம் வணங்குமடிகளாவார், சாதியா லொழுக்கத்தால்மிக்கோரோனும்- சதுமறையால் வேள்வியால் தக்கோரோனும், போதில்நான்முகன்பணியப் பள்ளிகொள்ளும் - பொன்னரங்கம்போற்றாதார் புலையர்தாமே." இதற்கு சைவர்கள் என்னசொல்லுவார்கள்? இவ்வாறு ஒன்றற்கொன்று விரோதமான விருத்தாந்தங்கள் அநேகமுண்டு. சமயிகள் தங்கள் சித்தாந்தங்கள் பலவற்றையும் ஆராய்ந்து, ஒருவழியாய் ஒரேசித்தாந்தத்தை ஸ்தாபித்து, நாதனொருவனே யென்றறிந்துகொண்டபிறகு, நாஸ்திகர்களுக்குக் கல்லிலாவது புல்லிலாவது மண்ணிலாவது மரத்திலாவது தங்கள் நாதனைக்காட்டுவார்களாகில் அவர்களுக்குப் பெருமையாயிருக்கும்.

கையொப்பக்காரன்.

தேவதைகளைச்செய்தல்.

"நிச்சயமாகவே மனிதன் முழுபயித்தியக்காரன்; ஒருபூச்சியை யுண்டுபண்ணமாட்டாதவன்; ஆயினும், டஜன்கணக்காய்த் தேவதைகளைச் செய்துகொண்டிருப்பான்," என்று தற்காலசரித்திரத்தில் மதசித்தாந்தத்தை நம்பாத முதல்புருஷராயிருந்த பெருந்தகைய 'மாண்டெயின்' என்பவர் எழுதியிருக்கிறார். அவர் அக்காலத்திலே வயது முதிர்ந்தவராயிருந்தும், ஒருவன் தன்னுடைய அண்டை அயலாரின் அபிப்பிராயத்துக்கு வேறுபட்ட அபிப்பிராயங்கொள்ளுவதற்காக அவனை உயிரோடு தீயிலிட்டு எரிப்பது நியாயமும் விவேகமுமான காரியமாவென்று அனுமானிக்கத் துணிந்ததினால் உலகத்தாரை பிரமிக்கச்செய்தார்.

வேதசிவாகம புராணாதிகளின் இயல்பு.

என்னும்மகுடத்தாற்பிறந்த

விகடம்.

ஐயா, யாழ்ப்பாணம் ஸ்ரீநாராயணபிள்ளையவர்களே! "நிகண்டுகற்று, இலக்கிய ஆராய்ச்சிசெய்து, இலக்கணநூல்களிலேபயின்று, அடிதொடைமுதலியசந்திகளைக் கூட்டியும், பிரித்தும் உணரவல்லவித்துவான்களுக்கேயன்றி யேனையோர்க்கு வேதசிவாகமபுராணாதிகள் சிறிதும் பயன்படாதிருக்கின்றது"

என்றுதாங்கள்கூறியுள்ளதைக் கூர்ந்துபார்க்கின் வித்துவான்களுக்குத்தான் வேதசிவாகமபுராணாதிகள் உரித்தென்றும், யேனையோரைப் பிரித்துள்ளதும ஸ்பஷ்டம். இக்கருத்தையாதாரமாகக்கோடற்குத்தாங்கள் மூலமாகியவேதத்திலேனும், சிவாகமத்திலேனும் ஓர்ஸ்லோகத்தைச்சாட்சியாக வெடுத்தோதவல்லீரேல், எம்போலியர்க்கும், தங்கள்போலியர்க்கும்சம்மதம் – இன்றேல் என்னமதமெனத்தங்கள்போன்ற வித்வசிரோமணிகள்தான் நவிலவல்லர்.

ஸ்ரீமான் பிள்ளையவர்களே! வேதாகமங்கள் சரியையாதிநான்கினையுமே கட்டாயங்கூறுகின்றதை நம்போலிக ளறிவரே; அன்றியும் சரியை கிரியை யோகம் ஆகியமூன்றும் ஞானத்தற்குச் சாதனமெனத்தாங்களு மறிவீர்களே. அந்தஞானமும் ஜநநமரணமற்ற நெறியை ஜீவகோடிகளறிந்து உய்யுமார்க்கமன்று! அங்ஙனமிருக்க, ஷை ஞானமார்க்கத்தைப்புகலும் வேதாகமங்களுக்கும், இலக்கிய விலக்கண வித்தைகளுக்கும் என்னசம்பந்தம்! ஞானமென்பது வித்தைக்கு வித்தையெனத் தங்கள் ஆசாரியர் போதிக்கவில்லையா! ஐயோபாபம்! எல்லாமுணர்த்து இதைமாத்திரம் போதிக்க மறந்தார் போலும்.

ஐயா, யாழ்ப்பாணப்பிள்ளையவர்களே! நிகண்டு, இலக்கிய இலக்கண முதலியன கற்பதனுல்தான் ஞானம்சித்திக்கும் எனுங்கட்சியைத்தாங்களும் ஷை மூன்று மில்லாமலே ஞானம் சித்திக்குமென நாமும் ஏற்றுச்சற்றேவாதிக்கப்புகலாமா! .

மேற்கூறிய கடைவினுவிற்குமாத்திரந் தாங்கள் தயைபுரிந்து விடையளிப்பீர்களானுல் வினுவழு, விடைவழு, தர்க்கவழு, நியாயவழு முதலியவழுக்களின்றி வாதத்தையாரம்பிக்க முயல்வோம்.

ஐயா, வேதசிவாகமபுராணவல்லபிள்ளையாரே! கல்வியிற்றேர்ந்தவித்வான்களுக்கே வேதசிவாகமபுராணாதிகள் விளங்கற்பாலனவாயின் வேதவைஷ்ணவாகமபுராணாதிகளின் மர்மங்களையுணர்வதற்குஉள்ள நிகண்டு, இலக்கியம், இலக்கணம்யாது! வேதாகமபுராணாதிகளெனப் பொதுப்படவெழுதித் தொலைக்காமல் வேதசிவாகமபுராணாதிகளென் றெழுதத் தூண்டியதென்னே! மதாபிமானமல்லவா! இத்தகைய அபிமானத்தடிப்பையுடைய நீர்தானு வேத நுட்பார்த்தத்தையுணர்ந்து போதமிகுந்து ஓதப்புறப்பட்டீர்! பளா, பளா!! நன்று, நன்று!!

சைவம், வைஷ்ணவம் என்கின்ற பேதத்தையுடைய நீர்தானு அபேதமாகிய ஞானத்தை யூட்டவல்லீர்! அல்லது நும்மைப்போன்றபேதத்தையுடைய சரியையாதிமூன்றையுமே யுணர்த்தத் துவஜம்பூண்டீரா!

ஐயா, இலக்கிய இலக்கணவல்லபிள்ளையாரே! நும் ஆர்ட்டிகில், நான்காம்வரியின் ஈற்றில் பயன்படாதிருக்கின்றதுஎன்று ஏகவசனமாகமுடித்த வினைமுற்றிற்கு எழுவாயெது? அன்றியும் முதல்பாராவின் ஈற்றில் இருக்கின்றனஎன்று பகுவசனமாக முடித்த முற்றுவினையின் கர்த்தாயாது! ஷை இரண்டினையும் நீர் கவனித்துப்பார்ப்பீரானுல் நும்முடைய இலக்கிய இலக்கணசாமார்த்தியம் நும்மையேமலைக்கும்படி செய்யும். இஃது ஆனைக்கும் அடிசறுக்கும்போலும். பிள்ளையாரே!

நிறைகுடந்தளம்புமா! அரைகுடந்தளம்புமா?

கிருஷ்ணகிரி

உண்மைவிரும்பி.

மெய்யறிவு.

க-ம் பாகம்.

(134-வது பக்கத்தொடர்ச்சி.)

(பிரமோத்திரகாண்டம் கன்மாடபாதன் சரித்திரம்) வசிஷ்டர் முதலிய ரிஷிகளும் மாமிசம் புசித்துவந்ததாகவும், மாமிசமும் மதுவும பிதிருக்குப் பிரீதியானவையாகவும், அவற்றிற்குப் பிரத்தியாம்நியாயமாக இக்காலத்தில்-உழுந்தும் தேனும் படைக்கப்படுகிறதாகவும் தெரியவருகிறது. மாமிசம் புசிப்பதற்குப் பூர்வகா[illegible] சாஸ்திரமிருந்தது; புசிக்கக்கூடாதென்பதற்கு இக்காலத்தில் சாஸ்திர மிருக்கிறது. இதனுலே ஒவ்வோர் காலத்தில் ஒவ்வொரு ஏற்பாடிருந்ததாகத் தெரியவருகிறபடியால், இனியொரு நூதனமான ஏற்பாடுசெய்தாலும் செய்துகொள்ளலாம், தற்கால ஏற்பாட்டை ஒழித்து பூர்வீக ஏற்பாட்டை அனுசரித்தாலும் அனுசரிக்கலாம. ஆகையால் இப்படிப்பட்ட சாஸ்திரங்களை மேற்கோளாகக்கொள்ளாமல், உள்ள சங்கதிகளை யோசித்து உண்மையைக் கண்டறிவதே எனதுபட்சம்.

இப்போது நமது ஆராய்ச்சியிலிருக்கிற விஷயத்திற்குத்திரும்பி அதை யின்னும் ஆலோசிப்போம். மயிலிறகு, ஆமையோடு, கஸ்தூரி, கோரோசனை முதலிய சில புலால் பதார்த்தங்களை உபயோகித்துவருகிறார்களே, அது தகுமாவென்றால்; ஆகாரமாகவல்ல, அவிழ்தமாக உபயோகிப்பதற்குத் தோஷமில்லையென்பார்கள். இது எவ்வளவு முறைமையோ வாசிப்பவர்களே யோசிக்க வேண்டும். தேகசுகம் மாறியிருப்பதைச் சீர்ப்படுத்தி பழையபடி சுகத்தைக் காத்துக்கொள்ளுவதற்காகவே இந்த அவிழ்தப்பிரயோகம். நாம் சாப்பிடுகிறதும் சுகத்திற்காகத்தான்; ஆகையால் சாப்பிடுகிற சாப்பாடும் மருந்தேயாகும். (நாயனுர் குறள்-அதி-கூடு, மருந்து.) சுகம் மாறினபிறகு அதைச்சீர்ப்படுத்திக்கொள்ள பின்புத்தியாக நீங்கள் புலால் புசித்தால், முன்னிருக்கிற சுகத்தைக் காத்துக்கொள்ளவும், அதை விர்த்திசெய்யவும் முன்புத்தியாக நாங்கள் புலால புசிக்கிறேமென்று புலால் தின்பவர்கள் சொன்னுல், சைவர்கள் என்ன உத்தரஞ் சொல்லுவார்களோ?

புலைய னொருவன் ஒருசைவனுடைய ஓர் விரல் முனையைத் தொட்டால், அந்தவிரல் முழுமையையும் கழுவினுலும் தீட்டுப்போகாதென்று, தரித்திருந்த வஸ்திரங்களை யெல்லாம் தோய்த்தும், ஸ்நானஞ்செய்தும், தேகமுழுவதும் சுத்திசெய்கிறார்கள். இதினுலே தீட்டென்பது முழுதும் வியாபிக்கிறதாகத் தெரியவருகிறது. அப்படியிருக்க, ஒருகலம் இருகலம் தண்ணீரைப்புலையன் தொட்டமாத்திரத்தில் தீட்டாய்விடுகிறதென்பதற்கும், ஒருகுளத்தில் அநேக புலையர்கள் குளித்து எச்சிலுமிழ்ந்து என்ன அக்கிரமம் செய்தபோதிலும் தீட்டுப்படாதென்பதற்கும் உண்மையானகாரணம் அப்படிச்சொல்லுகிறவர்களுக்கே தெரியவேண்டும்.

யான் மேலே கேட்டுக்கொண்டபடி நடுவு நிலைமையாக புலான் மறுத்தலைப்பற்றி சமாதானம் சொல்லப்புகுவோர், இதின்பின்னுல் இரண்டாவது விஷயமாக வரும் 'கொலைமறுத்தலையும்' வாசித்தபிறகு சொல்லத்துணிவார்களென்று கோருகின்றனன்.

உ-வது கொலைமறுத்தல்.

வெட்டுவது, அறுப்பது முதலிய கொடியசெய்கையால் எதற்கேனும் உபத்திரவ முண்டுபண்ணி அதின் உயிரைப்போக்குவதே கொலையாகும். அப்படிக்கொல்லாதிருப்பதே கொலைமறுத்தல். கொலைமறுத்தலெனப்பொதுப்படச்சொன்னமையால் சிலவற்றைக்கொல்லலாகாதென்றும் சிலவற்றைக்கொல்லலாமென்றும் பொருள்படாது. அதனுல் கொலைசெய்வதே கூடாதென்போமாகில், முதலாவது புலான்மறுத்தலில் கண்டிருககிறபடி ஜலத்தில் கண்ணுக்குப் புலப்படாத அற்ப ஜந்துக்களை ஜலபானத்தோடுகூட விழுங்கும்படி நேரிடுவதால், புலையையும் கொலையையும் பரிஷ்காரமாய்த் தவிர்ப்பது எப்படி? பேன், மூட்டை, தேள், பாம்பு, இப்படிப்பட்ட உபத்திரவஞ்செய்யும் ஜந்துக்களை ஒழிப்பது எப்படி? பாம்புக்குப் பால்வார்த்தும் தேளுக்குத் தேன்விட்டும் வளர்க்கிறார்களோ? தாங்கள் புலால் புசிப்பதில்லை, கொலைபுரிவதில்லையெனத் தங்களைப் பூஷித்தும், அப்பாதகஞ்செய்கிறார்களென்று அநேகரைத் தூஷித்துந்திரிகிறவர்கள் அப்படிப்பட்ட ஜந்துக்களை என்னசெய்கிறார்களோ அது அவர்களுக்கும் மற்றவர்

களுக்கும் தெரிந்தேயிருக்கிறது. அவர்கள் அவற்றைக்கொல்லாமல் அப்புறப்படுத்திவிடுகிறார்களென்போமானால், அது அது தன்தன் இடத்தைவிட்டுப் பெயர்ந்தால் ஜீவித்திருப்பது கஷ்டம். நீரிலிருப்பது தரையில் ஜீவியாது, தரையிலிருப்பது நீரில ஜீவியாது; மற்றவைகளையும் அப்படியே யோசித்து அறிந்துகொள்க. மேலே 'அப்புறப்படுத்திவிடுகிறார்கள்' என்கிற வாக்கியத்தைநான்எழுதினபோது ஒருயோகியினுடையபாடல் என்னுடையஞாபகத்திற்குவந்தது; அதாவது:— 'தூங்காமற்றூங்கிசுகம்பெறுவதெக்காலம்.' இந்தவாசகியநடையாக 'கொல்லாமற் கொன்று புண்ணியம்பெறுவதெக்காலம்' என, தாங்களாய்க் கொல்லாமல் ஓரிடத்திலிருப்பதை எடுத்து மற்றோரிடத்தி லெறிந்துவிட்டு, அதைத்தானாய்ச்சாகும்படிசெய்வது தங்களுக்குச் சற்குணமென்று நினைத்திருக்கிறார்களாக்கும். அப்படிப்பட்ட ஜந்துக்களைச் சாகும்படி செய்யாமல், பிழைத்துப்போகும்படி அண்டை அயல்வீடுகளில் போட்டுவிடுகிறார்கள், துரத்தி விடுகிறார்களென்றால், முள்ளைப்பிடுங்கிப்போட்டு வசியை அடித்துக்கொண்டதுபோலாம். அண்டை அயலார் கெட்டுப்போனால் போகட்டும், தாங்களும் தங்கள்குடும்பத்தாரும் சுகமடைந்தாற் போதுமென்பது எவ்வளவு ஜீவகாருணியம்!! மனிதனுடைய தலைமயிரிலுள்ள பேனை நாயினுடம்பிலுள்ள மயிரில் விட்டாலும அது பிழையாது. கொலைமறுத்தல்விஷயம் கொஞ்சம் ஆராய்ச்சிசெய்தால் யாவரும் சுலபமாய் நிர்ணயிக்கத்தக்கதாகையால், இதைப்பற்றிவிசேஷமாய்ச் சொல்ல எனக்கு இஷ்டமில்லை. ஆயினும், முக்கியமானதாக எனக்குத் தோற்றுகிற ஒரு சங்கதியைமாத்திரம் எடுத்துக்காட்டி இதைமுடித்துப்போடுகிறேன்.

(இன்னும்வரும்)

கைத்தொழிலைப்பற்றி.

ஒவ்வொருவரும் தாம்தாம் வாங்கிக்கொண்ட வேலைக்குத்தக்கவேதனம்கொடுக்கப் பிரீதியுள்ளவர்களாயிருத்தல் வேண்டும். தாம் பெற்றுக்கொண்ட பொருளுக்குத்தக்க விலையை மனப்பூர்வமாய் கொடுத்தல் வேண்டும். இரண்டுரூபா பெறுமானவேலையை ஒரு ரூபாவுக்குப் பெற விரும்புபவன் யோக்கியன் அல்லன். தொழிலாளிகளுடைய தேகம் தாங்கக்கூடாத பளுவான வேலையை விதிப்பவன் எவனோ அவனுக்கு இரக்கமென்பது எள்ளளவுங் கிடையாது. உலகத்திலே, தொழிற்பிரயாசை நாளுக்குநாள் குறைதலேவேண்டும். தொழிலாளிகளுக்குப் பிரயாசை குறையாதிருக்குமாயின் உலகத்திலே நவநவமாய்க் கண்டுபிடிக்கப்படும் யந்திரசூக்ஷிகளால் யாதுபயன்! கைத்தொழிலாளிகள் உலகத்தை ஐஸ்வரியத்தால் நிறைத்துவிட்டுத் தாங்கள் நித்திய தரித்திரத்தை யனுபவிடபதேன்? வேலையின் பிரயாசையைக் குறைக்கத்தக்க ஒவ்வொரு யந்திரமும் உலகத்தக்கல்லவோ அனுகூலமாதல்வேண்டும். ஒவ்வொருவரும் வரவர வேலையின் காலஅளவைக் குறைக்கவல்லவோ பார்க்கவேண்டும். மிதமானஉழைப்பு எடுத்துக்கொள்வதே சந்தோஷ ஆஸ்பிதம். பிள்ளையின் பொருட்டும் பெண்சாதியின்பொருட்டும் தன்னை நத்தியவர்களின்பொருட்டும் உழைப்பெடுத்துக்கொண்டு அதனால் அவர்கள் சௌக்கியமடைவார்களானால் அதுவே அவ்வுழைப்பாளிக்குப் பரமசுகம். காலை நாலுமணிக்கு எழுந்து இராத்திரி பத்துமணிபரியந்தம் ஓச்சலொழிவில்லாமல் ஊழியனைப்போல் உழைத்தும் தனக்கும் தன் பெண்டுபிள்ளைகளுக்கும் கட்டத்துணிக்கும் குடிக்கக்கஞ்சிக்கும் எட்டிஎட்டாமற்போய்ப் பாழுங்கட்டையைப் பதினொரு நாழிகைக்குமேல் படுக்கையிற் கிடத்துவது உயிர்வாழ்க்கையன்று, உயிர்மாழ்கையே.இதுவேசெத்தும் சாவாமற்கிடக்கை.

தொழில்செய்யுங்காலங்களைக் குறைத்தேவருதல்வேண்டும் இவ்வளவு விசேஷ அதிசயத்தைத் தரத்தக்க இந்த பத்தொன்பதாவது நூற்றாண்டின் யந்திரசூக்ஷியின் அபிவிர்த்திக்கு தொழிலாளிக்கு வயிறார உண்டியும் உடல்மறைய வஸ்திரமுமட்டுமே போதாது, அவன் சுகியாகவும் இருத்தல்வேண்டும்.

என்னைத் தொழிலுக்கேற்ற ஊதியம் என்னவென்று கேட்டால், அவன் ஊதியம் அவன் தேகதிடத்தோடிருக்கும் காலங்களிலெல்லாம் உண்டு மிகுதிப்பட்டது திடம்தப்பியகாலங்களிலும் வயிறார உண்டு உடுத்து உயிர்போகுமளவும்பேதியாததாயிருத்தல் வேண்டுமென்பேன். இப்படிக் கைத்தொழிலாளிகள் ஜீவனத்தைக்கெடுக்காமல் அவர்கள் உழைப்பை நாளுக்குநாள் குறைக்கவல்ல யந்திர சூக்ஷிகளைக் கண்டுபிடிப்போர் எல்லாருக்கும் நாம் கைலாகுகொடுப்போம். எந்த அரசில் கைத்தொழிலாளிகள் தேகங் கடுக்க உழைத்து வயிறுகடுக்க எட்டும் எட்டாமல் உண்ணப்பெறுகிறார்களோ அதுவே கொடுங்கோலரசு.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவிதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஓரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே இரண்டணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றிபெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம்.

தத்துவவிவேசினி.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிராஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்கிரிடேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 36] MADRAS:—SUNDAY SEPTEMBER, 5, 286. A. S. [Monthly, 4 Annas.

சோல்லுகசோல்லைப்பிறிதோர்சோலச்சோல்லை
வேல்லுஞ்சோலின்மையறிந்து.—குறள்.

137

உபநிஷத்துச்சந்தேகம்.

—o—

ஆகஸ்டுமீ 15வ தத்துவவிவேசினியில் "பிராமணனென்பவன் யாவன்" என்பதைப்பற்றி, வஜ்ரசூச்சிகோபனிஷத்தில், க - வது ஜீவன், உ - வது தேகம், ௩ - வது வருணம், ச - வது ஞானம் ரு - வது கர்மம், சு - வது தர்மம், இவைகாரணமாக ஒருவனுக்கு பிராமணத்துவம் வருவதில்லையென்று சில நியாயங்களாற் கண்டித்து, கடைசியில் பகவானை உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பிரத்தியட்சத்தில் கண்டுகொண்டவனே பிராமணனென்று சொல்லியிருப்பதாகக் கண்டிருக்கிற சங்கதிகளை மேலாக வாசிக்கும்போது சரியானதுபோலத்தோற்றினபோதிலும், ஊன்றி வாசிக்கும்போது, வஜ்ரசூச்சிக்குப் பதவுரையெழுதிய ராயரவர்களுக்குப் பிராமணத்துவத்தைக் குறித்த உலகவழக்கச் சொல்லைப்பற்றிச் சந்தேகமுண்டானதுபோல, அந்த உபநிஷத்தைப்பற்றி எனக்குச் சில சந்தேகந்தோன்றின.

பிர்மத்தைக் கண்டவன் பிராமணனென்பது—'பிர்மக்கியானந்து பிராம்ஹணா' என்கிற வாக்கியத்தின்படி பிர்மத்தின் தன்மையை யறிந்தவன் பிராமணனென்பதற்கு மிஞ்சியிருக்கிறது. பிர்மத்தைக் காண்பதற்கு அதின் ஸ்வரூபமென்ன? பிர்மம் கண்டமாயிருந்தால்மாத்திரம் காணக்கூடுமேயல்லாது அகண்டமானால் எப்படி காணக்கூடும்? எந்த அம்சத்தைத்தான் காணமாட்டுவான்? கண்டதாக நடிக்கிறவன் பிறருக்குக் காட்டவுமாட்டான், தன்னைப்போல (பயித்தியக்காரன்) ஆனாற்றான் காணலாமென்பான். இராமலிங்கபிள்ளை ஒருவித பயித்தியத்தினாலும், சச்சுதானந்தம்பிள்ளை மமதையினாலும் மற்றுஞ்சிலர் மனப்பிரமையினாலும் பிரமத்தைக்கண்டதாக நடித்து மரித்தது மூக்கறையன்கதைபோ லிருக்கிறது. இராமலிங்கபிள்ளை தன்னுடைய சில சீஷர்களுக்கு - ந - ம - சி - வா - ய - என்னும் இப்பஞ்சாட்சரங்கள், சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, க்ரியாசத்தி என ஐந்து சத்திகளின் குறியென்றும், முறையே உயிர்க்கொளியாக நிற்பதும், பிராணன் முதலிய வாயுவாக நிற்பதும், பஞ்சபூதமாகநிற்பதும், ஐம்பொறி யுணர்ச்சியாக நிற்பதும், மற்றை வினைத்துணையாக நிற்பதுமாகிய அந்தப் பஞ்சசத்திகளின் வசப்பட்டதே பிரபஞ்சமாதலால் அந்தப் பஞ்சாட்சரத்தை எப்போதும் மறக்கலாகாதென்று உபதேசித்தார். அட்சரங்களை யேற்படுத்தினவர் யாரோ, பாஷையுண்டானதெப்படியோ அந்தச் சங்கதிகளைப் பின்னால் எழுதுகிறேன். சிலநாளுக்குமுன்னே திருவல்லிக்கேணியில் ஒரு ஞானியார் தன் சீஷர்களோடும் சிநேகிதர்களோடும் ஞானமயச்சுவார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில் வெயிலினால் தூக்கமயக்க மேலிட்டுக் குறட்டைவாங்கிச் சற்றுத்தூங்கி விழித்துக்கொண்டபிறகு, அங்கிருந்தவர்கள் சுவாமிக்கு இளைப்பாயிருக்கிறதுபோலக் காணுகிறதென்று உபசாரவார்த்தைசொன்னார்கள்; அதற்கவர் நான் தூங்கினதாக நினைத்துக்கொண்டீர்களோ? என் மனஞ் சென்றிருந்தவிடத்தை நீங்கள் அறிந்திலரொன்று சொன்னாராம். ஞானிகளின் தன்மை யிப்படித்தா னிருக்கிறது. அவர் அப்படிச் சொன்னபோது, 'வஞ்சமனத்தான்படிற்றொழுக்கம் பூதங்க, ளைந்துமகத்தேநகும்' என்ற குறளின்படிக்குத்தான் அவர் மனமிருந்திருக்கவேண்டும். கொஞ்சகாலம் ஒரு ஞானியாருடைய திருக்கூட்டத்தில் யானு மொருவனாயிருந்தேன். என்னையும் சில பயித்தியக்காரர் பூசித்துவணங்கினார்கள். அப்போதே எனக்குள் புன்னகைதான். நிஷ்டைக்குப் பல படிகளுண்டு. முதற்படியாவது— சீஷனுக்கு அபிஷேகமாகி, ஆசானிடத்தில் அவன் உபதேசம்பெற்றவுடனே கைகளின் விரல்களால் கண்களையும் காதுகளையும் நாசியையும் மூடி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டிருக்கையில் நெற்றிக்குநேராக சுடரொளிதோன்றி அது வரவர அதிகரித்துக் கடைசியில் வட்டமாகக் காணுகிறது; இதுவே பரஞ்சோதி. காதுகளை அடைத்துக்கொள்வதினாலே அணுத்திரளொலி சேரச்சேர ஒரு ங்காரசத்த முண்டாகிறது; இதுவே நாதவிந்து. இவ்வாறு கொஞ்சகாலம வழக்கப்படுத்தியபின்பு, உ - வதுபடி—கைகளின் உதவியில்லாமல் கண்களை மூடிக்கொண்டு நிட்டைகூடி வழக்கப்படி சோதியையும் நாதவிந்தையும் பாவித்துணர்வது. ௩ - வதுபடி—கண்களைத் திறந்துகொண்டு நாசிமுனைமேல் நாட்டம்வைத்துக் கவனத்தைச் செலுத்தி அவ்வாறே பாவித் துணர்வது. ச - வதுபடி—நாவி னுனியை அண்ணத்தின் மேல்துவாரத்திற் செலுத்திக் கொஞ்ச கொஞ்சமாய் அடைத்துக்கொண்டே வந்து சுவாச பந்தனஞ் செய்ய வழக்கப்படுத்துவது. இவ்வாறு என்னசெய்தபோதிலும் இவற்றாற் காணும் பயனென்னை! எதையும் மனோபாவத்தினாலே காணுவதுதான். இவற்றை அனுஷ்டித்தாலும் அனுஷ்டியாவிட்டாலும், ஸ்திரீ யின்பத்தை நீக்கி யிருப்பானாயின், கட்டுமஸ்தான சரீரமுடையவனாய்ப் பின்னுங் கொஞ்சகாலம் அதிகமாய்ச் சீவித்திருப்பன். இவ்வளவேயல்லாமல் வேறொன்று மிராது. சோதியும் நாதவிந்தும் தோன்றுவதற்கு ஆசா னுபதேச மல்லாமல் வேறே காரண மிருக்கிறதென்று நிச்சயிக்கக்கூடும். அதை (Science) சாஸ்திரவழியா யல்லாமல் வேறுவிதமா யறியக்கூடாதவர்களும் மேலே நான் சொன்னபடி செய்வார்களாகில் அப்படியே காணுவார்கள். எண்ணையிட்டுக்கொள்ளும்போதும் கண்ணைமூடி அழுத்தும்போதும் பிரகாசந் தோன்றுவதை கவனித்தவர்கள் சாட்சி சொல்லுவார்கள்; ஆதலால் அப்படி தோன்றுவதற்கு சுபாவத்திலேயே வேறுகாரண மிருக்கிறதென்று யாவரும் சுலபமாய் நிச்சயிப்பார்கள். க-வது, ஜீவன் பிராமண னல்லவென்றும், உ-வது, தேகம் பிராமணனல்லவென்றும் சொல்லியிருக்கிறது. பிர்மத்தைக் கண்டவன் பிராமண னென்பவன் மனிதன்தானே. அப்போது கண்டது எது? ஜீவனா, தேகமா? தேகமில்லாது ஜீவனும் ஜீவனில்லாது தேகமும் யாதொருகாரியத்தையும் செய்யமாட்டாது. முக்கியமாய் தேகமில்லாது ஜீவனிருப்பதே தெரியாது. ஜீவனும் தேகமும் ஒன்றுபட்டிருந்தே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். ஆதலால் ஜீவனும் தேகமும் ஒன்றுபட்டிருந்து பிர்மத்தைக் காணுகிற பதார்த்தத்துக்கே பிராமணத்துவம் வரவேண்டும். அந்தப் பதார்த்தம் மனிதனே. அப்போது எல்லா மனிதரும் ஒரேஜாதியே. அப்படியிருக்க, அந்த உபநிஷத்தில் பிராமணவருணந்தவிர மற்ற வருணங்கள் அடிக்கடி எடுத்தாளப்பட்டன. இந்த வருணங்கள் எவ்வாறு எவ்விடத்துண்டாயின? தொழிலினாலும் குணத்தினாலும் வரும் பெயராயிருந்தால், அதைச் சிறப்புப் பெயராகக் கொள்ளவேண்டியதேயல்லாமல், எந்தவகையினாலும் ருசுவுக்கு வெளிப்படாமல் மயக்கத்தில் மறைந்திருக்கிற வெற்றுச்சொல்லாகிய ஜாதிப்பெயராகக்கொள்வது எவ்வளவேனுந் தகாது; தகுதியெனக்கொள்வோமாகில் முன்னே அரசராயிருந்தும் இப்போதும் அப்படியிருக்கிற துருக்கர் முதலானவர்களை க்ஷத்திரிய ஜாதியாராகக் கொள்ளவேண்டிவரும். கபிலர்என்பவர் ஒருபிராமணனால் வளர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளை. அவருக்கு உபநயனஞ் செய்ய எத்தனப்பட்டபோது மற்றப் பிராமணர்கள் ஆட்சேபித்ததினால் தன் காரியம் நிறைவேறாமைபற்றி, ஜாதிபேதமில்லையென்பதைக்காட்ட ஒருஅகவல் செய்திருக்கிறார். அதுபோலவே, அந்த உபநிஷத்துசெய்தவர் சந்நியாசியா யிருந்திருக்கவேண்டும். அவர் தான் பிர்மத்தைக்கண்டதாக நடித்து, தனக்குப் பெருமையும் மற்றப் பிராமணர்களுக்குச் சிறுமையும் கற்பிக்கவேண்டி பொதுப்படக் கூறியதுபோல அந்த உபநிஷத்தைச் செய்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

உபநிஷத்தில் சில ருஷிகள் பிறந்தஸ்தானத்தைச் சொல்லியிருக்கிறதேயல்லாமல், பீஜத்தைச்சொல்லவில்லை. ஒருருஷி பெண்மானைக்கண்டு மோகித்து ஆண்மான்வடிவெடுத்துப்புணர ருஷியசுரங்கன் பிறந்ததாகச் சிலர்சொல்லுகிறார்கள். கௌசிகன் தர்ப்பையினாற்பிறந்ததாகச் சொல்லியிருக்கிறது; குசமென்பது தர்ப்பை: (குசசம்பந்தம்) கௌசிகனென எழுதியிருக்கிறது: அதுசரியல்லவாம். (ராமாயணம், பாலகாண்டம.) ಕುಶೋನಾಮಮಹೀಪತಿ: குசோநாமமஹீபதி: என்னும் வாக்கியத்தின்படிக் குசனென்னும் பெயரையுடைய ராசனொருவன்; அவனுக்குக் குசாம்பன், குசநாபன் என இரண்டு குமாரர்கள்; குசநாபனுடையபிள்ளை காதி, இவன்பிள்ளை விஸ்வாமித்திரன். 'தசரதன் புத்திரன் தாசரதி' என்றாற்போல, குசனுடைய சந்ததி கௌசிகனென்னும் பெயர் அந்த சந்ததியானாகிய விஸ்வாமித்திரனுக்கும் வந்தது. [ஜாம்பூகன் கதைதெரியவில்லை] வால்மீகி ஆதியில் ஒருவேடன், அவன் உபதேசம்பெற்று நெடுநாள் ஒருமரத்தடியில் நிஷ்டைகூடியிருக்கையில் புற்றுமேலிட்டு மூடிக்கொள்ள, பிறகு புற்றிலிருந்து வெளிப்பட்டவனாதலால், புற்றிலிருந்து பிறந்தவனாகமாட்டான். பராசரர் செம்படத்தியைச் சேர்ந்து பிறந்தவர் வியாசர். [கௌதமன்சங்கதி தெரியவில்லை]. பிர்ம்மா ஊர்வசியென்னுந் தேவதாசியைச்சேர வசிஷ்டர்பிறந்தார். மித்திரன், வருணன் என்னுந்தேவர்கள் எதோஒருகாரணத்தினால் அதிவிரகங்கொண்டு ஸ்கலிதமான இந்திரியத்தை வீண்போகவொட்டாமல் ஒருகுடத்திற்பிடித்துவைக்க, அதிலிருந்து பிறந்தவர் அகஸ்தியர். இப்பிறப்புகளையும் இப்படிப்பட்ட மற்றபிறப்புகளையும்பற்றிச் சாவகாசமாய்ச் சர்ச்சைசெய்கிறேன்.

மேற்படி பத்திரிகையில் மார்க்கண்டேயர் கதையொன்றிருக்கிறது—ஒருநாள் வழக்கப்படி பூஜானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அவர் பிராமண நமஸ்காரத்துச்குப் புறப்பட்டபோது, ஸ்வாமி அவருடைய பக்திவிசுவாசத்தைப் பரிசோதிக்கும்பொருட்டுபிராமணன் தென்படாமற்செய்தாராம். (ஹிந்துதேவர்களுக்குத் தங்கள் சர்வசக்தியையோர்பக்கத்தில் ஒளித்துவிட்டு, அற்பமனிதனைப்பரிசோதிப்பதே பெரியவேலையாயிருக்கிறது.) மார்க்கண்டேயர் ஆசாரத்துடனிருக்கையில் பறைச்சியோடுபேசுவரோ? அன்றியும் அவள் மார்பைக் கழுவினபோது வியர்வைக் கசிவைக் கழுவினதாக எண்ணிக்கொள்ளக்கூடாதோ? அந்தப்பூர்வகாலம் மஹாபரிசுத்தமானகாலமென்று சொல்லப்படுவதால், ஸ்திரீஜாதியோடு நாணமில்லாமல் ஸ்தன்னியசங்கதியைப்பற்றிப் பேசியிருப்பரோ? இக்காலத்தில் புருஷன்யாராவது ஒருஸ்திரீயை அப்படிக்கேட்பரா? கேட்டாலும் அவள் சும்மாயிருப்பளா? இந்தச்சங்கதிகளையெல்லாம் ஆலோசிக்கும்போது, புராணக்காரர் தான் கொண்டகருத்தைமுடித்துக்காட்டத் திருஷ்டாந்தமாக, ஸ்வாமியையும்பற்றுமேயென்கிற முன்பின்யோசனையில்லாமல் அப்படிப்பட்ட கதைகளைக்கற்பித்திருக்க வேண்டும். அப்படிக்கன்றி, மெய்க்கதைகளாகநம்பவேண்டுமென்றால், தெய்வீகமும் பைசாசத்துவமும் கலப்புற்றிருக்கிற இக்கதைகளைநம்புவதுபோல், அப்படிப்பட்டகதைகளடங்கிய அரேபியன்நைட்டை யேன் நம்பக்கூடாது! இதைப்பற்றியொருவரைக் கேட்டபோது, அவை கட்டுக்கதைகளென்றுமுதலிலேதானே சொல்லியிருக்கிறதேயென்றார். அப்படிச்சொல்லாதிருக்குமாயின, அவர்நம்புவார்போலும். அக்கதைகள் ஆதியில் தருக்கபாஷையிலெழுதினதினால் கெட்டுப்போயினவேயல்லாமல், இத்தேசபாஷையிலெழுதியிருக்குமாயின் நம்மவர்கள் நம்பவேநம்புவார்கள்.

A. M.

சமயத்தூவருக்குஅழுக்காறுண்டா.

ஐயா,

தங்கள்பத்திரிகையில் "அழுக்காறுசந்தேகம்" என்னுமகுடவாயிலாக, அ - பூ - மு. என்பவர் சந்தேகங் கேட்டிருந்த கடிதத்தைக் கண்ணுற்று, ஞாயிற்றுக்கிழமைநாஸ்திகதண்டனமண்டபபிரசங்கத்திற்கு யானுஞ்சென்று கண்ணுற்றுக் காதுற்றவழி, பகலோன்பட்டு மாலைதொட்டு இருட்டுவந்துநின்றபோது, மீன்கொழுப்புவர்த்தி முன்னிலையில், கேள்விக்கு விடையின்றி, பொருந்தாத நியாயத்தைப் புகலவும்; கேள்விகேட்டவரும் மற்றியாவரும் மவுனமாய்ச்சென்றனர். அதை முன்னிட்டுக்கடாவ நேர்ந்தது.

ஐயா, ஸ்ரீ சிவஞானச்செல்வராகிய தண்டலம் - பாலசுந்தரமுதலியாரவர்களே, அடியில்வருவனவற்றைச் சிந்தித்து, வருமாதிவாரப்பிரசங்கத்தில் இவற்றிற்குத் தூஷணையின்றி பதில் வேண்டுகின்றனன்.

பெரியபுராணம்,—திருநாவுக்கரசு நாயனார் சரித்திரத்தில், உஎரு, உஎசு வது பாட்டுகளைச் சபையோருக்குப் படித்துக்காட்டி வியாக்கியானஞ்செய்தால் விளங்கும் திருமறைக்காடு என்பதை வேதம்பூசித்த தலமென்பதால், வேதத்திற்குக் கண், கால், கை, முதலியன வமைந்த மனிதவுருவாவது வேறெந்த ஜீவனுருவாவதுண்டா?

நாவுக்கரசரும்சம்பந்தரும் திருவிழிமிழலையிலிருக்கும்போது பஞ்சம்நேர்ந்ததனால், தமக்குத்தந்தகாசை வட்டமில்லாக்காசாகத்தரும்படி "வாசிதீரவே காசுநல்குவீர், மாசின்மிழலையீரேசவில்லையே" எனச் சம்பந்தர்பதிகமோதியதால், வாசிதீர்த்து அப்பர்காசுபோலத் தராவிடில் அந்தப்பாடலின்படி தம் வாயில் வந்தபடி ஏசுவோமென்று வற்புறுத்திச் சொன்னதாக ஏற்படவில்லையா? அது அழுக்காறன்றோ? 'அழுக்காறவா வெகுளி யின்னாச்சொல் நான்கும், இழுக்காவியன்றதறம்;' 'கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றம், உடுப்பதூஉம் உண்பதூஉமின்றிக்கெடும்.' என்னும் நாயனார் குறளின்படி, அழுக்காறற்றவர்களாயின், அவ்விருவரு மிருந்தவிடத்தில் பஞ்சம்வருவானேன்? பஞ்சமென்கிறசொல் இவர்கள் காதில் அடிபடலாமா? உணவின்றிப்பசித்திருக்கப்போம். 'தொல்லுலகில், நல்லாரொருவருளரேல் அவர்பொருட், டெல்லார்க்கும் பெய்யுமழை.' என நமது மூதாட்டியுரைத்த மூதுரைப்படியே, இச்சிவனடியார்களிருந்த ஊரைச்சுற்றிலும் மழைபெய்யாததால் நேர்ந்த கருப்பா! சோம்பல்மிகுதியால் நேர்ந்த கருப்பா? அப்பர்சுவாமிகளுக்காவது சம்பந்தசுவாமிகளுக்காவது பின்சந்ததியுண்டா? இவைகளுக்குப் பொருந்திய பதில்வேண்டும்.

சந்தேகி.

மெய்யறிவு.

க - ம் பாகம்.

(140-வது பக்கத்தொடர்ச்சி.)

இந்துமதப்படி மறுபிறப்பு உண்டல்லவா? (நாயனார்குறள்) "எழுபிறப்புந்தீயவைதீண்டா" எழுபிறப்பாவன - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம். (திருவாசகம்) "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅநின்ற வித்தாவர சங்கமத்து, ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்." இதனால் ஆத்துமா - வினைக்குத்தக்கபடி மாறிமாறிப் பற்பல ஜனனமெடுக்கிறதாகத் தெரியவருகிறது. அதாவது - ஓர்காலத்தில்மனிதனாய்ப் பிறந்திறந்தவனது ஆத்துமா- புல்லாய்ப்பிறந்து, அதுநீங்க, பாம்பாய்ப்பிறந்து, மறுபடிமனிதனாய்ப்பிறந்து, பின்பு மரமோ, மாடோ, தேவனோ இவ்விதமாய் முன்பிறந்த பிறப்பே பிறந்தாயினும் வேறுபிறப்பு பிறந்தாயினும், பிறப்பு மாறிமாறிவருவதுதான். பிறப்புமாறி வருவதை இன்னின்னபிறப்பென்று அந்தந்த சடவுருவத்தினால் அறிவதன்றி, அதிலதில் விளங்கும் ஆத்துமாவினால் அறிவதில்லை, அந்தந்த காலத்தில் அந்தந்த பிறப்பிலே அதிலதிலுமிருப்பது அந்த வொரே ஆத்துமாதான். இப்படி ஆத்துமா வியாபித்திருக்கிற புல்லை அறுக்கலாமோ? கல்லை உடைக்கலாமோ? மரத்தை வெட்டலாமோ! தேளைக்கொல்லலாமோ? மூட்டுப்பூச்சியைநசுக்கலாமோ? கீரையைப் பிடுங்கலாமோ? செடியில் இலையைப் பறிக்கலாமோ, பூவைக் கொய்யலாமோ, பிஞ்சைத்திருகலாமோ, காய்கனிகளை அறுக்கலாமோ? இப்படிச் செய்வதினால் அந்த ஆத்துமாவுக்கு உபத்திரவமுண்டாகாதோ? அப்படிக்கல்ல, அந்த ஆத்துமா ஒன்றேயாயினும், அந்தந்த பிறப்புக்குத் தக்கபடி, ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உடையதாய் மாறிமாறிவருமென்போமானால், சரீரத்திற்குமாறுத லுண்டாயிருப்பதுபோல ஆத்துமாவிற்கும் மாறுதலுண்டாயிருக்கிறதென்பதே சரீரத்திற் குண்டாகிய ஜனன மரணம், இளமை முதுமை, பிணிமுதலிய சகல அவஸ்தைகளும் ஆத்துமாவிற்கும் உண்டாயிருக்கிறதென்பதற்குப் பிரத்தியட்ச ருசுவாகும். (இந்த விஷயம் 'ஆத்துமா அழிவில்லாதது' என்பதைப் பற்றிய உபந்நியாசத்தில் ஸ்பஷ்டமாய் விளங்கும்.)

‘ஆத்துமா’ என்பது ஒன்றிருந்து, அதற்கு அறிவு
சக்தி இருக்குமானால், அந்த சக்தி பொறி புலன்களின்
வழியாய் வெளியாகவேண்டியதே யல்லாமல், பொறி
புலன் அற்ற விடத்து வெளிப்படாது. ஒருவன் யா
தொரு பொருளை கவனமாய்ப் பார்த்திருந்தபோது கா
து கேளாதிருந்ததென்பதும், கவனமாய்க் கேட்டிருந்
தபோது கண்பாரா திருந்ததென்பதும், தொட்டால்
தெரியாதிருந்ததென்பதும் ஒவ்வொருவருக்கும் அநு
பவசித்தியா யிருக்கலாம். அறிவு—இரண்டு முதலாக
ப் பலவாயிருந்தால், ஓரறிவு தன் தொழிலைச் செய்கை
யில், மற்றோரறிவு தன் தொழிலைச்செய்யாமல் சும்மா
இருப்பானேன்? குருடனுக்குப்பார்வையும் செவிட
னுக்குக் கேள்வியும் திமிர்வாதக்காரனுக்கு ஸ்பரிசமு
ம் இல்லாவிட்டால், அந்தந்த மனிதனுக்கு அந்தந்தப்
புலன் அற்றிருப்பதாகச் சொல்லவேண்டுமேயல்லாம
ல், ஆத்துமாவிற்கு அறிவு குறைந்திருப்பதாகத் தோ
ஷஞ் சொல்லலாமோ சொல்லக்கூடாது. இதனாலே
ஆத்துமாவிற்கு அறிவு ஒன்றுதானென்றும், அதுவாச
ஞ்செய்கிற சடபதார்த்தத்துக்கு எத்தனை புலன்களிரு
க்கின்றனவோ அத்தனை புலன்களிலும் அது வியாபிக்
கச் சக்தியுள்ளதா யிருக்கிறதென்றும் நிச்சயிக்கவேண்
டியதாயிருக்கிறது. அதாவது—மரத்திற்குக் கட்புல
னிருந்தால் அதற்குளிருக்கிற ஆத்துமா பார்க்கவேபா
ர்க்கும். ஆகலால், புல்லைக்கிள்ளினாலும் அதிலுள்ள
ஆத்துமாவிற்கு உபத்திரவந்தானே, “இப்படிச்சொன்
னால் உலகம் நடவாது, மனிதர்கள்வாழ்வது கூடாமை
யாகும், ஆடுமாடுகள் கத்துகிறதுபோலப் புல் - பூண்டு
செடி - மரங்கள் கத்துகிறதில்லையே, அதினாலே அந்
தப்புல் பூண்டு முதலியவற்றிற்கு அறிவு குறைவுதான்,
அறிவு குறைந்ததை தமக்கு வேண்டியிருப்பதுபற்றிப்
பறிக்கலாம் இழுக்கலாம் தோஷமில்லை” என்பார்க
ளாகில், மேலே கண்டபடி கண்ணுந்தெரியாமல், கா
துங்கேளாமல், ஸ்பரிச வுணர்ச்சியு மில்லாம லிருக்கிற
மனிதனுக்கு மூன்றறிவு குறைந்திருப்பதினால் அவனை
ஒருவன் தனக்கு நரமாமிசம் வேண்டியிருப்பதுபற்றிக்
கழுத்தைஅறுத்துப்போடலாமே. ஆ! ஆ! நல்லதரும
சாஸ்திரம்! அறிவு குறைவென்பதும் சப்தியாதிருக்கி
றதென்பதும், நமது கண் பார்த்தமட்டிலும் காதுகே
ட்டமட்டிலும் மனம் நினைத்தமட்டிலும் நிச்சயிக்கப்ப
ட்ட சித்தாந்தமாகும். அற்ப ஜந்துக்களில் கொசுகு
சப்திக்கிறதைக் கேட்டிருக்கிறோம், மூறி - எறும்பு -
தேள் - சப்தித்ததைக் கேட்டறிந்திலோம்; ஆதலால்
பின்சொன்ன ஜந்துக்கள் சப்திக்கமாட்டாவென்று நி
ச்சயித்துப்போடுவதே சரியாகும். ஓரறிவு ஈரறிவு
உள்ளதாக நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிற செ
டி மர முதலியவற்றைக்குறித்து ஐரோப்பா சாஸ்திரி
கள் பரிசோதனைப் பிரமாணத்தினால் கண்டறிந்து நிலை
நாட்டியிருக்கிற தத்துவங்களை அறிவோமாகில் நாம்
வெட்கிப்போகவேண்டும்.

(இன்னும்வரும்.)

கல்லு நாதனல்லவோ.

திருவெவ்வளூரில் வயித்திய வீரராகவப்பெருமாளு
க்குக் கையொடிந்ததென்று சொல்லுகிறார்கள். கை
யொடிந்தது எதற்கு? கல்லினாலும் சுண்ணச் சாந்தி
னாலும் செய்யப்பட்டிருக்கிற விக்கிரகத்துக்குத் தா
னே? அதைத்தானே ராகவனென்கிறார்கள். மூலஸ்
தானத்திலுள்ள விக்கிரகக்கல்லை ராகவ னென்கிறார்
களே யல்லாமல் வாயிற்படிக்கல்லையாவது ஸ்தம்பக்
கல்லையாவது ராகவனென்கிறார்களோ? இதனாலே யா
கிலும் கல்லு நாதனாயிற்றென்று தெரியவில்லையா?
ராகவன் காலிற்றொடுசெருப்பு கட்டி ராக்காலத்தில்
சஞ்சாரஞ் செய்தபோது இடறிவிழுந்து கைமுறிந்த
தோ, அல்லது சுண்ணாம்பு காரஞ்செத்து, பந்தனையற்
றுக் கையிற்றதோ யோசித்துப்பாருங்கள். ஒவ்வோர்
சமயத்தில் வயித்தியனுக்கும் வயித்தியன வேண்டியி
ருக்கிறான். வயித்தியனாகிய கொல்லெற்றுக்காரனும்,
மூலிகையாகிய கல்லுஞ்சுண்ணாம்பு மில்லாவிட்டால்,
ராகவனுடைய இற்றகை கூடிவரப்போகிறதில்லை. அத
ற்கும் காசுவேண்டும். காசுதேவனில்லாவிட்டால் அந்
த வாசுதேவன் பேச்சு அம்பலந்தான். சைவமதசித்
தாந்த சிரோமணியாயும் ‘Watch & Clock Repairer’
என்னும் பட்டப்பெயர் தரித்தவராயும் விளங்காநின்ற
அருணசல முதலியாருக்கு இந்தமட்டில் கண்திறந்தே
யிருக்கும்; இன்னும் அதிகமாய் அவருக்குச்சொல்ல
வேண்டுவதில்லை. இனிமற்றுஞ் சிலருடைய அபிப்
பிராயத்தை ஆராய்வோம்.

A. M.

நாத்திகமதகண்டனம்.

சாத்திரமில்லாமல் சைவத்தை தூத்துகின்ற நாத்திகரே உமக்
குண்டாகிய ஞானம் சுவஞானமென்றும், அந்த ஞானத்தினுக்
கு யாதேனும் பின்னமுண்டா வென்றும், தத்துவவிவேசினி
யென்னும் பத்திரிகையில், 1886வூ ஆகஸ்டுமீ 8உ புறப்பட்
ட பத்திரிகையில் நிர்வாணப்பட்டணத்தில் நீர்ச்சீலை கட்டின
வன் பைத்தியக்காரன்தானே எனவே பேர்கொடுத்து அதனில்
வரைந்தாய்.

புத்தியை யுடையபோலவிருந்தனை, புகலக்கேளீர் சுவஞா
னமென்பது வையச் சொல்லா? வழக்கச்சொல்லா? வேதச்
சொல்லா? விதிச்சொல்லா? அது பகுபதமா? பகாப்பதமா?
உமக்குண்டாகிய ஞானம் இயலாயுடையதா? செயலாயுடை
யதா? சைவாகமங்களில் சொல்லப்பட்ட ஆத்ம தத்துவம்,
வித்தியாதத்துவம், சிவதத்துவம் ஆகிய மூவகை தத்துவங்க
ளும் உமக்குத் தெரியுமா? உம்மைஉமக்குத் தெரியுமா? இ
வைகளியாவும் தெரியுமேயாயின் மேல்வரும் பத்திரிகையில்
உமதுபேர் உம்மைப்பெற்றோர் பேருடன் வரைந்துகாட்டுக அல்
லது வாயை அடக்குக. உமக்குண்டாகிய ஞானம் சங்குண்
டாயபோதே அதன் நிறமாகிய வெண்மையும் அதுனுட னுண்
டாகியதுபோல நீர் மாதாவின் கருப்பைக்கு ளுண்டாகும்போ
து உமது ஞானமுங்கூட உதிக்கவேண்டும் சங்கழியுங்காலம்
வரைக்கும் அதின் வெண்மையானதுகூடயிருந்து சங்கழிகின்
றபோதே அதன் வெண்மையுங்கூட அழிகின்றனபோல உமக்
குண்டாகிய ஞானமும் நோய் மூப்பு கவலைமுதலிய துன்பங்
கள்வந்த பொருந்தியகாலத்தும் அது நீங்காதிருந்து உமது
தேகம்நீங்கும்போதே அதுவுங்கூட நீங்கவேண்டும் அஃதின்றி
ஓர்காலத்திலே உற்பத்தியாய் ஓர்காலத்திலே அழிதலால் உ
மக்குண்டாகிய ஞானம் இயல்பன்று ஆதலால் மாயாகருவிக
ளை உமக்குத்தந்து உம்மால் விரும்பப்பட்ட போகங்களை அநு
பவித்தற்கேதுவாகிய ஞானத்தைதருபவன் ஒருவன்வேண்டும்.

யாழ்ப்பாணம்
சிதம்பரநாதபிள்ளை குமாரர்
நாராயணபிள்ளை.

மேற்படி கடிதத்தில் எழுத்துப்பிழை சொற்பிழைகளையும்
பாஷைநடைபேதத்தையுங் கவனிக்கும்பொருட்டு, அவற்றை
அங்கங்கே வேறுவிதஎழுத்தால் பதித்திருக்கிறோம். அக்கடித
த்திலே ஒருமை பன்மை தெரியாமல் உளறியிருக்கிறது. பிள்
ளையவர்கள்‘உங்களுக்குண்டாகியஞானம் சுவஞானமென்றும்,
அந்தஞானத்தினுக்கு யாதேனும் பின்னமுண்டாவென்றும்’தத்
துவவிவேசினியில் சொல்லியிருப்பதாகக் குறித்திருக்கிறார்; இ
தனாலே சுவஞானிகள் ஏதோ அகங்கரித்துச் சொன்னதாக
அவருடைய அபிப்பிராயம். அதுதப்பு. எங்களில் சிலர் மத
ச்சின்னங்களை யணிகிறார்களென்றும் மதாசாரங்களை அனுஷ்
டிக்கிறார்களென்றும் மதஸ்தர்கள் இகழ்ச்சிசெய்ததற்குச் ச
மாதானமாகச் சிலதிருஷ்டாந்தங்களையெடுத்துக்காட்டி அவ
ர்கள் தங்கள் உற்றாருடைய வலாத்கார முதலியவற்றிற்கஞ்சி
அப்படி நடக்கவேண்டியதிருக்கிறதென்றும், அதினாலே அவர்
களுடைய சுவஞானத்திற்குப் பின்ன முண்டாகாதென்றுஞ்
சொன்னோம். இதுபற்றிப் பின்னால் விவரமாயெழுதலாகும்.
ஆகஸ்டு 22உபத்திரிகையில் ‘நாஸ்திகரென்போர் யாவர்’ என்
னும் தலைப்பினையுடைய சங்கதியினாலும், 29உ பத்திரிகையில்

'நாஸ்திகக்கொள்கை' என்னும் தலைப்பினையுடைய சங்கதியினாலும் சுவக்கியானிகளுடைய அடக்கமான கருத்து இன்னதென்று ஸ்பஷ்டமாய்விளங்கும். 'சுவக்கியானம்' 'சுவக்கியானி' என்பதற்குப் பொருள் இங்கிலீஷில் 'Freethought' 'Freethinker' என்பதற்கு என்னபொருள் அமைக்கப்பட்டிருக்கிறதோ அதுதான். சுவக்கியானமென்பது இன்னபொருள தருவதற்காக இடப்பட்டபெயரென்று தத்துவவிவேசினியில் பலமுறை விரித்துச்சொல்லியிருக்கிறது. அதின் முக்கிய கருத்தாவது—விசாரணையினாலும் பரிசோதனையினாலும் எங்களுக்கு உண்மையானவையாய்த் தோன்றுகிற விஷயங்களைப்பற்றிய ஞானத்திற்கு சுவஞானமெனப் பெயரிட்டுக்கொண்டதுதான். அந்த ஞானத்தை வெளியிடுவதினாலே அது இராஜாங்க மதத்திற்கு விரோதமாயிருந்து சிட்சைகிடைக்கிறதாயிருந்தாலும், விரோதத்தினாலே ஜனங்களுடைய தூஷணைக்கு உள்ளாகிறதாயிருந்தாலும், அதற்கஞ்சாமலும், ஆஸ்திகர்களுக்குள்ளேமனதில் கடவுள் நம்பிக்கையும் பாப பயமுமற்ற அனேகர் ஜனங்களுடைய ரோதனைக்குப் பயந்து வேதோத்தமாகச் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் வெகு அலட்சியமாக மேலுக்குச் செய்துவருவதை நாம் காணுகிறபடி நாங்கள் பயந்து நடிக்காமலும், மனசாட்சியின்படி உறுதியாக நின்று எங்களுக்குத் தெரிந்தமட்டில் உண்மையைக்கடைப்பிடியாகப் பிடிப்பதே எங்கள் கொள்கை. இந்தத் தன்மையுஞ்சேர்ந்ததுதான் சுவஞானம். ஸ்வ என்பது சொந்தம், அதினாலே ஸ்வக்கியானமென்பது எங்களுக்கேயுரிய ஞானம். இது நிற்க: மேற்படி கடிதத்தில் முதல்பாராவிலே 'பத்திரிகையில்' என்பது இரண்டுதரமும் 'அதனில்'என்னும் சுட்டும் ஒரேவாக்கியத்தில அமைந்திருப்பதைப் பார்க்குமபோதே மேற்படி இலக்கணப்புலியாருடைய பாஷாக்கியானம் துலக்கமாயிருக்கிறது. வையச்சொல்லும் வழக்கச்சொல்லும் வெவ்வேறு? விதிச்சொல்லாவதென்ன? தலையெழுத்துச்சொல்லா? அது பகுபதமானால் நாஸ்திகமதம் ஹதமாய்ப்போகுமோ, அல்லது பகாப்பதமானால் ஹதமாய்ப்போகுமோ எமக்குத் தெரியவில்லை. அதை யவரோ யெடுத்துக்காட்டி ஹதஞ்செய்திருந்தால் வெகு சுலபமாயிருக்கும். கிளிப்பிள்ளையானது தான் கற்றது கற்றபடிச்சொல்லும். இப்பிள்ளையோ தான் பள்ளியில்கற்ற இலக்கணச்சுருக்கவினாவிடைவாசகபாடங்களில் வெகுவாய்மறந்து, ஞாபகமிருந்த சிலசொற்களை எழுதினர்.எமதுபெயரையும் எம்மைப்பெற்றார் பெயரையுஞ் சொன்னால் பேசலாமென்றும் சொல்லாவிட்டால் பேசக்கூடாதென்றும் நாராயணபிள்ளை கட்டளையிட்டார். அது இன்னதென்று எமக்குத் தெரியவில்லை. பேசுகிறவன் தன்னைப் பெற்றார்பெயரைச் சொல்லவேண்டிய நிமித்தம் அவர் தன் பிதாவின்பெயரைச் சொன்னார்போலும்; ஆனால் மாதாவின் பெயரைச்சொல்லமறந்துபோனார்.

இத்ததியில நாஸ்திகத்துக்கு விரோதமான கடிதத்தை அடக்கிப்போட்டோமென்கிற அபவாத முண்டாகாதபடி அவலட்சணமும் அப்பிரயோஜனமுமான அக்கடிதத்தைப் பிரசுரஞ்செய்து, பத்திரிகையை நிரப்பி, நமது பத்திரிகா நண்பர்களின் காலத்தில சிறிது வியர்த்தமாக்குவதற்காக அவர்கள் எம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றனம். இனி அப்படிப்பட்ட கடிதங்களுக்கு நமது பத்திரிகை இடந்தரமாட்டாதென்று நமது கடிதநேயர்கள் அறிந்துகொள்க.

A. M.

கடிதம்.

ஐயா,

ஐந்தாறு வருஷங்களுக்குமுன்னே நாஸ்திகருக்கும் ஆஸ்திகருக்கும் எழுத்துமூலமாய் வாதம் நடந்ததாகக் கேள்வியுற்றோம். நாங்கள் இரண்டொருவருஷத்திற்குட்பட்ட கையொப்பக் காரர்களாகையால், அதுசங்கதி யொன்றும் எங்களுக்குத்தெரியாது. எங்களைப்போலவே நூதன கையொப்பக்காரர்கள் அனேகரிருப்பார்கள். அவர்களும் அதையறியவேண்டியதே. ஆதலின், அந்த விஷயத்தைத்தமது பத்திரிகையில் கொஞ்சகொஞ்சமாய்ப் பிரசுரஞ்செய்து வருவீர்களாகில், விசாரணையை விரும்புகிற எங்கள் யாவருக்கும் பெருத்த உதவியாயிருக்கும்; அதற்காகத் தமக்கு நன்றி கூர்ந்தவந்தனஞ் செய்வோம்.

சிலகையொப்பக்காரர்.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவிதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேகபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே இரண்டணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை புரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3—0—0
வெளி ,, ,, —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)		Rs.	As.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 37.] MADRAS:—SUNDAY SEPTEMBER, 12, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

தெய்வச்செயல்.

" நாஸ்திகராகிய பையான் என்பவரை, ஒருகடற்றுறைப் பட்டணத்திலுள்ள வருணபகவான்கோயிலுக்கு இட்டுக்கொண்டுபோய், புசற்காலங்களிலே அந்த பகவானுக்குப் பிரார்த்தனை செய்துகொண்டபிறகு கப்பற் சேதத்தினின்றும் காப்பாற்றப்பட்டவர்களைப்போல அவ்விடத்தில் எழுதிவைத்திருக்கிறபடங்களைக்காட்டி, இவர்களைப்பார்த்தீரா, இப்போது என்னசொல்லுகிறீர்? தேவதைகளின் சக்தியை நீர் ஒத்துக்கொள்ளுகிறீரல்லவா? என்று கேட்டார்கள். அதற்கவர்- ஹேஹ, ஹேஹ! பிரார்த்தனைசெய்துகொண்டும், பிறகு தண்ணீரில் முழுகிப்போனார்களே, அவர்களுடைய படங்கள் எங்கே யெழுதிவைத்திருக்கின்றனவென்றார்."—

பேக்கன்.

—o—

திருவெவ்வளூர் வீரராகவருடைய மகிமையைப்பற்றிப்பேசிக்கொண்டிருக்கையில, சிலர் - தங்கள் தங்கள் கோரிக்கை நிறைவேறினதினாற்றானே எத்தனையோ ஜனங்கள் அவ்விடத்திற்குச்சென்று பிரார்த்தனை செலுத்துகிறார்களென்றார்கள். பிரார்த்தனை செய்துகொண்டும் தங்கள் கோரிக்கை நிறைவேறாமையால் அவ்விடத்திற்கு வராதவர்களைக் கணக்கிட்டீர்களா வென்று கேட்க, அவர்கள் திகைத்து அது வேறுவிஷயமென்றார்கள்.

A. M.

IS MAN A SINNER?
மனிதன் பாபியா!

ஏறக்குறைய வெல்லாமதத்தர்களும் மனிதனைப் பாபியாகவே யெண்ணியிருக்கிறார்கள். இவர்கள் இவ்வாறு எண்ணுவதற்குக் காரணம் யாதென விசாரிக்குமளவில், மனிதன் பெரும்பாலும் அறியாத்தன்மையனாக விருக்கின்றமையே முக்கிய காரணமாகத் தோன்றுகின்றது. அஃதெவ்வாறெனின் கூறுவேம். மனிதன் துவக்கத்தில் தனக்கு நேர்ந்துவந்த பிரதிகூலங்களையெல்லாம் சிந்தித்து அவைகளுக்குக் காரணங்களைச் கண்டறிய முயன்றனன். முயன்றும் தன்முயற்சியிற் சித்திபெறுதவனாய் மொத்தத்தில் யாதோவோர் காரணம் இருக்கவேண்டுமென்று உத்தேசங் காரணமாக மனவாறுதலுற்று மீண்டும் அக்காரணமானது தான்செய்த யாதோவோர்கிருத்தியத்தின்பொருட்டேயுண்டாயிருத்தல் வேண்டுமென்று அனுமானசித்தனாய்த் தன்னைப் பாவியாக வெண்ணத்துணிந்தனன். இத்துணிபே பிறகு, கடவுளினிருப்பில் நம்பிக்கையையும், அக்கடவுள்முன்னிலையில் மனிதனைப்பாவியாக்கிய தன்மையையும், அத்தன்மைக் கேற்றவாறு மனிதன் அனுபவிக்கும்பொருட்டு நரக தண்டனையையும், அத்தண்டனையினின்று மீட்சியடைபவர்களுக்கு மோட்ச சுகத்தையும், அடக்கியுள்ள பற்பல மத சமூகங்களை யுண்டுபண்ணுவதற்குக் காரணமாகவிருந்தது.

ஆனால் மனிதன் வாஸ்தவத்தில் கடவுளையும் அறியான்; கடவுள்உள்ளபட்சத்திலும், அக்கடவுளுக்கு யாதொரு பிழையையும் செய்ததுமில்லை. செய்ததாகக்கொள்வதற்கு மிடமில்லை. ஏன் இடமில்லையெனின், மதவாதிகள் கூறியுள்ளபிரகாரம் கடவுள் சர்வவல்லவரும், பூரணருமா யிருக்கவேண்டும். அபூரணனாகிய மனிதன் பூரணனாகிய கடவுளை பின்னப்படுத்தியிருப்பானாயின் அதாவது அபூரணப்படுத்தியிருப்பானாயின், கடவுளுடைய பூரணத்துவத்திற்கும் சர்வவல்லபத்துவத்திற்கும் அபூரணத்துவம் சம்பவித்திருக்குமாதலால், கடவு ளிலக்கணங்கள் குன்றி கடவுளுக்கே மோசம்வந்திருக்க வேண்டிவருமாதலின், கடவுள்முன் மனிதன் பாபியாக விருப்பதற்கு இடமில்லை. இடமில்லாதபோது மனிதன் பாபியாகான். மனிதன் பாபியல்லாதபோது அவனுக்கு பாப நிவாரணம் வேண்டுவதில்லை. பாப நிவாரணம் வேண்டுவதல்லாதபோது பாவ நிவாரணனாகிய கடவுளும் அத்தகைய கடவுளைக் கைவல்லியப்படுத்திவைக்கு குருவும் அக்குருவை வழிப்படும்படியான மார்க்கத்தைப் போதிக்கும் மதமும் மனிதனுக்குப் பிரயோசனமற்றவைகளாகும். இவ்வாறு விஷய வாராய்ச்சியிருக்க மதவாதிகள் மனிதனைக் காரணமின்றி பாபியாகக் கணிப்பது எவ்வாறொக்கும்? விவேகிகளே கூறக்கடவர்.

D.

—o—

ஆஸ்திகரதுகோரிக்கை.

ஸ்ரீமான் முனிசுவாமி நாயகர் இருக்கிறவரையில் 'தத்துவவிவேசினி' பத்திரிகை நடந்துவருமென்று சில ஆஸ்திகர்கள் சொல்லுகிறார்களாம். (அவர் தீர்க்காயுசாயிருப்பாராக) அதனாலே அவர் சீக்கிரமாயிறந்து போகவேண்டுமென்கிற தங்கள் கெட்ட யெண்ணத்தைக் குறிப்பாகத்தெரிவிக்கிறார்கள். 'தெய்வம் மந்திராதீனம், மந்திரம் பிராமணாதீனம்' இவ்வாறு இவர்களுக்குத்தான் சகலமும் சுவாதீனமாயிற்றே, குளிகைபோட்டுக்கொண்டு பறக்கவல்லரே, கூடுவிட்டு கூடுபாயவல்லரே, யாகாதிகிருத்தியங்கள் இவர்களுக்குச்சொந்தமாயினவே; சர்ப்பயாகபலனைப் பிரயோகித்துத் தங்கள் கோரிக்கையை முடித்துக்கொள்ளலாகாதா? ஒன்றற்கு ஆதியுண்டாயிருக்கும்போது அதற்கு எப்போதாவது முன்னும் பின்னுமாக அந்தமுமுண்டு. ௫-௬ வருஷத்திற்கு முன்னே ஆஸ்திகருக்கும் நாஸ்திகருக்கும் வாதம் நடந்தது. கொஞ்சகாலத்திற்குள் ஆஸ்திகர்கள் நிறுத்திப்போட்டார்கள்; நாஸ்திகர்கள் விடாது தொடர்ச்சியாய் நடத்திக்கொண்டுதான் வருகிறார்கள். அந்த வாதங்களை பின்னிட்ட கையொப்பகாரர்களும் மற்றவர்களும் அறியும்படி மறுபடியும் பிரசுரஞ்செய்வதாக ஆலோசனை யுண்டாயிருக்கிறது. அப்போது நின்றுபோன ஆஸ்திகம் கொட்டிக்கிழங்கைப்போல ஒட்டிக்கிடந்து இப்போது துளிர்விட ஆரம்பிக்கிறது. சிலவருஷகாலம் அது மூலையில் பதுங்கியிருந்தது எங்களுக்கு விசனமே, இப்போது வெளிப்பட்டது சந்தோஷமே.

நாங்களும் ஓர்காலத்தில் ஆஸ்திகர்களாயிருந்து, பானைசாதத்திற்கு இரண்டொரு சாதத்தைப்பதம்பார்த்து நிச்சயித்து வடிக்கவேண்டியதும் வடிப்பதும்போலவே இந்து மதங்களிலுள்ள சில விஷயங்களைக் கூடியமட்டில் ஆராய்ந்து அவை யாவும் அவலட்சணமாயிருக்கக்கண்டு, அவற்றைக் கைவிட்டோமேயன்றி; இன்னும் உண்மையைக்கண்டறிய வேண்டியவர்களாகவேயிருக்கிறோம், விசாரணைசெய்துவருகிறோம். உண்மையையறிவதற்கு வழிகாட்டியாயிருக்கிற கிரந்தங்கள் எங்களுக்கு அனேகமிருக்கின்றன, அவற்றினிடத்து எங்கள் மனம் செல்லுமேயல்லாமல், பொய்மை நிறைந்துள்ளனவாக எங்களுக்குத்தெரியவரும் வேதாகம புராணங்களில் பூர்த்தியாய்ச் செல்லாது; அவற்றை அவர்கள் எடுத்துவெளியிடுவது எங்களுக்குஞ்சந்தோஷமே. அவர்களைப்போலஎங்களுக்கு அவலட்சணமான கோரிக்கையில்லை. சிலர் எங்களை வேதாகமபுராணாதிகள் உங்களுக்குப் பூர்த்தியாய்த்தெரியுமாவென்று கேட்கிறார்கள்;

அப்படி தெரியுமென்று நாங்கள் சொல்ல வரவில்லை. எங்க
ளுக்குத் தெரிந்தமட்டிலும் அவர்கள் சொல்லுகிறவற்றிலும்
உண்மையில்லாதனவாய்த்தோற்றுமவற்றை நியாயவாதத்தால்
கண்டிக்கிறோம். அப்படி எங்களைக் கேட்கிறவர்களுக்குப் பூ
ர்த்தியாய்த்தெரியுமா? 'வேதம்' அல்லது 'சுருதி' என்று அடிக
டிஎடுத்தாளப்பட்ட மூன்றெழுத்துப் பெயர்தான் பெரும்பா
லுந்தெரியும். வேதவாக்கியங்களென்று சொல்லப்பட்ட சில
மொக்கைகளை அங்குமிங்கும் பார்க்கிறோம். வேதத்தை எழு
தாக்கிளவி என்கிறார்கள். ஆதலால், சம்ஸ்கிருதம் வாசித்தவ
னொருவன் தன் வாதத்திற்கு ஏற்றதாக ஒரு சுலோகம் கற்பி
த்து வேதவாக்கியமென்று சொன்னாலும், பழைய சுலோகத்தி
ல் சிலவார்த்தைகளை மாற்றிச்சொன்னாலும் நாம் நம்பவேண்
டியதுதான்.

சகலத்தையும் கண்டறிந்ததாக அவர்கள் நடித்துப்பிறரை
இகழ்வதுபோல நாங்கள் செய்யமாட்டோம். அவர்களால்
சொல்லப்பட்டதெதுவாவது எங்களுக்குப் பேய்த்தனமாகத்
தோற்றினால் அதற்குண்டான நியாயங்களை யெடுத்துக்காட்டிக்
கண்டிக்கவேண்டியிருக்கிறது; அப்படிச் செய்யும்போது அது
பரிகாசஞ் செய்வதுபோலத்தோன்றும். ஆகஸ்டுமீ கஉ பத்
திரிகையில் மிஸ்டர் பிராட்லா அவர்களுடைய (மொழிபெயர்
ப்புப்) பிரசங்கத்தை அவர்கள் வாசித்துப்பார்க்கவேண்டும்.

முனிசுவாமி நாயகரவர்கள் தமக்குப்பின் நடத்திவருவதற்
காகக் குருசுவாமி நாயகரைத்தயார்செய்துவருவதை அவர்கள்
அறியார்கள்; ம-ா-ா-ஸ்ரீ, கிருஷ்ணகிரி உண்மை விரும்பியவர்
கள் முதலானவர்களிருப்பதை அறிவார்களே. ஒருவருமில்
லாமலே போகட்டும், பத்திரிகையும் ஒழிந்துபோகட்டும்,
அரைத்தனமும் அவர்களுதே யாகட்டும், நாஸ்திகர்களென்று
வெளிப்படுகிறவர்களை நாசஞ்செய்து போடட்டும்; எண்ண
த்தைமாற்ற அவர்களாலே யாகுமா? அவர்களுக்கெல்லாம்
மேலான சர்வேஸ்வர னொருவனிருக்கிறா னென்கிறார்களே
அவனாலேயாவதாகுமா! பைத்தியம்! பைத்தியம்!!

A. M.

மெய்யறிவு.

க-ம் பாகம்.

(143-வது பக்கத்தொடர்ச்சி.)

---o---

இவ்வளவு கூறியதும், புலால் புசிக்கிறதேயில்லை,
கொலைசெய்கிறதேயில்லைஎன்று தங்களைத் தாங்களே
புகழ்ந்துகொண்டு மற்றவர்களை இகழ்ந்து திரிபவர்களு
க்குப் புலையையுங் கொலையையும் சுத்தமாய்த் தவிர்ப்
பது அசாத்தியமென, உள்ள சங்கதிகளை எடுத்துக் கா
ட்டினதேயல்லாமல், அகத்தியம் புலால் புசிக்கவேண்
டும், கொலை செய்யவேண்டுமென்று கூறினதாக ஒரு
வரும் நினையார்களென்று நம்புகிறேன். அப்படிப்ப
ட்ட காரியங்களைக் கூடியமட்டில் தவிர்ப்பதே எனது
பட்சம். ஜீவகாருணிய முதலிய சங்கதிகளைப் பின்வ
ரும் சஞ்சிகைகளில் காணலாம்.

நம்மவர்களுடைய சித்தாந்தங்கள் வெகுவாய்ப் பரி
சோதனைப் பிரமாண மற்றவையாகவே யிருக்கின்றன
வென்பதற்கு ஓர் திருஷ்டாந்தம்;—குளவி புழுவைத்
தன்னுருவாக்கிக்கொள்ளுகிறதென்பது அநேக சாஸ்
திரங்களிலும் புராணங்களிலும் ஏறியிருக்கிறது அது
சுத்த அபத்தம். நான் பரிசோதித்தறிந்தமட்டில், கு
ளவியானது ஒருகூடு கட்டியானவுடனே, அது கூட்டி
னுள் மேற்புறத்திலே ஒட்டும்படி தன்வாலைத் துறுத்
து முக்கிற்று. இந்த அவஸ்தையினாலே அது முட்
டையிட்டதாகத் தோன்றியது. அந்தக்குளவி -௯- எ
புழுக்களைக் கொண்டுவந்து அடைத்து கூட்டின்வா
யை மண்ணினால் மூடிப்போட்டது. அந்தக் கூண்
டைப் பரிசோதிக்கையில், வெண்மையாக சீரகமளவு
ஒருமுட்டை அந்தக்கூட்டினுள் மேற்புறத்தில் ஒட்டிக்
கொண்டு தொங்கிற்று. பின்பு அந்தக்குளவி முந்திக்க
ட்டியிருந்த - எ - அ - கூண்டுகளும் பரிசோதிக்கப்ப
ட்டன. அவற்றுள் இரண்டொரு முட்டை மஞ்சள்
நிறமடைந்தும், அந்த நிறத்தோடு சில முட்டைகள் ஒ
ன்றற்கொன்று கொஞ்சகொஞ்ச மதிகமாய்ப் பருத்து
மிருந்தன. இதைக் கண்டறிந்தவன் நான்மாத்திரமல்
ல. நான் தெரிவிக்க, பருத்திப்பட்டு - ராமானுஜ-லு
நாயகரும், பட்டுக்கோட்டை டிஸ்திரிக்டு முனிசீபு
சை - அருணகிரிமுதலியாரும் பரிசோதித்தறிந்தார்க
ள். குளவி முட்டையிடுகிறதென்றும், அந்தமுட்டை
பழுப்புநிறமுள்ள புழுரூபமாகி, குளவிகொட்டி சோர்
வுள்ளதாக்கிக்கொண்டுவந்து அடைத்த புழுக்களைத் தி
ன்று பருத்து, முழுதும் தோற்போர்வையினால் மூட
ப்பட்ட வேறு உருவமாகி அதற்குளிருந்து குளவிக்கு
ஞ்சு தன் முழு ஸ்வரூபத்துடன் வெளிப்படுகிறதென்
றும், சில இங்கிலீஷ் கிரந்தங்களில் சொல்லியிருக்கிற
து. இந்தக் குளவி விஷயத்தில் நமது முன்னோர்கள்
மோசம்போயிருக்கலாம். எப்படிக்கென்றால், குளவி
கூடுகட்டி புழுக்களை அடைத்து மூடிப்போட்டதையு
ம், கடைசியில கூட்டிலிருந்து சிறுகுளவி வெளிப்பட்
டுவந்ததையும் பிரத்தியட்சமாய்க் கண்டதினால், அவர்
கள் புழு குளவியாயிற்றென்று சொல்லியிருக்கலாம்;
கூட்டையுடைப்பது பாவமென்பதும், கூட்டைக்கலை
த்தால் கர்ப்பிணிக்குக் கர்ப்பம் கலைந்துபோமென்பது
ம் இக்காலத்திலும் சாதாரணமாய் வழங்கிவருகிற வதந்
தியாகையால், அது அவர்கள் பரிசோதித்தறியத் த
டையாயிருந்திருக்கலாம். நம்மவர்கள் பெரும்பாலா
ர் முன்னோர்கள் சொன்னதையும் செய்த ஏற்பாடுகளை
யும் சரியானவைகளென்று சிலாசாசனமாக நம்புகிற
தன்மை யுடையவர்களாதலால், இவர்களும் பரிசோத
னைசெய்ய அவசிய மில்லாமற் போயிற்று. அப்படியி
ருக்க, முன்னோர்கள்சொன்னது வேறுகுளவியா யிருக்
கலாம், அது இக்காலத்திலிருக்கிறதோ இல்லையோவெ
ன்று தங்கள் கட்சியை சாதிப்பாரும் சிலருண்டு.

முன்னோர்களுடைய சில ஏற்பாடுகளினால் சங்கட
முண்டாகிற தென்பதற்கு உண்மையாய் நடந்த ஓர் தி
ருஷ்டாந்தம்:—இரண்டு சகோதரர்கள் வேறுபிரிந்தபி
றகு இளையவன் தனக்குக் கிடைத்த சொற்ப ஆஸ்தி
யைச் செலவழித்து, தன்மனைவியையும் ஏகபுத்திரனை
யும் விட்டு இறந்துபோனான். இவர்கள் நிராதரவா யி
ருந்தபடியினாலே, தமையன் இவர்களைத் தன் குடும்ப
த்திற் சேர்த்துக்கொள்ள மனங்கொண்டவனாய் சில பு
த்திமான்களோடு யோசிக்கையில், "ஹிந்து தருமசா
ஸ்திரம் நமக்குக் கழுத்தறுப்பாயிருக்கிறதே, பிரிந்து
போனவர்களை மறுபடி சேர்த்துக்கொண்டால், அந்த
ப்பிள்ளை அயோக்கியனாகிறபட்சத்தில், மூத்தவனுக் கி
ருக்கிற நான்குபிள்ளைகளோடுகூட ஐந்தாவது பிள்ளை
யாக பாகங்கேட்டு ஐந்தி லொருபாகம் பெற்றுக்கொ
ண்டாலும் நிமித்தமில்லை, தம்பிபிள்ளையென்கிற சுத
ந்தரத்தினால் சரிபாகங்கேட்டால், யாருக்குத்தான் அப்
படி கொடுக்க மனம் ஒப்பும், குடும்பத்தில் மறு
படி சேர்த்துக்கொள்ளுவது சரியல்ல" வென்று தீர்
மானமானபிறகு, மூத்தவன் தன்னா லியன்றமட்டில்
தன்னுடைய ஆஸ்தியில் அவர்கள் ஜீவனத்துக்கு ஒரு
ஏற்பாடுசெய்து, அவர்களைப் பிரத்தியேகமாய்வைத்து,
அந்தப்பிள்ளைக்கும் பாடசாலை சம்பளம் கொடுத்து
வந்தான். அந்தப் பிள்ளையின்மேல் அவனுடைய
நேரான விசாரணை இடைவிடாதிருக்கக் கூடாமற்
போனதினாலே அந்தப்பிள்ளை விளையாட்டுச் சிறுவர்
களோடு சேர்ந்து கல்வியில்பூஜ்ஜியமாகி இப்போது
உபாயஸ்தனா யிருக்கிறான். இத்துன்பத்திற்கெல்லாம்
காரணம் நமது சாஸ்திரபயமல்லவா?

இதனாலே நமது முன்னோர்கள்பேரில் தோஷஞ்
சொல்ல வந்ததாக எண்ணலாகாது. அவர்கள் அக்கா
லத்திற்குத்தக்கபடி அவர்களுக்குத் தெரிந்தமட்டில்
சொல்ல வேண்டியவைகளைச் சொல்லியும் ஏற்படுத்த
வேண்டியவைகளை ஏற்படுத்தியு மிருக்கிறார்கள். கபட
மற்ற மவுடீகமான காலத்தில் ஒவ்வொரு புத்திமான்
தோன்றி, எத்தனையோ ஏற்பாடுகள் செய்திருப்பது
மகாவிசேஷம். அவை இல்லாவிட்டால் இப்போது
ஏதாவதொன்றை முதலிலிருந்து ஆராய்ந்து செய்வது
வெகு கஷ்டமாகமுடியும். முன்னோர்கள் செய்தன
வற்றுள் இக்காலத்திற்கு உதவியானவைகளும் உதவா

தவைகளுமுண்டு. ஆதலால் ஏற்றவைகளை ஏற்றும், ஏலாதவைகளை நீககியும், மாற்றவேண்டியவைகளை மாற்றியும், சேர்க்கவேண்டியவைகளைச் சேர்த்தும், சீராய் ஒழுகுவதே நமதுகடமை.

இந்துசமயிகளொழுக்கம்.

ஆகஸ்டு 22௳ தத்துவவிவேசினியில் ஒரு விந்தையான விஷயம் கண்ணுற்றேன். நாஸ்திகர்கள் தேவனொருவ னுண்டென்கிற பயமற்றவர்களாதலால், தாரம், தாய், தங்கையென்கிற பேதம்பாராட்டமாட்டார்களென்று ஒரு பிரசங்கியார் சொன்னதாகக் கண்டிருக்கிறது. சிவநாமங்களை ஸ்மரணைசெய்துகொண்டிருக்கிற வாயினால் அப்படிப்பட்ட ஆபாசமான வார்த்தைகளையும் சொல்லியிருப்பரோ! பரமசிவம் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற அவருடைய மனதிலும் அப்படி நினைந்திருப்பரோ! அவரப்படிச் சொல்லியிருப்பாராயின், அது அவருடைய தோஷமன்று; இரத்தக்கலப்பு சம்பந்தமான அவருடைய முன்னோர்களின் தோஷமே. ஆஸ்திகர்கள் தொழுந்தேவர்கள், அவருடைய பூர்வீக ஆசாரியர்களாகிய ரிஷிமுதலானவர்கள், அவர்கள் தொழுகிற மிருகங்கள், இவற்றின் [இழிவுபற்றி உயர்திணை அஃறிணையோடு சேர்க்கப்பட்டது.] செய்கைகளும் அப்படியே. இதற்குச் சில திருஷ்டாந்தங்கள் அப்பத்திரிகையிலேதானே எடுத்துக்காட்டப்பட்டன. அவர்களுடைய சித்தாந்தமும் அப்படியே;—மற்ற மதஸ்தர்கள் சொல்வதுபோல அவர்களுடைய கடவுளும் ஆதியில் ஆண் பெண் இரண்டைத்தான் சிருஷ்டித்தார்; இவ்விருவருக்கும் பிள்ளைகளும் பெண்களும் பிறந்தார்கள்; அப்பிள்ளைகளுக்குப் பெண்சாதிகள் யார்? அப்பெண்களுக்குப் புருஷர்கள்யார்? அன்றியும், நாளதுவரையில் மனிதர்களையும் மற்றுஞ் சகலத்தையும் கடவுள்தான் சிருஷ்டித்துவருகிறதாகச்சொல்லுகிறார்கள். அப்படியாயின், கடவுளானவர் மனிதர்கள் யாவருக்கும் பிதாவாகிறார், அப்படியே சொல்லியும்வருகிறார்கள்; அப்பிதாவினுடைய பிள்ளைகளும் பெண்களும், சகோதரர்களும் சகோதரிகளுமாகிறார்கள். இவர்களுக்குள் விவாகமுறைமைக்கு யோக்கியதை யுண்டென்று சொல்லக்கூடுமோ? அன்றியும், பிர்மாவை சிருஷ்டிகர்த்தரென்கிறார்கள்; தான் சிருஷ்டித்ததினால் தனது பெண்ணாகிய சரஸ்வதியை அவர் பெண்டாகக் கொண்டார். சிவனுக்குப் பார்வதியும் விஷ்ணுவுக்கு லட்சுமியும் அவ்வாறாகத்தா னிருக்கவேண்டும்; வேறேகெதியில்லை. இம்மாதர்கள் சிருஷ்டிக்கப்பட்டவர்களல்ல, வேறேசில சத்திகளென்று சிலர் சொல்லுகிறார்கள்; அந்தச் சக்திகள் வந்தவழியை ஆராய்ந்தால், அத்திப்பழத்தைப்பிட்டாற்போல, மேற்கண்டவண்ணமாகத்தான் முடியும். அந்தச் சக்திகள் சர்வேஸ்வரனைப்போல அநாதி யென்கிறார்கள். சர்வேஸ்வரன் அநாதியானவன்; சக்திகள் அநாதியாயின; பிரகிருதி அநாதியாயிற்று; ஆத்துமா அநாதியாயிற்று; வேதங்கள் அநாதியாயின; சர்வேஸ்வரன் இருப்பதற் கிடமாகியவெளி அநாதிதான், ஆகவே காலமும் அநாதிதான். கர்மத்தினால் மனிதன்பிறக்கிறபடியால் ஆதியில் மனிதனுண்டாவதற்குக் கர்மந்தான் காரணமாக வேண்டலின், கர்மமும் அநாதியாகவேண்டும். கிறிஸ்தவக்கடவுள் ஆறுநாள் சிருஷ்டிசெய்து ஏழாம்நாள் இளைப்பாறினாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. சுமார் ஐம்பது வருஷத்திற்குமுன்னே நான் வாசித்தபோது அந்த ஒருநாள் இந்த ஒருநாளாகவே யிருந்தது. எந்தப் பாதிரியாரும் வேறுவிதஞ் சொன்னதில்லை. ஐரோப்பா சாஸ்திரிகள் பூமிமுதலிய ஒவ்வொருபதார்த்தமும் தற்சொரூபமடைதற்கு எவ்வளவோகாலஞ்சென்றதைக்கண்டறிந்து ருசுப்படுத்தி நிர்மாணஞ்செய்தபிறகு, அதைக்கண் டுண்மையை யறிந்துகொண்ட பாதிரிமார்களின் போதனையால் இப்போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு தேவநாளென்பது எத்தனையோ யுகமென்று சொல்லத்தலைப்பட்டான். அதுபோலவே, ஐரோப்பா சாஸ்திரிகள் கண்டறிந்து சொல்லச்சொல்ல, நாஸ்திகர்கள் விசாரணைசெய்து ஆட்சேபிக்க ஆட்சேபிக்க, ஆஸ்திகர்கள் இனி எதையெதை அநாதியிற் கொண்டுபோய்ச் சேர்ப்பார்களோ தெரியவில்லை. இந்த சங்கதிகள் பிரஸ்தாபவிஷயத்திற்கு அவ்வளவு அவசியமல்லவாதலின் பிந்திப்பேசுவோம்.

ஆஸ்திகர்களுக்கு விபசாரதோஷமுண்டோ இல்லையோவென்பதை ஆராயவேண்டில், சென்ற ஆகஸ்டுமீ 22௳ பத்திரிகையில் பிர்மா விஷ்ணு சிவன் இவர்களுடைய குணாதிசயங்களைக் கூறியிருக்கிறதே போதுமானது. ஆஸ்திகர்களே, ஹரிஹரபுத்திரனென்பவன் யாருக்குப்பிறந்தவன்? சிவன் பிச்சாண்டியாகி ரிஷிபத்தினிகளைக் கெடுத்தும், விஷ்ணுமோகினியாகி ரிஷிகளைக்கெடுத்தும் அவவிருவரும் சந்தித்துக் காமவிகாரங்கொண்டு புணர்ந்ததின் பயன்தானே. சிவலிங்கமாவதென்ன? அந்தரிஷிகளின் சாபத்தால் சிவனது ஆண்குறியாகிய லிங்கம் அற்றுவிழ, அதை விஷ்ணுபெண்குறியாகித் தாங்கிக்கொண்டு ஒன்று சேர்ந்திருக்கிற உருவந்தானே. அந்தப்பெண்குறி ஆவிடையென்று சொல்லப்படுகிறது. மானிடசிருஷ்டிக்கு ஆதாரமாகிய அவ்விரண்டுகுறிகளோடு சிருஷ்டிகர்த்தாவென்று நீங்கள்சொல்லுகிற பிர்மாவைப் போதாக்குறைக்குப் பீடமாகச்சேர்த்து, சிவலிங்கத்தை திருமூர்த்திசுவரூபமென்று நீங்கள் சொல்லவில்லையா! இந்த அவலட்சணமானகதையை அந்தமட்டிலாவது ஒழித்துப்போடாமல், உங்களுக்கும் உங்கள் சந்ததியாருக்கும் அதினால் நல்லொழுக்கம் விர்த்தியாகும்படி, திரு-என்னும் சிறப்புப்பெயருடைய மயிலையிலும் மற்றும ஸ்தலங்களிலும் பிச்சாண்டிமோகினி உற்சவம்செய்து வருகிறீர்களே! உங்களுக்கு இன்பந்தருவதாகிய்வேடிக்கையான உற்சவமாயிருப்பதினாற்றானே அதைநடத்திவருகிறீர்கள். பிச்சாண்டியைவைத்தூத தூக்கிக்கொண்டுவரும் விமானத்தைச் சுற்றிலும் நிர்வாணமான பெண்பதுமைகளாலலங்கரித்தும், மோகினியைவைத்துத் தூக்கிக்கொண்டுவரும் விமானத்தைச்சுற்றிலும் நிர்வாணமான ஆண்பதுமைகளாலலங்கரித்தும் உங்கள்பெண்டுகள்முதலாய் யாவரும் பார்க்கும்படிச்செய்து காமவிகாரத்தை எழுப்புவதினால் கூடாவொழுக்கம் நன்றாய் வெளியாகிறது. இது காமாதுரசம்பந்தமானசட்டத்திற்கு விரோதமானதே. ஏதோமதசம்பந்தமானதாயிருக்கிற தென்றல்லவோ துரைத்தனத்தார் பாராமுகமாயிருக்கிறார்கள். உடன்கட்டை யேறுவதாகிய கொடிய செய்கையை வெகுநாளைக்கு முன்னமேதானே நிறுத்திப்போட்டார்கள். அதற் கிரண்டாவதாகிய செடில்குத்தியாடல் நெருப்பு மிதித்தல் முதலிய துஷ்டசெய்கைகளை ஜனங்களுக்குக் கொஞ்சம் நாகரீகம் வந்தபின்பு நிறுத்தினார்கள். மேற்படி விகாரமான உற்சவத்தை நிறுத்துவதற்கு இன்னும்கொஞ்சம் நாகரீக விர்த்தியை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களென்று நாம் நம்பவேண்டும். முன்னோர்களுடைய ஒழுக்கத்தைக் கைசோரவிடாத உத்தமர்களே,பின்பற்றுங்கள் பற்றுங்கள், நீங்களும் அவர்களைப்போலவே செய்யுங்கள் !!

உங்கள் ஆசாரியர்களாகிய ரிஷிகளுடைய பிறப்பும்காமாதுரச்செய்கையும் உங்களுக்குத் தெரிந்தே இருக்குமே. பிர்மா-தன்பெண்ணையும், தேவதாசிகளாகிய ஊர்வசியையும் திலோத்தமையையும்; விஷ்ணு-கோபிகாஸ்திரீகள் முதலானவர்களையும்; சிவன்-ரிஷிபத்தினிகளையும்; இந்திரன்-அகலிகையையும்; சந்திரன்-பிரகஸ்பதியின் மனைவியையும்; பிரகஸ்பதி-தன் தமையனாகிய உதத்தியன் என்பவனுடைய மனைவியையும்; சூரியன்-குந்தி முதலானவர்களையும், பெண்குதிரையையும்; வாயு-கேசரியென்னுங் கெந்தர்வனுடைய மனைவியாகிய அஞ்சனாதேவியையும்; பராசரர்-செம்படத்தியையும்; வியாசர்-சகோதரன் மனைவியையும்; அத்திரிரிஷி பெண்மானையுஞ் சேர்ந்தது காமவிகாரத்தினாற்றானே; இப்படிப்பட்டகதைகளை நீங்கள் இன்பமாய்வாசித்து மனனஞ்செய்வதுபோலச் செய்வதற்கு எங்களுக்கு இஷ்டமில்லை; ஆதலால் எங்களைப்பார்க்கிலும் உங்களுக்கே இப்படிப்பட்ட அவலட்சணமான சங்கதிகள் மிகுதியாய்த்தெரியும். விஸ்வாமித்திரன் கதி என்ன? அதிககாமியும் கோபியுமல்லவா? ராசாக்களுக்கும் ரிஷிகளுக்கும் சந்ததியில்லாவிடில், ஆசாரியர்கள் புத்திரசந்தானம் உண்டுபண்ணவில்லையா? சகோதரர்களுச்குள் சந்ததியில்லாதவர்களுக்கு அவர்களுடைய மனைவிகளை மற்றச் சகோதரர்கள் சேர்ந்து சந்ததியுண்டுபண்ணவில்லையா? சந்நியாசியாய்ப்போனவர்கள் காமத்தினால் பட்டபாட்டையும் கெட்டகேட்டையும் அறியீரா? இக்காலத்திலானால், அப்படிப்பட்டவர்கள் சோரத்துக்காகவும் பலாத்காரமான புணர்ச்சிக்காகவும் சிட்சையடைந்தேயிருப்பார்கள். நீங்கள்தொழும்பசு எந்தமறைவிடத்தில் புணருகிறது? அதன் பிள்ளையாகிய எருது அதற்குப் பொலி யெருதாயுமிருந்திருக்கிறதே.

இந்துக்களுக்குள் கோத்திர சூத்திரமில்லாதவன் ஒருவனுமில்லை. மேற்கண்டபரம்பரையில் உதிரசம்பந்தமாக வந்த நீங்கள் நடக்கும் நடத்தைகளைக் கொஞ்சம் ஆலோசிப்போம். தேவர்கள்-அக்கினி-வேதப்பிராமணர்கள் சாட்சியாக விவாகஞ்செய்துகொண்டபத்தினி சுகமாயிருக்க அநேகர் வேசிகமனஞ்செய்து வருகிறார்கள்; ஒருமனைவி இருக்க, பல மனைவிகளை விவாகஞ் செய்து கொள்ளுகிறார்கள், இவற்றிற்கு உங்கள் வேதங்களும் முன்னோர்களின் செய்கையும் இடங்கொடுக்கின்றனவே. இவை எல்லாம் காமவிகாரத்தினால் நடந்துவருகிறவையல்லவா? நாஸ்திகர்களுக்குத் தெய்வ நம்பிக்கையும் நரகபயமுமில்லாமையினால், அவர்கள் தாய்தாரமென பேதம் பாராட்டார்களென்றதனால், அந்த நம்பிக்கையும் பயமுமிருப்பது பற்றி ஆஸ்திகர்கள் ஒருக்காலும் அப்படிச்செய்யாரென்பதாயிற்று. இது உண்மையென்று ஆஸ்திகர்கள் உறுதியாய்ச்சொல்லமாட்டுவார்களா? அவர்களுக்குள் பரதாரகமனஞ்செய்து சிட்சையடைந்தவன் ஒருவனுமில்லையா? தேவாலயங்களின் சில தருமகர்த்தர்கள் தேவனுக்குத்தொண்டுசெய்யப்

புகுந்து, அத்தேவனுக்கே உரித்தாய் அடிமைபூண்டு ஊழியஞ் செய்து வரவேண்டியதேவதாசிகளோடுசம்பந்தம் வைத்திருக்கிறார்களே. தாங்கள்வேடிக்கைபார்த்துஉல்லாசமாய்இருக்கும் பொருட்டு தேவனை முன்னிட்டுக்கொண்டு வசந்த உற்சவஞ் செய்கிறார்கள்; அதில்தாசி தன்கழுத்தில்சர்ப்பத்தைப்போட்டுக்கொண்டு நடிப்பது என்னசாம்பிரதாயம்? தேவன்கண்திறந்து வேடிக்கை பார்க்கும்பொருட்டோ, அல்லது தாங்கள் வேடிக்கை பார்த்துச் சந்தோஷிக்கும்பொருட்டோ? இதைப்பார்க்க முக்கியமாய் எத்தனைவிடபுருஷர்கள் கும்புசேருகிறார்கள். இப்படிப்பட்டசெய்கையைப்பேய்த்தனமானசெய்கையென்று புத்திமான் சொல்வதற்குத்தடையில்லை. இப்படிப்பட்ட காமவிகாரமானசெய்கைக் குட்பட்டவர்கள் என்னதான் செய்யமாட்டார்கள! "கொலையஞ்சார் பொய்நாணார் மானமுமோம்பார், களவொன்றோ வேனையவுஞ்செய்வார்-பழியொடு, பாவமிஃதென்னார் பிறிதுமற்றென்செய்வார், காமங்கதுவப்பட்டார்" இந்தப்பாட்டு நாஸ்திகர்களுக்குமாத்திரம் சொல்லியிருக்கிறதோ, ஆஸ்திகர்களுக்குஞ்சொல்லியிருக்கிறதோ ஆலோசியுங்கள்.

(இன்னும் வரும்.) A. M.

கடிதம்.

தத்துவவிவேசினிபத்திராதிபரவர்களுக்கு.

ஐயா.

எல்லாம் வல்லஓர்தனிமுதற்பழம்பொருளுளதோ? இலதோ! பூதத்தின் சையோகத்தாலாயது நாம் காணும் இவ்வுலகமென்பது சர்வசம்மதம். பூதம் தானே காரியப்படாதாதலால், காரியப்படுத்துவான் எண்குணமுடைய எங்கும் நிறைதனிமுதற்பழம்பொருளொன்று உளது, அது தன்கியானவல்லமையால் ஐந்தொழிலானுலகையூட்டி யுறக்கிப்பாதுகாத்து வருகின்றது என்பதே ஆத்திகர்துணிபு. ஆணுக்கும் பெண்ணுக்கும் பருவகாலத்தில் தனக்குத்தானே இன்பஞ்செனித்து ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டுக் கூடிக்குலாவி மக்களைப்பெறுவது பிரத்தியக்ஷ பிரமாணமா யிருப்பதா லிதுபோலவே ஒன்றைவிட்டொன்று தனித்திராத பூதங்களின்றிரிபே இவ்வுலகமாதலாலும், வறுமை, பிணி, மூப்பு, மரணம், துன்பம், துக்கம், நஞ்சுமுதலிய தீமைகள் நிறைந்து விட்டகலாது தினமும் வருத்துவதால் இதை சீர்ப்படுத்தி நடத்தவல்ல திறமையுடைய கருணாநிதி அருளே திருமேனி கொண்டிருக்குமாகில், உலகமிந்த சீர்கேட்டைக்காணா தாதலாலும், நித்தனால் நிர்மாணிக்கப்பட்ட நீணிலம் நித்தியமாய் நில்லாதொழிவதேனென்று சங்கைகொண்டு விசாரிப்பதே நாஸ்திகர்துணிபு.

குழவி ஜெனித்த ஆண்டு நிறைவிலேயே மாதா, அம்மா, நாயினா, தாதா, ஆயா, சாமி, யென்று நிதமும் கற்பித்து இல்லத்தில்நேரும் விசேஷதினத்தில் நடுவீட்டில் படையலிட்டு தூபம்காட்டும்போது ஓராண்டு நிறைந்த குழவியை தரையில்கிடத்தி சாமீ தெய்வமேயென்று கும்பிடச்செய்து கடவுள் கியானமூட்டி வளர்த்துவருவதும் நாளேறவேபள்ளிக்குச்சென்று கல்விபயிலும்போது உபாத்தி ஆரம்பத்திலேயே ஓம் நமசிவாயசித்தம் நம:, ஹரிநமோத்துசிந்தம், என கற்பித்து கடவுள் கியானமூட்டி வருவதும் யாவருக்குமனுபவம். கடவுளில்லையென்று கனவிலும் நினையாத கடவுள் கியானிகள்மத்தியில் நின்று அவர்பழக்கவாசனையாதி கிருபாநோக்கம்பெற்று, படிப்பதும் பதிக்கியானம், கேட்பதும் பதிக்கியானம், செய்கையும் பதிக்கியானமாக பழக்கிவரும் நாட்களேறிக்கொண்டு அறிவுமுதிர்ந்து வயதேறப்புத்திதேறி சுவக்கியானம் தோன்றி, தான் கண்டும், கேட்டும், பக்தியும் விசுவாசமுங்கொண்டு, சற்ற வேதாகமபுராணாதிகளில் சந்தேகம் ஜனித்து அவைகளில் தேர்ந்த விறபன்னரைக் கேள்விகேட்குங்கால், தகுந்தவிடைபகரவேலாது, இப்படிக்செல்லாம் கேள்விகேட்டால் உத்தரவு சொல்வதார், உங்கள் சந்தேகத்தை நிவர்த்திசெயய கடவுள்தான் வரவேண்டுமெனக் குளறி, புறத்தே, மதப்பித்து மண்டைக்கேறி, மாநிலத்தை வஞ்சித்து இதம்பேசித்திரியும் ஞானக்கள்ளரின் மாயஜாலத்தில் மனம் சிக்குண்டுநம்பி மோசம்போனவர்களாய், நாம் அகண்டபண்டிதரிடத்தில் சந்தேகமற பாடம்கேட்டுக் கற்றுவல்லோம். இங்கிலீஷிலும் தேர்ந்து சிறந்தபட்டமும் பெற்றோம், ஆதலால் நமக்குமிஞ்சின பண்டிதனில்லை, நம்மைவெல்ல வல்லவிற்பன்னனு மில்லையென்று இறுமாந்து மதப்பித்து மதியை மயக்க மயங்கிக் கிடப்போர் மனந்திரும்பி சுவபுத்தியோடு சொல்புத்தியுங்கொண்டு சமய ஆராய்ச்சிகொண்டு புராணசாத்திரக்குப்பையைக் கிளறி யாராயுங்கால் பொய் மெய்தோன்றுமேயல்லாது மற்றப்படி யெவ்விதத்துணிவும் செல்லாது; இனி இத்தகையவல்லாரை யேதாவது கேட்டால், தெரிந்ததை யுரைத்தும், கண்டதைக்கண்டபடி யுரைத்தும், காணாததைச் சமத்காரமாய் மனப்பிராந்தியால் கட்டுரையாடாமலும், புறத்தே புறங்கூறித்திரியாமலுமிருக்கும்படி கேட்டுக்கொள்கின்றனன், மன்னிக்கவும்.

P. M.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தீன்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ ... அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே ஒருஅணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3—0—0
வெளி " " —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	As.	P.	வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)		Rs.	As.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிராஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 38.] MADRAS:—SUNDAY SEPTEMBER, 19, 286. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

தெய்வச்செயல்.

ஜர்மனிதேசத்து ஒரு சிறந்த கிரந்தகர்த்தாவானவர் "மனிதர்கள் தங்கள் வைராக்கியத்துக்கேற்பத் தத்துவம்பேசுகிறார்கள்" என்று உண்மையாகவே உறுத்திச் சொல்லியிருக்கிறார். நாம் மதக்கோட்பாட்டிற்குள் நுழைந்து பார்ப்போமாகில், எப்போதும் அடிவாரத்திலே ஸ்வப்பிரயோஜனக்கருத்தைக் காணுகிறோம். தாமஸ்கூப்பரானவர் தன்னுடைய வாழ்நாள் சரித்திரத்திலே இருப்புப்பாதையிலே நேரிட்ட இடையூறானது தான் கிரிஸ்தவனானதற்கு முடிவான பரிசோதனையாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறார். மற்றெல்லாவண்டிகளும் இடியுண்டுசிதைந்துபோக, அவர் ஏறியிருந்த வண்டிமாத்திரம் அற்புதமாய்க் காப்பாற்றப்பட்டது அவர்பேரில் கடவுள் திருஷ்டிவைத்திருந்தாரென்பதற்கு அதுவேதெளிவான அத்தாட்சி; தாமஸ்கூப்பரை கிரிஸ்தவனென்று எண்பிக்கும்பொருட்டே அந்த வண்டித்தொடர் சேதமடைந்ததென்று உள்ளபடி ஒருவர் நினைக்கவேண்டும். இறந்துபோனவர்களையும் குத்துயிராயிருக்கிறவர்களையும் பற்றிச் சிந்தனையொன்றுமில்லாமல், அவர்முழந்தாள்படியிட்டுக் கடவுளைப் பிரார்த்தனைசெய்தார். இதைப்பார்க்கிலும் ஸ்வப்பிரயோசனதிருஷ்டி வேறொன்றிருக்கிறதா ? மேலும், இது கொடிய கல்நெஞ்சுக்குக் கோரமான திருஷ்டாந்தமாயிருக்கவில்லையா? தாமஸ்கூப்பர் தனக்கு இருப்புப்பாதை இடையூறுசம்பவித்து, கிரிஸ்தவர்கள் தனக்காகப் பெருந்தொகை கையொப்பஞ்செய்தபின்பு, தீவரமாய்க் கண்டறிந்ததுபோலப் பிரபஞ்சத்தில் "கடவுளினது சங்கற்பத்தைக்"காணுக ஐயோ ஒருதெளிவுள்ள சுவக்கியானி, தன்னைப்போன்ற ஜீவர்கள் மரிப்பதினால் தனக்கு அநித்தியமான அல்லது நித்தியமான பிரயோசனமுண்டாவதாயிருந்தபோதிலும், அந்த மரணத்தைப் பராமுகமாய்ப் பார்க்கும்படியான இழிந்த குணத்தை ஒருக்காலு முடையவனாயிரானே.

நமது சிநேகிதர்களில் ஒருவரோடுகூட ஒரேவீட்டில் வாசஞ்செய்து கொண்டிருக்கிற ஒருதேவவிஸ்வாச துரைசானி "சமாச்சாரம் கேள்விப்பட்டீரா? Foote என்பவருடைய வீடு எரிந்துபோய்விட்டதாம், அவர் பேரில் கடவுளினுடைய ஆக்கினையைப் பார்த்தீரா?" என்றுசொன்னாள். அதற்கு நமதுசினேகிதர் "அவலட்சணம், ஒருதேவாலயம் எரிந்துபோய்விட்டால், கடவுள் அப்படிச் செய்தாரென்று சொல்லுவையா ? என்றுகேட்டார். அதற்கு அந்தம்மாள் "ஓ! அதுவேறுவிஷயம்" என்று மறுமொழிகூறினாள். அப்படியே சொல்லுவார்கள்,பரிதாபம்! குருக்கள்மாருடைய போதனையால் அறிவு மழுங்கியிருக்கிற மதப் பித்தர்களுக்கு "அதுவேறுவிஷயம்" என்றுசொல்வது தவிர வேறேவகைகிடையாது. அதாவது—அவர்கள் எதைநம்ப விரும்புகிறார்களோ அதுவேயதார்த்தம், எதைநம்ப விரும்புகிறதில்லையோ அது அபத்தம். இதுதான் எப்போதைக்கும் மதத்துக்கு ஜீவனும் தர்க்க சாஸ்திரத்துக்கு ஹானியுமாயிருக்கிறது.

G. W. F.

கடவுள்.

கடவுள் இருக்கிறாரென்றுவது அல்லது இல்லையென்றுவது ருஜுகொடுப்பது அசாத்தியம்.

கடவுள் இருக்கிறாரென்றும் அல்லது இல்லையென்றும் சாட்சிபகர்வது அவரவருடைய சாமர்த்தியத்தின்பேரில் ஆதாரப்பட்டிருக்கிறது.

சடபதார்த்தங்களையன்றி வேறொருவஸ்து உலகத்தில் இருக்கிறதாக துணிந்தால், அத்தன்மையான வஸ்து இல்லையென்றும் அத்தன்மையான வஸ்து இருக்கிறது அசாத்தியமென்றும் வாதிப்பேன்.

பொருளில்லாத இரண்டு மொழிகள் இவ்வுலகத்தின் எத்தேசத்து எச்சமயவாதிகளுக்குள்ளும் சாதாரணமாக வழங்கிவருகின்றன. அவை—கடவுள்-ஆன்மா.

ஆத்திகர்கள் பொருளில்லாத இம்மொழிகளைப்பற்றி வாதாடுகிறார்கள். அப்படி வாதாடுவது அப்பிரயோஜனம். ஒருவரும் ஒருகாலத்திலும் கடவுளைச்கண்டதில்லை; கடவுளைக் கண்டதாகப் பகருகிற ஒவ்வொருவரும் நிரூபிக்காவிடில் சுத்தபொய்யர்கள்.

ஆதியில் கடவுள் யாவரும் காணும்படி தமது ரூபத்தைகாட்டினார் எனில், இக்காலத்தில் அவரைப்பற்றி அநேக சங்கங்கள் கூடி வாதாடிக்கொண்டிருக்கிற அச்சங்கத்தார்களின் சந்தேகம் தெளியும்படி யேன் தமது ரூபத்தை காட்டாதிருக்கிறார்! பரிசுத்தவான்களுக்கே தமது ரூபத்தை காட்டுகிறாரெனில், நோயுள்ளவருக்கல்லவோ அவிழ்தங் கொடுக்கவேண்டும்? அதுபோல, தம்மைப்பற்றி சந்தேகங் கொண்டவர்களுக்கல்லவோ அவர் தமது ரூபத்தைக் காட்டவேண்டும்? சந்தேகங் கொண்டவர்கள் இதுவரையில் கண்டதாக தெரியவரவில்லை. அல்லது பரிசுத்தவான்களென்று சமயவாதிகளால் கூறப்பட்ட தெய்வீக பக்தர்களாகிலும் இக்காலத்தில் கண்டிருக்கலாமே, அப்படியு மில்லை. அன்றியும், ஊன்தேகத்தோடு கூடிய மானிடர் அவரைக் காணக்கூடாதென்றும், கண்டால் கண்களுக்கு ஊனம் உண்டாகுமெனில், அவரால் சமைக்கப்பட்ட மானிட கண்களுக்கு பின்னம் உண்டாகாதபடி யேன் தோன்றுதிருக்கிறார் ! ஆகையால்,இக்கோட்பாடுதவறு.

பாவபுண்ணியங்கள் இரண்டும் அவரால் சமைக்கப்பட்டதனால், அவ்விரண்டையும் அனுபவிக்க நன்மையுடனே தீமையையும் புரியும் இருவகை மக்கள் இருக்கவேண்டுமென்றும்; தாம் யாவருக்கும் காணும்படி தோன்றிவிடின் யாவரும் பாவத்தை வெறுத்து மோட்சத்தையே நாட, தம்மால் சமைக்கப்பட்ட நரகம் அனுபவிப்பாரின்றி பிரயோஜன மற்றுவிடுமென்று எண்ணங்கொண்டு தோன்றுதிருக்கிறாரெனில், அவரே நம்மை பாவஞ்செய்ய தூண்டுகிறாரென்றும்; பாவஞ்செய்தபின் நம்மை நரகதண்டனை அனுபவிக்கும்படி பலவந்தஞ் செய்கிறாரென்றும், அவரே நமக்கு நாசகாரணராக இருக்கிறாரென்றும்; ஆகவே பூரண சற்குணரான கடவுள் நன்மையுடனே தீமையும் புரிபவர் என்றும், தெய்வீகத்தன்மை அவரிடத்தில் விளங்கவில்லை யென்றும் தோன்றுகிறது. ஆகையால், இக்கோட்பாடு தார்க்கிகமதத்திற்கு மாறுபட்டு கடவுள் இல்லையென்பதாயிற்று.

கடவுள் முற்காலத்தில் தோன்றினர் மறுபடியும் சில நூற்றாண்டுகள் கழிந்தபின் தோன்றுவாரெனின், அவர் ஒருதடவைதோன்றி மறுதடவை தோன்றுவதாகிய இதன் மத்திய

காலமானது அநேகநூற்ருண்டுகளாகிறது. இந்த மத்தியகாலத்தில் அநேகங்கோடி பிரஜைகள் தோன்றி மறைகிருர்கள். அந்த மத்தியகாலத்தில் தோனறிமறைந்த அவ்வளவு ஏராளமானபேரும் கடவுளைக் காணுததினுல், அவரை மறந்து அவருக்கு செலுத்தவேண்டிய கடமைகளை கைநெகிழவிட்டு அவர் கோபாக்கினிக்கு இரையாகிருர்கள். ஆகையால், அவர் ஒவ்வொருவரும் தம்மை வழிபடவேண்டுமென்பது அவர் சித்தமானுல், ஒவ்வொருவருக்கும் தரிசனை கொடாதிருக்கிற காரணமென்ன ! ஆகையால், கடவுள் இருக்கிருரென்று ஒருவாற்ருனுஞ் சமாதானம் கொடுத்தல் கூடாது.

தேவாதீன சம்பவமான அற்புதங்கள் நடந்தனவென்றும், பௌஷீகதரிசனங்கள் சொல்லப்பட்டன வென்றும் எச்சமயநூல்களும் கூறுகின்றன. அற்புதங்களும் பௌஷீகதரிசனங்களும் மனிதவல்லமையைக்கடந்தனவாதலால, அவற்றைச்செய்யவல்லஒருவர் இருக்கவேண்டும். அவரேகடவுள் எனநியாயவழுவாக பேசுகிருர்கள். அற்புதமானது இயல்பு பிரமாணத்தை எதிர்த்து நிற்கிறது. எப்படியெனில், அற்புதமானது தெய்வீகப் பிரமாணத்தையும் மனித வல்லமையையும் கடந்தகிரியையாம்.

அற்புதங்களை ஆதியந்தமாக ஆராய்ந்து பார்க்குமிடத்து. பிரமதேவர் தாழம்பூவுக்கு உயிர்கொடுத்து பேசுவித்ததும். விஷ்ணு திருப்பாற்கடல் கடைந்ததும், சூரியனை சக்கரப் படையால் மறைத்ததும், சிவன் நெற்றிக்கண்ணுற் காமனை யெரித்ததும், நரியை பரியாக்கினதும், யேசு சமுத்திரத்தின்மீது நடந்ததும், காற்றை அதட்டி அசையாதிருக்கும்படி கட்டளையிட்டதும், ஆகிய இக்கிரியைகளா கடவுளை காட்டத்தக்கது? இக்கிரியைகள் அனைத்தும் அவரால் உண்டான உலக இயற்கைப் பிரமாணத்திற்கு மாறுபட்டு நிற்கின்றது. தம்மால் நிரூபிக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குமாருக தாமே நடந்தாரென்றும் இவ்வித கிரியையினுலன்றி பூலோக இயற்கை கிரியையின்படி தம்மைக்காட்ட அவருக்கு தெரியாமற் போயிரறென்றும் திருட்டாந்தப்படுகின்றது. ஆகையால், அற்புதங்களென்னும் இக்கிரியையை உடையவர்கள் கடவுள் அல்லவென்றும் கடவுள் என்ருென்று இல்லையென்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

மனிதபுத்திக் கெட்டாத வருங்கால சம்பவ பிரசித்தமே பௌஷிகதரிசன மென்னப்படுவதாம். ஒருவன் இவ்வண்ணமாக பௌஷீகதரிசனம்செய்வானுகில் அவன் கடவுளால் அனுப்பப்பட்டவனென்றும் அவன்கூறியவைகள் எதார்த்தமானவையென்றும் ஒத்துக்கொண்டுவருகிருர்கள்.

பூலோகத்தில் நடப்பனவென்று வீணுக வாயில்வந்தபடி சொன்னவைகளை ஆராயுமிடத்து அவைகளிலொன்றும் நடந்ததாக இதிகாசங்களினுலும் நமது அனுபவத்தினுலும் தெரியவரவில்லை. எதிர்காலத்தில் நடப்பனவென்று வேதங்களில் கூறியிருக்கிற பௌஷீகதரிசனங்களிலும் புத்திமான்கள் எழுதினுல் அதி திறமையாக எழுதுவார்களே. ஆதலினுல், இச்சாட்சிதானு கடவுள் இருக்கிருரென்று காட்டுகிறது? ஆகையால், கடவுள் என்ருென்று இல்லை யென்பதாயிற்று.

உலகத்தை சிருஷ்ட்டித்து புத்தியோடும் சுவாதீனத்தோடும் ஆளுகிறவர் ஒருவருமில்லையென்று விளங்குகிறது.

M. M.

இந்துசமயிகளொழுக்கம்.

(148-வது பக்கத்தொடர்ச்சி.)

விவாகசம்பந்தமான முறைகள் பலதேசத்தாருக்குள் பலவிதமா யிருக்கின்றன. துருக்கருக்குள் தன் மானத்தைப் பிறருக்குக்காட்டக்கூடாதென்கிற ஏதோ ஒரு நியாயத்தைக்கொண்டு, ஒருவன் சிற்றப்பன் பெண்ணைக்கலியாணஞ்செய்துகொள்ளுகிருன். இதற்கொரு கதையுண்டு;—ஒரு வர்த்தகன் தூரதேசம் போகவேண்டியிருந்தபோது தன் மனைவியையழைத்து, நான்திரும்பிவர நெடுநாட்செல்லுமாகையால் ஒருவேளை உனக்கு இச்சையுண்டாகுமாகில், மெத்தைமேலேறிப்பார்த்து, கொல்லைவெளியிலேமலோபாதைக்குப்போகிறவர்களுக்குள் தூரமாய்ப்போய்க் கடைசியாக தனித்து உட்காருகிறவனை யழைப்பித்து ஆலிங்கனஞ் செய்துகொள்ளென்று சொல்லிப்போயினுன். சில நாள்கழிந்தபிறகு இவளுக்கு ஞாபகமுண்டாகிக் கணவன் சொன்னபடி யழைப்பித்தாள். அவன் துருக்கன். அவன் காலலும்பத்தண்ணீர் கொண்டுபோன மொந்தையைக் கையிற் பிடித்துக்கொண்டு வந்தவுடனே,இவள் ஆவலோடு அவனை அணைத்துக்கொள்ள,மொந்தை தவறிவிழுந்து உடைந்துபோயிற்று. அதற்காக அவன் புரண்டு புரண்டு அழுதான். அவள் வதிலுக்குப்பொற்குடந் தருகிறேனென்று சமாதானஞ் சொல்லியுங் கேளாமல், என்மானத்தை வேருென்றிற்குங் காட்டமாட்டேன், என்குடுவையே எனக்குவேண்டுமென்ருன். அண்டை அயலார் கும்புசேர்ந்து அவனைச்சமாதானப்படுத்தியனுப்பி விட்டார்கள் ; இதனுல் அவளுக்கும் புத்திவந்தது.—ஐரோப்பியர்களுக்குள், நெருக்கமான பாத்திய சம்பந்தத்தினுல்கண்டமாலை க்ஷயம்முதலிய சிலவியாதிகளுண்டாகின்றனவென்கிறகாரணத்தினுலும் மற்றுஞ் சில காரணங்களினுலும் அப்படிப்பட்ட நெருக்கமான சம்பந்தத்தை விலக்கிச்சட்டமும் செய்திருக்கிருர்கள். இந்துக்களுக்குள்ளும் சில சம்பந்த ஏற்பாடுகளிருக்கின்றன. சில சாதிப்பெண்கள் நல்லம்மானைக் கலியாணஞ் செய்துகொள்ளுகிருர்கள் சில ஜாதிப்பெண்கள் அப்படி நடப்பதில்லை. ஒருவனுக்குத் தகப்பனேடு கூடப்பிறந்தவன் சிற்றப்பன் ; இருவரும் ஒரே பீஜமாதலால், அந்த பீஜவழியாய்ப்பிறக்கிற பெண்கள் சகோதரிகளே. தகப்பனேடு கூடப்பிறந்தவள் அதேபீஜத்திற்குப்பிறந்தவ ளானபோதிலும், அவளுக்குப்பிறக்கிற பெண் வேறுபீஜத்திற்காதலால், அந்தப் பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளல் முறைமைதான். தாய் எந்த பீஜமோ அதேபீஜத்திற்குப் பிறந்தவன் அம்மான், அவனுடையபீஜத்திற்குப் பிறந்த பெண்ணை சிலர்கலியாணஞ்செய்து கொள்ளுகிருர்கள் ; தாய் எந்தபீஜமோ அதே பீஜத்திற்குப் பிறந்தவள் சிறியதாய், அவளிடமாய் வேருெருவனுடைய பீஜத்திற்குப் பிறந்தபெண்ணை தங்கையென்றும் அவளைக்கலியாணஞ்செய்து கொள்ளலாகாதென்றுஞ் சொல்லுகிருர்கள். தகப்பன் வழியில் பீஜசம்பந்ததை நோக்குவதுபோலத் தாய் வழியில் பீஜசம்பந்தத்தை நோக்குவோமாகில், தாயொடு கூடப்பிறந்தவனுடைய பெண்ணைப்பார்க்கிலும் தாயொடு கூடப்பிறந்தவளுடைய பெண்ணைக்கலியாணஞ்செய்து கொள்ளலாம். ஆயினும், இப்போதிருக்கிற ஏற்பாடு-தகப்பன் ஆண்பாலாகையால், அவ்வழியில் ஆண்பாலாரைத் தகப்பன் முறைவர்க்கமாகவும், பெண்பாலாரைச்சம்பந்திவாக்கமாகவும்; தாய் பெண்பாலாதலால்அவ்வழியில்பெண்பாலாரைத்தாய்முறைவர்க்கமாகவும், ஆண்பாலாரைச்சமபந்திவர்க்கமாகவும் ஒன்றற்கொன்று மாருகச்செய்யப்பட்டிருக்கிறதாய்த்தெரியவருகிறது. இவற்றையெல்லாம்யோசிக்குமிடத்து, மானிடஏற்பாடாகக் கொள்ளவேண்டியதேயல்லாமல்,எவனுவதுதெய்வீகமானஏற்பாடென்றுசொல்லுவானுகில், அவன் பயித்தியக்காரனுகத்தானிருக்க வேண்டும். இந்தச்சம்பந்தங்கள் வழக்கத்தில் நடந்தேறிவருகின்றன; ஆனுல் முன்னிருந்த சில புததிமான்கள்இப்படிப்பட்டமுறைகூடாதென்றேதடுத்திருப்பதாகத தெரியவருகிறது.(மிதாட்சரம்.) అరోగిణీంభ్రాతృమతీం అసమానార్షగోత్రజాం పంచమాత్సప్తమాదూర్ధ్వంమాతృతఃపితృత_స్తథా। இந்தசுலோகத்திலே தகப்பன் வழியில் ஏழு தலைமுறைக்கு மேற்பட்டும், தாய்வழியில் ஐந்துதலைமுறைக்குமேற்பட்டும் விவாகசம்பந்தம் செய்யலாமென்று சொல்லியிருக்கிறது ; அநேகதலைமுறைகள்கடந்து பாத்தியதை மறைந்து போய்விட்ட போதிலும், இருகிறத்தாருடைய கோத்திரம் ஒன்ருயிருக்கிறபட்சத்தில் விவாகசம்பந்தங்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிறது. ஜன சமுதாயப்பிரயோசனத்தை ஆலோசிக்குமிடத்து இந்த ஏற்பாடு மகாசிறந்ததே. இந்த ஸ்மிருதி வாக்கியத்திற்கு விரோதமாக இப்போது நடந்துவருகிற வழக்கம் சாஸ்திரப்படி பாபகிர்த்தியமென்று யோசிக்கப்படத்தக்கது. அப்படியாயின், எத்தனை வம்சஸ்தர்கள் சண்டாளர்களெனத்தள்ளுகடையாகவேண்டும பாருங்கள். அப்படிக்கல்ல. ஒவ்வொருதேசத்திலும் ஒவ்வொருகாலத்தில் ஜனசமுதாயப்பிரயோசனத்தைக் கருதிக் கட்டுப்பாடான ஒவ்வொரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தந்தகாலத்திற்கு அந்தந்த ஏற்பாடு சரியானதாகவே தோன்றும். ஏதாவதொரு ஏற்பாடு சீரற்றதாக ஒருவருக்குத்தோன்றினபோதிலும், அதற்குண்டான நியாயங்களைக்கொண்டு அது சீர்ப்படுத்தப்படுகிறவரையில் அவரும் அதற்குட்பட்டே யிருக்கவேண்டும். ஜனசமுதாயப் பிரயோசனத்தை விர்த்திபண்ணத்தக்க எந்த ஏற்பாட்டிற்கும் ஆஸ்திகனுயினும் நாஸ்திகனுயினும் உடன்படவேண்டியவனே ; உடன்படாதவன மானுஷீகமுடையவனல்லன். தன்தாரத்தை வேருெருவன் விரும்பினுல் தான் சம்மதியாததுபோலப் பிறனுடைய தாரத்தைத் தான் விரும்பினுல் அவன்சம்மதியா னென்று பகுத்தறியும் அறிவினையுடையவன் எந்தமதஸ்தனுயினும் பிறர்பொருளையிச்சியான். பயத்தினுலடங்கியிருக்கிற அறிவீனனுடையமனம் சமயம்பார்த்துக்கொண்டேதானிருக்கும். இதையறியாதவர்களே தன்னினத்தார் எவ்வளவு துன்மார்க்கர்களா யிருந்தபோதிலும், துரபிமானத்தினுல் அவர்களைக்காத்துக்கொண்டு, எதிரிகளைவீணுய் அலர் தூற்ற இஷ்டங்கொள்ளுவார்கள். "தன்னைப்போல எதிரியை நினைப்பான்" என்றும், "தன்னைப்போல எதிரியை நினைக்கவேடும்" என்றும் இரண்டுவாக்கியங்கள் வழங்கிவருகின்றன. முதலாவது வாக்கியம் இஷ்டத்தைத்தெரிவிக்கிறது ; இரண்டாவது வாக்கியம் கடமையைத் தெரிவிக்கிறது. நியாயத்தை யனுசரியாமல் இஷ்டானுசாரமாய்ப் பேசுகிறவர்களுக்கு முதல் வாக்கியத்தைவிட்டுக்கொடுத்து, இரண்டாவது வாக்கியத்தை நாங்கள் கைக்கொள்ளுகிருேம்.

சபைகூடி வாய்ஞானம் பேசுவதினுல் அதிக பிரயோசனமுண்டாகாது, பேசினபின்பு, 'ஏட்டுச்சுரை[illegible]க்குச்சொன்

ணேனேயல்லாமல், மேட்டுச்சுரைக்காயக்குச் சொல்லவில்லை’
என்றுற்போலப்புரண்டாலும்புரளும்,ஒருவேளைசொனனது இ
ல்லாமற்போனுலும் போம். ஆதலால் எதுவும் எழுத்துமூல
மாயேறபடுமாகில் தஸ்தாவேஜாக இருக்கும்; அன்றியும் பின்
சந்ததியார் ஆராய்ந்துபார்ப்பதற்கும் உதவும். நமது முன்
னோர்கள வெகுபாடுபட்டு எழுதுவித்த ஒரு ஏட்டுப்பிரதியில்
ஒரு ஏட்டுக்கு முப்பத்திரண்டுக்குக்குறையாத பிழை பட்டிருக்
கின்றன; அப்படிப்பட்ட கஷ்டம் நமக்கில்லை. இக்காலத்தி
ல் அங்கிலேயர்களுடைய உபகாரத்தினுல் நமக்கு அச்சுயந்தி
ரங்கிடைத்திருக்கிறது, அச்சடிக்கும் வித்தையுங்கற்றுக்கொண்
டோம். ஒரு பிரதிக்குவதிலாய ஆயிரம்பிரதி வெளியிடலாம்.
பிரசங்கியார் வாய்ப்பறையினுலே முன் சொன்னதற்குப் பின்
சொல்வது முரணுயிருந்தபோதிலும், ஜனங்கள் கிரகிப்பது
கஷ்டம்; அப்போதப்போது சொல்வதை ஆங்காங்குவியந்து
ஆனந்திப்பார்கள். நாற்பதுவருஷத்திற்கு முன்னமே சதுர்
வேதசித்தாந்த சபையென்னும் ஒருசபையிருந்தது; கதிர்வே
ல் கவிராயரென்பவர் அந்தச்சபாபிரசங்கியார்.சங்கதிசாரம
ற்றதாயினும், சொற்சாதுரியமுடையவர். காத்தொலிக்பாதிரி
க்குத் தலை மொட்டையாயிருப்பதற்கும் துருக்கனுக்குச்சுன்ன
த்து செய்திருப்பதற்கும் காரணஞ்சொன்னுர். அதாவது-ஒரு
பாதிரி குளத்தில் குளித்துக்கொண்டிருக்கையில், ஒரு துருக்க
ன் கரைமேலிருந்து துடுக்காகக் குளத்தில் குதித்தான், அவனு
டைய லிங்கம் பாதிரித்தலையில்படவே, அதுபட்டதென்கிற அ
ருவருப்பினுல் பாதிரிமொட்டையிட்டுக்கொண்டான்; துருக்க
னும் அவ்வாறே தன்குறியின்முனையை அறுத்துக்கொண்டா
னென்றவுடனே ஜனங்கள் குதூகுலித்துச்சந்தோஷித்தார்கள்.
பிரசங்கியாரும் கூடக்கலந்துகொண்டு சந்தோஷித்தார். இ
ன்னுமொரு பிரசங்கம்—அந்தக்கவிராயர் கோட்டையில ஒ
ருவனுக்குப் படிப்புசொல்லப் போய்க்கொண்டிருக்கையில் அ
வருடைய நாமத்தை ஒரு சோல்ஜர்வழக்கமாய் நக்கிப்போடுவ
ன். அவர் என்னுடையஸ்வாமி உன்னைக்கொன்றுபோடுவரெ
ன்றுர். அவன் லட்சியஞ்செய்யாமையால் ஒருநாள் நாமத்தி
ல் பாஷாணத்தைக்கலந்து போட்டுக்கொண்டு போக, அவன்
வழக்கப்படி நக்கி, உடனேயிறந்துபோனுன், தான வேருெரு
வழியாய் வந்துவிட்டதாகச்சொன்னுர், அப்படியே தன் கை
யிற்கொண்டுபோகும் துளசியை ஒரு சோல்ஜர் பிடுங்கித் தன்
னுடைய ஆசனத்தில துடைத்து எறிந்துவிடுவான்; ஒரு நாள்
பூனைக்காஞ்சோரியைக்கலந்து கொண்டுபோக, அவன வழக்க
ப்படி துடைத்து அவஸ்தைப்பட்டா னென்றனர். ஜனங்கள்
இதற்குஞ்சந்தோஷித்தார்கள்.நாமத்தின் பெருமையைப்பாஷா
ணமும், துளசியின் பெருமையைப் பூனைகாஞ்சோரியுமடைந்த
ன. ஸாரமானதையும் நிஸ்ஸாரமானதையும் பகுத்தறிவுடைய
வர்கள் அறியவே அறிந்து கொள்ளுவார்கள், சாதாரணமான
சனங்கள் தங்கள் எதிரிகளை ஒருவர் நிஷ்காரணமாய் எவ்வள
வு தூஷித்தபோதிலும் கொண்டாடுவார்கள்; பிரசங்கியார் நா
ஸ்திகர்களை நகர்த்திப்போட்டாரென்பார்கள்; ஈர்க்கு ஈர்க்கா
யெடுத்துப்போட்டாரென்பார்கள்; பச்சை பச்சையாய்ப்பேசி
ப்போட்டாரென்பார்கள்; பிரசங்கியாருக்கும்அதைக்கேட்க ஆ
னந்தமா யிருக்கலாம். நடத்துங்கள், நடத்துங்கள், சந்
தோஷம்.

கல்லாலெறிந்தால் நெல்லாலாவதெறிவார்களென்கிற வாக்
கியத்தை நாம் மறக்கலாகாது. ‘அகழ்வாரைத்தாங்கு நிலம்
போலத்தம்மை, இகழ்வார் பொறுத்தல்தலை.’ என்னுங்குறளி
ருந்தபோதிலும், அதற்கும்ஓரளவுண்டு; நீர்மட்டம் வரையிலே
தான் தாங்கும். ஆதலால், ‘சிறியோர் சிறுபிழைசெய்தனராயி
ற் பெரியோரப்பிழை பொறுப்பதுகடனே; சிறியோர் பெரும்
பிழை செய்தனராயிற் பெரியோரப்பிழைபொறுத்தலுமரிதே.’
என்கிறவாக்கியங்களையும் நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

நாஸ்திகர்களைப்போலவே,ஆஸ்திகர்களும்சொந்தநன்மையை
யும், ஜனசமூகப்பிரயோசனத்தையும், சீராயொழுகாவிடில் பி
றரால் இகழப்பட்டு மனித ரெண்ணிக்கையில் வைக்கப்பட
மாட்டோமென்பதையுங் கருதியே, நல்லொழுக்கத்தில் ஒழுக
வேண்டியதேயல்லாமல், கடவுளுக்கும் நரகத்திற்கும் பயந்து
நடப்பது-திருட்டுக்குண முடையவன் தெண்டனைச்சட்டத்திற்
குப்பயந்து நடப்பதுபோலத்தானுகிறது. அன்றியும் அவர்க
ளுக்கு எவ்வகைப்பாபத்திற்கும் பிராயச்சித்தமென்ப தொன்
றிருப்பதால் அதன் வழியாய்த் தங்கள் பாபம் பரிகாரமாய்
விடும், நரகவேதனையைத்தப்பித்துக்கொள்வோம், மோட்சவா
யில் நமக்குத்திறக்கப்படும் என்று தீரங்கொள்வதினுல, அந்
தபயமும் ஒழிந்துபோகிறது. அறியாமற்செய்தபாபத்திற்கே
பிராயச்சித்த முண்டு, அறிந்து செய்ததற்கு இல்லையென்பார்
கள்.அறியாமற்செய்தபாவத்தைக் கடவுள் மன்னிக்கவேவேண்
டும், அதற்குப்பிராயச்சித்தம் வேண்டுவதில்லை. குழந்தையா
வது அறிவுபேதித்திருக்கிற பயித்தியக்காரனுவது செய்கிற கு
ற்றத்திற்கு நீதியுள்ள அரசன் தெண்டிப்பதில்லை. கம்பளிதா
னமுதலிய மகாதானம் பெற்றுக்கொள்ளுகிற பிராமணர்கள்
அந்தப்பாபத்தை ஏற்று[illegible]கொண்டு நெடுநாளைக்குக் காயத்திரி
முதலிய ஜபஞ்செய்து அந்தப்பாபத்தைப்பரிகரிக்க வேண்டியி
ருப்பதால் அவர்களுடைய பிரயாசைக்காக அதிக தட்சணை
கொடுக்கவேண்டு மென்கிருர்கள்.தானம் பெற்றுக்கொள்ளும்
போது பாபத்தை அறிந்தே யேற்றுக்கொண்டு, அப்பாபம் ஜப
த்தினுல் பரிகரிக்கப்படுகிறது. அறிந்தே செய்கிறபாபத்திற்
கும், எவ்விதபிராயச்சித்தமும் தானமும் பரிகாரமும் வேண்
டுவதே யில்லை; பூஜை ஒன்றிருக்கிறது, அதுவே சகலத்திற்கு
ம் போதுமானது:—(கருடபுராணம், ௬-ஆம் அத்தியாயக்கடை
சியில்) “ஜீவர்கள் செய்யும் பாபபுண்ணியங்களைத்தெரிந்து,
யமனுக்கு விண்ணப்பஞ்செய்யச் சிரவணர் என்போர் பன்னிரு
வர் (யமபட்டணம்)அந்நகரில் இருக்கின்றனர். ஜீவரெல்லா
ரும் அப்பன்னிருவரையும் பூஜிசகவேண்டும்; அச்சிரவணரை
பூஜித்த ஜீவன் முடிவுகாலத்தில் யமபுரி சேரும்போது அவ
ன் செய்தபாவங்களெல்லாவற்றையும் எடுத்துச்சொல்லாமல்
புண்ணியங்களையே அச்சிரவணர் வெளிப்படுத்துவார். ஆத
லால் சிரவணரைப்பூஜித்தல் மிக நன்மையென்று அறிந்து
கொள் எனறருளினன்.” இச்சவாக்கியம் கருடபகவானுக்கு
ஸ்ரீவிஷ்ணுபகவான் திருவாய் மலர்ந்தருளியது. இதைப்பார்
க்கினும் உயிர்க்குறுதி வேறென்று வேண்டியிருக்கிறதோ! ஜீ
வர்கள் எவ்வகைப்பட்ட பாவங்களையும் பரிகரித்துக்கொண்டு
மோட்சசாம்பிராச்சிய மடைவதற்கு இந்த சொற்ப லஞ்சம்
போதுமே. இந்தப்பூஜையினுல் சிரவணர்களை வசப்படுத்திக்
கொண்டு மோட்சமடையலாமென்கிற நம்பிக்கையினுல் ஆஸ்
திகர்கள் அறிந்தும் அறியாமலும் எவ்வகைப்பட்ட பாபத்தை
யுஞ்செய்யத்துணிவரே. இப்படிப்பட்ட துணிவுகொண்டே
அவர்களுடைய சித்தாந்தத்தின்படி இடைவிடாது பாபஞ்செ
ய்துகொண்டு கற்பகோடிகாலமாய் ஜனனமெடுத்து வருகிரு
ர்களென்று நாம் நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது. அவர்
களுடைய வேதம் அநாதி. அதையனுசரித்துண்டான அவர்
கள் மதமும் ஆதிமனிதனுகிய ‘மனு’ என்பவன் உண்டான
போதே யுண்டாயிருக்கவேண்டும். இதுவரையில் எத்தனை
யோயுகங்கள் சென்றும், இப்போதிருக்கிற இந்து சமயிகள்
ஆதிகாலந்தொடங்கி, மேற்கண்ட பூஜைசெய்யாமலோ, செ
ய்தும், அதினுல் நிவர்த்திக்கக்கூடாத அவ்வளவு மகத்தான
கொடிய பாபங்களைச்செய்துகொண்டோ ஜனனமெடுத்து வரு
கிருர்கள். அவர்கள் பாபமேசெய்யாதிருந்து எப்போது ஜன
னத்தை யொழிப்பார்களோ தெரியவில்லை, தாங்கள் முழு
பாபிகளாயிருக்க, பிறரைப்பாபஞ்செய்வார்களென்று தூஷிப்
பதும் அவவிததுணிச்சலே. இது-தன்வீடு திறந்தலையாயிருக்க,
அசல்வீட்டுக்குப் படல் சாற்றுவதுபோலிருக்கிறது. புத்தியி
ல்லாமல் தான் கெட்டாலும், பிறருக்குப்புத்திசொல்லிப்பிழை
ப்பூட்டுவதும் ஜீவகாருண்ணியந்தான்!! மதமேற்பட்டு அநேக
யுகங்கள் சென்றும், அதினுலே உண்டான சீரென்ன? நாளுக்
குநாள் பாபிகள் விர்த்தியாவதே அதின் பிரயோசனம். இவ்
வளவும், இல்லதைச் சொல்லி உள்ளதைவாங்கிக்கொண்டது
தான்.

A. M.

இந்தியா கெடுதியும், சம்ஸ்கிருதபாஷை விருத்தியும்.

—o—

இந்தியாவானது பல நூற்றுண்டுக்கு முன்னே நல்ல நாகரீ
கங்களை யடைந்து வந்தது. அப்படி யடைந்ததும் ஜாதி
மதாபிமான மற்ற இந்து வேதக்கொள்கைகளின் ஆதாரங்கள்
கொண்டே. சில காலத்துக்குப்பின் கல்வியிற்சிறிதுதேர்ச்சி
யுள்ள அனேகர் தங்கள்பிழைப்பினிமித்தமும், சாமர்த்தியங்
களைக் காட்டு நிமித்தமும், ஏழைகளைப்பகட்டி வந்ததே இந்
தியாகெட்டதற்குக் காரணமாகும். அக்காலம்போலவே நாக
ரீகமடைந்த இக்காலத்திலும், அனேகர் பழைய வாசாரம்
என்று துராசாரத்தைக் கொண்டு தமது மக்கள் உற்றுர் முத
லினரை உதவி யற்றவர்களாய் ஆக்கிவிடுகிருர்கள். அப்படி
யெல்லாம் நாமாகாமல், நல்லநாகரீகங்களை யடையவேணுமெ
ன்றுல், இந்துக்களுடைய வேதமாகிற கடலைச்கற்க, அதன்
பாஷையாகிய சம்ஸ்கிருத பாஷையைக் கற்கவேண்டும்.
ஏனெனில், இப்பாஷையிற்றுன், நமக்குவேண்டிய ஆதாரங்
களெல்லாம் தெரிந்து கொள்ளும்படி பூர்வீகர்களாலும்,
அவர்களுக்கடியோத்த வஸ்துவாகிய கடவுளாலும் அருளப்
பட்டிருக்கின்றன. அவைகளை இந்துக்களில் யாவரும் கற்
காமல் சிலர்மாத்திரம் கற்றுக்கொண்டு வந்தமையால் ஒரு
படிப்பட்ட நிலைமையில் இத்தேசம் நிற்கவில்லை. ஆனுல்
அவைகளைப் பெண்களும் பேதைகளும் தெரிந்துகொள்ளும்
பொருட்டு, அனேக மகான்கள் இந்தியாவிலுள்ள அவ்வத்தேச
பாஷைகளில் மொழிபெயர்த்துவைத் திருந்த போதிலும்,
அவைகளை நம்ப வொட்டாமற்படிக்கு சம்ஸ்கிருதம் படித்த
சில்லோர் பகட்டிக கெடுத்து விட்டார்கள். ஆகையால் இந்
துக்கள் யாவரும் தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளைக்

கற்பதோடுங்கூட சம்ஸ்கிருத பாஷையையும் கற்றுக்கொள்ளவேண்டும். அப்படியாய் விட்டாற்றான், சம்ஸ்கிருதபாஷையைக் கற்றும் கபத்தன நீங்காது ஒரு ஸ்லோகத்திற்குக்கூட அர்த்தம் செவ்வையாகச் சொல்ல சக்தியற்ற பாமரர் பகட்டுகள் நீங்கும், இந்துக்கள் யாவரும் அப்பாஷையைச் கற்காததினாலல்லவா? செம்மறியாட்டு மந்தைகள் போல் போகிறோம். ஆனால் சம்ஸ்கிருத பாஷை யாவரும் கற்கக்கூடாதென்கிற நியதியேயில்லை. ஆதியில் எல்லாரும் சம்ஸ்கிருத பாஷையைக் கற்றுக்கொண்டே வந்தார்கள் என்பது எல்லார்க்கும் யோசித்தால் விளங்கும். ஆனால் ஏன் இதுவரையில் ஆசாரத்துக்கு வரவில்லையென்று கேட்கத் துணிவீர்கள். அப்படியாய் விட்டதும், வேதக் கருத்துக்கு மாறாக சிலர் தங்களுஜ்ஜீவனத்தின் பொருட்டு ஜாதிகளேற்படுத்திவிட்ட காலத்தின் கோலத்தினாலேயே யென்றும் தெரிந்து கொள்வீர்கள். ஆங்கிலேயரும், சம்ஸ்கிருதபாஷையிலுள்ள நூல்களைத் தங்கள் பாஷையில் மொழிபெயர்த்து ஆராய்ச்சிசெய்தே அதிசாமர்த்தியவான்களா யிருக்கிறார்கள். இனி ஜாதிகளைப்பற்றி சிறிது யோசிப்போம். இந்துவேதத்தில் ஜாதியென்பது வகுப்பாகப் பிரிக்கப்பட டிருக்கவில்லை. பிரிக்கப்பட் டிருந்தால் பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்னும் நான்குஜாதிகள் தானே இருக்கவேண்டும். அதற்கு மேற்பட்ட பஞ்சமாதிஜாதிகள் ஏன் ஏற்பட்டிருக்கின்றன? இவைகளெல்லாம் சற்றுகற்றறிந்த மோழைகள் பகட்டு. ஜாதியேற்பட்டதும் பிறப்பினாலன்று. மானுஷீகனாகிய ஒவ்வொருவனுடைய குணத்தின் பரிமளத்தினா லென்றறிக. அதாவது பிராமண, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர, பஞ்சமாதிவகுப்பினர்கள் வயிற்றிற்பிறந்த ஒவ்வொருவனும் மநுஷ்ய ஜாதியே. அப்படிப்பட்ட வகுப்பும், அவ்வகுப்பிற் பிறந்தவர்களும், ஆடு, மாடு, கழுதை ஜென்மங்கள்போல, முதலில் மநுஷ்ய ஜென்மத்தை யுடையவர்களாவார்கள்; எப்படியெனில், கொடும் பாதகத்தொழிலினால் சண்டாள பஞ்சமாதிஜாதியாயும் ஏவற்றொழிலினால் சூத்திரனாயும், வர்த்தகத்தினால் வைசியனாயும், தோள் வலிமையினால் க்ஷத்திரியனாயும், கடவுளுடைய குணானுபவாதிசயங்களை அறிபவனாகலினால் பிராமணனாயும் சொல்லப்படுவார்கள். அன்றியும், அப்படிப்பட்ட பஞ்சமனிடத்தில்பிறப்பவன் பிராமணனுமாவான். பிராமணனிடத்திற் பிறந்தவன் பஞ்சமனுமாவான். இவ்வண்ணம் முறையே க்ஷத்திரிய, வைசிய, சூத்திராதிகளும் மாறி மாறி ஜாதியென்னும் பட்ட மடைவார்கள். இவையே இந்து வேதக்கருத்தாம். ஆனால் தற்கால ஸ்திதியைநோக்கிப் பூர்வீகர் பகட்டினால் நேர்ந்துவிட்டதென்று அறிந்து கொண்டும் வாய்மூடிக் கொண்டிருப்போமானால், நமது ஜெனனம் மானுஷீகமன்று. ஆகையால், ஏதோ காலகதியால், இப்படியாய்விட்டதென்று ஒடுங்கியிருக்க எண்ணுவீர்களேல், நமது தேசம்க்ஷேமமடையாது, அறிவாளிகளின் தன்மையாகாது. ஆகையாற்றான் சம்ஸ்கிருத பாஷையையும், வேதத்தையும் கற்கவேண்டும். வேதம் படிக்கக்கூடாதென்பது இந்தியாவைப் பகட்டிய பூர்வீக பிராமணர் கொள்கை. யாவனொருவன் வேதம்படிக்க வேணுமென்று எண்ணுகிறானோ அவன்தான் விப்பிரன். யாவனொருவன் வேதம்படித்து ஞானமடைகிறானோ அவன்தான் பிராமணன். யாவனொருவன் வேதம் படிக்காமலிருக்கிறானோ அவன்தான் சூத்திர பஞ்சமன். வேதம் படிக்காதவனுக்கு மோக்ஷமில்லை. க்ஷத்திரிய, வைசிய சூத்திர, பஞ்சமாதிகள் என்னும் வகுப்பை யடைந்தவர்களிற் பலர் வேதம்படித்து பிராமணர்களா யிருக்கிறார்கள். பிராமணர்களில் அனேகர் பஞ்சமசண்டாள ஜாதிகளாய் விட்டிருக்கிறார்கள். இத்தியாதி செய்கையிலேயே, ஜாதிகள் ஏற்படும் என்பது இந்து வேதக்கருத்து. இதற்கு வேற்றாய் தோன்றியிருப்பவைகள் வஞ்சனையின்கருத்து, சம்ஸ்கிருத பாஷையிலுள்ள சாத்திரங்கள் படிக்காதவர்களுக்கு ஒன்றும் விளங்கா. நமது தேசத்தார் பெரும்பாலும் கல்வியிழந்ததற்குப் பிராமணர்கள், சூத்திராதிகள் வேதம் படிக்கக்கூடாது; ஏவற்றொழிலே சரி; க்ஷத்திரியன் தோள்வலிமையே செய்யவேண்டும், வைசியன் வாணிபமே செய்யவேண்டும் யென்று கூறிய பகட்டுகளேகாரணமாகும். ஆனால் க்ஷத்திரிய, வைசிய, சூத்திர பஞ்சமாதிகள் அந்தந்த வகுப்பின் கிருத்தியஞ்செய்துகொண்டே வேதமோதலும், வேறுஜாதியாக யெண்ணுவதும் வேதக் கருத்தாகா. இக்காலத்தில் ஜாதிகளை ஒன்றாய்ச் செய்து ஐக்கியமாக வாழ்வது முடியாது என்பீரேல், ஒவ்வொருவர்களும், தம்முடைய நலத்தின்பொருட்டு, சம்ஸ்கிருதபாஷையைக் கற்பதிலும், வேதமோதலிலும், இப்போதுள்ள ஜாதியை ஒரு மூலையில் கட்டிப்போட்டு வேதத்தில் கூறும் ஜாதியைப் பற்றுவார்களானால் தேசமாதியந்தமும், ஐக்கிய நேசமாய் வாழத்தடையின்றதாகும்.

ஜநாநுகூலரி.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே ஒருஅணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றிபெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம்.

இந்தியாவிலுள்ள

சுவக்கியாணிகளை

மதிராஸ் ஸெக்யுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3— 0—0
வெளி „ „ —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.) வெளியூர்—(அட்வான்சு.)
(தபாற்செலவுஉள்பட)

உள்ளூர்		Rs.	A.	P.	வெளியூர்		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு· முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிராஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர்· அப்ஷன்துரை யவர்களுக்கும்;
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 39.] MADRAS:—SUNDAY SEPTEMBER, 26, 286. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

பிரார்த்தனைமுட்டை.

பையான்என்பவர் கப்பலேறிச் செல்லும்போது, புசலடித்தது; அப்போது கப்பலாட்கள் தேவதைகளைப் பிரார்த்தித்துத் தங்களை ரட்சிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். அவர்கள் சன்மார்க்கர்களென்று அறிந்திருந்த அந்தபையானனவர் (தப்பிப்பிழைக்க உங்களாலான முயற்சிசெய்யுங்கள்,) கூவாதேயுங்கள், நீங்கள் இங்கேயிருக்கிறது அந்தத்தேவதைகளுக்குத் தெரியாமலே யிருக்கட்டுமென்றார்.

மானுஷீகம்.

வின்செஸ்டரில் பிஷப்பாயிருந்த எதல்வால்ட் என்பவர் தன்தேசத்தில் பஞ்சம்வந்தபோது, தன்கோயிலிலுள்ள விலையுயர்ந்த சாமான்களைவிற்று ஏழைஜனங்களுக்கு அன்னமிட்டார். இப்படியுஞ் செய்யலாமா என்றார்கள். செய்யலாம், மரித்துப்போனகோயில்களுக்கு அன்னம்வேண்டுவதில்லை, சீவித்திருக்கிற மானுஷிய கோயில்களுக்கு வேண்டாமோ என்றனர்.

கடவுளர் யாவர்.

நாம் உலகத்தில் காணும் பொருள்களுக்கெல்லாம் ஒவ்வோர் காரணமிருக்கின்றது; காரணமின்றி காரியமில்லையாதலால், இக்காரணங்களுக்கெல்லாம் மூலகாரணமாக ஒன்று இருத்தல் வேண்டுமன்றே! அம்மூலகாரணமே கடவுள், என்று அநுமானித்தல் கூடாதாவெனின், நாம் காண்கின்ற சகலபதார்த்தங்களுக்கும் காரணமிருப்பது உண்மையே: அக்காரணத்திற்கும் வேறுகாரணமுண்டு, அதற்கும் இன்னொருகாரணமுண்டு. இஃது எவ்வாறெனின், ஆடைக்கு நூல்காரணம்; நூலிற்குப் பஞ்சுகாரணம்; பஞ்சிற்குப் பருத்திகாரணம்; இவ்வாறே நமது அறிவிற்கு எட்டிய அளவும் காரணத்திற்குக் காரணமே யிருக்கின்றது. இதுவே நமக்கொத்த அனுபவம். இத்தகைய அனுபவத்தையுடைய நாம் நம்மறிவிற்கெட்டாமலும் பலகாரணங்களிருக்கலாமென்று ஓர்கால் அனுமானிக்கக் கூடியவர்களாக விருக்க, அறிவுக்கெட்டாதிருப்பது ஒரேகாரணமென்றும், அதற்கு வேறுகாரண மில்லையென்றும், ஆதலால அது மூலகாரணமென்றும், அதுவேகடவுளென்றும் இத்தியாதி உத்தேச அனுமானங் கொள்வதற்கு என்ன நியாயமுண்டு? என்ன ஆதாரமுண்டு? என்ன துணிவுண்டு? காரணமின்றி காரிய மில்லையென்பது நமது அனுபவமாகுங்கால், காரணமில்லாமல் கடவுளுண்டென்பது அனுபவவிரோதமல்லவா! கடவுள் என்பதற்குத் தெரியவில்லை என்பது பொருளாயின், காரணந் தெரியாமையைக் கடவுள் என்னலாம். இதைவிட்டு, பஞ்சபூத விகாரமாகிய தாதுமூல பிராணுதிபொருள்களின் தன்மையால், உலகங்களைப்படைத்து பரிபாலித்துவரும் கடவுள ரொருவருண்டென எங்ஙனங் கொள்ளலாம்? ஓர் கடிகாரசூத்திரி தன் எண்ணத்தின்படி தன்னால் செய்யப்பட்ட கடிகாரம் காலவரையறை தவறாமல் காட்டும்படி, அதற்கேற்ற இயக்கத்தைத் தரத்தக்க கருவிகளைக் கிரமமாய் ஒருங்கமைத்து செய்திருப்பது போல, உலகமும் உலகத்திலுள்ள சகல பதார்த்தங்களும் (மனித உறுப்புகளும்) ஒவ்வோர் பிரயோசனத்திற்காகவும் நன்மைக்காகவும் அமைத்திருக்கின்றமையால், இதுவும் ஓர் எண்ணத்தால் உண்டாக்கப்பட்டதாக விருக்கின்றது; அவ்வாறு எண்ணங்கொண்டு செய்தவரே கடவுள் என்று சொல்வோமானால், கடிகாரத்திலுள்ள ஒவ்வோர் கருவியும் பிரயோசனமானதே யல்லாமல் நிஷ்பிரயோசனமாய் ஒன்றும் இல்லை. மேலும் ஒவ்வோர் கருவியும் மற்றைய கருவிகளைத் தொழில் புரிவித்தற்கு அனுகூலமாக விருக்கின்றதே யல்லாமல் பிரதிகூலமாக விருக்கின்றதல்ல. ஆயினமையின் இதில் எண்ணமிருக்கிறது என்று தீர்மானிக்கலாம். உலகத்தையும் உலகத்திலுள்ள சகல பதார்த்தங்களையும் (மனித உறுப்புகளையும்) நோக்குங்கால், மனிதனும் மனிதனைக்கொல்லும் புலி, கரடி, சிம்மம், பாம்பு பாஷாணாதி பல வஸ்துக்களும் இருக்கின்றமையாலும், மண் தண்ணீர் முதலியவற்றைப் புழு பூச்சிகள் தின்பதும், குடிப்பதும், அப்புழுபூச்சிகளைப் பறவைகளும் மச்சங்களும் உட்கொள்ளுவதும், அம்மச்சங்களைப் பெரியமச்சங்கள் தின்பதும். அப்பெரியமச்சங்களை மனிதர் கொன்று தின்பதும், சிலதேசங்களில் மனிதரையே மனிதர் கொன்றுதின்பதும், துருக்கியுத்தம் ஜூலுவயுத்தம், காபூல்யுத்தம் முதலிய சகல யுத்தங்களிலும், மனிதரையே மனிதர் கொல்லுவதும்; அனைவரையும் வாந்திபேதி முதலிய வியாதிகளும், எரிமலை, பூகம்பம், இடி, வெள்ளம் முதலிய காலசம்பவங்களும் உண்டாகி கொல்லுவதுமாக விருக்கின்றமையாலும், மனித உறுப்புகளிலும் சிலர்க்கு கண்ணிருந்தும் குருடு, காதிருந்துஞ் செவிடாகி, உமிழ்நீரிருந்தும் உண்ட வுணவு அடைத்து சாகின்றார்களாதலாலும், உலகத்தில் அனுகூலப் பிரதிகூலங்க ளிருக்கின்றமையால், எண்ணமுண்டென்பதற்கு இடமில்லை. நன்மைகளையெல்லாம் நோக்கும்வழி எண்ணமிருந்தே அமைந்திருக்க வேண்டுமெனின், தீமையெல்லாம் நோக்கும்வழி எண்ணமில்லாமலே அமைந்திருக்கவேண்டுமென வாகின்றதே; ஒரு வியவகாரத்தை வாதி வாக்கைக்கொண்டே தீர்மானித்துவிடலாமா! பிரதிவாதி வாக்கையுங் கேட்டல்லவா தீர்மானித்தல் வேண்டும். இதுபோல ஒவ்வொரு விஷயத்தையும் நற்புறம் பொற்புறம் இரண்டையும் பார்த்தே தீர்மானித்தல் சரியாகும். ஆனல், உலகத்தில் நமக்கு அனுகூலமாக அனேக வஸ்துக்களிருக்கின்றனவே அவை எண்ணமில்லாமலே உண்டாயினவோவெனின், சந்தேகமென்னை? வீடும் உடையும் நமக்கு ஆவசியகமானதால் அவை காய்த்துத் தொங்குகின்றனவோ! உலகத்திலுள்ள சகல வஸ்துக்களிலும்கூடுமான சிற்சிலவற்றைச் சீவர்கள் தத்தம் ஆவசியகத்திற்கு ஒத்தவாறு அனுகூலப்படுத்திக் கொள்ளுகிறார்களேயல்லாமல் சீவர்களுக்கென்று அவை ஓர் தலைவரால் உண்டாக்கப்பட்டனவன்று.

உலகம் அசத்தா? சத்தா?

இந்த சங்கையைப்பற்றி யாலோசிக்குமிடத்து, உலகத்தினது இலக்கணம் இன்னதென்றும், சத்தின் இலக்கணம் இன்னதென்றும், அசத்தின் இலக்கணம் இன்னதென்றும், முன்னம் வரையறுத்துப்பின் அவ்வுலகம் சத்தின் பாற் படத்தக்கதோ அல்லது அசத்தின் பாற்படத்தக்கதோவெனத்தருக்கித்துப் பாற்படுத்தல் வேண்டும். இங்ஙனம்செய்யாமல் சத்து அசத்துகளைமாத்திரம் நமக்குத்தோன்றிய மட்டும் ஒருவாறு வரையறுத்துவிட்டு, வரையறைப்படுத்தாத உலகத்தை சத்தென்றாவது அசத்தென்றாவது தீர்மானித்தலைக்காட்டினும் அந்தகநியாயம் வேறொன்றுளதோ? நிலக்கரி உலோகமா? கல்லா? வென ஆசங்கைநிகழுழி, நிலக்கரி இன்னதென்றும், உலோகம் இன்னதென்றும், கல் இன்னதென்றும் இலக்ஷணசித்தப்பட்டாலன்றே இதன் இலக்கணம் இதனோடு பொருத்தம். ஆதலால் அறுதரும சம்பந்தவாற்றலால் இது இதுவேயாம், அதுவாகாது என்று துணிதல் கூடும்.

1886ஞு ஆகஸ்டுமீ 23உ மித்திரனில் வெளியாகிய இந்து
வைப்போலாது, நாம் உலகம் இன்னதென்றும், சத்து இன்ன
தென்றும், அசத்து இன்னதென்றும் முனனம் வரையறுத்து
ப், பின்உலகம் சத்தென்றும் அசத்தென்றும் தீர்மானிப்பாம்.
உலகம், அல்லது வஸ்து அல்லதுபூதியம் என்பது தனக்கென
ஓர் சொருபமின்றி முக்காலத்துநிகழு மெல்லாச்சொருபங்களு
ந் தாமாய் குருத்துவம், இயக்கம், ஆகருஷணம் திரிவுமுதலிய
வற்றைஅபின்னமாயாண்டுமுடைய உண்மைப்பொருள். இது
வே சத்தென்றும் சொல்லப்படும்.

இந்த சத்தினுடைய அபாவமே அசத்தாதலாலும், அசத்து
யாண்டு மிலதாதலாலும், இல் பொருளுக்கு இலக்கணமுமின்
றென்க.

ஆதலால் உலகம் சத்தின்பாற்படுமேயல்லாது சத்திற்குச்சர்
வவிரோதமாகிய அசத்தின் பாற்படாது.

ஆனுல் மேற்சொன்ன பத்திரிகையில் உலகம் அசத்து என்று
காட்டிய ஸ்ரீமான்இந்துவின் நியாயம் போலியோவெனின் முக்
காலும்போலியே. அதை ஈண்டுகாட்டுவாம்.

இவ்விந்து "சத்துயாண்டு முள்ளது" என்றுகூறினுரேயல்ல
து அதுஇதுவென்று காட்டினுரில்லை. சத்துக்குஉதாரணமாக
ப்படத்தைக்கூறினுலோவெனின், படம் யாண்டுமுள்ளதா? ப
டம் காரணமா? காரியமா? காரியமெனின், இவர் கூறிய கட
நாஸ்தி நியாயமே இவருக்கு விரோதமாகின்றது. படத்தை
வியவகாரிகமாய்க் கூறியதே யல்லாமல் பாரமார்த்திகத்திற்கு
அன்றுஎனின், யாண்டுமுள்ளது பாரமார்த்திகசத்தா! விய்வ
காரிகசத்தா! பாரமார்த்திகசத்தெனின், இலக்கணங்கூறியது
ஒன்றற்கும் எடுத்துக்காட்டியது ஒன்றுமாகின்றமையால், பா
ம்புகடிக்குத் தேள்விஷந்தீருமருந்தளித்ததுபோலன்ரு இருக்
கின்றது. அசத்து 'யாண்டுமிலது' என்றுகூறிப், பின்னர் கா
ட்சியைக் காணப்படு பொருளாகவும், சொல்லைப் பொருளாக
வும், காட்சி, சொல், ஆகிய இவ்விரண்டையும் பொருளாகவும்
மயங்கி உதாரணங்கூறியுள்ளார். இலக்ஷணமெல்லாம் அவற்
றையேற்றுள்ள இலக்ஷியப்பொருளுக்கேயல்லாமல், இல் பொ
ருளுக்கன்றே. இல் பொருளுக்கு உதாரணம் பகர்ந்தது என்
ன பயனைக்கருதியோ? மேலும் இவ்வாதி உற்பத்திக்கும் உரு
மாற்றத்திற்கும் பேதமுணராமல் மயங்கி வாதாடுகின்ருர். உற்
பத்தியாவது முதற்காரணமில்லாமல் உண்டாவது. உற்பத்தி
யை வைதிகிகள் சிருஷ்டியென்றுங்கூறுவர். "இல்லதுவா
ராது" என்றநியாயம் இதற்கேபொருந்துமாதலால், இதற்கு
உதாரணமுங்கிடையாது. உருத்திரிதலாவது ஓர் உரு மற்ருே
ருருவாய்த்திரிதல். இதற்கு உதாரணம் கடமே. கடமென்
பது ஓர் வகை உருவிற்குத் தமிழ்நாட்டார் சொற்சுருக்கமா
ய் வைத்துக்கொண்ட கற்பிதப்பெயரேயல்லது வேறல்ல. இ
ந்தகடம் மண்ணுலிருந்தாலும் கடம்தான், பொன்னுலிருந்தா
லுங் கடம்தான், செம்பாலிருந்தாலுங் கடம்தான், பித்தளையா
லிருந்தாலும் கடம்தான். கடஉருவம் மாறினும் வஸ்துவாகி
ய மண், பொன், செம்பு, பித்தளை இவைகள் மாறவும் மாரு,
அழியவும் அழியா. ஆதலால்தான் 'உள்ளதுபோகாது என்
னும் நியாயமும் இதற்கே பொருந்தும்.

இன்னும் இவர்கூறிய சத்து அசத்துகளின் லக்ஷணவியாப்தி
தோஷங்களைப்பற்றி விசாரிப்பாம். சத்துக்கு அசத்து சர்
வவிரோதமாயின், இவர் சொன்ன இலக்கணங்களில் வியாப்
திதோஷமின்று, சர்வவிரோதமல்லாக்கால, வியாப்திதோஷ
ம் கூருதேயமையும். ஆதலால் அவ்விலக்கணங்கள் சர்வவி
ரோதமா அல்லது வேறுவிரோதமா வென்பதனை நியாயசாத்
திரப்பிரமாணத்தால் விளக்கிக்காட்டுவாம்.—

விரோதம் சர்வவிரோத மென்றும், சம்பவவிரோத மென்
றும், பாரிசேடவிரோத மென்றும், சகளவிரோத மென்றும்
நான்குவகைப்படும். இவற்றுள்,

1. சர்வவிரோதம்	{ யாண்டுமுள்ளது சத்து ஓர்போதும் இல்லது அசத்து
2. சம்பவவிரோதம்.	{ யாண்டுமுள்ளது சத்து சிலபோதுள்ளது சத்து
3. பாரிசேடவிரோதம்	{ யாண்டுமுள்ளது சத்து யாண்டுமில்லது அசத்து
4. சகளவிரோதம்	{ சிலபோதுள்ளது சத்து சிலபோதில்லது அசத்து

மேலே இவர்கூறிய இலக்கணப்படி சத்துக்கும் அசத்துக்கும்
உள்ளவிரோதம் சிறப்பாந்தன்மையினதாகிய சர்வவிரோதத்
து ளடங்காமல் சிறப்பின்மையாகிய பாரிசேடவிரோதத்து ள
டங்குகின்றமையால், அசத்திற்குக் கூறிய* போலி இலக்கணத்
தில் வியாப்திதோஷமுண்டாகின்றது. இவ்வியாப்தி தோஷ
த்தை நையாயிதித்துக்காட்டுவாம்.

* இங்குபோலியென்றதேனெனின் இன்மையை இலக்கண
மாகக்கூறியதனுலென்க. இல்லது இலக்காகாதாதலால் அத
ற்கு இலக்கணையுமில்லை.

எது அசத்தோ அது யாண்டுமில்லது.
கடம் அசத்து என்றதனுல்
கடம் யாண்டுமில்லது.

வனைந்ததற்குப்பின்னும் உழிவுபாட்டிற்கு முன்னும் கடமு
ண்டாதலால் கடம்யாண்டுமில்லதாய் எங்ஙனமாகும்? கடம்
யாண்டுமில்லதல்லாதபோது அசத்தெப்படியாகும்? கடம் யா
ண்டுமுள்ளதுமல்ல வாதலால் சத்தும் அன்று. இவர்கூறி
ய இலக்கணப்படி கடம் சத்தும் ஆகாமல் அசத்தும் ஆகாமல்
சங்கரசங்கேதநிலையில் நிற்கின்றது, ஆதலால் இவர்கூறிய அச
த்திலக்கணத்தோடு இவரதுஉதாரணமே முறண்படுகின்றது.
உலகத்திலே நையாயிதரெல்லாரும் ஒன்றைக்காரண மென்றும்
மற்ருென்றைக் காரியமென்றுங்குறிப்பது சொருபத்தைநோக்
கியேயல்லாமல் வஸ்துவைநோக்கியல்ல. வஸ்துவோ காரணத்
திற்கும் காரியத்திற்கும் நியதமாயிருப்பது. மனோபாவனை
யால் காரணத்தை நோக்குழி காரியமும், காரியத்தை நோக்கு
ழி காரணமும் இன்மையாய்க்காணப்படினும் இவ்விரண்டிற்கு
ம் நியதமாயுள்ளது எதுவோ அது எக்காலத்தும் உள்ளதே; அ
துவே சத்தென்பதும், வஸ்துவென்பதும், உலகமென்பதுமாத
லால், உலகு அசத்தாதல் ஒருக்காலுமில்லை. இதனைச்சிந்தித்து
இந்துவென்னப்பட்ட நமது நண்பர் பின் மறுமொழி பகர்
வாராக.

ஹிதோபதேசி,

மதிமோசம்.

ஐரோப்பாக்கிரந்தகர்த்தர்கள் குளவிமுட்டையிட்டு, அந்த
முட்டை புழுக்களைத்தின்று பருத்து வேற்றுருவடைந்து பி
ன்பு குளவியாகிறதென்று பரிசோனையினுற் கண்டறிந்து எழு
தியிருக்க, அது உண்மையென்று இவ்விடத்திலுஞ்சிலர் பரி
சோதனைப்பிரமாணத்தினுல் நிச்சயித்திருக்க; குளவியானது
புழுவைத்தன்னுருவாக்கிக்கொள்ளுகிறதென்று முன்னோர்கள்
பரிசோதனையில்லாமல் உத்தேசமாய்க்கூறியிருப்பதை, அவர்க
ளுக்குக்குறைவுவராதபடி காத்துக்கொள்ளும்பொருட்டு,ஸ்தா
பிக்கவேண்டி, குளவிகூடுகட்டிப் புழுக்களைக்கொண்டுவந்துசே
ர்த்துக் கூண்டைமூடிவிட்டு,அதைச்சுற்றிச்சுற்றிவந்து மந்திரங்
களைஜெபிக்கிறதினுல் புழு குளவியாகிறதென்று வேதத்திற்
சொல்லியிருப்பதாய் ஒரு பிரசங்கியார் சொன்னதாகச் சிலர்
பேசிக்கொள்ளுகிருர்கள். அப்படியாயின், இதுவும் நல்ல
தரபிமானந்தான். இதைப்பரிசோதித்தறிவது வெகுசுலபமா
யிருக்க, தான் அப்படிச்செய்யாமலும், மேற்கண்டவண்ணம்
தான் கண்டறிந்ததாகச் சொல்லாமலும், மூடவைத்தியன்
செய்கிறகுற்றத்தை பூமி மறைத்துவிடுவதுபோல, பழி பாவங்
களையேற்றுக்கொண்டு மறைத்துவிட வேதம் சித்தமாயிருப்ப
தால் அதின்தலையில் போட்டுவிட்டார். அப்படி வேதத்தில்
சொல்லியிருப்பதும் இராததும் அதையறிந்தவர்களுக்குமாத்தி
ரந் தெரியுமாகையால், அவர்கள்தான் வேதத்தைப் பிரமாண
மாகக்கொள்ளவேண்டும்; அதையறியாத மற்றவர்கள் பிரசங்
கியாருடையவாக்கைப் பிரமாணமாகக் கொள்ளவேண்டியது
தான்.

உலகத்தில் நிகழ்வனபலவற்றுள்ளும் வேதத்தில் சொல்லியிரா
தது ஒன்றுமில்லையாக்கும். கம்பளிப்பூச்சி வண்ணாப்பூச்சி
யாவதும், மற்றுஞ்சில புழுக்கள் வேறு ஐந்துவாகிறதும், தே
வர்கள்முதலாய் எழுவகைததோற்றங்களில்ஒவ்வொன்று இத்த
னை இத்தனைகோடியென்று அளவிட்டிருப்பதைப்பார்க்கிலும்,
ஒவ்வொரு ஜெந்து அல்லது வஸ்துவின்பெயரும் வேதத்தில்
சொல்லியிருக்கும் போலும்; நெல்லையரியாக்குகிறவிதமும் து
ணி நெய்கிறவிதமும் சொல்லியிருக்கலாம். ஐரோப்பியர்கள்
வேதத்தின்மூலமாய்த்தான் நீராவியந்திரத்தையும், அச்சியற்
றும் எந்திரத்தையும், மின்சாரசூழ்ச்சியையும் கண்ணுடிக்கரு
விமுதலிய எந்திரங்களையும் கண்டறிந்திருக்கலாம். ஐயோ!
அந்நியதேசத்தார் ஹிந்தவேதங்களைக்கொணடு அவ்வாறு செ
ய்துகொண்டிருப்பாராகில், வேதங்களை முற்றுமுணர்ந்து, மு
தலையுண்டபிள்ளையைச் சிலவருஷங்களுக்குப்பின் கக்கும்படிச்
செய்தும், தகனஞ்செய்து சாம்பராய்ப்போன எலும்பைப்
பெண்ணுகச்செய்தும் பெருமைபடைத்த நமது முன்னோர்கள்
அச்சுயந்திரம் ஒன்றையாவதுகண்டிருப்பாராகில் நமது பழய
கிரந்தங்களை வெகுவாய்க் காப்பாற்றிக்கொண்டிருக்கலாமே!
ஐயோ! பரிதாபம்!!

தெளிதல்.

மாணிடஜன்மத்தைப்பார்க்கிலும் குளவிஜன்மம் மிகவும் மே
லானது. அதற்கு மந்திர பலத்தினுல் சிருஷ்டி செய்யும்படியா
ன சக்தியுண்டாயிருக்கிறது. கடவுளும் தன் தொழிலில் ஓர்
பாகத்தை அதற்குக்கொடுத்துவிட்டார். நமது பிரசங்கியாரு
க்காவது அவருடைய ஆசாரியர் அப்படிப்பட்ட மந்திரம் உப
தேசித்திருப்பரோ? ஆசாரியருக்கே தெரியாதென்பது நிச்ச
யம், ஆதலால், குளவிக்குக் கடவுளேதான் உபதேசித்திருக்க

வேண்டும். அக்கடவுள் மானிடரிடத்தில் அவ்வளவு கருணை
வைக்கலாகாதா? ஓ, வேதாகமபுராணாதி கடவுளே! காதுங்
கேளாமல் கண்ணுந்தெரியாமல் நீர் பிர்மமாயிருந்துவிட்டால்,
நாங்கள் போகிற கதி என்ன? கண்ணைத் துடைத்துக்கொண்டு
சற்றேவிழித்துக் கிஞ்சித்து கிருபாநோக்கம் வைத்தருளும்; கா
திலடைத்துக்கொண்டிருக்கிறமலினத்தைச் சுரண்டி யெடுத்து
விட்டு எங்கள் முறைப்பாட்டைச் சற்றே கேட்டருளும்; நாங்
கள்யாவரும் உமது திருநாட்டை யடையவேண்டுமென்கிற சி
த்தம் உமக்குப்பூர்த்தியாயிருக்கிறதென்று எங்களுக்குத்தெரியு
ம்; ஆதலால் ஒரோஒரு விண்ணப்பம்—இதற்குமுந்திய ஜன்மா
ந்தத்தில் நாங்களடைந்த நரகதெண்டனையின்னதென்று எங்க
ளுக்கு ஞாபகத்தில் நாட்டிவிடும்; இப்பிறப்பிலேதானே உமது
திருவடியைப்பற்றிக்கொள்வோம்; அவ்வளவு சொற்ப அனுகிர
கஞ்செய்துவிட்டு நீர் ஒரேதூக்கமாசத்துங்கிவிடலாம் என்றும்,
சர்வவல்லவனென்றும் சர்வவியாபக னென்றும் உம்மை நாங்
கள் எவ்வாறுதோத்திரஞ்செய்த போதிலும், நீர் ஒன்றுஞ்செ
ய்யமாட்டீர். நீர் என்னசெய்தபோதிலும், ஜீவர்கள் முதல்
யவற்றை ஜனிப்பிக்குந்தொழிலைப் பிரபஞ்சம்விட் டகலாதென்
று நீர் தெரிந்துகொண்டே ஓர்ரதரமாய்ப் படுத்துவிட்டீர்; ம
றுபடி நீர் எழுந்திருக்கப்போகிறதில்லை. இனி உம்மைக்கட்டி
க்கொண்டழுவதினால் பிரயோசன மொன்று மில்லையென்றறிந்
தே நாங்களும் உம்மை ஒழித்துவிட்டோம்.

A. M.

மெய்யறிவு. 175.

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

முகவுரை.

ஆத்துமாவானதுசரீரத்தில் வாசஞ்செய்து கொண்டி
ருந்து, சரீரம் இறந்தபின்பு மறுஉலகத்தில் பேரின்ப
த்தையாவது கொடிய நரகவேதனையையாவது அனுப
விக்கத்தக்கதாயிருக்கிற தென்பது சகலமதஸ்தர்களும்
ஒப்புக்கொண்டிருக்கிற சித்தாந்தம். நமதுமுன்னோர்
கள் இப்படிப்பட்ட மதககோட்பாட்டில் முழுநம்பிக்
கைவைத்து, இறந்தால் மோட்சமடையலாமென்கிற
எண்ணத்தினால் ஜகந்நாதத்தில் இரதத்தினுடைய சக்
கரத்தின்கீழ்விழுந்து ஆயிரமாயிரக்கணக்காய் மாண்ட
வர்களும் கங்கையில் விழுந்திறந்தவர்களும் அநேகரு
ண்டு. அப்படிப்பட்டவர்கள் அவர்களுடைய கருத்
துக்குக் கிஞ்சித்தாயினும் விரோதமான சங்கதிகளைக்
கேட்டால் பொறுத்துக்கொள்ளார்கள். மதத்தை அ
னுசரித்திருந்தாலும் மறுஉலக இனபதுன்பங்களில்
அவ்வளவாய் நம்பிக்கைவைக்காமல் "நாளைக்குத் தின்
கிற பலாப்பழத்தைப்பார்க்கிலும் இன்றைக்குத் தின்
கிற களாப்பழம் வாசி" யென இவ்வுலக இன்பத்தை
நாடிநிற்பவர்களும் அப்படிப்பட்ட விரோதமான சங்
கதிகளைக்கேட்டால் அவர்களுக்கும் கோபம் எழும்பா
மற்போகாது.

உண்மையைவிரும்புவோன் தனக்குளிருக்கிற ஆத்
துமா பரத்தில் அவ்வளவுமகத்தான சுகதுக்கங்களை
அனுபவிக்கும்படியானதா யிருக்கிறதென்று கேள்விப்
பட்டமாத்திரத்தில், அதைப்பற்றி விசாரணைசெய்வது
அத்தியாவசியகமெனக்கருதி, ஆத்துமா என்பதுஎன்
ன? வென்றுவினவினஉடனே, இவன் ஆத்துமாவைப்
பற்றி பெரியோர்கள் சொன்னது சொன்னபடி நம்பா
மல், விசாரிக்கத் தொடங்கினானே, இவனைப்போல
மதத்துவேஷி ஒருவருமில்லையென்று நெடுநாளைய நம்
பிக்கையில் அழுந்தியிருக்கிற மதஸ்தர்கள் தூஷித்து எ
ழும்புவதுசகஜந்தான். ஆயினும் உண்மையை விரும்
புவோன் தானும் வதிலுக்கு எழும்பாமல், தான் அறி
ந்ததை மற்றவர்களுக்குத்தெரிவிப்பது தனது கடமை
யென்றெண்ணிப் பொறுத்துக்கொள்ளவேண்டும்.

இந்தசஞ்சிகையிலும் மெய்யறிவுஎன்னும் முதல் ச
ஞ்சிகையிலுமுள்ள அபிப்பிராயத்தை உடையவர்கள்
முன்னுமிருந்தார்கள், இப்போது மிருக்கிறார்கள். இது
தெரியாமலே, 'முற்று முணர்ந்தவரில்லை முழுவதுஉங்
கற்றனமென்றுகளியற்க' என்றுவாசித்திருந்த போதி
லும், அதை உணராதவர்கள் தாங்கள் சகலகலா வல்
லவர்களெனத் தங்களைத்தாங்களே மதித்துக்கொண்டு
கர்வித்து, எனது சஞ்சிகைகளில் கண்டிருக்கிற அபிப்
பிராயங்களை ஆராயாமலே புத்தம் புதுமையானவைக
ளென்று மொறுமொறுத்து வெகு தீவரமாய் முடிவு
சொல்லிவிடுவார்கள்.

சிலவிஷயங்கள் நூதனமாயுண்டானபோது அநாசா
ரமாக எண்ணப்பட்டு, நாளுக்குநாள் ஆராய்ச்சி முதிர
முதிர ஆசாரமானவையாகத்தோன்றி அனுஷ்டிக்கப்ப
ட்டுவருவதைக் கண்டறிந்தவர்கள் யாதாயினுமொன்று
நூதனமாயுண்டானபோதிலும் அதைத்தேறவிசாரியா
மல் தீவரமாய் முடிவு சொல்லார்கள். முந்திஅநாசார
மானவையாகத் தோன்றி பிந்தி ஆசாரமானவையாக
அனுஷ்டிக்கப்பட்டவற்றுள் சில திருஷ்டாந்தம் கூறு
வேன்.

(இன்னும்வரும்.)

சமயசம்வாதம். 83

கடவு ளிலக்கணம் வகித்த ஓர்சத்து தனித் துளதேன மதி மயங்குஞ் சங்கம்.

பூசகாரியமாகிய விப்பூமண்டலத்தின்கண்ணே சகல வள
ப்பங்களும் குன்றுது நிறைந்து மல்கப்பெற்ற ஆதொண்டை
மண்டலமாகிய பரதக்கண்டத்தின்கண்ணே குணகடலோர
மாய் நிலவளம் நீர்வளம் குடிவளமிகுத்த, பல்வகைப் பொ
ருளாலும், பல்வேறுபட்ட மனிதர்களாலும், பாஷைகளாலு
ம், வேஷங்களாலும், சமயங்களாலும், ஒழுக்கங்களாலும்
நிறைந்து, எவ்வகையோர்க்கும் அடைக்கல ஸ்தானமாய் வி
ளங்கு மோர் திவ்விய நகரத்தின்கண்ணே வாரத்திற்கோர்நாள்
படாடோபப் பகடிகள் நடிக்கும் சிகரமற்ற பண்டித பாமர
விகடவிவாத வீணாரவார விவரணவாத சம்வாத சங்கம் என
ப் பெயரிய சிரமிலாச்சிறுவர் சிலராய்ச் சேர்ந்து சீர்பெறச்
சின்னாள் விளையாட்டயரு மோர் திவசம் தகப்பன்சாமி, தி
ருமந்திரப்பிள்ளை, சுந்தரமுடையான், ஏமாந்தராமன் என்பா
ர்கூடி ஏதோசில முணுமுணுக்க ஆரம்பித்தனர்.

சங்கம்.—தகப்பன்சாமியாம் தான்தோன்றியாரே, இந்நாம
ங் கிடைத்த நக்ஷத்திரம் நவிலும்.

தகப்பன்சாமி—வேதமோதி உலகினைப் படைப்பான் இறு
மாப்புடனே என் முன்னிற்க, யான், வேதமோதென; ஓம்,
என்னலும்: உண்மைப்பொருளை யுரைசெய்யெனவே; கைகா
லசைய, எண் கண்களும் மழுங்கி, நாற்சிரமாட, என் முன்
னின்றான். யான் நரசிங்கக்குட்டியின் தலைதனிற்குட்டிக் க
ந்தவெற்பில் சிறை யிடுவித்தேன். முன்னீர்த் துயின்றோன்
முதலாய்ப் பலர்வந், தெந்தைதாள் வணங்க எனை யவர்கண்
டு, வெகுண்டுமுன் னின்று வேதனைவிடுவென; ஒன்றுந்தெரி
யா னுதவான் பணிசெய வெனலும்: நீ தெரிந்தாயேல், இனி
யெமக் கிங்கே, யுரைசெயென் றருகினில் வந்து செவிதனைச்,
சாய்த்தா ரதன்மேல் உபதேசித்தேன், அன்றுமுதலா யழை
த்தாரென்னைத், தகப்பன் சாமியென் றுலகினி லனைவரும்.

சங்கம்—நீ யுபதேசியா முன்னர் உன் தந்தை, யொன்றுந்
தெரியாரென்பது உண்மையோ?

தகப்பன்சாமி.—தெரிந்தா லென்னிடம் உபதேசம் பெறுவ
தேன்?

சங்கம்.—ஏ! ஏமாந்தராமா, நீ யேமாந்த தென்னை, யியம்
புதி சுருக்கி லிங் கியாவரு மறிய.

ஏமாந்தராமன்.—பித்தன், நினைத்த வரமீந்த பேனைக், கெ
டுத்தா னதனால் பத்துப் பிறப்பெடுத், துலகினி லுழன்றேன்;
அவற்றி லொன்று:—தசரதன் புத்திரகா மேட்டியாகம், இ
யற்றினனப்போ வேதியர்கூடி, வேதங்களோதி வேள்வியை
நடத்தினர்; அவ்யாகமத்தியி லொர்குடந்தனிலே, பாயசம்வ
ரவே பட்டபஸ்திரீகள், பகிர்ந் துட்கொண்டார் பாயசமுண்
ட, மாதுசிரோன்மணிகள் மைந்தரைப் பெற்றார்; அத்தருண
ம், வைகுந்தத்தினில் வீற்றிருந்தவனாய், எல்லாம்வல்ல ரக்ஷக
க்கர்த்தா, வாகிய யானும் பெரியாள் புசித்த, பாயசத்தோடு
உள்ளே நுழைந்து, புந்தியில் பொதிய மைந்தனாய் வந்தேன்.

இடையில் ஜெனித்த ஓர் சுவக்கியானி—ஏமாந்தராமா, என்
வினாவிற்குச் சற்று செவிகொடு, பிராமணர் சொன்ன மந்தி
ரம் பலித்துப், பாயசம் வந்த விசித்திரமியம்பு; குடத்தில்
பாலும், நீரும், நெய்யும், சருக்கரையுடனே பெய்து அக்கி
னிமுன், காட்டினாலன்றிப் பாயசம் வராது. பாயசமுண்டா
ல் வாயுட்சென்று, ஜீரணப்பையில் தங்கிமலஜல, மாகக்கழிவ
தன்றிவேறின்மையின், குழவியாய் ஜனித்த விந்தையே விந்
தை, சர்வவல்லவ னாரட்சகனும், ஓரிராககதனை வெல்லவே
லாது, ஓர்மாதாவின் கருப்பையிற்றங்கி, மனிதனாய் வெளிவ
ந்துற்றனனென்றால், சர்வவல்லமையுமெங்கே யொழிந்ததோ?

ஏம—ரா.—எனது வல்லமையை எதிர்வீட்டுப் பித்தனுக்,
கினமாக் கொடுத்தே னுதலிற்றருமம், தலையைக்காக்கு மென

வறியீரோ? என்வரலாற்றைப் பொறுமையாய்க் கேளும்; என்
சிற்றனன்னை யிட்ட கட்டளையால, என்மனைவியையும் என்தம்பி
யையுந், கூட்டிக்கொண்டே கையில் வில்லேந்திக், கானகந்
திரிந்து ஜீவரைக் கொன்று, தேக்கெறிந் திருக்கு மந்நாளில் ஒ
ரரக்கி, என்னைவிரகந்தீர்க்கவேண்டினள், நான் இணங்காது த
ம்பியைக்கொண்டு, மூக்கையு முலையையுந் துணித்திட்ட பின்
னர், அவளது தமையன் பத்துத்தலையினன்; ஆண்துணை யில்
லாச்சமயம்பார்த்தென்,மனையாட்டியை யெடுத்தோடினனன்
ே்ரு. பின்னொருவானரம் தூதச்சென்று, இருப்பிடமறிந்தபின்
வானரங்களைக் கொடு, சமுத்திர மணையாய்க்கட்டியே மரக்ப்,
படையால் அரக்கனை வென்றென்மாதினைக், கண்டேன் களித்
தேன் கனத்தநண்பரே. (இன்னும்வரும்.)

பெண் கல்வியின் பலன்.

கல்வி—என்பது அறிவு. அறிவை யுடையவர் தான் ஞானத்
தை யுடையவராவார். ஞானம் இல்லாதவர் மானத்தைக் கா
த்துக்கொள்ளார் என்பது ஞானிகள் துணிவு. ஆகையால்,
புருஷர்களும், பெண்களும் கல்விகற்பதே உலகோர் கொள்
கை. ஆனால் உலகத்திலிருந்தும் இல்லாதவர்போல் தமது சா
துரியத்தினால் பெண்கள் கல்வி கற்கக்கூடாதென சிலர் கூறு
வர். அவாகள் எண்ணம் புண்ணேயாயினும், யோசிப்போ
ம். அறிவென்பது எல்லார்க்கும் பொதுப்பட்ட தாம்போது
புருஷர்கள் கற்கப் பெண்களழுவானேன். புருஷர்களுக்கு
அறிவுவேண்டியபொழுது பெண்களுக்கேன் அறிவுவேண்டிய
தில்லை. புருஷனுக்குச்செய்யும் அடிமைத்தனமே பெண்களுக்
குரிய அறிவே யென்றால், அவ்வடிமைத்தனமும் செயயும் வ
கை இன்னதென்று அறிந்துகொள்வதும் அறிவால்தானே
அப்படியிருக்க, அறிவையுண்டாக்குகிற கல்வியை ஏன்கற்கக்
கூடாது; கல்வியின்றி அறிவு உண்டாகாதல்லவா? புருஷ
னுக்குச்செய்யும் அடிமைத்தனமும், பெண்கள் அறிந்துகொ
ள்ளவேண்டிய பலவற்றினுள்ளும் ஒன்றே. இந்த ஒரு ஞாய
த்தைக்கொண்டு பெண்களை மூடராக்கிக்கொள்வது பெரும்
பேதைமையுடைய புருஷர்தன்மை. இதுநிற்க, மாமியென்ப
வள் மருமகளா யிருந்தகாலத்துப் பட்டுவந்த அவஸ்தையை
மறந்து மருமகளை கொடுமையாகவும், மகளை செழுமையாக
வும் நடத்துதலைநீக்குதற்கும், மருமகள் மாமியின்குணமறிப
மறிந்து மாமிக்கு உச்சாகமுண்டாகும்படி நடந்துகொள்ளு
தற்கும் வேண்டியநீதிகள் கல்வியல்லாம லுண்டாகாதே. பெ
ண்ணானவள் புருஷனுடைய நேர்மையையறிந்து போஜன க
லவிகாலங்களில் சைத்யோபசாரஞ்செய்து யாதொரு தடங்க
லின்றி புருஷனுக்குத் தன்னுடைய உடம்பைச் சிறிதுகாலங்
கொடுத்து தக்கபடி திரேகத்தைக் காப்பாற்றிக்கொள்வதும்
கல்வியாலேயே. புருஷன் வேசிகாந்தனுகாமற்படி தேகத்
தைப்பரிசுத்தமாக்குவதும், புருஷனிச்சைக்குத்தக்கபடிவேசிக
குமேலாக நடிப்பதும், புருஷனுக்குவேண்டியபுத்தி கூறும்
சுயகாரிய துரந்தரியாய் நடப்பதும் கல்வித்திறமையினாலேயே.
புருஷன் உணவிற்குத்தக்க உணவுகளை பாகமாகச்செய்து படை
ப்பதும் பாகசாஸ்திரக்கல்வியே. பெண்ணானவள் தன்னுடைய
நடத்தையினால் பரபுருஷன் நம்மையிச்சிப்பான் என்றெண்ணி
இன்னின்னவிதமாக நடந்துகொள்ளவேண்டியதென்று தெரி
ந்துகொள்ளுவதும் கல்வியாலேயே. புருஷன் ஆனந்தமுற இ
ன்னிசைப்பாக்கள் கற்று தன்னந்தனியிடத்தில் இன்புறச்செய்
வதும் கல்வியினழகே. புருஷன் வறுமையை மிகவுநோக்கி
ஆபரணாதிகளுக்காகத் துன்பப்படுத்தாது வாழ்வதும் கல்
வியின்குணமே. தனதுகுழந்தைகள் பருவத்தின்நேர்மை பா
ராட்டிச் சீராட்டி, தக்ககாலத்தில் பக்குவசிகிச்சைசெய்து வ
ளர்ப்பதும் கல்வியின்மணமே. புருஷனுடைய மனதுக்கு ஒ
த்து தக்க தேவதையை உபாசித்து ஞானங்கொள்வதும், புரு
ஷன்புத்தியின்றி செல்லும் கண்டவழிகளையுஞ் சீர்ப்படுத்திதம்
வசப்படுத்தி நடத்துவதும் கல்வியாலாகிய அறிவின்பயனே.
இத்தியாதிகுறைகளை நீக்கிச் சுகமுறச்செய்ய நமது வேலூர்
கனவான்களிற் சிலர் பெண்பாடசாலை ஒன்றேற்படுத்தத் து
ணிந்ததும் பெரும்புகழே. இப்படி சில கனவான்கள் ஏற்படுத்
துதல் நவீனமன்று. பூர்வீக ரிஷிபத்தினிகளும், இராஜஸ்திரீ
கள் முதலியவர்களும், கல்விகற்றே தந்தம் புருஷர்களுக்கு
வந்தனைவழிபாடு செய்துவந்தார்கள். ஜாநுகூலனி.

கடிதநேயருக்கு.

பெங்களூர்வாசி—யாழ்ப்பாணம் நாராயண பிள்ளை வாதம்
ஒழிந்தது. ஆகஸ்டுமீ உகூ செப்டம்பர்மீ ருஉ பத்திரி
கைகளைப்பார்க்க. அவரைக் குறித்து மறுபடி பேசுவது—
கொல்லப்பட்டவனை மறுபடிகொல்வதொக்கும்.

சி. அ, என்பவர்—யாவரும் எளிதில் அறிந்துகொள்ளும்படி
வசனரூபமாக எழுதுவது உசிதம்.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்க
ள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும்
இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந்
தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால்,அடியிற்கண்டிரு
க்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடு
மாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால்
மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே ஒருஅணா த
பாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இர
ட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடப
க்த்தி---என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி
பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை
புரிவார்களென்று நம்புகிறோம.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.) வெளியூர்—(அட்வான்சு.)
(தபாற்செலவுஉள்பட)

		Rs.	A.	P.			Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு· முனிசுவாமிநாயகருக்கும் ;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras,

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 40.] MADRAS:—SUNDAY OCTOBER, 3, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

சைவசமாஜத்தாரது சலிப்பு. ११

பரமசிவன் 64 திருவிளையாடல்செய்ய முதலில் உத்தேசித்ததுபோல அவருடைய அடியார்கள் நாஸ்திகமத கண்டனமாக 64 உபந்நியாசம் சித்தஞ்செய்திருந்ததாகக் கேள்வியுற்றோம். அவற்றில் ஒன்று வெளிப்பட்டது எமக்குத்தெரியும். மற்றவை என்னவாயினவோ தெரியாது. நாஸ்திகர்கள் நாம் சொல்வதையெல்லாம் தெரிந்துகொண்டு குணப்படுகிறவர்களாயில்லை, நாம் வீணாய்த் தலையை யுடைத்துக்கொள்வதினால் என்னபிரயோசனமென்று (இளவரசுபட்டம்) பிரசங்கியார் சலித்துக்கொண்டதாகத் தெரியவருவதினால், பரமசிவனார் தமது திருவிளையாடல்களை முடித்துவிட்டதுபோல, இவர்களும் தங்கள் உபந்நியாசங்களையெல்லாம் பிரசங்கித்து முடித்துப்பயன்காணாமல் சலித்துக்கொண்டனரோ, அல்லது பரமசிவமே பூமியின்கண் திருவுருக்கொண் டெழுந்தருளிவந்து, அறுபத்துநான்கு சித்துகள் விளையாடித் தம்மையும் தமது வல்லமையையும் வெளிப்படுத்தியும், மற்ற மதஸ்தர்கள் சைவமதத்திற் சேராமற்போனதுமன்றி, சைவசமயிகளே சீர்படாதிருப்பதையுணர்ந்து, தங்கள் பித்துவிளையாட்டு உபந்நியாசப் பிரசங்கங்களினால் பிரயோசனமில்லையென்று நிறுத்திவிட்டுச் சலித்துக்கொண்டனரோ யாம் அறிகிலோம். இவ்வாறு சலிப்படைவது புத்திமான்களுக்கழகன்றே. தங்களாலானமட்டும் பாடுபட்டால், சித்தியடையாவிடினும், பெருமை யடையலாம்.

நாஸ்திகர்கள் ஓர்காலத்தில் ஆஸ்திகர்களாயிருந்து, சமயக்குப்பையைக்கிளறக்கிளற, அம்பட்டன்குப்பையைக்கிளறினால் அதிலிருந்து புறப்படுவதுபோல் புறப்படுஞ்சங்கதிகளைக் கேட்டொழித்து,உண்மையானதாகக் காணுகிறமார்க்கத்தைக் கைப்பற்றி, தங்களைப்போலப் பிறரையும் நினைக்கவேண்டுமென்கிற கடமைபூண்டு, சமயக்கொள்கையிலுள்ள ஆபாசங்களையெடுத்துக்காட்டி,காட்சிப்பிரமாணம்பரிசோதனைப்பிரமாண முதலிய நியாயங்களால் தங்கள் கொள்கையைபெடுத்தூட்டி மூடநம்பிக்கையினால் சமயச்சேற்றி லமுந்திக்கிடக்கிற சமாஜத்தாரைக் கரையேற்றி,அவர்களுக்குநல்வழிகாட்டமுயன்றுகொண்டிருக்க, அப்படிப்பட்டவர்களை இவர்கள் மறுபடி படுகுழியிற்றள்ள முயன்றால் பலிக்குமா? ஒருதரம் படுகுழியிலிருந்து தப்பித்துக்கொண்டு வெளிப்பட்ட யானை மறுபடியும் படுகுழியி லகப்படமாட்டாதென்பதை யறிந்திலர்போலும். நாஸ்திகர்களைத் திருப்புவது முடியாதகாரியமென்று அவர்கள் நன்றாய்த்தெரிந்துகொண்டபடியால், அவர்கள் ஆசாரியர்களாவதற்கு முன்னமே முக்கியமாய் ஒரு காரியஞ் செய்யவேண்டி யிருக்கிறது.

சைவசமாஜத்தாரிற் சிலர் ஆசாரியராகவேண்டிப் புலால்புசிந்தலை விட்டுவிட்டதாகச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்கள் விபூதி ருத்திராட்ச முதலிய சிவவேடந்தரித்து, சமயப்பற்றுள்ளவர்களாயும் பத்திமான்களாயும் வைராக்கியஞ் சாதித்துவருகிறார்களாதலால், அவர்களைநோக்கி, முன்னிருந்த ஆசாரியர்கள் ஊமைப்பெண்ணைப் பேசுவித்தது முதலான அற்புதங்களைச் செய்து பிறசமயிகளை சைவசமயத்திற்சேர்த்து சமயவிர்த்திசெய்ததுபோல நீங்கள் அற்ப அற்புதமாவது செய்து காட்டி எங்களைக் குணப்படுத்தலாகாதா வென்றுகேட்டால் அவ்வளவு பக்தித் தங்களுக்குப் படியவில்லையென்கிறார்கள். அது ஏன்படியவில்லையோ! வாய் ஞானத்தினால் மகாபக்ததிமான்களாய்க் காணுகிறார்களே! ஆலயத்தில் கடவுளைப் பிரார்த்தனைசெய்யும்போது ஆனந்தக்கண்ணீர் சொரிகிறார்களே! கைகளைவிரித்தேந்திக்கொண்டு கண்களைமூடிக்கொண்டு தத்தேகத்தியானமாய் நிற்கிறார்களே! இவர்களைப் புடைசூழ்ந்திருப்பவர்கள் மகாபக்திமான்களென்று சொல்லிக்கொள்ளுகிறார்களே! இவையெல்லாம் நடைநொடிபாவனைகளால் மனிதர்களைவஞ்சிக்கும் கபடமார்க்கமோ, அல்லது முக்தியடையும் பக்திமார்க்கமோ! பிரதிஷ்டையடையுந் தன்மார்க்கமோ! பிறருக்குப் பக்திமுக்திசாதனங்களை யெடுத்துக்காட்டிப் போதிக்குந் தன்மையோருக்குப் பக்திகுதராதிருப்பது "ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்பேதையிற் பேதையாரில்" என்னுங் குறளுக்கொப்பா யிருக்கிறது. வேதாகம புராணதிகளை யுணர்ந்து சிவஞானம்பெற்றுத் தொண்டுபூண்டு, 'எம்பந்த மறுக்குஞ் சம்பந்தரோ' என்று சிவனடியார்களை வாழ்த்திவணங்கும் உத்தமர்களே பக்திப்படியாத மத்திமர்களாயிருக்கிறோமென்று சொல்லிக்கொள்வது கையிலாகாதவன் கதைதான். பெரிய ஆசாரியர், மடாதிபதிகள், முதலாயுள்ள சிவநேசர்களில் ஒருவராவது (காரடவித்தைக்காரன் செய்கிறுப்போலாகிலும்) பீஜாட்சரம், பஞ்சாட்சரம், ஷடாட்சரமுதலிய மந்திரங்களிலொன்றை ஏட்டில் தீட்டித் தீயில் வாட்டி வேகாதிருக்கக் காட்டுவாராகில், தமக்கும் சமயத்திற்கும் எவ்வளவுபெருமையும், உலகத்திற்கு எவ்வளவு உபகாரமுமாயிருக்கும்! இவ்வளவாவது செய்யவல்ல பக்திமான்களாயிராமையால், இவர்கள் முந்திப்பக்தியிற் பழுத்து,தங்கள் சமயிகளைச் சீர்ப்படுத்தி, பிந்திச்சில அற்புதங்களைச்செய்து, பிறமதஸ்தர்களை வழிப்படுத்த வகைபார்ப்பதே விவேகம்.

A. M.

ஆலயங்கள். १५७

ஆலயங்கள் அல்லது தேவஸ்தானங்கள் இப்பூமியின்கண் மனிதரால் கட்டப்பட்டவைகள். இவைகளில் கடவுள் வசிக்கிறாரென்பார்கள். ஆனால் கடவுள் எங்குமுள்ளவர் என்று ஆஸ்திகர்கள் கூறுகின்றபடியால், அவர் ஆலயங்களில் வசிப்பதற்கு எவ்வவு பாத்தியதை யுடையவரா யிருக்கிறாரோ, அவ்வளவு பாத்தியதை அவருக்கு எவ்விடத்திலும் உண்டா யிருக்கின்றதன்றோ? ஆகவே அவர் மனிதர்களால் கட்டப்பட்ட ஆலயங்களில்தான் வசிக்கின்றார் என்பது என்ன நியாயம்? அவருக்கு இவ்வாலயங்களிலிருக்கும்படியாக என்னபாத்தியதையுண்டோ அப்பாத்தியதையே சத்திரங்களிலும்,சாவடிகளிலும், கப்பல்களிலும், தெப்பல்களிலும், கல்விச்சாலைகளிலும்,காவற்சாலைகளிலும், மாட்டுத்தொழுங்களிலும், குதிரைலாயங்களிலும், இருக்குமன்றோ? இப்படி எங்குமிருக்கக்கூடிய கடவுளுக்கு மனிதர்கள ஆலயங்களை கட்டிவைத்திருப்பதேன்? அப்படிகட்டபட்டிருப்பவைகளுள் கிலமாகிக்கிடக்கு மவைகளைப் புதுக்கி வைப்பதேன்? தற்காலமிருக்கு மாலயங்கள் போதாமல் இன்னும் நூதனமான ஆலயங்களை இனி கட்டவும் முயன்று வருவதேன்?, இவைகளுக்கெல்லாம் காரணம் மனத்தடிப்பும், பணக்கொழுப்பு மன்றோ? அகிலலோகங்களையும்படைத்து ஆண்டு ஆதரித்து வருகிறாரென்று ஆஸ்திகரால் கூறப்பட்டுள்ள கடவுளுக்கு இருக்கவிடமில்லாமலா மனிதர்கள் ஆலயங்களைக்கட்டுவதும், உடுக்க உடையில்லாமலா அவ்வாலயங்களில் ஆரோகணிக்கப்பட்டுள்ள விக்கிரகக்கடவுளர்களுக்கு உடையாதிகொண்டு சாத்துபடிசெய்வதும், உண்ண உணவில்லாமலா அவ்விக்கிரகக் கடவுளர்களுக்கு உணவாதிகள்கொண்டு நைவேத்தியஞ் செய்வதும்! ஆகா! நன்று! நன்று! இஃது ஊராள்வோன் மனையாட்டி

க்கு உரங்கஇடமில்லையென்னும் உல்லங்கன வார்த்தை
க்கு ஒப்பாயிருக்கின்றதே. மேலும் வாஸ்தவத்தில் கட
வுளுக்கு இப்பூமியின்கண் வசிக்கஇடம்வேண்டுவது ஆ
வசியகமாயின் அவ்வாவசியகம்காரணமாகஇப்பூமியிலு
ள்ள மனிதர்கள் அவருக்கு ஆலயங்களைக் கட்டுவிப்ப
து உண்மையாயின் உன்மத்தனும்செய்ய உன்னுக கா
ரியமாகிய கோயில்கள்மீது இடிவிழுந்து அடியோடு நா
சமாகும்படி பார்த்திருக்கக் கடவுளுக்கு அறிவழிந்தா
விடுகிறது? அவரது அவ்வறிவில்லாச்செய்கையாகிய இ
டிவிழுதலை தடுக்கும் பொருட்டன்றோ மனிதர்கள் தத்த
ம் வீடுகளும் தங்கள் கடவுளர்களது வீடுகளாகிய ஆல
யங்களும் பாழ்படாவண்ணம் மின்சார ஆகருஷணிக
ளை அவைமீது நாட்டிவைக்கின்றனர். இத்தகைய நி
யாயங்களை யெல்லாம் நிதானித்தறியாதவர்களன்றோ
கோயிலில்லாவூரில் குடியிருக்கவேண்டாமென்றும் ஆ
லயந்தொழுவது சாலவுநன்றென்றும் குழறிவழிபவர்
கள்?

இருண்டகண்ணுக்கு மருண்ட தெல்லாம்பேய்.

சுமார் நாற்பதுவருஷத்திற்கு முன்னமே ஒருவர் முத்தியா
லுபேட்டை பவழக்காரர்வீதி வடமூலையிலிருக்கும் தனது சி
நேகிதரிடத்திற்குப்போய் வாசித்துவிட்டு தூக்கு அரைத்தூக்கு
மரங்கள் நாட்டியிருந்த பழையகோர்ட்டுகிடங்கு பக்கமாய் வ
ருகிறது வழக்கம். ஒருநாள் இராத்திரி-ப-மணிக்கு அவர் அவ்
வழியேவருகையில், தூக்குமரப்பக்கமாய், அதாவது அக்கோ
ர்ட்டு கிடங்கை அடுத்தாற்போல, 'கோஓ' என்கிற வெவ்வேறு
விதமான பல குரலோசைகளை ஒன்றன்பின் னொன்றாகத
தொனிக்கக்கேட்டார். அவர் சிறுபோதிலேதானே விசாரணை
புருஷராயிருந்ததினாலும், பூதப்பிரேத பசாசமென்கிற மூட
நம்பிக்கையற்றவரா யிருந்ததினாலும், அந்தத்தொனிக்கு அஞ்
சாமல், இதற்குவேறே காரணமிருக்கவேண்டுமென்று எண்ணி
அப்போதேவழியில் ஆராய்ச்சிசெய்து கொண்டேவந்து, அது
பத்துமணியடித்த சமயமாதலால், கிடங்கிற்குளிருந்த பாராச்
காரர்கள் மணிக்கணக்காய் மூலைக்குமூலை ஒருவரையொருவர்
கூச்சலிட்டு உஷார்செய்வதினால் அடுத்தடுத்து வெவ்வேறு கு
ரலோசை உண்டாயிருந்திருக்க வேண்டுமென்று தீர்மானித்துக்
கொண்டு, வீடுவந்துசேர்ந்து, மறுநாள் அக்கிடங்கில் தனக்கு
விகிதமாயிருந்த கணக்கப்பிள்ளையை விசாரித்து, தான்தீர்மா
னித்தபடியே அவர்சொல்லக்கேட்டுத் தெளிந்தார். அவர் விசா
ரணையால் இப்போது நாஸ்திகராயிருக்கிறார்.

வேறொருவர் சிலநாளுக்குமுன்னே வண்டியேறி வெளியில்
போய்வரும்போது, எதிரில் வந்துகொண்டிருந்த ஒருயானை
நேராய்த் தன்வண்டியைத் தாக்கவருவதாகப்பயந்து அந்த அ
பாயத்திற்குத் தப்பித்துக்கொள்ள ஜனற்கதவை மூடிக்கொண்
டதாய்ச்சொன்னார். கதவைமூடிக்கொண்டதினாலே யானை ஒ
துங்கிப்போய் அபாயம்நீங்கிவிட்டது பாருங்கள்! இந்தவிவே
கமான செய்கைக்காக யாவரும்வியந்து அவ்வாறுசெய்யத்
தொடங்கவேண்டியதே. இவர் கூடியமட்டில் இங்கிலீஷும் த
மிழும் வாசித்தவர்தான். இவர் பிரசங்கியாயுமிருக்கிறார். இ
வருடைய பிரசங்கமும் அத்தன்மையதாகத்தா னிருக்குமென்
று நாம் நினைக்கவேண்டும். அது அவருடைய தோஷமன்று.
புராணங்களினாலே பூதம் ராட்சதன் பேய் முனி காட்டேரி
யென்னும் பலவித பசாசங்களுண்டென்று தெரிந்து மூடநம்
பிக்கையி லழுந்தி, இருண்டகண்ணுக்கு மருண்டதெல்லாம் பே
ய் என்பதுபோல, ஆராய்ச்சியின்றி கண்டதற்கெல்லாம் அஞ்
சும்படியானதன்மையின் தோஷமே. கொஞ்சம்வாசித்திருந்
தும், அப்படியானதற்கு ஆராய்ச்சியின்றி மூடநம்பிக்கையி ல
ழுந்தி யிருப்பதே காரணமாதலால், நமது சிறுவர்களுக்கு இ
ல்லாதனவாகிய பேய் முதலானவற்றை உண்டெனப் போதித்
துப் பயமுறுத்தி அவர்களைக் கூழைகளாக்கி விடுவதினால், நோ
யுற்றகாலத்து, செய்யவேண்டிய சரியானசிகிச்சை செய்யா
மல், அவிவேகமென்னும் மனப்பேய்மேற்கொண்டு, இல்லாத
பேய் பில்லி சூனியத்தையுட்கொண்டு, அவற்றையொழிக்க ம
ந்திரமுண்டென்றும், அம்மந்திரத்துக்கு அதிகாரிகளுண்டெ
ன்றும் நம்பி, அந்தக்கள்ளவேஷக்காரரை அழைத்து, உள்ள
காசை யொழித்து ஏமாந்து பித்தராய்ப் போவார்களாதலால்,
அவ்வாறுசெய்யாமல், உண்மையான சாஸ்திரங்களையும் நீதி
நூல்களையும் அவர்களுக்குக் கற்பித்து, ஆராயும்புத்தி நுட்பத்
தையுண்டாக்கி, நாம் நல்லொழுக்கத்திலொழுகி வழிகாட்டி,
அவர்களைச் சீர்ப்படுத்துவதே நன்மை. A. M.

சத்திய வர்த்தமானிக் கடிதரர் ஆபாஸ நியாயமர்த்தந மாருத சண்டப்பிரசண்டம்.

ஐயா, விக்கிரகமத நிக்கிரகரே!

நாம சென்னையினின்றும் திராவிடவர்த்தமானி மூலமா யும
து தன்மதி யிருளைப்போக்க நன்மதிச் சுடர்கொளுத்தி-நும்
ஆபாஸ நியாயங்கள் கண்டோரும் விண்டோரும் மற்றோர்
வாயினாலுஞ் சிரிக்கொணுத்தன்மை பெற்றிருந்ததை நோக்கி,
இனியோர்கால் அத்தகைய மூடமதிகொடு எழுதிவிடுச்காவண்
ணஞ்செய்துவிட்டு,கிருஷ்ணகிரி செல்கின்றோமென்று,நம்மோ
டுவாதிக்க வுமக்கிஷ்டமிருக்கும் பட்சத்தில் திராவிடவர்த்தமா
னிமூலமாய்த் தெரிவித்திருந்த மேல்விலாசர் துவாரா நமக்
கொருபத்திரிகை யனுப்பினால் நாம் தத்துவவிவேசினி யென்
னும் மாதுசிரோமணிவாயிலாக விடைவிடுப்போமென்று பிரசு
ரித்திருந்ததை நும் கண்கள் கண்டதில்லையோ! நீர்காணுவிடினு
ம் அப்பத்திரிகையை வாங்கினோரேனும் பார்த்திரார? ஏனைய
பத்திராதிபர்களும் அறிந்திரார்களா? நம் இருவர் நியாயங்
களையும் இனி மற்ற மற்ற பத்திராதிபர்களால் தீர்த்துக்கொள்
ள வேண்டுமல்லது வேறு நெறிக ளுசிதமாகத் தோன்றவில்லை.
ஏனென்றால் பத்திராதிபதிகளெல்லாம் யாவத்விஷயங்களுக்கு
ம் பொதுவாக நிற்பவர்கள். இந்நியாயம் நுமக்கெவ்வாறிரு
க்குமோ தெரிகிலோம். இதற் குடன்பட்டாலல்லது நும்மோ
டு வாதிப்பதைவிடக் குட்டிச்சுவரில் முட்டிக்கொள்வ துத்த
ம மாகுமென்று எண்ணுகிறோம்.

ஐயா, விக்கிரகமதநிக்கிரக வியாக்கிரமமே!

ஆளில்லாவூரி லஸ்வமேதயாகஞ் செய்து வெற்றிபெற்றோ
மென்று கொடிநாட்டிய வீரனைப்போல-நாம் சென்னையைவிட்
டகன்றதே சாலுமென்று, நமக்குப் பத்திரிகையு மனுப்பாமல்,
நும்இஷ்டப்படி வந்தமட்டும் நியாயமற்ற சில வரிகளைத்தீட்டி
நும் சாமர்த்திய விநோதத்தைக்காட்டி, விடைவழுத் தொட்ர்
களைப்பூட்டி, தர்க்கவழுக்களைக்கூட்டி, பலருமறியப் பத்திரி
கையில் நாட்டி யிருக்கின்றீரே இதுதானே நீர் கல்விப்யின்றத
ன் சாமர்த்திய பயன்? நாமெழுதிப்போந்த விஷயங்களுக்
கும் விக்கிரகாராதனைக்கு மென்ன சம்பந்தமிருந்து குறுக்கே
முளைத்ததோ தெரியவில்லை. அதன் காரணத்தை தயவுசெய்
து புலப்படுத்தவேண்டும். அன்றியும்,

நிகழுமாண்டு ஆகஸ்டுமீ 15உ பிரசரித்த பத்திரிகை யொ
ன்றை நமது நண்பர் சென்னையினின்று மனுப்பக்கண்டோம்.
அதன் 64 ம் பக்கம் - 2 ம் காலம் - 5 வது நம்பருடைய பா
ராவில் சத்திய வேதாகமக் கருக்குப் பட்டயத்தின் வியாக்கி
யானப்பயன் புகைவண்டி, மின்தபால், அச்சியந்திர முதலிய
ன வென்றெடுத்து காண்பித்திருக்கின்றீரே, நுமது வேதாகம
க் கருக்குப்பட்டயத்தின்பயன் இதுதானோ? இலௌகிகம்,
வைதிகம் எனு மிருமையுள், இலௌகிகத்தால் விளையும் பயனை
யும், வைதிகத்தால் விளையும் பயனையும் இன்னதென வறியத்தி
றமிலாது நியாயமின்றிக்குளறியிருக்கும் கருக்குப்பட்டய வி
யாக்கியானமுறுக்கொன்றே, நும் புத்திகூர்மையைக் கண்டு
நகைக்கப் போந்த திருஷடாந்தமாகும்.

ஐயா, வேதப்பகட்டரே!

நும் வேதாகமப் பயிற்சியால் விளைந்தபயன் தானோ புகைவ
ண்டி, மின்தபால் முதலியன? நீர் கூறிய வேதாகம லாபதிரு
ஷ்டாந்தங்களெல்லாம் பூததத்துவ சாஸ்திரத்தால் விளைந்த
பயனென வறியீரோ! பூததத்துவத்திற்கும் நும்வேததத்துவத்
திற்கும் உள்ள சம்பந்தமென்னை? பூததத்துவ சாஸ்திரிகளி
லநேகர் நும்வேததத்துவத்தை யதோகதியாக்கி யிருப்பதை
வெளிவிட்டால் நும்ஆபாஸ வேதத்தின் பவிஷுவெளிப்பட்டுப்
போமென்றெண்ணியோ மறைத்தீர்? பூததத்துவ சாஸ்திர
கணிதத்தால் அறிந்த இப்பிரபஞ்சத்தின் ஆயுளும் நும் வேதத
த்துவத்தால் பராபரன் உலகத்தைப்படைத்த காலஅளவும் சீர்
தூக்கின் பராபரன் பஞ்சாய்ப் பறக்கின்றாரே. அங்ஙன மி
ருக்க, நும் வேதாகமத்தால் விளைந்தது பூததத்துவசாஸ்திரமெ
ன்று பேசியதுஅறிவோ, அறியாமையோ! பூததத்துவத்திற்
கும் நும் வேததத்துவத்திற்கும் பரஸ்பரவிரோதமென வறிந்
திலீர்போலும். ஆ!! ஆ!! நும் வேததத்துவத்தால் விளைந்த
பூததத்துவம் மீண்டுங் அவ்வேததத்துவத்தை யிருந்தவிடந்தெ
ரியாமற் பறக்கடித்திருப்பதே சிரிப்பினுஞ் சிரிப்பாயிருக்க, நம்
முடைய நியாயங்களை நீர் பறக்கடித்ததாக படாடோபங்காட்
டியதன்றோ வியப்பினும் வியப்பு!

ஐயா, வேதப்புரட்டரே!

வேதாகமமென்றெழுதுகின்றீரே, நுமக்குரிய வேதமென்றாலெ
ன்ன? எத்தனை? ஆகமமென்றாலென்ன? எத்தனை? எதுவே
தம்! எதுஆகமம்? Biblos=(a book) என்பதனடியாய்ப்பிறந்
த (Bible) பைபில் என்றால புத்தகமெனு மர்த்தமிருக்க, நீர்
வேதமென்றும், ஆகமமென்றும் எழுதுகின்ற பதங்களை யாவர்
பாலிருந்துகளவாடினீர்! திருடன் பெண்டாட்டி என்றும் க
ம்மனாட்டி" என்றவசனத்தைக் கேட்டிருந்தும் திருட்டுமொழி

களா லுருட்டிப்பார்ப்பதென்ன! நீர் சத்திய வேதமெனப் ப
கட்டும் பைபில் ஆங்கிலேயர்க்கன்ரு உரியது? அவ்வாங்கி
லேயரோ பைபிலைப்பற்றி யொருவருக்கொருவர் உதைத்துச்
கொண்டிருப்பது யாவர்க்குந்தெரியாதா? ஆங்கிலேயதேசத்
திலேயே பைபிலில்சேர்ந்த ரெவரெண்டுகளும், பிஷப்புகளுா
அன்னோர்களிற் சிலர் குமாரர்களும், குமாரத்திகளும், பெண்
டாட்டிகளும் அவ்வேதம் நியாயமுடைத் தன்றென்றிருப்பதை
யறியீரா! அன்றியும் அவ்வேதத்தாலும், அவ்வேதப்பேச்சி
னுலும் பாரம்பரியமாய்த் தேறியூறிய சந்ததியிலவதரித்த மிஸ்
டர்பிராட்லா துரையும், ஆனிபீஸன்ட் அம்மாளும் இன்னும்
அனந்தம் பெருங்கூட்டங்களும் பைபிலைக்கால்வாரி யடித்துக்
கொண்டிருக்கின்றதைக்கேட்டதில்லையா! எத்தனையோ சாஸ்தி
ரிகளெல்லாம் பைபிலைக் கட்டுக்கதையெனப் பறையறைந்திரு
க்க, அவர்களைவிட நீர் மகா நிபுணரோ! ஒரேமதமாயும் ஒரே
ஜாதியாயுமிருக்குமவ்விடத்திலேயே நும்மதம் நிலைக்காது அ
லங்கோலப்பட்டிருக்கச்சே பலமதங்களாலும் பலஜாதியரா
லுமடர்ந்திருக்குமித்தேயத்தின் கண்-சுயமதத்தை யறியாதவ
ர்களும், தத்தம்வேதத்தின் சாரத்தை யுணராதவர்களுந் தவிர
ஏனையோர்பால் நும்மத ஜெபஜம்ப மோங்குமா! இங்கிலீஷ்
வேதம் தமிழ்வேதமிருக்குமிடம்வந்தபின்னரன்ரு சீர்திருந்திய
து. இந்துக்களில் பலர் பலவிடங்களில் நும்மதத்தைப் பறக்க
டிக்க முயன்றபின்னரன்ரு பைபிலும், மதப்பேச்சும் ஆண்டுக்
காண்டு புதிதமாயது. இதை நாமறியோமென்ருநினைக்கின்றீர்!
இந்துவேதத்தின் முன் எந்தவேதந்தான் நிலைத்தது? நீர் கூறிய
பிரகாரம் அக்ஞானிகளையும் மிலேச்சரையுந்தான் பைபில் சீர்
திருத்துமேயொழிய எம்போலிகளை யணுகிவர அஃதெம்மாத்
திரம்?

ஐயா ஒன்றை மற்ருென்ருக்குவோரே!

6வது நெம்பர் பாராவில் நும் ஒப்பனையற்ற கடவுளுக்கு, நீர்
நம்மேல் கருணைகூர்ந்து நமது அக்ஞானத்தைப் போக்கவென்
றே சூரியனைத் திருஷ்டாந்தமாகக் கூறினேமென்றீர். இதைக்
குறித்தும்மைக் கேட்டவர்யாவர்? கறட்டோணனை யெடுத்துக்
கவட்டில்விட்டுக்கொண்டவதிப்படுகின்றவனைப்போல—நீரும்
அநாவசியகமான விஷயங்களை யெடுத்துத் தலைமேற்போட்டுக்
கொண் டேன் போராடிப் பின்னிடைகின்றீர். இத்தேயத்தின்
அல்லலையகற்றுமருஞ்சூரியர்களாயுதித்தமுன்னோர்களாகியஞா
னியர்களி லநேகர் கீர்வாணம், திரவிடம், கன்னடம், தெலுங்
கு முதலிய பாஷைகளில் வல்லோராய், அன்னோர்களா லிய
ற்றப்பட்டுள்ள நூல்கள்யாவற்றும் அவர்கள் அகண்ட கருத்து
க்குத் தக்கபடி சதுரார்த்த முதலிய வநேகார்த்தசாரங்களை ய
மைத்து ஆகுபெயர்களாகத் தொகுத்திருக்க,அக்கருத்து நீர்குட்
டிக்கரணம் போட்டாலும் எட்டிப்பிடிக்கக் கூடுமா? அன்றி
யும் அஃது நும்போன்ற பத்சோரர்களுக்கு நீர் சொல்லியது
போற்படாமல் வேறென்னதான்படும்! சங்கீத வித்துவான்
ஒருவன்பாடிக்கொண்டிருக்கையில் அவன்கரசிர ஆட்டத்தைக்
கண்ட மேற்படி ஞானசூனிய னொருவன் அவ்வித்துவானுக்கு
வலிவந்திருக்கின்றதென்று சூடுபோடமுயன்றதைப்போல இந்
து வேதாகமங்களின் அர்த்தசாரத்தை யணுவத்தனையு மறியத்
திறமிலா நீர் அதனை யேளனஞ் செய்யப் புகுந்ததன்ரு ஆ
ச்சர்யம்! அவர்களாலமைக்கப்பெற்றுள்ள அர்த்தங்களில் எ
தைச் சித்தாந்தமெனக் கடைப்பிடியாய்க்கொண்டுபறையடிக்க
ப் புகுந்தீர்? அன்றியும் நீர் அலப்பியிருக்கும் அத்தனையும்
வேதாகமபுராணேதிகாஸ கலைக்ஞானமநுவிஞானமெனுந் தொ
குதியுள் எதிற்கூறப்பட்டிருக்கின்றதெனக் கிஞ்சித்தேனு மாய்
ந்து நோக்காமல் வாய்திறந்து வாதிக்கப்புகுந்ததை கண்ணுற
ம் விவேகிகட்கு நகைபாட மாக்கிவைத்தீர், பளா, பளா!!
நன்று, நன்று!!

அக்குள் மயிர் ஒன்றைப்பிடுங்கிவிட்டு ஆளையே வீழ்த்திவிட்
டேனென்ற சூரனையும், மலத்தைப்பார்த்துவிட்டு மனிதனுடை
ய குணநுபவங்களை எல்லாம் அறிந்துவிட்டேனென்ற ஞானி
யையும்போல எதிலேயோ ஒன்றைப்பார்த்துவிட்டு அதையு
மநர்த்தஞ்செய்து அவ் வநர்த்தத்தையே ஆதாரமாகக்கொண்டு
அந்த வேதத்திலுள்ளதெனவிண்டு, நாம் கேட்டிருந்த பிரசி
னைகளை யெல்லாம் மோர்புறமிருத்தி, "உன்பெயரென்ன! என்
றகடாவிற்கு—இப்பொழுதுதான் சாப்பிட்டேன்" என்றவிடை
யீந்த மகாபுத்திசாலியை யொத்துக் குழறி வழிதலை யகற்றி
பைபில் பகட்டால் புரட்டுந் தொழிலை நும்போன்ருருக்குட்
போதிப்பதை விடுத்து, நம்மையடுத்து, ஆபாஸவசனங்களை ம
டுத்து, வன்னிகிரிமேல் கர்ப்பூராஸ்திரந் தொடுத்தவனைப்போல
நமக்கா போதிக்கவேண்டு மென்கின்றீர்? நாம்சரமாரியாகவிடு
த்த பிரஸ்நா பாணப்பிரயோகங்களி லொன்றிற்கேனும் வி
டையறியாத நீரா நமக்குப் போதிக்கவேண்டுமெனு மெண்ண
ங் கொண்டுளீர்? மகா நன்று! நீர் நமக்கு போதிக்க வாரம்
பிக்கும் வசன முதற்பதத்தையேதகர்த்து வாய்பொத்திப் போ
கச்செய்யும் சாமர்த்தியத்தைப் பின்னேகாட்டுவோம், ஆனல்
இனிநாம் கேட்கும் பிரசினைகட்கு நேர்சமாதானங்கொடுக்க நு
மக்குச் சக்தியுண்டென்றுமாத்திரம்தயைசெய்துநமக்குத்தெரி
விப்பீராயின் அடுத்த பத்திரிகையிலேயே அதனைக்கண்குளிரப்
பார்க்கலாம், சம்மதிதானு?

ஐயா! 7ம் 9ம் நம்பருடைய பாராக்களில் நம்மை யாவரொ
ன நினைந்து நும்போன்ற மதத்தருக்கு நிகரா எழுதியுள்ளீர்.
நாமெழுதி விடுத்திருந்த விஷயங்களில் யாதேனும் சைவத்
தையல்லது வைஷ்ணவத்தைச்சார்ந்து இருந்தாலல்லவா நம்
மை யவையிரண்டிலொன்றிற் சேர்த்து அதற்குரிய புராணக் க
தைகளைபைபில்கதைபோலத் திருஷ்டாந்தப்படுத்திஎழுதலாம்.
அதைவிடுத்து "நரிக்குமுன் நண்டு கரணம் போடுவதுபோல"
கற்றதையெல்லாம் கொட்டிவிடுகின்றீரே,இதுதானு வாதவிதி!
ஐயோ! இது நும்விதியோ! பைபில்விதியோ? நுமது பைபிலி
லிருக்கும் அவலட்சணங்களைப் பன்முறையும் நமது தத்துவவி
வேசினி யெடுத்துப்பேசி யேசி ரோஷித்திருப்பதைக்கண்டிருந்
தும் மீண்டும் வாய்திறக்கப்புகுந்தீரே அஃதல்லவா புருஷ
த்வம்?

8வது நம்பர்பாராவில் ஜோசப்என்னுந்தச்சன் குமாரராகிய
ஜீஸஸ் கிறைஸ்ட் என்பவர் மொழியை நாம்குற்றப்படுத்தத் து
ணிந்ததாகக் கண்டிருக்கின்றீரோ. நாமெழுதிய வொன்றேனு
ம் நும்முடையமூளையிற்புகாததுவியசனம்,வியசனம்!! நாமொ
ன்றுகேட்டால் நீரொன்று சொல்கின்றீர், இங்ஙனே நாமிருவ
ரும் எழுதிவருவோமாயின் நம்ஆயுள் இறுதிவரையில் இவ்வ
ழக்கு தீராது, ஆகையால் திரவிடபத்திரிசாசிகாமணிகளாகிய
பத்திராதிபதிகளை நமக்குமத்தியஸ்தர்சளாகவைத்துஅவர்களா
லேற்படுத்தும் வாதவிதிகட்கடங்கி நாமிருவரும் வாதிக்கத்து
ணிவோமாயின் ஷை மத்தியஸ்தர்கள் என்ன தீர்ப்புகொடுக்கின்
ருர்களோ அதையே நாமனுசரிப்போமாக.

மேலே நாமெழுதிப்போந்த ஒவ்வொன்றும் நமக்குச்சம்ம
தியேயாயின் பத்திரிகைவாயிலாக யாவருமறியத்தெரியப்படு
த்தும்.

மத்தியஸ்தர் விதிக்குந் தீர்ப்புக்கு மொழுகிநடக்கச் சித்த
மாயிருக்கும் நியாயவாதியென்னும,

கிருஷ்ணகிரி,

உண்மைவிரும்பி.

P. S. ஐயா; சத்தியவர்த்தமானிபத்திராதிபர்களே!

வாதவழு, நியாயவிரோதம், ஹேயவசனம் முதலிய வனேக
வழுக்களடர்ந்த கடிதங்களுக்குச் சத்தியவர்த்தமானி இடந்தர
ச் சம்மதித்தனளா? இனி யத்தகைய வசத்திய கடிதங்க
ளுக்கு உடன்படுவாளாயின் தனக்குத்தானே அகௌரவஞ்சம்
பாதிப்பவள்போலாவள். ஆகையால் தாங்கள் அவ்வம்மணிக்
குப்போதுமான புத்திசொல்லப் பிரார்த்திக்கும்,

கிருஷ்ணகிரி,

உண்மைவிரும்பி.

மெய்யறிவு. (6)

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

முகவுரை.

(155-வது பக்கத்தொடர்ச்சி.)

பூமி உருண்டைவடிவா யிருக்கிறதென்று ஐரோப்பா
வில சில சாஸ்திரிகள் நிதானித்தபோது, (Magellan)
மாகிலன் என்னும் தீரபுருஷன் அதைபரிசோதிக்க
1519ம்வருஷத்தில் கப்பல்யாத்திரைபுறப்பட்டான். அ
ப்போது குருக்கள்மார்கள்-அப்பா, பூமிதட்டையாயி
ருக்கிறதுமெய், நீ பூமிமுனைக்கு நெருங்கினவுடனே
பாதாளத்தில் விழுந்துவிடுவாயென்று தடுத்தார்கள்.
அதற்கு அந்ததீரன் பூமிநிழலை நான் சந்திரனிடத்தில்
காணுகிறேன், உங்கள்சொல்லை நம்புவதைப்பார்க்கிலு
ம் அதினிடத்தில் எனக்கு நம்பிக்கை அதிகமா யிருக்
கிறதென்று சொல்லி, பூமியைச்சுற்றி யாத்திரை செய்
துவருகையில் அவர் இறந்துபோக, கூடஇருந்தவர்கள்
அந்தயாத்திரையைமுடித்து, உண்மைக்கு அத்தாட்சி
யாக வந்துசேர்ந்தார்கள். முன்னே மறுத்தவர்களும்
மற்றவர்களும் பின்பு அந்தசாஸ்திரத்தை நம்பவேண்
டியவர்களானுர்கள்,

பூமி சூரியனைச் சுற்றிவருகிறதென்கிற பிரமாணத்
தைக்கண்டறிந்தவர்-(Copernicus) காபர்னிகஸ் என்
பவர். அதுசரிதானென்று (Bruno) புருனே என்பவர்
நிச்சயிக்கவே, அது தங்கள் வேதத்திற்கு விரோதமா
ன சுத்த அபத்தமென்று குருக்கள்மார்கள் அவரை-
1600ம்வருஷத்தில் தீயிலிட்டு எரித்துப் போட்டார்கள்.
(Galileo) கலிலியோ என்னும்விருத்தர் அந்தவிஷயத்

தைஸ்தாபிக்க, அவரை 1616ம் ௵த்தில் அதிக உபத்திரவப்படுத்தி, முழங்கால்படியிட்டுக்கொண்டு அவர் சொன்னதுபொய்யென்று ஒப்புக்கொள்ளச்செய்ததுமன்றி, இப்படிப்பட்டசொற்களைச்சொலலுகிறவர்களுக்கு தெண்டனைச் சட்டமு மேற்படுத்தினார்கள். இவ்விதமாய் 205 - ௵ அதாவது 1821 ம் ௵ வரையில் அந்தசங்கதி அடக்கிப்போடப்பட்டிருந்தது. இப்படிப்பட்டநிர்ப்பந்தத்திலும், அந்தசாஸ்திரிகள் உண்மையும் அதிக அருமையுமான விஷயங்களைக் கண்டறியாமல் வீணாய்விட்டுவிடுவது சரியல்லவென்று நினைத்து, முயற்சியைவிடாமல் தாங்கள் கண்டறிந்தவைகளையெல்லாம் பின்வரும் சந்ததியாருக்கு உதவும்படி எழுதிவைத்துப் போனார்கள். பின்பு நாள் செல்லச்செல்ல, அவை நியாயப்பிரமாணத்தின்பேரில் சிற்சிலரால் ஒப்புக்கொள்ளப்பட்டு, இப்போதுயாவராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. அக்காலத்திலிருந்த சாஸ்திரிகள் பட்டபாட்டின் சரித்திரகிரந்தம் பெரியபுராணத்தைப்பார்க்கிலும் பெரிதாயிருப்பதால், இச்சிறு புத்தகத்தில் குறிக்கலாமென்றாலும் இடம்போதாது.

இப்படிப்பட்டஅருமையானவிஷயங்களிருக்கட்டும். நமது பட்டணத்திலே சாதாரணமான விஷயங்களுள், க-வது - இவ்விடத்தில் குழாய்த்தண்ணீரைப் பிரதமத்திலே பிராமணர்கள் அநாசாரமானதாக எண்ணி உபயோகிக்காமலிருந்து, நாளுக்குநாள் அது ஆசாரமானதாகத்தோன்ற, இப்போது அந்தத்தண்ணீரைத்தங்கள் வீட்டிற்குள்ளும் வருவித்துக் கொண்டார்கள். உ-வது நம்மவர்களுக்குள்ளே சிலவருடங்களுக்குமுன்வரையில் கருமாந்தினத்தில் வெளியிற்போய்க் கருமங்களைமுடித்தொழித்து சுபஸ்வீகரணஞ்செய்துகொண்டு மேளதாளத்தோடு சுபகரமாய் வீடுவந்து சேர்ந்துகொண்டிருந்த ஆசாரத்தை முதலிலே ஒருவர் நீக்கி, வீட்டிலேதானேசுபஸ்வீகரணஞ்செய்துகொண்டபோது, நிந்தித்தவர்கள் அநேகருண்டு. அஞ்ஞானத்தால் முதலில் அநாசாரமாகத் தோற்றினகாரியம் பின்பு ஞானத்தால் ஆசாரமானதாகத்தோற்றி, அநேகரால் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறது. மேலும், வீட்டிலேதானே கருமங்களைமுடிக்கிற ஆசாரமும் இப்போது கொஞ்சகொஞ்சமாய் நுழைகிறது. ௩ வது - முப்பத்தைந்து வருஷத்திற்குமுன்னே ஹிந்து பெண்பிள்ளைகள் படிக்கிறவழக்கமும் அவர்களுக்குப்பாடசாலையுமில்லை; முதலில் அவர்களுக்குப் பாடசாலை ஏற்பட்டபோது, அதையும் அதை யேற்படுத்தினவர்களையும் அநேகர் சபித்ததுமன்றி, சமயம்வாய்த்தால் அவர்களை அடித்துப்போடவுங் காத்திருந்தார்கள். அக்காலத்தில் அது அவர்களுடைய கொள்கைக்கு விரோதமானதுபோலத் தோன்றினமையால், அப்படி அவர்கள் காத்திருக்கவேண்டியிருந்தது சகஜந்தான். அப்போது அவர்களுக்கிருந்த விவேகம் அவ்வளவே யாதலால் அவர்கள்பேரில்தோஷஞ்சொல்லஇடமில்லை. பின்னிட்டுஅவர்களும் பெண்களுக்குக்கற்பிப்பது நல்லகாரியமென்றறிந்து தங்கள்பெண்களையும் பாடசாலைக்கு அனுப்பினார்கள். இப்போது அப்பாடசாலைகளின் விர்த்தியும் பிரயோசனமும் யாவருக்கும் தெரிந்தேயிருப்பதால் விசேஷித்து நான்சொல்லவேண்டுவதில்லை. முதலில் பெண்களுக்கு பாடசாலைகள் ஏற்படுத்தினபோதுண்டான சங்கடங்களை அனுபவித்தவர்களில் யானும் ஒருவனேயாதலால், இப்போதும் அவ்வித சங்கடங்களுண்டாகலாமென்று எனக்குத்தெரியும்; உண்டாயினும், அதை நான் சகித்துக்கொண்டு, நான் அறிந்ததை நம்மவர்களுக்குத் தெரிவிப்பது எனதுகடமை, என்மேற்பொறுத்தகடமை.

ஆத்துமாவைப்பற்றி இக்காலத்து ஐரோப்பிய கிரந்தகர்த்தர்கள் சிலர் இங்கிலீஷ்பாஷையில் எழுதியிருக்கிறார்கள். அதைப்பார்க்கிலும் விசேஷமாய் எழுதவேண்டுவதும் ஒன்றுமில்லை, எழுதுவதற்கும் என்னாற் கூடாமையாயினும் இங்கிலீஷ்வாசித்தவர்களுக்கன்றி வாசியாதமற்றவர்களுக்கு அந்த இங்கிலீஷ்கிரந்தங்கள் பயன்படாமைபற்றி, அவர்களும் அந்தகிரந்தங்களிலுள்ள சாரங்களை அறிந்திருக்கவேண்டுமென்கிற விருப்பத்தினால், அவற்றில், சில இங்கிலீஷ் சாஸ்திரங்களை வாசியாமல் தெரிந்துகொள்ளக்கூடாத அருமையாயிருக்கிற விஷயங்களைநீக்கி, சுலபமாயிருக்கிற விஷயங்களின் சாராம்சத்தைக்கவர்ந்துகொண்டு தமிழில் எழுதினேனேயல்லாமல், எனது சொந்த அபிப்பிராயம் வெகுகொஞ்சமாகவே யிருக்குமாதலால் இந்தச்சஞ்சிகைமுழுதும அந்தக்கிரந்தகர்த்தர்களுககே நன்றியறிதலோடு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

(இன்னும்வரும்.)

சமயசம்வாதம்.

(156 - வது பக்கத்தொடர்ச்சி.)

சுவக்கி.—தமயந்தி வனத்தில் தன்னை யிச்சித்தவேடனைச் சாம்பராக்கியது நைடதத்தில் கேட்டிருக்கின்றோமல்லவா; இராமன் மனைவியை ராக்ஷதன்எடுக்கையில் அவளுக்கு தமயந்திவல்லமையு மில்லாதொழிந்ததே: அவனை ஓர்நரனுடைய மனைவியினுந் தாழ்வாக நினைப்பதற்குத் தடையென்னை?

ஏமா—ரா.—நான்தான் ஏமாந்து என்மனைவியை யிழந்து நெடுங்காலந் துன்பமுற்றிருந்தேன்; அதனால்தான் என்னை ஏமாந்தராமன் என்றழைத்தீர்கள், தாங்களார், இடையில் ஜெனித்தீர்?

சுவக்கியானி—வேதாகமபுராண இதிகாசம் மதப்பித்தேறிய மானிடர் வாய்மொழியென மதித்து, கடவுள் தன் னிலக்கணம் பொருந்தி யோர் தனிப்பொருளா யுளதாவென்று விசாரிக்கும் சுவக்கியானியானேன்.

ஏமா—ரா—கடவுள் உளதென்று துணிந்தீரோ இலதென்று துணிந்தீரோ?

சுவக்கி—கடவுள் நிச்சயத்தைக்கண்டு பிடிக்கத்தான் துணிந்தேன்.

சங்கம்—திருமந்திரப்பிள்ளை, உன்சேதியென்னை?

திருமந்திரப்பிள்ளை—மூவாயிரமாண்டு முனிவேடம்பூண்டு மூதறிஞர் பலருடைய திருவருள்கொண்டு ஆண்டுக்கோர்பாவாக அனுபவித்துத் திருவாய மலர்ந்த திருமூலநாயனார் திருப்பிள்ளையாக யான்வந்துதித்தேன்.

சுவக்கியானி—ஒவ்வோரெழுத்தையும் இலக்கண இலக்கியக் குற்றம் நீங்கச் சிற்றகத்தியம், பேரகத்தியம், தொல்காப்பியம். சதுரகராதி, நிகண்டு, முதலியனகற்று அனுபவித்துத் தேர்ந்து பின்னரியற்றினராக்கும், ஒவ்வோரெழுத்தையும் அனுபவிக்கவேண்டுமானால் அவ்வளவு நாள் செல்லும்; அல்லதொருக்கால் தெத்துவாயுவுண்டோ? ஓலையிலெழுதினால் செல்லெரிக்குமென்று செப்புத் தகட்டிலெழுதச் சிப்பியைத் தேடித்திரிந்தாராக்கும். ஒவ்வொரு பாவிற்கும் ஒவ்வொருசிப்பியை தேடினாராக்கும். அந்தோ! மெத்தப்பிரயாசை. செல்லுமிடமெல்லாம் தூக்கித்திரிய ஆள்தேடியுமிருப்பார்.

சங்கம்—சுந்தரமுடையாய், இயம்புவையுன்வரலாறு சுருங்கச்சுருக்கில்.

சுந்தரமுடையான்—யான் அதிபாலிய சுந்தரமுடையேன், இங்கிலீஷ்புட்டி உ-ம் தமிழ்புட்டிஒன்று முட்சொண்டேன்; ஆனால்சில இங்கிலீஷ்பதத்திற்குத் தமிழும் தமிழ்ப்பதத்திற்கு இங்கிலீஷுந் தெரியாது, சமயத்திலிரண்டுங் கலந்தடிப்பேன். யாவரும் ஏமாந்தராமனைக்கண்டு, என்னையா இளைத்தும் விசனமுற்று மிருக்கிறீர்!

ஏமா—ரா—நமதிடையில் ஜெனித்த சுவக்கியானி கடவுள் சந்தேகம் என்றார். அதைக்கேட்டுத் திடுக்கிட்டுபயந்தேன்; இரண்டுநாள் இரத்தபேதிகண்டு இளைத்தேன், இப்போது கொஞ்சம் சுகந்தான்.

சுந்தர.—கேட்டவுமக்கு பேதிகண்டால் சொன்னவர்க் கென்னநேர்ந்தது, ஒன்றையுங் காணோம். சுகமாகத்தா னிருக்கின்றார். நாமிந்தவிடத்தில் குந்தி வெந்ததைததினறு வாயில் வந்ததை முணுமுணுப்போம், பின்னேவந்தவரட்டும், நம்மிலதெரிந்தவர் தகப்பன்சாமியாராதலால் அவர்புகல்வதை நாம் செவியுற்றுப் பின்னே இங்கிலீஷுந் தமிழுமாகக் கலந்தடிப்போம்.

தகப்பன்—எனக்கு சோதிடம் தெரியும், கடவுளுண்டா யில்லையாவென்று கணிப்பேன், நடுவிலிந்தக் கறுப்புப் பலகையை வையும், துவாதசபாவ சக்கரம் வரைந்து கணிப்பேன், லக்கிணத்திற்கு நாலாமிடம் மாதுருஸ்தானம், பெற்றதாயுண்டு,ஏழாமிடம் களத்திரஸ்தானம், மனைவிமக்களுண்டு. பத்தாமிடம் பாழ், பதியைக்கலைக்கும், பனிரெண்டாமிடம் வெறுமையா யிருக்கின்றது, சொல்வதற் கின்னதென்று தெரியவில்லை.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 41.] MADRAS:—SUNDAY OCTOBER, 10, 286. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

கண்திறப்பு.

லைகர்கஸ்என்பவர் ஸ்பார்ட்டாதேசத்தைச் சீர்திருத்திச் சட்டங்கள் ஏற்படுத்துவதற்காகச் சிலரோடு ஆலோசித்துக்கொண்டிருக்கையில், அவர்களிலொருவர் அந்தத்தேசத்திலுள்ளவர்களையெல்லாம் சரிசமானமாக்கிவிடவேண்டுமென்றார், லைகர்கஸானவர் ஐயா, அது யுக்தமாகத்தானிருக்கிறது, அவ்வித ஏற்பாட்டைத் தங்களுடைய இல்லத்திலேதானே ஆரம்பிக்கலாமேயென்று மறுமொழிசொல்லினர்.

மைக்கல் இஞ்சிலோஎன்கிற சிறந்த ஓவியக்காரன் நரகவேதனைப் படமொன்றெழுதி, அதில் துன்பத்தையனுபவிக்கும் அநேகருள் தனக்கு விரோதியான இரண்டாவது போப்பின்சாயலாக ஒரு உருவத்தைஎழுதி வைத்தான். இதை அந்த ஐயர்பார்த்து முதன்மையான போப்பினிடத்திலே முறையிட்டுக்கொள்ள; அவர் ※உத்தரிப்பு ஸ்தலத்திலிருந்து மனிதனை விடுதலைசெய்ய எனக்கு சக்தியுள்ளதேயல்லாமல், நரகத்திலிருந்து விடுவிக்க எனக்குச் சக்தியில்லையே, அது உனக்குத் தெரியாதாவென்றார்.

※மோட்சலோகத்திற்கும் நரகலோகத்திற்கும் மத்தியில், மோட்சமடையும்படி பாப பரிகாரஞ்செய்துகொள்ளக் கொஞ்சகாலந் துன்பமடைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஸ்தலம்.

கடவுள்.

பூலோகத்தில் மன இருள்நிறைந்த பேதைமையுள்ள சமஸ்தசமயவாதிகளும் பஞ்சபூதங்களையும், அவற்றின குணங்களையும் தெய்வமென்று வழிபடுகிறார்களேயன்றி, இவற்றிற்கெல்லாம் புறம்பானதாய் ஏதோவொன்று இருக்கிறதாக மொழிவதை வழிபடுவதில்லை.

ஆதிமுதல் இத்தேசத்தார் பஞ்சபூதங்களையே கடவுளென்று வணங்குகிறார்களென்பதற்கு, இந்துவேதத்தைக்கொண்டே இதனடியில் சுருக்கமாக சாட்சிகொடுக்கின்றோம்.

சாமவேதம் தாந்தியமென்னும் பிராம்மணம் ௨-வது காண்டம் அக்கினிஸ்தோமம் ௫-வது அத்தியாயத்தில், (அடியில் வருவது சாயனாசாரியரால் எழுதப்பட்டது.) உபமன்னியூ என்பவருடைய புத்திரர் பிராச்சீனசாலன், பூலுசன் சந்ததியாகிய சத்தியஜனயன், பல்லவி சந்ததியாகிய இந்திரித்தியூமன். சரகாட்சயன் சந்ததியாகிய ஜனன், அசுவதராசுவன் சந்ததியான ஊதிலன், ஆகியஇவர்கள் வேதத்தின் மூலபொருளையெல்லாம் ஆதியோடந்தமாகக் கற்றுணர்ந்தவர்களாயிருந்தும், கடவுளைப்பற்றி சந்தேகங்கொண்டு, பிரம்மமென்பதெது என்னும் சந்தேகத்தினால் பிரம்மவிசாரணையில் பிரவேசித்து, அருணன் புத்திரராகிய உத்தாலகனென்பவர் கடவுளைத் தெரிந்திருப்பாரென்று அவரிடஞ்சென்று, அவரைநோக்கி, உத்தாலகரே, நாங்கள் பிரம்மத்தைத்தெரிந்துகொள்ளவேண்டுமென அறிக்கைசெய்துகொண்டார்கள். இவர்கள் வேதங்களை நன்றாய்க் கற்றிருப்பதால் இவர்கள் சந்தேகத்தைத்தெளிவிக்கத்தம்மாலாகாதென்று, கேகயன்புத்திரரான அசுவபதியென்னும் அரசன் வேதாகமங்களை நன்றாகக் கற்றுணர்ந்திருப்பதால், அவரிடஞ்சென்று கேட்போமென உத்தாலகர் தன்னிடத்திற்கு வந்தவர்களிடத்தில்சொல்லி, அவர்களைஅசுவபதியென்பவரிடத்தில் இட்டுக்கொண்டுபோய்விட்டார். அவர்கள் அவ்வரசனை நோக்கி, கேகயன் புத்திரரான அசுவபதியே, இராஜாவே, தாங்கள் வழிபடுங்கடவுளை எங்களுச்கு உபதேசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்சள். அரசன் அவர்களனைவரையும்நோக்கி அடியில்காண்கிறவிதமாகப் பேசத்தொடங்கினார்.

1. ஓ! உபமன்னியபுத்திரரே, நீர்கடவுளாகஎதைத்தொழுகிறீரென்றுவினவினார். அதற்குஅவர், மன்னவனே, நான்வானத்தைக் கடவுளாகத்தொழுகிறேன்; அதுகடவுளின் சிரசாயிருக்கிறதென மறுமொழிகூறினார். அதற்கு அரசன், உமது சிரசுநஷ்டமாய்ப் போயிருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீரென்றார்.

2. பூலுசன்புத்திரராகிய சத்தியஜனயனைநோக்கி, ஓ! பிர்ச்சன்னயோகன் சந்ததியாரே, நீர்கடவுளாகஎதைத்தொழுகிறீரென்றார். அதற்குஅவர், ஓ! இறைவனே, நான் ஆதித்தனைக கடவுளாகவழிபடுகிறேன், அதுகடவுளின் நேத்திரமாயிருக்கிறதென்றார். அதற்குஅரசன் நீர்அந்தகனாயிருந்தால் என்னிடம் வந்திருக்கமாட்டீரென்றார்

3. பல்லவிபுத்திரராகிய இந்திரத்தியூமனைப்பார்த்து, வியாக்கிரபாதர் சந்ததியாரே, நீர் கடவுளாக எதைத்தொழுகிறீரென்றார். அதற்கு அவர், ஓ! இராஜாவே, நான் வாயுவைக் கடவுளாகத்தொழுகிறேன், அது கடவுளின் பிராணவாயுவாக இருக்கிறதென்றார். அதற்குஅரசன், நீர்இறந்திருந்தால் என்னிடம் வந்திருக்கமாட்டீரென்றார்.

4. சரகராட்சயன் புத்திரரான ஜனனைநோக்கி, ஓ! சரகராட்சயன் புத்திரரே, நீர் கடவுளாக எதைத்தொழுகிறீரென்றார். அதற்கு அவர், ஓ! அரசனே, நான் ஆகாயப்பரமாணுவைக் கடவுளாகததொழுகிறேன். அதகடவுளின் உடலாக இருக்கிறதென்றார். அதற்கு அரசன் உமது உடல் அழிந்திருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீரென்றார்.

5. அசுவதராசுவின் புத்திரராகிய ஊதிலரை நோக்கி, ஓ! வியாக்கிரபாதர் சந்ததியாரே, நீர் கடவுளாக எதைத்தொழுகிறீரென்றார். அதற்குஅவர், ஓ! மன்னவனே, நான் உதகத்தைக் கடவுளாகத்தொழுகிறேன், அதுகடவுளின் அடிவயிறாக இருக்கிறதென்றார். அதற்குஅரசன், உமதுசலாசயம் வெடித்துப் போயிருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீரென்றார்.

6 கடைசியில் அவர் அருணன் புத்திரராகிய உத்தாலகரைநோக்கி, ஓ! கோதமன்சந்ததியாரே, நீர்கடவுளாக எதைத் தொழுகிறீரென்றார். அதற்கு அவர், ஓ! அரசனே, நான் பிருதிவைகடவுளாகத் தொழுகிறேன், அதகடவுளின்பாதங்களாக இருக்கிறதென்றார். அதற்கு அரசன், உமதுபாதங்கள் முடமாய்ப்போயிருந்தால் நீர் என்னிடம் வந்திருக்கமாட்டீரென்றார்.

7. அரசன் அவர்களனைவரையும் நோக்கி, ஜனன்முதலானவர்களே, நீங்கள் சருவபரிபூரணகடவுளைத் தனித்தனி ஒவ்வொருவஸ்துவாக எண்ணி, தனித்தனியாக உங்களுக்குள் பங்குகொள்ளுகிறீர்கள்; யார் இவ்வனைத்தையும் சருவபரிபூரண கடவுளாகநம்பி ஆராதிக்கிறார்களோ அவர்கள் ஆயிரந்தலைமுறைபரியந்தம் சுகத்தைப்பெருக்கி க்ஷேமத்தை விர்த்திசெய்து புத்திரசம்பத்தை அடைவார்கள். கடவுளுடைய சிரசு பிரகாசமுள்ளதாயிருக்கிறது, அவருடைய கண் சமமாகப் பலவிதப்பட்டிருக்கிறது, அவருடைய உயிர்ப்பு சமமாகப் பரவியிருக்கிறது, அவருடைய உடல் அனந்தமானதாயிருக்கிறது, அவருடைய அடிவயிறு நிறைந்ததாக இருக்கிறது, அவருடையபாதங்கள் பூமியாக இருக்கிறது, அவருடையமார்பு பலிபீடமாக இருக்கிறது, அவருடைய மயிர் குசப்புல்லாக இருக்கிறது, அவருடைய இருதயம் கிரகாக்கினியாக இருக்கிறது, அவருடைய மனது செந்தீயின் சுவாலையாக இருக்கிறது, அவருடைய வாய் பலியாக இருக்கிறதென உபதேசித்தார்.

வேதத்தைக்கொண்டு மேற்காட்டிய சாட்சியன்றி வேறுவிதமானசாட்சிகள் இதனடியில் தீட்டுகிறோம்.

8			
சிவாயநம.	சி.	பிருதிவு.	பிரம்மா.
	வா.	அப்பு.	விட்டுணு.
	ய.	தேயு.	சிவன்.
	ந.	வாயுவு.	மகேசுவரன்.
	ம.	ஆகாயம்.	சதாசிவன்.
		பிரணவம்,	ஓம்.
ஓம்.	அ.	திதி. ஜலம்.	விட்டுணு.
	உ.	சங்காரம். தேயு.	சிவன்.
	ம்.	சிருட்டி. பிருதிவு.	பிரம்மா.

9 நெருப்பையே சிவனென்கிறார்கள். சிவனென்னுங் கடவுளுக்கு நெருப்புக்கு இயற்கையாயுள்ள குணங்களனைத்தையும் வருணித்து, அச்சத்தைத்தரத்தக்க நாமங்களையே அளித்திருக்கிறார்கள். நெருப்பின்நிறம் ஓர்விதவெண்ணிறம்; சிவனது தேகநிறம் வெண்மை. தீயின்குணம் எரித்துவிடுவது; சிவனதுதொழிலும் சங்கரிப்பது. சிவனது ஆடையாபரணங்களனைத்தும் குரூரசின்னங்களை யுடையவை. சிவன் அநேகருடைய சிரசுகளைக்கொய்து, ஒன்றோடொன்று தொடுத்து அதனையும், நாகசருப்பங்களையும் மாலையாகவும், புலித்தோல் முதலியவற்றை ஆடையாகவும், ஒருகையில் எவரையும் வதைக்கத்தக்க சூலாயுதத்தையும், ஒருகையில் தீக்கொழுந்தையும். இன்னும் இத்தன்மையதான பல குரூரசின்னங்களையும் உடையவராக விளங்குகிறார்.

10. ஜலத்தையே விட்டுணுவென்கிறார்கள். விட்டுணுவென்னுங்கடவுளுக்கு ஜலத்திற்கு இயற்கையாயுள்ள குணங்களனைத்தையும் வருணித் திருக்கிறார்கள். சமுத்திரஜலத்தின் நிறம் பசுமைகலந்த ஓர்விதநீலநிறம்; விட்டுணுவின்நிறம் நீலவருணம். ஜலத்தின்குணம் காப்பாற்றுவத; விட்டுணுவின்தொழில் இரட்சிப்பது.

11. பிருதிவையே பிர்ம்மாவென்கிறார்கள். பிர்ம்மாவின் தொழில் சிருட்டிப்பது. முட்டையிற் பிறப்பனவும், விதைகளிற் பிறப்பனவும், வேர்வையிற் பிறப்பனவும்; கருப்பையிற் பிறப்பனவுமாகிய நால்வகைத் தோற்றங்களுக்கும் பூமியேகாரணமாயிருப்பதால் பிருதிவையே பிர்ம்மாவென்கிறார்கள்.

12. இந்திரியத்தை (சுக்கிலம்) இந்திரன் எனவருணித்து அது பெண்பாலிடத்துச் செல்லுவதால், இந்திரனென்னுஞ் சக்கரவர்த்தியினிடத்தில் ஊர்வசி ரம்பை முதலிய அதிரூபவதிகளான பலஸ்திரீகள் இருப்பதாக எண்ணியிருக்கிறார்கள்.

13. காமத்தைக் காமன் என்பார்கள். காமமாகிய காமன் நெருப்பாகியசிவனையும் விடாமல் தூண்டிவிட்டதால் அவர் தமது நெற்றிக்கண்ணாகிய அறிவினால் அதனை எரித்துவிட்டாரெனச் சொல்லுகிறார்கள். முதல் சையோகத்தில் காமத்தால் இருபாலாருடைய தேகத்தினின்று வெளிப்படும் உதிரத்தைப் பிரசித்தப்படுத்தும் வண்ணம் காமனைக் கொண்டாடும் கொண்டாட்டத்தில் சிவப்பு வருணங்கலந்த செந்நீரைத் தங்கள் ஆடைகளின்மீது தெளித்துக் கொள்ளுகிறார்கள்.

இந்துக்கள் பஞ்சபூதங்களையும், பஞ்சபூதக்கலப்புகளையும். அவற்றின் குணங்களையும் கடவுளென்று வணங்குகிறார்களென்பதற்கு மேற்காட்டியவையேபோது மானசாட்சியாக இருக்கின்றன. ஆதலினால், தோற்றமுள்ள பதார்த்தங்களன்றி வேறொன்றும் இல்லையென்று உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டது.

M. M.

மேலே வேதவாக்கியங்களில் சொல்லியிருப்பனயாவும், 'அனைத்துமாய் நின்றாயே யான்வேறோ நின்னை நினைக்குமாறெங்கே நிகழ்த்தாய் பராபரமே. என்றுதாயுமானவ ரருளிய ஒருவாக்கியத்திலடங்கி யுள்ளன. இதனாலும், கடவுளென்பது பஞ்ச பூதஸ்வரூபமென்பதற்கு அத்தாட்சியாக, பிருதிவு-காஞ்சி; அப்பு-திருவானைக்கா; தேயு-திருவண்ணாமலை; வாயு-காளாஸ்தி; ஆகாசம்-சிதம்பரமென, சமயிகள் ஐந்துஸ்தலங்களைக் குறித்திருக்கிறார்கள், வேதாந்திகளும்-சோதி, நாதவிந்து என அனலையும் காற்றையுமே கூறுகிறார்கள். ஆதலால், புலப்படுவனவன்றி, கடவுளென முன்னோர்கள் கண்டறிந்தது புலப்படாதவேறொன்று மல்லவென்று ஸ்பஷ்டமாய்த் தெரிய வருகிறது,

A. M

வருந்தியழைத்தல்.

ஐயா, "வேதசிவாகம புராணாதிகளினியல்பு" என்ற மகுடத்தால் ஆஸ்திகத்தை நாட்டி, நாஸ்திகத்தையோட்டிவிடப்பிரயத்தனித்த தாட்டிகத்தையுடைய யாழ்ப்பாணம் ஸ்ரீ நாராயணபிள்ளையவர்காள்!

நாம் தங்கள் மகுடத்தை விகடமாக்கியதற்கு இதுபரியந்தம் விடையிலாக் காரணத்தால் அம்மகுடம் விகடமேஎன்று தாங்கள் சம்மதித்தீர்போலும்.

தங்களைப்போன்ற கல்வியிற்றேர்ந்த வித்வ சிகாமணிகட்கே வேதாகமங்கள் உரியனவென்பதை மறுத்து தங்களுக்குத் தெரியும்படி யதன் எதிர்க்கட்சியில்நின்று நாம் வாதிக்கவிழுத்தும் தாங்கள் பிழைத்ததே போதுமெனயாண்டுபுக்கினீர்கள்? புக்கினவாண்டேயிருந்தேனும் நம்முடன் சமர்புரியலாகாதா? தொட்டுப்பார்க்குமுன்னே எட்டிப்போய்விட்டீர்களே, என்ன செய்யலாம். கூடிக்குலாவிக் கலந்தாற்றானே சுகாநுபவோதயமாகும். நாம் தங்களோடு பேசப்புகுவது நாத்திகத்தைச் சார்ந்தல்ல. ஆத்திகத்திலுள்ள ஆபாசங்களையே நுங்கள்பாலெடுத்தோதி அவற்றிற்குத் தங்கள் திருவாக்கினின்றும் சில சமாதானங்களைப்பெற அபேட்சித்திருக்கும் நம்மை வெறுவாக்காக்காதேயுங்கள். இரண்டொரு மாதத்திற்கேனும் அல்லது இரண்டொரு வாரத்திற்கேனும் நாமிருவரும் வாதிக்கமுயல்வோம்.

"கலகம்பிறந்தால்தானே நியாயம்பிறக்கும்" என்பதையறியீர்களா? வித்வான்களுக்குத்தான் வேதாகமப்பொருள் பாத்திரம் ஏனையோர்க்கபாத்திரம் என நச்சிநச்சென்று பேசியலுத்துப்பிரேதமான சச்சிதாநந்தபிள்ளையின் உச்சிதப் பிரசங்கத்திற்குத்தாங்களுந் துணையாக வந்திருப்பதாகத் தோன்றுகின்றது சந்தோஷம், சந்தோஷம், மெத்தசந்தோஷம்! தோற்றமாத்திரத்தில் சந்தோஷித்த நம்மை முடிவுபரியந்தம் சந்தோஷகரமாகவேயிருக்கவும், நந்தோஷங்களெல்லாம் பறக்கவும் மேன்மேலும் விசேஷமான நியாயங்களால் நமதுகடாக்களுக்குவிடையருளவும், தத்காலம் நமதுவாக்கு, பாணியாகியஉபைய இந்திரியங்களின் ஊறலையகற்ற யாவரும் நேராமையால் தாங்களேநம்முடன் வழக்களின்றிவாதிக்கவும்புறப்படின நம் மனந்திரப்படும். சீக்கிரமாய்த்தாங்கள் வாதத்தைத் தொடங்கினால் ஏனையோர் ஆவலுமடங்கும். தாங்கள் அருகிலிருந்தாலும் நேரிற்கண்டு களிகூர்வோம்.

சச்சிதாநந்தபிள்ளையவர்களாலும் நிவர்த்தித்துக் கொள்ளவேலாத வேதாந்தசாத்திரத்துள் உலாவுமநந்த சங்கைகளைத்தாங்கள் பரிகரித்து வைத்திருப்பதாகக் கேள்வியுற்று ஆநந்தத் தாண்டவத்தைப் பெற்றோம். இத்தனையுங்கண்டு ஜம்புகவாயஸக்கதைபோலென்ன வேண்டாம். நாம் வைத்திருக்கும் பெயர் போல வாஸ்தவமாகவே எதார்த்தத்திற் கெதிர் நோக்கி நிற்கும்,

கிருஷ்ணகிரி,
உண்மைவிரும்பி.

நாராயணபிள்ளை யவர்களைப்பற்றி முன் பத்திரிகைகளில் பேசியிருப்பதேபோதுமானதாயிருப்பதால், அவர் இனிவெளிவராரென்று நம்புகிறோம். உண்மையை அறியவேண்டுவது யாவர்பாலும் போந்த கடமையாதலால்,அவருக்கு பதிலாக வேறேஎவரேனும் வெளிவந்து, ம-ா-ா-கிருஷ்ணகிரி உண்மைவிரும்பி யாரோடுவாதிப்பாராகில், உண்மைவெளியாகி, உண்மைவிரும்பியாருக்குப் பயன்படுவதுமன்றி, கையொப்ப நேசர்கள்முதலிய ஏனையோர்க்கும் பயன்படுமாதலால், ஆஸ்திகர் வாதத்திற்கும் இப்பத்திரிகையிடந்தருமென்பதற்கு ஐயமில்லை. ஒருவரும்ஏற்படாவிடினும், உண்மைவிரும்பியவர்கள் வேதாகமபுராணங்களி லுள்ளனவற்றுள் ஒவ்வொருவிஷயத்தை எடுத்துக்காட்டித் தமக்குள்ள ஆடசேபனை சமாதானங்களைக் கூறுவாராகில், தெரிந்தவரெவராவது இன்னதுசரி இன்னதுசரியல்லவென்று தகுந்தநியாயங்களால் விளங்கச்செய்தாலுஞ்செய்வார், அப்படிக்கில்லாவிடினும், வாசிப்பவர்கள் ஆராய்ந்து தெளிவதற்காவது இடமுண்டாகுமாதலால், நாம்கேட்டுக்கொள்ளுகிறபடி உண்மைவிரும்பியவர்கள் செய்வார்களென்று கோருகின்றனம்.

A. M.

மெய்யறிவு.

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

(160–வது பக்கத்தொடர்ச்சி.)

'ஆத்துமா' என்பது என்ன? என்று கேட்டவினாவிற்கு, அது - சகளப்பொருளாகிய சரீரத்தைப்போல சடபதார்த்தமல்லாமல் நிஷ்களப்பொருளாய், உலகத்தில் சரீரத்திலிருந்துகொண்டு தன்னால் இயற்றப்பட்ட நல்வினைக்கீடாய் மேலுலகத்தில் பேரின்பத்தையும்

தீவினைக்கிடாய் நரகலோகத்திற்பெருந்துன்பத்தையும் அனுபவித்து, மறுபடியும் ஜனனமெடுக்குமென்று சொல்லுகிறார்கள். (நிஷ்களமென்பது சடமின்மை; பொருளென்பது பதார்த்தம், நிஷ்களபொருள் சடமற்றபதார்த்தம்.)

ஆத்துமாவை சிலர் அறிவென்றும், சிலர் ஆவியென்றும், சிலர்வெளியென்றும், சிலர்ஒளியென்றும சொல்லுகிறார்கள். பலகுடங்களை வைத்தால் அதினதினுள்ளும் புறமும் ஆகாயம் இருப்பதுபோல,ஆத்துமா சரீரங்களில் அதினதின் உள்ளும்புறமும்வியாபித்திருக்கிறது; உள்ளிருக்கும் ஆத்துமா அல்லது அறிவு வெளித்தோற்றமாகிய சகலபிரபஞ்சங்களும் பொய்யெனத்தெளிந்து, சகலமும் தானேயென உணர்ந்து, தன்னைத்தானாகவே தன்னால்தானே அறிந்துகொள்ளுமாயின், பிறப்பை அறுத்து பிர்மசொரூபமாய் விளங்குமென்றும், அஞ்ஞானத்தால் மறைக்கப்பட்டு, வெளித்தோற்றமாகிய சகல பொருள்களையும் மெய்யாகவும்,அவைவேறாகவும் தான்வேறாகவும் எண்ணி மயக்கமடையுமாயின், பிறப்புக் குள்ளாகுமென்றும், சிலர் சொல்லியிருக்கிறார்கள்.

இப்படிச் சொன்னால் ஆத்துமாவை இன்னதென்று கருதுவதற்குங் கூடாமையாயிருக்கிறதே, பாதார்த்தத்தை யுணருவதற்கு சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரசம், கந்தம், எனஐம்புலன்களிருப்பதுபோல, ஆத்துமாவையுணர்தற்குப் புலன்யாதுஎனின்; ஆத்துமாரூபமற்றது, அழிவில்லாதது, எப்போதும்மாறாதது, அதற்கு அளவுமில்லை, நிறமுமில்லை; அது சரீரத்தில்முழுதும்வியாபித்துஅந்தந்த அவயவத்தின்தொழிலைநடத்துகிறசக்தி என்கிறார்கள். அப்படிபட்ட தொழிலைநடத்துகிறதை உயிர்என்கிறார்களே, அந்த உயிர்தானா ஆத்துமாஎன்றால்; அதுவல்ல ஆத்துமா, ஆத்துமாவானது எதிலும்தட்டாமல் தனித்து சாட்சிபூதமாயிருந்துகொண்டு, ஆனந்தித்துக் கொண் டிருக்கிறதென்று சிலர் சொல்லுகிறார்கள். இப்படியாக இருக்கிற ஆத்துமா உயிரினால் நடத்தப்பட்ட நல்வினை தீவினைக்கிடாய் மறுமையில் சுகதுக்கங்களை அனுபவிக்கிறதென்று - ஆம்படையானைப் பறிகொடுத்தவளிருக்க, அழவந்தவளை அறுக்கச் சொன்னது போலிருக்கிறதே! அப்படிக்கல்ல, உயிர்தான் நன்மை தீமை அடையத்தக்கது என்றால், ஆத்துமாவென்பது இருந்ாலென்னஇல்லாமற்போனாலென்ன? அதினால் ஒரு பயனுமில்லா விட்டால் ஆத்துமாவைப்பற்றி நமக்கு யாதொரு நிமித்தமுமில்லையே என்றால்,ஆத்துமாவின்விகாரந்தான்உயிர்என்கிறார்கள்.ஆதலால், பிள்ளையாரைப் பிடித்தசனி அரசமரத்தையும் பிடித்ததுபோல, உயிருக்குண்டான அவஸ்தை ஆத்துமாவையும் பிடித்தது. ஆகவே, சரீரத்தில் வியாபித்திருக்கிற ஆத்துமா ஜீவாத்துமாவென்றும் புறம்பேவியாபித்திருக்கிற ஆத்துமா பரமாத்துமா வென்றும்சொல்லப்பட்டாலும், மேலேகாட்டியபடி குடங்களின் உள்ளும்புறமும் ஆகாயம் வியாபித்திருப்பதுபோல சரீரத்தினுள்ளும் புறமுமாக ஆத்துமா வியாபித்திருக்கிறதென்றுசொல்லுவதினாலேஜீவாத்துமாவும்பரமாத்துமாவும் ஏகமாகத்தானிருக்கிறதே யென்றால்,சரீரத்தில கட்டுப்பட்டிருக்கிற அந்தந்த ஆத்மகூறுதான் விகாரப்பட்டு உயிராகுமென்பார்கள்.ஆத்துமா மொத்தம் பிளவுபடாமல் ஏகமாயிருக்கிற தென்று சொல்லுகிறவர்களே அவசரம்வந்தபோது ஆத்துமா கூறுகூறாய்ச்சரீரங்களில் கட்டுப்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள். ஒருபொய் சொன்னவன் அதை ஸ்தாபிக்க வேறொருபொய்யையும், இதைஸ்தாபிக்க மற்றொரு பொய்யையும் இவ்வாறு சொல்லிக்கொண்டே போவதுபோல, ஒன்றை ஆட்சேபித்தால் அதற்கு சமாதானஞ் சொல்லவேண்டி ஒரு யுக்தியையும், அது அடிபட்டால், அதற்குமேல் ஒரு யுக்தியையும் இவ்விதமாய்ப் பரிசோதனைப் பிரமாணமில்லாமல் மனதிற்குத் தோன்றுமாறு தன்கட்சியை ஸ்தாபிக்க ஒருவன் சொல்லும்படிநேரிடுகிறது.

இவ்வளவோடு நம்மை விடாமல், நம்முடைய பிராணனை வாட்ட மாயை என்பது ஒன்று கற்பிதமாயிருக்கிறது. அது பிர்மமாகிய கடவுளினிடத்திலிருந்து பிரதிபிம்பித்த தென்கிறார்களேயல்லாமல், பிரதிபிம்பமானது கண்ணாடி - ஜலம் - இப்படிப்பட்ட பொருளினிடமாய் ஒருவனுடைய உருவம் தோன்றுகிறது போல பிர்மத்திலிருந்து என்ன காரணத்தினால் எதினிடமாய் பிரதிபிம்பந் தோன்றிற்றோ அது தெரியவில்லை. சூரியனிடத்தில் கிரணந் தோன்றுகிறது போலென்கிறார்கள். இந்த உபமானம் உள்நுழைந்து பார்க்கமாட்டாத சாமானியர்களுக்கு மேற் பூச்சாய் சரியானதாகவே தோற்றினாலும் தோற்றும்; விரல்களும் தலைமயிரும்ஒருவனுக்கு இயல்பாகவேசொந்தமாயிருப்பதுபோலகிரணங்கள் சூரியனிடத்திலுள்ளவையேயல்லாமல் பிரதிபிம்பமல்ல. ஒன்றின் ஸ்வரூபம் உள்ளபடியே போலியாகத் தோன்றுகிற சாயல்தான் பிரதிபிம்பம்;ஆகையால், மாயையானதுபிர்மத்தின் ஸ்வரூபமாகத் தானேயிருக்கவேண்டும். ஒருவன் அசைவற்றிருந்தால் பிரதிபிம்பம் கையைத்தூக்குமோ? அவன்செய்வது போலவே பிரதிபிம்பம் செய்வதுபோலி. அப்படியிருக்க,கடவுள் சும்மாயிருக்கையில் அவருடைய பிரதிபிம்பமாகியமாயை சேஷ்டைகள் பண்ணிக்கொண்டுகூத்தாடுகிறதென்றால், விவேகிநம்புவானோ? மனிதனுடைய பிரதிபிம்பத்தைப்போலல்ல, கடவுளினுடைய பிரதிபிம்பத்திற்கு எல்லாவல்லமையு முண்டென்று சொன்னாலும் சொல்லுவார்கள். மாயையானது பிரதிபிம்பமல்ல, உண்டாயிருக்கிற எத்தனையோ சக்திகளில் ஒரு சக்திஎன்று சொன்னாலும் சொல்லுவார்கள். பிர்மத்திலிருந்து மாயைஉற்பத்தியாயிற்றென்றுஞ் சொல்லுகிறார்கள். அப்படியாயின்,பிர்மத்தினிடத்திலேஅபரிசுத்தமாகிய மாயை யிருந்ததென்பதினாலே, பிர்மத்திற்குத்தோஷமுண்டாயிற்று.

(இன்னும்வரும்.)

சமயசம்வாதம். 118

(160 - வது பக்கத்தொடர்ச்சி.)

சுந்தர—நான் சொல்வ தொன்றுளது, நமது ஆசாரியர் அப்பமூர்த்தி, சுப்புமூர்த்தி அழுக்காறற்றவர், நாமு மப்படி யானால் நம்மிட ஜெபம் சாயும், இல்லாவிட்டா லிந்தவிடத்தில் குந்தவேண்டியதில்லை.

சந்தேகி—வானம் வருஷிப்பது தற்செயலா கடவுள் செயலா?

தகப்ப—யோசித்து, பின்னேவரும், நீர்வந்துவந்து பார்த்தேகும்.

ஏ-ரா—அதிவிருஷ்ட்டி அனுவிருஷ்ட்டி சமவிருஷ்ட்டியாய் வானம் வருஷிப்பது கடவுள் செயலுமல்ல தற்செயலுமல்ல, "நெல்லுக்கிறைத்தநீர் வாய்க்கால்வழியோடிப் புல்லுக்குமாங்கே பொசியுமாந்—தொல்லுலகில், நல்லாரொருவருளரேல் அவர்பொருட் டெல்லார்க்கும் பெய்யுமழை" என்ற நமது முதாட்டிவாக்கு பொய்யாவாக்கு, ஆதலா லதுவே சந்தேகியார் கேள்விக்குப் போதுமான பதிலாயிருக்கும்.

சந்தேகி— அப்பமூர்த்தியும், சுப்புமூர்த்தியும் திருவீழிமிழலையில் சந்தித்து வசிக்கும்நாளில் அக்கிராமத்திலு மதைச் சுற்றிலும் மழையின்றி பயிர்குன்றி உணவின்றி பசித்திருந்ததாக புராணத்தால் கேட்டோமே; அச்சிவனடியார் கூட்டத்திலேனும், அவ்வூரார் கூட்டத்திலேனும் நல்லாரொருவருமில்லாதொழிந்தனரோ; சிவபிரான் சமயகுரவருக்குப் பஞ்சத்தினிமித்தம் பசித்திராவணணம் பொற்காசுதந்து அடியார் பெருமை விளங்க வுலகிற்குக் காட்டி சமசருளும் விளங்கவைத்தாரென்றால், பொற்காசை விழுங்கினால் பசியைத்தணிக்காது, அமுதுபடி முதலிய சாமக்கிரியைகளின்றி உணவற்றபோது நித்தலு மோர் வேலையாக இருவருக்கு மிருபுத்திலும் பொற்காசளித்ததைப் பார்க்கிலும் வானம் வருஷிக்கும்படி செய்வித்தால் அக்கிராமவாசிகளுக்கும் அடியவருக்கும் நன்மையக்கும். காசுபெற்றவடியார் சாமக்கிரியை யுள்ளாரிடத்தில் கொள்ள, அவர்கள் சிவனடியாருக்கீந்து தாம் பசித்திருந்திருப்பார்கள். இதனால் அருள் விளங்கக்காணோம். சுப்புமூர்த்தியும் வாசிதீரவே காசுநல்குவீர் மாசின்மிழலையீர் ஏசலில்லையேயென பயமுறுத்தியுமிரார்.

சுவக்கியானி—நெல்லுக்கிறைத்தநீர்வாய்க்கால்வழியோடிப் புல்லுக்குமாங்கே கசிவதுபோல நல்லார்பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமழை யென்றதனால், இங்கே உபமானத்தில் நெல்லிற்குத் தூரவு, ஏரி, குளங் குட்டைகளிலிருந்து நீரிறைப்பானொருவனுள னாதல்போல, உபமேயத்தில் நல்லார்பொருட்டு மேகமானது கடல்நீரையுண்டு உலகிலுள்ள பொல்லார்க்கும் பயன்படுமாறு வருஷிப்பதாகின்றது; ஆகவே, உலகிற்கு முதற்காரணமாகிய கர்த்தா வேண்டியதாகக்காணேம். "சிறப்பொடு பூசனைசெல்லாது வானம்—வறக்குமேல் வானோர்க்குமீண்டு" "நீரின்றமையா துலகெனின் யார் யார்க்கும் - வானின்றமையாதொழுக்கு" என்று நாயனுரு முரைத்தார்.

வானம் வருஷிப்பதின் விவரம்—கடல், ஏரி, குளம், குட்டை ஈரமுடைய இடம், சதுப்புநில முதலிய விடங்களிலுள்ள ஜலம் சூரியகிரணத்தால் ஆவிரூபமா யெழும்பி வானில் மேகக்கூட்டங்களாயமைய, வாயுவினு லொன்ருய்ச்சேர்ந்து பனிக்கட்டிபோ லிறுகிச் சிதறுண்டு காற்று எத்திக்கில் கொண்டுசெல்கின்றதோ அத்திக்கில ஒன்ரேடொன்று தாக்குண்டு மறுபடி பூமியில் விழுவதே, மழைபொழிவதெனபது.

ஏமா—ரா.—தனசீடவர்க்கத்தைநோக்கி, தடிராமா, சாப்பாட்டுராமா எங்குற்றீர், நமது கோஷ்டிகள் யாவும் வந்திருக்கின்றனவா, யாவரும் இப்படிவாருங்கள், என்னைச்சூழநில்லுங்கள், ஆடாபிள்ளாய், நமது ஆசாரியர் நாமதேயம் நவிலு.

ஏமா—ரா—சீடர்—மூடருக்குமுதற்குருவாகிய தாந்தோணித்தம்பிரான்.

(இன்னும்வரும்.)

பேய்.

சிறுவயதிலேதானே பூதப்பிரேதபசாசங்களி னிடத்து நம்பிக்கையில்லாத ஒருவர் தன்னுடைய பதினெட்டாம்வயதில் ஒருநாள் ராத்திரி பட்டப்பகலாய் பூரணசந்திரன் பிரகாசித்துக்கொண்டிருந்த காலத்தில், ஜலஸ்பரிசத்துக்காகக்கொஞ்சந் தூக்கமயக்கத்தோடு அறையைவிட்டு வாசலில்வந்து உட்காந்திருக்கையில், சற்று நிமிர்ந்துபார்த்தவுடனே, ஓட்டின்பேரில் நிலாவெளிச்சத்திலே சுமார் ஒருமுழநீளம் நான்குவிரற்கடை அகலத்திற்குப் பளிச்சென்று வெண்பல்தோன்றினமாத்திரத்தில் அதற்கேற்ற மற்றக்கரசரணுதி அவயவங்களுடனே ஒரு பூதரூபம்தோன்றியது. உடனே அது சற்றுப்பின்னுக்கு ஒத்திப்போகிறதும் முன்னுக்குவருகிறதுமாயிருக்கக்கண்டு, எவ்வளவேனும் அஞ்சாமல், தூக்கமயக்கந்தெளிந்து, அதையின்னதென்று அறியவேண்டி, ஆலோசிக்கையில், கண்களையிமைக்க ரப்பையையிறக்கும்போது அது சமீபமாகவருவதுபோலவும், ரப்பையைத்தூக்கும்போது ஒத்திப்போகிறதுபோலவுமிருக்கிறதாகத்துணிந்து, உற்றுப்பார்க்கத்தொடங்கவே, அந்தப்பூதஉருவம் வரவரச்சிறுத்து, பழய பொன்னன் பொன்னனேஎன்றுற்போல, பழய வெண்பல் உருவஅளவுக்கு வந்துநின்றது. அதையுஞ்சோதித்தறியவேண்டி, அதையெடுத்தெடுத்துப்பார்த்ததில் (பஞ்சதந்திரத்திலே—தோலுங்கோலுமேயல்லாமல் வேறொன்றுமில்லையென்று சோதனையாற் கண்டறிந்ததுபோல) பனியிற்ருேய்ந்து படிந்திருந்த ஒரு வெண்கந்தையாயிருக்கக்கண்டார். நீரும் பரிசோதனைகுணமுமில்லாவிடில், அவர் மற்றமடையரைப்போல என்னபாடுபட்டிருப்பரோ அதை நாமேயோசித்தறியவேண்டும். எதையும் முன்னோர்கள் சொல்லியிருக்கிருர்களென்றும் சாஸ்திரம் முறையிடுகிறதென்றும் சொல்லுகிற பிரமாணத்தினுல் ஏற்றுக்கொண்டு மூடநம்பிக்கையில் விழுந்துவிடாமல், ஸ்வபுத்தியைக்கொண்டும் தக்ககேள்வியைக்கொண்டும் ஆராய்ந்து உண்மையை அறியவேண்டுமென்பதே இதன்கருத்து.

A. M.

கடிதம்.

பொம்பூர் குயப்பேட்டையில் ஒருவண்ணர தனவான் சென்றமாளையஅமாவாசியைதினம் தர்ப்பணஞ்செய்யவேண்டி ஒரு பிராமணனை அழைத்துவரும்படி தன்மகனை அனுப்ப, அவன் நெடுநேரம் அலைந்துதிரிந்து ஒருகிழப்பிராமணனைக் கண்டுபிடித்துஅழைக்க, அப்பார்ப்பான்விசாரித்து அப்பிள்ளையால்இன்னசாதியானென்று தெரிந்துகொண்டு, தட்சணை பேரம்பேசி ஒரு ரூபாய் முடிவுசெயதுகொண்டு, கூடப்போய் வீட்டிற்குள் நுழைந்தவுடனே, தகப்பன் வெளியிற்போயிருந்தமையால் அன்றையத்தினம் பிராமணர் அகப்படுவது கஷ்டமாயிருந்ததினிமித்தம், அந்தக் கிழப்பிராமணனை அந்தப் பையன் வீட்டிற்குளிருத்தித் தெருக்கதவை வெளியில் பூட்டிக்கொண்டதாகவும், அப்பிராமணன் பயந்து கதவையிடித்து அரர்த்தஞ்செய்ய, அண்டைஅயலார்கூடி அவனைவிடுவித்ததாகவும், நமது கடிதநேயரொருவர் எழுதியிருக்கிருர்.—இது, பிராமணனுடைய பேராசையையும், தாழ்ந்தசாதியானுக எண்ணப்பட்டவன் உயர்ந்த சாதியானுக அபேட்சிப்பதையுங் காட்டுகிறது.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தீன்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினுல், அடியிற்கண்டிருக்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணு ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணு உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே ஒருஅணு தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்தி----என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிரேம.

தத்துவவிவேசினி
நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணு 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.)		Rs.	A.	P.	வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)		Rs.	A.	P.
மாசம்	–1க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 42.] MADRAS:—SUNDAY OCTOBER, 17, 286. A. S. [Monthly, 4 Annas.

சோல்லுகசோல்லைப்பிறிதோர்சோலச்சோல்லை
வெல்லுஞ்சோலின்மையறிந்து.—குறள்.

விநோதம்.

மதப்பிரயாசை வீண்பிரயாசை. 128

ஒருபாதிரியாரை உத்தியோகத்திலிருந்து தள்ளிவிட எத்தனப்பட்டார்கள். அவர் நீங்களப்படிச்செய்தால் அதினாலேநூறுபேருக்கு நஷ்டம் நேரிடுமென்றார். அதைக்கேட்டவர்கள் அவர்துணிவுடையவராதலால் ஏதாவது தீங்குசெய்ய நினைத்திருப்பாரென்று எண்ணிக்கொண்டார்கள். அதின்மேல் அவரை ஊன்றிக்கேட்டபோது; அப்படிக்கல்ல, எனக்கு இந்தவேலைபோனால் வைத்தியஞ்செய்ய உத்தேசித்திருக்கிறேன், இந்த வேலையில் அநேகருக்கு இரட்சிப்பு வழிகாட்டினேன்! வைத்தியத்திலோ, நூறுபேராவது என்கையினால் சாவார்களென்று நினைக்கிறேனென்றார்.

உண்மையானஉழைப்பு.

ஸ்வீடன்தேசத்து அரசனாகிய சாரல்ஸ்என்பவன் ஜெஸூயிட்ஸ் என்கிற மதப்பிரிவு சபையார்பேரில் கடுங்கோபங்கொண்டவனா யிருந்தான். அவன் அவர்களுடைய சங்கங்களைக்கலைத்து, அவற்றிலுள்ளவர்களைத் தன்னுடைய கனிச்சுரங்கங்களில் வெட்டுவேலைசெய்யும்படி அனுப்பி வருந்தோறும், இவர்கள் பூமிக்குமேற்புறத்தில் வெகுகஷ்டப்பட்டு வேலைசெய்கிறார்களே பூமிக்குட்புறத்திலும் அவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கிறார்களா பார்ப்போமென்று சொல்லிக்கொண்டு வந்தான்.

நிகழும் அக்டோபர்மீ 9உ சுதேசாபிமானியில் சிலவரிகளை எழுதி ஆஸ்திகர் நாஸ்திகரை வென்றுவிட்டதாக சந்தோஷித்தார்கள்; நாங்களுங் கண்ணுற்றுக் களிப்புற்றோம். அதை வருகிற பத்திரிகையில் காணலாம்.

ஓராதிவாரதினம் ஸ்வாமியார் சிற்றுத்திக்காடு ஸ்ரீநிவாசாசாரியர் பலமதங்களின் கொள்கையைப்பற்றிச் செய்த உபந்யாசத்திலே, வேதத்தை ஆதாரமாகக்கொண்ட மதங்கள் இன்னின்னதென்றும், வேதபாஹியமான மதங்கள் இன்னின்னதென்றும் பலவற்றைக்கூறி, சாமானியமானவற்றைக் கூறாமல் முதலியனவென்று முடித்துவிட்டார். அந்தஉபந்யாசம் சென்ற ஆகஸ்டு-16உ சுதேசமித்திரனில்பிரசுரஞ்செய்யப்பட்டது. அப்போது மேற்படி இருவகைச்சமயங்களிலும் சைவசமயத்தைதக்காணுமேயென்று கவனியாமல், ஆசாரியர் - சிவனை விஷ்ணுவினுடையஅடிமையென்று வெளிப்படையாய் அழுத்திச் சொன்னபோது மனதில்பட்டு, சிவன்பெரியவனென்று எண்பிக்க ஷை சுதேசாபிமானியில் சிலவரிகள் எழுதப்பட்டன.— சிலருக்குஎதையும் வெளிப்படையாக வற்புறுத்திச்சொன்னால் மாத்திரம் பயன்படுகிறதேயன்றிக்குறிப்பாகச்சொன்னால்பயன்படுகிறதில்லை.—சமயிகள் ஒருவருக்கொருவர் விரோதியாமல முன்னே தங்கள் சமயங்களைச் சமரசமாக ஒருவழிப்படுத்தி ஒருகடவுளை ஸ்தாபித்துக்கொள்வதுநன்மை.

வாதநிபந்தனை. (17) 3

1886 ஆம் வருஷம் செப்டெம்பர்மீ 21உ மாலை 6½ மணிக்கு புதுவை சென்னபட்டணவீதி 111 வது நெம்பருள்ளவீட்டில் ம-ா-ா-ஸ்ரீ சாரம்-மு-கந்தசாமிபிள்ளையவர்களுக்கும் தத்துவவிவேசினி பத்திராதிபர் ம-ா-ா-ஸ்ரீ-பு-முனிசுவாமி நாயகரவர்களுக்கும் கடவுளைப்பற்றிவாதம்நடந்தது. இந்த சங்கத்திலிருந்த முக்கியர்களிற்சிலர்,—ம-ா-ா-ஸ்ரீ ஞானப்பிரகாச முதலியார் அவர்கள், ம-ா-ா-ஸ்ரீ சம்பியப்பன்தாஸ் அவர்கள், ம-ா-ா-ஸ்ரீ தெய்வசிகாமணி படையாட்சியவர்கள் முதலாயினார். இந்தவாதத்தைப் பேசியமட்டில் எழுதி ஈற்றில் உபயவாதிகளும் தங்கள் தங்கள் கையொப்பம்வைத்து மேற்சொன்ன முக்கியர் கையொப்பத்தையும்பெற்று, உபயவாதிகளும் இஷ்டமிருந்தால்ஒவ்வோர்பிரதி பெற்றுக்கொள்ளல்வேண்டும். வாதப்பிரதிவாதத்தை அப்போதைக்கப்போதுஇருபாரிசத்தும் எழுதிவரல் வேண்டும். (இந்தநிபந்தனைக்கு இருதிறவரும் சம்மதித்தபின் வாதம் ஆரம்பிக்கப்பட்டது.)

வாதம்

பு-முனிசுவாமிநாயகர்—கடவுள் என்பதற்கு உமமுடையபொருளென்ன ?

ச-மு-கந்தசுவாமிபிள்ளை—கடவுள் என்பதற்கு நீங்களென்ன சொல்லுகிறீர்கள் ?

பு-மு-நா—கடவுள் என்பது வெற்றுரை, அதற்கு எங்களுக்குப் பொருளில்லை.

ச-மு-க-பி—பொருளில்லாத சொல்லும் உண்டா ?

பு-மு-நா—பொருளில்லாத சொல் கோடிகோடியா யுண்டு.

ச-மு-க-பி—பொருளில்லாதசொல்லில்லையென்றுசாதிப்பேன்.

இதைப்பற்றிஇருவரும் பிரத்தியேகவாதம் செய்யப்போகிறதாய் கையொப்பம் வாங்கப்பட்டது.

பு-மு-நா—கடவுள் என்பதற்குப் பொருளென்ன ?

ச-மு-க-பி—கட-என்பது பகுதி - உள்விகுதி - கடவுள் கடந்தவன்.

பு-மு-நா—எதைக்கடந்தவன் ?

ச-மு-க-பி—யாவும் கடந்தவன்

பு-மு-நா—கடத்தலாவ தென்ன ?

ச-மு-க-பி—அளக்க அளக்க அளவு படாதது.

பு-மு-நா—நீங்கள் அளந்தவரையில் கடவுளுடைய தன்மை யெப்பேர்ப்பட்டது?

ச-மு-க-பி—கடவுளினுடைய இலட்சணம் உருவம் அருவம் உருவருவமாயு மிருப்பர்.

பு-மு-நா—உருவென்பதற்குப் பொருளென்ன ? அருவென்பதற்குப் பொருளென்ன ? உருவரு வென்பதற்குப் பொருளென்ன ?

ச-மு-க-பி—உருவம் கட்புலனுக்கு வெளிப்பட்டுத் தோன்றுவது ஸ்தம்பம்போல; அருவம் கட்புலனுக்குத் தோன்றாதுஅறிவிற்குத் தோன்றுவது; உருவருவாவது கட்புலனுக்குத் தோன்றுவது தீபம்போல.

பு-மு-நா—லக்ஷணம் லக்ஷியத்திற்கு பின்னமா அபின்னமா?

ச-மு-க-பி—அபின்னம்,

பு-மு-நா—அபின்னமென்பதற்குப் பொருள் "விட்டுநீங்காத" தென்பதோ வேறோ?

ச-மு-க-பி—அதைக்கேட்கவும் வேண்டுமோ?

பு-மு-நா—கேட்டால்தான் அதன்பொருள் இங்குள்ளவர்களுக்கெல்லாம் தெரியும். கடவுளை உருவமாய்க்காட்டுவீரா!

ச-மு-க-பி—நான்சொல்லுகிறபடி நடந்தால் காட்டுவேன்.

பு-மு-நா—எத்தனைநாளில் காட்டுவீர்.

ச-மு-க-பி—அதையேன்கேட்கிறீர்கள்?

பு-மு-நா—கேட்காவிட்டால் என்வாழ்நாள் முழுதும் காட்டுகிறேன் காட்டுகிறேனென்று போக்குகாட்டினுல் முடிவெப்படியாகும்?

ச-மு-க-பி—நடந்தபோதே காட்டுவேன்.

பு-மு-நா—நீங்கள் நடக்கச்சொல்வதென்ன?

ச-மு-க-பி—அன்பது ரஸ்தா வேண்டும் (ரஸ்தா=கொயர்)

பு-மு-நா—அன்பது ரஸ்தாவில் எழுதக்கூடியதைச் சொல்லுங்கள்? (இப்போது இராத்திரி 9-மணியாய்விட்டமையால் நாளைகாலமே ௰ மணிக்கு ஆரம்பிப்போம் என்று ஷை கந்தசாமி பிள்ளை சொல்லினர். அப்போது கடிகையைப்பார்த்தபோது ஏழேமுக்கால் மணியாகவிருந்தது)

பு-மு-நா—இன்னும்-9க்கு 1½மணித்தியாலமிருக்கின்றமையால் அதுவரையில் சொல்லக்கூடியதை சொல்லலாமே.

ச-மு-கபி—ஷை-கல்வி-அறிவு-ஒழுக்கம் இம்மூன்றுந் தெரிந்து கொளளவேண்டியது. கல்வி யென்பது தன்னையும் தன்னையுடையவனையும் தெறிந்துகொள்வதற்கு ஆதாரமாயிருக்கிறநூல் (வைராக்கியசதகம் வைராக்கிய தீபம் உந்தியார்) அறிவென்பது அந்நூலிற்சொன்னயாவும் ஐயமற அறிந்துகொள்ளுதல். ஒழுக்கமாவது -இந்திரிய ஒழுக்கம் கரணஒழுக்கம் ஜீவஒழுக்கம் ஆன்மஒழுக்கம் எனநான்குவகைப்படும். இந்திரிய ஒழுக்கமாவது மேற்சொன்ன நூலில் கண்டிருக்கிற சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நாலுவிதபடிகளில் சரியையில், மந்தன், மந்ததரன், தீவிரன் தீவிரதரன் என்னும்நால்வகை பக்குவர்களுக்குள் ஒருவனுய் மந்தனுக்குச்சொல்லியிருக்கிற மூர்த்தி தலம் தீர்த்தம் இம்மூன்றையும் அந்நூலிற் சொல்லியிருக்கும் அதற்குத் தக்க தன்மையுள்ள ஆசாரியனிடத்தில் மூலதீட்சையை அதாவது விசேஷ தீட்க்ஷையை அந்நூலிற்சொல்லியபடி பெற்று அதையனுபவித்தபிறகு இரண்டாவது திட்சையை அதாவது விசேஷதீக்ஷைபெற்று இன் சொல்லாடல், தோத்திரம் செய்தல், முன்சொன்ன மூர்த்தியைப்பார்த்தல், அவரது புகழைக்கேட்டல், அவரது கோயில் வலம்வரல் புலைகொலை விடுத்தல் களவுசெய்யாதிருத்தல் நல்லறம் கிரகித்தல் அம்மூர்த்தியைக் கைகூப்பித் தொழுதல் முதலான ஒவ்வொன்றையும் மேற்சொன்ன நூலிற்கண்டிருக்கும்படி செய்தலாம். இதுவரையில் தாங்கள் நடந்துகொண்டால் மற்றதையும் எழுதிக்கொள்வோம். ஆனுல் முன்குறித்த அன்பதுரஸ்தா வேண்டுமென்பதற்கு இது மாறுதலல்ல. இதில் முன்பின் மாறுதலாகிய பிழைகளிருக்கும் அதைப்பிடித்து வாதிக்கக்கூடாது. நாளை என்னிடமுள்ள புத்தகத்தைக் கொண்டுவந்து பார்த்தெழுதிவைக்கிறேன்.

பு-மு-நா—நீங்கள்சொன்ன வைராக்கிய சதகம், தீபம் அவிரோத உந்தியார் முதலியவைகளை யான் உணர்ந்தும் அவற்றின் பரஸ்பர விரோதங்களைப் பலமுறைகண்டித்தும் இருக்கின்றேனுதலால் அவற்றுல் கடவுணிச்சயம் விளங்க வில்லை.

ச-மு-க-பி—வைராக்கிய சதகம் உமக்குத்தெரிந்திருந்தால் "ஒழித்திடும் பவப்பகை விரைந்துள்ளமே யோது மூதுணர்வோர் முற்பழிச்சுபாடலை" என்னும் பாட்டிற்குப்பொருள் சொல்லும் பார்ப்போம்.

பு-மு-நா—பேரறிவினையுடையோர் முன்னுளிலே தோத்திரம் செய்த பாடல்களை நெஞ்சமே நீ விரைவாகத்தோத்திரம் பண்ணு (பண்ணினுல்) பாவபுண்ணியத்தின் பயனுகிய பிறவி யொழிந்துபோம்.

ச-மு-க-பி—பவமென்றுல் பாவமா?

பு-மு-நா—பவமென்றுல் பாவமல்ல, பிற்பவம், முற்பவம் அதாவது முற்பிறப்பு பிற்பிறப்பு என்பதுபோல, பிறப்பு; இங்கேபவப்பகை யென்பதற்குஇலக்ஷியார்த்தம் நல்வினை தீவினைஅல்லது பாவபுண்ணிய மாதலால் அந்தலக்ஷியார்த்தத்தைக் கூறினேன். இனிக்கடவுளைரூபிக்கவேண்டியது தங்கள் கடனே.

ச-மு-க-பி—நான்சொல்லுகிறபடி நடந்தால் காட்டுவேன்.

பு-மு-நா—நீங்கள் சொன்னபடி நான் வாசித்து நடந்துங் காணுமையாலல்லவோ தங்களைக் கேட்கின்றேன், தாங்கள் தன்னையும் தலைவனையும் உணர்ந்தால் குருமுகமாய் வெளியாகுமென்றீர், யான் உணர்ந்துகொண்டபிறகு நீவிர் உணர்த்தவேண்டிய ஆவசியகமில்லையே; மெய்க்குருவை நானெங்கு தேடுவது, நீர்தானே சொல்லல் வேண்டும்?

ச-மு-க-பி—இனிநாம் எழுதப்போகிறவற்றுல்விளங்கும்.

பு-மு-நா—இனிநீவிர் எழுதப்போகிறவற்றுல் விளங்கக்கூடுமோ யின்பார்ப்போம், இப்போது கடவுள் இலக்கணம் உருவம் அருவம் உருவருவமென்று சொன்னீர், இதனோடு லக்ஷணம் லக்ஷியத்திற்கு அபின்னமென்றுங் கூறினீர், கடவுள் உருவமாயுள்ளபோது அருவலக்ஷணம் அவரிடத்துண்டா? உண்டேல் உருவத்தின் விரோதமாகிய அருவம் உருவத்தோடு பொருந்தியிருக்குமா? இன்றேல் லக்ஷணத்தைவிட்டு லக்ஷியம் நீங்கியிருக்குமா! நீங்கியிருப்பது லக்ஷணமாமா?

ச-மு-க-பி—நான்சொன்னபடி நடந்து அந்தபக்குவத்திற்குவந்தால் அப்போதுவிளங்கும்.

பு-மு-நா—காண்பானுடைய திறத்தைப்பற்றி நான் இப்போது கேட்கவில்லை, காணப்படுபொருளின் லக்ஷணத்தைப்பற்றிக் கேட்கின்றேன், அதாவது உருவத்தினிடத்தில் அருவம் உண்டா?

ச-மு-க-பி—அது பின்னிட்டுத்தெரியும்.

பு-மு-நா—ஆனுல் இதுவரையில் பேசியமட்டில் கையெழுத்து வைப்போம்.

ச-மு-க-பி—நான் கையெழுத்துப்போடமாட்டேன்-

பின்னர் இவ்வாதத்தை யெழுதிவந்த மேற்சொன்ன முக்கியர்களி லொருவரால் கையெழுத்துபோடப்பட்டது.

(அந்தப்பெயர்) தெய்வசிகாமணி.

—o—

மூளையின்தன்மையைஅறியாமை.

சிலநாளுக்கு முன்நடந்த பிரசங்கத்தில் ஒருபிரசங்கியார், அமெரிகா தேசத்திலுள்ள ஒருடாக்டரானவர் மனிதனுடைய தலைமூளை வெவ்வேறுஸ்தானத்தில் வெவ்வேறுநிறமாக முப்பத்திரண்டு நிறமுடையதாயிருக்கிறதாகவும் ஒவ்வொரு நிறத்திற்கு ஒவ்வொருகுணமிருக்கிறதாகவும் சொல்லியிருப்பதுமன்றி, அவரிடத்திற்குக் கொண்டுபோகப்பட்ட ஒவ்வொருகுழந்தையையும்பார்த்து, அந்தந்தகுழந்தையின்னினவேலைசெய்யத்தகுந்ததென்று சொல்லிவருகிறதாய் உபந்நியசித்தனராம். மூளையோடு அறிவுகலப்புற்றிராமல் பிரத்தியேகமானதாயிருக்கிறதென்பதற்கு மேற்படி சங்கதியை அத்தாட்சியா யெடுத்துக்காட்டினதாக எமக்குத்தெரிவித்தவர்சொன்னுரேயல்லாமல, பிரசங்கியார்கூறிய பொருத்தத்தை விளங்கச்சொன்னுரில்லை. அறிவு பிரத்தியேகமானதென்று சித்தாந்தப்படுத்தவேண்டியது அந்த ஆஸ்திகப்பிரசங்கியாருடைய கடமையாதலால், அவர் ஏதாவது பொருத்தஞ்சொல்லியேயிருப்பார். ஆயினும், டாக்டர் உரைத்தபடி அந்தந்தநிறத்திற்குள்ள வெவ்வேறுகுணமே வெவ்வேறுதொழிலைச்செய்கிறபடியால், அந்தக்குணமே அறிவாகுமென்று சுத்த லவுகிகர்கள்கூறுகிறதை அதுஊர்ஜிதப்படுத்துகிறது. அப்படிக்கல்ல, ஒருநாகசுரக்காரன் தன்னுடைய ஆயுதமாகிய ஊதுகுழல் சீராயிருக்கிற வரையில் ஊதுவான், அது சீர்கெட்டவிடத்து அவன்சும்மாயிருந்துவிடுவான், அப்படியே அறிவானது தன்னுடைய ஆயுதமாகியமூளை சீராயிருக்கிறவரையில் அதைக்கொண்டு தன்வேலையைச்செய்கிறது, அந்தமூளைக்குப்பிணி-குடிவெறிமுதலியவற்றுல்சீர்கேடுண்டானபோது, நாகசுரக்காரனைப்போல அதுசும்மாயிருந்துவிடுகிறதென்பார்கள். அதனுலே அறிவுக்கு நாகசுரக்காரனும், மூளைக்கு நாகசுரமும் உபமானமாயிருக்கின்றன. ஸ்தூலசரீரியாகிய நாகசுரக்காரனையும் நாகசுரத்தையும் வேறொருவனுடைய அறிவுக்கும் மூளைக்கும் உபமானமாக்கிவிட்டால், அந்த நாகசுரக்காரனுடையஅறிவும் மூளையும் போகிறகதியென்ன? அறிவும் மூளையுமில்லாவிட்டால்அவன்பயன்படுவனே!மற்றொருவனுடையஅறிவைநாகசுரக்காரனைப்போலக் கர்த்தாவாகவும் மூளையைநாகசுரத்தைப்போலஆயுதமாகவுஞ்சொல்லிவிட்டால் இவன்மூளையைக்கொண்டுவேண்டியகாரியங்களைச் செய்துவிடுவனே; இவனுக்குமற்றக் கரசரணதி ஆயுதங்கள்வேண்டுவதில்லையே. வேறொருபிரசங்கியார்-வேதம் அநாதியென்றும், சர்வேஸ்வரனும் அநாதியென்றுங்கூறி, இதற்குப்பிரமாணமாக ஒருதிருஷ்டாந்தஞ் செப்பியுள்ளார்; அதாவது—"ஒருவன் சொம்பு கம்பளி இரண்டையும் ஓரிடத்தில் வைத்துவிட்டு ஸ்நானஞ்செய்துவிட்டுவந்து, சொம்பு கம்பளியைத்தேடிக்காணுமல் அலைந்துகொண்டிருக்கையில், ஒரு வழிப்போக்கன் என்னப்பா, அலைகிறுயென்றுகேட்க; அவன் சொம்பு கம்பளி காணுமற்போயிற்றென்றுன்; இவன் சொம்பு எங்கேவைத்தாயென்றுன்; அவன் கம்பளியிருந்தவிடத்தில் சொம்புவைத்தே

னென்முன்; கம்பளி யெங்கேவைத்தாயென்முல்,சொம்பிருந்த
விடத்தில்வைத்தேனென்முன் ; இப்படிசொம்புகம்பளியிரண்டு
ம் ஒன்றை யொன்றுபற்றி நிற்பதுபோல வேசமும் ஈஸ்வரனு
மெனக்கொள்ளவேண்டும்.'' என்றனர். இப்படிசொல்வது
இக்காலத்தில் சம்பவமா, அசம்பவமா ! நாட்டுப்புறங்களி
லே பறைச்சிகளுக்குள் கர்பிணியாயிருந்தவளைப்பார்த்து மற்
ஞெருத்தி நீ யெப்போதுதலைமுழுகினுயென்றுகேட்டால், கா
ர்கழனியறுத்தோமே அப்போதென்றுசொன்னதுண்டு. இதனு
லேகொஞ்சம் விவேகசாலி நிதானத்தால் சுமாராகக் காலஅள
வு தெரிந்துகொள்ளக்கூடும். இதற்கும்வழியில்லாமல், மேற்க
ண்டவண்ணஞ்சொன்னவன மூடனுயும், அதைக்கேட்டுக்கொ
ண்டு ஆட்சேபிக்காமல்போய்விட்டவன் அவனிலு மூடனுயுமி
ருந்திருக்கவேண்டும். இப்படிப்பட்டஉபமானங்களைச் சொல்
லி ஜனங்களை பிரமிக்கச்செய்வது அழகன்று. அறிவு முதலிய
அருமையான விஷயங்களை வாய்ச்சொற்களால் காற்றில் தூற்
றிவிடுவதினுல் பிரயோசனமில்லை. சங்கதிமுழுமையையும்
கேட்பவர்கள் கிரகிப்பது கஷ்டம். அறிவைப்பற்றிப்பேசும்
போது சோதிடமுதலான அநேகசாஸ்திரங்களை இடைக்கிடை
கொண்டுவந்து முன்னுக்கும் பின்னுக்கும் முறணுயிருந்தபோதி
லும் யோசியாமல், நுழைத்து, வாய்கொண்டமட்டில் சரமா
ரியாகப்பொழிந்து, கேட்பவர்களுக்குச் சங்கதியொன்றுந்
தெரியாவிட்டாலும், பிரசங்கியார் பலசாஸ்திரங்களைக்கொண்
டு நிரூபித்தாரென்று நம்பும்படிமாத்திரஞ்செய்து, கடைசியி
ல், "ஆகையால், அறிவிற்கும் மூளைக்கும் சம்பந்தமில்லை, அறி
வு பிரத்தியேகமானது" என்னும் வாக்கியத்தைமாத்திரம் மு
க்காலும் உறுத்திச்சொல்லி, கேட்பவர்களுடைய மனதில் நா
ட்டமுயல்வதினுல் பயனில்லை. ஆனுல், அவ்வளவுமாத்திர
ம் பதியவைத்துவிட்டு, நாஸ்திகர்களைவென்றுவிட்டோமென்
று எண்பித்தால் போதுமென்பதுதான் பிரசங்கியாருடைய
கருத்தாக்கும். அப்படிச்செய்யாமல், 'ஆத்துமா அழிவில்லா
தது'? என்னும் கேள்வியைப்பற்றி எழுதியிருக்கிற மெய்ய
றிவு-௨-ம் பாகத்தில்' அறிவைப்பற்றியும் பேசியிருப்பதால்,
அதிலுள்ளசங்கதிகளை ஒவ்வொன்முகத்தொடர்ந்து, அவற்றிற்
குண்டான ஆட்சேபங்களை யெடுத்துக்காட்டிக் கண்டித்து,
தங்களுக்குண்டான நியாயங்களைத்தெரிவித்து, ஒருசிறு புத்த
கமாகவாவதுஅச்சிட்டு பிரசுரஞ்செய்வார்களாகில், எம்போல்
வாரும் மற்றவர்களும் அவ்விரண்டு பிரதிகளையும் ஒப்பிட்டுச்
சீர்தூக்கிப்பார்த்து, மெய்பொய் இரண்டையுமறிந்து, உண்மை
யை உறுதியாகப்பிடித்தொழுகுவதற்கு வகையுண்டாகும்.

அதே உபந்நியாசதினத்தில் மலையாளத்தாரொருவர் சக்கர
வாளப்புல் என்னும்பெயரையுடையஒருஉலர்ந்தபுல்லைக்கொண்
டுவந்துகாட்டிக் கடவுளினுடைய மகிமையைத் தெரிவித்தன
ராம். அவர் அந்தப்புல்லை விரல்களால் பிடித்துக்கொண்டு
மற்ஞெருகையால் ஜலத்தைத் தொட்டுக்கொண்டு அந்தப்புல்
லை தடவி உருவவே, அது பசாசு தலைவிரித்தாடுகிறதென்பது
போலச் சுற்றியதாம். பூதங்களிலொன்முகிய ஜலத்தின் சே
ர்க்கையால் அது சுழன்றதேயல்லாமல் அப்படிச்செய்வதற்கு
முன் அது அவர்மடியிலிருந்தபோது சுழலவில்லையே. இது பூத
ங்களின் சையோகத்தால் எதுவும் உண்டாகிறதென்று சுத்த
லவுகிகர்கள் சொல்லுகிற மொழியை ஊர்ஜிதப்படுத்துகிறதே
யல்லாமல் வேறொன்றுமில்லை. அது எப்போதுஞ் சுழன்று
கொண்டேயிருந்தபோதிலும் அதைக்கடவுளினுடைய மகிமை
யென்னவேண்டுமோ? பூதங்களெல்லாம் ஒன்ரேடொன்று
மருவிவியாபித்துக்கொண்டிருப்பதினுலே எந்த பூதத்தினுலாவ
து அது அப்படிச்செய்வதாக எண்ணக்கூடாதோ? நாம் கா
ணுகிறயாவும் பூதங்களின் சையோகத்தா லுண்டாகின்றன
வென்று பூததத்துவசாஸ்திரிகள் பரிசோதித்துக் கண்டறிந்து
நிலை நாட்டியிருக்க, இந்தப்புல்லைப்பற்றித்தான் அவர்கள் க
ண்டறிவது கஷ்டமாய்விடுமோ? கடவுளினுடைய மகிமை
யையறியாதவ ரொருவருமில்லை. அவருடைய சிருஷ்டியென்று
ஆஸ்திகர்களால்சொல்லப்பட்ட பூமி, ஆகாயம், சூரியன் சந்
திரன், நட்சத்திரங்கள், சமுத்திரம், மனிதனுடைய கைவிர
ல்கள் அவற்றிலுள்ள ரேகைகள், பூண்போன்ற நகங்கள், ஒ
ளியுள்ளகண்கள் முதலிய சராசரங்களைத்தினந்தோறும் பார்
த்துக்கொண்டேயிருக்கிருர்கள். ஆயினும், அம்மலையாளத்தா
ர் கடவுளினுடைய மகிமையைத்தெரிவிக்க அந்த அருமையா
னபுல்லைக்கஷ்டப்பட்டுத் தமது தேசத்திலிருந்து எடுத்துக்
கொண்டுவந்து நமககுக்காட்டிச் சந்தோஷிப்பித்ததற்காக நா
ம்வந்தனஞ் செய்யவேண்டும்.

சில நாளுக்குமுன்னமே நாம் களிக்கும்படியாக மழைபெ
ய்ததும் கடவுளினுடைய மகிமைதானே ! அதற்குமாருக அன்
று ராத்திரியே வானங்குமுறி இடி இடித்து நம்மைநடுங்கச்
செய்து, சகாயம் பண்ணும்படி அர்ச்சுனனைக் கூப்பிடச்செய்
ததும் அவருடைய மகிமைதானே ! சமமாக மழைபெய்வித்
து செடி மரம் புல்பூண்டுகளைச் செழிக்கச்செய்ததும் அம்மகி
மைதானே ! மழையில்லாமல் உலரச்செய்ததும், அதிகமழை
பெய்து. அழுகச்செய்ததும் அம்மகிமைதானே ! சாணம்-குப்
பை-மல முதலிய கசுமாலங்களில் புழு பூச்சிகளை ஜனிப்பிக்கி
றதும் அம்மகிமைதானே ! அந்தபூச்சிகளை பட்சிகள் பக்ஷிக்கு
ம்படிசெய்கிறதும் அக்கடவுள் மகிமைதானே ! அப்பட்சிகள்
முதலிய ஜீவராசிகளைக் காற்று மழையிலடிபட்டுச் சாகும்ப
டிசெய்கிறதும் அம்மகிமைதானே ! நன்முய் உலர்த்திப்பதஞ்
செய்துவைத்திருக்கிறதோல் புழுக்காதிருப்பதும் அம்மகிமை
தானே ! அப்படிப்பட்டதோலையே மண்ணில்புதைத்துவிட்டா
ல் ஈரமுதலிய பூதசையோகத்தினுல் அது புழுக்கிறதும் அ
ம்மகிமைதானே ! மனிதனுடைய மலப்பையில் கிருமிகளையுண்
டாக்கி, வயிற்றுவலியினுல் அவனை வேதனைப்படுத்துகிறதும்
அம்மகிமைதானே ! அவன் தன் சுகத்திற்காகப் பேதிக்குச்சா
ப்பிட்டால், மலத்துடனே அக்கிருமிகளைவெளிப்படுத்தி அவ
ற்றைச்சாகும்படி செய்கிறதும் அம்மகிமைதானே ! அவன்
பேதிக்குச்சாபிடாதிருந்தால் வயிற்றுவலி அவனைவிட்டகலாதி
ருக்கும்படிச்செய்கிறதும் அம்மகிமைதானே ! மனிதனுடைய
சுகாசுகங்களுக்குக் கர்மத்தைக் காரணமாகச் சொல்லுவரே
யன்றி, மேற்கண்டவற்றிற்குச் சொல்லக்கூடாதல்லவா ? ம
னிதனைச் சிலநாள் செல்வந்தனுக்கி, பின்பு ஏழையாக்குவதும்,
சிலநாள் சந்தோஷமுள்ளவனுக்கி பின்பு துக்கமுள்ளவனுக்கு
வதும் அம்மகிமைதானே ! இதற்குக்காரணம் கர்மமென்ற
போதிலும், 'அவனன்றி யோரணுவுமசையாது' என்பதினுல்,
கர்மத்தை விளைவித்ததும் அம்மகிமைதானே ? கடவுளினி
டத்துமகிமை துலங்குவதையறிய அநேகமுகாந்தரங்களிருக்
கும்போது, மலையாளத்தார் புல்லைக்கொண்டுவந்து புதுமைகா
ட்டினுர். அன்றியும், நாஸ்திகர்களோடுவாதாடிநாளைக்கழிப்ப
தைப்பார்க்கினும், அக்காலத்தைப்பரமசிவனைவழிபடுவதிறசெ
லுத்தினுல் கடைத்தேறலாமென்று புத்திசொல்லினராம். இத
ற்காக அவர்கள் சந்தோஷப்பட்ட போதிலும், விசாரணையி
னுல் உண்மையறியவேண்டியதைவிட்டு, பழயபடிமூடநம்பிக்
கையிலேதானே அழுந்திக்கிடக்கும்படி புத்திசொன்னதற்கா
க நாம்விசனப்படவேண்டும்.

A. M

விபூதிதாரணம். ௧௮௯

—o—

முற்காலத்திலே சனற்குமாரபகவான் சிவபெருமானை நம
ஸ்கரித்து மானுடர்களுக்கும் முத்திபெறுமாறு இலகுவாய் வரு
த்தமில்லாததாய் இருவினையகற்று நன்மருந்தாய் அறிவைப்ப
யப்பதாய் கருதியவைகளை யுதவுவதாய் உள்ள ஓர் தருமத்தை
அருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தலும், அச்சிவபெ
ருமான் கிருபைகூர்ந்து சங்குபோலும் வெண்ணிறத்தையுடை
ய விபூதியைத்தரிப்பது மிக மேலாயதருமமென்று அருளிச்
செய்தார். அங்ஙனம் சனற்குமார முனிவர் அவ்விபூதிதாரண
விதிகளையு மருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தலுஞ்
சிவபெருமான் பூதி விபூதி ரட்சை பசிதம் நீறு பசுமம் க்ஷார
ம் என்பன ஒருபொருட் சொற்களென்றும் இவற்றுள் பூதி வி
பூதி என்பன (தரித்தவர்க்குச்) செல்வத்தைக்கொடுப்பது (வி என
ன்பது மிகுதிப்பொருளைத் தரும் அடைமொழி) ரக்ஷை என்ப
து காப்பது என்னும் பொருளை யுடைத்து; பசிதம் என்பது சிவ
த்துவத்தை விளக்குவதென்னும்பொருளது; நீறு பசுமம் என்ப
து பாவங்களை நீருக்குமென்னும் பொருளையுடையது. க்ஷார
ம் என்பது மலத்தை யகற்றுவதென்னும் பொருளையுடையது
என்றும், இவ்விபூதி கற்பம் அனுகற்பம் உபகற்பம் என மூன்
றுவகையென்றும் இம்மூன்றுவகையல்லாதது அகற்பமெனப்
படுமென்றும், இவ்விபூதியை விளைப்பது பசுவின் சாணத்தைக்
கொண்டேயாகலின் நம துலகத்திலே நம் முன்னிலையிலே இ
ருக்கும் நந்தியினருகே நந்தை சுபத்திரை சுரபி சுசீலை சுமனை
என்னும் பசுக்களை உயிர்கண்மேலிரங்கிப் பூமியின்கண்ணே வி
டுத்தனமென்றும் (நந்தை கபிலநிறம் சுபத்திரை கருமைநிறம்
சுரபி வெள்ளைநிறம் சுசீலைபுகைநிறம் சுமனை செந்நிறமாம்) அப்
பசுக்களின் கொம்பினடியில் பிரம விஷ்ணுக்களும் கொம்பு நு
னியில் கோதாவரி முதலிய தீர்த்தங்களும் சராசர வுயிரும் சிர
சிற் சிவபெருமானும் நெற்றிநடுவில் சத்தியும் மூக்குநுனியில
சுப்பிரமணியக்கடவுளும் மூக்கினு ளிந்திராதிபரும் இரண்டுக
ன்னநடுவி லச்சுவினிதேவரும் இரண்டு கண்களிற் சந்திர சூரி
யரும் தந்தத்தில் வாயுவும் நாவில் வருணனும் நெஞ்சிற் கலைம
களும் கண்டத்தில் யமனும் இயக்கரும் உதட்டி லுதயாத்தம
னசந்திதேவரும் கழுத்திலிந்திரரும் முரிப்பி லருக்கதேவரும்
மார்பிற் சாத்தியரும் காலில் வாயுவும் முழந்தாளில் மருத்துவ
ரும் காற்குளம்பு நுனியில் நாகரும் குளம்பு நடுவிற் கந்தருவ
ரும் குளம்பின்மேலிடத்தி லரம்பயரும் முதுகிலுருத்திரரும்
சந்துக்களி லட்டவசுக்களும் அரையிற் பிதிர்தேவதைகளும்
யோனியிற் சத்தமாதாக்களும் குதமான அபானத்திற் றிருமக
ளும் அடிவாலில் நாகாதிபரும் வாலுரோமத்தி லாதித்தியரும்
கோசலத்தி லாகாயகெங்கையும் கோமயத்தில் யமுனைநதியும்
உரோமங்களில் முனிவர்களும் வயிற்றிற் பூமிதேவியும் முலைக
ளி லெல்லாக்கடல்களும் வயிற்றிலும் இருதயத்திலும் முகத்

திலும் மூன்றக்கினிகளும் எலும்பிலுஞ் சுக்கிலத்திலும் யாகத்
தொழில் முழுமையும் சமஸ்த அங்கங்களிலும் கற்புடைய மட
வாரும் இருப்பார்கள்; ஆதலினற் பசு விசேஷ முடையதென்
றும், அதனுடைய மலத்தை எடுத்தற்கு அதை விதிப்படி பூசித்
து கோசாவித்திரியென்னும் மந்திரத்தை நூறுதரஞ் செபித்து
அதன்பின் கோமயங்கொள்ளல் வேண்டுமென்றும் கன்று பிர
சவித்து பத்துநாட் செல்லாதபசுவும் கன்னிப்பசுவும் கன்று
சாவப்பெற்ற பசுவும் கிழப்பசுவும் மலட்டுப்பசுவும் மலத்தை
த் தின்னும்பசுவும் கருவயிற்றுடைய பசுவும் இலட்சணவீன
மானபசுவும் என்றின்னோரன்னவை குற்றமுடைய வாதலின்
இவற்றின் கோமயங் கொள்ளலாகாதென்றும், கோமயங் கொ
ள்ளுதற்கு அட்டமி அமாவாசை பூரணிமை சதுர்த்தசி சூரிய
சந்திரகிரகணகாலங்களும் பங்குனிமாசத்திற் பசானமென்னு
ம் ஓர்வகை நெல்லின் தாளைமேய்ந்த பசுக்களின் சாணமும்
நன்றுமென்றும், முற்கூறிய தினங்களில் கோமயங்கொள்ளுத
ல் சாந்திகம் பௌட்டிகம் காமதம் என்னும் மூவகை; அவற்
றுள் பசுவின் பிற்றட்டிலே கைவைத்தேற்பது சாந்திகமாம்,
பூமியில் விழுமுன் தாமரை யிலையிலேனும் பலாச விலையிலே
னும் ஏற்பது பௌட்டிகமாம், பூமியில் விழுந்தபின் மேலுங்கீ
ழும் நீக்கி யெடுப்பது காமதமாம் என்றும் அவ்வாறெடுக்க
ப்பட்ட கோமயத்திற் பஞ்சகவ்வியம் விட்டுப்பிசைந் துரட்டி
ப் பதரைவிரித்து அதன்மேலன்றன்றே உலரவைத்து சிவாச்
கினியைக்கற்பித்து அதனாலே தகித்தபின் அவ்விபூதி நன்றுச
விளைந்ததையறிந்து ஆராய்ந்து கருகல் முதலியவறறைத்தள்ளி
எடுக்கவென்றும்; சுவக்கியானகுரு.

(இன்னும்வரும்.)

அவலட்சணவிசேஷப்பிரசங்கம்.

ஓர் பானுவாரப் பிரசங்கத்திலே, பூமி முதலிய அண்டங்க
ளைப்பற்றி பிரசங்கியார் உபந்நியசித்தபோது, ஆகாயமு
ம் உருண்டைவடிவா யிருக்கிறதென்று உபந்நியசிக்கப்பட்ட
தாம். ஆகாயமென்பது வெளியாயின், எவ்வகைப்பட்ட அ
ண்டங்களும் இருப்பதற்கிடமாகிய வெளி அகண்டமாயிருக்
க, அதற்கு உருவேற்படுத்தினது—தங்கள் கடவுளுக்குக் கை
கால் முளைக்கச்செய்ததுமன்றி, உற்சவகாலத்தில் வேறே து
ண்டுபுட்டம் கை கால்களைத்தொடுத்து அதைக் கண்டப்படுத்
தியிருக்கிறபடியால், வெளியானது அதற்கு மிஞ்சியிருக்கப்ப
டாதென்றோ, தெரியாமையினாலோ யாமறிகிலோம். இது
நேராய் எங்களுக்குச் சம்பந்தப்படாத விஷயமாயினும், கே
ட்பவர்களில் சிலர் ஒருவேளை ஏமாந்து நம்பியிருப்பார்க ளெ
ன்கிற சந்தேகத்தினால் சூசனையாகக் காட்டினோம். இந்த அ
வலட்சணப்பிரசங்கத்தினும் அதிகப்பிரசங்க மென்னவென்று
ல்—எங்கள் பத்திரிகையின் பெயராகிய "தத்துவவிவேசினி"
என்னும் எழுத்துகள் குஷ்டரோகம்பிடித்து விகாரமா யிருக்
கின்றனவென்றும், சமாஜத்தார் எழுதுகிற அவலட்சண
மான வசனங்களுக்கு இடங்கொடுக்கிற பத்திரிகையின்
பெயராகிய "சுதேசாபிமானி" என்னு மெழுத்துகள் லட்சுமீ
கரமா யிருக்கின்றனவென றுஞ் சொல்லித் தமது வெகுளித்த
னத்தை வெளிப்படுத்தினராம். இப்படியாயின், மற்றைப்பத்
திரிகைகளின் எழுத்துகள் நடுத்தரமா யிருக்கின்றனபோலும்.
அவ்வவ்வெழுத்துகள் உரியவர்களுடைய இஷ்டப்படி மனித
னால் செதுக்கப்பட்டதென் றறியாமல், அவரவருடைய குண
த்திற்குத் தக்கபடி பரமசிவத்தின் அருளால் அமைக்கப்பட்ட
னவென்று நினைந்திருப்பர். இவருடைய மனதின்படி செது
க்குவிக்கக்கூடும்; அப்படிச்செய்தால் அவை இப்போ திருக்கு
மெழுத்துகளினிடத்துப் பிரியமுற்றவர்களுக்கு விகாரமாகத்
தோன்றுமே. ஒருவன் யாவரையும் சந்தோஷிப்பிக்க வல்ல
னல்லவென்பதை அறியார். தகப்பனும் பிள்ளையும் கடைத்
தெருவில் விலைகூறக் குதிரையை யோட்டிக்கொண்டுபோன
கதையையாவது வாசித்திருப்பவர், மேற்கண்ட வண்ண
ம் சொல்லியிருக்கமாட்டார். அச்செழுத்துக ளேற்படுத்தப்
பட்ட ஆதிகாலத்தில் அவ்வெழுத்துகளால் சிவநாமம், ஹரிநா
மம், கணபதிநாமம் முதலிய நாமங்கள் பதிக்கப்பட்டுள்ளன.
அக்காலத்து எழுத்திற்கும் இக்காலத்து எழுத்திற்கும் எவ்வள
வோ பேதமுண்டு. அதினாலே, அந்நாமங்களுக்குரிய எழுத்
துகளுக்குக் குஷ்டரோகம் பிடித்ததென்று சொல்லலாமா? அ
ல்லது அந்நாமங்களையுடைய தேவதைகளுக்கு அக்காலத்தில்
குஷ்டரோகம் பிடித்திருந்ததென்று சொல்லலாமா? சொல்
லக்கூடாதே. சிறுபிள்ளைகள் ஒருவனுக்கொருவன் "அடே, எ
ம்பொத்தகம், அயகாயிருக்குது, உம்பொத்தகம், ஏஎ! (ப்ர)யா
யிருக்குது" என்று சொல்லிக்கொள்வதுண்டு. இவ்வாறு இ
ன்றைக்கு எழுத்தை ஏளனஞ்செய்தவர்கள் நாளைக்குத் தங்க
ள் முகக்கோணலைத் தாங்களறியாமல், நாஸ்திகர்களுடைய மு
கம் எவ்வளவு விகாரமாயிருக்கிறதென்று சொல்ல ஆரம்பிப்
பார்கள். இதற்குத் திருஷ்டாந்தமாக, அந்தப் பிரசங்க தின
த்திலேதானே அவ்விடம் வந்திருந்த கும்பகோண மாயவரஞ்
சாமியாரொருவர் நாஸ்திகர் நாவிலே சரஸ்வதிவாழாமற்போ
கக்கடவதென்று சாபங்கொடுத்தனராம். இதனாலே ஸ்வாமியா
ருடைய நிலைமையைத் தெரிந்துகொண்டோம். 'மொதட்டி
தேவுடு ஏமோசேஸ்த்தே ஹநுமந்தராயுனிகிதெப்பதிருநாளு'
என்றுற்போல, அவர்களுடைய முதற்கடவுளே காற்றுய்ப்ப
நக்கச்சே, நடுவில் சரஸ்வதி எங்கிருந்துவந்து நட்டுக்கொண்
டாள். 'பாதியுடலிற் பரமனொரு பெண்ணைவைத்தான், மா
தொருத்தி தன்னை மணிவண்ணன்மார்பில்வைத்தாள், பூங்கம
லவேதனொரு தேமொழியைநாவில்வைத்தான், என்றபடி மற்
றிரண்டுதேவர்களும் தத்தம் மனைவியரை வெகுபத்திரமாகவை
த்திருப்பதுபோலப் பிரமனும் தன் மனைவியாகிய சரஸ்வதியை
த் தன்னுடைய நாவில்வைத்திருக்க, எந்தச்சமயத்தில் தன் க
ணவனை வஞ்சித்து இவர்களுடைய வாயில்வந்து புகுந்து
கொண்டனளோ! இவள் இந்திரசால மகேந்திரசாலங்கற்ற ம
கா துஷ்டையாயிருக்கவேண்டும்! இவர்களுக்குள்ளும் ஒவ்
வொருவருடையவாயில் ஒவ்வொரு நாள் வசிக்கின்றனளோ,
அல்லது ஒருவருடைய வாயில் ஒருவிரலும் ஒருவருடைய வா
யில் மூக்கும் மற்றொருவருடையவாயில் காலும் இவ்விதமாக
இருக்கின்றனளோ! நியாயங்களை யெடுத்துக்காட்டி நாஸ்திக
ர்களை நல்லவழியில் திருப்ப எத்தனப்பட்ட இந்த சமாஜத்தா
ருக்குப் பிரசங்கிக்கச் சத்விஷயமொன்றுங் கிடையாதா? ஐ
யோ பரிதாபம்! ஆரம்பித்த சிலநாளுக்குள்ளாகவே அலுத்து,
நாஸ்திகர்களைச் சாபத்தால் நாசஞ்செய்யத் தலைப்பட்டது எ
ன்ன உபகாரசிந்தை! இனி நாஸ்திகர்களுடைய நியாயப்பிர
மாணமென்னும் பாணத்திற்கஞ்சி 'ஆத்தாளே, அம்மாளே' எ
ன வசைச்சொற்களைச் சரமாரியாகப் பொழிந்து வெற்றிபெ
ற்றோமென்கிற விருதுக்கொடியுடனே ஊர்கோலம்வந்து ச
மாஜம் ஒழிந்துபோகும்போலும். இன்னதுசொன்னால் இன்
னது விளையுமென்கிற அவ்வளவு யோசனையில்லாத அந்தசமா
ஜத்தார் நாஸ்திகர்களுக்குத் தாய் தாரமென பேதமிராதென்
று சொன்னதுபற்றி நாம் கூறியநியாயங்களை கவனியாமல் ம
றுபடி விவேகமற்றபேச்சுப்பேசினதற்காகக் கண்டித்து அவர்
களைச்சீர்ப்படுத்துவது நமது கடமையாதலால் சுருக்கமாகச்
சொல்லி, பிரசங்கியாருடைய சொற்களைக்கேட்டிருந்த புத்தி
மான்கள் அவ்விடத்திலேதானே அருவருப்படைந்தார்களென
நாம் கேள்விப்பட்டதினால் இந்தமட்டில் நிறுத்தினோம்.—அறி
விலிகளினிமித்தம் வீண் வார்த்தை பேசும்படி நேருவது விச
னகரமானகாரியம்.

A. M.

உள்ளூர்மெம்பர் - மூனறுமாசத்தறகு—ரூ 3— 0—0
வெளி „ „ —ரூ 1—14—0
செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்
கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்து
வவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

தத்துவவிவேசினி

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வான்சு.) வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)

உள்ளூர்	Rs.	A.	P.	வெளியூர்	Rs.	A.	P.
மாசம் 1க்கு	0	4	0	மாசம் 1-க்கு	0	5	0
ஷை 3-க்கு	0	10	0	ஷை 3-க்கு	0	13	0
ஷை 6-க்கு	1	2	0	ஷை 6-க்கு	1	8	0
வருஷம் 1-க்கு	2	2	0	வருஷம் 1-க்கு	2	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு. முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிறுஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 43.] MADRAS:—SUNDAY OCTOBER, 24, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

உபகாரசிந்தை.

அமெரிக்காதேசத்திலுள்ள கர்னல் இங்கர்சாலென்பவர் சிலநாளுக்குமுன்னே நீராவிவண்டித் தொடரில் ஏறிச்செல்லுகையில், அதேவண்டியிலிருந்த ஓரம்மாள் தன் குழந்தை அழுதுகொண்டு என்னசமாதானஞ்செய்துங்கேளாது, பிடிவாதமாய் ரொஷ்டுசெய்வதினால் வேஷ்டைபடைவதைக்கண்டு சகிக்காதவராய், அந்தக்குழந்தையை ஏந்திக்கொண்டு பலவேடிக்கைகாட்டி சமாதானஞ்செய்து உல்லாசப் படுத்திக்கொண்டிருக்க, அந்தக்குழந்தைஅலுப்பினால் அவர்மடியிலேதானே தூங்கிவிட்டது. அந்தம்மாளும் அக்குழந்தையால் நெடுநேரம் அலுப்புற்றதினால் உட்காந்தபடியே உறக்கமுற்று நித்திரை போயினள். சுமார் இரண்டுமணிநேரத்திற்குப்பின்பு அவர் அக்குழந்தையை அந்தம்மாளிடத்திற்கொடுத்தார். சில அறிவிலிகள் நாஸ்திகருக்கு நற்சிந்தையிராதென்றுநினைப்பது பிசகென்பதற்கு இதுவும் ஓர்சாட்சி.

அபிமானிக் கோர்மொழி.

சென்னையிலே பிரசுரமாகிவரும் அபிமான பத்திரிகையொன்றில் நிகழும் அக்டோபர் ௴ 9௳ வெளியாகிய சஞ்சிகையிலே "சென்னையில் நாத்திகர் சந்தேகிகளாயினது" என்னும் வாக்கியத்தை முதலாகவுடைய மாறுவாசகங்கள் பொருமனப் பூர்வகமாகவோ அல்லது மதிமோசமாகவோ கூறப்பட்டிருக்கின்றன. இவற்றைக்கண்ணுற்றயாம் முன்னர்சந்தோஷமடைந்து பின்னர் பரிதாபமுமுற்றோம். எப்படியெனில் "பொறுமைக்காரனுக்குப் புத்திசூன்யம்" என்னும் பழமொழிபலித்ததேயென்று சந்தோஷமும், மதிமோசத்தாலே மாறுபொருள் கொண்டு களிக்கும் அறப சந்தோஷிகளும் ஓர்பத்திரிகாதிகாரிகளாக நமக்குநடுவில் வசிக்கின்றார்களேயென்றுவிசனமும்அடைந்தோம். நாஸ்திஎன்னும் சொல்லிற்குஇல்லையென்பது பொருள். "இல்லை" என்பதுமறைமொழியேயல்லாமல் படுமொழி யன்றாம். மறைமொழிமுன்கூறப்பட்டவொன்றை குற்றங்காட்டி மறுக்கும்படி மொழிகிறமொழி. படுமொழி அவ்வாறுமறுக்கப்படுதற்கு இலக்காகமுன்னெழுமொழி. ஆதலால் மறைமொழி குற்றமுடைய படுமொழியைத் தொடர்ந்தேநிகழும். எனவே படுமொழியில்லாதவிடத்தும் படுமொழிகுற்றமற்றதாயுள்ளவிடத்தும், படுமொழிபொருள்படாவிடத்தும் மறைமொழி நிகழாது. இதுவேநியாய சாத்திரதத்துவம். இந்தநியாயசூத்திரம் அபிமானியாகிய நமதுபத்திராதிபருக்கு விளங்குமோவிளங்காதோவென்னும் சந்தேகம் எம்முள்நிகழ்கின்றமையால் இதனை உதாகரணிந்துங்காட்டுவாம்.

1. "உருவம் அருவம் உருவருவம் ஆகியமூன்று லக்ஷணங்களையும்உடையவர் "கடவுள்" என்று பரஸ்பர விரோதலக்ஷணங்களைக் கற்பித்துச்சொல்வது (குற்றமுடைய படுமொழிவாய்பாடு) ஏனெனில்கடவுள்உருவமாயுள்ளபோது அவரை அரூபியென்றாவது ரூபாரூபியென்றாவது சொல்லுதல்கூடாது—ரூபத்திற்கு அரூபம்நேர்விரோதமாதலால்.

2. மேற்சொன்ன கடவுளிலக்கண பரஸ்பரவிரோதத்தைச்சுட்டி அத்தகைய கடவுள்இல்லையென்பது (மறைமொழிவாய்பாடு)

3. யாதொரு லக்ஷணத்தையுங்கூறாமல் மதோன்மத்தமாய்க் கடவுள்உண்டுஎன்றுமாத்திரம் சொன்னால் கேட்பானுக்கு அக்கடவுள் மண்ணோ மசிரோ வேறுயாதோவென விளங்காமையால்; அதைமறுப்பது சாத்தியமல்லவெனக்கருதி அப்படிவிளக்கமற்றபொருள் உண்டோயில்லையோவெனச்சந்தேகித்தல் (மறைமொழியில்லாவாய்பாடு) ஏனெனில் தெரியாததை மறுப்பது நியாயமல்லவாதலால்.

4. பளுவாய் த்ரணமாய் உருச்சுக்கூடாததாய் தூலமாய் உள்ளது கல் என்பது (மறைமொழியில்லாப் படுமொழி) ஏனெனின் இவ்விலக்கணங்கள் மறுக்கக்கூடாத தத்துவசூத்திரமாயிருக்கின்றமையால் மேலேகுறித்த நாலுவகுப்பில் ஆஸ்திகர் முதலாவதின்படி சொல்லின் நாஸ்திகர் மறுப்பர். மூன்றாவதின்படி சொல்லில் சந்தேகிப்பர். நாலாவதின்படி சொல்லின்சம்மதிப்பர். இப்படியே ஆஸ்திகர் கூறும்வாக்கிய சந்தர்ப்பத்தையொட்டி நாஸ்திகர்விடை விடுக்கின்றமையால் அவர்கள் முன்னே மறுத்தார்கள், பின்னே சந்தேகிக்கின்றார்கள், இனிநம்புவார்கள் என்று தம்வாயைத்தாமே மென்று ருசிபார்ப்பது போல் சூத்திரம்பேசி அற்பசந்தோஷிகளெனப் பெயரெடுப்பது புத்திமயக்கம்.

நாஸ்திகநாசம் எப்படி ?

நாஸ்திகரே, உங்களுடையகொள்கையின்படி நல்வினை தீவினைகளின்பயனாகிய சுகதுக்கமும், வினைகளைச் செய்பவனாகிய சீவனுக்கு அவ்வினைகளின்பயனைக்கொடுப்பவனாகிய சிவனும்இல்லையாயின் திருடனையும் விபசாரம்புரிபவனையும் (அரசன்அறியாவிடத்து) தெண்டிப்பார்யாவர் ? என்றுவினாவும் அபிமானி, எமதுவிடை உயர்திணையாகவேயிருக்கவேண்டுமென்று தமது அபிமானவினாவினாலேயே குறிப்பிக்கின்றார். இப்படி உயர்திணையை விரும்பிக்கேட்டவர்தெண்டனையாது ? அல்லது தெண்டிப்பதுஎது ? என்று ஏன்கேட்கப்படாது ? இங்ஙனம் கேட்டமையால் திருடனைத்திருடச்செய்வதும், காமியைவிபசரிக்கச செய்வதும்யாவர்? என்றுநாம்கேட்பதற்கும் இடமுண்டே ; அவ்வவர் புத்தியீனத்தால் செய்கின்றார்களெனின், அவ்வவர்புத்திவிசேடத்தால் செய்யாமல் தெண்டித்துக்கொள்கின்றார்களென்போம். இங்ஙனம் வினவியதனால் இவர்கருத்து குற்றவாளிகளைத் தெண்டித்து நீதியை நிலைநாட்டவல்ல ஓர்கர்த்தா இருத்தல்வேண்டுமென்பதாகின்றது. ஆகவே அக்கர்த்தா மனிதரைப்போல அபூரணக்கியானமுடையவராகவேனும் ஒன்றிருத்தல் வேண்டும் அல்லது மனிதரின்விசேடித்தபூரணக்கியானமுடையவராகவேனும் ஒன்றிருததல்வேண்டும். மனிதரைப்போலஅபூரணக்கியானமுடையவரேல்அவருக்குத்திருடனைத்திருடனென்று அவன் திருடுவதற்குமுன் தெளிதல்கூடாது.கூடாதபோதுதிருடனைத் திருடுவதற்குமுன்திருடவொட்டாமல் தடுத்தலுங்கூடாது; இப்படி மனிதரைப்போல அபூரணமுடையகர்த்தாவை மனிதர் சமமாகப்பாவிக்கத்தக்கவரேயல்லாமல் மேன்மையாகக்கோடிக்கப்பாலாரல்லர். இத்தகைய கர்த்தாவுக்கும் அரசனுக்கும் யாதொருபேதமுமே கிடையாது. அக்கர்த்தா மனிதரின் விசேடித்த பூரணக்கியானமுடையவரேல், அவர் திருடன்திருடுவதற்குமுன் அவனையின்னானென்று தெரிந்துகொள்வர். தெரிந்துகொண்டால் அவன்திருடியபின் அவனைத்தெண்டிப்பதைக்காட்டினும் அவனைத்திருடவொட்டாமலே தடுப்பர். வருமுன் காப்பது கியானவிசேஷமா? வந்தபின்காப்பது கியானவிசேஷமா ? புத்திசாலியாகிய ஓர்மனிதனுமல்லவோ கிணத்தருகேதவழும் தன்குழவியை விழுந்

தபின் பரிகாரந்தேடிக்கொள்வோமென்றிராமல் விழுமுன்தூக்கிக்கொள்கிருன். இப்படி அற்பமனிதனுக்குள்ளயோசனேயுமில்லாமல் திருடிவிட்டபிறகும் விபசாரம்புரிந்துவிட்டபிறகும் தெண்டிக்கும் மனிதரினுங் கடையாயகர்த்தனேயா நமதுநீதிநிலேக்கஅனுமானித்துக்கொள்வது ? பளா ! பளா !! நன்று ! நன்று !! இத்தியாதி நியாயங்களால் நாம் அபிமானிகளாயிராமல மானிகளாயிருப்பின் தீவினேயாளரைத் தெண்டிக்க ஓர்கர்த்தா இருத்தல்வேண்டுமென்று அனுமானத்தால் வருவித்துக்கொள்ள நாணுவோம்.

ஒ அபிமானியே ; நீதிநிலேக்க ஆஸ்திகமா காரணம்? ஆஸ்திகம் காரணமேல், நாளொன்றுக்குப் பலஜில்லாக்களிலுள்ள கோர்ட்டு கச்சேரிகளில் கோடிகோடியாய்ப் பொய்ச்சான்று சொல்வோரும், களவெடுப்போரும், விபசாரம்புரிவோரும், நம்பிக்கைதுரோகம் செய்வோரும் வழக்கோரம்சொல்வோரும் ஆஸ்திகரா நாஸ்திகரா? இவர்களெல்லாம் நாஸ்திகரோயெனின், தற்காலம் இவ்விந்துதேசத்திலே சுமார் சில நூற்றுக்கணக்கான சுவஞானசங்கத்தினர் மத்தியிலே நிலேபெற்ற நாஸ்திகத்தை உலகமெங்கும் கோடிகோடியாய்ப் பெருக்கிவிட்ட நீயா நாஸ்திக நாசஞ் செய்பவல்லே ! நன்று, நன்று!! பெருமாளென்னும் பெயரையிகழ்ந்து பெரிய பெருமா ளாகிவிட்டையே ; மண்டோதரியையும் தாருகாவன ரிஷிபத்தினிகளேயும் கற்பழித்து விபசாரம்புரிந்த உனது சிவன் ஆஸ்திகஞ நாஸ்திகஞ ? ஆயிரமாயிரமாகிய கோபிகாஸ்திரீகளேக் கற்பழித்து விபசாரம்புரிந்த கிருஷ்ணன் ஆஸ்திகஞ, நாஸ்திகஞ ? அண்ணமலேயின் முடியைக்கண்டுவிட்டேனென்று பொய்சொன்ன பிரமன் ஆஸ்திகஞ, நாஸ்திகஞ? அய்யோ: முன்னுக்குப்போய் மூக்கறுபட்ட அபிமானியே ! அடிக்கப்போய் அடிபட்டுக்கொண்ட அபிமானியே; இனியேனும் அக்கினிமலேமேல் கருப்பூர பாணப்பிரயோகஞ் செய்து நாணடையாமல் வாயடங்கி மானியாய் வாழக்கடவை.

பு—மு—நா.

ஒரோவிஷயத்தைப்பற்றி இராயப்பேட்டை நேசரும், A. M. என்பவரும், A. P. M. என்பவரும் எழுதியிருப்பனவற்றை ஒன்ருய்த்திரட்டி ஒரோமுகமாகப் பிரசுரிக்கப்பட்ட

ஆரியமதப்பிரசங்கவிளக்கம்.

பேயாடிபத்தர்துழாம்.

நிகழும்அக்டோபர்மாதம் 3ம் திகதி ஆதிவாரம் மாலே செங்கான்கடை அருணுசலீஸ்வரன்வசந்தமண்டபத்தினருகேஆப்தரொருவரைக்காண இரண்டுநண்பர்களுடன் சென்றிருந்தேன். நான்தேடிச்சென்றவர் அவரதுஇல்லின்கண் இல்லாது ஷெமண்டபத்தின்கண் நிகழும் உபந்நியாசத்திற்குச் சென்றிருப்பதாக செவிமடுத்து ஆங்குசென்றனம். அவ்விடம் பிரசங்கம் முடிவெய்திய தருணமாகவும், ஸ்ரீமான் பாலசுந்தரமுதலியாரவர்கள் பிரசங்கம் துரிதத்தில் முடிந்ததின் காரணமும், சபாநாயகரவர்கள் ஸ்ரீமான் B. A. பரீட்சையில் தேர்ந்த சிங்காரவேலுமுதலியாரவர்கட்கு வந்தனேவழிபாடும்சொல்லும் காலமாகவு மிருந்தது. யாமும் பின்வருமாறு காதுற்றனம்.

ஆங்குப்பிரகடனித்த விஷயங்கள் அவண்கண் உள்ளவர்க்கேயன்றி மற்றவர்களுக்குப் பிரயோஜன மின்மையாலும், விஷயங்களே விஷயிக்குங்காலன்றி மறுவாரத்திற்குள் மறந்துபோகக் கூடியதாலும், பிரஸங்கத்தினிடமாக உதிக்கும் சங்கைகளே சங்காநிவர்த்தி செய்யக்கட்டாயம் வேண்டியும், நாத்திகர் நாவைநாசமாக்கி நாதன் நாதத்தை பம்பம்மெனப்பூரிக்கப் பூண்பூண்டு இவைமுதலானதுகளால் பரோபகாரமாய் ஆஸ்திகஸ்தாபன பத்திரிகையொன்று வெளியிட ஏற்பாடு செய்திருப்பதையும், ஷெ சபாநாயகர் ஊணபாடையில் எவ்வளவு தேர்ந்துள்ளாரோ அவ்வளவிற்குதிரவிடத்திலும் தெளிந்துள்ளாரெனவுமியம்பி கண்டவர்மிகக்கொண்டாட நாஸ்திகர் வெகு ஸொல்ப தொகையினர், கோடிக்கொருவராயிருக்கிருர், நாத்திகம் பெருமாளுல் அருளப்பட்டதே யென்று ஸ்காந்தபுராணத்தை மேற்கோளாகக்காட்டி,கொல்லாவிரதிகளானசமணர்கள் பெருங்கூட்டமான அக்காலத்தே அவர்களேக் களேந்தெறிந்த களேபிடுங்கி சம்பந்தவள்ளலேப்போல நாத்திகர்பெருங்கூட்டமான அக்காலத்தே நாத்திகம் பிடுங்கிவள்ளல் தோன்ற சர்வக்ஞப்பெருமான் அருள்செய்யப்போவதாய் சொல்லி சொல்லாமுன்னமே, ஆங்கு ஆரோசணித்திருந்த திருவடிகளிலொருவர் பேய்பிடித்தவன்போல ஓலமிட்டுக் குதித்துக் குப்புறப்புரண்டனர். சபையும் கலகலத்தது. அங்கிருந்த திருவடிகளிலொருவர் கூட்டத்தைக் கையமர்த்தினர். இதனேக்கண்ணுணித்த ஸ்ரீமான்பாலசுந்தரமுதலியார் வள்ளல் காட்சிதந்தாரென ஆர்ப்பரித்து, ஆ ! ஆ ஆ ! ! திருவருள்திருக்கூத்தைக்கண்டீர்களா ? நாத்திகர்வாயடங்கவென தீரவீரபிரதாபங்களே மீட்டிப்பெருமானேத்தீட்டி ஏத்திப்போற்றி இசைத்து இளேப்படைந்ததாய்ப் பலருமறியச்சொல்லி அவரதுசபையாரிலொருவரை மற்றதைச்சொல்லி முடிக்கவிட்டு வேர்த்து விசிறிகைக்கொண்டு அமர்ந்தனர். (பெருமானேப்பாடி ஆடி இளேப்பதும் உண்டுபோலும்) முடிக்க எதர்பார்த்திருந்த திருவடியாரும் நாஸ்திகத்தை அதோகதியாக்கும் பேரவாவை முன்னிட்டு ஒனறுபாதியாய் சிலதைப்புகட்டி ஆஸ்திகஸ்தாபன பத்திரிகை இருத்தலே அதிமுக்கியமெனநாட்டி அங்குள்ள திருவடிகளிடம் கைநாட்டும்வாங்கினர். திருக்கூத்தாதுசபையும் கலேந்தது.

சோற்புராட்டுக்குவேதமதி.

சைவசமாஜத்தார் சங்கோசப்பிரவாக வாயுவைப்பற்றிப் பிரசங்கித்தனராம். இவர்களுடைய சாஸ்திரப்படி மனிதனுக்குள் பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருதரன், தேவதத்தன், தனஞ்செயன் எனப் பத்துவாயுக்களுண்டு. இவையல்லாமல், மேற்கண்ட வாயு வேருென்ரு யிருக்கிறது, உண்ட அன்னசாரத்தை 72,000 நாடிகளிலும் கலப்பிக்கிறதென்கிற வியானனென்னும் வாயு அல்லது யாவையும் சமன்பண்ணுகிறதென்கிற சமானன் என்னும் வாயு அல்லதுவேருெரு வாயுவினுடைய உடபிரிவென்று சொல்லுவார்களபோலும். సర్వవ్యాపకత్వాత్ ప్రాణాపానాది సంజ్ఞాం లభతే. இந்தவாக்கியத்தின்படிவாயுஒன்றே, ஸ்தானபேதங்களுக்குத்தக்கபடி வெவ்வேறு பெயரிடப்பட்டிருக்கிறது. அதனல் இன்னும்பல ஸ்தானங்களேஏற்படுத்தி அவற்றிற்குத்தக்கபடி பலபெயர்கள் சொல்லலாம். அந்தவாயு இரத்தத்தைச் சுத்திசெய்து தேகமுழுதும் வியாபிக்கச்செய்கிறதென்று பிரசங்கித்ததாகச் சொல்லப்பட்டதினல், பூர்வம் ஐரோப்பியர்களுக்கும் (arteries) என்னும் குழாய் நாடிகளுக்குள் காற்றுஅடைபட்டிருந்ததென்கிற நம்பிக்கையிருந்தது ; பின்பு அவற்றுள் இரத்தம்நிறைந்தோடுகிறதென்று பரிசோதனேயிருற்கண்டறிந்தார்கள். ஐரோப்பா சாஸ்திரிகள் சொல்லியிருக்கிறபடி (lungs) நுரையீரல் இரத்தத்தை சுத்திசெய்கிறது ; (arteries) இந்தக்குழாய்நாடிகளின்வழியாய் இருதாசயத்திருந்து இரத்தம் தேகமுழுதும் வியாபிக்கிறது ; (veins) இந்தக்குழாய் நாடிகளின்வழியாய் மறுபடி இரத்தம் இருதாசயத்திற்கு வருகிறது ; (nerves) உட்டுளேயில்லாத உறுதியான கோதுநரம்புகள் இரண்டுவகை. ஒருவகையானது உணர்ச்சியை மூளேக்குக் கொண்டுபோவதும், மற்ருென்றுசெயல் புரிவதுமாம். இப்படிப்பட்டமதசம்பந்தமில்லாதவிஷயம் பொதுவானதாதலால், இதனலே நாஸ்திகமதத்துக்குத் தாழ்வுமில்லே, ஆஸ்திகமதத்துக்கு மேன்மையுமில்லே. ஆனல், மேலேதசவாயுவென்றும், 72000 நாடிகளென்றும் இவ்வாறு பரிசோதனேயில்லாமல் குழறியிருப்பனவற்றிற்குமாத்திரம் தோஷமுண்டாகுமேயல்லாமல், எவ்வளவேனும் நாஸ்திசமதத்திற்குக் கண்டனமுண்டாக மாட்டாது. ஆஸ்திகத்தைவிரோதிப்பதையே நாஸ்திகமென்கிருர்கள். ஆதலால், நாங்கள் விரோதமாகக்கூறியிருப்பனவற்றைச் சரியானநியாயங்களால் ருசுப்படுத்திக்கண்டித்து ஆஸ்திகத்தை நிலேநாட்டுவதே நாஸ்திகமதகண்டனமாகும். நாங்கள் எழுதியிருக்கிற எந்தெந்த அம்பசத்தைக் கிரமமாய்க்கண்டித்திருக்கிருர்கள் ? பிள்ளே புழுக்கையானலும் பேர்முத்துமாணிக்கமென்ருற்போல, நாஸ்திகத்தைக்கண்டிப்பவர்களெனப் பேர்மாத்திரம் வகித்துக்கொண்டு, சம்பந்தமில்லாதசங்கதிகளேயும் தங்கள் புராணங்களேயும் பிரசங்கித்துக்கொண்டு தூர்ப்பாஷைகளேப் பிரயோகித்துக்கொண்டிருப்பதினல் என்னபயன் ?

மேற்கண்ட வாயுப்பிரசங்கமுமன்றி, கந்தபுராணப் பிரசங்கமும் நடந்ததாகக்கேள்விப்பட்டோம். பத்துமுகங்களேயுடைய ராவணராட்சதனிலும், நான்குமுகங்கள் குறைவாயிருக்கிற ஆறுமுகக்கடவுளானவர்-பத்மாசூரனல் தேவர்களடைந்த துன்பத்தை நீக்கும்பொருட்டு அந்தச்சூரனேச்சங்கரித்து தேவேந்திரனுக்குப்பட்டாபிஷேகஞ்செய்து, அவனேச்சிங்காதனத்திலிருத்தியபின்பு, அவன் தனதுபேறு என்னபேறு ! தனக்கு அசுரரால்தீங்குற்றபோதெல்லாம் தன்னேத்தான் காத்துக்கொள்ளச்சக்தியில்லாமல் பிறருடையசகாயத்தால் உயிர்வாழ்வதைப் பார்க்கினும், சந்நியாசியாய்ப்போவது நன்றென்று ஆலோசித்திருநததை அறிந்த ஷண்முகன், எத்தனேயோதானதருமங்கள் தவங்கள்செய்து பெறவேண்டிய இந்திரப்பட்டத்திற்கு வேறேஎவன்வரப்போகிருன், அந்தப்பட்டம் பாழாய்ப்போகு

மே, இந்திரனுடையமனதைத்திருப்புவதுதான் சரியென்றுஎண்ணி, அவ்வண்ணஞ்செய்யும்படி ஒருரிஷிக்குச்சொல்ல; அந்தரிஷி ‘முத்தி’ என்பது ஸ்திரீகளைமுத்தியிட்டுக்கொள்வதுதவிர வேறொன்றுமல்லவென்றுபோதித்து அவன்மனதைத் திருப்பிவிட்டார். ஆதலால், நாஸதிகமதம் நூதனமானதல்ல, முன்னமேதானேயிருக்கிறதென்று பிரசங்கித்தார்களாம். இவ்வளவாய் புராணகதையையெடுத்துச்சொல்லிச் சொல்லைப்புரட்டினதினாலே நாஸ்திகமதம் உருண்டுபோய்விட்டதா? இந்தக்கொள்கை முன்னுமிருந்தது இப்போதுமிருக்கிறதென்று நாங்கள் சொல்லிருக்கிறோமேயல்லாமல், இப்போதுநூதனமாய்ப் புறப்பட்டிருக்கிற நாஸ்திகத்தைத்தலைகாட்டவொட்டாமல் அடிக்கவேண்டுமென்றும், நாஸ்திக நிபுணர்கள் புறப்பட்டார்களென்றும் இகழ்ந்தவர்களும் இவர்களே, இப்போதுஅது புராதனமானதென்றுசொல்லுகிறவர்களும் இவர்களே. எக்காலத்தும் நாஸ்திகத்தை அனுஷ்டியாதவன்அரிது. ‘கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட்டேரைக்கும் விருப்புற் றமுதளிக்குமையன், உருப்பெற்றால், ஊட்டிவளர்க்கானோ’ என்கிற நம்பிக்கையினாலும், படியளக்கக்கர்த்தா ஒருவனிருக்கிறானென்கிற நம்பிக்கையினாலும், ‘அன்றறிவோமென்னாதறஞ்செய்க’ என்றபடி அப்போதப்போதுகிடைத்த பொருளைத் தருமஞ்செய்துவிடவேண்டியதாயிருக்க, பின்னுக்குத்தனக்காகவும் பிள்ளைகளுக்காகவும் ஆஸ்திசேர்த்துவைப்பதும், க்ஷாமம்வரும்போலிருந்தால், அவனவனுடையசக்திக்குத்தககபடி முன்னதாய் அமுதபடிசேர்த்துவைப்பதும் ஆஸ்திகமா, நாஸ்திகமா? கடவுள் மழைபெய்வித்து உலகத்தைரட்சிக்கிறானென்கிற நம்பிக்கையிருக்க, பின்னுக்குமழைபெய்யுமோ பெய்யாதோவென்று கடவுளினிடத்துச் சந்தேகத்தினால், கரைபந்தோபஸ்துசெய்து ஏரிகுளம் குட்டைகளை நிறப்பிவைப்பது நாஸ்திகந்தானே. எதிரிவந்தகாலத்து ஓரரசன் கடவுளைநம்பி, கோயில்வாயிற்படியில் துளசி தீர்த்தங்களைத்தெளித்து, அவன்தாண்டிவந்தால் கண்கெட்டுப்போகுமென்கிறநம்பிக்கையினால் ஆலயத்துட்புகுந்து கடவுளைப்பிரார்த்தித்துக்கொண்டிருப்பது ஆஸ்திகம். எதிரி உட்புகுந்து உதைஉதையென்றுஉதைத்து அவ்வரசனையும் அவன்ஊரையும்பிடித்துக்கொள்வது நாஸ்திகம். பன்னுவானேன்; பேராசையினால் எண்ணாததெல்லாமெண்ணி இல்லதாகிய பரலோகஇன்பத்தைவிரும்பி வைதிகத்திலொழுகுவது ஆஸ்திகமாகுமேயல்லாமல், அமைந்தமட்டில் திருப்தியடைந்து உள்ளதாகிய இகலோகவின்பத்தை விரும்புவதெல்லாம் நாஸ்திகமேயாகும். ஆஸ்திகரெனப்பேர்வகித்தவர்களுக்கு வாய்ப்பேச்சுமாத்திரம் ஆஸ்திகமேயல்லாமல் சிந்தையுஞ்செய்கையும் நாஸ்திகந்தான். ஆதலால், இவ்வுலகவிருப்பமுற்றஇவர்களுக்கு வேதாகமப்புராணங்களுமல்லாமல் தங்கள்கடவுளும் நாஸ்தியே. மற்றவைகளையும் யோசித்துப்பார்ப்போமாகில், உலகஇன்பத்தைநாடாதவர்கள் பிழைப்பதில்லையென்று தெரிந்துகொள்ளுவோம்.

புக்த்தி முக்த்தி என்பவைசம்ஸ்கிருதபதங்கள். புக்த்திஎன்பது இகலோகசுகம்; முக்தியென்பது பரலோகசுகம். முக்திஎன்பதற்கு சம்ஸ்கிருதத்தில் ‘முத்தம்’ என்கிறஅர்த்தமில்லை. ஆனால், முக்திஎன்கிறபதம் தமிழில் ‘முத்தி’ யெனத்திரிந்துவழங்குகிறது. இந்தத்திரிபுச்சொல்லையும் ‘முத்தி’ என்கிறதமிழ்ச்சொல்லையும் சமரசப்படுத்தி, முத்தியென்பது ஸ்திரீகளை முத்தியிட்டுக்கொள்வதேயல்லாமல் வேறொன்றுமில்லையெனவுபதேசித்ததை இந்திரன்நம்பினானென்பதும் எவ்வளவு விவேகம்! இந்திரனானவன் முக்த்தியென்கிறபதத்தையும் அதின் அர்த்தத்தையும் அறியாத அவ்வளவுமூடனாய், சொறகளினாலே ஏமாந்துபோனானென்கிறதோஷத்தை அவன்மேல் ஆரோபித்ததும் எவ்வளவு அநியாயம்! அக்காலத்தில் நாஸ்திகமதஉபதேசம்பெற்றதேவேந்திரன் அந்தநம்பிக்கையினாலே இன்றுவரையில் நாஸ்திகனாகத்தானே இருக்கிறான்; அப்படியாயின, பிர்மா - விஷ்ணு - சிவன் - இவர்களை என்னென்று மதித்திருக்கிறான்! இவன் திரிமூர்த்திகள் வாழும் பிர்மலோகம் வைகுந்தம் கைலாயம் இவ்விடங்களுக்கு அடிக்கடி செல்கின்றானே; முன் யுகங்கள் திவ்யமான யுகங்களாயினவே; சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்குபாதங்களுக்கு, சாலோகம் சாமீபம் சாரூபம் சாயுச்சியமென நான்குபதங்களுண்டு; சாலோகமாவது ஜீவன்தற்சொரூபத்துடனே கைலாயத்தில் வாழ்தல்; சாமீபமாவது சிவனுக்குச்சமீபத்தில் வீற்றிருத்தல்; சாரூபமாவது சிவசொரூபமடைந்துவாழ்தல்; சாயுச்சியமாவது சிவனோடுகலந்திருத்தல்; அந்தப்புண்ணியயுகங்களிலே இந்தப்பதவிகளடைந்தவர்கள் அநேகரிருப்பார்களே, தெய்வலோகத்திலும் சொர்கமடைந்தவர்கள் பலரிருப்பார்களே, இவர்களையெல்லாம் இந்திரன் பார்த்திருக்கமாட்டானா? அவன்நரகலோகத்திற்குப் போனதில்லையா? அங்கேதுன்பப்படுகிறவர்களைக் கண்டதில்லையா? இவையெல்லாமறிந்திருக்கிற இந்திரன் ‘முக்த்தி’ என்பது ஸ்திரீகளைமுத்தியிட்டுக் கொள்வதுதானென்று சொல்லப்பட்டதை நம்பினானென்பது என்ன அபத்தம்! என்னவிபரீதம்!! சொல்லுகிறவர்கள் தாங்கள்கொண்ட கருத்தைஸ்தாபித்து, உத்தேசித்தகாரியத்தை முடித்துக்கொள்ள எதையாகிலுஞ்சொல்லுவார்கள். “சொல்லுவார்சொன்னாலுங் கேட்பார்க்குமதியில்லையா” என்றபடி கேட்பவர்கள ஆலோசித்து அறியவேண்டும்.

சிற்றின்பத்தை வெறுத்துப் பேரின்பத்தைவிரும்பிச் சந்நியாசம்பெற்றுப் பிர்மத்தோடு கலந்துபோகக்கருதிய இந்திரனைமறுபடிசிறறின்பத்தில் வீழத்திக்கெடுக்கச் சரவணன்முயன்றானென்பது எவ்வளவுபாபகிருத்தியம்! அவனுக்கு என்னநரகதெண்டனை கிடைத்திருக்கவேண்டும்! துர்ப்போதனை செய்த அந்தரிஷியின்கதியும் என்னமாயிற்றோ! தங்கள்தேவர்களாகிய தகப்பன்சாமி இதைச்செய்தான், விஷ்ணு அதைச்செய்தான், சிவன் என்னென்னமோ செய்தானென்று சொல்லத்துணிபவர்கள் எதைத்தான்செய்யத்துணியார்கள்? தெய்வத்தன்மைக்கு விரோதம் நேரிடுமென்று யோசியாமல், ‘வலுமைக்குவழக்கில்லை’ என்பதுபோல, கடவுளர்கள் எதைச்செய்தாலுஞ் செய்யக்கூடுமென்பார்களாகில், அதற்குநாம்என்னமறுமொழிசொல்லக்கூடும்? ஆசான் நின்றுகொண்டு பெய்நதாலசீடன்ஓடிக்கொண்டே பெய்வானென்று சொல்லவேண்டியது தவிரவேறொன்றுமில்லை. கடவுளர்கள் ஒருக்காலும்தோஷமானகாரியஞ்செய்யமாட்டார்கள்; தங்கள்எண்ணத்தை முடிக்கும் பொருட்டு இன்னதுசொன்னால் கடவுளர்கள்மேல் தோஷாரோபணமாகுமென்று அறியாமல் கதைகட்டிவிட்டவர்கள் பேரில்தான் அந்தத்தோஷம்சுமரும். அப்படிப்பட்டகதைகளை அந்தமட்டில் ஒழிந்துபோகவொட்டாமல் அடிக்கடியெடுத்தாளுகிறவர்களும் அந்தத்தோஷத்தில் பங்குகொள்ளுகிறார்கள். மேலே ரிஷி துர்ப்போதனைசெய்தாரென்பது தேவகுருவாகிய பிரகஸ்பதிதான். அவர் ‘பிரகஸ்பதிமதம’ என்கிறபெயரால் நாஸ்திகமதக்கிரந்தமொன்று செய்திருக்கிறார்: அது ஆஸ்திகத்துக்குவிரோதமாதலால், அவருக்குபயித்தியம்பிடித்திருந்தகாலத்தில் செய்யப்பட்டதென்கிறார்கள். அதில்முன்சொன்னதற்குப்பின்சொன்னது முரணாகவும் பொருள்தராமலும் பயித்தியக்காரன்பேசுவதுபோலச் சொல்லியிருந்தால்மாத்திரம் அப்படிச்சொல்லக்கூடுமேயல்லாமல், ஒழுங்குபெற்றிருப்பதை அப்படிச்சொல்வது தங்களுக்கு விரோதமானதாயிருப்பதுபற்றித்தானென்று எண்ணவேண்டியிருக்கிறதே. அந்த கிரந்தத்திலுள்ள சங்கதிகளை நமது பத்திரிகையில் பிரசுரஞ்செய்துவர உத்தேசித்திருக்கிறோம். தங்கள் மதத்திற்குவிரோதமாயிருப்பதுபற்றி ஓர் காரணங்கற்பித்து அதற்காகவே மாறுபாடாகச் செய்யப்பட்டதென்று சைவர்கள் கந்தபுராணத்திலே சூரனைக்கொன்றகதையின்பின்னால் இடம்பார்த்துச் சேர்த்து, அதையும், தங்கள்நிமித்தமாகவே உண்டாயிற்றென்று தங்களுதாக்கிக்கொண்டார்களேயல்லாமல், வைஷ்ணவர்கள் அப்படிச்சொல்லுவார்களா? கவுதமருடைய வம்சமாகிய சாக்கியருடைய புத்திரனானபுத்தன் தன்னுடைய இந்துமதசமயக்கோட்பாடுகளை ஆராய்ந்து, அவையெல்லாம் கற்பிதமெனவறிந்து பிரதேசங்களுக்குச்சென்று அவ்வவ்விடத்து மதாசாரங்களைப்பார்த்து வெறுத்து தனசொந்தமதமும் அப்போதிருந்த மற்றமதங்களும் அவலட்சணமாயிருக்கின்றனவென்று கண்டு, பௌத்தமதமெனஓர்மதம் ஏற்படுத்தினார். மற்றெல்லாமதங்களினும் அதுசிறப்புடையதாகக்கண்டு ஜனங்கள்அதை அனுஷ்டிக்க ஆரம்பிக்கவே, இந்து சமயாசாரிகள் தங்கள் மதங்களுக்குச்குறைவுநேரிடுகிறதையறிந்து, தங்கள்கடவுள்தலையில் தோஷமேறுவதையும்யோசியாமல், தங்கள் தேவர்கள் நிமித்தமாகவே விஷ்ணு பௌத்தாவதாரமெடுத்ததாக ஓர்கதை கற்பித்தார்கள். அதாவது—அசுரர்கள் நான்குவேதங்களுமோதி, யாகாதிகிருத்தியங்களைநிறைவேற்றித் தபசுகள்செய்வதில் நிபுணராயிருந்ததினால் சுரர்கள் தங்களுக்குத்துன்பநேரிடுமென்றறிந்துவிஷ்ணுவினிடத்தில் முறையிட்டுக்கொள்ள; அவர்பௌத்தாவதாரமெடுத்து, பௌத்தமதமென்பதைக் கற்பித்து, இந்துவேதாகமபுராணங்களயாவும்அபத்தம், இந்த நவீனமதகோட்பாடே எதார்த்தமென்று அசுரர்களுக்குத் துர்ப்போதனைசெய்து, அவர்களுடைய தபோபலங்களைவஞ்சித்துக்கெடுத்து, சுரர்களைச்சந்தோஷிப்பித்தாரென்பதே.—இந்தக்கதையை வாசிப்பவர்கள் நன்றுயோசிக்கவேண்டும். யாவரும் மதாசாரப்படிநடந்து தனதுதிருவடியைப்பற்றவேண்டுமென்கிற விருப்பமுடைய கிருபாசமுத்திரராகியகடவுள் அவ்வண்ணம் தனதுபக்தர்களையே வஞ்சித்தாரென்று அவர்பேரில் குற்றங்கூறுவது எவ்வளவுஅநீதம்! என்னவிபரீதம்!! இவர்களுடையகடவுள் அப்படிப்பட்டவஞ்சகரானால் இந்தக்கதைபோலவும், தாருகாவனத்துரிஷிகளும் பத்தினிகளும புண்ணியத்தைவளர்த்தபோது அவர்களைக்கடவுளர்கள்வந்துகெடுத்துப் பாபிகளாக்கின கதைபோலவும, புண்ணியவான்களாகிய ருக்மாங்கதராசனையும் அவனுடையதேசத்தாரையும் கெடுத்தகதைபோலவும், உலகத்தில்புண்ணியம் வளரும்போது அதையழித்துப்பாபத்தைவிர்த்திசெய்விப்பது கடவுளே; பாபிகள் அதிகரிக்கும்போது பூமிதேவிபாரத்தைத்தொலைக்கும்படி அவர்களைச்சங்கரிக்க அவதரிப்பதும் கடவுளேயாதலால், ஆத்திகருடைய பக்தியும் பழுக்கும்போது, அநேகர்மோட்ச

லோகத்தில் வந்து அடர்ந்துவிடுவார்களே யென்கிற பொரு
மையினுல் இவர்களையும் வஞ்சிக்கத்தானே போகிருர். இத
னுல்அவர் மோட்சவாயிலைச் சுத்தமாய்அடைத்துப்போட்டு, ந
ரசவாயிலைத்திறந்துவைத்தேயிருக்கிருரென்று நாம்நம்பவேண்
டும். இந்தவஞ்சனையான எண்ணத்தினுலேதான் இவர்களு
டையகடவுள் இக்காலத்தில் நாஸ்திகத்தை விர்திசெய்கிருரெ
ன்றுஞ்சொல்லலாமே. அப்படியாயின், இவர்களுடைய கடவு
ளினது எண்ணத்திற்குவிரோதமாய் இவர்கள் வீணுய்தலையு
டைத்துக்கொள்வது மவுடீகமாகுமே. இவ்வாறு இவர்கள்ச
தியேஅம்பலமாயிருக்க, நாஸ்திகர்களைமறுபடியிழுத்து அலைய
விடப்பார்க்கிருர்கள். ஆஸ்திகத்துக்குரிய வேதம் அதற்கெதி
ராகிய நாஸ்திகத்துக்கு உதவாததுபோல, சுரர்களுக்குரிய
வேதத்தையும் கடவுளையும் அவர்களுக்கெதிரிகளாகிய அசுரர்
கள் ஏற்றுகொண்டிருப்பார்களோ? சுரர்களென்பதும் அசு
ரர்களென்பதும் சுத்தஅபத்தம். தங்களபட்சத்தில் தங்களு
க்குப்பிரியமாயிருந்தவர்களை தேவர்களென்றும், தங்களைவருத்
தித் தங்களுக்கு விரோதிகளாயிருந்தவர்களைப் பத்துநூறுஆயி
ரம்தலைகளையுடைய ராட்சதர்களென்றுஞ் சொல்லியிருக்கிருர்
கள். எந்ததேசத்தாரும் தங்களைவருத்தும் எதிரிகளைக்கொ
டியதுஷ்டர்களெனச் சொல்வதுண்டு. எருமுட்டைப்பாளைய
மென்றுவழங்குகிற எருமைவெட்டிப்பாளையத்திலே சக்திதே
வதையால் மகிஷாசூரன்சங்கரிக்கப்பட்டனனும்; மறைந்தோ
டிவன்னிமரத்தில் ஒளித்துக்கொண்ட அந்தசூரனைப்பிளந்தவ
ன் சிவன்;இதுசென்றவிதியதசமியினன்று நடந்தஉற்சவம். இந்
தசங்காரமும் இதுபோன்றமற்றயுத்தங்களும் அசுரர்களுடை
யவாழ்க்கையும் இந்திரனுடையதபசும் இந்தமண்ணுலகத்தில்
நடந்தவையாயிருக்க, சுராகள்மாத்திரம் கற்பனுஉலகமாகிய
எந்தவிண்ணுலகத்தில் இருக்கிருர்கள்? பூர்வகாலத்தில் ரிஷிக
ளும் அசுரர்களும் விண்ணுலகத்திற்குச்சுலபமாய்ப்போக்குவர
வுசெய்யும்படி இவ்விரண்டு உலகத்திற்கும் ஏணிபோட்டிருந்த
தாக்கும்! ஐயோ, நமது தௌர்ப்பாக்கியம் இக்காலத்தில் அந்த
ஏணிஎடுத்துவிடப்பட்டதுபோலும். தேவர்களுக்குரிய வேதங்
களே அசுரர்களுக்கும் மனிதருக்கும் வேதங்கள்; தேவபாஷை
யேமனிதருடையபாஷை; ஆனுல் தேவர்களினும் மனிதருக்கு
ஒருசிறப்புண்டு; தேவர்களுக்கு ஒரேபாஷை,மனிதருக்கு அந்த
பாஷையுடனே பலபாஷைகள். இந்தச்சங்கதிகளையெல்லா
ம்யோசித்துப்பார்க்குமிடத்து, ஆதிகாலத்துச் சிறந்தமனிதர்க
ளைதேவர்களென்றும் துஷ்டர்களை ராட்சதர்களென்றும் ஆதி
பாஷையை தேவபாஷையென்றும் சொல்லியிருப்பதாக ஸ்ப
ஷ்டமாய் விளங்கவில்லையா? நன்ருய்க் கண்திறக்கும்படி
யாக சிலபுராணக்கதைகளிலுள்ள ஆபாசங்களை இனிவெளியி
ட்டுவருவோம்.

அழைக்காதஆவேசம்.

அதி பக்த்திமான்களாகிய ஆததிகசமாஜத்தார் ஏதாவதொ
ரு அற்பஅற்புதஞ்செய்து எங்களுக்கு நல்லவழிகாட்டவேண்
டுமென்று அக்டோபர் ௯வ பத்திரிகையில் கேட்டுக்கொண்டத
ற்கு, மதுராபுரிமுழுதும் சமணர்களாய்விட்டபோது, சமயா
சாரிகள் சிலஅற்புதங்கள்செய்துகாட்டி அவர்களைத்திருப்பினுர்
கள்; இப்போது நாஸ்திகர்கள் வெகுகொஞ்சமாயிருக்கிருர்க
ள், அதிகப்படுங்காலத்தில் யாராவது அப்படியே அற்புதஞ்
செய்வாரென்று சொன்னுர்களாம். இதுவும்நல்லசமாதான
மே! நாம்முன்னேகூறியிருக்கிறபடி பாபிகளைவிர்த்திசெய்து
பின்பு அவர்களைச்சங்கரிப்பது சமயக்கடவுளின் சித்தமென்ப
தை சமாஜததார் அறிந்திருப்பதால் அவர்களப்படிச்சொல்ல
வேண்டியது நியாயமே. ஒருபக்த்திமானுகிய பிரகலாதனு
டையபிரார்த்தனையினுல் ஒருஹிரணியனுக்காக வெளிவந்தக
டவுள் பலபக்திமான்களின் பிரார்த்தனையினுல் பலநாஸ்திகர்
களுக்காகவெளிவரமாட்டாரா? இவ்வளவு உபகாரஞ்செய்ய
லாகாதா?

இந்தவிஷயத்தோடு, பத்மாசூரனை ஆறுமுகக்கடவுள் சங்ச
ரித்து தேவேந்திரனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்வித்த பின்பு,
அவன்இந்திரபதவியை வெறுத்து சந்நியாசாசிரமத்தைப் பெ
றவிரும்பியபோது, அவனுக்கு நாஸ்திகமதத்தைப்போதிப்பித்த
அவனைநிலைநிறுத்திய பிரசங்கம் நடந்துகொண்டிருக்கையில்,
ஆறுமுகக்கடவுள் ஒருமுகமனிதனிடமாய் ஆவேசஞ்செய்தார்.
பிரசங்கியாரும் இது கடவுள் (சீக்கிரத்தில்) பிரத்தியட்சமாக
வருவாரென்பதற்கு அறிகுறியென்று கூறினராம். ஆவேசம்
எவர்பேரில் வரவேண்டியதோ அவர்அன்னபானுதிகளை நீக்கி
விரதமிருந்து ஸ்நானுனுஷ்டானங்களை முடித்துச் சுசியாயிருக்
கையில், பூசாரிகள் பண்டாரங்கள் வருந்திவர்ணித்து அழைத்
தும் ஆவேசம்வருவது அரிதாயிருக்க, திருப்தியாகப் புசித்து,
கையாண்டதலைப்பாகை வஸ்திரந்தரித்து, மற்றவர்களோடுஸ்ப
ரிசித்துக்கொண்டு திட்டுப்பட்டிருந்த ஒருவர்பேரில் ஆறுமுகக்
கடவுள் ஆவேசம்வந்தது சைவசமாஜத்தாருடைய பக்தியான
பிரசங்கத்தினுலே தானிருக்கவேண்டும்.

தெய்வம்சோங்கினுல் அல்லாப்பண்டிகையில் ஆவேசம்வந்
து பிடிபடாமல் உதறிக்கெண்டுகைகால்களை முறித்துக்கொண்
டு கூத்தாடினதுபோலப், பாகைபோனவழிதெரியாமல் கைகா
ல்களை உதறிக்கொண்டு கூத்தாடிவிழுவதுதான் எந்தமததேவ
தைக்கும் இயல்பாக்கும். கள்ளவேஷம்போடுகிறவர்கள்போ
க, சிலருக்கு உண்மையாய் ஆவேசம்வருவதுண்டு. ஆவேசமெ
ன்பதாகுப் பிரவேசமென்று பொருளாதலால், அதற்குஒருவி
த (Hipnotism) அவஸ்தைப்பிரவேசமென்று அர்த்தஞ்செய்
யவேண்டும். சிலர்இருந்தாற்போலிருந்து சிலதெய்வீகத்தோற்
றங்களைக் காணுவதாகச்சொல்லுகிருர்கள். அவர்கள்காணுவ
தாக எண்ணிக்கொள்வதுவாஸ்தவமே, ஆனுல் காணுகிறவஸ்து
க்கள்பாவனையே. ஒன்றையேகருதி மற்றவைகளையெல்லாம் க
வனியாமல் மெய்மறந்திருந்தால், மனதில்கருதியபடிதோற்றம்
உண்டாவதுசகஜம். ஒருவன் ஒன்றையே பார்த்துக்கொண்டு
அதில்கவனமெல்லாம்செலுத்துவானுகில், அவன் ஒருவிதபர
வசமடைகிருன். இவ்விதமாக மிருகப்பிராணிகளையும் செய்
யலாம். ஒருகோழியைக்கையால்தூக்கி அதினமூக்கை மேஜை
மேல்வைத்து அதற்குநேராக ஒருகோடுஇழுத்து, கோழியை
விட்டுவிட்டால், அதுசிலநிமிஷம்வரையில் அப்படியேயிருக்கு
ம், அதைத்துறத்தினுலும்போகாது; இதுகோடு இழுத்ததினுலல்
ல; கோடுஇழுத்த ஒருசெய்கையை அல்லது கோடாகிய ஒரு
வஸ்துவை ஒரேகவனத்தோடு பார்த்ததினுல்தான். இந்தவிஷ
யம் அநேகதேசத்தாருக்குத்தெரியும். (பாம்பைத்தடைகட்
டுகிறதென்பதும் இவ்விதஓர்உபாயமே.) இந்தியாவிலே தவசி
டனுக்கு உபதேசமாவது—ஞானமடையவேண்டில், நிர்மானு
ஷியமானஇடத்திற்குப்போய், உயரமாகவும் தாழ்வாகவும் உ
ட்காராமல் சரியானமட்டத்தல் உட்கார்ந்து தலைகைகால்களை
அசைக்காமல் மூக்கின்முனையையேபார்த்துக்கொண்டு, நிம்ம
தியாகவும், பயமில்லாமலுமிருந்து, கடவுளையேதியானம்பண்
ணிக்கொண்டிருக்கும்படி திட்டஞ்செய்வதுதான்.

இவ்விதமாய், Mount Athos என்னுமிடத்திலுள்ள மடாதி
பதிகள் தங்கள்கண்களைதொப்புளில் நிலைநாட்டி கவனத்தை
யெல்லாம் கடவுளினிடத்தில் செலுத்தி ஆனந்தபரவசமாகிருர்
கள். 'நீஉன்னுடைய அறைக்குகைக்குள் போய்க்கதவை மூடி
க்கொண்டு உட்கார்ந்து தொப்புளையேபார், சுவாசத்தை அ
டக்கிக்கொண்டிரு, நாசித்துவாரவழியாய்க்கூட மூச்சுவிடா
தே' என்று Simeon Abbot என்பவர்சொல்லுகிருர்.

அறிக்கை.

சைவசமாஜத்தார் தங்கள்சபை ஆரியமத வி
சாரணைச் சங்கமேயல்லாமல், ஆரியமத சித்தாந்தசபை
யல்ல வாதலால், விசாரணைசெய்கிறவர்களாகவே யிரு
க்கிருர்களென்றும், நாஸ்திகமதத்தை ஏதோ ஒருவா
றுகத் தழுவிப் பேசினுர்களென்றும் சொல்லக்கேட்ட
யாங்கள் சந்தோஷித்தோம்; எங்கள் சந்தோஷத்தை
வருகிற பத்திரிகையில் தீட்டுவாம்.

கடிதநேயருக்கு.

V. K. உண்மைவிளம்பி.—கேட்டையின்சேட்டை ஒழிந்து
போய் நெடுநாளாயினவே. நன்மைவிளம்பியென்பவர் ஜநாநு
கூலநிபத்திரிகையில் ஏளனமான தனது அபிப்பிராயத்தைவெ
ளியிட்டதற்கு, அவரைப்பற்றி எழுதியிருக்கிறபத்திகையிலே
தானே வெளியிட்டால் சரியான நியாயம்பெறலாமென்று அப்
பத்திராதிபரவர்கள் புத்திசொன்னதோடு நன்மைவிளம்பியா
ரும் மறைந்துபோயினரே. அவரை ஏன்வலிய இழுக்கவேண்
டும். 'மதிமயக்கம் மண்டைகொண்டிருப்பவருடன் வாதிப்ப
து குட்டிச்சுவரில் முட்டிக்கொள்வதையொக்கும், இனிஅத்த
கைநமபுடையவருடன் வாதிப்பதைவிட்டு விஷயவிசாரணை
சேய்வதேமேல்' என்றுநுமது கடிதத்தின்கடையில் எழுதியி
ருக்கிறபடிசெய்வதேநன்மை.

ம-ா-ா-ஸ்ரீ தி. பு. வையாபுரி பிள்ளை;—A. P.
M. வருகிறவாரம் பிரசுரமாகும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 44.] MADRAS:—SUNDAY OCTOBER, 31, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

அபிப்பிராயம்.

தேசநன்மைக்கு, ஏதோ தன்னாலியன்ற உதவியான காரியஞ்செய்துவருகிற ஒருவரோடு ஆஸ்திகரொருவர் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், மற்றவருடைய அபிப்பிராயம் நாஸ்திக்கொள்கையாயிருக்கக்கண்டு, கடவுள் நம்பிக்கையும் நரகபயமுமில்லாத உமக்கு நற்சிந்தையுண்டாயிருப்பது அதிசயந்தானென்று வியந்தார். இதனாலே மானுஷீகமின்னதென்று அறியாத்தன்மை அந்த ஆஸ்திகரிடத்தில் விளங்குவது நன்றாய்த்தெரியவருகிறதுமன்றி, நரகபயமுள்ளவனுக்கே நற்குணம் அமைவது கஷ்டமாயிருக்க, நரகபயமில்லாதவனுக்குச் சுத்தமாய் அமையாதென்கிற மூடநம்பிக்கையும் அவரிடத்திருப்பது வெளியாகிறது. பெல்லந்தின்பவனுக்குப் பெல்லந்தின்கிறபுத்தி, பவ்வீதின்பவனுக்குப் பவ்வீதின்கிறபுத்தி யென்பதுபோல; மூடன்தன்னுடைய புத்திக்குத்தக்கபடி எதிரியையும் நினைப்பான்.

விவிலியவற்புதங்கள்.

1. புலிபசித்தாலும் புல்லைத்தின்னாதென்னும் பழமொழிக்கு விரோதமாய்க் கடவுளானவர் ஜீவகோடிகளுக்குள் எல்லாவிலங்கினங்களுக்கும் எல்லாப்புள்ளினங்களுக்கும் எல்லா ஊர்வனஜாதிகளுக்கும் பசும்புல்லாதி தாவரவர்க்கங்களையே ஆகாரமாகவீந்துவந்ததாக ஆதியாகமம் I. 30வதில் கூறப்பட்டிருக்கின்றது. அவ்வாறாகவே தாவரவர்க்கங்களையே அவைகள் தின்று ஜீவித்துவந்தனவாம்.

2. ஆதியாகமம் I. 27வது வாக்கியத்தில் கடவுளானவர் தன்னுருவத்தைப்போல் ஸ்திரி புருஷாளிருவரையும் சிருஷ்டித்தாரெனவாசிக்குமிடத்து அவர் சிவனைப்போல் அர்த்தநாரீஸ்வரனாக விளங்குகிறார்.

3. ஆதியாகமம் II. 21, 23வதில் கடவுளானவர் புருஷன் அயர்ந்த நித்திரைபுரியும் அமையத்து அவனுடைய விலாவெலும்புகளில் ஒன்றை அறுத்தெடுத்து அதனை ஓர் ஸ்திரீயாகச்செய்து அவனுக்கே அவளை மனைவியாக்கினதாகவாசிக்குமிடத்து திருமயிலையின்கண் வெகுநாளைக்குமுன் இறந்துபோன ஓர் பெண்ணின்எலும்பைக்கொண்டு மரித்தவப்பெண்ணாக உயிர்த்தெழுப்பிய அற்புதபுராணக்கதையானது நமதுகியாபகத்தைத் தூண்டாதொழியாது.

4. ஆதியாகமம் III-1இல் ஓர்சர்ப்பமானது ஏவாளென்னும் ஆதித்தாயைக்கண்டு பற்பலவார்த்தையாடினதாக அறிகிறோம். இஃது ஆயிரம்சிரசுடைய ஆதிசேஷன்தானோ?

5. ஆதியாகமம் III. 3-5இல் ஆபேல் தந்த மாமிசபலியையும் காயேன்செய்த தானிய நைவேத்தியத்தையும் கடவுள்முறையே விருப்புற்றதையும் வெறுப்புற்றதையும் வாசிக்குமிடத்து முன்னர் புலிமுதலாகிய சகலமிருகங்களையும் புல்லாதிதாவரவர்க்கங்களையே தின்னும்படிச்செய்த இக்காருண்ணிய கர்த்தரானவர் மாமிசபலியை இஷ்டத்துடன் ஏற்றதும் தானியநைவேத்தியத்தைநிஷ்டூரமாய் விலக்கியதும் அற்புதமே. இதனால் கண்ணப்பனுடையஎச்சில் மாமிசத்தையுண்ட சிவனது ஞாபகம்வருகிறது.

6. ஆதியாகமம் XIX. 26 வது வாக்கியத்தை வாசிக்குமிடத்து லோத்துவின்பெண்சாதி லவணஸ்தம்பமாக மாறினதாகஅறிகிறோம். இஃது அகலிகையைக் கல்லாய்ச்சமைத்துவிட்ட அற்புதத்தைஒத்திருக்கின்றது.

7. யாத்திரையாகமம் I. 5-7, XII. 37, எண்ணாகமம் I. 45, 47, III. 40, 43, கலேத்தியர் நிருபம் III. 17 இவைகளைவாசிக்குமிடத்து இருநூற்றுப்பதினைந்து வருஷங்களுக்குள் எழுபதுபேர்வழிகள் மூன்றுகோடிஜெனங்களாகப் பரிணமித்துவிட்டார்கள். அதாவது இவ்வளவுவரையறுத்தகாலத்தில் ஒவ்வொருதாயும் அறுபத்தாறு பிள்ளைகளைப் பெற்றதாக விளங்குகிறது. இதுபெருத்த அற்புதமே. ரிஷிபிண்டம்ராத்தங்காது பிறந்ததுபோலப் பிறந்திருக்கவேண்டும்.

8. யாத்திரையாகமம் VII. 20-22 வாக்கியத்தை வாசிக்குமிடத்து மோசேயும் ஆரோனும் எகிப்துதேசத்து நதியின்ஜலமுழுவதையும் இரத்தமாகமாற்றிவிட்டதாகவும், அவ்விதமாகவேஎகிப்துதேசத்து மந்திரக்காரர்களும் அந்நதியின்ஜலத்தை இரத்தமாக மாற்றிவிட்டார்களென்றும் வாசிக்கும்பொழுது நதியின்ஜலமுழுவதும்இரத்தமானது அற்புதமாகவிருப்பினும் மீண்டும் மந்திரக்காரர்களுக்கு இரத்தமாக்க ஜலம் அந்நதியில் கிடைத்தமை அதியற்புதமே. வறண்டிருந்தநதியில் பாடலினாலே ஜலமும் பழமுதலையும் வந்து பிள்ளையைக்கக்கினகதை போலத்தான்.

9. யாத்திரையாகமம் VIII. 16-19, IX. 3-67 IX. 8-10 IX. 19-25, XIII. 15, XIV. 9-27-28, இவைகளை வாசிக்குமிடத்து குதிரைகள்பலமுறை இடையிடையேகொல்லப்பட்டதும் உயிர்த்தெழுந்ததுமாக தெரியவருகின்றது. இஃது கொல்லப்பட்டராட்சதர்கள் மறுபடி முளைத்தெழுந்ததையும், திருவர்ச்சம்பாடிய திருவாதவூரான் திருட்டுதனத்தால் நரியைப்பரியாக்கினதும் பரியைநரியாக்கினதுமான அற்புதத்தையும் ஒத்திருக்கின்றது.

10. யாத்திரையாகமம் XIV. 21–22 யாத்திரையாகமம் XV. 8 இவைகளைவாசிக்குமிடத்து யூதசயினியர்கள் கடலின்மத்தியில் ஊடுருவிச்செல்லும்பொருட்டு கடலானது இருபிளவாய்ப்பிளந்து வழிவிட்டொதுங்கி இருபாரிசத்திலும் மதில்போல நின்றதாக அறிகிறோம். இஃது ஆதியில் திருப்பாற்கடலைக்கடைந்த அற்புதத்தையும், வானரங்கள் பர்வதங்களைத்தத்தம் ரோமநுனிகளில் தாங்கிக்கொண்டுவந்து சேதுபந்தனம்செய்தஅற்புதத்தையும் பொய்யாக்கும் அதிசயத் தன்மையதாகின்றது.

D.

(இன்னும்வரும்.)

—o—

நமதெண்ணம் நிறைவேறுங்காலம்.

சைவசமாஜத்தார் தங்கள்சபை ஆரியமத விசாரணைசங்கமேயல்லாமல், ஆரியமதசித்தாந்த சபையல்லவாதலால்; விசாரணை செய்கிறவர்களாகவே யிருக்கிறோம். என்றுசொல்லக் கேள்வியுற்ற நாங்கள் அதிக சந்தோஷ மடைந்தோம். நாங்கள் கோரியதும் அதுதான். ஆஸ்திகர்கள் மூடநம்பிக்கையினாலே சமயச்சேற்றி லமுந்தி மாதாபிதாக்கள் நடந்தபடி நடக்கிறார்களேயன்றி விசாரணைசெய்யத்தொடங்கவில்லையே என்று துக்கித்துப் பலகால் குறைகூறிவந்ததற்குப்பயன் இப்போது வாய்த்தது. ஒவ்வொன்றாகச் சமயங்களையெல்லாம் விசாரணைசெய்து தெளிவடைதற்கு ஆயுளும் போதாது, நெடுநாளைய பழக்கத்தினாலும் அபிமானத்தினாலும் தங்கள் மதத்திலுள்ள ஆபாசங்கள் இன்னின்னவையென்று சுலபமாய்த் தோற்றவுந் தோற்று. ஆதலால் நாங்கள் இதுவரையிலே யெடுத்துக்காட்டிய நியாயப்பிரமாணங்களினால் கண்டித்திருக்கிற ஆபாசங்களையெல்லாம் கவனிப்பதினாலும், முக்கியமாய்ஆன்மாவின் தன்மையை அறிவதினாலும், அவர்களுடைய விசாரணை சீக்கிரத்தில் முடிவுபெறும். விசாரணைசெய்யப்புகுந்த நண்பர்களுக்குத் துணைபுரியவேண்டியது எங்கள்கடமையாதலால் மதக்கோட்பாடுகளிலுள்ள ஆபாசங்களை எங்களாற் கூடியமட்டில் எடுத்துககாட்டிவருவோம்.

இந்தியாவிலே சகல மதங்களையும் ஆராய்ச்சிசெய்து ஒழித்துவிட்டவர் ஒருவருமில்லையாதலால் நாஸ்திகரென அழைக்சப்படத்தக்கவர் ஒருவருமில்லையென்றும், ஆனால் சீமையில் சிலபேர்மாத்திரம் இருக்கிறார்களென்றும் பிரசங்கியார் சொன்னதில், இதுவரையில் நமக்கெதிரிகளாயிருந்த ஆஸ்திகர்களே சீமையில் சிலராவது சகல மதங்களையும் ஆராய்ச்சிசெய்து அவற்றை ஆபாசமானவைகளென நிராகரித்து நாஸ்திகராஞர்களென்று ஒப்புக்கொள்வதினால், அதை யாவரும் அங்கிகரிக்கவேண்டியதே. சிலரென்பது வேண்டுவதில்லை, புத்திமான்களாகிய ஆசான்கள் இரண்டொருவரிருந்தாலே போதும். ஒவ்வொரு மதத்திலும் சமயாசாரிகள் அநேகரல்லவே. கிருஸ்துமதத்திற்கு ஏசுகிருஸ்து ஒருவரோ; அந்த மதம் உலகத்தில் வெகுதூரம் பரவியிருக்கிறது. பௌத்தமதஸ்தாபகரான புத்தன் ஒருவரோ; அந்தமதம் இந்தியாவினும் பெரிதாகிய சீனராச்சிய முழுவதிலும் மற்றப் பிரதேசங்களிலும் வியாபித்திருக்கிறது. ஆதியிலே எந்தமதமும் கொஞ்சமாகத்தானிருந்து வரவர விர்த்தியாயிற்றென்பது யாவருக்கும் தெரிந்தேயிருக்கிறது. இந்தியாவிலே பெரும்பாலார் தங்கள் செய்கையிலும் எண்ணத்திலும் நாஸ்திகர்களாகவே யிருக்கிறார்கள், ஆனால் பல நிர்ப்பந்தங்களினலே அப்படி தாராளமாய்ச்சொல்லிக்கொள்ளத் தடையுண்டாயிருக்கிறது. இப்போது விசாரணை செய்கிறோமென்கிற சங்கத்தார் முடிவில் தங்கள் மதத்தை அருவருப்பார்களாகில் எப்படிப்பட்டவர்களாவார்கள்! நாஸ்திகருள் தாமறிந்தமட்டில் சிலர் நல்லொழுக்கமுடையவர்களாகவே யிருக்கிறார்களென்றும், நாஸ்திகம் வாழவேண்டுமென்கிற நல்லெண்ணத்தோடு அதை ஆதிவாரந்தோறும் விசாரணை முடிந்தவுடனே ஒவ்வொரு வெண்பா பாவால் வாழ்த்துவோமென்றும் ஒரு பிரசங்கியார் கூறியுள்ளார். இதில், இப்போது நடந்துவருகிற நாஸ்திகம் நாசமாய்ப்போகாதிருந்தால், பிந்தித்தாங்கள் ஒருவேளை நாஸ்திகராகுங்கால், நூதனமா யேற்படுத்தவேண்டிய பிரயாசை யில்லாமல் சுலபமாய்ச் சேர்ந்துவிடலாமென்கிற ஸ்வப்பிரயோசனத்தைக் கருதியிருந்தபோதிலும், நாமதைப் பாராட்டாமல், நமது க்ஷேமத்தைக் கோருவதற்காக அதிக சந்தோஷத்துடனே மனப்பூர்வமாய் அவர்களுக்கு வந்தனம்செய்யவேண்டும்.

A. M.

———o———

விபூதிதாரணம்.

——o——

(168-வது பக்கத்தொடர்ச்சி.)

இவற்றுள் கருநிறவிபூதி வியாதியையுண்டாக்கும், புகைநிறவிபூதி ஆயுவைக்கெடுக்கும், பொன்னிறவிபூதி சம்பத்தை நாசமாக்கும், வெண்ணிறவிபூதி நாநாவிதமானபுண்ணியங்களையுந் தரும்; ஆதலினலிதனையெடுத்துப் பரிசுத்தமாக்கிப் புதுவஸ்திரத்தினலேவடித்து புதுபாத்திரத்திலேவைத்து மல்லிகை முல்லைமுதலிய சுகந்தபுஷ்பங்களை அதனுளிட்டு புதுவஸ்திரத்தினலே அதன்வாயைக்கட்டிவைத்து இதுவேநம்முடைய திரவியமென்றுநினைத்து பட்டுப்பையிலேனும் சம்புடத்திலேனும் வில்வக்குடுக்கையிலேனும் சுரக்குடுக்கையிலேனும் எடுத்துவைத்துக்கொண்டு தரித்தல்வேண்டுமென்றும் குடுக்கைகளின்றிப் பிறவற்றிலுள்ள விபூதியைக்கவிழ்த்தாற்பாபமென்றும் விபூதியைச்சிந்தலாகாது சிந்திஞலதனைக் கையினலெடுத்து அத்தலத்தைச்சுத்தி செய்கவென்றும், விபூதிதாரணமென்பது உத்தூளனம் திரிபுண்டரம்என்றும் அவற்றுள் உத்தூளனமாவது சிரசுமுதல்அங்கத்திற் பொருந்தத்தரிப்பது. திரிபுண்டரமாவது சிரசுமுதலியவுறுப்புகளில் விபூதியை உத்தூளஞ்செய்து எஞ்சியவிபூதியைமுறைப்படி வலக்கைப்பெருவிரல் நடுவிரல் அணிவிரல்களாலெடுத்து இடக்கையில் வைத்துக்கொண்டு அஸ்திராயபடுஎன்று விபூதியிலேசலத்தைத் தெளித்து அவ்விபூதியில் சிறுபங்கைப்பெருவிரல் அணிவிரல்களினலேதொட்டு அஸ்திராயபடு என்று இராட்சதர்பொருட்டு நிருதிமூலையிலேதெறித்துவிபூதியைச்சிவமூலமந்திரத்தால்நிரீக்ஷணமும் அஸ்திராயபடுஎன்றுதிக்குபந்தனமும் கவசாயவௌஷடுஎன்று அவகுண்டனமுஞ்செய்து வலக்கையால்மூடிக்கொண்டு ஈசான்யாயநமஎன்பதுமுதலிய பதிஞெருமந்திரங்களினல்அபிமந்திரித்து இடக்கையிலுள்ளவிபூதியை பெருவிரலோடுகூடியநடுவிரலினலே இருதயாயநமவென்று சலம்விட்டு கவசாயவௌஷடுஎன்றுகுழைத்து நடுவிரன்மூன்றினலும் ஈசானயநமஎன்று சிரசிலும் தற்புருஷாயநமஎன்று நெற்றியிலும்அகோராயநமஎன்று மார்பிலும் வாமதேவாயநமஎன்று கொப்பூழிலும் சத்தியோசாதாயநமவென்று வலமுழந்தாள் இடமுழந்தாள் வலப்புயம் இடப்புயம் வலமுழங்கை இடமுழங்கை வலமணிக்கட்டு இடமணிக்கட்டு வலவிலா இடவிலா முதுகு கழுத்தென்னும் மற்றையிடங்களிலும் முக்குறிபொருந்தச் சமந்திரமாகத்தரிப்பது திரிபுரண்டரமென்றும், முழந்தாள் தோண்முதலியவைகளின் முன்னர் வலப்புறம் பின்னரிடப்புறமாகத்தரிப்பது விதியென்றும், மூன்றுகுறிகளின்இடைவெளி ஒவ்வோரங்குலவளவாயிருக்கவேண்டும் அவை ஒன்றையொன்றுதீண்டினும் ஓரங்குலத்தின்மிக் அகலினும் இடையறினும் குற்றமென்றும் நெற்றியினும் மார்பினும் புயங்களினும் அவ்வாறங்குலநீளம் பொருந்தவும் மற்றையுறுப்புகளில் ஒவ்வோரங்குலநீளம் பொருந்தவும் தரித்தல்வேண்டும்என்றும் இவைஇந்த அங்குலத்தினெல்லையிற் குறையின்ஆயுள்குன்றும், மிகிற்றவங்கெடும்என்றும் சந்தியாகாலமூன்றிலும் சூரியவுதையஅத்தமானகாலங்களிலும் ஸ்நாநஞ்செய்தவுடனும் பூசைக்கு முன்னும்பின்னும் மலசலமோசனம்பண்ணி ஆசமனஞ்செய்தவுடனும் தீக்ஷையில்லார்களைப் பரிசித்தபோதும் பூனை கொக்கு எலிமுதலியன தீண்டியபோதும் ஆவசியகம் விபூதிதரித்தல்வேண்டுமென்றும் சிரசுமுதலிய பதினறிடங்களிலும் விபூதியைத்திரிபுண்டரமாகத்தரித்தால் சதாசிவமூர்த்திமுதலிய கர்த்தாக்களைவரும் வாமைமுதலிய சத்திகளொன்பதின்மரும் அச்சுவினிதேவரிருவரும் பிரீதியுறுவர்களென்றும், மூன்றுகீறுகளும் மூன்றுகர்த்தாக்களும் அதிதேவதைகளுமென்றும், இவ்விபூதிதாரணம் ஞானக்கினியினற் றகிக்கப்பட்ட பசுமலநீக்கத்தில் விளங்குஞ்சிவத்துவப்பேற்றிற் கறிகுறியாமென்றும் இதில்மந்திரத்தோடமைந்த கிரியைகளை ஆசிரியரிடத்தே உபதேசமுறையாலறியவேண்டுமென்றும் அருளிச்செய்தாரென்று சைவசமயத்தவர்கள் மிக்கபுத்திபத்தி வினையத்தோ டாச்சிரயிக்கின்றார்கள். சைவசமய சாத்திரப்படி ஐயறிவுயிர்களாகிய பசுக்களின் மலத்திற்கிவ்விதமகத்துவங்கற்பித்த சிவன் அறிவிற்சிறந்த ஆறறிவுயிர்களாகிய மானிடர்களின் மலத்திற்கிவ்விதமகத்துவங்கற்பியாதுவிட்டதென்னை? மாடுகளின்அறிவிற்கு மானிடர்களி னறிவுகுறைந்ததென்றெண்ணிப்போலும். ஆ! ஆ! ஆச்சரியம் ஆச்சரியம். அங்ஙனஞ் சிவனொருவரிருந்து விதித்தது பித்தர்கூத்தாதலினல் சைவாகமசாத்திரப்படி பிருதுவி அப்பு தேயு வாயு ஆகாசமென்னும் பஞ்சபூதங்களின் கூட்டத்தையுடையவர்களும் சுரோத்திரம் துவக்கு சட்சு சிக்குவை ஆக்கிராணமென்னும் ஞானேந்திரியங்களையுடையவர்களும் சப்தம் பரிசம் ரூபம் ரசம் கந்தம் என்னுந் தன்மாத்திரிகளையுடையவர்களும் வாக்கு பாதம் பாணி பாயு உபஸ்தமென்னும் கருமேந்திரியங்களையுடையவர்களும் மனம் புத்தி அகங்காரம் சித்தமென்னும் அந்தக்கரணங்களையுடையவர்களும் மூலாதாரம் சுவாதிஷ்டானம் மணிபூரகம் அனுகதம் விசுத்தி ஆஞ்ஞாஎன்னுந் தானங்களையுடையவர்களும் கொல்லாமை கள்ளாமை மெய்கூறல் இந்திரியமடக்கல் பிறர்பொருளிச்சியாமை தூய்மை தபசு மனமுவந்திருத்தல் தத்துவநூலோதல் தெய்வம்வழிபடல் என்பவைகளையுடையவர்களும் அணிமா மகிமா லகிமா கிரிமா பிராப்தி பிராகாமியம் ஈசத்துவம் வசித்துவம் என்னுங்கிரியைகளையுடையவர்களும் ஒவ்வோர்காலங்களில் சைவசமயக் கடவுளென்னுஞ் சிவன் பிராமண சத்திரிய வைசிய சூத்திரரென்னும் நான்குவருணத்தவராகி யநேக திருவிளையாடல்களைச்செய்யப்பெற்ற மேன்மையுடையவர்களும் ஆறறிவுயிர்களையுடையவர்களுமாகிய மனிதர்களின் மலம் சைவாகமிகளாகிய தாங்கள் வழிபடும்கடவுளுடைய மலமென்பதையறிந்திருந்தும் அதற்குவிசேடங்கற்பியாது அறிவிற்குறைந்ததென்னும் விதியையுடைய பசுவின்மலத்திற்கு விசேடங்கற்பித்ததென்னவறியாமை, அறியாமை! சிவனென்னுங் கடவுளின் கால்களைக்காண பன்றியுருவெடுத்து விஷ்ணுவென்னுந்தேவன் மனிதர்களின்மலததைப் புசித்தலினல் அதன் மலம் விசேடமுடையதென்பதைச்சொல்லவும் வேண்டுமா, எழுதவுங்கூடுமா! அங்ஙனம்பசுவின்மலத்திற்குரைத்தவிதியை பன்றியின்மலத்திற்குஉரைத்து அறிவிலார்க்குப் போதித்தால் அவ்விதியை ஆச்சிரயிக்கார்களா? ஆச்சிரயித்தால் முத்தியடையார்களா? அறிவிற்சிறந்தவர்களே சிந்தியுங்கள், சிந்தியுங்கள். ஒவ்வோரிடங்களில் சமயப்பித்துப்பிடித்த மூடபண்டிதர்களுண்டாகி பேதைச்சனங்களுக்கின்னோரன்ன ஆபாசங்களைப் போதித்து அறிவைக்கெடுத்துவிடுகின்றார்களே, கொடுமை, கொடுமை. ஆபாசங்களைப்போதித்தவர்க்கும் போதிப்பவர்க்கும் தத்துவவிவேசினியென்னும் இப்பத்திரிகாஸ்திரத்தைப் பிரயோகித்து சுவஞானமென்னும் அக்கினியை மூளையிலேகொளுத்தினலன்றி சமயப்பித்து தீராது, தீராது. ஓசுவஞான நண்பர்களே மூடஞானமூடபக்தி மூடசெய்கைகளைக் கைக்கொண்டிருக்கு மிராக்கதர்பேரிற் இப்பத்திரிகாஸ்திரத்தைப் பிரயோகஞ்செய்யுங்கள் பிரயோகஞ்செய்யுங்கள்.

இங்ஙனம்
சுவஞானகுரு
பரித்தித்துறை
யாழ்ப்பாணம்.

சமயசம்வாதம். | புசி

(164 - வது பக்கத்தொடர்ச்சி.)

ஏமா—ரா—நாமதேயம் வெகு நேர்த்தியாக விருக்கின்றது. நாம் ஆரம்பத்தில் விநாயகர்வணக்கம்செய்யவேண்டும், ஒருவெண்பா புகலும்.

சீடப்பிள்ளைகள்-பேழைவயிறும் பெருச்சாளி வாகனமும், வேழமுகமொண்டிப் பாதமுடன்-நாழிதனில், எம்முன்வந்து காத் தெம்மையுமாட்கொண்டருளி-தம்முன்கொள்வார் வந்து.

ஏமா-ரா- பேழைவயிற்றேனைப்பணிந்தால் பெரியவயிறு அல்லது மகோதரமுண்டாகும், இதுதெரியாதா, தடிராமா சாப்பாட்டுராமா. அதிருக்கட்டும், ஈஸ்வரர்களெத்தனை ?

சீடப்பிள்- கோடீஸ்வரன், ராஜேஸ்வரன், கவீஸ்வரன், ஜெகதீஸ்வரன், ஆ-ச.

சுந்தர-நிரீஸ்வரன் ஒருவனிருக்கின்றான் ஆ ஈஸ்வரர்-ரு.

ஏமா-ரா-அவனார், புதிதாயிருக்கின்றான், யானறிந்திலன், அவன்சொல்லுவதென்னை ?

சுந்திர-கடவுள்என்னும் ஓர்சத்துதிரிகாலத்திலுமில்லை, காணப்படும் உலகம் பூதகாரியம், தானேதோன்றி நின்றுமாறும், கர்த்தாவுண்டேல் கண்ணுக்குப்புலப்படாதா என்கிறான், அவனுக்குக் கடவுளையும், ஆன்மாவையும், எதிரில்கூட்டிவந்து காட்ட வேண்டுமாம், பிரம்மக்கியான மில்லாதமனிதன் கடையரிலும் கடையன் அவனை மனுஷமிருகம் எனலொக்கும்.

தகப்ப-அறிவுநித்தியப்பொருள், தேகத்திற்கும் அறிவுக்கும் சம்பந்தமில்லை, தேகம்தோன்றி நின்றழிவது. தானெதையபிமானிக்கின்றானோ அதுவாகப்பாவித்து நடிக்கின்றான், யோசனையில்லாத சிலர் அறிவுதனிப்பொருளல்ல, தேகத்தோடு உற்பவித்து அதோடுமடிகின்றது என்கிறார்கள், இக்குறை சிந்திக்காக்குறை, விசாரித்துத்தெளியவேண்டும்.

சநதேகி—"அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" என்ற அவ்வையார் வாக்கின்படி நாம் தாய்தந்தையரின் கூட்டுறவால் தந்தையின் சுக்கிலம் தாயின்புந்தியில்தங்கி தந்தையின் உருவம்போலபிரதிபலித்து வெளிவருவது பிரத்தியட்சம். அறிவு நித்தியப்பொருளாயின், இவ்வநித்தியதேகத்தில் எப்போதுஎப்படி நுழைகின்றது? நித்தியப்பொருள் அநித்தியதேகம்பெறுவானேன் ? படாதபாடுபடுவானேன் ? கருவிலும் பிறந்தவுடனேயும், பத்துநாள், ஓர்மதி ஓர்ஆண்டு, இளமை, எவ்வனம், மூப்பு, முதலிய எப்போதோ இறப்பானேன்! சில்பிணி, தீராப்பிணி, வறுமை, சம்பத்து, முதலியபேதம் பெறுவானேன்? நிம்மதியாயிராது சஞ்சலப்படுவானேன். குழவி, இளமை, எவ்வனம், மூப்பு, பசி, பிணி தேகமெலிவு முதலியபருவபேதத்திற்குத்தகுந்தாப்போல், அறிவு மந்தம், தெளிவு, நுட்பமாகத்தெரிதல் முதலிய பேதம்பெற்று இருக்கவேண்டியதென்ன ? இவைகட்குத் தெள்ளத்தெளிய விளங்க வுரைக்கவேண்டும்.

சுவக்கியானி—"அன்புசிவ மிரண்டென்ப ரறிவிலார், அன்பே சிவமாவதியாருமறிந்திலர், அன்பே சிவமாவதியாரு மறிந்தபின், அன்பே சிவமா யமர்ந்திருப்பாரே." என்ற திருமூலர் திருமந்திரத்தின்படி மனிதனுடைய அன்பே சிவமெனவாகின்றது; அன்பு தேகத்தையன்றியில்லை, தேகமநித்தியம், சிவமென்னவாகும், "மெய்யைப் பொய்யென்றான் வெளியை நல்லவீடென்றான், சைவத்துறைகாழிச்சம்பந்தன்-ஐயமற, நின்போதம் போமிட்டதே நீயேசிவமென்று, னென்போதத்துள்ளே யிருந்து." என்று சிவஞானவள்ளலார் திருவாய்மலர்ந்திருக்கின்றார், மெய் பொய்யாகும்போது ஒன்றுமற்றவெளியில் வீடெங்கே! என்போதம் அநித்தியமாய் தேகம் பூதத்தோடுகலந்தபோது உள்ளதெது? எல்லாருஞானத் தெளிஞ்ஞரே, கல்லெல்லாமாணிக்கக் கல்லாமோ, ஆராய்மின்! சிந்திமின் !! தேறுமின் !!!

A. P. M.

அக்கினிவணக்கம்.

அக்கினியைத்தொழுகிற ஒருதேசத்திலேஒருகட்டடத்திற்குள்பெருந்திவளர்த்தி, அதைச்சுற்றிலும் நாற்பதுபேர் உட்கார்ந்து பூசைசெய்கிறதுண்டென்றும், இவர்களிலொருவன் அவ்விடத்திலே அந்நியதேசத்தா னெவனையாவது ஒண்டிசண்டியாகக்கண்டால், தான்மகாபக்திமானைப்போலவும் தாடிமுதலியவேஷத்தினுல் பெரியமனிதனைப்போலவும் நடித்து அவனிடத்தில் அன்புகாட்டிப் பிரிய வசனங்கள்சொல்லி உபகார சிந்தையுடையவனாய் தன்னோடுகூடப்புசிப்பெடுத்துக்கொண்டு போகும்படிவருந்தியழைத்து அக்கட்டடத்திற்குள் கொண்டு போனபின்புஅவனைப்போஷித்துப்பத்திரஞ்செய்து வைத்திருந்துஓர்விசேஷதினத்தில் அக்கினிக்கு ஆகுதி கொடுத்துவந்தார்களென்றும் ஓர்கதையில் சொல்லியிருக்கிறது! அதுஇத்தேசமாகவுமிருந்திருக்கலாம், ஏனெனில், இவ்விடத்திலே தற்காலத்திலும் அக்கினிதேவதையே சிரேஷ்டம். யாகாதி கிருத்தியங்கள்நடப்பது அக்கினியின் முன்னிலையில்தான். சுபாசுபங்களிலும் ஹோமநதான்சிரேஷ்டம். இக்காலத்திலும் அக்கினிக்கு நெய் பொரி பால்முதலிய ஆகுதிகொடுத்துவருகிறார்கள். முற்காலத்தில் நரமேதயாகம், அஸ்வமேதயாகம், கோமேதயாகம், மேஷயாகம் முதலியயாகங்கள் நடந்தன. தேவாலயங்களிலேயாகசாலையில் முந்தி அக்கினிபூசை நடநதேறிவருகிறது. உற்சவத்தில விக்கிரகக்கடவுள் போய் யாகசாலை அக்கினியைத்தரிசிக்கவேண்டும். பிராமணர் வலதுகையில்எப்போதும்அக்கினியிருக்கிறதென்பதும் ஓர்பிரமாணம். சரியை, கிரியை, யோகம், ஞானம், என்னும்நான்குபாதங்களில்ஞானமேசிறப்புடையது. அந்தஞானவான்கள்நிட்டையில்தரிசிப்பதும்சோதியே, அவர்கள் மரித்தபின்பு கலந்துபோவதும் சோதியே; ஆதலால்பிரம்மமும்சோதியே. அதிக பணச்செலவுடையனவாதலால், மேஷயாகமுதலிய சிலயாகங்கள் காலாகாலத்து இங்குநடந்துவருகின்றன. பிரமச்சாரி மொட்டைச்சி இருவருடைய சையோகசம்பந்தமான பௌண்டரீகமென்னும் ஒருவிந்தையானயாகம் சிலவருஷங்களுக்குமுன்னே வண்ணாரப்பேட்டையில் நடந்தது. அதுமதசம்பந்தமானகிருத்தியமென்று ஒருதோட்டத்திற்குள் நடத்தவொட்டப்பட்டதேயல்லாமல், அந்தக்கிருத்தியங்களின் விவரத்தை யாராகிலும் பேசுவாராகில காமாதுர சம்பந்தமான சட்டத்தின்படி அவர்களுக்கு சிட்சைகிடைக்கவேகிடைக்கும். எவ்வளவு அவலட்சணம்! -

A. M.

கடிதங்கள். 158

மதப்புரட்டும் ஆள்மாறட்டமும் சுத்த அபத்தமும் வெளிப்படல்.

சென்ற-உருவ ஸ்ரீசுதேசாபிமானி பத்திரிகையில், C. இராசரத்தினமுதலியார், P. இரத்தினமுதலியார், எனக்கையொப்பமிட்டகடிதம் பிரசுரஞ்செய்யப்பட்டது. அதில் ஆரியமதவிசாரணசங்கத்தில் "நாஸ்திகர்களை நன்றாய்ப்பேசிப்புகழ்ந்து வாழ்த்தியும், அவர்களுடையகோட்பாடுகள் அபாயகரமானதென்பதைவிளக்கியும் தூஷணையைமுற்றுமேஒழித்துப் புலவர்கள்பிரசங்கிப்பதை நாஸ்திகக்கோட்பாட்டை யவலம்பித்திருக்கும் யாங்களும் புகழவிருக்கிறதே" என்று கண்டிருக்கிறது. அப்படியிருக்கக்கூடாதென்றுகோருபவன் ஒருவனுமிரான். பிரசங்கத்தைக்கேட்ட மதியிலார்சொன்ன சொற்களை நம்பி தூஷித்ததாக A. M. என்பவர்பேரில் கூற்றங்கூறியிருக்கிறதேயல்லாமல், பிரசங்கியார்கள் சொல்லாதசொற்கள் இன்னவையென்று எடுத்துக்கூறினாரில்லை. கேள்விப்பட்டதாக எழுதியிருப்பது உண்மையே; மேற்படிகடிதநேசர்கள் ஆரம்பமுதல் பிரசங்கத்துக்குச் செல்லுகிறதாகச் சொல்லுகிறார்கள; பிரசங்கத்தில்சொன்னதாகத் தத்துவவிவேசினியில் கண்டிருக்கிற எந்தவசனங்களை இவர்கள்இல்லையென்று மறுக்கிறார்கள்? நாஸ்திகர்கள் தாய்தாரமென பேதம்பாராட்டமாட்டார்களென்றும், 'தத்துவவிவேசினி' என்னும் எழுத்துகள் குஷ்டரோகம்பிடித்தவையென்றும் தூஷித்ததில்லையென்பார்களா? சொன்னது இல்லாமற்போனாலும்போகும்என்று முன்னமே தானே சொல்லியிருக்கிறது; இந்தவாக்கியம் உண்மையென இனி ருஜுவாகும்போலும். இதைப்பற்றியே எதையும் எழுத்துமூலமாய்ப்பேசுவது நன்மையென்றுசொல்லியிருந்தது.

நாஸ்திகக்கோட்பாட்டை யவலம்பித்திருப்பதாகச் சொல்லிக்கொள்ளுகிற மேற்படி கடிதநேயர்கள் 'மெய்யறிவு' என்னும்சுவடியில் அடங்கியவிஷயங்கள் அற்பமானவையாதலால் லட்சியஞ்செய்யாமல் மன்னித்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள். அப்படிக்கன்றி; இங்கிலீஷிலும் கியானமுடையவராகவும் அஷ்டாவதானியென்னும் சிறப்புப்பெயருடைய தமிழாசிரியராகவும்விளங்கிய ஆசானிடத்திலே அவருடைய சீடர்களிற்சிலர்-ஆத்துமாவைப்பற்றித் பேசியிருக்கிறமெய்யறிவு-உ-ம்பாகத்தைக்கொண்டுபோய் வாசித்துக்காட்டி அவருடைய அபிப்பிராயத்தைக்கேட்டபோது, அப்புத்திமான்-அதிலடங்கியசங்கதிகள் என்புத்திக்குச்சரியாகத்தானிருக்கின்றன. அவற்றிற்கெதிராக நீங்கள்ஏதாவது சொல்லவல்லீர்களானாற் சொல்லுங்கள் பார்ப்போமென்று புத்திசொல்லி யனுப்பிவிட்டதினாலே சும்மாஇருந்துவிட்டதாக எண்ணக்கூடாதா ? M. A. B. A. பட்டங்கள்பெற்றவர்களெனச் சிறப்பித்துச்சொல்வதினால், அப்பட்டம்பெறுதமது முன்னோர்யாவரும் மூடர்களெனறேஅர்த்தமா ? அந்தமெய்யறிவுமுதல்பாகச் சுவடியை M. A. பட்டம்பெற்ற ஒருகனவான்பார்த்தபோது, அதில் "பூதக்கண்ணாடியினால்தண்ணீரை நாம்பார்ப்போமானால் அதில் தேள்சிலந்திமுதலியது இருப்பதைக்காண்போம்" என்றுபொருள்படுகிற ஓர் அயுக்தவாக்கியத்தைக்கண்ணுற்று, அப்படிப்பட்ட சுத்தஅபத்தமென்று திரஸ்கரித்துவிட்டதாகக் கண்டிருக்கிறது. அப்படி அவர்செய்ததுஉண்மையாகவேயிருக்கட்டும். அந்தச்சிறுசு,

வடியிலே " ஜலத்தில் கண்ணுக்குப்புலப்படாத (தேள்-சிலந்
திமுதலிய ரூபமுள்ள) அற்பஜந்துக்க ளிருப்பதை கண்ணுடிக்
கருவிசகாயத்தினல் பார்த்தவர்களும் கேட்டறிந்தவர்களும்
அநேகருண்டு" என்றிருக்கிறது. நகவளவுக்குள் கண்டிருப்
பவை முக்கியமானவையல்ல; அவற்றைத்தள்ளிவாசிப்பதற்
கே இந்தவளவுபோட்டிருக்கிறது; அந்த அற்பகிருமிகள் அப்ப
டிப்பட்டவையாகத் தோன்றுகினறன வென்பதைத் தெரிவிக்கு
ம். இது அந்தகனவானுக்குத்தெரியாததல்ல. ஆயினும் அவ
ர் தண்ணீரிலகண்ணுடிக்கருவியினல் காணத்தக்ககிருமிகள் இ
ல்லையென்று சொல்லுவரா? உண்டென்பரேல், அவற்றின்ரு
பமெனனே?

பொற்ருமரைப்பொய்கையும் சங்கப்பலகையுந்தான் குறை
வு. மதுராபுரிச்சங்கத்துக்குப் பிரதியான சங்கப்புலவர்களைப்
பிறர்புகழாதபோது, சிறப்புற்ற சில ஐரோப்பாசாஸ்திரிகளி
ன் அற்புதபுஸ்தகங்களிலே ஒவ்வொரு அம்சத்திலுமுள்ள
வழுக்களை எடுத்துக் காட்டுவதாகத் தாங்கள் புகழ்ந்துகொள்
ளாவிட்டாலும், தங்களைச் சேர்ந்தவர்களாலே புகழ்வித்துக்
கொள்ளாவிட்டாலும் வேறேகெதியென்ன! கழித நேசர்க
ளாகிய அவ்விரண்டு நாஸ்திகர்களும் சங்கத்தாருடைய பிரச
ங்கத்தை மகாமகா புத்திமான்களும் ஒப்புக்கொண்டுமெச்சுகி
ருர்களென்றுசொல்லும்போது, தாங்களேன் இன்னும்நாஸ்தி
கர்களாயிருக்கிருர்கள்! சங்கத்தாரை எதிரிகளேபுகழ்ந்துபே
சுகிருர்களென்று எண்பிப்பதற்கு இன்னுஞ்சிலகாலம் நாஸ்திக
ரென்றே சொல்லிக்கொள்வார்களபோலும். "காடுவாவா, வீடு
போபோஎன்னும், நிலைமைக்குவந்தகிழங்கள்" என்று தூஷித்தி
ருக்கிறது; அவர்களைப்பார்த்தால், திரிகாலக் கியானிகளாகிய
இவர்களை முந்தியனுப்பிவிட்டுப் பிந்திநின்றுவிம்வார்கள்போல
த்தோன்றுகிறது. வயதுபிள்ளைகள்பேசுவது பில்லசேஷ்டை
யாயிருக்கிறதென்று புத்திமான்கள் பலர் சொல்லுகிருர்கள்.
குழறியிருக்கிறது, உளறியிருக்கிறது, பிதற்றியிருக்கிறது என்
றுவெறுஞ்சொற்களை எப்படிப்பட்டமூடனும் சொல்லமாட்டு
வான், இதுதான்பேடித்தனம்; இன்னின்னது இன்னின்னகார
ணத்தினல் அப்படிப்பட்டதாயிருக்கிறதென்று எடுத்துக்காட்டு
வதுதான் புருஷத்தனம். முந்திக்குத்திரங்கள்பேசியதால் யா
மும் வதிலுக்குப்பேசவேண்டி நேரிட்டது. இவற்ருலாயபய
னென்னை?

கையோப்பக்காரன்.

நாஸ்திகத்தை சீர்தூக்கிப்பேசுவதாகச் சங்கத்தாரே
கூறியிருப்பதாலும் இரண்டுபேர் நாஸ்திகர்களே சாட்
சிபகர்கின்றமையாலும், ஒருமாதத்திற்குள் வெளிப்பட
ப்போகிறதென்கிற 'ஆரியமதவிசாரிணி' பத்திரிகை
யால் யாவும்தெரிந்துகொள்ளக்கூடுமாதலால், அதுவ
ரையில்பொறுத்திருப்போம். ஆனல் நமதுநியாயம் நம
க்குச்சரியாகத்தோன்றுவதுபோல, அவர்களுக்கும் அ
ப்படியேதோன்றும்; 'மூர்க்கனும் முதலையும்கொண்
டதுவிடா' என்கிறபடி நாம் அவர்களைப்பிடிவாதமாய்
ப்பேசுகிருர்களென்போம்; அவர்களும் நம்மைஅப்ப
டியேசொல்லுவார்கள். துரபிமானம் யாரிடத்திலிருக்
கிறதோ அவர்கள் பிடிவாதமாய்ப்பெசுவார்களென்று
வாசிப்பவர்கள் தெரிந்துகொள்ளுவார்கள்.

A. M

மந்திரவாதிகளுக்கோர் தந்திரக்கேள்வி.

ஸ்ரீமான் முனுசுவாமிநாயகரொனும் பத்திராதிபரே,

நமதுதேயத்தின்கண் சில மந்திரவாதிகள் தங்களுக்குப் பி
ல்லி, சூனியம், கரு, மை, முதலிய சில விஷயங்கள் தெரியு
மென்று அறியாமைக்கு ஆட்பட்டு தெரியாமைக்குத் தொண்டு
பூண்டு அந்தகாரத்திற்கு வந்தனம்செய்யும் ஆத்திகரிடஞ்செ
ன்று சம்பரதாயம்பேசி காலங்கழித்துத் திரிகின்றனர். அன்
றியும், எம்போலிகளைக் காணிலோ யானையைக் கண்ட பூனை
போல அடங்கி, ஒடுங்கி அவரவர்கட்கேற்ற இதவார்த்தைகள்
கூறி தப்பித்துக்கொண்டேக வழிபார்க்கின்றனாகள். பத்
திராதிபரே, இதைக்கைக்கொள்ளும் ஆத்திகர்களா, ஏனைய நா
ஸ்திகமதத்தை கண்டனம் செய்துவிட்டதாய் மூலைவீட்டில் மு
ணுமுணுக்கின்றவர்கள்; இதை யறிந்ததாரோ?

பில்லிசூனியத்திற்கொல்லவேண்டுமென்ருற்
பீரங்கிகுண்டுகள் கத்திகளேன்
வல்லமையுள்ளசேவுகரோனிந்த
மண்ணுளுவோர்க்கின்னும் மானிடனே. என்றும்

மந்திரமுண்டென்று மட்டித்தனமாக
மார்க்கமறியாமற்பேசுகிருர்
தந்திரஞ்செய்கின்ற மந்திரவாதியின்
தன்மையைகேளடாமானிடனே. என்றும்

எந்திரமீடுகரு, மறைப்பு, தடை
யெச்சணிமந்திரமென்பதெலாம்
தந்திரமென்றறியாமல் மதித்திட்ட
தன்மைஅஞ்ஞானமானந்தப்பெண்ணே. என்றும்

வாதமஞ்சனமீடொடுகரு
வசியசூனியமாரணங்கள்
ஏதம்பலவகைதெய்வமும் சுத்தமாய்
இல்லவெயில்லை ஆனந்தப்பெண்ணே. என்றும்

விவேகிகள் கூறியுளார். ஐயா, பத்திராதிபரே, இவைகளையெ
ல்லாம் ஆத்திக அந்தகர்கள் யோசிப்பதில்லையாக்கும்.பிறரொன்
னசொன்னபோதிலும் பெருமாள் மாட்டைப்போல தலையசை
ப்பரோயொழிய தற்புத்தி அதாவது (common sense)கொண்டு
ஒருக்காலும் வினவார். அன்றியும் எம்போலிகள் வினவிலோ
குருவுக்குமிஞ்சிய சிஷனென வாய்ப்பறையறைவர்.

நண்பர்காள், இக்கொள்கை யுடையார் முன்னம் பலத
டவைகளி லிதைக்குறித்து வரைந்திருப்பதின் நிமித்தம், இவ்
வற்பவிஷயத்தில் தலையிட்டுப்பேச எமக்குத் திருப்த்திகரமி
ல்லாததனல் இம்மட்டோடு நிறுத்தி சில மந்திரவாதிகளைம
ட்டும் அழைக்கின்ருேம்.

மந்திரவாதிகாள், மேலே யெழுதியவைகள் உண்மை
யென்று சாதிப்பவர்க ளெவரேனு மிப் பிரபஞ்சத்தின்கண்
ணுளரேல், எம்மிடமாகிலும் அல்லது எம்போலியர்க ளிட
மாகிலும் ஷை உண்மையை சாதிப்பார்களாகில் ரூபா - ரூ0 த
ருகிருேம். அன்றியும் சிஷருமாகின்ருேம். வாதிகளா, யா
மிருப்பது ஐரோப்பா, ஆப்பிரிக்கா, அமெரிக்காவல்ல. திரி
சிரபுரம் - புத்தூர்.

மந்திரமில்லையென்று வரைந்தமேயொழிய தந்திர மில்லை
யென யாம் இங்கு சொல்லவரவில்லை.

சேலம். 4—10—86 } இங்ஙனம்
தி - பு - வையாபுரி பிள்ளை.
இந்த சுவக்கியானசங்கத்தின் ஓர் மெம்பர்

தத்துவவிவேசினி
நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணு **1.**

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வானசு.) வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)

உள்ளூர்		Rs.	A.	P.	வெளியூர்		Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	0
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	0
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	0
வருஷம்	1-க்கு	2	2	0	வருஷம்	1-க்கு	2.	14	0

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு· முனிசுவாமிநாயகருக்கும்;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிருஸ் செகுலர்சொசைட்டி ஆனரெரிசெக்ரிட்டேரி
மெஸ்டர்· அப்ஷன்துரை யவர்களுக்கும்
அனுப்புதல்வேண்டும்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Dayaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

VOL. V.—No. 45.] MADRAS:—SUNDAY NOVEMBER, 7, 286. A. S. [MONTHLY, 4 ANNAS.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

விநோதம்.

ஒரு மிஷ்ஷன்பாடசாலையில் உபாத்தியாயராயிருந்த ஒருவர் அதற்கடுத்தகிரிஸ்தவக் கோயிலின் மதிற்சுவருக்குளமறைவாக ஜலஸ்பரிசத்துக் குடகார்ந்தார். அதைக்கண்ட சுதேச பாதிரியா ரொருவர் இப்படியுஞ் செய்யலாமா ? கடவுள்வசிக்கும் ஸ்தலமாயிற்றே, வேறோரிடத்திற்குப் போகலாகாதாவென்றார். அதற்கவர் அவ்விடத்திலும் கடவுளிருக்கின்றாரே யென்றனர்.

ஓராசன் அடாதவரிவாங்கத்தலைப்பட்டதினால், அதைச்செலுத்தச்சக்தியில்லாத ஒருதோட்டக்காரனை ராசன்முன்னே கொண்டுவந்துவிட்டார்கள். நீவரிசெலுத்தாவிட்டால் வேறொருதேசத்திற்குப்போய்விடென்று ராசாகட்டளையிட்டார். நான் எந்ததேசத்திற்குப்போகிறது ! தேவரீரவர்களேசொல்லவேண்டுமென்றான் ; தஞ்சாவூருக்குப்போவென்றார், அங்கே உங்கள்சிறிய தகப்பனாரிருக்கினறாரேயென்றான்; மைசூருக்குப்போவென்றார், அங்கேஉங்கள் அம்மானிருக்கின்றாரேயென்றான்.இப்படி அரசன்சொன்னதற்கெல்லாம் அவன்மறுமொழி சொல்லிவந்ததினால், அவர்கோபங்கொண்டு, போநரகத்துக்குப்பிசாசேயென்றார் ; அங்கேயும் உங்கள்தகப்பனார் நிலைபெற்றிருக்கிறாரேயென்றான். அதுபோல, தெய்வத்தன்மைபொருந்தியதாக எண்ணப்பட்டஎந்தமதத்திலாவதுஉண்மையாயொழுகவேண்டுமென்பவனுக்கு எந்தவகையிலும் நிலைபெறக்கூடாமையாகமுடியும்.

சமீபத்திலிருந்த ஒருஆலயத்தில் நடந்த உற்சவகாலத்திலே கூடவந்திருந்தஒருபெண்குழந்தை விமானத்தில் வைப்பதற்குத்தூக்கிக்கொண்டு வரப்பட்ட விக்கிரகத்தைப்பார்த்து, ' சாமிக்குக்காலிருக்குதே, ஏன் தூக்கிக்கொண்டுபோகிறார்கள், அதுநடக்கமாட்டாதா? என்றும் ; அதைவிமானத்தில்வைத்துக்கயிறிட்டு இறுக்கினதைப்பார்த்து, 'நாம் அந்தச்சப்பிரத்தில் உக்காந்தால் நம்மையும் அப்படித்தான்கட்டுவார்களோ' என்றும் கேட்டது. அதற்கு மறுமொழி—அம்மா, நீசிறுபெண், சின்னபொம்மையைவைத்துக் கொண்டு விளையாடினால்,பெரியவர்கள் பெரியபொம்மையைவைத்துக்கொண்டு விளையாடுகிறார்களென்று சொல்வதன்றி, உண்மையாய்ச் சரியானநியாயம்சொல்லக் கூடாமைபற்றி மவுனமாயிருந்துவிடவேண்டிவந்தது. இயல்பாகவே விசாரணைசெய்தறியும்படியான தன்மையுள்ள சிறுவர்களுடைய புத்தியை உற்றார்பெற்றார் வீணான பொய்க்கதைகளைச்சொல்லித் தடிப்பேறச்செய்து, அவர்களை மூடநம்பிக்கையில்வீழ்த்தி, மடையர்களாக்கிவிடாமல், உண்மையானசங்கதிகளைபோதித்து விவேகம்விளங்கச்செய்தால், அவர்களுடையகாலத்தில் மகாபுத்திமான்களாய், தங்கள்தேசத்திற்குமாத்திரமேயன்றி உலகத்திற்கும் அதிகபிரயோசனகாரிகளாவார்கள்.

புராணக் கதைகளையே மிகுதியாக வாசித்துக்கொண்டிருக்கிற ஒருவர் அரேபியன்நைட்டு கதைகளையும் உண்மையானவையென்றே நம்பியிருக்கிறார். அவர் அப்படி நம்பியிருப்பது அவ் விருவகை கதைகளும் தோழர்களாகக் கைகோத்துக்கொண்டு ஒற்றுமையுடனே உறவு பாராட்டிக்கொண்டிருப்பதினாலேதான்.

சமயங்களின்பேரில்பிராது. 168

சுவக்கியானமென்னும் வாதி-சாஸ்திரக்கூட்டமென்னும் சபையில் வீற்றிருக்கிற நியாயமென்னும் அதிபதிக்குமுன்பாக உலகத்திலுள்ள பலசமயங்களாகிய பிரதிவாதிகளைக்கட்டளையனுப்பிவரவழைத்துநிறுத்தி, யான்ஆதியில் இந்த பலசமயங்களுக்குள் சைவசமயத்தவனாயிருந்து, அது ஆபாசமானதாகக் கண்டுகொண்டு, மற்றமதங்களைஆராய்ந்த சிற்சிலர் அவற்றை அப்படிப்பட்டவையென்றே சொல்லத்தெரிந்துகொண்டு, சிவன் விஷ்ணுமுதலியகடவுள்களையும்நரகசொர்க்கமென்கிற பதவிகளையும் சாதிபேதங்களையும் சமயங்களுக்கு விரோதமாகப் பொய்யெனக்கூறும் வேதாந்தமாகிய அத்வைதத்தில் உண்மையிருக்குமெனத்தோன்றினமையால், அதையாராய்ந்ததில் தொன்றுதொட்டு நிலைபெற்றுநடந்துவருகிற பிரபஞ்சத்தை மித்தையெனவும், சமயிகள் கூறுவனவற்றுள் பலவற்றைமறுத்து, அத்வைதத்திற்கு இன்றியமையாதனவாகிய கர்மம்-மாயை-பிறப்பு இவற்றை ஒப்புக்கொள்வதாகவும்கூறுவது எனதுகருத்துக் கிசையாமையால், பூததத்துவசாஸ்திரிகள்கூறும் நியாயங்களையுணர்ந்து, அவை எனது அபிப்பிராயத்துக்கு ஒத்திருந்தமையால், இவ்வாறுஎனதுசொந்த முயற்சியினாலே அடைந்தகியானத்திற்கு சுவக்கியானமெனப் பெயரிட்டேன்; சமயிகள் காணுததைக்கண்டதாகநடித்து வெற்றுச்சொல்லாகிய ஆஸ்திகமெனப்பெயரிட்டுக்கொண்டார்கள். அதினாலே அதைமறுக்கிறஎனக்கு எதிர்மறையான நாஸ்திகமென்னும்பெயர் உண்டாயது. என்னைச்சீர்ப்படுத்தமுயலுவதாக எண்ணங்கொண்டபிரதிவாதிகள் நான்எவற்றை மறுக்கிறேனோ அவற்றை ஸ்தாபிப்பதற்கு நியாயங்களிருந்தால் அவற்றையெடுத்துப் பேசாமல், நான்எதைமறுத்திருக்கிறேனோ அதையேமறுபடி ஒவ்வோர்சமயத்தில் பேசிக்கொண்டு, மற்றச்சமயங்களில் என்னை தூஷிக்கிறதும் சபிக்கிறதுமாயிருக்கிறார்கள். அதினிமித்தம் யானும் ஒவ்வோர்சமயத்தில் வீண்வார்த்தைபேசும்படிநேரிடுகிறது. ஆகையால் நியாயாதிபதியாகிய தாங்கள் எங்களிருதிறத்தாருக்கும் வீண்வார்த்தைபேசாமல், இஷ்டமிருந்தால் நியாயவாதஞ்செய்யும்படி உத்தரவுபண்ணவேண்டுமென்பதே எனதுபிரார்த்தனையென்றான்.

நியாயாதிபதி பிரதிவாதிகளைநோக்கிக் கேட்டகேள்விக்கு, அவர்களில் ஒவ்வொருவரும் தன்தன் சமயமின்னதென்றும், அதுஅதுமெய்யானது, மற்றவைகள் பொய்யானவையென்றுஞ்சொல்ல ; இத்தனைமதங்களுள்ளும் ஒன்றுதானே மெய்யானதாயிருக்கும், அதிலுள்ள பலபிரிவுகளிலும் ஒன்றுதானே கடவுளால் ஏற்படுத்தப்பட்ட உண்மையானதாகும், அந்த ஒருபிரிவிலும் கடவுளினுடைய கற்பனையின்படி சரியாயநடக்கிற வெகு கொஞ்சம்பேர்தானே மோட்சத்திற்குப்போகிறவர்கள் ; மற்றவர்கள் நரகத்திற்குப் போகவேண்டியதுதானே, இதுஇருக்கட்டும்; சர்க்கரைதித்திப்பா, கசப்பா ? சூரியன் வட்டமா, சதுரமா ! என இதுபோன்ற சிலகேள்விகள் அதிபதிகேட்டதற்கு ; ஒவ்வொருவரும் தித்திப்பு, வட்டம் என ஒற்றுமையானமறுமொழி சொன்னார்கள். சந்திரனில் மனிதனிருக்கிறானா? பாதாளத்திற்குச் செல்ல பூமியில் துவாரமிருக்கிறதா ? என்றுகேட்டதற்கு, சிலர் உண்டென்றும் சிலர் யில்லையென்றுஞ் சொன்னார்கள். புலன்களால் அறிந்தவற்றைப்பற்றி ஒருமைப்பட்டீர்கள், அறியாதவற்றைப்பற்றி வேறுபட்டீர்கள் ; கடவுளென்பதையறிந்து நீங்கள் நிச்சயித்திருந்தால் பலசமயிகளாயிருக்கமாட்டீர்கள். உங்களில் ஒவ்வொருவரும் தன்தன் சமயத்தைச்சிறப்பித்து மற்றச்சமயங்களைத்தாழ்த்துவதினால் எல்லாச்சமயங்களும் பொய்யாகின்ற

ன; அதனால் உங்களுக்குப் பொதுப்பெயராகிய ஆஸ்திக
மென்பதுதகாது. இந்தப்பெயரை நீங்கள் நிலைக்கச்செய்துகொ
ண்டபிறகுதான் உங்கள்எதிரிக்கு நீங்கள் நாஸ்திகமென்னும்
பெயர்கொடுக்கக்கூடும். பலசமயிகளாகிய நீங்கள் ஆராய்ச்
சிசெய்து உண்மையானமத மின்னதென்றுதெளிந்தபிறகுதா
ன் உங்கள்சித்தாந்தத்தை நீங்கள் எதிரிகளுக்குப்போதிக்க
வேண்டும்; அதுவரையில் அவர்கள் உங்கள்மதங்கள்பேரில்
செய்கிற ஆட்சேபங்களுக்குத்திருப்திகரமான சமாதானங்கள்
சொல்லவேண்டுமே யல்லாமல், இருதிறத்தவரும் வீண்
வார்த்தை பேசலாகாது, போய்வாருங்களென்று அனுப்பி
விட்டனர்.

A. M.

விவிலியவற்புதங்கள்.

—o—

(173-வது பக்கத்தொடர்ச்சி.)

11. யாத்திரையாகமம் XVI. 4-35வது வாக்கியங்களை வா
சிக்கும்பொழுது, நாற்பது வருஷகாலம் தினந்தோறும் அன்
னமாரிபொழிய அதனையே யூதர்கள் உண்டுவந்ததாகவும், அ
திலும் அன்றன்றைக்கு ஒவ்வொருவனுக்கும் எவ்வளவு வேண்
டுமானதோ அவ்வளவே சேகரித்து உண்பதுதவிர ஒருநாள் அ
ளவிற்கு மேற்பட சேகரித்துவைக்கும்போது அது புழுத்து
நாறிப்போனதாகவும், ஓய்வுநாளாகிய ஏழாந்தினங்களில் அன்
னம் அகப்படாமற்போனதாகவும் அவ்வேழாநாளைக்கு வேண்
டுமானதை ஆறும் நாளைக்கே சேகரித்து வைத்துக்கொள்ளப்ப
ட்டது கெட்டுப்போகாதிருந்ததாகவும் தெரியவருகிறது. இ
து நல்ல அற்புதமே. ஆனாலும், தற்காலம் இப்பிரபஞ்சத்தி
ன் பற்பலகாலங்களில் பஞ்சமிகுந்து பிரஜைகள் கஷ்டப்ப
டும் விஷயத்தில் இத்தகைய அற்புதம் நடவாமலிருந்தது மிக
விசனகரமானது. அந்நாளில் இத்தகைய அற்புதத்தைப்பற்றி
ய கருணாகரக்கடவுள் இந்நாளில் எங்கொளித்தார்? அந்தோ
நித்திரைபுரிகின்றாரோ? அவரைத் தட்டியெழுப்ப ஆளில்லை
யோ! தட்டி யெழுப்ப ஆளிருந்தால் அவர்செய்வது சண்
டப்பிரசண்டந்தானோ?

12. யாத்திரையாகமம். XXVII 18, லீவையாகமம்VIII
3-5 இவைகளை வாசிக்குமிடத்து பதினைந்துஅடி அகலமுள்ள
கூடாரத்தின் முகப்பில் மூன்றுகோடி ஜனங்கள்நின்று மோ
சே வசனிக்கக்கேட்டிருந்தார்களாம். இது என்ன அற்புதம்!
இவ்வளவு பெருத்த தொகையினர்களாகிய ஜனங்கள் அவ்வள
வு சிறுத்த அளவுள்ள ஸ்தானத்தில் நின்று சிரவணித்தார்க
ளெனின் அவர்கள் கொசு அல்லது அதற்கும் சிறிய ஜந்துக்க
ளாகவே யிருக்கவேண்டும்; இப்படியல்லாதபட்சத்தில் இவ்வி
ஷயம் வியக்கத்தக்க அற்புதமேயாகும்.

13. லீவையாகமம் XVI. 21-22, இவைகளை வாசிக்குமிட
த்து ஆரான்பாதிரியானவர் யூதசாதியாருடைய பவநோயைப்
பரிகரிக்கும்பொருட்டு ஓர் வெள்ளாட்டின் றலைமீது இருகரங்
களையும் வைத்து அதனைக் காட்டுக்குத் துரத்திவிட்டதாகவும்;
அதனால் அவர்களுடைய பாவங்களெல்லாம் அந்த ஆட்டுக்குட்
டியோடு ஒழிந்துபோய்விட்டதாகவும் தெரியவருகிறது. ஆ!
ஆ! இதென்ன அற்புதம்: ஓர் ஆட்டை அடித்துப்போட்டால்
இந்த மூன்றுகோடி ஜனங்களுள் 10 15 பேர்களுடைய பசி
நோயையே தீர்ப்பது துர்லபமாயின் அம்மூன்றுகோடி ஜனங்
களுடைய பவநோயை எவ்வாறு தீர்க்குமோ? அவ்வாறு தீர்
க்கின் அது அற்புதமே.

14. எண்ணாகமம் XXI. 9. இதனைவாசிக்குமளவில் மோ
சேயானவர் பித்தலாட்ட சர்ப்பமொன்றுசெய்து அதனை ஓர்
ஸ்தம்பத்தின் நுனியில் மாட்டிவைத்ததாகவும், (உண்மையா
ன) சர்ப்பத்தால் தீண்டப்பட்ட எவனாவது அப்பித்தலாட்டச
ர்ப்பத்தை நோக்கிப்பார்த்தவுடனே விஷம்நீங்கி உயிர்த்திருந்
தான் என்று தெரியவருகிறது. ஆ! ஆ! இதுவும் நல்லவற்பு
தமே. இத்தகைய பித்தலாட்ட சர்ப்பங்களை இக்காலத்தில் ஆ
ங்காங்குசெய்து உயர்த்தி மாட்டிவைக்கும் திறத்தை யுடைய
வர்கள் இல்லாம லிருப்பது வெகு துர்ப்பாக்கியமான அற்பு
தமே.

15. எண்ணாகமம் XXII. 27-28. இவ்வாக்கியங்களை வாசி
த்துப்பார்க்கும்பொழுது ஓர் கழுதையானது கடவுளைக்கண்டு
தரிசித்ததாகவும், மறுமொழிபேசக் கடவுளால் அனுக்கிரகிக்
கப்பட்டதாகவும் தெரியவருகிறது; ஆ! ஆ! இது நல்ல செய்தி
தான். ஆனால் இக்கழுதைக்குக் கிடைத்த தரிசனமானது ஆ
த்தியர்களுக்கும் கிடைக்குமாயின் அவர்கள் கள்ளவேடம்பூ
ண்டு நடிக்கும் நடிப்புக்குத் தக்கபலனும். அந்தோ! அவர்க
ள் கழுதையினும் கேடுகெட்டவர்களா? அல்லவே. ஏன் கட
வுள் அவர்களுக்குத் தற்காலத்தில் தரிசனங் கொடுக்கிற
தில்லை. D.

(இன்னும்வரும்.)

தேவர்கள்விர்த்திஹானி.

பார்வதியாரும்பரமசிவனாரும்ஏகாந்தமாய்ச் சையோகித்து
க்கொண்டிருந்ததை பிர்ம-விஷ்ணு-இந்திரன்முதலானதேவர்க
ள்அறிந்து, இவர்கள் மகாபலிஷ்டர்களா யிருக்கிறார்களே,இவர்
களுக்குப்பிறக்கிறபிள்ளை எப்படிப்பட்டதாயிருக்குமோ நம்மு
டையகெதிஎன்னவாகுமோஎன்றுபயந்து, பரமசிவனிடத்திற்
சென்று வணங்கி, சையோகத்தைநிறுத்தும்படிவேண்டிக்கொ
ண்டார்கள்;ஸ்வாமிஅதற்கிணங்கிஅப்படியேநிறுத்தி இப்போது
ஸ்கலிதமாக மார்பினிடத்துச் சித்தமாயிருக்கிற இந்திரியத்தை
யென்னசெய்கிறதென்றுகேட்க: ஆலோசனைசெய்து அதை பூ
மியினிடத்துக்கொண்டுபோய்விட்டார்கள். அது அதி உக்கி
ரமாய்த்தகித்ததினால் பூமிதேவிசகிக்கமாட்டாமல் முறையிட,
அதைக்கொண்டுபோய் அக்கினியில்விட, அதுவுமவ்வாறேமு
றையிட, பின்பு கங்கையில்விட்டார்கள். கங்காதேவியுந்தா
ங்கமாட்டாமல், சரவணம்(நாணல்) நிறைந்தகரையோரத்தில்
அதை ஒதுக்கிவிட்டாள். அதினால் நாணல் பற்றிக்கொண்
டெரிகையில் அதனிடமாய் ஒருகுழந்தைபிறந்தது. அக்குழந்
தைக்குப்பால்கொடுக்கும்படி பிரமன் கிர்த்திகாநட்சத்திரங்க
ளாகிய ஆறுஸ்திரீகளுக்குக்கட்டளையிட்டான்.அந்தஸ்திரீகள்வ
ரவே, அக்குழந்தை அவ்வாறுபேருடையதனங்களையும்ஏககால
த்தில் பானஞ்செய்யும்பொருட்டு ஆறுமுகங்கொண்டு உண்டுவ
ளர்ந்தது. இதுநிற்க, தேவர்கள் தனக்குப்பிள்ளைபிறவாமற்
செய்தார்களேயெனகிறகோபத்தினால், பார்வதியானவள் தே
வர்களுக்குச் சந்ததியில்லாமற்போகக்கடவதென்றும், தன்க
ணவனுடையஇந்திரியத்தை முதலில் பூமிதாங்கினபடியால்
அதையாளுகிறகணவர்கள் பலராகவேண்டியதென்றும் சபித்
ததாக வால்மீகிராமாயணம் பாலகாண்டத்திற் சொல்லியிருக்
கிறது.—சிவனுடைய நெற்றிக்கண்ணிலிருந்துதோன்றிய ஆறு
நெருப்புப்பொறிகளை சரவணப்பொய்கையில் கொண்டுபோய்
விட, அவை ஆறுகுழந்தைகளாயின, அக்குழந்தைகளின் உட
ல்களைப் பார்வதிசேர்த்தெடுக்கும்போது, உடல்கள்ஒன்றாய்ப்
போயின, ஆறுசிரங்களும் பன்னிரண்டு கரங்களும் பழயபடி
யே யிருந்தனவென்பது சைவபுராண கதை. இதைநான் சி
றுவனாயிருக்கும்போதே சைவசமயவிளக்கமென்னுஞ் சிறுபுத்
தகத்தில் வாசித்திருக்கிறேன். ஒரேசங்கதியைப்பற்றி இர
ண்டு கிரந்தத்தில் வெவ்வேறுவிதமாய்ச்சொல்லியிருக்குமானா
ல் நாம்எதை உண்மையானதென்று நம்புகிறது? ஒருவனெழு
தினது ஒருவனுக்குத்தெரியாமல், அவனவனும் தனித்தனியா
ய் வஸ்துவினால் பிரமானந்தத்திலிருந்துகொண்டு, மனம்போ
னபடி விந்தையாகவும் செவிக்கினிமையாகவு மிருக்கத்தக்க
தாய எழுதிவைத்தகட்டுக்கதையென்றே நாம் நினைக்கவேண்
டும். அப்படிக்கல்ல, அது கற்பபேதமென்கிறார்கள். அதாவ
து—பிரபவாதிவருஷங்கள் அறுபதாகிய ஒருவட்டம்முடிந்த
வுடனே, மறுபடியும் பிரபவாதிவருஷங்கள் ஆரம்பிப்பது
போல, பலயுகங்களடங்கிய ஒருகற்பமானது-மகாபிரளயத்தி
னால் சர்வேஸ்வரன்தவிர, மற்றைத்தேவர்கள் ரிஷிகள்முதலா
ன சகலஜீவராசிகளும் ஸ்தாவரசங்கமங்களும் அழிந்துபோ
னபோது அற்றுப்போய், வேறுகற்பமுண்டாகிறதென்றும், இ
ப்படி எத்தனையோகற்பங்க ளாயிருக்கின்றனவென்றும், ஒவ்
வொரு கற்பத்திலும் அதற்கு முந்திய கற்பத்திலிருந்ததுபோ
லவே, தேவர்கள், ரிஷிகள், மனு, அரிச்சந்திரன், நளன், தசர
தன், பாண்டவர்கள், துரியோதனாதிகள், முதலிய அரசர்க
ளும், வேதங்களும், அவதாரங்களும், மோட்சவுலகமும், நர
கலோகமும், புண்ணியவான்களும், பாபிகளும், மற்றுஞ் சக
ல சிருஷ்டியு முண்டாயிருக்கின்றனவென்றும் ஒரு கற்பத்தில்
நடந்த விருத்தாந்தங்கள் மறுகற்பத்தில் நடக்கின்றனவென்
றும், பிரமாணமாய்ச் சொல்லுகிறார்கள். ஒரு கற்பத்திற்கு
மறுகற்பத்தில்ஏற்றக்குறைச்ச லிருக்கமாட்டாதென்கிற நியதி
யினால், இக்கற்பத்திலே பாபிகள் புண்ணியவான்களாவதற்கு
என்ன முயற்சி செய்தபோதிலும், அந்த விதாயகத்தை மீறி
நடக்கமாட்டாதல்லவா! அப்படியாயின், கற்பத்தின் வழி
ப்பட்டது கர்மமும், கர்மத்தின் வசப்பட்டது நமது நன்மை
யும் தீமையுமாதலால் நாம் சீர்ப்பட முயல்வது வீணாய் முடியு
ம். ஒரு கற்பத்தில் நடந்த விர்த்தாந்தங்களே மறுகற்பத்தில்
நடக்கின்றனவென்றால், மேற்கண்டபடி நமது ஆறுமுகக்கட
வுளின் உற்பத்தி இருவகைப்படுவானேன்! ஒன்றற்கொன்றில்
கொஞ்ச மாறுத லுண்டாயிருக்குமென்று ஒப்புக்கொண்டபோ
திலும், அவற்றுள் ஒவ்வொன்று எந்தெந்தகற்பத்துக்குரியது?
மகாப்பிரளயத்தினால் சகலமும் அழிந்துபோனபோது, அந்த
க்கற்பத்துக்குரிய புராணங்கள்மாத்திரம் மறுகற்பத்தில் எவ்
வாறு கிடைத்தன? கிடைத்தனவென்று வைத்துக்கொண்டா
லும், அந்தந்த கற்பத்துக்குரிய ராமாயணம், பாரதம், பாகவ
தம், திருவிளையாடற்புராணம் முதலியவை எத்தனைவகை யிரு
க்கின்றன? அப்படிக்கில்லாமையால் ஒவ்வொருகதை வெவ்
வேறு இரண்டு மூன்று புராணங்களில் பேதிப்பதற்குச் சமா

தானஞ்செய்துகொள்ளக் கற்பபேதம் கற்பிக்கப்பட்டதென்று ஸ்பஷ்டமாய் விளங்குகிறது.

புத்திரசந்தான முண்டாகுமென்று பயந்து தேவர்கள் வேண்டிக்கொண்டார்களென்பதினாலும், நாணலோடு கலந்தெரிந்த வித்து பிள்ளையாயிற் றென்றதினாலும், சிவனுடைய சையோகத்திற்கு அதுதான் முதல்தடவையாகத் தோன்றுகிறது; அவன் பெண்டாட்டிகொண்டு திண்டாட்டப்பட்டது அந்தமட்டில் போதும், வித்தே அழலாயிருக்கும்போது அதற்குரியவனுடைய சரீரம் அக்கினி ஸ்வரூபமென்பதற்குத் தடையில்லை. அப்படிப்பட்ட சரீரத்தோடு பார்வதி கலப்புற்றிருப்பதும் அதிசயந்தான்; அந்த வித்து தான் கொளுத்திய நாணலோடுகூட எரிந்து தணிந்துபோகாமல் குழந்தையானதும் அதிசயந்தான்; மற்ற அதிசயங்களை வாசிப்பவர்களே பார்த்துக்கொள்ளட்டும்.

முப்பத்து முக்கோடி தேவர்களென்கிறார்களே, இந்தசங்கையை தேவர்கள் சந்ததி கொஞ்சகொஞ்சமாய் விர்த்தியாய்க்கொண்டேவந்து, சந்ததியற்றுப்போகும்படி பார்வதி சபித்தகாலத்தில் ஏற்பட்ட தொகைதான். அதுவரையில் சிவனுக்கு சந்ததி யில்லாமற்போனதற்குக் காரணந் தெரியவில்லை; ஒருவேளை விவாகஞ் செய்துகொள்ளாதிருந்தனனோ, செய்துகொண்டும், சுரணையற்றிருந்தனனோ நாம் அறிகிலோம்.

மற்றொருகதையில் பார்வதி ஆறுகுழந்தைகளை அணைத்தெடுத்தபோது, உடல்களை அணைத்ததுபோலக் கால்களையும் அணைத்திருந்தால் உடலைப்போல ஒரேகாலாக இருக்கவேண்டும், அல்லது பன்னிரண்டு காலாக இருக்கவேண்டும்; அப்படிக்கில்லாமல் இரண்டுகாலானதெப்படி? உடல்களை அணைக்கும்போது, தோலொடுதோல் ஒட்டிப் பிண்டமாகிறதே கூடாமை. அப்படியிருக்க, தோலொடுதோலும், உள்தசையோடு உள்தசையும், உள்ளெலும்போடு உள்ளெலும்பும், ஈரலோடு ஈரலும் எவ்வாறு ஒட்டிக்கொண்டதோ அதிசயந்தான். எல்லாவற்றையும் அரைத்து மொத்தையாகச் சேர்த்தால்மாத்திரமே ஒன்றாயிழைந்துபோம். ஒவ்வொருவார்த்தையிலும் ஆட்சேபனைக்கு இடமிருக்கிறது. கதைக்குக் காலில்லை பேய்க்குப் புட்டமில்லை என்றாற்போல, வகைதொகையில்லாத அவலட்சணமான சங்கதியைப்பற்றி எழுதுவது அசங்கியமாயிருக்கிறது. எல்லாம் தெய்வீகமென்று கண்மூடித்தனமாய் நம்பி, ஆனந்தங்கொண்டு, செவியாரக் கேட்டுக்கொண்டிருப்பவர்களுடையபாடு சுலபமே. விசாரணைசெய்கிறவன்பாடு கஷ்டமே. ஆதலால், 'நல்லகதை நிகளமில்லை, சொல்லுவோமென்றால் நேரமில்லை' என்று ஒரு கிழவி சொல்லிக்கொண்டிருந்தனள்; அதுபோல நமக்கு நேரமில்லாமையினாலும் பத்திரிகையில் இடமில்லாமையினாலும் இந்தமட்டில் சொன்னதேபோதும்.

A. M.

மெய்யறிவு.

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

(163-வது பக்கத்தொடர்ச்சி.)

'அவனன்றி ஓரணுவுமசையாது' என்னும்முன்னோர் வாக்கின்படி கடவுளன்றியில் மாயை அசைக்கவல்லதோ? கடவுளானவர் தனது ஆத்துமாக்களை மாயையின் வசப்படுத்திவிட்டு வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாரோ? மோட்சலோகத்தையும் நரகலோகத்தையும் உண்டுபண்ணினவர் கடவுளோ மாயையோ? கடவுளானால் தன்னுடையஅரசாட்சிக்குக்கீழ்ப்படிந்தவர்களுக்காக மோட்சலோகத்தை உண்டுபண்ணினாரென்றாலும், மாயையின் அரசாட்சிக் குட்பட்டவர்களுக்காக கடவுள் நரகலோகத்தை உண்டுபண்ணுவானேன்? தன்தன் குடிகளின் சுகதுக்கங்களையோசிக்கும் பொறுப்பு அந்தந்த அரசனுடையதாயிருப்பதுபோல, மாயையின்குடிகளைப்பற்றி யோசிக்கவேண்டியது அம்மாயைதானே. அப்படிக்கல்ல, கடவுள் தன்னுடையபிரதிபிம்பமாகிய மாயையை தன்னுடைய குமஸ்தாவாகப் பிரபஞ்சத்தில் அதிகாரஞ்செலுத்தும்படி அனுப்பினார், தன்னுடைய அதிகாரத்தை மேலுலகில் வைத்துக்கொண்டாரென்றால் - அந்தகுமஸ்தாவின் கொடிய உத்தரவின்படி நடந்துகொண்ட குடிகளை மேலதிகாரி தெண்டிக்கவேண்டியதோ அல்லது அக்கிரமமாய்நடத்தின குமஸ்தாவைக் கண்டிக்கவேண்டியதோ யோசித்துப்பாருங்கள். கடவுளினுடைய ஆக்கினையில்லாமல் மாயைதன்னிஷ்டமாய்ப் பிரவர்த்திக்கிறதென்றால், தன்னுடைய எண்ணத்திற்கு விரோதமாய் நடத்துகிற சத்துருவைக் கடவுள் நாசஞ்செய்யாமல்விட்டுவிடுவாரோ? கடவுள் எதிலும்பிரவேசிப்பதில்லை, அவனவனுடையகர்மம்அவனவனை இழுத்துவிடுமென்பார்; அந்தக்கர்மம் வந்தவழியாது என்பேன், மாயையென்பார். மாயைவந்தவழியாது என்பேன், கடவுளென்பார். எப்படி மாறிமாறி வந்தாலும், சகலத்திற்கும் கடவுளேகாரணமாவார். ஜகமும்பொய், கடவுளும் பொய்; சகலமும்பொய்; அறிவு மெய்யென்பார்சிலர். இப்படிப்பட்டவர்களுடைய ஞானநூலைவாசித்து அதில் நான் தெரிந்துகொண்ட அநர்த்தமான முடிவாவது, 'அறிவு அறிவாக அறிவை அறிவால், அறியும் அறிவே அறிவு' என்பதாம். இப்படிப்பட்டபொருளை, அது-இது-உது- என்னும் சொற்களால் சுட்டக்கூடாதென்பார்களாகையால், 'அறிவு அதுவாகஅதை' எனச்சுட்டாமல் மேற்கண்டவண்ணம் எழுதினேன்.

சித்தாந்தக்கட்டளை என்னும் ஒருநூலிலுள்ள அநேககவிசித்திரங்களுள் பஞ்சபூதங்களின் வடிவு—பிரிதிவி (பூமி)நாற்கோணம்; அப்பு (நீர்) அர்த்தசந்திரன்; தேயு (நெருப்பு) முக்கோணம்; வாயு (காற்று) அறுகோணம்; ஆகாயம் (வெளி) வட்டம்; மனிதனுக்குளிருக்கிறவாயு - 10, பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன். தனஞ்செயனென்கிற ஒருவாயுவின்தொழிலை யோசிப்போம்; உடம்பை வீங்கவும் விரியவுஞ்செய்து கபாலத்தை வெடிப்பித்துப்போகுமாம்; இந்தத்தத்துவங்களைக் கண்டறிந்த புதுமையே புதுமை! மண்டைதிறக்க அடித்துப்போடப்பட்ட நாய்களுக்கும் தலைநசுங்குண்டபெரிச்சாளிகளுக்கும் உடம்பு ஏன் வீங்குகிறது? கரைத்துவைத்த மாவு புளிப்பு ஏற ஏற ஏன்உப்புகிறது? இதைக்குறித்தும் மற்றவாயுக்களைக்குறித்தும் மேற்கூறியவடிவங்களைக்குறித்தும் இதைவாசிப்பவர்கள் ஆராய்ந்துபார்க்கட்டும்.

மனிதனுக்குள் வேறொருபுதுமையாகிய சூட்சுமதேகமென்பது ஒன்றுண்டு. அந்தத்தேகம் இந்தப்பூலோகத்தில்மாத்திரமல்ல, தேவலோகம் பிரமலோக முதலிய சகலலோகங்களிலும்சென்று, அவற்றிலுள்ள விநோதங்களையெல்லாம் பார்த்துவிட்டு பிரமன் முதலிய கர்த்தர்களையும் நமது முன்னோர்களையும்கண்டுபேசுவதுமன்றி, ஒவ்வோர்சமயத்தில் அந்தக்கர்த்தர்களும் அந்தசூட்சுமதேகத்தை உபசரித்து தங்கள் ஆசனத்தைவிட்டிறங்கிவிட, அதில்தான்வீற்றிருந்து அதிகாரஞ்செலுத்திவிட்டுவரச்சகதியுள்ளது. இந்த சூட்சுமதேகம் நாம் தூங்கும்போது மாத்திரம் அப்படிவிவகரிக்கிறது, தூக்கம் சற்றுக்கலங்கினவுடனே, அதை சூட்சுமதேகம் தொலைதூரம் போயிருந்தாலும் தெரிந்துகொண்டு தட்சணம் சரீரத்தில் வந்து புகுந்து கொள்ளுகிறதாம்.

(இன்னும்வரும்.)

கடிதங்கள்.

அக்டோபர்மீ 30உ சுதேசாபிமானி.

ஏட்டிக்குப்போட்டியும், திருட்டுவழியும்.

அக்டோபர்மீ 24உ தத்துவவிவேசினியில், கர்னல் இங்கர்சால்செய்தஉதவி அற்பமாயினும், அவரிடத்துள்ள நற்சிந்தையைஎடுத்துக்காட்டிக் கடைசியில்,'சிலஅறிவிலிகள்நாஸ்திகருக்குநற்சிந்தையிராதென்றுநினைப்பது பிசகென்பதற்கு ஓரத்தாட்சி' என்று எழுதியிருக்கிறது. இதனாலே ஆரியமதவிசாரணைசங்கத்தாரைத் தூஷிக்கவுமில்லை, ஆஸ்திகருக்கு உபகாரசிந்தையில்லையென்று மறுக்கவுமில்லை. "குற்றமுள்ளநெஞ்சு குறுகுறென்னும்" என்கிறவாக்கியத்தின்படி, மடவளாகம் சொக்கலிங்கசாஸ்திரியாரென்பவர் சங்கத்தாரைப் புகழவேண்டித் தாமே வலியமேற்போட்டுக்கொண்டு, நாளென்றும் நட்சத்திரமென்றும்பாராமல் "தினேதினே அஜமேதஞ்செய்த வாரணங்கள் முதலியவற்றைவிழுங்கி" ஏப்பமிடுகிறவர்களுக்குக்

காருணியமுண்டாகமாட்டாதென்பதாக பலவாறு இகழ்ந்து,
விபூதி ருத்திராட்சமுதலிய சிவவேடந்தரித்தவொருவர் ஒரு
குழந்தைக்குநேராகப் போய்க்கொண்டிருந்த ஒருசாரைப்பா
ம்பைப்பிடித்தெறியும்போது அதனுல்கடியுண்டு வெகுவருத்
தப்பட்டு பின்பு சொஸ்தப்பட்டதாக ஒருகதை எழுதினுர்.
ஆஸ்திகருக்குக் கிருபையில்லையென்று சொன்னவர்யாரோ!
இதைப்பார்க்கினும் அருமையானஉபகாரஞ்செய்தகதைகள் பு
ராணங்களில் அநேகமிருக்கின்றனவே. அஜமேத முதலியவை
செய்கிறவர்களுக்கு உபகாரசிந்தையில்லையென்ருல், இந்தசா
ஸ்திரியாருடைய பூர்வாசாரியர்கள் புலால்புசித்துக்கொண்டு
நரமேதம், அஸ்வமேதம், கோமேதம், அஜமேதஞ்செய்த கொ
டியசண்டாளர்கள்தானே. தற்காலசைவர்கள் அவர்களினும்
எத்தனையோபங்கு சிறந்தவர்களாகிருர்கள். இந்த சாஸ்திரி
யார் "ஆரியமதவிசாரணசங்கத்தின் விற்பனர்கள் செய்தவ
ரும்பிரசங்கத்தை நன்குணர்வதற்கு வேண்டிய ஆராய்ச்சிய
மையப்பெருதசிலர் கைக்குவந்தபடிவரைய ஷ விற்பனர்கள்
வயதிற்சிறியோராயினும் பெருமைபாராட்டி யாதொன்றும் வி
டைபகராது தங்கள்கடமையாகிய லோகோபகாரத்தினைப்புரி
ந்துவருகின்றுர்கள். ஆயினும் அவர்கள்தூஷித்தெழுதிய சில
வற்றையாம்காண ஆற்றகில்லேமாகி இசனைத்தீட்டலாயினம்"
என்றுர். இவர்சங்கத்தாரைச்சேர்ந்தவரல்லர்போலும். ஆயி
னும்இவர்சாஸ்திரியாராயுமிருந்து, சங்கத்தாருடையதிவ்விய பி
ரசங்கத்தைக்கேட்டு, அவர்களுடையசஹவாசம்பெறறிருக்க, அ
வர்கள்பொறுமையோடிருக்கையில், இவரேன்பொருமையால்
எழும்பினர்? இவர்அவர்களினுஞ்சிறியவரோ, வெகுளித்தனமு
டையவரோ? சாஸ்திரிபட்டமானது (1) புட்டுசாஸ்திரியென்றும்
(2) பெட்டுசாஸ்திரியென்றும் இரண்டுவகை. கவது-தகப்ப
ன்பேர் ராமாசாஸ்திரியென்ருல் பிள்ளைக்குக் காமாசாஸ்திரி
யென்றுபேரிடுவது; உ-வது-கல்வித்திறத்தால் சாஸ்திரிபட்ட
ம்பெறுவது. இவர் தமதுவாக்கினுலேயே முதல்வகையைச்சே
ர்ந்தவராகக்காணுகிருர். தேவேந்திரனுக்கு நாஸ்திகமதபோத
னை செய்தவரலாறு அக்டோபர் 24உ தத்துவவிவேசினியில்
எழுதப்பட்டிருக்கிறது. அதற்குச் சமாதானம் அதைக்கூறிய
சங்கத்தார் சொல்லவேண்டியதாயிருக்க, இந்த சாஸ்திரியார்
அவர்களிடத்தில் வகாலத்து பெற்றுக்கொண்டு அவர்களுடைய
அபிப்பிராயத்தைத் தெரிவித்தனரோ, அல்லது அவர்களுடைய
பேருதவியைக்கொண்டு எழுதினரோ? "ஸ்காந்தத்தில் ஸ்ரீ ச
ண்முகக்கடவுள் இந்திரனுக்கு நிரீஸ்வர வாதத்தைப் போதிப்பி
த்தது அவனுடைய நன்மைக்காகவும், ஆன்மாக்களிடத்தில்வை
த்த கருணையின்பொருட்டுமேயென்று" சமாதானங் கூறியிரு
க்கிருர். இது கிருஷ்ணனுடைய சரித்திரத்தைப் பிரசங்கித்த
ஒரு சாஸ்திரியார், அவன் வெண்ணெய்திருடி யுண்டானென்கிற
சங்கதியைப் பெண்டுகள்கூடி விசாரணைசெய்கையில், தாய்மு
தலிய சில கிழவிகள் எவ்வளவு வெண்ணெய் திருடினுயென்
று ஒவ்வொருவராய்க் கேட்டபோது மறு உத்தரஞ் சொல்லா
மல் தலை குனிந்துகொண்டே யிருக்க, வயதுபெண்ணுகிய அவ
னுடைய அத்தை ராதா கேட்டபோது அவளுடைய தனங்களை
ப்பிடித்துக்கொண்டு 'இவ்வளவு, இவ்வளவு' என்று சொன்ன
தாகச்சொல்லி, அப்படிச்செய்தது லோக சம்ரட்சணர்த்தத்தி
ன்பொருட்டென்று கூறிய சமாதானத்திற்குச் சரியாயிருக்கிற
து. மேலே கூறியபடி, ஆன்மாக்களிடத்து வைத்த கருணையி
ன்பொருட்டு நிரீஸ்வரவாதம் போதிக்கப்பட்ட தென்போமா
னுல், இக்காலத்தில் நிரீஸ்வரவாதம் பரவிவருவது அப்படிப்ப
ட்ட கருணையினுற்றுனென்று சொல்லக்கூடுமே! நல்ல சமா
தானம்!! மகாவிவேகம்!!! நாஸ்திகர்கள் நாள் நட்சத்திரம்
பார்க்கிறதில்லையென்றும் இகழ்ந்து, நிர்ப்பந்தங்களினுல் அவர்க
ள் சில ஆஸ்திகக்கொள்கையை அனுசரிப்பதற்காகவும் இகழ்ந்
து, இவ்வாறு (———)இரண்டும் பேசுகிறவர்களோடு என்ன
தான் வாதிக்கலாம்.

—o—

வாய்ச்சொல்லால்நாஸ்திகன் ஆஸ்திகனானது—சென்னைசிந்தா
த்திரிப்பேட்டையில்சிலநாளுக்குமுன்னே ஒருநாஸ்திகனுக்கும்
மந்திரவாதியாகிய ஒரு ஆஸ்திகனுக்கும் கடவுள் நிச்சயத்தை
ப்பற்றி வாதம் நடந்தபோது, மந்திரவாதி ஒரு கடிதாசியிலே
தேளைப்போல ரூபம் எழுதுவித்து, அதின் கொடுக்கு நுனியில்
நாஸ்திகனுடைய விரலை வைக்கச்சொல்லித் தன் மந்திரபலத்தி
னுல் விஷந் தலைக்கேறச்செய்தான். அவன் உபத்திரவத்தினு
ல் கூக்கூறலிட்டு அதைத் தீர்க்கும்படி வேண்டிக்கொள்ள; அ
ந்த விரலைச் சுவரின்மேல் வைக்கச்சொன்னவுடனே, விஷம் சு
வரிலிறங்கி நோய்தீர்ந்தது. நாஸ்திகனும் கடவுளுண்டென்று
நம்பி ஆஸ்திகனுய்விட்டதாக எழுதியிருக்கிறது.

இது நெடுநாளைய பழங்கதை. அது உண்மையாயின், நாஸ்
திகர்களைத் திருப்பவேண்டுமென்கிற நற்கோரிக்கையுடைய எ
ந்தச்சங்கத்தாராவது ஓர் நாளை நேமித்து அன்றைக்கு நாஸ்திக
க்கூட்டத்தாரை விளம்பரமூலமாய் வரவழைத்து, ஓர் மந்திர
வாதியைக்கொண்டு அப்படிப்பட்ட அற்புதஞ்செய்வித்தால் நா
ஸ்திகர் யாவரும் ஆஸ்திகராய்விடுவரோ! சபைகள், பிரசங்க
ங்கள், வாதங்கள், பத்திரிகைகள் எல்லாம் ஒருமிக்க ஒழிந்து
போகுமே. அப்படிச்செய்ய மந்திரவாதி அகப்படுவது அரி
தாயினும், தற்காலத்திற்குச் சிந்தாத்திரிப்பேட்டையில் நாஸ்தி
கத்தைவிட்டு ஆஸ்திகத்தை அனுசரித்தவருடைய பேரையும் இ
ருப்பிடத்தையும் உள்ளபடி தெரிவித்தால், என் சிநேகிதருட
னே அவரிடஞ்சென்று சங்கதி தெரிந்துதெளிந்து, நாங்களும்
ஆஸ்திகராய்விடுவோம். இது பெரிய உபகாரமாயிருக்கும்.

சிலவேதப்பிராமணர்கள் அதர்வணவேதம் அழிந்துபோயிற்
றென்கிருர்கள். அழிந்துபோகாதிருந்து மந்திரபலமுமிருக்கு
மானுல் "ஏரிநிறைந்ததுமெய்யானுல் அடைகரைபொசியாது."
என்கிறபடி யாகாதிகிருத்தியங்கள்நடத்திப் பிராணபிரதிஷ்
டைசெய்யப்பட்டிருக்கிற விக்கிரகங்களைப் பந்தனஞ்செய்யாம
ல் விமானத்தில்வைத்துத்தூக்கலாமே! சிற்றுத்திக்காடு ஸ்ரீநி
வாசாசாரியரவர்கள்செய்த ஒருபந்நியாசத்திலே, "பொய்ய
ல்லவென்பதை அதில் (வேதத்தில்) சொல்லியபடி செய்துபா
ர்த்து அதுபலிக்குமாகில் மெய்யென்றுநம்பத்தானேவேண்டும்.
அதுகலியின்கொடுமையால் ஒருவேளைபலிக்காமல்போயிற்று,
அப்பொழுதுஎன்ன? அப்பொழுதும்வேதத்தில் சொல்லியமு
றைமையின்படி நாமனுஷ்டித்தோமோயில்லையோ, அனுஷ்டிக்
காததினுற்றுன் பயனில்லையென்று நினைக்கவேண்டும்" என்
றுகூறினர். இந்த சமாதானத்தைத்தான் வைத்துக்கொள்ளவே
ண்டும். அப்படியாயின், மந்திரம் பலிக்காமையால் பிராணனை
டையாதசெப்புவிக்கிரகங்கள்செப்புப்பாத்திரங்களுக்குச்சமா
னந்தானே.

நாஸ்திகன்.

சங்கப்புலவர்கள் சபையில் தூஷிப்பதொழிந்து, சி
லர் பத்திரிகைமூலமாய்த் தூஷிக்கததலைப்பட்டார்கள்.
சென்ற அக்டோபர் - ௬௨உயை யுடைய நமது பத்திரி
கையில் இரண்டு கள்ள நாஸ்திக முதலிமார்களைக் குறி
த்திருக்கிறது. அவர்கள் - உ௬உ சுதேசாபிமானியில்
எல்லாப்புகழையும் சங்கப்புலவர்களுக்கே சொரியவே
ண்டி, முதலில் தத்துவவிவேசினியைச் சிறப்பித்து, ஏ
ழெட்டுமாதகாலமாய் வீண் வார்த்தைகளினுல் அது
பெருமை குறைந்துவருகிறதென்று எழுதினுர்கள். அ
து வாஸ்தவமென்றே ஒப்புக்கொள்ளவேண்டும். அது
மேற்படி சங்க மேற்பட்டகால முதற்கொண்டுதான்.
அவர்கள் நம்மையும் நமது பத்திரிகையையும் தூஷித்
துவந்ததனுல் அவர்களைக் கண்டித்துச் சீர்ப்படுத்தும்
பொருட்டு நாமும் வாதிக்கவேண்டி யிருந்தது. இப்
போது அவர்கள் தூஷணையை முற்றுமொழித்துப்பெ
ருமித நடையை அனுசரிப்பதாகத் தெரியவருவதால்,
இனி நாம் அப்படிப்பட்டவாதம் நடத்துவதற்கு முகா
ந்தரமில்லை. ஆனுல் பத்திரிகைவழியாய்ப் புறப்பட்ட
வர்களோடு மாத்திரம் கொஞ்சம் போராடவேண்டி யி
ருப்பதினிமித்தம் நாம் விசனப்படவேண்டும்.

A. M.

அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்க
ள்பெறுகிற ஒருபிரதிக் கதிசமாக "தின்கர்" என்னும்
இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந்
தமிழ்ப்பிரதியாவது பெறவிருமபினுல், அடியிற்கண்டிரு
க்கிற குறைந்தவீதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணு ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணு உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடு
மாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால்
மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே ஒருஅணு த
பாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இர
ட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடப
க்தி—என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றி
பெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணை
புரிவார்களென்று நம்புகிருேம்.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 46.] MADRAS:—SUNDAY NOVEMBER, 14, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

ஆன்மா.

சிதம்பரத்திலே ஸ்ரீமான் சீனிவாச சாஸ்திரியாராலே பிரசுரிக்கப்பட்டுவரும் "ப்ரம்மவித்தியா" என்னும் பத்திரிகையிலே "ஆத்மாவும் சரீரமும்" என்னும் மகுடத்தின்கீழ் உதகரித்திருக்கும் சில விஷயங்களைப்பற்றிப் பரியாலோசிப்பாம்—நமது தேசத்திலே வெகுகாலத்திற்குமுன்னே சார்வாகரென்றும், சத்தபங்கிவாதிகளென்றும் இருதிறத்து நாத்திகர்களிருந்தார்களென்றும் அவர்கள் மார்க்கங்களையெல்லாம் அப்போதிருந்த பெரியோர்கள் கண்டித்தார்களென்றும் அங்ஙனம் கண்டித்தும் அவை அழியாமல் நாகதாளியைப்போல் மிகவும் பலத்து வேரூன்றிப் படர்ந்தனவென்றும், நாம் கேட்டமட்டில் ஒருதேசத்தாராவது சுத்தமாய் நாத்திகத்தை மதமாய்க் கொண்டவரில்லையென்றும், எல்லாமதங்களிலும் தத்துவ ஆராச்சியிற் சோம்பலுள்ள சிலர் பேதைகளைப்போல் கண்டதெல்லாம் சத்தியமென்றும் மேற்கேயுதித்த மகான்கள் கொண்டதெல்லாம் குருவாக்கியமென்றும் இக்காலததில்கொள்ளும் சிலரைப்போல முற்காலத்திலும் இருந்ததாகக் கேள்வியென்றும் கூறுகின்றார்.

இங்கே சாஸ்திரியார் நாத்திக மென்பதற்குத் தாம் கொண்ட பொருள்தானென்னையோ; ஒருதேசத்தாராவது சுத்தமாய் நாத்திகத்தை மதமாய்க்கொண்டவரில்லை யென்ற இவரே, தான் வசிக்கும் இவ்விந்துதேசத்திலேயே சார்வாகரென்றும், சத்தபங்கிவாதிகளென்றும் இருதிறத்து நாத்திகர்களிருந்தார்களென்று கூறுவதென்னையோ? ஒருவேளை ஒருதேசத்தாராவது முழுதும் நாஸ்திகராயில்லையென்பது இவர் கருத்தாகவிருக்கலாம்; அப்படியாயின் முழுதும் நாஸ்திகமாயில்லாமையினாலே நாஸ்திகத்திற்குவரும் கௌரவஹீனமும், முழுதும் நாத்திகமாயிருப்பதினால் அதற்கு வரும் கௌரவமும் யாது? அப்படியேயாவது ஓர் தேசமுண்டென்று ஆத்திகர்களாலேயே சான்றுபகரப்பட்டால் அப்போது சாஸ்திரியார் என்சொல்வார்? எல்லாமதங்களிலும் தத்துவ ஆராய்ச்சியிற் சோம்பலுற்ற சிலர் பேதைகளைப்போல மேற்கேயுதித்த மகானகள் வாக்கெல்லாம் குருவாக்கியமென்று நம்புகிறதாகத் தோஷாரோபணம்செய்யவந்த சாஸ்திரியாரோ வாய்ப்பேச்சுமட்டில் நில்லாமல் தாம் சோம்பலின்றிக் கற்ற தமது மத தத்துவக்கியானவலத்தால் அப்புவைப்பிரித்து அதில் இன்னின்ன ஆதாரபூதங்களிருக்கின்றனவென்று பிரத்தியக்ஷத்திற் காட்டவல்லாரா? திரும்ப அவ்வாதாரபூதங்களைப் பழயபடி ஜலமாக்கிக் காட்டுவாரா? காட்டாதொழிவரேல் இவர் தம் வாய்மொழியில் நிரபிமானிகள் ஒருவரும் விசுவாசம் வையார்; நாங்களோ மதத்தத்துவங்களிற்சோம்பலுற்றோன்றுஇவரால் பெயரிடப்பட்ட மேற்கேயுதித்த மகான்களிடம் கற்றுச்சொல்லிகளில் ஒருவரைக்கொண்டே அங்ஙனம் செய்விக்கின்றோம். இதற்கேனும் புறங்கொடுக்காமல் முன்வரட்டும் பார்ப்போம். "முற்காலத்தில் பெரியோர்களால் வேரறுபட்ட இந்நாத்திகமதம் தற்காலத்தில் அனேக கருவிகளையும் வைத்திய நூற்களையும் துணைக்கருவிகளாய்க்கொண்டு நம்மவரைப் பகட்டிவருகின்றது" என்கிறார். முற்காலத்துப் பெரியோர் நாத்திகத்தையெப்படி வேரறுத்தார்? கைவாளைக் கொண்டா! நாவாளைக்கொண்டா? கைவாளைக் கொண்டு நாத்திகரைமாத்திரமா வேரறுத்தார், தம்மினின்றுங்கொள்கை வேறுபட்ட சகல மதத்தினரையும்வேரறுத்தார்கள். இதற்குப் புராணாதி இதிகாசங்களே சாக்ஷி. நாத்திகத்திற்கு நாத்திகர் வேரன்றே; ஆத்திகத்திலுள்ள ஆபாசமே நாத்திகத்திற்கு வேராமென்றறியக்கடவர். ஆத்திகத்தின் ஆபாசத்தைப் போக்கியிருப்பார்களேல் நாத்திகம் இல்லையாமே: இப்போதும் அவர்கள் நாத்திகத்தை இன்னின்னவாறு வேரோடு அறுத்துவிட்டார்களென்று பழய நூற்களில் காட்டலாமே. யாதொன்றையும் சொல்வது பிரயாசையா, அவ்வாறுசெய்வது பிரயாசையா? நாங்கள் சொல்லை மெச்சோம் செய்கையையே மெச்சுவோம். சரீரத்தின் ஓர் பாகமாகிய மூளைக்கே அறியுந்தன்மையுண்டு என்று பிறர் கூறியதை இவர் மறுத்தாராம். இவர்மறுப்பு இவருக்கே வியப்பாயிருக்கிறதுபோலும்! அதனின் வேருகிய மனத்தின் தத்துவத்தையும் விரித்தாராம்; பின்னர் அதற்குநாதனான சீவதத்துவத்தை விரிக்கப்போகின்றாராம், கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளையில் என்பது இதுதான்போலும்; தேகத்திலே மனம் என்னும் பொருள்யாது! ஜீவன் என்னும் பொருள்யாது? மனத்திற்கு ஜீவன் நாதனேல் ஜீவனுள்ளவரையில் மனமிருத்தல்வேண்டும், அன்று பிறந்த குழந்தைக்கும் ஜீவனுண்டே, மனமுண்டா? நல்ல விவேகாத்மிக்கு குளோரபாரம் என்னும் மயக்கம் ஈந்தபோது ஜீவனுண்டே, மனமுண்டா? உண்டெனின் அதை சாஸ்திரியார் எப்படி யுணர்ந்தார்? அனுமானத்தாலெனின், அனுமானத்தால் மனந்தன்மையல்ல பொருள்தான் என்று எப்படி துணிதல் கூடும்? **விவேகிகளே; ஆத்துமா என்பதுயாது!** என்னும் வினவிற்கு சாஸ்திரியார் கூறும் விடையைப்பாருங்கள். "மூளைக்கு அறியுந்தன்மை ஒவ்வாது, அது மனத்திற்கு ஒரு ஸ்தானம்தான். அதைப் புத்தி யென்பதற்கு அனேக ஆக்ஷேப மிருக்கின்றமையால் **ஆத்துமா என்பது** சரீரத்திலுள்ள **எல்லாஉறுப்புகளிலும் வேறுபுள்ளதே;** அதன வடிவு அறிவே, அவ்வறிவும் பொருளேயொழிய குணமல்ல." என்கின்றதனால் ஆத்மா அறிவென்று தேறுகிறது. ஆகவே அறிவாகிய ஆத்மா தேகத்தின் உறுப்புகள் ஒன்றும் அல்லாவிட்டால் அது தேகத்திற்குப் புறத்தில் அதாவது வேறிடத்தில் இருத்தல்வேண்டும். இங்ஙனம் இருப்பதானால் அதனோடு சம்பந்தப்படாத தேகத்தின் யாதானும் ஓர் பிரதானஉறுப்பிற்குப் பின்னமுண்டானால் அத்தேகத்தினிடமாய் விளங்கிய அறிவாகிய ஆன்மா விளங்காம லிருப்பதேன்? ஆன்மாஅறிவென்று முடித்ததனால் அது பொருளே யென்பதெங்ஙனமமர்கும்? தாம் குறித்த பொருள் தேகத்திலுள்ள மூளையல்ல இதுவல்ல அதுவல்லவென்றதனாலேயே அப்பொருளின் இலக்கணம் ஏற்பட்டுவிடுமா? இதுதானு சஸ்திரியார் பன்னிப்பன்னிப்படித்த தருக்கசாஸ்திர வலிமை!

சொற்களுக்கெல்லாம்பொருளுண்டா ?

இப்பத்திரிகையிலே சிலவாரங்களுக்கு முன்னே பிரசுரித்த ம-ா-ா-ஸ்ரீ கந்தசுவாமிப்பிள்ளையவர்களுக்கும் எமக்கும் புதுவையில்நடந்தவாதத்திலே யாம் அவரைநோக்கிக் **கடவுள்** என்னும்சொல்லிற்கு நீவிர் கண்டபொருளென்னையென்று அப்பெயரால்சூசிக்கப்படும் இலட்சியவஸ்துவைக் கேட்டோம். அதற்கவர் "பொருளில்லாதசொல்லும்உண்டோ? என்று ஆச்சரியத்தோடுவினவினர். அதற்குயாம் பொருளில்லாதசொல்லும் கோடி கோடியாய்உண்டு என்றேம். "பொருளில்லாதசொல் இல்லவேயில்லையென்று சாதிப்பேன்" என்றார். இப்படி வாய்ச்சொல்லோடுபோகாமல் கைநாட்டும் பலர்முன்னிலையில்வைத்திருக்கின்றார். ஆகையால்முனைவைத்தகாலைப்பின்வாங்காமல் வெளிவந்து நியாயாதாரத்தோடு சாதிப்பாராக.

ஐயா; கந்தசுவாமிபிள்ளையவர்களே; நமதுவீட்டின்சிறுகுழவிகளைப்பயமுறுத்தற்பொருட்டு 'ஐந்துகண்ணன்' வருகிறான 'மூடாவிழுங்கி' வருகிறான் 'ஆள்விழுங்கி' வருகிறான என்று சொல்லும் கற்பனைசொற்களுக்கெல்லாம் இலக்ஷியப் பொருள்களுண்டா? இதுபோலவே யோசனைபுருஷத்துவமற்ற அறிவிற்சிறியகுழவிபோன்ற சிலபேதைகளை அச்சமுறுத்துதற்பொருட்டுக் கடவுளென்றும், பூதபைசாசங்களென்றும், சுவர்க்கமென்றும், நரகமென்றும், சிலகற்பனைசொற்களைச்

சிருஷ்டித்திருக்கிமுர்கள். இவற்றிற்கெல்லாம் இலக்ஷியப்
பொருளுண்டா? உண்டேல் நீர்காட்டுவீரா அல்லது ரூபிப்
பீரா? வாதம்நடந்தஅன்று இச்சொற்களில் ஒன்ருகிய கடவு
ள்என்பதை நிரூபிக்கமுடியாமல் ஐம்பது தஸ்தாவில்மறைந்து
இன்னும்வெளிவராதிருக்கின்றீர். அவ்வைம்பது தஸ்தாவெழுதி
யின்னும் முடியவில்லையா? எப்போதுமுடிப்பீர், எப்போது
வெளிப்படுவீரென்று புதுவைநண்பர்களும் ஏனையோரும் எதி
ர்ப்பார்த் திருக்கின்ருர்கள். இதுவல்லாமலும் இலக்கணநூ
லார் அசைச்சொற்களென வெடுத்திருப்பவற்றிற் கெல்லாம்
பொருளைக்காட்டமாட்டுவீரா? மாட்டுவீரேல் சீக்கிரம்வெளிவ
ந்துகாட்டும்படிப் பிரார்த்திக்கின்றேம்.

பு - முனிசுவாமிநாயகர்.

விவிலியவற்புதங்கள்.

(178-வது பக்கத்தொடர்ச்சி.)

16. ஜாசுவா X. 12-13 இந்த வாக்கியங்களை வாசிக்குமிட
த்து சூரிய சந்திரா ளிருவரும் ஓர் காலத்தில் ஓர் நாள் முழு
வதும் தத்தம்நிலைபெயராமல் வானத்தில் நின்றிருக்கும்படி
தடைசெய்யப்பட்டதாக அறிகிரேம். இந்த அற்புதமானது
சாதாரணமாய் இந்துக்களுக்குள் வழங்கிவரும் ஓர் கதையை
ஞாபகப்படுத்துகின்றது. அதாவது: ஓர் பத்தினிக்கு ஓர் முட
வன் பதியாக விருந்தானும்: அவன் அவளை தினந்தோறும் த
ன்னை ஓர் கூடையில்வைத்து தலைமீது எடுத்துக்கொள்ளச்
சொல்லி ஓர் தாசிவீட்டுக்குக் கொண்டுபோகச்சொல்லுகிறதுவ
ழக்கம். அவள் அவ்வாறே அவனை மாலைதோறும் தாசிவீட்
டுக்குக் கொண்டுபோய்விடுவதும் பிறகு காலைதோறும் வீட்டு
க்கு எடுத்துக்கொண்டுவருவதுமா யிருக்குங்காலையில், ஒருதி
னம் அதிகாலையில் வானங்கறுத்து இடியிடித்து மின்னல்மின்
னி காற்றுமழையும் கலந்தடிக்க, கருக்கிருட்டில் வழியிலே
ஓர் கழுமரத்தில் ஏற்றப்பட்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்
த ஒருரிஷியின்காலில் அவள் தலைமீதிருந்த கூடைபட்டு அ
வனுக்குப் பெரும் உபத்திரவத்தை விளைத்தபடியால், அவன் ச
கிக்கொணுத் துன்பத்தையுற்றவனுய் மெத்தவும் கோபித்து மு
டவனைநோக்கிப் பொழுதுவிடிந்தவுடனே உன்பெண்சாதிதாலி
யறுப்பாள் என்று சாபமிட்டான். அதைக்கேட்டஅவள் தன்
புருஷன் இறந்துவிடுவான் என்கிற பயத்தினுலே பொழுதே
விடியக்கூடாதென்று சாபத்திற்குமேல் மறுசாபமிட்டாள். அ
தேபிரகாரம் வெகுநாளாய்ப் பொழுது விடியாமற்போய்விட்
டது. அதைக்கண்ட பிரம்ம விஷ்ணு முதலாகிய தேவர்களெ
ல்லாம் ஒருவரோடொருவர் கலந்துபேசி சிவனிடத்திற்போய்
முறையிட சிவன் அவர்களையெல்லாம் சூரியனிடத்திற்கனுப்ப,
சூரியன் அவர்களை பத்தினியினிடத்திற்கனுப்ப, அப்பத்தினியா
னவள் கழுவில்தொங்கியிருந்த ரிஷியினது சாபம் நிவர்த்தியா
னுல் தன்னுடைய சாபம் நிவர்த்தியாகுமென்றுசொல்ல, அவ
ர்களெல்லாம் அந்த ரிஷியினிடத்திற்குப்போய் சாபத்தை நிவ
ர்த்திசெய்வித்துவிட்டார்கள். அதன்பிறகு அப்பத்தினியான
வள் தானிட்டசாபத்தை நிவர்த்திசெய்தபிறகு சூரியனும் தன்
னுடைய ஏழுகுதிரைகள்பூட்டிய இரதத்தின்மீதேறி வானத்தி
ன்கண் சவாரிசெய்யவாரம்பித்தானும்: அப்பொழுதே பொ
ழுதும், விடிந்ததாம். ஆ! ஆ!! இதுவும் ஓர் நல்லஅற்புதமே!

17. நீதிநிரூபர்கள் I. 39. இதனை வாசிக்குமிடத்து யூதா
என்பவன் கடவுள்சகாயமிருந்தும், மலைநாட்டுச் சனங்களை
மாத்திரம் துரத்தியடிக்கச் சக்தியுள்ளவனு யிருந்தானென்று
ம், மற்றவிடங்களி லுள்ளவர்கள் இரும்பினுற் செய்யப்பட்ட
ரதாரூடர்களாக விருந்தபடியால் கடவுள்அவர்களை வெல்ல அ
சக்தரா யிருந்தாரென்றும் அறிகிரேம். இவ் வற்புதத்தோடு
சிவன் திரிபுரம் எரித்த அற்புதத்தை ஒப்பிடுங்கால் சிவனே ஏ
கோவாவினும் மிக்கவலியுடையவனுகத் தோன்றுகின்றது.

18. இரண்டாம் இராஜாக்கள் VI. 5, 6, வசனங்களைவாசிக்
குமிடத்து ஜலத்தில்வீழ்ந்து ஆழ்ந்த இரும்புக்கோடாலியானது
மீண்டும் கிளம்பி மிதந்ததாக அறிகிரேம். இவ்வற்புதம் சுந்
தரமூர்த்திநாயனுருக்கு செங்கற்களையைப் பொற்கட்டிகளா
க்கி ஆற்றில் எறியவிட்டு வீட்டிற்குப்போகச்செய்த அற்புதத்
தை யொத்திருக்கின்றது.

D.

மெய்யறிவு.

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

(179-வது பக்கத்தொடர்ச்சி.)

தூக்கத்தில் ஒருமனிதன் தன் பக்கத்திலே ஒருபண
முடிப்பைக் கண்டதாக விவகரித்தான்; விழித்துக்கொ
ண்டவுடனே பணமுடிப்பு காணப்படாமையால், அவ
னும்சூட்சுமந்தான், பணமுடிப்பும் சூட்சுமந்தான். ஒரு
வன் தன் சிநேகிதனிடத்திற் போய், இருவரும் கலந்து
பேசினபிறகு, தான் நாற்காலியில் உட்கார்ந்து ஒரு மே
சையின்மேல் ஒருகடிதாசியிலே பென்சலினுல் எழுதி
னதாக விவகரித்தான். இதில் முதல் மனிதனுடைய
சூட்சும தேகமும் சினேகிதனுடைய சூட்சுமதேகமும்
கலந்துபேசின. விழித்துக்கொண்டபின்பு தான் பே
சினதாக அந்த முதல மனிதன் சொல்லுவதுபோ
ல அந்தச் சினேகிதனும் தான் பேசினதாகச் சொ
ல்லுவானு? அது எந்தநாற்காலி? எந்தமேசை?
எந்தக்கடிதாசி? எந்தப்பென்சில்? அவை ஸ்தூலமா,
சூட்சுமமா? ஸ்தூலமானுல் அவை எங்கே? அவை
காணப்படாமையால், சூடசுமமாகத்தா னிருக்கவே
ண்டும். 'தூணிலு மிருப்பான், துரும்பிலு மிருப்பா
ன்;' 'அனைத்துமாய் நின்ருயே யான்வேறே நின்னைநி
னைக்குமா றெங்கே நிகழ்த்தாய் பராபரமே,' என்ருற்
போல, சகலத்திலும் ஆத்துமா வியாபித்திருக்குமாயி
ன், அறிவுவிளங்கவேண்டும், விளங்கவே நினைப்புண்
டாக வேண்டும், ஆதலால், நாற்காலியானது தன்மேல்
உட்கார்ந்து வருத்துகிருர்களேயென்றுநினைத்து துக்கிக்
கிறதாக்கும்; மேசையோ மக்கட்குஅனுகூலமாக தான்
உதவியாயிருப்பதை நினைத்து சந்தோஷிக்கிறதாக்கும்!
மற்றவைகளும் இப்படியே. இந்தச்சூட்சுமதேகந்தா
னு ஆத்துமா, அலலதுவேறென்ன? நாம் இறந்தவுட
னே மறுஉலகத்திற்கு செல்வது இந்தசூட்சும தேகந்
தான்போலும். சூட்சுமதேகம் ஸ்தூலதேகத்திற்கு ளி
ருப்பதுபோல அதற்கு வெளியிலுமிருக்கக்கூடியதாயி
ன், ஸ்தூலதேகம் உபயோகமற்றதாகும்; அப்படிக்கன்
றி, தன்தொழில்களைவெளியிட ஆத்துமாவிற்கு ஸ்தூ
லதேகம் வேண்டியிருக்குமாயின், ஆத்துமா அதைவிட்
டு வெளிப்பட்டவுடனே தொழிலற்றதாகிவிடும். இவ்
விரண்டுவழியிலும் யோசித்தால், மதஸ்தர்கள் ஆத்து
மாவைப்பற்றி என்னசொல்லுவார்களோ? 'ஆத்துமா
வானது நினைக்குந் தொழிலுக்குத் தலை மூளையைத்
தனக்குககருவியாக உபயோகிக்குமானுல், நினைப்பெ
ன்பது ஆத்துமாவின்முயற்சியும் சரீரக்கட்டின் தன்
மையும் ஒன்றுசேர்ந்தே உண்டானதாகும்; ஆகவே,
அந்நினைக்குந் தொழிலைத் தனித்துச்செய்ய ஆத்துமா
விற்குச் சக்தியில்லாமற் போயிற்றென்பதாயிற்று' எ
ன்று (Sir Charles Morgan) ஸர்சாரல்ஸ்மார்கன் எ
ன்பவர் அவருடைய (Philosophy of Morals) நீதிநெ
றிமுறைத்தத்துவசாஸ்திரத்திலசொல்லியிருக்கிருர்.

ஞானவாசிட்டத்தில் காதிகதை யொன்றைமாத்திர
ம் வாசித்து அதின்உண்மையை ஆராய்ந்தால் சூட்சும
தேகத்தின் பெருமையும், பிரபஞ்சம் மாயாப்பிரபஞ்
சமானதும் நன்ருய்விளங்கும்; காதி கனவுகண்ட கா
லத்தையும், அவன் நீசனுய்ப் பிறந்து விருத்தனுகி பி
ன்பு எட்டுவருஷகாலம்ராஜனுயிருந்ததாகக் கனவிற்செ
ன்றகால அளவையும், கனவுஒழிந்து அறிவோடு விவ
கரித்துக்கொண்டிருக்கையில் மேற்கண்டசங்கதிகள் உ
ண்மையாய்நடந்தவைகளாகத் தான் கண்டறிந்ததாய்
வேறெருமுனிசொல்லக்கேட்டகாதி தானும்போய்பா
ர்த்து உண்மையானவைகளாகவேகண்டறிந்து வியப்பு
ற்றதையும் யோசிப்போமாகில், மெய்யாகத் தோற்று
ம் ஜகத்தைப்பொய்யெனக்கருதிய ஒருவன் தான்கொ
ண்டகருத்தைமுடித்துக்காட்டஅப்படிப்பட்டகதை க
ற்பிக்கப்பட்டதென்ருல் தோஷமில்லை; அப்படிகல்ல
வென்ருல், கதைக்குக் காலில்லையென்பதாகக் கதை
வெறுங்கதையாகவே முடியும்.

சூட்சுமதேகத்தின் காரியங்களென்று சொல்லப்படு
பவையெல்லாம் தூக்கமயக்கத்தில் மனது நினைக்கிற
அவஸ்தையேயல்லாமல் வேறல்ல. அந்த அவஸ்தை
களில் சில நமக்கு இன்பமாயும் சில துன்பமாயும் தோ
ற்றும். மனிதன் விழித்திருக்கும்போதும், உண்மையா
னகாரியங்களை யோசிப்பதுமுதலிய தொழிலினுல் மிக
வும் அலுத்தாவது அவ்விதத்தொழிலைச் செய்யாமல்

சோம்பலினாலாவது ஆசோதையாய்சற்றுநேரம் சும்
மாவிருப்பானாகில், அச்சமயத்திலே மனசானது அப்
படிப்பட்ட வினைவியாபாரம்நடத்துவதுண்டு. தூக்
கமயக்கத்தில் மனசு நடத்துகிற அவ்விதவியாபாரம்
கனவென்று சொல்லப்படுகிறது. ஆதலால், சூட்சும
தேக மொன்றிருக்கிறதென்று நினைப்பதே கனவுதான்.
இப்படி கனவு காணுகிறவர்கள் தங்கள் கனவினின்று
ம் எவ்வளவு சீக்கிரத்தில் விழித்துக்கொண்டு, அவ்வப்
பொருளை உள்ளபடி ஆராயகிறார்களோ அவ்வளவுசீ
க்கிரத்தில் நன்மை பெருகும். சூட்சுமதேகமென்பது
ஒன்றில்லையென்பது கனவைப்பற்றி எழுதுகிற அடுத்
த மூன்றுஞ்சஞ்சிகையில் நன்றாய்விளங்கும்.

பின்னுமொருசங்கதியை யோசிப்போம். ஒருவன்
தூக்கத்தில் கண்டகனவு அவன்விழித்துக்கொண்டவு
டனே பொய்யாய்ப் போவதுபோல, பிரபஞ்சமும்
பொய்யென்று யாவரும்சொல்லுகிறார்கள். ஆத்துமா
சரீரத்தைவிட்டுநீங்கினபின்பு அதுஅறிவோடுங்கூடியி
ருந்தாலொழிய, தன்னைநோக்கித்தன்மக்கள் இவ்வுலக
த்திலேசெய்யுங்கருமங்களைஏற்றுக்கொள்ளமாட்டாது:
ஏற்றுக்கொள்ளுகிறதென்பதினால், அது தான்முன்னி
ருந்த இடத்தையும் தன்மக்களையும் அவர்களிருப்பிட
முதலியவற்றையும் அறிந்தே யிருக்கவேண்டும். அப்
படியிருக்க, மேற்படியிடம், மக்கள், முதலியவையும்
தான் அடையும்பலனும்* உண்மையாயிருக்கையில், அ
ந்தஆத்துமாவிற்கு உலகம் எப்படி பொய்யாயிருக்கிற
தோ தெரியவில்லை. சரீரத்தைவிட்டு ஆத்துமாபிரிந்த
வுடனே, சடமாகிய தேகம் அழிந்துபோகிறதென்பது-
மண்ணாய், சாம்பராய், தூசாய், புல் பூண்டு லோகம்மு
தலிய உயர்வுதாழ்வான பற்பல சடபதார்த்தங்களில் க
லந்து மாறிமாறி எப்போதும் எந்தபாதார்த்தமாகவா
வதுசடபதார்த்தம் சடபதார்த்தமாகவே இருக்கவேண்
டியதல்லாமல் சுத்தமாய்ஒன்றுமில்லாமல்அழிந்துபோ
வதைக் காணோம். ஆகலால்,முன்னோர்கள்சரீரத்திற்கு
'மெய்' எனப் பெயரிட்டதும் மெய்யே, அந்தப்பெ
யர் அதற்கேற்றிருப்பதும் மெய்யே, அந்தப்பதார்த்த
த்தைப் பொய்யெனச்சொல்வாரும் பொய்யே, அவர்
கள் அப்படிச்சொல்லுகிறசொல்லும்பொய்யே.

(இன்னும்வரும்.)

கடிதங்கள்·

எல்லாம்வல்லஓர்முழுமுதற் பழம்பொருளுளதோ ? இலதோ ?

அறிவிற்சிறந்தபெரியோர்களாகிய ஆத்திகநாத்திக சம்பந்த
முடைய பலருக்கும் வந்தனபூர்வகமாய் தெரிவித்துக்கொள்
ளும் விண்ணப்பமாவதியாதெனின், தாய்தந்தையின்றிச்சேய்
ஜனிப்பதில்லையென்பது சர்வசம்மதம். ஆகவே "அன்னையு
ம் பிதாவுமுன்னறிதெய்வம்," என்று ஔவையாரும்கூறினாள்.
நாத்திகரென்பார் பிரத்தியேகமான ஓர் தேசத்தாரோ, வம்ச
பரம்பரையானபிரத்தியேக சமையத்தாரோவென விசாரிக்க
ப்புகின் அப்படிக்கில்லை. எக்காலத்திலும் அவரவருடையஞா
னத்தைத் தொடர்ந்துண்டானவர்களாகக் காணப்படுகிறார்கள்.
எக்கண்டத்திலும் ஆத்திகரோ நிறைந்துள்ளார். இக்கியானிக
ள்மத்தியில் இவர்களுக்குப்புத்திரபௌத்திரர்களாயுதித்தார்க்
கு மாதாமுலைப்பாலூட்டும்போதே, பதிக்கியானத்தையூட்டிப்
பேசத்தொடங்கியநாள்முதல் கடவுள்நாமத்தையே பாராய
ணம்செய்வித்துவந்ததனால் சுவபுத்திஅழிந்து கடைநாள்பரிய
ந்தம் கடவுட்கியானிகளாய் வாழ்கின்றனர். அன்றியும், அர
சுஎவ்வழி குடிகளவ்வழியாதலாலும், ராசதெண்டனைகொடு
மையாலும், நாஸ்திகம்பரவுவதற்குத் தடையுண்டாயிருந்தது
வேதாகமபுராணாதிகளில் சந்தேகம்ஜனித்து எல்லாம்வல்லகர்
த்தா உளதாவென விசாரித்தலால், கடவுள்கியானிகளுக்கு
நேர்ந்தசங்கடமென்னையோ தெரியவில்லை; சுவக்கியானிகள்
கேள்விக்கு விடைபகரவறியாத சுருதிக்கியானிகள் புறங்கூறி
த்திரிவதால் லாபமென்னை ?

சைவசமயாசாரியராகிய மணிக்கவாசகர் தமது திருவாச
கத்தில் போற்றித் திருவகவல் சகவுற்பத்தியில் "ஆத்தமானா
ரயலவர்கூடி, நாத்திகம்பேசி நாத்தழும்பேறினர்" என்றும்,
அதன்கீழ் பத்[illegible]டியில் "உலோகாயதனெனு மொண்டிறற்
பாம்பின்" [illegible] பாடக்கேட்டெழுதி, எழுதியநன்மைக்கு
த்திருச்சிற்றம்பலமுடையான்என்றும் கையெழுத்தும்வைத்த
சிவபெருமான் இந்நாத்திகர் மனதைத்திருத்தி சிவஞானம்
போதிக்காது நாத்திகத்தைவிருத்தியாக்கி இப்போதுசுவஞான
ம்போதித்ததென்னையோ! "அவனசைந்திடிலொருவனு வசை
ந்திடும், அவனசையாவிடி லணுவசைந்திடா" என்று சிவஞா
னவள்ளலாரும் "நினைப்பித்தா நித்தா நிமலாவென நீ நினைப்
பித்தாலேழையேனினைப்பேன்" என்று இராமலிங்கப்பிள்ளையு
ம் "ஆட்டுவித்தா லாரொருவராடாதாரே" என்று நாவுக்கரச
ருமுறையிட்டிருக்கின்றபடி எல்லாம்வல்லசிவம் நாத்திகரை
யாட்டுவிக்கிறதெனில்; அதற்குமாறாக ஆத்திகரொன்றும் பே
சக்கூடாதல்லவா? பண்டைக்காலத்தி லுதித்திருந்த மூத
றிவையும் விசேஷவிஷயகியானமுமுடைய சிலருஷிகளொன்
றாய்ச்சேர்ந்து சங்கங்கூடி, அக்காலத்தில் மூடஜனங்கள் த
ம்மனம்போனபடி திரிவதைக்கண்டு ஒருகட்டுப்பாட்டிற்கடங்
கி ஒற்றுமைபெற்று அமைதியாய்வாழ்நதொழுகவேண்டி, ஒரு
விதபயத்திற்காட்படுத்தினாலன்றி அடங்கிநடவாரெனக்கண்டு,
நால்வகையோனி, எழுவகைத்தோற்றம், எண்பத்துநான்குல
க்ஷம்பேதமாகிய தனு, கரண, புவன, போகங்களைக்கொடுத்து
ஓரறிவ்,ஈரறிவு,மூவறிவு,நான்கறிவு,ஐந்தறிவையுடைய ஜீவபே
தமுடையனவாய்நின்றமுக்காலத்துநிகழுமல்லாச்சொரூபங்க
ளுந்தாமாய் குருத்துவம், இயக்கம்,ஆகருஷணம், உருத்திரிதல்
முதலியவற்றையெல்லாங் குணங்களாக வுடையனவாய், யா
ண்டுமுள்ளனவாய், உண்மைப்பொருளாகியசத்துப்பொருளா
ய்நிற்கும் ஐந்துபூதங்களையும், அவற்றின்தொழில்களையும் ஐந்
துகர்த்தாக்களாக்கி தொழிலேற்படுத்தி, அவற்றிற்கு ஒட்டல
ங்காரமாக நாமரூபமாதிகற்பிதஞ்செய்து, அக்கடவுளரைவழி
பட்டுவணங்குவார்க்கு மோக்ஷமென்றும், அதின்சுகமித்தகை
யதென்றும் நயங்காட்டி, கடவுளரை வணங்கார்க்கு நரகம் ச
ம்பவிக்குமென்றும், அதிலித்தகையவேதனை யனுபவிக்கவே
ண்டுமென்றும் பயங்காட்டி, அக்கடவுளருக்குப் பத்தினி,
புத்திரர், இருப்பிடமாதி நாமரூபங்கள் கற்பிதஞ்செய்து, வந்
தனை, வழிபாடு, பூசை, பலி, நைவேத்தியமென உபாசனாதிக
ளேற்படுத்தி, தந்திரமாதி மந்திரம், எந்திரம், யாகம், கர்மம்,
முதலிய விசித்திரசட்டங்களும் அவற்றிற்குமூலமந்திர மாதிக
ற்பிதங்க ளியற்றி யவற்றைப் பிரதிபாலிக்கு மவற்றிற்கு வே
தம், ஆகமம், இதிகாசம், புராணம், கலைக்கியானம், கன்மகா
ண்டம் என விரிவான காவியங்க ளியற்றினார்கள். பிற்காலத்
தில் சிறந்த மூதறிஞர்கள் அங்கங்கே சங்கங்கள் சேர்ந்து அ
வைகளை ஸ்திரப்படுத்தி அவற்றிற் கனுசரணையான இதிகாசங்க
ளை அலங்காரமாக அனேக காவியங்களாலெழுதி, கவிசாதுரி
யத்தைக்காட்டிய கவிகளின் சாமர்த்தியத்தை மெச்சிக்கொள்
ளவேண்டியதே. மதிவலியற்ற கியானசூனியர்களுக்குக் கற்சி
லைகளைத் தெய்வமாகப் பாவிக்கும்படி மூடருக்கு முன்குருவா
ய்த் தோன்றிய முன்னவர்கள் பண்டையோகிகளுடைய கருத்
தைக்கொண்டு கல்லு, செம்பு, பொன், வெள்ளி முதலிய உ
லோகத்தில் சிலைகளை யமைத்து, பதி, பத்தினி, புத்திரர் முதலி
ய அடியார்குழாங்க ளமைத்து, பூசை, பலி, நைவேத்தியமா
தி ஆசாரபேதங்க ளேற்படுத்தி காலத்துக்குத்தகுந்தகோலமா
கக் கற்பிதக்கடவுளர்களாதி யேற்படுத்தினார்கள்; ஆகவே இ
க்காலத்தில் பலபேதமான சமயங்களையும், கோடிக்கணக்கான
தேவர்களையும் அனுசரித்துத் தொழவேண்டியதாயிற்று. நா
ளேற ஏறக் கடவுளரும் கற்பிதக் கட்டுக்கதைகளும் ஏற்பட்டுக்
கொண்டேவந்தன. "கெட்டிக்காரன்புளுகு எட்டுநாளையில்
தெரியும்" என்பதாக யோசனா புருஷத்துவ முடையவர்களுக்
கு வேதாகமாதிகளிலிருக்கும் வழுக்கள் விளங்காமற்போகா,
இக்கட்டுக்கதைகளை ஒப்புக்கொள்ளாது மறுத்து, அவற்றில்
நம்பிக்கையில்லாது அதிலுள்ள வழுக்களை எடுத்துக்காட்டிக்
கண்டிப்பதே சுவஞானிகள் கூற்று. பிராமணப் பிழைப்புக்கி
டமாகிய மெய்யும் பொய்யும் மடமையுங் கலந்த கட்டுக்கதைக
ளை நம்பி மோசம்போகாமல் மதப்பித்து மண்டைக்கேறி மதிம
ருண்டு கிடப்பாரைத் திருத்திக் குற்றத்தைக் கடிந்து குணத்
தைக்கொள்ளும்படி வற்புறுத்தி புத்திபுகட்டுவாரை நாத்திகரெ
னப் பெயரெடுத்த சுவக்கியானிகள். "காலமொருமூன்றுங்
கருத்திலுணர்ந்தாலுமதை, ஞாலந் தனக்குரையார் நல்லோர்
பராபரமே" என்ற தாயுமானவர் வாக்கின்படி மவுனம்சாதிக்
காததே சுவக்கியானிகள்பால் நேர்ந்த குற்றம். பித்தர் கூத்தை
க்கண்டு ஆனந்திப்பதோ சித்தத்தின் பெருமை?

சமயாசாரங்களைத் தழுவிவந்த பல ஞானிகள் கற்சிலைகள்
தெய்வமாகாதென்று தங்களாலியன்றவரையிலும் கண்டித்து
ப் பலபாடல்களைப் பாடியுமிருக்கின்றார்கள். "சாத்திரக் குப்
பையைத் தள்ளுங்கடி வேத சாத்திரப்பொத்தலை மூடுங்கடி"
என்றும் "சின்னஞ்சிறியார்கள் செய்த மணற்சோற்றையொக்
கும், மன்னுங்கலைஞானமார்க்கம் பராபரமே" என்றும் "நட்
டுவைத்ததேவரும் நடாமல்வைத்ததேவரும், சுட்டுவைத்த தே
வரும் சுடாமல்வைத்ததேவரும், கட்டிவைத்தபுத்தகக் கதைக்
குளே புரட்டெலாம்" "சாவதான தத்துவச் சடங்கு செய்யு
மூமைகாள், தேவர் கல்லுமாவரோ சிரிப்பதன்றி யென்செய்

வேன்" "நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பஞ் சாத்துறீர், சுற்றிவந்து முணுமுணென்று சொல்லு மந்திரமேதடா, நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில், சுட்டசட் டிசட்டுவம் கறிச்சுவை யறியுமோ" "கல்லுகளைச்செம்புகளைத்திராக்கடம்மைக், கனமானமரங்களையுந் தெய்வமென்று, சொல்லுகின்ற குருக்களுக்குஞ் சிஷர்மார்க்குஞ், சொர்க்க மில்லை எழு நரகந்தானு னிற்பர்" கல்லைப் பிளந்து சிறுசிலையாகக், கம்மாளன்செய்வதைக் கண்டிருந்தும், எல்லைப்பிடாரி இது சிவலிங்கமென், றேத்திப்பணிந்திடு மிடும்பனல்லோபேயன், நானடாபேயன் அடண்ணே நானடாபித்தன்" "கல்லிலுஞ்செம்பிலுமோ இருப்பானெங்கள் கண்ணுதலே" என்றுபலவாருகஇகழ்ந்த ஞானிகள்வாக்கைநாடாது அஞ்ஞானிகளாகி கல்லுக்குக்கும்பிடுபோட்டு அஷ்டாங்க, பஞ்சாங்கநமஸ்காரம்செய்து கஷ்டார்ஜிதத்தைக் சாணிக்கையாக. கணிகையருக்கும், பிராமணருக்குமீந்து கஷ்டநிஷ்டூரம்படுவானேன், ஓ! ஆத்திகர்களே, "கர்த்தாவைக்கல்லாக்கிக்கொண்டீர், உம்மைக்காக்குந்தெய்வங்கள் கல்செம்பாய்க்கண்டீர் கர்த்தாவைக்கண்டாருமில்லை, உம்மைக்கல்செம்புகண்கொண்டு கண்டதுமில்லை."மண்டபக்கால்களையாவது, அக்கால்களிலமைந்திருக்கும் பதுமைகளையாவது உங்கள்தாய்தந்தையராகப்பாவிக்கும்படி யொருவன்கேட்டால் நீங்கள்சம்மதிப்பீர்களா? சம்மதியாத நீவிர் எல்லாம்வல்லகர்த்தாவென்று நாமத்தைப் பெரிதாகச்சாற்றிக் கல்லுசெம்பைபணிவது ஞானிகள்செய்கையா? ஆலயங்கள் கல்செம்பாதிவிக்கிரகங்களின் சிறைச்சாலைகளேயல்லாது தேவர்கள்வாசம்செய்யும் தேவஸ்த்தானமாகக்கொள்ளுவதுதகாது. எங்கும்நிறைந்து, எல்லாமானகர்தாவாகிய சிதறுப்பொருளை சடப்பொருளாகிய கல்செம்பில் பாவிப்பார் மனுஷாமிருகங்களாக ஞானிகளால்மதிக்கப்படுகின்றார்கள்.

A. P. M.

சுதேசாபிமானி.

---

(1) "கையொப்பக்காரன்என்னும் ஓர்பெயர்பூண்டு கரவடமாய்எழுதஆரம்பித்த A. M. என்பவர் தம்மைப்படர்க்கையில் வேறொருவர்சொல்வதுபோல் எழுதிவந்து, 'யாம் பதிலுக்குப் பேசவேண்டிநேரிட்டது' என்று இறுதியில் தன்மையிற்கூறி அகப்பட்டுக்கொண்டார்" என்றும் ;—(2) "௲௮௱௮௰௫ ௵ மார்ச்சு அல்லது ஏபிரல் மாசத்தில் ஒருநாள் மாலை தொண்டைமண்டலம் பாடசாலை வாயிற்படியண்டை அழுக்குத்துப்பட்டிஒன்றுஉடுத்துக் கையில்இரண்டுபெரிய ஜலபுஷ்பங்களைப் பிடித்துக்கொண்டு எம்முடன்நின்றகோலமாய் சுமார்முக்கால்மணிநேரம்வரையில் புலால்விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்ததை இவர்வயோதிகத்தால் மறந்தார்கொல் ?" என்றும் ;—(3) "யாம் நாஸ்திகர்அல்லஎன்பதை இவர் எப்படி அறிந்தாரோ? என்றும் (4) "பலநாத்திகர்கள் உலகில்இருக்க, இவருக்குஏன்ரோஷம்வரவேண்டியது" என்றும் ; நவம்பர்மீ ௩௨ சுதேசாபிமானியில், C. R. M. என்பவரும் P. R. M. என்பவரும் கூட்டாய்எழுதியிருக்கிறார்கள்.

"கையொப்பக்காரன்' எனக்கையொப்பமிட்டகடிதம் அக்டோபர் ௩௨ தத்துவவிவேசினியிலிருக்கிறது. அக்கடிதமெழுதியவர்தம்மை 'யாம்' என்றுதன்மையில்பேசி யிருப்பதுமல்லாமல், அக்கடிதத்தின் மத்தியிலே '**நமது** முன்னோர் யாவரும்' எனத்தம்மையும் முன்னிலையிடத்தோரையும்சேர்த்து, '**நமது**' எனவும் தன்மையில்எழுதியிருக்கிறார். இதையறியாதஅவ்விருவர்களும், '**யாம்**' என்கிறசொல்லைக்கண்டமாத்திரத்தில் பிரமித்து அற்பசந்தோஷமடைந்து, (1) வது வாக்கியத்தைஎழுதி, தங்கள் கியானவிசேஷத்தை வெளியிட்டார்கள். "இன்றைக்கிருந்தாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோதிடமில்லையே" என்று தாயுமானவர்கூறியிருப்பதையும், யாக்கைநிலையாமையைக்குறித்த வாக்கியங்களையும் வாசித்திராவிட்டாலும், கண்ணுக்கெதிரில் இவர்களினுஞ் சின்னஞ்சிறியோர்கள் மாண்டுபோகப்பார்த்துவருகிறதை ஞாபகத்தில்வைத்துப்பேசச்சக்தியில்லாமல், "காடுவாவா, வீடுபோபோஎன்னும் நிலைமைக்குவந்தகிழங்கள்" எனப்பேசுகிறவர்கள் (2) வது வசனத்திலே இருபது மாசத்திற்குமுன் கண்டதாகச் சொல்லுகிற அடையாளங்களைஅவர்கள் இதற்கென்றுஞாபகத்தில்வைத்திருந்தது அதிசயந்தான்! இப்படிப்பட்ட வீண்வாதங்களில் அவர்களுடைய மெய்பொய்யையும் எமதுமெய்பொய்யையும் விளக்குவதற்கு சாட்சிகளல்லவோவேண்டும், விசாரணைசெய்து தீர்ப்பளிப்பதற்கு மத்தியஸ்தர்களும் வேண்டுமே. அவர்கள் கூறியதை யதார்த்தமென்று வைத்துக்கொள்வோமாகில், தங்களிடத்துச்சாயமில்லாத இவர்களுக்கல்லவோ சாயத்துணிவேண்டுமென்றும், குப்பையிற்கிடந்தாலும் மாணிக்கம் மாணிக்கமேயென்று பெண்டுகள்சொல்லுகிற வாக்கியமும் இவர்களுக்குத்தெரியாதென்றும் அவர்களையிகழ்தும் எம்மைப்புகழ்ந்தும் விசனத்தோடுபேசவெண்டிநேரிடுகிறதே! 'ஜலபுஷ்பங்கள்' என்பதற்குப்பொருள்தெரியாமல் விசாரித்ததில், வெளிச்குச் சைவர்களெனச்சொல்லிக்கொண்டுகரவடமாய்ப்புலால்புசிக்கிறவர்கள் மறைவடமாய் மச்சத்திற்குச்சொல்லுகிறபரிபாஷையென்று தெரிந்துகொண்டோம். இந்தசங்கதிகளினாலே அவர்களுடையபுத்திவிசேஷம் வெளியாகிறது (3) வது வாக்கியத்திறகுச்சமாதானம் தத்துவவிவேசினியிலுள்ள ௸ கடிதத்திலேதானே கண்டுகொள்ளலாம். ஆயினும் கண்டுவாதித்ததாக அடையாளங்களுடனே அவர்கள் சொல்லுகிறவர்தான A. M. என்பவரென்று இவர்கள் எப்படிஅறிந்தார்களோவென்கிறகேள்விபிறக்குமென்று தெரிந்திலரோ. (4) வது வாக்கியத்தில்கேட்டகேள்வி-ஒருவரும் எதிர்பேசாதிருந்தால் தங்களிஷ்டப்படி தூஷித்துக்கொண்டிருக்கலா மென்பதற்காகவோ! ஆகஸ்டு 22௳ தத்துவவிவேசினியில் "குட்டிக்குறளிகள்" என மகுடஞ்சூட்டி வேறொருவர் ஏனெழுதினரோ! உலகிலுள்ளபலநாத்திகாகள் தாங்கள் கேள்வியுறுஞ்சங்கதிகளைக்குறித்துப் பேசாதிருக்கின்றனரோ? சங்கத்தாரைத்தூஷித்தால் இவர்களுக்கேன்ரோஷம்வரவேண்டியதென்று கேள்விகேட்கப்படுமென ஏன் அறிந்திலரோ! இப்படிப்பட்டமூடக்கேள்விகளுக்கு நியாயமெழுதிக்கொண்டு பத்திரிகையைநிரப்புவது அழகல்லவாதலாலும், மேற்கண்டசங்கதிகளால் அவர்களுடையகியானவிசேஷத்தையும், புத்திநுட்பத்தையும், பெருந்தன்மையையும் யாம்தெரிந்துகொள்ளுகிறபடியாலும், வாசிப்பவர்கள் அப்படிப்பட்டவர்களைப் பரிகாசஞ்செய்யாமல், அவர்களோடுவாதிப்பவர்களைத்தான் பரிகாசஞ்செய்வார்கள்.

அன்றியும், மெய்யறிவு என்னும் சிறுசுவடியைக் கண்டிக்க (Huxley's Physiology) சரீரதத்துவ சாஸ்திரத்தின்முதல் அத்தியாயத்தை வாசித்த சிறு மகவுபோதுமே, என்று எழுதியிருக்கிறார்கள். கர்ப்பத்திலிருக்கிற சிசுவானாலும் வாசித்திருந்தால் சரிதான்; வாசியாத தடியன் சரியல்லவே; இதற்கு ஆரிய நூல் ஒன்றுமில்லாமல் ஐரோப்பா சாஸ்திரத்தைத் தேடியெடுத்தது அதிசயந்தான். அச்சிறு சுவடியில், புலால் புசிப்பதில்லை யென்பவர்கள் எவ்விதத்திலாவது புலால் புசிக்கிறார்களோ யில்லையோவென்பதும், அவர்கள் பறையர் தீட்டுபட்ட எந்த வஸ்துவையாவது புசிக்கிறார்களோ யில்லையோ வென்பதும் விசாரணை. அதைக் கண்டிப்பதற்கு சரீரதத்துவ சாஸ்திரம் வேண்டுவதில்லை. ஐரோப்பா சாஸ்திரங்களின் பேர்களை எடுத்துச்சொல்லி ஜனங்களை மலைக்கச்செய்வதுதான்.

'மெய்யறிவு' முதலாஞ்சஞ்சிகை பிரசுரஞ்செய்யப்பட்டவுடனே, சுதேசாபிமானி பத்திராதிபர் தனது 1885௵ நவம்பர்மீ 14௳ பத்திரிகையில், நியாயமொன்றுங்கூறமல், அது பொய்யறிவைப் புகட்டுகிறதாகவும், அதைச்செய்தவரை உலகத்தைச் சீர்திருத்த நூதனமாய்ப் புறப்பட்ட நிபுணரெனவும், இகழ்ந்துபேசினர். 1886௵ ஜனவரிமீ 30௳ பத்திரிகையில், புலாலுணவு ஆத்துமா என்பவற்றைப்பற்றிப் பேசியிருப்பதற்கு ஒருவரும் விடைதராமையால், இன்னும் எழுதுவாரென்று கேள்வி என ஏளனஞ்செய்தார். அவருடைய பத்திரிகையில் பட்சபாதமாய்ப் பேசியிருந்த ஒருவிஷயத்தைப் பற்றித் 'தத்துவவிவேசினி' யில் நியாயங்கூறியதற்கு, அதைக் கண்ணுற்ற அவர் நியாயவாயிலாய்க் காத்துக்கொள்வதைவிட்டு தனது பத்திரிகைக்கு அனுப்பினால் துண்டுதுண்டாய்க்கண்டித்துப்போடுவதாகப் பிபர்வரிமீ 20௳ பத்திரிகையில் கூறிப் போக்குக்காட்டினதோடு மெய்யறிவையும் கொஞ்சம் அசைத்தார். மெய்யறிவைப்பற்றி வினு உத்தரமு முள்ள சம்பாஷணையாக இனி எழுதுவோமென்று பிபர்வரிமீ 27௳ பத்திரிகையில் மருட்டினார். 'இனி' என்கிற வார்த்தை அவரை இதுவரையில் தாங்கிக்கொண்டிருந்தது. இப்போது அவருக்கு வதிலாய் ௸ இருவர்கள் புறப்பட்டார்கள்.

A. M

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, ௺ 174,
Dayaraja Moodelly Street,—Madras.

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 47.] MADRAS:—SUNDAY NOVEMBER, 21, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலக்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

ஆன்மா.

(181-வது பக்கத்தொடர்ச்சி.)

மரத்தினுடைய லக்ஷணத்தைக் கூறவேண்டி, மரமென்பது கல்லல்ல மண்ணல்ல செம்பல்ல வென்றுபிறவற்றினின்று வேறுபடுத்தினால் மரத்தின்சிறப்பியல்பு விளங்கிவிடுமா? இதுபோல ஆன்மாவென்பது மனமல்ல அறிவல்ல தேகமல்லவெனறால் ஆத்துமாவின் சிறப்பியல்பாகிய இலக்கணம் விளங்கிவிடுமா! இவ்வாபாசம், தருக்கசாத்திரமிருந்தவூரிலுங் குடியிருந்தறியாதசாதாரணர்களுக்கும் விளங்குமே; சோம்பலின்றிக்கற்றசாஸ்திரியாருக்கு விளங்காததென்னையோ; "சரீரத்திற்கும் ஜீவனுக்கும்உள்ள வேறுபாட்டை யெடுத்துக்காட்டுவாம்" என்று வாய்ச்சொல்லுக்குப் பஞ்சமில்லாமல் எழுதிவிட்டசாஸ்திரியார் அப்பேதத்தைஎங்கெடுத்துக்காட்டினார்? சரீரலக்ஷணத்தையும் ஜீவலக்ஷணத்தையும் தனித்தனியெடுத்து வியாப்திதோஷமின்றிக் காட்டினாலன்றோ அவற்றின்வேறுபாடுவெளியாகும். "ஜீவன்சரீரமல்ல" வென்றுபஞ்சமில்லாதவாய்ச்சொல்சொல்வதற்கு வாதிகளேன்? வாதநூலேன்? கற்றோரேன்? கல்வியேன்? பத்திரிகையேன்?

2-வது உயிரென்பதுயாது? என்னும் கேள்விக்குச்சாஸ்திரியார்பகரும் இலக்கணத்தைப்பார்ப்போம்—(**"உயிரென்பது இச்சரீரத்தில்நிறைந்திருக்கும் ஒருவகைவாயு**) இவ்வாயு பலவிடங்களிற்சென்று பலவேலைகளைச்செய்து அனேகதொழிற்பெயரைப்பெற்றுள்ளது. பொதுவாய்சரீரத்திலுள்ள வாயுவுக்குப் பிராணனென்றே ஒருபெயருண்டு. அதுகொண்டே யோகீசுரர்யோககீதையில் 'சரீரமெல்லாம்நிறைந்து 12 அங்குலஅதிகமும் வேகமுமுள்ளதுபிராணன்' என்கின்றாரென்றுசொல்கின்றார்." இங்கே சரீரத்தில் நிறைந்திருக்கும் ஒருவகைவாயுவே உயிரென்றதனால் சரீரத்தில் பலவகைவாயுக்களுண்டென்றும் அப்பலவகைவாயுக்களில் ஒன்றாகிய இவ்வுயிரென்னும் வாயு பிராணன் அபானன் உதானன் முதலாகிய 10 பெயர்களை அடைந்திருக்கின்றதுஎன்றும் வெளியாகின்றது. இவ்வுயிராகிய ஒருவகைவாயுவுக்கும்,மற்றையவாயுக்களுக்கும் என்னவேறுபாடுஉண்டு? அவ்வேறுபாட்டைச் சாஸ்திரியார் எங்ஙனம் விளக்கவல்லார்? பிராணன் சரீரமெல்லாம்நிறைந்து 12 அங்குலஅதிகமும் வேகமும்உள்ளது என்றயோகிகள் சரீரமெல்லாம் 12 அங்குலந்தான் என்றுரூபிப்பாரா? அல்லது அதைஅனுவதித்தசாஸ்திரியாரேனும் ரூபிப்பாரா? இங்ஙனம் ரூபித்தாலல்லவா இடமுள்ள வரையில் பரவிச்செல்லத்தக்க வாயுவுக்கு அளவு குறித்தல் கூடும். 12 அங்குலம்என்றது அளவுக்கல்ல வேகத்துக்கென்பாரேல், வேகத்தைக்குறிக்கவேண்டியவிடத்துக் காலவரையறையையும் உடன்குறித்தாலன்றோ வேகம் ஏற்படும்! இந்தகுதிரை 10 மயில்செல்லத்தக்கதென்றால், ஒருநிமிஷத்திற்குப்பத்துமயில் செல்லத்தக்கதா, ஒருமணிக்குப்பத்துமயில் செல்லத்தக்கதா, ஒருநாளைக்கெல்லாம் 10 மயில்செல்லத்தக்கதா? அல்லது அதன்வாழ்நாளெல்லாம் 10 மயில்தான்செல்லத்தக்கதா? என்னவென்றுபொருள்படும்? இவ்வொருவகைவாயுவே சரீரத்தில்நிறைந்திருந்தால் மற்றவாயுக்களெல்லாம் எங்குநிறைந்திருக்கின்றன! உயிராகிய பிராணவாயுவே ஸ்தானபேதத்தால் அபானன் முதலிய பெயர்பேதப்படுகின்றதெனின், அபானவாயு வெளியாகுங்கால் தேகத்திலுள்ளபிராணவாயு எவ்வளவுகுறைகின்றது? பிராணவாயுவுக்குக் கூட்டங்குறைவுமுண்டோ? இவ்வாயுபலவிடங்களிற்சென்று பலவேலைகளைச்செய்யவல்லதேல், இது பூதவாயுவாகவேனும் அல்லது வேறுவாயுவாகவேனும் இருத்தல்வேண்டும். பூதவாயுவேல் உயிர் பூதத்தைத்தவிர வேறல்லவாகிறது, வேறுவாயுவேல், 12 சதுரஅங்குலபிராணவாயுவுக்கு எடைஎவ்வளவாய் யோகிகள் கணித்திருக்கின்றார்கள்? பூதவாயுவுக்குக்கணித்திருப்பதை இப்போதுவேண்டுமாயினும் பிரத்தியக்ஷத்திற்கணித்தேகாட்டுகின்றோம். சாஸ்திரியார் அங்ஙனம்காட்டவல்லாரா? வல்லாரேல்வெளிவரட்டும். இங்ஙனம் செய்யாமல் எய்தவனைவிட்டு அம்பைநோவார்போல (பாஷை பொதுவென்பதை) யுணராமல் இங்கிலீஷ்பாஷையை இகழ்வது சோம்பலின்றிக் கற்றசாஸ்திரியாருக்கு அழகன்று. "இன்னார்மகளெனத்தெரியாதுவளர்ந்த நம்மவர்எல்லோரையும் வேசிபோற்பேசிமயக்கும் இங்கிலீஷ்பாஷைகற்றவர் அப்பாஷையில் இரண்டிற்கும் (ஸோல்) என்கிற ஒருவார்த்தையுளதாதலால் வேற்றுமையறியாதிருக்கிறார்" என்கிறசாஸ்திரியார், நாமெடுத்துக்காட்டும்இங்கிலீஷ்மானததத்துவசாஸ்திரத்தில்வழங்கும் பலபரிபாஷா நாமங்களுக்கெல்லாம் (தற்திருட்டி செய்யாமல்) பூர்வீககிரந்தங்களில்வழங்கும் பிரதிபதங்களை பிராமணருக்கேபிறந்து, பிராமணர்அகத்திலேயேவளர்ந்து, பிராமணனுக்கேதாரமாகி அவர் ஆஞ்ஞையின்படிப் பிறரிடஞ்சென்று சோபிப்பவளாகிய சமஸ்கிர்தபாஷையிலிருந்து எடுத்துக்காட்டவல்லாரா?

3-வது ஸ்ரீமான்சாஸ்திரியாரவர்கள் ஜீவன் அறிவினிடமாயிருக்கின்றானென்றும் அறிவைஅவனுக்கு இடமாக்கிப்பின் "அவனதுபேரறிவு அச்சடலத்திலடங்கியிருப்பதால் மண்குடத்திலுள்ளவிளக்குப்போன்றவனாய் மற்றையபொருள்களை அறியத்துணையாய் ஐம்புலன்களைக்கொண்டு இருக்கிறான்" என்று அப்பேரறிவுக்குச் சடலத்தையிடமாக்கிக்கூறுகின்றார். கூறவே ஜீவனுக்கு அறிவுஇடமும், அறிவுக்கு ஜடம்இடமும் ஆகின்றன. ஆகவேஜீவனை நாமறிவதெல்லாங்கூடி ஸ்தானமாகிய சடலத்தினிடம் விளங்கும்அறிவினாலேயேயென வாகின்றதேயல்லாமல் ஜீவன்பிரத்தியேகப் பொருளென்று ஆகவில்லை. அறிவற்றுப்பிணமாகிய சடலத்திற்கு ஜீவனின்மையால் ஜீவன்பிரத்தியேகந்தானேயெனின். எங்ஙனம்பிரத்தியேகமாகும்? வெண்மைத்தன்மையுடையபால் நாளடைவில்கருமையாய்விட்டால் வெண்மையும் ஓர்பொருள் என்று கொள்ளலாமா? இதுபோல பிணத்தினிடத்திலே ஜீவத்தன்மைவிளங்காமையால் ஜீவன் பிரத்தியேகப்பொருளென்று அனுமானிப்பது ஆபாசம், இங்குஜீவன்தனிப்பொருள்என்று ரூபிக்கப்படாமையால் அச்சீவன் அகப்பொருளையுணரக்கருவியாயிருப்பது மனம் என்பது (மலடிமைந்தன்பெயர் மாணிக்கம்) என்பதுபோலிருத்தலின் அங்கீகரிக்கவிடமில்லை. ஐம்புலன்வழியாய் உணரப்படாத அகப்பொருள்ஒன்றுஉண்டுஎன்பதற்கு ஓர்திருட்டாந்தங்காட்டி அத்திருட்டாந்தத்தை நாம் புலனாலேனும் புலனவழிப்பட்ட கவனத்தாலேனும் காண்கிறதில்லையெனக் காட்டினால்மட்டும் அவ்வகப்பொருள் உண்டென்பது நம்பக்கூடுமேயல்லாமல், இல்லையேல், நம்பக்கூடாதவெற்றுரையாகும். "தனித்து அறிவுஒருபொருளையுங்கவராது புலன்களென்கிறதுணைக்கருவி அதற்கு அவசியமே" என்கின்றார். முன்னமேசாஸ்திரியார் ஜீவன் அறிவுமுதலிய துணைக்கருவிகளால் ஒன்றையுணர்கின்றானென்றும், இங்கே அறிவு துணைக்கருவியால் ஒன்றைக்கவர்கின்றதென்றும், ஜீவனுக்கும் அறிவுக்கும் அபேதம்பாராட்டிக் கூறிய சாஸ்திரியாரா இங்கிலீஷ் பாஷைமேல் குற்றஞ் சுமத்தத்தக்கவர்; பளா! பளா! நன்று நன்று !!

(இன்னும்வரும்.)

நாஸ்திகருக்கு இரட்சிப்புண்டா?

பற்பலவிஷயங்களைப்பற்றிச் சர்ச்சைசெய்ய ஏற்பட்டிருக்கிற ஒருசபையிலே சிலவாரங்களுக்குமுன் 'நாஸ்திகர்கள் இரட்சிக்கப்படுவார்களா?' என்கிறபிரஸ்னையின்பேரில் சர்ச்சை செய்யப்பட்டது. நாஸ்திக ரென்பது,—நான்கு சிரங்களையுடையபிர்மா, விஷ்ணு, விஸ்வரூபமெடுக்கும்போது ஆறுசிகர

மும் ஐந்துசிகரமும் சாந்தமாயிருச்சும்போது ஒருசிகரமு
முளைப்பவனுயிருக்கின்றசிவன், ஆறுசிகரங்களும் பன்னிரண்
டுதோளுமுடையவனுயிருக்கின்ற ஷண்முகன், சால்போன்ற
தொப்பையும்யானைமுகமுமுடையவிநாயகன், ஏசுகிறிஸ்து,அல்
லது அல்லா, இப்படிப்பட்ட எவனே ஒருகடவுளிருக்கிறுனெ
ன்கிற நம்பிக்கைகொண்டிருக்கிறவர் ஆஸ்திகராதலால், அந்த
க்கடவுளைப்பற்றி அவர்கூறும்லட்சணங்கள் அவலட்சணமாயி
ருப்பதினிமித்தம் அப்படிப்பட்ட அவலட்சணமுடையவன் க
டவுளல்லனென்று மறப்பவனென்று அர்த்தமாக வேண்டும்.
அந்தச்சபையைச் சேர்ந்தயாவரும் ஆஸ்திகசார்படைந்த வர்
களாயிருப்பரோல்,அவர்கள்கொள்கையின்படி அந்தக்கேள்வி ச
ரியானதுதான்;இருதிறத்தாரும்கலப்புற்றிருப்பரோல்,அந்தக்கே
ள்விசாமிலாக் கேள்வியாகும். ஏனெனில், இரட்சிப்பாவது
கருடபுராணத்திற் சேர்த்திருக்கிற .படத்தில் காட்டியிருக்கிற
படி தியில்பொசுக்குவது, செக்கில்போட்டு ஆட்டுவது, கழு
மரத்தில் ஏற்றுவது, சுரிவாளால் சக்கை சக்கையா யறுப்பது,
முதலிய மகாகொடியநரக வேதனைகளினின்றுந்தான். அப்
படி அடைவதெது? தேகம் இங்கே அழிந்துபோதலால் ச
மயக் கொள்கையின்படி ஆன்மாவாகத் தானிருக்கவேண்டும்.
ஆதலால், ஆன்மாவென்பது சரீரக்கட்டினுலுண்டாகுந் தன்
மையா, அல்லது சரீரத்துக்குப் புறம்பான வேறு பதார்த்தமா
என்கிற சங்கை முதலில் தீரவேண்டும். அதுகுணமாயின்
சரீரத்தோடு அழிந்துபோதலால், தெண்டனையடையும் பொ
ருளில்லாமைபற்றி, நரகமும் இரட்சிப்பும் பொய்யாகும்போ
தே மேற்படி கேள்வி விணுய்ப் போகிறது. ஆன்மா குணியாயி
னும் அதிகசர்ச்சை வேண்டுவதேயில்லை, ஆஸ்திகர்களுக்கு
நேர்விரோதிகளாகிய நாஸ்திகர்களுக்கு இரட்சிப்பில்லையெ
ன்றேதீர்மானமாகலாம். அப்படிக்கல்லஎனில், வெளிவழியி
லிருந்த சிவலிங்கத்தின்மேல் கல்லெறிந்துகொண்டுவந்த சாக்
கியனுக்கு சிவபதங் கிடைத்ததுபோலவும், விஷ்ணுவின்பெயர்
காதில்விழாதபடி காதில் மணிகட்டி யாட்டிக்கொண்டிருந்த க
ண்டா கர்னனுக்கு வைகுந்த பதவி கிடைத்ததுபோலவும்,
தூஷிக்கவாவது எந்நேரமும் ஆஸ்திகக் கடவுளை நினைத்துச்
கொண்டிருக்கிற நாஸ்திகர்கள் ஒருவேளை ரட்சிக்கப்படுவா
ர்களென்று சொல்லலாம். அன்றியும், சகல சமய ஏற்பா
டுகளும் உலகத்தில் பரஸ்பர நன்மைக்காக மானிடர்களை
நல்லொழுக்கத்திற் செலுத்தும் பொருட்டே என்போமாகில்.
அப்படிப்பட்ட நல்லொழுக்க முடைய நாஸ்திகர்கள் இரட்
சிக்கப் படுவார்க ளென்றுஞ் சொல்லலாம். சபையார்
என்னதீர்மானஞ்செய்தார்களோ தெரியவில்லை. சமயக்கட
வுளர்களின் நிமித்தமில்லாதவர்களுக்கு அப்பொருள்களினிட
த்துநம்பிக்கையில்லாமையால், மோட்சமும் நரகமும் உப
யோகமற்றவையாய், வீண்மிரட்டாகவேமுடியும். அவர்களு
டையமனம் பின்னும்விசேஷமான காரியங்களிற்செல்லும்.
நம்முடையஆசாரியர்களும் குருக்கள்மார்களும் மதப்பிரயா
சையைவிட்டு இதரமானகாரியங்களில் பிரையாசையெடுத்து
க்கொள்வார்களாகில், அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதி
க நன்மையுண்டாகும். எந்தச்சமயமாவது உண்மையானதா
யிருக்குமாகில், அச்சமயக்கடவுளிடத்து நம்பிக்கையில்லாதவ
ர்களாய், குருக்கள்மாரைப்பார்க்கினும், அநேகஅருமையானவி
ஷயங்களைக்கண்டறிந்து, உலகநன்மைக்காக சாஸ்திரங்களைச்
செய்து, நற்குண நற்செய்கை யுடையவர்களாயிருந் திறந்து
போனமகாபுருஷர்கள் நரகத்திலேதானே யிருந்திருக்கவேண
ம்! பிள்ளைக்கறிசமைத்துப்படைத்தவரும், பிராமணபீஜத்திற்
கு நமஸ்காரமென்றுதொழுதவரும், பிறமதஸ்த்தர்களைக் கழுவி
லேற்றி ஹிம்சித்தவரும், ஒருமனையாளிருக்க, மறுமணம்புரிய
ப் பொய்ச்சத்தியஞ்செய்துகண்கெட்டவரும், யமனுடையசிர
வணர்களை லஞ்சப்பரிதானத்தால்வசப்படுத்திக்கொண்டவரும்,
தனத்தைச்சிவலிங்கமாக பூசித்தவரும், ஒருதரம் அருணுசலா
வென்றவரும், மராமரா வென்றவரும், அரிசி வசம்புவிற்றவரு
ம் நெய்விளக்கேற்றினவருமாகிய இப்படிப்பட்ட மூடச்செய்
கையும் கொடியவேதனையுஞ் செய்தவர்கள்தானே மோட்சத்
தி லிருக்கிறுர்கள்! மூடர்கள் வசிக்கிறமோட்சத்தில் புத்திக்
கு ஒருவேலையு மில்லாமல், அவர்களோடு கூடிவாழ்வதைப்பா
ர்க்கினும், மகா புத்திமான்கள் வசிக்கிறநரகத்தில் அவர்களோ
டு சம்பாஷித்துக்கொண் டிருப்பது வெகு ஆனந்தமா யிருக்கு
மென்று ஒருவர் கூறினர். உலக முண்டானதுமுதல் நாளது
வரையிலே தீராத்துன்பத்தை யனுபவிக்கும்படியாக ஆன்மா
வைசிருஷ்டித்த எந்தக் கடவுளாவது பிரபஞ்சத்தி லிருக்கிறு
னென்கிற நம்பிக்கை எனக்கில்லை. தீராத துன்பத்தை யனு
பவிப்பதைப்பார்க்கினும், "எந்தவூரென்றீர இருந்தவூர்நீர்கே
ளீர், அந்தவூர்செய்தி யறியீரோ—வந்தவூர், முப்பாழும்பாழா
ய் முடிவிலொருசூனியமாய், அப்பாலும் பாழாயறும்." என்
று நாயனுரருளியபடி, நாமெல்லோரும் சுத்த சூன்னியத்திற்
குப்போவதே உத்தமம். கடவு ளொருவரிருப்பாராகில், கிரு
பை உள்ளவனிடத்தில் கிருபை உள்ளவராகவே யிருபபார்;
மனனிக்கிறவனை மன்னிப்பார; ஒவ்வொருவனும் உண்மைக்
குத்தாரமா யிருப்பானுகில், எந்த அண்டத்திலும் யோக்கிய
தை குற்றமாகமாட்டாது. யோக்கியமானபுருஷனும், நற்
குணமுள்ள ஸ்திரீயும், நற் சிறுவனும் இம்மையிலாவது மறு
மையிலாவது எதற்கும் அஞ்சவேண்டுவதில்லை. இதுவே எ
னதுதீர்மானம்.

A. M

உ

சிவமயம்.

நாஸ்திகபோத நிவிர்த்தி.

பத்திராதிபரே,— நும்பத்திரிகையில் வெளியாகிவரும் வி
ஷயங்களைப்பார்க்குந்தோறும் எமக்கு அதிக ஆச்சரியத்தைவி
ளைக்கின்றது. (உலகத்தாருண்டென்பதில்லென்பான் வையத்-
தலகையாவைக்கப்படும்) என்பதுமகினஞ்செய்தலால். என்
னெனின், கடவுளொருவருண்டென்னும் விஷயத்தில் வீண்
விபரீதம் நுமக்குப்பிறந்தமையேயாம். கடவுளைச்சந்தேகித்த
நும்விசாரம் சாலவழகுடைத்தென்பதை விளக்குதும் காண்
பீராக.—

கடவுளில்லையாயின், இல்லையென்று சந்தேகித்த நுமக்குச்
சீவனமெப்படி? சந்தேகித்தபொருள் தேகமா? தேகியா! தே
கம் சடமாதலால் சந்தேகிக்காது.தேகிநுங்கொள்கையின்படிப்
பூதக்கலப்பாலுண்டாகிய குணமேயாதலால் அதுவுஞ்சடமே
யாகிச் சந்தேகிக்காது. நும்மாலங்கீகரிக்கப்பட்ட பூதங்கள்
நான்குஞ் சடமாதலால் அவற்றிலொன்றற்கேனுமில்லாதவறிவு
அவைகலந்தபோதுண்டாமென்பது விந்தையாய்முடியும். இத
னுல், தேகத்துக்குவேருய், அறியுந்தன்மையுடையதா யுள்ள
வோரான்மாவுண்டென்றறிவீராக. கண்ணுக்கறியுந்தன்மையி
ருந்தும், சூரியனுதவியின்றி அறியாவாறுபோல், ஆன்மாவேய
றிவதாயினும், கடவுளையன்றி அதுவுமறியாதாகையால் அறிவி
ப்பானுகிய வோர் முழுமுதற்கடவுளுமுண்டென்பது துணிந்
துபிழைக்கும் வழி தேடுவீராக.

நாஸ்திகவைரி.

---o---

விவேகிகளே!

நமது நாஸ்திகவைரிக்கு ஆச்சரியம் உண்டானமைக்குக்கார
ணம் (உலகத்தாருண்டென்பதில்லென்பான் வையத்தலகையா
வைக்கப்படும்) என்னுங்குறள்வெண்பாவே. இதில் உலகத்தா
ரென்பதற்குத் தாம்கொண்டபொருள் என்னையோ அதையும்
விளங்கக்கூறவில்லை. பரிமேலழகர் கொண்டபொருள் இவரு
க்குச்சம்மதமாயின் இக்குறள், இந்தசந்தர்ப்பத்தில் மேற்கோ
ளாகாது; பரிமேலழகர், உலகத்தார் என்பதற்கு உயர்ந்தோ
ரென்று பொருள் செயகின்றுர். உயர்ந்தோர் பலரும் உண்
டென்பதனை இல்லை என்று, ஏகதேசம் ஒருவன்தனது மௌ
ட்டியத்தால் மறுப்பானுயின், அங்ஙனம் மறுத்தவனை அலகை
க்குச்சமானமென மதிக்கத்தகும் என்பது இவர்கருத்தாயின்,
நாம் கற்றறிவில்லாது ஏகதேசம் ஒருவராய்நின்று, உயர்ந்தோ
ரென்று தத்தம் உயர்வை நியாயவாயிலாகநிலைநாட்டி நியாயம்
முனனிட்டுவெளிவந்த பலருடையகொள்கையை, நியாயமில்
லாதுமறுத்தகாலத்திலன்று, மேற்சொல்லிய குறள்வெண்பா
வை இவர் மேற்கோளாகக்கொள்ளவேண்டும்; உயர்ந்தோர் இ
ன்னுரென்றும், இன்னகாரணத்தினுல் அவர்உயர்ந்தோரெனப்
படுவரென்றும், தாழ்ந்தோர் இன்னுர் என்றும், அவர் இன்ன
காரணத்தினுல் தாழ்ந்தோரெனப்படுவர் என்றும், நாம் கற்ற
றிவில்லாதவரென்றும், அவ்வுயர்ந்தோரெனப்படுவோர் கற்ற
றிவுடையவரென்றும், நாம்ஏகதேசம் ஒருவரோஎன்றும், அவர்
பலரோ என்றும், அவர் சொல்வதே நியாயமென்றும், நாம்
சொல்வது நியாயமல்லவென்றும், அவர்நியாயமுன்னிட்டு உ
ண்டென்கின்றுரென்றும், நாம்மௌட்டிய முன்னிட்டு இல்லை
என்கின்றேம் என்றும் நியாயஞ்சொல்லிக்காட்டாமல், நியாய
மில்லாதசொல் திருவள்ளுவர்சொல்லாயிருப்பினும்தெருப்போ
க்கர்சொல்லாயிருப்பினும் ஒன்றேயென மதிக்கும் எமக்குச்
சொல்லளவிலேயே பிரமாணமாகக் காட்டியமையால், அச்
சொல்லைப் புல்லெனக்கருதுவதல்லாது சொல்லெனக்கருதோ
ம். கடவுளையும் ஆன்மாவையும் சந்தேகித்த நமதுசந்தேகத்தை
நீக்கவந்த இவர்அலகைஎன்னும்பெருஞ்சந்தேகமொன்றை விளை
வித்துவிட்டார்.

மேலும் 'இல்லென்பா' னென்பது, இல்லை என்பவர் சகலரு
க்கும் பொருந்துமென்று (வைரி) சொல்வாராயின், சிவனே தி
ரிகாலத்துமுள்ளவனென்று சைவரும், சிவனல்ல விஷ்ணுவேதி
ரிகாலத்து முள்ளவனென்று வைணவரும், இவ்விரண்டுமில்
லை பிரமமாகிய நானே திரிகாலத்துமுள்ளவனென்று வேதாந்
தியும், இவ்வாறே மற்றையசமயிகளும் சொல்கினுர்களாத
லால், சைவனை வைணவர் அலகையாகவும், வைணவனை சை
வர் அலகையாகவும், இவ்விருவரையும் வேதாந்தி அலகையா
கவும், வேதாந்தியை இவ்விருவரும் அலகையாகவும், இவர்க
ளனைவரையும் மற்றையசமயிகள் அலகையாகவும் மதிப்பார்

களாதலால், உலகத்தாரனைவரும் அலகையாய் விடுவார்களே. நமது நாஸ்திகவைரியீரமாட்டாரே.

இன்னும், உலகத்தார் உண்டென்பதனை இல்லை என்பவன் அலகையானுல், உலகத்தார் இல்லை என்பதனை உண்டு என்பவன் அலகையாவானல்லவா? ஏகதேசம் ஒருவன் பலருக்கு மாறுகச்சொல்வதனாலேயே இங்ஙனமாயின், இங்கிலாண்டு, ஸ்பெயின், போர்க்கூகல், முதலியதேசங்களிலுள்ள பண்டிதர்பலரும், தேசம் 'இல்லை' 'இல்லை' என்றுகதற, உண்டு உண்டு பென்று அமெரிகாதேசத்தைக் கண்டுபிடித்த கொலம்பஸ் என்பவர் அலகையா? மேற்படி பண்டிதர்கள் அலகையா? புகைவண்டி மின்தபால் முதலிய பலயந்திர சூக்ஷிகள் உண்டென்பதை, சித்தத்திலும் நினைக்காமல் உலகத்தவர் வாளாவிருக்க, ஒவ்வோர் காலங்களில் ஏகதேசம் ஒவ்வொருவர் ஏற்பட்டு, உண்டு என்று திடங்கொண்டு, மனமுயற்சிசெய்து, அவற்றைக்கண்டுபிடித்த அவ்வொவ்வொருவர் அலகையா? ஏனைய உலகத்தவர் அலகையா? விவேகிகளே! தாமும் அலகையாய், உலகத்தவரையும் அலகையாக்கி நம்மையும் அலகையாக்கவந்தவர் நாஸ்திக வைரியா? நர வைரியா? யோசியுங்கள் யோசியுங்கள்.

"கடவுளில்லையாயின், இல்லையென்று சந்தேகித்த நமக்கு ஜீவனமெப்படி? என்கின்ருர். நாம் கடவுளில்லை என்று இவருக்குச் சொன்னேமா? அப்படி கடவுளில்லையென்று சொன்னுல் அது துணிபேயல்லாது சந்தேகமாகுமா? நாம் சொல்லாத வார்த்தையை எமது வாயில் கொண்டுவந்து ஊட்டுவது இவருக்குத் தருமமா? நமது அகக்கருவிகளும் புறக்கருவிகளும் தத்தமக்குரிய தொழில்களைச் செய்துவருவதுதான் நமக்கு ஜீவனம். சந்தேகித்த பொருள் தேகமா? தேஹியா? எனின், தேஹி என்பது நமது கொள்கையின்படி பூதச்கலப்பாலுண்டாகிய குணமே என்பது நாஸ்திகவைரிக்குஞ் சம்மதமாயின், குணியில் நின்றுங் குணத்தைப் பிரிக்கப்படாதாதலாலும், அங்ஙனம் பிரிக்கப்படாததை விஞவழுவாகப்பிரித்துக் கேட்டமையாலும், அதற்கு விடைதேகமுமல்ல தேஹியுமல்லவென்பதே. நமதுகொள்கை வைரிக்குச் சரிப்படாவிடின், தமது கொள்கையை நியாயவாயிலாய் நிலைநாட்டிவிடவேண்டியது கடமையாகவிருக்கின்றது.

"நம்மாலங்கீகரிக்கப்பட்ட பூதங்கள் நான்குஞ் சடமாதலால் அவற்றிற்கு ஒவ்வொன்றற்கேனுமில்லாத வறிவு அவைகலந்தபோதுண்டாமென்பது விந்தையாய் முடியும்" என்பதனுல் நாஸ்திகவைரி பூததத்துவசாத்திரத்திற் புலியெனத்தோன்றுகின்றது. இச்சாத்திரங்கள் இங்கிலீஷ் பாஷையிலச்சிட்டு, ஷாப்புகள் தோறும் விற்கின்றமையால் அவற்றை யிவர்பெற்று, ஓர்இங்கிலீஷ்கற்றமாணுக்கனையடுத்து, கற்றுகொள்ளும்வாயில் இவருக்கு மேலேயவிஷயம் விந்தையாகத்தான் முடியும். சுண்ணத்திற்கும் மஞ்சளிற்கும் தனித்தனி இல்லாத சிவப்புநிறமாகியகுணம், அவைகலந்தபோது உண்டாகவில்லையா? தண்ணீர்க்கும் நெருப்பிற்கும் தனித்தனி இல்லாதவலிமை, அவைகலந்தபோது உண்டாகியல்லவா புகைவண்டியானது நூறுநூறுய் தொடுக்கப்பட்டவண்டிகளையும், அவற்றில் ஏற்றப்பட்டமலைக்கல்களையும், மனிதர்களையும், இழுத்துவருகிறது. சருக்கரையை வாதசாத்திரமுறைப்படி பிரிக்குங்கால், அமிர்தமருந்து, விஷமருந்து தக்தமருந்து என்னும் மூன்றுவிதமாகின்றதே: இங்ஙனம் பிரிக்கப்பட்ட இம்மூன்றில் ஒன்றற்கேனுமில்லாத தித்திப்பாகியகுணம், இவை கலந்தொன்ருனபோது உண்டாகின்றதே, இதுவும் விந்தைதானே? அதிரசத்தை இவர் சாப்பிடும்போது, "சற்றேனும் சந்தில்லாத இந்த அப்பத்தை எப்படிசுட்டாரோ இதறகுள் தித்திப்பை எப்படி நுழைத்தாரோ" என்று ஆச்சரியப்படுவார்போலும். பூததத்துவசாத்திரங்களையும் பதார்த்த உணர்ச்சியையும் ஏககாலத்தில் இவருக்குச் சொன்னுல் விளங்காவென்றே ஏகதேச உவமையாக சில திருஷ்டாந்தங்களைச் சொன்னேம்.

இதுபோன்ற நியாயங்களால்தேகத்திற்கு வேருய்ஓர்ஆன்மா உண்டென்று வைரிசொல்லியது பூர்வபக்ஷமாய்விட்டமைகாண்க. "கண்ணுக் கறியுந் தன்மையிருந்தும்சூரியனுதவியின்றி அறியாவாறுபோல." என்கின்ருர் (Optics) என்னும் திருஷ்டி சாத்திரம் தெரியாத இவருடன் தலைமுட்டுவதிற் பிரயோசனமில்லையாதலால், சூரியனுடைய ஒளியுதவி கண்ணுக்கு வேண்டுமென்பது அனுவசியகம் என்பதேபோதும். ஆயினமைமின் "ஆன்மாவுக்கு" கடவுளுதவி வேண்டுவதில்லை, ஆகையால் இவரால் உத்தேசிக்கப்பட்ட கடவுள், உத்தேச அளவில் நிற்பதல்லாமல் நியாயத்திற்கு நிற்கக்காணேம்.

இனி நாஸ்திக வைரி நம்மைக் கேள்வி கேட்பதிற் பிரயோசனமில்லை; ஏனெனில், அக்கேள்விகளுக்கு நமக்கு விடைதெரியா திருப்பினும், இவர்கொள்கை சித்தாந்தப்படமாட்டாது. நமது அறியாமையையாதாரவாகக்கொண்டாஇவர்கொள்கையை நிலைநாட்டப்போகிருர்? இவர் சித்தாந்தத்தை இலக்ஷணயுத்தமாய் நியாயஞ்சொல்லி நிலைநாட்டினுல்தான் நாஸ்திகபோதம்கிவிர்த்தியாகுமாதலால் அடியிற்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாராக—

ஐயாநாஸ்திகவைரியே!

(1) உமது கடவுளர்யாவர், உமது கடிதமுகத்தில் 'சிவமயக்' குறி இட்டமையால்சிவனு?

(2) அவர் இலக்கணமென்னே?

(3) ஆன்மாவென்பதெது? அதன் இலக்ஷணமென்ன?

(4) கடவுளர் எதைக்கொண்டு தேகாதிப்பிரபஞ்சங்களைசிருஷ்டித்தார்? ஏன் சிருஷ்டித்தார்?

(5) தாங்கள் சைவராயின் எச்சைவர்?—ED.

காட்சிப்பிரவசநம்.

திருமூலநாயனுர் அருளிச்செய்த "உடற்கூறு தத்துவக் கட்டளையும்" நமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ வே-துரைசுவாமி முதலியார்அவர்கள் இயற்றிய நாடிச்சுத்தியும் அஷ்டாங்க யோகமும் அடங்கியபுத்தகம் ஒன்றுவரப்பெற்ரேம். அஃது உயர்ந்தகாகிதத்தில் சிறந்த தமிழ்அக்ஷரங்களில் மிகுந்தபிரயாசையோடு பதிக்கப்பட்டிருக்கின்றது. அதிலடங்கியவிஷயம் சாதாரணமாய் இந்தக்கள் தத்துவக் கட்டளையென்றும் யோகசாத்திரமென்றும் வழங்கும் நூல்களிலேயுள்ள விஷயங்களேயாயினும், இதில் உள்ளஒழுங்குபாடு அவற்றில் கிடைப்பது அருமை. அவைகுருமுகமாயன்றிக் கற்றல் ஏலாது. இஃதோ சாதாரண தமிழ்நூற் பயிற்சியுள்ள வித்தியார்த்திகளும் விளங்கிக் கொள்ளக்கூடிய வெள்ளிய தமிழ்நடையில் எழுதப்பட்டிருக்கின்றது. இந்தபதிசாத்திர ஆராய்ச்சியிற்புகவிரும்பும் ஒவ்வொருவருக்கும் இஃது பெருத்த ஓர் வழிகாட்டி யாகும். யோக சாத்திர ஆராய்ச்சியாளருக்கு மப்படியே.

வியவகாராதிகளில் மாந்தரெவரும் யாதொருவியாக்கியானமும் ரூபீகாரமும் இன்றிச் சந்தேக விபரீதமற ஒப்புக்கொள்ளும சாதனமெதுவோ அதுவேதத்துவமாம். இத்தத்துவத்தையும் ரூபிப்பான் வேண்டில் நியாயம் வரம்பிகந்து செல்வதோடு ரூபீகரித்தலும் ஏலாது. ஏனுமென்றுவெளி வருவார் இதனையே வேறுசொற்களால் மாற்றிச் சொல்வார்களேயன்றி யித்தத்துவத்தையே சாத்தியமாக்கி வேறுசாதனங்களைக் கொண்டுமுடிக்காரென்றுணர்க. "ஒன்றின்பாதி ஒன்றினும்சிறிது" என்னும்தத்துவத்தை யார்எங்ஙனம் ரூபிப்பர்? இதனையே இங்கிலீஷ்தருக்கசாஸ்திரிகள் Axiom என்பார். ஆனுல நமதுஇந்துதத்துவ சாத்திரிகள் தத்துவமென்ப திதனைமாத்திரமல்ல, ஏகதேசகியானவரம்பாய்த்தோன்றிய அநுமானுதிகளையும் தத்துவமென்பார். அநுமானுதிகள் ஒருவருக்குத் தோன்றியதுபோல் மற்றவருக்குத் தோன்ருதாதலால் அதுசாதனமாகாது. சாதனமாகாக்கால், தத்துவமுமாகாது.

ஆயினும் நமது இந்து தத்துவசாத்திரிகள் இவற்றையுந் தத்துவங்க ளெனக்கொண்டு பாராட்டி வருகின்றமையால் அவர்கள் நோக்கத்தையும் ஆராயவேண்டியவர்கள் மேலே கூறியபுத்தகத்தை வாங்கிவாசித்து எளிதில் விளங்கிக் கொள்ளலாம். இப்புத்தகத்தின்விலை பிரதிஒன்றுக்கு அணு-ரு-பத்துக்கு-௧-ம் இருபத்தைந்துக்கு ௬-ம் அதிகம் கொடுக்கப்படும். வேண்டியவர்கள் சென்னைபெத்துநாயக்கன் பேட்டை பிடாரியார்கோயில் வீதி 39-வது வீட்டில் ம-ா-ா-ஸ்ரீ வே-துரைசாமிமுதலியாரிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மெய்யறிவு.

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

(183-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆத்துமா[illegible]ரத்தைவிட்டு நீங்கினபிறகு மோட்சலோகத்தைச்சேரஎந்தத்திசையைநோக்கிச்செல்லுகிறது, அந்தலோகம் எந்தத்திசையி லிருக்கிறது, என்று (Robert Cooper) ராபர்ட்கூப்பர் என்பவர் ஒருகேள்விபோட்டுக்கொண்டு எழுதுகிறதாவது — இந்ககேள்விக்கு நம்முடைய குருக்கள்மார்களும் ஆசாரியர்களும் மேல்நோக்கி விசும்புத்திசையைக் காட்டுவார்கள். பிரபஞ்சத்தை யொட்டிப்பார்க்கில், உண்மையிலே 'மேல்' என்பதும் 'கீழ்' என்பதுமில்லை. பூமி தன்னிடத்தில்தானே சுற்றுகிறசுற்றினுல்*நமக்குப் பகலில்மேலாகக்காண்பது இரவில் கீழாகஇருக்கிறது, இரவில்மே

* இந்த ஒருசுற்று இரவும்பகலுமாகிய ஒருநாள் ஆகிறது.

லாகக்காண்பது பகலில்கிழாகஇருக்கிறது. ஆனகையால்,
ஆத்துமா பயணம் புறப்படுவதற்கு முன்னமே அப்
போது இத்தனைமணியென்று தெரிந்துகொள்ளவே
ண்டும்; இல்லாவிட்டால், மேலுலகத்திற்குச் செல்லு
கிற ஆத்துமா திசைதடுமாறி பாதாளலோகத்திற்குப்
போய்விடலாம். ஏககாலத்திலே ஆஸ்திரேலியாதேச
த்தில் சரீரத்தைவிட்டு வெளிப்பட்ட ஒருஆத்துமாவு
ம் இங்கிலாந்துதேசத்தில் சரீரத்தை விட்டு வெளிப
ட்ட ஒருஆத்துமாவும், அததற்கு நேர்மேலாகத்
தோற்றுகிறதை நோக்கி நேர்ஒழுங்காகச் செல்லுமா
யின், அவை அதிகதூரம் செல்லச்செல்ல, குறித்த
விடத்திற் சேராமல், ஒன்றற்கொன்று தொலைதூரம்
விலகிப்போய்விடுமே யல்லாமல், மோட்சவுலகம் அ
ததற்கு நேரானரேகையில் இராதாகையால், அந்தமே
லுலகத்திலே அவற்றில்எதுவாவது போய்ச்சேரப்
போகிறதுமில்லை, அவைவேறேஇடத்தில் சந்திக்கப்
போகிறதுமில்லை.

மேலும், குறித்தஇடத்திற்கு ஆத்துமா எப்போது
போய்ச்சேரும்? (ஒருவருஷம்போதுமா) அது உண்
டாயிருக்கிற தூரத்திற்கும் செல்லுகிறவேகத்திற்கும்
தக்கபடிமுடியும். மேலுலகம் முந்தியிருக்கிற நிலையான
நட்சத்திரமவ்வளவு தூரமிருக்குமா? ஒருமணிநேரத்
திற்கு (1000) ஆயிரம்மயல்விழுக்காடு பறந்தாலும்.
சோதிட்சாஸ்திரக் கணக்கின்படி அவ்விடம் போய்ச்
சேர (7000) ஏழாயிரவருஷம் போதாதே! அப்படி
ப்போனாலும் அந்தஆத்துமா ஆகாயவழியில்குறுக்கு
நெடுக்காகச்செல்லுகிற வால்நட்சத்திரங்களில் எதினு
டைய வாலினாலாகிலும் அடிபட்டுவிழாமல் தப்பித்
துக் கொள்ளுமாயின் அருமைதான் என்கிறார். ஆத்
துமாவைத்தூதர்கள்கொண்டுபோகிறபடியால், அந்தக்
கஷ்டநிஷ்டூரம் அவர்களுதேயாகும்; அவர்களும் மே
லுலகத்திலிருந்து வருவதற்கும் திரும்பி அவ்விடம்
போய்ச்சேருவதற்கும், இடையில் திசைதடுமாற்றத்
தை அறிந்து சுற்றிக்கொண்டு, வழியிலிருக்கிற தடை
களினாலே வளைந்துவளைந்து போவதற்கும், மேலே
சொல்லிய 7000 - வருஷத்திற்கு இரட்டிப்பாக 14000
வருஷமாவது செல்லுமாக்கும். ஒருவேளை தூதர்கள்
திசைதப்பிப்போவார்களாகில், நமதுகுருக்கள்மாரும்
ஆசாரியர்களும் வழிகாட்டுவார்கள்போலும்!

ஆத்துமா அழிவில்லாதது என்றுசொல்லுகிறவர்க
ள் அதுஅறிவோடுங்கூடிய நித்தியவஸ்துவா யிருக்கிற
தென்றும், அது இந்ததேகமல்லவென்றும், இந்ததே
கம் அழிந்துபோயினும் நிலைத்து ஜீவித்திருக்கிறதென்
றும் கூறுகிறார்கள். இப்படிச்சொல்வதினாலே ஆத்து
மாவென்பது உயிரல்லவென்று ஸ்பஷ்டமாய் விளங்
குகிறது; ஏனெனில், உயிரானது தேகம்வளருகையி
ல் வளர்ந்து, முதிர்ச்சியடைகையில் முதிர்ந்து, தளர்ச்
சியடைகையில் தளர்ந்துபோகிறது. பின்னும் ஆத்து
மாவானது மனம்என்பதுதானா பார்ப்போம். மனம்
உணருகிற உணர்ச்சியானது தேகத்திலுள்ள ஐம்பொ
றிகளின் வழியாய் உண்டாகிறது. ஆதலால் அவ்வு
ணர்ச்சிக்கு இந்தத்தேகமே காரணமாகும். அதனா
லே ஆத்துமா மனம் அல்ல. ஆகவே, ஆத்துமாவை
ஆவியென்று சொன்னாலும் ஒன்றும் விளங்காது. மத
தஸதர்கள் பின்னும் சொல்லுகிறதாவது - இந்தத்தே
கம் பல (elements, எலிமெண்ட்ஸ்) மூலப்பிரகிருதி
ப்பொருள்கள் சேர்ந்தாயது.* அவற்றுள் (oxygen
nitrogen, carbon,) ஆக்சிஜன், நைத்ரஜன், கார்பன்
முதலியஒவ்வொரு மூலப்பிரகிருதிக்கும் தனித்தனி
நினைக்குந் தன்மை யிலலாமையால், நினைப்பென்பது
சடபதார்த்தத்தின் தொழிலல்ல, ஆத்துமாவின் தொ
ழிலென்கிறார்கள். இதற்குத் திருஷடாந்தமாக அவர்
கள் சொல்லுவது—மஞ்சளையும் சுண்ணமபையும் கல
ந்தால் அது செந்நிறமாகிறது, அந்தசெம்மை நூதன
மா யேற்பட்டதல்ல, முன்னமேதானே இருக்கிறது.
வேண்டுமானால் அந்தசெம்மைநிறத்தை மஞ்சளைஒடித்
துப்பார்த்தால தெரிந்துகொள்ளலாம் ஆதலால், மூலப்
பிரகிருதிப்பொருள்களின் சேர்க்கையாலுண்டானபதா
ர்த்தத்திலுள்ள குணங்களில் ஒவ்வொன்றும் அந்த மூ
லப்பிரகிருதிப்பொருள்களிலிருந்தாலொழிய காணப்ப
டாது. அதுபோலவே, என்னென்னசேர்ந்து தேக
முண்டாயிற்றோ அந்த ஒவ்வொரு மூலப்பிரகிருதிப்
பொருளுக்கும் நினைக்குந்தன்மையுண்டா? இலலா
மையால நினைக்குந்தொழிலுக்கு வேறொன்று இருக்க
வேண்டும், அதுதான் ஆத்துமா என்கிறார்கள். அப்ப
டியாயின், ஆத்துமா என்கிற பதார்த்தத்தை எவர்களா
வது தேகத்திலிருந்து வேறுபிரித்திருக்கிறார்களா? மே
ற்சொல்லிய ஆக்சிஜன் முதலியபொருள்களை புட்டியில்
அடைத்துவிற்பதுபோல ஆத்துமா என்பதையும் புட்
டியிலடைத்து விற்கிறார்களா? இதுநிற்க, மூலப்பிர
கிருதிப்பொருள்கள் சேர்ந்தான பதார்த்தத்திலுள்ளகு
ணங்கள் அதின் மூலப்பிரகிருதிப்பொருள்களி லெதற்
காகிலும் இருக்கவேண்டுமென்பது வீண்: இவ்விஷய
த்தை (Chemistry) ரசாயனசாஸ்திரத்தைத் தன்பா
டமாக எடுத்துக்கொண்டு, (Middle School Exami-
nation) மிடில்ஸ்கூல் எக்ஜாமினேஷனுக்குப்போகிற
சிறுவனைக்கேட்டாலும் நன்றாய் விளங்கும். ஆக்சிஜ
ன், ஹைட்ரஜன்என்னும் இரண்டுவாயுக்கள் சேர்ந்
தானதுதண்ணீர். தண்ணீர் கண்ணுக்குப் புலப்படும்,
அதில் தக்கையைப்போட்டால் மிதக்கும். இந்த வா
யுக்களில் எதற்காவது கண்ணுக்குப்புலப்படுமதன்மை
இருக்கிறதா? அவற்றிலெதிலாவது தக்கையைப்போ
ட்டால் மிதக்குமா? சர்க்கரையின்குணம் தித்திப்பு.
இது கார்பன், ஆக்சிஜன், ஹைட்ரஜன் என்னும் மூல
ப்பிரகிருதிப்பொருள்களாலாயது. இந்தஒவ்வொருபொ
ருளுக்கும் தித்திப்பென்பதுஇல்லவேயில்லை, இவற்றின்
சேர்க்கையாலான சர்க்கரைக்குத்தித்திப்பு எப்படிவந்
தது? அந்தச்சேர்க்கையால் தித்திப்புகுணம் உண்
டானதாகத் தெரியவில்லையா? நண்பர்களே, இதை
நீங்களே தெளிவாய்க் கண்டறிந்து கொள்ளலாம்.* அ
ன்றியும், ஆக்சிஜன் ஹைட்ரஜன் சேர்ந்துதண்ணீரான
போது அந்தஇரண்டுவாயுக்களையும் அவற்றினாலாகிய
தண்ணீரையும் எடைபோட்டுப்பார்த்தால் சரிசமான
மாகவே இருக்கும். சர்க்கரையும் அப்படித்தான். அ
துபோலதேகத்தின்மூலப்பிரகிருதிப்பொருள்களை யெ
ல்லாம் எடைபோட்டுப்பார்த்தால், மிகுதியா யிருக்க
வேண்டியதாகிய ஆத்துமாவின் எடைஎன்ன?

* நம்மவர்கள் - தேகத்தை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆ
காசம் என்னும் ஐந்துபூதங்களாலாயது என்பார்கள். ஐரோப
பியர்கள் பூதங்களுக்கு எலிமெண்ட்ஸ் என்று சொல்வதுண்
டு. ஆயினும், தனித்தனி மூலபதார்த்தமாகிய (hydrogen oxy-
gen) ஹைட்ரஜன், ஆக்சிஜன், என்னும் இரண்டுவித வாயுக்க
ள் சேர்ந்தானது தண்ணீர். அப்படியான தண்ணீரை நாம் அப்
புவாகியஒருபூதமென்கிறோம். இப்படியாக நாம் பிருதிவிஎன்று
சொல்லுகிற மண்ணாகிய பூதத்தில் அநேகஎலிமெண்ட்ஸ் சே
ர்ந்திருக்கின்றன. உலகத்திலே இதுவரையில் கண்டுபிடிக்கப்
பட்டிருக்கிறஎலிமெண்ட்ஸ் 67. இவற்றிற்கு ஐரோப்பாசாஸ்
திரிகள் எலிமெண்ட்ஸ் என்கிறவார்த்தையையே உரித்தாக்கி
க்கொண்டார்கள். ஆயினும், நமது பூதமென்பதற்கும் எலி
மெண்ட்ஸ் என்பதற்கும் வித்தியாசம தெரியும்படி எலிமெ
ண்ட்ஸ் என்பதற்கு மூலப்பிரகிருதிப் பொருள்களெனப் பெ
யர்வைத்துக்கொண்டேன்.

* மூலப்பிரகிருதிப்பொருள்களின் சேர்க்கையாலான பதார்
த்தத்தின்குணம் அந்தப்பொருள்களி லெதிலாவது ஸ்பஷ்ட
மாய் விளங்காமல் புகுந்து மறைந்திருந்து அப்படி சேர்க்கை
யாகும்போது விளங்குமென்று சொல்வாருமுண்டு. அந்த நி
யாயம் எதிரிக்கு முள்ளதாகையால், மூலப்பிரகிருதிப் பொரு
ள்களி லெதிலாவது அறிவு என்பது ஸ்பஷ்டமாய் விளங்காம
ல் புகுந்து மறைந்திருந்து அவற்றின் சேர்க்கையால் உண்டா
கும் மூளையாகிய உறுப்பில் விளங்குமென்று சொல்வதற்கு
அந்த நியாயமே போதும். ஆத்துமாவென்னும் ஒரு விசித்தி
ரப்பொருளை நுழைக்கவேண்டிய அவசியமே யில்லை.

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.

[illegible]

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 49.] MADRAS:—SUNDAY DECEMBER, 5, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

ஆன்மா.

(185-வது பக்கத்தொடர்ச்சி.)

"எங்கும்வியாபித்து உடலெல்லாம்நிறைந்த அறிவு மற்றொன்றைக் கவர ஏன் துணைக்கருவி அவாவுமெனின் கூறுவாம். எங்கும் நிறைந்து அணுஅணுவாயுள்ள அங்கியணுக்கள்தான் பிரகாசிக்கவேண்டி ஓர்சிறிய துரும்புமுதலியவற்றைத் துணையாகக்கொள்ளவேண்டியது ஆவசியமன்றோ? அதுகொண்டு பிரகாசமுதலியசக்தி துரும்புக்குக்கிடைக்குமோ? அத் துரும்புபோன்ற துணைக்கருவி மனம். அதுவே மூளையெனவும் பொருந்தாது" என்று மானசதத்துவசாத்திரப்பயிற்சியில் வல்லார்போற்சாத்திரியார்கூறுகின்றார். ஆதலால் உபமானமாகிய துரும்பிற்குப் பிரகாசமுதலிய சக்தியின்மைபோல மனத்திற்குக்கருதல் சிந்தித்தல்முதலியசக்தியும் இல்லாதிருத்தல் வேண்டும். இல்லாதிருப்பின் அறிவிற்கேயவை உண்டா யிருத்தல் வேண்டும். அறிவிற்கே அச்சக்தியுண்டாயிருக்கின்றமையான் மனம்சக்தியற்றகருவியாகின்றது. ஆகையால் மனததிற்குத்தானாய் நினைக்குஞ்சக்தி எவ்வாற்றானுங்கிடையாதென்று சாஸ்திரியார்வாக்கினாலேயே ருசுவாகின்றது. இத்துரும்புபோலும் சக்தியற்ற ஜடமாகியமனத்தைக்கருவியாகக்கொண்ட அறிவைப் பற்றிச் சாஸ்திரியார் மேலேகூறியுள்ளவசனத்தை இங்கு எடுத்தெழுதி அவற்றிற்குள்ள பரஸ்பரவிரோதத்தையுங் காட்டுவாம்—"முன்னாம்செய்த உபந்நியாசத்தில் நன்குமூளையென்கிற ஒருசரீரபாகத்திற்கு அறியுந்தன்மை ஒவ்வாதெனவும், அது **மனத்திற்கு** ஒருஸ்தானந்தானெனவும் நன்குவிளக்கினதுமல்லாமல் அதைப்புத்தியுள்ளதெனச் சொல்லும்வழி அநேகவித ஆக்ஷேபங்களையுங் காட்டினோமாகையால், அதுபொருந்தாதுபற்றி **ஆத்துமாஎன்பது** அதிலும் அதாவது சரீரத்திலுள்ள எல்லாஉறுப்புகளிலும் வேறாயுள்ளதே; அதின்வடிவுயாதெனில் சரீரத்திற்காக்ஷிப்பிரமாணத்தால் அல்லது அநுமானத்தால் இச்சரீரத்திலுள்ள ஒருஉறுப்பின்குணமாய் அல்லது வேறுசரீரத்திலுள்ள உறுப்பாய்ப் பொருந்தாத **அறிவே**"

இங்கே "அது மனத்திற்கு ஒருஸ்தானந்தான்" என்னும் சொற்றொடரில் அது என்பது மூளையையும், மனம் என்பது அறியுந்தன்மையையும் காட்டுகின்றதன்றோ? மனம் அறியுந்தன்மையானால் அது துரும்புபோலசக்தியற்றதென்றும் அறிவின் கருவியென்றும் மயக்கவசத்தராகிக்கூறுவது சாஸ்திரியார் கற்றகல்வியையும் வாதசாமர்த்தியத்தையுங் காட்டிக்கொடுக்கின்றதே: மேலும் நமது கல்விக்கடலாகிய ஸ்ரீமான் ஸ்ரீனிவாசசாஸ்திரியார்அவர்கள் கூறும் ஆத்துமாவின் வடிவையுங் கவனிப்போம்." **அதின்** (ஆத்மாவின்) வடிவு யாதெனின், சரீரத்திற்காட்சிப் பிரமாணத்தால் அல்லது அனுமானத்தால் இச்சரீரத்திலுள்ள ஒருஉறுப்பின்குணமாய் அல்லது வேறுசரீரத்திலுள்ள உறுப்பாய்ப் பொருந்தாத **அறிவே**" என்கின்றார். இத்தொடர்வாக்கியத்தைத் தனிவாக்கியங்களாகப் பிரித்துப் பொருள்படுத்துங்கால்—

அதின் (ஆத்மாவின்) வடிவுயாதெனில் சரீரத்திற்காக்ஷிப்பிரமாணத்தால்பொருந்தாத அறிவே.

அதின் (ஆத்மாவின்) வடிவுயாதெனில் சரீரத்தில் அனுமானத்தால் பொருந்தாத அறிவே.

அதின் (ஆத்மாவின்) வடிவுயாதெனில் இச்சரீரத்திலுள்ள ஒரு உறுப்பின்குணமாய்ப் பொருந்தாத அறிவே.

அதின் (ஆத்மாவின்) வடிவுயாதெனில் வேறுசரீரத்திலுள்ள உறுப்பாய்ப்பொருந்தாத அறிவே.

என்று ஆகின்றன. ஆகவே காட்சிப்பிரமாணத்தாலும் அனுமானத்தாலும் ஆன்மா அறியத்தக்கதல்லவென்றும், அது உறுப்பென்பதற்கு உறுப்புமல்லவென்றும், குணமென்னிலோ குணமுமல்லவென்றும், அன்மைச்சொல்லினாற்சொல்லி அவாந்தரத்தில் விட்டுவிட்டாரேயல்லாமல் இவர் ஆன்மலக்ஷணம்பகர்ந்து ஆன்மநிருபணம் செய்ததெங்கே? இதைவாசிப்பவர்கள் ஆன்மாயாதென்றுதான் துணிவார்கள்? இதுவும் ஓர் பிரம்மவித்தையாகவல்லவோ இருக்கின்றது.

அறிவே ஆத்மாவென்றும், அறிவேமனமென்றும், மனம்வேறு அறிவுவேறென்றும், அறிவுவேறு ஆத்மாவேறென்றும், முன்னுக்குப்பின் மலைவுபடத்தக்க குழறுபாட்டுக் கியானமுடைய இப்பண்டிதசிரோன்மணி மேற்கேயுதித்தமகான்களையும் அவர்களதுபாஷையாகிய இங்கிலீஷையும் குறைகூறுகின்றாரே இது எமக்குப்பெருநகைப்பை விளைக்கின்றது.

இப்பிரபஞ்சவிகற்பம்.

நாம் வாசஞ்செயகின்ற இந்தபூமியானது இடைவிடாது நாளுக்குநாள் மாறிக்கொண்டே வருகிறதென்பது, அடியிற்கூறும் திருஷ்டாந்தங்களால்அங்கை நெல்லிக்கனிபோல் சங்கையின்றி நன்குவிளங்கும். இங்ஙனம் மாறிக்கொண்டிருக்கும் இந்த உலகவிகற்பங்களை நம்போலிய பலருங்கண்ணுற்றிருந்தும் அவற்றின்தத்துவத்தைச் சித்தபூர்வமாகச் சிந்திக்கின்றிலராதலால், அதைஇவ்விடத்து விரித்துரைப்பது அதியாவசியகம்.

இலக்ஷண யுக்தமாகிய சொரூபங்களையே நாம்அறிதல்கூடுமாதலாலும், உலகம் சதாகாலமும் மாறிக்கொண்டேயிருப்பது அதனியல்பும் இலக்கணமுமாதலாலும், அவ்வியல்பு அதனிடத்தில் பிரிந்திருப்பதும் நீங்கியிருப்பதும் அசாத்தியம். நாம் பிறந்தநாள்தொட்டு இந்நாள்காறுங் கண்டுவரும் மாடமாளிகைகளுங் கூடகோபுரங்களும் வீடுவாயல்களும், மலைகளும் குன்றுகளும் நதிகளும் வயல்களும் ஒருபடித்தாகத்தானே இருக்கின்றன, மாறுதலுடையன வென்பானேனென்று சிலர்வாதிப்பார்கள். இவர்களுக்கு விடையாக நாம்கூறுவதுயாதெனின்—மந்தமாருதம் வீசுவதால் தூசுகள் ஓர்புறத்தேபடிந்துமணற்குன்றுகளாவதும், மழைநீர் பனித்திவலைமுதலியன, பாறைகளினுடையவும் குன்றுகளினுடையவும் மலைகளினுடையவும் வெடிப்புகளிலுஞ் சந்துகளிலும் படிந்து குளிர்ச்சியாலுறைந்து இறுகிப்படிந்து கிடப்பதும், பின்வெய்யலால் ஊஷ்ணங்கண்டபோது கரைந்து நாளுக்கு நாள் காலஹரணமாய் அக்கற்பாறைகளையும் குன்றுகளையும் சிறுகச்சிறுகப்பிளப்பதும், கண்டிருக்கின்றோம். உறைந்தநீர் உருகினால் மிகுதிப்படுமாதலால், கற்சந்துகளில் உறைந்திருக்கும் நீர் வெப்பத்தால்உருகும்போது இடம்போதாமையால் கற்களைப் பிளவுபடுத்துகின்றது. மலைகளினின்றுவீழும் அருவிகள் நாளுக்குநாள் அம்மலையைத் தேயச்செய்து மணல்களை சமுத்திரத்தில்கொண்டுசேர்த்து திட்டுகளாக்கின்றன. சமுத்திரம்சிற்சிலகாலங்களில் நிலத்தில பெருகிவந்து பட்டணங்களைஅழித்து தனக்குட்படுத்துகின்றது. பூகம்பங்களாலனேகநாடுகள் அழிகின்றன.

எரிமலைகள் இட்டத்தைக்கக்கி மலையாக்குவதும், புல்பூண்டு செடிமுதலிய தாவரங்களும், மனிதர் விலங்கு பறவை முதலிய ஜெந்துக்களும் பிறப்பதும் நசிப்பதுமாக வேறுபடுகின்றன.

நாற்பது ஐம்பது வருடங்களுக்குள், கால்வாய்களின் மார்க்கமாய் மண் ஏரிகளில் சேர்ந்து நாளுக்குநாள் அவ்வேரியின் ஆழத்தைக்குறைத்து, முடிவில் புல்பூண்டு செடிகள் செழிப்பாய் விளையத்தக்கவயல்களாகின்றன. அதுபோல் சமுத்திரத்திலும் நதிகள் பூமியைக்கரைத்து மண்ணைச்சேர்த்து திட்டுகளாக்குகின்றன- இவ்வாறாக்கப்பட்ட திட்டுகளில் பலசீவராசிகள் வாழ்ந்திருக்கக்காண்கின்றோம். இவ்வாறே நாளுக்குநாள் நிலத்தைக்கரைத்து சமுத்திரத்தில் திட்டாக்குகின்றதும் கரைத்த நிலத்தில் சமுத்திரசலம் பாய்ந்தோடி கவர்வதும், இப்படியே நீர் உள்ளவிடத்தில் நிலமும் நிலமுள்ளவிடத்தில் நீருமாய் அடிக்கடி மாறிமாறிவருகின்றதை நாம் அனுபவசித்தமாய்க் காண்கின்றோம். ௪0-௫0 வருஷங்களுள் இவ்

வளவு மாறுதலானுல், ௩ - ௯ - ௰௧ - வருஷங்களில் எவ்வள
வுமாறுதலுண்டாகும்? ஆகையால் இந்தபூமி அடிக்கடி மாறி
வருகின்றது.

நாம் மேலேதிருஷ்டாந்தங்களைக்கொண்டு நமது பூமிக்கு
விகற்பங்களுண்டென்று ஒருவாறு சுருக்கிச்சொன்னோம்; இம்
மாறுதலுண்டாகும் ஏதுக்கள் எக்காலத்தும் எப்போதும் தத்
தமக்குரிய காரியங்களை செய்துகொண் டிருக்கின்றமையால்
இனிநாமவ்வேதுக்களையும் அவ்வேதுக்களின் தொழில்களையும்
விரித்துரைப்போம், அங்ஙனமுரைக்குமுன்னர் இப்புவியின்வ
டிவையையந்திரி பற வுரைத்தல்வேண்டும்.

பூமிதட்டையாயிருக்கின்றதென்று சாதாரணஜனங்கள்சொ
ல்லுகின்றார்கள். அதுசரியல்ல - இப்பூமிஒருபந்தைப்போலிரு
க்கின்றது. அதன் சொற்பபாகத்தை மாத்திரம் நாம் பார்க்க
க்கூடுமானபடியால் அதுதட்டையாகக்காணப்படுகிறது. நாம்
சமுத்திரக்கரையிலிருந்து அதிக தூரத்திலவரும் மரக்கலங்க
ளைப்பார்த்தால் முதலில் அவற்றின்மேற்புறமும், சற்று அரு
கேவந்தால் மேற்புறமும் நடுவும், இன்னும் அருகேவந்தால்
முழுதும் காண்கிறோமல்லோ? பூமி தட்டையா யிருக்கு
மாயின் இவ்வணம் புலப்படுமோ! மலையைநோக்கிப்போகும்
போது முதலில் சிகரத்தையும், சற்றுஅருகுபோம்போது அதன்
நடுவையும், சிகரத்தையும், இன்னும் அருகேபோனால் முழுதை
யும் காண்பது பிரத்தியட்சமல்லவா? பூமிதட்டையாயின் இ
வ்வாறு எங்ஙனம் புலப்படும்? பற்பலகப்பல்கள் பூமியைச்சு
ற்றிவருகின்றன. எவ்வணமெனின், அவைகள் ஓரிடததைவிட்டு
புறப்பட்டுத் திரும்பாமலேசென்று புறப்பட்ட ஸ்தானத்திற்கே
வந்து சேருகின்றன. இன்னும் அநேக திருஷ்டாந்தங்களிருப்
பினும் இவை பூமி தட்டையல்லவென்றும் உருண்டைவடிவா
னதென்றும் சான்று பகர்கின்றன.

பூமியானது சந்திரசூரியனைப்போல அந்தரத்திலே சுழல்கி
ன்றது. நாம் எங்குபோனாலும் நமது தலைக்குமேல் ஆகாயத்
தைப்பார்ப்போம், பூமியானது - ௨௪ - மணிநேரத்தில் ஒரு மு
றை தன்னைச்சுற்றிவருகிறது; இதனால் இரவும் பகலும் உண்
டாகின்றது - இரவானது சூரியனுக்கு மறைவாயிருப்பதே. பக
லானது சூரியன் ஒளி பூமியின்மீது படுவதே. நமக்கு பகலாயி
ருந்தால் நமக்குக்கீழேயிருக்கும் மற்றபாகத்தாருக்கு இருட்
டாயிருக்கும். பூமி சூரியனை வருடத்துக்கொருமுறைசுற்றி
வருகின்றது. அதனால் பருவகாலங்கள், உண்டாகின்றன.

இனி நாம் பூமியின்விகற்ப ஏதுக்களை உரைப்போம். பிர
தானமான விகற்ப ஏதுக்கள் ஐந்து. இவை வாயு - அப்பு,
தேயு, அவயவக்கூட்டம், பூதசையோகம்; வருகிற சஞ்சிகை
யில் வாயுவினாலுண்டாக்கப்பட்ட விகற்பங்களை யெடுத்துக்
கூறுவோம்.

இ. மு.

(இன்னும்வரும்.)

உபந்யாசவிலட்சணம்.

(191-வது பக்கத்தொடர்ச்சி.)

வேதம்பிரமாணமாகுமென்பதுபற்றி, ஆசாரியஸ்வாமிகள்-
வேதம்அநாதி, இதுஒருவரால் எழுதப்பட்டதன்று, அதைப்
பற்றித்தான் இதற்கு எழுதாக்கிளவியென்றபேரமைந்தது, வே
தமே நான்நித்தியம்என்று முறையிடுகிறது, என்றுகூறி, சில
சுருதிகளெடுத்துதகரித்தனராம். இதனால்வேதம்பிரமாணமெ
ன்பதற்கு வேதவாக்கியங்களே சாட்சியாகின்றன. இதுவெகு
நேர்த்தி; அப்படிக்கானால், ஒருவன்சொல்லுவதற்கு அவனது
சொல்லையே சாட்சியாகக்கொள்ளலாமே? இவர் தமதுவேதத
தைத் தமது சர்வேஸ்வரனைப் போலவே அனாதியென்கிறார். ஆ
னால், మహతోభూతస్యనిశ్వసితమేతదృగ్వేదో యజుర్వేదస్సామవేదో
థర్వణవేదః. இது வேதவாக்கியம். ருக்கு-எஜுர்- சாமம் - அ
தர்வணம் என்னும் நான்குவேதங்களும் மகாபூதத்தின் ஸ்வா
சங்கள்என்பது இதன்பொருள். பிரமமென்றாவது சர்வேஸ்வ
ரனென்றாவது பரமாத்மாவென்றாவது சொல்லாமல், மாகாபூ
தமென்றதினாலே, பூதங்களெல்லாம் புலப்படுதலால், புலப்ப
டாதமகாபூதமென்பது வேறொன்றிராது, பூதங்களையெல்லா
ஞ்சேர்த்து ஏகமாகப்பிரபஞ்சமெனப் பொருள்படும்படி மகா
பூதமெனக்கூறப்பட்டதென்று சொன்னாலுஞ் சொல்லலாம்.
வேதம்ஒலிவடிவாகிய சத்தரூபமாகத்தானே யிருக்கிறது; சத்
தம் ஒருவஸ்துவினிடமா யுண்டாகவேண்டியதேயன்றித் தனி
த்துண்டாவதில்லை; வேதம்மகாபூதத்தின்ஸ்வாசமென்கிற மேற்
படி வேதவாக்கியப்பிரமாணத்தின்படி மகாபூதம் காரணமும்
ஸ்வாசம் காரியமுமாய் அப்பூதம்ஒலிக்கு முதற்பொருளாகவு
ம், ஒலியிரண்டாவது பொருளாகவுமேற்பட்டு, அனுபவத்திற்கு
மொத்திருத்தலால், ஒலியாகிய வேதம் அனாதியாகமாட்டாது.
ஆனால் ஆச்சாரியர் சுருங்கச்சொல்லவேண்டி, அநாதியாகியம
காபூதத்தோடேஸ்வாசமும்இருத்தலைப்பற்றி ஒருமிக்க (ஸ்வாச
மாகிய) வேதமும்அநாதியென்றனரோ! அல்லதுவேதம் மகா
பூதத்தின் ஸ்வாசமென்றால், எங்கும்நிறைந்துள்ளமகாபூதத்தி
ன்ஸ்வாசம் வெளிப்படுத்தங்குவதற்கு வேறேயிடமில்லையெ
ன்றும், ஸ்வாசம்விடுதற்கு நாசிபோன்றஏதோ ஒருபொறியிரு
க்கவேண்டியதுபோல, பார்த்தல்கேட்டல் முதலியவற்றிற்கு
வெவ்வேறுபொறிகளுமாகிய இத்தியாதி யவயவங்களோடுஉரு
ப்படுவதினால அளவுபட்டு, கடவுளின்பரிபூரணத்துக்கேமோச
ம்வருமென்றும், ஆதியில்விடப்பட்டஸ்வாசம் வேதமானால், பி
ன்புவிடப்பட்ட ஸ்வாசம் என்னவாயினவோ? ஸ்வாசமேய
டைபட்டுப்போயிற்றோ என்றும், இவ்வாறுபற்பலஆட்சேபங்
களுக்கு இடமுண்டாகுமென்றறிந்துமறைத்து, ஒரேதரமாய்
வேதத்தை அனாதியென்று சொல்லிவிட்டால் எல்லாம்அடிப
ட்டுப்போகுமெனக்கருதி அப்படிச்சொல்லினரோ, யாமறிந்
திலோம்.

வேதம் ஒருவரால் எழுதப்படாமையால் அதற்குஎழுதாக்கி
ளவியென்றபேரமைந்ததென்றார். இதனாலேஎன்னஅதிசயமு
ண்டாயிருக்கிறது! இப்படிக்கெல்லாஞ்சொல்லிஜனங்களைமலை
க்கச்செய்கிறதேயல்லாமல் வேறொன்றுமில்லை. வேதத்தையெ
ழுதினால் அன்னியர்கள்வாசிப்பார்களாதலால் அதன்பெருமை
குன்றித்தங்களுடைய குருத்துவத்துக்குக் கேடுவருமென்றெ
ண்ணிப்பிராமணர்கள் தங்களுக்கேஉரித்தாக்கிக் கொள்ளும்
பொருட்டு, அதுஎழுதாக்கிளவியாதலால் அதைஓதிப்பாராய
ணமபண்ணவேண்டியதுதா னென்றுசொல்லி, அந்தவார்த்தை
யைநிலைநிறுத்திவந்தார்கள். இதுவரையில் வேதம்எழுதப்ப
டாதிருக்குமாயின் அதுவெகுகாலத்திற்கு முன்னமேதானேயி
றந்துபோயிருக்கும். விஷ்ணுமச்சாவதாரமெடுத்ததேன்? ஹய
க்கிரீவனஎன்னும் அசுரனவேதத்தை எடுத்துக்கொண்டுபோய்
ச்சமுத்திரத்தில் ஒளித்துவிட்டதனால், அதைக்கண்டுபிடித்தெடு
த்துவருவதற்காக வல்லவா தானதண்ணீரில்முழுகினால் இறந்
துபோவோமென்றுபயந்து விஷ்ணுதண்ணீரில் நிலைக்கும்படி
யான மச்சரூபமெடுத்தார்; அந்தஅசுரனதண்ணீரி லிறங்குவத
ற்கு வேறேரூபமெடுத்ததாகச்சொல்லியிராமையால், அவனவ
ல்லமையினும் இவர்வல்லமை குறைவுதான். அந்தஅசுரனவே
தத்தைஎடுத்துக்கொண்டுபோனபோது அதுஎழுதப்படாதிருந்
தால் எப்படிகொண்டுபோயிருப்பான்? ஒலியானதுஎவ்விதப
தார்த்தமுமல்லாமல் அப்போதப்போது அற்றுப்போகத்தக்க
தாகையால் கையிலகப்படத்தக்கதன்று. மரம், கல், மண், சிங்
கம், யானைமுதலியஒவ்வொருவஸ்துவையும் குறிப்பதற்கு அந்
தந்ததேசத்தாருக்குள் சொற்களுண்டாகிப் பாஷைகளேற்பட்
டு ஒலிவடிவு அளவாகநின்றனவேயல்லாமல், முதலில்வரிவடிவு
ஏற்பட்டதில்லை. சொற்களுண்டான கொஞ்சகாலத்திற்குப்பி
ன்பு, இன்னின்னசொல்இன்னின்னபொருளைத் தெரிவிக்கிறதெ
ன்பதற்கு சில அடையாளங்கள் எழுதிக்காட்டப்பட்டன. இ
து உண்மை யென்பதற்குப் புராதனமான கல்வெட்டு முத
லிய சாசனங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.
அந்த அடையாளங்களான எழுத்துகளை இன்னவையென்று இப்
போதுதெரிந்துகொள்வதே கஷ்டம். இப்படிப்பட்ட அடை
யாளங்கள் நமது தற்கால பஞ்சாங்கங்களிலே இரண்டொன்
றுகாணுகிறோம், பூரணை அல்லது பௌர்ணமி என்பதற்கு (○)
இவ்வாறு வெண்புள்ளியும், அமாவாசியை என்பதற்கு (●) இ
வ்வாறு கறுப்புப்புள்ளியும் குறித்திருக்கின்றன. சமஸ்கிரு
தத்தை தேவபாஷையென்றும், அப்பாஷையை எழுதிவ
ந்தஎழுத்தை தேவநாகரமென்றும் சொல்லுகிறார்கள். மவுடி
கமான பிரதமகாலத்திலே, பாஷையைச்சீர்ப்படுத்தி, அதைஎ
ழுதுவதற்கு எழுத்துகளைஏற்படுத்தினவர்களை அக்காலத்திற்கு
விசேஷபுத்திமானகளாகத்தானே மதிக்கவேண்டும். இத்தேசத்
திலே அந்தநாகரஎழுத்து கஷ்டமானதாயிருப்பதுபற்றிப் பி
ன்பு தெலுங்கெழுத்துகளிலே சமஸ்கிருதகிரந்தங்கள் சாதா
ரணமாய் எழுதப்படுகின்றன. சுவப்பிரயோசனமாகவும் த
ற்புகழ்ச்சியாகவும சொல்லப்பட்டவைகள் தவிர, பொதுநன்
மைக்காகச் சொல்லப்பட்ட மற்றியாவும் குறைவுள்ளனவா
யிருந்தபோதிலும் விசேஷப்பட்டவையாகவே மதிக்கவேண்
டும். முன்சொல்லி யிருப்பனவற்றை நாம் இப்போதுநமது
புத்தியுத்தியால் காலத்துக்குத் தக்கபடி சீர்ப்படுத்திக் கொண்
டபோதிலும், பெரும்புகழ் முன்சொன்னவர்களுதே.

"வேதம்சிலகாலம் மறைந்திருந்தது, அப்பொழுதுரிஷிகளு
டைய மார்வமென்னும் கோயிலில் நித்தியவாசஞ்செய்துகொ
ண்டிருந்தது" என்றனர். அது ஏன்மறைந்திருககவேண்டும்?
இது சாஸ்திரியாகண்டறிந்ததல்ல; வேதத்திலேயாவது ரிஷி
களால் ஸ்மிருதிகளிலேயாவது சொல்லியிருக்கவேண்டும். இ
தனாலே, வேதமென்பதொன்று இல்லாதகாலத்தில், அதுதங்க
ளிடத்தில் மறைந்திருந்ததாகவும், தாங்கள்நூதனமாய்க்கற்பி
த்தபோது, அக்காலத்தில்அதுவெளிப்பட்டதாகவும், அக்கா
லத்துஜனங்களுக்கு நம்பிக்கையுண்டாகத்தக்கதாய், அதற்கு
ப்புராதனம்கற்பிக்கவேண்டி அதைஉண்டுபண்ணின ரிஷிகள்
அப்படிச்சொன்னார்களென்று விளங்குகிறது.

வேதத்தைசர்வேஸ்வரன் தன்னுந்திபூத்த நான்முகனுக்கு உபதேசித்தபோது, தானொன்றைப்புதிதாய் நிர்மித்துச் சொன்னனல்லன் என்றும், முன்எந்த அநுபூர்வகமாயிருந்ததோ அப்படியேநாளதுவரையில் பரம்பரையாய் அனுஷ்டிக்கப்பட்டுவருகிறதென்றும், இதற்குப்பிரமாணமாக இலங்கேஸ்வரனுகிய இராவணன் "இராவணபட்டு" என்னுமோர் கிரந்தஞ்செய்திருக்கின்றான், அதில் வேதத்திலுள்ள எழுத்து-பசம்-வாக்கியமுதலியவைகளை இவ்வளவுதானென்று கணக்கிட்டுத் தனித்தனியே பிரித்தெழுதியிருக்கிறதென்றும், சாஸ்திரியார்கூறியுள்ளார். வேதம் அளவைக்கடந்ததென்று வேதத்திலேதானேசொல்லியிருக்க, இராவணன் அளவுபடுத்தினது அதிசயந்தான். 'தன்னுந்திபூத்த நான்முகனுக்கு' என்றதனுல், சர்வேஸ்வரனென்பது பல அவயவங்களுமுடையவனுய்ப் பள்ளிகொண்டிருக்கிற விஷ்ணுவென்பதுவிளக்கம். சர்வேஸ்வரன் புதிதாய்ஒன்றையும் உபதேசிக்கவில்லையென்பதற்கு வேதவாக்கியம் பிரமாணமோ அல்லது சாஸ்திரியார்வாக்கே பிரமாணமோதெரியவில்லை. வேதம் மாருதிருக்கிற தென்பதற்குப் பிரமாணம் 'இராவணபட்டு' என்ருர்; அதுமாத்திரமேயல்ல அநுமத்பட்டு என்றும் வேறென்றிருக்கிறது. அந்த 'பட்டு ஏற்பட்டதற்குமுன்னமே, வேதம்மாருதிருந்ததென்பதற்கு சாஸ்திரியார்தான் சாட்சிசொல்லவேண்டும். அந்தராவணபட்டிலே, ககாரம்இத்தனை, பகாரம்இத்தனை, அகாரம்இத்தனை, மகாரமித்தனை, ஷகாரமித்தனைஎன எல்லாவெழுத்துகளுக்கும் கணக்கேற்பட்டிருநதபோதிலும், அது வேதம்மாருதென்பதற்குப் பிரமாணமாகுமா! ஓரிடத்திலே 'மதம்' எனகிறசொல்லில், தகாரத்தை-நகாரமாக்கியும், மற்ருேரிடத்தில் 'மநம்' என்பதில், நகாரத்தைத்தகாரமாக்கியும் திருப்பிவிட்டால், எழுத்துக்கணக்குச்சரிப்பட்டுத்தான்போகும்; ஆனுல் பொருள்பேதித்து அநர்த்தமாய்விடும். சாஸ்திரியாருடையபிரசங்கத்தை மேலாககவனிப்பவர்கள வேதத்திற்கு, அப்பா! இத்தனை பந்தோபஸ்து ஏற்பட்டிக்கிறதாவென்று மலைக்கிறதுதான்.

வேதம் ஒருக்காலும்பொய்சொல்லாது, அதில் சொல்லியிருக்கிறபடிசெய்துபார்த்தும், கலியின்கொடுமையால் பலிக்காமற்போனுல், வேதத்தில்சொல்லியிருக்கிற முறைமைப்படி அனுஷ்டிக்காததினுற்ருன் பயனில்லையென்று நினைக்கவேண்டுமென்ருர். இந்துதேசத்திலுள்ள தேவாலயங்கள் முழுவதும் விக்கிரகங்களுக்குச் சம்புரோட்சணையினுல் பிராணப்பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது. பிராணனிருப்பதற்கு ருஜூவொன்றுங் காணப்படாமையால், வேதம்பலிக்கவில்லையென்றே தீர்மானிக்கவேண்டும். அப்படிப்பட்டபலியாத வேதம் இருந்தாவதென்ன? கலியானது பிரதமகாலத்திலேயே குறுக்கேவந்துமாட்டிக்கொண்டு அப்படிப்பட்டகொடுமைசெய்கிறதென்ருல், கலிபுருஷன் வளரவளர கொடுமைமிகுந்துகொண்டேவருமாதலால், கலியொழிகிறவரையில் பயன்படாதவேதத்தை ஒழித்திருப்பது உத்தமம்.

"கண்ணபிரான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தபோது, ஸ்வாமிதாமே 'ஜாதிபேதங்களையும் அவரவர்களுக்குரியதொழில்களையும் நான்தான் ஏற்படுத்தினேன்' என்று கூறியிருக்கின்றனர். இந்தசாதிபேதம் இவ்விந்தியாவிலுள்ள மாந்தர்களுக்குமாத்திரமல்ல, தொன்னுள்தொட்டு விண்ணுடுமுதல் மண்ணுடாகிய இந்நாடுவரையிலுள்ள அகிலசராசரங்களிலும் எந்நாளும் சாதிபேதமுண்டு. தேவர்களில் பிரகஸ்பதி-பிராமணர், இந்திரன்-க்ஷத்திரியன், சப்தமருத்துகள்-வைசியர், கெந்தர்வாள்-சூத்திரர், பிசாசம்-சண்டாளம். இப்படியே மிருகங்கள், பட்சிகள், ஊர்வன ஐந்துவாகிய பாம்புமுதலியவைகள், மரங்கள் கொடிகள் முதலியவைகளில் காண்க" என்றுசொல்லினர். பாட்டன்யார், ஆசாரியனர், அண்ணனர், தம்பியார், இவையெல்லாம் தேகாபிமானத்தைப்பற்றியுண்டானதேயல்லாமல், ஆன்மாக்களெல்லாம் ஒன்றுதான், பேதமில்லை, கொல்லு. கொல்லு, என்று அர்சுனனுக்குத் திரஞ்சொன்ன கிருஷ்ணன் சாதிபேதங்களை நான்தான் கற்பித்தேனென்று சொன்னபோது, அதினுடைய அர்த்தமென்ன? (அசுரர்கள் அனுஷ்டான ஜபதபங்களில் மிஞ்சினதினுல் அவர்களைஅடக்க விஷ்ணுபௌத்தாவதாரமெடுத்துப் புத்தமதத்தைப்போதித்துக்கெடுத்ததுபோல) பிரபஞ்சத்தை மாயாப்பிரபஞ்சமாக்கவேண்டி சாதிபேதங்களை கற்பித்தவன் நான்தானென்று சொன்னதாகத் தெரியவருகிறது. புலப்படாததேவர்களைப்பற்றி என்னசொன்னுலும் சொல்லிக்கொள்ளட்டும்; ஆனுல் உலகத்தில் இல்லாதபிசாசத்தைச் சாஸ்திரியார் நிலைநாட்டிவிட்டார். சாஸ்திரியார் கூறியபடி மிருகம், பறவை, கொடிமுதலியவற்றில் பேதமுண்டு. யானை-சிங்கம்-கரடி-புலி-குதிரை-என பெரியபிரிவுகளுமல்லாமல், ஒவ்வொன்றிலும் வெவ்வேறு பிரிவுகளுமுண்டு. புலியில், வேங்கைப்புலி, சிறுத்தைப்புலி (பூனைக்கு) இற்புலிஎன பலவகையுண்டு; வாழையிலும், செவ்வாழை பச்சைவாழை. மோரீசுவாழை என பலபேதங்களுண்டு. செடி கொடிமுதலியவற்றிலும் அவ்வாறே. இவற்றிற்கு முட்டையிலும் முளையிலும் குட்டியிலும் குஞ்சிலும் உற்பத்தியாகும்போதே பேதந்தெரிகிறது. அதுபோல, சாதிபேதங்கள் அனுஷ்டிக்கப்படுகிற இந்தியாவிலுள்ள மாநதர்களுக்காவது பிறப்பிலேயென்னபேதமுண்டு? பிராமணனுக்கே பிறப்பினுல் சூத்திரனென்றும் கர்மத்தினுல் பிராமணனுகிருனென்றும் சொல்லியிருக்கிறதேயல்லாமல் வஜ்ர சூச்சி கோபனிஷத்தில் கேட்டிருக்கிறபடி நான்குசாதியாருக்கும் வெவ்வேருன வருணபேதமாவதிருக்கிறதா? அல்லது அணிற்பிள்ளைக்கு மூன்றுகோடிருக்கிறதுபோல பிராமணனுக்கு மார்பில் மூனறுகோடாவதிருக்கிறதா! புலிக்குள் பேதங்கூறுவதுபோல, மனிதருக்குள் நீர் மனிதனென்றும் காட்டுமனிதனென்றும் வீட்டுமனிதனென்றும் பேதங்கூறலாம். அன்றியும்; சீதளோஷ்ணமுதலிய பூதவிகற்பங்களினுலே வெண்ணிறம், கருநிறம், கபிலநிறம், வெங்கலநிறம், சுருட்டைமயிர், செம்பட்டமயிர், பூனைக்கண், தடித்தஉதடு, சப்பைமூக்கு இப்படிப்பட்டவித்தியாசமுள்ள வெவ்வேறு தேசத்தாருண்டு. இந்தியாவில்மாத்திரமல்லாமல் எந்ததேசத்திலும் சாதிபேதமுண்டென சாஸ்திரியார்கூறியபடி இங்கிலாந்துதேசத்திலுண்டா? குருக்களாகியபாதிரி பிராமணசாதியென்ருல், அவனுடையபிள்ளை தோட்டக்காரனுகிருன், கூலிக்காரனுடையபிள்ளை பாதிரியாகிருன், சக்கிலியினுடையபிள்ளை மந்திரியாகிருன், குடியரசுநாடாய்விடில், குடிகள்அரசாகிருர்கள். இவ்விதமாய் அடிக்கடிமாறுவதால் தேசத்தாரொன்னும் பேதமேயன்றி பிர்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரரென சாதிபேதஞ்சொல்லக்கூடாது. ஆதலால் சாஸ்திரியாருடையவாக்கை அபிமானவாக்கென்றே நாம்கொள்ளவேண்டும்.

A. M.

மெய்யறிவு. ௨௯௩

௨-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா?

(192-வது பக்கத்தொடர்ச்சி.)

அப்படிக்கல்ல. ஆத்துமா எப்போதும் ஒரேநிலையிலிருக்கிறது, ஆனுல் ஒருதச்சன் தன்னுடையஆயுதம் மழுங்கியிருந்தால் வேலைநடத்தக்கூடாதவனுயிருந்து, ஆயுதத்தைக்கருக்கிட்டபின்பு வேலைநடத்துகிறதுபோலத்தான் ஆத்துமாவுமென்று சொல்வாருமுண்டு. இந்தஉபமானத்தை உள்நுழைந்துபாராமல் மேலாக நம்புகிறவர்களுக்கு. என்னுடையவாதம் அடிபட்டுப் போனதுதானே. எனது சிநேகிதரொருவர் தலையிலுள்ளமயிரைக கத்தரித்தால் நோகாததுபோல, செடியிலுள்ள கத்தரிக்காயை அறுத்தால் நோவுண்டாகாதென்ருர். அண்ணே, மயிரை ஒருசெடியில்உலர்ந்துநிற்கிறகிளைக்கு உபமானமாகச் சொல்வது சரிவரும், கத்தரிக்காயில் ரசமிருப்பதுபோல தலைமயிரில் ரசமில்லாதபடியால் அந்த உபமானம்சரியல்ல, சரீரத்திலிருக்கிற ஒருவிரலை உபமானமாக்கி, அதைஅறுத்தால் உண்மைதெரிந்துகொள்ளலா மென்றேன். அதுபோல, சடபதார்த்தமல்லாமல், எந்தப்புலனுலும் அறியக்கூடாததாயும், இன்னதென்று மனதினுல் நினைக்கக்கூடாததாயுமிருக்கிற நிஷ்களப்பொருளாகிய ஆத்துமாவிற்கு ஒருதச்சனையும் குழந்தைகாலுக்கு மழுங்கிப்போன ஒருஆயுதத்தையும் உபமானமாக்குவது சரியல்ல. ஆத்துமாவிற்கு நீராவியையும் உடலுக்குத் தோண்டியையும் ஒப்பிட்டுப்பார்ப்போம். நீராவியை ஒருதோண்டிநிறையச் செய்வதற்கு ஆழாக்குஜலம்போதுமானுல், அதற்கு இரட்டிப்பானமிடாவிற்கு உழக்குஜலம் வேண்டுமே; அந்த உழக்குஜலத்தை அந்த (சிறு) தோண்டியில்விட்டு வாயைமூடிப்போட்டு ஆவியாகச் செய்தால், ஆழாக்குஜலத்திற்குவதிலாய் உழக்குஜலமிருப்பதால், அந்தஆவி தோண்டிக்குளடங்காமல் பூரித்து, தோண்டியைச் சின்னபின்னமாக்கிவிடும். இதில் ஆத்துமாவிற்கு உபமானம் ஆவி: சிசுவின் உடலுக்கு உபமானம் தோண்டி. பூரித்தஆவி சிறுதோண்டியில் அடங்காமல் அதைப்பீறிக்கொண்டு வருவதுபோல, பூரணத்துவத்தை அடைந்திருக்கிற ஆத்துமா சிசுவின்உடலில் பிரவேசமாகையில் அதிலடங்கினதுபோக மிகுதி வெளியில்நின்ருவது போகவேண்டும், கட்டாயமாக நுழையுமாகில் அந்தஉடலைச் சின்னபின்னமாகச்செய்தாவது விடவேண்டும். அப்படிச்செய்யாமையினுல், சிசுவின் உடலிலிருக்கிற ஆத்துமா அந்தப்பூ

ரண ஆத்துமாவல்ல, அந்தச்சிசுவின் பருவத்துக்கேற்றதாக ஆத்துமாதோன்றி சரீரத்தோடுகூடவளர்ந்து வரவேண்டுமென்பேன். இந்த உபமானத்தைமேலாகநம்பிவிடுகிறவர்கள் என்வாதம் ஜெயித்ததென்பார்களல்லவா? மேற்கண்ட இரண்டுகட்சி உபமானங்களில், முதலாவது—நிஷ்களப்பொருளாகிய ஆத்துமாவிற்கு உபமானம் சகளப்பொருளாகிய தச்சன். இரண்டாவது—அப்படிப்பட்ட ஆத்துமாவிற்கு உபமானம் ஆவி. ஆவியும் சடப்பொருளாயிருந்தபோதிலும், இரண்டுஉபமானங்களில எது கூடியமட்டில் பொருந்தியிருக்கிறதோ பாருங்கள். அன்றியும், ஆத்துமாஇல்லாத மானிடசரீர அவயவம் வேலைசெய்யமாட்டாதென்பதினல், சரீரத்தை ஆத்துமாவிற்கு எப்படி ஒப்பிடலாம்? முதலாவது—ஒருமனிதனையும் ஆயுதத்தையும் உபமானமாகச் சொல்லியிருப்பதில், மனிதனிடத்திருக்கிறஆத்துமாஒன்று, உடலொன்று, ஆயுதம்ஒன்று, ஆகமூன்று பதார்த்தங்களிருக்கின்றன. இவற்றுள், ஆத்துமாவை ஒழித்து, உடலை சிசுவின்ஆத்துமாவிற்கும், ஆயுதத்தை சிசுவின் அவயவத்திற்கும் உபமானமாகச் சொல்லியிருக்கிறது. இந்தஉபமானத்திலுள்ள பதார்த்தம் மூன்று. இது சிசுவின்ஆத்துமாவும் அவயவமுமாகிய இரண்டுபொருளுள்ள உபமேயத்திற்கு உபமானமாகச்சொல்லப்பட்டது. இரண்டாவது—சிசுவின் ஆத்துமாவிற்கு நீராவியையும சரீரத்திற்குக் குடத்தையும், இரண்டுபொருளுள்ளஉபமேயத்திற்குஇரண்டுபொருளுள்ளஉபமானஞ்சொல்லப்பட்டது. நான்கு பொருளுள்ளனவாகிய உபமேயமொன்றையும் உபமானமொன்றையும்எடுத்துக்காட்டுகிறேன். கடவுள் சடமாகிய சரீரத்திலுள்ளஆத்துமாவைத் தூண்டிவிட, ஆத்துமா அவயவங்களை அசைக்க, அவயவங்கள் ஆயுதத்தைக்கொண்டுவேலைசெய்கின்றன. இதில்- கடவுள்ஒன்று, ஆத்துமாஒன்று, அவயவம்ஒன்று, ஆயுதம்ஒன்று, ஆகநான்குபொருள். இந்தஉபமேயத்திற்கு - ஒருமனிதன் சடமாகியகடிகாரத்திலுள்ள (pendulum) பெண்டுலத்தைத்தூண்டிவிட, பெண்டுலம் மற்றவுறுப்புகளாகிய சக்கரங்களை அசைக்க, அந்தச்சக்கரங்கள் ஆயுதமாகிய முள்ளைக்கொண்டு வேலைசெய்கின்றன. கடவுளுக்குஒருமனிதனும், ஆத்துமாவிற்குப் பெண்டுலமும், அவயவங்களுக்கு கடிகாரத்திலுள்ள சக்கரங்களும், ஆயுதத்திற்கு முள்ளும் உபமானம். இதிலும், ஒருமனிதன், பெண்டுலம, சக்கரங்கள், முள்ளு ஆகநான்குபொருள் இந்தஉபமானத்தால் கடவுளுக்கு ஒப்பிடப்பட்ட ஒருமனிதன் தூண்டிவிட்ட பெண்டுலம் நின்றுவிட, அதுநிற்கவே, கடிகாரச்சக்கரங்களின் அசைவுகெட, முள்ளு நின்றுபோனதுபோல, கடவுளால் தூண்டிவிடப்பட்ட ஆத்துமாவிற்கு முதலில் பெண்டுலத்தைப்போல செயல்கெட, மற்றஅவயவாதிகள் அசைவற்றுப்போயினவென்று ஒருகட்சிசொல்லலாம்: இந்தஉபமானத்தையேமறுபடிதிருப்பி, யாதொருகாரணத்தால் முள்ளின் ஓட்டம் முதலில்தடைபடவே, கடிகார உறுப்புகளின் தொழில்கெட, கடைசியில்பெண்டுலம் நின்றுபோவதுபோலஆத்துமா அசைவற்றுநிற்கிறதென்று மறுகட்சி சொல்லலாம். இந்த ஒருஉபமானமே இரண்டு கட்சிக்கும்உதவியாயிருக்கிறது. இப்படி இரண்டுகட்சிக்கும் உதவியாயிருக்கிற உபமானம் எவ்வளவு அவலட்சணம்! இவ்வளவு எடுத்துச்சொன்னதும் கட்சியை ஸ்தாபிப்பதற்கல்ல; உபமானங்களின் லட்சணங்கள் இப்படிப்பட்டவைபா யிருக்கின்றனவென்பதும், உபமானங்கள்உபமேயங்களுக்குப் பொருந்தினவையாக இருக்கின்றனவோ இல்லையோவென்று கவனிக்கவேண்டு மென்பதுமேயாம். சிலகிரந்தங்களில் பொருத்தமில்லாத உபமானங்களைக்கொண்டு புத்தியை மயக்குவித்திருக்கிறது; அவற்றை ஆறுபவேண்டுமாயின் பிரத்தியேகமான சஞ்சிகையில்தான் சொல்லவேண்டும். பலவீனமான சங்கதிகளுக்குச் சப்பைக்கட்டு கட்டத்தான் திருஷ்டாந்தங்கள் வெகுவாய் வேண்டியிருக்கும்.

மேற்கண்ட உபமானங்கள் கட்சிபேதங்களுக்காக எடுத்துக் காட்டப்பட்டவையே யல்லாமல், அவற்றில் எதுவும் பிரஸ்தாபத்திலிருக்கிற விஷயத்திற்கு எவ்வளவேனும் பொருந்தாது. சந்திரனைப்போலிருக்கிறது முகமென்று சடபதார்த்தமாகிய சந்திரனை சடபதார்த்தமாகிய முகத்திற்கும், கிச்சிலிப்பழத்தைப்போலஉருண்டையாயிருக்கிறது பூமியென்று சடமாகிய கிச்சிலிப்பழத்தை சடமாகிய பூமிக்கும் உபமானம்சொல்லக்கூடும். இப்படிப்பட்ட பொருத்தமான உபமானங்களுக்கு ஆட்சேபமொன்றுமிராது. உபமானங்களும் உபமேயங்களும் சடபதார்த்தங்களாயினும் சடமற்றபதார்த்தங்களாயினும் ஒன்றற்கொன்று பொருந்தினவையும்பொருந்ாதவையுமுண்டு. எபபடியெனில்,மேலேகாட்டியபடி கத்தரிக்காய்க்கு உபமானம் தலைமயிர் பொருந்தாமல் ஒருவிரல் பொருந்தும்; செடியில் உலர்ந்துநிற்கிற கிளைக்கு தலைமயிர் பொருந்தும். அதுபோல, சிசுவின் ஆத்துமாவிற்கு ஒருதச்சனையும் அதின் அவயவத்திற்கு ஆயுதத்தையும்உபமானமாகப் பொருத்தவேண்டுமானல, அந்தஆத்துமாவை சடபதார்த்தமாகவாவது தச்சனை சடமற்றபதார்த்தமாகிய ஆவியாகவாவது வைத்துக்கொண்டாலொழிய உபமானம் சரிப்படாது. அப்படி வைத்துக்கொண்டால், ஆத்துமா-குடர், ஈரல், மூளையைப்போல ஒருஉறுப்பாகும்; தச்சனை ஆவியாக வைத்துக்கொள்வது நம்முடைய புத்திக்கே சரிப்படாது. ஆகையால், உபமானங்களினலேஏமாந்தால், விஷயங்கள் பிரமாதமாய்விடும்; ஆனது பற்றி, முதலிலேதானே உபமானஉபமேயங்களின் லட்சணங்களை நாம் நன்றாய் யோசிக்கவேண்டும். எவர்களுக்கு நான் இந்தவிஷயங்களைச் சொல்லவேண்டி யிருக்கிறதோ அவர்கள் உபமானமாகத் தங்களுக்குச் சொல்லப்படும் 'கடபடநியாயம்' என்னும் பானையையும் துணியையும் மற்றும் கண்ணாடியையும் நீர்க்குமிழியையும் இவைபோன்ற மற்றவைகளையும் ஏற்றுக்கொண்டு சுலபமாய் நம்புகிறவர்களா யிருப்பதால், இந்தவிஷயத்தில் நான் மேற்கண்ட அற்பமான உபமானங்களைச் சொல்லவேண்டி யிருந்ததுபற்றி, இவற்றால் நான் வீணாய் ஏடுகளை நிரப்பினதாக, அருமையான விஷயங்களை ஆராய்ந்தறிந்த அறிஞர்கள் என்மேல் அருவருப்புக் கொள்ளார்களென்று நம்புகிறேன்.

இதுநிற்க, ஆத்துமா இன்னதென்று அறியவேண்டி, மேலே கைகால்களாகிய அவயவங்களின் தொழில்களைக்கொண்டு கொஞ்சம் ஆராய்ந்தோம்; இப்போது மனதினலாகிய தொழிலைக்கொண்டு சற்றுப் பார்ப்போம்.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.

ஸ்ரீ தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 50.] MADRAS:—SUNDAY DECEMBER, 12, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

'தத்துவவிவேசினி' (తత్త్వవివేచినీ) என்பதற்கு உண்மையை விளங்கச்செய்யும் பத்திரிகை என்பது பொருள்.

---

286. A. S. என்னும் வருஷக்கணக்கு-சாஸ்திரங்கள் பரவத்தொடங்கியகாலத்தில், பூமி சூரியனைச்சுற்றி வருகிறதென்கிற பிரமாணத்தைக் கண்டறிந்தவர் 'காபர்னிகஸ்'என்பவர். அதுசரிதானென்று 'புரூனே' என்பவர் நிச்சயிக்கவே, அதுதங்கள்வேதத்திற்கு விரோதமான சுத்த அபத்தமென்று குருக்கள்மார்கள் அவரை, கிரிஸ்து 1600ம் ஹூத்தில் தீயிலிட்டு எரித்துப்போட்டார்கள். அக்காலந்தொடங்கி நிகழும் வருஷம்வரையில் 'புரூனே'என்பவர் மரித்தகாலவருஷங்கள் 286 ஆகக்கணிக்கப்பட்டிருக்கிறது.

இப்பிரபஞ்சவிகற்பம்,

(194-வது பக்கத்தொடர்ச்சி.)

—o—

விகற்ப ஹேதுக்களுள் வாயுவானது பூமியைச்சுற்றி யெங்கும் வியாபித்திருக்கின்றதால், மிகசாதாரணமானது. அதனாலுண்டாகும் விகற்பத்தை மூன்றாக வகுத்து ஈண்டெடுத்துக் கூறுவாம். முதலாவது, வாயுவின் குளிர்ச்சியாலும், அதனது காங்கையாலும், சித்திக்கும் விகற்பங்களையும், இரண்டாவது, வாயுவீசுவதால் சித்திக்கும் விகற்பங்களையும், மூன்றாவது, வாயுவிற் காதாரபூதமாயுள்ளவைகளால் சித்திக்கும் விகற்பங்களையும், எம்மாலியன்றமட்டும் நம்மனோர் யாவரும் தெளிவுறச்சொல்வோம்.

இவற்றுள் முதலாவது வெகு நுட்பமானதும், முக்கியமானது மாகியவிஷயம். வாயுவானது, ஒருகாலத்தில் காங்கையாயும் மற்றோர்காலத்தில் குளிர்ச்சியாயும் இருக்கிறதென்பது நிராட்சேபமான வுண்மையே. நாம் மழைகாலத்தில் குளிர்காய்ந்துகொண்டிருந்த ஓரறையினின்று நமதிரண்டுதாள்களிலும் பாதரக்ஷைகளை யணிந்து வெளியேவந்தால், நமக்குக் குளிரெடுப்பதேன்! குளிர் எங்கிருந்துவருகின்றது! நிலத்திலிருந்து வருகிறதென்றால் நமது பாதங்களில் பாதரட்க்ஷைகளிருக்கின்றனவே: நாம்பார்க்கிற வொவ்வொரு வஸ்துக்களினிடமிருந்து குளிர் வரவில்லையே என்று வினவின், இக்குளிர், காற்றினிடமிருந்து வருகிறதென்று சிறிதேனு மையமின்றி யாவரும் இயம்புதல் வழக்கம். குளிராவது என்ன! என்று வினவின், நம்முன்னோர்செய்த சாத்திரங்களிற் பயின்ற வித்துவான்களும், மதவாதிகளும் இவ்வினாவிற்கும் அகச்சாட்சிக்கு ஒவ்வாத நியாயஞ்சொலகின்றனர். ஆயினும் இங்கு ஓர் பிரகிருதி நியாயப்பிரமாணத்தி னுதவியின்றி இவ்வினாவிற்கு உத்தரமளிப்பது நமதுதிறமல்ல. அப்பிரமாணம் யாதெனின், சொல்வோம். வெவ்வேறு அளவான சூடுடைய இரண்டு பதார்த்தங்கள் நெருங்குமாயின், மிக்க சூடுடைய பதார்த்தம் சொற்பசூடுடைய பதார்த்தத்திற்கு தன் சூட்டை அவ்விரண்டும் சரியளவாகிறபரியந்தம் தரும. உதாரணமெடுத்துக்காட்டுவோம். நாமொரு கல்லையெடுத்தால் முதல் நமக்கு சில் லென்று தோன்றிப் பிறகு காங்கையும் குளிர்ச்சியும் தோன்றாமலிருக்கின்றன. அதின் காரணம், நம்மிடத்தில் சூடு அதிகமாயிருத்தலினாலும், நமது கையிலிருக்குங் கல் சூடு குறைவாயிருப்பதினாலும், அதிக சூடும், குறைவான சூடுமுள்ள இரண்டு பதார்த்தங்கள் நெருங்கும்போது, அதிகசூடானது குறைவுள்ள சூட்டைத் தனக்குச் சமானச்சூடாகிறவரையில் தன்சூட்டைக்கொடுப்பது அதற்கு இயல்பாதலாலும், அக்கல்லிலிருக்கும் குறைவான சூட்டைச் சரிப்படுத்த அதிகசூடானது நம்மிலிருந்து, குறைவான சூட்டையுடைய அக்கல்லுச்குப் போகும்போது நமக்குச் சில்லெனபதும் அச்சூடுபோய்த் தனச்குச்சமானமானபிறகு காங்கையும் குளிர்ச்சியும் தோன்றாமலு மிருக்கின்றது.

இருப்புக்கரண்டியை அடுப்பில்வைத்தால், அவ்வடுப்பிலுள்ள ஏனைய பொருள்கள்போல, இக்கரண்டியும் சிவப்புநிறமடையும். இதைத் தண்ணீரில் தோய்த்தால், உடனே இதனது காங்கையைத் தண்ணீருக்குத்தந்து அதுவும் இதுவும் சமமான சூடுடைய பதார்த்தங்களாகின்றன. வெந்நீரைத் தண்ணீரில் அளாவினால், இவ்விரண்டின் காங்கை சமமாகிறவரைக்கும், வெந்நீரிலுள்ள காங்கை தண்ணீருக்குப் போய்க்கொண்டிருக்கும். வெவ்வேறு அளவான சூடுடைய பதார்த்தங்களை ஓரறையில்வைத்தால் அவையாவும் சமமான சூடுடைய பதார்த்தங்களாகின்றன. இவ்வாறு வைத்துச் சற்றுநேரம் சென்றபின் "தர்மாமிட்டர்" அல்லது காங்கையறிகருவியைவைத்துப் பார்த்தால் அவையனைத்தும் சமமான காங்கை யுள்ளவையென்று காட்டும். ஆகையால் குளிர்ச்சியானது சொற்பசூடேயல்லது வேறல்ல. இதை யுணராதவர்கள் காங்கையும், குளிர்ச்சியும் வெவ்வேறு குணங்களென்று சொல்லுகின்றனர். காங்கையும், குளிர்ச்சியுமாகிய இவ்விரண்டு குணங்களின் பேதத்தை நன்குவிளக்கிக்காட்டுவோம்.

நம்மிலும் அதிக காங்கையுள்ள வோர் பதார்த்தத்தை நாம் தொடுவோமேயானால், முற்கூறியபிரமாணத்தின்படி அப்பொருளிலுள்ள காங்கை சற்றே நம்மிடம் நாடுகின்றது. அங்ஙனம் நாடுதல் ஓர்வித ஸ்பரிச வுணர்ச்சியைத் தருகின்றது. நம்மினும் குறைவுள்ள சூடுடைய பதார்த்தத்தை நாம் தொடுவோமேயானால், நம்மிலிருந்து அப்பதார்த்தத்திற்கு கொஞ்சம் சூடு அதனிடம் செல்கின்றது. இவ்வாறு செல்லுதலும் ஓர்வித ஸ்பரிசவுணர்ச்சியைத் தருகின்றது. இவற்றுள், முற்கூறிய ஸ்பரிச வுணர்ச்சிக்குக் காங்கையென்றும் பிற்கூறிய ஸ்பரிச வுணர்ச்சிக்குக் குளிர்ச்சியென்றும் பெயர்.

காங்கையும் குளிர்ச்சியும் பிரத்தியேக வெதிரேக குணங்களாய்க் கூறுவதியல்பாயினும், அவை வெவ்வேறு குணங்களல்ல. அவை வெவ்வேறு அளவினதான ஒரேவித குணம். மூவரில், ஒருவனுக்குக் காங்கையாயுள்ள பதார்த்தம் வேறொருவனுக்குக் குளிர்ச்சியாயும், அவனுக்குக் குளிர்ச்சியைத் தரும் அப்பதார்த்தம ஏனையோனுக்குக் காங்கையாயும் இருத்தல் சாத்தியம். உன்கையிலுள்ள ஊன்றுகோலினும், என்னிடமுள்ளது பெரிதாயின், என் ஊன்றுகோல் பெரிதென்றும், வேறொருவனுடைய ஊன்றுகோல் என் கையிலுள்ளதைவிடபெரிதாயின், என் ஊன்றுகோல்சிறியதென்றும் சொல்லுதல்போல ஒருவன் ஒருபதார்த்தத்தைத் தொடுவானேயானால், தொட்டவனுக்கு அப்பதார்த்தத்தைவிட சூடு அதிகமாயிருப்பின், அதைக்குளிர்ச்சியான பதார்த்தமென்றும் வேறொருவன் அதையே தொடுவானாகில், அவனுக்கு அப்பதார்த்தத்தைவிட சூடு குறைவாயிருப்பின் அதே பதார்த்தத்தை சூடானபதார்த்தமென்றும் சொல்வது கூடும். ஆகையால், நம்மிடம் சூடுவருவதா லுதிக்கும் ஸ்பரிச வுணர்ச்சிக்குக் காங்கையென்றும், நம்மிடமிருந்து சூடுவேறு பதார்த்தத்திற்குச் செல்வதா லுதிக்கும் ஸ்பரிசவுணர்ச்சிக்குக் குளிர்ச்சியென்றும்பெயர்.

இ. மு.

(இன்னும்வரும்.)

வேதம்.

(க) வேதமென்பது உலகத்திற்கும் கடவுளுக்கும் மத்தியஸ்தமாக நிற்கும் ஓர் நூல்.

(௨) அதில் உலகத்தார் ஒழுகவேண்டிய ஒழுக்கத்தைப் பற்றியும், கடவுளது தன்மையைப்பற்றியும், அற்புதங்களைப்பற்றியும் விரிவாக எழுதியிருக்கிறது.

(௩) அது எத்தேசத்து எச்சாதியாருக்கும் பொதுவானதாயிருக்கவேண்டும்.

(௪) வேதமானது மனிதர்கள் கடவுளை வழிபடவேண்டியதற்காகக்கடவுளால் எழுதுவிக்கப்பட்டதென்பது,ஐயமற்றதாக இருக்கவேண்டியது.

(௫) சமஸ்த தேசத்தாரையும் படைத்தவர் ஒருவரென்று சமயவாதிகள் சொல்லுவதால், அவரால் அருளப்பட்டவேதமும் ஒரேவேதமாகவும் இருக்கவேண்டும்.

(௬) உலகத்தில் இப்பொழுது மாறுபாடான பலவேதங்கள் இருக்கின்றன. அவை இந்துக்களுக்குள் இருக்கு-யசுர்-சாமம் - அதர்வணம் என்னும்-௪- வேதங்களும், சீனருக்குள் பிடகாகமமும்; கிறிஸ்தவர்களுக்குள் பைபிலும் (Bible) மொகம்மதியருக்குள் கொரானும் வழங்கி வருகின்றன. அவற்றின் உற்பத்தியும், எவ்விதமாக போதிக்கவேண்டுமென்பதும் ஒருவேதத்தில் எழுதியிருப்பதற்கு மற்றொருவேதத்தில் எழுதியிருப்பது நேர் எதிரிடையாகவும் இருக்கின்றன.

(௭) கிறிஸ்துவேதம் ஹிப்ரு பாஷையில் பலஸ்டைனாவிலுள்ள சீனாய் மலையில் ஜீஹோவா என்னும் கடவுள் ஷெக்கினாவென்னும் மேக வடிவு தாங்கி மோசேயுக்கு போதித்தாரென்றும்; பின்பு காலத்திற்குக்காலம் சிறிது சிறிதாக பல மனிதர்களைக் கொண்டு எழுதுவித்து விருத்திசெய்தாரென்றும்; குரான் அரபிபாஷையில்மெக்காவில்அல்லாஎன்னும்கடவுள்புறாவடிவுதாங்கிமொகம்மதுசெவிவழியாய் புகட்டினாரென்றும், இந்து சதுர்வேதங்கள் பிரம்மாவினால் சமஸ்கிருதபாஷையில் எழுதப்பட்டதென்றும், பின்னும் அச்சதுர்வேதங்கள் லிங்கத்தில் ஓம் என்னும் பிரணவம்தோன்றி அதினின்று ஜனித்ததென்றும், விட்டுணுஅன்னப்பட்சி வடிவெடுத்து உண்டாக்கினாரென்றும், சிவனால் எழுதப்பட்டதென்றும் இத்தேவர்களால் எழுதப்பட்ட இந்து சதுர்வேதங்களை வசிட்டர், விசுவாமித்திரர், பாலாஜீ முதலிய இருஷிகள் சாமவேதம் முழுவதையும் சங்கீதங்களாகப்பாடினார்களென்றும், சூரியனால வெளிப்படுத்தப்பட்டதென்றும், மனுஸ்மிருதி முதலிய பலநூல்களால் தெரியவருவதுமன்றி, இருக்-யசுர்-சாமம்-என்னும்-௩-வேதங்கள் தோன்றின அநேக நூற்றாண்டுகளுக்குப்பின்பு அதர்வணவேதம் எழுதப்பட்டதென்றும் காண்கிறது. இந்து சதுர்வேதங்கள், கொரான், பைபில், (பிடகாகமம்) பௌத்தர் வேதம் ஆகிய நூல்களின் தேவர்களுடைய நாமங்களும், ஒழுக்கங்களும், பாஷையும், காலமும், ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்கின்றன,

(௮) அவ்வேதங்கள் கடவுளால் கொடுக்கப்பட்டவையேயாகில், அவருடைய பிரமாணங்களும், காலமுதலியதும் பேதப்பட்டிருப்பதேன் ?

௯. இந்துக்கள் தங்கள் வேதமே நிஜமானதென்றும், மற்றவேதங்களெல்லாம்பொய்யானதென்றும்சொல்லுகிறார்கள். இம்முறையே கிறிஸ்தவர்களும் மொகம்மதியரும் சீனரும் தத்தமது வேதங்களை உண்மையானவை என்றும், மற்றவையெல்லாம் பொய்யானவையென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஒவ்வொருவரும் தத்தமது வேதத்தைப்பற்றி முறையேசொல்லிக்கொண்டால் உண்மையானவேதமெது ?

(௧௦) உலகத்திலுள்ள சமஸ்தவேதியர்களும் தத்தமது மறைகளே தங்கள் தங்கள் கோட்பாடுகளுக்கு ஆதாரமாயிருக்கின்றனவென்றும், அவை தாங்கள் வழிபடும் தேவரால் எழுதப்பட்டவையென்றும் எண்ணுகிறார்கள். சமஸ்தருக்கும் கடவுள் ஒருவரேயென்று சொன்ன இவர்கள் பல மாறுபாடான கோட்பாடுகளை கொடுத்திருப்பாரோவென்று எண்ணமற்போனதென்ன ? மனிதரின் சர்வநிர்வாகங்களும் அவர்களுக்கு வேண்டியகாரியங்கள் அனைத்தும் ஒரேவிதமாயிருக்கையால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதமும் ஒரேவேதமாக இருக்கவேண்டும். அப்படி இல்லாமையால் வேதங்கள் அனைத்தையும் பொய்யென்றே தள்ளிவிடுவது நியாயமாகவிருக்கிறது.

(௧௧) உலகத்தில் வெவ்வேறு ஒழுக்கங்களையுடைய ஜனங்கள் இருக்கையால், அவர்களுக்கேற்க கடவுள் வெவ்வேறுவேதங்களை கொடுத்தாரென்று சொல்லத் துணிவார்களாகில், ஒருவேதம் மறுவேதத்திற்கு மாறுபட்டிருப்பதென்ன? ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்கும் நிகமனங்களையா கொடுத்தார் ! கொடுத்தாரெனில், நம்பத்தகுந்ததல்ல. ஆகையால், மறைகள் கடவுளால் கொடுக்கப்பட்டதல்லவென்பது மறுக்கக்கூடாத நியாயமாயிருக்கிறது.

(௧௨) வேதங்களை எழுதிய வேதாசிரியர்கள் வேதங்களை தெய்வீகவாக்கென்று பாமரரை நம்பும்படி செய்வதற்கு அவற்றில் இயற்கைக்கு மாறானதும், மனித வல்லமையைக்கடந்ததும், தெய்வீக பிரமாணங்களுக்கு முற்றும் தவறானதுமான அற்புதங்களை திரளாக நிரப்பியிருக்கிறார்கள். அவ்வற்புதங்களை வேதங்களினின்று எடுத்துவிடின், வேதத்தினிடத்தில் உதித்திருக்கும் மதிப்பும் நம்பிக்கையும் அற்று அவ்வேதங்கள் சாதாரண கதைபுத்தகத்தைப்போல் மதிப்பற்றும்போவதுடன் நமது சத்திய சமயமாகிய வாதத்தை மிகுந்த ஆவலுடன் அதிதீவரத்தில் கைப்பற்றி நற்சீருக்கு வருவார்களென்று நம்புகிறோம்.

(௧௩) அற்புதங்களும் தேவ அவதாரங்களும் முன்னே நடந்ததாக வேதங்களில் எழுதியிருப்பதேயன்றி இப்பொழுது யாவருங் காணும்படியேன நடக்கிறதில்லை. முன்னே நடந்ததாக எழுதி இருப்பவை அனைத்தும் இப்பொழுது நடக்குமானால் அனைத்தையும் நம்பலாம்.

(௧௪) தம்மால் சிருட்டிக்கப்பட்ட மிலேச்சர் முதலாகஅனைவருக்கும் தமது சித்தம் வெளிப்பட வேண்டுமென்பது கடவுள்நோக்கமானால், ஆஸ்திரோலியா, அமெரிகா நியூஜிலன்ட், கிரீன்லென்ட் முதலியஇடங்களிலுள்ள மிலேச்சர்களுக்கு வேதம் கொடாமற்போனதென்ன ?

(௧௫) வேதங்களை உடையவர்களே ஆயிரத்திற்கு ஒருவர்கூடவேதப்பிரமாணப்பிரகாரம் நடவாமற்போனால், அப்பிரயோஜனமாக கடவுள் வேதத்தை யேன்கொடுத்தார் ? வேதத்தை நம்பவேண்டுமென்பது வீணான பிரயாசையாயும், புத்தியை மங்கப்படுத்துவதாயும், தேகசுபாவமான காரியங்களுக்கு இடையூறாயும் இருக்கிறது, ஆகையால் வேதங்களை உலகத்தில் இல்லாதபடி அழித்து விடுவதே உத்தமமாக இருக்கிறது,

(௧௬) கடவுள் என்னும் மொழியை பிரசித்தப்படுத்துவதற்காகவே வேதங்கள் அனைத்தும் எழுதப்பட்டமையால் நான்கு எழுத்துகளையுடைய அச்சிறியமொழியை முன்னே நசுக்கவேண்டும், இது நசுங்குண்டுபோமானால் பின்பு மற்றவையெல்லாம் திருமபிப்பாராமல் புறங்காட்டி ஓடிவிடும். சிறிய தீப்பொறி பெரிய ஆரண்யங்களை எரித்து நாசப்படுத்துவதுபோல், கடவுள் என்னும் சிறியமொழி பிரம்மாண்ட இவ்வுலகத்தை நாசமாக்கிக்கொண்டிருக்கிறது, மாந்தர் உதிக்கும் ஐந்தாம்வயதிலேயே அம்மொழி கடித்துவிடுகிறது, இக்கொடியவிஷம் பாதாதிகேச பரியந்தம் ஏறி எவராலும்பரிகரிக்கக் கூடாவண்ணம் வேரூன்றியிருக்கிறது, இக்கொடியவிஷம் எந்த அவிழதத்திலும் இறங்காது, நாத்திகவாதமென்னும் அவிழதத்தினாலேயே இறங்கவேண்டும். ஆத்திகவாதங்களனைத்தையும் நிர்மூலமாக்கி, நாத்திகவாதமெனனும் மேலான விருதுக்கொடியைநாட்டி, ஜெயம்ஜெயம் என்று ஒலிக்கும் எக்காளத்தை ஊதுவித்து, ஜெயபேரிகை அடிப்பிப்பது சகலநன்மைகளிலும் மேலான நன்மையாயிருக்குமென்பதை அறிவிக்கிறோம்.

M M.

ஸ்ரீ லோகரஞ்சனி.

மெய்யறிவு.

௨-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா ?

(196 - வது பக்கத்தொடர்ச்சி.)

எப்படி ஹிருதயம் சரீரத்தில் ரத்தத்தைப் பரவச்செய்யும் சக்தியுடையதோ, எலும்பு சரீரபாரத்தைத் தாங்கச் சக்தியுடையதோ, கண்டதசைகள் அசைக்குஞ் சக்தியுடையதோ, (nerves) நரம்புகள் உணருஞ் சக்தியும் அசைவு உண்டாக்குந் தன்மையு முடையதோ, நுரையீரல் உஸ்வாச நிஸ்வாச சக்தியுடையதோ, குண்டிக்காய் ரத்தத்திலிருந்து சிறுநீரைப் பிரித்துச் சேர்க்குஞ் சக்தியுடையதோ, தீனிப்பை தீனியை ஜீரணமாக்குஞ் சக்தியுடையதோ, அவ்விதமாகவே மூளையின் முக்கியமான தொழில் அறிவென்று (Physiology) சரீரம் ஆரோக்கியமான ஸ்திதியி லிருக்கை

யில் அகமும்புறமுமாயிருக்கிற உறுப்புகள் நடத்துந் தொழில்களை விவரித்துச்சொல்லுஞ் சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது.

இந்தப்பிரிவை வாசிக்கும்போதே, சரீரமாவது மூளையாவது தொழில்புரியுந்தோறும் அது சேதப்பட்டுக்கொண்டே யிருக்கிறதென்றும், ஆகாரத்தின் மூலமாய் அதற்கு பர்த்திசெய்யாவிட்டால் மேற்படி உறுப்புகளில் அது அது தன்தன் தொழிலைச் செய்யமாட்டாதென்றும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

மூளையில்லாவிடில் அறிவில்லை, மனது மிராது. ஒருவனுக்கு அறிவு விசேஷப்பட்டதென்பதும் ஒருவனுக்குக் குறைவுபட்டதென்பதும் அவனவனுடையமூளையின் பரிமாணம் முதலிய குணங்களினால் உண்டாகிறதாகவே யிருக்கிறது. மூளையின் குணத்திற்கும் அறிவின் தன்மைக்கும் சம்பந்தமிருக்கிறதை அடியில்வரும் சங்கதியினால் கண்டுகொள்ளலாம். மிலேச்ச ஜாதியாருடைய மூளை நாகரீகமடைந்தமற்றஜாதியாரைப்பார்க்கிலும் சிறிதாகவேயிருக்கிறது. இவ்விதமாகவே ஐரோப்பியருடைய மூளையைப் பார்க்கிலும் இந்துக்கள் சீனர்கள் வடஅமெரிக்கன் இந்தியர்களாகிய இவர்களுடைய மூளை சிறியதென்றும் ஹிந்துக்களுடைய மூளையைப் பார்க்கிலும் நாகரீகத்தில் அவர்களைவிட தாழ்ந்த நிலைமையிலிருக்கிற ஆந்தமன்தீவாருடைய மூளை சிறியதென்றும் ஒரு சாஸ்திரிசொல்லுகிறார். மேலும் உன்மத்தனுடைய மூளையைப்பார்க்கிலும் தெளிந்தபுத்தியுள்ளவனுடையமூளைபெரிது, இத்தியாதிசங்கதிகளினால்மூளையின்அளவுக்கும்தன்மைக்குமேற்றபடி அறிவுவிளங்குகிறதென்பதுதிண்ணம். அதனால் மூளையின்தன்மைக்கு ஏற்றபடிஆத்துமாவின்குணமும் மாறுகிறதல்லவோ? சுகமாயும நன்றாய்விகசித்து மிருக்கிறமூளையிருந்தால், அறிவு விசேஷப்பட்டதா யிருக்கிறது. மூளைசிறிதாகவும் மெலிந்ததாகவு மிருந்தால் அறிவு குறைந்துபோகின்றது. தேகம் அசவுக்கியப்படும்போது அறிவு மழுங்கிப்போகிறது. சிலநோய்களில் புத்தி பூரணமாய் சுவாதீனமில்லாமலே போய்விடுகிறது. அந்த நோய் தீர்ந்தாலும் அநேகவிஷயங்களில் அறிவு பழயஸ்திதிக்கு வராமலே தடுமாறிக்கொண்டிருக்கிறது.

மூளையினிடமாயிருந்து வருகிற (nerves) * நர்வ்ஸ் என்னும் நரம்புகள் சரீரஉறுப்புகளின் சகலதொழில்களுக்கும் முக்கியமானவையாகும்; புறத்திலுண்டாகும்தொடுதல், அதட்டல், கோபமூட்டல் முதலியகாரியங்களை, மூளையானது தலைமையா யிருந்துகொண்டு, அந்தநரம்புகளில் சிலவற்றின் வழியாய்த்தான் உணர்ந்து, மற்றுஞ் சிலவற்றின்வழியாய் உறுப்புகளில் அந்தந்த பாகத்தை அசையச்செய்கிறதென்று லூயிபுஷ்னர் சொல்லியிருப்பதை அனுசரித்து, ஆர்த்தர்-பி-மாஸ்என்பவர் எழுதுகிறதாவது — ஒரு பிதப்பைக்கு பயத்தினால் உடம்பு வெளுத்துப்போகிறது,அவனுக்கு யாதொருவிசாரணையில் குறுக்குசவால் போடும்போது மூளை தத்தளிக்கிறது,அப்போது அவன்பேச்சு திக்குமுக்கலாடிப்போகிறது; அவனைத்தட்டிக்கொடுத்து அவனிடத்தில் அன்பாய்ப்பேசுவோமாகில், அவனுடைய முகந்தெளிந்து கண்கள்மலர்ந்து புன்னகைசெய்கிறான்; அவனுக்குக் கோபமூட்டுவோமாகில், முகங்கறுத்து உதடுகள்வறண்டு, பார்வைமாறிப்போகிறது. அப்படியிருக்க, மனமானது தனிமையான வஸ்துவாயிருக்குமாகில், அதினுடையகுணம் - நரம்புமுதலிய உறுப்புகளின் பலவீனத்தினால் மாறவேண்டியதில்லையே; இத்தன்மையான மனம் - நரம்புகளின் நிலைபேதிப்பதினாலே, யோக்கியனைத் திருடனைப்போல விழிக்கவும், யதார்த்தவாதியை மோசக்காரனாகத் தோற்றவும் பிதப்பையை பயித்தியககாரனாகத்திகைக்கவும் செய்யும்படியான விந்தையாய்ப் பிரவர்த்திக்கும்படி மாறிப் போவது அதிசயமல்லவா? என்றுசொல்லுகிறார்.

(இன்னும்வரும்.)

* இப்புத்தகத்திலே, சரீரத்தில் ரத்தம்ஓடும் குழாய்களுக்கு நாடிகளென்றும், தலைமூளையிலிருந்து முதுகெலும்புவழியாய் ஓடி அங்கங்கே கிளைகிளையாயப்பிரிந்து தேகமுழுவதும் வியாபித்திருக்கிற கோதுகளுக்கு நரம்புகளென்றும் சொல்லியிருக்கிறேன்.—நரம்புகள் இரண்டுவகை.—உணருந் தன்மையுடையவை ஒருவகைநரம்புகள்; தொழில்புரியுந் தன்மையுடையவை மறுவகைநரம்புகள்.

வர்த்தமானம்.

பேட்டைகளின் ஆரோக்கியம்.—கல்கத்தாவைச் சேர்ந்த பேட்டைகளில் விஷபேதி அதிகவிர்த்தியாயக்கொண்டிருப்பதைப்பற்றிப் பட்டணத்துச்சங்கத்தில் ஆலோசனைசெய்யப்பட்டது. கல்கத்தாவைச்சுற்றிமுழுவதும் அந்தக்கொடியநோய் அதிக மும்முறமாயிருப்பதால், அதை அதிகரிக்கவொட்டாமல் தடுப்பதற்கு விசேஷமாய் தகுந்தவகை தேடவேண்டுமென்று டாக்ட்டர் சிம்ப்ஸன் அவர்கள் கேட்டுக்கொண்டார். அதற்காக அதிக சிப்பந்திவைப்பதற்கு மாசமொன்றுக்கு ரூ 3500 ஜாரி செய்யப்பட்டது, வைத்தியத்திற்குப் பணங்கொடுக்கச் சக்தியற்றஏழைகளுக்கு வைத்தியஞ்செய்வதற்காக அதிகமாய் நான்கு அசிஸ்டாண்டு சர்ஜியன்களும் ஒன்பது ஆசுபத்திரி அசிஸ்டாண்டுகளும் குப்பைவாரி சுத்திசெய்வதற்கு ஐம்பது குப்பைவண்டிகளோடுகூட நூற்றைம்பது கூலியாள்களும் வைக்கப்பட்டார்கள். தொத்துவியாதி மருந்து சர்ப்பராசெய்யப்பட்டது. இன்னஇடங்களிலே . இன்னவிதமாய் அசிஸ்டாண்டு சர்ஜியன்களுடைய சகாயம்பெறலாமென்று முக்கியமான இடங்களிலெல்லாம் தண்டோராபோட்டுப் பிரசித்தஞ்செய்யும்படிக்கும், நடத்தப்பட்ட வேலைகளையும், உண்டானபிரயோசனத்தையுங் கண்டெழுதி, டிசெம்பர்மீ கடைசிக்குள் ரிபோர்ட்டுஅனுப்பும்படிக்கும் ஹெல்த் ஆபீசருக்கு உத்தரவுசெய்யப்பட்டது. (மதிராஸ்மெயில்)

அசுத்தமுதலிய ஒழுங்கீனத்தினால் கொள்ளைநோய் உண்டாகிறதென்று தெரிந்திருக்க ; தேவனுடையகோபத்திற்கடையாளமாக அப்படிப்பட்டவியாதி அனுப்பப்படுகிறதென்றுசொல்வது என்ன மதியீனம் ! வாந்திபேதிக்குத்தண்டுமாரி என்னும் ஒரு பிசாசு தேவதையைக்கற்பித்து, அதற்குக் கொட்டல் முழக்கலுடனே ஆர்பாட்டஞ்செய்து, வெந்ததும் வேகாததுமாய்க் கூழ்வார்த்துக் கும்பம்போட்டு ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுத்துத் தூக்கங்கெட்டுத் தெரு வீடுவாசல்களை அசுத்தப்படுத்தி, அப்படிப்பட்டவியாதியை அதிகரிக்கச் செய்வதைப்பார்க்கினும், மானிட முயற்சியால் அதைத்தணிக்கப்பார்ப்பதே விவேகம்.

டில்லியில் அமரிக்கைக்கேடு.—மகமதியருக்கும் ஹிந்துக்களுக்கும் மாற்சல்லிய முண்டாயிருக்கிறது. ஹிந்துகடைக்காரர்கள்மகமதியருக்குப்பண்டம்விற்கிறதில்லை. ஹிந்துக்கள் மகமதியரை வேலைக்குவைத்துக்கொள்ளுகிறதில்லை. இரவும்பகலும் போலீஸ்பந்தோபஸ்துசெய்யப்பட்டுவருகிறது.

பர்மாவில் அமரிக்கையுண்டுபண்ணுவதற்காக ஒவ்வோரிடத்திலும் படைச்சேவகர்களைவைக்கவேண்டியிருப்பதுபற்றி மிகுதியாகச்சேனைவேண்டி யிருக்கிறதென்றும், பலவிடங்களில் அமரிக்கை நிலைத்திருக்கிறதென்றும், இன்னும்பலவிடங்களிலே முதலில் ராணுவத்தாலும் பின்பு நீதிமார்க்கத்தாலும் அமரிக்கையை நிலைநாட்டவேண்டியிருக்கிறதென்றுந் தெரியவருகிறது.

—o—

கடிதநேயருக்கு.

அ. என்பவர். நுமதுகேள்விக்கு விவரம் 'தத்துவ விசாரிணி' முதல் பத்திரிகையில் கண்டுகொள்க.

மதிராஸ்.

சிக்யுலர் சோசைட்டி நிபந்தனைகள்.

௧௮௮௬ ஹூ ஏப்ரில் ௧௨.

1. இதுவரையிலே, இந்துபிரீதாட்யூனியன்' என்னும்பேருடையதாயிருந்தசபைஇனி மதிராஸ்சிக்யுலர் சோசைட்டி என்றுஅழைக்கப்படும்.

2 இந்தசபை இங்கிலாந்திலுள்ள "நாஷனல்சிக்யுலர் சோசைட்டி"யைச் சேர்ந்திருக்கவேண்டியது.

நோக்கங்களும் கோட்பாடுகளும்.

3. (a) லவுகிகத்துக்குரிய கொள்கைகளையும் சுதந்தரங்களையும்காத்துக்கொள்வது.

(b) அவற்றை இசத்திற்குண்டான சீர்திருத்ததிற்குச் செலுத்துவது.

[லவுகிகமென்பது இவ்வுலகத்தில் மானிடவாழ்க்கைக்கும், அனுபவத்திற்கு ஒத்துவரும்படியான காரியங்களுக்குமாத்திரம் சம்பந்தப்படுவதுமல்லாமல், அறிவுக்கெட்டிய இவ்வுலகவாழ்க்கையை விர்த்திசெய்வதையும் கருதிநிற்கிறது.

லவுகிகியென்பவன் இகலோகவாழ்வைச்சேர்ந்த விஷயங்களையும்தத்துவங்களையுமாத்திரம் அங்கீகரிக்கிறவனாயிருக்கிறான். இப்பிரபஞ்சத்திற்குரியசங்கதிகளிலே, மதசம்பந்தத்தைக்கொண்டுவந்து நுழைத்துக்கொள்ளாமல் சகலத்தையுமநிர்வாகம் பண்ண வேண்டியிருக்கிறதென்று நம்புகிறான். மானிடசீர்திருத்தத்தையும் சுகத்தையும் விர்த்திசெய்வதேசிரேஷ்டமானகடமையென்றும், எது பலருக்கும்பிரயோசனகாரியாயிருககிறதென்று ருசுப்படுகிறதோ அதுவே நீதிமார்க்கமென்றும் துணிகிறான்.

மானிடசுகத்தையும் சீர்திருத்தத்தையும் பலிதமாகும்படிவிர்த்திசெய்யும்பொருட்டு, தன்மக்களுக்குப் போதுமானகல்விப்பயிற்றுவிப்பதும், அவர்களுடையசொந்த நன்மைக்காகவும் ஜனசமுதாயநன்மைக்காகவும் உபயோகமாகத்தக்கவேலையைதொடரும்படி முயற்சிசெய்வதும், பிரதிலவுகிகியினுடைய மாறாதகடமையாகும்.]

4. மேற்கண்டநோக்கங்கள் பகிரங்கப்பிரசங்கங்களினாலும். சபைசேர்ந்துசர்ச்சைசெய்வதினாலும், சிறுபுத்தகங்களச்சிட்டுப்பரவவிடுவதினாலும், அப்போதப்போது தீர்மானிக்கப்படுகிறபடி கிரமமான மற்றமுகாந்தரங்களினாலும், கைகூடிவரும்படி முயற்சிசெய்யவேண்டியது.

மெம்பர்கள்.

5. மெம்பர்கள் ஆக்ட்டிவ் மெம்பர்களென்றும், பாஸிவ்மெம்பர்களென்றும் இருவகைப்படுவார்கள்.

மதிராஸ்சிக்யுலர் சோசைட்டியில் மெம்பர்களாகத் தங்கள் பேர்களைப் பிரசுரஞ்செயவிக்க ஆட்சேபனையில்லாதவர்கள்ஆக்ட்டிவ்மெம்பர்கள்.

ஆக்ட்டிவ்மெம்பர் அந்தப்பிரதேசத்திலுள்ள பாதிரிகளும்குருக்கள்மாரும் (ஆச்சாரியர்களும் சாஸ்திரிகளும்) லவுகிகவிர்த்திக்குப் பாதகமாகச்செய்கிறகாரியங்களையும், அப்படிப்பட்ட பாதகமான விசேஷசங்கதிகளையும், பிரசங்கங்களையும், உபந்யாசங்களையும், பிரசுரங்களையுங்குறித்துச் செக்ரிட்டேரிக்குக் கூடுமானபோதெல்லாம் உண்மையானரிப்போர்ட்டு அனுப்புவாரென்று எதிர்பார்க்கலாகின்றது. லவுகிகசம்பந்தமாகஅவருக்குஅனுப்பப்படும்வித்தியாவிஷயங்களைத்தாராளமாய்ப்பரவவிடுவதற்கும், சாதாரணமாய்ச்சுற்றுப்பக்கங்களிலே லவுகிகசம்பந்தமான விர்த்தியுண்டாகும்படிக்கும் துணைபுரிவாரென்றுங் கோரலாகின்றது.

பேர்களைப்பிரசுரஞ்செய்வித்தால்மிக்ககெடுதியுண்டாவதாயிருக்கிறபடியால், பிரசுரஞ்செய்யக்கூடாமையான நிலைமையிலிருக்கிறவர்கள் பாஸிவ்மெம்பர்கள்.

இவர்களுடையபேர்கள் மெம்பர்களுக்குமாத்திரம் தெரிந்திருக்கவேண்டியது; இவர்களுடையபேர்களைக் குறிககவேண்டுமானால், பெயர்முதலெழுத்தினாலாவது அடையாளங்களினாலாவதுகுறிக்கவேண்டும். பாஸிவ்மெம்பர்களுடைய பேர்களை வெளிவிடாதிருப்பதற்குச் சகலமெம்பர்களும் உண்மைக்குத்தாரமாய்க் கடமைப்பட்டவர்களாகிறார்கள்.

ஆக்ட்டிவ்மெம்பர்களானாலும் பாஸிவ்மெம்பர்களானாலும், சகலரும் கூடியமட்டில்சபையின் கொள்கைகளை அப்பியசித்துவரவேண்டும்; முக்கியமாய் ஆக்ட்டிவ்மெம்பர்கள் அப்படிச் செய்யவேண்டும்.

குறிப்பு.—ஸ்வாதீனமான நிலைமையிலிருப்பவர்கள் அகத்தியம்ஆக்ட்டிவ் மெம்பர்களாவார்களென்றே கேட்டுக்கொள்ளலாகின்றது.

6. ஒருவர்மெம்பராவதற்கு, அவர்இங்கிலீஷ்கியானமுடையவராயிருக்கவேண்டுமென்கிற அவசியமில்லை.

7. இந்தச்சபையில் மெம்பர்களாகவேண்டுமென்கிறவர்கள் அடியில்கண்டிருக்கிறபடி உறுதிமொழிப்பத்திரிகையில் கையெழுத்துசெய்து, செக்ரிட்டேரிக்கு அனுப்பவேண்டியது; அவர்அதைநிர்வாகசபையின் ஆலோசனைக்குவைத்து, செய்யப்படுந்தீர்மானத்தை எழுத்துமூலமாய் அவர்களுக்குத்தெரிவிப்பார். நிர்வாகசபையார் அப்படிப்பட்டயாதொரு பத்திரிகையைக்காரணஞ்சொல்லாமலே தள்ளிப்போடலாம்.

உறுதிமொழிப்பத்திரிகைக்கு நகல்.

மதிராஸ்சிக்யுலர் சோசைட்டியின் கோட்பாடுகளைப்பரவச்செய்யும்பொருட்டு அந்தச்சோசைட்டியில்சேர நான் ஆவலுள்ளவனாயிருக்கிறேன். என்னைமெம்பராகச்சேர்த்துக் கொண்டால், இந்தச்சபையினது உத்தேசத்தை நிறைவேற்றஎன்னொப்புரவான மற்றமெம்பர்களோடு சேர்ந்து என்னாலியன்றமட்டில்பாடுபடுவதற்கு யான்உடன்படுகிறேன்.

பெயர்.
மேல்விலாசம்.
உத்தியோகம்.
ஆக்ட்டிவ் அல்லது பாஸிவ்.

ஷூ ஸ்ரீ உ

8. மெம்பராவதற்கு எழுதிக்கொள்ளும் விண்ணப்பத்தோடுகூடமூன்றுமாசத்தியகையொப்பம்அனுப்பவேண்டும். (உள்ளூர் மெம்பர் ரூ ௩, வெளிமெம்பர் ரூ ௧ - ௧௪ - ०.)

9. இந்த சோசைட்டியில் மெம்பராயிருப்பவர் இங்கிலாந்துதேசத்து நாஷனல்சிக்யுலர் சோசைட்டியிலும் மெம்பராயிருப்பார்.

10. வெளியூரிலிருப்பவர்களும் வழககமானதிட்டப்படிக்கு மெம்பராயிருக்கஅர்ஹராவார்கள்.

சகலமுக்கியமான நிகமனங்களையும் மற்றசங்கதிகளையும் அவர்களுக்கு செக்ரிட்டேரிதெரிவிப்பார்.

சந்தா.

11. உள்ளூர்மெம்பர்ஒவ்வொருவரும் மூன்றுமாசத்திற்கொருதரம் ரூ ௩-ம் வெளியூர்மெம்பர் ஒவ்வொருவரும் ரூ 1-14-0-மும், கையொப்பஞ்செலுத்தவேண்டும்.

12. மூன்றுமாசகாலக்கிரமத்தில் முதல்மாசத்திற்குள்ளாகவே சகலகையொப்பங்களையுஞ் செலுத்தவேண்டும்.

13. பூர்த்தியான கையொப்பஞ் செலுத்தக்கூடாமையான லவுகிகள் பொதுநன்மைக்காக மனதாரப்பாடுபடுகிறார்களென்றுநிர்வாகசபையாருக்குத் தெரியவருவதின்பேரில், அவர்களைக்குறைந்த கையொப்பவீதத்திற்காவது இலவசமாகவாவது ஏற்றுக்கொள்ளலாகும்.

நிர்வாகசபை.

14. சபையின் அலுவல்களைப்பார்க்கிறவர்களும் சேர்ந்து ஏழு மெம்பர்கள் நிர்வாகசபையாராகச் சபையின்காரியங்களை நடத்திவரவேண்டியது; அலுவல்பார்க்கிறவர்கள் உத்தியோகமுறைமையினாலே நிர்வாகசபையில் மெம்பர்களா யிருப்பார்கள்.

15. நிர்வாகசபையார் அந்தந்தமாதம் முதல் ஆதிவாரதினத்திலும், அவசியமானால் அடிக்கடிக்கும் சபைகூடவேண்டியது; அப்படிக்கூடுகிற எல்லாச்சபைகளிலும் நான்குமெம்பர்கள்வந்திருந்தால் சபைகாரியம் ஆலோசிக்கப்படும்.

16. சபையில்சேருவது, நீங்கிவிடுவது, குற்றங்கூறுவது, அப்புறப்படுத்துவது, சீர்திருத்தஞ்செய்வது, முதலியவற்றைக்குறித்து எழுதிக்கொள்ளும் சகலவிண்ணப்பங்களையும் செக்ரிட்டேரிமூலமாய் நிர்வாகசபையார் பேருக்கு அனுப்பவேண்டும்.

17. செக்ரிட்டேரி பொக்கிஷதாரர்வேலைதவிர, வேறேஎவர்வேலையாவது குறித்தகெடுவுகாலத்திற்குள் காலியானால் அதைப்பூர்த்திசெய்வதற்கும், சபையின்காரியங்களைச் சீராய்நடத்துவதற்கு சகாயவிதிகள்செய்யவேண்டிய அவசியமிருந்தால், மகாசபையாரால் முன்னதாய் அங்கிகரிக்கப்பட்டிருக்கிற சபைநிபந்தனைகளுக்குவிரோதமில்லாதபடி அப்போதைக்கப்போது செய்வதற்கும், யுக்தமாகத்தோற்றினால், சபையின்மிகுதிபணத்திலே சஞ்சிகைகள், ஏடுகள்முதலியவற்றை யச்சிட்டுவெளிவிடுவதற்கும் புஸ்தகங்கள்முதலியவை வாங்குவதற்கும், நிர்வாகசபையாருக்கு அதிகாரமுண்டு.

18. சபையைச்சேர்ந்த சொத்துகளை ஸ்வாதீனத்தில் வைத்திருப்பதும், கையொப்பமுதலிய திரவியவிஷயத்தில் விசாரணைசெய்வதும், பணம்செலுத்துவதற்குரசீதுகளைஜாரிசெய்வதும், சகலசெலவுகளையும் கிரமப்படுத்துவதும், சபையைச் சேர்ந்த சகலகாரியங்களையும் மேல்விசாரணைசெயவதும், நிர்வாகசபையாருடைய கடமையாகும்.

19. வேலைக்காரர்களை நேமிப்பதற்கும், தள்ளிப்போடுவதற்கும், அவர்களுக்கு சம்பளம் நிஷ்கரிஷைசெய்வதற்கும் நிர்வாகசபையார் அதிகாரமுடையவர்களாவார்கள்.

20. நிர்வாகசபையைச்சேர்ந்த யாதொருமெம்பர் தொடர்ச்சியாய நான்குகூட்டத்திற்குவராதிருந்தால், நிர்வாகசபையாருக்குத்திருப்திகரமான காரணங்கள் சொல்லாதபட்சத்தில், அவர் நிர்வாகசபையிலுள்ள தனதுசம்பந்தத்தை நீக்கிக்கொள்ளவேண்டியது.

21. நிர்வாகசபையார் சோசைட்டியில் நடத்துங்காரியங்களைக்குறித்தும், இந்தியாவிலே லவுகிகசம்பந்தமான விர்த்தியைக்குறித்தும், தகுந்தகாலத்திலே ரிபோர்ட்டெழுதி, 'இன்டர்நாஷனல் கன்கிரெஸ் ஆவ் பிரீதின்கர்ஸ்' 'கான்பரென்ஸ் ஆவ் தி நாஷனல் சிக்யுலர் சோசைட்டி' என்னுஞ்சபைகளிலுள்ள இச்சபையின் பிரதிநிதிகளுக்குஅதைஅனுப்பவேண்டியது.

(இன்னும்வரும்)

Printed and Published for the Proprietor at the
VURTHAMANATHARUNGINI PRESS, No. 174,
Davaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 51.] MADRAS:—SUNDAY DECEMBER, 19, 286. A. S. [Monthly, 4 Annas.

சோல்லுகசோல்லைப்பிறிதோர்சோலச்சோல்லை
வேல்லுஞ்சோலின்மையறிந்து.—குறள்.

இப்பிரபஞ்சவிகற்பம், (1)

(197-வது பக்கத்தொடர்ச்சி.)

குளிர்ச்சியின் இலக்கணமின்னதென்றும், குளிர்ச்சிக்கும் காங்கைக்கும் உள்ளபேத மின்னதென்றும் எடுத்துக்காட்டினோம். இனி முன்வினவிய வினாவுக்கு உத்தரமளிப்போம். அவ்வினா "நாம் மழைகாலத்தில் குளிர் காய்ந்துகொண்டிருந்த ஓரறையினின்று வெளியில்வந்தால் நமக்குக் குளிரெடுப்பதேன்?" என்பதே. இவ்வினாவை யூகித்துப்பார்க்குமிடத்து, அறைக்குள்இருந்தகாற்று காங்கையாயும் வெளியேஇருந்தகாற்று குளிர்ந்ததாயும் இருக்கின்றன. வெளியேவந்தபோது குளிர்ந்தகாற்று நம்மைச்சுற்றியிருந்தபடியினாலே, நமது சரீரத்தின் கொஞ்சம்சூட்டைக்காற்றுகிரகிக்கின்றது. அவ்வாறு கிரகித்தல் குளிர்ச்சிஎன்னும் ஸ்பரிசவுணர்ச்சியைத் தருகின்றது. நம்மிலிருந்து காங்கை காற்றுககுப்போவதுதான் குளிர் எடுப்பதற்குக்காரணம்.

இவ்வாறு குளிர்ந்தகாற்றில் சற்றுநேரமிருந்தபின் [illegible]ப்பட்டுவந்தஅறைக்குட்சென்றால், அவ்வறையில் நமக்குக்காங்கையாகிய உணர்ச்சிதோன்றும். அதன் காரணத்தைச்சொல்லுவோம். அவ்வறையிலுள்ள காற்றுச்கு நம்மிலும் அதிக காங்கையிருக்கிறது, அங்ஙனம் இருத்தலினால், காற்றிலுள்ளகொஞ்சம்காங்கையை நமதுசரீரம் கிரகிக்கின்றது. அப்படி கிரகித்தலால் உதிக்கும் உணர்ச்சிதான் காங்கையாகத்தோன்றுவது.

காற்றானது சிலவேளையில் காங்கையாயும், சிலவேளையில் குளிர்ச்சியாயும் இருப்பது எல்லோருக்குந் தெரிந்தவிஷயமே. இவ்வாறு இருத்தலுக்குச்காரணம் கேட்கப்படுமாதலால், அதனைப் பின்னால் வியவகரிக்கலாகும். காற்று பூமியைச்சுற்றி யெங்கும் வியாபித்திருப்பதால், இப்பூமியின்மீதுள்ள எல்லாப்பதார்த்தங்களும் வாயுவாகிய சமுத்திரத்தில் அமிழ்ந்தியிருக்கின்றன.

இப்பிரபஞ்சத்திலுள்ள சர்வபதார்த்தங்களினிடத்து காங்கை ஒருபடித்தாயிராது விகற்பத்துக்கு உட்பட்டிருக்கின்றதென்பதை எளிதில் அறியலாம். ஒருபதார்த்தத்திற்குக் காங்கையதிகமாயும் அதைச்சுற்றிவியாபித்திருக்கும் காற்றுக்குக்காங்கை குறைவாயுமிருக்குமாயின், அப்பதார்த்தத்தின்காங்கையைக் காற்றுக்குத்தருவதால் அதன காங்கைகுறைகின்றது; காற்றின்காங்கையோ முன்னிலும் அதிகப்படுகின்றது. ஆதலின் இவ்விரண்டுபதார்த்தங்களி லிருந்தகாங்கை ஒருப்படித்தாயிராது மாறுகைக்கு உட்பட்டிருக்கின்றது. ஆனால் ஒருபதார்த்தத்திற்குக் காங்கைகுறைவாயும் அதைச்சுற்றி வியாபித்திருக்கும் காற்றுக்குககாங்கை அதிகமாயும் இருக்குமாயின், காற்றின்காங்கை சற்றுகுறையும், அப்பதார்தசத்தின்காங்கையோவெனின் முன்னிலும் அதிகப்படும். இவ்வுதாரணத்திலும், காங்கையானது இரண்டுபதார்த்தங்களில் ஒருபடித்தாயிராது, மாறுகைக்கு உட்பட்டிருக்கின்றது. நமது பூமியைச்சுற்றியிருக்கும்காற்று, பகலில், சூரியனிடமிருந்து காங்கைகிரகிப்பதும், அவ்வாறுகிரகித்தபோது அதனருகிலுள்ளபதார்த்தங்களின் சூட்டை தனக்குசமமாக்குவதும், இரவில் சூரியனிடமிருந்து காங்கைவராமையால் காற்றுகுளிர்ச்சியாயிருப்பதும், அவ்வாறு இருக்கையில் தன்னருகிலுள்ள பதார்த்தங்களின்சூட்டை தனக்கு சமமாக்குவதுமா யிருக்கின்றது. இவ்வாறு இப்பூமியிலுள்ள எல்லாப்பொருள்களின்காங்கையும் குளிர்ச்சியும், காற்றினால் விகற்பப்படுகின்றதென்பது இதைவாசித்த ஒவ்வொருவருக்கும் அங்கைநெல்லிக்கனிபோல் சங்கையின்றிதெரியும்.

காங்கையானது பதார்த்தங்களைப் பெருகச்செய்யும், குளிர்ச்சியோ பதார்த்தங்களை யிறுகச்செய்யும். இப்பிரமாண உண்மையை சில திருஷ்டாந்தங்களைக்கொண்டு விளங்கக்கூறுவாம்.

அரிசியையும் ஜலத்தையும் ஒருகடத்தின் முக்கால் அளவுக்கு இட்டு பின்பு அதை யடுப்பில்வைத்து, சற்றுநேரம்சென்றபிறகு பார்த்தால், அரிசி முன்னிலும் பெருகியிருக்கின்றது. ஜலமோ அக்கினியின்சேட்டையால் முன்னிலும் அதிகப்பட்டு அக்கடத்தை நிரப்பிவிடுவதுமன்றி கொஞ்சம் ஜலம் வழிந்துவிடுகின்றது. இது பிரத்தியட்ச அனுபவமன்றோ? ஒரு இருப்புக்கம்பியால் ஒரு செப்புத்தகட்டில் துளைசெய்து, அத்துவாரத்தில் மேலய கம்பியை சிவக்கக்காய்ச்சி நுழைத்தால், அது நுழையாது; அதன் காரணம்யாதெனின், சூட்டினால் அக்கம்பிமுன்னிலும் பெருத்திருப்பதேயாம். ஒருபையில் வாயுவைநிரப்பி அதற்கு சூடேற்றினால், அப்பை முன்னிலும் அதிகமாய்ப் பெருகுகின்றது. எவ்வளவுசூடு அதனிடம்செல்கின்றதோ, அதற்குத்தக்கபடி அந்தப்பை பெருகுகின்றது. இதன் காரணமும் சூடேயல்லதுவேறல்ல. கருமான் சக்கரத்தைச்சுற்றி இருப்புச்சட்டத்தைப்போடுவதை பார்த்திருக்கின்றோமல்லவா? அவன் இருப்புச்சட்டத்தை அழுத்தமாயிருக்கும்படி வெட்டிக்கொள்ளுகிறான். அப்போது அதிற்போட்டால் அது சக்கரத்தில் பிடிக்காது. ஆகையால் அவனதைக் காய்ச்சி சக்கரத்துக்குப் போட்டு அதன்பேரில் தண்ணீரைவிடுகிறான். ஏனென்றால் காயந்தபோது அது முன்னிலும் சிறிது பெருகுகின்றது. பெருகும்போது அதனை சக்கரத்தில் இலேசாய் மாட்டிவிடுகிறான். [illegible] வே அதன் காங்கை குறைந்து குளிர்கின்றது. அங்ஙனம் குளிர்வதினால் அச்சட்டம் இறுகி சக்கரத்தை கெட்டியாய்க் கவ்விக்கொள்கின்றது. இவைபோன்ற திருஷ்டாந்தங்களால் காங்கையானது பதார்த்தங்களைப் பெருகச்செய்யுமென்றும், குளிர்ச்சி பதார்த்தங்களை யிறுகச்செய்யுமென்றும் எளிதிலுணரலாம்,

பிரபஞ்சத்திலுள்ள சகல பதார்த்தங்களின் காங்கையும், குளிர்ச்சியும் ஒருபடித்தாயிராது மாறிக்கொண்டுவருகின்றதென்றும், இப்பூமியிலுள்ள எல்லாப்பொருள்களின் காங்கையும் குளிர்ச்சியும் காற்றினால் விகற்பப்படுகிறதென்றும் கூறினோம். காங்கை பதார்த்தங்களை பெருகச்செய்யுமென்றும் குளிர்ச்சி பதார்த்தங்களை யிறுகச்செய்யுமென்றும் திருஷ்டாந்தங்களைக் கொண்டு ரூபித்தோம். ஆதலின் இப்பிரபஞ்சத்திலுள்ள பொருள்கள்யாவும் ஒருப்படித்தாயிராமல் பெருகுவதும் இறுகுவதுமா யிருக்கின்றன.

இ. மு.

(இன்னும்வரும்.)

ஆன்மாவும் சரீரமும். (3) 11

சென்றநவம்பர்மாசம் ௩௰௨ பிரசுரமாகிய பிரம்மவித்தியாவென்னும் பத்திரிகையிலே தத்துவவிவேசினியுடையார் தாம் கண்டித்த கண்டனங்களுக்கும் பிரதியுத்தரம்சொல்வதாய வெளிவந்த ஸ்ரீமான் சீனிவாசசாஸ்திரியார் அவர்களுக்கு மிக்கவந்தனத்தோடு எடுத்துக்காட்டுவது.—

நண்பரே; "நாம் அநேகமாய்ப் பெரியோர்களிடம் பன்னிப்பன்னிப்படித்த தருக்கநூற்களிற் காணாதஅருமையானதும், உலகத்தில் தற்காலம் 12-13-வருஷங்களாய் அத்தருக்கநூலை யாராய்ந்த ஒவ்வொருவித்துவான்களும் வியக்கத்தக்கதும், பிரம்மதர்க்கமென வழங்கும் கிரந்தத்திலுங்கேட்டறியாத வியாப்த்தோஷமுதலியதோஷங்கள் நிறைந்ததுமாய் ஒரு அரிய தர்க்கநூலைக்கற்று........உலகத்திலுள்ள மதவாதிகளெல்லாரையும் தாமேஜயித்து மகிழ்ந்து பளா பளாவென்று பரிகசித்து வரும் நவீனதார்க்கிகசிகாமணியாய் வெளியில்வந்திருக்க அவருடன் யாம் எதிர்த்துப்பேசுவது உசிதமன்றேனும் லோகோபகாரமாய்...எழுத ஆரம்பித்தோம்" என்று எழுதியுள்ளீரன்றோ?

நண்பரே; நீங்கள் சொல்நோக்குப்பொருள்நோக்கு சம்பந்தச்சார்புமுதலிய பக்கதருமங்களைநோக்காது பொருள்கொள்ளும் பிரவீணரெனவ யாம் அறிந்திருப்பமேல் அவ்வவற்றையும வெளிப்படையாகவே கூறியிருப்போம். கல்லைக்கடித்து நன்குசமைத்ததாயென்ருல், அது சன்மானபிரியவார்த்தையாமா? நீவிர் ஆன்மா மனம் அறிவு என்பன பிரத்தியேகப்பொள்களெனக்கூறி அவை பிரத்தியேகப்பொருள்கள்தாம் என்று ஒருசிறிதும் நியாயங்காட்டாமல் ஒன்றை ஒன்றிலும் அதை மற்றென்றிலும் ஒளித்து அடக்கிமுடிவில் ஒருசொல்லையும்ரூபிக்காமல் வீணே சொல்விரயஞ்செய்து சாதாரணரை எனனமோ ஏதோவென்று மலைக்கச்செய்தமையால், அது எச்சாத்திரத்திலும் எந்த விவேகியாலும் வழங்கப்படாத நூதனப்போலியாயிருந்தமையின் "பிரம்மதர்க்கம்" என்று அதனை நூதனப்போலிப்பெயரால் அழைத்தோம். மேலும் நுமது **பிரம்மவித்தியா**வென்னும் பத்திரிகையைத்தவிர வேறிடங்களில் அத்தகைய விவகாரம் காணக்கூடாமையால் பிரம்மதர்க்கம்போலும் என்றழைத்தாம். மேலும்தோஷங்கள் அதிவியாப்தி அவ்வியாப்தி அசம்பவம் என்னும் மூவகையினவென சாதாரணதர்க்க சங்கிரகங்களை வாசித்தவர்களும் நன்குணர்வார்கள். இத்தகைய அதிவியாப்தி அவ்வியாப்தி தோஷங்கள் அபரிமிதமாய் ஓர்விவகாரத்தில் பொதிந்துகிடக்குமேல் அவற்றை தனித்தனிபெயரிட்டு ஆங்காங்கழைப்பதைவிட பாற்படுத்திப்பொதுவாய் வியாப்திதோஷமென்றுரைப்பதில் என்னகுற்றம்? வியாப்திதோஷமென்று ஓர் சொல் கிரந்தங்களிலிருந்தால்தான் சாஸ்திரியாருக்குப்பொருள் விளங்குமோ? சொன்னதைச்சொல்லுங்கிளிப்பிள்ளையென்பதாய் நூல்களில் கண்டபதங்களுக்குத்தானு கண்டபடியிருந்தால் பொருள்விளக்கிக் கொள்ளக்கூடும்? அங்ஙனமேல் நமக்குப்பகுத்தறிவிருந்தும் என்னபயன். ஓர் வியாபாரி அணில்கடித்தவாழைப்பழம் கொய்யாப்பழம், மாதுளம்பழம் முதலியவற்றை விற்க, அதைக்கண்ட மற்றொருவன் "என்னகாணும்அணில் கடித்தபழத்தைக்கொடுத்தா" யென்ன, அவ்வியாபாரி ஓ! ஓ!! அணில்கடித்தபழமென்று ஓர்வகைப்பழமுமிருக்கிறதா அதைநான் எச்சாத்திரத்திலும் எக்கதையிலுங் கண்டதில்லையென்று வியப்படையுமாபோல் நமது நண்பர் வியப்படைந்து உரையாடுகின்ருர். இதைக்கண்ட யாமும் இவர்வியப்படைந்ததைப்பற்றி வியப்படைகின்ரேம்.

ஐயா,—நமது நண்பர் ஒருதேசமாவது நாத்திகர் நிறைந்து [illegible] றறியாது என்று வினவினர். அதற்குமறுமொழி "தேசங்கள் க்ஷேமமடைவதும் மதங்களின்பிரயோசனங்களில் ஒன்றென்றும் அதனுல் ஒற்றுமை சித்திக்குமென்றும் நாம் முதற்பத்திரிகையிற்றனே விரித்தோம். ஆகையால் இந்நாத்திகம் ஒருதேசம்நிறைந்தால் ஆங்குஉலகக்ஷேமங்குறையுமென்பது கருத்தாம்" புத்திமான்களே! நாம்கேட்டகேள்விக்கு இதுமறுமொழியாமா? நாம்நாத்திகருக்குவருங்குறையாது. என்ரேம் அதற்கிவர்குறை இன்னதென்று சொல்லாமல், அத்தேசத்தில் உலகக்ஷேமங் குறையுமென்ருர். சாதாரணமாகிய (Middle-school) மிடில் இஸ்கூல் பரீக்ஷைக்கேகும்சிறுவர்களைச்சுட்டிக் கேட்டாலும்இடத்தையுன்னிக் கேட்டகேள்விக்குஇடத்தையும் மனிதரையுன்னிக் கேட்டகேள்விக்கு மனிதரையும் விஷயத்தையுன்னிக்கேட்டகேள்விக்கு விஷயத்தையும் விடையாகப்பகரவேண்டுமென்றுணர்ந்து சொல்வார்களே! சகலசாஸ்திரங்களையும் சாம்பிரதாயமாய் குருமுன்னிலையில் ஐயந்திரிபறக்கற்று இங்கிலீஷ்பாஷையைக்குறைகூறிய நமது நண்பராகிய சாஸ்திரியார் இத்தகைய விடைகொடுப்பாரென்று யாம்கனவினுங்கருதிஞேமில்லை. இவர்விடுத்தவிடை இவ்வளவிலிருக்க மதங்களால் ஒற்றுமைசித்திக்கும் என்றதைப்பற்றிச் சிறிது விவகரிப்பாம். மதங்களால ஒற்றுமைசித்திக்கும் என்பதற்கு ஆதாரம் யாதேனுமுண்டேல் அவற்றை நமதுநண்பர் எடுத்துகாட்டலாகாதா?

மதிராஸ்.

சிக்யுலர் சோசைட்டி நிபந்தனைகள்.

(200-வது பக்கத்தொடர்ச்சி.)

22. நிர்வாகசபை மெம்பர்களும் செக்ரிட்டேரியும் பொக்கிஷதாரரும் வருஷாவருஷம் மகாசபையாரால் நேமிக்கப்படுவார்கள்.

23. நிர்வாகசபையாருடைய அலுவற்காலமுடிவில், அவர்கள் தங்கள் கண்காணிப்புக்குளிருந்த சகலத்தையும்பற்றி விருத்தாந்தஞ்சித்தஞ்செய்து, சோசைட்டியைச் சேர்ந்தசகல மெம்பர்களுக்கும் தெரிவிக்கவேண்டும்.

செக்ரிடேரியும் போக்கிஷதாரரும்.

24. செக்ரிடேரியானவர் சோசைட்டியினுடைய சரித்திரக்கிரந்தங்களையும் குறிப்புப்புத்தகங்களையும் எழுதிவைத்து, கடிதப்போக்குவரவு செய்துகொண்டு, மெம்பர்கள் தெரிவித்துக்கொள்வதையும் மற்றசங்கதிகளையும் நிர்வாகசபையாருக்கு அறிவிக்கவேண்டியது.

25. மகாசபையிலும், நிர்வாகசபையிலும், சோசைட்டியைச்சேர்ந்த மற்றசபையிலும் நடத்தப்படுகிற சகல கிரந்தங்களையும், அதற்கென்றுவைத்திருக்கிற புஸ்தகங்களிலே செக்ரிடேரி எழுதி, அவரும் அப்போதப்போதிருக்கிற அக்கிராசநாதிபதியும் அவற்றில்கையெழுத்துப்பண்ணவேண்டியது. அப்போதப்போது கூடுகிறசபையில் அதற்குமுந்தியசபையில் நடந்தகிரந்தங்களை ஊர்ஜிதஞ்செய்வதற்காக முதலில்படிக்கவேண்டியது.

26. செக்ரிடேரியானவர் போக்குவரவு செய்யப்படுகிற சகலகடிதங்களுக்கும் அதற்கென்றுவைத்திருக்கிற பிரத்தியேகமான புஸ்தகத்தில் நகலெழுதவேண்டியது.

27. மகாசபையாரும் நிர்வாகசபையாரும் செய்கிறநிகமனங்களைக் கூடியசீக்கிரத்தில் செக்ரிடேரி நிறைவேற்ற வேண்டியது.

28. பொக்கிஷதாரர் எல்லாபாக்கிப்பணத்தையும் வசூல்செய்வித்து, பணம்வந்துசேர்ந்ததற்கு அடையாளமாக ரசீதுமுதலியமூலமாய் அதை ஒப்புக்கொள்ளவேண்டியது. அவர்வரவுசெலவுக்குக் கணக்குவைத்து, அந்தந்தமாசக்கடைசிதேதியில் மொத்தங்கைத்து, அடுத்துக்கூடுகிற மாதாந்தர நிர்வாகசபையிலே பைசலுக்காக வைக்கவேண்டியது.

29. பொக்கிஷதாரர் தன்மூலமாய்ப் போகவரவாகிறபணத்திற்கு அவரேஉத்தரவாதியாயிருக்கவேண்டும்.

மெம்பர்களைநீக்கிவிடுதல்.

30. யாதொரு மெம்பர் ஆறுமாசத்திற்கு அதிகமாகக் கையொப்பம் பாக்கிவைத்துக்கொண்டால், அதைக்குறித்து அவருக்குக்கிரமமாய் அறிக்கையனுப்பியிருந்தும், அவர்பராமுகமாயிருப்பாராகில், அவருடையபேரை நிர்வாகசபையார மெம்பர்களின் ஜாபிதாவிலிருந்து எடுத்துப்போடவேண்டியது.

31. சோசைட்டிக்குள்ளாவது சோசைட்டிக்கு வெளியிலாவதிருக்கிற யாதொருமெம்பர் சோசைட்டியின் மேன்மைக்குக்கெடுதியாக நடந்தாலும், பிரத்தியேகமாய் எடுத்துச்சொல்லியிராத யாதொருசங்கதியினுல் சோசைட்டியின் ஒழுங்குக்கும் அமரிக்கைக்கும் அலைக்கழிவு உண்டாகும்போ லிருந்தாலும், சோசைட்டியின் விதிகளைமீறினுலும், அவ்விதசங்கதியை நிர்வாகசபையார் உடனே கண்காணித்து, அப்படிப்பட்ட மெம்பரைநீக்கிவிடுவது யுக்தமென்று தங்களுக்குத் தோற்றுகிறபட்ச[illegible] சோசைட்டியானா விசேஷசபைகூட்டி, அவசியமானல், அடுத்துவருகிறவிதியில் சொல்லியிருக்கிறபடிச் செய்யவேண்டியது.

32. சோசைட்டியின் விசேஷசபைக்கு வந்திருக்கிறமெம்பர்களில் மூன்றிலிரண்டு பங்காகிய பெருந்தொகையார் கேட்டுக்கொள்வதின்பேரில், யாதொருமெம்பர் சோசைட்டியைவிட்டு நீங்கிவிடவேண்டும.

சபைகூடல்.

33. செக்ரிடேரியானவர் சபைகூட்டக் குறைந்தது ஐந்துநாள்முன்னதாகச் சகலமெம்பர்களுக்கும் அறிக்கைசெய்யவேண்டியது.

34. சபைகூடஅனுப்பும் அறிக்கைப்பத்திரிகையிலே அந்தச்சபையில் யோசிக்கத்தககவிஷயங்களையும் கண்டெழுதவேண்டியது. சகலமெம்பர்களுக்கும் முன்னதாய் தெரிவிக்கப்படாதயாதொருவிஷயத்தைக்குறித்து எந்தச்சபையிலும்யோசிக்கலாகாது.

குறிப்பு. மேற்படி இரண்டுநிபந்தனைகளும் அவசரமானவிஷயங்களுக்கும், கூடுவதைக்குறித்து வேறேவிதமாய்ச்சொல்லியிருக்கிறகூட்டங்களுக்கும் சம்பந்தப்படமாட்டா.

35. பதினைந்துநாளுக்குக் குறையாமல் முன்னதாய் அறிக்கைகொடுக்கப்பட்டபின்பு, உத்தியோகஸ்தர்களை நேமிப்பதற்காகவும், நிர்வாகசபையாருடைய ரிபோர்ட்டையும் ஆடிட்டருடைய ரிபோர்ட்டையும் சிரவணித்து யோசிப்பதற்காகவும் வருஷந்தோறும் ஜனவரிமாசத்தில் மகாசபை கூடவேண்டியது.

36. யுக்தமாகத்தோற்றுகிறபடி, சாதாரணசபையையாவது விசேஷசபையையாவது கூட்டவாகிலும் நிறுத்திவைக்கவாகிலும் நிர்வாகசபையாருக்கு அதிகாரமுண்டு.

37. ஆறுமெம்பர்கள் கையெழுத்துசெய்து மனுவு அனுப்பினுல், அதுவரப்பற்றிக்கொள்ளப்பட்டபின்பு பதினைந்துநாளுக்குள் அதில்கண்டிருக்கிற யாதொருகாரியத்திற்காக, நிர்வாகசபையார் சோசைட்டியானா விசேஷசபைகூட்டவேண்டியது;

விசேஷசபைகளெல்லாவற்றிலும் பிரதேசத்திலுள்ள மெம்பர்களில் மூன்றிலிரண்டுபங்குபேர் கூடினுல்மாத்திரமே சங்கதிகளை யோசிக்கக்கூடும்.

குறிப்பு. எப்படிப்பட்ட சபைகூடுவதற்கும் அறிக்கையை தின்கர் பத்திரிகையில் பிரசுரஞ்செய்யவேண்டும்.

கணக்கு.

38. சோசைட்டியைச்சேர்ந்த கணக்குகளை அந்தந்தவருஷ

மகாசபையில் நேமிக்கப்பட்ட மெம்பர்' அந்தந்தவருஷத்தில்
தன்கிபண்ணவேண்டியது.

39. ஆடிட்டருடைய ரிபோர்ட்டையும் நிர்வாகசபையாரு
டைய ரிபோர்ட்டையும் வருஷாந்தரமகாசபையாருக்குத் தெ
ரிவிக்கவேண்டியது; அந்தசபைகூடுந்தினத்திற்கு அகவா பத்
துநாள்முன்னிட்டு அவற்றை மெம்பர்களுக்கு அனுப்பவேண்
டியது.

உபந்நியாசம்.

40. கூடுமானபோது ஜனங்களைக்கூட்டி உபந்நியாசஞ்
செய்யவேண்டும்.

41. மெம்பராயிருந்தாலும் இராவிட்டாலும், யாரையாவ
து உபந்நியாசகராக நிர்வாகசபையார் ஏற்படுத்தலாம்,

வைஸ்பிரிசிடேண்டுகள்.

42. ஒவ்வொரு பெரியபேட்டையிலும், ஒவ்வொருஆக்டி
வ்மெம்பரை அந்தப்பேட்டைக்கு வைஸ்பிரசிடெண்டாக நேமிக்
கவேண்டியது.

சில்லரைநிபந்தனைகள்.

I. நிபந்தனைகளில் எதையாவது எடுத்துப்போடவேண்டுமா
னாலும், சீர்ப்படுத்த வேண்டுமானாலும், புது நிபந்தனை ஏற்ப
டுத்தவேண்டுமானாலும், அதற்கென்று கூட்டப்பட்ட விசேஷ
சபையில் மெம்பர்கள் அப்படிச் செய்யவேண்டுமேயல்லாமல்
மற்றப்படி செய்யக்கூடாது.

II. எந்தமெம்பராவது சோசைட்டியின் ஆபீசுபுஸ்தகங்க
ளைப்பார்க்கவேண்டுமானால், செக்ரிட்டேரிக்குதெரிவித்தபின்
பு சகலபுஸ்தகங்களையும் பார்வையிடலாம்.

மதிராஸ்சிக்யுலர் சோசைட்டியின்
மகாசபையாருடைய உத்தரவின்படி,

சென்னபட்டணம். } ஜெ. ர். அப்ஷன்,
A. S. 286ஷ ஏப்ரில்மீ 1உ } ஆனரெரி செக்ரிட்டேரி.

வர்த்தமானம்.

மதப்பிரமைமயக்கு.—ஒரு ரோமன்காதொலிக் சுயம்பாகி
அனேக வருஷங்களுக்குமுன்னே பெங்களூரைவிட்டு கன்னி
யாகுமரிக்குப்போய், அங்கேமகமதியமதத்தில்விழுந்து, தன்ம
னைவிமக்களோடுகூட தென்இந்தியாவில்யாத்திரைசெய்துகொ
ண்டுபெங்களூர்வந்துசேர்ந்து, மசூதியையடைந்து, அவ்விட
த்திலேகொஞ்சகாலம் மகமதியர்களால் ஆதரிக்கப்பட்டான்.
பின்பு வியாதிகண்டு ஆசுபத்திரிக்குப் போயிருக்கையில், அவ்
விடத்திலே மறுபடிஞானஸ்நானம்பெற்றுபழயமதத்தைஅவல
ம்பித்தான். அவனுடைய நான்குமக்களும் ஒருமகமதிய சாவு
கார்வசத்திலிருந்தார்கள். அவன் இறந்துபோவதற்கு முன்ன
மே தன்னைத்தன்னுடைய மகமதியசினேகிதர்களிடத்தில் திரு
ம்பக்கொண்டுபோய்விடச்சொல்லிக் கேட்டுக்கொண்டபடிசெ
ய்யப்பட்டபின்பு, கொரானிலுள்ள பிரார்த்தனைகளைச்சொல்லி
க்கொண்டு, தன்சினேகிதர்களுக்கும் மக்களுக்கும் மத்தியில்
இறந்துபோனான். அவனுடையதங்கை அந்தநான்குபிள்ளைகளை
யுந்தன்னிடத்தில்ஒப்பிக்கும்படிபெங்களூர்சீவில்ஜட்ஜிகோர்ட்
டில் வியாச்சியந்தொடர்ந்தாள். ஆனால் ஜட்ஜியானவர் அவர்
கள்மகமதியர்களென்றும், தகப்பன் மகமதியனாகவேஇறந்து
போனானென்றும் தீர்ப்பளித்து, வியாச்சியத்தைத்தள்ளிப்போ
ட்டார். [எந்தசமயத்திலும் ஒன்றையுங்காணமையால் மா
றிமாறி உழன்றானென்றுதெரியவருகிறது.]

கப்பல்சபர்அவஸ்தை.—கல்கத்தாவிலே இப்போதுதான்வந்
துசேர்ந்த அயர்லிஎன்னும் கப்பலானது குடாக்கடலிலே செ
ன்றபுசலில் அடிபட்டது. காற்றுமழை எதிர்ப்பட்டகாலமுதல்
நடந்ததை கப்பல்காப்டன்எழுதிவைத்தார். அதாவது—கொ
டியநாளாகிய நவம்பர்மீ 19உ காற்று இடி முழக்கம்போல்கர்
ச்சித்தது. மழைஅடர்ந்து இருட்டிக்கொண்டுபெய்ததினால் க
ப்பல்முன்னணிகணனுக்குத்தெரியவில்லை. கப்பல்தத்தளித்து
க்கொண்டு அதில்தண்ணீர் மிகுதியாயேறிவிட்டது. காற்றும
ழை அதிககோரமாயடித்ததினால கப்பலாள்கள் கப்பல்தட்டி
ன்மேல் நகரக்கூடவில்லை. மழைதாரைகளாயல்லாமல்ஒன்றாய்
த்திரண்டு மொத்தாகாரமாய்ப் பெய்ததாகத்தோற்றினமையா
ல் வெகுப்பயங்கரமாயிருந்தது, அன்றுராத்திரிஒரு ஆளிமீன்எப்
படியோகடலினால் கப்பலில் எறியப்பட்டது. கப்பலுக்கு அதி
கசேதமில்லை,

அப்பர்பர்மாவிலே ஸ்தாபிப்பதற்காக, பர்மாவின் பிரதான
கமீஷனர் கமாண்டரின்சீவ் அவர்களுடைய அனுமதிபெற்றுக்
கொண்டு, 20 மிலிட்டேரிஆபீசர்கள் சகிதமாயும், 7 எக்ஸ்திரா
போலீஸாபீசர்கள் சகிதமாயும் மிலிட்டேரி போலீசுக்கு இன்
னும் 8,000 பேரைவைக்கவேண்டுமென்று இந்தியா கவர்னமெ
ண்டாரைக்கேட்டுக்கொண்டார். அதற்கு முடிவான உத்தரவு
செய்வதற்குள், வடஇந்தியாவிலே 2,000 பேரைத் தட்சணம்
சேர்க்கவேண்டுமென்றும், இப்போது பர்மாவிலிருக்கிற பட்
டாளங்களிலிருந்து 10 மிலிட்டேரி ஆபீசர்களை அமர்த்தவேண்
டுமென்றும், அவர்களில் சிலர் உடனே போய்ச்சேரவேண்டு
மென்றும் அந்த கவர்ன்மெண்டார் உத்தரவு செய்ததாகவும்,
கேட்டுக்கொள்ளப்பட்டபடி கவர்ன்மெண்டார் முழுதும் ஜா
ரிசெய்வார்கள்போலிருக்கிறதாகவும், பயனீர்பத்திரிகையினால்
தெரியவருகிறது.

கிருஷ்ணாஜில்லாவிலே பாலையாறு நதிக்கரையிலும் கிரு
ஷ்ணாநதிக்கரையிலும் நிலக்கரி அகப்படுமென்று கண்டறிந்த
மேஜர் ஜனரல் அப்பெல்காத் என்பவருக்கு நாம்வந்தனஞ் செ
ய்யவேண்டும்.

கந்தன்மகத்துவம்.—சென்றகார்த்திகைமாசம், சென்னை அ
ருணசலேஸ்வரதேவாலய உற்சவத்தில் சுப்பிரமணியக்கடவு
ளைச்சுமநததண்டுகோல்முறியவே, அந்தமட்டில் கடவுளைக்கீ
ழேவைத்துவிட்டார்களாம். தண்டுகோல் பலவீனப்பட்டிருந்
து பளுவினால் முறிந்ததோ அல்லது அடியார்களுடைய பக்
திகுறைவினால் கடவுளுக்குக்கோபம்பிறந்து அப்படிச்செய்வித்
தனரோ! அதுவும் கடவுள்மகிமைதான், யோசிக்கவேண்டும்.

கடிதங்கள்.

ஐயா,

I—திரிசிரபுரம் புத்தூர் மந்திரவாதியாகிய ஸ்ரீமான் இலட்
சுமணரெட்டியார் அவர்காள்? யாம் சென்றசெப்டம்பர்மீ
களூரைவிட்டு திரிசிரபுரம்வந்து தமதுடன் மந்திரவிஷயங்களை
க்குறித்து உசாவியபோது யாம், தமக்குப்பிரியமுள்ள சினே
கிதரானபடியாலும் மேற்படிவிஷயங்களை யெமதுபேரில்செய்
யுங்கால், யெமதுற்றார் பெற்றார் முதலானவர்களுக்குத் தம
துபேரில் மனவருத்தமுண்டாகுமென்றும், அன்றியும் துரைத்
தனத்தார் உத்தரவுவேண்டுமென்றும் இன்னம்யாரோ ஒருவரி
ருப்பதாகவும்அவர்கூடியசீக்கிரமிவ்விடமவருகிறதால் அவர்மூ
லியமாய் எமககு மேற்படி விஷயங்களால் கிஞ்சித்துத் துன்ப
ம்பலிக்கும்படிசெய்வதாய் சொல்லியதற்கு ஒத்தாசையாகப்
பேசிய South Indian Railway Chief Auditor office Clerk
அவர்களும் ஷை மந்திரவாதிக்குக்கடிதமெழுதி சீக்கிரத்தில் வ
ரவழைத்துயாம்கொண்டிருக்கும் கொள்கையை அதமாக்கி அ
வரது உண்மையை ஸ்திரப்படுத்துவதாகச் சொல்லினரோ, அ
ஃது நிமித்தம் மேற்படி மந்திரவாதிவந்தனரோ இல்லையோ
யாம் அறிந்திலேம், அன்றியும் உண்மையை ஆராயவேண்டிய
து விவேகிகளின்கடமையாதலால், ரெட்டியார் அவர்காள், த
யைபுரிந்து யெமக்குத்தெரியப்படுத்தவும்.

II—ஐயா குட்டிபாடம்படிக்கின்றரெட்டியாரவர்காள், சில
மாதங்களுக்குமுன் விஷந்தீண்டிய அன்னியதேசத்தானாகிய
ஒருவன், தமதிடம்வந்து எனதுகஷ்டத்தை நிவர்த்திக்கவே
ண்டுமென மன்றாடியஅவனைஇருத்தி, உமது ஆபாசமந்திரத்தை
சிலநேரபரியந்தம் உச்சரித்துப்போகும்படி கட்டளையிடப்பட்
ட அம்மனிதன், அன்றுபொழுது விடியுமுன்னமே தமதுதவியற்
றவெறுமொழிமந்திரத்தால் ஓரணுவளவேனும் பிரயோசனமி
ன்றி யெமபுரம் சேர்ந்ததை தாம் கேள்வியுற்று அண்டை அய
ல்வீட்டாரிடம் செப்பிப்பரிதாபமுற்றிருந்தீர்களே அதைக்கு
றித்து நாம் தங்களை அடிக்கடிக்கடாவினதில்லையா பரிதாபம்
பரிதாபம். ஐயோ விஷந்தீண்டிய அம்மனிதனை உடனே வைத்
தியர்களிடம் இட்டுப்போய் அவிழ்தப்பிரயோகஞ்செய்து கு
ணப்படுத்தும் நல்வழியிருக்க (அதனைவிடுத்து) அவிழதங்கொ
டுத்தால் மந்திரம் பலியாதென்கிற மூடநம்பிக்கைகொண்டு
அம்மனிதனை எமலோகமனுப்பியதா பரோபகாரசிந்தை. வி
வேகிகளிதனை அபகாரசிந்தை யெனவே மதிப்பர்கள்-யோசி
மின் - யோசிமின்.

III.—மந்திரத்தால் மாங்காய்விழுந்ததெனச் செப்பியரெட்
டியாரவர்காள்? தமது மந்திரத்தால் ஒன்றும் நடவாதென
யாம் பன்னிப்பன்னிப்பன்முறை செப்பியும் தாமதனையொப்
பாமல் குரங்குப்பிடிபோல் பின்னிடப்பதென்னை? அன்றியும்
சென்றசெப்டம்பர்மாதத்தில், தமதிடையின்கீழ் புறப்பட்டிருந்
த ஆப்ஸெஸ்யென்னும் ஓர்விதக்கட்டியால் ஒருவாரம் வரையி
லும் வருத்தமுற்று தமது மந்திரத்தாலொன்றும் நடவாமல்
Poltice என்னும் ஓர்வித மாவால் சொஸ்தமானீரல்லவா? அ
தையும் ஷை Clerk அறிவாரோ. இத்தியாதிநியாயங்களால்
உமது மந்திரமே உம்மை யிருந்தவிடம்விட்டெழச்செய்ய சக்
தியற்றதாயிருக்கச்சே, தாமா அன்னியருக்கு சுக்குக்கொண்டே
தப்புகுந்தீர். பளா-பளா-நன்று-நன்று. ஐயா-ரெட்டியாரவர்
காள்? இஸ்டநிமித்தமாகவும் எமதுற்றார் பெற்றார்முதலிய
வர்களுடைய் மனவருத்தத்திற்காகவும் எம்மை ஷை மந்திர
த்தால் வதைசெய்ய தமக்குப்பிரியமில்லாதிருப்பினும் (இதோ)
நாம்உம்மை எமதுகரத்தால்ஒங்கி ஓர்குத்து குத்துகின்றோம் அ
க்குத்து தமதுபேரில் படாமல்மாத்திரம் ஷை மந்திரத்தால் க
ட்டிக்கொள்வீர்களே யாமாகில், தமது மந்திரத்தின்முறுக்
கை சுறுக்கெனத் தெரிந்துகொள்வேம் ரெட்டியாரவர்காள்
அஃது சம்மதிதானா; அன்றியும் சென்ற அக்டோபர்மீ 31உ

பிரசுரமாகிய தத்துவவிவேசினி யென்னும் பத்திரிகையின் 176வது. பக்கத்தில் விவரித்துச்சொல்லி இருக்கிறபடி நடக்க சித்தமாகயிருக்கின்றோம். நாமும் உம்மைப்போல் மதிமயக்கங் கொண்டிருந்தகாலத்தில் ஓர்வாதியிடம் அகப்பட்டுக் கிஞ்சித்துப்பொருளையும் சொற்ப நாளையும் விருதாவாகப்போக்கினோம், இது சமயமல்லவாகலால் பின்னிட்டு சாவகாசமாய் சர்ச்சைசெய்கிறேன். இத்தியாதிதுற்கிரியை யெல்லாமெனை விட்டுநீங்கி சுமார் மூன்றுவருடமாகின்றது. கேட்டால்,கேளுமின், விட்டால் விடுமின்.

IV.—மந்திரத்தால் மதிமயக்கங்கொண்டிருக்கும் ரொட்டியாரவர்காள் ? மேற்சொல்லிய மந்திரத்தால்சகலமும் நடந்துவருமேயாமாகில் நம்மை ஆண்டுவரும் அரசாங்கத்தார் தற்காலம் நடந்துவந்த பர்மாசண்டை ருஷியாசண்டை முதலியவைகளுக்குக் கோடிகோடியாக திரவியம் செலவுசெய்து படைவீரர்களையும், இராணுவவீரர்களையும், வைத்துப்பாதுகாத்துவருவானேன்-அன்றியும்- பீரங்கி, குண்டு, பிஸ்தோல், துப்பாக்கி, கத்தி, ஈட்டி, எறிவாள்முதலிய ஆயுதவகைகளை சேகரித்துவைத்திருப்பானேன் இதனை நீவிர் அறியீரோ. ஷை பிள்ளைஅவர்களும் அறிந்திலரோ தெரிகிலேன். அஃது உண்மையாகவேயிருக்குமாகில் துரைத்தனத்தாரோன் சதாகாலம் நஷ்டப்பட்டு அவரவர் பிராணனையும் இழக்கவேண்டும், தம்மைப்போலொத்த ஒருமந்திரவாதியை வைத்துக்கொண்டுமேற்சொல்லியசண்டைகளை திரேக பிரயாசையின்றி வெற்றிபெற்று சந்தோஷமடைந்திருக்கலாமே. அச்சக்திமாத்திரம் உமக்குண்டென தயைபுரிந்து எமக்குத்தெரிவிப்பீரே யாமாகில்-தற்காலம் தாங்கள்பெறுகிறசம்பளத்திற்கு,ஆயிரமடங்கதிகமாய்அரசாங்கத்தாரால், கொடுக்கும்படி, சிபார்ஸ்செய்கின்றோம். ரொட்டியாரவர்காள் ! அஃது சம்மதிதானா.

V. மதிமோசம்போன ரொட்டியாரவர்காள் ? இத்தியாதி நியாயங்களால் உமது மந்திரமே அந்திரமாயிருக்கச்சே யெம்போலியர்கள்பேரில்புறங்கூறித்திரிதலாவிவேகிகட்கழகு. அன்று. அன்று. ரொட்டியாரவர்காள் ? நாம்தங்களுக்கு சென்றமுறைகூட பிரசுரமாகிய தத்துவவிவேசினியென்னும் இப்பத்திரிகையையெமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ-தி-பு-நாராயணசாமி நாயுடு அவர்கள் மூலியமாய் அனுப்பிவைத்திருக்கின்றோம். அதைத்தாங்கள் கண்ணுற்று யாழ்ப்பாணம் ஸ்ரீமான் நாராயணப்பிள்ளைபோல் மௌநமடைந்துவிடாமல் கூடிய சீக்கிரத்தில் பதில்வேண்டுகின்றனம்.

ஒஸூர் 13-12-86.

இங்ஙனம்,
திரிசிரபுரம்- புத்தூர் - வையாபுரிபிள்ளை.
இந்து சுவக்கியான சங்கத்தின் ஓர்மெம்பர்.

—0—

ஐயா-பத்திராதிபரே,

நமது த-வி-னி- கைமொப்பக்காரர்களும், மெம்பர்களும் இன்னின்ன இடங்களில் இன்ன பெயருடையவாகள் இருக்கிறார்க ளென்பதாய் ஷை பத்திரிகையில் ஓர் தடவைப பிரசுரம் செய்வீர்களேயாமாகில அடிக்கடிப்பல இடங்களுக்கு சார்க்கியூட்செய்யும் எம்போலியர்கள் அவர்களைக் கண்டுபேச மெத்தஅனுகூலமாயிருக்குமென்று எண்ணுகின்றனன்.

ஒஸூர் 13-12-86

இங்ஙனம்,
திரிசிரபுரம்-புத்தூர் வையாபுரிபிள்ளை.
இந்து சுவக்கியான சங்கத்தின்ஓர்மெம்பர்.

மெய்யறிவு.

உ-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா ?

(199-வது பக்கத்தொடர்ச்சி.)

"மூளைக்கு நோய்உண்டாவதினாலே ஒருவனுக்குப் பயித்தியம் பிடிக்கிறது, அறிவானது சடபதார்த்தமல்லாததும்சரீரத்தோடு கலப்புறாததுமா யிருக்குமாகில் அறிவு விகாரப்படவேண்டியநிமித்தமில்லையே.—மூளையின் அதி சிறுரத்தநாடிகள் வெடித்துப்போவதினாலே (Apoplexy) என்னும் ஒருவிதஜன்னிவியாதி காணுகிறது, இதனால்மனிதனுடையஅறிவு எப்போதும் கெட்டுப்போகிறது, ஒரு துளிரத்தம்சுத்தமாய் அறிவை அழித்துப்போடுகிறதே ; அப்படியிருக்க, அறிவுசடபதார்த்தத்தில் கலப்புறாதிருக்கிறதென்பது எவ்வளவு நிச்சயமோ! இப்படிப்பட்ட மதியீனம் எப்போது ஒழியும் ? யதார்த்தத்தை மறைப்பதையும், துரபிமானம், அறிவுமயக்கம் என்னும் சங்கிலியினால் தங்களையும் மற்றமனிதர்களையும் அடிமைபாகக் கடடுப்படுத்துவதையும், மனிதர்கள் எப்போது விட்டுவிடுவார்களோ ?" என்றும்;—"(Epilepsy) காக்காய்வலி வியாதியை நாம் அடிக்கடி பார்க்கிறோம, ஓட்டம்பாட்டம் வியாகூலமுதலிய சிலகாரணங்களினால் சடுதியில் ரத்தம் தலைக்கேற, உடனேபேச்சற்று மனஞ்சோர்ந்துஅறிவுகுன்றிப்போகிறது; இதை நாம் பலகால் பார்த்துக்கொண்டிருந்தும், அறிவோடுங்கூடிய மானிடர்கள்-நம்முடைய மனோவியாபாரங்கள் சரீரசம்பந்தமில்லாமல் தனியே நடக்கின்றனவென்று சாதிக்கக்கூடுமோ ? மனம் சரீரத்தோடு கலப்புற்றிருப்பதாக மதஸ்தர்கள் ஒப்புக்கொள்ளுவார்களாகில், வாதத்தைவிட்டுவிடவேண்டிவருமென்று அவர்களுக்குத் தெரியுமாகையால், அவிவேகமாய் அப்படி சாதித்துவருகிறார்களென்பதுதான் உண்மை. ஆயினும் மனமானது சரீரத்தின் தன்மைக்கு உட்படத்தக்கதுதா னென்று அவாகள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். * ஆகவே, சரீரத்திற்கு ஒவ்வொரு தன்மைஉண்டாகும்போதே மாறுத லுண்டாகிறது, மாறுதலுண்டான போது அழிவு உண்டாகிறது, அழிவு உண்டாகவே அதோடு, எதுவும்ஸ்வரூபமழியாமல் அப்படியேயிருக்குமென்பதும் ஒழிந்துபோம். மதக்கோட்பாட்டைஆதரிப்பதற்காக சகல உண்மையான சங்கதிகளும் அடக்கிப்போடப்பட்டன. இதுவே பூர்வாசாரிகளின் தந்திரம். மதமானது 'நீ இவ்வளவுமட்டுந்தான் ஆராய்ச்சி செய்யலாம், அதற்குமேல் செய்யக்கூடாது' என்று அகங்காரமாய் வற்புறுத்தி, (உண்மையான) சாஸ்திரத்துக்குக் குறுக்கிடுகிறது" என்றும், ராபர்ட்டு கூப்பர் எழுதியிருக்கிறார்.

குடிவெறியானது மூளையின் கிரமமான தொழிலை விகாரப்படுத்துகிறது உண்மை. அறிவானது சடமற்றதாயும் சரீரத்தோடு கலப்புறாததாயுமிருக்குமாகில் ஒருவன் எவ்வளவு சாராயம்குடித்தபோதிலும், அறிவு தன்தொழிலைக்கிரமமாய் நடத்தக்கூடுமே. தண்ணீர்வாட்டானகொஞ்சம்சாராயம்சரீரஉறுப்புகளைக்கெடுக்கிறதோ அல்லது எதிலுந் தட்டாதிருக்கிற அறிவைக் கெடுக்கிறதோ? மூளை கெடும்போதே அறிவுகெடுமாயின், மூளை வேறுபதார்த்தமாகவும் அறிவுவேறுபதார்த்தமாகவும்இராமல் ஒன்றுபட்டிருக்கிறதென்று தோற்றவில்லையா ? குடியனுக்கு சாராயவெறி மூளையில்தாக்கவே, அவனுடைய நினைப்புமுதலியதொழில்கள் விகாரப்படுவதினாலே அந்தமூளையின்தொழில் விகாரப்பட்டதென்று தெரியவில்லையா ? இதனாலே மூளையின் தொழிலே அறிவாகுமென்று விளங்கவில்லையா ? நினைப்பு நிதானிப்பு, ஞாபகம்முதலிய வெவ்வேறு தொழிற்குணத்திற்கு ஸ்தானம் மூளையில் வெவ்வேறாக இருக்கிறதென்று ஐரோப்பாசாஸ்திரிகள் கண்டறிந்திருக்கிறார்கள்.

"தூக்கமென்பது என்ன? சரீரத்தின் ஒருவிதநிலைமை—மூளைஆசோதையாயிருப்பது.—சரீரசம்பந்தமான இந்தக்காரணத்தினாலே மனத்தொழிலுக்கு பாதகமுண்டாகிறது. முழு நித்திரையில் மனோவியாபாரம் சுத்தமாய்நின்றுபோகிறது. தூங்குகிறவன் கொஞ்சகாலத்திற்குப் பிணமாயிருக்கிறான். ஆத்துமா அழிவில்லாததானால், இப்படியிருப்பானேன். ஆவியும் மிகஅலுத்துப்போவதினாலே தன்வேலைகளைச் செய்யமாட்டாமல் ஆசோதையாயிருக்க விரும்புகிறதென்று நாம் நினைக்கவேண்டியிருக்கிறதோ? அப்படிக்கானால் அது பூர்த்தியாய் அலுத்துப்போகத்தக்கதுதானென்றும், அதினாலே கரைந்துபோகத்தக்கதுதானென்றும், இவ்விதமாய்அதுஅழியாமலிருக்கமாட்டாதென்றும்நாம்துணிவாய்ச்சொல்லக்கூடும்" என்று கூப்பர் சொல்லுகிறார்.

* அதாவது—உறுப்புகள் சீராயிருந்தால் ஆத்துமாவேலைசெய்யுமென்பதும், உறுப்புகள் சீர்கெட்டால் ஆத்துமாவேலைசெய்யாதென்பதும் போன்றது.

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Dayaraja Moodelly Street,—Madras.

தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 52.] MADRAS:—SUNDAY DECEMBER, 26, 286. A. S. [Monthly, 4 Annas.

சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.

THE FREETHINKER.

தாமஸ்பேயின் என்பவர் தமது பழயகொள்கையை மரணபடுக்கையில் மாற்றிவிட்டாரென்கிற நெடுநாளைய ஜண்டிப் பொய்யை, புதிதாய்க் கண்டுபிடித்ததுபோல, டண்டீகரீயர் என்னும் பத்திரிகைபேசுகின்றது. ஆயினும், இந்தப் புதுகதையிலே விசேஷமாய் ஒன்றுசேர்ந்திருக்கிறது. தாமஸ் பெயின் நரகத்தையும் சைத்தானையுங்குறித்து சித்தப்பிரமைகொண்டு பேசினதை ஒரு ஸ்திரி கேட்டிருந்து, எஸ்ஸெக்ஸ் மாகாணத்தின் வால்தாம்ஸ்டோ பட்டணத்திலுள்ள மிஸ்தர் உலியம் டில்வினுடைய குமாரத்திக்குக் தெரிவித்தனளாம். தாமஸ் பெயின் 1809ஹு ஜுன் மீ 8உ இறந்துபோனபடியால், அந்தப் பூர்வீக ஸ்திரி (900ஹுத்துக்கதிகமாய் ஜீவித்திருந்ததாகச் சொல்லப்பட்ட) மெதுசெலாவைத் தோற்கடிக்க எண்ணங்கொண்டவளாயிருப்பள். இறந்துபோன அந்த அவிஸ்வாசிக்கு விரோதமாய்ச் சாட்சிசொல்லும்பொருட்டு அவளுடைய வாழ்நாள் அற்புதமாக வளர்ந்துவந்ததென்று ஒருவேளை சீக்கிரத்தில் கேள்விப்பட்டாலும்படுவோம்!

பிரான்ஸ் தேசத்தில் தற்கொலை அதிகரிப்பதைக்குறித்து, ஒருவைதீகபிரான்சு பத்திரிகையானது "இன்னும் பத்துவருஷ காலம் நமது கல்விச்சாலைகளில் நாஸ்திக வித்தியாபிவிர்த்தி நடந்துவருமாகில், தற்கொலைகள் இன்னும்பத்துப்பங்கு அதிகமாகுமென்று" சொல்லி, இதைமுன்னிட்டுக்கொண்டு, லவுகீகபடிப்பினால் அநேககெடுதிகளுண்டாகுமென்று குறைகூறுகின்றது. அவலட்சணம்! ஜனங்களுடைய புத்தியை மந்தப்படுத்தவொட்டாமல் பாதிரிகளை நிறுத்திவிட்டுப் பின்பு பார்க்கவேண்டும்.

ஆதிவாரதினத்தில் வேலைசெய்வதை நிறுத்திவிடவேணுமென்று சட்டம் பிறபிக்க ஸர் ஜான் லப்பக் அவர்கள் ஆவல்கொண்டிருப்பராகில், திருச்சபைகளிலும் தேவாலயங்களிலும் வேலைசெய்கிறவர்களையும், செல்வந்தர்களுடைய குதிரைக்காரர்களையும் வண்டிக்காரர்களையும் முன்னேநிறுத்தட்டும். கீரைவிற்கிறவனையும் எண்ணெய் விற்கிறவனையும் நிறுத்துவது அற்பமானகாரியம்.

ஒருபுரோடேஸ்டாண்டு பாதிரியானை, ஜெஸ்யூட் பாதிரிமார்களுடைய பிரேரேபனையால் காத்தொலிக் கிரிஸ்தவர்கள் ஞம்புகூடி சாகப்பிழைக்கக் கலலாலடித்து நீட்டிவிட்டவிதத்தைக்குறித்து கிரிஸ்ட்டியன் ஹெரல்டு என்னும் பத்திரிகைபேசுகின்றது. கிரிஸ்துமார்க்கப்போதனையால் உபத்திரவத்தைப் பொறுத்துக்கொள்ளும்படியான தன்மையுண்டாயிருப்பது அந்த மார்க்கத்தின் பயனென்பதற்கு இதை யொரு அத்தாட்சியாகச் சொல்லியிருக்கிறது. ஆனால், நிரபராதியாயும் நிராதரவாயுமிருக்கிற தங்களொப்புரவான வொருவனைக் கொலைசெய்வதற்கு ஜனங்கள சித்தமாகிறவரையில் அவர்களுடைய கோபதாபங்களைத் தூண்டிகொண்டிருக்கக் கிரிஸ்துமார்க்கம் பயன்படுவதைக்குறித்து ஒன்றுஞ் சொல்லாமல் சுத்தமாய்விடப்பட்டதே.

கிரிஸ்ட்டியன் ஹெரல்டிலே ஒரு விருத்தாந்தஞ் சொல்லியிருக்கிறது; அதினால் கர்த்தருடைய உபதேசியார்களின் அவிவேகம் வெளியாகிறது. மிஸ்ட்டர் ரெயின்ஸ்போர்டு அவர்கள் அந்த விருத்தாந்தத்தைத் தாமேசொல்லி, தாம்செய்த காரியத்தில் மகிழ்ச்சியடைகிறார்; அந்தக்காரியம் சங்கதிகளிலே உள்ளபடி குற்றமுள்ளதாகிறது. தெய்வபக்தி யில்லாத ஒருவனுடைய மனைவி இருதயாசயநோய்கண்டு வருத்தப்பட்டுக்கொண்டிருக்கையில், "மனக்கலக்கமுண்டானால் மரணஞ்சம்பவிக்குமென்பதுபற்றி, அவளருகே யாரும் போகக் கூடாதென்றும் முக்கியமாய்ப் பாதிரியார் போகக்கூடாதென்றும் வைத்தியர் தடைசெய்திருந்தார்." அப்படியிருந்தும், இந்தப்பாதிரியார் அந்த வியாதியஸ்தியைக் கதவு பறக்கத்திறந்திருந்தமந்திரத்திலிருக்கக்கண்டு அந்தச்சமயம்பார்த்து ஒருவருக்குந் தெரியாமல் நுழைந்தார். "வீட்டிற்குள்போகக்கூடாதென்று எனக்குத்தெரியும், ஆனால் இந்தவிஷயத்தில் என்னைச் செலுத்தும்படிக் கடவுளைப் பிரார்த்தித்தேன்" என்று அவிவேகமாய்ச் சொல்லுகிறார். நுழையக்கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிற வீட்டிற்குள் ரகசியமாய் நுழைந்து, ஒரு நபரினுடைய பிராணனுக்கு அபாய முண்டுபண்ணுவதற்குப் பிரார்த்தனை போதுமானசமாதானம்போலும். அவர் "கவுச்சின்பேரில் அந்த ஸ்திரி சாய்ந்துகொண்டிருந்த அறைக்குள் நேராய்ப்போய்," வேதவாக்கியங்களை யெடுத்துச்சொன்னார்; அவை அவளுடைய மனதில் மிகவும் நன்றாய்ப் பதிந்திருந்தபடியால், சிலவாரம் பொறுத்துச்சாகும்போது அவற்றைச் சொல்லினள். மனக்கலக்கத்தினால் மரணம் நேரிட்டதோ என்னமோ அது விருத்தாந்தத்தினால தெரியவரவில்லை. ஆயினும், மனஅதிர்ச்சியினாலே நோயாளியினுடைய இருதயத்தின் நொய்யதொழிலுக்கு வெகுசாய் நேரிடக்கூடுமானபடி தடையுண்டாகி உடனே அவளுக்கு மரணஞ்சம்பவித்திருக்குமாகில், வலியநுழைந்தவர் மனப்பூர்வகமா யுண்டுபண்ணுத மரணகுற்றத்திற்கு நடத்தப்படும் விசாரணையில் எவ்வளவு திகைத்திருப்பர்! ஒருவேளை எவ்வளவு மெதுவாய் வீட்டிற்குள் நுழைந்தாரோ அவ்வளவு நிசப்தமாய் வெளியில்வந்துவிட்டுக் குற்றத்திற்குத் தப்பித்துக்கொண்டிருப்பராக்கும்; அப்போது தன்னுடைய கொடிய துணிகரத்தைக்குறித்துப் புகழ்ந்துபேசத் துணிந்திராரோ. நுழையக்கூடாதென்கிற வீட்டிற்குள் ஒருசுவக்கியானி வலியநுழைந்து, ஒரு வியாதியஸ்தியண்டை நேரேபோய், அவளுடைய பிராணபாயத்திலே அவளுக்கு நாஸ்திகபோதனை செய்யத்துணிந்திருந்தால் கிரிஸ்தவர்கள் என்னசொல்லுவார்கள்?

A. M.

இப்பிரபஞ்சவிகற்பம்.

(201-வது பக்கத்தொடர்ச்சி.)

வாயுவின்குளிர்ச்சியாலும் அதனதுகாங்கையாலும் நிகழும் விகற்பங்களையெடுத்துக்கூறினோம். இனிவாயுவீசுவதால் உண்டாகும் விகற்பங்களைக்கூறுவோம். அவ்வாறு கூறுமுன்னர் காற்றுவீசுவதின் காரணத்தையெடுத்து புலப்படுத்தல் அதி ஆவசியகமாயிருக்கின்றது.

வாயு வோரிடத்தில் காங்கையாயும் மற்றோரிடத்தில் குளிர்ச்சியாயுமிருக்கிறபேதமே காற்றுவீசுவதற்கு பிரதானகாரணம். இது எவ்வாறு என்று கேட்கப்படுமாதலால் இதைத்தெளிவுறச் சொல்வாம். உஷ்ணமானதரையின்மீது பரவியிருக்கும் வாயு உஷ்ணமாயும்; குளிர்ச்சியானதரையின்மீது பரவியிருக்கும் வாயு குளிர்ச்சியாயுமிருக்குமென்று முன்னேகூறியபிரமாணத்தால் நன்குபுலப்படும். சென்றபத்திரிகையில் காங்கையானது பதார்த்தங்களைப்பெருகச்செய்யுமென்றும்,குளிர்ச்சியானது பதார்த்தங்களைஇறுகச்செய்யுமென்றும்காட்டினோம்.ஆதலினால், குளிர்ச்சியால் பதார்த்தங்களின்அம்ஸங்களாகியஅணுக்கள்நெருங்கியும்; காங்கையால் பதார்த்தங்களின் அம்ஸங்களாகிய அணுக்கள் அவ்வளவாய் நெருங்காமலும் இருக்கின்றன. ஆனால் அணுநெருக்கபேதத்தால பதார்த்தங்களின் பளுவு வேறுபடுகின்றது. எவ்வாறெனில் ஒருபடிதண்ணீரையும் ஒருபடிஎண்ணெயையும் நிறுத்தால் ஒருபடிதண்ணீருக்குபளுவு அதிகமாயிருக்கும். ஏனென்றால் எண்ணெயைப்பார்க்கிலும் தண்ணீரில்உள்ள அணுக்கள் அதிகமாய்நெருங்கியிருக்கிறதினால்தான். ஒருபடிஉருக்கின ஈயத்தையும் ஒருபடிஉருக்காதஈயத்தையும் நிறுத்தால் உருகின ஈயத்துக்குப் பளுவுகுறையும், ஏனென்றால் உருகாத ஈயத்தின் அணுக்கள்நெருங்கியிருப்பதுபோல்

உருகினாயதற்கு அவ்வளவாய் நெருங்கியில்லை. ஒருபாத்திரத்தில் எண்ணெயைவார்த்து அதற்குமேல் ஜலம்விட்டால் ஜலம் அடியிலும் எண்ணெய்மேலுமாக வந்துவிடுகின்றது.ஏனென்றால் ஜலத்தினபளுவு எண்ணெயின்பளுவைவிடஅதிகம். ஒருவஸ்துவைவிடமற்றொன்றுக்கு அதிகபளுவிருக்கிறதென்று நாம் கூறினால் அதற்குப்பொருள் சமமாகிய இடம் கவரும் இரண்டு பொருள்களின் எடையின்வித்தியாசமென்றறிக. சூடானகாற்று குளிர்ந்தகாற்றைவிட இலேசாயிருக்குமாகையால்எண்ணெயைத்தண்ணீருக்கடியிலிருக்கும்படிசெய்தபோதிலும் அதுமேலேவந்துவிடுவதைப்போல், உஷ்ணமானகாற்று இலேசாயிருத்தலினால் அதுமேலேசெல்லும். அவ்வாறு சென்றகாற்றின் இடத்தை நிரப்ப சுற்றிலுள்ளகாற்று அவ்விடத்துக்குவரும். அவ்வாறு மோதுதல் தான் வீசும்காற்று.

வாயு குளிர்வதாலும் சூடதிகப்படுதலாலும் உண்டாவதுகாற்று. காங்கையான தஸாயையடுத்தவாயு சுடும். குளிர்ந்ததஸாயையடுத்தவாயுகுளிரும். இவ்வாறுனபேதத்தால்தா னுண்டாவதுகாற்று. காங்கையானகாற்று குளிர்ந்தகாற்றைவிட இலேசானது. இதன்காரணம் யாதெனின் விளக்குவாம்.

காங்கையானது பதார்த்தங்களைப் பெருகச்செய்யுமல்லவா? குளிர்ச்சியானது பதார்த்தங்களை யிறுகச் செய்யுமல்லவா? ஆதலின், சூடானகாற்றுபெருகி முன்னிலும் அதிக இடம்கவர்ந்துகொள்ளும். குளிர்ந்தகாற்று இறுகி முன்னிலும் குறைவுபட்ட இடத்திலிருக்கும், ஓரிடத்திலுள்ள வாயுகாங்கையால் பெருகுவதால் அதனணுக்கள் முன்னிலும் கொஞ்சம்தூரத்திலிருக்கும். அதேவாயு குளிர்ந்தால் அதிலுள்ள அணுக்கள் நெருங்கும். ஆகலின் அணுக்கள் நெருங்கியிருக்கும் குளிர்ந்தகாற்றைவிட காங்கையானகாற்று இலேசாயிருக்கும். இப்படி அணுநெருக்கபேதத்தால் லேசானவாயு மேலேகிளம்பும். குளிர்ந்தகாற்று கீழேயிறங்கும். இவ்வாறு காங்கையான காற்று மேலே ஏறுவதினாலும் குளிர்ந்தகாற்று கீழேஇறங்குவதனாலும் விடப்பட்ட இடத்தைநிரப்ப அருகிலுள்ளகாற்று மோதிவரும். அவ்வாறுமோதுதல்தான் வீசும்காற்று. கோடைகாலத்தில் காலையில் நிலத்திலிருந்து கடலைநோக்கி ஓர் இளங்காற்று வீசுகின்றது; மாலையில் கடலிலிருந்து நிலத்தைநோக்கி மந்தமாருதம் வீசுகின்றது. இவற்றின் காரணங்களை வருகிறசஞ்சிகையில் வியவகரிப்பாம்.

இ. மு.

(இன்னும்வரும்.)

இந்துவேதம் வெளிப்பட்டவிதம்

உலகத்திலுள்ள எல்லாவேதங்களும் எல்லாச்சாஸ்திரங்களும் யாவரும் அறிந்துகொள்ளக்கூடியவிதமாக பிரசித்தப்படுத்தப்பட்டிருக்க, இத்தேசத்துவேதங்களும், மனு நீதிநூலும் பிரசித்தப்படுத்தக்கூடாவண்ணம் நெடுங்காலம் பிராமணருடைய ஆதீனத்திலிருந்தன. ஆனால் சிலவருஷங்களுக்குப்பின் இந்துவேதங்கள் தாராஷ்கோ என்பவனுக்கு போதிக்கப்பட்டு அவனால் பாரிசுபாஷையில் மொழிபெயர்க்கப்பட்டன. கர்னெல் பேலி என்பவர் ஜயப்பூரில் வேதங்கள்முழுவதையும் கையால் எழுதப்பட்ட பிரதியைவெகுபிரயாசத்துடன் சம்பாதித்து ஐக்கிய ராச்சியத்தின் கண்காட்சிசபையில் வைத்திருக்கிறார். அக்காலதில்தானே ஸர் ராபர்ட்டு சேம்பர்ஸ் என்பவர் காசியில் வேதங்களின் அநேகபாகங்களை சம்பாதித்தார். ஜெனரல் மார்ட்டின் என்பவரும் சில காலங்களுக்குமுன் வேதங்களின் சில பாகங்களை சம்பாதித்தார். ஸர் உல்லியம் ஜோன்ஸ் என்பவர் வேதங்களின் அருமையானபாகங்களைசம்பாதிப்பதிலும், அவைகளில் அநேகவிசேஷமான வாக்கியங்களை மொழிபெயர்ப்பதிலும் வெற்றிபெற்றார். காசியில் சிறப்புற்றோங்கியஇவ்வேதங்களில்பெரியவும், முக்கியமுமான மூலவாக்கியங்களுக்கு வியாக்கியானம் கோல்புருக் என்பவர் விசேஷமாக சம்பாதித்தார். இப்பொழுது வேதங்களின் முழுபாகங்களையும் கண்டுபிடித்து வியாக்கியானமும்செய்து அச்சிட்டு புத்தகக்கடைகளில் விற்கிறார்கள். அங்கிலேயபண்டிதர்களிற் சிலர் அவற்றை அங்கிலேயபாஷையில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கிறார்கள். தெரியின்டல் மொழிபெயர்ப்பு சங்கத்தாரும், பம்பாயில் ரெவரென்ட் ஸ்டீவென்ஸன் என்பவரும் இருக் வேதத்தையும், மார்ட்டின் ஹாக் என்பவர் யசுர்-சாமவேதங்களையும் அங்கிலேய பாஷையில் மொழிபெயர்த்தனர். வார்ட்ஸ் என்பவர் மனுநீதிநூலை அங்கிலேயபாஷையில் மொழிபெயர்த்து அதற்கு வார்ட்ஸ் கவுண்ட் ஆவ் ஹின்டூஸ் என பெயர்கொடுத்து அச்சிட்டிருக்கின்றனர். அதனால் பிராயச்சித்த தண்டனைகள் அனைத்தும் தெரியவரும்.

M M.

ஏசுவென்பவர்யாவர்?

அவர்பிதா இல்லாதவர் (லூகா-க-ஙச) அவரது தாயாருடைய புருஷனுக்கோ இரண்டு தந்தையருண்டு (லூகா-ங-உங) (மத்தேயு-க-கசு) அவர் (லூகா-உ-ச) பெத்தலேம் நகரத்தில பிறந்தவரேயாயினும், அங்ஙனம் பிறக்கவில்லையென்றும் கலிலேயா நகரத்திலேயே பிறந்தனரொன்றும் தூஷிக்கப்பட்டபோது வாய்பேசாதுஒப்புக்கொண்டார் (யோவான-எ-சச,சஉ). அவர் தன்னைக்கொல்லும்பொருட்டு எல்லாக்குழந்தைகளையும் கொலைபுரிய ஆஞ்ஞாபித்த ஏரது என்பவன் ஜீவவந்தனயிருந்த காலத்தில் பிறந்தார். (மத்தேயு - உ); ஆனபோதிலும் ஏரதென்பவன் இறந்தபின் அவன்குமாரன் ஆர்ச்சிலேயசும் சிம்மாசனத்தைவிட்டு நீங்குமளவும் அவர் பிறக்கவேயில்லை (லூகா உ - உ). அவர் குழந்தையாயிருந்தபோதே எகிப்துதேசத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, அங்கேதானே ஏரதென்பவன் இறக்கும்வரையில் வைத்திருக்கப்பட்டு, அந்த ஏரதுக்குப்பின் ஆர்ச்சிலேயஸ் ஆளுகையிலும் திரும்ப யூதேயாநகரத்திற்குக் கொண்டுவரப்படவில்லை (மத்தேய-உ); அவர் ஒருக்காலும் எகிப்துதேசத்திற்குப் போகவேயில்லை; அல்லது ஒருக்கால்போயிருப்பினும், அவ்வளவு நெடுங்காலம் அங்கு வசிக்கவேயில்லை (லூகா.-உ, உச, உஉ - ஙக - சO - சக - சஉ). அவர் முப்பதாம் வயதில் தன்னை யின்னானென உணர்ந்து, தான் சென்று ஞானஸ்நானம் பெறுவதற்கேனும், தனக்கு ஞானஸ்நானம் செய்து கொடுப்பதற்கேனும், அபாத்திரனென்று மறுத்தயோவானிடத்திலேயே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார். (மத்தேயு - ங - கச); ஏசுவாகிய ரக்ஷகருக்கு ஞானஸ்நானம்செய்து கொடுக்குமளவும் யோவான் அவரை இன்னானென உணர்ந்திலன். (யோவான் - க - ஙங). யோவான் ஏசுவை "தேவன் பெற்ற ஆட்டுக்குட்டி" என்று உணர்ந்திருந்தான் (யோவான் -க - உக); அவ்வாறு உணர்ந்திருந்தும் சிலகாலத்திற்குப்பின் யோவான் தன்னுடைய சீஷர்களி லிருவரை அவரிடத்திற்கனுப்பி, வரவேண்டியவர் நீர்தாமோ! அல்லது வேறொருவருக்கு நாங்கள் எதிர்பார்க்கவேண்டுமோஎன்று கேட்பித்தார் (மத்தேயு -யக - ங) (லூகா - எ - கக). ஏசுவானவர் ஞானஸ்நானம்பெற்றஉடனே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு அங்கு நாற்பதுநாள் இரவும்பகலும் போசனமின்றி உபவாசித்திருந்தார் (மார்க்கு - க - கஉ); அந்த உபவாசநாள் கழிவதற்குமுன்னமே அவர் கலிலேயாநகரத்தில் நடந்த ஓர் கலியாண விருந்திற்குப் போனார் (யோவான் - உ.)

2. ஏசுவானவர் பேதுருவென்பவனை தனக்கு சீஷனாக வரித்துக்கொள்வதற்குமுன்னமே அவன் மனைவியின் தாயாருக்குண்டாயிருந்த சுரநோயைத்தீர்த்தார் (லூகா - ச - ஙக) (ரு - கO); பேதுருவை ஏசு தனக்கு சீஷனாக வரித்த பினனேதானே அவன் மனைவியின் தாயாரது சுரநோயைத் தீர்த்தார் (மத்தேயு - அ - கச (ச - கஅ.) ஏசு கடற்கரையோரத்திலிருந்தபோது சைமனும் பேதுருவும் ஆந்துருவும் மீன்பிடிப்பதைப் பார்த்து, அவர்களைத் தனக்கு சீஷர்களாக அழைத்துக்கொண்டு, கொஞ்சதூரத்திற்கப்பால் சிமியோனையும் யோவானையுங்கண்டு அவர்களையும் அழைத்துக்கொண்டார். (மத்தேயு-ச,சஅ-உஉ); ஆனால் அவர் சைமோனையும், ஜேம்ஸ் யோவானையும், அழைத்துக்கொண்டபோது அவர் கப்பலிலேதானே யிருந்தார்கள் (லூகா- ரு - ங கO); முதல் முதல் ஏசு பேதுருவைக்கண்டபோது இருவரிலொருவரேனும் உண்மையாகவே சமுத்திரத்திலில்லவேஇல்லை; உலர்ந்தநிலத்திலேதானே யிருந்தார்கள்; உலர்ந்தநிலத்திலிருந்த ஏசுவிடத்திற்கு பேதுருவை ஆந்துரு இட்டுவந்தான் (யோவான் - க - சக.)

3. ஏசு ஐந்து அப்பங்களாலும் இரண்டுமச்சங்களாலும். பெண்களும் பிள்ளைகளுமன்றியில் ஐயாயிரம்பேர்களை போஷித்தும், விருந்துமுடிந்தபோது மிகுதியானதுள்களை சீஷர்கள் பன்னிரண்டுகூடைகளில் நிரப்பினார்கள் (மத்தேயு-கச.) இவ்வாறுசெய்த இந்தசீஷர்களே கொஞ்சகாலத்திற்குப்பின் அந்த அற்புதத்தைமறந்தோ, அல்லதுநம்பாமலோ முன்னிலும் கொஞ்சமனிதர்களை முன்னிலும் விசேஷஆகாரத்தால் எப்படிபோஷிக்கக்கூடுமென்று அபரிமிதமான ஆச்சரியமடைந்தார்கள். (மத்தேயு-கரு) ஏசு ஒருஅசுத்தஆவியை ஒருவனிடத்திருந்து ஓட்டினார். (மார்க்கு-ரு,உ) அந்த ஒருமனிதன் இரண்டுமனிதர்களாக இருந்தான், (மத்தேயு-அ-உஅ); அந்த ஒருபிசாசம் பிசாசவெள்ளமாயு மிருந்ததாம். (லூகா-அஉ,எ.) ஏசுவினுடைய அனுமதியின்பேரில் (லதின்பாஷைவழங்காதஊரில்லதின்பேருடைய) அந்த ஒருமைப்பன்மை பிசாசு இரண்டாயிரம் பன்றிகளுட்புக அப்பன்றிகள் கடலிற்புகுந்தன. ஏசுவானவர் பசியோடிருந்தபோது பழத்தைக்கருதி அகாலத்தில் அத்திமரத்தைப்பார்க்க அதில்பழமில்லாமற்போகவே அதை சபித்துவிட்டார். மார்க்கு - கக, கங - கச.)

4. ஏசு உலகத்தை இரக்ஷிக்கு நிமித்தம் இறக்கவந்தார், ஆனால் தான் இறவாமலிருக்க பிரார்த்தித்தார், (லூகா - உஉ -

௩௨) அவர் நானும் என்பிதாவும் ஒன்றே "என்றார். (யோவான்-௧௦-௩௦) ஆனால் பிதாவே இந்தப்பாத்திரத்தை என்னிடத்தினின்றும் நீக்கிவிடும், எல்லாம் உமக்கு சாத்தியந்தானே என்றார். (மார்க்கு-௧௪-௩௬) ஏசு தன்னை முத்தமிட்டயூதாவினாலே அதிகாரிகளுக்கு காட்டிக்கொடுக்கப்பட்டார். (மத்தேயு ௨௬-௪௭) ஆனால் நான்தான் ஏசுவென்றுஉத்தரித்ததனால் யூதா முத்தமிட்டசைகையால் காட்டிக்கொடுத்ததாக எவ்வளவும் காணப்படவில்லை. (யோவான்-௧௮, ௫-௬.)

5. பேதுரு மூன்றுமுறை ஏசுவைமறுதலித்தபோது அவன் ஏசுவோடுதானேயிருந்தான். (லூகா-௨௨-௬௧) மூன்றுவதுதரம் மறுதலித்தபோது பேதுரு ஏசுவுடனில்லவேயில்லை. (மத்தேயு-௨௬-மார்க்கு.௧௪.) ஏசு காலை ஒன்பதுமணிக்கு சிலுவையில் அறையப்பட்டும், (மார்க்கு ௰௫-௨௫.) மூன்றுமணிநேரத்திற்கப்பால் பயிலேட் என்னும் நியாயாதிபதி முன்விசாரிக்கப்பட்டார். (யோவான் ௰௯-௧௪.) வெள்ளிக்கிழமை மாலை ஏசு குழியில்வைக்கப்பட்டு (மார்க்கு-௧௫, ௪௨-௪௬) சனிக்கிழமை இரவு முடிவதற்குமுன்னும், ஞாயிறு விடிவதற்குமுன்னும், அவர் தேகம் சமாதியினின்றும் வெளிப்பட்டது. (மத்தேயு ௨௮-௧); ஆயினும் ஏசு மூன்று இரவும்மூன்று பகலும் பூமிக்குள்ளேதானேயிருந்தாராம். இந்த ஏசுமத "அற்புதங்களைநம்பி ஞானஸ்நானமும் பெறுபவனே ரக்ஷிக்கப்படுவானும்; நம்பாதவனே தண்டிக்கப்படுவானும்."

C. B.

மெய்யறிவு.

௨-ம் பாகம்.

ஆத்துமா அழிவில்லாததா ?

(204-வது பக்கத்தொடர்ச்சி.)

(M. Broussais) புரூசேஎன்பவர் சொல்லுகிற சங்கதியாவது—சேனையில் காப்ட்டனாயிருந்த தாவர்னீர் என்பவர்-ஆரோக்கியமாயிருக்கையில், கெட்ட சமாச்சாரமடங்கிய ஒருகடிதம் வரப்பற்றிக்கொண்டு, அதை வாசிக்கையில் இடிவிழுந்தாற்போல அசைவற்றுநின்று, பாரிசவாயுகண்டு, பேசச்சக்தியில்லாதவரானார்; இரண்டுமாசம் வைத்தியஞ்செய்யப்பட்டபின்பு கஷ்டத்தோடு நிற்கவும்பேசவுமானார்; இப்படி சொஸ்தமாய்க்கொண்டுவரச்சே, அவருடையபெண்சாதியினிடத்திலிருந்து ஒருகடிதம் வந்தது; அதைவாசித்தவுடனே ரத்தம் தலைக்கேறி பேச்சற்று அசைவற்று அறிவுகெட்டு மூன்றுதினத்தில் இறந்துபோனார். அவருடையதலையைப் பரிசோதித்துப்பார்க்கையில், தலையிலுள்ள ரத்தநாடிகளில் ரத்தம் அடைத்துக்கொண்டு மூளையில் சிறுகட்டிகள் எழும்பியிருந்தன.—கெட்டசமாச்சாரத்தினால் மூளை அதிர்ந்து நோயடைந்தகாரணத்தினாலே மரணமுண்டாயிற்றோ ? ஆத்துமாவானது தான்வாசஞ்செய்யும் சரீரமாகிய வீடு தன்மேல் இடிந்துவிழுமென்கிற பயத்தினால் முந்தி ஓடிப்போய்விட்டதோ ? அல்லது அந்த வீடுஇடிந்துவிழுஞ்சமயத்திலே ஓட்டம் பிடித்ததோ ? ஒருவன் தள்ளாமையினால் ஆறுமாச காலத்திற்கதிகமாய் மரணப்படுக்கையில், விழுந்துகிடந்து இறந்துபோகிறான் ; சூட்சுமதேகத்தோடுவெளிப்பட்டு எவ்வளவோ வியாபாரங்கள்நடத்தி மறுபடி தேகத்தில்வந்து புகுந்துகொள்ளும்படியான அறிவோடுங்கூடியிருக்கிற ஆத்துமா மேற்கண்ட தள்ளாதமனிதனுடைய சரீரமாகிய தன்வீடு கிலமாயிருப்பதைக் கண்டறிந்திருக்கவேண்டுமே ? அப்படியாயின், சிலநாள்முந்தியே வெளிப்பட்டுப்போகாமல் கடைசிவரையில் காத்திருப்பானேன் ? வைத்தியனெவனாவது தன்வீட்டைச் செப்பனிடுவானென்று எதிர்பார்த்திருந்ததாக்கும் ; கர்மமும் குறுக்கிட்டு அதைவெளிப்பட்டுப்போகவொட்டாமல் அடைத்துவைத்திருக்கவேண்டும் !

மகாராணி விக்டோரியா அவர்களுடைய கப்பல்களிலொன்றில் வேலைசெய்துகொண்டிருந்த ஜோன்ஸ் என்பவனொருவன் பாய்மரத்தின்மேலிருந்து விழுந்தவுடனே சுரணைதப்பிப்போனான். சிலநாளில் அந்தக்கப்பல்போய்ச்சேர்ந்தஇடத்திலிருக்கிற வைத்தியசாலையில் அவனைவிட்டுப்போனார்கள். அவ்விடத்திலே சிலமாசங்கள்வரையில் அவனுக்கு வைத்தியஞ்செய்தும் அவனுக்கு சுரணைவராமலேஇருந்தபடியால் அவனை வேறோரிடத்திலிருக்கிற செய்ன்ட்தாமஸ்ஹாஸ்பிட்டல் என்னும் பெரியவைத்தியசாலையில்கொண்டுவந்துசேர்த்தார்கள். அப்போது அவ்விடத்திற்குப் போக்குவரத்தாயிருந்த ஸர்ஹாஸ்ட்லிகூப்பர்என்பவர் அவன்மல்லாக்கே கிடந்து அதிக கஷ்டமிலலாமல் ஸ்வாசம்விடவும், இரத்தநாடி சரியாயடிக்கவும், விரல்கள் மூடவுந்திறக்கவுமாயிருக்கக்கண்டார். அவ்விடத்திய டாக்ட்டர் கிளைன் என்பவர் அவனுடையதலையைப் பரிசோதித்துப்பார்த்து, மண்டையோட்டின் ஒரு சின்னஞ்சிறுதுண்டு எலும்பு மூளையைத்தாக்கியிருப்பதைக்கண்டு, வேண்டிய முயற்சிசெய்து அந்தஎலும்பைஎடுத்துவிட்டார். இந்தச்சிகிச்சை பகல் ஒருமணிக்குச்செய்யப்பட்டது சாயங்காலம் நாலுமணிக்கு அந்தத்துரைமகன் அங்கே உலாவிக்கொண்டிருந்தபோது உள்ளேபோய் அந்தநோயாளி படுக்கையில் உட்காந்திருக்ககண்டு ஆச்சரியப்பட்டு, எங்கேயாகிலும் நோகிறதாவென்றுகேட்க, அவன் கையைத்தூக்கி தலையைக்காட்டினானாம். பிறகு நாலுநாளில் அவன் படுக்கையைவிட்டு இறங்கவும் பேசவுமானான். அப்போது, அவன் விழுந்தது முதல் மண்டையோட்டுத்துண்டு எடுக்கப்பட்டவரையில் பதின்மூன்று மாசமாயிற்று. இந்தக்காலமுழுதும் தனக்குச் சுரணையுமில்லை, நடந்தது ஒன்றுந்தெரியாதென்று அவன்சொன்னதாகஅவர் எழுதியிருக்கிறார். அதற்குமேல், ராபர்ட்கூப்பரானவர்—ஒருசிறுதுண்டு எலும்புதானே, வெறுஞ்சடபதார்த்தந்தானல்லவா—இது மூளையில் தாக்கியிருந்ததினாலே ஒருவனுக்கு அறிவுமுதலிய சகலஉணர்ச்சிகளும் ஒருவருஷத்திற்கதிகமாக அற்றுப்போயிருந்தனவே ! மனமானது சடமற்றதாயும் சரீரத்தோடு கலப்புறாததாயுமிருக்கிறதென்பது எவ்வளவுநிஜம் ! மேற்படி சங்கதியினாலே, மூளையே, மூளைமாத்திரமே நினைப்பாகியதொழிலைச்செய்கிறதென்று பூர்த்தியாய் ருஜுவாகவில்லையா ? மூளை அழுக்தப்பட்டவுடனே இச்சைமுதலிய சகல மனத்தொழிலும் ஏன் நின்று போகவேண்டும்? மூளை அடைந்த அமுக்கலை, மதஸ்தர்கள் தங்கள் ஆவியாகிய மனமும் அடைந்ததென்பார்களோ ? அப்படிக்கானால் அந்தஆவி வியாதிக்கும் கெடுதிக்கும் நாசத்திற்கும் உள்ளாகவேண்டியதாகையால், அது அழிவற்றதாகஇருக்கமாட்டாதென்று அவர்கள் ஒப்புகொள்ளவேண்டும். அப்படிக்கன்றி, அந்தஅமுக்கலினாலே அதற்கு பாதகமில்லையென்பார்களாகில் அது ஏன் தன்தொழில்களைச் செய்யாமலிருந்துவிட்டது ? இந்தச்சங்கதியிலே, அது சரீரத்தோடு கலப்புறாமல் தனித்திருக்கிறதை ஏன் காட்டாமற்போயிற்று ? என்றுவினவுகிறார். அன்றியும், மேற்கண்ட ஒருவருஷகாலம் ஆத்துமா ஒன்றுஞ்செய்யமாட்டாமல் அழுந்திகிடந்தபோது, அதனுடைய சந்நிதானத்திலிருக்கிற அந்தக்கரணங்கள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், தசவாயுக்களில்எதுவாவது அதற்கு சகாயஞ்செய்யாமற் போயிற்றே ! முக்கியமாய் கபாலத்தை முட்டுந்தொழிலையுடைய தனஞ்செயனென்கிற வாயுவாவது தன்தொழிலைச்செய்து, அந்தஎலும்புத்துண்டை தூக்கிவிடும்படியான சகாயஞ்செய்யாமல், அவஸ்தையிலிருந்த ஆத்துமாவை ஜன்மசத்துருவாக எண்ணி சும்மாயிருந்துவிட்டதே. ஹென்னன் என்பவர் எழுதியிருக்கிற கிரந்தத்தினாலே, ஒருவனுக்கு யுத்தத்தில் மூளையிலே அரையங்குல ஆழத்திற்கு மண்டையோட்டுஎலும்பு அழுங்கிவிட்டது, அதினாலே அவன் சுரணைமுதலிய சகல தொழில்களும் மற்றவனாய் பிணம்போல விழுந்துகிடந்தான். வைத்தியர் அழுந்தியிருந்த மண்டையெலும்பைத் தூக்கிவிட்டவுடனே, அவன் எழுந்து உடுத்திக்கொண்டு பழையபடி யானானென்று தெரியவருகிறது. (Richerand) என்பவருடைய கிரந்தத்திலே, ஒரு ஸ்திரிக்கு வியாதியினாலே வெகுவாய் மண்டை யோடு அழிந்து, மூளைதெரிந்துகொண்டிருந்ததாகவும், அதை அவர் அழுத்துந்தோறும் சுரணையும் அறிவும் இல்லாமற்

போனதாகவும், அழுத்துவதை விட்டுவிடுந்தோறும் சுரணையும் அறிவும் வந்துகொண்டிருந்ததாகவும் எழுதியிருக்கிறார். அறிவுக்கு ஸ்தானம் மூளை, மூளையின் தொழிலே அறிவாகுமெனபதற்கு இன்னும் திருஷ்டாந்தம் வேண்டுமோ? ஆசிரியர் (Chapman) எனபவர்—ஒருவனுடைய மண்டை யோட்டில் துளையிருந்து வெளியில்தெரிந்த மூளையை மேற்சொன்னபடியே பெருவிரலால் அழுத்திப் பரிசோதித்துக் கண்டறிந்ததாகவும், அதை ஆசிரியர் (Westor) என்பவா தன்வகுப்புப பிள்ளைகளுக்குப்பரிட்சைசெய்துகாட்டினதாகவும் (Jackson) எனபவருடையவைத்திய சாஸ்திரத்திலெழுதியிருக்கிறது. டாக்ட்டர் (Conolly) என்பவர் நல்லவயசுள்ள ஒருபாதிரிக்கு அவனுடைய விவாகநிச்சய தினத்திற்குச் சிலநாள்முந்தி தலையில் பலமான காயம்பட்டு, சரீர ஆரோக்கியமாத்திர மடைந்து 80 வயசுவரையிலிருந்தான்; ஆனால் காயம்பட்டதுமுதல் அவனுடையபுத்தி சுத்தமாய் விகாரப்பட்டு, நடக்கப்போகிறதென்கிற விவாகமாத்திரம் ஞாபகத்திலிருந்து, அந்தச் சந்தோஷமானதினம இன்னும்வரவில்லையே, எப்போதுவருமென்றுஆயுசுவரையில் சொல்லிக்கொண்டிருந்தது தவிர, வேறொன்றும் பேசினவனல்லவென்று எழுதியிருக்கிறார். டாக்ட்டர் (Abercrombie) என்பவர்- அவ்வித இடை யூறு அடைந்த ஒருவனுக்கு அனேகநாள்வரையில் அவனுக்கு மனைவிமக்களிருக்கிறஞாபகமுமில்லாமற்போயிற்றென்று சொல்லுகிறார்.

(இன்னும்வரும்.)

வர்த்தமானம்.

கோழும்பு சுப்ரீம்கோர்ட்டு ஜட்ஜியாகிய மிஸ்டர் ஜஸ்டீஸ் டையாஸ் அவர்கள் சிட்சைசெய்வதில் மிகவும் சலகாணையாயிருக்கிறாரென்றும், அநேகசங்கதிகளிலே டிஸ்திரிக்ட்டு ஜட்ஜிகளிச்குஞ்சிட்சையைவிட அதிக குறைவாயிருக்கிறதென்றும், செல்வாக்குள்ள ஒரு மூர்ஜாதியான் ஒருசிங்காலியை அடித்து உதைத்துக்கொன்றதாகநாளது௴ 1௳ விசாரணைசெய்து,ஆறுமாசக்கடுஞ்சிறைதீர்ப்புக் கொடுத்தாரென்றும், ஒருபேர்போன துஷ்டன் கொலைகுற்றத்திற்காகத் தூக்குசிட்சை விதிக்கப்பட்டு, அது நிறுத்திவைக்கப்பட்டிருந்தபோது, அவன் தப்பித்துக் கொண்டோடிப்போய், தடி-மண்வெட்டிமுதலானதகளை சாக்கிரதையாய்க் கிட்டவைத்துக்கொண்டு தன் குடிசைக்குள் தூங்கிக்கொண்டிருக்கையில், உளவறிந்து அவனைப்பிடிக்கப்போன கனிஷ்டெபிலை அரவத்தால் விழித்துக்கொண்டு கொலைசெய்துவிட்டதற்காக, ஜட்ஜியானவா 2௳ விசாரணைசெய்து இரண்டுவருஷத்துக்கடுஞ்சிறைவிதித்தாரென்றும், இப்படிப்பட்ட தீர்ப்பு அங்கீகரிக்கப்படத்தக்ககாமாகில், துரைத்தனத்தார் சிரிமினல்சட்டங்களை உடனேதிருத்தவேணுமென்றும், அந்தத் தீர்ப்பினால் நாம் தெரிந்துகொள்ளுகிறபடிகொலைசெய்ததற்காக சிட்சைவிதிக்கப்பட்டு ஓடிப்போனகைதியை அவன் தூங்கும்போது பிடிக்கக்கூடாதென்றும், அப்படி பிடிக்கையில் கனிஷ்டெபிலை அவன் கொன்றது தன்னைத்தான் காத்துக்கொள்ளும்பொருட்டு செய்யப்பட்டகாரியமாகவேண்டியதுதானென்றும் பரிகாசமாக சிலோன அப்சர்வர்பத்திரிகைபேசுகின்றது.

—o—

இராஜப்பிரதிநிதியாகிய கவர்னர்ஜனரலவர்கள்நாளது௴ 15௳ சாயங்காலம் கல்கத்தாவிற் போய்ச்சேர்ந்தார்கள். அவரது வரவு மிகுந்த ஆடம்பரத்துடனே நல்வரவாயிற்று.

—

துற்றவிருத்தாந்தம்.—சென்ற ஜூன்௴ 18௳ அலஹாபாத் ஆல்பிரெட்பார்க்கு என்னும் தோட்டத்தில் ஒரு ஸ்திரியின் பிரேதங் காணப்பட்டது. செய்யப்பட்டிருந்தகாயங்களினாலே அது கொலையென்றே தீர்மானம். போலீஸ் விசாரணையின்போது கூடியிருந்த கும்பலில் ஒருவன் அவளை அறிவதாகச்சொன்னான். அவள் தவ்டை; தனியே ஒருவீட்டில் வாசஞ்செய்திருந்தாள். ஆதலால், அவளுக்கு சொத்திருந்ததும் இல்லாததும் தெரியவில்லை. கொலைக்கு மூலமும் சிலவாரவரையில் தெரியாதிருந்தது. குலாம்அல்லிஎன்பவனும் உஸ்மானென்பவனும் கொலைநடந்த இரண்டொருநாளைக்குப்பின்பு மீரஜாபூருக்குப்போயிருந்த அப்போதுதான் திரும்பிவந்ததாகப்போலீசார் அறிந்து விசாரித்ததில், அவர்கள் போயிருந்ததற்குச் சரியான முகாந்தரஞ் சொல்லாமையால் அனுமானத்தின்பேரில் கைதுசெய்து விசாரணை நடத்தினதில் வெளிப்பட்ட சங்கதியாவது—குலாம்அல்லி குடிககூலிவண்டி கொண்டுவந்து காத்திருந்தான். கொலையுண்டவளுக்கு அறிமுகமான காசிட்டா என்கிற வேறொருவன் ஒருவீடுபோய்ப் பார்த்துவரவேண்டுமென்று அழைத்து, நாசிபான் என்னும் வேறொரு ஸ்திரியையும் துணையாகக் கூட்டிக்கொண்டு, ஒன்றுசேர்ந்து,17௳ சாயங்காலம் வண்டியேறிச்சென்று இருட்டினவுடனே வண்டியிற்றானே கொலைசெய்து, அவள்போட்டிருந்த 60 ரூபா பெறுமான உடைமைகளைப்பறித்துக்கொண்டு பிரேதத்தை மேற்படி தோட்டத்தில் எறிந்துவிட்டு, வண்டியோட்டியாகிய குலாம்அல்லி வீட்டுக்குப்போய், வண்டி உள்ளுறை இரத்தக்கறையாயிருந்ததால்அதைக்கொளுத்திவிட்டு,வண்டியைஉள்ளேநன்றாய்க் கழுவி, சொந்தக்காரனிடத்தில் வண்டியைக்கொண்டுபோய்விட்டு, வண்டியுறை சேதமாய்ப்போயிற்றென்று அதற்காகஒருரூபாய் கொடுத்துவந்துவிட்டார்கள்.போலீசார்வண்டியைச்சோதித்துப் பார்த்ததில்.வண்டிமெத்தையிலிருந்தகறைஇன்னகறையென்று தெரியவில்லை. அடிப்பலகைவெடிப்புவழியாய் இரத்தங்கசிந்து பலகை வெளிப்புறத்தில் தோய்ந்துகட்டிக்கொண்டிருந்ததை போலீசார்கண்டுபிடித்து சுரண்டியெடுத்து அதையும மெத்தைகளையும் ரசாயனபரிசோதகரிடத்திற்கனுப்ப; அவர் மெத்தைச்கறை இரத்தகறைதானென்றும் அந்தக்கட்டிஇரத்தந்தானென்றும் சொல்லினர். சில நகைமாத்திரம் அகப்பட்டது.

புதுவையில் நாளது 16௳ கடைக்காரர்கள் லைசென்ஸ்வரியை யெடுத்துப்போட்டாலொழிய கடைவைப்பதில்லையென்று அநேககடைகளை மூடிப்போட்டார்கள். காலைமுதல் மாத்தியானத்திற்குள் வெகு கும்புசேர்ந்துவிட்டது. அதிகாரிகள் எவ்வளவு அடக்கினபோதிலும் கொள்ளைநடக்கும்போலிருந்தது. சிபாய்களும் சேவகர்களும் அழைப்பட்டிருந்தார்கள். கம்மாண்டாண்டானவர் தன்சிப்பாய்களுக்கு போசனமில்லாவிட்டால், அலுவல்பார்க்கச் சத்தியற்றவர்களாய்விடுவார்களென்று பட்டணத்து மேயருக்குத்தெரிவித்தார். மேயரவர்கள் விடியற்காலமுதல் மத்தியானவரையில் கும்பிலே அங்குமிங்கும் அலைந்துதிரிந்து, பரிகாரங்கிடைக்கத்தக்கதாகத் தங்கள் குறைகளை அதிகாரிகளுக்குத்தெரிவித்துக்கொள்ளும்படி கடைக்காரர்களுக்கு சமாதானஞ்சொல்லி வெகுபிரயாசை யெடுத்துக்கொண்டார். அவருடைய முயற்சிகடைசியில் சித்தியடைந்து மத்தியானத்திற்குமேல் கடைகள் திறக்கப்பட்டனவென்று தெரியவருகிறது.

பர்மிய தாதாநாபாயிங் ஆனவர் சிலநாளுக்குமுன்னமே கண்டுபேசுகையில் தானும் பர்மியர்களும் பிரிட்டிஷ் அதிகாரிகளிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட சலகாணையையும் நன்மதிப்பையுங்குறித்து மிகுந்த நன்றியைத் தெரிவித்தனர். மண்டாலேபட்டணமும் மாகாணமும் தேசமுழுவதும் மிகவும்விர்த்தியடைந்து வருகிறதென்று சொன்னார். மரமத்துவேலைவைத்து ஏழைஜனங்களைக் காப்பாற்றிவருவதற்காக அவர் வந்தனஞ்செலுத்தி, புத்தசமயமடங்களையும் சொத்துகளையும் விற்றும் அழித்தும்வருகிற வழக்கத்தை நிறுத்திப்போடும்படியாகவும், துரைத்தன விஸ்வாசமுள்ள பர்மியர்களை ஆதரிக்கும்படியாகவும் துரைத்தனத்தாரைக் கேட்டுக்கொண்டார். (அப்பர் பர்மா, லோயர்பர்மா என்னும்) இரண்டு பர்மாக்களையும் ஒரு தாதாநாபாயிங்குக்குள்ளாகச் சேர்த்துவிடும்படி பிரதான கமிஷனரை விண்ணப்பமூலமாய்க் கேட்டுக்கொண்டார்.

"**பாம்பே** இராஜதானிமந்திரத்தில் லேடீரே அம்மா அவர்களுடைய போஷணைக்குள் பிப்ரவரி௴ 2௳ 3௳ 4௳ களில் வினோதசந்தைவைக்கப்படும். அதில் வருகிறஊதியம்-பாம்பேயில் பலதொழில்கள்செய்யும் வாலிபஸ்திரீகளுக்கும், வெளியூர்களிலிருந்துவந்து பாம்பேயில் போஷணைக்கு ஆதாரந்தப்பியிருக்கிறவர்களுக்கும் புத்திவிசாலமும் நல்லொழுக்கவிர்த்தியுமுண்டாவதற்கு மாதருஸ்தானமாக பாம்பேராஜதானியில் ஒருசாலைஏற்படுத்துவதற்கு உபயோகிக்கப்படும்.

தேலிகிராப் மணிஆர்டரின் செலவுவருகிற௴ 1௳ முதற்கொண்டு குறைக்கப்படும். 10 ரூபா மணிஆர்டருக்கு இப்போதிய செலவு ரூ 2-8-0 இதுவதிலாக இனிச்செலவு ரூ 1. 50 ரூ ஆர்டருக்கு இப்போதிய செலவு ரூ 2-12-0 இதுவதிலாக இனிச்செலவு ரூ 1-8-0 இவ்விதமாகக் குறைந்திருக்கும்.

தமிழ்சந்தாவிபரம்.

உள்ளூர்—(அட்வானசு.) வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட)

		Rs.	A.	P.			Rs.	A.	P.
மாசம்	1-க்கு	0	4	0	மாசம்	1-க்கு	0	5	
ஷை	3-க்கு	0	10	0	ஷை	3-க்கு	0	13	
ஷை	6-க்கு	1	2	0	ஷை	6-க்கு	1	8	

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Davaraja Moodelly Street,—Madras.